# நூல் தேட்டம்

*(தொகுதி 8)*

*தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பெற்ற*
*ஈழத்துத் தமிழ் நூல்கள்*

குறிப்புரையுடனான
## நூல்விபரப்பட்டியல்

**என்.செல்வராஜா**

**அயோத்தி நூலக சேவைகள்**
மே 2012

**© Copy Right 2012 by N.Selvarajah**
All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

# நன்றி

நூல்தேட்டத்தின் எட்டாவது தொகுதியை உங்கள் கரங்களில் இன்று கையளிப்பதற்குத் தோன்றாத் துணையாக இருந்த அனைவருக்கும் முதலில் நன்றிகூறுவது என் தலையாய பணியாகும்.
நூல்தேட்டம் அன்று என் மனதில் கருக்கொண்ட வேளை, தன் பல்கலைக்கழக வாழ்வின் நெருக்கடிகளுக்குள்ளும் ஓடித்திரிந்து நூல்களைத் தேடித்தந்து என்னை ஆர்வத்துடன் செயற்படவைத்து மகிழ்ந்துவிட்டு இன்று எம்மிடையே இல்லாது இளமையிலேயே காலன் வசப்பட்டு, என்றும் இளமையாக எங்கள் மனதில் நிலை கொண்டுவிட்ட எம் இனிய மருமகள் சுகந்தியையே எப்பொழுதும் முதலில் நினைவுகூர்வதுண்டு.
எட்டாவது தொகுதிக்கான தேடலில் இறங்கியிருந்த வேளையில் தமது நூற்சேர்க்கையைப் பார்வையிட மனமுவந்து அனுமதியளித்தவர்கள், தமது நூல்களை பதிவின்பொருட்டு, அன்பளிப்பாக வழங்கியவர்கள், எனது பணிகள் பற்றிய கட்டுரைகளை எழுதி தாயக, புகலிட ஊடகங்களில் பதிவாக்கியவர்கள், எழுத்தாளர்களுடனான ஒன்றுகூடல்களை தன்னார்வ முனைப்புடன் ஒழுங்குசெய்தவர்கள் என்று இப்பட்டியல் நீளும். சிலரின் பெயர்கள் தவறுதலாக விடுபட்டிருக்கலாம். மனதில் நிலைத்தவர்களை முடிந்தவரையில் இங்கு மீட்டிருக்கின்றேன்.
ஏழாவது தொகுதியை உரியகாலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்ததுடன், அத்தொகுதியை இலங்கையில் பரவலாக அறிமுகம் செய்யும் பொறுப்பினையும் கொழும்பு, குமரன் புத்தக இல்ல அதிபர் **கணேசலிங்கம் குமரன்** ஏற்றிருந்தார். எட்டாவது தொகுதியையும் அச்சேற்றி விநியோகித்துத் தரும் பொறுப்பினையும் அவரே ஏற்றிருந்தார். அவருக்கு என் நன்றி.
எட்டாவது தொகுதிக்கான நூல்தேடலுக்கான எனது இலங்கை, இந்தியப் பயணங்களின்போது நான்கு வாரங்கள் வரையில் பல்கலைக்கழக, தனியார் நூலகங்களிலும், பதிப்பகங்களிலும் தமிழ்ச் சேர்க்கைகளைப் பார்வையிட்டு அரிய பல ஈழத்து நூல்களைப் பதிவுசெய்ய முடிந்தது. இலங்கையில் தங்கியிருந்த குறுகிய கால இடைவேளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சுவடிகள் காப்பகச் (Archives) சேர்க்கையிலிருந்து அரியநூல்களைப் பார்வையிட்டுப் பதிவுசெய்வதற்கு மனமுவந்து அனுமதியளித்த பிரதம நூலகர் **ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்** அவர்களுக்கு முதலில் நன்றிகூறக்கடமைப்பட்டுள்ளேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தை நேரடியாகப் பயன்படுத்தமுடிந்த அந்தக் குறுகிய நாட்களில் அதிகளவில் நூல்களைப் பதிவுசெய்ய உதவியளித்த நூலகவியல்துறை மாணவி **சர்மிளா** அவர்களுக்கும், அவரது தொடர்பினை ஏற்படுத்தித் தந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கல்பனா சந்திரசேகருக்கும் எனது நன்றிகள். யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்றத்தின் வெளியீடுகளை பார்வையிடவும் அங்கிருந்து பதிவுசெய்துகொள்ளவும் அனுமதியளித்த கலாமன்ற நிர்வாகிகளுக்கும் நன்றி.
எனது தமிழகப் பயணத்தின்போது பயண ஒழுங்குகளைச் சிரத்தையுடன் மேற்கொண்டு பல புதிய இலக்கியவாதிகளின் தொடர்புகளையும் ஏற்படுத்தித் தந்தவர் திருச்சியில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துப் பத்திரிகையாளர் **கே.ஜி.மகாதேவா** அவர்கள். அவரது பார்வையில் எனது தமிழகப் பயணம் பற்றி எழுதி ஈழத்திலும், தமிழகத்திலும் அவர் எழுதிய கட்டுரைகளில் ஒன்றினை இத்தொகுதியில் இடம்பெறச்செய்துள்ளேன். அவரது தொடர்பினாலும் வழிகாட்டுதலினாலும், தமிழகத்தில் குறுகிய காலத்தில் நிறைந்த இனிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.
தமிழகத்தில் எனக்கு தன்னலம் கருதாது உதவிய மற்றொருவர் இனிய நந்தவனம் ஆசிரியர் சந்திரசேகரன். தன் வாழ்க்கைத் துணைவியை இழந்து ஒரு மாதம் கழியாத நிலையிலும்கூடத் தன் கவலைகளை ஒதுக்கிவைத்துவிட்டு எனது பயண ஒழுங்குகளை நேரடியாக மேற்கொண்டார். அவரது வேண்டுகோளின்பேரில் கவிஞர் **இவள்பாரதி**, நண்பர் **செந்தில் (வெற்றி)** ஆகியோரின் வழிகாட்டல் எனது சென்னைப் பயணங்களில் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. தமிழகத்தில் நிலைகொண்டு. ஈழத்தவர்களின் நூல்களை அதிகளவில் வெளியிடும் நிறுவனங்களின் அதிபர்களான காந்தளகம்-**சச்சிதானந்தன்**, மித்ர-**எஸ்.பொன்னுத்துரை**, மணிமேகலை-**ரவி தமிழ்வாணன்**, உயிர்மை-**மனுஷ்யபுத்திரன்**, வளரி -**அருணா சுந்தரராசன்**, ஆகியோரைச் சந்தித்து அவர்களின் ஈழத்து வெளியீடுகளைப் பதிவுசெய்யும் வாய்ப்பினையும் இத்தமிழகப் பயணம் எனக்களித்தது. காலச்சுவடு சென்னை அலுவலக முகாமையாளர்கள், குமரன் பப்ளிஷர்ஸ், வடபழநி நிர்வாகிகள் தமது இருப்பிலுள்ள நூல்களைப் பார்வையிட ஆர்வத்துடன் ஒத்துழைத்தமையையும் இத்தருணம் நினைவுகூர்கிறேன். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றி.
மதுரையில் **சீ.பன்னீர்ச்செல்வம், அருணா சுந்தரராசன், பேனா மனோகரன்** ஆகியோரின் சந்திப்பின்போது அவர்கள் பல நூல்களை சேகரித்து வழங்கியிருந்தார்கள். அனைத்தும் இலங்கையிலிருந்து தமிழகம் சென்று வாழும் எம்மவரின் படைப்புக்கள். தமிழகத்தில் கைக்கெட்டிய அனைத்து ஈழத்து நூல்களையும் இத்தொகுதியில் பதிவுசெய்யும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. மதுரை மும்மூர்த்திகளுக்கு எனது நன்றி.
எனது தமிழகப் பயணத்தைக் கலைஞர் தொலைக்காட்சி ஒருமணிநேர நேர்காணலாக ஒளிபரப்பியதுடன், பத்திரிகைகளும் சிறு சஞ்சிகைகளும் எனது பயணத்தை செய்தியாகவும் கட்டுரைகளாகவும் வெளியிட்டிருந்தன. திருச்சிராப்பள்ளி ஆண்டவர் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத்தலைவர் **கரிகாலன்** சுமார் இரு மணிநேர சந்திப்பொன்றை அக்கல்லூரியின் கேட்போர்கூடத்தில் ஒழுங்குசெய்து 300க்கும் அதிகமான கல்லூரி

மாணவர்களுடன் ஒரு விரிவான கலந்துரையாடலை ஏற்படுத்தியிருந்தார். பயனுள்ள அந்நிகழ்வினை ஒழுங்குசெய்த பேராசிரியர் கரிகாலன் அவர்களுக்கும் எனது நன்றி.
சென்னையில் நான் தங்கியிருந்தவேளையில் சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறைப் பேராசிரியர் முனைவர் **அரசு வீராசாமி** அவர்களையும் புதிய புத்தகம் பேசுகிறது வெளியீட்டாளர் **கே. நாகராஜன்** அவர்களையும் சந்தித்து உரையாட முடிந்தது. நூல்தேட்டத்தின் பயன்பாடு சென்னைப் பல்கலைக்கழகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்ததை அன்றைய உரையாடலில் என்னால் அறிந்துகொள்ள முடிந்தது.
இலங்கையில் தாம் அச்சிடும் நூல்கள் அனைத்திலும் ஒரு பிரதியை எனது பணிக்காக வழங்கிவரும் சேமமடு பொத்தகசாலை உரிமையாளர் பத்மசீலன், கொழும்பு குமரன் புத்தக இல்ல உரிமையாளர் கணேசலிங்கம் குமரன், ஆகியோருக்கும் எனது உளம்நிறைந்த நன்றிகள். இவர்களின் வழியில் ஈழத்துத் தமிழ் நூல் வெளியீட்டாளர்கள் அனைவரும் நூல்தேட்டப் பதிவுக்காகத் தமது வெளியீடுகளை வழங்க எதிர்காலத்தில் சமூகப் பொறுப்புடன் முன்வருவார்கள் என்றும் நம்புகின்றேன். தனிப்பட்டமுறையில் அக்கறையுடன் அவ்வப்போது மலையக வெளியீடுகளைத் திரட்டித் தந்துவரும் நண்பர் அந்தனி ஜீவாவுக்கும் எனது நன்றிகள்.
தாயகத்திலும், புகலிடத்திலும் காலத்துக்குக் காலம் எனது நூல்தேட்டம் தொகுப்பு முயற்சிகளுக்கு ஆதரவான செய்திகளைப் பிரசுரித்தும், விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டும் எனக்கு ஆதரவை வழங்கிவரும் சிறுசஞ்சிகை ஆசிரியர்களுக்கும், தேசிய, பிராந்தியப் பத்திரிகையாளர்களுக்கும் எனது நன்றிகள்.
எனது வாழ்வின் பெரும்பகுதி நேரத்தை விழுங்கிவிடும் நூல்தேட்டம் தொகுப்புக் கடமைகளின்போது எமது குடும்பச்சுமைகளை முழுமையாகத் தாங்கி என்னைச் சுதந்திரமாக இயங்கவிட்டதுடன் எனக்குத் துணையாகவிருந்து நூலாக்கக் கடமைகளிலும் முடிந்தவரை உதவிவரும் என் அன்புத் துணைவி விஜிக்கு நன்றி செலுத்தத் தவறினால் மிக முக்கியமான பதிவொன்றினை இங்கு மேற்கொள்ளத் தவறியவனாவேன். குடும்பத்தின் நிதி நிலைமையை மிகச் சிக்கனமாகக் கையாண்டு ஒவ்வொரு நூல்தேட்டம் தொகுதிக்கும் தேவையான மேலதிக நிதியை சேமித்து வழங்கும் இமாலயப்பணியும் இவருடையதாகும்.
இறுதியாக, நிறுவனரீதியான நிதியுதவிகள் ஆதரவுகள், எதுவுமின்றி, தனிமனிதமுயற்சியாக மேற்கொள்ளப்படும் இந்த ஆவணப்பதிவின் அவசியத்தையும், ஆழத்தையும் புரிந்துகொண்டு, இந்நூலைக் கொள்வனவுசெய்து எனது முயற்சியின் நிதிச் சுமையைக் குறைக்கும்வகையில் தங்களாலான பங்களிப்பை நல்கிவரும் இனிய தமிழ் உறவுகளுக்கு என் மனம் கனிந்த நன்றிகள். உங்கள் ஆதரவில் நம்பிக்கைவைத்து, நூல்தேட்டத்தின் **ஒன்பதாவது** தொகுதியுடன் அடுத்த ஆண்டில் உங்களைச் சந்திப்பேன் என்ற உறுதியுடன் விடைபெறுகிறேன்.

**-என்.செல்வராஜா-**
*25.04.2012*

# முன்னுரை
# நூல்தேட்டம்
## (ஓர் அறிமுகம்)

*ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002இலும், இரண்டாவது தொகுதி 2004இலும், மூன்றாவது தொகுதி 2005இலும், நான்காவது தொகுதி 2006இலும், ஐந்தாவது தொகுதி 2008 இலும், ஆறாவது தொகுதி 2010இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான ஏழாவது தொகுதி இதுவாகும். இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் ஏழாவது தொகுதியில் இடம்பெறும் நூல்களுக்கு 6001இலிருந்து 7000வரை தொடரிலக்கமிடப்பட்டுள்ளன.*

### தொகுப்பும் தவிர்ப்பும்

*இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியலாக்கப்பட்டுள்ள தனி நூல்கள் (*Monographs*) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படவில்லை. இன்று பார்வையிடக்கூடிய ஈழத்துத் தமிழ் நுல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடுவதே நூல்தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். வெளியீட்டின் பௌதிகத் தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுகள் என்பன இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை.*

*பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகைகள், என்பனவும் இத்தொகுதியில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், தனி ஆவணமாகக் கருதும்வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்புமலர்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் தனிநூலின் வகைக்குள் அடங்கக்கூடியதான கனதியான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதால் அவற்றையும் இத்தொகுதியில் சேர்த்துக்கொண்டுள்ளோம்.*

*இதில் தொகுக்கப்பட்டுள்ள நூல்கள் எவ்வித கால எல்லைகளுக்கும் வரையறுக்கப்படவில்லை. ஒரு நூலின் பின்னைய பதிப்புகள் வெளிவரும்போது அவை புதுக்கியோ, சுருக்கியோ, வெளிவரும் வாய்ப்பிருப்பதாலும், முற்றிலும் வேறான நூலியல் தகவல்களை அவை கொண்டிருப்பதாலும் குறித்தவொரு நூலின் பல்வேறு பதிப்புகளும் இங்கு ஒரே பதிவிலக்கத்தின் கீழ் இடம்பெறுகின்றன.*

*முன்னைய பதிவிலக்கத்தைப் பெற்ற மீள்பதிப்புக்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.*

### பதிவுகளின் ஒழுங்கமைப்பு

*நூல்தேட்டம் ஒரு உசாத்துணை நூலாகும். ஒரு நூலைப் பற்றிய நூலியல் தகவல்களைக் குறுகிய நேரத்தில் வாசகர் கண்டறிய வகைசெய்யும் வண்ணம் இத்தொகுதி மூன்று பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.*

*முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப்படுத்தப்பட்டு தொடரெண்கள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாடவாரியாக ஒரு நூலைத்தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைவர்.*

இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும். முதற்பகுதியில் நூல்கள் பாடவாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அகரவரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிழையும் வாசகர் இரண்டாவது பிரிவில் அகரவரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர் இலக்கத்தைக் கண்டறிந்து முதற்பகுதியில் உள்ள பிரதான பதிவைப் பார்வையிட முடியும். இங்கு தலைப்புக்கள் அகரவரிசை எழுத்தொழுங்கில் அல்லாது சொல்லொழுங்கிலேயே அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர் ஆகியோரின் விபரங்களைக் கொண்டு ஒரு நூலைத்தேடும் வாசகர் மூன்றாவது பிரிவின் மூலம் பயனடைவர். இங்கு ஆசிரியர் அகர வரிசையில் நூல்களின் தொடர் எண்களைக் கண்டறிந்து அதன் மூலம் தான் தேடும் நூலைச் சென்றடைய முடியும். ஆசிரியர் அகரவரிசையில் புனைபெயர்களும் இடம்பெறுகின்றன. ஒரு நூலாசிரியர் இயற்பெயரிலும் புனைபெயரிலும் நூல்களை எழுதுவதால் புனைபெயரின் கீழ் நூலைத்தேடும் வாசகர் ஆசிரியரின் இயற்பெயரிலும் அவற்றைத் தேட உதவும் வகையில், **பார்க்க, மேலும் பார்க்க** போன்ற வழிகாட்டி அம்சங்கள் தேவை கருதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்கள் ஒரே புனைபெயரில் வலம் வருவதையும் இங்கு காணமுடிவதால் புனைபெயரில் நூலைத்தேடும் வாசகர்கள் அவதானமாக இருக்க வேண்டும். வாசகரின் தேடுகை நேரத்தை குறைக்கும் வகையில் புனைபெயரிலும் இயற்பெயரிலும் எழுதும் ஆசிரியரின் பிரபல்யமான ஒரு பெயரின்கீழ் மட்டும் இயன்றவரை அவரது நூல்களின் தொடர்எண்களைக் குறித்துள்ளோம்.

## நூலியல் பதிவுகள்

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், ஆகியனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறுமிடத்து சர்வதேச தராதர நூல் எண்களும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.

ஆசிரியர் பற்றிய தகவலில் ஆசிரியரின் இயற்பெயர், புனை பெயர் பற்றிய குறிப்புகளும் அறியமுடிந்தால் தரப்பட்டுள்ளன. பதிவுக்குள்ளாகும் நூலின் உரித்தாளர் மூலநூலாசிரியராக இல்லாதவிடத்து, அவரின் பங்களிப்புப் பற்றிய தகவல் அவரது பெயரையடுத்து அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டாளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு வெளியீட்டகம் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளைப் பரப்பியிருக்கும் வேளை, பதிவுக்குள்ளாகும் நூலில், குறிப்பாக ஒரு இயங்குதளத்தை மட்டும் வெளிப்படுத்தியிருந்தாலன்றி, பதிவுத்தேவை கருதி, நூல் அச்சிடப்பட்ட நாட்டில் உள்ள வெளியீட்டகத்தின் கிளை அமைந்த ஊரே அதன் இயங்குதளமாகப் பதியப்பட்டுள்ளது. ஆசிரியரே வெளியீட்டாளராகவும் இருக்கும்போது, நூலில் காணும் ஆசிரியரின் முகவரி வெளியீட்டக முகவரியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நூல் முதற்பதிப்பு அல்லாதவிடத்து முன்னைய பதிப்புகள் பற்றிய திகதி விபரங்களும் நூலில் தரப்பட்டவாறாகப் பதியப்பட்டுள்ளன. சில வெளியீட்டாளர்கள், மறுபதிப்பு நூல்களையும் முதற்பதிப்பாகக் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வெளியீட்டாளரின் முதற் பதிப்பாகவே அது கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்விபரங்கள் நூலியல் நேர்மை கருதி, பதிப்பு நூலில் குறிப்பிடப்படவேண்டியது அவர்களது கடமையாகும் என்பதை இங்கு வலியுறுத்துதல் அவசியமாகின்றது. பெரும்பான்மையான தமிழக மீள்பதிப்புக்களில் இத்தவறுகள் காணப்படுகின்றன.

*நூலின் அச்சக விபரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இந்த விபரம் பதிவுக்குரிய நூலின் குறித்த பதிப்புக்கு மட்டும் உரியதாகும் என்பதும் கவனத்துக்குரியது.*
*நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.*
*நூலின் பக்கங்கள் மூன்று வகையில் குறிப்பிடப்படுகின்றன. அவை ரோமன் இலக்கமிடப்பட்ட பக்கங்கள், இலக்கமிடப்படாத பக்கங்கள், அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்கள் என்பனவாகும். ரோமன் இலக்கமும், அரேபிய இலக்கமும் இடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை அவ்வவ்விலக்கங்களாலேயே சுட்டப்பட்டுள்ளன.*
*இலக்கமிடப்படாத பக்கங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. (உதாரணம்:* VII, ***(12), 243*** *பக்கம்). பெரும்பான்மையான தமிழ் நூல்களில் முகவுரைப் பக்கங்கள் இலக்கமிடப்படாவிடினும் அவை பின்னர் அரேபிய இலக்கங்களாகத் தொடர்கின்றன. அத்தருணங்களில் அவை அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்களாகவே கருதப்பட்டுள்ளன. பக்கங்கள் பற்றிய குறிப்பை அடுத்து அமைவது சிறப்பம்சங்களாகும். இங்கு வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படும். விலை விபரம் காலவரையறைக்குட்பட்டதாக அமைவதாயினும் வரலாற்றுத்தேவை கருதி மட்டுமே நூல்தேட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுள்ளது. நூலில் குறிப்பிடப்படும் விலை அந்நாட்டு நாணய அலகின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவுக்கு மாத்திரம் நாடு குறிப்பிடப்படவில்லை. இது ஒரு வர்த்தக நூற்பட்டியல் இல்லையென்பதால் தேவைப்படுமிடத்து நூலின் தற்போதைய விலை பற்றிய தகவலை அதன் விற்பனையாளர்களிடமே வாசகர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.*
*நூலின் பெதீக விபரங்களில் அடுத்ததாக வருவது, நூலின் அளவாகும். இது சதம மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது.*
*இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (*International Standard Book Number*) பற்றிய தகவலாகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளிவந்திருப்பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி* ISBN *பற்றிய விரிவான கட்டுரையொன்று* ***முதலாவது*** *தொகுதியில்* xiv-xviii *பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*
*நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது நூலினதும் நூலாசிரியரினதும் சிறு அறிமுகமாக மாத்திரம் அமைவது குறிப்பிடத்தக்கது. அரியநூல்களின் வைப்பிடம் பற்றிய குறிப்பு 3வது தொகுதியிலிருந்து வழங்கப்படுகின்றது. உதாரணமாக பெறுதற்கரிய சில ஈழத்து நூல்கள் பிரித்தானிய நூலகங்களிலும், மலேயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறையிலும் காணமுடிந்தது. அவை பற்றிய இருப்பு விபரம் இப்பகுதியில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.*

## *பகுப்பாக்கம்*

*இந்நூலின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென நாம் தேர்ந்தெடுத்துள்ள பாட ஒழுங்கு வரிசை, டூவியின் தசாம்சப்பகுப்பு முறையாகும். (*Dewey Decimal Classification Scheme*) தென்னாசியாவிலும் ஐரோப்பாவிலும் நூலகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இப்பகுப்பு முறை தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமானதொன்றென்ற வகையில் இப்பகுப்பாக்கத்தைப் பின்பற்றத் தீர்மானித்தோம். இப்பகுப்பாக்கத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று பிராந்தியத் தேவைகருதி இப்பகுப்பு முறையில் தேவைப்படும் மாற்றத்தைப் புகுத்தமுடியும் என்பதாகும். ஈழத்துத் தமிழ்நூல்களின் பகுப்புத்தேவை கருதி இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பகுப்பாக்கம் அறிவுத்தேட்டத்தை*

முதலில் பத்துப் பெரும்பிரிவுக்குள் அடக்குகின்றது. பின்னர் ஒவ்வொரு பெரும்பிரிவும் பத்து உபபிரிவுகளாகின்றன. அந்த உப பிரிவுகள் மேலும் பத்து உபபிரிவுகளாகின்றன. இத்தகைய ஒரு தசாம்சப்பகுப்பு முறை பற்றிய விரிவான விளக்கத்தை இங்கே தரமுடியாவிடினும் வாசகரின் தேவை கருதி இந்நூலில் பயன்படுத்தும் பகுப்புத் திட்டம் சுருக்கமாக இந்த அறிமுகப் பகுதியையடுத்துத் தரப்பட்டுள்ளது.

## வாழ்க்கை வரலாறு

பகுப்பாக்க ஒழுங்கில் இறுதிப்பிரிவாக அமைவது வரலாறாகும். இதில் பிரதேச வரலாற்றுடன், வாழ்க்கை வரலாற்று நூல்களும் ஞாபகார்த்த மலர்களும் இடம்பெறுகின்றன. பகுப்பாக்கத்தின் போது பன்முகத்தோற்றம் பெற்ற பெரியார்களின் வரலாற்று நூல்களைத் தரம்பிரிக்கும்போது பிரதான பதிவை ஏதாவது ஒரு பிரிவுக்குள் பதிய வேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டது. ஒருவரது ஆளுமை எத்துறையில் பிரகாசித்தது என்பதை விட குறிப்பிட்ட நூலில் அவரது பன்முகப்பட்ட ஆளுமையின் எப்பகுதி ஆய்வுக்கெடுக்கப்பட்டது என்ற அடிப்படையிலேயே அவரது நூலுக்கான பகுப்புப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனால் இப்பிரிவைப் பார்வையிடும் வாசகர்கள் தயவு செய்து பல்வேறு வாழ்க்கை வரலாற்றுப் பிரிவுகளிலும் கண்ணோட்டம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புக்கள்

இரண்டாம் தொகுதியிலிருந்து மேலதிக அம்சமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பகுதி இதுவாகும். இன்றைய ஈழத்து இனப்பிரச்சினையின் சர்வதேசமயப்படுத்தல் காரணமாக ஈழத் தமிழரல்லாத பன்நாட்டவர்களிடையே உருவாகிவரும் ஈழத்தமிழர்சிக்கல் பற்றிய தேடலின் விளைவாக, தமிழகத்திலும் மலேசியாவிலும் ஐரோப்பாவிலும் ஈழத்தமிழர் பற்றிய நூல்களின் வரவு அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது. இவற்றில் பல தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன்விளைவாக, நூல்தேட்டத்தில் இவ்வாக்கங்களுக்கான ஆவணமாக்கலும் அவசியம் என்று கருதியதால், தனியானதொரு பிரிவாக அவை இடம்பெறுகின்றன.

## முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்கள்

நூல்தேட்டம், ஈழத்தமிழரின் நூலியல் முயற்சிகளில், இயன்றவரை நிறைவான ஆவணமாக்கலையே மேற்கொள்ள விழைகின்றது. முன்னைய தொகுதியில் இடம்பெற்ற ஒரு நூல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டால், அதுபற்றிய தகவலையும் இத்தொகுதியில் தந்திருக்கின்றோம். தொகுப்பு முயற்சியில் குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு இவை கொள்கையளவில் புதிய பதிவாகக் கருதப்பட மாட்டாது. இதனால் அப்பதிவிற்குத் தனியான தொடர் இலக்கத்தை வழங்காது, அதை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளோம். வாசகர்களின் பயன்கருதி குறிப்பிட்ட இந்நூற்பதிவின் மூலப்பதிப்பின் தொடர் இலக்கத்தையும் குறிப்புப் பகுதியில் தந்துள்ளோம்.

## நிறைவுக் குறிப்பு

நூல்தேட்டத்தின் முன்னைய தொகுதிகளை எமது சக்திக்கெட்டியவரை சர்வதேச நூற்பட்டியல்களின் சிறப்பம்சங்களைக் கூர்ந்து கவனத்துக்கெடுத்துத் தொகுத்திருந்தோம். இத்தொகுதிகளில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, காத்திரமான ஆலோசனைகளைப் பலர் வழங்கியிருந்தனர். அவற்றில் நாம் ஏற்றுக்கொண்ட பல விடயங்களை இத்தொகுதியிலும் சேர்த்திருக்கின்றோம். அடுத்து வரவுள்ள எட்டாவது தொகுதி மேலும் சிறந்ததாக அமைய உங்கள் மேலான ஆதரவை எதிர்பார்க்கின்றோம். இத்தொகுதி வர்த்தக நோக்கமற்றதொரு தனிமனித முயற்சியாகும். நிறுவனரீதியில் மேற்கொள்ளப்படவேண்டிய இத்தகைய உசாத்துணை வெளியீட்டு நடவடிக்கைகள் தனிமனித முயற்சியாக மலரும்போது நிதி, காலம், நிபுணத்துவ உதவி என்பன எப்பொழுதும்

வரையறைக்குட்பட்டதாகவே அமைகின்றன. இதை மனதில் கொண்டு, இத்தொகுதியின் பரந்துபட்ட அறிமுகத்திற்கும் விநியோகத்திற்கும், விற்பனைக்கும் உங்களாலான பங்களிப்பை வழங்குவீர்கள் என்று நம்புகின்றோம். இதன் விற்பனை மூலம் பெறப்படும் நிதி எமது அடுத்த தொகுதியின் துரித உருவாக்கத்துக்கு உறுதுணையாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம். உலகெங்கும் பரந்துவாழும் ஈழத்தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்துவாழும் நாடுகளிலுள்ள நூலகங்களையும் நூல்தேட்டத்தின் அனைத்துத் தொகுதிகளும் சென்றடைவதற்குத் தங்களாலான பங்களிப்பினை நல்குவதைத் தார்மீகக் கடமையாகக் கொள்வீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

# நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள
# வகுப்புப் பிரிவு

*(டூவி தசாம்சப் பகுப்பை அடிப்படையாகக் கொண்டது)*

### பிரதான பிரிவுகள்

***000-099 பொதுப்பிரிவு***
***100-199 மெய்யியல்துறை***
***200-299 சமயங்கள்***
***300-399 சமூக விஞ்ஞானங்கள்***
***400-499 மொழியியல்***
***500-599 தூய விஞ்ஞானங்கள்***
***600-699 பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம்***
***700-799 கலைகள், நுண்கலைகள்***
***800-899 இலக்கியம்***
***900-999 புவியியல், வரலாறுகள்***

### விரிவான பிரிவுகள்

## *000 பொதுப்பிரிவு*

*000* பொது அறிவு ***7001-7014***
*001* கணனியியல் ***7015-7018***
*010* நூலியல், நூல்விபரப்பட்டியல் ***7019-7020***
*020* நூலகவியல், தகவல் விஞ்ஞானம் ***7021-7026***
*051* பருவஇதழ் சிறப்பிதழ்கள் ***7027-7030***
*053* வழிகாட்டிகள் ***7031***
*060* பொது நிறுவனங்கள் ***7032-7035***
*070* ஊடகவியல், வெளியீட்டுத்துறை ***7036-7038***

## *100 மெய்யியல்துறை*

*100* மெய்யியல் (தத்துவவியல்) ***7039-7045***
*150* உளவியல் ***7046-7054***
*158.1* மானிட மேம்பாடு ***7055-7068***
*158.3* உளவளத்துணை (Counseling) ***7069-7071***
*160* தர்க்கவியல் ***7072-7075***
*180* இந்து தத்துவம் ***7076-7093***
*190* சோதிடம், வானசாஸ்திரம் ***7094-7099***

## *200 சமயங்கள்*

*210* பொதுச்சமயம் சார்பானவை ***7100-7101***
*220* கிறிஸ்தவம் ***7102-7105***
*294.5* இந்து சமயம் ***7106-7130***
*294.5(1)* இந்து நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள் ***7131-7142***
*297* இஸ்லாம் ***7143-7159***

## *300 சமூக விஞ்ஞானங்கள்*

301 சமூகவியல் 7160-7171
301.1 பண்பாடு 7172
302 பெண்ணியம் 7173-7174
306 கலாச்சாரம் 7175-7176
310 புள்ளிவிபரவியல் 7177
320 அரசறிவியல் 7178-7184
325.21 அகதிகள் 7185
327 சர்வதேசத் தொடர்புகள் 7186
330 பொருளியல் 7187-7193
335 சோசலிசம், அது தொடர்பான பிரிவுகள் 7194-7195
335.4 கம்யூனிசம் 7196
336 நிதியியல், வங்கியியல் 7197-7201
338 பொருளாதார வளங்கள், மீன்வளம் 7202
340 சட்டவியல் 7203
340.59 இஸ்லாமியச் சட்டங்கள் 7204-7206
342 அரசியலமைப்புச் சட்டம் 7207-7208
350 பொது நிர்வாகம் 7209-7210
360 சமூக சேவை நிறுவனங்கள் 7211-7213
363 சுற்றாடல், சூழல் மாசுபடுதல் 7214-7218
370 கல்வியியல் 7219-7226
370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள் 7227-7230
380 வர்த்தகம், தொடர்புகள், போக்குவரத்து 7231
381 வர்த்தகம் 7232
390 நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும்
392 வாழ்வியல் வழக்குகள், வாழ்க்கை முறைமைகள் 7233-7234
392.5 திருமணங்கள், சடங்கு முறைமைகள் 7235-7236
395 நாட்டார் கலைகள் 7237
398 கிராமிய இலக்கியங்கள் 7238-7255
398.1 பழமொழிகளும் விடுகதைகளும் 7256-7258

## 400 மொழியியல்

401 மொழியியல்- பொது 7259
420 ஆங்கில மொழி
440 பிரெஞ்சு மொழி 7260-7262
494.8 தமிழ் மொழி 7263-7266
494.8(1) தமிழ் இலக்கணம் 7267-7269
494.8(2) தமிழ்ப் பாடநூல்கள் 7270-7283

## 500 தூய விஞ்ஞானங்கள்

500 தூய விஞ்ஞானம் 7284-7291
510 கணிதம் 7292-7336
520 வானியல் விஞ்ஞானம் 7337-7340
526.9 நில அளவையியல் விஞ்ஞானம் 7341
530 பௌதிகம் 7342-7352
540 இரசாயனம் 7353-7358
550 புவியியல் விஞ்ஞானம் 7359-7360
551.47 சுனாமி 7361
570 உயிரியல் 7362-7368

580 தாவரவியல் 7369

## 600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்

613 பொது உடல்நலவியல் 7370-7374
613.7 யோகக்கலை 7375-7377
618 பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம் 7378
619 கீழைத்தேய மருத்துவம் 7379
619.1 சித்த மருத்துவம் 7380
640 இல்லப்பொருளியல், குடும்பக்கலை
642 உணவும் பரிமாறலும் 7381
649 குழந்தைப் பராமரிப்பு 7382-7385
650 முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம் 7386-7388

## 700 கலைகள், நுண்கலைகள்

701 பொதுக்கலைகள் 7389-7390
730 சிற்பக்கலை 7391
750 ஓவியக்கலை 7392-7394
780 இசைக்கலை 7395-7400
790 நிகழ்கலைகளும் பொழுதுபோக்குக் கலைகளும்
791 நாட்டியக் கலை 7401
792 அரங்கியல், நாடகக்கலை 7402-7410
793 திரைப்படக்கலை 7411
796 உடற்பயிற்சி, விளையாட்டுகள் 7412

## 800 இலக்கியம்

801 சிறுவர் இலக்கியங்கள்
801.(1) சிறுவர் பாடல்கள், கவிதைகள் 7413-7423
801.(2) சிறுவர் நாடகங்கள் 7424-7426
801.(4) சிறுவர் சிறுகதைகள் 7427-7434
801.(5) சிறுவர் நாவல்கள் 7435-7447
801.(6) சிறுவர்க்கான கட்டுரைகள் 7448
801.(7) சிறுவர்க்கான பலவின நூல்கள் 7449
891.2 சமஸ்கிருத இலக்கியம் 7450
894.8 தமிழ் இலக்கியம் 7451-7455
894.8(1) தமிழ்க் கவிதைகள் 7456-7547
894.8(2) தமிழ் நாடகங்கள் 7548-7582
894.8(3) தமிழ்க்கவிதை நாடகங்கள்-காவியங்கள் 7583-7588
894.8(4) தமிழ்ச் சிறுகதைகள் 7589-7655
894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள் 7656-7717
894.8(6) இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுகள் 7718-7792
894.8(7) பலவினத் தொகுப்பு 7793-7810
899 பிறமொழி இலக்கியங்கள் 7811-7813
899.(1) பிறமொழிக் கவிதைகள் 7814-7815
899.(2) பிறமொழி நாடகங்கள் 7816
899.(3) பிறமொழிக் கவிதை நாடகங்கள், காவியங்கள் 7817
899.(5) பிறமொழி நாவல்கள், குறுநாவல்கள் 7818-7821

## 900 புவியியல், வரலாறுகள்

901 பொது வரலாறுகள் 7822-7826
910 பொதுப் புவியியல் 7827-7829
911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள் 7830-7834
915 பிரதேசப் புவியியல் 7835-7836
920 வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள் 7837-7842
920.01 துறைசாரா வாழ்க்கைவரலாறுகள் 7843-7846
921 மெய்யியலாளர் 7847
922 சமயத் தலைவர், சிந்தனையாளர் 7848-7862
923 சமூகவியல்துறை சார்ந்தோர் 7863-7866
923.2 அரசியல் துறையினர் 7867-7872
923.4 சட்ட அறிஞர்கள் 7873
923.5 பொது நிர்வாகத்துறையினர் 7874
923.61 விடுதலைப் போராளிகள் 7875-7877
923.7 கல்வியியலாளர்கள் 7878-7891
923.8 வர்த்தகர்கள் 7892-7893
924 மொழியியலாளர்கள் 7894
926 பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள் 7895
927 கலைஞர்கள் 7896
927.5 ஓவியக்கலைஞர்கள் 7897
927.92 நாடகக் கலைஞர்கள் 7898-7902
927.93 திரைப்படக்கலைஞர்கள் 7903
928 இலக்கிய அறிஞர்கள், புலவர்கள் 7904-7916
940 ஐரோப்பிய வரலாறு 7917-7919
941 பிரித்தானிய வரலாறு 7920-7921
944 பிரான்ஸ் தேச வரலாறு 7922
953 அராபிய வரலாறு 7923
954 இந்திய வரலாறு 7924-7925
954.93(1) இலங்கையின் பொது வரலாறு 7926-7934
954.93(2) இலங்கை இனப்பிரச்சினை வரலாறு 7935-7944
954.93(3) இனங்கள் இன உறவுகள் 7945-7953
954.93(4) பிரதேச வரலாறு 7954-7974
956.94 இஸ்ரேல்-பலஸ்தீன வரலாறு 7975
960 ஆபிரிக்க வரலாறு 7976

## 999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்

999 பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள் 7977-8000

முன்னைய பதிவுகள் பின்னிணைப்பு 8A01-8A20

# நூல்தேட்டம் தொகுதி 8
# வகுப்புப் பிரிவு

## *000 பொதுப்பிரிவு*

### *000 பொது அறிவு*

***7001***

***2000 பயிற்சி வினாக்கள்-விடைகளுடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கானது.***
P.அம்பிகைபாகன். கொழும்பு 13: P.அம்பிகைபாகன், 125/6, 16ஆவது ஒழுங்கை, கல்லூரி வீதி, 2வது பதிப்பு, பெப்ரவரி 2000, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1999. (கொழும்பு 13: லட்சுமி அச்சகம், 195 ஆட்டுப்பட்டித் தெரு).
348 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 26x20 சமீ.

1995ம் ஆண்டு முதல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பழைய முறைகளை நீக்கி, புதிய முறைகளைப் பின்பற்றத் தொடங்கியது. 10 வயது மாணவனின் உள ஆற்றலையும் நுண்ணறிவையும் பாட அவதானத்தையும் சரியாக மதிப்பிட உகந்த இப்பரீட்சைக்கான 2000 பயிற்சி வினாக்களை இந்நூல் கொண்டுள்ளது. 1996-1999 காலப்பகுதியில் ஆசிரியர் வெளியிட்ட முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்களிலிருந்து தேர்ந்த கேள்விகளாக இவை தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன.

***7002***

***2010 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள் - வழிகாட்டி: தொகுதி 1.*** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, மார்ச் 2010. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).
40 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 142.50, அளவு: 29x21.5 சமீ., ISBN: 978-955-1779-34-4.

சிந்தனைவட்டம் அகில இலங்கை ரீதியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காக ஆண்டுதோறும் நடாத்தும் தபால்மூலப் பாடநெறியில் மாணவர்களுக்கு வழங்கும் நூற்றொடரின் தரம் 5 பாடப்பரப்பைத் தழுவிய முதல் நூல் இது. வன்னி நிவாரணக் கிராமங்களில் உள்ள தரம் 5 மாணவர்களுக்கும், நிவாரணக் கிராமங்களிலிருந்து மீளக் குடியமர்த்தப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கும் கல்வி நிவாரண உதவியாகவும் இந்நூல் லண்டன், தேசம்நெற். அமைப்பினரின் நிதி உதவியுடன் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்நூலில் பரீட்சை வினாத்தாள் 01, 02 இல் இடம்பெறக்கூடிய கணிதம் சார்பான வினாக்களும் மாணவர்கள் விடையெழுதக்கூடிய வகையில் எளிமையான குறிப்புகளும், வழிகாட்டல் பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 313ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.

***7003***

***2010 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள் - வழிகாட்டி: தொகுதி 2.*** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 2010. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).
40 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 142.50, அளவு: 29x21.5 சமீ., ISBN: 978-955-1779-35-1.

சிந்தனைவட்டம் அகில இலங்கை ரீதியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காக ஆண்டுதோறும் நடாத்தும் தபால்மூலப் பாடநெறியில் மாணவர்களுக்கு வழங்கும் நூற்றொடரின் தரம் 5

பாடப்பரப்பைத் தழுவிய முதல் நூல் இது. வன்னி நிவாரணக் கிராமங்களில் உள்ள தரம் 5 மாணவர்களுக்கும், நிவாரணக் கிராமங்களிலிருந்து மீளக் குடியமர்த்தப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கும் கல்வி நிவாரண உதவியாகவும் இந்நூல் லண்டன், தேசம்நெற். அமைப்பினரின் நிதி உதவியுடன் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்நூலில் பரீட்சை வினாத்தாள் 01, 02 இல் இடம்பெறக்கூடிய கணிதம் சார்பான வினாக்களும் மாணவர்கள் விடையெழுதக்கூடிய வகையில் எளிமையான குறிப்புகளும், வழிகாட்டல் பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. தர்க்கரீதியான வினாக்களுக்கு விடையளிக்கும் படிமுறைகளும் விளக்கப்பட்டிருக்கின்றன. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 314ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.

### 7004

**2010 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள் - வழிகாட்டி: தொகுதி 3.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 2010. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).
40 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 142.50, அளவு: 29x21.5 சமீ., ISBN: 978-955-1779-36-8.

சிந்தனைவட்டம் அகில இலங்கை ரீதியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காக ஆண்டுதோறும் நடாத்தும் தபால்மூலப் பாடநெறியில் மாணவர்களுக்கு வழங்கும் நூற்றொடரின் தரம் 5 பாடப்பரப்பைத் தழுவிய முதல் நூல் இது. வன்னி நிவாரணக் கிராமங்களில் உள்ள தரம் 5 மாணவர்களுக்கும், நிவாரணக் கிராமங்களிலிருந்து மீளக் குடியமர்த்தப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கும் கல்வி நிவாரண உதவியாகவும் இந்நூல் லண்டன், தேசம்நெற். அமைப்பினரின் நிதி உதவியுடன் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்நூலில் பரீட்சை வினாத்தாள் 01, 02 இல் இடம்பெறக்கூடிய சுற்றாடல் சார்பான வினாக்களும் மாணவர்கள் விடையெழுதக்கூடிய வகையில் எளிமையான குறிப்புகளும், வழிகாட்டல் பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் ஆய்ந்தறிதல் புலமை அடிப்படையிலான வினாக்களுக்கு விடையளிக்கும் படிமுறைகளும் விளக்கப்பட்டுள்ளன. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 318ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.

### 7005

**2010 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள் - வழிகாட்டி: தொகுதி 4.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, மே 2010. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).
40 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 142.50, அளவு: 29x21.5 சமீ., ISBN: 978-955-1779-37-5.

சிந்தனைவட்டம் அகில இலங்கை ரீதியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காக ஆண்டுதோறும் நடாத்தும் தபால்மூலப் பாடநெறியில் மாணவர்களுக்கு வழங்கும் நூற்றொடரின் தரம் 5 பாடப்பரப்பைத் தழுவிய முதல் நூல் இது. வன்னி நிவாரணக் கிராமங்களில் உள்ள தரம் 5 மாணவர்களுக்கும், நிவாரணக் கிராமங்களிலிருந்து மீளக் குடியமர்த்தப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கும் கல்வி நிவாரண உதவியாகவும் இந்நூல் லண்டன், தேசம்நெற். அமைப்பினரின் நிதி உதவியுடன் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்நூலில் பரீட்சை வினாத்தாள் 01, 02 இல் இடம்பெறக்கூடிய தமிழ்மொழி, கட்டுரை, பொது அறிவு, கட்புலனறிவு வினாக்களுக்கு மாணவர்கள் விடையெழுதக்கூடிய வகையில் எளிமையான குறிப்புகளும், வழிகாட்டல் பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 319ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.

### 7006

**2010 புலமைப்பரிசில் செயல்நூல்: தொகுதி 1 (தரம் 4 வழிகாட்டல்).** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஜனவரி 2010. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).
40 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 142.50, அளவு: 28x21 சமீ., ISBN: 978-955-1779-30-6.

சிந்தனை வட்டத்தின் 312ஆவது வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல் 2010 ஆகஸ்ட் மாதம் புலமைப்பரிசில் (தரம் 5) பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் வழிகாட்டி நூலாக வெளிவந்துள்ளது. பரீட்சையில் பகுதி -1க்கான வினாக்களுக்கு மாணவர்களைத் தயார்செய்யத்தக்க வகையில் குறிப்புகளும், பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. 2010ஆம் ஆண்டில் அகில இலங்கைரீதியில் சிந்தனை வட்டத்தால் நடத்தப்படும் புலமைப்பரிசில் தபால் மூல பாடநெறியில் தரம் 4 பாடப்பரப்பை மையப்படுத்திய முதலாவது நூல் இதுவாகும்.

### 7007

**2010 புலமைப்பரிசில் செயல்நூல்: தொகுதி 2 (தரம் 4 வழிகாட்டல்).** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஜனவரி 2010. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).
40 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 142.50, அளவு: 28x21 சமீ., ISBN: 978-955-1779-31-3.

சிந்தனை வட்டத்தின் 313ஆவது வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல் 2010 ஆகஸ்ட் மாதம் புலமைப்பரிசில் (தரம் 5) பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் வழிகாட்டி நூலாக வெளிவந்துள்ளது. பரீட்சையில் பகுதி -1க்கான வினாக்களுக்கு மாணவர்களைத் தயார்செய்யத்தக்க வகையில் தமிழ், கணிதம், கணிதப் புலமை, போன்றவற்றுக்கான குறிப்புகளும், பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. 2010ஆம் ஆண்டில் அகில இலங்கைரீதியில் சிந்தனை வட்டத்தால் நடத்தப்படும் புலமைப்பரிசில் தபால் மூல பாடநெறியில் தரம் 4 பாடப்பரப்பை மையப்படுத்திய இரண்டாவது நூல் இதுவாகும்.

### 7008

**கிரகித்தல்.** க.குணராசா (புனைபெயர்: செங்கை ஆழியான்). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 2வது திருத்திய பதிப்பு, ஜனவரி 1995, 1வது தமிழகப் பதிப்பு, ஏப்ரல் 1990. (யாழ்ப்பாணம்: மகாலட்சுமி அச்சகம்).
(4), 58 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 19x13.5 சமீ.

இது Comprehension என ஆங்கிலத்தில் வழங்கும் கிரகித்தல் பயிற்சியை வளர்க்க உதவும் நூல். கல்வியறிவோடு இயல்பான பகுத்தறிவு, சிந்தனைத்திறன், ஆக்கபூர்வச் செயற்பாடுகள், பலரிடையே தன்னை இனம்காட்டும் ஆளுமை, பொறுப்பேற்கும் ஆற்றல் என்பனவற்றைக் கிரகித்தல் திறன் வளர்க்கின்றது. ஒருவரின் அறிவுத்திறனை மதிப்பிடுவதற்கும் கண்டறிவதற்கும் சில தேர்வுகள் அவசியமாகின்றன. பொதுவாக உலக நாடுகளில் பொது அறிவு, நுண்ணறிவு, கிரகித்தல் ஆகிய மூன்று துறைகளில் ஒருவரின் அறிவுத்திறன் மதிப்பிடப்படுகின்றது. சொல்பவற்றிலிருந்தும் படிப்பவற்றிலிருந்தும் மெய்க்கருத்தைப் புரிந்துகொள்வது கிரகித்தலாகும். கிரகிக்கும் மெய்க்கருத்து, கிரகிக்கும் சுருக்கக் கருத்து, கிரகிக்கும் விரிவுக் கருத்து, கிரகிக்கும் மாற்றுக் கூற்றுகள் ஆகிய நான்கு பகுதிகளாக இந்நூலில் கிரகித்தற் பயிற்சிகள் விபரிக்கப்பட்டுள்ளன. இதன் முதற்பதிப்பு 1990இல் சென்னை நியு செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடாக வெளிவந்தது. இலங்கை வாசகர்களுக்காக இப்பதிப்பு திருத்திய புதிய பதிப்பாக 1995இல் வெளிவருகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 130757).

### 7009

**கேசரி தகவல் களஞ்சியம் 2011.** அந்தனி ஜீவா, பஸ்தியாம்பிள்ளை ஜோன்சன் (ஆசிரியர் குழு). கொழும்பு 14: Express Newspapers (Ceylon) (PVT) Ltd, 185, Grandpass Road, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 14: Express Newspapers (Ceylon) (PVT) Ltd, 185, Grandpass Road),
(8), 764 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 21x14.5 சமீ., ISSN: 2012-8762.

இலங்கையிலிருந்து முதன்முறையாக தமிழில் ஒவ்வொரு வருடமும் வெளிவரவுள்ள வெற்றிக்கு வழிகாட்டும் பொது அறிவுக்களஞ்சியம் என்ற விளம்பரக் குறிப்பைத்தாங்கி வெளிவந்துள்ள இவ்வாண்டு மலரில், விஞ்ஞானம், வரலாற்றுச்சுவடுகள், சாதனைக் குறிப்புகள், ஆன்மீகம், புகழ்பூத்த பெரியார்கள், விளையாட்டு, சினிமா, கலை, சுற்றுலாத் தலங்கள், வணிகம், தொழில்நுட்பம் மற்றும் பல்வேறு பொதுத் தகவல்கள் உலகளாவியரீதியில் பொதுவாகவும், இலங்கைசார்ந்த தகவல்கள் விரிவாகவும் இடம்பெற்றுள்ளன. இலங்கை, ஊடகம், கல்வி, கலைகள், இலக்கியம், உலகம், சினிமா,

*சோதிடம், ஆன்மீகம், நிதி நிறுவனங்களும் சர்வதேச அமைப்புகளும், விளையாட்டு, யுகபுருஷர்கள், தமிழ்மொழி, 2010 தடம் பதித்தவை, அறிவியல், மருத்துவத்துறை, தகவல் தொழில்நுட்பம், விண்வெளி, பல்துறை ஆகிய பிரிவுகளில் இத்தகவல்கள் கட்டுரையுருவிலும் சிறுகுறிப்புகளாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.*

***7010***

***தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு 1825 பயிற்சி வினாக்கள்.*** *பி.அம்பிகைபாகன். கொழும்பு 13: பி.அம்பிகைபாகன், 125/6, 16ஆவது ஒழுங்கை, கல்லூரி வீதி, 1வது பதிப்பு, 2001. (கொழும்பு:* Dream Land Printers*).*

*428 பக்கம், விலை: ரூபா 195, அளவு: 27.5*x*21 சமீ.*

*கணிதம், மொழி விருத்தி ஆகிய பாடக்குறிப்புகளைக் கொண்டுள்ள இந்நூலில், கடந்தகால ஏழு அரச பரீட்சைத் தாள்கள் விடைகளுடன் வழங்கப்பட்டுள்ளன. நூலாசிரியர், 1995இல் புலமைப்பரிசில் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டபோது, பிரைற் புத்தக நிலையம் என்ற கல்விசார் நிறுவனம் தொடர் இதழாக வெளியிட்ட வெற்றிக்கனி புலமைப்பரிசில் பரீட்சைநூலின் ஆசிரியராகச் செயற்பட்டவர்.*

***7011***

***பரமநாதம்: அறிவை அறிவோம்.*** *நினைவு மலர்க்குழு. யாழ்ப்பாணம்: கணபதிப்பிள்ளை பரமசாமி அவர்களின் நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, ஜுலை 2009. (கோண்டாவில்:* Andra Printers, *காங்கேசன்துறை வீதி).*

*132 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5*x*14.5 சமீ.*

*அமரர் க.பரமசாமி (22.4.1927-9.6.2009) அவர்களின் நினைவுமலராக 9.7.2009 அன்று அன்னாரின் மறைவின் 31ம் நாள் நிகழ்வில் வெளியிடப்பட்ட இந்நூலில், பல்வேறு பொதுஅறிவுத் தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 163158).*

***7012***

***புலமைப் பரிசில் புதிய வெளிச்சம் 2009: கருத்தரங்கு வழிகாட்டிக் குறிப்பேடுகளும் பயிற்சிகளும்.*** *பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஜுலை 2009. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).*

*32 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 28*x*21 சமீ.,* ISBN: *978-955-1779-33-7.*

*12.7.2009 இல் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்திலும், 18.7.2009இல் கண்டி இந்து கலாசார மண்டபத்திலும் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக் கருத்தரங்கினை முன்னிட்டு இந்நூல் வெளியிடப்பட்டது. கருத்தரங்க வழிகாட்டிக் குறிப்பேடுகளும், பயிற்சிகளும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. இது சிந்தனை வட்டத்தின் 306ஆவது வெளியீடாகும்.*

***7013***

***பொது அறிவு: G.K.for all 2009.*** P. *உமாசங்கர். கொழும்பு 3:* P. *உமாசங்கர், உமா பதிப்பகம், இல.3, ஹட்சன் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (கொழும்பு: கே.எஸ்.கே.டொட் கொம் அச்சகம்).*

vii, *340 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *955-98622-3-5.*

*இலங்கையின் தகவல்கள், உலகின் தகவல்கள், விளையாட்டுகள், மருத்துவமும் விஞ்ஞான தொழில்நுட்பவியலும், விண்வெளி அறிவியல், சுற்றாடலும் சமூகவியலும், சினிமாத்துறை, சர்வதேச ரீதியிலான முக்கிய விடயங்கள், பல்துறை விடயங்கள், கடந்தகால வினாப்பத்திரங்கள் -விடைகளும் அண்மைக்கால விடயங்களும் ஆகிய தலைப்புகளில் பொது அறிவுத் தகவல்கள் பகுத்துத் தரப்பட்டுள்ளன. பல்வேறு துறைகளும் மிகச்சிறிய துணுக்குகளாக இந்நூலில் எளிய உசாத்துணை*

*வழி முறையில் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46339).*

**7014**

**பொது அறிவு பொக்கிஷம்.** *ச.எரிக்கென்றிசன் (நிலான்). கொழும்பு: காயத்திரி வெளியீட்டகம், த.பெ.இலக்கம், 64, தெகிவளை, 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (கொழும்பு: காயத்திரி வெளியீட்டகம், த.பெ.இலக்கம், 64, தெகிவளை).*

vi, *144 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21*x*14.5 சமீ.*

*போட்டிப் பரீட்சைகளுக்குப் பயன்படுத்தக்கூடியவகையில் வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் கடந்த கால வினாவிடைகள், துணுக்குகள், விஞ்ஞான விளக்கங்கள், தகவல்கள், சுருக்கக் குறியீடுகள், நாடுகளின் சுதந்திர தினங்கள், பொது அறிவுத் தகவல்கள் என்பவை தொகுக்கப்பட்டுள்ளன. பல்வேறு துறைகளையும் சார்ந்த தகவல்கள் மிகச்சிறிய துணுக்குகளாக எளிய உசாத்துணை வழி முறையில் தொகுக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானச் சிறப்புப் பட்டதாரியாவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46349).*

## *001 கணனியியல்*

**7015**

**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் : தொகுதி 2.** *கே.ஆர். சுகுமார். (இயற்பெயர்: இராசையா சுகுமார்). யாழ்ப்பாணம்: கணனிப் பிரிவு, கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில், 1வது பதிப்பு, மார்ச் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

viii, *178 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 24* x*18.5 சமீ.,* ISBN: *978-955-50192-0-0.*

*இலங்கை அரசினால் 2006ம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திட்டத்திற்கான முதலாவது பரீட்சை 2007ம் ஆண்டில் நடைபெறவிருந்த நிலையில், அப்பாடத்திட்டத்தின் ஏழு அலகுகளில் மூன்றாம், நான்காம் அலகுகளை உள்ளடக்கி எழுதப்பட்ட உப பாடநூல் இது. தமிழ்மொழியில் இப்பாடத்தைக் கற்க உதவியாக இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. கல்வியமைச்சின் பாடத்திட்டத்தில் உள்ள ஏழு அலகுகளில் முதலிரண்டு அலகுகள் பற்றி ஏற்கெனவே ஒரு நூலை வெளியிட்டுள்ள சுகுமார் தற்போது மூன்றாம் நான்காம் அலகுகள் பற்றிய விளக்கத்தை பல்வேறு அட்டவணைகள், விளக்கப்படங்கள் போன்றவற்றின் துணையுடன் இந்நூலில் விளக்கியிருக்கின்றார். முதல் 138 பக்கங்களில் பாட விளக்கமும், 138-178 வரையிலான பின்னடிப் பக்கங்களில் விடயத் தலைப்புகளின்கீழ் மாதிரி வினாக்களும் தரப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கணனிப்பிரிவுக்கான ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 41083).*

**7016**

**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்: தொகுதி 3.** *கே.ஆர். சுகுமார். (இயற்பெயர்: இராசையா சுகுமார்). யாழ்ப்பாணம்: கணனிப் பிரிவு, கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

xi, *173 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 23.5* x*18.5 சமீ.,* ISBN: *978-955-50192-4-8.*

*வரலாற்றுத் தகவலாக அரைநூற்றாண்டு கால கணினி மொழிபற்றிக் குறிப்பிடும் ஆசிரியர் காட்சி அடிப்படைகள், மாறிகள் எனத் தொடர்ந்து தினமும் பலரும் பயன்படுத்தும் இணையத்தளம், கணினி மொழி பற்றிய தகவல்களையும் தந்துள்ளார். இந்நூலாசிரியரால் எழுதப்பட்ட முதலிரு நூல்களும் நான்கு அலகுகளை உள்ளடக்கியுள்ளன. மூன்றாவது நூலில் 5,6,7,8ம் அலகுகள் பிரிக்கப்பட்டு விடயங்கள் தரப்பட்டுள்ளன. அலகு 5- நிகழ்ச்சி நிரலாக்க எண்ணக்கரு, கணினி மொழிகளின் அறிமுகம், நெறிமுறை, தொழில்நுட்பம், தரவு வகைகள், தொழிற்பாடு பயிற்சிகள் என்பனவும், அலகு*

*6இல் இணையத்தள அபிவிருத்தி, உருவாக்குதல், இணைத்தல், கிராபிக் வடிவங்கள், இணையத்தளத்தை வெளிப்படுத்துவதற்கான தேவைகள் என்பன அடங்குகின்றன. அலகு 7இல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமும் சமூகமும் தேசிய அபிவிருத்தியும் சுகாதாரமும், கல்வி, விவசாயம், கைத்தொழிற்சாலைகள், உட்பட பாவனை தொடர்பான பிரச்சினைகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. அலகு 8இல் குழு செயற்றிட்டம், முன்மாதிரி வினாக்கள் என்பன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கணனிப்பிரிவுக்கான ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42748).*

### 7017

**தகவல் தொழில்நுட்ப கலைச்சொல் அகரமுதலி: ஆங்கிலம் - தமிழ்.** இலங்கை அரசகரும மொழிகள் ஆணைக்குழு. *கொழும்பு 8: சு.சிவதாசன், தலைவர், அரசகரும மொழிகள் ஆணைக்குழு, ஒஸ்டின் இடம், 1வது பதிப்பு, 2000. (கொழும்பு 8: அரசாங்க அச்சுத் திணைக்களம்).*
viii, *182 பக்கம், விலை: ரூபா 52., அளவு: 21.5*x*13.5 சமீ.*

*இந்த ஆங்கில தமிழ் கலைச்சொல் அகராதியில் தகவல் தொழில்நுட்பத்துறையில் பயன்படுத்தப்படும் 6200 சொற்கள் இடம்பெற்றுள்ளன. மொழிபெயர்ப்போடும், ஒலிபெயர்ப்போடும், புதுக் கலைச்சொற்களோடும் அமைகின்றன. இக்கலைச்சொல் அகரமுதலி சிங்கப்பூரில் நிகழ்ந்த தமிழ் இன்ரநெட் 2000 ஆசிய சர்வதேச மாநாட்டில் இலங்கையின் சார்பில் கையளிக்கப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33202).*

### 7018

**தொடர்பாடலுக்கான தகவல் தொழில்நுட்பம்.** இராசதுரை சுகுமார். *யாழ்ப்பாணம்: கணனிப் பிரிவு, கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில், 2வது பதிப்பு, ஜுலை 2006, 1வது பதிப்பு, மார்ச் 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
xvi, *78 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 23.5*x*18.5 சமீ.,* ISBN: *955-96615-0-0.*

*இலங்கை அரசினால் 2006ம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திட்டத்திற்கான முதலாவது பரீட்சை 2007ம் ஆண்டில் நடைபெறவிருந்த நிலையில், அப்பாடத்திட்டத்தின் ஏழு அலகுகளில் முதல் இரு அலகுகளையும் உள்ளடக்கி எழுதப்பட்ட உப பாடநூல் இது. இந்நூலாசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரியின் கணனிப்பிரிவுக்கான ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39233).*

## 010 நூலியல், நூல்விபரப்பட்டியல்

### 7019

**நூல்தேட்டம்: தொகுதி 6.** என்.செல்வராஜா. *ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், இணை வெளியீட்டாளர், கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, மே 2011. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*
xviii, *548 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 15., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-0-9549440-8-7.*

*தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ்நூல்களுக்கான குறிப்புரையுடன் வெளிவந்துள்ள நூல்விபரப்பட்டியலின் ஆறாவது தொகுதி இது. இத்தொகுதியில் மேலும் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவி தசாம்சப் பகுப்புமுறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. பதிவுகள் 5001-6000 வரை தொடர் இலக்கமிடப்பட்டுள்ளன. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றுடன் இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் படைப்புக்களும், முன்னைய தொகுதியின் பதிவுகளுக்கான மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும்.*

### 7020

**நூல்தேட்டம் தொகுதி 7.** என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், இணை வெளியீட்டாளர், கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, மே 2011. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).
xviii, 506 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 15., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-307-5.

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ்நூல்களுக்கான குறிப்புரையுடன் வெளிவந்துள்ள நூல்விபரப்பட்டியலின் ஏழாவது தொகுதி இதுவாகும். இத்தொகுதியில் மேலும் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவி தசாம்சப் பகுப்புமுறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. பதிவுகள் 6001-7000 வரை தொடர் இலக்கமிடப்பட்டுள்ளன. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றுடன் இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் படைப்புக்களும், முன்னைய தொகுதியின் பதிவுகளுக்கான மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும். நூலின் பின்னிணைப்பாக "இலங்கைத் தமிழ் ஆவணங்கள்: ஆவணப்படுத்ததல்-வரலாறு-அதன் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக துணை நூலகர் இராசையா மகேஸ்வரன் எழுதிய கட்டுரை இடம்பெற்றுள்ளது. இலங்கைத் தேசிய நூற்பட்டியலையும், நூல்தேட்டம் தொகுப்புகளையும் ஒப்பீடுசெய்யும் இவ்வாய்வு, தமிழகத்தில் 2010இல் நடைபெற்ற தமிழ் செம்மொழி மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரையின் மீள்பிரசுரமாகும்.

## 020 நூலகவியல், தகவல் விஞ்ஞானம்

### 7021

**அறிவூற்றகம்.** வேலுப்பிள்ளை யுகபாலசிங்கம். யாழ்ப்பாணம்: மெய்யியல் கல்வியகம், 46/2, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, 1வது பதிப்பு, ஆவணி 2010. (யாழ்ப்பாணம்: கொலின் கிரப்பிக்ஸ், 43, கோவில் வீதி).
(4), xv, 53 பக்கம், புகைப்படத்தகடுகள், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ.

கி.மு தொடங்கி இற்றைவரை உருவாக்கப்பட்ட உலக நூலகங்களைப் பற்றியும் குறிப்பாக, ஈழத்து நூலகங்கள் பற்றியும் பல்வேறு விடயங்களைத் தாங்கி வெளிவந்துள்ள நூல் இதுவாகும். யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி நூலகம், மகேந்திரா திரை அரங்கு, ரூணம் தொல்பொருள் காட்சிசாலை (Rwynam Museum) , யாழ். நூலகம், எமது நாட்டின் தொன்மைக்கால நூலகங்கள் பற்றி, தொன்மைக்கால இந்திய நூலகங்கள் பற்றி, நூல்நிலையம் உலகளாவிய வரலாற்று நோக்கு, உலகில் மிகப்பெரிய நூலகங்கள், தேசிய நூலகங்கள் சில, பொதுசன நூலகங்கள் பற்றி, நூல்-நூலகம்-மொழி ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. முக்கிய ஆவணப்படங்கள் இடையிடையே சேர்க்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் கடந்த 29 வருடங்களாக யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் அளவையியல் பாடநெறியைக் கற்பித்து வந்தவர். கல்லூரியின் உயர்தர கலை வர்த்தகப் பிரிவு பகுதித் தலைவராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

### 7022

**களிமண் பதிவுகள் முதல் கணனிப் பதிவுகள் வரை: நூலக தகவற் சேமிப்பு ஊடகங்களின் வளர்ச்சிப் போக்கு.** இ.கிருஷ்ணகுமார். யாழ்ப்பாணம்: அகிலம் வெளியீடு, 7 ரத்தினம் ஒழுங்கை, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1995. (யாழ்ப்பாணம்: ஜோசப் பாலா, மணி ஓசை அச்சகம், 12 புனித பத்திரிசியார் வீதி).
(8), 34 பக்கம், விலை: ரூபா 35., அளவு: 20.5x13.5 சமீ.

களிமண்தட்டுத் தொடக்கம் நவீன கணனி வரை மனிதன் உருவாக்கிய தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியை, வரலாற்றுப் பின்னணியில் இந்நூல் எடுத்துரைக்கின்றது. புதிய தகவல் ஒழுங்கமைப்பு எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ள நாடுகளுக்குச் சாதகமாகவும், மூன்றாம் உலக நாடுகளுக்குப் பாதகமாகவும் அமையுமென்பதையும் இங்கே நூலாசிரியர் கோடிட்டுக் காட்டியுள்ளார். இராசரட்ணம் கிருஷ்ணகுமார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட நூலகத்தில் பணியாற்றுபவர். அகிலம் வெளியீட்டகம் சமூக அறிவியல் சார்ந்த நூல்களை அவ்வப்போது சிறு நூல்வடிவில் வெளியிட்டு

வந்துள்ளது. அந்த வரிசையில் இது நான்காவது பிரசுரமாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 470334).

### 7023

**தகவல்வள முகாமைத்துவம்.** அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி. கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 2வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
x, 403 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 750., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-160-6.

தமிழ்ச் சமூகத்தின் ஒவ்வொரு நூலகமும் தரமான சேகரிப்பைக் கொண்டிருக்கவேண்டும் என்ற தீராத விருப்பில் உருவாக்கம் பெற்றதே இந்நூலாகும். தகவல் வளங்களின் தெரிவு, ஈட்டல், நீக்கம், ஆகியவை உள்ளிட்ட அபிவிருத்தி என்ற கருத்துநிலையையும் பாதுகாப்பு என்ற அம்சத்தை முக்கியமாகக் கொண்ட பராமரிப்பு என்ற கருத்துநிலையையும் முக்கிய மூலக்கூறுகளாகக்கொண்டு இப்படைப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது. தகவல்தொழில்நுட்ப யுகமொன்றில் தமது அர்த்தத்தை இழந்துவரும் நூல் மற்றும் நூலகங்கள் என்ற கருத்துநிலைகளுக்குப் பதிலாக முறையே தகவல் வளங்கள் (Resources), தகவல் முறைமைகள் என்ற கருத்துநிலைகளின்கீழ் ஒவ்வொரு நூலகங்களும் கொண்டிருக்கவேண்டிய நூல்கள் மற்றும் நூலுருவற்ற சாதனங்கள், அவற்றின் தெரிவு, ஈட்டல், நீக்கம், பராமரிப்பு, பாதுகாப்பு இவற்றுடன் தொடர்புடைய முக்கிய அம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் கல்விசார் நூலகராக பணியாற்றுகின்றார்.

### 7024

**நூலக அபிவிருத்தி: ஒரு பயில் நோக்கு.** அ.ஸ்ரீகாந்தலட்சுமி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
200 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: ரூபா 400., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-82-0.

ஒரு நூலக உருவாக்கத்திற்குத் தேவைப்படும் அடிப்படை அம்சங்கள் அனைத்தையும் மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும், உதாரண விளக்கங்களுடனும் புகைப்படத் தகவல்களுடனும் இந்நூல் முன்வைக்கின்றது. வீட்டு நூலகம் முதற்கொண்டு, சனசமூக நிலைய நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், மற்றும் கல்வி நிறுவன நூலகங்கள், பொதுசன நூலகங்கள், சிறப்பு நூலகங்கள் அனைத்திற்கும் ஒரு அடிப்படையைத்தர இந்நூல் முயல்கின்றது. நூலகம், நூல்கள், வாசகர், அலுவலர் ஆகிய நான்கு பெரும்பிரிவுகளுக்குள் அடங்கிய பல்வேறு உபதலைப்புகளுடன் இந்நூல் விரிகின்றது.

### 7025

**நூலக முகாமைத்துவ நுட்பங்கள்.** மைதிலி விசாகரூபன். யாழ்ப்பாணம்: மலர் பதிப்பகம், 56/5, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், 1வது பதிப்பு, தை 2011. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).
x, 110 பக்கம், விலை: ரூபா 390., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-53349-0-7.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உதவி நூலகராகப் பணியாற்றும் நூலாசிரியர், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நூலகவியலில் கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொண்டுவருகிறார். இந்நூல் நூலக முகாமைத்துவக் கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் தமிழில் அறிமுகம் செய்கின்றது. அறிவியல் முகாமைத்துவக் கோட்பாடும் நூலக முகாமைத்துவமும், நூலக முகாமைத்துவத்தில் தொடர்பாடல் முறைகள், நூலக ஆவணப் பாதுகாப்பு முகாமைத்துவம், நூலக ஆவணங்களின் பாதுகாப்பு முறைகள், நூல்களுக்கு மட்டைகட்டுதல், நூல்நீக்கமும் அதன் நடைமுறைகளும், நூலக நியமங்கள், டிஜிட்டல் நூலகங்கள் ஆகிய எட்டுத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7026

**நூலகப் பகுப்பாக்கம்: நூலகர் கைநூல்.** அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி. யாழ்ப்பாணம்: நூலக விழிப்புணர்வு நிறுவகம், 1வது பதிப்பு, 2005. (யாழ்ப்பாணம்: ஷாம்பவி பதிப்பகம்).
xix, 158 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 28.5x21 சமீ., ISBN: 955-1383-00-0

இரு பகுதிகளாக எழுதப்பட்டுள்ள இந்நூலில் அறிமுகம், அறிவுப் பிரபஞ்சம், பொருட்துறைகளின் உருவாக்கம், பகுப்பாக்கப்பணி, தூவி தசாம்சப் பகுப்புத் திட்டம், புதிய மாற்றங்கள், பொருட்துறைகளை விளங்கிக்கொள்ளல், தூவி தசாம்சப் பகுப்புத் திட்டமும் எண் கட்டுமானமும், துணை அட்டவணைகளும் எண் கட்டுமானமும், சிறப்பு இணைப்பெண்களும் எண் கட்டுமானமும் ஆகிய அத்தியாயங்கள் முதலாவது பகுதியிலும், தூயி தசாம்சப் பகுப்புத் திட்டம், பிரதான அட்டவணை (பொருள் வகுப்புப்பிரிவு), Relative Index ஆகியன இரண்டாவது பகுதியிலும் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் நூலகராகப் பணியாற்றுகிறார்.

## 051 பருவஇதழ் சிறப்பிதழ்கள்

**7027**

**கலைமுகம்: கலை இலக்கிய சமூக இதழ் 50ஆவது சிறப்பிதழ்.** நீ.மரியசேவியர் (பிரதம ஆசிரியர்), கி.செல்மர் எமில் (பொறுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, 2010. (யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்டர், 28, மாட்டின் வீதி).
252 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 350., அளவு: 28x21 சமீ.

சமயம், அரசியல் இரண்டும் அற்ற கலை இலக்கிய இதழாகத் தன் இருபதாண்டுப் பயணத்தின் ஒரு படிக்கல்லாக இந்தச் சிறப்பிதழ் அமைந்துள்ளது. கவிதைகள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புக் கவிதைகள், மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் மற்றும் நூல் மதிப்பீடுகள், கட்டுரைகள் ஆகியவற்றைத் தாங்கி ஐம்பதாவது இதழ் (கலை 21 முகம் 01) வெளிவந்துள்ளது. காலத்தை வென்ற நவயதார்த்த சினிமா சித்தாந்தம் (G.T.கேதாரநாதன்),அங்குமிங்குமாய் இணையும் கதைகள் (அ.யேசுராசா), கத்தோலிக்கர்களின் மரணவீடுகளில் பாடப்படும் ஒப்பாரி இலக்கியங்கள் (கலையார்வன்), ஓவியர் வான்கோ: இறந்த பின்பும் வாழும் கலைஞன் (கோ.கயிலாசநாதன்), இருப்பெனும் புதிர்: மு.பொன்னம்பலத்தின் மதிப்பீடு கவிதை தொடர்பான சில கருத்துக்கள் (இ.ஜீவகாருண்யன்), கடந்த அரை நூற்றாண்டின் கவிதைத் தூறல்கள்: மேலோட்டமான ஓர் உலக வலம் (நீ.மரியசேவியர்), அழகியற் கல்வியில் சித்திரக் கலையின் வளர்நிலை- ஒரு நோக்கு (பப்சி மரியதாசன்), ஈழத்துப் பெண்கள் இலக்கிய வரலாறு-ஆரம்ப நிலைப்பட்ட குறிப்புகள் (செ.யோகராசா), கடந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த படைப்பாளி லியோ டோல்ஸ்டோய் (K.S.சிவகுமாரன்), அவதார்: கனவில் உறையும் உலகம் (பீ.சே.கலீஸ்), வல்லினமும் மெல்லினமும் அவ(த்)தார் (N.M.S.), சிதம்பர நினைவுகள் (இராகவன்), ஈழத்துப் பெண்களின் சிந்தனையில் விழிப்புணர்வை ஏற்படுத்திய சொல்லாத சேதிகள் (ஈ.குமரன்), தோற் கருவிகளின் தாய் - பறை (இ.ஜெயகாந்தன்), ஈரானிய Two Women சினிமாவில் எமக்கு நெருக்கமான பெண்ணிய அனுபவம் (G.T.கேதாரநாதன்), அறிதல்-ஆவணப்படுத்துதல்-சேகரித்தல்-பாதுகாத்தல்-காலத்தின் முதன்மையான பணி (மா.அருள் சந்திரன்), கட்டும் கடப்பும் கலைகளும் (இரவிச்சந்திரன்), தமிழிலக்கியப் புலத்தில் முருகையனின் ஆளுமையும் புலமைத்துவமும் (சி.ரமேஷ்), தெருவெளி அரங்கு (அ.சத்தியானந்தம்), ஈழத்து கூத்து நூற்பதிப்புகள் (யோ.யோண்சன் ராஜ்குமார்), யாழ்ப்பாணமே ஓ எனது யாழ்ப்பாணமே இலக்கியவழிப்பட்ட ஒரு குறிப்பு (கருணாகரன்), இணையம்: அளவுகளையும் தாமதங்களையும் அகற்றிய கட்டுப்பாடற்ற வெளி (தீபச்செல்வன்), தமிழின் செம்மொழித் தகுதி-அறிஞர்களின் கருத்துகள் (தமிழ்நேசன்), ஊடகங்களில் மகிழ்நெறி (ஸ்ரீதயாளன் ஸ்ரீபிருந்தன்), திருமறைக் கலாமன்றத்தின் 45 வருட அரங்கியல் பயணம்: தடங்களும் தடயங்களும் (ஸ்நாபகன்) ஆகிய கட்டுரைகள் வழமையான சிறுகதை, கவிதை போன்ற ஆக்க இலக்கியங்களுடன் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**7028**

**ஞானம்: சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 இலங்கை சிறப்பிதழ்.** *தி.ஞானசேகரம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3*B*, 36வது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 2011. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48* B*, புளூமெண்டால் வீதி).*
*112 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 25*x*17.5 சமீ.*

*சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு முதன்முதலில் இலங்கையில் (கொழும்பில்) நடைபெற்றதை முன்னிட்டு ஞானம் இலக்கியச் சஞ்சிகை வெளியிட்டுள்ள ஜனவரி 2011க்குரிய ஞானம் இதழ் மாநாட்டுச் சிறப்பிதழாகப் பிரசுரமாகியுள்ளது. 2011 ஜனவரி 6,7,8,9 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்று முடிந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் மகாநாட்டையொட்டி இச்சிறப்பிதழ் சிறப்புக் கட்டுரைகளுடனும் மாநாட்டுச் செய்திகளுடனும் வெளியிடப்பட்டுள்ளது.*

***7029***
**தமிழர் தகவல்: 20ஆவது ஆண்டு மலர்.** *எஸ்.திருச்செல்வம் (பிரதம ஆசிரியர்),* Canada: Tamil's Information, Ahilan Associates, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4, *1வது பதிப்பு, பெப்ரவரி 2011. (*Canada: Ahilan Associates, Printers and Publishers, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4*).*
*156 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21.5 சமீ.,* ISSN:*1206-0585.*

*பெப்ரவரி 1991 முதல் கனடாவிலிருந்து வெளிவரும்* ***தமிழர் தகவல்*** *மாத சஞ்சிகையின் 20ஆவது ஆண்டு நிறைவு மலர். அமெரிக்க, கனடியத் தமிழ் மக்களினதும், ஐரோப்பியத் தமிழர்களினதும் 100க்கும் மேற்பட்ட தமிழ் ஆங்கில அறிவியல் ஆக்கங்களைத் தாங்கி இது வெளிவந்துள்ளது. தமிழர் தகவல் ஆண்டுதோறும் வழங்கும் விருதுகளைப் பெறுவோர் பற்றிய விபரங்களும் இம்மலரில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. 2011இல் கனடாவின் ரொரன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா மண்டபத்தில் இடம்பெற்ற ஆண்டு விழாவின்போது இம்மலர் வெளியிடப்பட்டது.*

***7030***
**தமிழர் தகவல்: 21ஆவது ஆண்டு மலர்: இளந்தை மலர்.** *எஸ்.திருச்செல்வம் (பிரதம ஆசிரியர்),* Canada: Eelam Tamil Information Centre (ETHIC) of Toronto and Tamil Information Research Unit (THIRU), Ahilan Associates, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4, *1வது பதிப்பு, பெப்ரவரி 2012. (*Canada: Ahilan Associates, Printers and Publishers, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4*).*
*156 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21.5 சமீ.,* ISSN:*1206-0585.*

*பெப்ரவரி 1991 முதல் கனடாவிலிருந்து வெளிவரும்* ***தமிழர் தகவல்*** *மாத சஞ்சிகையின் 21ஆவது ஆண்டு நிறைவு மலர். அமெரிக்க, கனடியத் தமிழ் மக்களினதும், ஐரோப்பியத் தமிழர்களினதும் 100க்கும் மேற்பட்ட தமிழ் ஆங்கில அறிவியல் ஆக்கங்களைத் தாங்கி இது வெளிவந்துள்ளது. தமிழர் தகவல் ஆண்டுதோறும் வழங்கும் விருதுகளைப் பெறுவோர் பற்றிய விபரங்களும் இம்மலரில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. 2012இல் கனடாவின் ரொரன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா மண்டபத்தில் இடம்பெற்ற ஆண்டு விழாவின்போது இம்மலர் வெளியிடப்பட்டது.*

## *053 வழிகாட்டிகள்*

***7031***
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக ஏட்டுச் சுவடிகள் பட்டியல்.** *சி.முருகவேள் (பரிசோதித்துத் தொகுத்தவர்). யாழ்ப்பாணம்: நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மே 1992. (கல்லச்சுப் பிரதி).*
*(4), 39 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 32*x*19.5 சமீ.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பித்த காலம் தொடக்கம், அவ்வப்போது பல ஓலைச் சுவடிகள் நன்கொடைகளாகவும் இன்னும் வேறு வழிகளிலும் வந்து சேர்ந்திருந்தன. அவற்றைப் பார்வையிட்டு*

*விஞ்ஞானபூர்வமாக அவற்றை ஒழுங்குபடுத்தி ஒரு பட்டியலாக வெளியிட்டுள்ளனர். அரபு எண் ஒழுங்கில் அமைந்த பிரதான பட்டியல், தலைப்புச் சுட்டு, பொருட்சுட்டு ஆகிய மூன்று பகுதிகளாக அமைந்துள்ள இந்நூலின் ஒவ்வொரு பிரதான பதிவிலும் ஏட்டின் தலைப்பு, பிரதிப்பாடத் தொடக்கம், பிரதிப்பாட முடிவு, ஓலைகளின் எண்ணிக்கை, அளவும் பிற பௌதிக விபரங்களும், குறிப்புகள் ஆகிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வேட்டுச் சுவடிகளுள் கிரந்த லிபியில் அமைந்த வடமொழிச்சுவடிகளை ஆராய்ந்து இனங்காண பிரமஸ்ரீ மு.சுந்தரமூர்த்தி அவர்கள் உதவியுள்ளார். சி.முருகவேள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகராகப் பணியாற்றியவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 440273).*

## *060 பொது நிறுவனங்கள்*

### *7032*

***அறவழி நினைவுகள்.*** *சங்கரன் தங்கராசா. யாழ்ப்பாணம்: ச.தங்கராசா, நவபுரம், கைதடி, 1வது பதிப்பு, ஜுன் 2011. (சென்னை 600005: கணபதி அச்சகம், 26 தானப்பர் தெரு, திருவல்லிக்கேணி).*
*120 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ.*

*தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு என்ற பெயரில் இயங்கிய அமைப்பு 1979 பெப்ரவரி 25ம் திகதி முதல் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் அறவழிப் போராட்டக் குழு என்ற மனித உரிமை நிறுவனமாக பரிணாம வளர்ச்சி கண்டது. அதன் உருவாக்கம், வளர்ச்சி, சமூகப் பணிகள் பற்றிய உள்வீட்டுப் பிள்ளையின் பார்வையாக இந்நூல் அமைந்துள்ளது.*

### *7033*

***கலைச் சுவடுகள் 1965-2005: திருமறைக் கலாமன்ற 40ஆவது ஆண்டு நிறைவு மலர்.*** *மலர்க் குழு. யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*65 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21.5 சமீ.*

*நீ.மரியசேவியர் அடிகளை இயக்குநராகக் கொண்ட திருமறைக் கலாமன்றத்தின் (தி.ம.க மன்றத்தின்) நாற்பதாண்டுப் பணியை பதிவாக்கும் ஆவணம். நாற்பதாண்டு கால நகர்வின் சுவடுகளில் நின்று, மதத்தில் இருந்து மானிடம் நோக்கிய யாத்திரை, விழிகளை அகலவைத்த அசோகா, யுத்தத்திற்கு சவால்விடும் சமாதானச் செயற்பாடுகள், தி.ம.க மன்றம் ஒரு பார்வை, யாழ் நகரில் மனமே, எமது மேடையில் ஸ்பாட்டக்கஸ், தி.ம.க மன்றத்தின் கலைஞர்கள் கௌரவிப்பு, பல்லினக் கலைஞர்கள் சங்கமித்த சமாதானக் கலைச் சங்கமம், தி.ம.க மன்றத்தின் சமாதான முன்னெடுப்புகளில் எழுத்தாளர்களும் கலைஞர்களும், தி.ம.க மன்றத்தின் கலைத்தூது இனப்புரிந்துணர்வுக்கு அடித்தளமிட்ட கலைப்பால நிகழ்வுகள், தி.ம.க மன்றத்தின் புதுயுகம் நோக்கிய கலைப் பயணம், யாழில் மூவினங்களும் கலந்த விழா, தி.ம.க மன்ற வடலிக் கூத்தர் கலைக்குழுவின் ஓர் ஐரோப்பியக் கலைப்பயணம், உலகத் தமிழ்க் கலைஞர்களை ஒன்றிணைக்கும் தி.ம.க மன்றத்தின் கலைப்பணி, கலைப்பாலம்- இனங்களின் இடைப்பாலம், மும்மொழிக் கலைஞர்களின் பங்கேற்புடன் தி.ம.க மன்றத்தின் பூம் பூம், தி.ம.க மன்றச் சிறுவரின் தென்னிலங்கைச் சுற்றுலா, தி.ம.க மன்ற மகளிர் அணி, தி.ம.க மன்ற அரங்கில் நாடகம், நாட்டுக்கூத்து, இசை நாடகம், மட்டுநகரில் எழுத்தாளர் கலைஞர் மாநாடு, தமிழ்க் கலைகளுக்கு உயிரூட்டும் திருமறைக் கலாமன்றம், 40 வருட பூர்த்தியைக் கொண்டாடும் திருமறைக் கலாமன்றம், சிறுவர் உலகம் தி.ம.க மன்றத்தின் சிறுவர் பாசறை, கடல் வரைந்த ஓவியம் ஆகிய தலைப்புகளில் இம்மன்றத்தின் வரலாறு இம்மலரில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பி.எஸ்.அல்பிரட், கொ.ராஜன், எப்.சொலமன்ரைன், எ.லத்தீஸ் லாஸ், அ.குயின் ஜான்சி, அ.ஜெனோவா, எவ்.லிசானி ஆகியோரை மலர்க்குழுவாகக் கொண்டு இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது.*

### *7034*

***பஷாரத்.*** *ஏ.ஆர்.எம். ஷியாம் (தொகுப்பாசிரியர்). கட்டுகஸ்தோட்டை: பஷாரத் கலாச்சார வட்டம், 443/31 யட்டியாவல, 1வது பதிப்பு, மார்ச் 2008. (கல்ஹின்ன: விங்ஸ் கிராப்பிக்ஸ்).*
*(2), 78 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 29.5x22.5 சமீ.*

கட்டுகஸ்தொட்ட, யட்டியாவலை என்னுமிடத்தில் அமைந்துள்ள அல்பஷாரத் நிறுவனம் முஸ்லிம்களுக்கானதொரு மத, சமூக சேவை அமைப்பாகும். இது யட்டியாவலை தக்வா மஹல்லாவவைத் (தக்வா பள்ளிவாயில்) தலைமையகமாகக் கொண்டு சமூகப் பணிகளுடன், கலை கலாச்சார இலக்கியப் பணிகளையும் மேற்கொண்டுவருகின்றது. இதன் பணிகளுள் ஒன்றாக பஷாரத் என்னும் இந்தத் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது. இஸ்லாமிய சமய, சமூக, கலாசார, இலக்கிய அடிப்படையைக் கொண்டதாகப் பல்வேறு அறிஞர்கள், எழுத்தாளர்களின் 18 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெறுகின்றது.

### 7035

**புன்னகை.** மசூறா ஏ.மஜீத். சம்மாந்துறை: நடமாடும் பெண்கள் பயிற்சி நிலையம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், 1வது பதிப்பு, மே 1986. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(12), 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் கிழக்கிலங்கையில் சம்மாந்துறையில் 1986 பெப்ரவரி 14 முதல் மே 14 வரை நடைபெற்றுமுடிந்த நடமாடும் பெண்கள் பயிற்சி நிலையத்தின் பூர்த்தியையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். தொழில்வாய்ப்பற்ற யுவதிகள் மத்தியில் சுயதொழில் முயற்சிகளுக்கு வழிகாட்டும் முன்னோடி செயல்திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த நடமாடும் பெண்கள் பயிற்சித்திட்டத்தின் நிறைவையொட்டி பல்வேறு வாழ்த்துச் செய்திகளும் பங்கேற்றோரின் படைப்புகளுமாக இம்மலர் விரிகின்றது.

## 070 ஊடகவியல், வெளியீட்டுத்துறை

### 7036

**ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் ஓர் ஆய்வு: 1930ம் ஆண்டு வரை.** ஆ.சிவநேசச்செல்வன். கொழும்பு 13: டிசைன் லாப், 190, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை, கொட்டாஞ்சேனை, 1வது பதிப்பு, ஜூன் 2010. (கொழும்பு 13: டிசைன் லாப், 190, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை, கொட்டாஞ்சேனை).
xvii, 174 பக்கம், விலை: ரூபா 375., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-0634-02-6.

பத்திரிகைத்துறை பற்றிய இவ்வாய்வின் எல்லையும் பரப்பும், அச்சுக்கலை மரபும் பத்திரிகைத்துறைத் தோற்றமும், பத்திரிகைகளும் சமயப் பின்னணியும், பத்திரிகைகளும் அரசியல் பின்னணியும், பத்திரிகைகளும் உரைநடை மரபும், இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகள் 1930ஆம் ஆண்டு வரையிலான பட்டியல் ஆகிய ஏழு இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ் மரபுவழிக் கல்விப் பாரம்பரியம், மஹாஜனாக் கல்லூரிப் பாரம்பரியம், பேராதனைப் பல்கலைக்கழகக் கல்விப் பாரம்பரியம் முதலானவற்றின் புலமை ஊடாட்டங்களையும் செழுமைகளையும் வளங்களையும் தனதாக்கிக்கொண்ட கலாசூரி ஆறுமுகம் சிவநேசச்செல்வன் தமிழ் ஊடகவியல்துறையில் பன்முகப் பணிகளை மேற்கொண்டவர். வீரகேசரி, தினக்குரல் முதலான இதழ்களின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றியவர்.

### 7037

**சுவடு: தினக்குரல் 15ஆவது அகவை விஷேட மலர்.** வி.தனபாலசிங்கம் (தொகுப்பாசிரியரும் பதிப்பாசிரியரும்). கொழும்பு 15: தினக்குரல் பப்ளிக்கேஷன்ஸ் லிமிட்டெட், 68, எல்லி ஹவுஸ் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2011. (Colombo: ANCL Commercial Printing Department).
224 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x22 சமீ.

1997-2011 காலகட்டத்தில் இலங்கையின் தமிழ், தமிழர், தமிழ் பேசும் மக்களின் மேலுமொரு முக்கிய அரசியல் குரலாக மேற்கிளம்பிய தினக்குரல் பத்திரிகையின் 15ஆவது அகவைப் பூர்த்தியைக் கொண்டாடும் முகமாக 6.4.2011 அன்று வெளியிடப்பட்ட சிறப்பு மலர்.

### 7038

**ஜனநாயகத்தின் நான்காவது தூண்.** காவலூர் இ.விஜேந்திரன். கொழும்பு: இரா-வின் பதிப்பகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (கொழும்பு 12: Perfect பதிப்பகம், 130, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
x, 222 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-51228-5-6.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டதாரியான இ.விஜேந்திரன், நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றுபவர். மனித நேயம் மற்றும் வினைத்திறன் மிக்க பாடசாலை ஊடக கலாச்சாரம் என்ற தொனிப்பொருளில் இலங்கைப் பாடசாலைகளிலும் ஊடக கலாச்சாரம் ஒன்றை ஏற்படுத்த கல்வி அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஒன்றான **தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்** என்ற பாடத்திட்டத்திற்கான ஊடகக் கல்வியை அங்கு இவர் போதித்து வருகிறார். ஊடகவியல்துறை பற்றிய இந்த நூல் இதழியல், செய்தி, தொடரறா ஊடகம் (இணைய இதழியல்) பிராந்திய வானொலி, விளம்பர இதழியல், சிறுவர் இதழியல், மக்கள் தொடர்பு, ஊடக சுதந்திரம், பத்திரிகைப் பேரவைச் சட்டம், தொடர்பு சாதனங்களும் உளவியல் மாற்றமும், ஊடகத்துறைக்கு உரமிட்டோரும் உரமானோரும், ஊடகத்துறையில் விருதுபெற்றோர் ஆகிய பன்னிரு தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 178357).

மேலும் பார்க்க: 7773

## 100 மெய்யியல்துறை

### 100 மெய்யியல் (தத்துவவியல்)

**7039**
**அன்பு மலர்: பாராயணத்திரட்டுடன்.** சி.மு.முத்தையன். யாழ்ப்பாணம்: சி.மு.முத்தையன், உறிநாவளை, சித்தன்கேணி, 1வது பதிப்பு, ஜனவரி 1954. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சகம்).
(12), viii, 178 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 20x14.5 சமீ.

அன்பியல், அளவியல், ஒழிபியல் ஆகிய தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ள இப்பாராயணத் திரட்டின் இறுதிப்பகுதியில் சைவசித்தாந்த வாய்மைகள் விளக்கப்படுகின்றன. இதிலே தேவார திருவாசகங்கள் மலிந்து கிடக்கின்றன. அன்பொளியையும் அறிவொளியையும் வீசி இந்நூலைப் புனிதப்படுத்துகின்றன. இந்நூலாசிரியர் The Highways of Astronomy and Dravidian Phylosophy என்ற நூலின் ஆசிரியராவார். இந்நூலுக்கான சாற்றுகவியை பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலைப் பண்டிதர் அ.ஆறுமுகம் அவர்களும், முகவுரையை சுளிபுரம் விக்ரோரியா கல்லூரி அதிபராயிருந்த சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்களும், அணிந்துரையை திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலைப் பண்டிதர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். இந்நூல் ஆசிரியரின் அன்னையாரான முத்துக்குமாரு அன்னபூரணி அவர்களின் அமரத்துவ நினைவாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3053).

**7040**
**இந்திய மெய்யியற் சிந்தனையில் வேதாந்தம்-சித்தாந்தம் கூறும் கடவுட்கொள்கை: ஓர் ஒப்பியல் ஆய்வு.** கலைவாணி இராமநாதன். கொழும்பு 2: அகில இலங்கை இந்து மாமன்றம், 91/5, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, இணை வெளியீடு: கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ்).
xvi, 252 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-247-4.

கடவுட் கொள்கை என்பது தனிமனித நம்பிக்கையுடன் தொடர்புபட்ட விடயமாகும். காட்சிக்குப் புலனாகாத பேருண்மைகள் சில விஞ்ஞானத்தால் நிரூபிக்கப்பட்ட போதிலும், பல விடயங்கள் இன்றும் நம்பிக்கையின் வழியாக வாழ்ந்துவருவது கண்கூடு. கடவுட்கொள்கை தொடர்பான கருத்துக்கள் ஆய்விற்கு அப்பாலும் செல்கின்ற உண்மைகள் என்பது எவருக்கும் எளிதிற் புலனாகும்.

இந்நிலையில் அறியமுடியாத ஓர் உட்பொருளை இந்து தத்துவங்களான வேதாந்தமும் சித்தாந்தமும் எவ்வாறு அறிவிக்க முயன்றுள்ளன என்பதனை எடுத்துக்காட்டும் ஒரு முயற்சியாக அமைந்துள்ள இந்நூல் இந்திய தத்துவத்திற் கடவுட் கொள்கை, அத்வைத வேதாந்தம்- கடவுட் கொள்கை, சைவசித்தாந்தம்- கடவுட் கொள்கை, கடவுட் கொள்கை பற்றிய ஒப்பியல் ஆய்வு: அத்வைத வேதாந்தம், சைவசித்தாந்தம் ஆகிய நான்கு இயல்களில் விரிகின்றது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறை பேராசிரியராகப் பணியாற்றிவருகின்றார்.

### 7041

**தத்துவ ஞான சிந்தனையும் வினைப்பயன் பதிவுகளும் ஆன்மா பிறவாமை அடைதலும்.**
ஆ.சி.முருகுப்பிள்ளை (விநாயகர் தரும நிதிய நிறுவனர்). பருத்தித்துறை: விநாயகர் தரும நிதியம், புலோலி மேற்கு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (பருத்தித்துறை: விநாயகர் தரும நிதிய அச்சகம்). (4), 133 பக்கம், விலை: ரூபா 39.00, அளவு: 20x14 சமீ.

தத்துவ ஞானச் சுருக்கமும், விநாயகர் தரும நிதிய நிறுவனரின் சிந்தனைத் தொகுப்புகளும் உள்ளடக்கபெற்ற இப்பிரசுரம், சாதி சமய இன வேற்றுமையற்ற பொது நிறுவனங்களுக்கான இலவச வெளியீடாக 3.10.1995 அன்று வெளிவந்துள்ளது. சமயங்கள் கூறும் தத்துவத்தை விஞ்ஞான முறையில் ஆராயும் இந்நூலில் முன்னுரை, வேதம், உபநிடதம், கீதை, உலகாயதம், சமணம், பௌத்தம், சாங்கியம், வைசேடிகம், நியாயம், மீமாம்சை, வேதாந்தம், இராமானுச வேதாந்தம், மத்துவ வேதாந்தம், சைவசித்தாந்தம் என்பன பற்றிய சிந்தனைகள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 124519).

### 7042

**மெய்யியல்: ஓர் அறிமுகம்.** சோ.கிருஷ்ணராஜா. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை). (2), xii, 98 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-659-294-8.

மெய்யியல் என்னும் கல்வித்துறையின் விடயப் பரப்பைஅறிவாராய்ச்சியியல் (Epistemology), உள்பொருளியல் (Ontology), அல்லது பௌதீகவதீதவியல் (Metaphysics), மதிப்பியல் (Axiology) என மூன்றாக வகுத்துக் கூறுவர். இம்மூன்று பிரிவுகளுள்அறிவாராய்ச்சியியல் , உள்பொருளியல் ஆகிய இரண்டினைப்பற்றிய ஆழமான ஆய்வுரையாக இந்நூல் விளங்குகின்றது. மெய்யியல் என்றால் என்ன, அறிவாராய்ச்சியியல் 1 (பிளேட்டோவும் டேக்காட்டும்), அறிவாராய்ச்சியியல் 2 (அரிஸ்ரோட்டில், லொக், பார்க்ளி, ஹியும்), உள்பொருளியல், சமய மெய்யியல், நிர்ணயவாதமும் சுயாதீன சித்தமும் ஆகிய ஆறு இயல்களைக் கொண்டமைந்தது. மெய்யியல்துறை மாணவர்களைக் கருத்திற்கொண்டு எழுதப்பட்ட இந்நூல் மெய்யியல் பற்றிய பாடநூல்களுள் தனித்துவமாக விளங்குகின்றது. பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா (1947-2009) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

### 7043

**மெய்யியலும் சமயமும்.** பி.எம்.ஜமாஹிர். கண்டி: இலங்கை தென் கிழக்கு ஆய்வு மையம் (South Eastern Research Forum), 303, University Staff Quarters, Dangolla, 1வது பதிப்பு, ஜனவரி 2003. (கண்டி: Print-Ex Graphics).
vi, 7-72 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-8194-04-2.

மெய்யியலும் சமயமும், கிரேக்க மெய்யியல் மரபு, பூரண மனிதனும் மனித விடுதலையும் இருப்புவாதத்துடன் ஒப்புநோக்கு ஆகிய மூன்று பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மெய்யியலும் சமயமும் என்ற பிரதான பிரிவின்கீழ் அறிமுகம், மெய்யியல், சமயம், இஸ்லாம், சமய மெய்யியல், பௌதீகவாதம் ஆகிய உபபிரிவுகளும் அடங்குகின்றன. சமயமும் மெய்யியலும் மனிதனது அக, உள செயற்பாடுகளோடு கொண்டுள்ள உறவையும், சமயங்கள் பற்றி அறியவும், ஆராயவும் அவற்றை ஒப்பிட்டு நோக்கவும், அவற்றிலிருந்து மனிதன் மேனிலையை எய்திட சமய மெய்யியல் இன்றியமையாதவை என்ற கருத்தை அடித்தளமாக உள்ளடக்கியதாக இவரது

எழுத்துக்கள் அமைந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 575098).

### 7044

**மேலைத்தேய கீழைத்தேய மெய்யியல் பகுதி 1. வினாவிடை 350.** க.கணேசராஜா. காரைதீவு (கிழக்கு மாகாணம்): சக்தி கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, ஜுன் 2001. (அக்கரைப்பற்று: செலெக்ஷன் பிரின்டர்ஸ்).

vii, 91 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 110., அளவு: 20x14 சமீ.

ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மெய்யியல்துறை விரிவுரையாளரான நூலாசிரியர் எழுதிய இந்நூல் மாணவர்களின் பாடப்பயிற்சியை பொது அறிவு நிலையிலும், தேர்வு நோக்கிலும் வலுவுள்ளதாக்குவதற்கு வழிகாட்டியாக அமைகின்றது. மாணவர்களின் பாடப்பரப்பிற்கு ஏற்றவகையில் மிகைப்படுத்தலோ குறைபாடோ இல்லாத வகையில் நூல் அமைக்கப்பட்டுள்ளதாக இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய உபவேந்தர் எம்.எல்.ஏ.காதர் குறிப்பிட்டுள்ளார். அளவையியல் (ஐரோப்பிய, இந்திய அளவையியல்கள்), மெய்யியல் (மேலைத்தேய, கீழைத்தேய, முஸ்லிம் மெய்யியல்கள்), உளவியல், ஒழுக்கவியல், அழகியல், சிறுவிளக்கக் குறிப்புகள் ஆகிய பிரிவுகளில் இத்துறைசார் விடயங்கள் பகுத்து வழங்கப்பட்டுள்ளன. சிறுவிளக்கக் குறிப்பில் கார்ல் பொப்பர் (தொழிற்பாட்டு வாதம்), விக்கன்ஸ்ரைன் (பல்பெறுமான அளவையியல்), தோமஸ் கூன் (ஒழுக்கவியலின் இயற்கைப் போலி), பேட்ரன் றசல் (அளவையியலும் அறிவாராய்ச்சியியலும்), மாஸ்லோ (நீதி), பியாஜே (நியம ஒழுக்கவியலும் அதீத ஒழுக்கவியலும்) ஆகிய மெய்யியலாளர்களின் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 544462).

### 7045

**ஹிரியண்ணாவின் இந்திய மெய்யியல்.** சோ.கிருஷ்ணராஜா (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 13: கௌரி அச்சகம்).

xi, 390 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-9233-08-4.

எம்.ஹிரியண்ணா மைசூர் பல்கலைக்கழகத்தில் தான் நிகழ்த்திய பல ஆண்டுக்கால விரிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு 1932இல் Outlines of Indian Philosophy என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதியிருந்தார். அதனை சென்னை அரசின் தமிழ் வெளியீட்டுக் கழகத்தினரின் வேண்டுகோளின் பேரில் கலாநிதி வ.ஆ.தேவசேனாபதி, ப.நா.ஷண்முகசுந்தரம் ஆகிய இருவரும் இணைந்து 1966இல் மொழிபெயர்த்திருந்தார்கள். இலங்கையில் தமிழ் மொழிமூலம் மெய்யியல் கற்கவிளையும் பல்கலைக்கழக மாணவர்களின் பயன்பாட்டிற்காக இத்தமிழ் மொழிபெயர்ப்பினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல்துறைத் தலைவர் சோ.கிருஷ்ணராஜா பதிப்பித்து மீளவும் வெளியிட்டுள்ளார். இந்நூலில் வேதகாலம் (உபநிடதத்திற்கு முற்பட்ட சிந்தனை, உபநிடதங்கள்), வேதத்தை அடுத்த காலத்தின் முற்பகுதி (பொதுப் போக்குகள், பகவத் கீதை, ஆதி பௌத்தம், சமணம்), தரிசனங்களின் காலம் (புது முகம், சடக் கொள்கை, பிற்காலப் பௌத்தம், நியாயவைசேடிகம், சாங்கிய யோகம், பூர்வமீமாம்சை, வேதாந்தம்) ஆகிய காலப்பிரிவுகளின் அடிப்படையில் இந்திய மெய்யியல் விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 171072).

மேலும் பார்க்க: 7618

## 150 உளவியல்

### 7046

**உளநலவியல்.** P.V.பிரேமசந்திரா, பூர்ணா த சில்வா (மூலம்), லீலா கல்தேரா, A.S.M.கபூர், M.H.M.யாகூத் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (இரத்மலானை: சர்வோதய விஸ்வலேகா அச்சகம்).
32 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். உளநலவியலும் பிள்ளைகளை இனங்காணலும் முதலாவது பகுதியிலும், உளநல விருத்தியும் உங்கள் கடமைகளும் என்ற விடயம் 2ஆவது பகுதியிலும் விளக்கப்பட்டுள்ளன.

### 7047

**உளவியல் மூலக் கோட்பாடு (முதற் பகுதி).** பத்மசிறி த சில்வா (சிங்கள மூலம்), ஐ.தம்பிமுத்து (தமிழாக்கம்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 2வது பதிப்பு, 1976, 1வது பதிப்பு, 1976. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).
(8), 32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

தேசிய உயர் கல்விச் சான்றிதழ் பரீட்சைக்குரிய நூல் இது. உளவியல் கல்வி தொடர்பான கோட்பாட்டு விளக்கங்களை இந்நூல் கொண்டுள்ளது. மேலைத்தேய கோட்பாடுகளை எமது நாட்டுக்கேற்ற வகையில் விளக்கியிருப்பது சிறப்பம்சமாகும். இந்நூலில் உளவியல் எனப்படுவது யாது? தற்கால உளவியலில் விஞ்ஞான முறைகள் பயன்படும் விதம், தற்கால உளவியலின் ஆரம்பமும் அதனைச் சார்ந்த மரபுகளும் ஆகிய மூன்று தலைப்புகளின்கீழ் உளவியற் பரப்புப்பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. மூல நூலாசிரியர் இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாக விரிவுரையாளராவார்.

### 7048

**உளவியல் மூலக் கோட்பாடு (இரண்டாம் பகுதி).** P.W.கொடித்துவக்கு (சிங்கள மூலம்), ஐ.தம்பிமுத்து (தமிழாக்கம்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1978. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).
(4), 44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) வகுப்புகளுக்குரிய நூல். உளவியல் கல்வி தொடர்பான கோட்பாட்டு விளக்கங்களை இந்நூல் கொண்டுள்ளது. மேலைத்தேய கோட்பாடுகளை எமது நாட்டுக்கேற்ற வகையில் விளக்கியிருப்பது சிறப்பம்சமாகும். மூல நூலாசிரியர் P.W.கொடித்துவக்கு இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாக விரிவுரையாளராவார்.

### 7049

**உளவியற் சிந்தனைகள்.** வெற்றிவேல் சக்திவேல். தெல்லிப்பளை: மா.வெற்றிவேல், கிளவ் வீதி, 1வது பதிப்பு, ஐப்பசி 2005. (யாழ்ப்பாணம்: கங்கை பதிப்பகம், 781, சிவலிங்கப் புளியடி).
(4), 50 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

சைவப்புலவரும், சித்தாந்த பண்டிதருமான இந்நூலாசிரியர் ஒரு சித்த மருத்துவராவார். மாணவர் வாழ்வில் வெற்றிபெற உதவும் கட்டுரைகளான குழந்தை உளவியற் சிந்தனைகள், ஆளுமையும் உளவியலும், ஞாபக மறதியும் உளவியலும் ஆகிய கட்டுரைகளும், சமூக உறவுகளை மேம்படுத்தக்கூடிய வகையில் அமைந்த குடும்ப உறவும் உளவியலும், பெண்களும் உளவியலும், மதுவும் உளவியலும், அச்சமும் உளவியலும் ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. தமிழ்மரபில் உளவியல் ஆய்வுநோக்கு என்ற கட்டுரை தமிழ் இலக்கியங்களிலும், தமிழர் பண்பாட்டு மரபுகளிலும் காணப்படும் உள மருத்துவ விஞ்ஞான நடைமுறைகளை ஆராய்வதாகவும், இந்து தமிழர் பண்பாட்டு மருத்துவ மரபில் யோகம் என்னும் கட்டுரை இந்து சமய நடைமுறைகளில் காணப்படும் உள, விஞ்ஞான செயற்பாடுகளை விளக்குவதோடு, பிரதானமாக- யோகாசனம், பிரணாயாமம், தியானம், ஆகியவற்றில் காணப்படும் உள மருத்துவ விஞ்ஞான நடைமுறைகளையும் ஆராய்கின்றது. மொத்தம் ஒன்பது தலைப்புகளில் அமைந்த கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 172249).

**7050**

**குழந்தை உளவியல்.** சபா ஜெயராசா. யாழ்ப்பாணம்: நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டம், மாநகர சபை, 1வது பதிப்பு, 2001. (யாழ்ப்பாணம்: முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி).
vii, 98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

குழந்தை உளவியற் கோட்பாடுகள், குழந்தை உளவியலின் உலகளாவிய வளர்ச்சி, குழந்தை உளவியல் ஆய்வு முறைகள், நடத்தைகளுக்குரிய உயிரியல் மற்றும் சமூக அடிப்படைகள், குழந்தையும் குடும்பச் சூழலும், மனவெழுச்சி வளர்ச்சி, அறிகை மேம்பாடு, தொடர்பாடல் அசைவுகள், மொழி வளர்ச்சி, சமூக மயமாக்கலும் ஆளுமை மேம்பாடும், நினைவாற்றல் வளர்ச்சி, குழந்தை உளவியலும் விளையாட்டுக்களும், குழந்தைகளும் இயங்காற்றல் குலைவும், சிறப்பார்ந்த கற்பித்தலுக்குரிய சிறார்கள், குழந்தைசார் உளவியற் சொல்லியம்-கலைச்சொற்கள் ஆகிய 15 இயல்களில் குழந்தை உளவியல் பற்றிய அரிய கருத்துக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 142119).

**7051**

**பியாஜேயும் அறிகை உளவியலும்.** சபா.ஜெயராசா. யாழ்ப்பாணம்: இ.இரத்தினகோபால், செயலாளர், பாலர் கல்விக்கழகம், 49/5 யாழ். வீதி, 1வது பதிப்பு, மே 1987. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).
(6), 28 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18.5x12 சமீ.

Piaget and the Psychology of Cognition என்ற ஆங்கில உபதலைப்புடன் வெளியாகியுள்ள இந்நூல், யாழ். பாலர் கல்விக்கழகத்தின் இரண்டாவது வெளியீடாகும். குழந்தை உளவியல் பற்றிய மேற்குலக அறிஞர்களது கருத்துக்களையும் ஆராய்ச்சிகளையும் ஆசிரியர்கள் அறிவதன் மூலம் நமது மண்ணின் குழந்தைகளின் உளவியல் சம்பந்தமான ஆய்வினையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு எந்த அளவு தூரம் மேலைநாட்டறிஞர்களின் கருத்துக்கள் எமது நாட்டுக் குழந்தைகளுக்கு ஏற்புடையனவாக உள்ளன என்பதனைக் கண்டறியவும், புதிய கருத்துக்கள் உள்வாங்கப்படவும் இந்நூல் வழிகாட்டியாக அமைகின்றது. பிரெஞ்சு அறிஞரான பியாஜே அவர்கள் 15 ஆண்டுகளுக்கு முன்னர் **எனது உளவியல் தத்துவம்** என்ற பொருளில் லண்டன் பல்கலைக்கழகமொன்றில் உரையாற்றினார். அந்நிகழ்வுக்குத் தலைமைவகித்த ஒப்பீட்டுக் கல்விப் பேராசிரியர் ஜோசப் லோறைஸ் ஒரு மணித்தியாலத்தில் அவரது உரையின் சாராம்சத்தை ஆங்கிலத்தில் வழங்கினார். அவ்வுரையில் அறிகை உளவியல் பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அக்கருத்துக்களைக் கோவைப்படுத்தி கலாநிதி ஜெயராஜா அவர்கள் இவ்விமர்சனக் கட்டுரையை எழுதியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 93657).

**7052**

**பிரயோக உளவியல் 2.** பாலசுப்பிரமணியம் தனபாலன். யாழ்ப்பாணம்: பா.தனபாலன், துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (யாழ்ப்பாணம்: கங்கை பிரின்டர்ஸ், 781, காங்கேசன்துறை வீதி, சிவலிங்கப்புளியடி).
vii, 106 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ.

Applied Psychology என்ற ஆங்கிலத் தலைப்புடனும் எழுதப்பட்டுள்ள இந்நூலின் ஆசிரியர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் உப பீடாதிபதியாவார். கடந்த வருடம் வெளியிடப்பட்ட முதலாம் பாகத்தின் தொடர்ச்சியாக இவ்விரண்டாம் பாகம் அமைகின்றது. இதில் பிரயோக உளவியலின் புதிய செல்நெறிகள், மனிதவள விருத்தியில் ஆளுமை, ஆளுமை விருத்தி பற்றிய உளவியற் கோட்பாடு, சமநிலை ஆளுமையின் தேவை, மனித சாதனைகளுக்கான ஊக்கல், உள ஆற்றல் திறனான நுண்மதி, பிரயோக உளவியலில் ஆக்கத்திறன், மனித வாழ்க்கைக் கால விருத்தி, மனிதர்களில் நினைவுகூறலும் மறத்தலும், வகுப்பறை முகாமைத்துவமும் உளவியலும், புலக்காட்சியும் சாயலும், எல்லா ஆசிரியர்களுக்கும் அவசியமான விசேட கல்வி, ஆற்றுப்படுத்தல் சீர்மியத்துக்கான நவீன உளவியல் பிரயோகங்கள் ஆகிய தலைப்புக்களில் பிரயோக உளவியலின்

*பல்வேறு பரிமாணங்களும் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 604043).*

### 7053

**பொது உளவியல்: ஓர் அறிமுகம்.** *பீ.எம்.ஜமாஹிர். கண்டி: இலங்கை தென் கிழக்கு ஆய்வு மையம் (*South Eastern Research Forum*), 303,* University Staff Quarters, Dangolla, *1வது பதிப்பு, ஜுலை 2002. (கண்டி*: Print-Ex Graphics*).*
viii*, 9-104 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5*x*14 சமீ.,* ISBN*: 955-8194-03-4.*

*இந்நூலில் உளவியல் அறிமுகம் அதன் இயல்புகளும் எல்லையும், உளவியல் பயன்படுத்தும் ஆய்வுமுறைகள், உளவியலின் விஞ்ஞானத் தன்மை, பல்வேறு உளவியல் கருத்துப் பள்ளிகள் (அமைப்புவாதம், பயன்பாட்டுவாதம், நடத்தைவாதம், கெஸ்ரோல்ட் உளவியல், உளப் பகுப்பாய்வு), ஆளுமை பற்றிய கோட்பாடு, அறிகைச் செயற்பாட்டில் சிந்தனையும் மொழியும் - பியாஜேயின் அறிவுவிருத்திக் கொள்கையை அடிப்படையாகக்கொண்ட உளவியல் விளக்கம், கற்றல் என்றால் என்ன? கற்றலுக்கான ஒரு அறிமுகம், ஞாபகம் என்றால் என்ன? ஞாபகத்திற்கான ஓர் அறிமுகம், மறதி என்றால் என்ன? மறதிக்கான ஓர் அறிமுகம். பிறழ்நிலை உளவியல், ஊக்கிகள் உந்திகள் பற்றிய கோட்பாடு ஆகிய 11 இயல்களில் பொது உளவியல் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 554326).*

### 7054

**மன உளைச்சல்.** பார்வதி கந்தசாமி (தொகுப்பாசிரியர்),T.சூரியபாலன் (ஆலோசக நிபுணர்). *கனடா:* இலங்கை குடும்ப *சேவைகள் சங்கம்,* றொறன்ரோ பெரும்பாகம், 421, Bloor street, E Suite 205, Toronto, Ontario M4W 3TI, *1வது பதிப்பு, 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*(2), 14 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14 சமீ.*

*ஐந்து இயல்களில் எழுதப்பட்டுள்ள இந்நூலில், மன உளைச்சல் (*Depression*), மன உளைச்சல் ஏற்படுவதற்குரிய காரணங்கள், மன உளைச்சல் ஏற்படுவதற்குரிய வாய்ப்புகள், மன உளைச்சல் நோய்க்குரிய சிகிச்சை, மன உளைச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு உதவலாம் ஆகிய விடயங்கள் தெளிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது.*

## 158.1 மானிட மேம்பாடு

### 7055

**அகவாசனை.** *த.சிவப்பிரகாசம். கொழும்பு 6: த.சிவப்பிரகாசம், இல.44/4, 4/2 தர்மராம வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2011. (கொழும்பு: ஹரே அச்சகம்).*
viii*, 155 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 19.5*x*13.5 சமீ.*

*தம்பிப்பிள்ளை சிவப்பிரகாசம் அவர்களின் 16 ஆன்மீகக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. தான் பெற்ற ஆன்மீக ஞானம், தியானப் பயிற்சிகள், வாசிப்பு, சுயசிந்தனை, சுய பரிசோதனை, தன் வாழ்க்கை அனுபவங்கள், உரையாடிப்பெற்ற ஞானக்கருத்துக்கள் எனப் பலவழிகளிலும் உள்வாங்கப்பட்ட கருத்துக்களை இக்கட்டுரைகளில் பதிவுசெய்துள்ளார். வாசனையைத் தேடி, சந்தோஷம் உன் பிறப்புரிமை, இறைவன் ஆட்சி, மவுனமும் மவுன சக்தியும், எது சொந்தம், இருதய பராமரிப்பு, செருக்கும் பணிவும், கர்மாவும் விதியும், மனம்போல வாழ்வு, அறம் செய்ய விரும்பு ஆறுவது சினம், செம்மையான மனம், வாழும் கலையும் மரணிக்கும் கலையும், கூத்து முடியுமுன்பே, அப்பாவித்தனமும் புத்திசாலைத்தனமும், முழுவதும் உண்மை, அந்த அழகான பேட்டி ஆகிய தலைப்புகளில் இவை சுவையாகவும் எளிமையாகவும் எழுதப்பட்டுள்ளன.*

### 7056

**ஆத்மீக வாழ்வு.** பா.ஆறுமுகம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
88 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 17.5x12 சமீ.

பழுகாமம் திருமதி பாக்கியரெத்தினம் ஆறுமுகம் எழுதிய இந்நூல்ஆத்மீக வாழ்வினைச் சுட்டிக்காட்டும் ஏழு வகையான கட்டுரைகளை உள்ளடக்கமாகக் கொண்டது. உலக சமநிலை இன்மைக்கு மனித மனமே மூல காரணம், மனித மேம்பாட்டு நெறிக்கு அறநெறிப் பாடசாலைகளின் பங்களிப்பு, பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பு, ஆட்கொண்டருளிய அன்புசாயி, இல்லத்தரசி கண்ணகியைத் தெய்வமகளாக்கிய கற்புநெறி, நவராத்திரி விழாக்களின் உட்பொருள், அம்மா சாரதா தேவி ஆகிய ஏழு தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. திருப்பழுகாமம் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி, திருப்பழுகாமச் சிறப்பு ஆகிய இரு கவிதைகளும் இணைக்கப்பட்டுள்ளன. சமய தத்துவங்களுக்குப் பின்னாலுள்ள விஞ்ஞான விளக்கங்களையும் ஆசிரியர் ஆங்காங்கே குறிப்பிடுகின்றார்.

### 7057

**ஆன்ம விசாரம்: முதலாம் இரண்டாம் பாகங்கள்.** ஹே.சுப்பிரமணிய ஐயர். யாழ்ப்பாணம்: சிவகுருநாத குருபீடம், மகாதேவ சுவாமிகள் ஆச்சிரமம், வேதாந்தமடம், கந்தர்மடம், 4வது பதிப்பு, 2004, 1வது பதிப்பு, 1924, 2வது பதிப்பு, 1930, 3வது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: ஸ்மார்ட் பிரின்டர்ஸ், 717 காங்கேசன்துறை வீதி).
xii, 30+50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

1912இல் அமரத்துவம் அடைந்த கொழும்புத்துறை சுப்பிரமணிய ஐயரின் இந்நூல் மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. கோபம் வெறுப்பு பகை களிப்பு முதலிய உட்பகைகளை வெல்லவும் மனிதர் உயர்ந்த குணாதிசயம் கொண்ட மனிதராய் உயரவும் வழிகாட்டும் நூல். பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பொ.கைலாசபதி போன்றோரால் பாராட்டப்பட்ட நூல்.

### 7058

**உயர்வு உங்களதே.** டேவிற் வி. பற்றிக்ஸ். யாழ்ப்பாணம்: அமலமரித் தியாகிகள் வெளியீடு, Oblate Publication Jaffna Province, 1வது பதிப்பு, ஆவணி 1999. (கொழும்பு 11: இ.ரவிவர்மன், 108/2 ஸ்ரீ கதிரேசன் வீதி).
112 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 22x14.5 சமீ.

நான்- உளவியல் சஞ்சிகையின் ஆசிரியர் வின்சன்ற் பற்றிக்ஸ் அடிகளாரின் உளவியல் கட்டுரைகளை உள்ளடக்கிய நூல். ஒரு மனிதனின் வாழ்வு உயர்வடைய அவனுடைய மன உணர்வுகள், செயற்பாடுகள் என்பன காரணமாகின்றன. இவற்றை உணர்ந்து, சுவைத்து, அனுபவித்து அதை மற்றவர்களும் சுவைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் மனித வாழ்வின் உண்மைத் தத்துவங்களை தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறுவதாய் இந்நூல் அமைகின்றது. நல்மன மெல்லியல்பு, வாழுவதற்கான வேட்கை, ஆளுமை வளர்ச்சி, நானாக நான் ஆதல், உந்தலும் உணர்வுகளும், உறவுப் பரிமாற்ற ஆய்வு, சிந்தனை வடிவமும் சமுதாயச் சமநிலையும், தன்வயமாக்கலும் தன்னுருவாக்கலும், இல்லற இடர்பாடுகளும் இன்பமும், பெற்றோர் பிள்ளைகள் உறவு, அன்புநெறி வாழ்வுக்கான ஆதாரம், மறுமலர்ச்சிப் பயணம் ஆகிய 12 தலைப்புகளில் அமைந்த கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18108).

### 7059

**சிந்தனை செய்.** தெருத்தூசியோன் (இயற்பெயர்: R.C.ராஜ்குமார்). கொழும்பு 6: R.C.ராஜ்குமார், 2/21, ஹைலெவல் வீதி, கிருல்லப்பனை, 1வது பதிப்பு, நவம்பர் 2004. (கொழும்பு 6: S Print, 4C-1, Fussells Lane).
(4), 102 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ.

இறைவன் ஒருவனே, வேற்றுமை வேண்டாம், வேலி வேண்டும், சிறார்கள் சீராக, போதையின் போக்கில், நாளையாவது ஆகியஆறு தலைப்புகளில் இந்நூல் சமூக விழிப்புணர்வுக் கட்டுரைகளைக் கொண்டுள்ளது. மாணவர்களை மையப்படுத்தி இந்நூல் எழுதப்பட்டிருப்பினும் ஆசிரியர்கள், பெற்றோர், அனைவருக்கும் இது இணைந்த பயனைக் கொடுக்கும். நூலாசிரியரைப்போன்று, விழிப்புலன் இழந்த ஒருவரால் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு வரை கடும் உழைப்பினால் படித்து முன்னேற முடியும் என்ற நம்பிக்கையை இக்கட்டுரைகள் ஊட்டுகின்றன.

### 7060

**சிந்தை இனிக்கும் செல்வம்.** யாழ். ஜெயம் (இயற்பெயர்: ம.விக்ரர்). யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).
(8), 208 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

சத்தியவேத பாதுகாவலன் இதழ்களில் தொடராக வெளிவந்த ஒழுக்கவியல், இறையியல், ஆன்மீகக் கருத்துக்களை உள்ளடக்கிய கட்டுரைகளின் தொகுப்பு. இன்பமிகும் சீதனம், மனமும் மலர்களும், அரியும் நரியும், மெய்யெனும் பொய்க்கூடு, மருந்தும் பத்தியமும், இருளில் ஒலி போன்ற தலைப்புகளில் 123 சிறிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

### 7061

**சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்: தொகுதி 2.** சுவாமி விபுலாநந்தர் (மூலம்), சா.இ.கமலநாதன், வ.சிவசுப்பிரமணியம் (பதிப்பாசிரியர்கள்). மட்டக்களப்பு: சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை, 1வது பதிப்பு, மே 1995.(மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).
xii, 1-92, 1-252 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21x13 சமீ.

மூன்று தொகுதிகளில் வெளியிடப்பெற்ற சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்களின் திரட்டின் இரண்டாவது தொகுதி இதுவாகும். அவர் 1925 முதல் 1940 வரை எழுதிய 61 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. சுவாமி விபுலாநந்தர் துறவு பூண்டபின் ஸ்ரீராமகிருஷ்ண சங்கப் பணிகளில் ஈடுபடுவதற்காக 1925இல் இலங்கை திரும்பினார். அவ்வாண்டு முதல் 1940 வரை புகழ்பெற்ற பிரபுத்த பாரத என்ற திங்கள் இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். அக்காலப்பகுதியில் எழுதப்பட்ட கட்டுரைகளும் இதில் இடம்பெற்றுள்ளன. 14 ஆங்கிலக் கட்டுரைகள் உள்ளடங்குகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 481928).

### 7062

**தனக்குள் தானே.** தி.இரா. கோபாலன். (இயற்பெயர்: திருமலை இராஜகோபால்). பூண்டுலோயா: தி.இராஜகோபால், கைப்புக்கலை தமிழ் வித்தியாலயம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1995. (அச்சிட்ட இடம் தரப்படவில்லை: அபிராமி அச்சகம்).
92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் திருமலை இராஜகோபால். நாவலப்பிட்டி சென். அன்ட்ரூஸ் கல்லூரியில் 50களில் கல்வி கற்ற இவர், 1992இல் இலங்கை இந்து கலாச்சார அமைச்சினால் தமிழ்மணி பட்டம் பெற்றவர். பகவத் கீதையை வாசித்ததில் தான் பெற்ற கருத்துக்களை அடிப்படையாக வைத்து சிறுகட்டுரைகளை எழுதி வீரகேசரி வாரமஞ்சரியில் **தனக்குள் தானே** என்ற தலைப்பில் தொடராக வெளியிட்டிருந்தார். அத்தொடரின் நூல் வடிவம் இதுவாகும். அர்ச்சுனாம்சம், நேர்ச் சிந்தனைகள், பிராணாயாமம் என்னும் உணவு போன்ற 32 தலைப்புகளில் இக்கட்டுரைகள் இடம்பெறுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25303).

### 7063

**புதுமாத்தளன் சோகங்களுக்கு புதுமருந்து.** கி.செ.துரை (இயற்பெயர்: கிருஷ்ணன் செல்லத்துரை). டென்மார்க்: அலைகள் மூவீஸ் இன்டர்நெஷனல், Ny Mollevej 30, 7400 Herning, 1வது பதிப்பு, ஜூன்

*2010. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).*
*103 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.*

*அலைகள் இணையப் பத்திரிகையில் 18 நாட்கள் தொடர்ச்சியாக எழுதப்பட்ட கட்டுரைத் தொடரின் நூல் வடிவம். விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் ஆதரவு நாடுகளின் இராணுவ உதவியுடன் இலங்கை இராணுவத்தால் முறியடிக்கப்பட்ட வன்னிப்பிரதேசமான புதுமாத்தளனை ஈழத்துத் தமிழ் மக்களின் முப்பது ஆண்டு ஆயுதப்போராட்டத்தின் தோல்வியின் குறியீடாகக் காண்கின்றார் கி.செ.துரை. அந்த இழப்பின் உணர்வுபூர்வமான சோகங்களிலிருந்தும், விரக்தியிலிருந்தும் விடுபட்டு, மீண்டும் விழித்தெழுந்து விடுதலைக்காக புதிய வழிகளில் உழைப்போம் என்று நம்பிக்கையூட்டி உற்சாகப்படுத்தும் வகையில் இதிலுள்ள மனித மேம்பாட்டுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.*

### 7064

**மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழி.** எஸ்.ஜே.யோகராசா. கொழும்பு: எஸ்.ஜே.யோகராசா, மொழியியல்துறை, களனிப் பல்கலைக் கழகம், 1வது பதிப்பு, ஆடி 1996. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
*(8), 103 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21 x14 சமீ., ISBN: 955-95655-5-9.*

*இந்நூலில் 25 தலைப்புகளில் மனித வாழ்வில் மகிழ்ச்சிபெற வழிகூறப்பட்டுள்ளது. இவை நான்கு பிரதான பிரிவுகளின் கீழ் வகுத்துத் தரப்பட்டுள்ளன. கணவன்-மனைவி இருவருக்கிடையிலும் உறவு, பெற்றோர்-பிள்ளைகளுக்கிடையில் உறவு, குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையில் உறவு, குடும்பத்துக்கும் இறைவனுக்குமிடையில் உறவு ஆகிய நான்கு பிரிவுகளுக்குள்ளேயே இந்த 25 உபபிரிவுகளும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.*

### 7065

**மகிழ்ச்சியின் இரகசியம்: கட்டுரைத் தொகுப்பு.** ஜோசப் பாலா. யாழ்ப்பாணம்: மணிஓசை வெளியீடு, 12 சென். பற்றிக்ஸ் வீதி, 1வது பதிப்பு, மார்கழி 1996. (கொழும்பு 13: லக்சு கிராப்பிக்ஸ்).
*68 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 19x13 சமீ.*

*நான் உளவியல் சஞ்சிகையின் ஆசிரியரான ஜோசப் பாலா எழுதிய 14 உளவியல் மற்றும், விழிப்புணர்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும். உள்ளங்களைத் தொலைத்துவிட்டு உடல்களை அலங்கரித்து என்ன பயன், உடலை அலங்கரித்தோம், அழகுபடுத்தினோம், உள்ளங்களை அமைதிப்படுத்தினோமா என்ற கேள்வியுடன் எமது உளவியல் வாழ்வை மதிப்பீடு செய்யும் ஜோசப் பாலா, அன்றாட வாழ்வியற் சூழல் அனுபவங்களினூடாக உளவியல் பார்வையில் இதிலுள்ள 14 கட்டுரைகளையும் எழுதியுள்ளார். நோக்கை நோக்கி, விளையாட்டு விளையாட்டாக, தவறுகளைத் தவிர்ப்போம், ஏமாற்றத்தை வெல்ல மனமாற்றம் அவசியம், அனுபவம் ஒரு திருப்புமுனை, பிஞ்சுமனங்களில் நஞ்சுவிதைகளா, அனுதாபம் தேடும் அவலம், சுவைத்துப் பாருங்கள் சுமைகளைத் தீருங்கள், குதூகலக் குடும்பமாய் வாழ, அனுபவம் ஒரு பாடம், உளவளர்ச்சியில் ஓவியம், இசை என்பவற்றின் செல்வாக்கு, பார்வைகள் தரும் மனப்பதிவுகள், விடலைகளின் விசும்பல்கள், மாலையும் மகிழ்ச்சியும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.*

### 7066

**மனித நடத்தையைப் புரிந்துகொள்ளல்.** வசந்தி தேவராஜா ஸ்ரீஸ்கந்தராஜா (ஆங்கில மூலம்), ஜே.ஜி.எட்வேர்ட் பீரிஸ் (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: வசந்தி தேவராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (கொழும்பு 12: யுனைட்டெட் பிரின்ட்).
*(3), 194 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ.*

*மூல நூலாசிரியர் கலாநிதி வசந்தி ஸ்ரீஸ்கந்தராஜா மனித நடத்தை தொடர்பாக மே 2004இல் எழுதி வெளியிட்ட ஆங்கில நூலின் தமிழாக்கம் இதுவாகும். மனித நடத்தைகளுக்கு அடி அத்திவாரமாக விளங்கும் அடிப்படை உண்மைகளை இலகுவான நடையில் இந்நூல் விபரிக்கின்றது. தாம் யார் என்ற கேள்விக்கு விடைகாணலிலும், தமது நடத்தையைச் சுய உணர்வுடன் கட்டுப்படுத்துவதிலும்*

மக்கள் முயற்சித்தால் பின்னாளில் ஏற்படக்கூடிய மனநோய்களிலிருந்தும் வெகுவாக விடுபடலாம் என்பதை இந்நூல் வலியுறுத்துகின்றது. சுயம் குறித்த எண்ணக்கரு மற்றும் சுய கௌரவம், உணர்ச்சிகளும் நடத்தையும், நல்லது நோக்கிய மாற்றம், தொடர்பாடல், துன்பம்-சாவு-மற்றும் மரணித்தல், தியானம் ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 162775).

### 7067

**மானுட வாழ்வின் மகத்துவம்.** தம்பு துரைராசா (தொகுப்பாசிரியர்). தெகிவளை: தம்பு துரைராசா, 11/6, ரூபன் பீரிஸ் மாவத்தை, களுபோவில, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).
(4), 170 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.

மானிட வாழ்வின் மகத்துவம் பற்றிய பல்வேறு விடயங்களையும் தொகுத்து ஒரு நூலில் வழங்க முனையும் முயற்சியாக உருவாக்கப்பட்ட இந்நூலில் மூன்று முக்கிய பகுதிகள் உள்ளன. ஜோதிடக்கண் என்ற முதலாவது பகுதி ஆயர்பாடி ஜோதிடர் த.ம.இராமகிருஷ்ணன் ஜோதிடக்கண் திருமணம் என்னும் பொருளில் எழுதிய திருமணப் பொருத்தம் தொடர்பான சில நுணுக்கங்கள் அடங்கிய கட்டுரையைக் கொண்டது. இரண்டாவது பகுதியில், வீரகேசரி, தினக்குரல், தினமுரசு ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமானதும் மனித வாழ்க்கையின் மேம்பாட்டிற்காகவும் மண்ணில் நல்லவண்ணம் வாழவும் உதவும் கருத்துக்களடங்கிய சிந்தனைக் கோவையாகவும் அமைந்த விடயங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. மூன்றாவது பகுதியில் தமிழ்க் காதல்- என்ற தலைப்பில் சப்பிரகமுவ பல்கலைக்கழக மொழித்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் எழுதிய இலக்கிய ஆய்வு இடம்பெற்றுள்ளது. குடும்ப வாழ்வு, புரிந்துணர்வு, பழக்க வழக்கங்கள், ஆண்-பெண் கடமைகள், தாம்பத்தியம், உடலுறவு, மகப்பேறு, பெண்களது குணவியல்பு, கற்பு, பரத்தமை போன்ற தமிழிலக்கியமுனை நின்று இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135306).

### 7068

**வெற்றி வாழ்க்கைக்கு சான்றோரின் வழிகாட்டல்.** C.M.A. அமீன். திஹாரிய 11875: ரேஷ்மா பதிப்பகம், 348-1, வரபலான ரோட், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (கொழும்பு 12: நிஸான் பிரின்டர்ஸ், 64N, பீர் சாஹிப் வீதி).
72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ., ISBN: 978-955-1691-02-8.

வாழ்வில் வெற்றிபெற வழிகூறும் அறிவுரைக் கட்டுரைகளைக் கொண்ட நூல். வெறும் உபதேசங்களின் தொகுப்பாகவன்றி உயிருள்ள உதாரணங்கள், உணர்வூட்டும் உருவகக் கதைகள் மூலம் வாழ்வியல் வெற்றிக்கான தன் கருத்தைச் சொல்லவிளைகின்றார். நல்ல எண்ணங்கள், நல்ல சிந்தனைகள், நல்ல செயல்கள், நல்ல வாழ்க்கை என்பவற்றுக்கான வழிகாட்டல்களாக இதிலுள்ள 63 குறுங்கட்டுரைகளும் அமைகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 618745).

## 158.3 உளவளத்துணை (Counseling)

### 7069

**அன்புக் கரங்கள்: உளவளத்துணை சார்ந்த கட்டுரைகளும் சிறுகதைகளும்.** P.A.C.ஆனந்தராஜா. வவுனியா: கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (வவுனியா: ஜேனிகா கிராப்பிக்ஸ், இல. 71, வைரவர் கோவில் வீதி).
xv, 162 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

உளவளத்துணை (Counselling) சார்ந்த இந்நூல், யாழ்ப்பாணம் சாந்தியகத்தில் உளவளத்துணையாளராகப் பணிபுரிந்த காலத்தில் தான் பெற்ற அனுபவங்களுக்கு ஆசிரியர் வழங்கிய இலக்கிய வடிவங்களாகும். முன்னதாக இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியில் 25 ஆண்டு காலம் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் ஓய்வுபெற்று, யாழ்ப்பாணம் சாந்தியகத்தில்

உளவளத்துணையாளராகப் பணியாற்றினார். பின்னாளில் வவுனியாவில் தாபிக்கப்பட்ட மனோசாந்தி என்ற உளவளத்துணை நிலையத்தின் (Manosaanthy- Association for Mental Health and related Services, No.407, Horawapothana Road, Rambaikulam, Vavuniya. )இயக்குநராகப் பணியாற்றி வருகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 151420).

### 7070

**உளவளத் துணை.** எஸ்.டேமியன். யாழ்ப்பாணம்: அமல மரித் தியாகிகள் வெளியீடு, தொடர்பகம், 657, ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1993. (யாழ்ப்பாணம்: நாவண்ணன், உரிமையாளர், ஸ்ரீனா அச்சகம்).
(4), iv, 115 பக்கம், விலை: ரூபா 65., அளவு: 18x12.5 சமீ.

உளவளத்துணையின் வரலாற்றுப் பின்னணி, அதன் வரைவிலக்கணம், துணையாளருக்குத் தேவையான குணமாக்கும் உணர்வு, உளவளத்துணையாளருக்கு இருக்கவேண்டிய திறன்கள், உன்னிப்பாகச் செவிமடுக்கும் திறன், உளவளத்துணையாளரின் பதில் மொழிகள், உள்ளடக்கத்தை பிரதிபலித்தல், ஒத்த உணர்வோடு புரிந்துகொள்ளல், பிரச்சினையை மையப்படுத்துதல் / குவியவைத்தல், கேள்விகள், சுட்டிக்காட்டல்/எதிர்கொள்ளல், போர் தரும் உளத் தாக்கங்களும் உளநல முதலுதவியும் ஆலோசனையும், நெருக்கடியின் தலையீடும் உளவளத்துணையும், தற்கொலை முயற்சியிலிருந்து தப்பியவர்களுக்கான உளவள ஆலோசனை, இழப்பின் துயரால் இதயம் நொறுங்கியவர்களுக்கான உளவளத்துணை, மதுவுக்கு அடிமையானவருக்கு வழிகாட்டல், இளைஞர் பிரச்சினைகளும் அவர்களைப் புரிந்துகொண்டு உளவள ஆலோசனை கூறுவதும், உளவள சிகிச்சை முறை ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. வண. பிதா சூ.டேமியன் அடிகள் கனடாவில் உளவளத்துணைத் துறையில் முதுமானிப் பட்டம் பெற்றவர். வட பிரதேசத்தில் ஆரம்ப உளவளத்துணையாளராகத் தன் பணியைத் தொடங்கியவர். யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் உள மருத்துவப் பிரிவின் மருத்துவ உதவியாளராகவும், யாழ். போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையின் உளவளத்துணை நல்கி, மருத்துவ தாதி, குடும்பநல சேவை மாணவர் ஆகியோருக்கு விரிவுரையாளராகவும் பணியாற்றிவருகிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 115416).

### 7071

**மகிழ்வுடன்.** எஸ்.சிவதாஸ். கொழும்பு 6: நலமுடன் வெளியீடு, இல. 14, 57ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, ஐப்பசி 2010, 1வது பதிப்பு, வைகாசி 2009. (கொழும்பு 6: குளோபல் கிராப்பிக்ஸ், இல.14, 57ஆவது ஒழுங்கை).
112 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-9396-29-01.

மனநல மருத்துவர் எஸ்.சிவதாஸ் எழுதிய மகிழ்ச்சி பற்றிய பன்முகப்பார்வைகொண்ட கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். துயர் களைதல் (மனநோயும் மனநலக் குறைபாடுகளும், மனச்சோர்வின் பரிணாமம்), மனதைச் சமைத்தல் (மகிழ்ச்சியின் பரிமாணம், நெருக்கீடும் ஆரோக்கியமும், மனவளர்ச்சியும் மனநலமும்), திறன்களைப் படைத்தல் (சுயகணிப்பும் நிறைகாண் மனப்பாங்கும், சமூக இணைவும் கூடிவாழ்தலும், நெகிழ்ச்சியும் கட்டுப்பாடும், தகைமையும் பொறுப்பும், சிந்தனையும் உணர்ச்சியும், உழைப்பும் ஓய்வும், உந்துதல், பெறுமானங்கள், பரிவு, ஆன்மீகம்), மகிழ்வைப் பரிமாறல் (முயற்சியும் செயற்பாடும், நிறைவாக) ஆகிய நான்கு பிரதான தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அடைப்புக்குறிக்குள் உபதலைப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 160 தர்க்கவியல்

### 7072

**அளவையியலில் அளவாக்கம்சார் அனுமானம் (பயனிலைத் தருக்கம்).** கந்தசாமி அன்ரன் டயஸ். யாழ்ப்பாணம்: உயர் கல்விச் சேவைகள் நிலையம், 1வது பதிப்பு, ஜுன் 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).

v, *(3), 104 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.*

*அளவுபடுத்தற் கோட்பாடு-பயனிலைத் தருக்கம், வாதங்களை மதிப்பீடு செய்தல், பெறுகை முறை-நியம நிரூபணமுறை, பாரம்பரிய உய்த்தறி அளவையியலும் அளவுபடுத்தற் கோட்பாடும் ஆகிய நான்கு பிரதான தலைப்புகளின் கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் அன்ரன் டயஸ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளராவார். இதுவரையில் பெரும்பாலும் வெளிவந்த அளவையியல் நூல்கள் அளவையியலின் ஒரு பிரிவான எடுப்பளவையியல் தொடர்பாகவே வெளிவந்துள்ள நிலையில் ஆசிரியரின் இந்நூல் அளவாக்கம்சார் அனுமானம் பற்றியதாக வெளிவந்திருக்கிறது. க.பொ.த.உயர்தரத் தேர்விலும், பல்கலைக்கழக கலைத் தேர்வுகளிலும் அளவாக்கம்சார் அனுமானம் பற்றிய அறிமுகம் எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்நூல் மாணவர்களுக்கு முக்கியமானதாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 174796).*

### *7073*

***தருக்க சங்கிரகம், நியாய போதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம்.*** *சி.அப்புத்துரைப் பிள்ளை (மூலம்), சிவாநந்தையர் (மொழிபெயர்ப்பு). கொக்குவில்: சோதிடப்பிரகாச அச்சியந்திரசாலை, 1வது பதிப்பு, சாதாரண ஆண்டு, ஆவணி 1910. (கொக்குவில்: சோதிடப்பிரகாச அச்சியந்திரசாலை).*
*256 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 15x11.5 சமீ.*

*அபாவம், கருமம், குணம், சமவாயம், திரவியம், விசேடம் ஆகிய தலைப்புக்களில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்து வலிகாமம் வடக்குப் பகுதி மணியகாரர் ஸ்ரீ சின்னப்பாபிள்ளை மகனும், ரோட் கொமிட்டி லேககருள் ஒருவருமாகிய தெல்லிப்பழை ஸ்ரீ சி.அப்புத்துரைப்பிள்ளை இம்மூலநூலின் ஆசிரியராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 8907).*

### *7074*

***பயனிலைத் தருக்கம்: ஓர் அறிமுகம்.*** *கனகசபை சிவானந்தமூர்த்தி, கந்தசாமிஅன்ரன்டயஸ். யாழ்ப்பாணம்: அம்பாள் பப்ளிக்கேஷன்ஸ், புத்தூர், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2001. (யாழ்ப்பாணம்: உயர் கல்விச்சேவை நிலையம்).*
iv, *(4), 110 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 21.5x15 சமீ.*

Predicate Logic: An Introduction *என்ற ஆங்கிலத் தலைப்புடனும் வெளிவந்துள்ள இந்நூலின் ஆசிரியர்கள் இருவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளர்களாவர். இந்நூல் அளவையியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், அப்பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கும் பயன்தரவல்லது. பயனிலைத் தருக்கம்/அளவாக்கக் கோட்பாடு, வாதங்களை மதிப்பீடு செய்தல், பெறுகைமுறை/ நியம நிரூபணமுறை, பாரம்பரிய உய்த்தறி அளவையியலும் பயனிலைத் தருக்கமும் ஆகிய நான்கு இயல்களில் எழுதப்பட்டுள்ள நூல் இது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 544625).*

### *7075*

***விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும்.*** *வே.யுகபாலசிங்கம். யாழ்ப்பாணம்: பட்டப்படிப்புகள் கல்லூரி, 148/1, ஸ்ரான்லி வீதி, 1வது பதிப்பு, மே 1989. (யாழ்ப்பாணம்: பஸ்தியான் அச்சகம்).*
*(6), 90 பக்கம், விலை: ரூபா 35., அளவு: 21x14 சமீ.*

*மெய்யியல்துறையின் மாணவர்களுக்கு அத்துறையை அறிமுகம்செய்வதில் இந்நூல் பயனுள்ளதாக அமைகின்றது. விஞ்ஞானம், விஞ்ஞானத்தில் உய்த்தறிமுறையும் தொகுத்தறிமுறையும், தொகுத்தறித் தாவுதலும் இயற்கையின் ஆதாரவிதிகளும், விஞ்ஞானமும் கருதுகோள் ஆக்கமும், விஞ்ஞானத்தில் அவதானமுறை, விஞ்ஞானக் கருதுகோள் ஆக்கத்தில் சான்று, விஞ்ஞானத்தில் ஒப்புமை முறை, புள்ளிவிபரமுறையும் விஞ்ஞான விளக்கமும், சமூக விஞ்ஞானமும் புள்ளிவிபரமும், சமூக விஞ்ஞானமும் அவ்விஞ்ஞானமுறை பற்றிய மதிப்பீடும் ஆகிய பத்து இயல்களுடன்,*

அவ்வியல்களுக்கான பயிற்சி வினாக்களையும் உள்ளடக்கியது. நூலாசிரியர் நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தில் அளவையியலும் விஞ்ஞானமுறையும் போதிப்பதில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 100354).

**விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும்: ஓர் அறிமுகம்.** வே.யுகபாலசிங்கம். யாழ்ப்பாணம்: பட்டப்படிப்புகள் கல்லூரி, 57/13 ஸ்ரான்லி வீதி, இணை வெளியீடு: மெய்யியற் கல்வி அகம், 46/2, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், 1வது பதிப்பு, 2000. (யாழ்ப்பாணம்: முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர்).
xii, 122 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.

விஞ்ஞானம், பண்டைய நாகரீகங்களும் விஞ்ஞான அறிவும், விஞ்ஞான அறிவு-வரைவிலக்கணம், விஞ்ஞானத்தில் உய்த்தறி-தொகுத்தறி முறைகளும் அவற்றின் பயன்பாடுகளும், தொகுத்தறித் தாவுதலும் இயற்கையின் ஆதாரவிதிகளும், விஞ்ஞானமும் கருதுகோள் ஆக்கமும், விஞ்ஞானத்தில் அவதானமுறையும் அவற்றின் பயன்பாடுகளும், விஞ்ஞான விளக்கத்தில் சான்று என்னும் முறை, விஞ்ஞானத்தில் ஒப்புமை முறை, விஞ்ஞானத்தில் புள்ளிவிபரமுறை, சமூக விஞ்ஞானத்தில் புள்ளிவிபர முறையும் அதன் பிரயோகமும், திருப்திகரமான விஞ்ஞான விளக்கம் நோக்கி ஆகிய பன்னிரு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் முன்னைய பதிப்பு 1989இல் வெளிவந்திருந்தது. அதன் திருத்திய விரிவான பதிப்பாக இது அமைகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 136017).

## 180 இந்து தத்துவம்

### 7076

**இந்தியச் சிந்தனை மரபு.** நா.சுப்பிரமணியன், கௌசல்யா சுப்பிரமணியன். சென்னை 600002: சவுத் ஏஷியன் புக்ஸ், 6/1 தாயார் சாஹிபு 2ஆவது சந்து, 1வது பதிப்பு, ஜுன் 1993. (சென்னை: கார்த்திக் பிரின்டர்ஸ்).
(12), 216 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 21x13.5 சமீ.

இந்தியச் சிந்தனை மரபைத் தொகுத்து நோக்கும் ஒரு முயற்சியாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. வேதமரபும் அதற்குப் புறம்பான சிந்தனைகளும், கீதையும் குறளும், பக்தி நெறியும் தத்துவ விரிவும், மரபு-தேசியம்-ஆன்மநேயம் ஆகிய நான்கு இயல்களின் மூலமும் அதையடுத்து நிறைவுரைக்குப் பதிலாக தேசிய-ஆன்மநேய உணர்வுகளின் தொடர்ச்சியும் வளர்ச்சியும், பாரதியின் சிந்தனை மாற்றமும் தமிழகத் தத்துவ விவாதச் சூழலும், சுயவிமர்சனச் சூழல் ஆகிய குறிப்புகளின் வழியாகவும் இந்நூலில் இந்தியச் சிந்தனை மரபுபற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளது. இந்நூலுக்கான சிறப்புரையை தமிழக அறிஞர் பொற்கோ (பேராசிரியர் பொன்.கோதண்டராமன்) எழுதியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 117161).

### 7077

**இந்து நாகரீகம்.** க.சொக்கலிங்கம் (புனைபெயர்: சொக்கன்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xxii, 487 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-169-9.

அமரர் க.சொக்கலிங்கம் **இந்து நாகரீகம்** என்ற தலைப்பில் மூன்று பாகங்களில் எழுதி வெளியிட்ட நூல்களின் தொகுப்பான தனிநூல் இதுவாகும். இந்து நாகரீகம் என்ற தலைப்பில் 1995ம் ஆண்டில் முதலாம் பாகமும், 1996, 1997களில் பின்னைய இரு பாகங்களும் வெளிவந்திருந்தன. இப்புதிய தொகுப்பு க.பொ.த. உயர்தர வகுப்புகளில் இந்து நாகரீக பாடத்திட்டத்தில் காணப்படும் விடய ஒழுங்கை அனுசரித்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

### 7078

**சித்தாந்த சைவ சங்கிரகம்.** வி.வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: வி.வேலுப்பிள்ளை, கோப்பாய், 1வது பதிப்பு, கார்த்திகை, விகாரி வருஷம், 1959. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் அச்சகம், நல்லூர்).
xix, 100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x11 சமீ.

"சிவபெருமானே சிறந்த பரோபகாரியாகும். வீட்டுலகிற்குரிய ஞானத்தை நமக்குக் கொடுப்பார் அவரே. ஞானம் பயப்பனவும் அதனைப்பெறும் வழியைக் கூறுவனவுமாயுள்ள வேதசிவாகமங்கள் அவருடைய வாக்கே. அவற்றின் ஞானகாண்டப் பொருள்கள் ஞானாசாரியரிடத்து உபதேசம்பெற்ற மகான்களாலேயே தமிழிற் சிவஞானபோதம் முதலிய நூல்களிலே கூறப்பட்டுள்ளன. செய்யுள் நடையில் செய்யப்பட்ட அந்நூல்களும் அவற்றின் உரைகளும் சற்றுணர்வுடையராயினார்க்கன்றி ஏனையோர்க்குத் தெற்றெனப் புலப்படாவாகலின், அவற்றைச் சுருக்கி விளக்கிச் சித்தாந்த சைவ சங்கிரகம் எனப்பெயர்தந்து இந்நூலைத் தமியேன் வசனநடையில் ஆசிரியன் மாணாக்கற் கோதுமாற்றின் இயற்றுவேனாயினேன்." -ஆசிரியர் முகவுரையில். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 185141).

### 7079

**சித்தாந்த சைவ நெறித் திறவுகோல்.** ச.தியாகராசா. யாழ்ப்பாணம்: ச.தியாகராசா, சரசாலை, 1வது பதிப்பு, 1971. (கொழும்பு 2: அருளொளி அச்சகம், 31/21 டோசன் வீதி).
viii, (2), 108 பக்கம், விலை: ரூபா 1.75, அளவு: 19.5x13 சமீ.

இந்திய தத்துவங்களின் சிறப்பினை ஒருங்கே கொண்டது தென்னாட்டில் எழுந்த சைவசித்தாந்த தத்துவம் என்பர். 12ம் நூற்றாண்டில் எழுந்த மெய்கண்டதேவரின் சிவஞானபோதம் என்ற நூலே சைவசித்தாந்த முதனூலாகும். யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை என்ற ஞானநூற் களஞ்சியமும் சைவசித்தாந்தத்தின் விளக்கமாகக் கருதப்படுகின்றது. யோகசுவாமிகளின் மெய்யன்பருள் ஒருவரான இந்நூலாசிரியர் சிவஞானசித்தியார், தேவாரத் திருமுறைகள் காட்டி நற்சிந்தனையின் போதனை சைவசித்தாந்தமே என்பதை அழுத்தமாக எடுத்துரைக்கிறார். பொது அதிகாரம், உண்மையதிகாரம் ஆகிய இரு பிரிவுகளாக உருவாக்கப்பட்டுள்ள இந்நூலின் பொது அதிகாரத்தின்கீழ் பிரமாண இயல், இலக்கண இயல் ஆகிய இரு பகுதிகளும், உண்மையதிகாரத்தின்கீழ் சாதனை இயல், பயனியல் ஆகிய பகுதிகளும் அடங்கியுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64117).

### 7080

**சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்.** மு.கந்தையா. சுன்னாகம்: பண்டிதமணி மு.கந்தையா நூல் வெளியீட்டுக் கழகம், சத்தி முற்றம், ஏழாலை மேற்கு, 3வது பதிப்பு, ஜுலை 2005, 1வது பதிப்பு, 1978, 2வது பதிப்பு, 2001. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430 காங்கேசன்துறை வீதி).
xxxii, 192 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

ஆலயக் கிரியைகள் மற்றும் பூர்வ அபரக்கிரியைகள் வெறும் சம்பிரதாயங்கள் எனக் கருதுவது பெருந் தவறு. இவை அனைத்தும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களுள்ளும் இறுதியாகவுள்ள ஞானத்தின் நிமித்தமாகும். இதனைப் பண்டிதமணி அவர்கள் இந்நூலில் எளிதாக விளக்கியுள்ளார். வேதந்தழுவிய வைதீகக் கிரியைகள் போலன்றி, சைவக் கிரியைகள் ஆகம நெறியை முக்கியமாகப் பின்பற்றுபவை. ஆகமாந்தம் என்ற சைவசித்தாந்தம் உலகம் போற்றும் உயர்ந்த தத்துவமாகும். இந்நூல் இதன்வழியாக சைவக்கிரியைகளை விளக்கமுனைகின்றது. மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கத்தின் வெளியீடாக 1978இல் முதலில் இந்நூல் வெளிவந்தது. தொடர்ந்த இரண்டாவது பதிப்பு, அமரர் முருகேசு கந்தப்பிள்ளை நினைவு வெளியீடாக கோலாலம்பூர் மலேசியா சிவத்திரு ஐ.குலவீரசிங்கத்தினால் 2001இல் வெளியிடப்பட்டது. பண்டிதமணி மு.கந்தையாவின் மறைவின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தில் 7.7.2005 அன்று இந்த மூன்றாவது பதிப்பு வெளியிடப்படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29966).

### 7081

**சித்தாந்தச் செழும் புதையல்கள்.** மு.கந்தையா. யாழ்ப்பாணம்: மு.கந்தையா, ஏழாலை, 1வது பதிப்பு, கார்த்திகை 1978. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி).

*112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

**சித்தாந்தச் செழும் புதையல்கள்.** மு.கந்தையா. கனடா: சைவ சித்தாந்த மன்றம், 1008-50 Elm Drive East, Mississauga, Ontario L5A 3X2, *2வது பதிப்பு, ஜுலை 2005, 1வது பதிப்பு, கார்த்திகை 1978. (சென்னை 600005: மாசறு. 45, மரூதி தெரு, திருவல்லிக்கேணி).*
*138 பக்கம், விலை: ரூபா 200., இந்திய ரூபா 80., அளவு: 21.5x14 சமீ.*

*சைவசமய தத்துவத்தை அறியப் பயனுள்ள நூல். அம்மைக்கும் சைவசித்தாந்தம் இம்மைக்கும் சைவசித்தாந்தம், சதசத் ஆராய்ச்சி, ஆணவ விசாரணை, மாயா வியவகாரம், திரோதான மான்மியம், ஊழ்ப் பிரச்சினை ஆகிய இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38915).*

### 7082

**சிவஞானபோதச் சிந்தனை.** க.கணேசலிங்கம். லண்டன்: லண்டன் மெய்கண்டார் ஆதீனம், 72, King Edward Road, London E17 6HZ, *1வது பதிப்பு, பெப்ரவரி 2010. (சென்னை 600005: மாசறு பிரின்ட் சேர்விசஸ், 28/8, முத்துக் காளத்தி தெரு, திருவல்லிக்கேணி).*
*112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*உயர் சிவஞானபோதம், கடவுள் வாழ்த்து, அவையடக்கம், காணும் உலகம் காணாத கடவுள், போக்கும் வரவும், சைவத்தின் வினைக்கொள்கை, நான் யார்? அவத்தையுறும் ஆன்மா, காட்டாக்கால் காண்பார் ஆர்? என்றுமுள்ள பரம்பொருள், சத்துமல்ல அசத்துமல்ல, வேடருடன் வேந்தன் மகன், தண்ணிழலாம் திருவருள், மருள் நீங்கிய காட்சி, அன்பினால் இறையருள், மண்ணில் நல்ல கதி ஆகிய 16 தலைப்புகளில் அமைந்த ஆக்கங்களைக்கொண்ட நூல். இதில் சிவஞானபோதச் சூத்திரங்கள் இயன்றவரை எளிமையாக விளக்கப்பட்டுள்ளன. விளக்கும் முறையில் தொடர்புடைய சித்தாந்தக் கருத்துக்கள் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு முதலியவை தவிர்க்கப்பட்டுள்ளன. 2010ம் ஆண்டு பெப்ரவரி 5,6,7ம் திகதிகளில் சிதம்பரத்தில் நடந்தேறிய 12ஆவது உலக சைவ மாநாட்டின் நினைவாக வெளியிடப்பட்ட நூல். யாழ்ப்பாணம், குப்பிளானைச் சேர்ந்தவரான சைவசித்தாந்த கலாநிதி சித்தாந்தரத்தினம் க.கணேசலிங்கம் இலண்டன் மெய்கண்டார் ஆதீனத்தின் ஆதீனப் புலவராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 164244).*

### 7083

**சைவ சித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படைகள்.** *கலைவாணி இராமநாதன். யாழ்ப்பாணம்: கலைவாணி இராமநாதன், இந்து நாகரீகத் துறை, பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மே 1997. (கொழும்பு 6: கார்த்திகேயன் பிரைவேட் லிமிட்டெட், 501/2, காலி வீதி).*
*(10), 112 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 21.5x14.5 சமீ.*

*திருமந்திரத்தில் மனிதநேயம், இந்து சமயக் கிரியைகளின் அடிப்படையும் சைவ சித்தாந்தக் கிரியை மரபும், சைவ சித்தாந்தத்தில் ஒழுக்கவியல் அடிப்படைகள், சைவசித்தாந்த அற விழுமியம், விவேகானந்தரின் மனித நேய விழுமியங்கள் ஆகிய ஐந்து இயல்களில் இந்நூல் சைவ சித்தாந்தத்தின் ஒழுக்கவியல் அடிப்படைகளை ஆராய்கின்றது. கலைவாணி இராமநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் இந்து நாகரீகத்துறையில் முதுநிலை விரிவுரையாளராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 126073).*

### 7084

**சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி.** *மு.கந்தையா. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1998. (யாழ்ப்பாணம்: ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்).*
xv, *581 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x14.5 சமீ.*

*சைவாசிரிய கலாசாலையில் உப அதிபராயிருந்தவர் பொ.கைலாசபதி. அவரது நன்மாணாக்கருள் ஒருவரே பண்டிதமணி கணபதிப்பிள்ளையாவார். தம் கருத்துக்களைக் கூறுவதற்கு பண்டிதமணியையே தகுதியுடையவராகக் கண்டார் கைலாசபதி.அவரது சைவசித்தாந்தக் கருத்துக்களை பண்டிதமணியவர்கள் அப்பியாசக் கொப்பிகளில் அவ்வப்போது எழுதி வைத்திருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவற்றைத் தொகுத்து பின்னாளில் பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் என்ற நூலுருவில் வெளியிட்டது. பின்னர் அவரது கருத்துக்களை உள்வாங்கி அவற்றுக்கு எளிய விளக்கமளிப்பதாக ஏழாலைப் பண்டிதர் மு.கந்தையாவின் இந்த நூல் அமைகின்றது. சைவ மெய்யியல் பற்றி முதலாம் பிரிவிலும், ஸ்மிருதி இயல் பற்றி இரண்டாம் பிரிவிலும் இந்நூல் விளக்குகின்றது. சைவ மெய்யியலில் சைவம் -சைவசித்தாந்தம், இலௌகிகம்-சைவசித்தாந்தம், வேதம்-சிவாகமம், சிவாகமங்கள், பத்ததிகள், திருமுறைகள், அகப்புறச் சைவத் தொகுதிகள், அஷ்டப் பிரகரணம், ஞானாமிர்தம், சர்வஞ்ஞானோத்தரம், தமிழ்ச் சைவ சாஸ்திரங்கள், சைவ மெய்யியலின் முக்கிய அம்சங்கள் ஆகிய விடயங்கள் இடம்பெறுகின்றன. ஸ்மிருதி இயலில் ஸ்மிருதிப் பெயர், இந்து ஸ்மிருதி வரலாறு, ஸ்மிருதிப் பொருள், உட்கண்கள், புத்தி-அகங்கார விருத்தித் தொடர்பு, விமர்சனம், ஸ்மிருதி வழிவழி, ஸ்மிருதி இயலின் முக்கிய அம்சங்கள் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21154).*

### 7085

**சைவ சித்தாந்த மெய்ப்பொருளியல்.** *கலைவாணி இராமநாதன். யாழ்ப்பாணம்: கலைவாணி இராமநாதன், இந்து நாகரீகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, தை 1998. (கொழும்பு 6: கார்த்திகேயன் (பிரைவேட்) லிமிட்டெட், 501/1, காலி வீதி). (16), 114 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21x14.5 சமீ.*

*சைவ சித்தாந்தம்: சுருக்கமான விளக்கம், சைவ சித்தாந்தத்தில் முப்பொருட் தத்துவம், சைவ சித்தாந்தத்தில் காட்சியளவை, திருமந்திரத்தில் சைவ சித்தாந்தம், அஷ்டப் பிரகரணமும் சைவ சித்தாந்தமும்-ஓர் அறிமுகம் ஆகிய ஐந்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. வேத பாரம்பரியமும் சைவசித்தாந்தமும், இந்து தர்மமும் வர்ணதர்மமும் ஆகிய இரு நூல்களையடுத்து ஆசிரியரின் மூன்றாவது நூல் இது. இந்நூலாசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறையின் முதுநிலை விரிவுரையாளர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 131076).*

### 7086

**சைவ சித்தாந்த விளக்க விருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள்.** *மு.கந்தையா. யாழ்ப்பாணம்: திருவாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1994. (யாழ்ப்பாணம்: ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்).*
xvi, *(4), 70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.*

*12.09.1994 அன்று ஏழாலையூர் பண்டிதர் மு.கந்தையா அவர்களால் வழங்கப்பட்ட திருவாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையின் நூல்வடிவம் இது. பெருமாட்டி லீலாவதியின் விருப்பத்துக்குரிய துறையாகிய சைவசித்தாந்தம் பற்றி அவரது மருமகன் நடேசபிள்ளையின் நெருங்கிய நட்புக்குரிய அறிஞரான பண்டிதர் மு.கந்தையா இவ்வுரையை ஆற்றியிருந்தார். தமிழகத்துக்கு நிகராக சைவசித்தாந்தத்தில் பாண்டித்தியம் பெற்ற யாழ்ப்பாணத்து மேதைகள் பற்றி இவ்வாய்வு விரிகின்றது. 1950இல் வெளிவந்த அச்சுவேலி திக்கம் செல்லையாவின் துகளறு போத உரை, அதற்கு முன்னர் நந்தன வருடம் வேலணை வி.கந்தப்பிள்ளையால் முதற்பதிப்பாக உரையுடன் வெளிவந்த தத்துவப் பிரகாச நூல் என்பன முக்கியமானவை. 16ம் நூற்றாண்டினரான திருநெல்வேலி ஞானப்பிரகாசரின் வடமொழிச் சிவஞானபோத விருத்தி, தமிழ்ச் சிவஞான சித்தியாருரைகள் முதல் பின்னைய பண்டிதமணியின் அத்வைத சிந்தனை ஈறாக சைவசித்தாந்த நூல்கள் பற்றியும் அவற்றை யாத்த யாழ்ப்பாணத்தறிஞர் பற்றியும் இந்நூல் விபரிக்கின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 124056).*

### 7087

**சைவ சித்தாந்தத் தெளிவு.** நா.ஞானகுமாரன். பருத்தித்துறை: செல்வம் வெளியீடு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1994. (பருத்தித்துறை: விநாயகர் தரும நிதிய அச்சகம், புலோலி மேற்கு).
(12), 136 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ.

சித்தாந்த முப்பொருள் உண்மையினை (பதி-பசு-பாசம்) சைவசித்தாந்தத்தைக் கற்கும் மாணவர்களுக்கும், சித்தாந்தத்தை அறியவிரும்பும் ஆர்வலர்களுக்கும் விளக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. அறிமுகம், சைவசித்தாந்தத்தில் இறையுண்மை, ஆன்மாவின் இயல்பு, பாசப்பிணி, அத்துவிதமும் சைவசித்தாந்தமும், அளவையியல், அறிவாராய்ச்சியியல், சைவசித்தாந்தத்தில் விடுதலை ஆகிய எட்டு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118945).

### 7088
**சைவ சித்தாந்தம்.** பொ.சங்கரப்பிள்ளை. ஐக்கிய அமெரிக்கா: பொ.சங்கரப்பிள்ளை, கலிபோர்னியா, 1வது பதிப்பு, ஜுன் 1985. (சென்னை 600 005: தேவநேயன் அச்சகம், 351, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை).
iv, 144 பக்கம், விலை: இந்திய ரூபா 10., அளவு: 17.5x12 சமீ.

நான் யார்? மரணத்திற்குப் பின் வாழ்வுண்டா? என்ற வினாக்களுக்குச் சைவசித்தாந்தம் கூறும் விளக்கங்களை இந்நூலில் ஆராய்ந்துள்ளார். சைவ சமயம், பதி, ஆன்மாக்கள், அத்துவைதம், புறப் பிரபஞ்சமும் அகப் பிரபஞ்சமும், ஆணவ மலம், மாயை, கன்மமலம் -வினைப்பயன், மரணத்திற்குப் பின், மறுபிறப்பு, முத்தி, முத்திக்கு மார்க்கங்கள், திருவருள், பக்தி ஆகிய 14 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14432).

### 7089
**சைவ ஞான விளக்கம்.** மு.கந்தையா. கொழும்பு: கொழும்புச் சிவத்திரு மன்றம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (கொழும்பு 6: டெக்னோ பிறின்டர்ஸ், 55 டொக்டர் ஈ.ஏ.கூரே மாவத்தை).
192 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ.

சைவநெறிமறந்து உலகியலில் ஊறி, உலோகாயத நெறியை விரும்பி பல்வேறு உலகச் சமயங்களையும் நாடும் எம்மவரை மயக்கம் நீங்கித் தூய சைவத்துக்குள் நெறிப்படுத்தும் நோக்குடன் இந்நூல் எழுதப்பட்டுள்ளதாகக் குறிப்பிடும் இந்நூலாசிரியர் அமரர் பண்டிதமணி மு.கந்தையா ஏழாலையைச் சேர்ந்தவர். முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். அவரது மறைவின் ஐந்தாவது ஆண்டு நினைவாக இந்நூல் வெளியிடப்படுகின்றது. **சைவசித்தாந்தத்தில் மாயை உண்மை** என்ற அவரது முன்னைய நூலிலுள்ள (நூல்தேட்டம் பதிவு 4073) கட்டுரைகளுடன் மேலும் பல கட்டுரைகளையும் சேர்த்து இப்புதிய நூல் வெளிவருகின்றது. சைவானுட்டானத்தின் ஞானப் பெறுமதி, சிவாலயச் சூழல் சிவமயமாகவேண்டும், கும்பாபிஷேகத்தில் இடம்பெறும் ஒழுங்கு உணர்வுருக்கம் நித்திய நைமித்தியத்திலும் இடம்பெறவேண்டும், சிவபூஜை மாந்தராத்துவமா? சைவ உண்மை விளக்கத்தில் திருமுறைகளின் பங்கு, சிவாகமங்களின் பெறுமானம், துர்க்கையும் இராஜராஜேஸ்வரியும், மண்ணில் நல்லவண்ணம் வாழலாம், சிவநந்தி அடிகளுக்கு ஒரு கடிதம், யாழ்.சைவப் பாரம்பரியத்தில், திருவிளங்கதேசிகர் உரைவளம், சைவர்கள் இந்துக்கள் அல்ல, சைவ உலகமே இந்துசமய வழக்கைக் கையாளத் தொடங்கியதால் விளைந்த விபரீதங்கள், இந்து சமயம் இரவல் வழக்காற் சைவத்துக்கு நேர்ந்த இழப்புகள், சைவசித்தாந்த ஆய்வு எல்லை, யதார்த்தமான சைவசித்தாந்தக் கருத்துகளுக்கு நாடவேண்டிய நூலாசிரியர்கள், வினையாற்றலின் தற்றுணிபு, மூலகன்மம், சைவசித்தாந்த சிந்தனை, சைவசித்தாந்தத்தில் மாயை உண்மை ஆகிய 20 கட்டுரைகள் இதில் உள்ளடங்குகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45861).

### 7090
**பிரசங்கரத்தின தீபம் முதற் பாகம்.** வ.மு.இரத்தினேசுவர ஐயர். தமிழ்நாடு: முத்து க.லெ.இராமநாதன் செட்டியார், நெற்குப்பை, 1வது பதிப்பு, ஜுன் 1923. (கொக்குவில்: சோதிடப்பிரகாச யந்திரசாலை).
(20), 88 பக்கம், விலை: 50 சதம், அளவு: 20.5x13 சமீ.

இது யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் மாணவரும், பின்னாளில் இந்தியாவில் வசித்தவரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தவரும் சைவப் பிரசாரகருமான உடுவில் தமிழ்ப் பண்டிதர் வ.மு.இரத்தினேசுவர ஐயரால் இயற்றப்பட்டு, மகிபாலன்பட்டி, செந்தமிழ் ஆரியமாகிய இரு பெருமொழிப் பண்டித சிரோமணி ஸ்ரீமான் மு.கதிரேசன் செட்டியாரின் முகவுரையுடன் நெற்குப்பை ஸ்ரீ சண்முகவிலாச வாசகசாலையின் அத்தியட்சகருள் ஒருவராகிய முத்து க.லெ.இராமநாதன் செட்டியாரால் வெளியிடப்பட்டது. இந்நூலில் சமயம், முதற்பொருள், நாம் யார், மும்மலமுகிழ்ப்பு, மனிதப் பிறப்பின் மகிமை, சிவபூஜை என்றும் சீரிய இன்பமே ஆகிய ஆறு சைவப் பிரச்சார உரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 8915).

### 7091

**பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்: கருத்தரங்கக் கட்டுரைகள்.** மனோன்மணி சண்முகதாஸ், சந்திரமௌலீசன் லலீசன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ்).
xii, 196 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-659-248-1.

சேக்கிழாரது கருத்துக்களை அறியவும் உணரவும் உதவும் இத்தொகுப்பில் 12 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சுந்தரர், காரைக்காலம்மையார், திருநீலகண்டர், சிறுத்தொண்டர், கண்ணப்பர் என்னும் ஐவருடைய அன்புநெறி பற்றிக் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பெரியபுராணம் காட்டும் இளமை என்ற கட்டுரை பெரியபுராணத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள இளமை பற்றிய கருத்துக்களின் தொகுப்பாக அமைந்துள்ளது. புராணங்களின் கட்டமைப்புகள் பற்றிய அறிமுகம் ஏனைய கட்டுரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. செய்யுள் நடையில் அமைந்த சேக்கிழாரின் பெரியபுராணம் என்னும் பேரிலக்கியத்தைக் கற்க இளம்தலைமுறைக்கு இத்தொகுப்புநூல் ஒரு திறவுகோலாக அமையும். யாழ்ப்பாணத்தில் 2009ம் ஆண்டு பெரியபுராணம் பற்றிய தொடர் கருத்தரங்குகள் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் அனுசரணையுடன் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. மன்றத்தின் புதிய கட்டிடத்தில் நான்கு கருத்தரங்குகளும், புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் இரண்டு கருத்தரங்குகளும் நடைபெற்றன. அவற்றில் சமர்ப்பிக்கப்பட்ட இக்கட்டுரைகளை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், R.S.சந்திரசேகர், கலாநிதி என்.கிருஷ்ணவேணி, ச.லலீசன், விக்னேஸ்வரி பவநேசன், கு.றஜீபன், நாச்சியார் செல்வநாயகம், செல்வ அம்பிகை நடராஜா, ச.மார்க்கண்டு, ஈஸ்வரநாதபிள்ளை குமரன், கலாநிதி கலைவாணி இராமநாதன் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

### 7092

**மௌன தவமுனிவர் பொ.கைலாசபதி அவர்களின் தேர்ந்தெடுத்த சிந்தனைகள்.** மா.வேதநாதன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பொ.கைலாசபதி நூற்றாண்டு விழாக் குழு, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).
vi, 122 பக்கம், தகடுகள், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 955-8058-02-05.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் மூலாசிரியராக விளங்கியவர் சைவாசிரிய கலாசாலை உப அதிபாராகவிருந்த பொ.கைலாசபதியாவார். அன்னாரின் நூற்றாண்டு நிறைவின் நினைவாக இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது. அப்பெரியார் பற்றிய பல்வேறு அறிஞர்களின் கருத்துரைகளும் பல்வேறு நூல்களிலுமிருந்து தேர்ந்தெடுத்து இந்நூலில் தரப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1994இல் வெளியிட்ட பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள், 1958இல் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை உப அதிபராக இருந்த பொ.கைலாசபதி அவர்களின் பாராட்டுவிழா மலர், பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள்: பகுப்பாய்வும் நுண்ணாய்வும் என்ற தலைப்பில் செல்வி லலிதாமினி முருகேசு 2003இல் எழுதிய நூல், சிந்தனைச் செல்வர் பொ.கைலாசபதி ஆளுமையும் ஆக்கமும் என்ற தலைப்பில் மயிலங்கூடலூர் பி.நடராசன் 2002இல் தொகுத்த நூல் ஆகிய நான்கு முக்கிய நூல்களிலுமிருந்து இத்தகவல்கள் தேடித் தொகுக்கப்பட்டுள்ளன. கலாநிதி மா.வேதநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரீகத்துறையின் தலைவராவார்.

### 7093

**வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்.** இளையதம்பி சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: இ.சுப்பிரமணியம், 107, கண்டி வீதி, 1வது பதிப்பு, ஆனி 1987. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்).
xiv, 100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இந்நூல் சிவ வணக்கம், வேதங்கள், சமயம்-சைவம்-சைவ சித்தாந்தம்-சிவம், வேத தரிசனங்கள், தரும சாத்திரங்கள், ஆகமங்கள், நால்வகைப் புருஷார்த்தங்களும் வருணாசிரம தருமமும், சைவ சித்தாந்த தத்துவ விளக்கம், அத்துவிதம் ஆகிய ஒன்பது இயல்களில் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக சிவஞானபோதப் பொழிப்பு, சிவஞான சித்தியார் உணர்த்தும் ஞானநெறி ஆகிய இரு தலைப்புகளின்கீழ் சிவஞான போதமும் சிவஞான சித்தியாரிலே பன்னிரு திருப்பாக்களும் பொழிப்புடன் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 93682).

## 190 சோதிடம், வானசாஸ்திரம்

### 7094

**எண்ணை நம்புங்கள்.** மொழிவாணன் (மூலம்), தி.திலகரட்ணம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 13: நீரஜா பப்ளிக்கேஷன்ஸ், 104/36 சங்கமித்த மாவத்தை, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).
xvi, 212 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 600., அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 978-955-0231-00-3.

அதிர்ஷ்ட எண்களைப்பற்றிய எண் ஜோதிட நூல். பிறந்த திகதி எண் மட்டும் ஒருவரின் பண்புசார் இயல்புகளை, நடத்தைக் கோலங்களை, முன்-பின் நோக்கிய நகர்வுகளைத் தீர்மானிக்கும் காரணிகளாகிவிடாது. அவர்களின் பெயரின் எழுத்துக்களுக்கான எண்களின் தொகை எண்ணும் வாழ்க்கையின் ஒவ்வொரு நகர்வுப் படிகளுக்கும் எண்ணினது அர்த்தம் ஆழமானதாகப் பொருள் கொண்டுள்ளது என்பதை உதாரணங்களுடன் இந்நூலில் ஆசிரியர் விளக்குகின்றார். தினக்குரல் பத்திரிகையில் 2 வருடங்கள் தொடராக வெளிவந்தது.

### 7095

**சோதிட வாசகம்: முதலாம் புத்தகம்.** த.கணபதிப்பிள்ளை, மு.சின்னப்பு. அளவெட்டி: ஆசிரியர்கள், 1வது பதிப்பு, வைகாசி 1959. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
(2), 101 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 18.5x12.5 சமீ.

அளவெட்டியைச் சேர்ந்த சோதிடர்களான த.கணபதிப்பிள்ளை, மு.சின்னப்பு ஆகியோர் எழுதியுள்ள இந்நூல் சோதிடம் பற்றிய அடிப்படை அறிவினை வழங்குகின்றது. சோதிடக்கலையில் பயிற்சிபெற முனைபவர்களுக்கான ஆரம்ப நூலாக இது அமைகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 140786).

### 7096

**சோதிட விளக்க வினாவிடை என்னும் பெரியசுந்தர சேகரம்.** திருவள்ளுவ நாயனார் ஏலேலசிங்கனுக்கு உபதேசித்தது. கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை, இல.175, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, 1961. (சென்னை: சக்கரவர்த்தி பிரஸ்).
102 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 21.5x14 சமீ.

இந்நூலின் மூலநூலாசிரியர் யார் என்பதை அறியமுடியாதபோதிலும், கிறிஸ்துவுக்கு முன் 2ம் நூற்றாண்டில் வாழ்ந்த தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் ஏலேலசிங்கனுக்கு அருளியது என்ற குறிப்பைப் பெற முடிகின்றது. ஏலேலசிங்கன் என்ற கடல்வாணிகரிடம் நூல்வாங்கி, திருவள்ளுவர் நெசவுத்தொழில் செய்தார் என்ற கர்ணபரம்பரைக்கதையும் இங்கு நினைவில் கொள்ளல் தகும். இதிலிருந்து மூலநூலின் தொன்மை புலனாகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 113466).

### 7097

**பரகிதம்.** ந.நாராயணசாஸ்திரி (மூலம்), இ.சி.இரகுநாதையர் (பதிப்பாசிரியர்). கொக்குவில்: சோதிட பரிபாலன மடம், 3வது பதிப்பு, பிரமாதி வருடம், ஐப்பசி 1940, 1வது பதிப்பு, நந்தன வருடம், 1893, 2வது பதிப்பு, ரூத்ரோத்காரி ஆண்டு, 1924. (கொக்குவில்: அச்சக விபரம் தரப்படவில்லை).
(8), 117 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

சித்தாந்தஸ்கந்தத்தை விரித்து விளக்கி எழுதப்பட்டுள்ள நூல்கள் சித்தாந்தங்கள் எனப்படும். இவை பதினெட்டு உள்ளன. இவற்றுள் வட இந்தியாவில் சூரியசித்தாந்தமும், தென்னிந்தியாவில் (தமிழ்நாடு, மலையாளம்) ஆரியபடசித்தாந்தமுமே இன்றுவரை ஆன்றோர்களால் அனுபவத்தில் ஆளப்படுகின்றன. ஆரியபடசித்தாந்தத்தை ஆதாரமாகக்கொண்டு நுட்பமாகச் செய்யப்பட்ட கணித நூல்கள் வாக்கியகரணம், கரணப் பிரகாசம், பரகிதம் என்பனவாகும். இவற்றுள் வாக்கியகரணம் என்னும் கணிதநூல் வரருசி முனிவரால் வடமொழியில் பாடப்பட்டுள்ளது. இது பஞ்சாங்க கணனம், ஸ்புடகணனம், சாரகணனம், கிரகணகணனம், என நான்கு பிரிவுகளையுடையதாகும். இவ்வடமொழி வாக்கிய கணிதத்தை தமிழில் 180 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அராலிமேற்கில் வசித்த கோ.இரகுநாத சாஸ்திரிகளின் புத்திரர் நடராஜ சாஸ்திரி அவர்களின் மகன் நாராயண சாஸ்திரி அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து கணித சிந்தாமணி என்ற நூலை எழுதியிருந்தார். இக்கணித சிந்தாமணியிலுள்ள ஸ்புடகணனமாகிய பகுதியே பரகிதம் என்னும் பெயருடன் இந்நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் முதலிரு பதிப்பிலும் ஆக்கியோன் பெயர் விசுவநாத சாஸ்திரிகள் எனத் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. உண்மையில் விஸ்வநாத சாஸ்திரிகளின் தந்தையாரே அந்நூல்களின் ஆசிரியர் ந.நாராயணசாஸ்திரி அவர்களாவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33623).

### 7098

**வானசேகர சோடச பாவனா சோதிடம் என்னும் இலகுசாதகம்.** ச.அம்பலவாணபிள்ளை, இடைக்காடர். யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம், 1வது பதிப்பு, 1929. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).
(12), 80 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 20x12.5 சமீ.

பல்வேறு முக்கிய சோதிட சாத்திர நூல்களைக் கற்று அவற்றின் முக்கிய பகுதிகளைச் சேர்த்து இந்நூல் செய்யுள் உருவில் ஆக்கப்பட்டுள்ளது. இலகுவில் பொருள் விளங்கும்வகையில் செய்யுள்களுக்கு உரையும், அரும்பதவிளக்கமும் தரப்பட்டுள்ளன. சென்னமான வருஷ, மாத,தேதி, வார, இலக்கின பலன்கள், திசை-புத்தி சித்திரங்கள், கால நிர்ணயம், கிரக நோக்கு, திசா பலன்கள், திசை விளக்கம் ஆகியவை உள்ளிட்ட 83 தலைப்புக்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 43803).

### 7099

**விதானமாலை: மூலமும் உரையும்.** நாராயண சுவாமிகள். கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை, 175, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஜுலை 1958. (தமிழ்நாடு: கலைமகள் பிரஸ், வடக்கன்குவம்).
178 பக்கம், விலை: ரூபா 3., அளவு: 18x12.5 சமீ.

இது சுத்த வைதீக வேதியரும், ஸ்ரீ விஷ்ணு வணக்கத் திருவிரதாநூலாசிரியரும், வடமொழி தென்மொழிச் சோதிட நூல்களில் பரிச்சயம் மிக்கவருமான கடுவைகாவலன் நாராயணசுவாமிகள் இயற்றிய சோதிட நூல். அரசர் வினைப்படலம், உதயாரூடக்கவிப்புப் படலம், உற்பாதப் படலம், எச்சவினைப்படலம், ஏர்மங்கலப்படலம், கடிமணப்படலம், கர்ப்பாதானப்படலம், காலசக்கரப்படலம், கோசாரப்படலம், சந்திரகெதிப் படலம், சட்டுவர்க்கப்படலம், சாதகப்படலம், தீவினைப்படலம், தெருட்சிப்படலம், தெய்வப்பிரதிட்டைப்படலம், தெய்வவழிப்படலம், நட்பட்சியுச்சபகைநீசபடலம், நல்வினைப்படலம், பஞ்சாங்கப் படலம், மரபிற்படலம், மகாதிசைப்படலம், மகளிர்வினைப்படலம், மைந்தர்வினைப்படலம், யாத்திரைப்படலம் ஆகிய படலத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம்113500).

மேலும் பார்க்க: 7793

## 200 சமயங்கள்

### 210 பொதுச்சமயம் சார்பானவை

**7100**

**உலக மதங்கள் 40ஐப் பற்றிய அரிய தகவல்கள்.** சி.வ.இரத்தினசிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 14: பி.வி.ஆர். ஆப்செட்).
xxviii, 840 பக்கம், விலை: இந்திய ரூபா 400., அளவு: 22x15 சமீ.

இரண்டு பாகங்களில் எழுதப்பட்ட இந்நூலில் புராதன மதங்கள் முதற் பாகத்திலும், வாழும் மதங்கள் இரண்டாம் பாகத்திலும் விளக்கப்பட்டுள்ளன. புராதன மதங்கள் கண்டங்கள் வாரியாக அவுஸ்திரேலியாக் கண்டம் (ஆதிவாசிகளின் மதங்கள்), ஆபிரிக்காக் கண்டம் (எகிப்தியர்கள், ஆபிரிக்க ஆதிவாசிகள், யொறூபா இனம், இக்போ/ இபோ இன மக்கள், மடகஸ்கர் தீவு), மத்திய அமெரிக்கா (ஒல்மெக், ரொல்ரெக்ஸ் இனத்தவரின் புராதன மதங்கள், மாயா, அஸ்ரெக்), தென் அமெரிக்கா (சிப்ச்சா, சாவின், அய்மாறா, மொச்சே, குறாணி, இன்கா இனத்தவர்கள்), வட அமெரிக்க ஆதிவாசிகள் (லக்கோட்டா, ஹோப்பி, நவஜோ, இனூயிட்), ஐரோப்பாக் கண்டம் (செல்ற்ஸ், நோர்ஸ், ரோமாபுரி, கிரேக்கம்), ஆசியாக் கண்டம் (சுமேரிய, அசிரிய, பபிலோனிய மதங்கள், கானான் தேசத்தவரின் புராதன மதம், பாரசிகம், இந்திய உபகண்ட, சீன, ஜப்பானிய தேசத்தவரின் புராதன மதங்கள்) என்று பிரிக்கப்பட்டு அங்கு வாழ்ந்த ஆதிவாசிகளின் மதங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பாகத்தில் வாழும் மதங்களாக ஆசிரியர் குறிப்பிடும் இந்து மதம், இஸ்லாம் மார்க்கம், கிறிஸ்தவ மதம், கொன்பூசியனிசம், சமண மதம் (ஜெயினிசம்), சீக்கிய மதம், பஹாய் நம்பிக்கை, பௌத்த மதம், யூத மதம், ராவோ மதம், ஷின்ரோ மதம், ஸோஹாஸ்ரியன் மதம், நாஸ்திகவாதம் ஆகியவற்றினை தனித்தனியாக விளக்குகின்றார். சாவகச்சேரியில் பிறந்த நூலாசிரியர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தன் ஆரம்பக் கல்வியைப்பெற்று உள்ளூராட்சி சேவையில் இணைந்தவர். 30 ஆண்டுக்கால சேவையின் பின்னர் விஷேட ஆணையாளராகப் பணியாற்றி பதவி ஓய்வு பெற்றவர்.

**7101**

**மதமாற்றம்: ஓர் ஒப்பியல் சமய ஆய்வு.** கணபதி மகேசன். யாழ்ப்பாணம்: கணபதி மகேசன், 6, ராணி வீதி, நல்லூர், 1வது பதிப்பு, மே 1997. (யாழ்ப்பாணம்: சிவன் பப்ளிக்கேஷன்ஸ், நல்லூர்).
(4), 80 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 20.5x13.5 சமீ.

இது தமிழரின் சமகாலப் பிரச்சினைகளை உள்ளடக்கிய ஓர் ஒப்பியல் சமய நூலாகும். தூங்கிக் கிடக்கும் தமிழினத்தைத் தட்டி எழுப்பிச் சிந்திக்க வைப்பதே இதன் இலக்காகும். இது சைவ நெறியினைத் துறந்து கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களுக்கு மாற முற்படுவோருக்கும், மாறுவது பற்றிய தீர்மானத்தை எடுப்பதற்குத் தடுமாறும் அன்பர்களினதும் நலன் கருதி எழுதப்பட்டது. சைவத்திறன், கிறிஸ்தவ-இஸ்லாம் மதக் கொள்கை(படைப்பு, சமூக ஏற்றத்தாழ்வு, ஓய்வுநாள், உடலும் உயிரும், விளக்கம், பாவம்-புண்ணியம்-இரட்சிப்பு, கடவுளின் உருவம், ஒருமைவாதம்-எதிர் -பன்மைவாதம், இறையுரிமை, வரலாற்றுச் சமயங்கள், ஏசுவின் பிறப்பு-இறப்பு-உயிர்ப்பு, மிஷனரி இயக்கம், பேய்-பிசாசு-சைத்தான், இறையுணர்வு, சமய ஒற்றுமையும் ஆக்கிரமிப்பும், சந்தர்ப்பவாதம், அரசியல் வழிவந்த சமயப் பேரினவாதம் எழுச்சியும் வீழ்ச்சியும், அருளாட்சியும் மருளாட்சியும், இடைக்கால இறையரசு), மதம்-மொழி-பண்பாடு-1, இறங்குவரிசையும் மதமாற்றமும்-2, மதமாற்றம் வரலாறு (புத்தம்-சமணம், இஸ்லாம், ஐரோப்பியர் வருகை, கிறிஸ்தவம்-இன்றைய நிலை-றோமன் கத்தோலிக்கம், கிறிஸ்தவ சீர்திருத்த சேர்ச் சபைகள், தற்கால மதமாற்ற முயற்சிகள்), மதமாற்ற வலிகோலிகள் (பிராமணர், கிறீஸ்தவ நிறுவனங்களை ஆதரிக்கும் சைவக் கிறீஸ்தவர், மதச்சார்பற்ற இந்துமத நிறுவனங்கள், பாடசாலைக் கிறிஸ்தவ அமைப்புக்கள், சீருடை, சிலுவை அடையாளம், கிறிஸ்தவ பாடசாலைகளில் மாணவரைச் சேர்த்தல், சேர்ச் சிறுவர் பாடசாலை, தொழிற் கல்வி, மதச்சார்பு, சமரசம், யார் ஏன் மதம் மாறுகிறார்கள்?) ஆகிய தலைப்புகளிலும் (உபதலைப்பகளிலும்)

இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 124365).

## 220 கிறிஸ்தவம்

### 7102

**இயேசுவே இஸ்ரவேலரின் ஆசரிப்புக் கூடாரம்.** ரூபா செல்வச்சந்திரன் (புனைபெயர்: ரூபா செல்வா). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600015: எம்.கே.என்டர்பிரைஸஸ்).
336 பக்கம், விலை: இந்திய ரூபா 130., அளவு: 21x14 சமீ.

கிறிஸ்தவ இறையியல் தொடர்பான பக்தி இலக்கியங்களைத் தொடர்ந்து எழுதிவரும் ரூபா செல்வாவின் ஆறாவது நூல் இதுவாகும். லண்டனில் Faith Church of God என்ற கிறிஸ்தவ அமைப்பின் அங்கத்தவராக பாஸ்டர் ரூபா செல்வா இறைபணியாற்றி வருகிறார். தேவன் அமைத்த அன்பின் செல்வவீடு, மோசே அமைத்த பரிசுத்த வீடு, ஆதாம்- தேவ மகிமையின் வாசஸ்தலம், மோசே- தேவ மகிமையின் ஊடகம், தாவீது-தெய்வீக அன்பின் வாசஸ்தலம், இயேசு-தேவத்துவத்தின் பரிபூரணம், அந்த நம்பிக்கை தான் என்ன ஆகிய ஏழு தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7103

**ஞானப்பள்ளு.** ஆ.சதாசிவம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 13: எம்.ஏ.ரகுமான், அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 1968. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).
Lxx, 102 பக்கம், விலை: ரூபா 6.00, அளவு: 19x13 சமீ.

இந்நூல் யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்க கிறிஸ்தவப் புலவர் ஒருவரால் 17ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகும். இதன் காலம் கி.பி.1642 என்று நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிடுகிறார். துர்அதிர்ஷ்டவசமாக நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை. கிறிஸ்து பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மருதநில மக்கள் வாழ்க்கையைச் சித்திரித்துக்காட்டும் இந்நூல் 250 வருடங்களாக ஏட்டுருவிலிருந்து 1904இல் முதலில் அச்சுருவில் வெளிவந்தது. இது சில்லாலை பண்டிதர் ஸ்ரீ ச.அந்தாம்பிள்ளை அவர்கள் கேள்விப்படி பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந்து எடுக்கப்பட்டு ஸ்ரீ வ.லோ.அமிர்தநாதபிள்ளை அவர்களால் தமது தைரியநாத அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டது. மூத்தபள்ளி (செருசலைப்பள்ளி), இளையபள்ளி (ரோமைப்பள்ளி), பள்ளன் (தன்மகுணப்பள்ளன்), பண்ணைக்காரன் ஆகிய நால்வருமே இந்நூலில் தோன்றி நடிக்கும் பாத்திரங்கள். இவர்களுள் மூத்த பள்ளி, பள்ளன் ஆகிய இருவரும் கிறிஸ்து பெருமானின் பிறப்பிடமாகிய செருசலை (Jerusalam) நாட்டவர். இளையபள்ளி கத்தோலிக்க திருச்சபையினதும் போப்பாண்டவரினதும் தலைமைப்பீடமான உரோமாபுரி நாட்டவள். பண்ணைக்காரன் உரோமாபுரியென்னும் பண்ணை வயலுக்கு உரிமையாளன். இந்நால்வருள் பள்ளனின் மனைவியரான மூத்தபள்ளி, இளையபள்ளி ஆகிய இருவரைச் சுற்றியுமே கதை வளர்கிறது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2405).

### 7104

**மறை அருவித் துளிகள்.** அ.திருச்செல்வம். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2007. (கொழும்பு 15: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்).
(10), 242 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ., ISBN: 955-9262-32-7).

கத்தோலிக்க மதத்தின் மேன்மையையும் அதன் வரலாற்றையும் விளக்கும் கட்டுரைகளின் தொகுப்பு. என்றும் நெஞ்சில் நிறையும் நத்தார் பெருவிழா, நத்தார் பெருவிழாவின் வளர்ச்சிப் படிகள், மகிழ்வாய் நெஞ்சே மீட்பர் பிறந்தார், திருவிருந்தின் பலன்களை அதிகரிக்க.., தேம்பாவணி தரும் நத்தார் விழா, இயேசு தெய்வீகப் புதிரா மறைபொருளா, கிறிஸ்துவின் தாய்மொழி ஒரு விநோத வரலாறு, புனித வார வரலாற்றுத் துளிகள், சிலுவை எழுந்தது, சிந்திப்போம் உறுதிபெறுவோம், உயிர்ப்பு இல்லையேல்,

*உயிர்ப்பு விழாவின் பின்னணி, உலக வரலாற்றில் மரியாள், மரியாள் ஒரு சரித்திரம், இயேசுவின் பின் மரியாளின் பயணம், மே மாதம் மரியாளின் மாதமா, வரலாற்றில் அன்னையின் திருவிழாக்கள், மரியாள் பக்கம் ஈர்க்கப்படும் பிறசபைகள், வருடம் முழுவதும் ஒளிசிந்தும் மரியன்னை, மரியாளும் மனிதர்களுக்கு ஆதரவு நல்கும், பற்றிமா ஏற்படுத்திய வரலாற்று மாற்றம், டாவின்சி கோட், சுனாமிப் பேரலையின் தாக்கம், உலகக்கிண்ணப்போட்டி போன்ற தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.*

***7105***

***வியாதியிலிருந்து விடுதலை பெறுவது எப்படி?*** *ரூபா செல்வச்சந்திரன் (புனைபெயர்: ரூபா செல்வா). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 600015: எம்.கே.என்டர்பிரைஸஸ்).*
*120 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.*

*கிறிஸ்தவ இறையியல் தொடர்பான பக்தி இலக்கியங்களைத் தொடர்ந்து எழுதிவரும் ரூபா செல்வாவின் எட்டாவது நூல் இதுவாகும். லண்டனில் Faith Church of God என்ற கிறிஸ்தவ அமைப்பின் அங்கத்தவராக பாஸ்டர் ரூபா செல்வா இறைபணியாற்றி வருகிறார். உடல் நலம் பெறுவதற்கான தடைகள் எவை என்ற கேள்விக்குப் பதிலாக எட்டு காரணிகளை இவர் வரிசைப்படுத்தி, அவற்றைத் தனித்தனியாக விளக்குகின்றார். குணமடைவதை அனுபவிக்கத் தடைசெய்யும் அபிப்பிராயங்கள், பாவங்களும் பாவப் பழக்கவழக்கங்களும், நாம் வாழும் உலகில் வாழும் எதிரி, வீழ்ச்சி அடைந்த உலகில் வாழ்வதன் விளைவுகள், சாத்தானும் அவன் சகாக்களும் ஏற்படுத்தும் விளைவுகள், குற்றங்களும் தவறுகளும், அவிசுவாசம் இதை ஒழிக்கும் வழிகள், நோயின் முடிவு பற்றிய தவறான பேச்சை நிறுத்துங்கள் ஆகிய எட்டுக் கராணிகளை விளக்கி மேலதிகமான ஐந்து இயல்களில் தெய்வீக சுகத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிகள், பெற்றுக்கொண்ட நலத்தைக் காத்துக்கொள்வது எப்படி?ஆரோக்கியத்தை எதிர்பார்க்க வேண்டிய அவசியங்கள், வேதவசனமும் உங்கள் உடற்சுகமும், அனுதினமும் உட்கொள்ளவேண்டிய மாத்திரைகள் ஆகிய தலைப்புகளில் மேலும் விடயங்களை விபரிக்கிறார்.*

## *294.5 இந்து சமயம்*

***7106***

***அகத்திய மகாமுனிவர் திரட்டியருளிய தேவாரத்திரட்டு: மூலம்.*** *அகத்தியர் (மூலம்), ஆறுமுக நாவலர் ( பரிசோதித்தவர்). சென்னப்பட்டணம்: தியாகராஜபிள்ளை, தருமபரிபாலகர், சைவப்பிரகாச வித்தியாசாலை, சிதம்பரம், 15ஆவது பதிப்பு, பிரமோதூத வருடம் மாசி 1930, (சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை).*
*(286) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12 சமீ.*

*அகத்தியர் தேவாரத் திரட்டு, திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணச் செய்யுட் திரட்டு ஆகிய ஐந்து நூல்கள் தனித்தனியாகப் பக்கமிடப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம், ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பா, சேந்தனாரருளிச்செய்த திருப்பல்லாண்டு, பெரியபுராணச் செய்யுட்டிரட்டு ஆகியவற்றை உள்ளடக்கிய இத் தொகுப்பு நூலின்கண்ணுள்ள 25 திருப்பதிகங்களை சிவாலய முனிவருக்கு அகத்திய மாமுனிவர் திரட்டித் தந்ததாக குறிப்பிடப்படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21730).*

***7107***

***அருணகிரிநாதர் அருளிச்செய்த கந்தரலங்காரம் மூலமும், ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை செய்த புத்துரையும்.*** *அருணகிரிநாதர் (மூலம்), ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை, 2வது பதிப்பு, 1940, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).*
*(4), 60 பக்கம், விலை: சதம் 30., அளவு: 20.5x14 சமீ.*

அருணகிரிநாதர் திருவண்ணாமலையிலே அந்தணர் குலத்திலே அவதரித்தவர். வடமொழிப்பயிற்சி பெரிதுமுடையவர். இவர் பாடியருளிய நூல்கள் கந்தரலங்காரம், கந்தரநுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, திருப்புகழ் என்பனவாகும். அவற்றில் கந்தரலங்காரம் மூலமும் உரையும் இந்நூலில் இடம்பெறுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2974).

### 7108

**அருள் நிதி: மாவிட்டபுரம் விசுவர் சிதம்பரி சின்னத்தம்பி நினைவிதழ்.** சி.அப்புத்துரை (தொகுப்பாசிரியர்). மானிப்பாய்: கலாமன்ற வீதி, மானிப்பாய் கிழக்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (கொழும்பு: கீதா பதிப்பகம்).
128 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12.5 சமீ.

நினைவஞ்சலி மலராக வெளிவந்துள்ள இத்தொகுப்பு நூல் திருமுறை நிதியம், அருட்பா நிதியம், உரைநடை நிதியம் ஆகிய மூன்று பிரிவுகளில் தொகுக்கப்பட்டுள்ளன. முதலிரு பிரிவுகளிலும் முறையே திருமுறைத் தொகுப்பு, அருட்பாத் தொகுப்புகளையும் கொண்டுள்ளன. உரைநடை நிதியம் சைவசித்தாந்த தத்துவங்கள், பஞ்சபுராணம் ஓதும் முறை, சமூகப்பற்றாளர் சி.வி.சின்னத்தம்பி சமூகநலப் பணிகள், புலமைப்பரிசில் நிதியம் ஆகிய அம்சங்களைக்கொண்ட கட்டுரைகளை உள்ளடக்குகின்றது.

### 7109

**அறுவகைச் சமயங்கள்.** க.சி.குலரத்தினம். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ்).
viii, 90 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-174-3.

இந்துசமயத்தின் பல்வகைச் சமய வழிபாட்டு நெறிகளையும் விளக்கும் ஆசிரியர், சண்மதங்கள் என அழைக்கப்படும் அறுவகைச் சமயங்களான சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் ஆகிய வைதீக சமயங்களைப்பற்றிய தகவல்களைத் தனித்தனி இயல்களாக்கி இந்நூலில் விளக்குகின்றார். சிவனை வழிபடும் சைவம், திருமாலை வழிபடும் வைணவம், சக்தியை வழிபடும் சாக்தம், கணபதியை வழிபடும் காணபத்தியம், முருகனை வழிபடும் கௌமாரம், சூரியனை வழிபடும் சௌரம் ஆகிய இவ்வறுவகைச் சமயங்களைப்பற்றிய விரிவான தகவல்களை இந்நூல் வழங்குகின்றது. க.சி.குலரத்தினம் (1916-1994) யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் பிறந்தவர். பரமேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றபின்னர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும், திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் பயின்றவர். திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாசாலை உட்பட பல கல்லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றியபின்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். யாழ்ப்பாணத்தில் மில்க்வைற் செய்தி என்ற சிறுசஞ்சிகையின் கௌரவ ஆசிரியராக இருந்து ஒரு வர்த்தக இதழை சுவைமிகு அறிவியல் இதழாக நடத்திக்காட்டியவர்.

### 7110

**இணுவை முருகன் பிள்ளைத் தமிழ்.** ச.வே.பஞ்சாட்சரம். இணுவில்: இளந்தொண்டர் சபை, கந்தசுவாமி கோவில், 2வது பதிப்பு, வைகாசி 2004, 1வது பதிப்பு, 1980. (இணுவில்: சன்ஷைன் கிரப்பிக்ஸ், காங்கேசன்துறை வீதி).
122 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17.5x13 சமீ.

யாழ்ப்பாணம் இணுவையம்பதியிலே கோவில் கொண்டருளியுள்ள முருகக் கடவுளைப் பிள்ளையாகப் பாவித்துப் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்கள் இனிய தமிழில் சொற்சுவை, பொருட்சுவை, இலக்கியச் சுவை, பக்திச் சுவை மிளிர இப் பிள்ளைத் தமிழைப் பாடியுள்ளார்.

### 7111

**இந்து மதம்: விரதங்கள் விழாக்கள்.** இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு. தெகிவளை: காயத்ரி பப்ளிக்கேஷன், த.பெ.எண் 64, 1வது பதிப்பு, ஆவணி 2009. (தெகிவளை: காயத்திரி அச்சகம்).
xxx, 284 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14 சமீ.

மூன்று பிரிவுகளாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இந்நூலின் முதலாவது பிரிவில் விநாயகர், சிவன், சக்தி, குமரன், விஷ்ணு, வைரவர், சூரியன் போன்றோருக்காக சைவர்கள்அனுட்டிக்கும் விரதங்கள் பற்றி தனித்தனி 8 இயல்களில் கட்டுரைகளும், ஒன்பதாவது இயலில் விரதங்களும் விழாக்களும் பற்றிய ஒரு பொதுவான கண்ணோட்டமும் இடம்பெறுகின்றன. இரண்டாம் பிரிவில் தமிழர் அனுஷ்டிக்கும் விழாக்கள், பண்டிகைகள் என்பவற்றைப் பற்றியும், மூன்றாவது பிரிவில் இந்துக்களுக்குத் தேவையான சில விளக்கங்கள், குருபூசை தினங்கள், பஞ்சபுராணம், கிழமைகளுக்குரிய தேவாரங்கள், சிவபுராணம் ஆகியவை தனித்தனி 5 இயல்களாகவும் விபரிக்கப்பட்டுள்ளன.

### 7112

**இறையருட் செல்வர்கள்.** மூ.சிவலிங்கம். யாழ்ப்பாணம்: சைவத்திருநெறிக் கழகம், இணுவில், 1வது பதிப்பு, 2007. (யாழ்ப்பாணம்: சன்ஷைன் கிரபிக்ஸ், காங்கேசன்துறை வீதி, இணுவில்).
ix, 206 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ.

இறைத்தொடர்பினால் பல அற்புதங்களைப் புரிந்த 30 சமயகுரவர்கள் பற்றிக் கூறும் இந்நூல் அறநெறிப்பாடசாலைகளின் சிறார்களின் அறிவியல் வாசினைக்காக உருவாக்கப்பட்டது. நம்பியாண்டார் நம்பி, சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், கண்ணப்ப நாயனார், சிறுத்தொண்டர், காரைக்கால் அம்மையார், திருமூலர், மனுநீதிகண்ட சோழன், அரிச்சந்திரன், ஆதிசங்கரர், இராமலிங்க அடிகளார் (வள்ளலார்), நந்தனார் (திருநாளைப் போவார் நாயனார்), பட்டினத்தடிகள், தாயுமானவர், திருநீலகண்ட நாயனார், குங்குலியக்கலய நாயனார், சேக்கிழார், ஔவையார், சாவித்திரி, ஆதிகவி வான்மீகி முனிவர், கம்பர், நக்கீரர், அபிராமிப்பட்டர், கச்சியப்ப சிவாசாரியார், தியாகராஜ சுவாமிகள், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், குமரகுருபர சுவாமிகள், அருணகிரிநாத சுவாமிகள் ஆகிய 30 பேரின் வாழ்வும் இறைபணிகளும் இக்கட்டுரைகளில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 173381).

### 7113

**கந்தசஷ்டி சிந்தனைகள்.** மூளாய் அருணாசலம் (மூலம்), அருணாசலம் பூங்கோதை (பதிப்பாசிரியர்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
132 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 17.5x12 சமீ.

வடமராட்சி கரணைவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் அருணாசலம் (1931-1999) மூளாயை வசிப்பிடமாகக்கொண்டிருந்தவர். இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். ஆன்மீகம், எண் சோதிடம் சம்பந்தமான ஆக்கங்களையும், படைப்பிலக்கியங்களையும் பத்திரிகையில் எழுதிவந்த இவரது ஆன்மீகப் படைப்புக்களில் 32 ஆக்கங்கள் தொகுக்கப்பெற்று இந்நூலுருவில் வெளிவந்துள்ளது. பெரும்பாலும் முருகன் தொடர்பான ஆன்மீகக் கருத்துக்களே இக்கட்டுரைகளில் இடம்பெறுகின்றன. கந்தசஷ்டி விரத மகிமை, தாட்சாயணியாக சக்தி பிறந்த கதை, சூரபன்மனும் தங்கை அசமுகியும், சூரமன்மனின் வரலாறு, அகத்தியரிடம் பலிக்காத தந்திரம், கார்த்திகைப்பெண்களும் கந்தவேளும், பிரம்மதேவரின் யாகம், மன்மதனின் தியாகம், முருகனின் அவதாரம், சேவலும் மயிலும், அருணகிரிநாதர் என இன்னோரன்ன விடயங்களை இக்கட்டுரைகள் சுவையாகப் பதிவுசெய்கின்றன.

### 7114

**கந்தபுராணம் தக்ஷ காண்டம்: ஆறாவது தக்ஷகாண்டம் மூலமும் உரையும்.** கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் (மூலம்), சி.கணபதிப்பிள்ளை (உரையாசிரியர்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1967. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
xxxiv, 815 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x17.5 சமீ.

*உபதேசப்படலம், தக்கன் தவஞ்செய் படலம், தக்கன் மகப்பெறு படலம், சத்திரசாபப் படலம், உமை கயிலை நீங்கு படலம், காளிந்திப் படலம், உமை தவம்புரி படலம், திருமணப்படலம், தக்கன் கயிலை செல் படலம், பிரமயாகப் படலம், சாலை செய் படலம், ததீசிப் படலம், ததீசி யுத்தரப் படலம், கயமுக னுற்பத்திப் படலம், அனந்தன் சாப நீங்கு படலம், தானப் படலம், வேள்விப் படலம், உமை வருபடலம், வீரபத்திரப் படலம், யாகசங்காரப் படலம், அடிமுடிதேடு படலம், தக்கன் சிவபூசை செய் படலம், கந்த விரதப் படலம், வள்ளியம்மை திருமணப் படலம் ஆகிய அத்தியாயங்களில் இந்நூலுக்கான செய்யுள்களின் உரை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34139).*

### 7115

**குமாரபுர வெண்பாவும் திருவூஞ்சற் பதிகமும்.** *இ.திருநாவுக்கரசு. முல்லைத்தீவு: குமாரபுர ஆலய திருப்பணி, 1வது பதிப்பு, ஜுலை 1970. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம்).*
*24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*அடங்காப்பற்று மன்னர்களின் ஆட்சியில் தோன்றிய புராதன ஆலயங்களுள் குமாரபுரம், வற்றாப்பழை, புதுவூர், உருத்திரபுரம் என்பன பழமைமிக்கவை. தனியூற்றின் கீழ்ப்பாலமைந்த குமாரபுரப் பகுதி அக்காலத்துத் தண்ணீர் முறிப்பு என வழங்கப்படினும் முற்காலத்துப் பெரிய குருந்தனூர்க்குளம் என்ற பெயரால் வழங்கப்பெற்றதென அறியமுடிகின்றது. அந்நியரால் அழிக்கப்பட்ட குமாரபுர ஆலயத்தின் பழைய தெய்வ உருவங்கள் இற்றைக்கு 2000 ஆண்டுகள் பழமையானவை என்று கருதப்படுகின்றது. முல்லைத்தீவைச் சார்ந்த குமாரபுர ஆலயத்தில் எழுந்தருளியிருந்து அடியார்க்கு அருள்பாலிக்கும் ஸ்ரீ சித்திரவேற் பெருமான் பேரில் இணுவையூர்ப் பண்டிதர் வித்துவான் இ.திருநாவுக்கரசு அவர்கள் பாடிய குமாரபுர வெண்பாவும், திருவூஞ்சற் பதிகமும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் மேற்படி கோவில் திருப்பணியின்பொருட்டு வெளியிடப்பட்டது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275661).*

### 7116

***சரஸ்வதி பாமாலை.*** *ஐயாத்துரை வரதராஜா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: திருமதி மகாலட்சுமி ஐயாத்துரை நினைவு வெளியீடு, 59, கலைமகள் வீதி, அரியாலை, 1வது பதிப்பு, மே 2009. (யாழ்ப்பாணம்: கணபதி பிரிண்டர்ஸ், திருநெல்வேலி).*
xx, *44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13.5 சமீ.*

*இந்நூலில் அரியாலையூர் கவிஞர் வே.ஐயாத்துரை, சி.சிவதாசன், கலாபூஷணம் வே.க.பாலசிங்கம், செல்வமணி இரத்தினம், மகாலட்சுமி ஐயாத்துரை ஆகியோர் இயற்றிய சரஸ்வதி பாமாலைகளும், மா.வேதநாதன், ஐ.வரதராஜா, ஆகியோர் எழுதிய சரஸ்வதி பற்றிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. கவிஞர் வே.ஐயாத்துரை அவர்களின் துணைவியார் சிவபதப்பேற்றின் நினைவாக வெளியிடப்பட்ட மலர் இது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதனின் "காலம் தோறும் சரஸ்வதி வழிபாடு" என்ற கட்டுரையும் இந்நூலுக்கு அணிசேர்க்கின்றது.*

### 7117

***சிவ அமுதம்: சமயக் கட்டுரைத் தொகுப்பு.*** *ஆசி. (இயற்பெயர்: ஏ.எஸ்.இராதாக்கிருஷ்ணன்). மாத்தளை: மாத்தளை விஜயகுமார், தலைவர், மாத்தளை இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, 2009. (மாத்தளை: ரகுராம்ஸ்).*
*50 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.*

*அப்பர் திருமுறைகள் காட்டும் வழிபாட்டு முறைகள், வைரவப் பெருமானின் மகிமையும் வழிபாட்டு முறைகளும், பஞ்சாட்சர மந்திரங்கள், சமய வழிபாட்டில் காவடி ஆட்டம் போன்ற சுவையான பல சமயக்கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பில் சைவ சமய நிலைக்கும், மாணவ சமுதாயத்திற்கும், ஆன்மீகவாதிகளுக்கும் பயன்தரக்கூடிய சமயக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் மாத்தளை கல்வி வலய இந்துசமய ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றியவர்.*

(இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47400).

**7118**

**சைவ சமயம் ஓர் அறிமுகம்: சிறுவர் சமய இலக்கியம்.** செல்லத்தம்பி சிறீக்கந்தராசா. நோர்வே: இந்துக் கலாசார ஒன்றியம், Hindu Cultural Forum, P.O.Box 138, Loddefjord, 5881, Bergen, 1வது பதிப்பு, புரட்டாதி 2010. (கொழும்பு 6: பாஸ்ட் பிரின்டர்ஸ்).
66 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

நோர்வே இந்துக் கலாச்சார ஒன்றியம் பெர்கன் நகரில் 2008ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவ்வமைப்பின் பணிகளில் ஓர் அங்கமாக புகலிட நாடுகளில் வாழும் தமிழ்ச் சிறார்களுக்குச் சைவத் தமிழ்க் கலாச்சாரத்தையும் சைவ சமயத்தின் அடிப்படை நம்பிக்கைகளையும் இலகுவாக அறியவைக்கும் நோக்கில் இச்சிறுநூல் உருவாக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் சட்டத்தரணியாவார். 40 ஆண்டுகளுக்கும் மேலாகச் சட்டத்தொழில் புரிந்து வாழும் இவர், தென்புலோலியூர்த் தமிழ் வித்தகர் கந்த முருகேசனார், கொழும்பு சிவன் கருணாலய பாண்டியனார், திருச்சி புனித ஜோசப் கல்லூரித் தமிழ்ப் பேராசான் ஐயன்பெருமாள் கோனார் ஆகிய தமிழ்ப் பேராசான்களிடம் முறைப்படி தமிழ்கற்றவர். ஈழத்தமிழறிஞர் வித்துவான் வேலனாரின் மருமகனார். ஏற்கெனவே சட்டமும் தமிழும், பங்காண்மைச் சட்டம், அவ்வையார் காட்டிய வழி, ஊர்க்காற்று, சட்டமும் சிரிக்கும் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

**7119**

**சைவ சமயம்: கல்விப்பொதுத் தராதர (சாதாரண)த் தேர்வுக்குரியது.** ஆ.கந்தையா. யாழ்ப்பாணம்: மு.கணபதிப்பிள்ளை, பதிப்பாளர், ஸ்ரீகாந்தா அச்சகம், திருத்திய 2வது பதிப்பு 1973, 1வது பதிப்பு, 1964. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).
ix, 228 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 21.5x14 சமீ.

1974ம் ஆண்டு டிசம்பர் மாதப் பரீட்சையிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட பாடத்திட்டத்திற்கு அமைவாக இந்நூல் எழுதப்பட்டது. சைவசமய வரலாறு, பன்னிரு திருமுறைகள், சைவசித்தாந்த சாஸ்திரம், சைவாதீனத் தோற்ற வளர்ச்சி, ஈழத்திற் சைவம், சைவசித்தாந்த தத்துவ விளக்கம், சைவ சாதனை, சைவக்கிரியைகள், பாடப்புத்தகம் (திருவருட்பயன், திருவருட்பயன் மாதிரி விளக்கங்கள்), திருமுறைகள், சமயாசாரியர் சந்தனாசாரியர் வரலாறு ஆகிய பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35401).

**7120**

**சைவ நீதியும் சமய வாழ்வும்.** வெற்றிவேல் விநாயகமூர்த்தி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
104 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 17.5x12 சமீ.

மட்டக்களப்பு மாவட்டம் தந்த படைப்பாளி விநாயகமூர்த்தி தன் அகவை 82ஐ தாண்டிய நிலையில் வெளியிட்டுள்ள ஆன்மீகக் கட்டுரைகளின் தொகுப்பு இது. மனிதனும் மரணமும், சைவ நீதியும் சமய வாழ்வும், எழுமின் விழிமின், உள்ளக் கமலம் உரைத்தேன், ஆன்மா பரம்பொருளே, காஞ்சிபுரம் பட்டுப் புடவை, எம்பியும் தம்பியும், அறிவுக்கு நன்நெறிச் சிந்தனை அறுபது, மரணம் வருமுன் அறச்செயல், வாழ்வினாலே சாதியுண்டு, இறக்கும் வீடும் ஏழைக்குதவலாம், கோடி சேர்த்தவர் கொண்டுபோவரா? கூடுங்கொலையும் நாட்டு நிலையும், மனம் உடைய உயிரே ஆத்மாவாகும், உரிமை உடையோர் யார், பாடுபடாப் பணக்காரன், ஆய்வுச் சிந்தனை அறிவைப்பெறு, ஆண்டவர் பிறந்த மண் நூலுருவாக்கம் ஆகிய தலைப்புகளில் அமைந்த 18 கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

**7121**

**ஞானவிளக்கு.** சிவ. மகாலிங்கம். கனடா: ஒன்ராரியோ இந்து சமயப் பேரவை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2003. (கனடா: விவேகா அச்சகம், ரொரன்டோ).
vi, 90 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13 சமீ.

*விநாயகர் வழிபாடு, சக்தி வழிபாடு, முருக மந்திரம், வைரவர் வழிபாடு, திருமுறையில் சைவசித்தாந்தம், சித்தர்கள் கண்ட சமயநெறி, திருமந்திரத்தில் சைவம், சைவத்தின் காவலர், இதயத்தை புனிதமாக்கும் எங்கள் சமயம் ஆகிய ஒன்பது கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சிவசுப்பிரமணியம் மகாலிங்கம் குப்பிளானில் பிறந்தவர். ஆசிரியராகவும், பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகவும், உப அதிபராகவும் பணியாற்றியவர். இன்று சமயப் பேச்சாளராக அறியப்பெற்றவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47308).*

### 7122

**திருமுறைப் பண்ணிசைத் திறனாய்வு.** இ.வடிவேல். திருக்கோணமலை: இ.வடிவேல், பாக்கியபதி, 15, வித்தியாலயம் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஆண்டு விபரமில்லை. (திருக்கோணமலை: ஸ்ரீ கணேச அச்சகம், 5. வித்தியாலயம் வீதி).
*90 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*திருமுறைப் பண்ணிசை என்றால் என்ன? அது எவ்வகையில் பயன்படுத்தப்படுகின்றது? அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? அதைப் பயன்படுத்துவதால் வரும் நன்மைகள் என்ன என்பன போன்ற கேள்விகளுக்கு இந்நூல் விடையளிக்கின்றது. திருமுறைப் பண்களின் தொன்மை, திருமுறை என்றாலென்ன, வேதமும் தமிழ் வேதமும், திருமுறைகள் எவை, திருமுறைப் பண்வகை, திருமுறையில் இசைத்தமிழ், திருமுறையில் சுவை (இரதம்) நயம், ஆலயங்களில் தோத்திரமும் சாஸ்திரமும், திருமுறையில் பண்கள் இசைக் கருவிகள் பற்றிய குறிப்புகள், திருமுறையில் இயற்றமிழ், திருமுறைப் பாவமைப்பும் பயனும், திருமுறை வாரிதியில் ஒருசில துளிகள் (திருக்கோணமலைப் பதிகம், நமச்சிவாயப் பதிகம், திருநூற்றுப் பதிகம், கோளறு பதிகம், சூலை நீக்கிய பதிகம்) ஆகிய பன்னிரு தலைப்புகளில் இத்திறனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேவார முதலிகளாகிய மூவரும் பாடியருளிய திருமுறைகளில் காணப்படும் பண்களே பண்டைய தமிழிசை நூல்களில் கூறப்பட்டுள்ள பண்களாகும் எனக்கூறும் ஆசிரியர், பிற்காலத்தில் தமிழ்ப் பண்ணிசை பின்தள்ளப்பட்டு 16ஆம் நூற்றாண்டுக்குப்பின் தஞ்சையை ஆண்ட மகாராஷ்டிர மன்னர்களாலும், மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களாலும் கர்நாடக இசை முன்னணிக்குக் கொண்டுவரப்பட்டதாகக் கணிப்பிடுகின்றார். சைவப்புலவர் பண்டிதர் இ.வடிவேலு முன்னர் திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள், கோணேசர் கோவிலின் வரலாறு ஆகிய நூல்களால் அறியப்பெற்றவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31727).*

### 7123

**தெய்வ சந்நிதி: அச்செழு கந்தையா வெற்றிவேலு நினைவிதழ்.** சி.அப்புத்துரை (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: திருமதி வெ.சுதர்சனா, 77 சங்கமித்தை மாவத்தை, 1வது பதிப்பு, மார்ச் 2005. (கொழும்பு: கீதா பதிப்பகம்).
*120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.*

*யாழ்ப்பாணம் அச்செழு அமரர் கந்தையா வெற்றிவேலு (27.8.1962-27.10.1991) அவர்களின் நினைவாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஐந்து பகுதிகளைக்கொண்ட இந்நூலின் முதற் பகுதி முன்னுரை, பதிப்புரை, ஆசியுரைகளைக் கொண்டது. தெய்வீக விளக்கம் என்ற 2வது பகுதியில் பன்னிரு திருமுறைத் தொகுப்பு, சிவபுராணம், போற்றித் திருவகவல், திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், விநாயகர் அகவல், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, அபிராமிப் பதிகம், சகலகலாவல்லி மாலை, சமய நம்பிக்கையும் கொள்கைத் தொகுப்பும் ஆகிய அம்சங்கள் அடங்குகின்றன. 3வது பகுதியில் செல்வச்சந்நிதி முருகன் என்ற தலைப்பில் கா.சிவத்தம்பி, பாலநிர்மலன் பாலபிரதீபன், ஆகியோரின் இரு கட்டுரைகளும் த.பொ.கார்த்திகேசு இயற்றிய ஒருபாவொருப:்து என்ற தலைப்பிலான பாடல்களும் இடம்பெற்றுள்ளன. 4வது பகுதியில் புத்தூர் கிழக்கு அருள்மிகு ஞான வயிரவர் ஆலய வரலாறு (கட்டுரை), வயிரவர் துதிப்பாடல்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன. இறுதியான 5வது பகுதியில் அமரர் வெற்றிவேலு பற்றிய நான்கு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.*

### 7124

**நம்பியகவல்: பாட்டுங் குறிப்புரையும்.** சிவங். கருணாலய பாண்டியப் புலவர். தமிழ்நாடு: சிவங் கருணாலய பாண்டியனார், புதுக்கோட்டை, 1வது பதிப்பு, ஜுலை 1948. (தமிழ்நாடு: மதராசு ரிப்பன் வெளியீட்டு நிலையம், இராமச்சந்திரபுரம்)
(17), 376 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x15.5 சமீ.

வில்லி துனித்தயர்தல், தொகையுணர்வின் புணர்ப்பு, வினைவயிற் புணர்ப்பு, புலவயிற் புணர்ப்பு, நீத்தற் புணர்ப்பு, தன்னியற் புணர்ப்பு, புலவயிற் புணர்ப்பு, எஞ்சாப் பெரும் பெயர்ப் புணர்ப்பு, மண்பெரும்புலமை மன்பேரற்றம், கடவுட்செல்வக் காட்சிப் புணர்ப்பு, ஞாலப்பேர் யாக்கை, கடவுட் காதற் புணர்ப்பு, செய் செய்யறிஞன் சிறப்பியற் புணர்ப்பு, முக்கூற்றுப் பண்பு, ஆண்டகையியல், உம்பர் வம்ப ருடைமை, முக்கூற்றுள்ளம், நீத்தல் வண்மை ஆகிய தலைப்புகளில் அமைந்த இந்நூலில் 701 செய்யுள்கள் இடம்பெறுகின்றன. நூலாசிரியர் முன்னாள் கொழும்பு விவேகானந்த சபையின் சமயபாட வகுப்பாசிரியராவார். ஆசிரியர் புதுக்கோட்டையில் வதியும்வேளையில் வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2381).

### 7125

**நல்லூரான் அருமருந்து.** பொ.சந்திரசேகரம் (பதிப்பாசிரியர்). சுன்னாகம்: திருமதி சின்னப்பிள்ளை பொன்னுத்துரை அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (சங்கானை: சாய்ராம் பிரின்டர்ஸ்).
xii, 218 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

இந்நூலின் பதிப்பாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளராவார். தனது தாயாரின் மறைவையொட்டி இந்நூலைத் தொகுத்து வழங்கியுள்ளார். **எனது பெற்றோரும் யாழ்ப்பாணச் சமூகமும்** என்ற தனது விரிவான கட்டுரையில் யாழ்ப்பாணத்துச் சாதிய சமூக வழமைகள் பற்றிய தனது மனப்பதிவுகளை ஆசிரியர் பதிவுசெய்கிறார். தொடர்ந்து வ.அ.தங்க மயில் இயற்றிய திதி நிர்ணயம், செம்மை ஒரு மொழி அம்மையே, ஆகிய செய்யுள்களும், தொடர்ந்து மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, நற்சிந்தனை, திருமுருகாற்றுப்படை, கந்தரனுபூதி, சண்முக கவசம், திருவிசைப்பா, நல்லைநகர் கந்தன் திருவூஞ்சல், சைவசமயம், திருநீற்று இயல், திருக்கோயில் வழிபாட்டியல், சோதிடவியல் ஓர் அறிமுகம் ஆகிய அம்சங்களும் தொகுக்கப்பெற்றுள்ளன.

### 7126

**பட்டணத்துப் பிள்ளையார் அருளிச்செய்த திருப்பாடற்றிரட்டு: மூலம்.** ஆறுமுக நாவலர் (பதிப்பாசிரியர்). சிதம்பரம்: ஜீ.சுப்பிரமணியம், தருமபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 12வது பதிப்பு, இரக்தாட்சி வருடம், 1924, 1வது பதிப்பு குறிப்பிடப்படவில்லை. (சென்னை 1: ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலனயந்திரசாலை, 300 தங்க சாலைத்தெரு).
38 பக்கம், விலை: காசு 30., அளவு: 15x12 சமீ.

ஆறுமுக நாவலரவர்கள் பரிசோதித்துப் பதிப்பித்து வெளியிட்ட இத் திருப்பாடற்றிரட்டில், பட்டணத்துப் பிள்ளையார் அருளிய கோயிற்றிருவகவல், கச்சித் திருவகவல், திருவெகம்பமாலை, திருத்தில்லை, திருச்செங்காடு, திருவொற்றியூர், திருவிடைமருதூர், திருக்கழுக்குன்றம், திருக்காளத்தி, கைலாயம், மதுரை, மற்றும் தன் தாயாருக்குத் தகனக்கிரியை செய்கையில் பாடிய வெண்பா என்பன தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன.

### 7127

**பன்னிரு திருமுறை அமுதம்.** இந்திரா திருநீலகண்டன். கொழும்பு: இந்திரா திருநீலகண்டன், 1வது பதிப்பு, மார்ச் 2007. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).
xiii, 182 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13 சமீ.

பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானுக்குச் சமர்ப்பணமாக 22.3.2007இல் இந்நூல் வெளியிடப்பட்டது. 60 பிரிவுகளாக வகுத்துத் திருமுறைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

***7128***

***பாராயணத் தோத்திரத் திரட்டு.*** தொகுப்பாளர் குழு. தெல்லிப்பழை: ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், குரும்பசிட்டி, 1வது பதிப்பு, 1958. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
*(6), 66 பக்கம், விலை: சதம் 65., அளவு: 18.5x12.5 சமீ.*

*திருஞான சம்பந்தர் சுவாமிகள் தேவாரம், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம், சிவபுராணம், குழைத்தபத்து, யாத்திரைப் பத்து, கோயின்மூத்த திருப்பதிகம், புணர்ச்சிப்பத்து, அச்சோப்பதிகம், திருப்பொற்சுண்ணம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பட்டணத்தார் பாடல், உடற்கூற்று வண்ணம், நக்கீரர் திருமுருகாற்றுப்படை, புராணம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், தாயுமான சுவாமிகள் பாடல், பராபரக் கண்ணி ஆகிய பக்தி இலக்கியங்களின் தொகுப்பு இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275053).*

***7129***

***மாரியம்மன் மான்மியம்.*** ஆ.சபாபதி. கனடா: வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம், Valvai Historical Document Conservation Center, 3947 Lawrence Ave. East, Scarborough, Ontario, M1G 1S1, 2வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, 1972. (கனடா: விவேகா அச்சகம்).
*(12), 59 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*மட்டக்களப்பு, தாமரைக்கேணியைச் சேர்ந்த பண்டிதர் ஆ.சபாபதி அவர்கள் எழுதிய மாரியம்மன் பற்றிய விரிவான ஆராய்ச்சியாக வெளிவரும் இந்நூலின் முதற் பதிப்பு நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினரால் 1972இல் ஆக்கியோனான பண்டிதரின் மறைவையொட்டி (27.10.1972) அவரது நினைவாக கல்வெட்டுருவில் வெளியிடப்பட்டிருந்தது. தொண்டை மண்டல ஆதீனம் அவரது கவித்துவ வித்தகத்தைப் பாராட்டி கவிராசகேசரி என்ற பட்டம் வழங்கியிருந்தது. பண்டிதர் ஆ.சபாபதி அவர்களை ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் மட்டக்களப்பில் அவரில்லத்தில் நேரில் சந்தித்த வேளையில் இந்நூலின் கையெழுத்துப் பிரதியை பெற்றுக்கொண்டார். துர் அதிர்ஷ்டவசமாக நூலின் அச்சுரு முடிவடைவதற்கு முன்னமே ஆக்கியோன் மறைந்துவிட்டார். நூல் வெளியிடப்பட்டவேளை அன்னாரின் நினைவஞ்சலியாகவே அதனை வெளியிடமுடிந்துள்ளது.*

***7130***

***முருகேச பண்டிதர் பிரபந்தத் திரட்டு 1829-1900.*** முருகேச பண்டிதர் (மூலம்), கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை (தொகுப்பாசிரியர்). சுன்னாகம்: புலவரக வெளியீடு, புலவரகம், மயிலணி, 1வது பதிப்பு, 1956. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
xxiv, *80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.*

*இற்றைக்கு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஈழத்துப் பெரும்புலவர் முருகேச பண்டிதர் இலங்கையிலும் இந்தியாவிலும் வசித்தமையாலும் அவரது இறுதிக்காலத்தை இந்தியாவில் கழித்து மறைந்தமையாலும் அவரது முழுமையான படைப்புக்களை எவரும் அறியமுடியாத நிலையில், காணக்கிடைத்த பாக்களைக்கொண்ட தொகுப்பாக இந்நூல் இலங்கையில் வெளிவந்துள்ளது. இதில் சந்திரசேகரப் பிள்ளையார் ஊஞ்சல், சிவபூதராயர் ஊஞ்சல், மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சல், மயிலணி மகாவிஷ்ணு ஊஞ்சல், மயிலணிச் சிலேடை வெண்பா, மயிலணி விசாலாட்சி அம்மை பதிகம், வத்தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சல், குடந்தை வெண்பா, பதார்த்ததீபிகை, நீதிநூறு, தனிச்செய்யுட்கள் ஆகியவையும் பின்னிணைப்பாக முருகேச பண்டிதர் புகழ்மாலை, ஆறுமுகநாவலர் பேரில் முருகேச பண்டிதர் பாடியது, சுன்னாகம் கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை பாடிய முருகேச பண்டிதர் வாழ்த்து என்பன இணைக்கப்பட்டுள்ளன.*

## *294.5(1) இந்து நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள்*

7131

**இந்து சமயத்தின் சீர்திருத்த இயக்கங்கள்.** க.சி.குலரத்தினம். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ்).
vi, 74 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-246-7.

சைவத்தையும் தமிழையும் இரு கண்களெனப் போற்றி வாழ்ந்த சைவப்புலவர் க.சி.குலரத்தினம் உயர்தர வகுப்பில் இந்து நாகரீகத்தை (1979ம் ஆண்டிலும் 1980ம் ஆண்டிலும்) ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்கள் நலன் கருதி பல பகுதிகளைக் கொண்ட **இந்து நாகரிகம்** என்ற நூலை எழுதி வெளியிட்டார். அத்தொகுதியில் இடம்பெற்ற **இந்து சமயத்தின் இக்காலச் சீர்திருத்த இயக்கங்கள்** என்ற பாடம் இப்பொழுது தனி நூல் வடிவில் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இந்நூலின் அறிமுகத்தைத் தொடர்ந்து, பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், ஆரிய சமாஜம், ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தியடிகள், தத்துவஞான சபை, விஸ்வஹிந்து பரிஷத் ஆகிய தனித்தலைப்புகளின்கீழ் இந்நூலின் உள்ளடக்கம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. சீர்திருத்த இயக்கங்களின் முக்கிய அம்சங்களைத் தெளிவான மொழிநடையில் ஆசிரியர் இந்நூலில் எளிமையாக வழங்கியுள்ளார். க.சி.குலரத்தினம் (1916-1994) யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் பிறந்தவர். பரமேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றபின்னர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும், திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் பயின்றவர். திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாசாலை உட்பட பல கல்லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றியபின்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பணியாற்றி ஒய்வுபெற்றவர். யாழ்ப்பாணத்தில் மில்க்வைற் செய்திகளின் கௌரவ ஆசிரியராக இருந்து ஒரு வர்த்தக இதழை சுவைமிகு அறிவியல் இதழாக நடத்திக்காட்டியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

7132

**இலண்டன் சிவன் கோயில்: வரலாறும் அனுபவங்களும்.** நடராசா சச்சிதானந்தன். லண்டன்: அம்பனை கலைப்பெரு மன்றம், 49, Ravensbourne Park Crescent, Catford, London SE6 4YG, 1வது பதிப்பு, 2011. (லண்டன்: Jay Maarxs Printers).
viii, 116 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

லூஷியம் சிவன் கோவில் என அறியப்பட்ட இலண்டன் சிவன் கோயில் 1993இல் உருவாக்கப்பட்டு வளர்ச்சிபெற்ற வரலாறும் சமூகப் பிரமுகர்களின் பங்களிப்புகளும் இந்நூலில் 44 ஆக்கங்களின் உருவில் விரிவாகத் தரப்பட்டுள்ளது. குத்தகைக்காணியில் அமைந்துள்ள இக்கோயில் சொந்தக்காணியில் நிறுவப்படவேண்டும் என்ற கருத்தை இந்நூல் முன்வைக்கின்றது. நூலாசிரியர் சச்சிதானந்தன் இலங்கை, இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் புலம்பெயர்ந்து, 44 ஆண்டுகளுக்கும் மேலாக லண்டன் லூஷியம் பகுதியில் வாழ்பவர். பொதுப்பணிகளில் ஆர்வம் மிக்க இவர் 1970-80 காலகட்டத்தில் லண்டன் தமிழ்ச்சங்கத்தின் செயலாளராகவும், 1980களில் The Central British Fund for Tamil Refugees Rehabilitation என்ற அமைப்பின் நிர்வாகியாகவும் சேவையாற்றியவர். தமிழர் தகவல் மையத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரான இவர், இன்று லூஷியம் தமிழ்ப் பாடசாலையாக இயங்கும் கர்நாடக இசைப்பள்ளியை ஆரம்பித்தவர். 1998இல் பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்தை ஆரம்பித்து முதலாவது செயலாளராகவும் பணியாற்றியவர். 2008ஆம் ஆண்டில் தமிழர் பிரச்சினை பற்றி இலங்கை அரசுடனான உரையாடலுக்காகச் சென்ற குழுவிலும் இடம்பெற்றிருந்தார். பின்னர் 12.8.2008இல் சிவன் கோவில் அறங்காவல் குழுவினரால் அறங்காவலர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார். தனது பக்க நியாயங்களையும், தனது பணிகள் பற்றி பல்வேறு சமூகப் பிரமுகர்கள் கொண்டிருந்த கருத்துக்களையும் இந்நூலில் இவர் பரவலாகப் பதிவுசெய்திருக்கிறார்.

7133

**இலண்டன் சைவ மாநாடு (பதின்மூன்றாவது) சிறப்புமலர்.** மலர் வெளியீட்டுக் குழு. இலண்டன் SE13 5ES: பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம், 4A, Clarendon Rise, Lewisham, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (இலண்டன்: நெட் பிரின்டர்ஸ்).
164 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் பதின்மூன்றாவது சைவமாநாடு 2010 செப்டெம்பர் 4-5ம் திகதிகளில் இலண்டனில் இடம்பெற்றது. அதன்போது வெளியிடப்பட்ட இந்தச் சிறப்புமலரில் தலைவருரை, ஆசியுரைகள், வாழ்த்துரைகள் என்பனவற்றுடன், பல்வேறு இந்து சமயக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இம்மாநாடு, 04.9.2010 அன்று உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்திலும் (200A Archway Road, London N6 5BA), 05.9.2010 அன்று லண்டன் ஹரஷியம் சிவன் கோவிலிலும் (4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES) இடம்பெற்றது.

**7134**
**ஈழத்துத் திருக்கோயில்கள் வரலாறும் மரபும் பகுதி 2.** வசந்தா நடராசன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600094: பி.வி.ஆர். ஆப்செட்).
xviii, 194 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 18x12 சமீ.

கனடாவிலிருந்து வசந்தம் வெளியீடாக ஈழத்தின் 24 கோவில்களின் வரலாற்று மரபு தனித்தனி இயல்களாகப் பதிவுசெய்யப்பட்டு, இந்நூலின் முதலாம் பாகம் 2003ம் ஆண்டு வெளிவந்திருந்தது. (பார்க்க: நூல்தேட்டம் 2149). இவ்விரண்டாம் பாகத்தில் மேலும் 16 கோவில்களின் விபரங்கள் விரிவாகத் தனித்தனி இயல்களாகத் தரப்பட்டுள்ளன. அவ்வகையில், கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயம் (புங்குடுதீவு, யாழ்ப்பாண மாவட்டம்), பெரியபுலம் சங்கரநாதர் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம் (அனலைதீவு, யாழ்ப்பாணம்), மாணிக்கப்பிள்ளையார் கோவில் (அட்டன், மலையகம்), கோட்டைமுனை வீரகத்திப் பிள்ளையார் கோவில் (மட்டக்களப்பு), பள்ளிக் குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயம் (மூதூர், திருக்கோணமலை), சம்பில்துறை சம்புநாதேஸ்வரர் சிவாலயம் (சுழிபுரம், யாழ்ப்பாணம்), கந்தளாய் சிவன் கோவில் (திருக்கோணமலை), முத்துமாரி அம்பாள் ஆலயம் (திருநெல்வேலி, யாழ்ப்பாணம்), இணுவில் சிவகாமி அம்மை ஆலயம் (யாழ்ப்பாணம்), பண்டாரபுலம் மனோன்மணி அம்பாள் ஆலயம் (யாழ்ப்பாணம்), சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயம் (திருக்கோணமலை), ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம் (வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்), உகந்தைமலை முருகன் கோயில் (மட்டக்களப்பு), தேவபுரம் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் (சரவணை, யாழ்ப்பாணம்), சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோவில் (உடுப்பிட்டி), தெகிவளை ஆஞ்சநேயர் ஆலயம் (கொழும்பு) ஆகிய 16 திருத்தலங்களின் மகிமை பற்றி வரலாற்றுக் குறிப்புகளுடன் இந்நூல் பதிவுசெய்கின்றது.

**7135**
**காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவில் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம் சிற்பத்தேர் வெள்ளோட்ட மலர் 2006.** வசந்தா வைத்தியநாதன், க.இரகுபரன் (ஆலோசகர்கள்). காரைநகர்: ஆ.அம்பலவி முருகன், து.சுந்தரலிங்கம் (ஆதீனகர்த்தாக்கள்), ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம், 1வது பதிப்பு, ஜனவரி 2006. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xxix, 96 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரரை மூலமூர்த்தியாகக்கொண்ட ஈழத்துச் சிதம்பரம் என்ற பெயர்பெற்ற இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா 1830ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றது. அவ்வகையில் புதிதாக உருவாக்கப்பட்டதொரு சிற்பத்தேரின் வெள்ளோட்டம் 10.01.2006 அன்று காரைநகரில் இடம்பெற்ற வேளையில் இம்மலர் வெளியிடப்பட்டது. மேற்படி காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவில் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம் பற்றியும், அதன் சிற்பத்தேர்த்திருப்பணி பற்றியும், பொதுவான சைவ சமய ஆலயங்களின் பண்புகள், திருப்பணிகள் பற்றியும் சைவசமயம் பற்றியும் எழுதப்பெற்ற பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பாக இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது.

**7136**

**கேது பகவான் வழிபட்ட திருக்கேதீஸ்வரம்.** வே.வரதசுந்தரம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
xviii, 112 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18x12.5 சமீ.

சிவனார் சிந்தனை, அழைக்கிறார் அப்பரடிகள், கேது வழிபட்ட கேடில்லாத கேதீச்சரம், வேழைமை கேளேன்மின் சம்பந்தர் அறைகூவல், தீர்த்தக் காவடியும் சிவலிங்கக் குடமுழுக்கும், சிவாலயமும் திருப்பள்ளி எழுச்சியும், அறுபத்துமூன்று நாயன்மாருக்குத் தனியான சந்நிதி, சுந்தரர் கருத்தோவியம், பாலாவியும் மாதோட்டமும், திருவாசகத்தில் திருக்கேதீஸ்வரம், திருக்கேதீஸ்வரத்தின் தொன்மையும் வரலாறும், திருக்கேதீஸ்வரத்தில் பன்னிரு திருமுறைகள், கருவறையில் சிவலிங்கம் அரன் அமரும் ஆவிடையார், பெரியபுரணத்தில் திருக்கேதீஸ்வரம், நாவலரும் பண்டிதமணியும் போற்றிய கேதீச்சரம், திருக்கேதீஸ்வர புதைபொருள் ஆராய்ச்சி, திருக்கேதீஸ்வரத்தில் தேர்த்திருவிழா, திருக்கேதீஸ்வரத்தில் குடைச் சுவாமிகள், சந்தான குரவர் வழிபாடு, அகத்திய முனிவரின் திருக்கேதீஸ்வர யாத்திரை, திருக்கேதீஸ்வரத்தில் சபாரத்தினம் சுவாமிகள், திருக்கேதீஸ்வரத்தில் பஞ்சலிங்க வழிபாடு, திருக்கேதீஸ்வரத்தில் தமிழிலும் அர்ச்சனை, திருக்கேதீஸ்வரத்தில் ஆனந்த நடனம் ஆகிய 24 தலைப்புகளில் திருக்கேதீஸ்வரத்தின் வரலாற்றுப் பெருமையை கட்டுரைகளின் வடிவில் இந்நூலில் வழங்கியுள்ளார்.

### 7137

**திருக்கேதீச்சர மான்மியம் 5: நித்திய நைமித்திய காண்டம்.** மு.கந்தையா. மன்னார்: திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை, சிவானந்த குருகுலம், திருக்கேதீச்சரம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2006. (கொழும்பு 6: டெக்னோ பிறின்டர்ஸ், 55 டொக்டர் ஈ.ஏ.கூரே மாவத்தை).
vi, 170 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ.

திருக்கேதீச்சர மான்மியம் ஆறு காண்டங்களாக எழுதப்பட்டது. புராதன காண்டம், பொற்பொளிர் காண்டம் என்பவை திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபையால் சிவானந்த குருகுல வெளியீடாக வெளிவந்தன. கரந்துரை காண்டம், நித்திய நைமித்திய காண்டம் இரண்டம் திருப்பணிச்சபையால் வெளியிடப்பட்டன. மற்றைய இரு காண்டங்கள் பற்றிய தகவல் இல்லை. நித்திய நைமித்திய காண்டம் நித்திய பூசைப் படலம், நைமித்திகப் பொது இலக்கணப் படலம், மாச நட்சத்ரோற்சவப் படலம், திருவெம்பாவை மகிமைப் படலம், ஆவணி மூல விழாப் படலம், கதிர்காமத் திருவிழாப் படலம், திருநாவுக்கரசு நாயனார் திருவுலாவெழுச்சிப் படலம், பாதயாத்திரைப்படலம், திருஞானசம்பந்தர் திருவுலாவெழுச்சிப் படலம், பாதாளகங்கை பாலாவிக்குதவு படலம், ஸ்மார்த்த நிராகரணப்படலம், சிவராத்திரி விழாப்படலம், பாலாவி காண் படலம், ஆகிய 13 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37851).

### 7138

**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மான்மியம்.** சுவாமிநாதன் தர்மசீலன் (பதிப்பாசிரியர்). மானிப்பாய்: சுவாமிநாதன் தர்மசீலன், 3வது பதிப்பு, 1995, 1வது பதிப்பு, 1925, 2வது பதிப்பு, 1970. (கொழும்பு: வே.திருநீலகண்டன், லட்சுமி அச்சகம்).
(6), 50 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 50., அளவு: 22x14 சமீ.

1925இல் எழுதப்பட்ட இவ்வாலய மான்மியம் 1970இல் மீள்பதிப்பாக வெளியிடப்பட்டிருந்தது. 1995இல் மீளப்பதிப்பிக்கப்பட்டுள்ள இந்நூலில் 1970இல் எழுதப்பட்ட முகவுரை, சிறப்புரை ஆகியவற்றுடன் 1995இல் எழுதிய இதய வாசல், சிறப்புரைகள் ஆகியனவும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆலய வரலாற்றைக்கூறும் இந்நூலின் பிரதான அத்தியாயங்களாக மகான் அடக்கம், போர்த்துக்கேயர் காலம், ஆலய உற்பத்தி, திருப்பணி வேலைகள், கோவிற் பூசகரும் தருமகர்த்தாக்களும், விநாயகர் சீர்பரவல், வாழ்த்துக் கவி, விநாயகர் கும்மி, வினைகளை வேரோடறுக்கும் விநாயகப் பெருமான், நூற்பயன் ஆகிய 10 அத்தியாயங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 479737).

### 7139

**யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயச் சித்திரத் தேர்த் திருமலர்.** மலர் வெளியீட்டுக்குழு. யாழ்ப்பாணம்: ஆலய பரிபாலன, திருப்பணிச் சபைகள், ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயம், நாயன்மார்கட்டு, 1வது பதிப்பு, ஜுலை 2006. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).
vi, 90 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 29.5x21 சமீ.

27.7.2006 அன்று சித்திரத்தேர்த் திருவிழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்புமலர் இது. அருளாசிச் செய்திகள், வாழ்த்துரைகள், ஆலயத் திருப்பணிகளும் நன்றியும், ஸ்ரீஇராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் வழிபாட்டுக் கவிதைகள், கட்டுரைகள், ஆலய பரிபாலன சபையினர் விபரம் ஆகிய தலைப்புகளின்கீழ் இம்மலர் அழகுறத் தொகுக்கப்பட்டுள்ளது. ஈழத்தில் தாய்த்தெய்வ வழிபாட்டின் தொன்மை (பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்), அன்னை வழிபாடு (திருமதி நாச்சியார் செல்வநாயகம்), சக்தி வழிபாடு (சொ.தர்மகுலசிங்கம்), ஈழத்து அம்மன் ஆலயங்கள்-ஒரு வரலாற்றுப் பார்வை (பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா), ஆலயப் பண்பாட்டில் மகோற்சவம் (பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்), தமிழ் இலக்கியத்தில் தேர் (பேராசிரியர் அ.சண்முகதாஸ்), இரதோற்சவத்தின் சிறப்பு (பிரம்மஸ்ரீ இ.சுப்பிரமணியக் குருக்கள்), சரீரத்தின் வடிவமே சித்திரத்தேராகும் (செ.பத்மநாதன்), தேரோட்டம் வாழ்வின் நீரோட்டம் (சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக் குருக்கள்), அன்னை பாடல்கள் (கவிஞர் இ.குகதாசன், கவிமாமணி மா.த.ந.வீரமணி ஐயர்), அன்னை வழிபாடு (கலாநிதி பொ.இரகுபதி) ஆகிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 160977).

### 7140

**வரலாற்றுப் பெருமைமிக்க மாவைக் கந்தன் ஆலயம் திருத்தல வரலாறு.** கா.சிவபாலன். மாவிட்டபுரம்: மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள், மாவை ஆதீனம், 1வது பதிப்பு, ஆடி 2010. (கொழும்பு 11: அனுஷ் பிரின்டர்ஸ்).
xvi, 158 பக்கம், தகடுகள், விலை: ரூபா 250., அளவு: 21x14.5 சமீ.

இந்நூல் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் வரலாற்றைப் பல்வேறு ஆவணங்களின் வழியாகப் பதிவுசெய்கின்றது. பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதிய கோவில் பற்றிய குறிப்புடன், மாவைக் கந்தசுவாமியார் ஆலய கட்டிய இறுதி வாசகங்கள், கந்தபுராணக் கவிமலர்கள், மாவிட்டபுரக் காலம், மாவிட்டபுரத் தல எல்லைகள், வானளாவும் மேற்குவாயில் இராஜகோபுரம், கோவிற்கடவை, மாவை ஆதீன நிர்வாக பரிபாலனம், மாவை ஆதீனத்தின் ஆறாவது ஆதீனகர்த்தா (பிரம்மஸ்ரீ சு.துரைச்சாமிக் குருக்கள்), சிதம்பரதீட்சிதர்கள், மாவை ஆதீன வம்சாவளி ஒரு பார்வை, ஏழாவது ஆதீனகர்த்தா (மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்), கந்தபுராண ஏடு, மஹோற்சவகால விழாக்கள், மஹோற்சவகால வாகன ஒழுங்குகள், திருமடங்கள், காணிநிலச் சொத்துகள், மாவைக்கந்தன்மீது பாமாலை பாடிய புலவர்கள், மாவை முருகன் பற்றிய செய்திகள் இடம்பெறும் நூல்கள், மாவைக்கந்தன் வரலாறு கூறும் நூல்கள், மாவை ஆதீன வெளியீடுகள், மாவைப்பதியில் வாழ்ந்த தமிழறிஞர்கள், முருக பக்திகொண்ட அறிஞர்கள், மாவிட்டபுரத் திருத்தலமும் அரசியல் தலைவர்களும், மாவை ஆதீனமும் பண்டிதமணியும், மாவை ஆதீனமும் சிவத்தமிழ்ச்செல்வியும், மகேஸ்வர பூசை தொண்டர்சபை, மாவிட்டபுரக் காங்கேயன் மூர்த்தி (நா.கதிரவேற்பிள்ளை எழுதியது), கோவிற்கடவை வெள்ளிவேலவன், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்துடன் மாவிட்டபுரத் தொடர்பு, மாவை ஆதீன மகாமண்டப கருங்கல் திருப்பணி, சு.சடேசபிள்ளையின் மாவைமுருகன் பிள்ளைத்தமிழ், தி.கி.சீதாராம சாஸ்திரிகளின் மாவை சுப்பிரமணியக்கடவுள் பதிகம், மாவை யமக அந்தாதி, மாவை தண்டபாணி பதிகம், மாவை முருகன் தலவரலாறு, கந்தரலங்கார விரிவுரைச் சிறப்பு, கந்தர் மாவை வெண்பா, வாழ்வுபெற்ற வல்லி, கோவிற்கடவை, மாருதப்புரவீகவல்லி, மாவை முருகன் கவிப்பூங்கொத்து, சித்திரகவி, மாவைநகர் முருகவேள் பதிகம், மாவைக்கலிவெண்பா, மாவை சுப்பிரமணிய தோத்திர விருத்தம், ஊஞ்சற் பாக்கள், மாவை சுப்பிரமணியர் தோத்திரம் ஆகிய பல்வேறு தலைப்புகளில் மாவிட்டபுரம் சார்ந்ததும், அங்கு கோயில்கொண்டெழுந்த முருகன்சார்ந்ததுமான ஆக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

### 7141

**வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் (முடிப் பிள்ளையார்) ஆலயம் புனராவர்த்தனப் பிரதிஷ்டா நூதன இராஜகோபுர மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்.**

*மு.திருஞானசம்பந்தபிள்ளை (மலர் ஆசிரியர்). வேலணை: நிர்வாகக் குழு, மஹா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயம், வேலணை மேற்கு, 1வது பதிப்பு, மே 2005. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டேர்ஸ், காங்கேசன்துறை சாலை).*
*v, 138 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.*

*இம்மலர், மேற்படி ஆலயத்தின் இராஜகோபுரம் கட்டிமுடிக்கப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றவேளை 13.5.2005 அன்று வெளியிடப்பட்டது. சமயப் பெரியாரின் வாழத்துரைகள், ஆசியுரைகளுடன் இந்துசமயக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 162413).*

### 7142

***வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார் ஆலயம்) மகாகும்பாபிஷேக சிறப்புமலர்.*** *செ.பாலச்சந்திரன் (மலராசிரியர்). வேலணை: ஆலய பரிபாலனசபை, வேலணை மேற்கு, 1வது பதிப்பு, மே 1990. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*(6), 115 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.*

*மேற்படி ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் 11.4.1990இலும், மண்டலாபிஷேகம் 25.5.1990இலும் நடைபெற்ற வேளையில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர். மலர் ஆசிரியர் குழுவில் செ.பாலச்சந்திரன், மு.திருஞானசம்பந்தபிள்ளை, பொன் அருணகிரிநாதன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன், மூன்று பிரிவுகளில் கட்டுரைகளும் இடம்பெறுகின்றன. முதலாவது பிரிவில், மேற்படி கோவில் பற்றியும் அது சார்ந்த நிறுவனங்கள் பற்றியுமான வரலாற்றுப் பதிவுகளாக ஆறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பிரிவில் பெரியபுலம் மகா கணபதி பேரில் பாடப்பெற்ற பதிகங்கள், திருஊஞ்சல், திருஅகவல் போன்ற பக்தி இலக்கியங்கள் எட்டு இடம்பெறுகின்றன. மூன்றாம் பிரிவில் கணபதி வழிபாட்டு நெறி (சந்திரலேகா வாமதேவா), விநாயக தத்துவம் (வி.சிவசாமி), கும்பாபிஷேக முறைகளும் விளக்கங்களும் (ஐ.கைவலாசநாதக் குருக்கள்), வேதங்கள் வழிவந்த இந்துப் பண்பாட்டு மரபுகள் (ப.கோபாலகிருஷ்ணன்), கிறிஸ்து சகாப்தத்திற்கு முன் ஈழத்தில் வாழ்ந்த பிராமண குலங்கள் பற்றிய இலக்கியச் சான்றுகள் (சி.க.சிற்றம்பலம்), இடஞ்சார்பு அபிவிருத்தித் திருமுறைகள் (பொ.பாலசுந்தரம்பிள்ளை), பண்பாட்டுத் தரத்துக்கு கோயில்களின் பங்களிப்பு (இ.முருகையன்), நீர்வளத்தைப் பேணுவோம் (செ.பாலச்சந்திரன்), திருப்பணி வளர்ச்சிக் கண்ணோட்டம் (பொ.கேதாரநாதன்) ஆகிய ஒன்பது ஆய்வுசார் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக சுவடிக் காப்பகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் தரப்படவில்லை).*

***மேலும் பார்க்க: 7955***

## 297 இஸ்லாம்

### 7143

***அல் இபாதத்.*** A.R.M. *றூஹுல் ஹக் (மூலம்),* A.R.M. *மஹ்ரூப்,* M.*அப்துல் வாஹிது (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு:* The Pacific Press*).*
*48 பக்கம், அரபு எழுத்தணி, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இதில் இபாதத் பற்றிய விளக்கம், இபாதத்தின் வகை, கலிமா, தொழுகை, ஸக்காத், நோன்பு, அல்-ஹஜ் ஆகிய தலைப்புகளில் அல் இபாதத் பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது.*

### 7144

**அல் ஈமான்.** A.R.M. றூஹுல் ஹக் (மூலம்), M.H.M.நாளிர், M.J.M. றியாழ், A.R.M. மஹ்ரூப், A.M.M. இஸ்மாயில், M.அப்துல் வாஹிது (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press).
32 பக்கம், அரபு எழுத்தணி, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இந்நூலில் ஈமான்- அறிமுகம், அல்லாஹ்வை நம்புதல், மலக்குகளை நம்புதல், வேதங்களும் தூதர்களும், கியாமத்து நாளும் தக்தீரும் ஆகிய விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

### 7145
**அன்றாட வாழ்வில் ஆன்மீகநெறி.** ஹாபிஸ் ஏ.எம்.பஸ்லுல் ரஹ்மான். மருதானை: இலங்கை முஸ்லிம் வாலிபர் ஒன்றியம், 149 மாளிகாவத்தை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2006. (சென்னை: ஏ.எம்.பிரிண்டிங் ஏஜென்சி).
128 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இஸ்லாம் என்பது ஒரு வாழ்க்கைத் திட்டமாகும். அன்றாட வாழ்வில் ஒருவர் எதிர்நோக்கும் விடயங்களை இஸ்லாமிய ஆன்மீக அடிப்படையில் இந்நூல் விளக்க முற்படுகின்றது.

### 7146
**ஆன்மீகப் பகை தார்மீகமானதா?** எஸ்.ஹுசைன் மௌலானா. கொழும்பு 03: மிலேனியம் கல்வி ஸ்தாபனம், 20/15B, பத்தாவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2009. (அச்சகவிபரம் தரப்படவில்லை).
88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 14.5x10.5 சமீ.

ஆன்மீகம் என்றால் என்ன, சீர்திருத்தவாதிகள் என்போர் யார்? இறைவனின் திருப்பொருத்தத்தை எவ்வாறு அடையலாம் என்பன போன்ற வினாக்களை முன்வைத்து அவற்றுக்கு விடையளிப்பதாக இலகு தமிழில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இரண்டு பாகங்களில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் முதற் பாகம் அல்ஹஸனியா மதுராப்புர அஹதியாவில் ஆற்றிய உரையின் எழுத்து வடிவமாகும். இரண்டாம் பாகம் ஷியாயிஸம்- அதன் கொள்கைகளும் உட்பிரிவுகளும் என்ற விடயம் தொடர்பான ஆசிரியரின் கண்ணோட்டமாகும்.

### 7147
**இஸ்லாத்தின் மூலாதாரங்கள்.** A.R.M. றூஹுல் ஹக் (மூலம்), M.J.M. றியாழ், M.H.M.நாளிர், A.R.M. மஹ்ரூப், A.M.M. இஸ்மாயில், M.அப்துல் வாஹிது, K.A.C.D.குணத்திலக்க (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press).
40 பக்கம், அரபு எழுத்தணி, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். ஷரீ அத் பற்றிய விளக்கம், இஸ்லாத்தின் மூலாதாரங்கள், அல்குர்-ஆன்- அருளப்படுதலும், தொகுக்கப்படுதலும், அஸ்ஸுன்னா- தோற்றமும் தொகுப்பும், இஜ்திஹாத்- இஜ்மாஉ, கியாஸ், பிக்ஹின் தோற்றமும் வளர்ச்சியும் ஆகிய விடயப் பரப்பில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7148
**இஸ்லாம் ஓர் அறிமுகம்.** A.R.M. றூஹுல் ஹக் (மூலம்), M.J.M. றியாழ், M.H.M.நாளிர், A.M.M. இஸ்மாயில், M.N.மிஹ்றாஜ், M.அப்துல் வாஹிது, K.A.C.D.குணத்திலக்க (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: United Merchants Limited).
28 பக்கம், அரபு எழுத்தணி, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான இஸ்லாமிய பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இஸ்லாம் என்றால் என்ன, மனிதன் பற்றிய கோட்பாடு, வாழ்க்கை பற்றிய கோட்பாடு, அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்புகள், மனிதனின் சமூகத் தொடர்பு ஆகிய தலைப்புகளில் இஸ்லாம் பற்றிய அறிமுகம் இடம்பெறுகின்றது.*

***7149***

***இஸ்லாம் - சமூக ஒழுக்கங்கள்.*** A.R.M. *றூஹுல் ஹக் (மூலம்),* M.H.M.*நாளிர்,* M.*அப்துல் வாஹிது (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு:* Pacific Press*).*
*24 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான இஸ்லாமிய கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். மனிதனின் அத்தியாவசியத் தேவைகள், குடும்பம்: ஆக்கமும் பணியும், குடும்பம்: சமுதாயத்தின் அங்கம் ஆகிய மூன்று பகுதிகளில் இஸ்லாமிய சமூக ஒழுக்கங்கள் பற்றி விளக்கப்படுகின்றது.*

***7150***

***இஸ்லாம் வரலாறு.*** A.R.M. *றூஹுல் ஹக் (மூலம்),* M.J.M. *றியாழ்,* M.*அப்துல் வாஹிது (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு:* The Pacific Press*).*
*48 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம், நபிகளாரின் பிரதிநிதிகள் (கலீபாக்கள்), உமவிய்ய, அப்பாஸிய்ய ஆட்சி, இலங்கையும் இஸ்லாமும் அரேபியரும், முஸ்லிம்கள்- நாகரீகத்திலும், அறிவுத்துறைகளிலும் ஆகிய ஐந்து பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***7151***

***ஞான ஒளிமாலை: ஞானப் பாக்கள்.*** *ஷேக் முகையுதீன் குருபாவா. கொழும்பு: ஷேக் முகையுதீன் குருபாவா, 3வது பதிப்பு, 1970, 1வது பதிப்பு, 1946, 2வது பதிப்பு, 1949. (யாழ்ப்பாணம்: கொம்மேர்ஷியல் பிரெஸ் அன் ஸ்ரோர்ஸ், 28-30 பிரதான வீதி).*
*(4), 168 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14 சமீ.*

*இஸ்லாமிய ஞானப்பாக்களின் தொகுப்பு. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23800).*

***7152***

***தொழுவது எவ்வாறு.*** *கமால் அலி அல் முன்தஸர் (அரபு மூலம்), மௌலவி எம்.ஐ.அப்துர்ரஸ்ஸாக் (தமிழாக்கம்),* A.R.M.*மஹ்ரூப் (பதிப்பாசிரியர்). கொழும்பு 7: உலக இஸ்லாமிய அழைப்பு இயக்க கொழும்புக் கிளை, இல. 4, கேம்பிரிட்ஜ் பிளேஸ், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2006. (தெகிவளை:* Crescent Publications, 156, Hospital Road)
*68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17*x*12 சமீ.*

*த.்.வீமுஸ்ஸலாத் - (தொழுகை விபரம்) என்ற தலைப்பில் அரபுமொழியில் எழுதப்பட்ட நூலின் தமிழாக்கம் இதுவாகும். இஸ்லாமிய மத வழக்கப்படி தொழுகைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்ற அடிப்படை விதிமுறைகளை இந்நூல் விளக்குகின்றது. முஸ்லிமின் நம்பிக்கை, இஸ்லாம் என்றால் என்ன, இஸ்லாத்தில் நுழைதல், முஹம்மத் (ஸல்) அவர்கள், இஸ்லாத்தின் ருக்ன்கள், வுழூச் செய்தல், அத்தயம்மும், தொழுகை, தொழும் முறை, சிறிய*

*சூறாக்கள் சில ஆகிய பத்துத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 617981).*

***7153***

***நட்புக்கு இலக்கணம்.*** *எம்.ஏ.ஹாபிழ் ஸலபி. பரகஹாதெனிய: ஜம்மியதுல் அன்சாரிஸ் சுன்னதுல் முஹம்மதியா, வேஉட, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2000. (வே உட: தாருத் தௌஹீத் கொம்பியூட்டர் சென்டர்).*

*72 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 17x11.5 சமீ.*

*இந்நூலாசிரியர், இஸ்லாம் கூறுவதென்ன, தியாகப் பயணம், வணக்கத்துக்குரியவர்கள், நிறைவுற்ற இறைதூது, இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் ஆபாசம், பொறுமையும் துன்பமும் ஆகிய நூல்களை ஏற்கெனவே எழுதி வெளியிட்டவர். இந்நூல் இவரது ஏழாவது நூலாகும். இருபது தலைப்புகளில் மனித சமுதாயத்தில் நட்பின் முக்கியத்துவத்தை விளக்குவதாக இந்நூல் அமைகின்றது. இவரது படைப்புகள் இஸ்லாமியக் கருத்துக்களின் அடிப்படையில் எழுதப்பட்டிருந்தாலும்கூட தமிழ் பேசும் அனைத்து மக்களும் எளிதாக விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் அரபுச் சொற்களின் பாவனையைக் குறைத்து பொதுமைப்படுத்தி எழுதப்பட்டுள்ளன.*

***7154***

***நடைமுறைக்கேற்ற இஸ்லாம் பாகம் 2.*** *முஹம்மத் அக்ரம். கொழும்பு 9: ஹிஸ்புல் இஸ்லாம் ட்ரஸ்ட், இஸ்லாமிய புத்தக இல்லம், 77 தெமட்டகொட வீதி, மருதானை, 4வது பதிப்பு, ஜுன் 2006, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 1999, 2வது பதிப்பு, ஒகஸ்ட் 2001, 3வது பதிப்பு, ஜுன் 2004 (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).*

x, *298 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *955-8591-02-5.*

*பதினைந்து அத்தியாயங்கள் கொண்ட இத்தொகுப்பில் முன்னைய இமாம்களின் கருத்துக்களை கைவிடாமல் நவீன அறிஞர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி நடைமுறையில் இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றும் வழிமுறைகள் பற்றி விளக்கப்படுகின்றது. ஆசிரியர் தான் கூறவந்த விடயங்களை அல்குர் ஆன், சுன்னா ஆதாரங்களுக்கூடாக மட்டுமன்றி வரலாற்றுக்கூடாகவும் சமூகவியல்சார்ந்த முக்கியத்துவங்களுக்கூடாகவும் வலியுறுத்த முனைகின்றார். நூலாசிரியர் அக்ரம், ஜாமிஆ நளீமியாவில் கல்வி கற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று ஆசிரியராகப் பணியாற்றுபவர். 2003இல் வெளிவந்த* ***நடைமுறைக்கேற்ற இஸ்லாம் பாகம் 1*** *இற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4146. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 603906).*

***7155***

***மஸ்ஜிதுகள்.*** A.R.M. *றூஹுல் ஹக் (மூலம்),* M.J.M. *றியாழ்,* A.R.M. *மஹ்ரூப்,* M.H.M.*நாளிர்,* M.*அப்துல் வாஹிது (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு:* The Pacific Press*).*

*32 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். மஸ்ஜித்-அதன் உயர்நிலை, புனித மஸ்ஜிதுகள், மஸ்ஜிதின் பணி ஆகிய மூன்று தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இஸ்லாமிய வாழ்க்கைமுறையின் உந்துசக்தியாக அல்லது முஸ்லிம் சமுதாயத்தை இயக்கிய மத்திய நிலையமாக அமைந்த மஸ்ஜிதுகளின் தோற்றம், வரலாறு, இயக்கம் என்பன பற்றி இந்நூல் விபரிக்கின்றது.*

***7156***

***மார்க்க, மருத்துவ ஒளியில் புகையும் புகைத்தலும்: ஒரு தீர்ப்பு.*** *அஷ்-ஷெய்க் ஜெமீல் ஸீனோ (அரபு மூலம்), செய்னுதீன் எஸ்.பரீத் (தமிழாக்கம்). தெகிவளை:* Al-Qalam, *32 A, 1/1, பாத்தியா மாவத்தை, 1வது பதிப்பு, 1995. (*Dehiwala: Al-Qalam, 32A 1/1 Bhathiya Mawathe).

*74 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 22x14.5 சமீ.*

Hukmud Dukhkhan Waththadkheen *என்ற தலைப்பில் அரபு மொழியில் அஷ்ஷெய்க் முஹம்மது ஜெமீல் ஸீனோ (பேராசிரியர், தாருல் ஹதீஸ் அல்-கைரியா, மக்கா அல் முகர்ரமா) அவர்கள் எழுதிய நூலின் தமிழ்வடிவத்தை அகத்தி முறிப்பான் (இயற்பெயர்: செய்னுதீன் எஸ்.பரித்) எழுதியுள்ளார். புகைத்தல் என்பது விலக்கப்பட்டதா? (ஹறாமா) அல்லது அனுமதிக்கப்பட்டதா (ஹலாலா) அல்லது வெறுப்புக்குரியதா? (மக்ரூஹா) என்ற கேள்விகளுக்கு இந்நூல் இஸ்லாமிய வழியில் பதில்தருகின்றது.*

***7157***

***முஸ்லிம்கள் ஐக்கியப்படுவார்களா?*** *யூசு∴ப் அல்கர்ளாவி (மூலம்), அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம்.பளீல் (தமிழாக்கம்). பேருவளை:* Al-Qalam, *26/2, யூசுப் அவென்யு, 2வது பதிப்பு, ஒக்டோபர் 2003, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (*Colombo 9: Q.G.Print, 103 Dematagoda Road).
viii, *96 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 18.5x13.5 சமீ.*

*இஸ்லாமிய கல்வி, விஞ்ஞான, கலாச்சாரத்துக்கான நிறுவனம் (*ISESCO*) இஸ்லாமிய சமூகத்தில் காணப்படும் கொள்கைசார் போக்குகளுக்கிடையே ஒருமைப்பாடு காணல் என்னும் கருப்பொருளில் ஏற்பாடு செய்திருந்த ஆய்வரங்கில் அறிஞர் யூசுப் அல்கர்ளாவி அவர்கள் வாசித்த ஆய்வுக் கட்டுரை இதுவாகும். இஸ்லாமிய அகீதா, பிக்ஹ், த∴வா ஆகிய மூன்று துறைகளையும் மையமாக வைத்துத் தற்கால முஸ்லிம் சமூகத்தில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன. இதனைப் பெரிதுபடுத்தி ஒருசாரார் மற்றொருசாராரை ஒதுக்குவதையும், வழிகெட்டவர்கள் (காபிர்கள்) என்று பத்வா வழங்கிப் பெரும் சமூகச் சீரழிவை உண்டாக்குவதையும் காணமுடிகின்றது. இந்நிலையில் இக்கட்டுரை முஸ்லிம்களின் ஐக்கியத்தைக் கருத்திற்கொண்டு விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 580297).*

***7158***

***முஸ்லிமாக வாழ்வது எவ்வாறு?*** *உலக இஸ்லாமிய அழைப்பு இயக்கம் (லிபிய மூலம்), அஷ்ஷெய்க் ரஊப் சைன் (தமிழாக்கம்),* A.R.M.*மஹ்ரூப் (பதிப்பாசிரியர்). கொழும்பு 7: உலக இஸ்லாமிய அழைப்ப இயக்க கொழும்புக் கிளை, இல.4, கேம்பிரிட்ஜ் பிளேஸ், 1வது பதிப்பு, 2006. (தெகிவளை: கிரசென்ட் பப்ளிக்கேஷன்ஸ், 156, ஆஸ்பத்திரி வீதி).*
*38 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x12 சமீ.*

*உலக இஸ்லாமிய அழைப்பு இயக்கம் என்பது அரச சார்பற்ற சர்வதேச நிறுவனமாகும். 1972இல் லிபியத் தலைநகர் திரிப்பொலியில் ஸ்தாபிக்கப்பட்டது. இஸ்லாமிய போதனைகளான அன்பு, சமாதானம், ஒத்துழைப்பு, நீதி, சுதந்திரம் போன்ற பண்புகளை மக்கள் மத்தியில் உருவாக்குவதற்காக இவ்வமைப்பு உழைக்கின்றது. சமூகங்களுக்கிடையில் சகிப்புத்தன்மையுடன் கூடிய நல்லுறவினை வளர்த்தெடுக்கவும் இது உதவுகின்றது. இலங்கை முஸ்லிம் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் 1989இல் கொழும்பில் இதன் கிளை அலுவலகம் திறக்கப்பட்டது. அறபு மொழி வளர்ச்சிக்கு உதவுவது, புலமைப்பரிசில்கள் வழங்குவது, அநர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உதவுவது என்பன இவ்வமைப்பின் மேலதிக பணிகளாயுள்ளன. இந்நூல் இலங்கையில் வாழும் முஸ்லிம் சிறார்களுக்கு தொழுகை பற்றிய விடயங்களை இலகுவாக விளக்கும் வகையில் அமைந்துள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 617983).*

***7159***

**வரலாற்றுப் பார்வையில் இலங்கை முஸ்லிம்களும், மஸ்ஜிதுகளும்.** எம்.டி.எம்.றிஸ்வி.
*முறுத்தகஹமுல: வர்தா பதிப்பகம், 85*C*, பிட்டுனுகம, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (முறுத்தகஹமுல: வர்தா பதிப்பகம்).*
*136 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *955-98504-0-7.*

*இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, இலங்கை முஸ்லிம்களும் குடிப்பரம்பலும், வரலாற்றுப் பார்வையில் இலங்கை மஸ்ஜிதுகள், மஸ்ஜித் பற்றிய இஸ்லாமிய நோக்கும், இலங்கையில் மஸ்ஜித் சீரமைப்பும், இலங்கை மஸ்ஜித்களின் வகைகளும், பெயர்களும் அதன் வருமான வழிகளும் ஆகிய ஐந்து தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலின் பிரதான விடயமான வரலாற்றுப் பார்வையில் இலங்கை மஸ்ஜிதுகள் என்ற இயலில் தென்மாகாண பேருவளை, வெலிகம பிரதேசத்திலுள்ள 13 மஸ்ஜிதுகள் பற்றியும், மேல் மாகாண கொழும்புப் பிரதேசத்தின் 3 மஸ்ஜிதுகள் பற்றியும், வடமேல் மாகாணத்தின் புத்தளம் முஹியுத்தீன் பெரிய ஜும் ஆப் பள்ளிவாசல் பற்றியும், மத்திய மாகாண கண்டிப் பிரதேசத்திலுள்ள 6 மஸ்ஜிதுகள் பற்றியும், கிழக்கு மாகாண காத்தான்குடி, ஏறாவூர், வாழைச் சேனை, ஓட்டமாவடி, மீரா ஓடை, பிரதேசத்தின் 8 மஸ்ஜிதுகள் பற்றியும், வடமத்திய மாகாண பொலந்நறுவைப் பிரதேசத்தின் 2 மஸ்ஜிதுகள் பற்றியும் விரிவான வரலாற்றுத் தகவல்கள் தரப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரபு, இஸ்லாமிய நாகரிகத்துறையின் விரிவுரையாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 572001).*

மேலும் பார்க்க: ***7205, 7389, 7490, 7507, 7525, 7617***

## *300 சமூக விஞ்ஞானங்கள்*

### *301 சமூகவியல்*

***7160***

***இலங்கை -இந்திய மானிடவியல்: சமயம், சமூகம் பற்றிய ஆய்வுகள்.*** *என்.சண்முகலிங்கன், பக்தவத்சல பாரதி. சிதம்பரம் 07: மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (சென்னை: மணிவாசகர் ஆப்செட் பிரின்டர்ஸ்).*
*(6), 160 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.*

*இந்நூல் இந்திய இலங்கை நாடுகளின் பண்பாடுகளுக்கிடையில் வரலாற்றுரீதியான ஒப்புமைகளை மானிடவியல் தளத்தில் நின்று மிக நுட்பமாக ஆராய்ந்துள்ளது. இத்தகு ஒப்புமைசார்ந்த ஆய்வுகளைக்கொண்ட இந்நூல் இவ்விரு நாடுகளைச் சேர்ந்த தமிழர் பண்பாட்டின் சிறப்பியல்புகளை அறிய உதவுகின்றது. சமயம்-சமூகம் ஆகிய இரு பிரிவுகளில் எழுதப்பட்டிருக்கும் இந்நூலில் சமயம் என்ற பகுதியில் கதிர்காம முருகன்: ஒரு சமூக-மானிடவியல் தரிசனம், சமூக-பண்பாட்டு மாற்றங்களிடையே கண்ணகியின் அடையாளம், யாழ்ப்பாணத்தில் அண்ணமார் வழிபாடு, அறிவும் உணர்வும் அரசியலும்: பௌத்தம் துரோகம் செய்தது? நூல் தடை விவகாரம்- ஒரு மீளாய்வு, பாகம்பிரியாள், கடவுளரெல்லாம் கடற்கரையில் ஆகிய 6 கட்டுரைகளும், சமூகம் என்ற பகுதியில் சமூக-மானிடவியல் புலமாகக் கட்டிடக்கலை, இந்தியக் கிராமங்களின் சமூகவெளி, நாட்டார் வாழ்வில் நாடோடிகள் மருத்துவம், சமகாலத் தமிழ்ச் சமூகம் ஆகிய 4 கட்டுரைகளும் இடம்பெறுகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 596847).*

***7161***

***இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்.*** *க.சண்முகலிங்கம். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).*
xvi *, 140 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *978-955-659-274-0.*

*இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும் என்னும் பொதுத் தலைப்பில் 12 கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. இலங்கையின் சிங்கள, தமிழ்ச் சமூகங்களின் சாதிக்கட்டமைப்பு பற்றி சமூகவியல், மானிடவியல் அடிப்படையில் விரிவாக எடுத்துரைக்கிறது. வெவ்வேறு சமூகங்களின் உட்புறத்தையும், அவற்றின் முரண்பட்ட உள்ளடுக்குகளையும் நூலாசிரியர் வெளிச்சத்திற்குக் கொண்டுவருகிறார். பிறைஸ் றயான், நூர் யல்மன், மைக்கல் பாங்க்ஸ், மக் ஜில்வ்ரே, ஜனிஸ் ஜிஜின்ஸ், ஒட்வார் ஹொலப் ஆகிய மேற்குநாட்டு ஆய்வாளர்களாலும், மைக்கல் ரொபர்ட்ஸ்,*

ஏ.ஜே.வில்சன், நியுட்டன் குணசிங்க ஆகிய இலங்கையின் அறிஞர்களாலும் எழுதப்பட்ட ஆய்வு நூல்களிலிருந்தும் கட்டுரைகளில் இருந்தும்பெற்ற கருத்துக்களைத் தொகுத்தும் சுருக்கியும் வழங்கியுள்ளார்.

### 7162

**சமாதானமும் சுதந்திரக் காற்றும்.** பளையூர் ஏ.பீ.ஜோர்ஜ். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600014: முருகன் ஆப்செட்).
iv, 216 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 18x12.5 சமீ.

நூலாசிரியர், இலங்கை வட மாகாணத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் அமைந்துள்ள பளையில் 1951 ஜுலை 20ம் திகதி பிறந்தவர். புலோப்பளை றோ.க. தமிழ்ப் பாடசாலை, பளை மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். கூட்டுறவுத்துறையில் மாவட்ட நிறுவனங்களில் தலைமைப் பதவி வகித்தவர். இக்கட்டான போர்க்கால கட்டத்தில் பிரஜைகள் குழுவிலும் தலைமைப் பொறுப்பினை வகித்தவர். 16 வயதில் எழுத்துலகில் நுழைந்த இவரது படைப்புகள் சுதந்திரன், வீரகேசரி, மித்திரன், ஜோதி, சிந்தாமணி, புதிய உலகம், போன்ற பத்திரிகைகளில் இடம்பெற்றுள்ளன. காலத்தின் தேவை கருதி இவர் அவ்வப்போது எழுதிய சமூக, அரசியல் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 7163

**சமுதாய வளர்ச்சி.** H.C.A.T. ஜெயசேகரா, R.R.ஜயவர்த்தன, சி.புலேந்திரன், Y.L.A.வஹாப், தி.கனகரத்தினம், வீ.இராசையா, S.கிருஷ்ணபிள்ளை, ஏ.சிவராஜா, சீ.கருணாதாச (செயற்குழு). கொழும்பு: தொலைக் கல்விக் கிளை, இலங்கை கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: குணரட்ன ஓப்செட் லிமிட்டெட்).
40 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான தொழில்சார் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். குடும்பம் என்னும் சமுதாயத்தில் ஏற்படும் சமுதாய வளர்ச்சி, சமுதாய வளர்ச்சியும் பிள்ளையின் பரந்த சமுதாயச் செயல்களும், பரந்த சமுதாயத்திற் பிள்ளை பெறும் சமுதாய வளர்ச்சி, புதிய வாலிப வயது ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7164

**சமூகக் கல்வியும் வரலாறும் புதிய பாடத்திட்டம் 2001 தரம் 8.** நா.மயில்வாகனம். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 1வது பதிப்பு, ஜுன் 2001. (கொழும்பு 12: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
ii, 110 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

வினா-விடைகள், குறிப்புகள், பாடவிளக்கங்களை உள்ளடக்கிய நூல். 2001 புதிய பாடத்திட்டத்துக்கமைய எழுதப்பட்டது. இதில் ஞாயிற்றுத் தொகுதி, எமது அயல் ஆசிய நாடு இந்தியா, ஏனைய ஆசிய நாடுகள், அனுராதபுரக் காலத்து நிர்வாக முறை, அனுராதபுரக் காலத்து பொருளாதார நடவடிக்கைகள், பொலநறுவை இராசதானி ஆகிய ஆறு அத்தியாயங்களில் பாடப்பரப்பு விளக்கப்பட்டுள்ளது.

### 7165

**சமூகவியல் மூலக் கோட்பாடு: முதற் பகுதி.** மல்சிறி டயஸ், றமணி ஜயத்திலக்க, கே.எல்.சந்திரதிலக (சிங்கள மூலம்), ஐ.தம்பிமுத்து (தமிழாக்கம்). கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறிமதிபாயா, ஏணஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1976. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).
viii, 44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

தேசிய உயர் கல்விச் சான்றிதழ்ப் பரீட்சைக்குரியதாக வெளியிடப்பட்டுள்ள நூல். தனியாள், சமூகப்படுத்தல், தனியாளிடத்தில் சமூகத்தின் செல்வாக்கு ஆகிய மூன்று தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7166

**சமூகவியல் மூலக் கோட்பாடு: இரண்டாம் பகுதி.** சிறிபால ஹெறிக்கே, பீ.ஏ.ரெனிசன் பெரேரா, றமணி ஜயத்திலக்க, பியசீல வீரசேகர, சுகததாச றனுன்கே, எட்வின் ஆரியதாச (சிங்கள மூலம்), ஐ.தம்பிமுத்து (தமிழாக்கம்). கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறிமதிபாயா, ஏணஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1977. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).
iv, 86 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

நாட்டார் சமூகம், நிலமானிய முறைச் சமூகம், இன்றைய சமூகம், இலங்கைச் சமுதாயம் பற்றிய எண்ணக்கரு ஆகிய நான்கு இயல்களில் சமூகவியல் மூலக் கோட்பாடு- இரண்டாம் பாகம் எழுதப்பட்டுள்ளது. தேசிய உயர் கல்விச் சான்றிதழ்ப் பரீட்சைக்குரியதாக வெளியிடப்பட்டுள்ள நூல்.

### 7167

**Tamillain Barre Syndromeமும் தமிழ் சமூகத்திற்கான புதிய அரசியல் கலாசாரத்தின் அவசியமும்.** த.ஜெயபாலன். லண்டன் E11 3JX: தேசம் பதிப்பகம், Thesam International Tamil Magazine, P.O.Box 35806, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).
48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் எதிர்காலம் என்ற மேலட்டைத் தலைப்புடன் வெளியிடப்பட்டுள்ள இந்நூல், (http://thesamnet.co.uk/?p=22391) தேசம்நெற் இணையத்தளத்தில் வெளியாகிய ஒரு கட்டுரையின் நூல்வடிவமாகும். Guillain-Barre Syndrome என்பது மனித நரம்புத் தொகுதியின் முடிவுப் புள்ளிகளைத்தாக்கி படிப்படியாக மனிதனை செயலிழக்கச்செய்யும் கொடிய நோயாகும். ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தில் குறிப்பாக யாழ்ப்பாணப் புத்திஜீவிகள் மத்தியில் அவர்களது சுதந்திரமான சிந்தனைத் திறனைத் தாக்கி அவர்களைச் செயலிழக்கப்பண்ணி ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் செயல்திறனையே அழிக்கும் ஆபத்தான சமூக அரசியல் போக்கினை மேற்கண்ட நோயுடன் ஒப்பிட்டு இவ்விமர்சனக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. தமிழ்ப் புத்திஜீவிகளின் சமூக அரசியல்போக்குகளை வெளிப்படையாகவும், நேரடியாகவும், சமூக சுத்திகரிப்புச் சிந்தனையுடனும் இனம்கண்டு சாடுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

### 7168

**மதப் பண்பாட்டின் கோலங்களையும் கருத்தியலையும் கட்டவிழ்க்கும் ஒரு பால்நிலை நோக்கு.** செல்வி திருச்சந்திரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
viii, 147 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955 9261 27 4.

பெண்ணுரிமை தொடர்பில் வேண்டப்படும் இஸ்லாமிய நோக்கு (முர்ஷிதா மீராலெப்பை), பெரியபுராண வரலாற்று நவிற்சிக் காலத்தில் சைவநெறியிற் பெண்ணிலை (வை.கா.சிவப்பிரகாசம்), பெண்களின் சமூக அந்தஸ்து மீதான பௌத்த சமய தத்துவத்தின் தாக்கம்: சில யாதகக் கதைகள் தரும் அளவுகோல்கள் (விகித்தா இரங்கநாதன்), சமயச் சடங்குகளும் பெண்களும்: மட்டக்களப்பில் வழிபாட்டுப் பாரம்பரியங்களை அடிப்படையாகக்கொண்ட சில அவதானங்கள் (சித்திரலேகா மௌனகுரு), சித்தர் பார்வையில் பெண்கள் (செ.யோகராசா), தமிழ் இலக்கியத்தில் பௌத்தமதத் துறவிகளாகப் பெண்கள்: மாதவி, மணிமேகலை ஆகியோர் குறித்த சிறப்பு நோக்கு (றூபி வலன்ரீனா) ஆகிய ஆறு ஆய்வுக்கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615313).

### 7169

**வான்துளிகள்.** சீதா சந்தசீலி சமரசிங்ஹ (தொகுப்பாசிரியர்), ஆர்தர் ஜோன்ஸ் பெர்ணான்டோ, M.M.M.சுபைர் (தமிழாக்கம்), ராணி சிதம்பரநாதன், பி.சுப்பிரமணியம், செல்வராணி வேதநாயகம், M.H.M.ஹஸன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை, 1வது பதிப்பு, 2003. (வெல்லம்பிட்டி: சத்துர அச்சகம், 142, அவிசாவளை வீதி).
(16), 205 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 22x14 சமீ., ISBN: 955-20-5248-3.

தேசிய கல்வி நிறுவகத்தின் மக்கள் கல்விச் செயற்றிட்டத்தால் ஆக்கப்பட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் ஒலிபரப்பப்பட்ட மக்கள் செய்தித் தொகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உரைகள். பேசும் பால், பூவில்லை ஆனால் காயுண்டு, செயற்கரிய செயல், தவளையின் கதை, ஆசிரியப் பெருந்தகை, தும்பி, எனக்கே உரிய பிள்ளை அம்மா வயோதிபமடைந்தார், கற்கும் சுதந்திரம், தேன் கூடு, நொண்டி யானை, தவறு யாருடையது, உணவு மட்டும் போதாது என்பன போன்ற 50 பல்வேறு தலைப்புகளில் இவ்வுரைகள் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் சமூக அறிவியல் சார்ந்த தகவல்களை இலக்கிய நயத்துடன் தருகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39480).

### 7170

**விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானங்களும்: ஒரு முறையியல் நோக்கு.** M.S.M.அனஸ். கண்டி: பண்பாட்டு ஆய்வு வட்டம், பேராதனை, 1வது பதிப்பு, ஜுன் 1996. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).
iv, 131 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 21.5x14 சமீ.

விஞ்ஞானத்தின் வரலாறு (கோட்பாட்டு விஞ்ஞானம், இந்திய, சீன விஞ்ஞானங்கள், அறேபிய விஞ்ஞானம், அணு உலகம், பரிணாமவாதம்), விஞ்ஞான ஒழுக்கவியல் (சமூக நிறுவனம், சமூக உயிரியல், பிறப்பு மரபியல்), வைத்திய ஒழுக்கவியல் (சட்டக் கோவைகள், ஹிப்போக்ரட்டீஸ் பிரமாணம், நோயாளர் வைத்தியர் உறவு), சமூக விஞ்ஞானங்கள் (மனித ஆராய்ச்சி, சமூகத் தோற்றப்பாடு, சமூகவியல், பொருளியல், மானிடவியல், உளவியல்) ஆகிய நான்கு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மெய்யியல்துறை முதுநிலை விரிவுரையாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 498302).

### 7171

**விவாதம் தொடர்கிறது: கருத்துக் கண்ணோட்டம் பாகம் 3.** எஸ்.ஹுசைன் மௌலானா (தொகுப்பாசிரியர்), திக்குவல்லை ஸப்வான் (பதிப்பாசிரியர்). வெலிகமை: மிலேனியம் கல்வி ஸ்தாபனம், 163, கப்புவத்தை, டெம்பிட்டிய, 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (வெலிகம: Daafir Creativity Print).
(4), 92 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ.

கருத்து முரண்பாடே அறிவின் வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தைக் கருத்தில் இருத்தி எஸ்.ஹுசைன் மௌலானா அவர்களால் தாபிக்கப்பட்ட அமைப்பு மிலேனியம் கல்வி ஸ்தாபனமாகும். சர்வதேச அரசியல், சமூகப்பிரச்சினைகளையிட்ட கருத்துரைகளும் அதற்கான வாதப்பிரதிவாதங்களுமாக முதல் இரண்டு நூல்களை வெளியிட்ட நிலையில் மூன்றாவது தொகுதியாக கருத்துக் கண்ணோட்டம் மூன்றாவது பாகம் வெளிவருகின்றது. ஸியோனிசத்தின் நிஜமான எதிரி யார் என்ற கேள்வியுடன் இந்நூல் விரிகின்றது. இந்நூலில் பதிப்புரை (திக்குவல்லை ஸப்வான்), ஒரு கடிதம் (A.H.M. யூஸுப்), மேற்குலகமும் மத்திய கிழக்கும் (அல்ஹாஜ் A.M.முஸ்தபா), பழமையின் சிறப்பு- கவிதை (செய்யிதா ஹூஸ்னா), முஸ்லிம்கள் ஆக்கிரமிப்பாளர்கள் (ஹணா மணாளன்), வாதம் 1 (A.H.M.யூஸுப்), பிரதிவாதம் 1 (S.M.N.மர்சூம் மௌலானா), அன்றும் இன்றும் ஒன்றே (மொஹமட் உஸ்பர்), வாதம் 2 (ஜனாபா ருஸ்கா ரிப்கான்), பிரதிவாதம் 2 (எஸ்.ஹுசைன் மௌலானா), Quranic Guidance (Imam Mohamed Al-Asi) ஆகிய 11 தலைப்புகளில் இந்நூல் அடங்குகின்றது.

## 301.1 பண்பாடு

**7172**

**தென் கிழக்காசியாவில் இந்துப் பண்பாடு.** செ.கிருஷ்ணராஜா, ப.கணேசலிங்கம் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).
xii, 209 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-659-293-1.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தென்கிழக்காசிய நாடுகள்மீது இந்தியர்கள் வர்த்தக-வாணிப உறவுகளை ஏற்படுத்திப் பின்னர் தமது சமய நெறியான இந்து மத முறைகளையும் அங்கு புகுத்தி அப்பிராந்தியத்து மக்களுடன் பண்பாட்டு அடிப்படையில் ஒன்றுகலந்திருந்தனர். இதன் விளைவாக அந்நாடுகளில் இந்துப் பண்பாட்டின் செல்வாக்கு ஏற்பட்டது. தென்கிழக்காசியாவில் நிலவிய இந்துப் பண்பாட்டை இந்நூல் விரிவாகப் பதிவுசெய்கின்றது. தென்கிழக்காசியா: ஓர் அறிமுகம் (சாந்தினி அருளானந்தம்), இந்திய தென்கிழக்காசிய தொடர்புகளும் இந்துப் பண்பாடு பற்றிய சில பிரச்சினைகளும்: ஒரு வரலாற்றுக் குறிப்பு (செ.கிருஷ்ணராஜா), காலத்தினை வென்றுநிற்கும் சமயம் (எஸ்.எஸ்.சர்மா), தென்கிழக்காசியாவில் இந்துசமயம் இந்து சமயப் பரம்பல்-அன்றும் இன்றும் (ப.கணேசலிங்கம்), தென்கிழக்காசிய நாடுகளில் சைவசமயம் (ப.கணேசலிங்கம்), தென்கிழக்காசிய நாடுகளில் இந்துக் கோயில்கள் (ப.கணேசலிங்கம்), சம்பா நாட்டில் இந்துப்பண்பாடு (சி.தில்லைநாதன்), தென்-தென்கிழக்காசிய நாடுகளில் கணபதி வழிபாட்டு மரபும் தொன்மையும் (செ.கிருஷ்ணராஜா), தென்கிழக்காசிய நாடுகளில் விநாயக வழிபாடு (ப.கணேசலிங்கம்), தென்கிழக்காசியாவில் இந்து கட்டிட சிற்பக்கலை மரபுகள் (செ.கிருண்ணராஜா) ஆகிய கட்டுரைகளும், பின்னிணைப்பாக தென்கிழக்காசியாவில் பௌத்தம் (சாந்தினி அருளானந்தம்), தென்கிழக்காசியாவில் பௌத்த கட்டிடக் கலை மரபு (செ.கிருஷ்ணராஜா) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

## 302 பெண்ணியம்

**7173**

**ஆணாதிக்கமும் பெண்ணியமும்.** பி.இரயாகரன். சென்னை 600002: கீழைக்காற்று வெளியீட்டகம், 10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, 1வது பதிப்பு, 2001. (சென்னை 24: எழில் பிரிண்ட்ஸ்).
272 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 21.5x14 சமீ.

இந்த நூல், மார்க்சியம் மீது நவீன முதலாளித்துவ பெண்ணியவாதிகள் எழுப்பும் கேள்விகளுக்கும் அவதூறுகளுக்கும் பதிலளிக்கின்றது. சமுதாயத்தின் சரிபாதியான பெண்களின் மீது, குவிந்துகிடக்கும் ஒடுக்குமுறைகளுக்கும், சமுதாய அமைப்பின் முழுமைக்கும் இடையில் உள்ள உறவை-முரணை இந்நூல் சமுதாய வாழ்வின் நடத்தையிலிருந்து ஆய்ந்து அறிவிக்கின்றது. பெண்ணியம் என்பது வேறெவற்றுடனும் இணைத்துப் பேச முடியாத-பேசக்கூடாத தனிப்பிரச்சினை என்று கூறி பாலியல் நுகர்வு வேட்டையே பிரச்சினைக்குத் தீர்வாக நவீன ஆணாதிக்க ஆய்வுகள் முன்வைக்கின்றன என்று குற்றஞ்சாட்டும் இந்நூல், வர்க்க ஒடுக்குமுறையின் நீட்சியாக விளைந்த ஆணாதிக்கம் பெண்களின் மீதான அதன் குரூர ஒடுக்குமுறைகளையும் அதனை அடித்து நொறுக்குவதற்கான பெண்களின் போராட்டம் எப்படி தவிர்க்கவியலாமல் வர்க்கப்போராட்டத்துடன் இணைந்தே இருக்கின்றது என்பதையும் விளக்குவதில் இந்த நூல் மற்றைய பெண்ணியவாத ஆய்வுகளிலிருந்து வேறுபடுகின்றது. நூலாசிரியர் இரயாகரன் பிரான்சில் புலம்பெயர்ந்து வாழ்பவர்.

**7174**

**பெண்களுக்கான ஐக்கிய நாடுகள் தசாப்தம்: இலங்கையிலுள்ள பெண்களின் முன்னேற்றமும் சாதனைகளும்.** பெண்களுக்கான ஆராய்ச்சி நிலையம். கொழும்பு 7: பெண்களுக்கான ஆராய்ச்சி நிலையம், மே/பா இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம், 120/10, விஜேராம மாவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 1985. (கொழும்பு 13: ஆனந்தா அச்சகம், 82/5 ஆட்டுப்பட்டித் தெரு).
(8), 260 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

பெண்களுக்கான ஐக்கிய நாடுகள் தசாப்த நிறைவினையொட்டி (1975-1985) இலங்கையில் ஏற்பட்ட பெண்களின் முன்னேற்றம் பற்றிய மதிப்பீடாக இக்கட்டுரைத் தொகுப்பு அமைகின்றது. அபிவிருத்தித் திட்டமிடலில் பெண்களை ஒருங்கிணைத்தல் (சுவர்ணா ஜயவீர), ஐ.நா.வின் பெண்கள் தசாப்தம்: இலங்கைப் பெண்களின் சட்டபூர்வ அந்தஸ்தில் ஏற்படுத்திய தாக்கம் (சாவித்திரி குணசேகர), பெண்கள் பற்றிய ஆராய்ச்சியும் தகவலும் (ஹேமா குணத்திலக்க), பெண்களும் கல்வியும் (சுவர்ணா ஜயவீர), பெண்களின் உடல்நலமும் ஊட்ட நிலையும் (பிரியாணி சொய்சா), பெண்களும் வேலைவாய்ப்பும் (சுவர்ணா ஜயவீர), ஐக்கிய நாடுகள் மகளிர் தசாப்தத்தில் பெண்களும், தீர்மானம் எடுக்கும் பொறுப்பும் (விமலா டி சில்வா), சமுதாய நடவடிக்கைகளில் பெண்கள் பங்குபற்றுதல் (மல்சிறி டயஸ்), 1975-1985 ஆண்டுகட்கிடைப்பட்ட தசாப்தத்தில் பெண்மையுணர்வுகள் பற்றிய சில தோற்றப்பாடுகள் (குமாரி ஜயவர்த்தன), மகளிரும் தொடர்பு ஊடகங்களும் (ஹேமா குணதிலக்க) ஆகிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகளை U.L.ஜௌபர், M.R.சுப்ரமணியம், K.நடனசபாபதி, S.சந்திரசேகரம், ஜெயராணி பெர்ணாண்டோ, K.தில்லைநாதன். T.G.பாலேந்திரன், கௌரி பழநியப்பன், பூமணி குலசிங்கம் ஆகியோர் தமிழாக்கம் செய்துள்ளனர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 524571).

மேலும் பார்க்க: 7183

## 306 கலாச்சாரம்

### 7175

**இருபத்து மூன்று நூற்றாண்டுகால சிங்கள-பௌத்த கலாசாரம்.** ஆனந்த டபிள்யு. பீ. குருகே (தொகுப்பாசிரியர்). கொழும்பு: மத்திய கலாசார நிதியம், கல்வி, கலாசார விவகார அமைச்சு, 1வது பதிப்பு, 1994. (மஹரகம: தரஞ்ஜீ பிரின்டர்ஸ், 506 ஹைலெவல் வீதி, நாவின்ன).
(16), 279 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

கல்வி கலாசார சுதேச வைத்தியத்துறை அமைச்சர் W.J.M.லொக்கு பண்டார அவர்களின் முன்னுரையுடன் வெளிவந்துள்ள இந்நூலில், பூர்வீக குடியேற்றங்கள், இலங்கை இந்திய உறவுகள், மஹிந்தரின் வருகை, மஹிந்தரின் போதனை, ஸ்ரீமகாபோதி, புனித தந்தச் சின்னம், நீதி நெறிகள், சுற்றாடல், பிரித் பாராயணம், கிராமிய மதச் சடங்குகளும் நம்பிக்கையும், கல்வியின் தோற்றம், சிங்கள எழுத்துருக்களின் தோற்றமும் அபிவிருத்தியும், பாளி இலக்கியம், சிங்கள இலக்கியம் (பொலநறுவை-கோட்டே காலம்), சிங்கள மக்கள் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, மொழியும் இலக்கியமும், ஆயுள்வேத வைத்திய முறை, பண்பாட்டு விதிகள், ஓவிய மரபு, கண்டிக்காலச் சுவரோவியங்களும் பாரம்பரிய ஓவியக் கலைகளும், அனுராதபுரக்கால சமயக் கட்டடங்களும் சூழலும் ஆகிய 21 தலைப்புகளில் இந்நூல் சிங்கள-தமிழ் கலாச்சாரங்கள் பற்றி விபரிக்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31348).

### 7176

**கலாசார மறுமலர்ச்சியும் பேராண்மையும்.** சித்தன்கேணி விவேகானந்தா. யாழ்ப்பாணம்: சித்தன்கேணி விவேகானந்தா, சித்தன்கேணி, 1வது பதிப்பு, நவம்பர் 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை).
12 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 20.5x14.5.

தற்கால ஊடகங்களினாலும், கட்டுப்பாடற்ற வாழ்க்கையாலும் இலங்கைத் தமிழரிடையே, குறிப்பாக யாழ்ப்பாணக்குடா நாட்டில் வாழும் இளைஞரிடையே ஏற்பட்டுள்ள பாலியல்சார்ந்த வன்முறைகளையும், கலாச்சாரச் சீரழிவுகளையும் தவிர்க்கும்பொருட்டு நூலாசிரியரால் எழுதப்பட்டஒழுக்கவியல் கட்டுரையின் நூல்வடிவம். கலாச்சாரச் சீரழிவைத் தடுக்க ஆன்மீக வழியில் ஒழுகுமாறு இந்நூல் விதந்துரைக்கின்றது.

## 310. புள்ளிவிபரவியல்

### 7177

**பொருளாதாரப் புள்ளிவிவரவியல்.** R.C.D.அலன் (ஆங்கில மூலம்) செ.நவரத்தினம் (தமிழாக்கம்). கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 36, சேர் ஏர்ணஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1967. (இலங்கை: அரசாங்க அச்சுத் திணைக்களம்).
x, 212 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x13.5 சமீ.

லண்டன் பல்கலைக்கழகப் புள்ளிவிபரவியல் பேராசிரியர் R.C.D.அலன் எழுதி லண்டன், Hudchinson & Co நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ஆங்கில மூல நூலின் தமிழாக்கம் இது. செப்பனிடாத மூலத்தரவுகள், புள்ளிவிபர வெளியீடுகளின் மூலம், வரைப்படங்களும் விளக்கப்படங்களும், பெறுதிப் புள்ளிவிபரங்கள், நிகழ்வெண் பரம்பல்கள், சுட்டு எண்கள், உடன் தொடர்பு அல்லது இணைபு, காலத் தொடர், கூறெடுத்தலும் பொருளுண்மையும் ஆகிய ஒன்பது பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 320 அரசறிவியல்

### 7178

**அரசியல் தளம்.** எஸ்.எல்.றியாஸ். கல்முனை 7: S.L.றியாஸ், 170 A, ஹனிபா வீதி, 1வது பதிப்பு, 2005. (கல்முனை: அல்-நூர் கிராப்பிக்ஸ்).
(2), 72 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18x13 சமீ., ISBN: 955-99165-0-5.

இன்றைய சமகால அரசியல் விடயங்களை ஒரு நண்பனுக்குத் தபால்மூலம் கடித வாயிலாகத் தெரிவிப்பதாக இதிலுள்ள கட்டுரைகள் அமைகின்றன. சுலைமா லெப்பை றியாஸ் தனது பாடசாலைக் கல்வியை கல்முனைக்குடி அல்-அஸ்ஹர் வித்தியாலயத்திலும், கல்முனை ஸாஹிரா கல்லூரியிலும் கற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டதாரியான இவர் ஒரு ஆசிரியராவார். பத்திரிகைத்துறையில் முதுமானிப் பட்டத்தைப் பூர்த்திசெய்துள்ளார். கணனியிலும் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்.

### 7179

**அரசியலும் சிவில் சமூகமும்.** திருநாவுக்கரசு விக்னேஸ்வரன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
viii, 96 பக்கம், விலை: ரூபா 260., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-87-5.

திருநாவுக்கரசு விக்னேஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்துறையின் முன்னாள் விரிவுரையாளரும் தற்போதைய வருகை விரிவுரையாளருமாவார். இவர் நீண்ட காலமாக யாழ்ப்பாண மாவட்டத்தின் ரோட்டறிக் கழகத்தின் அங்கத்தவராக இருந்து பல்வேறு சமூகப்பணிகளில் ஈடுபட்டவர். சிவில் சமூகமும் நல்லாட்சியும், இலங்கையின் உள்ளூராட்சி அமைப்புகளும் அவற்றின் தொழிற்பாடுகளும், அரசியல் பங்குபற்றல், உலக பொருளாதாரம்: ஒரு அரசியல் பார்வை, உலக பொருளாதாரம்- நெருக்கடிகளும், அரசியல் போக்கும்: ஒரு சுருக்கமான வரலாற்றுப் பார்வை ஆகிய ஐந்து கட்டுரைகள் இந்நூலில் தனித்தனி இயல்களாக இடம் பெறுகின்றன. ஆறாவது இயலாக ஆசிரியரின் தொகுப்புரையாக முடிவுரை என்னும் இயல் அமைகின்றது.

### 7180

**ஊருக்கு நல்லது சொல்வேன்.** வீ.தனபாலசிங்கம். கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, இல.25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (Colombo 13: Design Lab, 173 P-2, George R.D.Silva Mawathe).
432 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 22 x15 சமீ., ISBN: 978-955-0195-04-6.

புரவலர் புத்தகப் பூங்காவின் 27ஆவது வெளியீடு. தினக்குரல் ஆசிரியரும் யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான வீ.தனபாலசிங்கம் நெல்லியடி மத்திய

மகாவித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவன். 1977இல் வீரகேசரியில் ஒப்பு நோக்காளராக இணைந்து, 2004இல் தினக்குரல் ஆசிரியராகத் தன் கடின உழைப்பால் வளர்ந்தவர். தன் ஆறு ஆண்டுக்கால பத்திரிகையாசிரியர் பணியில் எழுதப்பட்ட 2120 ஆசிரியர் தலையங்கங்களில் தேர்ந்தவற்றைத் தொகுத்து நூறு தலையங்கங்களாகக் கட்டுரை உருவில் வழங்கியுள்ளார். அரசின் கொள்கைகளைத்தன் எழுத்துக்களால் விளக்கி வாசகரின் நாடித்துடிப்பை அறிந்து அதில் அரசுக்கு உரைக்கவேண்டியதை அவ்வப்போது அழுத்தமாகவும், நேர்மையாகவும் எழுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் வீ.தனபாலசிங்கம்.

### 7181

**நவீன அரசியல் சிந்தனை: ஓர் அறிமுகம்.** க.சண்முகலிங்கம். கொழும்பு 7: ஆற்றல் மேம்பாட்டு நிறுவனம், இணைந்து வெளியிடுவோர், கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
x, 134 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-185-9.

நவீன அரசியல் சிந்தனை என்னும் பொருளில் 15 கட்டுரைகளைக் கொண்டமையும் இந்நூல் நவீன அரசியல் சிந்தனையின் சில அம்சங்களை மட்டும், தேர்ந்தெடுக்கப்பட்ட மிக முக்கியமான கருத்தாக்கங்களை மையப்படுத்தி ஆராய முனைகின்றது. இதன்மூலம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள நூல்களின் சுவைமிகுந்த விவாதங்களை தமிழில் கற்கும் மாணவர்களுக்கும் பொது வாசகர்களுக்கும் இந்நூல் அறிமுகம் செய்கின்றது. அரசியல் சிந்தனையை விவாதமாக அணுகுதல் பயன்தரும் கற்றல் உத்தியாகும். இந்நிலையில் இந்நூலும் கார்ள் மாக்ஸ், வெபர், அந்தோனியோ கிரம்சி, பிபன் சந்திரா, ஹம்சா அலவி, ரால்ப் மிலிபாண்ட், பௌலாண்ட்ஸஸ், அல்தூசர் போன்ற அரசியல் சிந்தனையாளர்களின் நவீன அரசியல் சிந்தனைகளை விவாத முறையில் அலசுகின்றது. பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான சண்முகலிங்கம், அரச நிர்வாக சேவையில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகத்தில் கூட்டுறவு ஆணையாளராகவும், கல்வி அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றியவர். 1990 முதல் 1996 வரை இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளராக அவர் கடமையாற்றியபோது அத்திணைக்களம் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு மகத்தானது.

### 7182

**முரண்பாடும் சமாதானமும்: ஓர் அறிமுகம்.** வேலுப்பிள்ளை குணரத்தினம்.செங்கல்லடி 30350: கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, 1வது பதிப்பு, 2007. (மட்டக்களப்பு: மைக்கேல் மொபைல் பிரின்டர்ஸ், 90 பார் வீதி).
xi, 148 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1443-12-2.

முரண்பாடு பற்றி விளங்கிக்கொள்ளல், முரண்பாடு பற்றிய எண்ணக்கரு, மத்தியஸ்தம், பேச்சுவார்த்தை, சமாதானம் ஆகிய ஐந்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இவற்றின்கீழ் முரண்பாட்டுக்கான காரணங்களும் அவற்றிற்கான தீர்வுகளும், தடுப்புகளும், மத்தியஸ்தத்தின் பயன்பாடு, பேச்சுவார்த்தைக்கான அணுகுமுறைகளும் நுட்பங்களும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான இணக்கப்பாடு என்பனவற்றை ஆராய்ந்து விளக்கியுள்ளார். நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் தனது இளங்கலைமாணி சிறப்புப் பட்டத்தினையும், முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பெற்றவர். கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானத்துறையின் தலைவராகப் பணியாற்றுகின்றார்.

### 7183

**முஸ்லிம் பெண்களும் அரசியல் தலைமைத்துவமும்.** பாத்திமா மெர்னிஸ்ஸி (ஆங்கில மூலம்), எம்.ஏ.நு்.மான் (தமிழாக்கம்). கொழும்பு 5: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, 21/25 பொல்ஹென்கொட கார்டன், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
48 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14 சமீ., ISBN: 955-625-006-9.

பாத்திமா மெர்னிஸ்ஸி 1991 இல் ஆங்கிலத்தில் எழுதிய "பெண்களாகிய நாங்கள் ஒரு முஸ்லிம் அரசைத் தலைமைதாங்கி நடத்த முடியுமா?" என்ற தலைப்பில் (Can we women head a Muslim State)

*எழுதிய நூலின் தமிழாக்கம் இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 538523).*

### 7184

**விடுதலை நோக்கிய நாடுகடந்த தமிழீழ அரசு: விளக்கக்கோவை.** *நாடுகடந்த தமிழீழ அரசு. லண்டன்* W5 1YY: Transnational Government of Tamil Eelam, TGTE, Room No. 28, Westgate House, Westgate Road, Ealing, *1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (லண்டன்: அச்சக விபரம் தரப்படவில்லை).*
*32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.*

*நாடுகடந்த தமிழீழ அரசு பற்றிய சந்தேகங்களை தெளிவுபடுத்தும் வகையில் அமைந்த விளக்கக்கோவை. பதினைந்து கேள்விகளையும் அவற்றுக்கான அதிகாரபூர்வமான பதில்களையும் உள்ளடக்கிய சிறு நூல் இது. நாடுகடந்த தமிழீழ அரசு என்றால் என்ன? நாடுகடந்த தமிழீழ அரசு ஏன்/ அதற்கான தேவை என்ன? நாடுகடந்த அரசுக்கும் புகலிட அரசுக்குமிடையே வேறுபாடு உண்டா? அல்லது இரண்டும் ஒன்றேதானா? நாடுகடந்த தமிழீழ அரசு உருவாகிவிட்டதா? இல்லையெனில் அது எவ்வாறு உருவாக்கப்படும்? நாடுகடந்த அரசை உருவாக்கும் பணி எவ்வாறு நடைபெறும்? நாடுகடந்த தமிழீழ அரசுக்கு அனைத்துலக நாடுகள் ஒப்புதல் அளிக்குமா? என்பனபோன்ற முக்கிய கேள்விகளும் அவற்றுக்கான தெளிவான விளக்கமும் 16 பக்கங்கள் தமிழிலும், 16 பக்கங்கள் ஆங்கிலத்திலுமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

## 325.21 அகதிகள்

### 7185

**அகதி வாழ்க்கை: ஓர் இலங்கைத் தமிழ் அகதியின் அனுபவக் குறிப்புகள்.** *கலையரசன். சென்னை 600018: கிழக்கு பதிப்பகம், இல.33/15, எல்டாம்ஸ் சாலை, ஆள்வார்ப்பேட்டை, 1வது பதிப்பு, ஜுலை 2010. (சென்னை 600018: கிழக்கு பதிப்பகம்,* New Horizon Media Pvt Ltd., *இல.33/15, எல்டாம்ஸ் சாலை, ஆள்வார்ப்பேட்டை).*
*190 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x13.5 சமீ.,* ISBN: *978-81-8493-477-9.*

*இலங்கைத் தமிழரான கலையரசன், பல ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணம்செய்து, அங்குள்ள அரசியல் சமூக நிலவரங்களை குறிப்பாக, வெகுஜன ஊடகங்களால் மக்களுக்குச் சொல்லப்படாத, அல்லது முக்கியத்துவம் கொடுக்கப்படாத, அல்லது மறைக்கப்பட்ட செய்திகளை ஆய்வுசெய்து கட்டுரைகளாக வெளியிட்டு வருகிறார். உலகளாவிய தமிழரின்- குறிப்பாக ஈழத்தமிழரின் அகதிவாழ்க்கை பற்றிக்கூறும் இந்நூலில் 5 பிரிவுகள் உள்ளன. பயணங்கள், சர்வதேச அகதி அரசியல், திரைகடலோடியும் புகலிடம் தேடு, சத்திய சோதனை, லண்டன் உங்களை வரவேற்கிறது ஆகிய தலைப்புகளில் 45 கட்டுரைகள் இந்நூலில் ஒழுங்கமைக்கப்பெற்றுள்ளன.*

## 327 சர்வதேசத் தொடர்புகள்

### 7186

**ஒற்றை மைய உலக அரசியலில் போரும் சமாதானமும்.** *மு.திருநாவுக்கரசு. நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, இணைந்து வெளியிடுவோர், லண்டன்: தமிழியல், 2வது பதிப்பு, மே 2009, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (சென்னை 600029: மைக்ரோ பிரின்ட்ஸ் லிமிட்டெட்).*
*170 பக்கம், புகைப்படம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 22x14 சமீ.,* ISBN: *978-81-89945-49-7.*

*அரை நூற்றாண்டிற்கும் மேற்பட்ட உலக அரசியல் போக்கை இவ்வாய்வு இரத்தமும் சதையுமாகப் பார்க்க முயற்சிக்கிறது. அத்தகைய அரசியல் போக்கைச் செங்குத்தாகவும் குறுக்குவெட்டாகவும் நின்று பார்க்க முனையும் இவ்வாய்வு, உலகப்போக்கை அதன் நிர்வாணக் கோலத்தில் அப்படியே சித்திரிக்க விரும்புவது மட்டுமின்றி அதன் அனைத்து உள்ளோட்டங்களையும் பார்க்க முனைகின்றது. தத்துவத்தையும் நடைமுறையையும் சீர்தூக்கிப் பார்க்க விரும்பும் இவ்வாய்வு உலகளாவிய ரீதியில்*

கற்பனைகளைக் கடந்து, யதார்த்தத்தைத் தோலுரித்துக் காட்ட முயற்சிக்கின்றது. மேற்குலக ஆதிக்க வரலாற்றை முழுநீளப் போக்காகச் சித்திரிக்க முனையும் இவ்வாய்வு, அந்த மேற்குலகின் ஆதிக்கத்திற்கிடையே ஒரு முனையில் பின் லாடனையும் மறுமுனையில் பிடல் காஸ்ட்ரோவையும் இரு அந்தங்களாக்கி ஆய்வுசெய்கின்றது. இதில் பின் லாடன் தோற்கடிக்கப்பட்டதற்கான காரணங்களையும், தொடர்ந்து அரை நூற்றாண்டுக்காலமாக அமெரிக்காவால் பிடல் காஸ்ட்ரோவைத் தோற்கடிக்க முடியாதுள்ளமைக்கான காரணங்களையும் கண்டறிய விளைகின்றது. மு.திருநாவுக்கரசு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் பட்டம் பெற்று அப்பல்கலைக்கழகத்தில் சிலகாலம் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையின் இனப்பிரச்சினை என்ற முக்கிய நூலையும், வேறு சமகால அரசியல் ஆய்வுக்கட்டுரைகளையும் அவ்வப்போது எழுதிவந்தவர். இவரது ஆய்வுகளின் எதிர்வுகூறல்கள் பல நிகழ்கால தரிசனங்களான நிலையில் இவரது படைப்புக்கள் ஈழத்து அரசியல் அறிஞர்களால் கூர்ந்து நோக்கப்பட்டுவந்துள்ளன.

## 330 பொருளியல்

### 7187

**அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை: இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்.** குமாரி ஜயவர்த்தன (ஆங்கில மூலம்), க.சண்முகலிங்கம் (மொழிபெயர்ப்பு). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் டெரஸ், இணைந்து வெளியிடுவோர், கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ்).
xxvi, 150 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-659-205-4.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் முதலாளி வர்க்கம் எழுச்சிபெற்ற வரலாற்றை இந்நூல் விபரிக்கின்றது. நிலமானிய சமூகமாகவும் வணிகவாதப் பொருளாதாரமாகவும் இருந்த இந்நாடு பெருந்தோட்ட பொருளாதார முறையைத் தழுவிக்கொண்டது. ஆரம்பகட்டத்தில் சுதேச வர்த்தகர்கள் சாராயக் குத்தகை, ஆயக் குத்தகை என்பனவற்றின் மூலம் தொடக்க மூலதனத்தைத் திரட்டினர். பின்னர் பெருந்தோட்டங்களில் முதலீடு, காரீய சுரங்க அகழ்வுத் தொழில் என்பனமூலம் தம் நடவடிக்கைகளை விரிவாக்கினர். சாதியை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பிரிவினையையுடைய சமூகம் இதனால் உருமாற்றம் பெற்றது. இவற்றை இந்நூல் விபரிக்கிறது. இந்நூல் சாதியைவிட வர்க்கம் முதலாளித்துவ மாற்றத்தில் முதன்மை பெறுவதை எடுத்துக்காட்டுகின்றது. பல சாதிகள், பல்வேறு இனக்குழுமங்கள் சமயப் பண்பாடுகளை பின்னணியாகக் கொண்ட அநாமதேயங்களாக இருந்தோர் (nobodies) அறியப்பட்டவர்களாக (somebodies) சமூக பொருளாதாரப் படியில் உயர்வதை இந்நூல் விளக்கிச் செல்கின்றது. மேலும் மூலதனத் திரட்சி, சமய மறுமலர்ச்சி, இனக்குழும அடையாளம், அரசியல் இயக்கங்கள், விவாகக் கார்ட்டல்கள் மூலம் பணக்காரக் குடும்பங்கள் ஒன்றுசேர்தல் என்பனவும் விபரிக்கப்படுகின்றன. இவ்விடயங்கள் எவ்விதம் ஒன்றோடொன்று தொடர்புபட்டிருந்தன என்பதையும் இந்நூல் விபரிக்கிறது. குமாரி ஜெயவர்த்தனா இலண்டன் பொருளியற் கல்லூரியில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறை இணைப்பேராசிரியராகப் பணியாற்றியவர். பெண்ணிய அமைப்புகள், மனித உரிமைகள் இயக்கம் ஆகியவற்றில் இணைந்தும் பணியாற்றியவர். இவர் இலங்கை சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் இயக்குநர்களுள் ஒருவர்.

### 7188

**இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்திப் பிரச்சினைகள்: ஓர் சமகால மீளாய்வு.**
என்.பாலகிருஷ்ணன். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ்).
xvi, 180 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-240-5.

இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாகக் காணப்படும் பிரச்சினைகள் பற்றி ஆராயும் 14 கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். தினக்குரல் பத்திரிகையின் ஞாயிறு இதழ்களில் 2009இல் வெளிவந்த இக்கட்டுரைகள் திருத்தி அமைக்கப்பட்டு நூல்வடிவில் வெளியிடப்படுகின்றன.

காலனித்துவப் பின்னணியும் பொருளாதார மாற்றங்களும், அபிவிருத்தியில் அரசின் வகிபாகம், இலங்கை அரசாங்கத்தின் கடன்படுகை-போக்குகளும் பிரச்சினைகளும், நிதி நிறுவனங்களின் உறுதிப்பாடு-கேள்விக்குரியதாக உள்ளதேன்? இலங்கையின் அண்மைக்கால மத்திய வங்கி நாணயக்கொள்நெறிகள், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசாங்கக் கடன்பெறுகை, பொருளாதாரத்தில் பணவீக்கம் ஏற்படுத்தும் தாக்கங்கள், அறிவுப் பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் சவால்கள், மனித அபிவிருத்தியின் பரிமாணங்களும் இலங்கையில் அவை பற்றிய அடைவுகளும், இலங்கையின் அபிவிருத்திப் பார்வையில் பால்நிலைகளின் பங்களிப்பு, அபிவிருத்தியின் அமைப்பு சார்ந்த மாற்றங்களும் அவற்றின் தாக்கங்களும், உலக நிதி நெருக்கடியும் அதனைத் தொடர்ந்த உலகப் பொருளாதாரப் பின்னடைவும், அபிவிருத்தியில் நிர்வாகத்தின் பங்களிப்பு, அரசாங்க வரவு செலவுத் திட்டத்திற்குப் பதிலாக கணக்கு மீதான வாக்கெடுப்பு: அரசியல் பொருளாதார பின்னணி ஆகிய தலைப்புகளில் இவை அமைந்துள்ளன. பொருளியலைப் பாடமாகப் படிக்கும் மாணவர்களுக்கும், அத்துறையில் ஆர்வமுள்ள பிறருக்கும் ஏற்ற தகவல்கள் இதிலுள்ளன. பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின் பொருளியல் விரிவுரையாளராக 40 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய நாகலிங்கம் பாலகிருஷ்ணன், யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியாகவும், வவுனியா வளாகத்தின் நிறுவக முதல்வராகவும் சேவையாற்றியவர்.

### 7189

**இலங்கைப் பொருளாதாரம்: கோட்பாடுகளும் நடைமுறைகளும்.** மா.சின்னத்தம்பி. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xvi, 181 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-147-7.

இலங்கைப் பொருளாதாரத்திற்கான அறிமுகம், இலங்கையின் உற்பத்தித் துறைகள், இலங்கையின் பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும், அரசாங்கமும் வரவுசெலவுத் திட்டமும், வெளிநாட்டு வியாபாரம், சென்மதி நிலுவை, இலங்கையின் நிதியியல்துறை, ஆகிய ஏழு அத்தியாயங்களையும், 6 பின்னிணைப்புகளையும், 33 அட்டவணைகளையும், இலங்கைப் பொருளாதாரம் தொடர்பான 17 சிறப்புக் குறிப்புகளையும் கொண்டதாக இந்நூல் காணப்படுகின்றது. மேற்கண்ட அத்தியாயங்களினூடாக இலங்கையின் பொருளாதார நடைமுறைகள், முன்னேற்றங்கள், மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக இந்நூல் விரிவாக ஆராய்கின்றது. இலங்கைப் பொருளாதாரம் பற்றி அறியவிரும்பும் எவருக்கும் ஏற்றவகையில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் சிறப்புப் பட்டத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் முதுமாணிப் பட்டத்தையும் பெற்ற மா.சின்னத்தம்பி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராவார்.

### 7190

**பருநிலை மற்றும் நுண்பாகப் பொருளியல் கோட்பாடுகள்.** சி.விஜயகுமார். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
xiv, 182 பக்கம், விலை: ரூபா 460., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-83-2.

பருநிலை மற்றும் நுண்பாகப் பொருளியல் கோட்பாடுகள் Macro and Micro Economic Theories பற்றி இலங்கைத் தமிழரால் தமிழில் எழுதப்பட்ட முதலாவது நூலாக இது அமைகின்றது. நூலாசிரியர் சின்னத்துரை விஜயகுமார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப் பட்டம்பெற்று அங்கு முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். இந்நூல் நுண்பாக கோட்பாடுகளை கணிதம் மற்றும் வரைபட உதவியுடன் மிகத் தெளிவாக விளக்கியுள்ளதுடன் பருநிலைப் பொருளாதாரக் குறிக்கோள்களின் விமர்சிப்பாகவும் கையாளப்பட்டுள்ளது. கெயின்சியவாதம், அதனைத் தொடர்ந்த நாணயவியல்வாதம் என்பவற்றின் கருத்துக்கள் நீண்டகாலமாக ஆராயப்பட்டு வந்துள்ளன. அவற்றைப்பற்றி ஆசிரியர் காத்திரமான முறையில் இங்கு விளக்கியுள்ளார். கலப்புப் பொருளாதார அமைப்புகள் நடைமுறையில் இருந்துவரும் பின்னணியில் அரசின் பங்களிப்பு, தனியார் துறையின் பங்களிப்பு ஆகியவை பற்றிய விமர்சன நோக்கிலான ஆசிரியரின் விளக்கம் நன்முறையில் முன்வைக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் எவ்வாறு கொள்நெறி வகுத்தல், அதன் இலக்குகளை எவ்விதம் அமைத்தல் என்பவற்றின் சிக்கல் நிலைகள் பற்றி ஆசிரியர் போதிய

சிரத்தையுடன் நோக்கியுள்ளார். இந்நூலில் சேர்க்கப்பட்ட சூழலியல் ஒரு புதிய அணுகுமுறையினைத் தருவதுடன், பொருளியல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் அது முன்னிலைப்படுத்தப்பட்டுமுள்ளது.

### 7191

**பெரிய பிரித்தானியாவில் ஒரு நூற்றாண்டுக்காலப் பொருளாதார அபிவிருத்தி 1840-1940.**
ஜி.பி.ஜோன்ஸ், ஏ.ஜி.பூல். கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறீமதிபாயா, 1வது பதிப்பு, 1968. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).
xiv, 428 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

A hundred years of economic development in Great Britain (1840-1940) என்ற ஆங்கில நூலின் நான்காவது பதிப்பின் தமிழாக்கம் இதுவாகும். 1840 முதல் 1940 வரையிலான நூற்றாண்டுக்கால பிரித்தானிய பொருளாதார வரலாற்றைக் கூறும் இந்நூல், மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. 1837-1875 காலகட்டத்தைக் குறிக்கும் முதலாம் பிரிவில், 1840க்கு முன்னிருந்த குடிசனத் தொகையும் வளங்களும், போக்குவரத்து, தபால்-தந்திச் சேவை என்பவற்றில் 50 வருடமாகஉண்டான முன்னேற்றம், தானியச் சட்டம் விலக்கப்பட்டதற்கு முன்பும் பின்புமுள்ள விவசாயம், ஆடைவகைகளின் உற்பத்தி, இரும்பு உருக்கு எந்திரத் தொழில்கள், கடன் வசதியும் வியாபார நிர்வாகமும், முதலாளி தொழிலாளி, அரசாங்கம் ஆகிய விடயங்களும் 1875-1914 காலகட்டத்தைக் குறிக்கும் இரண்டாம் பிரிவில், கைத்தொழில் வர்த்தக அமைப்பு, பிறநாட்டுப் போட்டியும் கைத்தொழிலில் ஏற்ற இறக்கமும், விவசாயமும் அதன் பிரச்சினைகளும், போக்குவரத்துகள், வங்கித் தொழிலும் பணச்சந்தையும், அரசாங்கமும் தொழிலாளரும் ஆகிய விடயங்களும், 1914-1939 காலகட்டத்தைக் குறிக்கும் மூன்றாம் பிரிவில், கைத்தொழிலும் வர்த்தகமும், கைத்தொழில் புனரமைப்பு, போருக்கு முன்னும் பின்னும் விவசாய நிலைமை, போக்குவரத்து சாதனங்கள்-பழையனவும் புதியனவும், பணவியல் சார்ந்த கொள்கை, 1914 தொடக்கமாகவுள்ள தொழில் நிலைமைகள் ஆகிய அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

### 7192

**பெறுமதிக் கொள்கை.** பொ.சங்கரப்பிள்ளை. கொழும்பு 7: வெளியீட்டுப் பிரிவு, அரசகரும மொழித் திணைக்களம், 421, புல்லர் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1964. (இலங்கை: அரசாங்க அச்சகம்).
xvi, 380 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

பெறுமதிக்கொள்கை பற்றிய இந்நூல், அரசகரும மொழித் திணைக்களம் வெளியிடும் பொருளியற்றமிழ் நூல்களுள் மூன்றாவது பிரசுரமாகும். பெறுமதிக் கொள்கை, பொருளியலின் மிக முக்கியமான பாகங்களுள் ஒன்று. எனவே விலைக்கொள்கை பற்றிய விரிவான ஒரு தனி நூலாக வெளியிடப்பட்டமை பயனுள்ளதாகும். இந்நூலில் வழங்கப்பட்டுள்ள கலைச்சொற்களின் தொகுதியொன்றும், விலைக் கொள்கை பற்றிய சோதனைகளிலே கேட்கப்படும் கேள்விகளும் பின்னிணைப்பாக இப்பாடத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

### 7193

**பொருளாதாரம் ஆரம்ப ஆராய்ச்சி.** போல் ஏ.சாமுவல்சன் (ஆங்கில மூலம்), பொ.திருநாவுக்கரசு, சே.ஜோ.இளையதம்பி (தமிழ் மொழிபெயர்ப்பு), கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறிமதிபாயா, 58, சேர் ஏர்ணஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1971. (இலங்கை: அரசாங்க அச்சுத் திணைக்களம்).
xiv, (8), 1146 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

மசச்சூசெற்சுத் தொழில்நுட்பக் கழகத்தின் பொருளியல் பேராசிரியர் Paul A. Samuelson அவர்களால் எழுதப்பட்ட Economics: An Introductory Analysis என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். இந்நூல் 6 பகுதிகளையுடையது. 1வது பகுதி, இக்கால வாழ்வுக்குரிய மூலாதாரமான பொருளாதார உண்மைகளையும் தாபனங்களையும் ஆராய்ந்து சென்று, தேசிய வருமானம் பற்றிய கருத்து விளக்கத்துடன் முடிவடைகின்றது. 2வது பகுதி, பொருளாதார வளம், மந்தம் என்பவற்றுக்கான காரணங்களை ஆராய்கின்றது. 3வது பகுதி போட்டி, ஏகபோகவுரிமை ஆகிய சக்திகளுடன்

சம்பந்தப்பட்டது. வருமானத்தைப் பங்கிடுதல், உற்பத்திக் காரணிகளுக்கு விலை குறித்தல் ஆகியவை பற்றி நான்காம் பகுதி எடுத்துக்கூறுகின்றது. சர்வதேச வியாபாரத்தின் பணத்துறை அமிசங்களும் உண்மை அமிசங்களும் 5ம் பகுதியில் ஆராயப்பட்டுள்ளன. ஆறாம் பகுதியில் குறிப்பாக அபிவிருத்தி குறைந்த நாடுகள் சம்பந்தமான நடைமுறைப் பொருளாதாரப் பிரச்சினைகள் விளக்கப்பட்டுள்ளன.

## 335 சோசலிசம், அது தொடர்பான பிரிவுகள்

### 7194

**சனநாயகச் சிந்தனைகள்.** எஸ்.அன்ரனி நோர்பேட் (பதிப்பாசிரியர்), வை.நவரட்ணம், தை.தனராஜ் (தமிழாக்கம்). கொழும்பு 5: பொதுசன கல்வி நிகழ்ச்சித் திட்டம், மார்க்க நிறுவனம், தபால் பெட்டி எண் 601, 61, இசிப்பத்தான மாவத்தை, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
166 + 2 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

சனநாயகத்தின் இயல்பும் கருத்தும் பற்றித் தொடர்ச்சியான ஐந்து நூல்களை வெளியிடுவதற்கான மார்க்க நிறுவனத்தின் முயற்சியில் மூன்றாவதாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் இரண்டு பிரிவுகளாக எழுதப்பட்டுள்ளது. முதலாவது பகுதியில் ஏதென்ஸின் பெரிக்கிள்சும் சனநாயகத்தின் பிறப்பும் என்ற தலைப்பின்கீழ் வை.நவரட்ணம் அவர்கள் தமிழாக்கம் செய்த அறிமுகம், எண்ணத்தோற்றம், கதாநாயகன், பெரிக்கிள்சின் நிழல் ஆகிய விடயங்கள் இடம்பெறுகின்றன. வை.நவரட்ணம் மகரகம தேசிய கல்வி நிறுவனத்தின் தொலைக்கல்வித்துறையின் செயற்றிட்ட அதிகாரியாவார். சோதனைக் களத்தில் முதலாளித்துவ சனநாயகம் என்ற இரண்டாவது பகுதி தை.தனராஜ் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டது. இப்பகுதியில், தொக்வில்லும் மில்லும், லஸ்கியும் லாஸ்வெல்லும், சும்பீற்றரும் ஹயெக்கும், கால்பிறைத்தும் குறோஸ்லாந்தும் ஆகிய நான்கு தலைப்புகளின்கீழ் விடயங்கள் தரப்பட்டுள்ளன. தை.தனராஜ் மகரகம தேசிய கல்வி நிறுவனத்தின் கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித் துறையின் செயற்றிட்ட அதிகாரியாவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 492554).

### 7195

**ஜனநாயகத்திற்கான ஒரு வழிகாட்டி.** தோமஸ் மேயர் (பதிப்பாசிரியர்), எஸ்.மஹாதேவன் (மொழிபெயர்ப்பாளர்), நோபர்ட் அந்தனி, ஜோசப் அருள்வாசகம், மாதவகலா மாதவன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 4: பிரட்றிச் ஈபர்ட் மன்றம், Friedrich Ebert Stiftung, இல.4, அடம்ஸ் ஒழுங்கை, 1வது பதிப்பு, 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).
v, 54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 14.5x11 சமீ., ISBN: 978-955-607-051-4.

FES (Friedrich Ebert Stiftung) வெளியீட்டுத் தொடரில் 75ஆவது பிரசுரமாக அமையும் இச்சிறு நூல் ஜனநாயகம் பற்றிய பல்வேறு அடிப்படைத் தகவல்களை அறிவூட்டும் நோக்கில் உள்ளடக்கியுள்ளது. ஜனநாயகம், மனித உரிமைகள், சட்ட விதிமுறைகள், அதிகாரப் பரவலாக்கல் முறை, பல்வகைத்தன்மை, உள்ளூர் சுயாட்சி, தேர்தல், அரசியல் கட்சிகள், சிவில் சமுதாயம், பொது அரங்கு, அரசியல் கலாச்சாரம், நல்லாட்சி, உலகமயமாக்கலும் பொருளாதாரமும், இருவகையிலான ஜனநாயகம், நல்லிணக்கமும் சமாதானமும் ஆகிய தலைப்புகளில் இவை சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

## 335.4 கம்யூனிசம்

### 7196

**தேசியம் அடையாளம் கம்யூனிசம்.** அசோக் யோகன் (தொகுப்பாசிரியர்). பிரான்ஸ்: அசை- சமூக அசைவுக்கான எழுத்தியக்க வெளியீடு, 62, Rue du Poteau, 75018 Paris, 1வது பதிப்பு, 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).
190 பக்கம், விலை: ரூபா 60., இந்திய ரூபா 80., அளவு: 21.5x14 சமீ.

ஈழப் பிரச்சினையின் பின்னணியில் தேசியம் குறித்த பிரச்சினைகளைப் பேசும் கட்டுரைகள், அரசுசாரா இயக்கங்களின் பின்னணியில் பின் மார்க்சியம் என்னும் எதிர்ப்புரட்சிச் சிந்தனை குறித்து எச்சரிக்கும் கட்டுரைகள், பாலஸ்தீனம் மற்றும் ஈரானது அரசியல் பின்னணியில் பாசிசம் குறித்த அவதானங்களைக் கோரும் கட்டுரைகள் என ஒன்பது கட்டுரைகள் கொண்ட தொகுப்பு இது.

## 336 நிதியியல், வங்கியியல்

### 7197

**சம்பளம்.** மொரிஸ் டொப். கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறிமதிபாயா, ஏணஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1967. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்). xiv, 196 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இந்நூல் Wages என்ற தலைப்பில் மொரிஸ் டொப் எழுதி வெளியிட்ட ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். கேம்பிரிட்ஜ் பொருளாதாரக் கைந்நூல்கள் என்ற தலைப்பில் பொருளாதார விடயங்களைச் சுருக்கமாக அறிமுகம் செய்யும் நூல்வரிசைத் தொடரில் இந்நூல் வெளியிடப்பட்டிருந்தது. முற்காலத்தில் நிலவிய சம்பள அமைப்பிலிருந்து நவீனகால சம்பளப் பிரச்சினையின் பின்னணியை வேறுபடுத்திக்காட்டுவதுடன் தொடங்கும் ஆசிரியர், வாழ்க்கைத் தரம், சம்பளக் கொடுப்பனவு முறைகள், வெவ்வேறு தொழில்களிலே வேலையாற்றும் நேரத்தின் உத்தம அளவு ஆகியவற்றுடன் சம்பளத்துக்குள்ள தொடர்பை ஆராய்கிறார். நாடறிந்த சம்பளக் கொள்கைகள் சிலவற்றை விளக்கியபின் போட்டி முறையிலும் ஏகபோகவுரிமை முறையிலும் சம்பளத்தை நிர்ணயிப்பதில் பேரம் பேசும் சக்திக்குள்ள பங்கை ஆசிரியர் விளக்குகிறார். வெவ்வேறு தொழிலாளர் தரங்களிலும் வெவ்வேறு இடங்களிலும் சம்பளங்களில் வேறுபாடிருப்பதை அவர் விளக்குகின்றார். தொழிற்சங்கங்களின் வரலாற்றையும், சம்பள இணக்கப் பேச்சுகளில் அவ்வியக்கத்தினதும் அரசினதும் செல்வாக்கையும் சுட்டிக்காட்டுவதோடு நூலை நிறைவுசெய்கின்றார்.

### 7198

**பிரித்தானிய வரவுசெலவுத்திட்ட முறை.** சேர் ஹேர்பர்ட் பிறிற்றெயின். கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறீமதிபாயா, 1வது பதிப்பு, 1970. (கொழும்பு: அரசாங்க அச்சகம்). xxx, 324 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

The British Budgetary System என்ற தலைப்பில் Sir Herbert Brittain அவர்கள் ஆங்கிலத்தில் எழுதி லண்டன் George Allen and Unwin Ltd வெளியிட்டிருந்த ஆங்கில மூல நூலின் தமிழாக்கம் இதுவாகும். இவர் 40 ஆண்டுகளுக்கும் மேலாக பிரித்தானிய திறைசேரியின் வரவு-செலவுத் திட்டக் கிளையில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி இளைப்பாறியவர். 13 இயல்களைக் கொண்ட இந்நூல் வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் காலமும் பாராளுமன்ற விவகாரமும், வரவுசெலவுத் திட்டத்தின் பொருளாதாரப் பின்னணி, வரவுசெலவுத் திட்டத்தின் பொது அமைப்பு, வரவுசெலவுத் திட்டவிபரம் (வருமானம், கோட்டுக்கு மேலுள்ள செலவு, கோட்டின் கீழ்) வேறொன்று கூறல்: வெளியீட்டுப் பகுதியும் நாணயமாற்றுச் சமன்பாட்டுக் கணக்கும், கருவூலத்துக்கு நிதி உதவுதல், தேசீயப் படுகடன், விநியோகச் செலவு பற்றிய கட்டுப்பாடு (வரவுசெலவு மதிப்பீடுகளின் உருவமும் அவற்றைத் தயாரிக்கும் முறையும்), விநியோகச் செலவு பற்றிய கட்டுப்பாடு, செலவுசெய்தலும் கணக்கு வைத்தலும், கணக்குத் தணிக்கை ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7199

**வரவு செலவுத் திட்ட உரை 1983.** றொனி த மெல் (நிதி திட்டமிடல் அமைச்சர்). 1வது பதிப்பு, மார்ச் 1983. கோட்டே: இலஙகை சனநாயக சோசலிச குடியரசு, ஸ்ரீ ஜயவர்த்தனபுரம், 1வது பதிப்பு, மார்ச் 1983. (இலங்கை: அரசாங்க அச்சுத் திணைக்களம்).
(8), 60 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 20x16.5 சமீ.

ஜனாதிபதி J.R.ஜெயவர்த்தன அவர்களின் இரண்டாவது அரசாங்கத்தின் முதலாவது வரவுசெலவுத்திட்டம் இது. 1983, மார்ச் மாதம் 8ம் திகதி இலங்கையின் நிதி திட்டமிடல்

அமைச்சராகவிருந்த ரொனி த மெல் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் மீதான அறிமுக உரை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 397349).

### 7200

**வரி விதிப்பு 1995/1996, 1996/1997, 1997/1998.** உள்நாட்டு இறைவரித் திணைக்களம். கொழும்பு: உள்நாட்டு இறைவரித் திணைக்களம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1997. (கொழும்பு அரசாங்க அச்சுத் திணைக்களம்).
vi, 146 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

இச்சிறு நூலானது இலாபங்கள் மற்றும் வருமானம் என்பவற்றின் வரிவிதிப்புத் தொடர்பிலான 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் (1996ஆம் ஆண்டின் 16அம் இலக்க திருத்தச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறாக) முக்கிய ஏற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குகின்றது. மேலும் திணைக்களத்தின் பல்வேறு அலுவலகங்களுக்கிடையிலான பணிகளின் பகிர்வு, அலுவலகங்கள் அமைந்துள்ள இடங்கள், தொலைபேசி இலக்கங்கள் போன்ற பல பயனுள்ள தகவல்களையும் இது உள்ளடக்கியுள்ளது. வரிசெலுத்துவோருக்கு அவருடைய வரிப் பொறுப்புடைமை தொடர்பிலான சட்டங்களை அறியத்தருவதே இச்சிறு நூலின் நோக்கமாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 506477).

### 7201

**வேலை, வட்டி, பணம் என்பவற்றின் பொதுக்கொள்கை.** யோண் மேனாட் கேய்ன்ஸ் (ஆங்கில மூலம்), பொ.சங்கரப்பிள்ளை (தமிழாக்கம்). கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1967. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).
xvi, 376 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

John Maynard Klynes எழுதிய The General theory of employment, interest and money என்ற நூலின் 1960ம் ஆண்டு மீள்பதிப்பின் தமிழாக்கம் இதுவாகும். மூலநூல் Macmillan and Co, London வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்டிருந்தது. முகவுரை, வரைவிலக்கணங்களும் கருத்துக்களும், நுகர்வு நாட்டம், முதலீட்டுத் தூண்டுகை, பணக்கூலிகளும் விலைகளும், பொதுக்கொள்கை சுட்டுஞ் சிறு குறிப்புகள் ஆகிய ஆறு பிரிவுகளுள் 24 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. கெயின்ஸ் எடுத்துரைத்த **பொதுக்கொள்கை** பொருளியல் சிந்தனையிலே ஒரு புரட்சியை உண்டாக்கிற்று எனலாம். வழமையான சிந்தனைப் போக்கினின்றும் விடுதலை பெறுவதற்கான ஒரு போராட்டத்தை அக்கொள்கை குறிக்கின்றது. பொருளியலிலே வழமையாகப் பயின்றுவந்த பிண்டப் பாகுபாட்டினின்றும் வேறுபட்ட அண்டப் பொருளியல் எனும் புதியதுறை உருவாகுவதற்கு அது வழிவகுத்தது. கெயின்ஸ் வகுத்துக்கூறிய புதிய கருத்துக்கள், உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் பொருளாதார ஆராய்ச்சிக்கேற்ற கருவிகளாகப் பயன்பட்டது மட்டுமன்றி, பொருளாதாரப் பூட்கைகளை (கொள்கைகளை) உருவாக்குவதிலும் பயன்பட்டன. பொருளாதார அபிவிருத்திக்குத் திட்டமிடுவதிலே அவை பெரிதும் பயன்பட்டன.

## 338 பொருளாதார வளங்கள், மீன்வளம்

### 7202

**இலங்கையின் இரசாயனக் கைத்தொழில்கள்.** வில்சன் திசாநாயக்க (மூலம்), R.P.A.ஜயசேகரா, W.M.H. தசநாயக்கா, நிர்மலி பெரேரா, W.R.L.M. வீரக்கொடி, ந.வாகீசமூர்த்தி, ப.சபாரத்தினம் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press).
28 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். உப்பு உற்பத்தி, எரிசோடா (சோடியம் ஐதரொட்சைட்டு) உற்பத்தி, சுண்ணாம்புக் கைத்தொழில், சீமெந்து உற்பத்தி ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

## *340 சட்டவியல்*

***7203***

***பங்காண்மைச் சட்டம்.*** செல்லத்தம்பி சிறீக்கந்தராசா.கொழும்பு *13:* செ. சிறீக்கந்தராசா, *154*, புதிய செட்டித்தெரு, *1*வது பதிப்பு, *1979. (*கொழும்பு *12:* கலா அச்சகம் *258/5* Dam Street, Haltsdorf*).*
*(10), 94 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x12.5 சமீ.*

*வித்தியோதய பல்கலைக்கழக வணிகப் பட்டதாரி மாணவர்களுக்கு வணிகச்சட்டம் பற்றி அப்பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் நிகழ்த்திய வேளையில் ஆசிரியரால் வழங்கப்பட்ட குறிப்புகளின் விரிவாக்கப்பட்ட நூல்வடிவம் இதுவாகும். பங்காண்மை அல்லது பங்கு வியாபாரம், பங்காண்மை பற்றிய இலங்கைச் சட்டங்கள், பங்காண்மை எவ்வாறு உருவாகின்றது, பங்காளர்களுக்கு இடையிலான உறவு, பங்காண்மை உடன்படிக்கை மாதிரிப்படிவம், பங்காளர்களும் மூன்றாம் ஆட்களும், பங்காண்மை எவ்வாறு முடிகின்றது, வரையறுத்த பங்காண்மைகள் ஆகிய எட்டுத் தலைப்புகளின்கீழ் 59 உப தலைப்புகளில் பங்காண்மைச்சட்டம் (*Law of Partnership*) இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட உதவிச் சட்ட வரைஞரான வழக்குரைஞர் சிறீக்கந்தராசா வித்தியோதய, வித்தியாலங்காரப் பல்கலைக்கழகங்கள், கொழும்புத் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பகுதிநேர விரிவுரையாளராகவும், இலங்கைச் சட்டக் கல்லூரி, இலங்கை வங்கித் தொழிலர் நிறுவகம் அகியவற்றின் பரீட்சைத் தேர்வாளருமாகப் பணியாற்றியவர். தற்போது புலம்பெயர்ந்து லண்டனில் இல்போர்ட் பகுதியில் சட்டத்தரணியாகப் பணியாற்றுகின்றார்.*

## *340.59 இஸ்லாமியச் சட்டங்கள்*

***7204***

***இஸ்லாத்தின் அரசியல் திட்டம்.*** A.R.M. *றூஹுல் ஹக் (மூலம்),* M.J.M. *றியாழ்,* M.H.M.*நாளிர்,* A.R.M. *மஹ்ரூப்,* M.*அப்துல் வாஹிது (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு:* The Pacific Press*).*
*20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இஸ்லாத்தின் அரசியல் கோட்பாடு, இறுதி நபியின் ஆட்சிமுறை, கலிபாக்களின் ஆட்சிமுறை ஆகிய விடயங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.*

***7205***

***இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகள்: பாகம் 1.*** *யூசுப் அல் கர்ளாவி (மூலம்), சீ.எம்.ஏ.அமீன் (பதிப்பாசிரியர்). கலகெடிஹேன: ரேஷ்மா பதிப்பகம், 348/1, வரபலான வீதி, திஹாரிய, 3வது பதிப்பு, ஏப்ரல் 2004, 2வது பதிப்பு, மே 1992, 1வது பதிப்பு, நவம்பர் 1989. (கொழும்பு 11: நிசான் பிரின்டர்ஸ், 64* N*, பீர் சாஹிபு வீதி).*
*(4), 66 பக்கம், விலை: ரூபா 55., அளவு: 17.5x12 சமீ.,* ISBN: *955-95661-6-4.*

*கலாநிதி யூசுப் அல் கர்ளாவி அரபுலகின் நவீனகாலச் சட்ட நிபுணர்களில் முன்னணியில் நிற்பவர். பதாவா முஆஸரா என்ற அவரது பத்வா நூல் நடுநிலையான அவரது சிந்தனைப் போக்குக்கு உதாரணம். இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகள் என்ற இவரது நூல் மூன்று பாகங்களில் முன்னர் வெளிவந்திருந்தது. இந்த மீள்பதிப்பு இஸ்லாமிய வணக்க வழிபாடுகள் பற்றிக் கூறும் முதலாவது பாகமாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 618748).*

**7206**

**ஹஜ் உம்ரா சட்ட விளக்கம்.** கமால் அலி அல் முன்தஸர் (அரபு மூலம்), அஷ்ஷெய்க் ரஊப் ஸைன்-நளீமி (தமிழாக்கம்), A.R.M.மஹ்ரூப் (பதிப்பாசிரியர்). கொழும்பு 7: உலக இஸ்லாமிய அழைப்பு இயக்க கொழும்புக் கிளை, இல. 4, கேம்பிரிட்ஜ் பிளேஸ், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2006. (தெகிவளை: Crescent Publications, 156, Hospital Road).
(16), 56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13.5 சமீ.

இஸ்லாமியர்களின் கடமைகளுள் ஒன்றான ஹஜ் யாத்திரை தொடர்பாகப் பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறைகளை விளக்கும் வகையில் எழுதப்பட்ட நூல். உலக இஸ்லாமிய அழைப்பு இயக்கம் என்பது அரச சார்பற்ற சர்வதேச நிறுவனமாகும். 1972இல் லிபியத் தலைநகர் திரிப்பொலியில் ஸ்தாபிக்கப்பட்டது. இஸ்லாமிய போதனைகளான அன்பு, சமாதானம், ஒத்துழைப்பு, நீதி, சுதந்திரம் போன்ற பண்புகளை மக்கள் மத்தியில் உருவாக்குவதற்காக இவ்வமைப்பு உழைக்கின்றது. சமூகங்களுக்கிடையில் சகிப்புத்தன்மையுடன் கூடிய நல்லுறவினை வளர்த்தெடுக்கவும் இது உதவுகின்றது. இலங்கை முஸ்லிம் பண்பாட்டு அலவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் 1989இல் கொழும்பில் இதன் கிளை அலுவலகம் திறக்கப்பட்டது. அறபு மொழி வளர்ச்சிக்கு உதவுவது, புலமைப்பரிசில்கள் வழங்குவது, அநர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உதவுவது என்பன இவ்வமைப்பின் மேலதிக பணிகளாயுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 617982).

## 342 அரசியலமைப்புச் சட்டம்

**7207**

**சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பான சட்டம்.** துசித்த அலுத்பட்டபெந்திகே. கொழும்பு 6: சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு, PAFFREL, 12/03, றொபர்ட் ரெரஸ், றொபர்ட் குணவர்த்தன மாவத்தை, 1வது பதிப்பு, 2005. (அச்சக விபரம் அறியமுடியவில்லை).
32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

சனாதிபதி தேர்தல் தொடர்பாக சாதாரண குடிமகன் அறிந்திருக்கவேண்டிய விடயங்களை உள்ளடக்கிய இந்நூலின் ஆசிரியர் ஒரு சட்டத்தரணியாவார். சனாதிபதி வேட்பாளராவதற்கான தகைமையீனங்கள், சனாதிபதித் தேர்தலில் விருப்பு வாக்களித்தல், நியமனப்பத்திரம் ஒப்படைத்தல், வாக்கெடுப்பை ஆரம்பித்தல், வாக்கெடுப்பை நிறைவுசெய்தல், வாக்குகளை எண்ணுதல், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், தேர்தல் தவறுகள், மோசடிச் செயல்கள், சட்டவிரோத செயல்கள், சனாதிபதித் தேர்தல் மனுக்கள், வாக்களிக்கச் செல்வதற்கான லீவு பெற்றுக்கொள்ளுதல் ஆகிய தலைப்புகளில் இச்சிறு நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 599949).

**7208**

**யாப்பினை ஆய்ந்த சிறப்பாணைக் குழுவின் அறிக்கை: தொனமூர் அறிக்கை.** தொனமூர் ஆணைக்குழு. இலங்கை: அரசகருமமொழி வெளியீட்டுக்கிளை, கொழும்பு, 2வது பதிப்பு, 1967, 1வது பதிப்பு, 1961. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).
viii, 262 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

தொனமூர் ஆணைக்குழு என்று பொதுவாகக் குறிக்கப்படும் சிறப்பாணைக்குழு தொனமூர் ஏள் (P.C.K.P.) அவர்களைத் தலைவராகவும், சேர். மதியூ நேதன் P.C.(Ire),G.C.M.G., சேர் செபிரி பட்டிலர் K.B.E.,M.P., கலா.ரி.திரமன் சீல்சு M.C., M.P., ஆகியோரை பிற அங்கத்தவர்களாகவும் கொண்டும் அமைக்கப்பட்டிருந்தது. குடியேற்ற நாட்டலுவலகத்தைச் சேர்ந்த திரு பி.ஏ.கிளற்றர்பக்கு M.C., அவர்கள் ஆணைக்குழுவின் செயலாளராகவும், இறைசேரியைச் சேர்ந்த திரு W.C.பாட்டில், அலுவல்முறை அறிவிப்பாளராகவும் பணியாற்றியிருந்தனர். 11 அதிகாரங்களில் அமைந்துள்ள இவ்வறிக்கையில், முன்னுரை, விரிவுரையும் வரலாறும், இப்பொழுதுள்ள யாப்பு இயங்கியவாறு,

மத்திய அரசாங்கம், வாக்குரிமையும் பிரதிநிதித்துவமும், கண்டியர் உரிமை, உள்ளூராட்சி, குடியியற் சேவையும் பொதுச் சேவையும், ஒழிபியல், எடுத்துரைப்பின் சுருக்கம், நன்றிகூறல் ஆகிய பிரிவுகள் அடங்கியுள்ளன. பின்னிணைப்பாக, பயண விபரம், சான்றுகள் வரிசை, அரசாங்கத் திணைக்கள வரிசை, குடித்தொகைப் புள்ளிவிபரம், வருவாயும் செலவும், கப்பலோட்டம், ஏற்றுமதி இறக்குமதி, கல்வியும் பயிர்ச்செய்கையும், 1815ஆம் ஆண்டு மார்ச் 2ம் நாள் கண்டியர் சமவாயம், 1818ஆம் ஆண்டு நவம்பர் 21அம் நாள் அரசாங்கப் பிரகடனம், நிதித்திணைக்களத்தின் கடமைகள், பிரியாவிடை முடங்கல் ஆகிய பகுதிகள் தரப்பட்டுள்ளன.

மேலும் பார்க்க: 7204

## 350 பொது நிர்வாகம்

**7209**

**பிரதேச சபையும் மலையக மக்களும்.** சமூக அபிவிருத்தி நிறுவகம். கண்டி: சமூக அபிவிருத்தி நிறுவகம், 37. போதியங்கன மாவத்தை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2008. (கண்டி: சொலிட் கிராப்பிக்ஸ்). 28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 12.5x16.5 சமீ., ISBN: 978-955-9391-09-8.

மூன்று பகுதிகளாக வகுத்து மலையக மக்களுக்கு பிரதேச சபை நிர்வாகம் பற்றி எளியமுறையில் விளக்கும் தகவல் கைநூல் இது. முதலாவது பகுதியில் அபிவிருத்தி என்றால் என்ன? ஆட்சி என்றால் என்ன? இலங்கையில் உள்ள ஆட்சி மட்டங்களான மாகாண சபைகள், மாநகர, நகர, பிரதேச சபைகள் ஆகிய உள்ளூராட்சி மன்றங்கள் என்பன பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்தப்படுகின்றன. இரண்டாவது பகுதியில், பிரதேச சபை என்றால் என்ன என்ற விளக்கமும், மூன்றாவது பகுதியில் பிரதேச சபையும் தோட்ட மக்களும் என்ற விடயமும் எளிமையாக விளக்கப்பட்டுள்ளன. இவ்விளக்கங்களை பிரதேச சபை உறுப்பினர்களே வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**7210**

**பொதுசன சேவையில் பால்நிலையைப் பிரதானப்படுத்தல்: ஒரு துரித வழிகாட்டி.** சிவஞானம் ஜெயசிங்கர் (மொழிபெயர்ப்பாளர்). கொழும்பு 5: சக்தி, பால்நிலை சமஉரிமைக்கான செய்திட்டம், கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவரகம், 12, அமரசேகர மாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2004. (கொழும்பு: சூரிய அச்சகம்).
viii, 34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x18.5 சமீ, ISBN: 955-8027-04-9.

நான்கு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அறிமுகம் என்ற 1வது பிரிவில் பால்நிலையும் பொதுசன சேவையும், பால்நிலையைப் பிரதானப்படுத்தல், வழிகாட்டியின் வாய்ப்புக்களும் நோக்கமும் ஆகிய விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. பின்னணி என்ற இரண்டாம் பிரிவில் பால்நிலை சமத்துவத்துக்கும், சம உரிமைக்குமான நிர்ணயங்கள், பால்நிலைச் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான கொள்கைரீதியிலான அணுகுமுறைகளின் விருத்தி ஆகிய இரு விடயங்களும், பொதுசன சேவையின் ஆளணி முகாமைத்துவத்தில் பால்நிலையைப் பிரதானப்படுத்துவதற்கான நிறுவனத்திட்ட வரம்பு என்ற மூன்றாவது பிரிவில், பால்நிலை முகாமைத்துவ முறையியல், சாத்தியமாக்கும் சூழ்நிலை, பால்நிலை முகாமைத்துவ முறையியலின் கட்டமைப்புகள், பால்நிலை முகாமைத்துவ முறையியல் பொறிமுறைகள் ஆகிய விடயங்களும் ஆராயப்பட்டுள்ளன. இறுதிப் பிரிவான நான்காவது இயலில் பொதுசன சேவையின் ஆளணி முகாமைத்துவத்தில் பால்நிலையினைப் பிரதானப்படுத்தவதற்கான படிமுறைகள் என்ற தலைப்பின் கீழ், பால்நிலைப்பகுப்பாய்வு, கொள்கை அபிவிருத்தி, ஆளணி முகாமைத்துவத்தில் பால்நிலை தொடர்பான கொள்கை விடயங்கள், கொள்கை மதிப்பீடு, பால்நிலை செயற்பாட்டுத் திட்டம், கண்காணிப்பும் மீளாய்வும், உள்ளக மற்றும் வெளிப்புறத் தொடர்பாடல்கள் ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 574803).

## 360 சமூக சேவை நிறுவனங்கள்

**7211**

**அரச சார்பற்ற அமையங்கள்: இல்பொருள் கற்பனையும் உண்மையும்.** சேவகர் யோகான் தேவானந்தா. நுகேகொட: இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம், இலங்கைக் குழு, 11 எல்வின் பிளேஸ், 1வது பதிப்பு, 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(4), 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

சேவகர் யோகான் தேவானந்தா இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக் குழுவின் முன்னோடித் தலைவராகப் பணியாற்றியவர். கடந்த 50 வருடங்களாக அடிமட்ட மக்களுடன் நடத்தப்பட்ட ஒரு உரையாடலின் எழுத்து வடிவமாக இந்நூல் அமைகின்றது. பண்டைய சமயங்கள், தர்மங்கள், இன்றைய சித்தாந்தங்கள் என்பன தொடர்பான செயல்-சிந்தனைச் செயன்முறை பற்றிய உயிர்த்துடிப்பான இவ்வுரையாடல் அபிவிருத்தி, நீதி, விடுதலை, சமாதானம் என்பனவற்றை ஆய்வுப்பொருளாகக் கொண்டது. நீதியையும் சமாதானத்தையும் மட்டுமல்லாது, அரச-சார்பற்ற அமையங்களின் செயற்பாடுகளின் முழுப்பரப்பையும், அவற்றின் செயற்பாடுகளின்போது தோன்றும் பிரச்சினைகளையும் இந்நூல் தொட்டுச் செல்கின்றது. இலங்கையில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குரிய அரசின் உரிமையை அங்கீகரிக்கும் அதேவேளையில், அரச சார்பற்ற அமையங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அரசின் நிலைப்பாட்டையும் இந்நூல் விரிவாக விமர்சனத்துக்குட்படுத்துகின்றது.

**7212**

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்: ஓர் விவரணக் கருத்துரை.** கேதீஸ் லோகநாதன் (ஒருங்கிணைப்பாளர்). கொழும்பு 7: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 32/3, பிளவர் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (கொழும்பு 7: அச்சக விபரம் தரப்படவில்லை).
(4), 66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-8037-26-5.

கொழும்பு- இலங்கை மன்ற நிறுவனத்தில் 13 வைகாசி 2000, 27 வைகாசி 2000 ஆகிய திகதிகளில் இரு பகுதிகளாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் கட்டமைப்புகள், நடைமுறைகள் பற்றிய கருத்தரங்குத் தொடர்களின் விளைவாக கண்டறிந்த சில படிப்பினைகள், சிந்தனை வெளிப்பாடுகள் என்பனவற்றின் தொகுப்பாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளிடம் ஆனையிறவு இராணுவத்தளம் வீழ்ச்சியுற்ற தருணத்தில் அரசாங்க அனுசரணையுடனான போரில் கால்வைப்பு நிலைமை தீவிரமாக்கப்பட்டு ஊடகத் தணிக்கை மேலும் தீவிரமாக்கப்பட்டிருந்த வேளையில் இக்கருத்தரங்கு நடைபெற்றிருந்தது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 546460).

**7213**

**யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற வெள்ளிவிழா மலர்.** மலர் வெளியீட்டுக் குழு. யாழ்ப்பாணம்: மாநகர சபை, 1வது பதிப்பு, 1974. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம்).
140 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x20 சமீ.

எஸ்.பொன்னுத்துரை, பொ.ஜெகநாதன் ஆகிய இரு எழுத்தாளர்களின் கைவண்ணத்தில் மலர்ந்த சிறப்புமலர் இது. அமரர் அல்பிரட் துரையப்பா அவர்கள் மாநகர மேயராக இருந்த வேளையில் இந்நூல் வெளியிடப்பட்டது. வாழ்த்துரைகள், மாநகரசபையின் பணிகள் பற்றிய தகவல்களுடன் சிறப்புக் கட்டுரைகளையும் கொண்டதாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 83422).

## 363 சுற்றாடல், சூழல் மாசுபடுதல்

**7214**

**குரு: சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்திட்டத்திற்குரிய படங்களும் தகவல்களும்.** எம்.ஷஹீல் காஸிம், எம்.விக்டர். கொழும்பு 14: வி.எஸ். கல்விக் குழு (V.S.Education Group), 1வது பதிப்பு, 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).
84 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 27.5x21 சமீ.

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்திற்குரிய படங்களும் தகவல்களும் உள்ளடக்கிய நூல். தாவரங்கள், பழங்கள், வித்துக்கள் பரம்பலடைதல், பூக்கள், எம்மைச் சூழவுள்ள பிராணிகள், இலங்கை, போக்குவரத்து, உபகரணங்கள், விஞ்ஞானம், உடுத் தொகுதி, தையல் முறைகள், பொது அறிவு, செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம், மாதிரி வினாத்தாள்கள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

### 7215

**சுற்றாடற் கல்வி: தரம் 6.** நா.மயில்வாகனம். கொழும்பு 3: நா.மயில்வாகனம், சென் தோமஸ் பாடசாலை, கொள்ளுப்பிட்டி, 1வது பதிப்பு, ஜனவரி 1999. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F-L 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

அரசின் புதிய கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய தரம் 6க்குரிய சுற்றாடற் கல்வி வழிகாட்டியாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மாணவர்களின் செயற்பாடே புதிய பாடத்திட்டத்தில் முக்கியம் பெற்றுள்ளது. தகவல் தேடலில் மாணவர்களுக்கு உதவும்வகையில் வழிகாட்டியாக இந்நூல் அமைந்துள்ளது.

### 7216

**சுற்றாடற் கல்வி: பயிற்சியும் செயல்நூலும்: தரம் 6.** கு.வி.அச்சக பதிப்பாசிரியர் குழு. கொழும்பு 13: கு.வி. அச்சக புத்தக நிலையம், 58, கிறீன் லேன், 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 13: கு.வி. அச்சகம், 58, கிறீன் லேன்).
(6), 58 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 25.5x19 சமீ.

தேசியக் கல்வி நிறுவகத்தால் 2004 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது. இந்நூலின் வழியாக மாணவர்கள் இல்லம், வீடுகளின் தன்மை, கிராமமும் நகரமும், நீர்வளம், நீரியல் பண்பாடு, உணவு, உணவுப் பண்பாடு, சக்தியும் தொடர்பாடலும், தொடர்பாடல், பயணமும் போக்குவரத்தும், மனிதனின் பயணமும் போக்குவரத்தும், பயண போக்குவரத்து முறைகளும் அவற்றின் வளர்ச்சியும் ஆகிய விடயங்களை அறிந்துகொள்வர்.

### 7217

**சூழல் உயிர்க்கோளம் மாசடைதல்.** மியூரியல் பெரேரா (மூலம்), A.G.N.H. பெரேரா, W.M.H.தசநாயக்க, வில்சன் திசாநாயக்க, R.P.A. ஜயசேகர, ந.வாகீசமூர்த்தி, ப.சபாரத்தினம் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press).
58 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், சூழல் மாசடைதல் என்றால் என்ன, வளிமண்டலம் மாசடைதல், நீர் மாசடைதல், விவசாய இரசாயனப் பொருட்களின் தீய விளைவுகள், கைத்தொழிலாற் சூழல் மாசடைதல் ஆகிய தலைப்புகளில் விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. சூழல் மாசடைதல் என்பது எதனைக் குறிக்கின்றது என்று ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டும், சூழல் எவ்வாறு மாசடைகிறது என்பதையும் அதைத் தவிர்ப்பதற்கான முறைகளையும் மாசடைதலைத் தவிர்க்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்நோக்கங்களைக் கருத்திற்கொண்டு இம்மொடியூல் எழுதப்பட்டுள்ளது.

***7218***

***பூகோளம் வெப்பமடைதல்.*** *எஸ்.அன்ரனி நோர்பேட். கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், 18, 6/1 கொலிங்வுட் பிளேஸ், 1வது பதிப்பு, பெப்ரவரி 2011. (கொழும்பு 6:* R.S.T.Enterprises, 114, W.A.Silva Mawathe).

***59 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1810-15-3.***

*சூசைப்பிள்ளை அன்ரனி நோர்பேட் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். இவர் புவியியல் கற்கையின் சமகாலச் செல்நெறிகளையும் மாற்றங்களையும் உடனுக்குடன் உள்வாங்கி கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் புதிய நுட்பங்களை விருத்தி செய்து வருபவர். பூகோளம் வெப்பமடைதல் என்ற இந்த நினைவுப் பேருரை தோழர் கம்யூனிஸ்ட் கார்த்திகேயன் அவர்களது 32ஆவது வருட நினைவுப் பேருரையாக 27.9.2010இல் நிகழ்த்தப்பட்டது. அறிமுகம், பச்சைவீட்டு வாயுக்களும் பூகோளம் வெப்பமடைதலும், பூகோளம் வெப்பமடைதலும் கடல்மட்ட மாற்றங்களும், பூகோளம் வெப்பமடைதலும் சுதேசிய மக்களும், பூகோளம் வெப்பமடைதலும் மனித உரிமைகளும், சர்வதேச மாநாடுகளும் எதிர்காலப் போக்குகளும் ஆகிய ஆறு தலைப்புகளில் இப்பேருரை விரிகின்றது.*

## *370 கல்வியியல்*

***7219***

***ஆரம்பக் கல்வியில் செயற்திறன்.*** *நிர்மலாதேவி நல்லையா. கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).*

xii, ***126 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-280-1.***

*கற்றல்-கற்பித்தல் தொடர்பான தேர்ச்சி மிக்கவர்களாக பெரும்பாலான ஆசிரியர்கள் உள்ளபோதும், அவர்களது செயற்பாடுகள் உடலாலும் உள்ளத்தாலும் சமூகச் சூழலாலும் பல்வகைமை கொண்ட மாணவர்களுக்குப் பொருத்தமானவையா என்னும் எழுவினாவின் பிரதிபலிப்பே இந்நூலாகும். கற்கும் பொருளைவிட கற்கும் மாணவர் பெறவேண்டிய முக்கியத்துவம், அவர்களது கற்கும் இயல்புகளை ஏற்று கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளல், அச்செயற்பாடுகளின் வினைதிறனை உறுதிப்படுத்துவதற்கான உத்திகள், கற்கும் மாணவரது முழுமையான விருத்தி, அவ்விருத்தியை பிரதான இலக்காகக் கொள்ள வேண்டிய வகுப்பறை முகாமைத்துவ, பாடசாலை முகாமைத்துவ நடைமுறைகள் முதலான பல அம்சங்களை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலாசிரியர் யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரியில் உப பீடாதிபதி யாகப் (நிர்வாகமும் நிதியும்) பணிபுரிகின்றார்.*

***7220***

***இலங்கையில் ஆசிரியத் தொழில்.*** *வி.கந்தவனம். யாழ்ப்பாணம்: ஆசிரியர் கழகம் (*The Teachers' Guild*), வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், வயாவிளான், 1வது பதிப்பு, கார்த்திகை 1978. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).*

***(16), 88 பக்கம், விலை: ரூபா 6.00, அளவு: 20.5x13.5 சமீ.***

*ஆசிரியர் கல்வி டிப்ளோமா பரீட்சைக்காக எழுதிய ஆய்வுக் கட்டுரையின் விரிவாக்கப்பட்ட பதிப்பு இதுவாகும். இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலம்வரை ஆசிரியத்தொழில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், தற்போது எவ்விதம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதையும் மிக நுணுக்கமாக இந்நூலில் எடுத்தாண்டிருக்கிறார். தொழில் வரலாறு, தொழிலிற் சேர்க்கப்படும் முறை, ஆசிரியர்கள் புரியும் கடமைகள், ஆசிரியர்களுக்குத் தேவையான கற்பித்தற் சாதன வசதிகள், ஆசிரியத் தொழிலிலுள்ளோர் எண்ணிக்கை, சம்பளத் திட்டங்கள், முன்னேறுவதற்கான சந்தர்ப்பங்கள், பதவி விலகல், விடுமுறை வசதிகள், சமூகத்துடன் ஆசிரியத் தொழில் கொண்டுள்ள தொடர்பு, ஆசிரியர்களும் அரசியல் உரிமைகளும் ஆகிய 11 தலைப்புகளில் முதலாவது பகுதி அமைகின்றது. இரண்டாவது பகுதியில்*

ஆசிரியத் தொழிலுடன் தொடர்பான சில பிரச்சினைகள் என்ற தலைப்பின்கீழ் கற்பித்தல் நிலை, நிர்வாக நிலை, அரசியல் நிலை, சமூக நிலை, பொருளாதார நிலை, உளப்பாங்கு நிலை ஆகிய ஆறு அம்சங்களின்கீழ் ஆசிரியத் தொழிலில் ஏற்படுகின்ற கஷ்டங்களை மிக விரிவாகத் தருகின்றார். சிறந்த ஆசிரியராக அமைவதற்கு வேண்டிய அறிவுரைகளை சமூகநிலை என்ற பிரிவில் வழங்கியிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 102485).

### 7221

**க.பொ.த (சா.தரப்) பரீட்சை 2008ம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கான வினாத்தாள் கட்டமைப்பும் மாதிரி வினாக்களும்.** ஆய்வு அபிவிருத்திக் கிளை. பத்தரமுல்ல: தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, 1வது பதிப்பு, மே 2008. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).
(10), 187 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.

இந்த அறிவுரைப்புக் கையேட்டின் பகுதி 1இல் பரீட்சை தொடர்பான பொது அறிவுறுத்தல்களும் பகுதி 2இல் ஒவ்வொரு பாட வினாத்தாளின் அமைப்பும் தன்மையும் பகுதி 3இல் ஒவ்வொரு பாடத்தின் வினாத்தாள்களிலும் உள்ளடங்கும் பல்வேறு வகையான வினாக்களுக்கான மாதிரி வினாக்களும் அடங்கியுள்ளன. இங்கு பல்வேறு வகை வினாக்களில் சில மாதிரி வினாக்கள் தரப்பட்டுள்ளன. இதன்மூலம் 2008ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெறும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகளின் வினாத்தாள்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இந்நூல் உலக வங்கியின் கல்வித்துறை அபிவிருத்தி கொடையின் ESDG பணிக்குழுவின் நன்கொடையில் வெளியிடப்பட்டது.

### 7222

**கல்வியில் எழுவினாக்கள்.** சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
viii, 108 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-85-1.

எழுவினாக்கள் எழுபொருள்கள் எனவும் குறிப்பிடப்படும். கல்விச் செயல்முறையின் விரைந்த மாற்றங்களுடன், பிரச்சினைகளும் தொடர்ந்து மேலெழுந்தவண்ணமிருக்கும். பிரச்சினைகளைக் குவியப்படுத்தும் கருத்தாடல்கள், நாம் செல்லும் வழியைச் செம்மையாக்க உதவும். அவ்வகையில் இந்நூல் கல்விப்புலத்தின் 16 விடயங்களையும் அதனூடாக எழும் வினாக்களுக்கு கருத்தாடல் முறையில் விளக்கங்களையும் வழங்குகின்றது. கல்வியில் சமத்துவமும் சம சந்தர்ப்பமும், சிவில் சமூகமும் கல்வியும், கல்வியியலும் கேடுறுத்தலும், இனக்குழும உறவுகளும் விளைவுகளும், கல்வி நிதி வழங்கல், மனித வள விருத்தியும் கல்வியும், பெண்களும் கல்வியும், கல்விக்குரிய தனிநபர் கேள்வியும் சமூகக் கேள்வியும், பல்கலைக்கழகக் கல்விப் பிரச்சினைகள், கல்வியில் பண்பும் தரக்காப்பீடும், முழுமைப்புல முகாமைத்துவமும் கல்வியும், அறிவுக் காலனித்துவமும் மறுவாசிப்பும், அறிவை முகாமைசெய்தல், செயல்நிலைக் கற்றலை முன்னெடுத்தல், மரபு வழியான கற்பித்தலிலிருந்து விலகுதல், ஆழ்கற்றல் ஆகிய தலைப்புகளில் விடயங்களை இந்நூல் ஆராய்கின்றது.

### 7223

**கல்வியில் புதிய தடங்கள்.** சோ.சந்திரசேகரன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
viii, 120 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-90-5.

இந்நூல் கல்வித்துறையில் ஏற்பட்டுவரும் புதிய மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் நமக்கு 16 கட்டுரைகளின் வாயிலாக அறிமுகம் செய்கின்றது. கலாநிதி பந்துல குணவர்த்தனாவின் 2009ம் ஆண்டு கல்வி அறிக்கை, இலங்கையின் கல்விமுறை எதிர்நோக்கும் பிரச்சினைகள், பாடசாலை மேம்பாட்டுத் திட்டம், இலங்கையில் சர்வதேசப் பாடசாலைகள், கைத்தொழில் சமூகமும் அறிவுசார் சமூகமும், அறிவுச் சமூகத்துக்கான எழுத்தறிவுத் திறன்கள், அறிவுப் பொருளாதாரத்தின் அறிவு

ஊழியர்கள், அறிவுமைய சமூகத்தில் அறிவின் பங்குகள், அறிவுப் பொருளாதாரம்: சிங்கப்பூரின் முன்மாதிரி, சிங்கப்பூரின் இருமொழிக் கொள்கை, உலகிற் சிறந்த பல்கலைக்கழகங்கள், காலாவதியாகும் பல்கலைக்கழகப் பட்டங்கள், பல்கலைக்கழகங்களில் வன்செயலும் பகிடிவதையும், மலேசியத் தமிழர்களின் கல்விப் பிரச்சினைகள், கண்டனத்துக்குள்ளாகியுள்ள இந்திய உயர்கல்வி, இந்தியாவின் ஒதுக்கீட்டுக் கொள்கை ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

### 7224

**கற்பித்தல்.** ஜெரே ப்ரோ.்.பி (ஆங்கில மூலம்), புஷ்பா சிவகுமாரன் (தமிழாக்கம்), சோ.சந்திரசேகரம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
71 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19.5x12.5 சமீ., ISBN: 978-955-659-085-4.

பயனுறுதிவாய்ந்த கற்பித்தலின் இனத்திற்குரிய அம்சங்கள் பற்றிய இக்கைந்நூல், சர்வதேசக் கல்வி மன்றத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டு சர்வதேசக் கல்விப் பணியகத்தினாலும் மன்றத்தினாலும் விநியோகிக்கப்படும் கல்விசார் செயற்பாடுகள் பற்றிய நூற்றொடரில் உட்படுத்தப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. கல்வியின் சகல பரப்புகளிலும், புலமைசார்ந்த முதன்மை நிலையை வளர்த்தல், சர்வதேசக் கல்வி மன்றத்தின் ஒரு நோக்கமாகும். இந்நோக்கத்தின் ஒரு பகுதியாக, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த கல்விசார் விடயங்கள் பற்றிய ஆராய்ச்சியின் சமயோசிதமான தொகுப்புகளை மன்றம் வழங்குகின்றது. பொதுவாகக் கற்றலை மேம்படுத்தும் கல்விசார் செயற்பாடுகள் பற்றிய நூற்றொடரில் இது முதலாவது கைந்நூலாகும். இது கல்வியின் மிக மையச் செயற்பாடாகிய கற்பித்தலில் கவனஞ் செலுத்துகின்றது. ஆதரவை வழங்கும் வகுப்பறைச் சூழல், கற்பதற்குச் சந்தர்ப்பம், பாடவிதான ஒழுங்கிணைப்பு, கற்றலுக்காகத் திசைமுகப் படுத்தல்களை நிறுவுதல், ஒத்திசைவான உள்ளடக்கம், சிந்தனைத்திறன் மிக்க உரையாடல், பயிற்சியும் பிரயோகச் செயற்பாடுகளும், மாணாக்கர்கள் பணியில் ஈடுபடுவதற்கு மேலதிக உதவி வழங்குதல், உத்திகள் பற்றிக் கற்பித்தல், ஒத்துழைப்புடன் கற்றல், இலக்கை நோக்கிய அளவீடு, அடைவு பற்றிய எதிர்பார்ப்புகள் ஆகிய 12 தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. ஜெரே ப்ரோ.்.பி மிச்சிகன் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் கல்விப்பிரிவின் பேராசிரியராவார்.

### 7225

**பரீட்சைகளுக்கு தயாராவது எப்படி?: மாணவர்-பெற்றோர்-ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்.** மா.சின்னத்தம்பி. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை).
38 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-290-0.

ஏன் படிக்கவேண்டும்? பரீட்சைகள் ஏன் முக்கியமானவை? பரீடசைகளில் சித்திபெறத்தவறினால் என்ன? நீங்கள் யார்? உங்கள் நண்பன் யார்? வீட்டில், பாடசாலையில், டியுசன் வகுப்பில் என்ன செய்யவேண்டும்? பாடம்-படிப்பு, வினா-விடை பற்றித் தெளிவுண்டா?பாடங்களில் உங்கள் நிலை யாது? உங்களது படிக்கும் முறை யாது? உங்களைப் பலமானவராக்க உதவிகள் தேவையல்லவா? பரீட்சைக்குத் தயாராகுவது எப்படி? முடிவாக? ஆகிய 12 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

### 7226

**பெற்றோரும் கல்வியும்.** ஜெரே ப்ரோ.்.பி (ஆங்கில மூலம்), புஷ்பா சிவகுமாரன் (தமிழாக்கம்), சோ.சந்திரசேகரம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
57 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19x12.5 சமீ., ISBN: 978-955-659-024-2.

பாடசாலைக் கற்றலின் மீது குடும்பம் செலுத்தும் செல்வாக்குப் பற்றிய ஆய்வுகள் குறிப்பிடத்தக்க வரலாற்றைக் கொண்டுள்ளன. புள்ளிவிபரங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது வறுமை, பாடசாலையில் தாழ்ந்த செயலாற்றலை உண்டுபண்ணக்கூடுமென்று எதிர்வு கூறலாம். எனினும் உற்சாகத்தை ஊட்டும் மொழிவளம் மிக்க ஆதரவான சூழல், சமூகப் பொருளாதாரச்

சூழ்நிலைகளை வெற்றிகொண்டு செயற்படமுடியும். வேறு விதமாகக் கூறினால் மாற்றி அமைக்கக்கூடிய வீட்டுப் பாடத்திட்டமானது- குடும்பத்தின் தொடர்புகள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கைக் கோலங்கள் உட்பட- குடும்பத்தின் அந்தஸ்தைவிட, நூல் கல்விகற்றல் பற்றிய மேலும் வலுவான எதிர்வுகூறும் கருவியாக அமையலாம். அதாவது, குடும்பத்தின் பொருளாதார நிலைமை எப்படி இருப்பினும், வீட்டுப்பாடத்திட்டத்தை மேம்படுத்துவதற்குப் பாடசாலை குடும்பங்களுடன் சேர்ந்து செயற்படலாம். இவ்வாறான கல்வி தொடர்பாக பாடசாலைக்கும் பெற்றோர்களுக்கும் இடையிலான தொடர்பினை இந்நூல் விபரிக்கிறது. ஜெரே ப்ரோ∴பி மிச்சிகன் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் கல்விப்பிரிவின் பேராசிரியராவார்.

மேலும் பார்க்க: *7052, 7167*

## 370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள்

### 7227

**கணேசதீபம்: யாழ். புங்குடுதீவு, ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் நூற்றாண்டு மலர் 1910-2010.** மலர் வெளியீட்டுக் குழு. யாழ்ப்பாணம்: ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம், புங்குடுதீவு, 1வது பதிப்பு, மார்ச் 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).
236 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x20 சமீ.

3.3.1910இல் அமரர் வ.பசுபதிப்பிள்ளை அவர்களால் தாபிக்கப்பட்டு, 3.3.2010 அன்று தனது நூற்றாண்டு விழாவைக்காணும் புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயத்தின் நினைவு மலர். 210 மாணவர்களையும் (இருபாலாரும்) 16 ஆசிரியர்களையும் கொண்டியங்கும் இப்பாடசாலையின் தற்போதைய அதிபராக எஸ்.கே.சண்முகலிங்கம் பணியாற்றுகின்றார். வாழ்த்துரைகள், நினைவுச் சுவடுகள், கவிதைக்களம், சிறுகதைகள், கட்டுரைகள் ஆகிய ஐந்து பெரும்பிரிவுகளில் அடங்கும் இம்மலரில் நினைவுச்சுவடுகள்- பாடசாலையின் வரலாற்றைப் பல்வேறு ஆவணக்கட்டுரைகளின் வாயிலாகவும் பழைய மாணவர்களின் அனுபவக்கட்டுரைகளின் வாயிலாகவும், புகைப்படத் தொகுப்பின் வழியாகவும் வழங்குகின்றது. கவிதைக்களம் 11 கவிதைகளையும், சிறுகதைக்களம்- நாவேந்தன் (சுடலை ஆண்டி), நாகேசு தர்மலிங்கம் (குங்குமப் பொட்டு) ஆகியோரின் கதைகளையும் அடக்குகின்றது. கட்டுரைகள் என்ற பிரிவில் புங்குடுதீவுக் கல்விப்பாரம்பரியம் அன்றும் இன்றும் (கா.குகபாலன்), புங்குடுதீவிலே நிலவிவரும் சமய பண்பாட்டு மரபுகள்- ஒரு நோக்கு (வி.சிவசாமி), மனித விழுமியக் கல்வியும் அதன் தேவையும் (குமாரசாமி சோமசுந்தரம்), புதுயுகமும் அதை நோக்கிய மாற்றங்களும் (மு.தளையசிங்கம்), பல்கலைக்கழக ஆய்வு நெறிமுறைகள் (கனகசபாபதி நாகேஸ்வரன்), இலக்கியமும் மொழித்திறன் வளர்ச்சியும் (த.துரைசிங்கம்), கல்வி உளவியல் ஆசிரியர் தொழிலுக்கு முன்னர் வழங்கப்படவேண்டியதன் அவசியம் (தர்மலிங்கம் ஸ்ரீகரன்), படைப்பாற்றல் பற்றிய சில கருத்தோட்டங்கள் (சோ.சந்திரசேகரம்), சிறுவர் இலக்கிய வளர்ச்சி: ஒரு நோக்கு (புலவர் பூங்குன்றன்), மனித உரிமைகள் கல்வி: வழிகாட்டியா அல்லது வாழ்க்கையா (வி.ரி.தமிழ்மாறன்), செல்வம் என்பது சிந்தையின் நிறைவே (இ.க.சிவஞானசுந்தரம்), கற்றலை அற்புதமாக்குதல் (மு.பொன்னம்பலம்), யான் கண்ட புங்குடுதீவு (குல சபாநாதன்), பூகோளமயமாக்கல் சூழலில் அறிவுருவாக்கம் (வி.எஸ்.இந்திரகுமார்), யாழ்ப்பாணத்தின் குடும்ப அமைப்பு ரீதியான மாற்றம் (ந.சசிகுமார்), சாதி-தமிழினச் சாபக்கேடு: ஒரு திறந்த மடல் (சிவஞானசுந்தரம் பகிராஜ்), தீவகம் ஒரு வரலாற்று நோக்கு (வி.சிவசாமி) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்று மலரைச்சிறப்பிக்கின்றன.

### 7228

**கல்லூரி வளர்ந்த கதை: நினைவுப் பதிவுகள்.** திருநாவுக்கரசு கமலநாதன். யாழ்ப்பாணம்: திருநாவுக்கரசு கமலநாதன் மணிவிழாக் குழு, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி, தபால் பெட்டி எண் 01, கோப்பாய், 1வது பதிப்பு, மார்கழி 2006. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 48 B, புளூமெண்டால் வீதி).
xii, 46 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

ஆசிரிய பரம்பரையை உருவாக்கிவரும் கோப்பாய் பிரதேசத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணத் தேசிய கல்வியியல் கல்லூரியின் வரலாற்றினை இவ்வமைப்பின் தாபகர், பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன்

அவர்களின் வாயிலாக இந்நூல் ஆவணப்படுத்துகின்றது. ஒரு தேசிய கல்வியியல் கல்லூரியை நிறுவுவதற்கான செயற்பாட்டில் தாம் எதிர்கொண்ட சிக்கல்கள் சவால்கள் என்பன விரிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 41063).

### 7229

**சர்வகலாசாலைத் தமிழ்ப் பத்திரிகை: தொகுதி க (1).** மு.பாலசுந்தரம் (ஆசிரியர்). பேராதனை: சர்வகலாசாலைத் தமிழ்ச் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி, 1வது பதிப்பு, 1924. (அச்சக விபரம் தரப்படவில்லை).
50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

பேராதனையில் சர்வகலாசாலைத் தமிழ்ச்சங்கம் உதயமாகி இரண்டு வருடங்களில் இந்த மலர் வெளியிடப்பட்டுள்ளது. 1923-1924 காலத்திற்குரியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலிரு வருடங்களும் தலைவராக (அக்கிராசனர்) திரு. செ.சுந்தரலிங்கம் இருந்துள்ளார். மூன்றாம் ஆண்டு திரு. அ.விநாயகம்பிள்ளை தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். அக்காலகட்டத்தில் பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்க்க இச்சங்கம் பட்டபாடுகள் அதன் வருடாந்த அறிக்கைப் பத்திரத்தில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவர்களின் ஆக்கங்களும் அறிக்கைகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19142).

### 7230

**யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர்: 1911-2011.** ரஞ்சினி சாம்பசிவம் (மலராசிரியர்). யாழ்ப்பாணம்: நூற்றாண்டு மலர்க்குழு, உரும்பிராய் இந்துக் கல்லூரி, உரும்பிராய், 1வது பதிப்பு, சித்திரை 2011. (கொழும்பு: Andra Digital Images)
lxx, 288 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x18 சமீ.

03.04.2011 அன்று இடம்பெற்ற மேற்படி கல்லூரியின் நூற்றாண்டுவிழா நினைவாக வெளியிடப்பட்ட சிறப்புமலர் இதுவாகும். மேற்படி மலர் வெளியீட்டுக்குழுவின் தலைவராக கல்லூரி முதல்வர் அப்பாத்துரை ஈஸ்வரநாதன் இயங்கியுள்ளார். மலர் வெளியீட்டுக்குழு உறுப்பினர்களாக கே.உருத்திரகுமாரன், திருமதி எஸ்.சிறீதரன், திருமதி வி.சண்முகசுந்தரமூர்த்தி, திருமதி எம்.சிவசிதம்பரலிங்கம், எம்.ஆர்.நரேந்திரா, கே.திருமாலழகன், கே.செல்வச்சந்திரன், எஸ்.சிவகுமாரன் ஆகியோர் இயங்கியுள்ளனர். மேற்படி பாடசாலையின் வரலாறுகூறும் இம்மலரில் வாழ்த்துரைகளுடன், பாடசாலை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் அறிஞர்களினதும் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும் பார்க்க: 7167

## 380 வர்த்தகம், தொடர்புகள், போக்குவரத்து

### 7231

**சாரத்தியம்: சவால்களும் சாமர்த்தியமும்.** த.பேரின்பநாயகம். கொழும்பு: த.பேரின்பநாயகம், 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 5: Softwave Printing and Packaging Ltd, 107/D, Havelock Road).
152 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-599-369-6.

ஒய்வுபெற்ற பிரதி பொலிஸ் மா அதிபர் த.பேரின்பநாயகம் அவர்கள் எழுதியுள்ள இந்நூலில், மோட்டார் வாகனச் சாரதிகள் அறிந்திருக்க வேண்டிய அவசிய விடயங்கள் யாவும் மிகத்தெளிவான முறையில் தரப்பட்டுள்ளன. பாதுகாப்பாக மோட்டார் வாகனம் செலுத்துவதற்கு வேண்டிய அடிப்படைத் தகவல்களை இலகுவான மொழிநடையில் இந்நூல் வழங்குகின்றது. நீண்டகாலம் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பாய் இருந்த நூலாசிரியரின் அனுபவங்கள் இந்நூலின் படைப்பிற்கு உறுதுணையாகியுள்ளன. திரு பேரின்பநாயகம்

போக்குவரத்து நிருவாகம், வீதிப்பாதுகாப்பு பணிப்பாளராகவும், போக்குவரத்துக்கான பிரதி பொலிஸ்மா அதிபராகவும் 15 ஆண்டுகள் சேவையாற்றியவர். தேசிய வீதிப் பாதுகாப்பு மன்றத்தின் தலைவராகவும் இலங்கை வீதி விபத்துகள் தடுப்புச் சங்கத்தின் தலைவராகவும் பணிபுரிந்தவர். இவரது சேவைகளுக்காக 2003ம் ஆண்டு சர்வோதய தேசிய விருதையும் பெற்றுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37327).

## 381 வர்த்தகம்

### 7232

**சேவை சந்தைப்படுத்தல்: ஓர் அறிமுகம்.** சிவானந்தமூர்த்தி சிவேசன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
xii, 140 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 380., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-92-9.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிகப் பட்டதாரியான சி.சிவேசன் தற்போது அப் பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் துறையில் விரிவுரையாளராக உள்ளார். சேவை சந்தைப்படுத்தல் (Service Marketing) தொடர்பான இந்நூல் சேவை சந்தைப்படுத்தல் பற்றிய ஓர் அறிமுகம், சேவைத்தரம், சேவை சந்தைப்படுத்தலில் வாடிக்கையாளர் நடத்தை, சந்தை துண்டமாக்கல், சேவை சந்தையிடுதல் தந்திரோபாயம், சேவைச் சந்தைப்படுத்தலில் விலையிடலின் பங்கு, சேவைச் சந்தைப்படுத்தலில் மேம்படுத்தல் நடவடிக்கையின் பங்கு, சேவை நிறுவனங்களின் ஊழியர்களை முகாமைசெய்தல், சந்தை ஆராய்ச்சி ஆகிய ஒன்பது தலைப்புகளில் இவ்விடயத்தை விரிவாக ஆராய்கின்றது.

## 390 நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும்

## 392 வாழ்வியல் வழக்குகள், வாழ்க்கை முறைமைகள்

### 7233

**குடும்பத்துள் வாழ்தல்: தாயக புலம்பெயர் மக்களிடையே ஒரு நோக்கு.** க.அருந்தவராஜா, அன்பரசி அருந்தவராஜா. சுவிட்சர்லாந்து: கலை இலக்கியப் பேரவை, ஜெனீவா, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 6: றண்யாஸ் கிறப்பிக்ஸ்).
xii, 101 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

தாயகத்திலும் புலம்பெயர் வாழ்விலும் கிடைத்தவையும், கண்டுகொண்டவையுமான அனுபவங்கள், தமது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் ஊடாகக் கிடைத்த அறிதல்கள், பட்டறிவுகள் ஆகியவற்றின் துணைகொண்டு இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. பெற்றோரின் உன்னதமான பாத்திரத்தை இந்நூல் எடுத்து விளக்குகின்றது. சமூகத்தின் அத்திவாரமான குடும்பத்தில் நிகழும் சந்தோஷம், துக்கம், நெருக்கடி, ஆபத்துக்காலங்களில் அதன் தலைமைப் பாத்திரம் ஏற்பவரும் குடும்ப உறுப்பினர்களும் எவ்வாறு நடந்துகொண்டு நல்ல தீர்வினை எய்தலாம் என்பதையும் இந்நூல் கோடிட்டுக் காட்டுகின்றது. நடைமுறையில் நிலவுகின்ற குடும்ப நிர்வாக முறைகளான தந்தைமுறை, சர்வாதிகார முறை, ஜனநாயக முறை, சந்தர்ப்ப அனுகுமுறை என்பவற்றை பகுப்பாய்வுக்கு உட்படுத்தி விவாதிப்பது சுவையாக உள்ளது. இவை அனைத்தும் அறிமுகம், வழிகாட்டுதல்கள் ஏன், பிள்ளைகளைஅறிந்து கொள்ளல், குடும்பமும் தலைமைத்துவமும், தமிழர் இல்ஊடகம், குடும்ப முறிவுகள் ஆகிய ஆறு இயல்களில் எழுதப்பட்டுள்ளன.

### 7234

**யார் உயர்ந்தவர்கள்: ஆண்களா பெண்களா?** ரூபா செல்வச்சந்திரன் (புனைபெயர்: ரூபா செல்வா). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600015: எம்.கே.என்டர்பிரைஸஸ்).
iv, 80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இறைவனின் படைப்பில் முக்கிய பங்காகச் செயற்படும் குடும்பம் என்னும் அமைப்பைக் குறித்துப் பல்வேறு கோணங்களில் தான் சார்ந்த கிறிஸ்தவ இறையியல் பார்வையில் கருத்துக்களை ஆசிரியர் முன்வைக்கிறார். யார் யாருக்காக சிருஷ்டிக்கப்பட்டார்? பெண்கள் ஆண்களுடன் ஒன்றாக ஆளும் கட்சியினரா இல்லை எதிர்க்கட்சியினரா? பெண்கள் ஆண்களைவிட பலவீனமானவரா? முற்காலத்தில் பெண்கள் தரக்குறைவாகக் கணிக்கப்பட்டதேன்? இக்காலத்தில் பெண்கள் சர்வ சமத்துவம் கோருவது சரியா? இறைவன் தம்மைப் பெண்கள் அணுக இடமளித்தாரா அல்லது விலக்கிவைத்தாரா? இக்காலத்துப் பெண்களின் தகுதிகள் எவை போன்ற கேள்விகளுக்கு விடையளிப்பதாக அமையும் இந்நூல் கணவன் மனைவியரிடையே ஒருவருக்கு ஏற்படும் புகழ்ச்சி அடுத்தவருக்கு எற்படும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்றும் கணவன் மனைவி இருவரும் தம்மை எதிரெதிர் கட்சிகளில் இருத்திக்கொள்ளாமல் ஒரே கட்சியில்-ஆளும் கட்சியில் இருத்திக்கொள்ளவேண்டும் என்றும் அதுவே குடும்பம் இனிதாக அமைய வழி என்றும் அறிவுரை நல்குகின்றது.

## 392.5 திருமணங்கள், சடங்கு முறைமைகள்

### 7235

**திருமணம்.** செ.தெல்லியூர். (இயற்பெயர்: செ.நடராசா). யாழ்ப்பாணம்: தெ.செ.ந.கனகவேல்ராசா, தமிழ்மணி பதிப்பகம், 15/3, குமாரசாமி வீதி, 1வது பதிப்பு, சித்திரை 1964. (யாழ்ப்பாணம்: விவேகானந்த அச்சகம்).
41 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

ஜோதிடம் சஞ்சிகையின் அனுபந்தமாக வெளியிடப்பட்ட இந்நூல் பல்வேறு நூல்களிலுமிருந்து கடைந்தெடுத்த திருமணம் பற்றிய கருத்துக்களை சோதிட சாஸ்திர ஆதாரங்களுடன் விளக்குகின்றது. கந்தர்வ விவாகம் உள்ளிட்ட உலகில் உள்ள எண்வகை விவாகங்களில் மணமகனின் பெற்றோரும், மணமகளின் பெற்றோரும் கூடித் தம்முட் கலந்துபேசி சுப முகுர்த்தமொன்றில் இருவரையும் தம்பதிகளாக்கித் திருமண கிருத்தியங்களை நடத்திவைப்பது பிராம்ம விவாகம் என்று சொல்லப்படுகின்றது. இந்நூல் இவ்வகை விவாகம் பற்றிப் பேசுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37417).

### 7236

**மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும்.** ந.வேல்முருகு. யாழ்ப்பாணம்: வாசகர் பதிப்பகம், 857, நாவலர் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1993. (கண்டி: செனித் அச்சகம், 192, கொட்டு கொடல்ல வீதி).
viii, 44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

இலங்கைப் பெருந்தோட்டங்களில் வாழும் இந்திய வம்சாவளியினரின் சமூக புவியியல் என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு ஆசிரியர் சமர்ப்பித்த ஒரு ஆய்வேட்டின் ஒரு இயல் இங்கு நூலுருவாக்கப்பட்டுள்ளது. 1981இல் மலையக மக்கள் வாழ்ந்த முழுப் பிரதேசமும் (பதினொரு மாவட்டங்கள்) இவ்வாய்வில் உள்ளடங்குகின்றன. உயர்நிலப் பிரதேசம், இடைநிலப் பிரதேசம், தாழ்நிலப் பிரதேசம் என்ற மூன்று பிரிவுகளில் இடம்பெறும் இவ்வாய்வில் கொவரகல, கிறேக், கோடன், டன்சினானே, வோல்ரிம், லக்சபான, ஆகிய உயர்நிலப் பிரதேசத் தோட்டங்களும், வலபொட, கவுபே, பானாவத்தை, கிறேகெட், டெல்ரா, பிற்றகந்த ஆகிய இடைநிலப் பிரதேசங்களும், ஆண்டபன, பெந்தொட்டை, அம்பத்தென, முவன்கந்த, செவகந்த, நோத் மாத்தளை, ஆகிய தாழ்நிலப் பிரதேசங்களும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 466056).

## 395 நாட்டார் கலைகள்

### 7237

**ஈழத் தமிழர் கிராமிய நடனங்கள்.** சபா ஜெயராசா. யாழ்ப்பாணம்: போஸ்கோ பதிப்பகம், நல்லூர், 1வது பதிப்பு, 2000. (யாழ்ப்பாணம்: போஸ்கோ பதிப்பகம், நல்லூர்).
(6), 110 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.

ஈழநாட்டின் கலைச்செல்வங்களில் சிறப்புப்பெற்று விளங்கும் கிராமிய நடனங்களை முதியோர் வாயிலாகக் கேட்டும், கள ஆய்வுகள் செய்தும் இந்நூலாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எமது கிராமிய நடனங்களையும் அவற்றோடு தொடர்புடைய பண்பாட்டு பரிமாணங்களையும் அறிவுக் கையளிப்பினையும் நூலாசிரியர் தெளிவாகத் தொகுத்துள்ளார். உலகப் பாரம்பரியத்தில் தொன்மையான நடனங்களும் நடனக் கல்வியும், தமிழர் பாரம்பரிய நடனக் கோட்பாடுகள், கரக நடனம், காவடி நடனம், கும்மி நடனம், குதிரையாட்டம், கோலாட்டமும் கழியாட்டமும், ஏந்தல் நடனங்கள், ஆலாபரண நடனம், உருவேறிய நடனம், முகமூடி நடனங்கள், தொழில்சார் நடனங்கள், கிராமியக் கூத்துக்கள், பாவைக் கூத்துக்கள், நாட்டார் கலைக் கோட்பாடுகள் ஆகிய 15 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 137559).

## 398 கிராமிய இலக்கியங்கள்

### 7238

**அழகு சுந்தரி ஒப்பாரி.** வீ.எஸ்.கோவிந்தசாமி தேவர். அட்டன்: வி.எஸ்.கோவிந்தசாமி தேவர், 1வது பதிப்பு, 1970. (அட்டன்: மவுண்ட் அச்சகம்).
14 பக்கம், விலை: சதம் 50., அளவு: 21x13.5 சமீ.

ஒப்பாரிப்பாடல்களை உள்ளடக்கிய நாட்டார் இலக்கிய நூல். தகப்பனாருக்கு மகள் புலம்பல், கடல்கடந்த மக்கள் ஒப்பாரி, தாயாருக்குப் புலம்பல், புருஷனுக்குப் புலம்பல், மகனுக்குப் புலம்பல், அண்ணனுக்குப் புலம்பல், தம்பிக்குப் புலம்பல் ஆகிய ஏழு ஒப்பாரிப் பாடல்களை இந்நூல் உள்ளடக்கியது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119885).

### 7239

**எதிர் கொள்ளக் காத்திருத்தல்: கூத்து வரிசை.** குழந்தை ம.சண்முகலிங்கம். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்).
(4), 36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இத்தொகுதியில் இடம்பெறும் மூன்று நாடகங்களும் இறைமகன் யேசு கூறிய மூன்று உவமைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை. இவை அடிப்படையில் பெருமளவில் எமது பாரம்பரிய நாடக வடிவங்களில் ஒன்றான நாட்டுக்கூத்தினை அடித்தளமாகக்கொண்டு அமைக்கப்பட்டவை. உன் அயலவன் யார்?, நல்ல மேய்ப்பன் ஆகிய இரு நாடகங்களும் ஆண்டு 5க்கு உட்பட்ட மாணவர்களுக்கேற்றவகையில் எழுதப்பட்ட சிறுவர் கூத்துருக்கள். எதிர்கொள்ளக் காத்திருத்தல் என்ற நாடகம், யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் மறை ஆசிரியர்களாகப் பயிற்சிபெறுவோருக்காக பிரத்தியேகமாக எழுதப்பட்டது.

### 7240

**காலத்தின் காலடி: நாட்டுக் கூத்துகளின் தொகுப்பு.** தமிழ்ச் சங்கம். பேராதனை: தமிழ்ச் சங்கம், பேராதனைப் பல்கலைக் கழகம், 1வது பதிப்பு, மார்ச் 1997. (தெகிவளை: டெக்னோ பிரின்ட். 83, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில).
(10), 50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

வாலிவதை, இராவணன் வதம், கர்ணன், புதுயுகம் படைப்போம், அபிமன்யு ஆகிய ஐந்து கூத்துகளின் எழுத்துரு இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நாட்டுக் கூத்துக்கள் யாவும் பேராதனைப்

பல்கலைக்கழக மாணவர்களால் மேடையேற்றப்பட்டவை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 498851).

### 7241

**குருமணி யோசவ் வாஸ்: நாட்டுக்கூத்து.** ஆ.தேவசகாயம்பிள்ளை. யாழ்ப்பாணம்: நாடகப் பிரதியாக்கப் பகுதி, திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு : லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்).
(8), 90 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x14.5 சமீ.

இந்நூல் பாஷையூர் புனித அந்தோனியார் பங்கைச் சார்ந்த புலவர் ஆ.செகராசசிங்கம் அவர்களால், பாஷையூர் கட்டளைக் குரவராக இருந்த அருட்திரு பிரான்சீஸ் அடிகளாரின் வேண்டுகோளின்பேரில் பாடப்பட்டு 1988ஆம் ஆண்டு ஆனி மாதம் 16ம் நாள் யாழ். ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை, புலவர் அருள்திரு நீ.ம.சவரிமுத்து அடிகள், பாஷையூர்க் கட்டளைக்குரவர் எஸ்.ஜெபநேசன் அடிகள் முன்னிலையில் இந்நாடகம் அரங்கேற்றப்பட்டது. யோசவ்வாஸ் முனீந்திரர் இலங்கையின் அபோஸ்தலர் எனப் போற்றப்பட்டு புனிதப் பட்டம் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட காலகட்டத்தில் அவரது பணிகளைச் சித்திரிக்கும் இந்நாடகம் உருவாக்கப்பட்டது.

### 7242

**ஞானசவுந்தரி: தென்மோடி நாடகம்.** ஞா.ம.செல்வராசா (பாடியவர்), எஸ்.செபஸ்தியாம்பிள்ளை (பாடுவித்தவர்), சில்லையூர் செல்வராசன் (பதிப்பாசிரியர்). கொழும்பு: காவலூர் புனித அந்தோனியார் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1972. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).
xii, 104 பக்கம், புகைப்படத் தகடு, விலை: ரூபா 2.50, அளவு: 18.5x12.5 சமீ.

ஞானசவுந்தரி நாடகத்தைத் தென்பாங்குக் கூத்துவடிவில் தமிழிற் பாடியவர் மாதோட்டப் புலவர் சூசைப்பிள்ளை மரிசாற்பிள்ளை. புலவர் மரிசாற்பிள்ளை மன்னார் முசலிப் பகுதி புதுவெளிக் கிராமத்தில் வாழ்ந்த பிரசித்த நொத்தாரிசும் வித்துவானுமாகிய மு.நெயினா முகம்மது மரைக்காயருடன் கல்வித்தொடர்பு கொண்டிருந்தவர். ஆயுர்வேதம், சோதிடம் போன்றவற்றில் ஈடுபாடுகொண்டிருந்தவர். 1905ம் ஆண்டில் தம் வாசஸ்தலத்தை கற்கிடந்த குளத்திலிருந்து நானாட்டானுக்கு மாற்றிக்கொண்ட பின்னர் பெரியகட்டைக்காடு சின்ன வயித்தியாம்பிள்ளை என்னும் பெருமகனார் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்நாடகத்தைப் பாடினார். இந்நாடகம் 1910ம் ஆண்டில் பெரியகட்டைக்காட்டிலும், 1920ம் ஆண்டில் நானாட்டானிலும், 1942இல் அடம்பனிலும் மேடையேற்றப்பட்டது. இது இரண்டு இரவுகளாகத் தொடர்ந்து ஆடப்பெறும் கூத்தாகும். இத்தகைய பின்னணியுடனான ஞானசவுந்தரி பின்னாளில் காவலூர் (ஊர்காவற்றுறை) அந்தோனியார் கல்லூரியின் நூற்றாண்டு விழா ஆவணி 1972இல் கொண்டாடப்பட்ட வேளையில், இக்கல்லூரியில் தொழில்நுட்பப் பயிற்சிக் கழகம் என்ற பெயரில் புதிய கட்டிடமொன்றை நிறுவ முன்வந்த பழைய மாணவர்களின் நிதி சேகரிப்பிற்காக அக்கல்லூரியின் பழைய மாணவர்களால் மீளப்பாடி மேடையேற்றப்பட்டது. அதன் நூலுருவே இதுவாகும்.

### 7243

**நெஞ்சோடு கொஞ்சும் நாட்டார் பாடல்கள்.** ஈழவாணி (இயற்பெயர்: அன்ரனி வாணி ஜெயா). வவுனியா: சூரியன் வெளியீட்டகம், 1வது பதிப்பு, மார்ச் 2006. (வவுனியா: கலைமகள் அச்சகம்).
xxvi, 287 பக்கம், விலை: ரூபா 275., அளவு: 20x14.5 சமீ.

முதியோர் வாயிலிருந்து பெற்ற பாடல்கள், அவர்கள் கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்த பாடல்கள், நாட்டார் பாடல் தொகுதிகளிலிருந்து பெற்ற பாடல்கள் என இத்தொகுப்பில் பரவலாக இந்நூலாசிரியர் இடம்பெறச் செய்துள்ளார். நாட்டார் வழக்காற்றியல், இலக்கியங்களில் நாட்டார் பாடல்களின் தாக்கம், மட்டக்களப்பில் நாட்டார் பாடல்கள், மலையக நாட்டார் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், குழந்தைப் பருவப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தொழிற் பாடல்கள் (மலைநாட்டுத் தொழிற்பாடல்கள், வேளாண்மைப் பாடல்கள்), பள்ளு (கதிரைமலைப்

பள்ளு, பண்டிப் பள்ளு, குருவிப் பள்ளு), சிந்து, கதைப்பாடல், கடற்தொழில் பாடல்கள், காதல் பாடல்கள், தெம்மாங்குப் பாடல்கள், பறங்கிப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் ஆகிய 17 தலைப்புகளில் விரிவாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இளம் எழுத்தாளரும் பத்திரிகையாளருமான ஈழவாணி இலக்கிய ஈடுபாடு மிக்கவர். நிறங்கள் சிறுகதைத் தொகுப்பையும், சிதறல் கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டவர். செந்தணல் செய்திப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 608237).

### 7244

**மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்.** சு.வித்தியானந்தன் (பதிப்பாசிரியர்). இலங்கை: தமிழ் நாடகக் குழு வெளியீடு, இலங்கை கலைக்கழகம், 2வது பதிப்பு, கார்த்திகை 1962, 1வது பதிப்பு, 1960. (கண்டி: ரோயல் அச்சகம், 190 கொழும்பு வீதி).
82 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 21x14 சமீ.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் இலங்கைக் கலைக்கழகத் தலைவராக இருந்த வேளையில் ஈழத்தின் பலபகுதிகளைச் சேர்ந்த நாட்டார் பாடல்களைத் தொகுப்பதிலே ஈடுபட்டிருந்தார். பாமர மக்களின் உணர்ச்சிக் கவிவளமுள்ள பாடல்களை காலவெள்ளத்தில் அழிந்துவிடாது பாதுகாக்கும் நோக்கில் அவர் தேடித்தொகுத்தவை இவை. இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக்குழுவின் 4ஆவது வெளியீடாக இது வெளிவந்துள்ளது. காதலன், காதலி, தோழி, தாயார் ஆகியோரின் கூற்றாய் உள்ள கவிகள், பொதுப்பாடல்கள், பொலிப்பாட்டு, ஏர்ப்பாட்டு ஆகிய இரு பிரிவுகளில் அமைந்த தொழில்முறைப்பாடல்கள், கொம்பு விளையாட்டுப் பாடல்கள் ஆகிய பிரிவுகளில் இப்பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 169320).

### 7245

**மட்டக்களப்பு மாநில உபகதைகள்.** க.தா.செல்வராஜகோபால் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: மாவட்ட கலாசாரப் பேரவை, 1வது பதிப்பு, டிசம்பர் 1985. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).
(4), 64 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 18x12.5 சமீ.

மட்டக்களப்பு மாநிலத்தில் கர்ணபரம்பரையாக வழக்கிலிருந்த பல உபகதைகளின் தொகுப்பு இதுவாகும். கதிர்காமத்துக்குப் பலாப்பழம், பஞ்சமிப் பேய்க்கதை, ஒட்டுவக்கான் ஒட்டு, சூடுதிருப்பியும் தட்டுக்குத்தியும், நாககட்டுக் கதை, பூனை வீடுகட்டிய கதை, கல்லுமாடு புல்லுத் தின்ற கதை, யோதயன் கட்டு, ஆக்காண்டி ஆக்காண்டி, தாந்தி என்றேன் ஓந்தி என்றேன், அது எனக்காகாது இது உனக்காகாது, காகமும் கிளியும், பூரணையமுதுக் கதைகள், தவிட்டுப் பிட்டும் தாரா இறைச்சியும், ஆணலை பெண்ணலை அல்லது புன்னைமரக் கதை, ஆலாவும் நரியும், வாளைமீன் கதை ஆகிய 17 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 435932).

### 7246

**மண்ணின் மைந்தர்கள்: சிறீ விக்கிரம இராசசிங்கன் நாட்டுக்கூத்து.** முடியப்பு அருள்பிரகாசம். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, 2006. (யாழ்ப்பாணம்: வஸ்தியான்அச்சகம், சுண்டுக்குளி).
xiv, 55 பக்கம், சித்திரம், விலை: ரூபா 100., அளவு: 20.5x15 சமீ.

கலைச்செல்வர், கூத்திசைப்பாவலன், மரபுக்கலைச்சுடர் ஆகிய பட்டங்களைப் பெற்ற அண்ணாவியார் மு.அருள்பிரகாசம் எழுதிய 17ஆவது நூல் இது. பாசையூர் புதுவையூர் கலாமன்றம் பதிப்பரிமை பெற்றது. தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்துவதாக இந்நாட்டுக்கூத்து அமைக்கப்பட்டுள்ளது. அந்நியப் படையெடுப்புகளுக்குப் பணியாது நீண்டகாலம் எதிர்த்துநின்ற கண்டி அரசின் மன்னனான ஸ்ரீவிக்கிரமராசசிங்கனின் கதை. இந்திய நாயக்க வம்சத்துத் தமிழனான கண்ணுச்சாமி (ஸ்ரீவிக்கிரம ராசசிங்கன்) மீது கொண்ட காழ்ப்புணர்வினாலேயே ஒரு சில சிங்களப் பிரதானிகள் சூழ்ச்சியின்மூலம் அவனை அந்நியரிடம்

காட்டிக்கொடுத்தனர் என்று இக்கூத்துரு வெளிப்படுத்துகின்றது. அதேவேளை மன்னன் போரில் தோற்று மறைவிடம் தேடியவேளையில் சிங்களவரான உடுப்பிட்டிய கெதர அப்புராள ஆராச்சி என்பவனே மன்னனுக்குப் புகலிடம் தந்து அதன்காரணமாகத் தன் உயிரையும் விலையாகக் கொடுக்கவேண்டி நேர்ந்ததையும் இந்நாடகம் பதிவுசெய்கின்றது. இந்நூல் 2006ஆம் ஆண்டு இலங்கை இலக்கியப் பேரவையின் விருது பெற்றது.

### 7247

**மலைநாட்டு தொழிலாளர் பாட்டு.** சோமு பெரீ. இருளப்பா. கண்டி: சோமு பெரீ. இருளப்பா, அந்தோனிமலை, 1வது பதிப்பு, மே 1962. (கண்டி: குருநாதன் அச்சகம், இல.37, இராஜவீதி).
10 பக்கம், விலை: சதம் 25., அளவு: 18.5x12.5 சமீ.

இலங்கையின் மலையகத் தோட்டத் தொழிலாளிகளான இந்திய வம்சாவளித் தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகளையும் வாழ்வியல் அவலங்களையும் கவிநயத்துடன் சித்திரிக்கும் வகையில் இப்பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. தொழிலாளர் தோட்டங்களில் வேலைசெய்யும்போது, சலிப்பின்றிப் புத்துணர்ச்சிபெற கவித்துவமான இப்பாடல்கள் துணைபுரிந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 89575).

### 7248

**மன்னார் நாட்டுப் பாடல்கள்.** சு.வித்தியானந்தன் (பதிப்பாசிரியர்). மன்னார்: மன்னார் மாவட்டப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் வெளியீடு, 1வது பதிப்பு, ஆனி 1964. (கண்டி: ரோயல் அச்சகம்).
46 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 21.5x14 சமீ.

பேராசிரியர் வித்தியானந்தன் ஈழத்தின் பலபகுதிகளைச் சேர்ந்த நாட்டார் பாடல்களைத் தொகுப்பதிலே ஈடுபட்டார். பாமர மக்களின் உணர்ச்சிக் கவிவளமுள்ள பாடல்கள் காலவெள்ளத்தில் அழிந்துவிடாது பாதுகாக்கும் நோக்கில் அவர் தேடித்தொகுத்த மன்னார் மாவட்டத்தில் வழங்கிவந்த பாடல்கள் இவை. காதற் பாடல்கள் (காதலன் பாடல்கள், காதலன்-காதலி பாடல்கள், தனிப்பாடல்கள், வரிசைத்துரை மயிலாள் பாடல்கள்), அரிவிவெட்டுப் பாடல்கள், நடைவழிச்சிந்து, பொதுப் பாடல்கள் ஆகிய பிரிவுகளின்கீழ் இப்பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 182483).

### 7249

**மாவீரன் சங்கிலியன்: நாட்டுக்கூத்து.** முடியப்பு அருள்பிரகாசம். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2010. (யாழ்ப்பாணம்: வஸ்தியான் அச்சகம், சுண்டுக்குளி).
(16), 56 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

நாட்டுக்கூத்துக் கலைஞர் கலாபூஷணம் மு.அருள்பிரகாசம், நாட்டுக்கூத்தினை வழிவழியாகப் பேணிவரும் பாசையூர் கிராமத்தை வாழ்விடமாகக் கொண்டவர். இக்கிராமத்தைச் சேர்ந்த நாட்டுக்கூத்துப் புலவர்களான அதிரியார், சுவாம்பிள்ளை, தொம்மையர், மிக்கோர்சிங்கம், கிறிஸ்தோப்பர், செகராசா, சூசைப்பிள்ளை, ஆகியோர் வரிசையில் புகழ்பெற்ற இவர், புலவராக மாத்திரமின்றி மேடைக் கலைஞராகவும் அறியப்பட்டவர். மாவீரன் சங்கிலியன் நாட்டுக்கூத்து நூல் முடியப்பு அருள்பிரகாசத்தின் நாட்டுக்கூத்து வடிவத்தையும் கவித்துவத்தின் மகிமையையும் கோடிட்டுக்காட்டுவதாக அமைந்துள்ளது. பாடல்கள் விருத்தங்கள் மிகவும் நேர்த்தியாக மரபுவழியில் இருக்கின்றன. வீரம், ஆவேசம், வஞ்சகம், காதல் பாடல்களுக்கான மெட்டுகள் ஆங்காங்கே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 7250

**மானத் தமிழ் மறவன்: சங்கிலியன் கூத்து.** சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, நவம்பர் 1993. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்).

x, 34+xvi பக்கம், விலை: ரூபா 45., அளவு: 20x14 சமீ.

யாழ். இலக்கிய வட்டத்தின் 54ஆவது வெளியீடாக இந்நாட்டுக்கூத்து - கவிதை நாடக நூல் அமைகின்றது. போர்த்துக்கீசரை எதிர்த்துநின்று யாழ்ப்பாண மண்ணைக் காக்க முனைந்தவன் சங்கிலியன். பரராச சேகர மன்னனின் காமக்கிழத்தியின் மகன், துட்டன், தமையனாகிய பரநிருபசிங்கனுக்குரிய அரசுரிமையைச் சூழ்ச்சியாலே கவர்ந்துகொண்டவன், தனது மகன் உள்ளிட்ட மதமாற்றத்துக்குட்பட்ட அறுநூறு பேர்களை ஈவிரக்கமின்றிக் கொன்றொழித்தவன் என்றவாறாக சங்கிலியனின் வரலாறு திரிபுபடுத்தப்பட்டு வழக்கிலிருந்தபோதிலும், அந்நியனின் ஆக்கிரமிப்பினை துணிவுடன் எதிர்த்துப் போரிட்டவன் என்பதாலும், அவனது வீழ்ச்சிக்கு உட்பகைவரின் துரோகமே காரணம் என்பதாலும் சொக்கன், சங்கிலியன்மேல் மதிப்புவைத்து இவ்விலக்கியத்தைப் படைத்துள்ளார். இந்நாட்டுக் கூத்து இலக்கியம், இலங்கை இலக்கியப் பேரவையின் பாராட்டுச் சான்றிதழைப் பெற்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் P.1767).

### 7251

**மூவிராசாக்கள் நாடகம்.** சு.வித்தியானந்தன் (பதிப்பாசிரியர்), மன்னார்: மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் வெளியீடு, 1வது பதிப்பு, 1966. ( யாழ்ப்பாணம்: தி.ச.வரதராஜன், ஆனந்தா அச்சகம்).
xii, 117 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 21.5x14 சமீ.

மன்னாரைச் சேர்ந்த கத்தோலிக்க நாட்டுக்கூத்துப் பிரதியின் நூலுருவாக்கம் இதுவாகும். தேவபாலன் பெத்தலேம் ஊரில் பிறப்பாரென்று வேத சாஸ்திரங்களிற் கண்டறிந்து அவரைத் தரிசிக்கத் தத்தம் நாடுகளிலிருந்து பரிவாரங்களுடன் புறப்படும் வெலிச்சோர், கஸ்பாறு, வலத்திசார் ஆகிய மன்னர்கள் பற்றியது இந்நாடகம். மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் வெளியீட்டுத் தொடரில் இரண்டாவது பிரசுரம் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10295).

### 7252

**யாழ்ப்பாண உத்தியோகர்லக்ஷணக் கும்மி & யாழ்ப்பாண தேசவழமை (தமிழ் வடிவம்).** கதிர்காமர் (மூலம்), எம்.எஸ்.துரை (பதிப்பாசிரியர்). கரவெட்டி: அமரர்கள் முருகேசு வேலுப்பிள்ளை, வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை ஆகியோர் நினைவு வெளியீடு, பூம்புகார், கரவெட்டி கிழக்கு, (கொழும்பு முகவரி: 245/1 காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு 4), 3வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, 1887?, 2வது பதிப்பு, 1936. ( கொழும்பு 6: குளோபல் கிரபிக்ஸ், 14, 57வது ஒழுங்கை, வெள்ளவத்தை).
(6),103+67 பக்கம், வண்ணத்தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

யாழ்ப்பாணக்குடாநாட்டைத்தளமாகக் கொண்டு எழுந்த கும்மிப்பாடல்களுள் ஒன்றே யாழ்ப்பாண உத்தியோகர்லக்ஷணக் கும்மியாகும். பொதுவாக ஈழத்தில் எழுந்த செந்நெறி இலக்கியங்கள் காட்டாத, காட்டத்தவறிய, காட்டவிரும்பாத பல்வேறு சமூகச்செய்திகளைத் துல்லியமாகக் காட்டும் ஓர் இலக்கிய வடிவமாகக் கும்மிபாடல்களைக் கொள்ளலாம். அவ்வகையில் வண்ணார்பண்ணை ஒட்டுமடத்தில் வசித்த தம்பிப் பரிகாரியாரின் மகனாகிய அப்பா என்று வழக்கத்தில் அழைக்கப்பட்டுவந்த கதிர்காமர் என்பவரால் 1887ஆம் ஆண்டுவாக்கில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் இக்கும்மிப்பாடல் யாழ்ப்பாண மன்னர்கள் காலம் தொடங்கி யாழ்ப்பாணத்திற்குப் புகையிரதப்பாதை வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்படும் வரையுள்ள செய்திகளை - சேர். பொன்னம்பலம் இராமநாதன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்த செய்தி- வரை வரலாற்று ஒழுங்கிலே கூறிச் செல்கின்றது. கி.பி.1200ம் ஆண்டுமுதல் உள்ள தமிழரசர் காலம், பறங்கி, உலாந்தா காலம் என்பவைகள் சுருக்கமாகவும், 1795ம் ஆண்டில் ஆங்கிலேயர் உலாந்தரை வெற்றிகொண்டுவந்தது முதல் உள்ள வரலாறு இயன்றவரை விரித்தும் உரைக்கப்பட்டுள்ளது. இது ஆங்கிலேயர் காலத்தில் மோயாட், லேயாட், டயீக், பிறைஸ், கிப்சன், போல், மறை, மோவியு, றசல், துவைனம், என்னும் அரசாட்சி ஏஜன்ட்மார்களின் காலநடவடிக்கைகளையும் அவ்வக்காலங்களில் அவர்களின் உதவியாளராகவிருந்த எம்மவர்கள் பற்றியும்அவர்கள் செய்த நன்மைதீமைகள் பற்றியும், அக்காலகட்டத்தின் யாழ்ப்பாண நிலைமை பற்றியும் கூறுகின்றது. முதற்பதிப்பு விபரமில்லாதபோதிலும் இதன் இரண்டாம் பதிப்பை- தான் சிதைந்தநிலையில் கண்டெடுத்த

*முதலாம் பதிப்பிலிருந்து 24.9.1936 அன்று கொக்குவில் கிழக்கில் வதியும் எம்.எஸ்.துரை என்பவர் கொக்குவில் சோதிடப்பிரகாசயந்திரசாலையில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். அப்பிரதியின் மீள்பதிப்பே இதுவாகும். ஆங்கிலக்கல்வி முறையினால் அரச உத்தியோகம் பெற்றவர்களின் நடைமுறைகளை அவர்களின் பெயர்களைச்சுட்டி, பல கும்மிப்பாடல்கள் எள்ளலுடன் விமர்சனம் செய்கின்றன. யாழ்ப்பாணத்து ஆட்சியதிகார வரன்முறையையும் அவற்றின் வலுவையும் மெலிவையும் புலப்படுத்தவென்றே யாழ்ப்பாண உத்தியோகர்லக்ஷணக் கும்மி படைக்கப்பட்டுள்ளதுபோன்ற உணர்வை வாசகரிடம் ஏற்படுத்துகின்றது. ஏறத்தாழ 579 பாடல்களைக்கொண்ட இவ்விலக்கியம் இந்நூலின் முதலாம் பகுதியாக அமைகின்றது. இந்நூலின் இரண்டாம் பகுதியில் யாழ்ப்பாணத்துத் தேசவழமைகள் (உலாந்தாக் கொம்பனியார் காலத்துத் தேசவழமைகளுங் கட்டளைகளும்) தமிழ்வடிவம் தரப்பட்டுள்ளது.*

### 7253

**வன்னி நாய்ச்சிமார் மான்மியம்.** த.சண்முகசுந்தரம். தெல்லிப்பளை: *அருள் வெளியீட்டகம், மாவைக் கந்தசுவாமி கோவிலடி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1981. (காங்கேசன்துறை: சந்திரா அச்சகம்).*
*(2), 22 பக்கம், விலை: ரூபா 3., அளவு: 18.5x12.5 சமீ.*

*மறுமலர்ச்சிப் பாதையில் மக்கள் கலைகள் என்ற தொடரில் வெளிவந்த நான்காவது நூல் இதுவாகும். தல மகிமையைக் கூறும் நூல்கள் மான்மியம் என்றழைக்கப்படும். இது பிரதேச வரலாற்றை மாத்திரமின்றி அப்பிரதேசத்துக் கோவிலில் எழுந்தருளியிருக்கும் கடவுளரையும் பாடக் குறிப்பிடப்பட்டது. பின்னாளில் அப்பிரதேசத்துக் குடிமகனைப் புகழ்ந்து பாடவும் மான்மியம் பயன்பட்டது. பொன்னம்பல மான்மியம், அருணாசல மான்மியம் என இப்பரப்பு விரிந்தது. அவ்வகையில் ஈழத்து நாட்டார் இலக்கியமான வன்னி நாய்ச்சியார் மான்மியம் வன்னிப் பிரதேசத்தின் பெருமையையும் வன்னிமைகளின் மனைவியரின் பெருமைகளையும் அப்பிரதேசத்தில் வழக்கிலுள்ள நாய்ச்சிமார் வழிபாடு பற்றியும் பேசுகின்றது. (*The Glory of Vanni Chieftains' wives*).*

### 7254

**விசய மனோகரன்: நாட்டுக்கூத்து.** வெ.மரியாம்பிள்ளை (இயற்றியவர்), மு.வி.ஆசீர்வாதம் *(பதிப்பாசிரியர்) . யாழ்ப்பாணம்: மு.வி.ஆசீர்வாதம், ஆசீர்அகம், 29, கண்டி வீதி, 1வது பதிப்பு, ஆவணி 1968. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).*
*(22), 151 பக்கம், விலை: ரூபா 3., அளவு: 21.5x14 சமீ.*

*யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைச் சேர்ந்த புலவர் செ.மரியாம்பிள்ளை அவர்கள் பாடிய இந்நாட்டுக்கூத்தை அதன் ஏட்டுப்பிரதிகளிலிருந்து எடுத்து அவை அழிந்துவிடாது காத்து அவரது மருமகனான மு.வி.ஆசீர்வாதம் அவர்கள் தமது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 279100).*

### 7255

**வீரத் தளபதி: நாட்டுக்கூத்து.** *ஏ.பாலதாஸ். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2000. (கொழும்பு: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்).*
*(14), 58 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x13.5 சமீ.,* ISBN: *955-9262-24-6.*

*கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் புனித செபஸ்தியார் என்னும் பெயர்பெற்ற வீரத்தளபதி ஒருவரின் கதை இதுவாகும். இந்தக் கூத்து கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் ரோமப் பேரரசை தியோக் கிளேசியன் என்ற மன்னன் ஆண்ட காலத்தில் பிரான்ஸ் தேசத்தில் பிறந்து இத்தாலியில் தாயுடன் வாழ்ந்த செபஸ்தியன் (கிரேக்க மொழியில் உயர்ந்தோன், பெருமகன் எனக் கருத்துப்படும்) என்ற தளபதியின் கதையாகும். கிறிஸ்துவத்தில் இவர் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக பகிரங்க இடத்தில் இவர்மேல் அம்பு எய்து மரணதண்டனை வழங்கப்பட்டது. குற்றுயிராக விடப்பட்ட அவரை இறேனே என்ற விதவைப்பெண் காப்பாற்றிக் குணப்படுத்துகின்றார். குணமான பின்பும் தான் கொண்ட சமயப்பற்றின் காரணமாக மன்னனிடம் மீண்டும் செல்கின்றார் செபஸ்தியார். தியோக்கிளேசியன் அவரைக் கண்டு மீண்டும் தன் மரண தண்டனையை நிறைவேற்றுகின்றார். புனிதரான செபஸ்தியாரின் கதை நாட்டுக்கூத்தாக இந்நூலில் சொல்லப்படுகின்றது.*

*மேலும் பார்க்க: 7033*

## *398.1 பழமொழிகளும் விடுகதைகளும்*

### *7256*

***சிதறிய முத்துக்கள்: பொன்மொழிகளின் திரட்டு.*** *எஸ்.ராமன். (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: எஸ்.இராமன், 92 பேங்ஷால் வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2005. (கொழும்பு 13: யு.கே.பிரின்டர்ஸ், 103, விவேகானந்தா மேடு).*
vi, *130 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x13 சமீ.,* ISBN: *955-99273-0-2.*

*இப்தார்க், ரஸ்கின், கீட்ஸ், கதே, மகாத்மா காந்தி உள்ளிட்ட பல்வேறு அறிஞர்களின் 1000 வரையிலான பொன்மொழிகளைத் தொகுத்து ஆக்கப்பட்ட நூல் இது. டொமினிக் ஜீவாவின் முன்னுரையுடன் கூடியது. உலகப் பெரும் சிந்தனையாளர்களின் கருத்துக்களை-பொன்மொழிகளாக ஒன்றுதிரட்டித் தொகுத்து வெளியிட்டுள்ளார். மாணவர்களுக்கு அறிவுதரும் பயனுள்ள நூல். கொழும்பின்* Golden Café *நிறுவனத்தின் உரிமையாளரான நூலாசிரியர் சங்கரநாராயண ரெட்டியார் ராமன், தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தின் மூலைக்கரைப்பட்டியிலிருந்து 1948இல் தனது ஒன்பதாவது வயதில் கொழும்பில் வந்து குடியேறியவர். ஈழத்துத் தமிழ் பதிப்புலகில் அதீத ஈடுபாடு கொண்டவர்.*

### *7257*

**நம் மக்களின் மனக்கணக்கும் மூளைக்கு விருந்தும் : நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வம்.**
*ஆ.தா.ஆறுமுகம். நியூசிலாந்து:* A.T.Arumugam, 101, Epuni Street, Lower Hutt, *1வது பதிப்பு, ஆனி 2011. (கொழும்பு 13: தேவி அச்சகம்).*
vi, *80 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ.*

*மனக்கணிதம் என்பது தமிழரின் நாட்டாரிலக்கியத்தில் நொடிகள் - விடுகதைகள் போன்று கடதாசி, எழுதுகோல் உதவியின்றி மனதிற் கணித்தே புத்திசாதுரியமாக விடைகாணும் செயல்முறையாகும். இந்நூல் அத்தகைய மனக்கணக்குகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது. ஆங்கிலம் கற்ற பன்னாட்டாரிடையே வழங்கும் கணக்குகளையும் மூளைக்கு விருந்தளிக்கும் புதிய ஆக்கங்களையும் உள்ளடக்கியது. நூலாசிரியர், யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவனில் பிறந்து தெல்லிப்பழையில் வளர்ந்து இளவாலையில் திருமணஞ்செய்தவர். தற்போது நியூசிலாந்தில் புலம்பெயர்ந்து குடும்பத்துடன் வாழ்கின்றார். பயிற்றப்பட்ட தமிழாசிரியராகப் பணியில் சேர்ந்து அதிபராகப் பணியுயர்வு பெற்று முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் இறுதியாகப் பணியாற்றிய வேளை ஓய்வுபெற்றவர்.*

### *7258*

***பழமொழிகளும் பொன்மொழிகளும்.*** *செல்லத்துரை முரளிதரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: அஷ்டலட்சுமி பதிப்பகம், 320, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, 2008. (யாழ்ப்பாணம்: சிவா பிரிண்டர்ஸ், கைதடி).*
*(4), 122 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 21x14.5 சமீ.*

*இந்நூலில் முதலாம் பக்கம் முதல் 66ம் பக்கம் வரை அகரவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்ட தமிழ்ப் பழமொழிகளும், 67ம் பக்கம் முதல் 122ம் பக்கம் வரை, உலகின் 50 நாடுகளில் வழங்கப்பட்டுவரும் பொன்மொழிகளும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பொன்மொழிகள் நாடு வாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615044).*

## *400 மொழியியல்*

## *401 மொழியியல்- பொது*

***7259***

***மொழி என்பது என்ன?*** H.G.C.A.T. *ஜயசேகர,* A.M.S.*அபயக்கோன், இரா.சுந்தரலிங்கம், ம.செ.அலெக்சாந்தர், வே.சுப்பிரமணியம் (முல்லைமணி), கே.நடேசன், க.சொக்கலிங்கம்,* S.*சோதிப்பெருமாள், முருகு இரத்தினம், ஏ.சிவராஜா (தயாரிப்புக் குழு). கொழும்பு: தொலைக் கல்விக் கிளை, இலங்கை கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: குணரட்ன ஒப்செட் லிமிட்டெட்).*
*20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். மொழி என்பது கருத்துத் தரும் ஒலியையும், வரிவடிவையும் கொண்டது, மனிதனின் மிகச் சிறந்த படைப்பு மொழி, மொழியானது கருத்துத் தொடர்புறுத்தும் ஊடகம், மொழி சிந்தனையின் முதன்மையான கருவி, மொழி பண்பாட்டினை வெளிப்படுத்தும் ஆகிய தலைப்புகளில் அமைந்த கட்டுரைகளினூடாக இந்நூல் மொழி என்றால் என்ன என்பதை விளக்குகின்றது.*

## *420 ஆங்கில மொழி*

***மேலும் பார்க்க: 7260, 7261***

## *440 பிரெஞ்சு மொழி*

***7260***

***ஆங்கிலம் பிரெஞ்சு ஓர் ஒப்பீட்டுக் கற்கை.*** *சதாசிவம் சச்சிதானந்தம்.* France: Ecole de Tamoul-Gnana, Institut International des, Etudes Superieures, 70 Rue Philipe de Girard, 75018, Paris, *1வது பதிப்பு, மார்கழி 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*270 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.,* ISBN*: 2-9510122-1-7.*

*இத்துறையில் ஆசிரியரின் 12ஆவது நூல் இதுவாகும். தமிழ்மொழி தெரிந்தோர் அதன் வழியாக ஆங்கிலத்தையும் பிரெஞ்சையும் கற்கவும், பிரெஞ்சு மொழி தெரிந்தோர் அதன்வழியாக ஆங்கிலத்தையும் தமிழையும் கற்கவும், இந்நூல் பெரிதும் உதவுகின்றது. தமிழ்மொழி அமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளின் அமைப்பைப் புரிந்துகொள்வதற்கும் அம்மொழிகளில் பேசவும் எழுதவும் பயில்வதற்கு இந்நூல் உதவுகின்றது. மேலும் இந்நூலின்வழியாக தமிழ்மொழியில் காணப்படும் வாக்கியங்களையும் ஆங்கில-பிரெஞ்சு மொழிகளில் காணப்படும் இணை வாக்கியங்களையும் தந்து அவற்றில் காணப்படும் பல இலக்கணக் கூறுகளை விளக்கி அவற்றின் கற்கை முறைகளையும் இன்னோரன்ன மொழிகளின் தன்மைகளையும் விளக்கவைப்பதும் பயனுள்ளவையாக அமைந்துள்ளன.*

***7261***

***தமிழ் ஆங்கிலம் பிரெஞ்சு சொல் வங்கி.*** *சதாசிவம் சச்சிதானந்தம்.* France: Ecole de Tamoul-Gnana, Institut International des, Etudes Superieures, 70 Rue Philipe de Girard, 75018, Paris, *1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*(16), 424 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.,* ISBN*: 2-9510122-2-5.*

*இன்று உலக மொழிகளுள் முதல் இரண்டு இடங்களையும் தக்கவைத்துக்கொண்டிருப்பவை ஆங்கிலமும் பிரெஞ்சுமாகும். இவ்விரு மொழிகளில் வழங்கும் பிரதான சொற்களுக்கான தமிழ்ப் பதங்களைத் தேடித்தொகுத்து மும்மொழி அகராதியாக வழங்கியிருக்கிறார் பேராசிரியர் சச்சிதானந்தன். 36 பொருள்வரிசைகளில் 30,000 சொற்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

***7262***

**தெளிவான பிரெஞ்சு இலக்கணம்: வினைச்சொல்.** சதாசிவம் சச்சிதானந்தம். France: Ecole de Tamoul-Gnana, Institut International des, Etudes Superieures, 70 Rue Philipe de Girard, 75018, Paris, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).
393 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 2-9510122-9-2.

மற்றெல்லா மொழிகளினதும்போல, பிரெஞ்சு மொழியின் இயக்கத்திற்கு அடிப்படையான வினைச்சொற்களின் இலக்கணம் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. உச்சரிப்பு, வினை இலக்கணம், வாக்கியம், வினைத்திரிபு அட்டவணைகள், வினை அகராதி ஆகிய ஐந்து பிரிவுகளில் இந்நூல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஆகியவற்றின் தொலைதூரக் கல்வித்துறையின் ஐரோப்பிய இயக்குநராகவுள்ளார். பாரிசில் முதலாவது தமிழ்ப் பள்ளியை 1983இல் நிறுவிய இவர் 2000ம் ஆண்டில் தமிழ்வழி பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளை ஐரோப்பாவில் அறிமுகம் செய்தவராவார்.

## 494.8 தமிழ் மொழி

**7263**
**தமிழ் நெடுங்கணக்கு.** ம.செ.அலெக்சாந்தர், வே.சுப்பிரமணியம் (முல்லைமணி), கே.நடேசன், செ.சோதிப்பெருமாள், முருகு இரத்தினம், எச்.ஆரியதாச (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: Pacific Press).
36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். நெடுங்கணக்கிலுள்ள வரிவடிவ ஒழுங்கை அறிதல், தமிழ் எழுத்துக்கள், தமிழில் கலந்து வழங்கும் கிரந்த எழுத்துக்கள், தமிழில் கலந்துள்ள கிரந்த எழுத்துக்களின் பின்னணி, எழுத்துக்களின் வகைகள், எழுத்துக்களின் உற்பத்தித் தானம், ஒலி வடிவும், வரி வடிவும், எழுத்துக்களின் மாத்திரை, சார்பெழுத்துக்கள், கூட்டெழுத்துக்கள், தமிழில் மொழிக்கு முதலிலும், இடையிலும், கடையிலும் வரும் எழுத்துக்கள் ஆகிய தலைப்புகளின்கீழ் தமிழ் நெடுங்கணக்கு விபரிக்கப்பட்டுள்ளது.

**7264**
**தமிழ் பேச்சுப் பயிற்சி.** S.J.யோகராஜா. களனி: எஸ்.ஜே.யோகராஜா, மொழியியல் துறை, களனிப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மே 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
x, 22 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-95655-9-1.

**தெமள கதா புகுணுவ** என்ற சிங்களத் தலைப்புடனும் வெளிவந்துள்ள இருமொழி நூல் இது. சிங்கள மக்கள் தமிழ் மொழியைப் படிப்பதற்கு இலகுவான முறையில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. பேச்சுத்தமிழ் இதில் அடங்கியுள்ளது. மூன்று கலந்துரையாடல்களும் சொற்களும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28402).

**7265**
**தமிழ் மொழி விளக்கக் கைந்நூல்.** சோமசுந்தரம் முரளி. கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
xii, 304 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-659-276-4.

இந்நூல் ஆரம்ப வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை கற்கும் மாணவர்களது தமிழ்மொழித் திறன் விருத்திக்கு உதவக்கூடியது. ஆசிரியர்களும் மாணவர்களும் ஒருங்கே பயன்படுத்தக்கூடிய ஒரு சிறந்த மொழிவிருத்திக் கைந்நூல். இலக்கணச் சிந்தனையை மையப்படுத்தி, தற்காலத் தமிழ் இலக்கணத்தை-பிரயோக இலக்கணத்தை முதன்மைப்படுத்தியதாக நூலின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக்கொண்ட முரளி, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைமாணிப் பட்டத்தினையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் டிப்ளோமா பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணிப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டவர். தற்போது மேல்மாகாணத்தில் பிலியந்தலைக் கல்வி வலயத்தில் தமிழ்மொழி ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றுகின்றார்.

### 7266

**தமிழ்ச் சொற் பிறப்பாராய்ச்சி.** சுவாமி ஞானப்பிரகாசர். திருப்பனந்தாள்: ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிநாத ஸ்வாமிகள், ஸ்ரீ காசிமடத்துத் தலைவர், 1வது பதிப்பு, 1932. (யாழ்ப்பாணம்: சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).
viii, 98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தமிழ்ச் சொற்பிறப்பு ஆராய்ச்சி சம்பந்தமாய் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து இந்நூல் (Studies in Tamil Etymology) எழுதப்பட்டுள்ளது. தமிழ்ச் சொற்களெல்லாம் ஒரு சிறு தொகையான அடிகளினின்றும் பிறந்திருத்தலையும் அவ்வடிச் சொற்களே வடமொழியாதிய வேறு அநேக மொழிகட்கும் தாதுக்களாய் நிற்றலையும் விளக்குவதாக இக்கட்டுரைகள் அமைந்திருந்தன. சுவாமி ஞானப்பிரகாசர் தயாரித்துவந்த தமிழ்ச் சொற்பிறப்பகராதியின் முன்னுரையாக அமையும் வகையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 101364).

## 494.8(1) தமிழ் இலக்கணம்

### 7267

**திராவிடப் பிரகாசிகை.** சபாபதி நாவலர். யாழ்ப்பாணம்: அ.சிவகுருநாதபிள்ளை, வடகோவை, 2வது பதிப்பு, வைகாசி 1927, 1வது பதிப்பு, கார்த்திகை 1889. (சென்னை: சாது அச்சுக்கூடம்).
xxxiv, (21), 144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

தமிழ் இலக்கண இலக்கிய சாத்திர மெய்வரலாறுகளை, அன்றெழுந்த தமிழ் நூல்கள் பற்றிய செய்திகளை இனிதுபடக்கூறும் நூல் இதுவாகும். இந்நூல் தமிழின் தெய்வப்பழமை மரபியல், இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், சாத்திர மரபியல், ஒழிபியல் என ஐவகைப் பிரிவுகளில் எழுதப்பட்டுள்ளது. திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் யாழ்ப்பாணத்து வடகோவை சபாபதி நாவலர் அவர்களால் இயற்றப்பட்டு சித்தாந்த வித்தியாநுபாலன அச்சியந்திரசாலையில் கார்த்திகை 1889இல் பதிப்பிக்கப்பட்ட இந்நூலை அவரது மருமகனாரான அ.சிவகுருநாதபிள்ளையவர்கள் 1927இல் மீள்பதிப்பாகப் பிரசுரித்துள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27276).

### 7268

**பிற்கால இலக்கண மாற்றங்கள் (எழுத்து)** . க.வீரகத்தி (மூலம்), மு.கௌரிகாந்தன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை).
xvi, 261 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-273-3.

இந்த நூல் வரலாற்று மொழியியலின்பாற்பட்டது. தொல்காப்பியம், விரசோழியம், நேமிநாதம். நன்னூல், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் எனும் நூல்களை மூலங்களாகக் கொண்டு ஆசிரியர் ஆராய்ந்து இந்நூலை எழுதியுள்ளார். இலக்கணத்தைச் சுருக்கமாகவேனும் பயின்றவர்கள் தமிழ்மொழி ஆசிரியர்களின் உதவியின்றி புத்தம்பதிய பார்வையுடன் தமிழ் இலக்கணத்தைக் கற்பதற்கானதொரு நல்ல வழிகாட்டியாக இது விளங்குகின்றது. யாழ்.கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட க.வீரகத்தி (1922-1996) அவர்கள் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் சிறப்பாய்வாளராக 1983-1986 காலகட்டத்தில் பணியாற்றிய வேளையில் 15.6.1986இல் சமர்ப்பித்த

பிற்கால இலக்கண மாற்றங்கள் (எழுத்து) என்ற ஆய்வின் நூல்வடிவம் இதுவாகும். பதிப்பாசிரியர் கௌரிகாந்தன், ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பண்டிதர் வீரகத்தியிடம் பல்லாண்டுகள் குரு-சீட முறையிலே இலக்கணங் கற்றவர். பண்டிதர் வீரகத்தியின் மறைவின் பின்னர் அவரது இறுதிக்கால வேண்டுகோளையேற்று இவ்வாய்வை நூலுருவாக்கியுள்ளார்.

**7269**

**வாக்கிய அமைப்பு.** ம.செ.அலெக்சாந்தர், சி.புலேந்திரன், சி.குமாரசாமி, வே.சுப்பிரமணியம் (முல்லைமணி), கே.நடேசன், ஏ.சிவராஜா, எம்.எம்.மன்சூர் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press).
36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். வாக்கியம் அமைத்தல், வாக்கியம் அமைத்தல் பற்றிய பயிற்சிகள், விசேட விதிகள் ஆகிய மூன்று பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 494.8(2) தமிழ்ப் பாடநூல்கள்

**7270**

**காயத்திரியின் பாஷைப் பயிற்சி: தரம் 4.** வே. நவமோகன். தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 64, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (தெகிவளை: காயத்திரி அச்சகம், த.பெ.இல. 64).
40 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21.5x14.5 சமீ.

இந்நூலில் தரம் 4 தமிழ் பாடப் பரப்பைத் தழுவிய 40 பயிற்சிகள் இடம்பெற்றுள்ளன. கற்ற விடயங்களை மாணவர்கள் மீட்க, அவர்களுக்கேற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ள செயல்நூல் இதுவாகும்.

**7271**

**தமிழ் உறுப்பெழுத்து வழிகாட்டி 1.** வே.நவமோகன். தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 64, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (தெகிவளை: காயத்திரி அச்சகம், த.பெ.இல. 64).
20 பக்கம், விலை: ரூபா 18., அளவு: 21x14.5 சமீ.

தமிழ்மொழியில் உயிர் எழுத்துக்களை உறுப்பெழுதி பயிற்சிபெறக் கூடிய வகையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ் எழுத்துக்களை எழுதும் படிமுறைகள் நூலில் விளக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியை- தமிழ் எழுத்துக்களைப் பயிலும் சிங்கள மாணவர்களுக்கும் ஏற்புடையதாக இது எழுதப்பட்டுள்ளது.

**7272**

**தமிழ் உறுப்பெழுத்து வழிகாட்டி 2.** வே.நவமோகன். தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 64, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (தெகிவளை: காயத்திரி அச்சகம், த.பெ.இல. 64).
20 பக்கம், விலை: ரூபா 18., அளவு: 21x14.5 சமீ.

தமிழ்மொழியில் மெய் எழுத்துக்களை உறுப்பெழுதி பயிற்சிபெறக் கூடிய வகையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ் எழுத்துக்களை எழுதும் படிமுறைகள் நூலில் விளக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியை- தமிழ் எழுத்துக்களைப் பயிலும் சிங்கள மாணவர்களுக்கும் ஏற்புடையதாக இது எழுதப்பட்டுள்ளது.

**7273**

**தமிழ் உறுப்பெழுத்து வழிகாட்டி 3.** வே.நவமோகன். தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 64, 1வது பதிப்பு, மார்ச் 2005. (தெகிவளை: காயத்திரி அச்சகம், த.பெ.இல. 64).
20 பக்கம், விலை: ரூபா 18., அளவு: 21x14.5 சமீ.

காயத்திரியின் உறுப்பெழுத்து வழிகாட்டி முதலாம், இரண்டாம் பகுதிகளில் போதிய எழுத்துப் பயிற்சி எடுத்த மாணவர்களுக்கு சொற்கள், சொற்றொடர்களில் பயிற்சி எடுப்பதற்கு ஏற்றவகையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியை- தமிழ் எழுத்துக்களைப் பயிலும் சிங்கள மாணவர்களுக்கும் ஏற்புடையதாக இது எழுதப்பட்டுள்ளது.

**7274**

**தமிழ் உறுப்பெழுத்து வழிகாட்டி 4.** வே.நவமோகன். தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 64, 1வது பதிப்பு, மே 2005. (தெகிவளை: காயத்திரி அச்சகம், த.பெ.இல. 64).
20 பக்கம், விலை: ரூபா 18., அளவு: 21x14.5 சமீ.

காயத்திரியின் உறுப்பெழுத்து வழிகாட்டித் தொடரில் 4ஆவது நூல் இது. வசனங்கள் எழுதும் விளக்கம் தரப்பட்டுள்ளது. எழுத்துக்களுக்கிடையேயும் சொற்களுக்கிடையேயும் விடவேண்டிய இடைவெளிகளை அறிந்துகொள்ள இந்நூல் உதவுகின்றது. தமிழ் மொழியை- தமிழ் எழுத்துக்களைப் பயிலும் சிங்கள மாணவர்களுக்கும் ஏற்புடையதாக இது எழுதப்பட்டுள்ளது.

**7275**

**தமிழ் மொழியும் இலக்கியமும்: செயல்நூல் தரம் 6.** த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
iv, 156 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 21x15 சமீ.

தேசிய கல்வி நிறுவனத்தினால் 2004 முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக இந்நூல் எழுதப்பட்டது. ஆறாம் வகுப்பு மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பெற்ற இந்நூலில் மாணவர்களின் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் புதிய பாடத்திட்ட வழிகாட்டலுக்கேற்ப 20 பாட அலகுகளை உள்ளடக்கியதாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

**7276**

**தமிழ் மொழியும் இலக்கியமும்: செயல்நூல் தரம் 7.** த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2004. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
ii, 222 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21x15 சமீ.

தேசிய கல்வி நிறுவனத்தினால் 2005 முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக இந்நூல் எழுதப்பட்டது. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் புதிய பாடத்திட்ட வழிகாட்டலுக்கேற்ப 20 பாட அலகுகளை உள்ளடக்கியதாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

**7277**

**தமிழ் மொழியும் இலக்கியமும்: செயல்நூல் தரம் 7.** S.M.ஜீவா. தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், த.பெ.எண் 64, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).
56 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 29x21 சமீ.

தேசிய கல்வி நிறுவனத்தால் 2005 முதல் அமுலாக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கமைய முதலாம் தவணைக்குரிய பாட அலகுகளை உள்ளடக்கி இப்பயிற்சிச் செயல்நூல் வெளிவந்துள்ளது. இந்நூலாசிரியர் ஏற்கெனவே தமிழ் விழி என்னும் நூலினையும் வெளியிட்டுள்ளார்.

**7278**

**தமிழ் மொழியும் இலக்கியமும்: செயல்நூல் தரம் 8.** S.M.ஜீவா. தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், த.பெ.எண் 64, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).
70 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 29x21 சமீ.

*தேசிய கல்வி நிறுவனத்தால் 2006 முதல் அமுலாக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கமைய முதலாம் தவணைக்குரிய பாட அலகுகளை உள்ளடக்கி இப்பயிற்சிச் செயல்நூல் வெளிவந்துள்ளது. இந்நூலாசிரியர் ஏற்கெனவே தமிழ் விழி என்னும் நூலினையும் வெளியிட்டுள்ளார்.*

***7279***

***தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 6: பயிற்சியும் செயல்நெறிகளும்.*** *கு.வி.அச்சக பதிப்பாசிரியர் குழு. கொழும்பு 13: கு.வி. அச்சக புத்தக நிலையம், 58, கிறீன் லேன், 1வது பதிப்பு, ஜனவரி 2005. (கொழும்பு 13: கு.வி. அச்சகம், 58, கிறீன் லேன்).*
vi, ***92** பக்கம், விலை: ரூபா **100.**, அளவு: **25.5**x**18.5** ச.மீ.*

*தேசிய கல்வி நிறுவகத்தால் 2004முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதியபாடத்திட்டத்திற்கு அமைவாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடத்துக்குமான பகுதி 01, பகுதி 02, வினாத்தாள்களும், பிற்சேர்க்கையில் மொழிவளம், அடிப்படை இலக்கணம் முதலியனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதுவொரு கு.வி.புத்தக நிலைய வெளியீடு என்ற வகையில் எழுத்தாளர் பெயர் குறிப்பிடப்படவில்லை.*

***7280***

***தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 8.*** S.F.L.*மொஹிடீன் ரஜா. யாழ்ப்பாணம்: ஆதவன் பதிப்பகம், 322, மானிப்பாய் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
***304** பக்கம், விலை: ரூபா **170.**, அளவு: **21**x**15** ச.மீ.*

*தேசிய கல்வி நிறுவகத்தால் 2006முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதியபாடத்திட்டத்திற்கு அமைவாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தரம் 8 மாணவர்களுக்காக அரச அச்சகப் பாடநூல், கலர் பிரின்ஸ் பாடநூல் ஆகிய இரண்டையும் தழுவி இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கான மொழிவள, இலக்கண, இலக்கியப் பயிற்சிகள் மேலதிகமாக இணைக்கப்பட்டுள்ளதுடன், அதிகமான பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.*

***7281***

***தமிழ் மொழியும் இலக்கியமும்: தேர்ச்சிசார் மதிப்பீட்டுப் பயிற்சி தரம் 8.***
*இ.க.சிவஞானசுந்தரம். கொழும்பு 6: தென்றல் பப்ளிக்கேஷன்ஸ், 135 கனல்பாங்க் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (சென்னை 600001: மாணவர் மறுதோன்றி அச்சகம்).*
***(4), 104** பக்கம், விலை: ரூபா **105.**, அளவு: **24**x**18.5** சமீ.*

*பாடசாலை மட்டக் கணிப்பீடு நிகழ்ச்சித் திட்டத்துக்கமைய இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. கற்றல் நிகழ்வினை ஏற்படுத்துவதன்மூலம் மாணவர்களுக்குத் தெரிந்தனவற்றை அளவிட்டு தேர்ச்சிசார் திறன் வெளிக்காட்டுகை ஆற்றுகைப் பரீட்சையாகத் தரப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும்.*

***7282***

***தரம் 10 தமிழ்மொழியும் இலக்கியமும்.*** *கு.வி.பதிப்பாசிரியர் குழு. கொழும்பு 13: கு.வி.அச்சகம், 58, கிறீன் லேன், 1வது பதிப்பு, 2000. (கொழும்பு 13: கு.வி.அச்சகம்).*
***(2), 146** பக்கம், விலை: ரூபா **125.**, அளவு: **25.5**x**19** சமீ.*

*தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 10 ஆசிரியர் கைநூலில் தரப்பட்டுள்ள அனைத்து அம்சங்களும் இடம்பெற்றுள்ள தமிழ் மொழித் துணைநூல். காகத்தின் கூட்டில் குயிலின் முட்டை, பல்வகைப் பாக்கள், கலை, முயலாமையால் தோற்றது, பாவோதுதல், நட்பு, தமிழாற் கூத்து, கதையைத் திருப்பும் கருக்கள், இஸ்லாமியப் பிரபந்தங்கள், நாளை வருவான் ஒரு மனிதன், பத்திரிகைப் பெண்ணாள், பூரண மனிதனாக்குவது வாசிப்பு ஆகிய 12 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***7283***

**பாலர் செயல் மலர்.** யு.சிபா மாலிக். கல்ஹின்ன: செரெண்டிப் பப்ளிஷிங் ஹவுஸ், டாருல் ஹஜார், கண்டி வீதி, 6ஆவது பதிப்பு, மார்ச் 2007, 1வது பதிப்பு விபரமில்லை. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).
52 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 24x18 சமீ.

இலங்கையில் பாலர் பாடசாலை (மொண்டிசூரி) கல்வியை மையப்படுத்தி செயல்நூலாக இந்நூல் வெளிவந்துள்ளது. கல்ஹின்ன, செரெண்டிப் வெளியீட்டகத்தின் முதல் வெளியீடு இதுவாகும். நூலாசிரியர், கண்டி கல்ஹின்னை தாருல் ஹூதா பாலர் பாடசாலையின்அதிபராவார்.

## 500 தூய விஞ்ஞானங்கள்

### 500 தூய விஞ்ஞானம்

**7284**
**விஞ்ஞான முறைகள்.** H.G.C.A.T. ஜயசேகர, S.P.தோரதெனிய, எம்.கோபால், என்.வாகீசமூர்த்தி, ஏ.சிவராஜா, G.H.மஹிந்தரத்ன (தயாரிப்புக் குழு). கொழும்பு: தொலைக் கல்விக் கிளை, இலங்கை கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: குணரட்ன ஓப்செட் லிமிட்டெட்).
32 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். பரிசோதனை செய்வதன் கோட்பாடு, விஞ்ஞான செயன்முறைகள், விஞ்ஞான அளவாய்வு ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**7285**
**விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் தரம் 7.** ஆ.யோகராஜா. கொழும்பு 12: ஆ.யோகராஜா, லோயல் பப்ளிக்கேஷன்ஸ், 125 A, நியு மூர் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (கொழும்பு 12: லோயல் பிரின்டர்ஸ், 125 A, நியு மூர் வீதி).
(4), 176 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 155., அளவு: 20.5x15 சமீ.

குறிப்புகள், பரிசோதனைகள், ஒப்படைகள், விரிவான வினா-விடைகள் என்பனவற்றைக் கொண்ட பயிற்சிநூல். நீர்வளத்தைப் பயன்படுத்துதல், தாவரப் பொருட்களைப் பயன்படுத்துதல், இரவு வானில் காட்சியளிக்கும் வான்பொருட்கள், உணவை அடிப்படையாகக் கொண்ட உயிர்த் தொடர்புகள், சக்தியும் அதன் பேறுகளும், அங்கிகளுக்கிடையிலான ஒற்றுமைகளும் வேற்றுமைகளும், அங்கிகளின் உயிர்ச் செயன்முறை, மின்னைப் பயன்படுத்துதல், தள்ளுகையும் இழுப்பும், பார்வையும் கேள்வியும், திரவியங்களை வெப்பமேற்றுதல் ஆகிய 11 பாடங்கள் இந்நூலில் உள்ளடக்கப்படுகின்றன.

**7286**
**விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் தரம் 8.** ஆ.யோகராஜா. கொழும்பு 12: ஆ.யோகராஜா, 125 A, நியு மூர் வீதி, 2வது பதிப்பு, மே 2006, 1வது பதிப்பு, மார்ச் 2006. (கொழும்பு 12: லோயல் பிரின்டர்ஸ், 125 A, நியு மூர் வீதி).
184 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 170., அளவு: 21x15 சமீ.

தரம் 8க்கான இப்புதிய பாடத்திட்டம் 11 அலகுகளைக் கொண்டுள்ளது. அங்கிகளின் நிலவுகை, நிலை மின்னேற்றங்களும், அவற்றின் இயல்புகளும், சடப்பொருட்கள் காணப்படும் நிலைகள், திரவங்களின் இயல்புகள், இயக்கம், கோள்களின் இயக்கம், சூழல் நிபந்தனைகளுக்கு அங்கிகள் காட்டும் இசைவாக்கங்கள், ஒளிக்கதிர்களின் நடத்தை, அமுக்கமும் அதன் பிரயோகங்களும், அங்கிகளை வகைப்படுத்தல், கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் சில இயற்கை வளங்கள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. புதிய கல்வித்திட்டத்திற்கமைய எழுதப்பட்டுள்ள இந்நூலின் ஒவ்வொரு

அலகுக்குமான தெளிவான, விரிவான குறிப்புகளையும், எளிய முறையிலான பரிசோதனைகளையும், வினா-விடைகளையும் கொண்டுள்ளது.

### 7287

**விஞ்ஞானமும் தொழினுட்பவியலும் தரம் 9.** ந.சந்திரகுமார். மட்டக்களப்பு: ராஜாஸ் புத்தக நிலையம், 111 பிரதான வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2004. (மட்டக்களப்பு: சண் அச்சகம், இல. 05, இருதயபுரம்).
v, 143 பக்கம், விலை: ரூபா 165., அளவு: 22x15 சமீ.

இந்நூல் மாணவர்களின் சுயகற்றலை ஊக்குவிக்கத்தக்க சுருக்கக் குறிப்புகள், செயற்பாடுகள், பரிசோதனைகள், மாதிரி-வினா-விடைகள், விஞ்ஞான விளக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. பல்வேறு கருமங்களுக்காகத் திரவியங்களைப் பயன்படுத்துதல், பார்வையை விருத்திசெய்துகொள்வதற்கான உத்திகள், அங்கிகளின் உறுப்புகளின் கட்டமைப்பிற்கும், அவ்வுறுப்புகளால் ஆற்றப்படும் தொழிலுக்கும் இடையிலான தொடர்புகள், ஓரை வட்டத்தை இனங்காணுதல், மனிதத் தேவைகளுக்கான தாவர உற்பத்திகள், அன்றாடக் கருமங்களுக்காக விசையைப் பயனுறுதியுடையவிதத்தில் பயன்படுத்தல், சக்தியை பயனுடையவாறு பயன்படுத்தல், மின்காந்த விளைவுகளைப் பயன்படுத்தல், உயிர்ப் பல்வகைமையைக் காத்தல், விண்வெளி ஆய்வின் முக்கியத்துவம் ஆகிய தலைப்புகளில் இந்நூல் தகவல்களை உள்ளடக்குகின்றது. 1992இல் ஆசிரிய நியமனம்பெற்ற நூலாசிரியர் சந்திரகுமார், மட்/ மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்தின் ஆசிரியராவார்.

### 7288

**விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் தரம் 9.** கௌரி மரியதாஸ். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2004. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
190 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 175., அளவு: 21x14.5 சமீ.

இந்நூல் பழைய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டதாகும். 2004ம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்துக்கு அமைவான புதிய அலகுகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்புகள், ஒப்படைகள், பரிசோதனைகள், அலகுரீதியான விரிவான வினாக்கள், அவற்றிற்கான விடைகள் என்பன உள்ளடங்கிய நூல். வவுனியா நலன்புரி நிலைய பாடசாலை மாணவர்களின் நலன்கருதி உடத்தலவின்ன சிந்தனை வட்டத்தினால் இந்நூல் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

### 7289

**விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் தரம் 9.** ஆ.யோகராஜா. கொழும்பு 12: ஆ.யோகராஜா, 125 A, நியு மூர் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2004. (கொழும்பு 12: லோயல் பிரின்டர்ஸ், 125 A, நியு மூர் வீதி).
(4), 234 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 165., அளவு: 21x15 சமீ.

குறிப்புகள், பரிசோதனைகள், ஒப்படைகள், விரிவான வினா-விடைகள் என்பனவற்றைக் கொண்ட பயிற்சிநூல். பல்வேறு தேவைகள்-வெவ்வேறு பொருட்கள், பார்வையை மேம்படுத்துதல், அங்கிகளின் அங்கங்களும் கட்டமைப்பும் தொழில்களும், உடுக்கூட்டங்களும் இராசி(ஓரை) வட்டமும், தாவர உற்பத்திகள், விசை-தினசரி வேலைக்கு, சக்தியும் சக்தி முதல்களும் சக்தியின் பயன்பாடுகளும், மின்னிலிருந்து காந்தவியல்பு, உயிர்ப் பல்வகைமையைக் காத்தல், விண்வெளி ஆய்வு ஆகிய 10 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7290

**விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் தரம் 10.** ஆ.யோகராஜா. கொழும்பு 12: ஆ.யோகராஜா, 125 A, நியு மூர் வீதி, திருத்திய 11ம் பதிப்பு, ஜனவரி 2006, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 12: லோயல் பிரின்டர்ஸ், 125 A, நியு மூர் வீதி).
242 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 190., அளவு: 21x15.5 சமீ.

தரம் 10க்கான இப்புதிய பாடத்திட்டம் 13 அலகுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அலகுக்குமான தெளிவான, விரிவான குறிப்புகளையும், எளிய முறையிலான பரிசோதனைகளையும், வினா-விடைகளையும் கொண்டது. விசையும் நேர்கோட்டு இயக்கமும், சக்தியின் பிரயோகங்கள், அங்கிகளின் கலங்களும் இழையங்களும், தாவரத்தில் பதார்த்தங்கள் கடத்தப்படல், மூலகங்களும் அணுக்களும் அணுக்கட்டமைப்பும், மூலகங்களில் இருந்து வேர்வைகள், மனிதவுடலில் பதார்த்தங்கள் கடத்தப்படல், ஆவர்த்தன அட்டவணை, ஒளித்தொகுப்பு, மின்னோட்டம், மின்னோட்டத்தின் விளைவுகள், அலைகள்-ஒளியும் ஒலியும், இயைபாக்கமும் சீர்த்திட நிலையும் ஆகிய 13 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7291

**விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்: தரம் 11 மாணவர்களுக்கான வழிகாட்டி.** வை.க.தவமணிதாசன். கொழும்பு 4: வை.க.தவமணிதாசன், இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430 காங்கேசன்துறை வீதி).
xii, 224 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14 சமீ.

விவசாயத் தத்துவங்கள் என்ற நூலின் ஆசிரியரான தவமணிதாசன், குண்டசாலை விவசாயக் கல்லூரியில் டிப்ளோமா பயிற்சிபெற்று ஆசிரியரானவர். ஆசிரியர் கைநூலில் உள்ள கற்றற் பேறுகளைச் சிறு குறிப்பாக்கித் தந்துள்ளார். ஒவ்வொரு அலகிலும் பல்தேர்வு வினா, குறும்வினா, சரி பிழை தேர்வு, கீறிட்ட இடங்களை நிரப்புதல் போன்ற கணிப்பீட்டு வகைகள் சேர்க்கப்பட்டுள்ளன. பூக்கும் தாவரங்களில் இனப்பெருக்கம், அளவறி இரசாயனவியல், உலோகங்களும் அவற்றின் உபயோகமும், விசை, சக்தி ஆகியவற்றின் பயன்பாடுகள், பாறைகளும் கனியங்களும், மின்னின் பயன்கள், றப்பர் பாலும் றப்பர் பால் உற்பத்திகளும், கனிய நெய்யும், கனிய நெய் உற்பத்திப் பொருட்களும், தலைமுறையுரிமை, கூர்ப்பு, அடிப்படை இலத்திரனியல், ஒலி ஒளி அலைகளின் பயன்பாடு, தாக்கவீதங்கள், உயிர்க்கோளம் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 510 கணிதம்

### 7292

**அட்சரகணிதக் கோவைகள்.** M.P.ஏக்கநாயக்க (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, H.R.நிமால் ஜயசேகர, M.K.பீரிஸ், J.A.S.ஜயலத், K.D.D.பர்சிவல், S.சிவப்பிரகாசம், P.கபிரியேல் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: Pacific Press).
32 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணிதக் கல்வி என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். குறியீடுகள், அட்சர கணிதக் குறியீடுகள், அட்சர கணிதக் கோவைகள் ஆகியவற்றை இனம்காணல், குறிப்பிடக்கூடிய பொதுக் கோலங்களை சில சம்பவங்களில் அறிதல், கருத்துக்களை அட்சர கணிதக் கோவைகளாக மாற்றுதல், நிகர்த்த, நிகரா உறுப்புகள், பிரதியீடு, அட்சர கணித கோவைகளைச் சுருக்குதல், அட்சர கணிதக் கோவை என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ளல் ஆகிய ஐந்து தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7293

**அட்சரகணிதக் கோவைகளும் காரணிகளும்.** M.P.ஏக்கநாயக்க (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, H.R.நிமால் ஜயசேகர, E.A.D.ஏக்கநாயக்க, D.J.வனசிங்க, S.சிவப்பிரகாசம், P. கேபிரியல் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press).
68 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், பரம்பல் விதி, இருபடிக் கோவைகளைக் காரணிப்படுத்தல், இரு கனங்களின் கூட்டலினதும் வித்தியாசத்தினதும் காரணிகள், ஓர் இருபடிக் கோவை நிறைவர்க்கமா எனக் காணல், அட்சர கணிதக் கோவைகளைச் சுருக்குதல் ஆகிய விடயங்கள் தரப்பட்டுள்ளன.

### 7294

**அளவீடு.** S.D.லயனல் அமரகுணசேகர, P.A.திலகரத்ன, N.வாகீசமூர்த்தி, M.கோபால், ஏ.சிவராஜா, P.கருணாதாச (செயற்குழு உறுப்பினர்). கொழும்பு: தொலைக் கல்விக் கிளை, இலங்கை கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: சர்வோதய விஷ்வலேகா அச்சகம், இரத்மலானை).
28 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், அளவீடுகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அளவீட்டின் அலகுகள், அளவைக் கருவிகள் ஆகிய இயல்களில் இவை விளக்கப்பட்டுள்ளன.

### 7295

**1999ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்திற்கு அமைவான கணிதப் பயிற்சி தரம் 9.** வி.ச.சுப்பிரமணியம். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 1வது பதிப்பு, ஜுலை 1999. (கொழும்பு 14: கோல் குவிக் பிரின்டர்ஸ்).
(3), 111 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 25x19 சமீ.

புதிய கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், இலங்கையில் 1999ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்திற்கு அமைவாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இலகுவான பயிற்சிகள் நீங்கலாக ஏனையவற்றிற்கு விடைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

### 7296

**இயல்பொப்பு.** M.P.ஏக்கநாயக்க (மூலம்), K.D.D.பேர்சிவல், எஸ்.சிவலோகநாதன் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: Pacific Press).
72 பக்கம், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞான-கணிதக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். உருப்பெருக்கம், இயல்பொப்பு, இயல்பொத்த முக்கோணிகள், வட்டத்துடன் தொடர்புபட்ட தேற்றங்கள் ஆகிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இந்நூலில் இயல்பொப்புமை விளக்கப்பட்டுள்ளது.

### 7297

**2001ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்திற்கமைவான கணிதப் பயிற்சி தரம் 8.** வி.ச.சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2001. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
104 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 25.5x19 சமீ.

இந்நூலாசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னாள் கணித ஆசிரியரும் கணிதபாட ஆலோசகருமாவார். புதிய கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், இலங்கையில் 2001ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்திற்கு அமைவாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

### 7298

**இருபடிச் சமன்பாடுகள்.** L. ஆர்தர் பெரேரா (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, M.P.ஏக்கநாயக்க, D.J.வனசிங்க, H.R.N.ஜயசேகர, M.P.M.M.சிப்லி (பாடப்பதிப்பாசிரியர்கள்).

*கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு:* The Pacific Press*).*
*40 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இருபடிச் சமன்பாடுகளை அறிந்துகொள்வோம், இருபடிச் சார்புகளின் வரைபுகள் ஆகிய இரு பிரிவுகளின்கீழ் இந்நூல் கணிதத்தில் இருபடிச் சமன்பாடுகள் பற்றிய விளக்கத்தினை வழங்குகின்றது.*

### 7299

**எண்களை வகைப்படுத்தல்.** M.K.*பீரிஸ் (மூலம்),* A.J.*குணவர்த்தன,* G.J.*விஜயசேன,* M.P.*ஏக்கநாயக்க,* W.M.*பியதாச,* K.D.D.*பேர்சிவல், சி.தேவராணி (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு:* The Pacific Press*).*
*56 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், எண்ணும் இலக்கமும், எண் தொடைகளின் பண்புகள், கேத்திரகணித எண்கோலங்கள், சிக்கல் எண்கள் ஆகிய விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. எண்தொகுதிக்குத் தனியான பண்புகளும் விதிகளும் உள்ளன. வெவ்வேறு எண் தொடைகளுக்கான விசேட பண்புகளும் உள்ளன. சில எண் கோலங்கள், பழைய கிரேக்க கேத்திரகணித உண்மைகளில் இருந்து உருவமைக்கப்பட்டவையாகும். கடந்த காலங்களிலும் எண் தொடர்கள் உருவாக்கப்பட்டன. இந்த மொடியுலைக் கற்பதன்மூலம் சில எண் தொகுதி பற்றிய அறிவைப்பெற முடியும்.*

### 7300

**எளிய திண்மங்கள்.** D. *ஜயசிறி வனசிங்க (மூலம்),* A.J.*குணவர்த்தன,* G.J.*விஜயசேன,* H.R.*நிமல் ஜயசேகர,* M.P.*ஏக்கநாயக்க,* M.*அப்துல் வாஹிது,* P.*கபிரியேல்,* J.A.S.*ஜயலத்,* S.*சிவப்பிரகாசம் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு:* Pacific Press*).*
*24 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணிதக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். திண்மங்களின் இயல்பு, தளமேற்பரப்புகளால் ஆக்கப்பட்ட திண்மங்கள், வெவ்வேறு வகையான திண்மங்கள், தளமேற்பரப்புகளையும், வளைமேற்பரப்புகளையும் கொண்டுள்ள திண்மங்களும் வளைமேற்பரப்புகளை மாத்திரம் கொண்டுள்ள திண்மங்களும் ஆகிய நான்கு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

### 7301

**ஒரே மையப் புதுமைச் சதுரங்கள் ஆக்கும் எளிய வழிமுறைகள்.** *ஆ.தா.ஆறுமுகம். நியூசிலாந்து:* A.T.Arumugam, 101, Epuni Street, Lower Hutt, *1வது பதிப்பு, நவம்பர் 2008. (நியூசிலாந்து: அச்சக விபரம் தரப்படவில்லை).*
*52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*15 சமீ.*

*நூலாசிரியர்,* Construction of Concentric Magic Squares *என்ற இந்த வித்தைச் சதுரங்கள் பற்றிய நூலை தமிழ் வாசகர்களுக்காக உருவாக்கியுள்ளார். எண்களைக் குறித்த சில ஒழுங்குகளிற் சதுர வடிவில் எழுத அணி, நிரை, மூலைவிட்டம் ஆகிய எல்லா வழிகளிலும் கூட்டுத்தொகை சமமாக அமைவது வித்தைச் சதுரம் (*Magic Square*) எனப்படும். இந்நூல் வித்தைச்சதுரங்களை ஆக்கும் முறைகள் பற்றி விரிவாக விளக்குகின்றது. நூலாசிரியர், யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவனில் பிறந்து தெல்லிப்பழையில் வளர்ந்து இளவாலையில் திருமணஞ்செய்தவர். தற்போது நியூசிலாந்தில் புலம்பெயர்ந்து குடும்பத்துடன் வாழ்கின்றார். பயிற்றப்பட்ட தமிழாசிரியராகப் பணியில் சேர்ந்து*

அதிபராகப் பணியுயர்வு பெற்று முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் இறுதியாகப் பணியாற்றிய வேளை ஓய்வுபெற்றவர்.

**7302**

**ஒழுக்குகளும் அமைப்புக்களும்.** A.R.R.பர்ணாந்து (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, M.P.ஏக்கநாயக்க, H.R.நிமால் ஜயசேகர, E.A.D.ஏக்கநாயக்க, P.கணநாதபிள்ளை (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press).
44 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், புள்ளி ஒன்றின் ஒழுக்கு, அடிப்படையான கேத்திரகணிதச் சார்புடைய நான்கு ஒழுக்குகள், கவராயம், வரைகோல் என்பனவற்றுடன் செய்யக்கூடிய அமைப்புகள், கோணங்கள் அமைத்தல், கோணங்களை இருகூறிடல், சமாந்தரக் கோடுகள் அமைத்தல், பல்கோணிகளை அமைத்தல், வட்டங்களுக்குத் தொடலிகள் அமைத்தல் ஆகிய விடயங்களை அறிந்துகொள்ளலாம்.

**7303**

**கணிதப் பயிற்சி தரம் 6: விளக்கங்களுடனும் விடைகளுடனும்.** பா.கிருபாகரன். கொழும்பு 6: Maths Centre, 6 A Ramakrishna Road, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2004. (கொழும்பு 6: எஸ். பிரின்ட், இல. 4C, 1, பசல்ஸ் லேன், வெள்ளவத்தை).
iv, 110 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 29x21 சமீ.

வெள்ளவத்தை, கணித நிலையம் என்ற தனியார் கல்வி நிறுவனத்தினால் தரம் 6 மாணவர்களின் கல்வித் தேவைக்காக விளக்கங்களுடனும் விடைகளுடனும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. 2004ம் ஆண்டு முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பாடத்திட்டத்திற்கமைவாக எழுதப்பட்டது. நூலாசிரியர் கொழும்பு ரோயல் கல்லூரியின் கணித ஆசிரியராவார்.

**7304**

**கணிதப் பயிற்சி தரம் 8.** கு.வி.அச்சக பதிப்பாசிரியர் குழு. கொழும்பு 13: கு.வி. அச்சக புத்தக நிலையம், 58, கிறீன் லேன், 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 13: கு.வி. அச்சகம், 58, கிறீன் லேன்).
(2), 118 பக்கம், விலை: ரூபா 85., அளவு: 26x19 சமீ.

தேசிய கல்வி நிறுவகத்தால் 2001முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதியபாடத்திட்டத்திற்கு அமைவாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதுவொரு கு.வி. புத்தக நிலைய வெளியீடு என்ற வகையில் எழுத்தாளர் பெயர் குறிப்பிடப்படவில்லை. எண்கோலங்கள், திசை கொண்ட எண், திண்மங்கள், அளவீடுகள் உள்ளிட்ட 28 தலைப்புகளில் இந்நூலில் கணிதப்பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இறுதியில் விடைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

**7305**

**கணிதப் பயிற்சி தரம் 10.** கு.வி.அச்சக பதிப்பாசிரியர் குழு. கொழும்பு 13: கு.வி. அச்சக புத்தக நிலையம், 58, கிறீன் லேன், 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 13: கு.வி. அச்சகம், 58, கிறீன் லேன்).
(4), 192 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 27.5x21 சமீ.

தேசிய கல்வி நிறுவகத்தால் 2001முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதியபாடத்திட்டத்திற்கு அமைவாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதுவொரு கு.வி.புத்தக நிலைய வெளியீடு என்ற வகையில் எழுத்தாளர் பெயர் குறிப்பிடப்படவில்லை.

**7306**

**கணிதப் பயிற்சி தரம் 10: விளக்கங்களுடனும் விடைகளுடனும்.** பா.கிருபாகரன். கொழும்பு 6: Maths Centre, 6 A Ramakrishna Road, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2004. (கொழும்பு 6: எஸ். பிரின்ட், இல. 4C, 1, பசல்ஸ் லேன், வெள்ளவத்தை).
iv, 110 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 29x20.5 சமீ.

வெள்ளவத்தை, கணித நிலையம் என்ற தனியார் கல்வி நிறுவனத்தினால் தரம் 10 மாணவர்களின் கல்வித் தேவைக்காக விளக்கங்களுடனும் விடைகளுடனும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. நூலாசிரியர் கொழும்பு ரோயல் கல்லூரியின் கணித ஆசிரியராவார். இவரது ஏழாவது கணிதபாட நூல் இதுவாகும்.

### 7307
**கணிதப் பயிற்சி தரம் 11.** W.ரத்னாயக்கா. கொழும்பு 13: கு.வி. அச்சக புத்தக நிலையம், 58, கிறீன் லேன், 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 13: கு.வி. அச்சகம், 58, கிறீன் லேன்).
(8), 100 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 26x19 சமீ.

2001ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்ட நூல். நூலாசிரியர் மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தின் கணிதப் பிரிவின் செயற்றிட்ட அதிகாரியாகப் பணியாற்றியவர்.

### 7308
**கணிதம்: தரம் 7. பரீட்சைக்குரிய வினாவிடை முன்னோடி.** கு.கருணேஸ்வரன். கொழும்பு 6: தென்றல் பப்ளிக்கேஷன்ஸ், 135 கனல்பாங்க் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (சென்னை 600001: மாணவர் மறுதோன்றி அச்சகம்).
(8), 160பக்கம், விலை: ரூபா 140., அளவு: 24x18.5 சமீ.

தரம் ஏழுக்குரிய கணித பாடத்திட்டத்துக்குள்ளடங்கும் வகையில் உருவாக்கப்பட்ட இந்நூல் ஒற்றை எண்களும் இரட்டை எண்களும், பெரிய எண்கள், காரணிகளும் மடங்குகளும், திண்மங்கள், நீளம் தொடர்பான கணித்தல்கள், அட்சர கணிதக் கோவைகள், நிறை, காலம், பின்னங்கள், தசமங்கள், கோணங்கள், திசைகொண்ட எண்கள், சமாந்தரக் கோடுகள், சுட்டிகள் ஆகிய பாடப்பிரிவுகளை உள்ளடக்கியது. நூலாசிரியர் கல்வித் திணைக்களத்தின் மேல்மாகாண கணித ஆசிரிய ஆலோசகராவார்.

### 7309
**கணிதம்: தரம் 8. புதிய பாடத்திட்டம் 2006.** எஸ்.நசீர். களுபோவில: எஸ்.நசீர், 26, 1/A சுமணரத்தின மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2006. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
228 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 22x20 சமீ., ISBN: 955-1475-17-9.

2006ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ப எழுதப்பட்டுள்ள இந்நூல் மாணவர்களுக்குக் கணிதப் பாடத்தின் அடிப்படை அறிவை வளர்க்கத் துணையாய் அமைவதோடு போதிய பயிற்சிகளும் செயற்பாடுகளும் சாடைக் குறிப்புகளும் மீட்டல்களும் அவர்களால் கணித எண்ணக்கருக்களை இலகுவாகக் கற்றுணரும் வாய்ப்பினையும் வழங்குகின்றது.

### 7310
**கணிதம்: பயிற்சியும் செயல்நூலும்.** கே.கண்ணன். கொழும்பு 6: Sai Educational Publications, 155/2 Canal Road, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (கொழும்பு 6: SDS கொம்பியூட்டர் சேர்விஸ், 30A, 33ஆவது ஒழுங்கை).
(6), 194 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 24.5x18 சமீ.

1999ஆம் ஆண்டு இலங்கை தேசியக் கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு அமைய தரப்படுத்தப்பட்ட பல்வேறு பயிற்சிகளை உள்ளடக்கிய நூல். புதிய கல்வி மறுசீரமைப்பில்

*தரம் 9இல் புகுத்தப்பட்டுள்ள பாடத்திட்டம் முழுவதையும் மீட்கும் விதத்தில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அலகிலும் குறித்த பாட அலகுக்கான விடயதானங்கள் அநேக ஒழுங்குபடுத்தப்பட்ட உதாரணக் கணக்குகள் மூலம் விளக்கப்பட்டுள்ளன.*

### 7311

***கணிதம் புதிய பாடத்திட்டம் 2001ம் ஆண்டு தரம் 8.*** எஸ்.திலீபன். வத்தளை: OKI International School, 43, Old Negombo Road, *5வது பதிப்பு, ஆகஸ்ட் 2004, 1வது பதிப்பு, மார்ச் 2001. (கொழும்பு 12: லோயல் பிரின்டர்ஸ், 125* A, *நியு மூர் வீதி).*
*(4), 138 பக்கம், விலை: ரூபா 135., அளவு: 21x15 சமீ.*

*2000ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த தரம் 8இற்கான புதிய பாடத்திட்டத்திற்கு அமைய இப்பயிற்சி நூல் எழுதப்பட்டுள்ளது. மாணவர்களிடம் கணிதத்தில் ஆர்வத்தை ஏற்படுத்துமுகமாக இப்பயிற்சி நூலில் முக்கிய குறிப்புகள், உதாரணங்கள், பயிற்சிகள், என்பவற்றையும் ஒவ்வொரு அலகு முடிவிலும் அவ்வலகிற்கான விடைகளையும் நூலாசிரியர் வழங்கியுள்ளார்.*

### 7312

***கு.வி. இன் 1999ம் ஆண்டின் புதிய பாடத்திட்டத்திற்கான கணிதம் செயல்நூல்: தரம் 9.*** *கு.வி.அச்சக பதிப்பாசிரியர் குழு. யாழ்ப்பாணம்: கு.வி.அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி, 1வது பதிப்பு, 1999. (யாழ்ப்பாணம்: கு.வி.அச்சகம்).*
*(6), 86 பக்கம், விலை: ரூபா 85., அளவு: 25.5x19 சமீ.*

*1999ஆம் ஆண்டு இலங்கை தேசியக் கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு அமைய தரப்படுத்தப்பட்ட பல்வேறு பயிற்சிகளை உள்ளடக்கிய நூல். பல்கோணிகளின் கோணங்கள், திரவ அளவீடு, பிரதியீடு, தொடை, ஒழுக்கு, சுட்டிகள், பின்னங்களும் தசம பின்னங்களும், விகித சமன், சமனிலிகள், உருப்பெருக்கம், எளிய வட்டி ஆகிய விடயங்கள் உள்ளிட்ட 40 தலைப்புகளில் இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.*

### 7313

***சமன்பாடுகள்.*** M.P. *ஏக்கநாயக்க (மூலம்),* A.J. *குணவர்த்தன,* G.J. *விஜேசேகர,* M.R. *நிமால் ஜெயசேகர,* E.A.T. *ஏக்கநாயக்க,* D.J. *வனசிங்கா,* K.D.D. *பர்சிவல், தேவராணி சிவசுப்பிரமணியம், எஸ்.சிவப்பிரகாசம், ஏ.சிவராஜா (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு:* The Pacific Press*).*
*48 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். சமன்பாடுகளின் தன்மைகள், ஒரு தெரியாக் கணியத்தைக்கொண்ட சமன்பாடுகள் அல்லது எளிய சமன்பாடுகள், இரு தெரியாக் கணியங்களைக் கொண்ட சமன்பாடுகள் ஆகிய விடயங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.*

### 7314

***சமனிலிகள்.*** E.A.D.*ஏக்கநாயக்க (மூலம்),* A.J.*குணவர்த்தன,* G.J.*விஜயசேன,* H.R.*நிமால் ஜயசேகர,* W.M.*பியதாச,* M.P.*ஏக்கநாயக்க,* K.D.D.*பேர்சிவல்,* S.*சிவப்பிரகாசம் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு:* The Pacific Press*).*
*44 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், எளிய சமனிலிகள், சமனிலிகளின் வரைபுகள் ஆகிய விடயங்கள் இடம்பெற்றுள்ளன.*

7315

**சமாந்தரவியல்பு.** W.M.பியதாச (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, K.D.D.பேர்சிவல், S.சிவப்பிரகாசம், K.சிவலோகநாதன், S.தேவராணி (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press).
40 பக்கம், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், சமாந்தரவியல்பு, சமாந்தர நேர்கோடுகளை வரைதல், ஒத்த கோணங்கள், ஒன்றுவிட்ட கோணங்கள், நேயக்கோணங்கள், இருநேர்கோடுகள் சமாந்தரமானவையா எனத் தீர்மானித்தல், இணைகரங்கள் ஆகிய தலைப்புகளில் விடயங்கள் தரப்பட்டுள்ளன.

7316

**சாதாரண பின்னம்.** R.M. திலகரட்ண (மூலம்), J.A.S.ஜயலத், M.P.ஏக்கநாயக்க, M.பரஞ்சோதி, M.P.M.M. ஷிப்லி (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (இரத்மலானை: சர்வோதய விஸ்வலேகா அச்சகம்).
36 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணிதக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். பின்ன எண்களும் சமவலுப் பின்னங்களும், பின்னங்களில் கணிதச் செய்கைகள், பின்னங்களில் பிரசினங்கள் ஆகிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இந்நூலில் சாதாரண பின்னம் விளக்கப்பட்டுள்ளது.

7317

**சுட்டிகளும் மடக்கைகளும்.** M.P.ஏக்கநாயக்க (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, A.R.R.பெர்ணாண்டோ, A.T.A.H.L.ஜயக்கொடி, M.K.பீரிஸ், M.P.M.M.சிப்லி (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1990. (கொழும்பு: The Pacific Press).
56 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். சுட்டிகள், மடக்கைகள், வாய்ப்பாடுகளிலிருந்து மடக்கைகள், மடக்கை அட்டவணைகளைப் பயன்படுத்திச் சுருக்குதல் ஆகிய நான்கு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

7318

**தசம பின்னம்.** M.K.பீரிஸ், A.J.குணவர்த்தன (மூலம்), G.J.விஜயசேன, W.M.பியதாச, H.R.N.ஜயசேகர, J.A.S.ஜயலத், K.D.D. பேர்சிவல், P.கபிரியேல், S.சிவப்பிரகாசம் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: Pacific Press).
60 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணிதக் கல்வி என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். தசமங்களைத் தெரிந்துகொள்வோம், தசமங்களுக்கும் சர்வதேச அலகுகளுக்கும் இடையே உள்ள தொடர்பை ஒப்பிட்டு ஆராய்தல், தசமங்களில் கணிதச் செய்கை, மீளுந் தசமங்கள், தசமத்தின் வர்க்கமூலத்தைக் காணல் ஆகிய ஐந்து பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**7319**

**தள உருவங்களும் பரப்புகளுடன் தொடர்பான தேற்றங்களும்.** .M.A. பிரேமவர்த்தன (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, M.P.ஏக்கநாயக்க, M.R.நிமல் ஜயசேகர, க.சிவலோகநாதன், K.D.D. பேர்சிவல் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: Pacific Press).
36 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணிதக் கல்வி என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். சமாந்தர நேர்கோடுகளுக்கிடையில் அமைந்த தள உருவங்கள், இணைகரங்களின் பரப்புகளின் அடிப்படையிலான தேற்றங்கள், இரு சமாந்தர நேர்கோடுகளுக்கிடையில் அமைந்த முக்கோணிகளின் பரப்பளவுகள், பரப்புகளின் அடிப்படையிலான அமைப்புகள் ஆகிய நான்கு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**7320**

**தளவுருக்களின் அளவைகள்.** E.A.T. ஏக்கநாயக்க (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, H.R.நிமல் ஜயசேகர, W.M.பியதாச, M.M.சிப்லி, M.கோபால், ஏ.சிவராஜா (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: Pacific Press).
40 பக்கம், சித்திரங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணிதக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். நாற்பக்கல் ஒன்றின் சுற்றளவு, பரப்பளவு, முக்கோணிகளினதும் நாற்பக்கங்களினதும் பரப்பளவுகளைக் கணித்தல், வட்ட அளவைகள் ஆகிய நான்கு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**7321**

**திசை கொண்ட எண்கள்.** E.A.T. ஏக்கநாயக்க (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, M.P.ஏக்கநாயக்க, H.R.நிமல் ஜயசேகர, D.J.வனசிங்க, K.D.D.பர்சிவல், S.சிவப்பிரகாசம், J.A.S.ஜயலத், P.கபிரியல் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press).
32 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். திசைகொண்ட எண்கள் பற்றிய எண்ணக்கரு, எண் கோடு, திசைகொண்ட எண்களுடன் கணிதச் செயற்பாடுகள் ஆகிய மூன்று பகுதிகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**7322**

**திண்மங்களின் அளவையியல்.** W.இரத்நாயக்க (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, W.M.பியதாச, H.R.N. ஜயசேகர, D.J.வனசிங்க, S.தேவராணி, K.சிவலோகநாதன், P.A.C.S.பெரேரா (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press).
32 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், திண்மங்களின் மேற்பரப்பு, வளைகோடுகளையும் வளைமேற்பரப்புகளையும் கொண்ட திண்மங்களின் மேற்பரப்பு, நேரான விளிம்புகளையுடைய திண்மங்களின் கனவளவு, வளைந்த விளிம்புகளையும் வளைந்த மேற்பரப்புகளையும் கொண்ட திண்மங்களின் கனவளவு ஆகிய விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ளன.

**7323**

**திரிகோண கணிதம்.** D. ஜயசிரி வணசிங்க (மூலம்), A.J. குணவர்த்தன, G.J. விஜேசேன, M.P. ஏக்கநாயக்க, M.S. பீரிஸ், M.P.M.M. ஷிப்லி (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press).
48 பக்கம், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். திரிகோண கணித விகிதங்கள், விஷேட கோணங்கள் சிலவற்றின் திரிகோண கணித விகிதங்கள், திரிகோண கணித விகிதமொன்றிற்கு ஒத்த கோணத்தைக் காணல், உயரம், தூரம் தொடர்பான பிரசினங்கள் ஆகிய நான்கு பிரிவுகளில் இந்நூல் விளக்கப்பட்டுள்ளது.

**7324**

**தொடைகள்.** E.M.G.ஏக்கநாயக்க (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, M.P.ஏக்கநாயக்க, E.A.T. ஏக்கநாயக்க, A.R.பெர்னாந்து, D.J.வனசிங்க, K.D.D.பர்சிவல், M.அப்துல் வாஹிது (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: Pacific Press).
52 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணித-விஞ்ஞானக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். தொடைகள் பற்றிய எண்ணக்கருவும் குறியீடுகளும், வென் உருவங்கள், தொடைகளின் பல்வேறு தன்மைகள், தொடைகளின் கணிதச் செய்கைகள், தொடைகளிலான உத்திக் கணக்குகளின் தீர்வுகள் ஆகிய ஐந்து பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**7325**

**நூற்று வீதத்தைப் பயன்படுத்துதல்.** K.D.விஜேபால (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, M.P.ஏக்கநாயக்க, M.K.பீரிஸ், H.R.N. ஜயசேகர, M.P.M.M. சிப்லி (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press).
56 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், சேமிப்பும் கடனும், வாடகைக் கொள்வனவு, கழிவும் தரகுக் கூலியும், வரி, பங்கும் சரக்குமுதலும், காப்புறுதி ஆகிய விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**7326**

**நூற்று வீதம்.** W.M. பியதாச (மூலம்). J.A.S.ஜயலத், M.P.ஏக்கநாயக்க, S.சிவப்பிரகாசம், P.கேப்ரியல், M.P.M.M. ஷிப்லி (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (இரத்மலானா: சர்வோதய விஸ்வலேகா அச்சகம்).
44 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணிதப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். நூற்றுவீதத்தைத் தெரிந்துகொள்வோம், இலாபமும் நட்டமும், எளிய வட்டி, கூட்டு வட்டி ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**7327**

**நேர்கோட்டு உருக்கள்.** D.J.வனசிங்க (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, M.P.ஏக்கநாயக்க, K.D.D.பர்சிவல், தேவராணி சிவசுப்பிரமணியம் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: Pacific Press).

*28 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணிதக் கல்வி என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். நேர்கோடுகள், கோணங்கள் ஆகிய இரு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

**7328**

**பல்கோணிகளும் முக்கோணிகளும்.** D.ஜயசிறி வனசிங்க (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, H.R.N. ஜயசேகர, M.P.ஏக்கநாயக்க, E.M.G.ஏக்கநாயக்க, K.D.D.பேர்சிவல், K.சிவலோகநாதன் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press).
*28 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். ஒழுங்கான பல்கோணியை அமைக்கும்போது, அவற்றின் கோணங்களின் பெறுமானங்களை அறிவதில் ஒருவர் ஆர்வம் காட்டுவர். இம்மொடியுலானது, அவ்வகையான தேற்றங்களை விளங்கிக் கொள்வதற்கும் அவற்றை மாணவர்களுக்கு எவ்வாறு அறிமுகப்படுத்தலாம் என்பதை அறிந்துகொள்ளவும் உதவியாயிருக்கும்.*

**7329**

**புள்ளிவிபரவியலும் நிகழ்தகவும்.** M.P.ஏக்கநாயக்க (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயதுங்க, M.K.பீரிஸ், W.M.பியதாச, K.D.D.பேர்சிவல், M.அப்துல் வாஹிது (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: Pacific Press).
*96 பக்கம், சித்திரங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணிதக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். மையநாட்டத்தை அளத்தல், ஆகாரம், இடையம், இடை, பரம்பல்களின் அளவீடு, நிகழ்தகவு ஆகிய ஆறு பிரிவுகளில் புள்ளிவிபரவியலும் நிகழ்தகவும் பற்றி இந்நூல் விளக்கமளிக்கின்றது.*

**7330**

**பைதகரசுத் தேற்றம்.** லயனல் றணசிங்க (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, D.J.வனசிங்க, M.P.ஏக்கநாயக்க, W.M.பியதாச, K.D.D.பேர்சிவல், S.சிவலோகநாதன் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press).
*48 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், செங்கோண முக்கோணி, பைதகரசுத் தொடர்பின் மாதிரிகள், பைதகரசுத் தேற்றம், பைதகரசுத் தேற்றத்தின் மூலைவிட்டத்திற்கான அடிப்படை, பைதகரசுத் தேற்றத்தின் விரிவாக்கம் ஆகிய அம்சங்கள் விபரிக்கப்பட்டுள்ளன.*

**7331**

**முறைசார் நிறுவல்.** W.M.பியதாச (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, M.P.ஏக்கநாயக்க, P.A.C.S.பெரேரா, K.சிவலோகநாதன் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: Pacific Press).
*40 பக்கம், சித்திரங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணிதக் கல்வி என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். நீங்கள் தெரிந்திருக்கவேண்டிய சில அடிப்படை உண்மைகள், முறைசார் நிறுவல், பல்கோணியின் கோணங்கள் தொடர்பான தேற்றங்களின் நிறுவல், ஒருங்கிசைவு தொடர்பான பிரசினங்கள், இணைகரம் மீதான தேற்றங்கள், நடுப்புள்ளித் தேற்றம் ஆகிய ஆறு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7332

**வட்டத் தேற்றங்கள்.** H.R.நிமால் ஜயசேகர (மூலம்), A.J.குணவர்த்தன, G.J.விஜேசேன, M.P.ஏக்கநாயக்க, D.J.வனசிங்க, L.A.பெரேரா, K.D.D.பேர்சிவல், M.அப்துல் வாகிது (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press).
72 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், வட்டம் தொடர்பான சில சந்தர்ப்பங்களைக் கற்றுக்கொள்ள முடியும். வட்ட வடிவத்தின் கேத்திரகணித மாதிரியே வட்டமாகும். வட்டவடிவமான பொருட்களின் தன்மைகளைப் படிப்பதற்கு வட்டங்கள் பற்றிய கேத்திரகணித அறிவு உதவுகின்றது. இந்நூலில் வட்ட நாண்கள், ஒரு வட்டத்திலுள்ள கோணங்களின் பண்பு, தொடலிகள் ஆகிய விடயங்கள் பற்றிக் குறிப்பாகப் பேசப்படுகின்றன.

### 7333

**வர்த்தக எண்கணிதம்**. சி.ந.தேவராசன். கொழும்பு 7: அரசகரும மொழித் திணைக்களம், வெளியீட்டுப் பிரிவு, 421 புல்லர்ஸ் வீதி, 1வது பதிப்பு, 1961. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).
xiv, 472 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

பொதுக் கணக்குப் பரிசோதகராகப் பணியாற்றிய இந்நூலாசிரியர் இத்துறையில் எழுதிய முதலாவது நூல் இதுவாகும். கல்விப் பொதுத் தகுதித் தேர்வில் பயிலும் மாணவர்களுக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. கூட்டல், கழித்தல், பெருக்கல், சினைகளும் மடங்குகளும், வகுத்தல், பொதுச் சினைகளுட் பெரியது, பொது மடங்குகளுட் சிறியது, பொதுப் பின்னங்கள், தசம பின்னங்கள், அண்ணளவும் சராசரியும், காசைத் தசம பின்னமாக்குதல், மீற்றர் முறைத் திட்டம், நூற்று வீதம், வர்க்கமும் வர்க்கமூலமும், பரப்பளவும் கனவளவும், அலகு முறை, கடைக்கணக்கு முறை, வீதமும் விகிதமும், கலவைகள், தனி வட்டி, தரகு, இறைகளும் வரிகளும், நட்டஈடு, காசுக் கழிவும் வியாபாரக் கழிவும், வங்கிக் கழிவும் இற்றைப் பெறுமானமும், விகிதப் பங்கீடும் பங்குடைமையும், முறிவு, பட்டியல்களும் கணக்குக் கூற்றுகளும், இலாப நட்டம், பங்குத் தொகுதிகளும் பங்கும், சங்கிலி முறை, நாணய மாற்று, அடுக்குக் குறிகள், மடக்கைகள், கூட்டுவட்டி, கடன்களைத் திருப்பிக் கொடுத்தல், ஆண்டுத் தொகையும் நட்டஈடும் ஆகிய தலைப்புகளில் வர்த்தக எண்கணிதத்தின் பல்வேறு கூறுகளும் விளக்கப்பட்டுள்ளன.

### 7334

**வரைபுகள்.** E.A.T. ஏக்கநாயக்க (மூலம்), A.J.குணவர்த்தன, G.G.விஜயசேன, M.P.ஏக்கநாயக்க, H.R.நிமல் ஜயசேகர, J.A.H. ஜயலத், M.P.M.M. ஷிப்லி, S.சிவப்பிரகாசம், பி.கபிரியல் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: United Merchants Limited).
40 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணிதப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். ஒரு புள்ளியின் நிலை, ஆள்கூறுகள், தெக்காட்டின் ஆள்கூற்றுத் தளம், எளிய ஒழுக்குகள், உற்பத்தியினூடாகச் செல்லும் நேர்கோடொன்றின் சமன்பாடு, நேர்கோடொன்றின் படித்திறன், நேர்கோடொன்றின் சமன்பாடும் அதன் பருமட்டான வரைபும் ஆகிய ஏழு பிரிவுகளில் வரைபுகள் விளக்கப்பட்டுள்ளன.

***7335***

**விகிதமும் விகிதசமமும்.** M.K.பீரிஸ் *(மூலம்),* A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, H.R.நிமால் ஜயசேகர, W.M.பியதாஸ, J.A.N.சில்வா, K.சிவலோகநாதன் *(பாடப்பதிப்பாசிரியர்கள்).* கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், *1*வது பதிப்பு, *1988. (*நுகேகொட: Deepanee Printers and Publishers, 464, High Level Road, Gangodavilla*).*
*64 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். அலகு முறை, விகிதத்தின் கருத்தை விளங்கிக் கொள்ளல், பரப்புக்களின் விகிதத்தைக் காணல், விகிதசமம், நேர்மாறு விகித சமம், கூட்டு விகிதசமம், விகிதமும் விகிதசமமும் ஆகிய ஏழு பகுதிகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***7336***

**விருத்திகள்.** M.A. முதியான்சே *(மூலம்),* A.J.குணவர்த்தன, G.J.விஜயசேன, M.P.ஏக்கநாயக்க, W. ஜயசிறி வனசிங்க, H.R.நிமல் ஜயசேகர, M.P.M.M. ஷிப்லி *(பாடப் பதிப்பாசிரியர்கள்).* கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், *1*வது பதிப்பு, *1989. (*கொழும்பு: Pacific Press*).*
*44 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான கணிதக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். எண் தொடரிகள், கூட்டல் விருத்தி, பெருக்கல் விருத்தி, பெருக்கல் விருத்தி ஒன்றின் முடிவில் எண்ணிக்கையான உறுப்புக்களின் கூட்டுத்தொகை, தொடர்கள் ஆகிய 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இந்நூலில் விருத்திகள் விளக்கப்பட்டுள்ளன.*

## *520 வானியல் விஞ்ஞானம்*

***7337***

**காலநிலையியலுக்கு ஓர் அறிமுகம்.** எஸ்.அன்ரனி நோர்பேட். கொழும்பு *12:* குமரன் புத்தக இல்லம், *361, 1/2* டாம் வீதி, *1*வது பதிப்பு *2007. (*கொழும்பு *12:* குமரன் புத்தக இல்லம், *361, 1/2,* டாம் வீதி*).*
*(6), 221 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 350., அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *978-955-659-107-9.*

*"காலநிலையியல்: வளிமண்டல அமைப்பும் செயன்முறையும்" என்ற தலைப்பில் 1996ஆம் ஆண்டில் இந்நூலாசிரியர் 5 அத்தியாயங்களில் எழுதிய நூலின் விரிவான பதிப்பு இதுவாகும். காலநிலையியல் பற்றிய அறிமுகம், வளிமண்டலத்தின் அமைப்பும் சேர்க்கையும், வளிமண்டலத்தின் சக்தி, வளி வெப்பநிலை, ஈரப்பதன் ஆகிய 5 அத்தியாயங்களில் முன்னைய நூல் எழுதப்பட்டு வெளிவந்தது. புவியியல் கற்கை நெறியில் பின்னாளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கருத்திற்கொண்டும், புதிய செல்நெறிகளை உள்வாங்கியும் புதுக்கி எழுதப்பட்ட இந்நூலில், காலநிலையியல் ஓர் அறிமுகம், வளிமண்டலத்தின் அமைப்பும் சேர்க்கையும், வளிமண்டலத்தின் சக்தி, வளிமண்டலத்தின் வெப்பநிலை, வளிமண்டலத்தின் அமுக்கம், காற்றுக்கள், வளிமண்டலத்தின் ஈரப்பதன், ஆவியாக்கம், முகில்களின் உருவாக்கமும் வகைகளும், படிவு வீழ்ச்சி, கெப்பனின் காலநிலைப் பாகுபாடு: பிரதான பிரிவுகளும் இயல்புகளும், கெப்பனின் காலநிலைப் பிரிவுகள் ஆகிய 12 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 630813).*

***7338***

**ஞாயிற்றுத் தொகுதியும் உடுக்களும்.** H.G.C.A.T. ஜயசேகர, T.குணசிங்க, N.வாகீசமூர்த்தி, M.கோபால், ஏ.சிவராஜா, மஹிந்த ராஜபக்ஷ *(செயற்குழு).* கொழும்பு: தொலைக் கல்விக் கிளை, இலங்கை கல்வி அமைச்சு, *1*வது பதிப்பு, *1986. (*கொழும்பு: குணரட்ண ஓப்செட் லிமிட்டெட்*).*
*20 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இந்நூல் ஞாயிற்றுத் தொகுதி, கோள் தொகுதி, உடுக்கள் ஆகிய மூன்று பிரிவுகளில் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.*

### 7339

**வளிமண்டலம்.** H.G.C.A.T. *ஜெயசேகரா,* R.P.A. *ஜயசேகரா,* N.*வாகீசமூர்த்தி,* M.*கோபால், ஏ.சிவராஜா,* G.H.*மஹிந்தரத்தினா (செயற்குழு). கொழும்பு: தொலைக் கல்விக் கிளை, இலங்கை கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: குணரட்ன ஒப்செட் லிமிட்டெட்).*
*28 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். வளிமண்டலத்தின் தன்மை, ஒரு வளமாக வளிமண்டலம், வளிமண்டலத்தின் கூறுகளும் வளிமண்டல அமுக்கமும் ஆகிய மூன்று பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

### 7340

**வியத்தகு விண்மீன்கள்.** *கனி விமலநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 600094: பி.வி.ஆர். ஆப்செட்).*
*112 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 24x18 சமீ.*

*தமிழில் அறிவியல் நூல்களை வழங்கும் கனி விமலநாதனின் ஐந்தாவது படைப்பு இதுவாகும். விண்மீன்கள் பற்றிய பல்வேறு விடயங்களையும் எளிய தமிழில் தொகுத்து வழங்கும் நூல் இது. முதற்பகுதியில் அறிமுகம், நாம் காணும் விண்மீன்கள், ஈர்ப்பும் அதன் விளைவுகளும், அயன்ஸ்ரைனின் ஈர்ப்புப் புலக் கொள்கை, விண்மீன்களின் வகைகள் ஆகிய 5 விடயங்கள் இடம்பெறுகின்றன. இரண்டாம் பகுதியில் விண்வெளியின் அமைப்பு, விண்மீன்களின் பிறப்பு, பிரதான தொடர் விண்மீன்கள், விண்மீன்களின் வாழ்க்கை வட்டம், இறக்கும் விண்மீன்கள், திணிவு கூடிய விண்மீன்களின் முடிவு ஆகிய 6 விடயங்களும், இறுதிப் பிரிவாகிய 3ம் பகுதியில் உயிர்ப்புள்ள விண்மீன்கள், வெண்குள்ளர்கள், சந்திரசேகர் எல்லை, பாரமான தனிமங்கள் தோன்றுதல், சுப்பநோவா, நியூத்திரன் விண்மீன்கள், கருந்துளைகள், விண்மீன்களின் தூரம், வூல்வ்-ரயற் விண்மீன்கள், கோள்கள் தோன்றுதல் ஆகிய 10 விடயங்களும் விளக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பில் கலைச்சொல் அகராதியொன்றும் தரப்பட்டுள்ளது.*

*மேலும் பார்க்க: 7793*

## 526.9 நில அளவையியல் விஞ்ஞானம்

### 7341

**நிலஅளவையியல்: ஓர்அறிமுகம்.** *வே.நவரத்தினராசா. கொழும்பு: வே.நவரத்தினராசா, 1வது பதிப்பு, 2006. . (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).*
vi, *70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.*

*நில அளவையோடு (*Surveying*) சம்பந்தப்பட்ட பல முக்கிய அடிப்படை விடயங்களை தெளிவுபடுத்தி வெளிவந்துள்ள நூல். நில அளவைத்துறையை தமது தொழில்துறையாகத் தேர்ந்தெடுக்க முன்வரும் ஒருவருக்கு அதன் பரிமாணங்களை இந்நூல் விரிவாகத் தருகின்றது. நில அளவையியல், நீட்டல் அளவையியல், திசைகோள் அளவையியல், மட்டமாக்கல், தளமேசை அளவையியல் ஆகிய 5 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நில அளவையியல்துறையில் பயன்படுத்தப்படும் துறைசார் ஆங்கிலச் சொற்களுடன் பரிச்சயத்தையும் வாசகர் பெறமுடிகின்றது. கலைச்சொற்றொகுதி அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.*

## 530 பௌதிகம்

**7342**

**அடர்த்தியும் அமுக்கமும்.** V.A.பிரேமரத்ன (மூலம்), சுனேத்திரா கருணாரத்ன, R.P.A. ஜயசேகர, O.W.ரஞ்சித் பிரேமசிரி, ந.வாகீசமூர்த்தி, M.கோபால், M.T.S.குணரத்ன, T.இராமலிங்கம் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press).
48 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், அடர்த்தி, அமுக்கம், மிதப்பு ஆகிய தலைப்புகளில் விடயங்கள் தரப்பட்டுள்ளன.

**7343**

**அடிப்படை இலத்திரனியல் முதலாம் பகுதி.** ஜீ.டீ.ஸூதசிங்ஹ (ஆங்கில மூலம்), எம்.எச்.எம். யாக்கூத் (தமிழாக்கம்). கொழும்பு 8: பூர்ண கல்வி அபிவிருத்தி மன்றம், 44/1A, மருதானை வீதி, 1வது பதிப்பு, 1994. (ரத்மலானா: சர்வோதய விஷ்வலேகா அச்சகம்).
(4), 44 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 28.5x21.5 சமீ., ISBN: 955-621-029-6.

தரம் 9 முதல் 11 வரை விஞ்ஞான பாடத்திட்டத்தில் இடம்பெறக்கூடிய இலத்திரனியல் பாடக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல். இந்நூலாசிரியர், தேசிய கல்விநிறுவன விஞ்ஞானக் கல்வித்துறையில் செய்திட்ட அதிகாரியாகப் பணியாற்றியவர். இலங்கைப் பாடசாலைகளுக்குப் பொருத்தமான விஞ்ஞான உபகரணங்களை அறிமுகஞ் செய்த முன்னோடிகளுள் ஒருவராக இனம்காணப்பட்ட இவர் ஜப்பானின் AOTS நிறுவனத்தில் தொழில்நுட்பப் பயிற்சியையும் பெற்றக்கொண்டவர். இவரால் எழுதப்பட்ட An easy way to Electronics என்ற நூலுக்கு 1991இல் பொதுநலவாய அமைப்பின் CASTME விருது கிடைத்தது.

**7344**

**இயக்கம்.** A.D.குணதாச (மூலம்), சுனேத்ரா கருணாரத்ன, O.W. ரஞ்சித் பிரேமசிறி, D.குணசிங்க (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக் கல்விக் கிளை, இலங்கை கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (இரத்மலான: சர்வோதய விஸ்வலேகா அச்சகம்).
20 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இடப்பெயர்ச்சி, ஆர்முடுகல், புவியீர்ப்புக் காரணமாக உண்டாகும் இயக்கம் ஆகிய மூன்று விடயங்களும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

**7345**

**இலத்திரனியல்.** P.J.K.விதானகமாச்சி (மூலம்), R.P.A. ஜயசேகர, சுனேத்திரா கருணாரத்ன, O.W.ரஞ்சித் பிரேமசிரி, K.U.ஆட்டிகல, ந.வாகீசமூர்த்தி, ப.சபாரத்தினம் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press).
28 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், வால்வுகள், குறைகடத்தி, வானொலிப்பெட்டி ஆகிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இலத்திரன்களை (மின்னோட்டத்தை) எமக்குத் தேவையானவாறு கட்டுப்படுத்தலாம் என்று அறிந்துகொண்ட பின்னர் மனிதனின் முன்னேற்றம் மிக மேம்பட்டதைத் தொடர்ந்து விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அபிவிருத்தியடையலாயின. எமக்குப் பயன்படத்தக்க

பேறுகள் கிடைக்கத்தக்கதாக இலத்திரன்களை (மின்னோட்டத்தை)க் கட்டுப்படுத்தல் பற்றிய விஞ்ஞானமும் தொழில்நுட்பமுமே இலத்திரனியல் ஆகும். இலத்திரனியல் பற்றி அறிந்துகொள்வதற்கு இந்த மொடியூல் உதவுகின்றது.

### 7346

**எளிய பொறிகள்.** O.W. ரஞ்சித் பிரேமசிறி (மூலம்), சுனேத்ரா கருணாரத்ன, T.குணசிங்க, R.P.A.ஜயசேகர, ந.வாகீசமூர்த்தி, M.கோபால், T.இராமலிங்கம், M.T.S.குணரத்ன, நா.சண்முகானந்தா (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: Pacific Press).
36 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்வி என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். நெம்புகளும் கப்பிகளும், மெய்ப் பொறிமுறை நயமும் பூரண பொறிமுறை நயமும், வலுவும் திறனும் ஆகிய மூன்று பிரிவுகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7347

**ஒளி.** K.A.D.S.சரத்சந்திர (மூலம்), R.P.A.ஜயசேகர, A.D.குணதாச, W.திசாநாயக்க, நிர்மலி பெரேரா, ந.வாகீசமூர்த்தி, ப.சபாரத்தினம், N.சண்முகானந்தா (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: Pacific Press).
56 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். ஒளியின் இயல்புகள், வளைவு ஆடிகளிலே தோன்றும் விம்பங்கள், தளமேற்பரப்புகளில் ஒளிமுறிவு, அரியங்களும் திருசியமும், வில்லைகள், ஒளியியற் கருவிகள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7348

**ஓட்ட மின்னியல்.** P.A. திலகரத்ன (மூலம்), K.A.D.S.சரத்சந்திர, N.J.லியனகே, W.திசாநாயக்க, Y.A.D.நிமால் சந்திரசிறி, R.P.A. ஜயசேகரா, ந.வாகீசமூர்த்தி, நா.சண்முகானந்தா, ப.சபாரத்தினம் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: Pacific Press).
60 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்வி என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். மின் கலங்களும் பற்றரிகளும், மின்வலு, மின்னோட்டத்தின் காந்த விளைவுகள் ஆகிய மூன்று பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7349

**சக்தியும் பிணைப்புகளும்.** W.R.L.M.வீரக்கொடி, வில்சன் திசாநாயக்க (மூலம்), A.G.N.H.பெரேரா, R.P.A. ஜயசேகர, W.M.H. தசநாயக்க, ந.வாகீசமூர்த்தி, ப.சபாரத்தினம் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press).
48 பக்கம், சித்திரங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இரசாயனத் தாக்கங்களின்போது உண்டாகும் சக்திமாற்றம், எசுவின் மாறாவெப்பக் கூட்டல் விதி, இரசாயனப் பிணைப்புகள், சக்தி மாற்றங்களும் பிணைப்புகளும் ஆகிய நான்கு விடயங்களை இந்நூல் விளக்கியுள்ளது.

***7350***

***சடப்பொருளின் துணிக்கை இயல்பும் அணு அமைப்பும்.*** A.G.N.H.பெரேரா *(மூலம்),* R.P.A.ஜயசேகரா, W.R.L.M. வீரக்கொடி, C.K.வைத்தியரத்தின, S.கருணாரட்ண *(பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக் கல்விக் கிளை, இலங்கை கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (இரத்மலானை: சர்வோதய விஸ்வலேகா அச்சகம்).*
*32 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். மூலகங்களும் சேர்வைகளும், அணு அமைப்பு, அணு எண், தொடர்பு அணுத் திணிவு, சமதானி ஆகிய தலைப்புகளில் சடப்பொருள்களின் துணிக்கை இயல்பு பற்றி விளக்கப்பட்டுள்ளன.*

***7351***

***விசையும் விசைகளின் சமநிலையும்.*** P.A. *திலகரத்ன (மூலம்),* K.U.*ஆட்டிகலை, சுனேத்ரா கருணாரத்ன,* O.W. *ரஞ்சித் பிரேமசிறி,* R.P.A.*ஜயசேகர,* M.*கோபால்,* N.*வாகீசமூர்த்தி (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு:* United Merchants*).*
*64 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். விசை, புவியீர்ப்பு மையம், நியூற்றனின் இயக்க விதிகள் ஆகிய பிரிவுகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***7352***

***வெப்பமும் தகனமும்.*** D.S.*விதானச்சி (மூலம்), சுனேத்ரா கருணாரத்ன,* O.W. *ரஞ்சித் பிரேமசிறி,* R.P.A.*ஜயசேகர,* K.U.*ஆட்டிகல, ந.வாகீசமூர்த்தி,* M.*கோபால், ப.சபாரத்தினம், (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு:* Pacific Press*).*
*44 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்வி என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். வெப்பம் என்றால் என்ன, விரிவு, திரவங்களின் விரிவு, வாயுக்களின் விரிவு, வெப்ப இடமாற்றுகை ஆகிய மூன்று பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

## *540 இரசாயனம்*

***7353***

***ஆவர்த்தன அட்டவணை.*** C.K. *வைத்தியரட்ண (மூலம்), சுனேத்ரா கருணாரத்ன,* O.W. *ரஞ்சித் பிரேமசிறி,* K.U.*ஆட்டிகல,* N.*வாகீசமூர்த்தி,* M.*கோபால்,* M.T.S. *குணரத்ன,* N.*சண்முகானந்தா,* T.*இராமலிங்கம் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு:* Pacific Press*).*
*36 பக்கம், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். மூலகங்களின் பாகுபாடு, ஆவர்த்தன அட்டவணைகளின் சிறப்பியல்புகள் ஆகிய இரு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***7354***

***இடைத்தாக்கங்களும் இரசாயனக் கணிப்புகளும்.*** R.P.A.*ஜயசேகர (மூலம்), சுனேத்ரா கருணாரத்ன,* A.G.N.H.*பெரேரா,* W.*திசாநாயக்க,* M.*கோபால்,* N.*வாகீசமூர்த்தி,* N.*சண்முகானந்தா (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு:* United Merchants*).*

*40 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21.5 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இடைத்தாக்க வகைகள், இரசாயனக் கணிப்புகள் ஆகிய பிரிவுகளில் இடைத்தாக்கங்களும் இரசாயனக் கணிப்புகளும் பற்றிய விளக்கத்தைத் தரும்வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***7355***

***சடப்பொருளின் இயல்புகள்.*** K.A.D.S.*சரத்சந்திர (மூலம்),* K.U.*ஆட்டிகல,* R.P.A. *ஜயசேகரா,* S.P.*தோரதெனிய, ந.வாகீசமூர்த்தி, ப.சபாரத்தினம் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு:* Pacific Press*).*

*32 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்வி என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். சடப்பொருள், பரப்பு இழுவை, பிசுக்குமை, மீள்தன்மை ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***7356***

***சேதன இரசாயனம்.*** N.P.S.D.*ஆரியதாச (மூலம்),* W.*திசாநாயக்க,* R.P.A.*ஜயசேகர,* S.P.*தோரதெனிய,* A.G.N.M.*பெரேரா, ந.வாகீசமூர்த்தி, ப.சபாரத்தினம் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு:* Pacific Press*).*

*40 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்வி என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். காபனும் அதன் சேர்வைகளும், அற்ககோல், காபொட்சலிக் அமிலங்கள், எசுத்தர்கள், ஐதரோ காபன்கள் ஆகிய பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***7357***

***தாக்க வீதமும் சமநிலையும்.*** O.W. *ரஞ்சித் பிரேமசிறி,* W.*திசாநாயக்க (மூலம்),* R.P.A.*ஜயசேகர, சுனேத்ரா கருணாரத்ன,* W.R.L.M.*வீரக்கொடி,* P.*பிலப்பிட்டிய,* M.*கோபால்,* S.*கஜமுகன் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு:* Pacific Press*).*

*36 பக்கம், சித்திரங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். தாக்கவீதத்தைப் பாதிக்கும் காரணிகள், தாக்கவீதத்தை அளத்தல், மீளும் தாக்கங்களும் இரசாயனச் சமநிலையும் ஆகிய மூன்று பிரிவுகளில் தாக்கவீதமும் சமநிலையும் பற்றி இந்நூல் விளக்கமளிக்கின்றது.*

***7358***

***மின்னிரசாயனம்.*** *வில்சன் திசாநாயக்கா (மூலம்), மாலனி தசநாயக்க,* A.G.N.H.*பெரேரா,* W.R.L.M.*வீரக்கொடி,* N.*வாகீசமூர்த்தி,* R.P.A.*ஜயசேகர, ப.சபாரத்தினம் (பாடப்பதிப்பாசிரியர்கள்).*

கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: Pacific Press).
68 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். தாக்கத்தொடர், நியம மின்வாய் அழுத்தங்கள், அரிப்பு, மின்பகுப்பு ஆகிய பிரிவுகளில் மின்னிரசாயனம் பற்றிய விளக்கத்தைத் தரும்வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 550 புவியியல் விஞ்ஞானம்

### 7359

**இலங்கை இடை வலயத்தின் மண்கள்: உருவவியல் உருவ வர்ணணை, பாகுபாடு.** R.P.மாப்பா, A.R.தசநாயக்க, H.P.நாயக்ககோராள (ஆங்கில மூலம்), சீரங்கன் பெரியசாமி (தமிழாக்கம்). கண்டி: இலங்கை மண் விஞ்ஞானச் சங்கம், தபால் பெட்டி இல. 10, பேராதனை 20400, 1வது பதிப்பு, 2005. (இரத்மலானா: சர்வோதய விஷ்வலேக்கா. இல. 41, லும்பினி அவென்யு).
xx, 252 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17சமீ., ISBN: 955-8124-05-2.

அறிமுகம், இடைவலயத்தின் காலநிலை, இடைவலயத்தின் நில இயற்கைத் தோற்றங்களும், நில வடிவமும், தாழ்நாட்டு இடைவலயத்தின் மண்கள், மத்தியநாட்டு இடைவலயத்தின் மண்கள், மலைநாட்டு இடைவலயத்தின் மண்கள், இடைவலய மண்களின் ஆபத்துகளும் கட்டுப்பாடுகளும், இடைவலய மண்களை முகாமைத்துவம் செய்தல் (நெல், தேயிலை, இறப்பர், தென்னை, வனங்கள், வாசனைப் பயிர்கள், பழப்பயிர்கள், மரக்கறிப் பயிர்கள்) ஆகிய தலைப்புகளில் இந்நூல் பல்வேறு ஆய்வாளர்களின் கட்டுரைகளை உள்ளடக்குகின்றது. இலங்கை மண் விஞ்ஞானச் சங்க விசேட பிரசுர இலக்கம் 4. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 601539).

### 7360

**புவியியல் மூல தத்துவங்கள்: பௌதிகவியலும் பண்பாட்டியலும்.** வீ.சீ.பின்ச், ஜீ.டீ.திரவாதா, ஏ.எச்.றொபின்சன், ஈ.எச்.ஹமன்ட் (ஆங்கில மூலம்), எஸ்.ஐயாத்துரை, கே.சோமசுந்தரம் (தமிழ் மொழிபெயர்ப்பு). கொழும்பு 7: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறிமதிபாயா, 58, சேர் ஏர்ணஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, ஜுலை 1974. (இலங்கை: அரசாங்க அச்சுத் திணைக்களம்).
xiv, (2), 846 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x19 சமீ.

V.C.Finch, G.T.Trewarthe, A.H.Robinson, E.H.Hammond ஆகியோர் 1957இல் இணைந்து எழுதிய Elements of Geography: Physical and Cultural என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். மூன்று பிரதான பாகங்களை உள்ளடக்கிய இந்நூலின் முதலாம் பாகத்தில் புவியியலின் பௌதிக உறுப்புக்கள் என்ற தலைப்பின்கீழ், காலநிலை உறுப்புகள், காலநிலை வகைகளும், அவற்றின் பரம்பலும், நிலவுருவங்களும் கடல்களும், புவிவள வருவாய்கள் ஆகிய அமிசங்கள் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பாகத்தில் மக்கட்டொகை பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. புவியியலின் பண்பாட்டு அங்கங்கள் என்ற மூன்றாம் பாகத்தில் பௌதிகப் புவியை மனிதன் பயன்படுத்துவதனால் உண்டாகும் குடியிருப்புகள், பயிர்ச்செய்கை, கைத்தொழில், போக்குவரத்து மற்றும் வியாபார விளைவுகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. நான்காவது பாகம் இந்நூலின் பிரதான விடயம் தொடர்பான 5 பின்னிணைப்புகளைக் கொண்டுள்ளது.

## 551.47 சுனாமி

### 7361

**கரையோர கடல் வேட்டை.** லோகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி (தொகுப்பாசிரியர்). அக்கரைப்பற்று 07: திருமதி லோகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி, நெசவு நிலைய வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2005. (அக்கரைப்பற்று: செலெக்ஷன் ஓப்செற்).
xxiv, 128 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ.

மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை சென்று சுனாமியால் ஏற்பட்ட அழிவுகளையும் மக்களது மனநிலைகளையும் நேரடியாகப் பார்வையிட்டு அவர்களுடன் உரையாடி அவர்களது அனுபவங்களையும் தேவைகளையும் கேட்டறிந்து இந்நூலில் புகைப்படங்களுடன் பதிவுசெய்துள்ளார். இந்நூலாசிரியர் அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36676).

## 570 உயிரியல்

### 7362
**இனப்பெருக்கம்.** மியூரியல் பெரேரா (மூலம்), K.U.ஆட்டிகல, R.P.A. ஜயசேகர, A.G.N.H. பெரேரா, W.M.H.தசநாயக்க, P.பிலப்பிட்டிய, M.கோபால், M.H.M.யாகூத் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press).
40 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், அங்கிகளின் இனப்பெருக்க முறைகள், தாவரங்களில் இலிங்கமுறை இனப்பெருக்கம், மனித இனப்பெருக்கம் ஆகிய தலைப்புகளில் விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

### 7363
**உயிரினங்களின் இடைத் தொடர்புகள்.** மியூரியல் பெரேரா (மூலம்), K.U.ஆட்டிகல, சுனேத்திரா கருணாரத்ன, R.P.A. ஜயசேகர, G.H.P.R.குணசேகர, ந.வாகீசமூர்த்தி, M.கோபால் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press).
44 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் இடையே உள்ள இடைத் தொடர்புகள், உயிரினங்களுக்கிடையே உள்ள விசேட இடைத்தொடர்புகள், உயிரினங்களிற் காணப்படும் இடைத் தொடர்புகள், தாவரங்களிலும் விலங்குகளிலும் மனிதன் செலுத்தும் ஆதிக்கம் ஆகிய தலைப்புகளில் விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

### 7364
**உயிரினங்களுக்குத் தேவையான உணவு.** H.U.லயனல் அமரகுணசேகர, மியுரியல் சுபசிங்க, N.வாகீசமூர்த்தி, M.கோபால், ஏ.சிவராஜா, P. கருணாதாச (செயற்குழு). கொழும்பு: தொலைக் கல்விக் கிளை, இலங்கை கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (இரத்மலானா: சர்வோதய விஸ்வலேகா அச்சகம்).
36 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். எமது உணவு, போசணைக் குறைபாடு தொடர்பான நோய்கள், சக்திப் பாய்ச்சல், நாம் உண்ணும்உணவுக்கு என்ன நடைபெறுகின்றது ஆகிய நான்கு பகுதிகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

***7365***

***கலம்.*** W.M.H. *தசநாயக்கா (மூலம்),* W.*திசாநாயக்க,* R.P.A. *ஜயசேகர, மியுரியல் பெரேரா,* N.*வாகீசமூர்த்தி, ப.சபாரத்தினம்,* S.*கருணாரத்ன,* M.H.M.*யாகூத்,* M.*கோபால் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு:* Pacific Press*).*

***56 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21.5 சமீ.***

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். கலத்தின் கட்டமைப்பு, கலப் பிரிவு, பாரம்பரியம்,* DNA *மூலக்கூறும் விகாரங்களும் ஆகிய நான்கு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***7366***

***சுவாசித்தலும் கழிவகற்றலும்.*** P.A.H.P.R.*குணசேகர (மூலம்),* R.P.A. *ஜயசேகர, சுனேத்ரா கருணாரத்ன,* K.U.*ஆட்டிகல,* W.R.L.M.*வீரக்கொடி, ந.வாகீசமூர்த்தி (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு:* Pacific Press*).*

***56 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21.5 சமீ.***

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்வி என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். மனித உடலிற் சுவாசித்தல், மனித உடலிற் கழிவகற்றல் ஆகிய இரு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***7367***

***பரம்பரையும் சூழலும்.*** A.K.*ஹேவக (மூலம்),* H.G.C.A.T. *ஜெயசேகரா,* S.T. *லயனல் அமரகுணசேகர,* P.A.*டேவிட்,* K.D.*நளினசேனா,* K.G.*த மெல்,* P.M.L.R. *பண்டார (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1990. (கொழும்பு:* Pacific Press*).*

***24 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.***

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான தொழில்சார் கல்வி என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். பரம்பரை சூழல் என்றால் என்ன, பரம்பரையின் உயிரியல் அடிப்படைகள், சூழற் காரணிகள், கற்றலில் பரம்பரையினதும் சூழலினதும் செல்வாக்கு ஆகிய பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***7368***

***மனித உடலின் ஆதாரம் அசைவு இடப்பெயர்ச்சி.*** P.A.H.P.R.*குணசேகர (மூலம்), சுனேத்ரா கருணாரத்ன,* R.P.A.*ஜயசேகர,* K.U.*ஆட்டிகல,* F.R.L.M.*வீரக்கொடி,* N.*வாகீசமூர்த்தி (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு:* Pacific Press*).*

***52 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21.5 சமீ.***

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞானக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். மனித உடலின் ஆதாரம், மனித உடலின் அசைவு, மனித உடலின் இடப்பெயர்ச்சி ஆகிய மூன்று பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

## *580 தாவரவியல்*

***7369***

**தாவரத்தின் கட்டமைப்பும் தொழிற்பாடும்.** மியுரியல் பெரேரா (மூலம்), சுனேத்ரா கருணாரத்ன, R.P.A.ஜயசேகர, F.R.L.M.வீரக்கொடி, N.வாகீசமூர்த்தி, M.கோபால் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: Pacific Press).
56 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான விஞ்ஞான-கணிதக் கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். தாவரத்தின் பல்வேறு பகுதிகளும் கட்டமைப்பும், தாவர இலையும் அதன் பணிகளும், தாவரம் ஆற்றும் ஏனைய பணிகள் ஆகிய மூன்று பிரிவுகளில் தாவரத்தின் கட்டமைப்பும் தொழிற்பாடுகளும் விளக்கப்பட்டுள்ளன.

## 600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்

### 613 பொது உடல்நலவியல்

**7370**
**ஆரோக்கியத்தில் உணவின் பங்கு: உணவே மருந்து.** கா.வைத்தீஸ்வரன். தெகிவளை: கா.வைத்தீஸ்வரன், சுகநலக் கல்வியாளர், காயத்திரி அகம், 7 அல்பேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2010. (கொழும்பு 13: கீதா பப்ளிக்கேஷன்ஸ்).
144 பக்கம், விளக்கப்படம், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-97577-2-6.

சுகவாழ்வுக்கு உணவு அடிப்படைத் தேவையாகும். தவறான உணவுகளும், உணவுப் பழக்க வழக்கங்களும், உயிர் பறிக்கும் நோய்களாக உருவாக முடியும். இவ்வுண்மையைக் கருப்பொருளாகக் கொண்டு, உணவைச் சரியான அளவோடு அவரவர் தேவைக்கேற்ப உண்ண வேண்டும் என்ற நோக்கை இந்நூல் கொண்டுள்ளது.

**7371**
**உளநலக் கோளாறுகளின் சிகிச்சையில் மருந்துகளின் பிரயோகம்.** பா.யூடி ரமேஸ் ஜெயக்குமார். ராஜகிரிய: Basic Needs, 600/3 நாவல வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (தெகிவளை: கே.ஐ.எஸ்.எஸ்.கிரியேஷன்ஸ்).
viii, 58 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

இந்நூலில் மனநல நோய் குறித்த பொதுவான அடிப்படை அறிவு வழங்கப்படுவதோடு, தவறான கருத்துக்கள், சந்தேகங்கள் என்பவற்றிற்குச் சிறப்பான பதில்களும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. மனநோயால் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது நெருங்கிய குடும்ப உறவினர்களும் நோயாளிக்காகப் பயன்படுத்தப்படும் மருந்து வகைகள் குறித்து அறிந்துவைத்திருக்கவேண்டிய தகவல்களையும் இந்நூல் தருகின்றது. குறிப்பிட்ட மருந்துப் பாவனையால் உண்டாகும் நன்மைகள், அனுகூலங்கள் என்பவற்றோடு அவற்றின் பக்கவிளைவுகள், எதிர்விளைவுகள் பற்றியும் தெளிவான விளக்கங்களை இந்நூல் வழங்குகினறது. நூலாசிரியர் கல்முனை ஆதார வைத்தியசாலையின் சிரேஷ்ட உளநல மருத்துவராகப் பணியாற்றுகின்றார்.

**7372**
**கொலஸ்ட்ரோல் கட்டுப்படுத்துவது எப்படி?** எம்.கே.முருகானந்தன். கொழும்பு 6: எம்.கே.முருகானந்தன், 48/1, தர்மராம வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2009. (கொழும்பு: Soft coins Designers and Printers).
ii, 30 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 75.00, அளவு: 21x14.5 சமீ.

இந்நூலில் கொலஸ்ட்ரோல் என்றால் என்ன, அதன் அறிகுறிகள், இரத்தத்தில் கொழுப்பு அதிகரித்ததை அறிவது எப்படி, கட்டாயமாக இரத்தப் பரிசோதனை உள்ளிட்டவைகளைச் செய்ய வேண்டியோர் யாவர், இரத்தத்தில் கொழுப்பு எந்தளவில் இருக்கவேண்டும், கொலஸ்ட்ரோல்

அதிகரிப்பதற்குக் காரணங்கள் என்பன போன்ற பல விடயங்கள் பகுதி பகுதியாகப்பிரித்து விபரிக்கப்பட்டுள்ளது.

### 7373

**மருத்துவக் களஞ்சியம்.** சிவ. தியாகராஜா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, ஜனவரி 2010. (சென்னை: பி.எஸ்.முத்து கிராப்பிக்ஸ்).

608 பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 450., அளவு: 25x19 சமீ., ISBN: 978-81-908681-8-1.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கட்டுவன் கிராமத்தில் பிறந்தவர் வைத்திய கலாநிதி எஸ்.தியாகராஜா. கொழும்பு மருத்துவக் கல்லூரியில் கற்றுத்தேர்ந்து இலங்கையிலும், பின்னர் புலம்பெயர்ந்து லண்டனிலும் வைத்தியராகவும், பிரபல தொல்லியல் ஆய்வாளராகவும், பன்னூலாசிரியராகவும், தமிழர்களிடையே பிரபல்யம் பெற்றவர். உயிரியல், ஆங்கில மருத்துவவியல், அறுவைச் சிகிச்சையியல், மகப்பேற்று மருத்துவம், மனநோயியல் ஆகிய துறைகளில் பெற்ற அனுபவத்தையும் பயிற்சியையும் உறுதுணையாகக்கொண்டு நவீன விஞ்ஞான மருத்துவத்தின் முக்கியமான பகுதிகளைத் தான் தமிழில் கூறவேண்டும் என்னும் அவாவினால் இப்பாரிய மருத்துவ நூலை எழுதி வெளியிட்டுள்ளார். ஆரோக்கிய வாழ்வு, இருதய, இரத்தக் குழாய் நோய்கள், நுரையீரல் நோய்கள், செரிமான மண்டல நோய்கள், நீரிழிவு நோய், கல்லீரல் நோய்களும் கணைய அழற்சியும், சிறுநீரக நோய்கள், புரோஸ்ரேற் (சுக்கிச் சுரப்பி) நோய்கள், முடக்குவாதவியலும் எலும்பு நோய்களும், மூளை நோய்களும் மனநலக் குறைவும், கண், காது, மூக்கு, தொண்டை நோய்கள், மகளிர் மருத்துவம், மகப்பேற்றியல், குடும்ப ஆரோக்கியம் ஆகிய 14 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7374

**முதுமையில் ஆரோக்கியம்.** கே.சிவாதரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

x, 114 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18x12.5 சமீ.

முதியோரும் நோய்களும், முதுமையும் தோலும், முதியோரும் செவிப்புலனும், முதியோரும் வாய்ச் சுகாதாரமும், முதியோரில் ஏற்படும் மனோவியல் தாக்கங்கள், வைத்தியரைத் தெரிவுசெய்தல், முதியோரும் உணவும், உடற் பயிற்சி, நிறைக் கட்டுப்பாடு, யோகாசனம், தியானம், பிராணாயாமம், முதியோரும் பொழுதுபோக்கும், முதியோரும் வாழிடமும், முதியோரும் போக்குவரத்தும், முதியோரும் பாலியலும், முதியோரின் கருத்துக்கள், முதுமையின் ஆரோக்கியத்தில் மற்றையோரின் பங்கு, முதியோரும் துர்நடத்தைகளும், முதியோரும் மருந்துகளும், முதியோரும் மாற்று மருத்துவங்களும் ஆகிய விடயங்கள் இந்நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் யாழ்ப்பாணம் மாதகலைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

## 613.7 யோகக்கலை

### 7375

**கிரியா யோகப் பாதை: உன்னையே உன்னிடம் அழைத்துச் செல்லும்.** இரா.சுதாஸ் (இயற்பெயர்: இராசக்கோன் சுதாஸ்). தெகிவளை: BBS Netting, 3/14 பின்வத்தை ரோட், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2008. (கொழும்பு: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44 புகையிரதநிலைய வீதி, தெகிவளை).

viii, 66 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 21.5x15 சமீ.

அட்டாங்க யோகத்தின் எட்டு அங்கங்கள், கடவுளிடம் சரணடைதல், பதஞ்சலியும் யோகாசனமும், க்ரியாஹத யோகமும் அதன் நன்மைகளும், உடலும் சுவாசமும், ஹத யோகமும் ஓய்வு நிலையும், சுவாசத்தின் தரமும் உணர்வும், பிராணாயாமம், தியானம், மன அமைதியும் தியானமும், வெற்றிகரமான தியானத்திற்கு உதவும் சான்றுகள், கண்டலினியும் சக்கரங்களும், யோக நித்திரை, ஓம்

*மந்திரத்தைத் தியானத்திற்குப் பயன்படுத்தல், உணவு முறைகள், யோகாவின் உணவு முறை ஆகிய 16 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

### 7376

**நல்வாழ்வு தரும் யோகக்கலை.** *நாகலிங்கம் குலசிங்கம். சுவிட்சர்லாந்து: கிருஷ்ணா யோகா நிலையம்,* Rte Joseph-Chaley 15, 1700 Fribourg, *1வது பதிப்பு, ஜுன் 2009. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).*
*197 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 22x15 சமீ.,* ISBN: *978-955-51144-2-4.*

*யாழ்ப்பாணம், இணுவில் கிராமத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட நூலாசிரியர் ஒரு ஆயுர்வேத வைத்தியராவார். யோகக்கலைமூலம் நோய்நீக்கும் முறைகளை விரிவாக புகைப்பட விளக்கங்களுடன் இந்நூலில் விளக்கியுள்ளார். யோகம் என்றால் என்ன, நோய்கள் வரக் காரணங்கள், காலத்தைப் பொன் செய்யுங்கள், யோகக் கலை ஏன் கற்கவேண்டும், யோகக் கலையைக் கற்க விரும்பும் மாணவர் கவனத்திற்கு, யோகாசனம் பழகுவதால் ஏற்படும் நன்மைகள், பிராணசக்தி, சமைத்த உணவின் தீமைகளும் சமைக்காத உணவின் நன்மைகளும், சூரிய நமஸ்காரம், அஷ்டாங்க யோக முறை, யோகத்தின் ஏழு பெரும் பிரிவுகள், நீரிழிவு நோய் உள்ளவர் கவனத்திற்கு, நீரிழிவு நோய் உள்ளவர்கள் செய்யவேண்டிய ஆசனங்கள், மலச்சிக்கல் வரக் காரணம், மலச்சிக்கல் உள்ளவர்கள் செய்யவேண்டிய ஆசனங்கள், மூலவியாதி உள்ளவர்கள் செய்யவேண்டிய ஆசனங்கள், வயிற்றில் வாய்வுவலி உள்ளவர்கள் செய்யவேண்டிய ஆசனங்கள், குஷ்டரோகம் உள்ளவர்கள் செய்யவேண்டிய ஆசனங்கள், நரம்புத்தளர்ச்சி உள்ளவர்கள் செய்யவேண்டிய ஆசனங்கள், ஆஸ்த்மா நோய் உள்ளவர்கள் செய்யவேண்டிய ஆசனங்கள், குடலிறக்கம் உள்ளவர்கள் செய்யவேண்டிய ஆசனங்கள், இரத்த அழுத்தம் உள்ளவர்கள் செய்யவேண்டிய ஆசனங்கள், முப்பத்திநான்கு முக்கிய ஆசனங்கள், மாணவர்கள் படங்கள், பவனமுத்தாசனங்கள், யாவரும் நலமுடன் வாழவேண்டும் ஆகிய 26 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக சுவாமி சிவானந்தா எழுதி நர்மதா பதிப்பகத்தினால் வெளியிடப்பட்ட மன அமைதிப் பூங்காவுக்கு ஒரு நல்வாழ்க்கைப் பாதை என்ற நூலும் முழுமையாக மீள்பிரசுரமாகியுள்ளது.*

### 7377

**பெண்களின் சுகமான வாழ்வுக்கு வழிகாட்டும் யோகாசனங்கள்.** *ம.நேசராஜ். யாழ்ப்பாணம்: ம.நேசராஜ், மானிப்பாய் வீதி, தாவடி, 1வது பதிப்பு, யூலை 2005. (யாழ்ப்பாணம்: நோபல் பிரிண்டர்ஸ், பலாலி வீதி).*
*(4), 70 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 120., அளவு: 19x13.5 சமீ.*

*குடும்பப்பொறுப்புகள், அலுவலகப் பிரச்சினைகள், தனிமை, வறுமை எனப் பல பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்கும் இன்றைய பெண்கள் மன இளமையுடனும், உடல் ஆரோக்கியத்துடனும் வாழ யோகக்கலை எவ்வாறு உதவுகின்றது என்பதை இந்நூல் விளக்குகின்றது. யோகக் கலை, யோகாசனம் பழகுவதால் ஏற்படும் நன்மைகள், குணமாகும் நோய்கள், பெண்கள் யோகாசனம் செய்யத் தொடங்கும் முன்னர் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள், உணவு முறை, விழிப்புணர்வுக்கான மூச்சுப் பயிற்சிகள், உடலைத் தளர்த்தும் பயிற்சிகள், சாந்தி ஆசனம், நின்றபடி செய்யும் ஆசனங்கள், உட்கார்ந்து செய்யும் ஆசனங்கள், நேராகப் படுத்திருந்து செய்யும் ஆசனங்கள், குப்புறப் படுத்திருந்து செய்யும் ஆசனங்கள், சிரசாசனம், நாடிசுத்திப் பிராணாயாமம், தியானம் ஆகிய தலைப்புகளில் இந்நூல் விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 160551).*

## 618 பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம்

### 7378

**அன்புள்ள அம்மா.** *சி.நவநீதன். யாழ்ப்பாணம்: வைத்திய கலாநிதி சி.நவநீதன், மகப்பேற்று பெண்நோயியில் நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை, 1வது பதிப்பு, தை 2005. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).*
*100 பக்கம், 92 விளக்கப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *955-98894-0-0.*

*யாழ். போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று பெண் நோயியல் நிபுணரும், யாழ். மருத்துவபீடத்தின் பகுதிநேர விரிவுரையாளருமான கலாநிதி நவநீதன் இந்நூலாசிரியர். கர்ப்பிணிப் பெண்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் சந்தேகங்களுக்கும் மருத்துவரீதியான பதிலை இந்நூல் வழங்குகின்றது. கர்ப்பகாலப் பராமரிப்பை மும்மூன்று மாதங்களாகப் பிரித்து அவ்வக்காலகட்டத் தேவைகள், சந்தேகங்கள் பற்றி வாசகருடன் இந்நூல் உரையாடுகின்றது. ஆரம்ப கர்ப்பகாலம், கர்ப்பகாலத்தில் உடலில் ஏற்படும் மாற்றங்கள், ஆரம்பகால கர்ப்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள், பிரசவகால உடற்பராமரிப்பும் உடற்பயிற்சியும், நாள் பிந்திய கர்ப்பம், சத்திரசிகிச்சை மூலம் மகப்பேறு, ஆயுத பிரசவங்கள், பிரசவத்தின் போது ஏற்படும் சிக்கல்கள், தாய்ப்பாலூட்டல், மகப்பேற்றின் பின் குடும்பத்திட்டம் உள்ளிட்ட 20 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. உதாரணமாக, திருமணமாகி எவ்வளவு நாளில் கருத்தரிக்கும், குங்குமப்பூ சாப்பிடலாமா, தவிர்க்க வேண்டிய உணவுகள், விடயங்கள் எவை, பத்தியம், குழை அவித்துக் குளித்தல் ஆகியவற்றின் பயன் என்ன என்பனபோன்ற கேள்விகளுக்கு இந்நூல் தெளிவான பதிலை வழங்குகின்றது. இத்தகைய பிராந்திய அணுகுமுறையானது இந்த நூலை ஈழத்து வாசகரிடம் நம்பிக்கையுடன் கொண்டுசெல்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40015).*

## *619 கீழைத்தேய மருத்துவம்*

***7379***

***சுகராகம்: சிறப்பு மலர் 2002: இலங்கை பரம்பரை வைத்தியர்களின் சங்கத்தின் சிறப்பு மலர் 2002.*** *எஸ்.எம்.இத்ரீஸ் (பதிப்பாசிரியர்). மருதமுனை: இலங்கை பரம்பரை வைத்தியர்கள் சங்கம், 171, நூலக வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2003. (கல்முனை: பிரிந்தா ஓப்செட், வை.எம்.சீ.ஏ. கட்டிடம்).*
*(6), 62 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, புகைப்படங்கள், அளவு: 20x15 சமீ.*

*12.01.2002 அன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இலங்கை பரம்பரை வைத்தியர்கள் சங்கம், பல்வேறு தடைகளையும் தாண்டி 18.01.2003இல் தன் ஓராண்டு நிறைவைக் கொண்டாடிய வேளையில் வெளியிடப்பட்ட சிறப்புமலர் இது. இவ்வமைப்பின் ஆலோசகர்களாக பேராசிரியர் எஸ்.பவானி, திருமதி ஐ.தர்மராஜா, கலாநிதி H.A.P.ஜன்மவீர, ஆகியோரும் தலைவராக S.M.இத்ரீஸ் (ஈழக்குயில்) அவர்களும் செயற்பட்டுள்ளனர். ஆயுர்வேதம், சித்தம், யுனானி ஆகிய வைத்தியத்துறைகளுடன் ஹோமியோபதியும் 1971ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் உட்பிரிவு 27(1)Cயின்படி இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.*

## *619.1 சித்த மருத்துவம்*

***7380***

***சித்த மருந்தியலும் மருந்தாக்கவியலும்.*** *சே.சிவசண்முகராஜா. யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், 442, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2001. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430 காங்கேசன்துறை வீதி).*
*116 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.*

*ஆசிரியர் தான் கற்ற நவீன மருந்தியல், உயிர் இரசாயனவியல், சித்த மருத்துவ நூல்கள் ஆகியவற்றின் துணைகொண்டு இந்நூலை உருவாக்கியுள்ளார். சூரணம், கஷாயம், பஸ்பம், செந்தூரம், லேகியம், எண்ணெய் என்று பெயரளவில் மாத்திரம் அறியப்பட்ட சித்த மருத்துவ மருந்தியலை விஞ்ஞானபூர்வமாக இந்நூல் அணுகுகின்றது. உதாரணமாக கோரோசனை மாத்திரை பற்றி இன்றளவில் அது பாலவாகடத்தில் உள்ளதா அன்றேல் பரராசசேகரத்திலா, அல்லது சித்தவைத்தியத் திரட்டிலா உள்ளது என்று மட்டும் குழம்பிக் கிடப்பதிலேயே காலத்தைச் செலவிடுவோரைச் சாடி, இந்நூலாசிரியர் மருந்தியல், மருந்தாராய்வுகளில் (ஔடதபாகவியல்)துரிதமாக ஈடுபடுவதில் நேரத்தைச் செலவிடுமாறு வேண்டுகின்றார். இந்நூல் கேள்வி பதில் வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது. சித்த மருந்தியலை நவீன மருந்தியல் போன்று ஒழுங்குபடுத்தும் முயற்சியில் இந்நூல்*

முன்னோடியாக அமைந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25435).

மேலும் பார்க்க: 7766

## 640 இல்லப்பொருளியல், குடும்பக்கலை

## 642 உணவும் பரிமாறலும்

### 7381

**இளம் பெண்கள் அறியவேண்டிய சமையல்கள்.** கமலா நந்தகுமார் செல்வம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600094: பி.வி.ஆர். ஆப்செட்).
xiv, 82 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 17.5x12 சமீ.

பிரியாணி வகைகள், குழம்பு வகைகள், வறுவல் வகைகள், கிரேவி வகைகள், வடை வகைகள், மாலைச் சிற்றுண்டி வகைகள், ஸ்டப்டு வகைகள், பொரியல், கட்லெட் வகைகள், புட்டு, மசாலா வகைகள், சூப் ஆகிய தலைப்புகளில் 45 சமையல் பாகமுறைகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

## 649 குழந்தைப் பராமரிப்பு

### 7382

**பாலர் பராமரிப்பு.** கா.வைத்தீஸ்வரன். தெகிவளை: காயத்திரி வெளியீடு, 7, அல்பேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, ஜுன் 2004. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).
xiv, 146 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-97793-2-x.

பெற்றோர், பாலர் ஆசிரியர், பாலர் நலமோம்பும் யாவர்க்குமான கையேடு. குழந்தையின் உளவியல், அவர்களது தேவைகளை ஆற்றுப்படுத்தலில் நூலாசிரியரின் அனுபவ வெளிப்பாடு இந்நூலில் பிரதிபலிக்கின்றது. தாய்ப்பாலூட்டல், குழந்தையின் விருத்தி, காலத்தோடு கல்வி பயில்தல், நற்பெற்றோரியல், குழந்தையின் தேவைகள், விருப்பங்கள், பாலர் பராமரிப்பு, பாலியல் துஷ்பிரயோகம் முதலான பல்வேறு விடயங்கள் இந்நூலில் கையாளப்பட்டுள்ளன. நலவியல் துறையில் முதிர் அனுபவம் பெற்ற நூலாசிரியர் ஓய்வுபெற்ற சுகாதாரக் கல்வியாளராவார். ஆற்றுப்படுத்தலில் நீண்டகால அனுபவம் உள்ளவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615075).

### 7383

**பிள்ளைக் குணம்.** சரோஜினிதேவி சிவஞானம். திருக்கோணமலை: குருஷேத்ரா கல்வி வெளியீடு, 42 B மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, 2006. (திருக்கோணமலை: உதயன் பிரிண்டர்ஸ், 39, அருணகிரி வீதி).
x, 34 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 60., அளவு: 20.5x15 சமீ.

இது சரோஜினிதேவியின் இரண்டாவது நூல். மாணவர்களை நல்வழிப்படுத்த உதவும் பயனுள்ள கருத்துக்களைக் கொண்டது. குழந்தைகளை நல்வழிப்படுத்த அன்பு, கல்வி, மன அடக்கம், கீழ்ப்படிவு, தெய்வ நம்பிக்கை, நம்பிக்கை, பொய்சொல்லாமை, அழுக்காறு இல்லாமை போன்ற பல நற்பண்புகளை சிறுவயதிலேயே ஊட்டவேண்டும் என்ற கருத்தை இந்நூல் வலியுறுத்துகின்றது.

### 7384

**பிள்ளைகளின் அன்பு நலன் கருதி.** மொறீன் செனெவிரத்ன (ஆங்கில மூலம்), புஷ்பா சிவகுமாரன் (தமிழாக்கம்). கல்கிசை: சுற்றாடலையும் எங்குமுள்ள பிள்ளைகளையும் பாதுகாத்தல், PEACE, தபால் பெட்டி எண் 58, மௌண்ட் லவீனியா, 1வது பதிப்பு, 2001. (கொழும்பு: First Impressions). (8), 84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-8309-04-4.

பீஸ் இயக்கத்தின் ஆவணக்குறிப்பாக வெளிவரும் இந்நூல் பீஸ் இயக்கத்தின் பத்தாண்டுத் தொடர்ச்சியான பிரச்சாரம் பற்றிய ஒரு சொந்தக் கருத்துரையாகவும் அமைகின்றது. பாதுகாப்பிற்கான உரிமைகள், வரைவிலக்கணங்கள், நமது சின்னம், ஆசிய சுற்றுலாப் பயணத்துறையில் சிறுவர் விபச்சாரத்திற்கு முடிவுகட்டும் (ECAPT) சர்வதேச இயக்கத்தின் கதையிலிருந்து, முதலில் சில வார்த்தைகள், ஆசிய சுற்றுலாப் பயணத்துறையில் சிறுவர் விபச்சாரத்திற்கு முடிவு கட்டும் (ECAPT) சர்வதேச இயக்கத்துடனான இணைப்பு, ஐக்கிய நாடுகள் அமையத்தின் முகவரகங்கள் அரசாங்க முகவரகங்கள் என்பவற்றுடனும் நன்கொடை வழங்குவோருடனுமான இடைச் செயற்பாடு, சட்டப் பரிந்துரை, கண்காணிப்பு என்பவற்றிற்குப் பீஸ் இயக்கத்தின் பங்களிப்பு, பீஸ் இயக்கத்தின் செயற்பாடுகளின் விரிவெல்லை, மலரும் மொட்டுக்கள் (பிபென குசும்) வலையமைப்பு, நம்மால் மறக்க முடியாது ஆகிய பல்வேறு தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. சிறுவர் விபச்சாரம் தொடர்பான ஒன்பது பின்னிணைப்புகளும் இந்நூலின் பக்கம் 57-84 வரை நீள்கின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 549971).

### 7385

**பெற்றோர்களுக்கு.** P.குடலிகம. நுகேகொட: கலாநிதி திருமதி பி.குடலிகம, சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப் பிரிவு, திறந்த பல்கலைக்கழகம், நாவல, 1வது பதிப்பு, 1993. (கொழும்பு 13: பசுபிக் அச்சகம், 267 ஆட்டுப்பட்டித் தெரு).
100 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 20x14.5 சமீ, ISBN: 955-95326-1-8.

பிள்ளைகளின் பிரச்சினைகளைப் பற்றி மேற்கொண்ட கலந்துரையாடல்களிலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்ட அனுபவ அறிவின் வெளிப்பாடாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பிள்ளையை விளங்குதல், பிள்ளையின் வளர்ச்சியும் விருத்தியும், பிள்ளைகளின் தேவை, உள உணர்வுகள், சுற்றாடல், பெற்றோர் மனப்பாங்கு, குடும்ப பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும், சவால்கள், பரிசும் தண்டனையும், பிள்ளைகளின் எதிர்காலம், பாடசாலையின் எதிர்பார்ப்புகள், எமது கடமை ஆகிய 12 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மூலநூல் சிங்கள மொழியில் எழுதப்பட்டது. தமிழாக்கம் செய்தவரின் பெயர் தரப்படவில்லை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 471502).

## 650 முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம்

### 7386

**அலுவலக முகாமைக்கு ஓர் வழிகாட்டி.** தேவராஜன் ஜெயராமன். கண்டி 20000: பவளரத்ன பப்ளிகேஷன்ஸ், 396/12 B, பேராதனை வீதி, 3வது பதிப்பு, ஜுலை 2005, 1வது பதிப்பு, டிசம்பர் 1993, 2வது பதிப்பு, டிசம்பர் 2000. (கொழும்பு 15: கலர் பிரின்ட், 712, புளூமெண்டால் வீதி).
(6), 84 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-97027-1-8.

இந்நூல் முகாமைசாராத ஊழியர்களுக்கு (Non-Managerial Employees) அலுவலக முகாமை சம்பந்தமான அடிப்படை அறிவினை வழங்குகின்றது. அலுவலகம் எங்கு அமைக்கப்படல் வேண்டும், அலுவலகத்தின் அமைப்பு, பாதுகாப்பு, அலுவலகத்தை எவ்வாறு ஒழுங்கமைப்பது, அமைப்பு வரைபடம், அலுவலகத் தளபாடங்கள், உங்கள் மேசையை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது, நேரமுகாமைத்துவம், கூட்டங்களை எவ்வாறு முகாமை செய்வது, அலுவலகத்தில் அமைதியினைப் பேணல், தொடர்பாடலை மேற்கொள்ளல், கீழ்நோக்கிய தொடர்பாடல், ஊழியர்களை வழிநடத்துதல், ஊழியர்களைக் கையாளல், பின்னூட்டி வழங்கல், பொதுத் தொடர்புகள், ஊழியர்களின் வரவின்மை, அலுவலகத்தின் தள அமைப்பு, கடிதம், கோவைப்படுத்தல் முறை,

அதற்கான உபகரணங்கள், ஊக்கப்படுத்துதல், வாடிக்கையாளர் சேவையும் அவர்களின் திருப்தியும், ஒழுங்குவரிசையை முகாமைசெய்தல், வாடிக்கையாளர் முறைப்பாடுகளை முகாமைசெய்தல், மன அழுத்தங்களை முகாமைசெய்தல், ஆபத்து நிலைமைகளில் நிறுவனத்தை முகாமை செய்தல், பொது மேடைப் பேச்சு ஆகியன உள்ளிட்ட 29 தலைப்புகளின்கீழ் முகாமைத்துவ விடயங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகததின் முகாமைத்துவத் துறையின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 603912).

### 7387

**கலாச்சார தொடர்பியலில் தலைமைத்துவம் முகாமைத்துவம் நிபுணத்துவம்.** அரசரத்தினம் ஐயாத்துரை. கொழும்பு 6: அரசகலாதேவி பிரசுரம், 24/2 ரோகிணி வீதி, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 13: யு.கே. பிரிண்டர்ஸ், 98A விவேகானந்த மேடு).
(8), 58 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ., ISBN: 955-9033-11-5.

வேற்றுமையில் ஒற்றுமை, தலைமைத்துவம் என்றால் என்ன, தலைமைத்துவமும் முகாமைத்துவமும், முகாமைத்துவத்தில் காணும் முக்கிய கூறுகள், குழுமுறை அங்கத்துவம், சந்தைப் படுத்தல், தனித்துவக் கொள்கை, பெற்றோர் ஆசிரியர்களுக்கு, என்பன போன்ற 50 பொதுத் தலைப்புகளில் எழுதப்பட்ட ஆசிரியரின் கட்டுரைகள் அடங்கிய நூல்.

### 7388

**முகாமைத்துவத் தத்துவங்கள்.** ரதிராணி யோகேந்திரராஜா. கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
xii, 435 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-659-245-0.

இந்நூலின் முதல் மூன்று அத்தியாயங்களும் முகாமையின் அடிப்படைகளையும், முகாமைக் கோட்பாடுகளையும் கொண்டிருக்க, அடுத்த எட்டு அத்தியாயங்களும் தீர்மானமெடுத்தல், திட்டமிடல், ஒழுங்கமைத்தல், திணைக்களப்படுத்தல், ஊழியரிடல், தலைமைத்துவம், தொடர்பாடல், ஊக்கப்படுத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய முகாமைக் கருமங்களை உள்ளடக்கியுள்ளன. இறுதியாக விடய ஆய்வுப் பகுப்பாய்வு தொடர்பான அம்சங்கள் உதாரண விளக்கத்துடன் உள்ளடக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும். ரதிதேவி யோகேந்திரராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வணிகபீடத்தில் முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார்.

# 700 கலைகள், நுண்கலைகள்

## 701 பொதுக்கலைகள்

### 7389

**இலங்கையில் முஸ்லிம் நுண்கலை: ஒரு விமர்சன ஆய்வு.** M.S.M.அனஸ். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2 டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xii, 112+16 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-659-072-2.

இலங்கையில் முஸ்லிம்களின் நுண்கலை மரபும் கலை பற்றிய சிந்தனைகளும் இந்நூலில் பிரதான விடயப்பொருள்களாகும். தமிழ்நாடு, பாக்கிஸ்தான், மற்றும் முஸ்லிம் நாடுகளின் நுண்கலைகளின் பொதுப்போக்குகளின் குறித்த சில அம்சங்கள் பற்றியும் இந்நூல் ஆராய்கின்றது. முஸ்லிம்களின் கலை ஈடுபாடு, இரசனையியல் உணர்வு, என்பன மனிதப் பொது இரசனையின் அம்சமாக ஏன் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதும் கலை தொடர்பான முஸ்லிம்களின் எதிர்ப்புணர்வுகளின் யதார்த்தம் என்ன என்ற வினாவும் இந்நூலில் பேசப்படும் மற்றும் சில விடயங்களாகும். கலைக்கெதிரான மனோபாவங்கள் எவ்வாறு இருந்தபோதும் கலைத்துறையில் முஸ்லிம்களின் சில

*சாதனைகள் மகத்துவம் மிக்கவை. முஸ்லிம்களிடையே நிலவும் கலைகளுக்கும் ஆதரவற்ற மனோபாவம் எதை அடிப்படையாகக் கொண்டது என்ற வினா தொடர்ச்சியான கருத்துப் பரிமாற்றத்துக்குரியது. இது இந்நூல் முழுவதும் விரவிநிற்கும் ஒரு பொது விமர்சன நோக்கு என்று குறிப்பிடலாம். பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல்துறைத் தலைவராகப் பணியாற்றும் கலாநிதி முஹம்மது ஸாலிஹ் முஹம்மது அனஸ் (M.S.M.அனஸ்) பேராதனை மீவத்துறையைச் சேர்ந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 616752).*

***7390***

***இலங்கையிற் கலை வளர்ச்சி.*** க.நவரத்தினம். *கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2 டாம் வீதி, 3வது பதிப்பு 2007, 1வது பதிப்பு, 1954. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*

xviii, *142 பக்கம், 34 புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 21.5*x*14.5 சமீ.*, ISBN: *978-955-659-070-6.*

*இந்நூலின் முதற்பதிப்பு 1954இல் ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றப் பிரசுர வரிசையில் முதலாவது வெளியீடாக திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்று வெளிவந்தது. இந்தியாவும் இலங்கையும், இலங்கையிற் சிற்ப வளர்ச்சி, தாதுகோபங்கள், பௌத்த சிற்ப வடிவங்கள், சைவ சிற்ப ஆலயங்களும் வடிவங்களும், யாழ்ப்பாணத்திற் சைவ ஆலயங்கள், இலங்கை ஓவியங்கள், கலையும் கைத்தொழிலும், இந்திய கலா தத்துவம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் அநுபந்தமாக ஆனந்தக் குமாரசுவாமி வாழ்க்கைச் சுருக்கம், படங்கள், உசாத்துணை, அரும்பொருள் அட்டவணை ஆகியன இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் கந்தையா நவரத்தினம் (1898-1962) யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்ட இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தனது கல்வியைப் பெற்று, அதே கல்லூரியிலேயே 1920ம் ஆண்டு முதல் வர்த்தகத்துறை ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். சுவாமி விவேகானந்தரின் போதனைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் யாழ்ப்பாணத்தின் கலை, நுண்கலை வளர்ச்சியில் பெரும்பங்காற்றியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 616383).*

## *730 சிற்பக்கலை*

***7391***

***இலங்கையில் இந்து வெண்கலப் படிமக்கலை மரபுகள்: உருவாக்கமும் உருவாக்கியவர்களும்.***
*செல்லையா கிருஷ்ணராசா (தொகுப்பாசிரியர்). சென்னை 600 026: குமரன் பப்பிளிஷர்ஸ், 3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7வது தெரு, வட பழநி, இணை வெளியீட்டாளர், யாழ்ப்பாணம்: பிறைநிலா வெளியீடு, 2ம் கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, 1வது பதிப்பு, புரட்டாதி 2008. (சென்னை 600 026: குமரன் பப்பிளிஷர்ஸ், 3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7வது தெரு, வட பழநி).*

*396 பக்கம், 106 வண்ணத் தகடுகள், விலை: ரூபா 4500., அளவு: 29*x*21.5 சமீ.*, ISBN: *978-955-659-151-4.*

இலங்கையிலே இதுவரை கிடைத்த செம்பு, வெண்கலப் படிமங்கள் பற்றிய 11 ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும். பேராசிரியர் கா.இந்திரபாலா எழுதியதும் இதுவரை வெளிவராததுமான ***இலங்கையில் கிடைத்த சிவனின் உலோகச் சிலைகள்*** என்ற கட்டுரையுடன் ஆரம்பிக்கும் இத்தொகுப்பில் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா எழுதிய ***இலங்கையில் கிடைத்த பார்வதி வெண்கலச் சிலைகள், கந்தரோடையில் கிடைத்த இந்து வெண்கல உலோகச் சிலைகள், இலங்கை இந்து வெண்கலச் சிற்பக்கலை மரபினூடாக அறியப்படும் ஆபரணக்கலை மரபு, பொலனறுவைக்கால சைவநாயன்மார் வெண்கலப்படிமங்கள் காட்டும் ஈழத்து வார்வைக்கலை மரபு, இலங்கையில் இந்து வெண்கலப்படிமக்கலை மரபுகள்: உருவாக்கமும் உருவாக்கியவர்களும்- கி.பி.09-12 நூற்றாண்டு,*** ஆகிய ஐந்து ஆய்வுக்கட்டுரைகளும்,பேராசிரியர் செ.கிருஷ்ணராஜாவின் வழிகாட்டலில் செல்வி ராகினி சிதம்பரப்பிள்ளை 1995இல் தன் பட்டப்படிப்புத் தேவைக்காக எழுதிய ***இலங்கையில் கிடைத்த பார்வதி வெண்கலப் படிமங்கள்*** என்ற ஆய்வுக்கட்டுரையும்

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் எழுதிய **ஈழத்து நடராசர் செப்புத் திருமேனிகள்** என்ற கட்டுரையும், கலாநிதி W.பாலேந்திரா ஆங்கிலத்தில் எழுதி 1953இல் Tamil Culture சஞ்சிகையில் பிரசுரமாகிப் பின்னர் குல சபாநாதன் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட **திருகோணமலைத் திருவுருவங்கள்** என்ற கட்டுரையும், வாழ்நாட் பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதிய **இலங்கையில் வெண்கலப் படிமங்கள்: பொலனறுவைக் காலம்** என்ற கட்டுரையும், இலங்கையின் முன்னாள் அரும்பொருளகக் காப்பாளர் கலாநிதி ஸ்ரீமல் லக்துசிங்க எழுதிய **ஸ்ரீலங்காவில் இந்து சிற்பங்கள்** என்ற ஆய்வுக்கட்டுரையும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கட்டுரைகள் அனைத்துக்கும் பொருத்தமான வண்ணப்படங்கள் செழுமைசேர்க்கின்றன.

## 750 ஓவியக்கலை

### 7392

**எப்படி வரைவது?** எஸ்.நடராஜா. மானிப்பாய்: எஸ். நடராஜா, 1வது பதிப்பு, 1999. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).
85 பக்கம், தகடுகள், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 18x12.5 சமீ.

சித்திர ஆசிரியர் எஸ்.நடராஜா (எஸ்.என்.ஆர்.) அவர்கள் 1957இல் கல்வித் திணைக்களத்தின் சித்திர ஆசிரியர் பதவியில் இணைந்துகொண்டவர். ஓவியம், கலை, கைப்பணி ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றியவர். பாடசாலை மாணவர்களுக்கு வேண்டிய சித்திர விளக்கங்களை இந்நூல் தெளிவாக வழங்குகின்றது.

### 7393

**புதிய சித்திரக்கலை.** ஏ.எஸ்.சற்குணராஜா. பருத்தித்துறை: எஸ்.பப்ளிக்கேஷன்ஸ், வியாபாரிமூலை, 2வது பதிப்பு, செப்டெம்பர் 2001, 1வது பதிப்பு, 1996. (கொழும்பு 6: எஸ்.பிரின்ட், 4C, 1, பஸல்ஸ் லேன்).
vi, 132 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 29x21 சமீ.

ஆண்டு 9, 10, G.C.E.(O/L) மாணவர்களுக்கான நூல். சித்திரப் பாடத்திற்கென முழுமையாகப் பாடப்பரப்பு, விளக்கப் படங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய நூல் இது. சித்திரக் கலையின் தோற்றம், இரேகைகள், வர்ணங்கள், சித்திரக் கலைக்கான ஊடகங்கள், சமநிலை, தூரதரிசனம், அளவீடு கண்மட்ட ரேகைகள், பரவுரூபம், கொலாஜ், கிராபிக் முறைகள், பற்றிக் அலங்காரம், ஈரச்சுதை, உலர்ச்சுதை, சிந்துவெளிக் கலைகள், இராசபுத்தான ஓவியங்கள், இந்தியக் கட்டிடக்கலை என்பன உள்ளிட்ட 40 பிரிவுகளில் சித்திரக் கலையின் பல்வேறு அம்சங்களும் இந்நூலில் விரிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இறுதி இயலில் வினாப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. பருத்தித்துறை வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தினதும், ஹாட்லிக் கல்லூரியினதும் பழைய மாணவராவார். சித்திரபாடச் சிறப்புப் பயிற்சிபெற்ற இவர் யாழ். ஹாட்லிக் கல்லூரியில் 10 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றி, பின்னர் கொழும்பு புவக்பிட்டிய சீ.சீ.தமிழ் மகாவித்தியாலயத்தில் பணியாற்றுகிறார்.

### 7394

**யாழ்ப்பாணத்துப் பிற்காலச் சுவரோவியங்கள்.** கலாகேசரி ஆ.தம்பித்துரை. தெல்லிப்பழை: கலாகேசரி கலாலயம், குரும்பசிட்டி, 1வது பதிப்பு, மே 1982. (சுன்னாகம்: திருமகள் பதிப்பகம்).
viii, 64 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: ரூபா 10.50, அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாணத்துப் பிற்காலச் சுவர்ச் சித்திரங்கள் என்ற தலைப்பில் மல்லிகை மாத இதழில் எழுதிய ஒரு கட்டுரையின் விரிவான ஆய்வு வடிவம் இதுவாகும். மறையும் நிலையிலிருந்த பாரம்பரிய முறையில் தீட்டப்பட்ட யாழ்ப்பாணத்துச் சுவரோவியங்களைப்பற்றிய பதிவாக இந்நூல் அமைகின்றது. சுமார் 75-150 ஆண்டு கால இடைவெளிக்குள் தீட்டப்பெற்றவை இவை என ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், யாழ்ப்பாணம் சட்டநாதர் ஆலயம், யாழ்ப்பாணம் பாங்செல் வீதி கிட்டங்கி, காங்கேசன்துறை கிட்டங்கி, ஆகிய இடங்களில் காணப்பட்ட ஓவியங்களின் புகைப்பட வடிவமும் தகடுகளாகத் தரப்பட்டுள்ளன. இன்று இந்நூலில்

குறிப்பிட்ட பல சுவரோவியங்கள் அழிக்கப்பட்டு விட்டன என்பது மனதை நெருடும் செய்தியாகும். நூலாசிரியரின் 50ஆவது பிறந்ததின வெளியீடாக வெளிவந்த நூல் இதுவாகும்.

## 780 இசைக்கலை

### 7395

**இசை நாடகப் பாடல் மெட்டுக்கள்.** ம.தைரியநாதன், தை.யஸ்ரின் ஜெலூட் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2008. (யாழ்ப்பாணம்: சுரபி பதிப்பகம், நாவலர் வீதி).
xxiv, 142 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ.

ஈழத்தில் வழக்கிலுள்ள இசை நாடக (பார்சி மரபு/விஷேட நாடக மரபு) மரபுவழிப் பாடல் மெட்டுக்களின் தொகுப்பு இதுவாகும். இந்நூலுடன் ஈழத்து இசை நாடக மரபின் 248 பாடல் மெட்டுக்களின் இறுவட்டும் (MP3-2 CD) இணைக்கப்பட்டுள்ளது.

### 7396

**இசையிலக்கணம்.** பி. சந்திரசேகரம். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஆவணி 1966. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).
iv, 58 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 21.5x14.5 சமீ.

சங்கீதபூஷணம் பி.சந்திரசேகரம் எழுதிய இந்நூல் இசையாசிரியர்களுக்கு கைநூலாகவும், J.S.C., G.C.E. வகுப்பு மாணவர்களுக்கும் NCOMS பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது மேலதிக அறிவுக்கும் பயிற்சிக்கும் ஏற்ப தயாரிக்கப்பட்டது. இது ஸ்வரம், ராகம், தாளம், ப்ரபந்தம், வாக்கேயகாரர் லக்ஷணம், வாத்தியம், நிருத்தனம், அநுபந்தம் ஆகிய எட்டு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18387).

### 7397

**கீர்த்தனை மாலை முதலாம் பாகம்.** W.S.செந்தில்நாதன். கொழும்பு 6: W.S.செந்தில்நாதன், 181/1, W.A.சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, ஜுலை 2000. (சென்னை 600026: Creative Offset Printers, இல. 203, ஆர்க்காடு சாலை, வடபழநி).
(32) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் உள்ள கீர்த்தனைகளின் சில அழகான மெட்டுகளில் 21 தமிழ்ப்பாடல்களை (கீர்த்தனங்களை) இயற்றி அவற்றை ஸ்வர தாளக் குறிப்புகளுடன் இந்நூலில் வழங்கியுள்ளார். இவை நல்லூர்க்கந்தன், கதிர்காமக் கந்தன், சந்நிதி முருகன், திருக்கேதீஸ்வரர், திருக்கோணேஸ்வரர், வண்ணை வைத்தீஸ்வரர், வண்ணை வெங்கடேஸ்வரர், நயினை நாகபூஷணி அம்பாள், தெல்லிப்பளை துர்க்கை அம்பாள், மயூராபதி பத்ரகாளி அம்பாள், தெகிவளை மகாவிஷ்ணு மூர்த்தி, சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆகிய மூர்த்திகளின் மேல் இயற்றப்பட்டனவாகும். நூலாசிரியர் யாழ் நுண்கலை மன்றத்தின் ஸ்தாபகர்களுள் ஒருவரும் 1973-83 காலப்பகுதியில் அதன் செயலாளராகப் பணியாற்றியவருமாவார். வட இலங்கை சங்கீத சபையின் செயலாளராகவும் 1989-90காலப்பகுதியில் பணியாற்றியவர். பல்லவி என்ற இசை, நடன சஞ்சிகையின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் நிர்வாக ஆசிரியராகவிருந்து அரும்பணியாற்றியவர். ஆரம்பத்தில் 14 வருடங்கள் கணித ஆசிரியராகப் பணியாற்றியபின் 33 ஆண்டுகளாக இலங்கையில் வழக்கறிஞராகக் கடமையாற்றிவருகின்றார்.

### 7398

**யாழ்ப்பாண தென்மோடி கூத்து மரபு: இசை மெட்டுக்கள்.** அ.பேக்மன் ஜெயராஜா, யோ.யோண்சன் ராஜ்குமார் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (யாழ்ப்பாணம்: சுரபி பதிப்பகம், நாவலர் வீதி).

xxiv, *132 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21*x*14.5 சமீ.*

*யாழ்ப்பாணத்தில் மரபவழியாகப் பேணப்பட்டு வரும் தென்மோடி (கத்தோலிக்க) கூத்து மரபுப் பாடல்களுக்கான மூல மெட்டுகளின் தொகுப்பு இதுவாகும். 60களிலிருந்து ஈழத்தமிழர்களின் முக்கிய கலைவடிவமாக விளங்கும் கூத்தினை யாழ். திருமறைக் கலாமன்றம் மண்வாசனையுடன் கட்டிக்காத்து மெருகூட்டி வருகின்றது. அதன் ஒரு பரிணாம வளர்ச்சியாக இம்முயற்சி அமைந்துள்ளது. இந்நூலுடன் யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து மரபின் 153 பாடல் மெட்டுகளின் இறுவட்டும் வெளியிடப்பட்டு இணைக்கப்பட்டிருப்பது மேலதிகச் சிறப்பாகும். இதில் காப்புப் பாடல்கள், வரவு தருக்கள், கட்டியகாரன் வரவு, அரசன் வரவு, மந்திரி வரவு, சேனாதிபதி வரவு, நாடகக்காரன் வரவு, பேய் வரவு, கள்ளர் தரு, சம்மனசு தரு, சாம்புவன் தரு, நாட்டு வளப்பம். உரையாடல் தரு, தனிப்பாடல்கள், வேட்டைப்பாடல்கள், சிறப்புத் தருக்கள், பின்னிணைப்பு, மங்களத் தரு என ஒரு ஒழுங்குமுறையில் நாடகப்பாடல்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.*

### *7399*

***வட மராட்சியின் இசைப் பாரம்பரியம்: நினைவுகளும் பதிவுகளும்.*** *வரதராஜன் (நினைவுமலர்க்குழுவின் சார்பாக). கரவெட்டி: சங்கீதபூஷணம் கலாபூஷணம் திருமதி இராசம்மா மரியாம்பிள்ளை நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2005. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டர்ஸ், 70/7 கனல் வீதி, ஹெந்தளை).*
*144 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22*x*15 சமீ.*

*கரவெட்டி திரு இருதயக் கல்லூரி, சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம், பண்டாரவளை சிறுமலர் கன்னியர் மடம் ஆகியவற்றில் சங்கீத ஆசிரியராகப் பணியாற்றி மறைந்த திருமதி இராசம்மா மரியாம்பிள்ளை அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட இந்நூலில் வடமராட்சியின் இசைப் பாரம்பரியத்தின் சமூக வரலாற்றுப் பின்னணி, வடமராட்சி வாய்ப்பாட்டு இசைக் கலைஞர்கள் ஆகிய விடயங்களுடன் ஈழத்தில் இசையும் சமூக மாற்றங்களும் (என்.சண்முகலிங்கன்), நவீன கவிதையில் இசையுண்டோ (செ.யோகராசா), ஈழத்து மெல்லிசைப் பாடல்கள் (க.விக்கினேஸ்வரன்), இசைத்துறையில் தமிழரின் பங்களிப்பு ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36885).*

### *7400*

***வில் பிறந்த கதை.*** *இராஜம் புஷ்பவனம். கொழும்பு 6: என்.ஆனந்தரஜனி,* Hotel Ceylon Inn, *501, காலி வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 1991. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).*
viii, *40 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 18*x*12.5 சமீ.*

*இசையோடிணைந்த தமிழரின் வாழ்வில் பாரம்பரியக் கலைகளில் ஒன்றான வில்லிசை தனித்துவம் மிக்கது. வில்லிசை நேரடியானதொரு கிராமியக் கலைவடிவம். புராணக் கதைகளையும், சிக்கலான தத்துவக் கருத்துக்களையும் பாமரமக்களும் புரிந்துகொள்ள எளியமுறையில் இசையோடு கலந்து வழங்குவது வில்லுப்பாட்டின் தனித்துவமாகும். இத்தகைய சிறப்புமிக்க தமிழ்க் கலைவடிவம் பற்றி இந்நூல் விரிவாக விளக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11102).*

## *790 நிகழ்கலைகளும் பொழுதுபோக்குக் கலைகளும்*

## *791 நாட்டியக் கலை*

### *7401*

***பரத நாட்டியம் கற்றுக்கொள்ளுங்கள்.*** *சுகந்தி ரவீந்திரநாத். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 2வது பதிப்பு, 2007, 1வது பதிப்பு, 2000. (சென்னை 600014: முருகன் ஆப்செட்).*
*84 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 24.5*x*18 சமீ.*

பரத நாட்டியம் (நாட்டியத்தின் பிறப்பு, நாட்டியம் பரவியமை, நாட்டியத்தின் சிறப்பு, நாட்டியத்தினால் உடலுக்கு ஏற்படும் பலன்கள்), ஆடற்கலை இலக்கணம் (பரதம், அபிநயம், தர்மி, நிருத்தம், நிருத்தியம், தாண்டவம்-லாஸ்யம்), ஆடற்கலைக்கான தகுதிகள் (நாட்டியம் பயில விரும்பும் மாணவர்கள், நடனமணிகளும் குணங்களும் குற்றங்களும், குருவிடம் சேரும் முறைகள்), ஆங்கிக அபிநயம் (த்ரியாங்கம்-அங்கங்கள்-சிரஸ், கைகள், அஸம்யுத ஹஸ்தங்கள், இரட்டைக் கைகளின் பிரயோகங்கள், மார்பு, பக்கங்கள், இடை, பாதபேதம், கழுத்து, பார்வை), ஸாத்வீக அபிநயம் (பாவமும் ரஸமும்), ஆஹார்ய அபிநயம் (கிண்கிணி இலக்கணம்), நாட்டிய உருப்படிகள், அரங்கேற்றம் ஆகிய எட்டு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 792 அரங்கியல், நாடகக்கலை

### 7402

**அரங்கியல் எண்ணக்கருக்கள்.** கந்தையா ஸ்ரீகந்தவேள். வவுனியா: சண்முகலிங்கம் கல்வியியல் அரங்கு, பொதிகை, 395/145, ஜோசப் வாஸ் ஒழுங்கை, இறம்பைக்குளம், 2வது பதிப்பு, ஓகஸ்ட் 2008, 1வது பதிப்பு, மே 2004. (வவுனியா: மல்டிவிஷன் அச்சுக் கலையகம், இல. 77, முதலாம் குறுக்குத் தெரு).
84 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-51050-1-9.

கலையும் வகையும், கலையாக்கம் பற்றிய கோட்பாடுகள், சடங்கும் அரங்கும், நாட்டார் நாடகத்தின் தோற்றம், அரங்கும் அதன் பண்புகளும், அரங்கும் மற்றைய ஆற்றுகைக் கலைகளும், நாடகமும் வானொலி நாடகமும், நாடகமும் தொலைக்காட்சி நாடகமும், நாடகமும் சினிமாவும், நாடகத்தில் ஏனைய கலைவடிவங்களின் பங்கு, உலகளாவிய மொழியாக நடனக்கலை, அரங்கின் சமூக முக்கியத்துவம், சிறுவர் அரங்கு-சில குறிப்புகள், தெருவெளி அரங்கு (Street Theatre), நாட்டிய சாஸ்திரத்தில் ரஸக் கோட்பாடு ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் வவுனியா-பண்டாரிக்குளத்தில் அமைந்துள்ள வவுனியா விபலாநந்தர் கல்லூரியின் ஆசிரியராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46166).

### 7403

**அரங்கியற் கட்டுரைகள்.** கந்தையா ஸ்ரீகந்தவேள். யாழ்ப்பாணம்: தெஸ்பியன் கலை வட்டம், இணுவில், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (இணுவில்: வைரஸ் கிராப்பிக்ஸ், காங்கேசன்துறை வீதி).
vi, 106 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

இந் நூலாசிரியர் யாழ்ப்பாணம், இணுவில் -மஞ்சத்தடியைச் சேர்ந்தவர். பண்பாட்டு நடவடிக்கையாக அரங்கு, தமிழக அரங்கு-சுருக்கக் குறிப்புகள், இலங்கைத் தமிழரங்கு-ஒரு பருவரை, இலங்கைத் தமிழ் மரபுவழி நாடகங்கள்-ஒரு பார்வை, கலையரசு க.சொர்ணலிங்கம்-அரங்கப் பங்களிப்பு, பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை-நாடகப் பங்களிப்பு, ஈழத்துத் தமிழரங்கில் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம், பல்கலைக்கழகத் தமிழரங்கு- சில குறிப்புகள், அரங்கில் யதார்த்தவாதம்-சில சிந்தனைகள் ஆகிய தலைப்புகளில் கந்தையா ஸ்ரீகந்தவேள் எழுதிய பத்துத் தமிழ் அரங்கியல் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36691).

### 7404

**கலை மரபில் நாடகமும் கூத்தும்.** நாராயணபிள்ளை நாகேந்திரன். களுவாஞ்சிக்குடி: கலாச்சாரப் பிரிவு, நியு ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (கல்முனை: குட்வின் அச்சகம்).
(22), 148 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 19.5x14 சமீ.

கலைமரபில் நாடகமும் கூத்தும் என்ன இடம் வகிக்கின்றன என்பதை இந்நூல் கோடிகாட்ட முனைகின்றது. நாடகத்தின் அம்சங்களையும் நாடக வரலாற்றையும் முற்பகுதி விளக்குகின்றது. மேலைத்தேய, தென்கிழக்காசிய நாடக மரபை இரண்டாம் பகுதி விளக்குகின்றது. கூத்தின்

அம்சங்களையும் முக்கியமாக வடமோடி தென்மோடிக் கூத்துகளின் தன்மையினையும் நூலின் மூன்றாம் பகுதி விளக்குகின்றது. கலைமாணிப்பட்டதாரியான (டிப்ளோமா) ஆசிரியரான நூலாசிரியர் நா.நாகேந்திரன் (16.9.1961) களுவாஞ்சிக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31689).

### 7405

**கோயில் அரங்க மரபு: பல்லவ-சோழர்கால நாடக அரங்கு.** க.திலகநாதன். வல்வெட்டித்துறை: ஜனனி வெளியீட்டகம், பொலிகண்டி, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (வல்வெட்டித்துறை: ஸ்ரீவாணி அச்சகம், பிரதான வீதி, வல்வெட்டி).

xii, 94 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

நூலாசிரியர், கோப்பாய், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நாடகத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றுபவர். தமிழ் நாடக வரலாற்றில் ஒரு குறித்த காலகட்டத்தைப்பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டத் தேர்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டை நூலுருவாக்கியுள்ளார். சங்ககால, சிலப்பதிகாரக் கால நாடக மரபுகளுடன் பல்லவ-சோழர் கால அரங்க மரபுகளும் மிக விளக்கமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவை அறிமுகம்/கி.பி.600ற்கு முற்பட்ட நாடக வளர்ச்சி/ கி.பி. 600-1300 வரையில் நாடகம் பற்றிக் கிடைக்கக் கூடிய தகவல்களும் தகவல்களில் சில விபரிப்புகளும்/ கோயில் பண்பாட்டில் அரங்கு/ நடராஜ தாண்டவம்/ 600-1300 வரை தெரிகின்ற ஆட்டம், அரங்கு என்பன/ முடிவுரை ஆகிய ஏழு இயல்களில் விபரிக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42744).

### 7406

**சிறுவர் அரங்கு.** குழந்தைவேல் சிவகுமார். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).

71 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-175-0.

புதிய கல்வித் திட்டத்தில் சிறுவர் அரங்கிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக இந்நூல் தரம் 2-13 வரையிலான வகுப்புகளுக்கும், ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கும் ஏற்றவகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலில் சிறுவர் அரங்கு, சிறுவர் நாடகம் எழுதும்போதும் தயாரிக்கும்போதும் கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள், சிறுவர் அரங்கப் பயிற்சிகள், சிறுவர் அரங்கக் கேட்பியல்-காண்பியல் மூலங்கள், சிறுவர் அரங்கின் பயன்கள், அரங்க விளையாட்டுக்கள் போன்ற விடயங்கள் சிறுவர் அரங்கு தொடர்பான முழுமையான விளக்கத்தைக் கொண்டிருப்பது நூலுக்கு மெருகூட்டுகின்றது. இந்நூல் நாடகத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக அமையும். குழந்தைவேல் சிவகுமார் யாழ். இளவாலை புனித ஹென்றியரசன் கல்லூரியில் கல்விகற்றவர். யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நாடகமும் அரங்கியலும் துறையில் பயிற்சிபெற்றவர். தற்போது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.

### 7407

**தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும்.** எஸ்.தெய்வநாயகம், ம.சண்முகநாதன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 7: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 98 வோட் பிளேஸ், 1வது பதிப்பு, மார்கழி 1997. (கொழும்பு 12: ஜே அண்ட் எஸ்.சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 115 மெசெஞ்சர் வீதி).

xii, 134 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

1994ஆம் ஆண்டு அக்டோபர் 15,16,17ம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற தமிழ் அரங்கியற் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு. இதில் நெறியாள்கை (ப்ரசன்னா இராமசாமி), நாடகப் பனுவல் (சே.இராமானுஜம்), நாடகப் பிரதி (ரெங்கராஜன்), அரங்கியலில் காட்சிப் படிமங்கள் (இரா.இராசு), அரங்கில் ஒளி (கா.சிவபாலன்), அரங்கியல் காண்பியங்கள் (கந்தையா ஸ்ரீகணேசன்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்புகளாக, கார்த்திகேசு சிவத்தம்பி (நாடகம் என்னும் கலை), சி.மௌனகுரு (எண்பதுகளில் தமிழ் நாடகம்), அராலியூர்

*ந.சுந்தரம்பிள்ளை (நாடகத்தில் பாத்திர வார்ப்பு), பாலசுகுமார் (ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு), ஆ.தனஞ்செயன் (நவீன நாடகத்தில் கருத்துப் புலப்படுத்தும் நிகழ்த்துவோன்-பார்வையாளன் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்) ஆகியோரின் கட்டுரைகளும் இணைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21179).*

### 7408

**திருகோணமலைப் பிரதேச நாடக அரங்கப் பாரம்பரியம்.** பாலசுகுமார், திருமலை நவம், சிவபாலன். *மட்டக்களப்பு: அனாமிகா பதிப்பகம், இல. 54, பெய்லி முதலாம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*56 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14 சமீ.*

*பாலசுகுமார் நாடகங்கள் என்ற தமது முதலாவது வெளியீட்டைத் தொடர்ந்து அனாமிகா பதிப்பகம் வெளியிடும் இரண்டாவது நூல் இது. திருக்கோணமலைப் பிரதேசத்தின் நாடகப் பாரம்பரியம் பற்றிய பின்புலங்களை இந்நூல் வெளிச்சத்துக்குக் கொண்டு வருகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17705).*

### 7409

**நாடக அனுபவங்கள்.** வி.கந்தவனம். *சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஜுன் 2010. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).*
*328 பக்கம், விலை: இந்திய ரூபா 210., அளவு: 22x14 சமீ.,* ISBN: *978-0-9559585-0-2.*

*கவிநாயகர் வி.கந்தவனம் அவர்களின் பவளவிழா வெளியீடாக 15.6.2010இல் வெளிவந்துள்ள நூல் இது. நடித்தவை, பிடித்தவை, படைத்தவை என்ற மூன்று பெரும்பிரிவுக்குள் இவரது நாடக அனுபவப் படைப்புக்கள் வகுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன. நடித்தவை என்ற பிரிவுக்குள் கோயிலும் கூத்தும், எனது முதல் இயக்குநர், இரத்தக்கண்ணீர், சென்னை அனுபவங்கள், கோவையிலும் நடித்தேன், ஆசிரியரானபின் நடித்த முதல் நாடகம், திரு ஏ.ரி.பொன்னத்துரையின் நாடகங்களில், குரும்பசிட்டியின் இளங் கலைஞர்கள், ஒரு வித்தியாசமான அனுபவம், வானொலி நடிப்பு, அரங்கேற்றிய சிறுவர் நாடகங்கள், ஈழத்துக் கூத்து மொழிகள், கனடாவில் நடித்த நாடகங்கள் ஆகிய தலைப்புகளில் அமைந்த 15 இயல்கள் இடம்பெற்றுள்ளன. பிடித்தவை என்ற பிரிவில் சைவசமயமும் நடனக்கலையும், சிவபெருமானின் நாடகங்கள், தொல்காப்பியரின் நாடக வழக்கு, கலித்தொகை காட்டும் காதற் காட்சிகள், பண்டைய கிரேக்க நாடக அரங்கம், நாடகமேதை ஷேக்ஸ்பியர், கம்பரின் நாடகக் கவிதைகள், இணையிலா நாடகர் ஹென்றிக் இப்சன், அபத்த நாடகம், தெருக்கூத்து ஆகிய 10 இயல்களும், படைத்தவை என்ற இறுதிப்பிரிவில் சிறுவர் நாடகம், அரங்க நடிகர், நாடகப் பார்வையாளர், மேற்குலகத்துப் பொழுதுபோக்கு நாடகக் குழுக்கள், நரகோடு சுவர்க்கம், மனவெளியில் நடந்தாய் வாழி நாடகமே ஆகிய ஆறு இயல்களும் இடம்பெற்றுள்ளன.*

### 7410

**நாடகமும் அரங்கியலும்.** க.திலகநாதன். *வல்வெட்டித்துறை: ஜனனி வெளியீட்டகம், புது வளவு, பொலிகண்டி, 1வது பதிப்பு, ஐப்பசி 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
*152 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.*

*கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 1997-2007 வரையான கடந்தகால வினாத்தாள்களும் விடைகளும் அடங்கிய நூல். மூன்று வினாத்தாள்களை உள்ளடக்கிய இப்பரீட்சையில் வினாப்பத்திரம்-1, நாடகவியல் எண்ணக்கருக்களும் கோட்பாடுகளும் பற்றியதாகும். வினாப்பத்திரம்-2, தேசிய நாடக அரங்கும் உலக நாடக அரங்கும் பற்றியதாகும். வினாப்பத்திரம்-3, நாடகவாக்கம், இரசனை-நெறியாள்கை, நடிப்பு பற்றியதாகும். நூலாசிரியர், கோப்பாய், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நாடகத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றுபவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42723).*

**மேலும் பார்க்க: 7027, 7033**

## *793 திரைப்படக்கலை*

***7411***

***தமிழ்ப் பண்பாட்டில் சினிமா.*** *கார்த்திகேசு சிவத்தம்பி. சென்னை 2: மக்கள் வெளியீடு, 49, உனிசு அலி சாகிப் தெரு, எல்லிசு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (சென்னை 5: தேவா ஆப்செட், 621, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை).*
*168 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.*

*தமிழ்ப் பண்பாட்டில் சினிமா: முன்னுரையாகச் சில குறிப்புகள், அரசியல் தொடர்பாடல் ஊடகமாகத் தமிழ்ச் சினிமா, தமிழ்ச் சமூகமும் அதன் சினிமாவும், திரை வளர்த்த கவிதை- 1, திரை வளர்த்த கவிதை-2, தமிழ்ப் பண்பாட்டின் உருவத் திருமேனிகளில் ஒன்றாக விளங்கும் சிவாஜி கணேசன், ஒரு கலைஞனின் மறைவும் கலையின் இழப்பும்- சிவாஜி கணேசன் பற்றிய ஓர் அரங்கியற் குறிப்பு, நேர்காணல்: அங்கு மூவி-இங்கு டாக்கி ஆகிய எட்டுக் கட்டுரைகளின் வழியாக தமிழ்ப் பண்பாடும் சினிமாவும் பற்றி விளக்கும் இந்நூல் விரிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 616706).*

***மேலும் பார்க்க: 7656, 7994***

## *796 உடற்பயிற்சி, விளையாட்டுகள்*

***7412***

***மெய்வல்லுநர் விளையாட்டுக்கள்.*** *சந்திரா ஹெம்மாத்தகம, P.V.பிரேமச்சந்திர (மூலம்), பூர்ணா த சில்வா, செனேஹலதா P.சேனாநாயக்க, M.H.M.யாகூத், P.இராஜரத்தினம் (பாடப்பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: Pacific Press).*
*52 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான சுகாதாரமும் உடற்கல்வியும் என்ற கல்விப் பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். சுவட்டுப் போட்டி நிகழ்ச்சிகள், மைதானப்போட்டி நிகழ்ச்சிகள் ஆகிய இரு பிரிவுகளில் இந்நூல் பல்வேறு மெய்வல்லுநர் விளையாட்டுப் பற்றிய தகவல்களை வழங்குகின்றது.*

# *800 இலக்கியம்*

## *801 சிறுவர் இலக்கியங்கள்*

### *801.(1) சிறுவர் பாடல்கள், கவிதைகள்*

***7413***

***இன்பக் கனிகள்: சிறுவர் பாடல்கள்.*** *ச.அருளானந்தம். வவுனியா: முத்தமிழ்க் கலாமன்றம், 1வது பதிப்பு, மே 1990. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி).*
*(6), 20 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 25x19 சமீ.*

*ஆரம்பப் பாடசாலைகளில் ஆசிரியர் இயற்றிக் கற்பித்த சிறுவர் பாடல்கள் இவை. அன்பு, ஆமை, இறைவன், ஈ, உறவு, ஊர், எறும்பு, ஏணி, ஐயர், ஒட்டகம், ஓணான், ஔவை, சேவல், பாம்பு, வண்ணத்துப்பூச்சி, தோகைமயில், காந்தித் தாத்தா, கச்சான் காற்று, எங்கள் பாட்டி, குளம் ஆகிய இருபது தலைப்புகளில் ஒவ்வொன்றிலும் நான்கு நாலடிப் பாடல்வீதம் வழங்கியுள்ளார்.*

7414

**குழந்தை மொழி: சிறுவர் பாடல்கள்.** க.வேந்தனார். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, 2010. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை).
88 பக்கம், வண்ணச் சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை., அளவு: 28x21 சமீ., ISBN: 978-81-89748-72-2.

மித்ர பதிப்பகத்தின் 185ஆவது நூலாக வெளியிடப்பட்ட சிறுவர் பாடல்களைக்கொண்ட நூல். வித்துவான் க.வேந்தனார் (1918-1966) ஈழத்தில் 25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்ப் பணியாற்றியவர். கவிஞர், கட்டுரையாளர், பேச்சாளர், உரையாசிரியர், பாடநூலாசிரியர் எனப்பல நிலைகளிலும் தனித்துவம் பெற்றவர். 1940இல் எழுத்துலகில் இறங்கிய வேந்தனார் சிறுவர் பாடல்களையும் கணிசமான அளவில் இயற்றியுள்ளார். கவிதைப் பூம்பொழில் (1964) என்ற அவருடைய கவிதைத் திரட்டில் இடம்பெற்ற குழந்தைகளுக்கான பாடல்களைத் தனியாகப்பிரித்து அதில் 35 தேர்ந்த பாடல்களுடன் இந்நூல் அழகான வண்ணப்படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. இவரது "காலைத்தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா" போன்ற பாடல்கள் காலம் கடந்தும் எமது சிறார்களிடையே இன்றும் உலவுகின்றன. இந்நூலின் தேர்ந்த 13 பாடல்களுக்கான இறுவட்டொன்றும் நூலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

7415

**சிறுவர் இலக்கியம்: இசைக் கவிதைகள்.** கண்டி எம்.ராமச்சந்ரன் (இயற்பெயர்: ஆர்.முத்துக்கருப்பன்). கண்டி: எம்.ராமச்சந்ரன், 2/1 ரிவடேல் ரோட், அனிவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2001. (கண்டி: அச்சக விபரம் தரப்படவில்லை).
x, 70 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 175., அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-96076-8-5.

சிறுவர்களுக்காக எழுதப்பட்ட 43 இசைக் கவிதைகளைக்கொண்ட தொகுப்பு. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 574151).

7416

**சின்னஞ்சிறு கிளியே.** வாகரைவாணன். (இயற்பெயர்: சந்தியாப் பிள்ளை அரியரத்தினம்). மட்டக்களப்பு: வாகரைவாணன், ஆரணியகம், நாவற்குடா, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (மட்டக்களப்பு: ஜேஸ்கொம் ஒப்செற் அச்சகம், இல.1, யேசு சபை வீதி).
34 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14.5 சமீ.

64 பொருள் தலைப்புகளில் அமைந்த பாடல்கள் கொண்ட சிறுவர் இலக்கியம் இது. ஆசிரியரின் நான்காவது குழந்தை இலக்கிய நூல். இவரது முதலாவது நூலான பாலர் தமிழ்ப் பாட்டு 1994இல் யாழ்ப்பாணம் இலக்கியப் பேரவையின் முதற் பரிசையும், சின்னச் சின்னப் பூக்கள் என்ற இரண்டாவது நூல் 1998இல் இலங்கை அரசின் சாஹித்திய மண்டலப் பரிசையும் பெற்றுத்தந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20697).

7417

**நமது செல்வம் (சிறுவர் இலக்கியம்).** நாகூர் ஏ.பாவா. கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1976. (கொழும்பு 10: கவிதா பப்ளிகேஷன்ஸ், 27-2/2, Jayantha Weerasekara mawathe ).
(4), 64 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 18x12 சமீ.

37ஆவது அரசு வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல் 36 சிறுவர் பாடல்களைக்கொண்டது. தனது முதலாவது நூலாக இதை வெளியிட்டுள்ள குழந்தைக் கவிஞர் நாகூர் ஏ.பாவா, காத்தான்குடி கிராமசேவகராகப் பணியாற்றியவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 618336).

7418

**நல்லவனாவேன்: சிறுவர் பாடல்கள்.** M.H.S.மஸீதா. (இயற்பெயர்: மஸீதா புன்னியாமீன்). உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2010. (உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே).
48 பக்கம், வண்ணப்படங்கள், விலை: ரூபா 140., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-1779-50-4.

சிறுகதை, கட்டுரை, கவிதைத்துறைகளில் தடம்பதித்த திருமதி மஸீதா புன்னியாமீன் அவர்களின் முதலாவது சிறுவர் இலக்கியப்படைப்பு இது. 2010ம் ஆண்டிற்கான இலங்கைத் தேசிய நூல் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டது. தென்னிலங்கையில் காலி நகரில் கட்டுக்கொடை கிராமத்தில் பிறந்த மசீதா திருமணத்தின் பின் கண்டி, கட்டுகஸ்தொட்டை பிரதேசத்திலுள்ள உடத்தலவின்னையை வாழ்விடமாகக் கொண்டவர். உடத்தலவின்ன ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் கணித-விஞ்ஞான ஆசிரியையாகப் பணியாற்றுகின்றார். காகம், சின்னப் பூனைக்குட்டி, பால்நிலா, எந்தன் செல்லத்தங்கை, நல்லவனாவேன், கோமதி எங்கள் பசு, மழை, தருவாயா, மழை தாருங்கள், கிணற்றுத் தவளை, மாடும் மனிதனும், ஒருதாய் மக்கள் ஆவோம் ஆகிய 12 தலைப்புகளில் இவர் எழுதிய சிறுவர் பாடல்கள் வண்ணப்படங்களுடன் இங்கு பிரசுரமாகியுள்ளன.

### 7419

**நான் மூன்று சக்கரக்காரன்: சிறுவர் பாடல்கள்.** இக்பால் அலி. கண்டி: மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், 18/13, பூரணவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (கண்டி: பிரின்ட் எக்ஸ் கிராப்பிக்ஸ்).
24 பக்கம், விலை: ரூபா 35., அளவு: 20x14 சமீ., ISBN: 955-8709-00-X.

18 சிறுவர் பாடல்களைக் கொண்ட நூல். இலகுவாக மெட்டமைத்து சிறுவர் பாடி ஆடி நடிக்கும் வகையில் எளிமையாக இப்பாடல்களை எழுதியிருக்கிறார். சிறுவர் மத்தியில் இன ஐக்கியம், போர்க்காலம், பொருளாதாரம், தொழில்நுட்பம், இயற்கை, நற்பண்பு, கல்வி போன்ற பதிவுகளை உள்ளடக்கிய பாடல்கள் இவை. நூலாசிரியர் சாய்ந்த மருது 17ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர். மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏழாவது வெளியீடு இதுவாகும்.

### 7420

**பாடலும் ஆடலும்.** சபா. அருள் சுப்பிரமணியம். கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ்).
64 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 90., அளவு: 24.5x18 சமீ., ISBN: 978-955-1997-24-3.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துக் கவிஞர் சபா.அருள் சுப்பிரமணியம் சிறுவர் நூல்களையும், ஒலி/ஒளிவட்டுக்களையும் வெளியிட்டு வருபவர். இந்நூலில் இவர் எழுதியுள்ள பாடல்களில் இசைமணம் கமழ்ந்து இழையோடுவதைக் காணலாம். சின்னச் சின்னச் சொற்களில் குழந்தை இயல்பு அறிந்து அதற்குத் தெரிந்த பாடுபொருள்களில் கவிதை எழுதியுள்ளார். அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, ஆடு, மாடு, கோழி எனக் குழந்தைகள் உலகின் பாத்திரங்களோடு, அறிவியல் உலகில் பயன்படுத்தப்படுகின்ற வானொலி, கணினி, தொலைக்காட்சி போன்றவற்றையும் அவற்றின் பயன்பாடுகளையும் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் தன் பாடல்களில் சொல்லியிருக்கிறார்.

### 7421

**பிள்ளைப் பாட்டு: தமிழில் வெளிவந்த முதலாவது குழந்தை நூல்.** கே.எஸ்.அருணந்தி (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 3வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, 1935, 2வது பதிப்பு, 1941. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை).
xvi, 131 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1997-19-9.

இந்நூலில் மா.பீதாம்பரம், கி.அகிலேசசர்மா, ச.பஞ்சாட்சர ஐயர், க.சோமசுந்தரப் புலவர், சி.தங்கசாமி ஐயர், என்.எஸ்.முருகேசு, ஜே.எஸ்.ஆழ்வாப்பிள்ளை, அ.கிறில், கே.கே.செபஸ்தியாம்பிள்ளை,

கே.சின்னத்தம்பி, ஜே.கே.சீனிவாசன், என்.தம்பிப்பிள்ளை, க.அழகரத்தினம் ஆகியோரின் 74 பாடல்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. முன்னாள் வடமாகாண கல்வி இயக்குநரான கே.எஸ்.அருணந்தி அவர்கள் தொகுத்து 1935இல் வெளியிட்டிருந்த இந்நூலே ஈழத்தின் முதலாவது குழந்தை இலக்கிய நூலாகக் குறிப்பிடப்படுகின்றது. இருப்பினும் முன்னதாக 1918இல் பிரதான தமிழ் முதலியாரான ச.வைத்தியநாதரால் தமிழ்ப் பாலபோதினி என்ற தலைப்பிலான குழந்தைகளுக்கேற்ற அபிநயப்பாடல் தொகுதியொன்றும் வெளியிடப்பட்டுள்ளது. வித்தியாதரிசி க.ச.அருள்நந்தியின் முன்முயற்சியால், நடத்தப்பெற்ற சிறுவர் பாடல் புனைதற் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட பாடல்களின் தொகுப்பு.

### 7422

**மலரும் மொட்டுக்கள்.** உ.நிசார். மாவனல்ல: எச்.எல்.எம்.நிசார், 70/3 புதிய கண்டி வீதி, 1வது பதிப்பு, 2007. (மாவனல்ல: எம்.ஜே.எம். பதிப்பகம், 119 பிரதான வீதி).
vi, 20 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21x14 சமீ., ISBN: 955-50064-1-5.

ஆரம்பக் கல்வி ஆசிரியராக இரண்டு தசாப்தங்களாகப் பணியாற்றும் நிசார் பல சிறுவர் நூல்களை ஏற்கெனவே எழுதியுள்ளார். இந்நூல் இவரது சிறுவர் பாடல்களின் தொகுப்பு. ஆரம்ப வகுப்பு பாடவிதானத்தில் விதந்துரைக்கப்பட்ட விடயத் தலைப்புகளை கருத்திற்கொண்டு சிறார்களின் அறிவாற்றல், அவர்களது சுவைத்திறன், ரசனைக்கு ஏற்ப கவிதைகளை யாத்துள்ளார். இயற்கை, பறவைகள், விலங்குகள், குடும்பம், நற்பண்புகள், விஞ்ஞானம் என்பவற்றைத் தன் பாடுபொருளாகக் கொண்டுள்ளார். சிறுவர்களுக்கேற்ற சந்தக் கவிதைகளாக இவை உள்ளன. மலரும் மொட்டுக்கள், வா வெண்புறா, கல்வி கற்போம், கல்யாணம், குட்டி முயலே, காந்தி தாத்தா, மரங்களை நடுவோம், எங்கள் குடும்பம், புகைவண்டி, தம்பிப் பாப்பா, மரங்கள், ஏற்றமிகு இயற்கை, இரவு சிரித்தது, உழைத்து உண்ணப்பழகு, புவியீர்ப்பு விசை, இன்று போய் நாளை வா, நியாயம் எங்கே, பந்தடிப்போம் ஆகிய 18 தலைப்புகளிலான சிறுவர் பாடல்கள் இவை.

### 7423

**மாங்கனி: சிறுவர் பாடல்கள்.** செல்லையா குமாரசாமி. யாழ்ப்பாணம்: நிலா பதிப்பகம், வெளியீட்டுப் பிரிவு, இராஜ வீதி, கோப்பாய், 1வது பதிப்பு, ஆவணி 2009. (யாழ்ப்பாணம் நிலா பதிப்பகம், இராஜ வீதி, கோப்பாய்).
v, 67 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

இந்நூல் முப்பது சிறுவர் பாடல்களைக் கொண்டுள்ளது. பாலர், குழந்தை என்ற வயது நிலைகளைக் கடந்து சிறுவர் என்ற பருவநிலையினை மனம் கொண்டே பெரும்பாலும் இப்பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. சிறுவர்களுக்கு ஏற்புடையதான, அவர்களுக்கு அறிமுகமானதும் பரிச்சயமானதுமான சொற்களை, சொற்றொடர்களை, உவமைகளை ஆசிரியர் இப்பாடல்களில் பொருத்தமான வகையில் கையாண்டுள்ளார்.

## 801.(2) சிறுவர் நாடகங்கள்

### 7424

**சட்டியும் குட்டியும்: சிறுவர் நாடகங்கள் இரண்டாவது தொகுதி.** மாவை நித்தியானந்தன். கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை).
viii, 71 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1997-29-8.

8 முதல் 13 வயதினர் நடிக்கவும், ரசிக்கவும் இந்த நாடகங்கள் ஏற்றவை. கோழிக் கர்வம், சட்டியும் குட்டியும், கோயிலும் ரி.வியும், தூரத்தில் ஒரு நாய், கடைசி நாடகம், பூனையும் எலிகளும், மறதி, கழுதை, சின்னச் சிட்டு ஆகிய ஒன்பது சிறுவர் நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மாவிட்டபுரத்தில் பிறந்த மாவை நித்தியானந்தன் 70களில் மொரட்டுவையில் உயர்கல்வி கற்றவேளையில் நாடகத்துறையில் ஈடுபாடுகொண்டு அதன் பின் ஈழத்தமிழர்கள் மத்தியில் பல நாடகங்களால் இவர் அறியப்பட்டவர். இவரது நாடகங்களை அரசியல் அங்கத நாடகங்கள் மற்றும்

சமூக அங்கத நாடகங்கள் என இருவகைப்படுத்தலாம். திருவிழா என்ற இவரது நாடகம் ஈழத்தமிழர் மத்தியில் தோன்றிய முதல் தெருவெளி நாடகமாகக் கருதப்படுகின்றது. 1989இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தபின்னர் இவர் தயாரித்த கண்டம் மாறியவர்கள் என்ற அரசியல் அங்கதச்சுவைமிகு நாடகம் புகலிடத்தில் பிரபல்யமாகியது.

***7425***

**சின்னச் சின்ன நாடகங்கள்: சிறுவர் நாடகங்கள் முதல் தொகுதி.** மாவை நித்தியானந்தன். கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை).
x, 82 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1997-28-1.

5 முதல் 10 வயதினர் நடிக்கவும், ரசிக்கவும் இந்த நாடகங்கள் ஏற்றவை. மூன்று ஆடுகள், பிறந்த நாள், கரடி, என்ன சாப்பாடு, இஞ்சி விசுக்கோத்தன், நெல்மணி, கெட்டவர் சுபாவம், சின்ன உதவி, கோழிகளும் நரிகளும், கரடி பிடிக்கப் போகிறோம், இது எது, பலூன்கள், விளையாட வாங்கோ, பூதம், பலசாலியும் புத்திசாலியும், பூனைச் சண்டை ஆகிய 16 சிறு நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மாவிட்டபுரத்தில் பிறந்த மாவை நித்தியானந்தன் 70களில் மொரட்டுவையில் உயர்கல்வி கற்றவேளையில் நாடகத்துறையில் ஈடுபாடுகொண்டு அதன் பின் ஈழத்தமிழர்கள் மத்தியில் பல நாடகங்களால் இவர் அறியப்பட்டவர். இவரது நாடகங்களை அரசியல் அங்கத நாடகங்கள் மற்றும் சமூக அங்கத நாடகங்கள் என இருவகைப்படுத்தலாம். திருவிழா என்ற இவரது நாடகம் ஈழத்தமிழர் மத்தியில் தோன்றிய முதல் தெருவெளி நாடகமாகக் கருதப்படுகின்றது. 1989இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தபின்னர் இவர் தயாரித்த கண்டம் மாறியவர்கள் என்ற அரசியல் அங்கதச்சுவைமிகு நாடகம் புகலிடத்தில் பிரபல்யமாகியது.

***7426***

**நாய்க்குட்டி ஊர்வலம்: சிறுவர் நாடகங்கள் மூன்றாம் தொகுதி.** மாவை நித்தியானந்தன். கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை).
viii, 80 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1997-30-4.

13 வயதுக்கு மேற்பட்டோர் நடிக்கவும், ரசிக்கவும் இந்த நாடகங்கள் ஏற்றவை. அரசனின் புத்தாடை, முட்டை நாடகம், ஒன்று இரண்டு மூன்று, படிக்க ஒரு பாடம், நாய்க்குட்டி ஊர்வலம் ஆகிய ஐந்து நாடகங்களை இத்தொகுதி உள்ளடக்குகின்றது. மாவிட்டபுரத்தில் பிறந்த மாவை நித்தியானந்தன் தொழில்ரீதியாக ஒரு பொறியியலாளராவார். 70களில் மொரட்டுவையில் உயர்கல்வி கற்றவேளையில் நாடகத்துறையில் ஈடுபாடுகொண்டு அதன் பின் ஈழத்தமிழர்கள் மத்தியில் பல நாடகங்களால் இவர் அறியப்பட்டவர். இவரது நாடகங்களை அரசியல் அங்கத நாடகங்கள் மற்றும் சமூக அங்கத நாடகங்கள் என இருவகைப்படுத்தலாம். திருவிழா என்ற இவரது நாடகம் ஈழத்தமிழர் மத்தியில் தோன்றிய முதல் தெருவெளி நாடகமாகக் கருதப்படுகின்றது. 1989இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தபின்னர் இவர் தயாரித்த கண்டம் மாறியவர்கள் என்ற அரசியல் அங்கதச்சுவைமிகு நாடகம் புகலிடத்தில் பிரபல்யமாகியது. 1994முதல் அவுஸ்திரேலியாவில் சிறுவர்களுக்காகப் பாரதி பள்ளியை நடத்திவருகிறார்.

**மேலும் பார்க்க: 7576**

## *801.(4) சிறுவர் சிறுகதைகள்*

***7427***

**ஒன்றே இனம் என்று வாழுவோம்.** ஆனந்தகௌரி குமாரதாசன். பத்தரமுல்ல: கலாச்சார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, எட்டாம் மாடி, செத்சிறிபாய, 1வது பதிப்பு, புரட்டாதி 2010. (எத்துள்கோட்டை: ஏ.எஸ்.அச்சுப் பதிப்பகம், 656 கோட்டை வீதி).
viii, 24 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-955-9117-22-3.

*அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடரில் 2010க்குரிய விருதுபெற்ற சிறுவர் கதை. "தாய்நாட்டின் மரபுரிமை பிள்ளைகளுக்கே" என்ற நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் இந்நூல் வெளியிடப்பட்டது.*

### *7428*

***கதைக் கனிகள்.*** *வி.அரியநாயகம். கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், சேமமடு பொத்தகசாலை,* 180, 1/48, People's Park, *1வது பதிப்பு, மார்ச் 2011. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்,* U.G.*50*, People's Park*).*
126 *பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 240., அளவு: 21*x*15 சமீ.,* ISBN*: 955-0367-15-3.*

*வி.அரியநாயகம் யாழ்ப்பாணத்தின் சுன்னாகம்-வரியப்புலத்தில் பிறந்தவர். சென்னைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் இலங்கையில் ஆசிரியராகப் பணியாற்றி, பின்னாளில் யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வுபெற்றவர். தன் இறுதிக்காலத்தில் குடும்பத்தினருடன் அவுஸ்திரேலியாவில் வசித்த இவர் 2010இல் அமரத்துவம் அடைந்தார். 2009இல் கதைக்கோலங்கள் என்ற நூலை சிறுவர்களுக்காக எழுதிய இவரது இரண்டாவது நூல் அவரது மறைவின் பின்னர் வெளிவருகின்றது. இதில் பயில்வான் சீனி, அதிர்ஷ்டசாலி ஜோன், மாயாஜால மத்தளம், இனி ஊருக்குப் போகவேணும், சிறகு ஒடிந்த பறவை, சேவலும் நரியும், கைதியைக் காப்பாற்றிய பூனை, இளவரசி எலி, நான்கு குழி முயல்கள், தவளைக்குப் புள்ளி வைப்பது யார், மக்களைப் பிரளயத்தில் காத்தது, வியத்தகு வீர குடிமக்கள், பறவைகளை நேசித்த பணக்காரன், அரச மரத்தின் கதை, பூனையும் எலியும் ஆகிய 15 கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

### *7429*

***சாதனையாளர்.*** *ச.அருளானந்தம் (புனைபெயர்: கேணிப்பித்தன்). திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை,* F.L.*14.1., டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*
vi*, 43 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21*x*15 சமீ.,* ISBN*: 978-955-51451-7-6.*

*சாதனை படைத்தவர்கள், சாதனையாளர்கள், கிளிக்குஞ்சு மலை, தூக்கணாங் குருவிக்கூடு, உன்னைப் பெற்றதால்... ஆகிய ஐந்து சிறுவர் கதைகள். ஒவ்வொரு கதையிலும் மாணவர்கள் படைக்கும் சாதனைகளை வெவ்வேறு சூழலில் கவர்ச்சிகரமாகச் சொல்லியிருக்கிறார். கூட்டுறவு, ஒத்துழைப்பு, சமூகத் தொடர்பு, இரக்கம், அன்பு, சமூக நலன் ஆகிய போதனைகளை வழங்கும் கதைகள் இவை. சாதனை படைத்தவர்கள் என்ற கதை சீர்கெட்டிருந்த பாடசாலையை சிரமதானப்பணிமூலம் திருத்தி வளமாக்கும் செய்கையை விளக்குகின்றது. சுனாமி அநர்த்தத்தில் மாணவர் உதவிய மனப்பாங்கை சாதனையாளர்கள் என்ற கதை காட்டுகின்றது. கிளிக்குஞ்சுமலை மாணவரிடையே காணப்படும் இரக்கசுபாவத்தை காட்டுகின்றது. உயிர்களிடத்தில் அன்புவேண்டும் என்று போதிப்பது. சுதந்திரமாக வாழ்ந்துவந்த பறவைகளைச்சிறைப்பிடித்துச்சென்ற தீயவர்களிடமிருந்து அவற்றை மீட்டுத் தமது இயற்கை வாழிடத்தில் சேர்ப்பிக்கும் மாணவர்கள் பற்றியது. தூக்கணாங் குருவிக்கூடு- குஞ்சுகளிடமிருந்து பிரிந்த தாய்ப்பறவைகளை அவற்றின் குஞ்சுகளிடம் சேர்ப்பிக்கும் கதை இது. பறவைகள், மிருகங்கள் போன்ற பிற உயிர்களிடம் இரக்கம் வைக்கும் எண்ணத்தை உருவாக்குகின்றது. உன்னைப் பெற்றதால்... என்ற கதை உழைப்பினால் உயர்வினைப் பெறலாம் என்ற தத்துவத்தை போதிப்பது. குடும்பப் பொருளாதாரச் சுமையைத் தாமும் தாங்கி உழைத்து, அதேவேளையில் கல்வியிலும் உயர் தரத்தை பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் பற்றியது இக்கதை. கேணிப்பித்தன் என்றும் இலக்கிய உலகில் அறியப்பெற்றவர் ச.அருளானந்தம்.*

### *7430*

***சின்னச் சின்னக் கதைகள்.*** *மாவை நித்தியானந்தன் (கதை), மருது (ஓவியங்கள்). கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, மார்ச் 1994. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை).*
*24 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 29.5*x*20.5 சமீ.,* ISBN*: 978-955-1997-25-0.*

*இந்நூலில் உள்ள கதைகள் 2000வருடங்களுக்கு மேலாக வாழும் கதைகள். இவற்றைப் புதிய வடிவத்தில் தமிழ்க் குழந்தைகளுக்குக் கொண்டுவருகிறது இந்நூல். இலகுவான தமிழ், இனிய நடை, மட்டான சொற்கோவை, இவை இந்நூலின் சிறப்பு அம்சங்கள். ஓவியங்கள் கதைகளுக்கு மேலும் கவர்ச்சியைத் தருகின்றன. கர்ணபரம்பரைக் கதைகளாகவிருந்த பல சிறுவர் கதைகளை இந்நூலில் மாவை நித்தியானந்தன் தொகுத்திருக்கிறார். காகமும் தண்ணீரும், கொக்கும் நரியும், நரியும் திராட்சைப் பழமும், ஓநாயும் நிழலும், பொன் முட்டை வாத்து, முயலும் ஆமையும், மாடும் சுண்டெலியும், காற்றும் சூரியனும், கறுப்பும் வெள்ளையும், சிறுவனும் ஓநாயும், நியாயம், எறும்பும் புறாவும், குழந்தையும் ஓநாயும், கழுதையும் மனிதர்களும், உடலுக்குள் நடந்த சண்டை ஆகிய காலத்தால் அழியாத கதைகளின் தொகுப்பு இது. மாவிட்டபுரத்தில் பிறந்த மாவை நித்தியானந்தன் 70களில் மொரட்டுவையில் உயர்கல்வி கற்றவேளையில் நாடகத்துறையில் ஈடுபாடுகொண்டு அதன் பின் ஈழத்தமிழர்கள் மத்தியில் பல நாடகங்களால் இவர் அறியப்பட்டவர். இவரது நாடகங்களை அரசியல் அங்கத நாடகங்கள் மற்றும் சமூக அங்கத நாடகங்கள் என இருவகைப்படுத்தலாம். திருவிழா என்ற இவரது நாடகம் ஈழத்தமிழர் மத்தியில் தோன்றிய முதல் தெருவெளி நாடகமாகக் கருதப்படுகின்றது. 1989இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தபின்னர் இவர் தயாரித்த கண்டம் மாறியவர்கள் என்ற அரசியல் அங்கதச்சுவைமிகு நாடகம் புகலிடத்தில் பிரபல்யமாகியது.*

### 7431

***பாப்பாக் கதைகள் பாகம் 1.*** *த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234* K.K.S.*வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1999. (கொழும்பு 14: கோல் குவிக் அச்சகம்).*
*24 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 30., அளவு: 24.5*x*17.5 சமீ.*

*பாலர்களுக்கேற்ற பத்து குட்டிக்கதைகளின் தொகுப்பு இதுவாகும். எது சிறப்பு, ஆசை ஆபத்தானது, பயன்தரும் பணி செய், காட்டில் ஒரு கலைவிழா, உனது முகத்தை அழகுபடுத்து, நரியின் தந்திரம், குணம் அறிந்து புத்திசொல், காடு நடந்ததைக் கண்டதில்லை, தப்பிப் பிழைக்கும் தந்திரம் எது, புலியும் சிங்கமும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.*

### 7432

***பிராணிகள் கூறும் அறிவியல் கதைகள்.*** *தனபாக்கியம் குணபாலசிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 600094: பி.வி.ஆர். ஆப்செட்).*
viii, *116 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 24*x*18 சமீ.*

*உருவகக் கதைகள் மூலம் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் பதிவுகளை அறநெறியில் ஆழ்ந்த நம்பிக்கைகொண்ட ஆசிரியரின் ஆரோக்கியமான சமுதாயப்பார்வை அணிசெய்கின்றது. பொருட்செறிவும், தத்துவ ஆழமும் கொண்ட பல ஆய்வு நூல்களை எழுதிய ஆசிரியரின் சிறுவர் இலக்கியப் படைப்பு இது. யார் பெரியவர் - கடவுளா மனிதனா, கடவுள் நியாயமானவரே, வன விலங்குகளின் கடவுள் யார் - உச்சி மாநாடு, பூமி சூரியனிடம் மனிதன் மீது தாக்கல் செய்து முன்வைத்த கருணைமனுவும் விசாரணைகளும், விலங்குகளுக்கு விருது வழங்கும் விழா, நமது பெருமைமிக்க பாரம்பரியங்களை நினைவுகூரும் சேவல்கள், வௌவால் யோகமும் போலி வேடங்களும், தீர்க்கதரிசி மான், தவளைக் குஞ்சும் வட்டநிலாவும், ஆயுள் அற்பமானாலும் முயற்சிகள் அதிகம், அரணைகளின் மறதியும் மனிதனின் மறதியும், தோல்வியைத் தழுவும் குள்ளநரிகள் ஆகிய கவர்ச்சிகரமான தலைப்புகளில் அமைந்த பன்னிரண்டு உருவகக் கதைகள் இத்தொகுதியில் அடங்கியுள்ளன.*

### 7433

***பிறந்த மண்: சிறுவர் கதைகள் (பகுதி 2).*** *வடகோவை பூ.க.இராசரத்தினம். கொழும்பு 13: கீதா பதிப்பகம், 1வது பதிப்பு, மே 2009. (கொழும்பு 6:* P.K.R. *பப்ளிக்கேஷன்ஸ், 36* A/*2, 37ஆவது ஒழுங்கை).*
*56 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 22*x*14.5 சமீ.,* ISBN: *978-955-1444-05-1.*

*சிறுவர்களின் சிந்தனையைத் தூண்டும் பதினேழு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சிறுவர்களை வளர்ந்தோரின் சிற்றுருவங்களாகக் காணாது, அவர்களுக்கேயுரிய தனித்துவங்களுடன் நோக்கும் இலக்கிய மரபை இந்நூலாசிரியர் மீள வலியுறுத்திச் செல்கிறார்.*

### 7434

***பூனைக்கு மணி கட்டிய எலி.*** C.M.A.*அமீன். கலகெடிஹேனை: ரேஷ்மா பதிப்பகம், 348/1, வரபலான வீதி, திஹாரிய, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2008. (கல்ஹின்ன: விங்ஸ் கிராப்பிக்ஸ், 262* A, *கண்டி வீதி). (6), 76 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 19*x*13 சமீ.*, ISBN: *978-955-51014-1-7.*

*சிறுவர்களுக்கு நன்நெறிகளைப் போதிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட சிறுவர் கதைகள். பூனைக்கு மணி கட்டிய எலி, தேரோட்டி இளவரசன், களவிலே வந்த பொருள், சேவலுக்குப் புத்தி வந்தது, அரை வைத்தியர் பிடித்தார் ஓட்டம், நீச்சல்காரக் கோவணசாமி, பொருந்தாத நட்பு, இகழ்ச்சி ஆகிய எட்டு சிறுவர் கதைகளை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 625450).*

*மேலும் பார்க்க:* ***7793***

## *801.(5) சிறுவர் நாவல்கள்*

### 7435

***அபர்ணிக்காவின் நாய்க்குட்டி.*** *அனந்தன் சுதாராஜ். கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம்,* B*3*-G*3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம்,* B*3*-G*3 ரம்யா பிளேஸ்). (20) பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 19.5*x*22 சமீ.*, ISBN: *978-955-1997-22-9.*

*புத்தளம் இந்து மத்திய கல்லூரியில் ஆறாம் ஆண்டில் கல்விபயிலும் மாணவனான அனந்தன் சுதாராஜ் இச்சிறுவர் கதையை எழுதியுள்ளார். இந்நூலுக்கான வண்ண ஓவியங்களைஆர்த்தி பரமேஸ்வரன் வரைந்துள்ளார். இவர் லண்டன் தொல்வேர்த்தில் உள்ள தொல்வேர்த் மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி பயில்கிறார்.*

### 7436

***அமராபுரி இளவரசனின் அற்புத சாகசங்கள்:சிறுவர்களுக்கான சரித்திர நாவல்.*** கே.எஸ். ஆனந்தன். *சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2011. (சென்னை ஜே.எம்.பக்கேஜிங்).*
iv, *68 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 55., அளவு: 24*x*18 சமீ.*

*இருபது அத்தியாயங்களில் விரியும் சிறுவர்களுக்கான வரலாற்று நாவல். அமராபுரி நாட்டைச்சேர்ந்த இளவரசன் ஒருவனின் வீரதீர சாகசங்களை விறுவிறுப்பாக இக்கதை வழங்குகின்றது. நூலாசிரியர் 1940இல் யாழ்ப்பாணம் இணுவிலில் பிறந்தவர். உறவும் பிரிவும் (1964), தீக்குள் விரலை வைத்தால் (1972), மர்மப்பெண்(1974), கர்ப்பக்கிருகம் (1974), காகித ஓடம் (1974) ஆகிய நாவல்களை எழுதியவர். குறிப்பாக 1964-1974 இடைப்பட்ட பத்தாண்டுகளில் ஏராளமான படைப்பிலக்கியங்களை வீறுடன் படைத்தவர். இராவணன் கோட்டை என்ற சிறுவர் நாவல் இவரை சிறுவர் இலக்கியகர்த்தாக்களுள் ஒருவராக அடையாளம்காணவைத்தது.*

### 7437

***அவன் பெரியவன்.*** *அநு.வை.நாகராஜன். யாழ்ப்பாணம்: வைரமான் வெளியீடு, சங்கராபரணம், தென் மயிலை, தெல்லிப்பழை, 2வது பதிப்பு, மே 1998, 1வது பதிப்பு, ஜுலை 1993. (கொழும்பு 13: லக்சு கிராபிக் பிறைவேட் லிமிட்டெட், 98 விவேகானந்தா மேடு).*
vi, *7-48 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 65., அளவு: 18*x*12 சமீ.*

ஒரு யானை தன்னோடு சிறு வயது முதல் பழகிய ஒரு மனிதனிடம் அன்பு காட்டுதல் இக்கதையின் கருவாகின்றது. பத்திரிகைத் தட்டுப்பாடு, பொருளாதாரத் தடைகள் மலிந்த போர்க்காலச் சூழலில் 1993இல் முதலாம் பதிப்பு யாழ்ப்பாணத்திலிருந்து வரதர் வெளியீடாக **சிறுவர் கதை மலர்- 01** என்ற தொடரில் வெளிவந்தது. இந்த மீள்பதிப்பில் முன்னைய பதிப்பின் குறைகள் களைந்து சிறுவர்களுக்கேற்ற (ஆசை இராசையாவின்) சித்திரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 517655).

### 7438

**இணைபிரியாத தோழர்.** டி.பி.இலங்கரத்ன (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழ் மொழிபெயர்ப்பு). கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
(8), 279 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 350., அளவு: 17.5x12 சமீ., ISBN: 978-955-1997-18-2.

புகழ்பெற்ற சிங்கள சிறுவர் நாவலான **அம்ப யஹலுவோ** என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். இக்கதையின் ஆசிரியர் சிறந்த எழுத்தாளர் மாத்திரமன்றி 1960களில் இலங்கைப் பாராளுமன்றத்தில் அமைச்சராகவும் செயற்பட்டுவந்த ஒரு பிரபல்யமான அரசியல்வாதி. இந்நாவலில் சிறுவர் உலகின் எண்ணங்களையும் செயல்களையும் இவர் தத்ரூபமாகச் சித்திரிக்கின்றார். கதையின் களமாக அமைவது இலங்கையின் மத்திய பகுதியான மலைநாடாகும். பெரும்பான்மைச் சமூகத்தவரின் வாழ்க்கை முறைமைகளையும் பழக்க வழக்கங்களையும் சிறுபான்மையினர் அறிந்துகொள்வதற்கு இந்நூல் உதவுகின்றது. நிமலும் சுனிலும் நட்பின் பெருமையைப் பறைசாற்றும் சிறுவர் உலகப்பிரதிநிதிகளாகச் சித்திரிக்கப்படுகின்றனர்.

### 7439

**கலியாணச் சாப்பாடு.** குமாரதுங்க முனிதாச (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு 11: எம்.டி.குணசேன அன் கொம்பனி, 217, ஒல்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 1972. (கொழும்பு 11: அச்சகப் பிரிவு, எம்.டி.குணசேன அன் கொம்பனி).
xx, 76 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 4.00, அளவு: 18.5x12.5 சமீ.

குமாரதுங்க முனிதாச சிங்கள இலக்கியத்தின் முக்கியமான படைப்பாளிகளுள் ஒருவர். இவர் எழுதிய **ஹத்பன, மகுல்காம, ஹீன்சரய** ஆகிய மூன்று சிறுவர் நூல்களும் மிகப் பிரபல்யமானவை. அவற்றில் **மகுல்காம** என்ற நூல் இங்கு தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. மனிதகுலத்தின் மடைமையை எள்ளிநகையாடும் இவ்வங்கதக் கதை கோழியூர், நரிக்காடு, நட்பும் பகையும், அசையாத நம்பிக்கை, தயாராதல், போர், கலியாணப் பேச்சு, சம்மதம், நரிக்காட்டில் நிச்சயதாம்பூலம், கோழியூரில் நிச்சயதாம்பூலம், உற்சவம், திருமண உபதேசம், கலியாண ஊர்வலம், பெயரின் முதலெழுத்து ஆகிய 14 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கு நகைச்சுவையாக இருக்கும் இக்கதை- வளர்ந்தோருக்கு சிந்தனையைத் தூண்டுவதாக அமைகின்றது. இந்நாவலைத் தமிழாக்கம் செய்த சரோஜினிதேவி இலங்கை அரசகரும மொழித் திணைக்களத்தைச் சேர்ந்தவர். தந்தையாராக நவாலியூர் சோ.நடராசனையும் பாட்டனாராக நவாலியூர் சோமசுந்தரப் புலவரையும் கொண்ட இலக்கியப் பரம்பரையின் வழிவந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119673).

### 7440

**காட்டிலிருந்து நாட்டுக்கு வந்த கரடி.** சுதாராஜ். கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ்).
16 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 29.5x25 சமீ., ISBN: 978-955-1997-26-7.

காட்டில் வாழும் குரங்காரின் ஆதரவுடன் நாட்டுக்குள் மனிதரைப் பார்க்க வந்த கரடியாரின் கதை. காட்டுப்பாதையால் வந்த ஒரு பார ஊர்தியில் தொற்றிக்கொண்டு ஒரு கிராமத்துக்குள் வந்த கரடியார் குழந்தைகளுடன் சேர்ந்து களிப்பில் திளைக்கிறார். சாப்பிடக் கடைக்குச் செல்லும் கரடியாருக்குக் கலப்படம் மிக்க உணவுவகைகளோ, இரசாயனப் புகையால் பழுக்கவைக்கப்பட்ட பழங்களோ

*விருப்பத்துக்குரியனவாக இருக்கவில்லை. இடையில் அவரைச் சுடுவதற்கு வந்த துப்பாக்கிதாரர்களுடன் பேசி குழந்தைகள் கரடியாரைக் காப்பாற்றி காட்டுக்கே அனுப்பிவைக்கிறார்கள்.*

### 7441

**குடை நடை கடை.** *வசந்தி தயாபரன் (கதை), வி.சுப்பிரமணியம் (விளக்கச் சித்திரங்கள்). கொழும்பு 6:* Room to read Sri Lanka, *இல. 14, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு:* graphitec Pvt. Ltd).

*16 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.,* ISBN: *978-955-1520-42-7.*

*எப்போதும் குடையோடு நடக்கின்ற மனிதன் ஒருவனின் அழகான கதை. வெயிலோ மழையோ இல்லாத பொழுதுகளிலும் அழுக்கான ஒரு பெரிய குடையைத் தன்னுடனே கொண்டுசெல்லும் அவரை தாயுடன் செல்லும் சிறுமி ஒருத்தி அடிக்கடி காண்கிறாள். குடையினால் ஏற்படும் இடைஞ்சல்களே கதையின் பெரும்பகுதி. பஸ்சில் ஏற்றமறுத்து அவரை நடையிலேயே தன் பயணத்தை மேற்கொள்ளவைக்கின்றது சமூகம். இறுதியில் அவர் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியாக அறியப்படுகிறார். அவசரத்திற்குத் தாயின் அறுந்த செருப்பையே தைத்துத்தரும் அவரது குடையே அவரது கடையாக இருப்பதை சிறுமி காண்கிறாள். வசந்தி தயாபரன் இலங்கை வங்கியின் முன்னாள் அலுவலர். இலக்கியத்தின் மீது மிகுந்த ஈடுபாடுள்ளவர். தகவம் என்ற தமிழ் இலக்கிய அமைப்பின் செயலாளர். தினகரன் பத்திரிகையின் ஓவியராகப் பணியாற்றும் வி.சுப்பிரமணியனின் ஓவியங்கள் நூலின் பெறுமதியை அதிகரிக்கின்றன.*

### 7442

**துணிச்சலான தோழர்கள்.** *மருத மைந்தன் (இயற்பெயர்:* M.S.S.*ஹமீட்). பாணந்துறை:* V4U *பதிப்பகம், 25 கருணாரத்ன மாவத்தை, பள்ளிமுல்லை, 1வது பதிப்பு, ஜுலை 2007. (அச்சிட்ட இடம் தரப்படவில்லை: சுமதி அச்சகம்).*

*64 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21x15 சமீ.*

*இயல்பான சம்பவங்கள், யதார்த்தமான கதைப்போக்கு என்பவற்றுடன் சிறுவர்களுக்கான நற்போதனைகளும் அடங்கிய சிறுவர் நவீனம். தினக்குரலில் இளந்தளிர் சிறுவர் பகுதியில் தொடர்ச்சியாக வெளிவந்து பாராட்டைப்பெற்றது. ஓர் பாடசாலை ஆசிரியர் என்ற நிலையில் சிறுவர்களோடு நெருங்கிப்பழகும் வாய்ப்பினால் அவர்கள் பற்றிய அவதானிப்புகள் இந்நவீனத்தை வளர்த்துச்செல்ல உதவியுள்ளது.*

### 7443

**பேசும் பொம்மைகள்.** *தேனுகா சுதாராஜ். கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம்,* B*3-*G*3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம்,* B*3-*G*3 ரம்யா பிளேஸ்).*

*(24) பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 22x18.5 சமீ.,* ISBN: *978-955-1997-21-2.*

*யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பயின்ற தேனுகா சுதாராஜ், புத்தளம் இந்து தமிழ் மகாவித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியை முடித்து, புத்தளம் பாத்திமா மகளிர் கல்லூரியில் உயர்வகுப்பு மாணவியாகப் பயில்கிறார். முன்னதாக முயல்குட்டியின் விளையாட்டுத் துவக்கு என்னும் சிறுவர் கதையை எழுதியவர். இந்நூலுக்கான வண்ண ஓவியங்களைஆர்த்தி பரமேஸ்வரன் வரைந்துள்ளார். இவர் லண்டன் தொல்வேர்த்தில் உள்ள தொல்வேர்த் மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி பயின்றவர். ஓவியக்கலையில் சிறப்புப் பயிற்சிபெற்றவர்.*

### 7444

**மாயக்கிழவி.** *ஓ.கே.குணநாதன். மட்டக்களப்பு: பிரியா பிரசுரம், அமிர்தகழி, 1வது பதிப்பு, நவம்பர் 1996. (வவுனியா: ஆதவன் அச்சகம்).*

*(4), 76 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 16.5x11.5 சமீ.*

சிறுவர்களைக் கடத்திச் சென்று வெளிநாடுகளுக்கு விற்கும் நாசகாரக் கும்பல் ஒன்றை பள்ளிச் சிறுவர்கள் சிலர் பொலிசாருடன் இணைந்து அகப்படுத்துவதாகக் கதை நகர்கிறது. ஞாயிறு வீரகேசரியில் தொடராக வெளிவந்த விறுவிறுப்பான சிறுவர் நாவல் இது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 517782).

### 7445

**முயலாரின் சாகசங்கள்: சிறுவர் நவீனம்**. கிருஷ்ணசந்தர் (இந்தி மூலம்), ஸீ.எம்.ஏ.அமீன் (தமிழாக்கம்). கலகெடிஹேன: ரேஷ்மா பதிப்பகம், 348/1, வறபலான வீதி, திஹாரிய, 2வது பதிப்பு, ஜுலை 2004, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1987. (கொழும்பு 11: நிசான் பிரின்டர்ஸ், 64 என், பீர் சாஹிபு வீதி).
(4), 64 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 60., அளவு: 19x13 சமீ., ISBN: 955-95661-7-2.

வட இந்திய எழுத்தாளர் கிருஷ்ணசந்தர் சாலாக் கர்கோஷ் என்ற பெயரில் எழுதிய ஹிந்தி நாவலின் மொழிபெயர்ப்பின் திருத்திய பதிப்பாகும். சிறுவர்களின் சிந்தனைக்கும் ரசனைக்கும் விருந்தளிப்பதாக அமைந்த படங்களுடன் கூடிய இந்நாவல் முன்னர் 1977இல் சிந்தாமணி பத்திரிகையில் தொடராக வெளிவந்தது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 618740).

### 7446

**ராமுவின் காணாமல்போன மூக்கு.** ஆர்த்தி பரமேஸ்வரன். கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ்).
16 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 225., அளவு: 29.5x21.5 சமீ., ISBN: 978-955-1997-23-6.

ஆர்த்தி பரமேஸ்வரன் இந்நூலிலுள்ள கதையை எழுதியுள்ளதுடன் இதிலுள்ள அனைத்துப் படங்களையும் வரைந்துள்ளார். லண்டனில் உள்ள டொல்வேர்த் மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்விகற்றுப் பின்னர் ஓவியக் கலை சம்பந்தமான ஒரு வருடப் பயிற்சிநெறியை Epsom University College for the creative Arts என்ற நிறுவனத்தில் பயின்றவர். தற்போது Farham University College for the Creative Arts என்ற நிறுவனத்தில் வரைகலை அசைவியக்கம் பற்றிய பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகிறார். சர்க்கஸ் கோமாளியான ராமுவின் தொலைந்துபோன சிகப்பு மூக்கை நண்பர்களுடன் சேர்ந்து தேடுவது கதை. மற்றவர்களைப் பார்த்துப் பொறாமைப்படக்கூடாது. போட்டி உணர்வு இருக்கலாம் அது மற்றையவர்களைப் பாதிக்கும் பொறாமையாக மாறக்கூடாது என்ற போதனையைக் குற்றவாளியான குரங்காரினூடாக வெளிப்படுத்துகின்றார்.

### 7447

**லப்பாம் டப்பாம்: சிறுவர் நாவல்.** வில்வம் பசுபதி. யாழ்ப்பாணம்: The Hindu Board of Education, கலாசாலை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2006. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டர்ஸ், 56, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).
iv, 72 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 17.5x12.5 சமீ.

சிறுகதைகள், குட்டிக்கதைகள், நகைச்சுவைக் கதைகள், கட்டுரைகள், ஆன்மீகக் கட்டுரைகள் எனப் பலவற்றையும் வில்வம் பசுபதி என்ற புனைபெயரில் எழுதி சிற்றிலக்கிய ஏடுகளிலும், பத்திரிகைகளின் சிறுவர் பகுதிகளிலும் பிரசுரமாகக் கண்டவர் அமரர் பசுபதி. இவரது ஆக்கங்கள் சஞ்சீவி, ஞானக்கதிர், அர்ச்சனா போன்ற இதழ்களில் அதிகம் வெளியாகியுள்ளன. தன் வாழ்நாளில் இவற்றை நூலுருவில் காணமுடியாதுபோன அன்னாருக்குக் காணிக்கையாக அவரது மறைவின் பின்னரான 31ம்நாள் நிகழ்வின்போது இந்நூல் அவரது குடும்பத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. 17 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் எழுதித் தொடராக வெளிவந்த சிறுவர் நாவல் இது.

## 801.(6) சிறுவர்க்கான கட்டுரைகள்

**7448**

**சிறுவரும் அவர்தம் அறிவுசார் சாதனங்களும்.** அநு.வை.நாகராஜன். யாழ்ப்பாணம்: வைரமான் வெளியீடு, சங்கராபரணம், தென் மயிலை, தெல்லிப்பழை, 1வது பதிப்பு, ஜுலை 2005. (கொழும்பு 12: நிசான் பிரின்டர்ஸ், 64 N, மீர்சாஹிபு வீதி).

xii, 148 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 955-98393-5-6.

இந்நூலில் நீண்ட காலமாக சிறுவர் நலவியலில் தான் கண்ட அனுபவங்களையும் கருத்துக்களையும் ஆய்வுநோக்கில் ஆசிரியர் தர முனைந்துள்ளார். சிறுவர்- தோற்றுவாயும் விளக்கமும் முதலாவது பிரிவிலும், அறிவுசார் சாதனங்கள் இரண்டாவது பிரிவிலும் விளக்கப்பட்டுள்ளன. அறிவுசார் சாதனங்களில் கட்புல சாதனங்களான நூல்களும் பிறவும் தனியாகவும், கட்புல-செவிப்புல சாதனங்களான திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பன தனியாகவும் பிரித்து விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் 15ஆவது வைரமான் வெளியீடாகவும் ஆசிரியரின் ஒன்பதாவது சிறுவர் நூலாகவும் அமைகின்றது.

## 801.(7) சிறுவர்க்கான பலவின நூல்கள்

**7449**

**சமாதானத்திற்கான எனது எண்ணம்.** விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம். கொழும்பு: விழுது, Centre for Human Resource Development, 1வது பதிப்பு, மார்ச 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

viii, 87 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 22x14.5 சமீ.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம், பிரித்தானிய தூதராலயத்துடன் இணைந்து சமாதானத்திற்கான காட்சிப்படுத்தல்களும் குரல்களும் என்ற திட்டத்துக்கு உருவம் கொடுத்துள்ளன. யுத்தத்தின் அவலங்கள் பற்றியும், அதற்கூடாக ஒரு மாறுபட்ட சமூகத்தைப் பற்றிய நம்பிக்கைகளையும் பிரதிபலிக்கக்கூடிய பன்னிரண்டு புகைப்படங்களைப் பற்றிய தமது உணர்வுகளைத் தத்தம் தாய்மொழியில் சிறுவர்களை எழுதவைத்து அவற்றை நூலுருவில் மும்மொழியிலும் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) தொகுத்து ஆவணப்படுத்தியுள்ளனர். My thought for peace (ஆங்கிலம்), சாமய சந்தகா மகே சித்துவலி (சிங்களம்) ஆகிய தலைப்புகளில் இந்நூல் மும்மொழிநூலாக வெளியிடப்பெற்றுள்ளது. வடக்கு-கிழக்கின் யுத்தசூழலில் வாழும் சிறுவர்களைப் பகைப்புலமாகக் கொண்ட காட்சிப் படிமங்களின் பிரதிபலிப்பாக இப்புகைப்படங்கள் இருக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45082).

## 891.2 சமஸ்கிருத இலக்கியம்

**7450**

**வட மொழி இலக்கிய வரலாறு: செம்மொழிக் காலம்.** நவாலியூர் சோ.நடராசன். கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறிமதிபாயா, ஏணஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1967. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

x, 406 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

வேதகால இலக்கிய வரலாற்றை ஏற்கெனவே கைலாசநாதக்குருக்கள் வெளியிட்டுள்ள நிலையில், அதற்குப் பிந்திய செம்மொழியான சம்ஸ்கிருத மொழியில் உள்ள இலக்கியத்தின் வரலாற்றை இந்நூல் விபரிக்கிறது. இந்நூலில் பிரதானமாக இதிகாச புராணங்களைப் பற்றியும், காவியங்களைப் பற்றியும், கதை நாடகம் அணி என்பன பற்றியும் சில தரிசனங்களைப் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழில் நாடக வளர்ச்சி குன்றியிருப்பதால் வடமொழி நாடகமரபு, அதன் இலக்கணம் என்பவற்றைச் சற்று விரிவாக இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார். சரித்திர காவியம், அர்த்தசாஸ்திரம், காமசாத்திரம், என்பனவும் இடம்பெற்றுள்ளன. அணி பற்றிய அதிகாரம் இலக்கிய விமர்சனத்திற்கும் பயனுள்ளதாகும். இவை அனைத்தும் 15 அத்தியாயங்களில் முறையே செம்மொழித் தோற்றம், இதிகாசங்கள், புராணங்கள், காவிய உதயம், பெருங்காப்பியங்கள், அகப்பாட்டு: பக்திப்பாடல்கள்,

கதை, சரித்திர காவியம், நாடகம், நாடக இயல், அணியியல், தரும சாத்திரமும்அர்த்த சாத்திரமும், வேதக் காட்சி, தரிசனங்கள், சாங்கிய யோகம் ஆகிய தலைப்புகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

## 894.8 தமிழ் இலக்கியம்

### 7451

**கல்வாரிக் கலம்பகம்.** நீ.மரியசேவியர். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்). 32 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

பல்வகை ஓசை நயமுடைய பா இனங்களால் பல்வேறு பொருள்சேர்த்து அந்தாதித் தொடை அமையப் பாடப்படுவது கலம்பகம். இது தமிழிலுள்ள 96 வகைச் சிற்றிலக்கியங்களுள்ஒன்று. கலம்பக இலக்கியத்தின் ஊசல், குறம், பாண், தவம், சித்து, அம்மானை, மறம், தூது, இரங்கல், புயம், மதங்கி ஆகிய உறுப்புகளின் ஒருசில சாயல்களைக் கோர்த்து இசை, உரை, வசனம், கவிதை, அபிநயம், நடனம், நாடகம், ஒலி, ஒளி மூலம் இயேசுவின் வரலாற்றின் ஒருசில கட்டங்களை, பக்தி, இசை, உரைநாடகம், என திருமறைக்கலாமன்ற நாடக நூல் வரிசையில் மற்றுமொரு நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

### 7452

**கல்வாரிப் பரணி.** நீ.மரியசேவியர். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்). (3), 53 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

தமிழ் மொழியிலுள்ள 96 சிற்றிலக்கிய வகைகளுள் பரணியும் ஒன்று. அது போர்க்களத்தில் ஆயிரம் யானைகளை வென்ற வீரனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்படுவது. பெரும்போர் புரிந்து வெற்றியீட்டிய ஒருவனைப் புகழ்ந்து பாடுவதையும் பரணி என வழங்குவர். தலைவனின் பல்வேறு சிறப்புகளை கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, தேவி பாடியது, அவதாரம், போர் பாடியது, களம் பாடியது போன்ற பல்வகை உறுப்புகளைக் கொண்டு கலித்தாழிசையாற் பாடப்படுவது பரணி என்பர் புலவர். அலகையுடன் சமரிட்டு, அதன் ஆட்சியை முடித்து அருளின் அரசை நிறுவுவதற்காக, இறை மகன் இயேசு இவ்வுலகில் பிறந்தார். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அப்போரின் இறுதிக்கட்டம் கல்வாரிக் குன்றில் நிகழ்ந்தது. சிலுவை மரத்தில் எழுந்து தன்னுயிர் துறந்து அதன் மூலம் அலகையின் ஆதிக்கத்துக்குச் சாவுமணியடித்து வெற்றிவாகை சூடினார் இயேசு. அக் கல்வாரி வெற்றியையும் அதற்கு இட்டுச்சென்ற சமரின் ஒருசில கட்டங்களையும் நினைவுபடுத்தி இயேசு என்னும் திருக்குமரனை நாடக வடிவமாகச் சிறப்பிப்பது கல்வாரிப் பரணி.

### 7453

**கலை இலக்கியக் களஞ்சியம்.** சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்). vii, 126 பக்கம், விலை: ரூபா 340., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1857-89-9.

சமகாலத்தில் கலை இலக்கியம் தொடர்பான ஆய்வுகளின் பிரவாகம் புதிய பல கலைச்சொற்களினதும் கோட்பாடுகளினதும் ஆக்கங்களோடு இணைந்து எழுச்சிகொள்ளத் தொடங்கியுள்ளது. நவீன கலை இலக்கியத்தில் பயின்று வரும் பெருவாரியான கலைச்சொற்கள் ஒருசேரத் தொகுக்கப்பட்டு நூல்வடிவில் தமிழில் வெளியிடும் முயற்சியாக இது அமைந்துள்ளது. கலை இலக்கியங்களில் நிகழ்ந்துவரும் புதிய கருத்தாடல்களை புரிந்துகொள்வதற்குரிய ஆற்றுப்படுத்தல் ஆக்கமாகவும் இந்நூல் அமைந்துள்ளது. பொருத்தமான எடுத்துக்காட்டுகள் விளக்கத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

### 7454

**சிவசம்புப் புலவர் பிரபந்தத் திரட்டு: முதற் பாகம்.** செவ்வந்திநாத தேசிகர் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஈழகேசரி நா.பொன்னையா, திருமகள் நிலையம், மயிலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, 1939. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
viii, 174 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12 சமீ.

ஆரிய திராவிட பண்டிதர் செவ்வந்திநாத தேசிகர் தொகுத்தருளியுள்ள இந்நூலில் சிவசம்புப்புலவர் பாடியருளிய இராமநாதபுரம் பாற்கர சேதுபதி கல்லாடக் கலித்துறை, பாற்கர சேதுபதி நான்மணிமாலை, பாண்டித்துரைத் தேவர் நான்மணிமாலை, மயில்வாகன வம்ச வைபவம், பிரபாவப் பாமாலை, பருத்தித்துறைக் கலித்துறை, வல்வைக் கலித்துறை ஆகிய செய்யள்களும், தனிச்செய்யுள்களாக இராமநாதபுரம் பாற்கர சேதுபதி, அனைக்குடி இராமசுவாமிப்பிள்ளை, இராமேசுவரம் இபுராம்கிப் சாகிபு, இராமேஸ்வரம் சிதம்பரப்பிள்ளை, சித்தங்கேணி வைத்தியலிங்கப்பிள்ளை, கரவைச்சிற்றம்பல முதலியார், யாழ்.பறங்கித்தெரு மனுவற்பிள்ளை, முல்லைத்தீவு மயில்வாகனம்பிள்ளை, நவிண்டிற் சதாசிவக் குருக்கள், மானிப்பாய் நாகைலிங்கபிள்ளை, வண்ணை நாகைலிங்கப்பிள்ளை, சுன்னாகம் வேற்பிள்ளை, கொக்குவில் முருகேசபிள்ளை, துன்னாலை வேட்கோவர், சரசாலைத் திருஞானசம்பந்தபிள்ளை, தாயார் கதிராசிப்பிள்ளை, ஆனைக்கோட்டை முத்துக்குமாரபிள்ளை, புலோலி மயில்வாகனப்பிள்ளை, கோப்பாய் அ.சுப்பிரமணியபிள்ளை, கோப்பாய் அ.மயில்வாகனம் ஆகியோரின் பேரிற் பாடப்பெற்ற செய்யுள்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2370).

### 7455

**சீமந்தனி புராண மூலமும் உரைநடையும்.** ச.பூபாலபிள்ளை (மூல ஆசிரியர்), ஈழத்துப் பூராடனார் (உரையாசிரியர்), அன்புமணி இரா. நாகலிங்கம் (பதிப்பாசிரியர்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், 1108, Bay Street, Toronto, Ontario M5S 2W9, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1989, 1வது பதிப்பு, 1894. (கனடா: ரிப்ளக்ஸ் அச்சகம், டொரன்டோ).
xxxx, 226 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

சீமந்தனி என்பவள் சித்தரவர்மன் என்பவனின் மகள். சோதிடர்கள் சீமந்தனியின் நாட்குறிப்பைப் பார்த்து 14 வயதில் அவள் அமங்கலியாவாள் என்று கூறுகின்றனர். இதனை அறிந்து கவலை கொண்ட சீமந்தனி, ஞாஞ்ஞவல்கிய முனிவரின் மனைவியாகிய மைத்திரியிடம் சென்று நிலைமையைக் கூற, அவள் சீமந்தனியை சோமவார விரதத்தை அனுட்டிக்குமாறு அறிவுரை கூறுகின்றாள். அதன்படி சீமந்தனி சோமவார விரதம் இருக்கிறாள். இந்நிலையில் நிடததேச மன்னனாகிய சந்திராங்கதனை மணம்புரிகிறாள். சந்திராங்கதன் ஒருநாள் ஜமுனை நதியில் தோணியேறிச் செல்ல தோணி கவிழ்கிறது . சந்திராங்கதன் தவிர்ந்த அனைவரும் நதியில் மூழ்கி இறக்கின்றனர். சந்திராங்கதன் தப்பிப்பிழைத்து நாகராசனால் காப்பாற்றப்பட்டு, நாகலோகம்சென்று சிறிது காலம் வாழ்கிறான். அதேவேளை அவன் இறந்துவிட்டான் என நம்பி சீமந்தனி விதவைக் கோலம் கொள்கின்றாள். பின்னர் சந்திராங்கதன் குணமானதும் மீண்டும் ஜமுனைக்கரைக்கு வர அங்கே சீமந்தனி சோமவார விரதம் அனுட்டித்து நீராட வருகிறாள். தான் இறந்துவிட்டதாக எண்ணி அவள் விதவைக்கோலத்தில் இருப்பதைக்கண்டு வருந்துகிறான். ஈற்றில் அவளை இரண்டாவது முறை மணந்து இனிது வாழ்கிறான். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 425446).

## 894.8(1) தமிழ்க் கவிதைகள்

### 7456

**அக்கினிப் பூக்கள்.** ஈழவாணன். (இயற்பெயர்: எம்.தர்மராஜா). கொழும்பு 3: கலசம் பப்ளிக்கேஷன்ஸ், 30, சீ அவென்யு, 1வது பதிப்பு, டிசம்பர் 1973. (கொழும்பு: ரஞ்சனா அச்சகம்).
(6), 72 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18.5x12.5 சமீ.

மாதம் ஒரு நூல் என்ற வகையில் தனது முதலாவது நூலாக கலசம் வெளியீட்டகம் இந்நூலை வெளியிட்டுள்ளது. கொழும்பிலிருந்து கனக.பாலசுப்பிரமணியம் அவர்களைப் பதிப்பாசிரியராகக்

கொண்டு இத்திட்டம் தொடக்கப்பட்டது. கலசம் வெளியீடாக பிரசுரமான முதலாவது நூல் என்ற பெருமையை இக்கவிதை நூல் பெறுகின்றது. நூலாசிரியர் ஈழவாணன் திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

### 7457

**அஞ்சுவது அஞ்சாமை பேதமை: கவிதைகள்.** எம்.சித்திவிநாயகம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
iv,100 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18x12.5 சமீ.

விடுதலைப்போரில் சிக்கிச் சிதைந்த ஈழமக்களின் வாழ்வின் தரிசனங்களைக் கவிதைவரிகளில் பதிவுசெய்துள்ளார், கவிஞர் சித்திவிநாயகம். அஞ்சுவது அஞ்சாமை பேதமை, ஓர் இருப்பின் தொலைவு, இயந்திரக்கூண்டில் அடைபட்ட கூலி, கோலியாத்தும் தாவீதும், அந்திமக் காலமும் அடாவடிக்காரரும், மானிடத் தகுதி, அன்னியமுடுத்து அம்மணமாகினேன், சகுனிகள் சூது, வயல் தாவும் வானரங்கள், உச்சி மலை ஓலம், துவம்சம் அல்லது நினைவறா நாள், பயபக்தி, இராப் பேய்கள், தலைகளைப் பறிகொடுத்தோர், பூர்வீகம் தேடும் கனவான்களுக்கு போன்ற 30 தலைப்புகளில் இவரது கவிதைகள் அமைகின்றன. சமகால நிகழ்வுகளின்மீது எழுந்த இக்கவிதைகள் எமது மனதோடு பேசும் ஆற்றல்மிக்கவை.

### 7458

**அந்நிய முகங்கள்.** அருணா சுந்தரராசன். சிவகங்கை 623 560: அகரம், 2, சிவன்கோவில் தெற்குத் தெரு, இணை வெளியீட்டாளர்கள்: இலக்கியா வெளியீடு, மானாமதுரை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1985. (சிவகங்கை 623 560: அகரம்).
84 பக்கம், விலை: இந்திய ரூபா 6.00, அளவு: 17.5x12 சமீ.

நான் சமுதாய மாற்றம் விரும்பிநிற்கும் ஒரு நாத்திகக் கவிஞன். மூடநம்பிக்கை விஷம் சமுதாயத்தில் எந்த வடிவில் பரவியிருந்தாலும், அதை அழித்து நிர்மூலமாக்குவதில் என் கவிதை துணை நிற்கும் என்ற பிரகடனத்துடன் படைப்புத்துறைக்குள் 1975களில் பிரவேசித்தவர் இவர். இலங்கையிலும் தமிழகத்திலும் உள்ள ஊடகங்களில் இவரது படைப்புக்கள் பிரசுரமாகியுள்ளன. ஈழத்தில் பிறந்து பின்னாளில் தமிழகத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்தபோதிலும், தான் வேரோடிய ஈழத்தமிழ்மண்ணை மறவாது கவிதைபாடிவரும் குறிப்பிடத்தக்க கவிஞர்களுள் அருணா சுந்தரராசனும் ஒருவர். இக்கவிதைத் தொகுப்பில் இவரது புதுக்கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

### 7459

**அவாவுறும் நிலம்.** முல்லை முஸ்ரிபா. கொழும்பு 10: வெள்ளாப்பு வெளி, 198/30 ஜும்ஆ மஸ்ஜித் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).
xii, 103 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-955-0280-00-1.

90களுக்குப் பின்னர் முஸ்லிம் தேசக் கவிதைகளை அடையாளப்படுத்தும் 50 கவிதைகளைக்கொண்ட தொகுப்பு இது. இந்நூலாசிரியரின் **இருத்தலுக்கான அழைப்பு** என்ற முன்னைய கவிதைத் தொகுதி 2003ஆம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய விருதினைப் பெற்றது. இவரது கவிதைகள் யாத்ரா, மூன்றாவது மனிதன், பூர்வீகம், ஞானம், அஸாருல் ஜசீரா, எங்கள் தேசம், மீள்பார்வை, தினகரன், வீரகேசரி, விடிவெள்ளி ஆகிய ஊடகங்களில் வெளிவந்தவை. கல்விப்புலத்தில் மொழித்துறை விரிவுரையாளராக, வளவாளராக, முதன்மை ஆசிரியராக இனம்காணப்பட்டவர் முல்லை முஸ்ரிபா. இலங்கை வானொலியின் ஒலிபரப்பாளராகவும் முகம்காட்டியுள்ளார். வடக்கு முஸ்லிம்களின் வாழ்வியல் பேசும் இவரது கவிதைகள் பெரும் சொல்லாடல்களுக்கான வாசல்களையும் திறக்கிறது. இவரது கவிதைகளில் தாகம், ஏக்கம், அதிருப்தி, துயர் மண்டிய வாழ்வு பற்றிய கோலங்கள் கவிதா இழைகளாக இருந்தாலும் வாழ்வின் மீதான ஈரக் காதலையும் நளினத்தையும் நம்பிக்கையுடன் அவர் எமக்குத் தருகிறார்.

### 7460

**ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம்.** *தீபச்செல்வன் (இயற்பெயர்: பாலேந்திரம் பிரதீபன்). சென்னை 600018: உயிர்மை பதிப்பகம், 11/29, சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 600005: மணி ஆப்செட்).*
*136 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-80072-84-5.*

*யுத்தத்தின் வடுக்களைப் பிரதிபலிக்கும் கவிதைகள் இவை. ஒரு இனத்தின் இருண்டதொரு காலகட்டத்தை கவிதைகளினூடாக வரலாற்றுப்பதிவாக்கியிருக்கிறார். யுத்த அழிவின் நேரடிச் சாட்சிகளாக நின்று அந்தப் பேரவலத்தின் வாக்குமூலங்களாக அமைகின்றன இவரது கவிதைகள். 2008ம் ஆண்டு செப்டெம்பர் முதல் 2009 மே வரையில் அன்றாட யுத்தக் கொடுமைகளையும் மக்களின் அலைமோதல்களையும்உயிருக்கு அஞ்சி ஓடியதையும் அதற்குப் பின் வந்த நாட்களின் மனிதத் துயரங்களையும் ஏமாற்றங்களையும் ஒரு நாட்குறிப்புப் போலவே இக்கவிதைத்தொகுப்பில் பதிந்திருக்கின்றார். ஈழத்தின் வன்னியில் கிளிநொச்சி நகரத்தின் இரத்தினபுரம் கிராமத்தைச் சேர்ந்த இக்கவிஞர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் பட்டதாரி.*

**7461**
**ஆதித் துயர்: கவிதைகள்.** *பஹீமா ஜஹான். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2010. (சென்னை 60005: மணி ஓப்செட்).*
*136 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89359-94-2.*

*ஈழத்தின் புதிய தலைமுறைக் கவிஞர்களில் முக்கியமானவரான பஹீமா ஜஹானின் தேர்ந்தெடுத்த கவிதைகளின் தொகுப்பு இந்நூல். இந்தக் கவிதைகள் பெண் என்ற உயிரியல் அம்சத்தில் ஊன்றி நின்று ஆணாதிக்கச் சமூகச் சூழலை எதிர்த்து மீறி மானுடப் பெருவெளியில் விரியும் வேட்கை கொண்டவை. ஒடுக்குமுறைக்கும் போர்க் கொடுமைகளுக்கும் இன அடக்குமுறைக்கும் மதக்கட்டுப்பாட்டுக்கும் எதிரானவை. சமத்துவமான அன்பையும் பாசத்தையும் காதலையும் வேண்டுபவை. இலங்கையில் குருநாகல் மாவட்டத்திலுள்ள மெல்சிரிபுரத்தைச் சேர்ந்தவர் பஹீமா ஜஹான். கணித ஆசிரியையான இவர் 90களின் நடுப்பகுதியிலிருந்து எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருகின்றார். ஒரு கடல் நீரூற்றி (2007), அபராதி (2009) ஆகிய கவிதைத் தொகுதிகளை ஏற்கெனவே வெளியிட்டவர்.*

**7462**
**ஆன்மீகக் கவிதைகள்.** *வி.கந்தவனம். சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஜுன் 2007. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).*
*100 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 30., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89708-15-3.*

*கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துக் கவிநாயகர் வி.கந்தவனம், ஆன்மீக வாழ்வின் மேன்மைகளை கவிதைகளாக்கித் தந்துள்ளார். இந்நூலில் அவ்வகையான 48 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. கடவுள் நம்பிக்கை, திருநீற்றின் பெருமை, திருமுறைகளின் மகிமை, சித்தாந்தக் கருத்துக்கள், திருக்குறள் கூறும் நெறி போன்ற பல ஆன்மீக விடயங்களை இக்கவிதைகளில் காணமுடிகின்றது.*

**7463**
**இரவுகளில் பொழியும் துயரப்பனி.** *தமிழ்நதி. சென்னை 600 024: ஆழி-பனிக்குடம் கூட்டுப் பதிப்பு, ஆழி பப்ளிஷர்ஸ், 12 முதல் பிரதான சாலை, யுனைட்டட் இந்தியா காலனி, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை: மணி ஆப்செட்).*
*104 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80244-15-0.*

*ஈழத்துப் பின்புல வாழ்வியல் அழுத்தங்களைக் கவியாக்குவதில் தனக்கான தனித்தன்மைகளைப் பேணிவருபவர் தமிழ்நதி. தன்னைத்தானே தேடிக் கண்டுபிடித்து வாழ்வுக்கான அர்த்தம் கற்பித்து வாழத் துடிக்கும் ஜீவனின் சொல்லோவியங்களாகவே இவரது கவிதைகள் அமைகின்றன. பெண்சார் அனுபவங்களின் திமிறலும் நிமிறலும் காலத்தின் முன்னோக்கிய நகர்வுக்கான சமிக்ஞைகளாகவும் இவரது படைப்பனுபவம் விரிகின்றது. இந்நூல் இவரது அண்மைக்கால கவிதைகளின் தொகுப்பு. விடுதலைக்கான போரில் உயிர்நீத்த அனைத்துப் போராளிகளுக்கும் மக்களுக்கும் இத்தொகுதியை*

சமர்ப்பணம் செய்துள்ளார். இதன்மூலம் இவரது நோக்கும் போக்கும் கவியுணர்த்தும் தாக்கமும் எவ்வாறு மையங்கொள்ளும் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். நூலின் முன்னட்டையில்- இலங்கை இராணுவத்தின் போர்க்குற்றம் தொடர்பான முக்கிய ஒளிப்பட ஆவணமொன்றின் காட்சி இடம்பெற்றுள்ளது.

**7464**

**இரு விழிப் பார்வை ஒரு துளி விஷம்.** க.கோகுலதாஸ். வவுனியா: கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, கார்த்திகை 2004. (வவுனியா: நியூ ஆதவன் அச்சகம்).
35 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 125., அளவு: 21x14.5 சமீ.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவரான கோகுலதாஸின் முதலாவது கவிதைத் தொகுப்பு பாலைவனப் பனித்துளி என்ற பெயரில் வெளிவந்தது. இது இவரது இரண்டாவது கவிதைத் தொகுதியாகும். வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் தனது 15ஆவது பிரசுரமாக இதனை வெளியிட்டுள்ளது.

**7465**

**இருள்-யாழி.** திருமாவளவன் (இயற்பெயர்: கனகசிங்கம் கருணாகரன்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2008. (சென்னை 60005: மணி ஓப்செட்).
80 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89945-44-2.

யாழ்ப்பாணம் வறுத்தலைவிளான் கிராமத்தில் 1955இல் பிறந்த கருணாகரன் பின்னாளில் திருமாவளவன் என்ற பெயரில் இலக்கிய உலகில் அறியப்பட்டவர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவரான இவர் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் கட்டிட தொழில்நுட்ப மேற்பார்வையாளராகப் பணியாற்றியவர். இரண்டாவது ஈழப்போரின்போது புலம்பெயர்ந்து கனடாவில் வசித்துவரும் இவர் அங்கு முகரம் என்ற சஞ்சிகையின் இணையாசிரியராக 1996-1997 காலப்பகுதியில் பணியாற்றியவர். பனிவயல் உழவு (2000), அஃதே இரவு அஃதே பகல் (2002) ஆகிய நூல்களைத் தொடர்ந்து வெளிவரும் திருமாவளவனின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு இது. இதிலுள்ள கவிதைகளில் பேசப்படும் ஊரும் போரும், மனிதஅழிவுகளும் வெறும் நினைவுகளாக மங்கிக்கொண்டிருக்கும் புலம்பெயர் வாழ்வின் இன்றைய யதார்த்தத்தைத் துயரம் கவிந்த மனத்துடன் பதிவுசெய்கின்றன. கவிதையமைப்பிலும் மொழி நடையிலும் அழகியல் கூறுகளிலும் வாழ்க்கை குறித்தான பார்வைக் கோணத்திலும் திருமாவளவன் தொடர்ந்து தன்னைப் புதுப்பித்துக்கொண்டு வருவதை இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் தெளிவாக உணர்த்துகின்றன.

**7466**

**இளைஞர்கள் ஏற்கவேண்டிய சபதம்: கவிதைகள்.** நிலா தமிழின்தாசன். (இயற்பெயர்: மிக்கேல் அருள்மொழிராசா). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 94: பி.வி.ஆர்.ஆப்செட்).
xii, 116 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 18x12.5 சமீ.

இக்கவிஞர் திருக்கோணமலையின் நிலாவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மட்டக்களப்பு, களுதாவளையில் வாழ்ந்துவருபவர். 1976 முதல் கவிதைத் துறையில் ஈடுபட்டுவரும் இவர் ஏற்கெனவே நாளை (1993), புலர்வு (1994) ஆகிய கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். சமூகச் சிதறல்களின் தொகுப்பாக 51 தலைப்புகளில் எழுதப்பட்ட கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கவிதை என்பது கவிஞனின் ஆத்மாவின் இராகம் என்பதை இக்கவிதைகளினூடு தெளிவாக வெளிப்படுத்துகின்றார். இந்நூலில் இயற்கை, அன்னை, காதல், கொடுமை, என விபரிக்கும் 51 கவிதைகள் இடம்பெற்று மணம்வீசுகின்றன. இளைஞர்களை நோக்கி அரிய பல கருத்துக்களை அள்ளிவீசும் இந்நூல் இவரது நான்காவது நூலாகும்.

**7467**

**இன்பத் தமிழும் இனிய நிலமும்.** பொன். தவநாயகம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 600094: பி.வி.ஆர். ஆப்செட்).
xliv, 116 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18x12.5 சமீ.

மட்டக்களப்பு மாநிலத்தின் சித்தாண்டிக் கிராமத்தில் பிறந்தவர் பொன். தவநாயகம். ஆசிரியராகத் தன் வாழ்வுப்பணியைத் தொடங்கிய இவர் பாடசாலை அதிபராகி, ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகிப் பணியாற்றும் அதே வேளையில் ஆக்க இலக்கியத்துறையிலும் நடைபயின்று தத்துவக் கவிஞர் என்ற பெயர்பெற்றவர். இந்நூலில் இவரது கவிதைகள் தவத்தின் தடங்கள், இன்பத்தமிழும் இனிய நிலமும், கிராம வாழ்வு கீர்த்திகள், ஏக்கமும் எதிர்பார்ப்பும், காதலின் கனிவுகள், உறவுகளின் உணர்வுகள், தத்துவ முத்துக்கள், பல்சுவைப் பாக்கள் (தனிப்பாடல், இணைப்பாடல்), பாடசாலைக் கீதங்கள் (காரைதீவு விபுலானந்த மத்திய மகா வித்தியாலயம்) ஆகிய தலைப்புகளில் 74 மரபுக் கவிதைகளாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**7468**
**இன்றைக்கு உயிரோடிருக்கிறேன்.** அருணா சுந்தரராசன். தஞ்சாவூர் 613007: அகரம், மனை எண் 1, நிர்மலா நகர், 1வது பதிப்பு, ஜுலை 2007. (சிவகாசி: ஹேமமாலா சிண்டிகேட்).
54 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18x12.5 சமீ.

ஈழத்தில் பிறந்து தமிழகத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்தபோதிலும், தான் வேரோடிய ஈழத்தமிழ்மண்ணை மறவாது கவிதைபாடிவரும் குறிப்பிடத்தக்க கவிஞர்களுள் அருணா சுந்தரராசனும் ஒருவர். தமிழீழத்தின் பெருமூச்சு இவரது கவிதைகளின் வழியே பதிவாகியிருக்கின்றது. ஒவ்வொரு நிமிடமும் ஈழத்தின் சாவுக்குப் பக்கத்திலிருக்கும் தமிழனின் நிலை இங்கு அருணா சுந்தரராசனின் கவிதை வரிகளில் சத்தியமாகின்றன.

**7469**
**ஈதேனின் பாம்புகள்.** றஷ்மி. நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2010. (சென்னை 60005: மணி ஓப்செட்).
88 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89359-74-4.

சமகால ஈழக் கவிதைகளின் பொது இயல்பிலிருந்து முற்றிலும் வேறுபட்ட கவிதைக்குரல் றஷ்மியினுடையது. காவுகொள்ளப்பட்ட வாழ்வைச் சொல்லும் இந்தக் கவிதைகளில் இழப்பின் ஓலத்தையும் கையறுநிலையின் புலம்பலையும் மீறி மனித இருப்புக்கான சினமும் இருப்பின்மையின் சீற்றமும் வெளிப்படுகின்றன. ஆக்கிரமிப்பால் சிதறடிக்கப்பட்ட ஓர் இனத்தின் பழிவாங்கல் றஷ்மியின் கவிதைகளில் கொடூரக் காட்சிகளாகவும் வன்முறைச் சொற்களாகவும் பதிவாகின்றன. பனி வாளால் கீறப்பட்டமென்மையான இதயத்தின் வடுக்கள் இந்தக் கவிதைகள்.

**7470**
**உடல் பச்சை வானம்.** அனார் (இஸ்ஸத் ரீஹானா முஹம்மட் அஸீம்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 60005: மணி ஓப்செட்).
62 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89945-97-8.

ஈழத்துக் கவிஞர் அனாரின் மூன்றாம் தொகுப்பு இது. முந்தைய தொகுப்புகளில் வெளியிடப்பட்ட அவருடைய கவிதை முகம் இதில் வேறு தோற்றம் கொள்கிறது. முந்தைய கவிதைகளில் பெண்ணிருப்பின் உணர்வுநிலையில் உரையாடிய கவிஞர் இத்தொகுப்பின் கவிதைகளில் பெண்ணுடல் பூண்ட இயற்கை நான் எனப் பிரகடனம் செய்கிறார். தொகுப்பின் கவிதை வரிகளுக்கிடையில் பெண் நீராகிறாள். ஊற்றாக, நதியாக, மழையாக, கடலாக மாறுகிறாள். பெண் நிலமாகிறாள். மலையாக, வயல்வெளியாக உருவங்கொள்கிறாள். பெண் காற்றாகிறாள் மூச்சாக, ஊழிப் புயலாக வடிவெடுக்கிறாள். பெண் ஒளியாகிறாள். அனலாகிறாள். இயற்கை பெண்ணுடலாகிறது. இயற்கை பெண்ணாகிறது. கிழக்கிலங்கையின் சாய்ந்தமருதுவைப் பிறப்பிடமாகக் கொண்ட அனாரின் முன்னைய நூலான ஓவியம் வரையாத தூரிகை என்ற கவிதைத்

தொகுதிக்கு 2005இல் இலங்கை அரசின் சாகித்திய விருதும், வட-கிழக்கு மாகாண அமைச்சின் சாகித்திய விருதும் கிடைத்தன.

### 7471

**எங்கும் நிறைந்த இறைவா.** த.மனோகரன். யாழ்ப்பாணம்: திருவருள் வெளியீடு, உமாபதி, கொழும்புத்துறை வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1997. (கொழும்பு 2: கலர் டொட்ஸ் நிறுவனம், 31/21 டோசன் வீதி).
55 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 40., அளவு: 17x12 சமீ.

இறைவா உன்னைத்தான் என்ற தலைப்பில் ஏற்கெனவே தனது முதலாவது கவிதைத் தொகுதியை வெளியிட்ட த.மனோகரன், இந்நூல் வழியாகத் தனது இரண்டாவது கவிதைத் தொகுதியை வழங்கியுள்ளார். முன்னைய நூல் போன்றே இந்நூலிலும் இலங்கைத் திருத்தலங்கள் பலவற்றில் அமர்ந்து அருள்புரியும் இறைவனைப் போற்றிப் புகழ்ந்துள்ள பாடல்கள் அடங்கியுள்ளன.

### 7472

**எதுவுமல்ல எதுவும்.** கருணாகரன். கிளிநொச்சி: மகிழ் வெளியீடு, 754 கனகராசா வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிறின்டேர்ஸ், காங்கேசன்துறை வீதி).
108 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x13.5 சமீ.

2006-2008 காலப்பகுதியில் எழுதப்பட்ட 56 கவிதைகளின் தொகுப்பு. இலங்கையின் வடக்கே இயக்கச்சியில் பிறந்தவர் கருணாகரன். இதுவரையில் ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல், ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள், பலியாடு ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகளை வெளியிட்டவர். இது இவரது நான்காவது கவிதைத் தொகுப்பாகும். மறுபடியும் மறுபடியும் எல்லாவற்றையும் சொல்லவும் திரும்பத்திரும்ப எல்லாவற்றையும் செய்யவும் வேண்டிய மனித விதி எல்லா அறிவியலையும் கேள்வியின் முன்னே நிறுத்துகின்றது. எதுவுமல்ல எதுவும் என்ற புரிதலை உணரும் கணம் இத்தருணமே. வேறுபாடுகள், முரண்பாடுகள் எல்லாமே அழகுதான் - பேதங்களும் ஏற்ற இறக்கங்களும் இல்லாதவரை. நினைவுகளின் சுமை எல்லாவற்றையும்விட அதிக பாரமானது. இந்தக் கவிதைகள் இப்படியே பலவற்றின் நிழலாயும் ஒளியாயும் இருக்கின்றன. சாட்சி, எதிர்ப்பு, விலகல் என்ற நிலைகளில் இயங்கிய ஒரு மனநிலையை இவை பிரதிபலிக்கின்றன.

### 7473

**76 கவிதைகள்: திருமலை மாணவர்களது கவிதைகள்.** திருக்கோணமலை மாணவர்கள் (மூலம்), தில்லைநாதன் பவித்ரன் (இதழாசிரியர்). திருக்கோணமலை: அகில இலங்கை இளங்கோ கழகம், 1வது பதிப்பு, 2010. (திருக்கோணமலை: எஸ்.எஸ்.டிஜிட்டல்ஸ், 58 வித்தியாலயம் வீதி).
52 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5சமீ.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் பயிலும் மாணவர்களிடையே கவிதா புலமையை வளர்த்தெடுக்கும் வகையில் அவர்களது கவிதைகளைப் பிரசுரிக்கும் தொடர்முயற்சியின் முதலாவது தடம் இந்நூலின் வரவுடன் எடுத்து வைக்கப்பட்டுள்ளது. இதில் 76 மாணவர்களின் கன்னிக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இப்பிரசுர முயற்சியின் பின்னணியில் துணை ஆசிரியர்களாக த.தனுஸ்கர், நா.சதீஸ்கரன், ந.சோபன், சி.சுரேந்திரன் ஆகிய நால்வரும் பணியாற்றியுள்ளனர். கவிஞர் பெரிய ஐங்கரனின் வழிகாட்டலுடன் உருவாக்கப்பட்டுள்ள இத்தொகுப்பு, திருக்கோணமலையிலுள்ள பாடசாலை மாணவர்களின் கவிதைகளை உள்ளடக்கியது. இளம் மாணவரிடையே மொழி அறிவு, மொழியுணர்வு, நாட்டுப்பற்று, கலாசாரம் என்பன பெருகவேண்டும் என்ற நோக்கத்துடன் இக்கவிதைநூல் வெளிவந்துள்ளது. மாணவர்களின் உள்ளக்கிடக்கைகளை உணர்ச்சிமிக்க சொல்லோவியங்களாக மாற்றிவழங்கியுள்ளனர். உவர்மலை விவேகானந்த வித்தியாலயம், புனித சூசையப்பர் கல்லூரி, கோணேஸ்வரா வித்தியாலயம், சண்முக இந்து மகளிர் வித்தியாலயம், புனித மரியாள் கல்லூரி, மெதடிஸ்த வித்தியாலயம், ஸாஹிராக் கல்லூரி, விக்னேஸ்வரா வித்தியாலயம், விபுலாநந்தாக் கல்லூரி, பிரான்சிஸ் சவேரியார் கல்லூரி, செல்வநாயகபுரம் இந்து வித்தியாலயம், கலைமகள் வித்தியாலயம், ஆகியவற்றைச்சேர்ந்த 76 மாணவர்களின் கவிதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

**7474**

**என் ஏதேன் தோட்டம்.** கவிதா. சென்னை 600 024: நேர்நிரை வெளியீடு, D1/15 TNHB, தெற்கு சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை).

104 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 70., நோர்வே 70 குரோணர், அளவு: 21x14 சமீ., ISBN: 978-81-903664-9-6.

புலம்பெயர் சூழலில் நோர்வேயில் உருவாகிய ஒரு ஈழத்து இளம் கவிஞராகக் கவிதா அறிமுகமாகியுள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்தின் குரும்பசிட்டியில் பிறந்து நோர்வேயில் வளர்ந்த இவ்விளம் பெண் கவிஞரின் இரண்டாவது கவிதைத் தொகுதி இது. பனிப்படலத் தாமரை முன்னதாக வெளிவந்தது. நடன ஆசிரியையாகவும் ஓவியராகவும் வளர்ந்துள்ள கவிதாவின் மொழி ஆளுமை, சிந்தனைச் செழுமை, தாய்மணபற்றின் வலி, வாழ்விட உள்வாங்கல், உலக அரசியல், அனைத்தும் கலந்த கலவையாக இக்கவிதைகள் அமைகின்றன.

**7475**

**என்ன செப்பங்கா நீ.** சோலைக்கிளி (இயற்பெயர்: உதுமாலெவ்வை முகம்மது அதீக்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (சென்னை 60005: மணி ஓப்செட்).

142 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89359-28-2.

தன்னைச் சுற்றியுள்ள, தான் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பிரபஞ்சத்தினைக் கேள்விக்குறியாக்குவதுடன் ஒவ்வொரு அம்சங்களுடனும் தொடர்பு கொள்ளும்தன்மை ஒருவகையில் முக்கியமான படிமுறைத்தன்மையாகும். இந்தத் தொடர்பும் அனுபவமும் சிறந்த கவிதைகளாகப் பிரசவிக்க சோலைக்கிளிக்கு நல்ல வாய்ப்பளிக்கின்றது. வீட்டில் பல்லிகளையும், ஆட்டுக்குட்டியையும், நிலவையும், வெள்ளிகளையும், நீரையும், சூரியனின் நாக்கையும் தொடர்பு படுத்தவும் இந்தப் பிரபஞ்சத்தின் இதயத்தையும் ஒன்றிரண்டு தரம் தொட்டுப்பார்க்கவும் அவரால் முடிகின்றது. கிழக்கு மாகாணத்தின் கல்முனையைப் பிறப்பிடமாகக்கொண்ட சோலைக்கிளி எண்பதுகளில் எழுதத் தொடங்கியவர். இருப்பு சஞ்சிகையின் ஆசிரியர்களுள் ஒருவர். சிறந்த கவிதைத் தொகுதிக்கான இலங்கை அரசின் சாகித்திய விருதினை 1996இல் பாம்பு நரம்பு மனிதன் தொகுதிக்காகவும், 1997இல் பனியில் மொழி எழுதி தொகுதிக்காகவும் பெற்றவர். 1991இல் இவரது காகம் கலைத்த கனவு சுதந்திர இலக்கிய விழாவில் சிறந்த தொகுதிக்கான விருதினைப் பெற்றது. 1988இல் இலங்கை வடக்கு கிழக்கு மாகாண சபையின் சாகித்திய விருதை எட்டாவது நரகம் தொகுதிக்காகப் பெற்றவர். 2005இல் ஜப்பான் அரசின் கலாசார வுங்கா விருதையும் பெற்றுள்ளார். இது சோலைக்கிளியின் ஏழாவது கவிதைத் தொகுதி.

**7476**

**எனக்குக் கவிதை முகம்.** அனார் (இஸ்ஸத் ரீஹானா முஹம்மட் அஸீம்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (சென்னை 60005: மணி ஓப்செட்).

56 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89945-10-7.

ஈழத்தமிழின் நவீன கவிதைக்குப் புதிய முகங்களைத் தருபவராக இருக்கிறார் அனார். அவருடைய கவிதைகளைத் திருப்பித் திருப்பிப் படிக்கின்றபோது, வேட்கையும் காதலும் மேலெழுகின்றன. தனிமையும் காத்திருப்பும் எரித்தாலும் ஊடல் சுடர்விடுகின்றது. பதற்றமும் பீதியும் சூழ்கின்றன. திசைகள் குழம்பித் தத்தளிக்கின்றன. உள்ளடங்கி இருந்தாலும் அனாருடைய கவிதைகள் தீட்டும் அரசியல் சித்திரம் மிகவும் முக்கியமானது. அனாரின் 31 கவிதைகளின் தொகுப்பு இதுவாகும். மனித வாழ்வின் நெளிவு சுழிவுகளை மண்புழுவின் மொழியில் கிளறிக் கிளறி வாழ்வின் ருசியைத் தேடி அலைய வைக்கின்றன இக்கவிதைகள். இது அனாரின் கவிதை நடையின் வெற்றியாகும். கிழக்கிலங்கையின் சாய்ந்தமருதுவைப் பிறப்பிடமாகக் கொண்ட அனாரின் முன்னைய நூலான ஓவியம் வரையாத தூரிகை என்ற கவிதைத் தொகுதிக்கு 2005இல் இலங்கை அரசின் சாகித்திய விருதும், வட-கிழக்கு மாகாண அமைச்சின் சாகித்திய விருதும் கிடைத்தன.

7477

***எனது நிலத்தின் பயங்கரம்.*** *எம்.நவாஸ் சௌபி. நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, நவம்பர் 2008. (சென்னை 60005: மணி ஓப்செட்).*

*64 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-81-89945-57-2.*

*சமீப காலமாகக் கிழக்கிலங்கைப் பகுதியிலிருந்து வெளிப்படும் வித்தியாசமான கவிதைக் குரல்களில் ஒன்று இவருடையது. ஈழத்தின் இன்றைய பயங்கரச் சூழலையும், கவிதைபோலும் வசீகரமான காதலின் புதிர் நிலைகளையும் பிரிவின் துயரக் கணங்களையும் ஆரவாரமில்லாத-தனித்துவமான மொழியில் உணர்த்தும் கவிதைகள் இவை. கிழக்கிலங்கையில் சாய்ந்தமருது- இறக்காமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் நவாஸ் சௌபி. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக நிர்வாகமாணிப் பட்டம் பெற்றவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டப்படிப்பைத் தொடர்ந்தவர். ஆசிரியராகவும் பணியாற்றுகின்றார்.*

7478

***∴ (ஆய்த எழுத்து).*** *நெடுந்தீவு முகிலன். (இயற்பெயர்: வி.முகிலன்). நெடுந்தீவு 13: வி.முகிலன், 1வது பதிப்பு, மார்ச் 2009. (அச்சிட்ட இடம் தரப்படவில்லை: ஜெயா அச்சகம்).*

*(10), 100 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250.,அளவு: 19x14 சமீ.*

*தவழும் பருவம் முதல் புள்ளி. பள்ளிப்பருவம் இரண்டாவது புள்ளி. வாலிபப் பருவம் கடைசிப் புள்ளி. மூன்று புள்ளிகளின் கூட்டுத்தொகையே அகேனம் என்னும் ஆய்த எழுத்து. தவழும் பருவத்தில் பொங்கல் பானை வைத்த அடுப்பின் மூன்று முனைகளிலும், பள்ளிப் பருவத்தில் பார்த்த தமிழ்ப் பாடப்புத்தகத்திலும், வாலிபப்பருவத்தில் ஒரு பெண்ணின் இருவிழிகளினதும் நெற்றிப் பொட்டினதும் கூட்டுச் சேர்க்கையிலும் தான் கண்ட ∴ ஆய்த எழுத்தின் வடிவத்தை அடிப்படையாகவைத்து இந்த ஹைக்கூ காதல் கவிதைகளைப் படைத்திருக்கிறார். தமிழுக்குத் தான் ஆய்த எழுத்து. தனக்கோ ஆனந்த எழுத்து என்கிறார் இவ்விளம் கவிஞன் முகிலன்.*

7479

***கடவுள் படைக்காத மனிதர்கள்.*** *புசல்லாவை கணபதி. (இயற்பெயர் தே.கணபதி). கொழும்பு 6: மலையகம் வெளியீட்டகம், 57 மஹிந்த பிளேஸ், 1வது பதிப்பு, ஜுன் 2010. (கொட்டகலை: அம்பாள் அச்சகம், 273/5, பதிவாளர் காரியாலய வீதி).*

viii, *72 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 196., அளவு: 22x15 சமீ.,* ISBN: *978-955-9084-24-2.*

*கலைத்துவம் மிக்க தமது கவிதாவரிகளின் மூலம் சமூகத்தில் கடவுள் படைக்காத மனிதர்களைத் தேடுகின்றார் மலையக இளம் கவிஞர் புசல்லாவ கணபதி. இவரது கவிதைகள் சமூகத்தைக் கேள்விக்குறியாகத் தட்டிக் கேட்கின்றது. சமூக அவலங்களையும் பிரச்சினைகளையும் இனம்கண்டு வெளிப்படுத்தும் இவரது கவிதைகள் ஒரு சமூகமாற்றத்திற்கு அடித்தளமாக அமைகின்றன. அதனைத் தட்டிக் கேட்பதிலும், தன்னைச் சூழவுள்ள சமூகத்தின் பார்வையில் மாற்றத்தைத் தேடுவதிலும் துடிப்புமிக்க இளையதலைமுறையின் பிரதிநிதியாக இவர் தன் கவிதைகளினூடு தோற்றம் பெறுகின்றார். கொட்டகலையின் அரசினர் ஆசிரியர் கலாசாலையின் ஆசிரிய மாணவர் இவர்.*

7480

***கடவுளைக் கொன்றுவிடு.*** *அருணா சுந்தரராசன். தஞ்சாவூர் 613007: அகரம், மனை எண் 1, நிர்மலா நகர், 1வது பதிப்பு, ஜுன் 2007. (சிவகாசி: மீரா பைன் ஆர்ட்ஸ்).*

*72 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x14 சமீ.*

*ஈழத்தில் பிறந்து தமிழகத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்தபோதிலும், தான் வேரோடிய ஈழத்தமிழ்மண்ணை மறவாது கவிதைபாடிவரும் குறிப்பிடத்தக்க கவிஞர்களுள் அருணா சுந்தரராசனும் ஒருவர். **கடவுளைக் கொன்றுவிடு** இவரது மூன்றாவது கவிதைத் தொகுப்பு. மூடநம்பிக்கை என்னும் விஷம் சமுதாயத்தில் எந்த வடிவில் பரவியிருந்தாலும் அதனை அழித்து நிர்மூலமாக்குவதில் தனது கவிதைகள் துணைநிற்கும் என்ற பிரகடனத்தோடு எழுத்துத்துறையில் நுழைந்த இவரது கவிதைகளும் இவரது நோக்கத்தை அடைய ஆயுதமாகியிருக்கின்றன. சமூகத்துக்கு அறிவுறுத்தும் வகையில் அமைந்துள்ள இவரது கவிதைகளில் சிந்தனை ஆழமும் புரட்சி வேகமும்*

கவிந்து காணப்படுகின்றன. தமிழீழ மக்களிடமும் போராளிகளிடமும் இவர் அன்பும் போற்றுதல் உணர்வும் கொண்டு பல கவிதைகளை இயற்றியுள்ளார். அவற்றில் இவரது உள்ளத்து உணர்ச்சிகள் நெருப்பாகக் கனலுகின்றன.

### 7481

**கண்ணீர் வரைந்த கோடுகள்.** கஹட்டோவிட்ட நிஹாஸா நிஸார். குருநாகல்: வேகம் பதிப்பகம், கடுபொத்த வீதி, பஹமுன, 1வது பதிப்பு, 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை)
62 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 120., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-53225-0-8.

தொழில்ரீதியாக குடும்பத்தினருடன் கட்டாரில் வாழும் நிஹாஸா, கம்பஹா மாவட்டத்தில் உள்ள கஹட்டோவிட்ட என்ற கிராமத்தில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை மாவனல்ல ஸாஹிராக் கல்லூரியிலும், கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயத்திலும் கற்றுத் தேர்ந்தவர். தேசிய ரீதியில் தமிழ்த்தினப் போட்டிகளில் பரிசில்களை வென்றவர். இவரது முதலாவது நூலாக இக்கவிதைத் தொகுதி 24 கவிதைகளுடன் வெளிவருகின்றது. பெண்ணின் சுதந்திர வாழ்வுக்கான ஆசைகள், எதிர்பார்ப்புகளைச் சுட்டி நிற்கும் கவிதைகள் பெரும்பான்மையானவை. இயற்கை, தொழிலாளர் ஒற்றுமை, வெளிநாட்டு வேலைவாய்ப்பில் உள்ள சிக்கல்கள், அரசியல் உரிமைகள், தாயகச் சமாதானம், தாய்மை எனப் பல விடயங்களையும் எஞ்சியவை தொட்டுச் செல்கின்றன.

### 7482

**கதிரைமலைப் பள்ளு.** வ.குமாரசுவாமி (பரிசோதித்தவர்). தமிழ்நாடு: திருமயிலை சே.வெ.ஜம்புலிங்கம்பிள்ளை, சென்னை, 1வது பதிப்பு, 1935. (சென்னை: புரோகிரெசிவ் அச்சுக்கூடம்).
210 பக்கம், விலை: சதம் 75., அளவு: 17.5x13 சமீ.

**கதிரைமலைப் பள்ளு.** வ.குமாரசுவாமி (பரிசோதித்தவர்). கொழும்பு 7: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல. 98, வோட் பிளேஸ், 2வது பதிப்பு, மார்கழி 1996, 1வது பதிப்பு, 1935. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
(14), 326 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 17.5x14 சமீ.

18ம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் புலவர் இருநூற்றாண்டு நிறைவு ஞாபகார்த்த பிரசுரமாக இந்நூல் வெளிவந்தது. கதிர்காம ஷேத்திரத்துக் கல்யாண மடஸ்தாபகரான முத்துலிங்க சுவாமிகளின் ஆதரவில் இயற்றப்பட்ட பழைய பள்ளுப் பிரபந்தம் இதுவாகும். கதிரையப்பர் பள்ளு எனவும், கதிரமலைப் பள்ளு எனவும் வழங்கும் இந்நூல் கதிர்காம வேலவர் மீது பாடப்பட்ட பள்ளு, அல்லது உழத்தியர் பாட்டு என்னும் பிரபந்த வகைகளுள் ஒன்றாகும். கதிரைமலைப்பள்ளில் பள்ளனும் (மாவலிகங்கைப் பள்ளன்), அவனது முதல் மனைவியான மூத்த பள்ளியும் (மாவலிகங்கைப் பள்ளி) இலங்கை நாட்டினராகவும், பள்ளனது இரண்டாம் மனைவியான இளையபள்ளி (பகீரதா கங்கைப் பள்ளி) இந்தியாவைச் சேர்ந்தவளாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். விநாயகரைக் குலதெய்வமாகக் கொண்டு அவர்க்கு வழிவழியடிமை பூண்டொழுகும் இளையபள்ளியால் விநாயக பிரபாவமும், கதிர்காம வேலரைக் குலதெய்வமாகக் கொண்டு அவர்க்கு வழிவழி யடிமை பூண்டொழுகும் மூத்த பள்ளியால் சுப்பிரமணிய பரபாவமும் கூறப்படுகின்றன. நூலின் அணிகலனாக அரும்பதவுரையும் அருந்தொடர் விளக்கமும், கதிர்காம ஷேத்திர புராண இதிகாச சரித்திர ஐதீக வரலாறுகளும், திருக்கேதீச்சரம், திருக்கோணமலை தல வரலாறுகளும் இடம்பெறுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17939).

### 7483

**கரவைக் கோவை.** சி.வேலாயுதம். ஜேர்மனி: தமிழர் கலை கலாச்சார மன்றம், பேர்லின், 1வது பதிப்பு, ஜனவரி 2000. (சென்னை 600026: ஆண்டவன் ஒப்செட், 29/1 ஆண்டவன் கோவில் வீதி, வடபழநி).
85 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமராட்சிப் பகுதியில் உள்ள கரவெட்டிப் பிரதேசத்தின் பெருமையையும் சிறப்பையும் கூறும் நூல். கரவை மக்களின் சிறப்பு, கரவையில் அமைந்துள்ள

கோயில்களின், பாடசாலைகளின் பெருமைகள் என்பன இந்நூலில் கவித்துவமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கரவை மக்களின் வழமைகள், பழமைகள், பாரம்பரியம், பண்பாடு, தெய்வ வழிபாடு, பொழுதுபோக்கு எனப்பலவும் இக்கவிதைகளில் பொதிந்து காணப்படுகின்றன. ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் நூலாசிரியர், ஹம்பர்க் நகரில் வசிக்கின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23238).

### 7484

**கருத்துக் கலசம்.** சூசை எட்வேட். திருக்கோணமலை: அகில இலங்கை இளங்கோ கழகம், 1வது பதிப்பு, 2010. (திருக்கோணமலை: எஸ்.எஸ்.டிஜிட்டல்ஸ், 58 வித்தியாலயம் வீதி).
ix, 103 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-955-50038-3-4.

பெரும் சான்றோர்களின் கருத்துக்களை உள்வாங்கி அவற்றை 1030 இருவரிக் குறள்களாகத் தந்திருக்கிறார். சில இடங்களில் கவிதைகளின் சாயலும், சில இடங்களில் வசன நடையும், மேலும் சில இடங்களில் இரண்டும் சேர்ந்தும் இவரது கருத்துக்கலசம் அமைகின்றது. நீங்களும் எழுதலாம் கவிதை இதழில் தெருக்குரல் என்ற தலைப்பில் இவை வெளிவந்தன. பின்னர் மல்லிகை, ஜீவநதி இதழ்களிலும் அவ்வப்போது சில குறள்கள் வெளிவந்துள்ளன. இவை அனைத்தினதும் தொகுப்பாகவே இந்நூல் அமைகின்றது. நூலின் கருத்துக்களில் துலக்கமாகத் தெரிபவை ஆன்மீகம், அரசியல், குடும்பம், காதல், கல்வி, வறுமை, மென்மை, சுகாதாரம், விடுதலை வேட்கை என்பனவாகும். இவை பெரும்பாலும் நமது முன்னோரின் பொன்மொழிகள், முதுமொழிகளிலிருந்து பெறப்பட்டவை.

### 7485

**கருவறையிலிருந்து கல்லறைக்கு.** கலைவாதி கலீல். மன்னார்: மன்னார் வாசகர் வட்டம், 1வது பதிப்பு, டிசம்பர் 1983. (மன்னார்: மன்னார் அச்சியந்திரசாலை).
55 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18x12.5 சமீ.

கவிதை எழுதிக்கொண்டே இருக்கவேண்டும் என்ற மன உறுத்தலினதும், சதா அரித்துக்கொண்டிருக்கும் சமூக அவலங்களினதும் பிணைப்பே இக்கவிதைகளின் பிறப்புக்குக் காரணம் என்று கூறும் கலைவாதி கலீல் எழுதிய சுவையான புதுக்கவிதைகளின் தொகுப்பு இதுவாகும்.

### 7486

**கவிதைப் பூம்பொழில்.** க.வேந்தனார். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 2வது பதிப்பு, ஜனவரி 2010, 1வது பதிப்பு, 1964. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை).
248 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 978-81-89748-85-2.

வித்துவான் வேந்தனார் 1964இல் யாழ்ப்பாணத்தில் 178 பக்கங்களில் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையின்மூலம் அச்சிட்டு வெளியிட்ட நூலின் திருத்திய 2வது பதிப்பு இது. 32 ஆண்டுகளாகத் தமிழாசிரியராகப் பணியாற்றியவர் இவர். 1940களில் எழுத்துலகில் இறங்கியவர். கவிஞர், குழந்தைக் கவிஞர், கட்டுரையாசிரியர், உரையாசிரியர் எனப் பல நிலைகளிலும் தனித்துவம் பெற்றவர். முதற்பதிப்பு கிடைத்தற்கரியதான இந்நிலையில் வெளிவரும் இப்பதிப்பில், முதற்பதிப்பில் இடம்பெறாத கவிதைகளுடன் வேறும் பல கவிதைகளையும் தேடி இணைத்துள்ளனர். தெய்வம், தமிழ், சான்றோர், குழந்தை மொழி, நாடு, வாழ்வு, காவியம் முதலான தலைப்புகளில் இக்கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. வித்துவான் வேந்தனாரின் இலக்கிய வாழ்வின் பின்புலத்தை ஆய்வுக்குட்படுத்துவோருக்கு முழுமையான தரிசனத்தை வழங்கத்தக்க சில பின்னிணைப்புகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

### 7487

**கவிமணிகள்.** திலீபன் திருச்செல்வம். நோர்வே: திலீபன் திருச்செல்வம், Ammerudhellingg-72, Leil 653, 0959 Oslo -9, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (சென்னை 600 026: குமரன் பப்பிளிஷர்ஸ், 3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7வது தெரு, வட பழநி).
128 பக்கம், விலை: இந்திய ரூபாய் 40., அளவு: 17.5x12 சமீ., ISBN: 82-91866-07-4.

இக்கவிதைத் தொகுப்பை கவிநெறி தவறாது கற்பனை, யதார்த்தம், அனுபவங்களை அணிகளாக்கி மணிமணியாகக் கோர்த்து கவிக் கதம்பமாகக் கட்டியிருக்கிறார் இப் புலம்பெயர்ந்த கவிஞர். உண்மை பலவிடங்களில் பகைகளால் பாதிக்கப்படுகிறது. இருப்பினும் உண்மைக்கு எதற்கு ஒளிவு மறைவு என்று கேட்கும் இவரது கவிதைகளில், உண்மையை ஒளிக்கவோ ஒதுக்கவோ கூடாது- சொல் என்ற ஒன்று இருந்தால் அது சொல்வதற்காகவே என்ற உத்வேகம் தெரிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 559231).

### 7488

**கறுப்பு மழை.** பெரிய ஐங்கரன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 291/6, 5/3 A, எட்வேர்ட் அவென்யூ, 1வது பதிப்பு, ஏப்ரல் 2011. (கொழும்பு 6: R.S.T.Enterprises).
56 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 19.5x13 சமீ.

திருக்கோணமலை மாவட்டத்தின் உவர்மலையைச் சேர்ந்தவர் பெரிய ஐங்கரன். தனது தந்தையார் பொன்னையா பெரியதம்பியின் மறைவையொட்டி 31ம் நாள் நினைவாக இக்கவிதைநூலை வெளியிட்டுள்ளார். மழைக்காலத்தில் இக்கவிஞர் எழுதிய கவிதைகளின் தொகுப்பாக இவை இருப்பதால் எல்லா வரிகளிலும் மழையின் ஈரமும் வெள்ளத்தின் ஓட்டமும் குளிரின் கடுமையும் இருக்கின்றன. ஆனால் அதே வரிகளில் யாழ்ப்பாண நூலக எரிப்பின் சாம்பலும், ஈழப்போரின் காயங்களில் வழிந்த குருதியும், பதுங்குகுழியில் பதுங்கியிருக்கும் பாம்பின் நிழலும், 2004 ஆழிப்பேரலையால் அடித்துச் செல்லப்பட்ட உடலங்களின் ஓலங்களும், உயிரோடு புதைக்கப்பட்ட மங்கையரின் இறுதிப் பெருமூச்சும், போரில் அள்ளுண்டு போன சிறார்களின் எதிர்காலம் பற்றிய கேள்வியும் நீக்கமற நிறைந்திருப்பதையும் காணமுடிகின்றது. மீரா பதிப்பகத்தினரின் 95ஆவது பிரசுரமாக இது வெளிவந்துள்ளது.

### 7489

**காகிதப் பூவில் தேன் துளிகள்.** நந்தவனம் சந்திரசேகரன். திருச்சிராப்பள்ளி 620003: இனிய நந்தவனம் பதிப்பகம், எண் 5, புதுத் தெரு, உறையூர், 1வது பதிப்பு, நவம்பர் 2007. (திருச்சி 8: சித்ரா ஆப்செட் பிரிண்டர்ஸ், அல்லிமால் தெரு).
96 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 20.5x14 சமீ.

சமுதாய நோக்கில் படைக்கப்பட்ட இவரது கவிதைகள் -தன்னை உணர்ந்து, விழித்தெழுந்து, புதுவாழ்வு காண உழைக்குமாறு இளைஞருக்கு நம்பிக்கையூட்டுவதாக அமைகின்றன. வவுனியா கோவில் புதுக்குளத்தைச் சேர்ந்த சந்திரசேகர், தமிழகத்துக்குப் புலம்பெயர்ந்து சென்று அங்கு ஜனவரி 1997 முதல் **இனிய நந்தவனம்** என்ற சிற்றிலக்கிய சஞ்சிகையை மாதாந்தம் நடத்திவருகின்றார். இவர் உலகத் தமிழ்ச் சிற்றிதழ்ச் சங்கத்தின் பொருளாளராகவும், மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளையின் செயலாளராகவும், திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கத்தின் துணைச் செயலாளராகவும் பணியாற்றிவருகின்றார்.

### 7490

**காரணமாலை.** சேகுத் தம்பிப் புலவர். கொழும்பு 10: றிசானா பப்ளிஷர்ஸ், 20/14, சைமண்ட்ஸ் வீதி, 2வது பதிப்பு, 1999, 1வது பதிப்பு, 1878. (கொழும்பு 10: றிசானா பப்ளிஷர்ஸ்).
xii, (16), 184 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ, ISBN: 955-8138-06-1.

நபிகள் நாயகத்தின் இளமைக்கால வரலாற்றினைக் குறிக்கும் கவிதைமாலை இது. நபிநாயகம் பூர்வீகத்திலுண்டான சிறப்பு முதல், திருமக்கநாட்டுச் சிறப்பு, நபிநாயகமவதாரச் சிறப்பு, என்று வளர்ந்து நபிநாயகம் நபிப்பட்டம் பெற்ற சிறப்பு, நபிநாயகம் அரசியற்றிய சிறப்பு, மன்றாட்டம், துவாக் கேட்குதல், வாழிச் சிறப்பு என்பன ஈறாக மொத்தம் 30 தலைப்புகளில் இக்கவிதைகள்

*இயற்றப்பட்டு ஒரு வாழ்க்கை வரலாற்றுக் காவியமாக மிளிர்கின்றது. மூலநூல் யாழ்ப்பாணம் சாமுனாலெப்பையவர்கள் குமாரர் சேகுத்தம்பிப் புலவரால் இயற்றப்பட்டது. தஞ்சாவூர் ஹக்கீம் நக்கர் சாஹிபுவின் குமாரர் நேகப்துல் காதிறு சாஹிபு அவர்களின் பொருளுதவியால் காயற்பட்டணம் கண்ணகுமது மகுதூம்பிள்ளையின் குமாரர் மகுதூமுகம்மதுப் புலவரவர்களால் பார்வையிட்டுப் பிழையறத் திருத்தப்பட்டு சென்னப்பட்டணம் கொ.மாணிக்க முதலியார் அவர்களின் மனோன்மணி விலாச அச்சுக்கூடத்தில் ஜுன் 1878 இல் அச்சிடப்பட்டது. இது மூலநூலின் இரண்டாவது பதிப்பாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 570261).*

### 7491

**காலமில்லாக் காலம்.** *நபீல் (இயற்பெயர்: றிஸ்வியூ முஹம்மத் நபீல்). சென்னை 600018: உயிர்மை பதிப்பகம், 11/29, சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 600005: மணி ஆப்செட்).*

*104 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80072-85-2.*

*நபீல் இலங்கையின் தென்கிழக்கில் கல்முனையில் 1967இல் பிறந்தவர். கொழும்புப் பல்கலைக் கழகத்தில் இதழியல் கற்கைநெறியில் டிப்ளோமா பட்டம் பெற்றவர். கொழும்பு துறைமுகத்தில் பணிபுரிந்துவரும் இவர் சுதந்திர இலக்கிய விழா, விபவி படைப்பிலக்கியம், உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு என்பவற்றில் விருதுகளும் பாராட்டுகளும் பெற்றவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பகுதிநேர அறிவிப்பாளராகவும் பணியாற்றிவரும் நபீல் எழுதிய கவிதைத் தொகுதி இது.*

### 7492

**குரல் வழிக் கவிதைகள்.** *அல் அஸுமத். மாபோல: ஆசிரியர் வெளியீடு, 43/10 D, சிங்க வீதி, கெரங்கபொக்குண, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (கொழும்பு 14: Talent Graphics, 83 B, பாபாபிள்ளை பிளேஸ்).*

*x, 210 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-52134-0-0.*

*பொது மேடைகள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினித் தொலைக்காட்சி ஆகியவற்றில் இடம்பெற்ற 66 கவிதைகளின் தொகுப்பு இதுவாகும். 1972இல் முதன்முதலில் பாரதிதாசன் விழாவில் தனது கன்னிக் கவிதையை மேடையேற்றியவர் அல் அஸுமத். அன்றுமுதல் தனித்துவம்பெற்ற பல கவிதைகளைப் படைத்து வந்துள்ளார். மரபுக் கவிஞர் அல் அஸுமத் கடந்த காலங்களில் தான் எழுதிய கவிதைகளைத் தொகுத்து இந்நூலை உருவாக்கியுள்ளார். மரபுக் கவிதைகளை வழுவின்றியும் அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய இலகு தமிழ்ச் சொற்களைக் கொண்டும் எழுதுவதில் அல் அஸுமத் திறமை மிக்கவர்.*

### 7493

**சருகுகள்.** *ஈழபாரதி. (இயற்பெயர்: எ.நிக்சன்). தமிழ்நாடு: பூபாளம் வெளியீடு, முத்துவீரகண்டியன்பட்டி, ஆவாரம்பட்டி அஞ்சல், தஞ்சாவூர் 613602, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*85 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 21x14 சமீ.*

*இலங்கையில் நெடுந்தீவைச்சேர்ந்தவர் ஈழபாரதி. தற்போது தமிழகத்தில் புலம்பெயர்ந்து வாழ்கிறார். புதுக்கோட்டை தனியார் தொழிற்கல்வி நிலையமொன்றில் ஆசிரியராகப் பணியாற்றும் இவர் எழுதி, தமிழகத்தின் சிற்றிதழ்களான மாணவர் விடியல், ஈழசுதந்திரன், ஊற்று, பூபாளம், இனிய நந்தவனம், ஏழைதாசன் ஆகியவற்றில் பிரசுரமான கவிதைகளின் தொகுப்பு இந்நூலாகும்.*

### 7494

**சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்.** சண்முகம் சிவலிங்கம். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, இணைந்து வெளியிடுவோர்: லண்டன்: தமிழியல், 1வது பதிப்பு, ஜுலை 2010. (சென்னை 60005: மணி ஓப்செட்).
232 பக்கம், விலை: இந்திய ரூபா 175., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-81-89359-97-3.

பிற நல்ல கவிஞர்களினதையும் போன்றே சண்முகம் சிவலிங்கத்தினது கவிதையும் அவரது முகமாக இருக்கின்றது. அது அவரிலிருந்து பிரிக்கமுடியாத ஒன்றாக அமைகின்றது. அவரது மன அமைப்பின் வெவ்வேறு பரிமாணங்களை அவரது கவிதைகள் மூலம் நாம் காண்கின்றோம். அவரது சமூக அரசியல் கவிதைகள் அவரின் ஒரு பக்கத்தைக் காட்டுகின்றன என்றால், அவரது தன்னிலைக் கவிதைகள் அவரின் வேறொரு பக்கத்தைக் காட்டுகின்றன. அவரது கவிதைகளில் கணிசமானவை அவரைப்பற்றிய கவிதைகள்தான். சண்முகம் சிவலிங்கம் (1939) கிழக்கிலங்கையில் கல்முனை நகருக்கு அருகில் பாண்டிருப்பு கிராமத்தில் பிறந்தவர். 1960 முதல் எழுதிவருபவர். நீர்வளையங்கள் (1988) இவரது முதலாவது கவிதைத் தொகுதி.

### 7495

**சிறகு முளைத்த தீயாக...**மட்டுவில் ஞானக்குமாரன். தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 64, 2வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, 2010. (தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 64).
xx, 124 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 21x13 சமீ., ISBN: 978-955-8741-45-0.

முகம் அறியா வீரர்களுக்காக (2000), வசந்தம் வரும் வாசல் (2002) ஆகிய கவிதைத் தொகுதிகளைத் தொடர்ந்து வரும் கவிஞர் மட்டுவில் ஞானக்குமாரனின் மூன்றாவது கவிதைத் தொகுதி இதுவாகும். போர்க்கால அனுபவங்கள் இவரது கவிதைகளுள் பதிவாகியுள்ளன. போர், வன்முறை என்பவற்றைத்தாண்டி நெஞ்சில் சுரக்கும் மென்மையான காதல் அனுபவங்கள் பற்றியும் சில கவிதைகள் பேசுகின்றன. குறுகிய மதவாத, இனவாதப் பூசல்களைத் தாண்டிச்செல்லும் மனப்பக்குவம் கொண்ட இவரது கவிதைகளில் மனிதநேய உணர்வுகள் ஓங்கி ஒலிக்கின்றன. மு.மேத்தா, பா.விஜய், கா.சிவத்தம்பி, எம்.ஏ.நு்.மான் ஆகியோரின் முன்னுரைகளுடன் கூடிய கவிதைத் தொகுதி இது.

### 7496

**சின்னதாய் ஓர் ஊடல்: கவிதைகள்.** ஜா.ரமீஸ். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600094: பிவிஆர் ஆப்செட்).
vi, 62 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 17.5x12 சமீ.

மலடு, தற்கொலை, முதிர்கன்னியின் முகமூடி, ஞானம் வேண்டாமா, கல்லூரி மாலை உதிர்கிறது, அந்த மூன்று நாட்கள், நான் விதவையா விளங்காதவளா? ஒரு பூ வாடுகிறது, எமனா பிரம்மனா? உயிர்மூச்சு உடைகின்றது, வெள்ளை வானவில், தாய்மை, எனக்குள்ளேயே நான், என்னால் முடியலாம், பிரிவு, நிலவு தேய்ந்தது, ஊமையின் பாஷை, சின்னதாய் ஒரு ஊடல், வழமைகள் இங்கே வாழாவெட்டிகள், போதும் கொல்லாதடி, முதல் இரவு, வேர் அறுக்கிறாள் சொப்பன சுந்தரி, நினைவில் மறையும் தாயகம், ஆசை இரவு, என் குருட்டு உலகம் ஆகிய 25 தலைப்புகளில் இவரது கவிதைகள் இங்கு பதிவுபெறுகின்றன. சமூக அவலங்களும், வேதனைகளும், ஆதங்கங்களும் இவரது கவிதைக் கருக்களாகின்றன.

### 7497

**சுடுகின்ற மலர்கள்: குறும்பா கவிதைகள்.** ஒலுவில் எஸ்.ஜமால்தீன். ஒலுவில்: அட்டாளைச்சேனை பிரதேச கலை இலக்கியப் பேரவை, 123 ஏ, அல் அஸ்ஹர் வித்தியாலய வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (அக்கரைப்பற்று: செலக்ஷன் அச்சகம்).
72 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ., ISBN: 955-8654-00-0.

கவிஞர் ஜமால்தீனின் ஆரம்பக்காலக் குறுங்கவிதைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன.

இக்கவிதைத் தொகுதிக்கான மதிப்புரைகளை மணிப்புலவர் மருதூர் ஏ.எல்.எம்.மஜீத், எம்.எச்.எம். சம்ஸ் ஆகியோர் வழங்கியுள்ளனர்.

### 7498

**செந்தமிழ்க் கருவூலம்.** தொகுப்பாசிரியர் விபரமில்லை. யாழ்ப்பாணம்: New Era Literary Reader, 2வது பதிப்பு, 1939, 1வது பதிப்பு, 1937. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).
99 பக்கம், விலை: 35 சதம், அளவு: 18x12 சமீ.

Treasures of Tamil Literature என்ற ஆங்கில உபதலைப்புடன் வெளியாகியுள்ள இந்நூல் பல்வகைச் சுவையினையும் அளிக்கும் தமிழ்ச் செய்யுள்களைக் கொண்டுள்ளது. பல்வேறு இலக்கியங்களிலுமிருந்து தொகுக்கப்பட்ட இந்நூல் ஆறாம், ஏழாம் வகுப்புகளிலும், ஜே.எஸ்.சி., எஸ்.எஸ்.சி, மற்றிக்குலேஷன் வகுப்புகளிலும் பயிலும் மாணவர்களைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. கல்வி (குமரகுருபர சுவாமிகள்), நாண்மலர் கொய்தல் (சிவப்பிரகாச சுவாமிகள்), நிடதர்கோன் சரிதம் -1 (புகழேந்திப் புலவர், அதிவீரராம பாண்டியர்), கம்பராமாயணக் கருப்பொருள், சந்திரமதி புலம்பல் (நெல்லூர் வீரகவிராயர்), மண்டோதரி புலம்பல் (கம்பர்), திண்ணனார் கன்னிவேட்டம் (சிவப்பிரகாச சுவாமிகள்), நிடதர்கோன் சரிதம் -11 (அதிவீரராம பாண்டியர்), ஏதேன் பொதும்பர் (யாழ்ப்பாணம் கனகசபைப் புலவர்), நிடதர்கோன் சரிதம் -111, பருவகால வருணனை (கருணைப்பிரகாச சுவாமிகள்), கலைநாள் நிகழ்ச்சி (வல்லூர்-தேவராசபிள்ளை) ஆகிய நூல்களிலிருந்து தேர்ந்த செய்யுள்கள் இதில் உரையுடன் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37472).

### 7499

**செந்தமிழ்ச் செல்வம் :மூலமும் உரையும்.** சோ.இளமுருகனார். யாழ்ப்பாணம்: தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், 1வது பதிப்பு, 1957. (யாழ்ப்பாணம்: ச.குமாரசாமி, ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
(10), 68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12 சமீ.

பாயிரம், தமிழரும் இலங்கையும், தமிழ்த்தாயின் கலைச் செல்வம், தமிழ்த்தாயின் தெய்வத்தன்மை, தமிழ்த்தாய் இலங்கையிற் பண்டுதொட்டுத் தனிச்செங்கோல் செலுத்தினாள், தமிழ்ச் சாதியின் தனிப்பெருமை, தமிழ்த்தாயை அரசுகட்டிலேற்றுக ஆகிய ஏழு தலைப்புகளில் 91 செய்யுள்களை உள்ளடக்கியதாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. எஸ்.ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் ஆங்கில அணிந்துரையுடன் கூடியது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 102409: கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகப் பதிவிலக்கம் 2502).

### 7500

**செம்மாதுளம் பூ: கவிதைகள்.** ஷெல்லிதாசன். (இயற்பெயர்: பேரம்பலம் கனகரத்தினம்). திருக்கோணமலை: நீங்களும் எழுதலாம் வெளியீடு, 103/1, திருமால் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2010. (திருக்கோணமலை: அஸ்ரா பிரிண்டர்ஸ், பிரைவேற் லிமிட்டெட், இல.43, திருஞானசம்பந்தர் வீதி).
114 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-52563-0-8.

எழுத்துலகில் தடம்பதித்து 40 ஆண்டுகளின் பின்னர் வெளிவரும் ஷெல்லிதாசனின் முதலாவது கவிதைத் தொகுதி இது. இடதுசாரி சிந்தனை ஆளுமைகொண்ட முற்போக்குக் கவிஞர் குழுவில் ஒருவரும், ஈழத்து மெல்லிசைப் பாடலாசிரியர்களுள் ஒருவருமான இவரது வானொலி மெல்லிசைப் பாடல்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. 2007-2010 காலப்பகுதிக்குரிய கவிதைகளே பெரும்பாலும் இடம்பிடித்துள்ளன. தொழிலாளர்களின் சுரண்டல்களை, அவர்களது அவநம்பிக்கைகளை, அவலநிலையினை தன் பாடல்களின் பேசுபொருளாக்கியுள்ளார். தலைப்புக் கவிதையில் பாட்டாளிக் கொடியின் நிறத்துக்கு மாதுளம்பூவின் வர்ணத்தை ஒப்பிடுகின்றார். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவர் வெளியீடான கன்னி வணிகமலர் இதழ்களின் ஆசிரியராக அறிமுகமாகியவர். மக்களின் அறியாமை, அவலம், சுரண்டல் இவற்றைக்கண்டு பொங்கி எழுந்து படைத்த கவிதைகள் இவை. தோழர் கார்த்திகேசன் ஆசிரியரின் இடதுசாரிக்கொள்கைகளில்

*பிடிப்புள்ள இவரது படைப்புகளிலும் அதன் பாதிப்பு உள்ளது. இவரது 40 ஆண்டுக்கால படைப்புகளின் தேர்ந்த தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இதில் 38 கவிதைகளும், 13 மெல்லிசைப்பாடல்களும், நெல்லை அமுதனின் வாழ்த்துப்பாடலுமாக 52 படைப்புக்கள் இடம்பெற்றுள்ளன.*

### 7501

**தமிழ் மணிக் கீதம்.** *கா.சி.ரெங்கநாதன். நாவலப்பிட்டி:* S.R.S.*பெரியாம்பிள்ளை, மலைநாட்டு செந்தமிழ்க் கவிஞர் சங்கம், 1வது பதிப்பு, மார்ச் 1963. (நாவலப்பிட்டி: ராஜா அச்சகம்).*
*10 பக்கம், விலை: சதம் 35., அளவு: 21.5x14 சமீ.*

*தமிழ்த் திரைப்படப் பாடல்களின் மெட்டுகளில் அமைந்த தமிழ் மெல்லிசைப் பாடல்கள். மருகவே செறிந்த திருப்புகழ் சந்தம், டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள்மீது பாடியது, ஆசிரியர் இரங்கற்பா, பாலும் பழமும் - இசைப்பாடல், தொழிலாளி பேசுகிறான் ஆகிய தலைப்புகளிலமைந்த 5 பாடல்கள் இச்சிறுநூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 91845).*

### 7502

**திருக்குறள் அதிகாரச் சாரமாகிய திருத்தாலாட்டு.** *வ.ஞா.கணேச பண்டிதர். கனடா: வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம்,* Valvai Historical Document Conservation Center, 3947 Lawrence Ave. East, Scarborough, Ontario, M1G 1S1, *4வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, 1919, 2வது பதிப்பு, 1921, 3வது பதிப்பு, 2009. (கனடா: விவேகா அச்சகம்).*
*57 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*இது யாழ்ப்பாணம் வல்வை சோதிடரும், வைத்தியருமாகிய கணேசபண்டிதரால் 1919இல் இயற்றப்பட்டு மதுரை வடக்குமாசி வீதி ஸ்ரீராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது. திருவள்ளவரின் திருக்குறளில் பொதிந்த கருத்துக்களைத் தாலாட்டாகப் பாடிவைத்த இந்நூலின் இரண்டாம் பதிப்பு மதுரை மீனலோசனி அச்சியந்திரசாலையில் 1921இல் அச்சிடப்பட்டது. இதன் 3வது பதிப்பு, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில்-சைவ சித்தாந்த சபையினரால் 2009இல் மீள்பதிப்புச் செய்யப்பட்டவேளையில் அதனை ஈழத்துத் தமிழ் வாசகர்களிடம் கொண்டுசேர்க்கும் முயற்சியாக வல்வை ஆவணக்காப்பகப் பதிப்பு 2011இல் வெளிவந்துள்ளது.*

### 7503

**துரத்தும் நிழல்களின் யுகம்.** *சித்தாந்தன் (இயற்பெயர்: சபாபதி உதயணன்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2010. (சென்னை 60005: மணி ஓப்செட்).*
*62 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-81-89359-95-9.*

*போருக்கும் தோல்விக்கும் முன்னும் பின்னுமான ஈழப் பின்புலத்திலிருந்து வெளிப்படும் இந்தக் குரல் துயர் நிரம்பியது. தனிமை நிரம்பியது. தனிமையில் துயரப்படும் எல்லாரையும் அல்லது துயரங்களால் தனிமைப்படும் எல்லாரையும் பிரதிநிதித்துவப்படுத்துவது. காற்றுவெளியில் அர்த்தமற்று நிராதரவாய் அலையும் மனிதர்களின் குரலை இந்தக் கவிதைகள் நிரந்தரப்படுத்துகின்றன. இவை நிகழ்காலத்தின் காயங்கள்- நாளையின் எச்சரிக்கை வடுக்கள். யாழ்ப்பாணம்-கோண்டாவிலில் 1977இல் பிறந்த சபாபதி உதயணன் 90களின் பிற்பகுதிகளில் எழுத்துத்துறையில் ஈடுபட்டவர். ஆசிரியராகப் பணியாற்றும் இவரின் முதலாவது கவிதைத் தொகுதி 2000ஆம் ஆண்டில் காலத்தின் புன்னகை என்ற பெயரில் வெளிவந்தது.*

### 7504

**தென்றலின் வேகம் :கவிதைத் தொகுப்பு.** வெலிகம ரிம்ஸா முஹம்மத். கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை, 5B, முதலாம் சப்பல் ஒழுங்கை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2010. (கொழும்பு 6: R.S.T.Enterprises, 114, W.A.Silva Mawathe).
96 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-1810-10-8.

வெலிகம பிரதேசத்தின் பெண் படைப்பாளியாக உருவாகியவர் ரிம்ஸா முஹம்மத். இத்தொகுப்பில் இவரது 64 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இலங்கையின் கடல்கோள்-சுநாமி தொடக்கம், பெண்ணியம், காதல் சார்ந்த கவிதைகளையும் இவை உள்ளடக்குகின்றன. மனிதவாழ்வின் விழுமியங்களை சீர்படுத்தக்கூடிய ஆத்மீகம்சார்ந்த கருத்துக்கள் அடங்கிய கவிதைகளும் இதில் அடங்குகின்றன.

### 7505

**தொட்டிப் பூ.** கவிதா. சென்னை 600 024: நேர்நிரை வெளியீடு, D1/15 TNHB, தெற்கு சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை: யுகமாயினி, சித்தன் கலைக்கூடம்).
128 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 70., நோர்வே 70 குரோணர், அளவு: 21x14 சமீ.

புலம்பெயர் சூழலில் நோர்வேயில் உருவாகிய ஒரு ஈழத்து இளம் கவிஞராகக் கவிதா அறிமுகமாகியுள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்தின் குரும்பசிட்டியில் பிறந்து நோர்வேயில் வளர்ந்த இவ்விளம் பெண் கவிஞரின் மூன்றாவது கவிதைத் தொகுதி இது. பனிப்படலத் தாமரை, என் ஏதேன் தோட்டம், ஆகியவற்றைத் தொடர்ந்து மூன்றாவதாக இத்தொகுப்பு வெளிவந்துள்ளது. தாய்நிலத்து சோகங்களும் அந்த சோகத்தின் ஊடாக வெளிப்படும் குமுறல்களும் ஆத்திரமும் கவிதாவின் கவிதை மொழியாக அறியலாம். தன் கவிதைகளுக்கான ஓவியங்களை இவரே வரைந்து தன்னை தரமான ஓவியராகவும் நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்.

### 7506

**தோற்றுப் போனவர்களின் பாடல்.** வ.ஐ.ச.ஜெயபாலன். சென்னை 600 024: ஆழி பதிப்பகம், 12, முதல் பிரதான சாலை, யுனைட்டட் இந்தியா காலனி, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 600 005: மணி ஆப்செட்).
(20), 21-104 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 22x14 சமீ., ISBN: 978-93-80244-17-4.

உலக இன மரபில் தமிழின அழித்தொழிப்பின் உச்சபட்ச நாட்களில் ஜனனித்த இக்கவிதைகள் அதே ரத்தவாடையோடும், நிணவீச்சத்தோடும் நிழலாடுகின்றன. இக்கவிதைத்தொகுப்பு மூன்று உட்பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. 2002-2009 காலகட்டத்தில் எழுதப்பட்ட தோற்றுப்போனவர்களின் இன்றைய பாடல்கள் பகுதி ஒன்றிலும், மக்களின் முன்னைய பெரும் தோல்விகளின்போது எழுதிய கவிதைகளில் சில இரண்டாவது பகுதியிலும், ஜெயபாலனின் இசைப்பாடல்கள் மூன்றாவது பகுதியிலும் காணப்படுகின்றன. ஒவ்வொரு யுத்தத்தின் தோல்வியின்போதும் இனி முடிந்ததென்று சொல்லப்பட்ட மக்களின் போராட்டம் பதிய தளத்தில் புதிய பின்னணியில் மீண்டும் உக்கிரம் கொண்டதையே இத்தொகுப்பினை வாசிப்போரின் மனம்கொள்ளும். மொழியில் திளைத்து, மண்ணில் வேரோடி, ஜரிகைக் கனவுகளில் சஞ்சரித்த கவிஞனை போர்க்கழுகு கொத்தித் துரத்துகின்றது. நாடோடியாய் திரிந்து யுத்தகாலத்திற்குள் வாழ்ந்த தமிழ்ப்புலவன் அரற்றும் கண்ணீர் இக்கவிதைகளில் அறத் தீயாய் எரிகின்றது.

### 7507

**நபியமுதம்: (பாவண்ணத் தொகுதி).** பதியதளாவ பாறூக். காத்தான்குடி 2: பாவலர் பண்ணை வெளியீடு, ஷரீப் சட்டத்தரணி வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (காத்தான்குடி: நூன் அச்சகம்)
24 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-52920-0-9.

நபிகளாரின் (ஸல்) அறப்போதனைகளை அடித்தளமாகக் கொண்டு அவர் புகழ்பாடிப் பணியும் நூலாக நபியமுதம் வெளியிடப்பட்டுள்ளது. அண்ணலுக்கோர் அஞ்சலி எனத் தொடங்கும் கவிதை நபிகளின் சிறப்புக்களைப் பாடி நிற்கின்றது. இவைதவிர வாழ்த்துரையில் வள்ளல், பணிகண்ட பயகம்பர் பிறப்பும் சிறப்பும், மூடத்தனமறுத்த முஹம்மத் சீருரையில் செம்மல், வழிகாட்டலில்

*வள்ளல் ஆகிய தலைப்புகளிலான பாக்கள் இதில் அடங்குகின்றன. காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர் பதியத்தளாவையை வசிப்பிடமாகக் கொண்டவர். 1967இல் தினகரன் மூலம் இலக்கிய உலகில் அறிமுகம் கண்டவர். வானொலி மேடைக் கவியரங்குகளில் தடம்பதித்த இவர் 2006ம் ஆண்டு கலைத்தீபம் இலக்கிய விருது, 2007இல் கவிப்பருதி சாகித்திய விருது, 2008இல் சாமஸ்ரீதேசமானி உயர்விருது, 2009இல் கலாபூஷணம் அரச விருது எனப் பல விருதுகளைப் பெற்றவர். கலைநதி என்ற புனைபெயரிலும் எழுதிவருகிறார்.*

### *7508*

***நம்மைப் பற்றிய கவிதை.*** *ஆகர்ஷியா (இயற்பெயர்: பவானி அருளையா). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (சென்னை 60005: மணி ஓப்செட்).*
*70 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89945-07-7.*

*எளிமையான வார்த்தைகளாலும் புதிய படிமங்களினாலும் நமது அன்றாட வாழ்க்கையை மாற்றிவிடுகின்ற ரசவாதம் ஆகர்ஷியாவின் கவிதைகளில் கிடைக்கின்றது. பிரிவு, நேசம், யுத்தம், இழப்பு, உள்ளடங்கிய வேட்கை, சிறிய இன்பங்கள், பெரிய துன்பங்கள் என வாழ்வின் எல்லாப் பரிமாணங்களுமே நுட்பமாக இவரது கவிதைகளில் பதிவுபெறுகின்றன. பெயருக்கேற்றபடி ஆகர்ஷிக்கவைக்கும் கவிதைக் குரல் இவருடையது. யாழ்ப்பாண மாவட்டத்தின் புங்குடுதீவில் 1977இல் பிறந்தவர் பவானி. வேம்படி மகளிர் கல்லூரியில் உயர் கல்வி பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் பயின்று கம்பஹா பிரதேசத்தில் வைத்தியராகப் பணியாற்றியவர். சரிநிகர் (கொழும்பு), சக்தி (நோர்வே), வைகறை (கனடா), தலித் (தமிழ்நாடு) ஆகியவற்றில் இவரது கவிதைகள் பல வெளியாகியுள்ளன.*

### *7509*

***நாளெந்த நாளோ?: கவிதைத் தொகுப்பு.*** *மு.துரைசாமி. எல்ல: குறிஞ்சிப் பேரவை, நிவ்பர்க் தமிழ் மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*ix, 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.*

*பதுளை மாவட்டத்தில், தெளிவத்தை பிரதேசத்தில் மொறக்கொல்லையில் 1941இல் பிறந்தவர் கவிஞர் துரைசாமி. பின்னாளில் எல்ல சதர்லாண்ட் தோட்டத்தில் வசித்தவர். 1950களின் இறுதிப்பகுதிகளிலிருந்து மித்திரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, தினகரன், தினமுரசு, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த இவரது கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாக இந்நூலிலுள்ள கவிதைகள் அமைகின்றன. ஆழமான சமூகப்பார்வை கொண்ட ஒரு கவிஞனாக மலையக படைப்பிலக்கியத்துறையில் கணிக்கப்படுபவர் சதர்லேண்ட் துரைசாமி.*

### *7510*

***நிசங்களின் சத்தம்: கவிதைகள்.*** *மு.சி.கந்தையா. தமிழ்நாடு: மு.சி.கந்தையா, கூடல் பதிப்பகம், வசந்தம் இல்லம், 19/748A1, அதிகாரி வயல், கூடலூர், 643 212, நீலகிரி மாவட்டம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (நீலகிரி 643 212: ஸ்ரீ கிருஷ்ணா ஆப்செட் பிரிண்டர்ஸ் அன்ட் டிஜிட்டல் ஸ்டூடியோ, கூடலூர்).*
*112 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 17.5x11.5 சமீ.*

*இலங்கை மலைநாட்டின் கொற்றகங்கைத் தோட்டத்து நதிக்கரையில் எழுபதுகளில் உருவான கவிஞர்களுள் ஒருவர். சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தினால் இலங்கைக்கு அந்நியமாக்கப்பட்டவர்களுள் இவரும் ஒருவர். தற்போது நீலகிரியில் வாழும் இவ்வீழத்துக் கவிஞரின் இக்கவிதைத் தொகுதி - அகதிகள், தேசியம், இன விடுதலை, மனித உரிமை மீறல்கள், தான் வாழும் சமூகத்தின் பல்வேறு சிக்கல்கள் எனப் பலதையும் 57 கவிதைகளினூடாக உரத்துப் பேசுகின்றன. "பூர்வீக மண் வேர் முறிபட்டபின் முளைக்காமல் போனவர்கள்" என்று தொடங்கி "நாடுவிட்டு நாடுகள் கடத்தப்பட்டு மேய்ப்பர்கள் இல்லாத மந்தைகளாகிப்போன தலைமுறையின் விழிகள் அலைகின்றன மூலத்தின் முகவரியைத் தேடி" என முடிக்கும் இவரது கவிதை வரிகளில் உண்மைகள் உரத்து ஒலிக்கின்றன.*

**7511**

**நிழல் ஒதுங்கிய நிஜங்கள்.** விக்ரம் (இயற்பெயர்: ப.தீபநாதன்). கொழும்பு 15: Print.Com, 91, Centre Road, 1வது பதிப்பு, வைகாசி 2007. (கொழும்பு 12: Happy Digital Centre, Digital Offset press, No 75/1/1, Sri Sumanatissa Mawathe).
viii, 120 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 20.5x15.5 சமீ.

கவிஞர் விக்ரம்- தன்னுள் ஒதுங்கிக் கிடக்கும் நிழல்களை நிஜங்களாக வாசகர் மனக்கண்களுக்கும் சிந்தைக்கும் விருந்தாகத் தன் கவிதைகளாகச் சமர்ப்பிக்கின்றார். நிழல் எப்பொழுதுமே நிஜத்தை நிராகரிப்பது இல்லை. அதனால் தான் நிஜத்தினால் நிழல் ஒதுங்க முடிகின்றது. விக்ரமின் கவிதை நூலின் தலைப்பிலும் அதுவே பிரதிபலிக்கிறது. வெறும் உணர்ச்சிகளை மட்டுமல்லாது உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கும் புதிய படிமங்களும் உவமைகளும் உருவங்களும் இவரின் திறமைக்குச் சான்று சொல்கின்றன. கவிதை வரிகளுக்கிடையே பக்கங்கள்தோறும் புகுத்தப்பட்ட ஒளிப்படங்கள், சில இடங்களில் பொருத்தமற்று, கவிதைகளின் சுவையைத் திசைதிருப்புகின்றன. விக்ரம் அக்யுபஞ்சர் வைத்தியத்துறையிலும் ஈடுபாடு கொண்டவர். உளவியல் துறையையும் தகவல் தொழில்நுட்பத்துறையையும் பயின்றவர். இத்தொகுப்பில் 54 தலைப்புகளில் இவரது கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

**7512**

**நிழலோடு நினைவுகள்.** இரா.பாலபிரகாஷ். டிக்கோயா: சூரியன், கிரேசி ரசிகர் மன்றம், 110, பட்டல்கல்ல சந்தி, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (கொழும்பு 6: சுபேக்ஷா பிரிண்டர்ஸ், 15, கவிந்த பிளேஸ், கிருள்ளப்பனை).
64 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 14.5x11 சமீ.

அவளின் நினைவுகளில் சில தூறல்கள் என்ற பதாதையுடன் தொகுக்கப்பட்ட காதல்ரசம் சொட்டும் புதுக்கவிதைகள் இவை. மஸ்கெலியா மோச்சா எஸ்டேட்டின் மிட்லோடியன் டிவிஷனைச் சேர்ந்தவர் பாலபிரகாஷ். மலையகத்தின் குளிர்ச்சியை இவரது கவிதைகளில் உணரமுடிகின்றது.

**7513**

**பண் உடைந்துபோன கடலாள்.** தா.பாலகணேசன். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (சென்னை 60005: மணி ஓப்செட்).
86 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80240-11-4.

பாலகணேசன் கனவுகளில் களிக்கூத்து ஆடும் ஒரு கவிஞன். விடுதலைக்கான நடனம் வேருக்குள் ஒளி பாய்ச்சும் என வலியுறுத்துகின்றவர். மெருகேறிய மொழியும் வண்ணங்கள் தூவிக் கிடக்கும் படிமங்களும் புலமும் திணையும் மாறும் அனுபவங்களும் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் எப்போதுமே விரவிக் கிடக்கும் சோகமும் பாலகணேசனின் கவிதா உலகுக்கு எம்மை ஆற்றுப்படுத்துகின்றன. இலக்கிய சாட்சியங்களின் வலிமைக்கும் வனப்புக்கும் ஈழத்தமிழ் தந்துள்ள இன்னொரு படையல் இக்கவிதைத் தொகுப்பாகும். தா.பாலகணேசன் யாழ்ப்பாணம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நாடகாசிரியராகவும் நாவலாசிரியராகவும் அறியப்பட்டவர். தற்போது புலம்பெயர்ந்து பிரான்சில் வாழ்கிறார்.

**7514**

**பதுங்குகுழியில் பிறந்த குழந்தை.** தீபச்செல்வன் (இயற்பெயர்: பாலேந்திரன் பிரதீபன்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2008. (சென்னை 60005: மணி ஓப்செட்).
80 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89945-76-3.

இன்றைய ஈழத்துக் கவிதைகளில் வலுவான குரல்களில் ஒன்றாக உணரப்படும் தீபச்செல்வனின் முதலாவது தொகுப்பு இது. தொடரும் போர்ச் சூழலில் நித்தமும் மரணத்துள் வாழும் இன்றைய ஈழத்து மக்களின் பேரிழப்புகளை இடப்பெயர்வுகளின் அவலத்தை, மனச்சிதைவுகளை, கூடவே துளிர்விடும் நம்பிக்கையை மிகையேதுமின்றி யதார்த்தமாகச் சித்திரிக்கும் கவிதைகள் இவை. கவித்துவம், சொற்கட்டு, செறிவு, படிமம் என்பவற்றுக்கப்பால் ஒரு கவிதை உண்மையை

உரைக்கவேண்டும். உண்மைக்காய் துடிக்கவேண்டும். உண்மையைச் சார்ந்திருக்கவேண்டும். அவ்வகையில் இவ்விளம் கவிஞனின் கவிதைகள் காயத்திலிருந்து கொட்டும் குருதியாக, நெரிபடும் கழுத்திலிருந்து கிளம்பும் ஓலமாக, கொலைப்படுகளத்தைப் பார்க்க விதிக்கப்பட்ட ஒரு இளைஞனின் கண்ணீர்த்துளிகளாக அமைந்திருக்கின்றன. தீபச்செல்வன் ஒட்டுமொத்த ஈழத்தமிழரின் வலியை இக்கவிதைத் தொகுதியில் பிரசவிக்கமுயன்றுள்ளார். சூனியம், வெறுமை, இன்னும் பிற சொற்களுக்குள் அடக்கமுடியாத மரணப்பெருவெளியாக, சாம்பல்மேடாக, மக்கள் கால்நடைகளாக பலவந்தமாக விரட்டப்பட்ட நிலங்களைக் காட்சிப்படுத்தியிருக்கிறார். அதிகமாய் சூனிய நிலத்தைப் பற்றியே இக்கவிதைகள் பேசுகின்றன. மேலும் அகதிகளாய் இன்றுவரை ஓடிக்கொண்டே இருக்கும் நிராதரவான மக்களைப் பின்தொடர்ந்து செல்கின்றன இவரது வார்த்தைகள். கவிதைகளில் பல இடங்களில் பாலஸ்தீனக் கவிஞர் மஹ்மூத் தர்வீஷ் ஞாபகப்படுத்தப்படுகின்றார். நோக்கம் சார்ந்து வெளிப்படையாகப் பேசும் தீபச்செல்வனின் இந்தக் கவிதைகள் வாசக மனத்துள் பெரும் துக்கத்தைக் கவியச் செய்யும் ஆற்றல் கொண்டது. தீபச்செல்வன் கிளிநொச்சி-இரத்தினபுரத்தைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகப் பிரிவில் வருகைதரு விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

### 7515

**பனிப்படலத் தாமரை.** கவிதா. நோர்வே: கவிதா இரவிக்குமார், Bjornebaerstien – 27, 1348 Rykkinn, *2வது பதிப்பு, 2006, 1வது பதிப்பு, 2002. (கனடா:*Printme Design Inc).

*88 + 57 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19*x*14 சமீ.*, ISBN: *82-303-0744-*X.

*புலம்பெயர் சூழலில் நோர்வேயில் உருவாகிய ஒரு ஈழத்து இளம் கவிஞராகக் கவிதா அறிமுகமாகியுள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்தின் குரும்பசிட்டியில் பிறந்து நோர்வேயில் வளர்ந்த இவ்விளம் பெண் கவிஞரின் கவிதைத்தொகுதி முதற்பதிப்பாக கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் 2002இல் கரைசேரும் கடிதங்கள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. இவ்விரண்டாம் பதிப்பு தலைப்பு மாற்றத்துடன் வெளிவந்துள்ளது. முதல் 88 பக்கங்களும் கவிதாவின் தமிழ்க் கவிதைகளையும், தொடர்ந்த 57 பக்கங்கள் நோர்வேஜிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட இவரது கவிதைகளையும் உள்ளடக்குகின்றன.*

### 7516

**பா.** *பா.சத்தியசீலன். யாழ்ப்பாணம்: த.பிரான்சிஸ், 9/2, ஈச்சமோட்டை வீதி, 1வது பதிப்பு, மார்கழி 1968. (யாழ்ப்பாணம்: வஸ்தியான் அச்சகம்).*

*(4), 116 பக்கம், விலை: ரூபா 3., அளவு: 21.5*x*14 சமீ.*

*வானொலி, பத்திரிகை, பாவரங்குகள் என்பவற்றின் மூலம் ஈழத்து இலக்கியப் பிரியர்களைப் பெரிதும் கவர்ந்தவர் கவிஞர் சத்தியசீலன். வானொலியில் ஒலிபரப்பாகிய பா நாடகங்களான இளங்கோத் துறவி, வள்ளுவம் ஆகிய இரண்டுடன், பாரதி விழாப் பாவரங்கில் பாடப்பட்ட கண்கள் உறங்க ஒரு காரணம் உண்டோ என்ற நெடுங்கவிதையும், மாதவி மகளின் காதல், இராவணன், விழி திறப்பு ஆகிய நெடுங்கவிதைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275602).*

### 7517

**பாழ் நகரத்தின் பொழுது.** *தீபச்செல்வன் (இயற்பெயர்: பாலேந்திரன் பிரதீபன்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2010. (சென்னை 60005: மணி ஒப்செட்).*

*96 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5*x*14 சமீ.*, ISBN: *978-81-89359-79-9.*

*இன்றைய ஈழத்துக் கவிதைகளில் வலுவான குரல்களில் ஒன்றாக உணரப்படும் தீபச்செல்வனின் புதிய தொகுப்பு இது. பல பத்தாண்டுகளாக விடுதலைக் கனவைப் பேணிய ஓர் இனம் யுத்தத்தால் அழித்தொழிக்கப்பட்டபின்னர் எஞ்சியிருக்கும் மானுடர்களின் துயரையும் இன்னும் பற்றிக்கொண்டிருக்கும் நம்பிக்கையையும் இந்தக்கவிதைகள் பேசுகின்றன. ஒரு நாள்வழிக் குறிப்பின் சாயலில் எழுதப்பட்டிருக்கும் இந்தக் கவிதைகள் நிகழ்கால அவலம் பற்றிய மனச் சான்றின்*

வடுக்களாகின்றன. நூலாசிரியர் கிளிநொச்சி-இரத்தினபுரத்தைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகப் பிரிவில் வருகைதரு விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

### 7518

**புதய்யல் கவிதய்கள்.** எம்.ராமச்சந்ரன். கண்டி: M.Ramachandran, 2/1 Riverdale Junction, Anniewatte, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).
vi, 62 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ.

நூலாசிரியர் ஆர்.முத்துக்கருப்பன் என்றும் அறியப்பட்டவர். ஈ.வே.ரா.தாசன் என்ற புனை பெயரிலும் எழுதுபவர். தமிழ்ச் சொற்களை மாற்றுவழிகளில் பயன்படுத்தி இலக்கியம் படைக்கும் இவர் ஐ என்ற எழுத்தை அய் என்று எழுதுவதை தலைப்பிலும் அவதானிக்கலாம். ஏற்கெனவே 38 சிறு நூல்களை வெளியிட்டுள்ள இவரது 39ஆவது பிரசுரம் இது. இந்நூலில் இவரது 43 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 633797).

### 7519

**புதிய தொனி.** புரட்சிக் கமால். கொழும்பு: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).
viii, 96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-8806-08-0.

துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பற்றுறை அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் அமைச்சு, இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன் 2002 ஒக்டோபர் 22, 23, 24ம் திகதிகளில் நடத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின்போது வெளியிடப்பெற்ற பிரசுரங்களில் ஒன்று. 1995இல் ஏறாவூர் இஸ்லாமிய கலை இலக்கிய வட்டத்தினர் வெளியிட்ட கவிதை நூலின் மீள் பிரசுரம் இதுவாகும். இதில் புரட்சிக்கமால் எழுதிய 25 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

### 7520

**புதிய பாதை (கவிதைகள்): இளைஞர் இலக்கியம்.** செ.ஞானராசா. திருக்கோணமலை: சர்வீனா வெளியீட்டகம், 993 அன்புவழி புரம், 1வது பதிப்பு, நவம்பர் 2010. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
viii, 32 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-50038-4-1.

தம்பலகாமம் சிவசக்தி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலய அதிபரான செ.ஞானராசாவின் கவிதைகள் இவை. இளைஞர்கள் நெறியோடு வாழ்வதற்கும் சமூகத்தின்மீது பற்றுள்ளவர்களாக வாழவும், சோம்பித் திரியாமல், தொழில்செய்து வாழவேண்டுமென்றும், ஒற்றுமை சமாதானம் பொறுமை முதலிய நல்ல குணங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சிறப்பான அறிவுரைகளை இக்கவிதைகளில் வழங்கியுள்ளார். தன்னம்பிக்கை, பயன்பெற வழி, இளைஞர் நாம், காதல் கலை, வெறுக்காதீர், நாட்டுவளம், தொழில் செய்வீரே, தகவல் தொழில்நுட்பம் போன்ற தலைப்புகளில் 32 கவிதைகளை இத்தொகுப்பில் இடம்பெறச் செய்திருக்கிறார்.

### 7521

**பூமிக்கடியில் வானம்.** அலறி. (இயற்பெயர்: அப்துல் லத்தீப் முஹம்மட் றிபாஸ்). கல்முனை: மெஸ்றோ பப்ளிகேஷன்ஸ், 1வது பதிப்பு, மார்கழி 2005. (அக்கரைப்பற்று: செலெக்ஷன் அச்சகம்).
58 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19.5x14 சமீ., ISBN: 955-99400-0-9.

போரினால் ஏற்பட்ட பாதிப்பு, தொழில் இழப்பினால் ஏற்பட்ட துயரங்கள், ஆழிப்பேரலை ஏற்படுத்திய அவலம், சமூகப் பிரச்சினைகள் ஊரில் ஏற்படும் கால மாற்றங்கள், கணவன் மனைவி பாச உணர்வு என்பன பற்றி இவரது கவிதைகள் பேசுகின்றன. எளிமையான படிமங்களால் வாசகரை இலகுவாகத் தனது கவிதைகளுக்குள் ஈர்க்கின்றார். அலறி தனி மனித உணர்வுகளில் மட்டும்

கரைந்துவிடவில்லை. தன் சமூகத்தின் நாவுமாக இருக்கின்றார். சட்டத்துறைப் பட்டதாரியான இவர் தற்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகராகப் பணியாற்றுகின்றார்.

### 7522

**பெயரிடாத நட்சத்திரங்கள்: ஈழப் பெண் போராளிகளின் கவிதைகள்.** தொகுப்பாளர் விபரமில்லை. *கோயம்புத்தூர் 6410015: விடியல் பதிப்பகம், 88 இந்திரா கார்டன், 4வது தெரு, உப்பிலிபாளையம், இணைந்து வெளியிடுவோர், சுவிட்சர்லாந்து: ஊடறு வெளியீடு, 1வது பதிப்பு, ஜுலை 2011. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).*

*166 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14 சமீ., ISBN: 978-81-89867-37-9.*

*ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண் போராளிகளால் அவ்வப்போது எழுதப்பட்டு கவிதைத் தொகுப்புகளில் இடம்பெற்ற கவிதைகளின் தேர்ந்த தொகுப்பு இது. வானதியின் கவிதைகள் (1991), கஸ்தூரியின் ஆக்கங்கள் (1992), நிமிர்வு (1993), வானம் எம் வசம் (1995), வெளிச்சம் கவிதைகள் (1996), செம்மணி (1998), ஆனையிரவு (2000), என் கவிதை (2000), எழுதாத உன் கவிதை (2001), மீண்டும் துளிர்க்கும் வசந்தம் (2004), பெயல் மணக்கும் பொழுது (2007) ஆகிய தொகுப்புகளில் இடம்பெற்றவற்றில் தேர்ந்த 70 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவற்றை அம்புலி, அ.காந்தா, அலையிசை, ஜெயா, கலைமகள், ஆதிலட்சுமி, கனிமொழி, ஞானமதி, வானதி, புரட்சிகரா, கஸ்தூரி, கிருபா, மலைமகள், நகுலா, நாமகள், நாதினி, பிரேமினி, பிரமிளா, ரூபி மார்கரட், பாரதி, சிரஞ்சீவி, சூரியநிலா, சுதாமதி, தமிழவள், தயாமதி, தூயவள் ஆகிய 26 போராளிக் கவிஞர்களின் கவிதைகள் இவை.*

### 7523

**பெருநிலம்: கவிதைகள்.** *தீபச்செல்வன் (இயற்பெயர்: பாலேந்திரன் பிரதீபன்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, மே 2011. (சென்னை 60005: மணி ஓப்செட்).*

*80 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80240-43-5.*

*போரால் நிர்மூலமாக்கப்பட்ட பெருநிலத்தின் மீட்கப்படமுடியாத கனவுகளையும் மீட்சியின் வழிகளையும் இந்தத் தொகுப்பில் தீபச்செல்வன் கவிதைவரிகளில் கூறுகின்றார். அழிந்துபட்ட இயற்கை, குலைக்கப்பட்ட சுற்றுச்சூழல், சிதறிப்போன உறவுகள், தோல்வியடைய மறுக்கும் வாழ்வியல் வேட்கை, இவை இந்தக் கவிதைகளின் மையப்பொருட்கள். அவலப் பெருவெளியின் இருளில் துலங்கும் நம்பிக்கை ஒளி கவிதைகளை மட்டுமல்ல ஓர் இனத்தின் நாளையையும் அர்த்தப்படுத்துகின்றது. தீபச்செல்வன் கிளிநொச்சி-இரத்தினபுரத்தைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகப் பிரிவில் வருகைதரு விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.*

### 7524

**பொதுக் காரணிகளில் பெரியது.** *ஷல்மானுல் ஹரீஸ். கொழும்பு: அல்ஹுதா பப்ளிகேஷன்ஸ், 1வது பதிப்பு, ஜனவரி 2008. (அக்கரைப்பற்று: நியு செலெக்ஷன்).*

*xxxvi, 81 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 220., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-8911-17-4.*

*கல்குடாத் தொகுதியில் வளர்ந்துவரும் முஸ்லிம் கவிஞர்களுள் ஒருவரான வாழைச்சேனை ஷல்மானுல் ஹரிஸின் முதலாவது கவிதை எழுதுகோலும் என் வெள்ளைத்தாளும் என்பதாகும். (நூல்தேட்டம் பதிவிலக்கம் 6477). இது இவரது 2வது தொகுதியாகும். அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பயிற்சி ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தின் வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளதாக M.P.நளீம் தன் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். தான் வாழும் சமூகத்தின் சந்து பொந்துகள், சாதனைகள், தோல்விகள், இன்ப துன்பங்கள், மக்களின் சமூகப் பற்றுகள், அவற்றின் பிரதிபலிப்புகள் என்பவற்றை கருப்பொருட்களாக்கி, அவற்றை அழகான 36 கவிதைகளாக வழங்கியுள்ளார். கவிதைகள் துன்பியல் சார்ந்ததாக மட்டுமல்லாது அங்கதச் சுவையுடன் கூடியதாகவும் அமைகின்றன. சொற்களில் கூர்மை, தெளிவு, அழகுணர்வு, நகைச்சுவைப்பாங்கு என்பன கலந்து சிறப்பிக்கின்றன.*

### 7525

**மக்கத்து மலரே மதீனத்து மணமே: வள்ளல் நபி (ஸல்) அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்.** ஏ.என்.எம்.ஷாஜஹான். கொழும்பு 12: ஆதவன் பதிப்பகம், 30/3 டாம் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1996. (கொழும்பு: மெய்கண்டான் அச்சகம்).
122 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 18x13 சமீ., ISBN: 955-95450-1-9.

இந்நூல் முஹம்மது நபி (ஸல்)அவர்களின் வாழ்க்கை வரலாற்றை கவிதையுருவில் வழங்குகின்றது. பெருமானாரின் பிறப்பிலிருந்து வபாத்து வரையிலும் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளைத் தொட்டுக்காட்டிக் கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்களால் ஆக்கப்படும் இலக்கியங்களில் குறிப்பாக இஸ்லாமிய இலக்கியங்களில் அறபிச் சொற்கள் விரவிவருவது தவிர்க்கமுடியாதது. இந்நூலில் அத்தகைய சொற்களுக்கு தேவைப்படுமிடங்களில் பொருளும், விளக்கமும் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நூலாசிரியர் புத்தளப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். 1993இல் முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் தாஜுல் அதீப் (இலக்கிய வேந்தர்) பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 534871).

**7526**

**மண் போற்றும் விண்மீன்கள்.** பாலரவி. லண்டன்: பாலரவி, 1வது பதிப்பு. 2009. (லண்டன்: ஜே.ஆர். அச்சகம்).
96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13.5 சமீ.

மட்டக்களப்பிலிருந்து 1985முதல் லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் கவிஞர் பாலரவியின் ஈழ விடுதலை உணர்வுகொண்ட கவிதைகளின் தொகுப்பு இது. இவரது முன்னைய கவிதைத்தொகுப்பாக எண்ணங்களின் வண்ணங்கள் வெளிவந்திருந்தது. இவரது தந்தையார் அ.வ.பாலசுப்பிரமணியம் ஒரு மும்மொழிக் கவிஞர் என்பதும், தனது எம். ஏ. தேர்வினை சிங்கள மொழியில் எழுதித் தேர்ச்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**7527**

**மண் வாசனய் கவிதய்கள்.** எம்.ராமச்சந்ரன். கண்டி: M.Ramachandran, 2/1 Riverdale Junction, Anniewatte, 1வது பதிப்பு, மே 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).
iv, 64 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ.

நூலாசிரியர் ஆர்.முத்துக்கருப்பன் என்றும் அறியப்பட்டவர். ஈ.வே.ரா.தாசன் என்ற புனை பெயரிலும் எழுதுபவர். தமிழ்ச் சொற்களை மாற்றுவழிகளில் பயன்படுத்தி இலக்கியம் படைக்கும் இவர் ஐ என்ற எழுத்தை அய் என்று எழுதுவதை தலைப்பிலும் அவதானிக்கலாம். ஏற்கெனவே 37 சிறு நூல்களை வெளியிட்டுள்ள இவரது 38ஆவது பிரசுரம் இது. இந்நூலில் 41 தலைப்புகளில் இவர் எழுதிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 633801).

**7528**

**மரணம் என் தேசத்தின் உயிர்.** இனியன். சென்னை 600 078: தோழமை வெளியீடு, 5D, பொன்னம்பலம் சாலை, கே.கே.நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (சென்னை 600 005: ஜோதி எண்டர்பிரைஸஸ்).
(9), 10-72 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x14 சமீ.

இனியனின் கவிதைகள் ஈழப் போர்ச் சூழல் குறித்த நம்பிக்கை உணர்வை வெளிக்காட்டுகின்றன. உண்மையைப் பேசும் இக்கவிதைகள், சமகாலத்தைய போர்ச் சூழலிலும் அயலகச் சூழலிலும் ஈழத் தமிழர்களின் வாழ்வியல் என்னவாக இருந்திருக்கின்றதோ அவ்வாழ்வியலைத்தான் கவிதைகளாக்கியிருக்கிறார். சித்திரங்களை ஓவியர் புகழேந்தி வரைந்திருக்கின்றார்.

**7529**

**மரணித்த மனிதம்.** மு.ஆ.சுமன். வல்வெட்டித்துறை: மு.ஆனந்தராசா, சுகந்தினி வாசம், ஏ.ஜீ.ஏ.ஒழுங்கை, நெடியகாடு, 1வது பதிப்பு, கார்த்திகை 2009. (தமிழ்நாடு: இலக்கியா பிரிண்டர்ஸ், சீனிவாச நகர், திருச்சி 17).
viii, 53 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 12x18 சமீ.

கவிஞர் வல்வைச் சுமனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு. கருத்தாழமும் சுவைநயமும் கொண்ட இக்கவிதைகள் தான்சார்ந்த சமூகத்தின் பிரச்சினைகள், அவலங்களைப் பேசுகின்றன. இன்று மனிதன் இருந்தாலும் அவனுள் இருக்கவேண்டிய மனிதம் மரணித்துவிட்டதென்று கூறும் இக்கவிஞன் தன் கவிதைத்தொகுப்பின் தலைப்பிலும் அதையே குறிப்பிடுகின்றார்.

### 7530

**மலர்ந்த வாழ்வு.** மு.கா.மு.ஸுபைர். கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்னை, 1வது பதிப்பு, ஜனவரி 1956. (கொழும்பு: வீரகேசரி அச்சகம்).
48 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 17.5x12 சமீ.

கல்ஹின்னை தமிழ்மன்றத்தின் நான்காவது வெளியீடு. தமிழ் மன்றம் வெளியிட்ட முதலாவது கவிதை நூலும் இதுவே. இந்நூலிலே இஸ்லாமியத் தமிழர் தமிழ்மொழிக்கு ஆற்றவேண்டிய தொண்டினை செய்யுள்வடிவில் எடுத்துக்கூறுகின்றார். இஸ்லாமியச் செந்தமிழின் பெருங்குறை யாதென்பதையும் அதனைச் செம்மைசெய்ய இஸ்லாமியச் செந்தமிழோர் எவ்வகையான பணியாற்றிடல் வேண்டும் என்பதையும் வீராவேசத்துடன் முழங்குகின்றார். இந்நூலுக்கான அணிந்துரையை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் (பேராதனை) தமிழ்ப் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை வழங்கியுள்ளார். தினகரன், சுதந்திரன் போன்ற பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதிப் பெயர்பெற்றவர் நூலாசிரியர். இவரது கவிதைகள் சொந்தப் பெயரிலும் குறிஞ்சிக் குயில் என்ற புனைபெயரிலும் வெளிவந்தன. ஆசிரியர் பணியில் இருக்கும்வேளையில் இவர் பிரசுரித்த நூல் இது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் P 2601).

### 7531

**மழையை மொழிதல்.** அலறி (இயற்பெயர்: அப்துல் லத்தீப் முஹம்மட் றிபாஸ்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 600005: மணி ஓப்செட்).
80 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89359-84-3.

ஈழத்துக் கவிதைக் குரல்களில் வேறுபட்ட குரல் அலறியினுடையது. இந்தக் குரலில் மொழிதலின் நீர்மை துலங்குகின்றது. இயற்கை, இருப்பு, யுத்தம், காதல் ஆகியவை அலறியின் முதன்மையான பேசுபொருட்கள். இவற்றிலெல்லாம் நீர்நிலைகளின் அனுபவங்கள் இடம்பெறுகின்றன. நீரின் குணங்கள் உள்ளோட்டமாக படர்ந்திருக்கின்றன. அலறியின் தேர்ந்தெடுத்த கவிதைகள் கொண்ட இந்தத் தொகுப்பு மனித மனத்தின் ஈரத்தையும் ஈரமின்மையையும் பேசுகின்றன. மருதமுனையைச் சேர்ந்த அலறி 1976இல் பிறந்தவர். சட்டத்துறைப் பட்டதாரியான இவர் பொதுச் சுகாதாரம், உளவளத்துணை என்பவற்றிலும் பட்டயம் பெற்ற சட்டத்தரணி. தற்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகராகப் பணியாற்றுகின்றார். தனது கவிதைகளுக்காக கிழக்கு மாகாண சபை விருதினை 2006இல் பெற்றவர். பூமிக்கடியில் வானம் (2005), பறவை போல் சிறகடிக்கும் கடல் (2006), எல்லாப் பூக்களும் உதிர்ந்துவிடும் (2008), ஆகிய இவரது முன்னைய தொகுப்புகளிலிருந்து தேர்ந்த கவிதைகளுடன் பின்னர் இவர் எழுதிய சில கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 7532

**மனத்திரை மேகங்கள்.** நெடுந்தீவு முகிலன். (இயற்பெயர்: வி.முகிலன்). நெடுந்தீவு: நெடுந்தீவு அபிவிருத்தி மையம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2008. (அச்சிட்ட இடம் தரப்படவில்லை: ஜெயா அச்சகம்).
(8), 66 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200.,அளவு: 20x14.5 சமீ.

நெடுந்தீவு முகிலன் அண்மைக்காலத்தில் எழுதி வீரகேசரி, சுடர் ஒளி, தினமுரசு, பாதுகாவலன், மித்திரன், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கவிதைகள் இந்நூலில் அடங்குகின்றன. மனிதர்களுடைய சமூக இடைவினைகள், சமகால வாழ்வியலின் போலியான காரணிகள், தனிமனித ஏக்கங்கள், இலட்சிய நாட்டம், என ஓர் எளிமையான மானிட வாழ்வுக்காக ஏங்கும் அப்பாவி மக்களின் ஆசைகளையும் ஆர்வங்களையும் இக்கவிதைகள் வெளிக்காட்டி நிற்கின்றன.

### 7533

**மீண்டு வந்த நாட்கள்.** வதிரி சி.ரவீந்திரன். கொழும்பு 10: S.Godage and Brothers, 675 P.D.S. Kularatne Mawathe, 1வது பதிப்பு, 2011. (வெல்லம்பிட்டிய: சத்துர பிரின்டர்ஸ், 69, குமாரதாச பிளேஸ்).
104 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-30-3066-5.

ஆசிரியரின் முதலாவது கவிதைத் தொகுதி இது. தன் முதற் கவிதையை மல்லிகை இதழில் 1972இல் எழுதியவர். இரு தசாப்த மௌனத்தின் பின், தொன்னூறுகளின் இறுதியில் இவரது படைப்புக்கள் கணிசமான அளவில் வீறுடன் வெளிவரத்தொடங்கியுள்ளன. இக்கவிதைத் தொகுதி பொதுவான புதுக்கவிதைகள், கவிதைத் துளிகள், மெல்லிசைப் பாடல்கள் என மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளது. இவரது முதற்கவிதையான (1972 மல்லிகை) **அந்த ரயில் போகின்றது** என்ற கவிதை இத்தொகுதியிலும் முதலிடம் பிடித்துள்ளது. சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் நாடுகடத்தப்பட்ட மலையகத் தோட்டத்தொழிலாளர்களின் பிரிவுத் துயரம் பற்றிய கவிதை அது. பிறர் ஈன நிலைகண்டு துள்ளுவதும், பொய்மையையும் போலித்தனத்தையும் கண்டு எள்ளுவதும், சமூகக் கொடுமை கண்டு சாடுவதும், ஏழ்மைநிலை கண்டு இரங்குவதும், கடந்துபோன வசந்தத்தை எண்ணி ஏங்குவதும் இவரது கவிதைகளின் பேசுபொருளாகின்றன. "இவரது கவிதைகளின் சிறப்பு, சாதாரண பொதுமக்களும் விளங்கிக்கொள்ளத் தகுந்ததான எளிமையும், சற்று நுனிந்து நோக்கவல்லவர்களுக்கு மேலும் ஆழமான பொருளைத் தரவல்லவைகளாக இருப்பதுமே" என்று இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள தெணியான் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

### 7534

**முகமூடி செய்பவள்: கவிதைகள்.** வினோதினி சச்சிதானந்தன். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (சென்னை 600005: மணி ஓப்செட்).
87 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89945-09-1.

நவீன தமிழ்க் கவிதைத்துறையில் வினோதினியின் கவிக்குரல்கள் புதுக்குரலாக ஒலிக்கின்றது. போரின் வெம்மையும், காதலின் நெருப்பும், துயரத்தின் படர்தாமரையும் சூழ்ந்து கிடக்கின்ற ஒரு நிலக்காட்சியின் அற்புதமான ஆனால் வலியைக் கிளப்பும் குரல் இவரது கவிதைகளுக்குரியது . மொழியின் வனப்பும் தொனியின் சிறப்பும் ஆசையும் நிராசையும் பிரிவறக் கலக்கும் ஒரு நூதனமான வெளியும் என இவரது கவிதைகள் நமது அனுபவப் பரப்பை அகலப்படுத்துகின்றன. பெயரில் மட்டுமல்ல இவரது கவிதைகளிலும் வினோதம் இருக்கின்றது. வினோதினி சச்சிதானந்தன் தெல்லிப்பழையில் 1969இல் பிறந்தவர். மஹாஜனா கல்லூரியில் தன் ஆரம்ப இடைநிலைக் கல்வியைப் பெற்றவர். கவிதை-ஓவியத்துறைகளில் நாட்டம்கொண்ட இவரது கவிதைகள் சரிநிகர் (கொழும்பு), தலித் (தமிழ்நாடு), வைகறை (கனடா) போன்ற இதழ்களில் பிரசுரமாகி கவனத்தை ஈர்த்துள்ளன.

### 7535

**முத்துக்குமார கவிராசர் பிரபந்தத் திரட்டு.** முத்துக்குமார கவிராசர் (மூலம்), கு.முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை (தொகுப்பாசிரியர்). சுன்னாகம்: புலவரகம், மயிலணி, 1வது பதிப்பு, 1952. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை, வண்ணார்பண்ணை).
iv, 30 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 17x12 சமீ.

முத்தகச் செய்யுள் பாடுவதில் வித்தகரான வரகவி அம்பலவாணபிள்ளை முத்துக்குமார கவிராசர் (1780-1851) இறந்து நூற்றாண்டு கழிந்த நிலையில் அவரது பாடல்கள் பலவற்றைத் திரட்டி இப்பிரபந்தம் வெளியிடப்பட்டுள்ளது. இவர் யாழ்ப்பாணத்தில் உடுவில் பகுதியில் பிறந்தவர். சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் இவரது நன்மாணாக்கருள் ஒருவர் என்பதும் இங்கு

குறிப்பிடத்தக்கது. ஞானக்கும்மி, யேசுதம பரிகாரம் ஆகிய இரு நூல்களும் கிறீஸ்து மதக் கொள்கைகளைக் கண்டித்து முறையே கும்மிச் சந்தங்களாலும் ஆசிரிய விருத்தங்களாலும் இயற்றப்பெற்றன. ஐயனார் ஊஞ்சல்- சுன்னாகத்தில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள ஐயனார் மேலது. தனிப்பாடல்கள் தோத்திரரூபமாக யாழ்ப்பாணத்துத் திருத்தலங்கள் மீது பாடப்பெற்றவை. இந்நூலில் முறையீடு, சிதம்பர நடராசர் தோத்திரம், மாவைச் சுப்பிரமணியர் தோத்திரம், திருவிழாத் தரிசனப்பலன், திருவிழாச் சேவையின் சிறப்பு, சப்பர மஞ்சத் திருவிழா, சுப்பிரமணியக் கடவுள் பவனி வருதல், காதல் மகளிர் செயல், பேறுபெறல், நல்லைச் சுப்பிரமணியர் தோத்திரம், மயிலை நரசிங்கமூர்த்தி தோத்திரம், ஐயனார் தோத்திரம், சுன்னாகம், கிறீஸ்தவர்கள் எங்களை அடுத்துக் கெடுத்தார்கள், சுன்னாகம் ஐயனார் ஊஞ்சல், கப்பற்பாட்டு, ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. இந்நூலில் தொகுப்பாசிரியர், முத்துக்குமார கவிராசரின் வம்சாவளியில் வந்தவரான சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் மகனாவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35990).

### 7536

**முழுக் காதல்.** ரேணுகா மாறன். லண்டன்: ஆசிரியர், 1வது பதிப்பு, மார்ச் 2011. (Middlesex HA0 3HS: RS Printers Limited, 34 Court Parade, East Lane, Wembley.)
(4), 91 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 6., அளவு: 18.5x13 சமீ.

யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலயம், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றில் ஆரம்ப-இடைநிலைக் கல்விகற்ற ரேணுகா, லண்டனில் புலம்பெயர்ந்த பின்னர் தேம்ஸ் வலி பல்கலைக்கழகத்தில் கணக்கியல்துறையில் கற்றுத் தேர்ந்து, கணக்காளராகப் பணியாற்றுகின்றார். ஆசிரியர் கல்வியும், உளவள ஆலோசனைக் கல்வியும் பெற்ற இவர் ஆர்.எஸ்.சி. நிறுவனத்தை உருவாக்கி கணக்கியல்துறை, மற்றும் உளவளத்துணை சேவைகளையும் ஆற்றிவருகின்றார். இந்நூலில் முதல் 37 பக்கங்களிலும் முழுக்காதல் என்ற பிரிவின் கீழும், 38-86 பக்கங்களில் முடிந்த காதல் என்ற தலைப்பின்கீழும் காதல் சார்ந்த தனது கவிதைகளைப் பதிவுசெய்துள்ளார்.

### 7537

**மௌனமாய் இருக்க முடியாமல்: கவிதைத் தொகுப்பு.** பெ.புண்ணியமூர்த்தி. கண்டி: மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், இல.18/13, பூரணாவத்தை, பதிப்பு விபரம் இல்லை. (பண்டாரவளை: சைபிக்ஸ் கிராப்பிக்ஸ், இல. 14/A, ஐக்கிய வர்த்தக நிலையம், பிரதான வீதி).
xiv, 15-92 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ.

மலையக இலக்கியத்தின் புதுவரவாக வந்துள்ளதொரு கவிஞனின் உள்ளத்து உணர்வுகளை கவிதாவரிகள் மூலம் இந்நூல் நமக்குப் புலப்படுத்துகின்றது. "கவிதை என்ற அந்த மாகடலுக்குள் மூழ்கி முத்தெடுக்க நான் நினைக்கவில்லை. கரையோரம் நின்று கால்களை நனைக்கவே விரும்புகின்றேன்" என்று அவையடக்கத்துடன் தொடங்கும் கவிஞரின் கவிதைகளில் அனுபவக் கவிஞனின் படிமங்கள் ஆங்காங்கே தெரிகின்றன.

### 7538

**ரசவாதம்.** தில்லைநாதன் பவித்ரன். திருக்கோணமலை: அகில இலங்கை இளங்கோ கழகம், திருக்கோணமலைக் கிளை, 1வது பதிப்பு, மார்கழி 2010. (திருக்கோணமலை: சண்சிவா பதிப்பகம்).
xx, 56 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x13 சமீ.

இந்நூலில் திருக்கோணமலை, லிங்க நகரைச் சேர்ந்த இளம் கவிஞன் பவித்ரன் எழுதிய 36 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இனவாதத்திற்கும் மதவாதத்திற்கும் எதிரான புதியபரிமாணத்தை இக்கவிதைகள் தருகின்றன.

### 7539

**வண்ணத்துப் பூச்சிகள் மீது நத்தைக் கூடுகள்.** நந்தவனம் சந்திரசேகரன். திருச்சி 620003: இனிய நந்தவனம் பதிப்பகம், 17, பாய்க்காரத் தெரு, உறையூர், 1வது பதிப்பு, பெப்ரவரி 2010. (திருச்சி: சித்ரா பிரிண்டர்ஸ்).

*64 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21x14 சமீ.*

*தமிழகத்திலிருந்து இனிய நந்தவனம் என்ற மக்கள் மேம்பாட்டு மாத இதழை நடத்திவரும் ஈழத்தவரான த.சந்திரசேகரன் தனது சஞ்சிகையின் 45 இதழ்களில் எழுதி வெளிவந்த ஹைக்கூ கவிதைகளை இந்நூலில் தொகுத்து வழங்கியுள்ளார். பன்முக சமூகப்பார்வைகொண்ட இக்கவிதைகள் சிறிய வரிகளில் ஆழமான கருத்துகளைப் பொதிந்து வைத்துள்ளன. வண்ணத்துப்பூச்சிகள்மீது/ நத்தைக் கூடுகள்/ பள்ளிச் சிறார்கள்... என்ற ஹைக்கூ வரிகளிலிருந்து நூலின் தலைப்பு தேர்வுசெய்யப்பட்டுள்ளது.*

***7540***

***வழிகளைத் தொலைத்த விழிகள் (கவிதைகள்).*** *விமலாதேவி சிவநேசன். சென்னை 600 017: நவரத்தினம் பதிப்பகம், 62/49 பர்கிட் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 600 017: சித்ரா அச்சக உலகம், 62/49 பர்கிட் சாலை, தி.நகர்).*
*92 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21x14 சமீ.*

*தாய்மண்ணின் துயரத்தைப் பிரதிபலிப்பதாய் அமைந்த கவிதைகளின் தொகுப்பு. ஓவியர் சி.இலங்கைநாதனின் ஓவியம் ஒன்று ஈழத்து அகதிமுகாம் வாழ்க்கையை சித்திரிப்பாக மேலட்டையை அலங்கரிக்கின்றது. நூலாசிரியர் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து ஹொலண்ட் நாட்டில் (*Pieter Korfstraat 28, 1785 JG Den Helder*) வாழ்ந்து வருகின்றார்.*

***7541***

***வாடகை இல்லாத அழகிய வீடு: கவிதைகள்.*** *தங்கமுத்து தம்பித்துரை. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*
*132 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12 சமீ.*

*கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கவிவானில் தன் கவிதைகளால் பெயர் பொறித்த ஒரு ஈழத்துக் கவிஞரின் தேர்ந்த கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்று கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பதிப்புரிமையுடன் வெளிவந்துள்ளது. வாடகை வாங்காமலே தம் இதயக்கோவிலில் தன்னை வாழ அனுமதிதந்த வானலை நேயர்களுக்கு நன்றிதெரிவிக்கும் வகையில் தலைப்புப்பெயரை நூலுக்குத் தேர்ந்துள்ளார்.*

***7542***

***விண்ணைத் தொடுவோம்: கவியரங்கக் கவிதைகள்.*** *இளம் நாவலர் (இயற்பெயர்: உதயகரன் துரைராஜா). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*
xxvi, *234 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12 சமீ.,* ISBN: *0-9730547-8-6.*

*விண்ணைத் தொடுவோம், இயற்கை, எமது கல்லூரி நினைவுகள், தாயக நினைவுகள், தமிழர் பண்பாடு, நாடும் நடப்பும், கனடாவில் யாழ்ப்பாணம், வாழ்க சுதந்திரம், சக்தி வழிபாடும் பிரபஞ்ச ரகசியமும், தெய்வீக ராகங்கள், தீபாவளி, நன்றிக் கவிதை ஆகிய தலைப்புகளில் ஆசிரியரின் 12 கவியரங்கக் கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. மின்பொறியியல்துறை வல்லுநரான நூலாசிரியர் கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார். 1996இல் ஸ்ரீலஸ்ரீ சுவாமி சச்சிதானந்தாவினால் கவிராயர் என்ற பட்டத்தைப் பெற்றவர். இளநாவலர் என்ற பட்டம் 1998இல் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தினால் வழங்கப்பட்டது.*

***7543***

***விநாயகப் பா (பன்னூல் தொகுப்பு).*** *வி.கந்தவனம். சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).*
*352 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 22.5x14.5 சமீ.,* ISBN: *978-81-89708-25-2.*

கவிநாயகர் கந்தவனம் விநாயகப் பெருமான் மீது பாடிய ஏழு நூல்களைத் தொகுத்து இந்நூல் வெளிவந்துள்ளது. **விநாயகப்பா** என்ற நூல் அவரது பிறப்பிடமான நுணாவிலில் அமைந்துள்ள கொல்லாபுரி வீரகத்தி விநாயகர்மீது பாடப்பெற்ற பக்திப்பாடல்களை உள்ளடக்கி 1993இல் காந்தளக வெளியீடாக முன்னர் வெளிவந்தது. அந்நூலின் தலைப்பே இந்நூலுக்கும் இடப்பட்டிருக்கிறது. **விநாயக வெண்பா** - கனடாவில் 2004இல் வெளியிடப்பட்டது. நாவலப்பிட்டியில் தொடங்கி, கனடாவில் தொடர்ந்த *ஆத்மஜோதி* ஆன்மீக இதழில் வெளியாகிய 101 பாக்கள் கொண்ட பக்தி இலக்கியம் இது. விநாயகரின் மகத்துவம், அருட்பிரவாகங்கள், சிறப்புக்கள் யாவும், இலக்கியம், மொழி, அரசியல் சாயல்களுடன் விநாயக வெண்பாவில் வெளிவந்துள்ளன. **விநாயக விருத்தம்** - 2004இல் கனடா இந்து சமயப் பேரவையினால் வெளியிடப்பட்டது. **தில்லையம்பலப் பிள்ளையார் சிந்து**- 1995இல் பாடப்பெற்றது. முன்னர் நூலாக வெளிவந்ததாகத் தகவல் இல்லை. **விநாயகர் பதிகங்களில்**- கவிநாயகர் அவ்வப்போது விநாயகப் பெருமான் எழுந்தருளிய தலங்கள் மீது பாடிய பதிகங்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. **எங்குமுள்ள பிள்ளையார்** என்ற தலைப்பில் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் உள்ள பிரபல்யமான பிள்ளையார் தலங்கள் மீது ஒவ்வொரு பாடலும் பாடப்பெற்றுள்ளன. இவையும் ஆத்மஜோதி இதழ்களில் வெளிவந்தவையே. தொகுப்பில் ஏழாவதாக இடம்பெற்றுள்ளது **விநாயக கீர்த்தனைகளாகும்**. மேற்கண்ட ஏழு நூல்களுக்கும் எழுதப்பட்ட அணிந்துரைகளும் இத்தொகுதியை அலங்கரிக்கின்றன.

### 7544

**வீழ்தலின் நிழல்: கவிதைகள்.** எம்.றிஷான் ஷெரீப். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2010. (சென்னை 60005: மணி ஓப்செட்).
80 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89359-96-6.

வலி நிறைந்த கணங்களுக்குள்ளிருந்து எட்டிப்பார்க்கும் கவிதைகள் இவை. மெல்லிசை அழிந்த காலத்தைப் பற்றிப் பேசுகிறார் எம்.றிஷான் ஷெரீப். சமகாலத்து ஈழக்கவிஞர்களில் தொடர்ந்து எழுதுபவரும் அதனாலேயே கவனத்தைக் கோருபவருமான றிஷானின் 56 கவிதைகள் கொண்ட தொகுப்பு இது. இதுவே இன்றைய ஈழக் கவிதையின் திசைகாட்டியாகவும் அமைகின்றது. ஒவ்வொரு துகளும் செஞ்சாயம் பூசிக்கொள்ள நிலத்திலும் மணலிலும் ஊர்கின்ற கருங்குருதிக்கிடையிலும் மனிதனின் வாழ்வியல் வாஞ்சையை அழுத்தமாகச் சொல்லுகின்றன இந்தக் கவிதைகள்.

### 7545

**வேர் அறுந்த மரங்கள்.** நுணாவில் நா.கணபதி. (இயற்பெயர்: நாகலிங்கம் கணபதிப்பிள்ளை). கனடா: N.Kanapathy, 21 Place De Lane, Vaudreuil, Dorion (QC) 57V 0G8, 1வது பதிப்பு, மார்ச் 2009. (கொழும்பு 6: டெக்னோ அச்சகம், 55 Dr. E.A.Cooray Mawathe).
156 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

தன் ஆத்மதிருப்திக்காக, சமூகத்தின்பேரில் தனக்குண்டான கருத்தீடுபாட்டாலும், இரக்கத்தினாலும், தன்மனதில் அவ்வப்போது உதித்த கருத்துக்களைக் கருவூலமாகக் கொண்டு, காட்டாற்றுவெள்ளம்போல் கவிதைகளாக வடித்திருக்கிறார். போர், புலம்பெயர் மக்களின் அவதி, பெற்றோரைப் பேணத்தவறும் பிள்ளைகள், மக்களின் அவலநிலை, தமிழ்மொழியின் பண்டைய சிறப்பு, தமிழினத்தின் இன்றைய பலவீனம், தெய்வம், இயற்கை, சிலப்பதிகாரச் சிந்தனைகள், இராவணனைப் பற்றிய புதிய நோக்கு, விருந்தோம்பல், இனவெறி, அரசியலாளர் சீரழிவு, புலவன் என்பவன் யார், என்றவாறாகப் பல கருத்துக்களைத் தனது கவிதைகளின் வாயிலாகப் பதிவுசெய்திருக்கிறார். இந்நூலாசிரியர் (1930-) யாழ்ப்பாண மாவட்டம், சாவகச்சேரியில் நுணாவில் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நில அளவைத்திணைக்களத்தில் பணியாற்றியவர். 15 ஆண்டுகள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பணியாற்றிய வேளையில்அங்கு புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையுடன் இலக்கியத்தொடர்புகொண்டிருந்தவர். மட்டக்களப்புத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது, சிலம்பின் செல்வி என்ற சிலப்பதிகாரக் காப்பியத்தை கிராமப்புற இசையுருவில் பாடல்களாக எழுதி வில்லிசையில் முகில்வண்ணன் (இராயப்பு) உதவியுடன் மேடையேற்றியவர். 1994முதல் புலம்பெயர்ந்து கனடாவின் மொன்றியலில் வாழ்ந்துவருகின்றார்.

### 7546

**வேலிகளைத் தாண்டும் வேர்கள்.** நாச்சியாதீவு பர்வீன், எல்.வஸீம் அக்ரம் (தொகுப்பாசிரியர்கள்). அனுராதபுரம்: படிகள் பதிப்பகம், 519G/16, ஜயந்தி மாவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 2010, (அனுராதபுரம்: நியு விமலி பதிப்பகம்).
iv, 72 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-50697-2-4.

அனுராதபுர மாவட்டத்திலிருந்து கடந்த ஆறு ஆண்டுகளாக வெளிவந்துகொண்டிருக்கும் படிகள் என்ற சிற்றிலக்கிய இதழில் வெளிவந்த தேர்ந்த கவிதைகள் இவை. இவ்விதழின் ஆசிரியர் எல்.வசீம் அக்ரம், நாச்சியாதீவு பார்வீன் இருவரும் இணைந்து தொகுத்திருக்கும் இக்கவிதைத் தொகுப்பில் அன்பு ஜவஹர்ஷா, பேனா மனோகரன், கெக்கிராவ ஸஹானா, நாச்சியாதீவு பர்வீன், கெக்கிராவ ஸுலைஹா, எம்.சி.ரஸ்மீன், அனுராதபுரம் ரஹமதுல்லாஹ், எல் வசீம் அக்ரம் ஆகியோரின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கவிதை நூலுக்கான அணிந்துரையை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலாநிதி செ.யோகராசா வழங்கியுள்ளார். அனுராதபுரத்து இலக்கியம் என்னும் தலைப்பில் 1900-1948 வரையிலான காலப்பகுதியில் வாழ்ந்த வரகவி முஹம்மது மீராலெப்பை, ஆலிம் சாய்பு, அவரது பங்களிப்பு பற்றியும், அனுராதபுர இலக்கியவாதிகளின் வெளியீடுகள் பற்றியும் குறிப்புகள் உள்ளன.

**7547**
**வேள்வித் தீ: கவிதைகள்.** சந்திரகாந்தா முருகானந்தன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 94: பி.வி.ஆர். ஆப்செட்).
xvi, 112 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12 சமீ.

ஈழத்துப் பெண்ணிய எழுத்தாளர் சந்திரகாந்தாவின் படைப்புகள் 2003முதல் மல்லிகை போன்ற ஈழத்துச் சஞ்சிகைகளில் வெளியாகியுள்ளன. பெண் விடுதலையும் சமத்துவமும் என்ற முதலாவது பத்தி எழுத்துக்களின் தொகுப்பையடுத்து நூலுருவில் வெளிவரும் இவரது முதலாவது கவிதை நூல் இதுவாகும். 52 கவிதைகளும் எளிமையான எழுத்து நடையில் ஆழமான கருத்துக்களை விதைப்பவை. பல பெண்ணியக் கருத்துக்களை வெளிப்படுத்துவன. பெண்களின் அவலங்களை மட்டும் பட்டியலிடுவதுடன் நில்லாது, அவற்றிற்கான தீர்வினைக் காணவும் விளைகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 630594).

மேலும் பார்க்க: 7810, 7862,

## 894.8(2) தமிழ் நாடகங்கள்

**7548**
**இடைவெளி: குறுநாடகங்களின் சேகரம்.** எம்.ராமச்சந்ரன். மாத்தளை: எம்.ராமச்சந்ரன், 11/10, ரிவர்சைட் ரோட், களுதாவளை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1997. (கண்டி: சிட்னி பிரின்டர்ஸ், 258/1, டீ.எஸ்.நேனாநாயக்க வீதி).
x, 74 பக்கம், விலை: ரூபா 65., அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-96076-1-8.

நாட்டத்தில் கொள்ளாரடி, நல்லதோர் வீணைசெய்தே, நடைமுறை, ஓநாய்களே இப்படித்தான், காணி நிலம் வேண்டும், இடைவெளி, நிலாவே வா, படைப்பு ஆகிய எட்டு குறுநாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 505650).

**7549**
**இது தான் முடிவு (சமூக நாடகம்).** நா.இராசரத்தினம். யாழ்ப்பாணம்: ஜெயந்தி வெளியீட்டகம், நல்லூர், 1வது பதிப்பு, ஏப்ரல் 1990. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்).
(8), 60 பக்கம், புகைப்படத் தகடு, விலை: ரூபா 25., 18.5x12 சமீ.

இலங்கைக் கலைக் கழகத்தின் தமிழ் நாடகக் குழுவினர் 1966இல் நடத்திய நாடக எழுத்துப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற நாடகம். மாத்தளையில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் மாணவரின் மேடையேற்றத்திற்காக எழுதப்பட்ட இந்த நாடகம், மாத்தளை புனித தோமையர் கல்லூரி நூல்நிலைய நிதிக்காக 23.7.66இல் மேடையேற்றப்பட்டது. இந்நூலாசிரியர் பின்னாளில் யாழ் மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றியவர். மனிதனின் நடத்தைகளின் முரண்பாடுகளையும் அவன் அழிவுக்கு அவனது நடத்தைகளே காரணமாய் அமையும் பாங்கினையும் ஏழு காட்சிகளில் தத்ரூபமாக இந்த நாடகத்தில் வடித்துள்ளார்.

### 7550

**இரட்டையர்.** S.N.J.மரியாம்பிள்ளை. யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: ஷார்ப் கிராப்பிக்ஸ் பிரைவேட் லிமிட்டெட்).
16 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-9262-12-2.

விசுவாசத்தின் தந்தை ஆபிரகாமுக்கு இரு புதல்வர்கள். அவர் அடிமைப்பெண்ணான ஆகாருக்குப் பிறந்த இஸ்மாயேல் மூத்தவன். அவரது மனைவி முதிர்ந்த வயதில் பெற்றெடுத்த புதல்வன் ஈசாக் இளையவன். ஈசாக் வளர்ந்து மெசொபொத்தாமியாவில் உள்ள இரபேக்காள் என்பவளை மணம்புரிகிறான். நீண்டகாலம் கருவுறாமல் இருந்த இரபேக்காள் பின்னாளில் இரட்டைப்பிள்ளைகளை ஈன்றெடுக்கிறாள். பிறப்பிலிருந்தே விரோதம் பாராட்டியவர்களாக எசாயு முதலிலும், யாக்கோபு பின்னரும் அவதரித்து வளர்கிறார்கள். அக்கால வழக்கப்படி உரிமைச் சொத்தில் முன்னுரிமை மூத்த புதல்வனுக்கே உரியது. அதன்படி எசாயூவிற்கு உரித்தான உரிமைச் சொத்தையும், தந்தை ஈசாக்கால் அவனுக்குக் கிடைக்கவிருந்த அருளாசியையும் தாயின் ஆலோசனைப்படி தந்திரமாகப் பெற்றுக்கொள்கின்றான் யாக்கொபு. தான் பெற்ற புதல்வர்கள் இருவரையும் அன்புசெய்ய வேண்டிய இரபேக்காள், இளையவனுக்காக மூத்தவனுக்கு ஓரவஞ்சனை செய்கிறாள். இதுவே இரட்டையர் நாடகக் கருவாகும்.

### 7551

**இஸ்ரயேலின் மாமன்னன்.** இன்பராஜன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: கீதா பப்ளிக்கேஷன்ஸ்).
82 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9262-18-1.

சவுல் மன்னனின் மரணத்தின் பின் அவனது குலமரபினர் ஒடுக்கப்பட்டு, தாவீது என்பவன் இஸ்ரயேல் என்ற இனத்தின் மாமன்னனாக விளங்கிய வரலாற்றை இந்த நாடகம் கூறுகின்றது. அரச பதவிக்காக, குலத்திற்குள்ளும், குடும்பத்திற்குள்ளும் நடந்தேறிய முரண்பாடுகளையும் மோதல்களையும் உயிரிழப்புகளையும் இந்த நாடகத்தில் காணமுடிகின்றது. அதிகார ஆசையின் காரணமாகத் தந்தையுடன் தனையன் மோதிக்கொண்டதையும் இந்நாடகம் பதிவுசெய்கின்றது. யூதாவென்றும் இஸ்ரயேல் என்றும் பிரதேசரீதியாகப் பிளவுண்டுகிடந்த இஸ்ரயேல் இனத்தை ஒரு குடையின்கீழ் கொண்டுவந்தவன் என்ற பெருமையும் தாவீதுக்கு உள்ளது. அதிகார துஷ்பிரயோகம், தனிமனித பலவீனம், நன்றி மறவாமை, வாழ்க்கையில் நெருக்கடிகளும் துன்பமும் சூழும்போது தகர்ந்துபோகாது அவற்றை எதிர்கொள்ளும் மனவலிமை என்பவற்றை இந்நாடகத்தில் காணமுடிகின்றது.

### 7552

**கங்கையின் மைந்தன்: நாடகங்கள்.** அகளங்கன் (இயற்பெயர்: நா.தர்மராஜா). மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, 2009. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).
121 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-8715-10-7.

அகளங்கனின் நான்காவது நாடக நூல். அசோகவனம், கங்கையின் மைந்தன், வாலி, திருவாதவூரர், அனார்க்கலி, கவரி வீசிய காவலன் ஆகிய ஆறு நாடகங்களின் தொகுப்பாக இது அமைந்துள்ளது. அசோகவனம் இராமாயணத்தில் வரும் ஒரு காட்சி. இந்நாடகம் 2009ம் வருட தமிழ்த்திறன் போட்டிக்காக எழுதப்பட்டு முதலிடம் பெற்றது. கங்கையின் மைந்தன் மகாபாரதத்தில் வரும் பாத்திரமான பீஷ்மரின் தியாகம் பற்றியது. வாலி- இதிகாசப் பாத்திரமாக இராமாயணத்தில் வரும்

வாலியைப் பற்றியது. திருவாதவூரர் சைவசமய குரவருள் ஒருவரான மாணிக்கவாசகரின் வாழ்வின் முற்பகுதியாகும். அனார்க்கலி ஒரு இஸ்லாமியக் காதல் கதை. கவரி வீசிய காவலன் புறநானூற்றுச் செய்தியொன்றின் நாடகஉரு. கங்கையின் மைந்தன், வாலி ஆகியவை இலங்கை வானொலியில் ஒலிபரப்பானவை.

### 7553

**கந்தன் கருணை.** என்.கே.ரகுநாதன் (மூலக்கதை), அம்பலத்தாடிகள் (நாடக வார்ப்பு). யாழ்ப்பாணம்: அம்பலத்தாடிகள், 1வது பதிப்பு, ஐப்பசி 1973. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ பார்வதி அச்சகம்).
xiv, 48 பக்கம், விலை: ரூபா 1.75, அளவு: 21x13.5 சமீ.

காத்தான் கூத்துப்பாணியில் அமைந்த இசை நாடகம். திரிலோகசஞ்சாரியான நாரதரும், கலியுக வரதனான கந்தனும் அவன் காதலுக்குரிய தெய்வயானையும் இந்நாடகத்தின் பிரதான பாத்திரங்கள். மக்களுக்கு நன்குதெரிந்த கதைக்கரு, சாதியத்துக்கெதிரான போராட்டம் என்ற முற்றிலும் புதிய தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 7554

**கலகம்.** இன்பராஜன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்).
(3), 38 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-9262-19-x.

திருமறையில் பொதிந்துள்ள கருத்துக்களை நாடகவரிசையில் தரும் முயற்சியில் திருமறைக் கலாமன்றம் ஈடுபட்டு வந்துள்ளது. வண.பேராசிரியர் என்.எம்.சவேரியை பிரதம பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள தொடரில் 18ஆவது நூலாக இந்நாடக நூல் அமைந்துள்ளது. எகிப்திலிருந்து விடுதலையாகி இஸ்ரயேலர்கள் கானானை நோக்கிய பயணத்தில் பட்ட துயரங்கள் பல. தொடர்ச்சியான பயணம், ஓயாத போர், நிறையாத வயிறு, தீராத தாகம், வருத்தும் பிணி, பகைவர் பற்றிய அச்சம், வேற்றினத்தாரின் இன்ப வழிபாடுகளின் கவர்ச்சி, இஸ்ரயேலரின் கடுமையான நெறிமுறைகள், கொள்கைகள், தண்டனைகள் போன்றவைகளால் பலமுறைகளிலும் இஸ்ரயேலர்கள் நொறுங்குண்டனர். இதனால் தமது தலைவர்களான மோசே, யோசுவா போன்றோருக்கு எதிராக இஸ்ரயேலர் கலகம் விளைவித்தமையை இந்நாடகத்தில் படிக்கமுடிகின்றது.

### 7555

**களங்கம்.** நீ.மரியசேவியர். யாழ்ப்பாணம்: நாடகப் பிரதியாக்கப் பகுதி, திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2000. (கொழும்பு : லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்).
(5), 35 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-9262-22.

இப்பக்தி நாடகம் 1969இல் இருமணிநேர முழு நாடகமாக எழுதப்பட்டது. 1972இல் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. பின்னாளில் 45 நிமிட நாடகமாகச் சுருக்கி எழுதப்பட்ட பிரதியே இது. மூலப்பிரதி இல்லாத நிலையில் சுருக்கப்பிரதி நூலுருவாகின்றது. இயேசுவை மேடைக்குக் கொண்டுவராது, இரண்டு வழக்கறிஞர்களும், ஒரு நீதிபதியுமாக கிறீஸ்துவின் சாவுக்கு யார் காரணம் என்ற ஆய்வை மேற்கொள்வதற்கூடாக இந்நாடகம் நகர்த்தப்படுகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட அக்களங்கத்தின் குற்றவாளி யார் என்ற கேள்விக்கு மானிடத்தின் பாவங்களே அக்களங்கத்தின் காரணி என்று முடிவுகூறப்படுகின்றது.

### 7556

**கனவு பலித்தது.** S.N.J.மரியாம்பிள்ளை. யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: ஷார்ப் கிராப்பிக்ஸ் பிரைவேட் லிமிட்டெட்).
70 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-9262-02-5.

இரெபேக்காளின் சொற்கேட்ட ஈசாக் தனது மகன் யாக்கோபை மெசொபொத்தாமியாவில் உள்ள லாபானின் பெண்களில் ஒருத்தியை மணந்துகொள்ளஅனுப்பிவைத்தான். லாபானின் தந்திரத்தால்

லீயாளை மணம் முடித்து, அதன் பின் தான்விரும்பிய அவளின் சகோதரி இராக்கெலையும் மணம் முடிக்கிறான். ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியரை மணப்பது அக்காலத்தில் வழக்கமாயிருந்தது. மூத்தமனைவி மூலமாக ஆறு புதல்வர்களையும், இளைய மனைவி மூலமாக சூசை என்ற ஒரு பிள்ளையையும், இராக்கெலின் பணிப்பெண்ணான பாலாளின் மூலம் மேலும் இரு பிள்ளைகளையும், மற்றொரு பணிப்பெண் ஜெல்பாளின் மூலமாக இரு பிள்ளைகளையும் பெற்றுக்கொள்கிறான் யாக்கோப். மொத்தம் 11 பிள்ளைகள் பிறந்த நிலையில் ஒருநாள் எபிராத்தாவுக்குப் போகும் வழியில் கண்ட கனவு இந்நாடகத்தின் களமாகின்றது.

### 7557

**காலையும் மாலையும்.** செ.அ.அழகராஜா. யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).
32 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

திருமறையில் பொதிந்துள்ள கருத்துக்களை நாடகவரிசையில் தரும் முயற்சியில் திருமறைக் கலாமன்றம் ஈடுபட்டு வந்துள்ளது. வண.பேராசிரியர் என்.எம்.சவேரியை பிரதம பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள தொடரில் மற்றொரு நூலாக இந்நாடக நூல் அமைந்துள்ளது.

### 7558

**காவிய நாயகன்.** நீ.மரியசேவியர். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2004. (கொழும்பு 15: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்).
(12), 85 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-9262-26-2).

திருமறைக்கலாமன்றம் அருட்திரு மரியசேவியர் அடிகளின் காவிய நாயகன் திருப்பாடுகளின் காட்சியை நூலாக்கியுள்ளது. திருப்பாடுகளின் காட்சி ஒரு சாதாரண நாடக வடிவமல்ல. அதன் பின்னால் ஒரு ஆன்மீக ஒழுக்கமுள்ளது. அது கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினை, நிதர்சனமாக அரங்கில் நிகழ்த்தும்போது பார்ப்போரின் மனதில் கழிவிரக்கத்தை தோற்றுவித்து பக்திப் பற்றுதலை ஏற்படுத்தி தமது பாவங்களுக்காக ஒவ்வொருவரும் மனம் வருந்துகின்ற வினைத்திறனை ஏற்படுத்துகின்றது. யாழ்ப்பாணத்தில் 1952இல் முதன்முதலில் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு லோங் அடிகளாரால் ஆங்கிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழில் அதனை மொழிபெயர்த்தவர் மரியசேவியர் அடிகளே. மாட்டுத் தொழுவத்தின் மகிமையும், பாரச் சிலுவையோடு இயேசு செய்த பாதயாத்திரையும், கல்வாரி மலை கண்ட கோர மரணமும், இறுதியில் கல்லறையின் தகர்ப்பும் உயிர்ப்பும் என காலாகாலமாக நாம் கண்டும் கேட்டும் வந்த கதையே இது.

### 7559

**கோபுரத்தில் குழப்பம்.** இன்பராஜன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்).
(3), 21 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

பிரளயத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் செம், ஹாம், பீத் போன்ற நோவாவின் புதல்வர்களின் குடும்பங்கள் ஆற்றுப்பள்ளத்தாக்கை நாடிச்சென்று வாழத் தொடங்கின. மந்தைகளை மேய்த்தனர். செல்வம் கொழித்தது. மக்கள் பெருகினர். நதிக்கரைகளிலும், குன்றுகளிலும் கூடாரங்கள் தோன்றின. நகரங்கள் உருவாகின. நாகரீகம் வளர்ந்தது. மோசங்களும் மோசடிகளும் ஆடம்பரங்களும் ஒழுக்கக்கேடுகளும் நகரத்தை நரகமாக்கின. ஆன்மீக வாழ்வு நலிவுற்றது. பட்டினத்தில் பாவம் பொலிந்தது. மனித இதயத்திலிருந்து கடவுள் புறக்கணிக்கப்பட்டார். அக்கிரமம் அதிகரித்தபோது கடவுளை நம்பியவர்களின் இதயத்திலும்கடவுளைப்பற்றிய நம்பிக்கை தளரத் தொடங்கியது. கடவுளைப் பறக்கணிக்கத் தொடங்கியதன் விளைவு தான் பாபேல் கோபுரம். ஆயின் உலகத்தில் அநீதி தோன்றும்போது இறைவன் தன் வல்லபத்தால் மக்களைத் தண்டிக்கிறார் என்பதை இந்நாடகம் போதிக்கின்றது. பைபிள் தொன்மங்களில் வரும் ஒரு கட்டிடம் பாபேல் Babel கோபுரமாகும். ஒரே மொழிபெசி வாழ்ந்த உலகத்து மக்கள் பூமியிலிருந்து சொர்க்கத்தைத் தொடும் வகையில் ஒரு கோபுரத்தைக் கட்டத் தொடங்கினார்கள். அதனால் இறைவன் கோபம் கொண்டு சாபமிட்டார்

*எனவும் அதன் பின்பே பலமொழிகளைப்பேசி தொடர்பற்ற பல சமுதாயங்கள் உலகில் உருவாகின என்பதும் ஐதீகம்.*

### 7560

***சட்டங்கள்.*** இன்பராஜன். *யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்).*
*(3), 53 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *955-9262-14-9.*

*இஸ்ராயேல் மக்களின் வரலாற்றில் யாத்திராகமத்தின் நடுப்பகுதியில் ஆங்காங்கே சிறுசிறு துணுக்குகளாகத் தென்படும் சட்டங்கள், அதன் இறுதிப்பகுதியில் அவர்களது சமூக, இறைவாழ்வின் பிரிக்கமுடியாத அம்சங்களாக இருப்பதை அவதானிக்கமுடியும். தங்கள் தேசியத்தின் தனித்துவத்தைப் பேணுவதில் இந்தச் சட்டங்கள் மிகுந்த அழுத்தம் பெறுவதை உணர்த்துவதாக உள்ளது. இச்சட்டங்கள் இறைவனால் மோயீசனுக்கு வழங்கப்பட்டவை. அவற்றை மோயீசன் தமது இனத்தின் நடைமுறை வாழ்வோடு இணைப்பதில் மிகுந்த கவனம் செலுத்தினார். அயலவனை அன்பு செய்வதில் அழுத்தத்தை இச்சட்டங்கள் கொண்டுள்ளன. இச்சட்டங்களிற் சில காலத்திற்கும் கருத்துக்கும் ஒவ்வாதனபோல் இருப்பினும் சமூக ஒழுங்கைப் பேணுவதில் இவை காத்திரமான பங்கினை வகிக்கின்றன என்பது உண்மை. இதன் அடிப்படையில் எழுந்தது இந்நாடகம். இந்நூல் 1995ம் ஆண்டுக்குச் சற்று முன்னதாக வெளியிடப்பட்டிருக்கலாம்.*

### 7561

***சத்திய தரிசனம்: ஓர் தமிழ் நாடகம்.*** வே.கந்தையா. *மலேசியா:* வே.கந்தையா, Stenographer, Secretariat, Kuala Lumpur, *1வது பதிப்பு, மே 1929. (மலேசியா: எஸ். லாசர் அன் சன்ஸ், கோலாலம்பூர்).*
*(8), 88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13 சமீ.*

*இது ஒரு அரசன் துன்மதி படைத்திருந்து, ஜனங்களுக்கு இம்சையிழைத்து வந்து பின்பு திருந்தி நல்மதிபடைத்து சத்தியத்தைக் கடைப்பிடித்து நல்வழியொழுகினான் என்னும் வரலாற்றைக் கூறுகின்றது. மலேசிய மண்ணில் வாழ்ந்த தமிழரிடையே காணப்பட்ட சமூக ஊழல்களான குடிவெறி, அதனால் எழும் தீய செயல்கள், சாதியம், மூடவழக்கங்கள், இவைபோன்ற பிற விரும்பத்தகாத செயல்களைக் கண்டித்து துன்மதி (அநியாயபுர மன்னன்), அகங்காரம், வஞ்சகம்,(அரசனின் மனைவியர் இருவர்), பொய் (மந்திரி), சந்தேகம், பொறாமை (அரண்மனை ஊழியர் இருவர்), அநீதி, வெறி, கோபம் (பிரதானிகள்), அறியாமை, அனாச்சாரம், சோம்பல், மறதி, மந்தபுத்தி (பாடசாலைப் பராமரிப்பாளர்கள்), கோள், குண்டுணி (தூதுவர்கள்) முதலிய தீக்குணங்களை உருவகப்படுத்தி அவற்றைக் கதாபாத்திரங்களாக்கி அநியாயபுரி என்ற கற்பனை நாட்டில் இப்பாத்திரங்களை நடமாடவிட்டு நாடகக் கதையை வளர்த்துச் செல்கிறார். நல்ல கருத்துக்களையும் கண்டனங்களையும் இடையிடையே புகுத்தி தயவு, உண்மை, அறிவு, நீதி, முதலிய நற்குணங்களையும் அவ்வாறே உருவகப்படுத்திப் பாத்திரங்களாக்கி அவற்றின் மூலமாக அநியாயபுரியை நியாயபுரியாக்கும் வகையில் இப்போதனைகளை வழங்குகின்றார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35948).*

### 7562

***சாம்பல் மேடு.*** இன்பராஜன். *யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: ஷார்ப் கிராப்பிக்ஸ் பிரைவேட் லிமிட்டெட்).*
*36 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.*

*விசுவாசத்தின் தந்தையானஆபிரஹாமை விட்டுச் சென்ற அவரது இளைய சகோதரன் ஆரான் மகன் லோத்தின் குடும்பம் சொதோம் கொமாராவில் வாழ்ந்தது. எங்கே தீமை தாண்டவமாடுகின்றதோ, அங்கு இறைவன் தமது கரத்தின் வலிமையைக் காட்டுகிறார். மனித நேயத்தின் சுவடுகள் அழிந்து குப்பைமேடாகிப் போயிருந்த செதோம் கொமாராவிற்குள் இறைவன் குண்டுமணிகளைத் தேடியபோது அவரது கைகளில் கிடைத்தது லோத்தின் குடும்பமே. குண்டுமணியைக் கையில் எடுத்த இறைவன், குப்பைமேடான சொதோம் கொமொராவை கந்தக நெருப்பால் சாம்பல் மேடாக்குகின்றார்.*

**7563**

**சிம்சோன் முதல் லேவியர் வரை: நீதித் தலைவர்கள் 2.** இன்பராஜன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: கீதா பப்ளிக்கேஷன்ஸ்).
52 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 955-9262-18-1.

பெரிய உருவமும் மலைபோல் பலமும் கொண்ட சிம்சோனை கதாநாயகனாகக் கொண்ட நாடகம். இஸ்ரயேலியரை நிர்வகிக்கவும் பெலிஸ்தியரிடமிருந்து அவர்களை மீட்கவும் கடவுளால் தெரிவுசெய்யப்பட்டவனே சிம்சோன். பிறப்பிலிருந்து மழிக்கப்படாத அவன் தலைமுடியிலேயே அவனது வலிமையின் ரகசியம் அடங்கிக் கிடந்தது. ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டத்தில், ஒரு தேசிய இனம் நெருக்கடிக்குள்ளாகியிருந்த வேளையில், இனம் மாறித் திருமணம் செய்துகொள்வதன் பாதக விளைவை இந்நாடகத்தில் பார்க்கமுடிகின்றது. தனது பலத்தின் ரகசியத்தை இரண்டாவது மனைவியான தெலீலாவுக்குச் சொன்னதால் அவன் மரணிக்கநேர்ந்ததை நாடகாசிரியர் இதில் வலியுறுத்துகின்றார். சிம்சனோடு ஒட்டி லேவியர் ஒருவரின் கதையும் இதில் வருகின்றது. இதில் இஸ்ரயேல் இனத்தில் பெஞ்சமின் குலத்தில் ஒரு சிறு பிரிவினர், தன்னினச் சேர்க்கை என்னும் நோயினால் பீடிக்கப்பட்டுச் சீரழிந்ததையும் இந்த நாடகம் சுட்டுகின்றது.

**7564**

**சிலுவை உலா: பக்தி, இசை, உரை நாடகம்.** நீ.மரியசேவியர். யாழ்ப்பாணம்: நாடகப் பிரதியாக்கப் பகுதி, திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1995. (யாழ்ப்பாணம்: மகாலட்சுமி அச்சகம், 127. காங்கேசன்துறை வீதி).
(4), 24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனுக் குலத்தை மீட்க மனித அவதாரமெடுத்த இறைமகன் இயேசுவின் வரலாறு படைத்த அந்தக் கல்வாரி யாத்திரையின் இறுதி மூன்று மணி நேர நிகழ்வை இதில் நாடகமாக்கியுள்ளார். சங்க இலக்கிய வகைகளுள் ஒன்றான உலாவை பின்னணியாக வைத்து இயற்றப்பட்ட சிலுவை உலாவில் இயேசுவே பாட்டுடைத் தலைவன். அவர் சிலுவையில் பவனி வருவதாகவும், ஏழுமுறை திருவாய் மலர்ந்து ஏழுவிதமான எதிரொலிகளையும் மனநிலைகளையும், கேட்போர், பார்ப்போர், நினைப்போர் உள்ளங்களில் எழுப்புவதாகவும் இந்நாடகம் எழுதப்பட்டுள்ளது. இந்நாடகம் முதலில் 1991 மார்ச் 22,23,24ம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும், 1995 மார்ச் 10இல் கொழும்பிலும் மேடையேற்றப்பட்டது.

**7565**

**திருமறைக் காவலன்.** எஸ்.ஏ.நாதர். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்).
33 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

திருமறையானது மண்ணில் ஊன்றப்பட்ட அந்த ஆரம்பகாலத்தினை நிகழ்களமாகக் கொண்ட நாடகம் இது. இறை விசுவாசம் முளைத்தெழச் செய்த அக்காலகட்டம்- திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் விசுவாசத்தின் காவலர்களாகத் தம்மை எழச்செய்தது. அப்போஸ்தலர்கள் மாத்திரமின்றி திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் ஆண்டவனால் அழைக்கப்பட்டவரே என்ற கருத்தை இந்நாடகம் பதிவுசெய்கின்றது.

**7566**

**நமசிவாயம் அல்லது நான் யார் என்னும் ஓர் நவீன நாடகம்.** க.இராமலிங்கம். சாவகச்சேரி: க.இராமலிங்கம், ஸ்தாபகர், மட்டுவில் வடக்கு கமலாசனி வித்தியாசாலை, 1வது பதிப்பு, சித்திரை 1929. (கொழும்பு: மெய்கண்டான் அச்சியந்திரசாலை).
(10), 139 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

*மாயாபுரம் என்னும் தேசத்தில் சாவாங்கோட்டை என்னும் ஊரிலும், தபோவனத்திலும் நிகழும் கதை இது. ஆன்மநாயகர் (பஞ்சகிருத்திய கர்த்தர்) ஏகசக்கிராதிபதி, சகலகலானந்தர் (தெட்ஷிணாமூர்த்தம்) குரு, சதாசிவம் (ஆண்டான்) சிவக்கொழுந்துவை வளர்த்தவர், அறிவானந்தர் (சிவஞானம்) இளவரசன் நீதிபதி, சற்புத்தி (அருட்சக்தி) நமசிவாயத்தின் நண்பன், மனமோகனன் (திரோதானம்) மந்திரி, நமசிவாயம் (ஆன்மா) மனமோகனன் புதல்வன், ரசோகணன் (ரசோகுணம்) மனமோகனன் தத்தபுத்திரன், தமோகுணன் (தமோகுணம்) மனமோகனன் மற்றொரு தத்தபுத்திரன், விவேகானந்தர் (காலதத்துவம்) கல்யாணப் பதிவுகாரர் என்று 20 கதாபாத்திரங்களினூடாக ஆன்மீகக் கருத்தை இந்நாடகம் முன்வைக்கின்றது. எழுவகைப்பிறப்பு 84 நூறாயிரம்கோடி யோனிபேதங்களுள் விசேடமாகிய மானிட ஜென்மத்தைப் பெற்றுக்கொண்ட ஆன்மாக்களுக்கு சமயமுறைப்படி வேண்டியகாலத்தில் தத்தம் குருவினால் அனுட்டான முறைகள் உபதேசிக்கப்படுகின்றன. உபதேசம்பெற்ற ஆன்மாவின் மனம் அனுட்டான முறைகளை ரசொ தமோ குணங்களாலுண்டாகும் ஆசை ஆகாமியங்களால் மறந்திருந்து ஆபத்து நிலையில் அறிவுடன் கலந்து யோசிக்கச் சாத்துவிக குணத்தோடு செல்கின்றது. அத்தருணம் அறிவுக்கறிவாகிய கருணை தடுத்துமேல்நோக்குவிக்கின்றது. சரஸ்வதி விலாச சபை நாடகமஞ்சரி மலர் தொடரில் இரண்டாவதாக வெளிவந்த நாடக நூல். இந்நூலாசிரியர் வித்துவான் க.இராமலிங்கம், சரஸ்வதி விலாச சபை அங்கத்தவராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37490).*

### 7567

**நெறியும் நிலமும்.** *இன்பராஜன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்). (3), 57 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *955-9262-17-3.*

*திருமறையில் பொதிந்துள்ள கருத்துக்களை நாடகவரிசையில் தரும் முயற்சியில் திருமறைக் கலாமன்றம் ஈடுபட்டு வந்துள்ளது. வண.பேராசிரியர் என்.எம்.சவேரியை பிரதம பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள தொடரில் மற்றொரு நூலாக இந்நாடக நூல் அமைந்துள்ளது. நாடோடிகளாக, மந்தை மேய்ப்பவர்களாக நாடுவிட்டு நாடு அலைந்த இஸ்ரயேல் மக்கள் ஒரு தேசிய இனமாக உருப்பெறுவதற்கு மதமும், அது தொடர்பான இறுக்கமான சட்டங்களும் சடங்குகளும் மிகவும் கடுமையானவையாகவும், நடைமுறை வாழ்வில் தவிர்க்கமுடியாதனவாகவும் இருந்தன. நாடு, மொழி, என்பதற்குப் பதிலாக மதம் மட்டுமே அவர்களின் தேசிய அடையாளத்தை நிலைநிறுத்த வாய்ப்பானதாக இருந்தது. இதனால்தான் அவர்கள் நிரந்தரமாக ஒரு நாட்டில் குடியேறும்வரை அந்த மதச்சட்டங்கள், சடங்குகள் அவர்களின் ஜீவாதார அம்சங்களாக அன்று இருந்தன. ஒரு மக்கள் இனத்திற்கு அல்லது ஒரு இனக்குழுவிற்கு நிலம் எவ்வளவு முக்கியமானது என்பதை வலியுறுத்த, நிலச்சொத்தை தனது இனத்தைத் தவிர்ந்த அந்நியனுக்கு விற்பதை இந்தச் சட்டங்கள் தடை செய்தன. பொதுவாகவே சட்டங்கள் மீறப்படுகின்றன. ஆனால் இவர்களைப் பொறுத்தவரையில் இச்சட்டங்கள் அவர்களது வாழ்க்கையில் தவிர்க்கவே இயலாத நெறியாகிவிடுகின்றன. இதையே லேவியர் ஆகமத்தின் இறுதிப்பகுதியான இந்நாடகம் வலியுறுத்துகின்றது.*

### 7568

**பாலைவனப் புதல்வர்கள்.** *இன்பராஜன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு : லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்). (3), 45 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.,* ISBN: *955-9262-13-0.*

*எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இறையருளால் செங்கடலைக் கடந்த இஸ்ரயேல் மக்கள், மோயீசன் தலைமையில் பாலைவனத்தை வந்தடைந்தனர். பாலைவனத்தின் கொடிய வரட்சியைப்போல் சொல்லொணாத் துன்பங்களை மக்கள் அனுபவித்தபோது, இறைவன் அவர்களை அற்புதமாகக் காப்பாற்றுவதை இந்த அத்தியாயங்களில் காணலாம். துன்பம் வரும்போதெல்லாம், மக்கள் மனதில் இறைநம்பிக்கை தளர்வதையும், மோயீசன் அதற்காக வருந்தி இறைவனை வேண்டுவதையும் இந்தப் படலத்தில் படிக்கமுடிகின்றது. என்ன துன்பம் வந்தாலும் இறைசித்தம் நிறைவேறும் என்பதை இந்த யாத்திராகமம் சுட்டி நிற்கின்றது. இங்கு, இறைநம்பிக்கை பலம்மிக்க ஒரு பௌதீக சக்தியாகச் செயற்படுகின்றது. சீனாய் மலையில் இறைவன் மோயீசனுக்குப் பத்துக்*

*கட்டளைகளையும், சில சட்டங்களையும் வழங்குவதையும் மக்கள் சிலை வணக்கத்திற்கு அடிமையாதலையும் அதன் விளைவுகளையும் இப்படலத்தில் படித்துணரலாம்.*

### 7569

**புதிய பூமி.** *இன்பராஜன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: ஷார்ப் கிராப்பிக்ஸ் பிரைவேட் லிமிட்டெட்).*
*24 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.*

*ஆதாமின் சந்ததியில் இறைவனின் அருள்பெற்ற நோவாவின் கதை. கடந்த ஒரு யுகத்தின் அழிபாடுகளில் இருந்து புதிய ஒரு யுகத்தின் முதல் மனிதனாய், புதிய யுகச் சந்ததியின் கருப்பையாய் இனம்காணப்பட்டவன் நோவா. இவனிடமிருந்தே இறைவன் புதிய யுகத்தை உருவாக்கினார் என்கிறது திருமறை. அதனை அடியொற்றி எழுதப்பட்ட நாடகம் இது.*

### 7570

**புதிய மேய்ப்பன்.** *இன்பராஜன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: பேசும் பேனா பப்ளிக்கேஷன்ஸ், 169 ஜோர்ஜ் ஆர்.டி.சில்வா மாவத்தை).*
*(3), 34 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *955-9262-18-1.*

*திருமறையில் பொதிந்துள்ள கருத்துக்களை நாடகவரிசையில் தரும் முயற்சியில் திருமறைக் கலாமன்றம் ஈடுபட்டு வந்துள்ளது. பேராசிரியர் மரியசேவியர் அடிகளை இயக்குநராகக் கொண்டு இயங்கும் திருமறைக் கலாமன்றத்தின் திருமறைநூல் நாடக வரிசையில் இந்நாடக நூலும் அடங்கியுள்ளது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி கானான் நாட்டை நோக்கிய பயணத்தை மேற்கொண்ட இஸ்ரயேலர் துன்பங்களை மாத்திரமன்றி வெற்றிகளையும் வாழ்வில் மகிழ்ச்சியையும் கண்டனர். இஸ்ரயேலர் தமது பயணப்பாதையில் எமோரியரை முற்றாக வெற்றிகொண்டு, மோவாப்பிய சமவெளிகளில் பாளையமிறங்கிய வேளை, மன்னன் பலாக் தனக்கு ஏற்படப்போகின்ற நெருக்கடியை உணர்ந்தவனாய் கடவுளின் மனிதன் பிலயாமை இஸ்ரயேலருக்கு எதிராகச் சாபமிடும்படி கேட்கின்றான். ஆனால் பிலயாமோ, சாபத்திற்கு மாறாக திரும்பவும் திரும்பவும் வாழ்த்துக் கூறுவதையும், மோவாப்பியரின் வெற்றியிலும், இன்பக்களிப்பிலும் வாழ்வின் நிலைமாறித் தடுமாறும் இஸ்ரயேலர்கள் புதிய மேய்ப்பனாம் மோயீசனால் வழிநடத்தப்படும் நிகழ்வுகளையும் உள்ளடக்கிய எண்ணாகமத்தின் இறுதிப்பகுதிகளை இந்நாடகம் கொண்டுள்ளது.*

### 7571

**புறப்பாடு.** *இன்பராஜன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்).*
*(3), 40 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.,* ISBN: *955-9262-18-1.*

*திருமறையில் பொதிந்துள்ள கருத்துக்களை நாடகவரிசையில் தரும் முயற்சியில் திருமறைக் கலாமன்றம் ஈடுபட்டு வந்துள்ளது. வண.பேராசிரியர் என்.எம்.சவேரியை பிரதம பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள தொடரில் இந்நாடக நூலும் அடங்கியுள்ளது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி, நாடின்றி, ஊரின்றி, வீடின்றி நாற்பது ஆண்டுகளாகப் பாலைவனத்தில் இஸ்ரவேலர்கள் வாழ்ந்த வாழ்க்கையில் பட்ட தொல்லைகள், துயரங்கள், மீறல்கள், தண்டனைகள், மன்னிப்பு ஆகியவற்றின் தொகுப்பாக எண்ணாகமம் விளங்குகின்றது. தமது வாழ்வையும் தாழ்வையும் நிர்ணயிக்கும் ஜீவ மரணப் போராட்டத்திற்கு வாக்களிக்கப்பட்ட கானா நாட்டை நோக்கிய பயணத்திற்கு தமது மக்களை ஆயத்தப்படுத்திய ஒரு தேசியத் தலைமையின் ஆற்றலை, ஆளுமையை, சகிப்புத்தன்மையை இந்த எண்ணாகமத்தில் தரிசிக்கமுடிகின்றது.* **புறப்பாடு** *என்ற இந்நாடக நூல் இஸ்ரவேல் மக்கள் கூட்டமைப்பில் உள்ள ஆண்கள் அனைவரையும் அவர்கள் குடும்பங்கள், மூதாதையர் வீடுகளின் பெயர்கள் எண்ணிக்கைப்படி தலைக்கட்டுவாரியாக எண்ணப்பட்டு இருபது வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் ஒவ்வொருவருக்கும், குடும்பத் தலைவர்களுக்கும் லேவியர் குருக்களுக்கும் வரையறுக்கப்பட்ட கடமைகளை இதில் காணலாம்.*

**7572**

**பூசலும் புகழும்.** *இன்பராஜன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: ஷார்ப் கிராப்பிக்ஸ் பிரைவேட் லிமிட்டெட்). 36 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.*

*பாபேல் கோபுரத்தின் அழிவைத் தொடர்ந்து நோவாவின் புதல்வனான சேமின் வேரிலிருந்து வெகுதூரம் விலகி ஓடித் துளிர்விட்டவன்தான் தாரே. இந்தத் தாரேயின் தண்டிலிருந்தே ஆபிரகாம் தோன்றினார். ஆபிரகாம் சாராள் என்ற பெண்ணை மணந்தார். அவளோ பிள்ளைப்பெறற்றவள். தனக்கொரு வாரிசு வேண்டும் என்பதற்காகத் தனது எகிப்திய அடிமைப்பெண்ணான ஆகார் என்பவளுடன் தன் கணவனை உறவுகொள்ள வைத்தாள். அடிமையான ஆகார் கருவுற்றபோதே அக்குடும்பத்தில் கலக்கமும் கலவரமும் வெடிக்கத் தொடங்கியது. ஆகார் இஸ்மாயில் என்ற மகனைப் பெற்றாள். மலடியான சாராளும் பின்னர் தன் தள்ளாத வயதில் ஈசாக் என்ற மகனைப் பெற்றாள். இவ்விரு பிள்ளைகளும் பின்னாளில் இரு பெருங் குலங்களின் வரலாற்றின் தொடக்கப் புள்ளியானார்கள். இவர்களது கதையே இங்கு நாடகமாகின்றது.*

**7573**

**பேராதனை: அரங்க அளிக்கைகள்.** *தமிழ்ச் சங்கம். பேராதனை: தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மார்ச் 1998. (களுபோவில: டெக்னோ பிரின்ட், 83, ஆஸ்பத்திரி வீதி). (16), 224 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ.*

*ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சிக்கு பேராதனைப் பல்கலைக்கழகம் பெரும் பங்காற்றியுள்ளது. பேராதனைத் தமிழ்ச்சங்கம் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையினால் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து ஏராளமான நாடகங்கள் அவ்வப்போது மேடையேற்றப்பட்டு வந்துள்ளன. தமிழ்ச்சங்கத்தின் மேடையேற்றங்களில் தேர்ந்த 12 நாடகங்களும் "1947 முதல் 1997 வரை பேராதனை அரங்க அளிக்கைகள்" என்ற கட்டுரையும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சுந்தரம் எங்கே, இராவணேசன், இப்படிக்கு உணர்வுகள், திக்குத் தெரியாத காட்டில், வரும், கூட்டு, மீண்டும் மீண்டு, காட்டாறு, அரும்பு, குழப்பம், அகங்களும் முகங்களும், கோதுடைக்கும் குஞ்சுகள் ஆகிய இந்நாடகங்கள் அவ்வப்போது மேடையேற்றம் கண்டு நாடக ஆர்வலர்களின் பாராட்டைப் பெற்றவை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 533406).*

**7574**

**மண்ணே சாட்சி.** *செ.அ.அழகராஜா. யாழ்ப்பாணம்: நாடகப் பிரதியாக்கப் பகுதி, திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி). (4), 20 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.*

*யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் நாடக நூல் வரிசையில் வெளியான மற்றுமொரு கிறிஸ்தவ திருமறை நாடகங்களுள் ஒன்று இதுவாகும். திருமறைக்கலாமன்றம் 34 கலை பண்பாட்டுப் பிரிவுகளைக் கொண்டதொரு அமைப்பு. சிறுவர் கலைக்கூடத்தை சிறப்பாக நடத்துவதில் இலங்கையில் முன்னணி வகிப்பது. நாடகக் கலைப் பயிற்சியில் யோகக் கலையைப் புகுத்திச் செயற்படுத்தும் இவ்வமைப்பே தமிழ் நாடக வரலாற்றில் ஐம்பெருங் காப்பியங்களை முதன்முறையாக மேடையேற்றியது. வார்த்தைகள் அற்ற நாடகம் என்ற புதியதொரு பரீட்சார்த்த நாடக முறையையும் திருமறைக்கலாமன்றமே அறிமுகப்படுத்தியதாக அறியப்படுகின்றது. கொழும்பில் 15.2.1993 முதல் 5.3.1993 வரை வெவ்வேறு கலை நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து வடக்கிற்கும் தெற்கிற்கும் ஒரே கலைப்பாலமாகத் திகழ்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.*

**7575**

**மணப்பெண்.** S.N.J.*மரியாம்பிள்ளை. யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: ஷார்ப் கிராப்பிக்ஸ் பிரைவேட் லிமிட்டெட்).*

*24 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *955-9262-11-4.*

*விசுவாசத்தின் விளைபொருளாக, ஆபிரஹாமின் மனைவி சாறாள், தனது தள்ளாத வயதிலும் பெற்றெடுத்த தவப்புதல்வன் ஈசாக் வாலிபமடைந்தான். தனது சந்ததி அழிந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்த ஆபிரஹாம் தான் வாழும் கானான் நாட்டில் ஈசாக்கிற்குப் பொருத்தமான மணப்பெண்கள் இருந்தபோதும், தனது பிறந்த மண்ணான மெசொபொத்தாமியாவில் நாக்கொர் என்ற நகரில், தனது சகோதரன் நாக்கொருக்கும் மெல்காளுக்கும் பிறந்த மகனாகிய பந்துவேனின் மகள் இரபேக்காள் என்ற மணப்பெணணை ஈசாக்கிற்கு மணப்பெண்ணாகத் தேர்ந்தெடுக்கிறார். ஆபிரஹாம், ஈசாக், ஆபிரஹாமின் ஊழியர், இரபேக்காள், தோழி, பத்துவெல், லாபான் ஆகிய ஏழு கதாபாத்திரங்களுடன் இயங்கும் நாடகம் இது.*

### 7576

***மயில்: இரு நாடகங்கள்.*** *ஏ.ரி.பொன்னுத்துரை. தெல்லிப்பழை: கலை இலக்கியக்குழு, சன்மார்க்க சபை, குரும்பசிட்டி, 1வது பதிப்பு, மே 1991. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*
viii, *60 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 18.5x12.5 சமீ.*

*விடுதலை உணர்வினை வலியுறுத்தி நிற்கின்ற மயில் என்ற சிறுவர் மோடி நாடகத்தினையும், ஈழத்தமிழர்களின் தேசியக் கலை வடிவங்களில் ஒன்றான தாளக்காவடி எம்மவர் மத்தியில் மறைகின்ற வேளையில் அதன் முக்கியத்துவத்தினை எடுத்துரைக்கும் தாளக்காவடி என்ற யதார்த்த நவீன நாடகத்தையும் இந்நூல் உள்ளடக்கியது. சுதந்திர வாழ்வே வாழ்வு என்ற செய்தியை சிறுவர்களுக்கு மயில் நாடகம் வலியுறுத்துகின்றது. ஆடல், பாடல் விரவிய உத்திப் பின்னல்கள் அளவாகப் புகுத்தப்பட்ட மோடி நாடகம் இது. கட்டுவன், வறுத்தலைவிளான், வீமன்காமம் பகுதிகளில் ஆடப்பட்ட வசந்தன் ஒயிலாட்ட பாடல் மெட்டுகளில் நாடகம் நகர்த்தப்பட்டுள்ளது. தாளக்காவடி நாடகம், எமது பிரதேசத்தின் கிராமிய கலை வடிவங்களான காவடி, கரகம், வசந்தன் போன்றவை பேணப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக அமைகின்றது. கலைஞனின் தன்மான உணர்வு இந்நாடகத்தில் வலியுறுத்தப்படுகின்றது. முதலாளியின் அடக்குமுறையை விஞ்சிநிற்கும் காவடி அண்ணாவிப் பாத்திரத்தைச் சுற்றி நாடகம் நகர்த்தப்படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32964).*

### 7577

***யூதா முதல் அப்தோன் வரை: நீதித் தலைவர்கள் 1.*** *இன்பராஜன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: கீதா பப்ளிக்கேஷன்ஸ்).*
*54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.,* ISBN: *955-9262-18-1.*

*நீதித் தலைவர்கள் என்ற (திருமறை நூல் வரிசை 26) நூல் இரண்டு நாடகங்களாக எழுதப்பட்டுள்ளது. நீதித் தலைவர்கள் பற்றிய சாரம், கருத்தியல் நோக்கு, இந்நாடகத்தின் முதல் காட்சியில் உரைஞர்கள் கூற்றாக விளக்கப்பட்டிருக்கிறது. யூதா, ஒத்தினியேல், ஏகூது, தெபேரா (பெண்), பாராக், யாவேல் (பெண்), கிதியோன் ஆகிய பெயர்களில் இஸ்ரயெலின் நீதித் தலைவர்களாக இருந்தவர்கள் இந்நாடகத்தின் பிரதான பாத்திரங்களாக உருவகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.*

### 7578

***வரலாற்று மனிதன் (உபாகமம்).*** *இன்பராஜன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: ஜெயா ஒப்செற் பிரிண்டர்ஸ்).*
*(4), 25 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *955-9262-19-*x.

*திருமறையில் பொதிந்துள்ள கருத்துக்களை நாடகவரிசையில் தரும் முயற்சியில் திருமறைக் கலாமன்றம் ஈடுபட்டு வந்துள்ளது. வண.பேராசிரியர் என்.எம்.சவேரியை பிரதம பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள இத்தொடரில் இந்நாடக நூலும் அடங்கியுள்ளது. கடவுளின் மக்களாகிய*

இஸ்ரயேல் மக்கள் இறைவனால் வாக்களிக்கப்பட்ட பூமியாகிய கானான் நாட்டில் நுழைவதற்குமுன் தலைவன் மோயீசன் அவர்களுக்கு அறிவுரை வழங்குகின்றான். இஸ்ரயேல் மக்களோடு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை என்ன, அதைக் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள் என்ன, சமய வழிபாடுகள் எவ்வாறு அமைய வேண்டும், சமூக வாழ்க்கையில் பின்பற்றப்படவேண்டிய ஒழுங்குகள் எவை, சட்டங்கள் சமூகரீதியாகவும் ஆத்மீக ரீதியாகவும் நம்மை எவ்வாறு நெறிப்படுத்துகின்றன- இவையெல்லாம் அன்று மட்டுமல்ல, இன்றும் நமது சமய, சமூக, அரசியல் வாழ்வுக்குப் பொருத்தமானதும் வழிகாட்டுவதுமாக இருக்கின்றன என்பதை இறைச்சட்ட நூலைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டதே வரலாற்று மனிதன் என்னும் இந்நாடகம். வேதாகமக் கருத்துக்களை கருப்பிசகாது அன்றையும் இன்றையும் இணைக்கும் ஒரு உரைச்சித்திரமாக இது அமைந்துள்ளது.

### 7579

**வலை: நாடகம்.** எஸ்.பொன்னுத்துரை. கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1972. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231, Wolfendhal Street ). 116 பக்கம், விலை: ரூபா 4., அளவு: 18x12.5 சமீ.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர்களுக்காக 1958இல் எழுதி மேடையேற்றப்பட்ட வரலாற்று நாடகம். **சாணக்கியன்** என்ற பெயரில் சானாவினால் இலங்கை வானொலியிலும், கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலும் மேடையேற்றம் கண்டது. மகதத்தின் மாமந்திரி சாணக்கியன், தட்சசீலத்தின் சேனாதிபதி அஜாதசத்ரு, பிந்துசாரனின் மூத்த மகன் சுசீமன், பிந்துசாரனின் இளையமகன் அசோகன், அசோகனின் காதலி காரூவகி, பௌத்த துறவியான உபகுப்தர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களாவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 297523).

### 7580

**வாழும் வழி: திருக்குறள் நாடகத் தொகுப்பு.** அமுதன். (இயற்பெயர்: வேல்அமுதன்). தெல்லிப்பழை: வேல் வெளியீட்டகம், வளப்புலம் ஒழுங்கை, குரும்பசிட்டி மேற்கு, 1வது பதிப்பு, மார்ச் 1980. (கொழும்பு 12: சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 194 A, பண்டாரநாயக்க மாவத்தை). 88 பக்கம், விலை: ரூபா 7.75, அளவு: 18x12.5 சமீ.

அறுவடை என்ற நாடகத் தொகுப்பையும், வைகறை, மாரீசம் ஆகிய சிறுகதைத் தொகுப்புகளையும் தந்த அமுதனின் திருக்குறள் கருத்துக்களைக்கொண்ட வாழும் வழி, அறுவடை, கைக்கூலி ஆகிய மூன்று நாடகங்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. முதல் நாடகமான வாழும்வழி, இளைஞர்களுக்கான நாடகம். இதே பெயரில் இலங்கை வானொலியிலும் இந்நாடகம் ஒலிபரப்பப்பட்டது. அறுவடை என்ற சமூக நாடகம், முன்னர் அதே தலைப்பில் வெளியான தனி நாடக நூலின் திருத்திய மீள்பதிப்பு. கைக்கூலி என்ற தலைப்பிலான மூன்றாவது நாடகம் சிறுவர்களக்கானது. இது வெற்றிமணி என்ற சிறுவர் மாசிகை இதழில் வெளிவந்த ஒரு சிறுகதையின் நாடக வடிவம்.

### 7581

**வீடு: தொலைக்காட்சி நாடகமும் வானொலி நாடகங்களும்.** அருணா செல்லத்துரை. சென்னை 600024: இளவழகன் பதிப்பகம், 4, இரண்டாவது தெரு, ஆண்டவர் நகர், கோடம்பாக்கம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1993. (சென்னை 600017: L.K.M.Computer Prints, 26 ரங்கநாதன் தெரு, தி.நகர்). 160 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 17.5x12.5 சமீ.

தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பு பற்றிய ஒரு கட்டுரையும், வீடு (நாடகக்கதை), வீடு (தொலைக்காட்சி நாடகம்), சுடலை ஞானம் (வானொலி நாடகம்), புண்ணியபூமி (வானொலி நாடகம்), இவர்களும் மனிதர்கள் (வானொலி நாடகம்), முடிவுகள் மாற்றப்படலாம் (வானொலி நாடகம்), மானத்திற்காக ஏங்கும் கவரிமான்கள் (வானொலி/மேடை நாடகம்) ஆகிய ஏழு நாடகங்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் தனது 25 ஆண்டுகால கட்புல-

*செவிப்புல கலையாக்க அனுபவத்தைக்கொண்டு இந்நாடகங்களை எழுதியிருக்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 584913).*

***7582***

**வேதனுக்கு வேள்வி.** *செ.அ.அழகராஜா. யாழ்ப்பாணம்: நாடகப் பிரதியாக்கப் பகுதி, திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு : லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்).*
*21 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x14 சமீ.*

*எவனொருவன் தன் கொள்கையில் உறுதியாக நிலைத்துள்ளானோ அவன் அதற்காகத் தன்னை அர்ப்பணிப்பதுடன் எதையும் இழக்கத் தயாராகி, தேவைப்படின் அதற்காக மரணத்தையும் வரவேற்கிறான். விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஆபிரகாம், தன் செயலால் விசுவாசத்துக்கு உயிரூட்டினார். செயலற்ற விசுவாசம் உயிரற்றது என்பதை வாழ்ந்து காட்டினார். தனக்கென்றிருந்த ஒரே வாரிசை, இறைவன் தனக்குப் பலியிடும்படி கேட்டபோது உள்ளம் கலங்கினும். தயக்கமின்றிப் பலியிடத் துணிந்தார். இதுவே இந்நாடகத்தின் கருவாகின்றது.*

*மேலும் பார்க்க: **7033, 7795, 7805***

## *894.8(3) தமிழ்க்கவிதை நாடகங்கள்-காவியங்கள்*

***7583***

**ஆறுமுகம்.** *வி.கந்தவனம். சென்னை 600024: இளம்பிறை பதிப்பகம், 375-8, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1998. (சென்னை 600024:* Ilampirai Book Makers, *375-8, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம*
*108 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 17.5x12.5 சமீ.*

*வசன கவிதையில் உருவான சீர்திருத்த நாவல். பழமையிலே காலூன்றிமாறிவரும் புத்துலகின் கோலங்களை நுட்பமாகத் தரிசித்து, புதியதோர் அனுபவத்தின் ஊடாக நம்மை அழைத்துச் செல்கிறார். மரபு பிறழாது அதே சமயம் ஈழத்து மண்ணின் மைந்தர்களின் இயல்பான பேச்சு வழக்கினையும் இணைத்து ஆங்காங்கே நகைச்சுவை கலந்து கவிதைகளை ஆக்கும் திறன் கவிஞர் கந்தவனத்தின் தனிச்சிறப்பு.*

***7584***

**இப்படிக்கு அன்புள்ள அம்மா: கவிதை நடையில் ஒரு காவியம்.** *கலாநிதி ஜீவகுமாரன் (டெனிஷ் மூலம்), வி.ஜீவகுமாரன் (தமிழாக்கம்). டென்மார்க்: விஷ்வசேது இலக்கியப் பாலம், 1வது தொகுப்பு, டிசம்பர் 2010. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).*
*163 பக்கம், கணனிச் சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*கண்களில் நீரை வரவழைக்கும் வலிமிகுந்த காவியப் கவிதைப் படைப்பு. ஈழத்திலிருந்து டென்மார்க்கிற்கு புலம்பெயர்ந்த ஒரு 90 வயது மூதாட்டி யசோ அம்மாவின் பார்வையில், நிகழ்காலத்திற்கும் இறந்தகாலத்திற்குமிடையே நடக்கும் ஒரு போராட்டமே கதை. ஈழத்தில் இன விடுதலைப்போரில் இறந்த தனது மகன் ஹரியின் மறைவை ஏற்றுக்கொள்ளாத இந்தத் தாய், தனது இறுதிக்காலத்தில் மகன் உயிருடன் இருப்பதாக நினைத்து எழுதும் பத்துக் கடிதங்களின் உணர்ச்சித் தொகுப்பே இக்காவியமாகும். அழகு தமிழில் ஆங்காங்கே ஈழத் தமிழழகு இழையோட தாயின் வலியோடு, இலங்கையின் தமிழினம் மீதான தாக்குதலில் உண்டான வலியையும்புலம்பெயர்ந்தபின் தாய்மண்ணின் நினைவுதரும் வலியையும் சேர்த்துக் குழைத்து நமது உயிருக்குள் வலியை ஏற்படுத்தும் உன்னத காவியம் இது. ஒரு அன்னையர் தினத்தில் தொடங்கிய இக்கதை அடுத்த ஆண்டின் அன்னையர் தினத்தில் முடிவதாய் உள்ளது. கதையா, கவிதையா, காவியமா என்று வரையறைக்குட்படுத்தமுடியாத குழப்பகரமான நிலைக்கு எம்மைத்தள்ளும் புதியதொரு இலக்கிய முயற்சி இது.*

**7585**

**கொந்தளிப்பு: குறுங்காவியம்.** பாலமுனை பாறூக். பாலமுனை 3: No.14 Farzana Manzil, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (சாய்ந்தமருது: நல்லுறவு பப்ளிக்கேஷன்ஸ்).
96 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-99311-1-9.

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் 1970களில் முனைப்புப் பெற்ற இடதுசாரி சிந்தனைப் போக்கில் கவிதை எழுதத்தொடங்கிய பாலமுனை பாறூக் கல்முனைப் பிரதேசத்திலிருந்து சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக கவிதை எழுதிவரும் குறிப்பிடத்தக்க கவிஞராவார். பதம், சந்தனப்பொய்கை ஆகிய நூல்களின் ஆசிரியர். தான் சார்ந்த சமூகத்தின் ஆன்மீக உணர்வுகளைக் கவிதையாக்கியவர். கொந்தளிப்பு மூலம் தான் சார்ந்த பிரதேச. சமூக, பண்பாட்டு உணர்வுகளை மொத்தமாக வெளிப்படுத்துகின்றார். குறிப்பாக தென்கிழக்குப் பிரதேச முஸ்லிம்களின் வாழ்வினைப் புலப்படுத்தும் குறிப்பிடத்தக்கதொரு படைப்பாக பாலமுனை பாறூக்கின் கொந்தளிப்பு அமைந்துள்ளது. துணிச்சலுடன் அரசியல், சமூக, சுரண்டலுக்கு எதிரான கருத்துக்களை இக்காவியத்தில் முன்வைக்கிறார். கலைநயத்துடன் கவிதைசொல்லும் பாங்கு அவரது நீண்டகாலக் கவிவளத்தின் அனுகூலங்களினால் சாத்தியமாகியுள்ளது.

**7586**

**திருச்செல்வர் காவியம்.** பூலோகசிங்க அருளப்பநாவலர் (ஆக்கம்), ஏ.ஜே.வி.சந்திரகாந்தன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 2வது பதிப்பு, 1995, 1வது பதிப்பு, 1896. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).
264 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

"சிறந்தவிப் பாரிலே நிறைந்தபல்வளமுஞ் செறிந்து விளங்கும் சிந்து தேசத்திலே கி.பி.எட்டாம் நூற்றாண்டிலே செங்கோல் செலுத்திய அபினோ என்னும் அஞ்ஞான அரசனுக்கு மைந்தனாய்ப் பிறந்து, இளமையிலே அற்புதமாய்ச் சத்தியவேதத்திற் சேர்ந்து, அதனால் நேரிட்ட தடைகளைக் கடந்து, பின்னர் தந்தை முதலியோரையும் சத்தியவேதத்துட் சேர்த்து ஈற்றில் வனஞ்சென்று தவஞ்செய்து மோட்ஷபாக்கியம்பெற்ற திருச்செல்வராயன் சரித்திரத்தை அர்ச்சியசிஷ்ட தமசேனு அருளப்பர் கி.பி. எழுநூற்று முப்பத்து மூன்றாம் வருடத்திலே மகாத்தமாக்கள் சொல்லக்கேட்டதாய் எழுதி வைத்தனர். அச்சரித்திரத்தைச் சத்தியவேதக் குருமார். தமிழில் மொழிபெயர்த்துக் கொடுக்க, அச்சரித்திரம் உண்மையும் மிக உருக்கமுமுள்ளதென மதித்து, அதனை ஓர் காவியமாய்ப் பாடின் யாவர்க்கும் இன்பமும் சுவையுமாயிருக்குமென நினைந்து, கல்வி கேள்விகளில் முதிர்ந்தவரும் கவிச்சிங்கருமாய் யாழ்ப்பாணம் தெல்லிமாநகரில் (தெல்லிப்பளை) வசித்த பூலோகசிங்க முதலியார் என்னும் பெயருடைய அருளப்ப நாவலர் யாவரும் மெய்ச்சச் சொற்சுவை பொருட்சுவை செறிய இனிய காவிய ரூபமாக்கினர். கடவுள் வாழ்த்து, அவையடக்கம், பாயிரம் என்பவைகட்குப் பொழிப்புரையும், தர்க்கசாஸ்திரப் படலத்துக்குத்தக்க பண்டிதருதவி பெற்றுப் பதவுரையுஞ் செய்துசேர்த்து மற்றைய படலங்களிலுள்ள பாக்களின் அரும்பதங்களையுங் குறிப்பால் விளக்கிப் பிரசுரித்தோம். இந்நூல் சுத்தபாடமாக வரவேண்டுமென்னு மாசைபற்றிப் பல பிரதிகள் தேடி எடுத்து ஒப்பிட்டு, மகாஸ்ரீ கா.தியாகராச பண்டிதராற் பார்வையிடப்பட்டு வெளிவருகிறது." ___ (மூலப்பதிப்பின் முகவுரையிலிருந்து)

**7587**

**நீலாவணன் காவியங்கள்.** நீலாவணன் (இயற்பெயர்: கேசகப்பிள்ளை சின்னத்துரை), சி.எழில்வேந்தன் (பதிப்பாசிரியர்), கொழும்பு: நன்னூல் பதிப்பகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xix, 112 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14 சமீ., ISBN: 978- 955-97461-2-6.

நீலாவணனின் **பட்டமரம், வடமீன்** ஆகிய இரு சிறு காவியங்களுடன், அவருடைய புகழ்பெற்ற **வேளாண்மை** என்ற காவியமும் இணைந்து இந்நூல் அவரது மகனால் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்துள்ளது. பண்ணையாரிடம் பணிபுரியும் பரந்தாமனும் பண்ணையாரின் மகள் பத்மாவும் காதலிக்கின்றனர். தாழ்ந்தவனான பரந்தாமனை பண்ணையார் வெட்டிக்கொல்ல, பத்மாவும் தற்கொலைசெய்து உயிரை மாய்க்கிறாள். இதனை பட்டமரமொன்று கண்டுசொல்வதாக அமைந்தது பட்டமரம் காவியம். வடமீன் காவியம் தன் வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் இளைஞனுடன்

கள்ளத்தொடர்பு வைத்திருப்பதாக கணவன் மனைவியைச் சந்தேகிப்பதும், பின்னர் சந்தேகம் தெளிவதும் பற்றிக் கூறுகின்றது. அருந்ததி நட்சத்திரத்திற்கு வடமீன் என்றும் பொருள்கொள்ளலாம். வேளாண்மையின் கதைக்கரு குடும்பப் பிணக்காகும். நெடுங்காலப் பகைமை கொண்ட இரு உறவினர் குடும்பங்களில் ஒரு குடும்பத்தின் பெண்பிள்ளை பூப்பெய்துகிறாள். முறைப் பையன் எதிராளிக் குடும்பத்தவன். காலக்கிரமத்தில் குடும்பங்கள் இணைவது கதையின் முடிவாகின்றது. தனது மண்ணின் சடங்குகள், சம்பிரதாயங்கள், நடப்புகள். நாகரீகங்கள், மனப்பாங்குகள், வன்முறைகள், பழக்க வழக்கங்கள், அனுஷ்டானங்கள் அனைத்தையும் நீலாவணனின் மூன்று காவியங்களும் பதிவுசெய்கின்றன. 1931இல் கிழக்கின் பெரிய நீலாவணையில் பிறந்த சின்னத்துரை (நீலாவணன்) 1952இல் பிராயச்சித்தம் என்ற சிறுகதைமூலம் எழுத்துலகில் பிரவேசித்தவர். கல்முனையில் எழுத்தாளர் சங்கத்தை தாபித்து அதன் தலைவராகப் பணியாற்றியவர். 11.01.1975இல் மறைந்த இக்கவிஞர் ஈழத்துத் தமிழ்ப்படைப்புலகில் மிக முக்கியமானவர்.

### 7588

**நெருப்புக்கு இடையே நீந்தும் நிலாக்கள்: காவியக் கவிதைகள்.** நிலா தமிழின்தாசன். (இயற்பெயர்: மிக்கேல் அருள்மொழிராசா). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 94: பி.வி.ஆர்.ஆப்செட்). xii, 64 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 18x12 சமீ.

இக்கவிஞர் திருக்கோணமலையின் நிலாவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1976 முதல் கவிதைத் துறையில் ஈடுபட்டுவரும் இவர் ஏற்கெனவே நாளை (1993), புலர்வு (1994) ஆகிய கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இந்நூல் இவரது காவியக்கவிதைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1985-86களில் தொண்டன் சிறு சஞ்சிகைக்காக எழுதப்பட்ட இக்குறுங்காவியத்தில் புவியியல், வரலாறு, காதல், சமூக வரட்சி, அரசியல், நியமனம் போன்ற சமூக இயங்கியல் கூறுகளை கவிஞர் முதன்மைப் படுத்தியுள்ளார். வசதிமிக்க குடும்பத்தவளான ஜோதியினதும் அவளை விரும்பும் வசதிகுறைந்த குடும்பத்தைச் சேர்ந்த வேந்தனதும் கதையாக மலரும் இக்காவியத்தில் காதலையும் கூறி அதனூடாகத் தியாக உணர்வையும் சுட்டிக்காட்டி காதலுக்கும் அப்பால் காவியத்தை நகர்த்தித் தியாகத்தை முதன்மைப்படுத்துகின்றார். சமூகப் பொருளாதார வர்க்க வேறுபாடுகளின் தாக்கமும், நெருப்பாறாக உருவகிக்கப்படும் இனப்பிரச்சினையின் தாக்கமும் இக்காவியத்தின் உருவாக்கத்துக்குத் துணைநின்றுள்ளன. பொய்யும் புரட்டும் முதலாகக் கொண்டு வியாபாரம் செய்யும் முத்தையா முதலாளியின் மகள் ஜோதினி, ஏழையான சங்கரன் மகன் வேந்தனிடம் மனதைப் பறிகொடுக்கிறாள். வேந்தனும் அவளை நேசிக்கிறான். வேந்தன் கிளார்க் வேலை பெற்று கொழும்பில் வேலை ஏற்றபின்னர் ஜுலை கலவரம் நடந்து தமிழினப் படுகொலை அரங்கேறுகின்றது. தப்பிப்பிழைத்து ஊர்வந்து சேரும் வேந்தனுக்கு ஜோதினியின் திருமண ஏற்பாடுகள் நடந்து முடிந்த செய்தி எட்டுகிறது. விரக்தியின் வாயிலில் நின்ற வேந்தன் இனத்தையும் தேசத்தையும் காக்கப் போராளியாகின்றான். ஜோதினி பெற்றோர் பேசிவைத்த திருமணத்தை மறுத்து வேந்தனின் வீட்டில் அடைக்கலம் புகுகின்றாள். ஜோதினி வேந்தனின் வரவுக்காக்க காத்திருக்கிறாள் என்பதாகக் காவியம் நிறைவுபெறுகின்றது.

## 894.8(4) தமிழ்ச் சிறுகதைகள்

### 7589

**அ/சாதாரண மனிதன்.** சச்சிதானந்தன் சுகிர்தராஜா. நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, நவம்பர் 2008. (சென்னை 60005: மணி ஓப்செட்). 64 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89945-50-3.

இதில் சுகிர்தராஜாவின் எட்டுக் கதைகள் இடம்பெற்றுள்ளன. இவை 1980களின் நடுப்பகுதியில் கணையாழியில் வெளிவந்தவை. ஏழு கதைகள் இங்கிலாந்தையும் ஒரு கதை இலங்கையையும் பின்புலமாகக் கொண்டவை. பெரும்பாலான கதை மாந்தர்களும் வேறு கலாச்சாரங்களைச் சார்ந்தவர்கள். அவ்வகையில் தமிழகச் சூழலில் வித்தியாசமான சிறுகதைகளாக- அயல்நாட்டுக் கதைகளாக இவை உள்வாங்கப்பட்டுள்ளன. இவற்றின் போக்கும் முடிவும் துக்கம் கலந்த

*நகைச்சுவையோடு கூடியவை. இலங்கையில் பிறந்து வளர்ந்த இந்நூலாசிரியர் கடந்த 30 ஆண்டுகளாக இங்கிலாந்தின் கல்விசார் சூழலில் வாழ்கின்றார்.*

### *7590*

***அருளின் சிறுகதைகள்.*** *அருள்.மா.இராஜேந்திரன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (கொழும்பு: நியோ கிராபிக்ஸ்).*
vi, *76 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5*x*15 சமீ.*, ISBN: ***955-9262-33-5.***

*பலாலி வயாவிளானில் 1928இல் பிறந்த நூலாசிரியர் யாழ்ப்பாணம் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரியில் கற்று ஆசிரியரானவர். பின்னர் கொழும்பு மாநகரசபையில் எழுதுவினைஞராகப் பணியாற்றியவர். கொழும்புத் தமிழச் சங்கம் இவருக்கு சான்றோர் விருதினையும், திருமறைக் கலாமன்றம் கலைஞானதீபம் என்ற கௌரவத்தையும் வழங்கியிருந்தது. இந்நூலில் பசுவும் கன்றும், ஆயிரம் ரூபாய், பரோபகாரி, சுவீனியின் நம்பிக்கை, கோபாலனின் மகன், உள்ளமும் உள்ளங்காலும், அப்புவின் படம், பரம்பரை, திரேசாவின் முதல் நன்மை, கண்ணுள்ள குருடன், ஆகிய 10 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. பசுவும் கன்றும் 1952இல் சுதந்திரன் சிறுகதைப் போட்டியில் தெரிவானது. ஆயிரம் ரூபாய் கதை 1961இல் ஒப்செர்வர் ஆங்கில இதழில் வெளிவந்தது. இதை சி.வி.வேலுப்பிள்ளை மொழிபெயர்த்திருந்தார். 82 வயதைத் தாண்டிய நூலாசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுப்பாக இந்நூல் மலர்ந்துள்ளது.*

### *7591*

***அவளும் ஒரு பாற்கடல்.*** *எஸ்.எல்.எம். ஹனீபா. நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (சென்னை 60005: மணி ஓப்செட்).*
*160 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 22*x*14 சமீ.*, ISBN: ***978-81-89359-92-4.***

*மட்டக்களப்புக்குத் தெற்கே மீராவோடைக் கிராமத்தில் 1946இல் பிறந்தவர் ஹனீபா. கால்நடைகள் அபிவிருத்தித்துறை போதனாசிரியராக 30 ஆண்டுகள் பணியாற்றியவர். 1992இல் இவரது மக்கத்துச் சால்வை நூலுக்காக கோவை லில்லி தேவசிகாமணி விருதினையும், 1993இல் அதே நூலுக்காக இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதினையும் பெற்றவர். மக்கத்துச் சால்வை தொகுதியிலுள்ள கதைகளுடன் மேலும் பத்துக் கதைகள் சேர்த்து இத்தொகுதி வெளிவருகின்றது. வேலி, திசைகள், சன்மார்க்கம், தீட்டு, தபஸ், மக்கத்துச் சால்வை, பொம்மைகள், பேய்களுக்கு ஒரு வாழ்க்கை, ஒரு விமர்சனம், கடுகு, பிறவிகள், மருத்துவம், மருமக்கள் தாயம், சலனம், வெட்டை, வெள்ளைக்காகம், கட்டிப்போட்ட கால், மச்சி, குளிர்தென்றல், யோக்ய கண்கள், இனி நமக்கென்ன, படிக்கட்டுகள், ஆடு நனைவதைப் பார்த்து, அவளும் ஒரு பாற்கடல் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.*

### *7592*

***ஆதாரம் இல்லை ஆறுதல் சொல்ல: சிறுகதைகள்.*** *சோ.பதந்தன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2010. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*
viii, *152 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 18*x*12.5 சமீ.*

*சோமேஸ்வரபிள்ளை பதந்தன் (1978) யாழ்ப்பாண மாவட்டத்தின் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் மாணவப் பருவத்தில் தான் எழுதிய சிறுகதைகளை நூலுருவாக்கியிருக்கிறார். ஆதாரம் இல்லை ஆறுதல் சொல்ல, பனைமரத்தின் கதை, தண்டனை, பரிகாரம் தேடி, பருவ காலம், ஆதிமூலமே, கறுப்பு வார்ட், தப்புகின்ற தப்புகள், உழைப்பு, ஏமாற்றங்கள், விடுப்பு, இக்கரையும் அக்கரையும், யாருக்காக, தீவட்டி, அம்மா, பாசவலை, பச்சைக்கிளி, நிறம் மாறிய பூ, காதல் நாடகம், அம்பாக்கண்டு, அடம்பன் கொடிகள் ஆகிய 21 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

### *7593*

**இந்தத் தீபாவளி தேவைதானா?** ச.வே.பஞ்சாட்சரம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2011. (சென்னை 24: ஸ்கிரிப்ட் பிரிண்டிங்).
xviii, 98 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 17.5x12 சமீ.

கவிஞர் ச.வே.ப. அவர்கள் ஈழத்தின் முதுபெரும் கவிஞர்களுள் ஒருவர். கவிதைகள், காவியங்கள், பக்தி இலக்கியங்கள் என இவரது பெயரில் சிறியதும் பெரியதுமாக இதுவரை 55 நூல்கள் வரையில் வெளியாகியுள்ளன. தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் இவரது 10 சிறுகதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்தத் தீபாவளி தேவைதானா? அறுவடை, அழிக்கும் பிரம்மாக்கள், ஒற்றுமை கொல்லி, வேண்டுதலும் சீண்டுதலும், புதிய தளம் புதிய வழி, நச்சு நதிகள், அதிர்ச்சி வைத்தியம், புகுந்தாண்டருளும் போதிலே, இன்பத்திலும் துன்பத்திலும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டு இலங்கையிலும், கனடாவிலும் ஊடகங்களில் முன்னதாக வெளிவந்துள்ளன.

### 7594

**இந்திரர்கள் நாடும் அகலிகைகள்.** திருமலை வீ.என்.சந்திரகாந்தி. திருக்கோணமலை: ஜெயகாந்தி கலை கலாச்சார விளையாட்டு மேம்பாட்டுக் கழகம், 572/A, ஏகாம்பரம் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (திருக்கோணமலை: ரெயின்போ மினிலாப், 361, நீதிமன்ற வீதி).
156 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-98979-1-8.

ஸ்திரீ லட்சணம், தொடரும் தலைமுறைகள் ஆகிய சிறுகதைத் தொகுதிகளையடுத்து வெளிவரும் மூன்றாவது தொகுதியான இந்நூலிலுள்ள பன்னிரண்டு சிறுகதைகளும் வாசகரின் உள்ளத்தில் சிறு அசைவையேனும் ஏற்படுத்தவதாக அமைகின்றன. ஒவ்வொரு கதையிலும் பசியும் பட்டினிச் சாவும், ஏக்கமும், பாசமும் பரிவும் இழைந்தோடுவதை அவதானிக்க முடிகின்றது. சொரியல் (தினக்குரல் 2003), நித்திய சமர்ப்பணம்(ஞானம் 2003), உள்ளார்த்தங்கள் (தினமுரசு 2003), இந்திரர்கள் நாடும் அகலிகைகள் (ஞானம் 2003), ஊமைப்பெண்ணும் ஊமையான நெஞ்சங்களும் (ஞானம் 2004), சுநாமி மாமி (கலைஓசை 2006), அரவாணிகள் (வீரகேசரி 2005), புத்தரும் பித்தரும் (ஞானம் 2005), சனத்தும் சரோஜாவும் சமாதானமும் (ஞானம் 2006), வெண்ணெய் உண்ட கண்ணனாம் (ஞானம் 2005), வழித்துணையை இழந்தவர்கள் (தினக்குரல் 2007),சம்ஹாரம் (வீரகேசரி 2007) ஆகிய கதைகளை இந்நூல் உள்ளடக்கியது.

### 7595

**இவர்களும் யதார்த்தவாதிகள் தாம்.** ம.நிரேஸ்குமார். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2010. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
xii, 200 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 17.5x12.5 சமீ.

இந்நூலில் இவர்களும் யதார்த்தவாதிகள் தாம், நான் கண்ட கனவு, அவளும் ஒரு சீதைதான், இனியொரு விதி செய்வோம், சித்தப்பா, பீனிக்ஸ் பறவைகள், சிவராத்திரி, குழந்தைத் தாய், உறவும் கணக்கும், அக்கரைப் பச்சைகள், பாவ சங்கீர்த்தனம், அபிஷேகம், விமர்சனம், சொர்க்கம், நாட்டியத் தாரகை, சுழல் வட்டம், அறுவடை நாள், ஐம்பதாவது சிறுகதை, எத்தனை வண்ணங்கள், உவர்த் தண்ணீர், ஐந்து மணியாச்சா- ஐயய்யோ சரியாச்சு, உழவுக்குப் போகிறோம், பயங்கரவாதி, அன்புக்கு உண்டோ அடைக்கும் தாழ் ஆகிய 24 கதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.
யாழ்ப்பாணத்தில் சுழிபுரம் கிராமத்தில் 19.10.1974இல் பிறந்தவர் மகாலிங்கம் நிரேஸ்குமார். ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய கல்வியியலாளராகப் பணியாற்றுகின்றார். 2005 முதல் அறியப்பட்ட சிறுகதைப் படைப்பாளியாகத் திகழ்கிறார்.

### 7596

**இளநரை: சிறுகதைத் தொகுப்பு.** ஜுனைதா ஷெரீப் (இயற்பெயர்: K.M.M.ஷெரீப்). காத்தான்குடி: K.M.M.ஷெரீப், 1வது பதிப்பு, டிசம்பர் 1985. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).
(8), 109 பக்கம், விலை: ரூபா 13.00, அளவு: 17.5x12.5 சமீ.

*அவன் ஒன்று நினைக்க (ஜனமித்திரன் வெளியீடு), சாணைக்கூறை (கல்ஹின்ன தமிழ் மன்றம்), அவளுக்கும் ஓர் இதயம் (இஸ்லாமிய நூல்வெளியீட்டுப் பணியகம்) ஆகிய நாவல்களை வெளியிட்டவரும் இலக்கிய உலகில் நன்கு அறியப்பெற்றவருமான ஜுனைதா ஷெரீப் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது. என் கடிதம், உண்மையே உன் விலை என்ன, அந்தக் காரணம், எனக்கும் உணர்ச்சிகள் உள்ளன, ஆயிரம் ரூபாய், அவர்கள் தேடுகிறார்கள், ஒரு சமுதாயம் மலர்கின்றது, கல்யாணச் சாப்பாடு, இளநரை, தனியொருவனுக்கு உணவில்லையெனில், கல்யாண ஊர்வலம் வரும், பிரார்த்தனைகள், உணர்ச்சிகள் அழுகின்றன, பிள்ளை மனம் பித்து, பண்பாடுகள் சாகின்றதாம் ஆகிய 15 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9521).*

### *7597*

***இனியும் நான் இராமன்தான்.*** *முகில்வண்ணன் (இயற்பெயர்: வே.சண்முகநாதன்). சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஜுன் 2010. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).*

*192 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 22x14 சமீ.*

*இந்நூல் ஆசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி. முதலாவது சிறுகதைத் தொகுதி அவள் ஒரு தமிழ்ப்பெண் என்ற பெயரில் 2006இல் மித்ர வெளியீடாக வெளிவந்தது. இத்தொகுதியில் 1993-1997 காலகட்டத்தில் பத்திரிகைகளில் பிரசுரமான ஆசிரியரின் சிறுகதைகளை உள்ளடக்குகின்றது. தினத்தந்தியில் வெளிவந்த பிள்ளைக்கனியமுது, வெள்ளைப்புறா ஒன்று, மருமகளுக்கு ஆகிய கதைகளும், தினகரனில் வெளிவந்த பெண்மை விழித்துக்கொண்ட போது, நியாயப்படுத்தமுடியாத நியாயங்கள் ஆகிய கதைகளும், சூடாமணியில் வெளிவந்த அவளா சொன்னாள்? என்ற கதையும், தாய்நாடு பத்திரிகையில் வெளியான சொல்லத் துடிக்குது மனசு என்ற கதையும், வீரகேசரியில் வெளிவந்த இளைப்பாறும் சுமைதாங்கிகள், இனியும் நான் இராமன் தான், சாகக் கொடுத்தாலும், குங்குமம் சிரிக்கிறது ஆகிய கதைகளும், மித்திரனில் வெளிவந்த சொல்லியழ யாருமில்லை, அப்பாவும் மகனும், அப்பா பாவம், எனக்கு மருமகள் நீதான், அவள் ஆகிய கதைகளும், அகிலம் இதழில் வெளிவந்த மீட்சி என்ற கதையும், நவமணி பத்திரிகையில் வெளிவந்த கண்ணகியல்ல நாங்கள், கைகாட்டிகள் நடப்பதில்லை, மூலதனம், வித்துக்குள் விருட்சம், ஊமைக்காயம் ஆகிய கதைகளுமாக மொத்தம் 22 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. வே.சண்முகநாதன், கல்முனை, பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்முனை பற்றிமாக் கல்லூரியில் கல்வி பயின்றவர். லேடன் நிறுவனத்தில் கட்டிடப் பொறியியலாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.*

### *7598*

***உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி.*** *ஓட்டமாவடி அறபாத். திருச்சி மாவட்டம்: அடையாளம், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, 1வது பதிப்பு, 2008. (சென்னை 600005: மணி ஆப்செட்).*

*207 பக்கம், விலை: இந்திய ரூபா 130., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-81-7720-107-9.*

*இலங்கை இனப்போர்களில் மும்முனைத் தாக்குதல்களுக்குள்ளாகும் கிராமப்புறத்து அப்பாவி முஸ்லிம் சிறுபான்மையினரின் அவலங்களைச் சொல்லும் சிறுகதைகள் இவை. எதிரியாயிருந்த எதிரி, நண்பன் என்றிருந்த எதிரி, இனத்தான் என்றிருக்கும் எதிரி எனச் சுற்றிலும் முற்றுகைக்குட்பட்டு ஒடுங்கிக் கிடப்பவர்கள் இந்த மக்கள். சுற்றிலும் கேட்கும் முழக்கங்கள், விடுதலை என்பதாக இருந்தாலும், இவர்களுக்கு அது வாழ்விலிருந்து விடுதலை என்பதாகவே வாய்க்கின்றது. இந்தக் கதைகளைப் போலவே இதில்வரும் பாத்திரங்களும் சுருக்கமாக முடிந்துவிடுபவர்களாக இருக்கிறார்கள். இந்தக் கதைகளில் சில, வன்முறைச் சூழலுக்கு நடுவில் இருந்துகொண்டே வாழ்வின் வேறுசில கசப்புகளையும் வக்கிரங்களையும் தொட்டுக்காட்டுபவை. ஓட்டமாவடி அறபாத் ஸஹ்வி (1970), இலங்கை, கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி கிராமத்தில் பிறந்தவர். கலைத்துறைப்பட்டதாரி.*

### *7599*

**உயிர் வலி: சிறுகதைத் தொகுதி.** உ.நிசார். மாவனல்லை: பானு பப்ளிஷர்ஸ், 70/3, புதிய கண்டி வீதி, 1வது பதிப்பு, 2009. (மாவனல்லை: எம்.ஜே.எம்.பிரின்டர்ஸ், 119, பிரதான வீதி, மாவனல்லை).
xiii, 122 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-50064-6-0.

1970களில் ஆசிரியரால் எழுதப்பட்ட பதினொரு சிறுகதைகளின் தொகுப்பு இதுவாகும். கலைந்த வேஷங்கள், உயிர் வலி, குறை நிறைத்தல், பட்டுச் சாரம், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, காலம் பதில் சொல்லட்டும், தாய்மை தலைகுனிகிறது, நிலவும் சாட்சி சொல்லும், அக்கரைகள் பச்சை, மனம் கொண்டது மாளிகை, வல்லவனுக்கு வல்லவன் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

### 7600

**ஊருக்குத் தான்: சிறுகதைத் தொகுப்பு.** கலைநிலா வாகரைவாணன். மட்டக்களப்பு: ஆரணியகம், 479/5 புதிய கல்முனை வீதி, நாவற்குடா, 1வது பதிப்பு, ஜுலை 2004. (மட்டக்களப்பு: ஜெஸ்கொம், இல.1, யேசுசபை வீதி).
(8), 42 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 20x14.5 சமீ.

மட்டக்களப்பு விவேகானந்தா மகளிர் கல்லூரியில் 13ம் வகுப்பில் கற்கும் கலைநிலாவின் கன்னிப்படைப்பான இத்தொகுப்பில் ஆறு சிறுகதைகள் இடம்பெறுகின்றன. **ஊருக்குத்தான்** என்ற கதை சீர்திருத்தம் பற்றிப் பொதுவாழ்வில் பேசும் தந்தை தன் சொந்தவாழ்வில் மகன் காதலிக்கும்போது சீதனத்தை வலியுறுத்தி திருமணத்தைத் தடுப்பதையும், **மாற்றம்** என்ற கதை போதைவஸ்துப்பாவனை பற்றியும், **மின்னுவதெல்லாம்** என்ற கதை போலிக் காதல் பற்றியதாகவும், **நீதியே நீ கேள்** என்ற கதை கடத்தல் கும்பல் சட்டத்தின் கரங்களில் சிக்குவதையும், **ஊஞ்சல்** என்ற கதை ஊதாரிச் சகோதரன் குடும்பத்தின் இயல்புவாழ்வையே சிதைப்பதையும், **தேடல்** என்ற கதை பெற்றோரின் வாக்குவாதங்களினால் பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்படுவதையும் எளிமையாகச் சித்திரிக்கின்றன. தன்னைச் சுற்றியுள்ள சமூகம் பற்றிய மட்டுப்படுத்தப்பட்ட உள்வாங்கலை தன்னளவில் பூரணமாகத் தன் கதைகளில் பயன்படுத்தியிருக்கின்றார் இந்த வளரும் இளம் படைப்பாளி. எழுத்தாளர் வாகரைவாணனின் இரண்டாவது மகள் இவர்.

### 7601

**எங்கட கதைதான்.** யாழ் தர்மினி பத்மநாதன். (இயற்பெயர்: தர்மினி பத்மநாதன்). தஞ்சாவூர் 613007: அகரம், மனை எண் 1, நிர்மலா நகர், 1வது பதிப்பு, மார்ச் 2011. (சிவகாசி: மீரா பைன் ஆர்ட்ஸ்).
95 பக்கம், விலை: ரூபா 150., இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் தொடர்பியல்துறையில் எம்.ஏ பட்டத்திற்கான உயர்கல்வி கற்கும் மாணவியான தர்மினி பத்மநாதனின் சிறுகதைத் தொகுதி இது. தனது 17ஆவது வயது முதல் இலக்கியத்துறையில் ஈடுபட்டுவரும் இவர் எழுதிய கதைகளுள் ஈழப் பெண்களின் பிரச்சினைகளையும், ஈழமக்களின் வாழ்வியல் தாக்கங்களையும் யதார்த்தமாக அணுகும் ஒன்பது சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அவை துயரங்களின் சுமையோடு, புதிய வானம் நோக்கி, தாயகக் கனவு, சொத்து, காலத்தை வென்றவள், கருக்கப்பட்ட கனவுகள், எங்கட உறவுகள், தீயில் எரியும் தேசம், கல்லுக்குள் ஈரம் ஆகிய தலைப்புகளில் ஈழத்தில் வீரகேசரி, சுடர்ஒளி ஆகிய பத்திரிகைகளில் முன்னதாக வெளியானவை. இலண்டன் பூபாள இராகங்கள் சிறுகதைப்போட்டியில் 2007, 2008 இரு ஆண்டுகளிலும் பரிசினை வென்ற இவர், 2000ம் ஆண்டு உணர்வுக் கலசம் என்ற முதலாவது நூலையும் எழுதியிருக்கிறார்.

### 7602

**ஒப்பாரிக் கோச்சி.** மு.சிவலிங்கம். நாவலப்பிட்டி: அருணா லெட்சுமணன், நாவலப்பிட்டி தமிழ்ச்சங்க வெளியீடு, 83 கொத்மலை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (கொழும்பு 13: டிசைன் லாப், 190 ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை).
xviii, 174 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 350., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-52818-0-5.

பன்முக ஆளுமையுடைய மு.சிவலிங்கம் மலையகப் படைப்பிலக்கியத்துறையில் ஆழத்தடம்பதிப்பவர். இவரது முதலாவது வெளியீடு மலைகளின் மக்கள்-சிறுகதைத் தொகுப்பு

1993இல் வெளிவந்தது. அரச சாகித்திய விருதையும், விபவி விருதினையும் அந்நூல் பெற்றது. 2004இல் வெளியான தேயிலை தேசம் மொழிபெயர்ப்பு நூலுக்கும் அரச சாகித்திய விருது கிடைத்தது. அரசியல் வரலாற்றுத் தகவலுடன் மலையகச் சமூகத்தின் செய்திகளைப் பதிவுசெய்வதாக ஒப்பாரிக்கோச்சி சிறுகதைகள் அமைந்துள்ளன. இதில் ஒப்பாரிக்கோச்சி, நாசமாய்ப் போக, வடதிசைக் காற்று, விட்டில் பூச்சிகள், P.W.D., வைகறைப் பொழுது, நமப்பார்வதி பதயே, புகையில்லாத தொழிற்சாலைகள், எங்க ஊர் தேர்தல், பல்லு பெருமாள், பிரிட்டிஷ் முகாம்கள் தகர்க்கப்படுகின்றன, நகை ஈடுபிடிக்குமிடம், நுவரெலிய முதல் சுன்னாகம் வரை, மார்கழிப் பூக்கள், வழித்துணை, சங்ககாலம் ஆகிய தலைப்புகளில் வெளியான 16 கதைகள் இச்சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49759).

### 7603

**ஒரு குடம் கண்ணீர்: உண்மைக் கதைகளின் தொகுப்பு.** அஷ்ர.்.ப் சிஹாப்தீன். வத்தளை: யாத்ரா வெளியீடு, இல. 37 ஸ்ரீ சித்தார்த்த மாவத்தை, மாபோளை, 1வது பதிப்பு, நவம்பர் 2010. (கொழும்பு 15: Talent Printech, 20/4, Madampitiya Road).
xxxiv, 250 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 19x13.5 சமீ., ISBN: 978-955-8448-06-9.

உண்மைக்கதைகளின் தொகுப்பாக வெளிவந்திருக்கும் நூல். இன்று உலகளாவியரீதியில் நடக்கும் பல்வேறு சித்திரவதைக் கொடுமைகளுக்கு எதிரான சிந்தனையைத் தூண்டும் கதைகள் இவை. தொடர்ந்து நிகழும் வரலாற்றுத் தவறுகளும், மனிதப் பேரழிவுகளும், மனித உரிமை மீறல்களும் இவரது கதைகளினூடாக எமது இரத்தத்தை உறையவைக்கின்றன. அந்நிய மண்ணில் நிகழும் இக்கதைகளை வாசிப்போரின் உள்ளத்தில் இலங்கை மண்ணிலும் இதுதானே கேள்விக்கு இடமின்றி அரங்கேறுகின்றது என்ற எண்ணம் தோன்றாமல் விட வாய்ப்பில்லை.

### 7604

**ஓர் அடிமையின் விலங்கு அறுகிறது.** புலோலியூர் க.சதாசிவம் (இயற்பெயர்: கந்தையா சதாசிவம்). பண்டாரவளை: புலோலியூர் க.சதாசிவம், 1வது பதிப்பு, 1984. (கொழும்பு: சதொச பிரிண்டர்ஸ்).
68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

ஈழத்தின் வடபுலத்திலுள்ள புலோலியூரில் புற்றளை என்னும் கிராமத்தில் 1942ஆம் ஆண்டு பிறந்த நூலாசிரியர் மாணவராயிருக்கும்போதே 1961ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்று இலக்கிய உலகில் நுழைந்தவர். தமிழகத்தின் தீபம், தாமரை உட்பட பல்வேறு ஈழத்துச் சிற்றலக்கிய ஏடுகளில் இவரது படைப்புக்கள் இடம்பெற்றுள்ளன. 1978இல் இவரது மலையக நாவல் **மூட்டத்தினுள்ளே** முதற்பரிசைப் பெற்றது. 1981இல் இவரது மற்றொரு நாவல் **நாணயம்** சாகித்திய மண்டலப்பரிசை வென்றது. இவரது முதற் சிறுகதைத் தொகுதி **யுகப்பிரவேசம்** 1973இல் வெளிவந்தது. தொழில்ரீதியில் வைத்தியராகப் பணியாற்றிய இவ்விலக்கியவாதியின் தேர்ந்த படைப்பகளான பித்து, அவர் தீபாவளிக்கு ஊருக்கு வருவார், அத்தான் பொல்லாதவர், தை பிறக்கட்டும், இது என்ன பாவம், முற்றுகைப் போராட்டம், ஓர் அடிமையின் விலங்கு அறுகின்றது ஆகிய ஏழு சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

### 7605

**ஓர் எழுதுவினைஞனின் டயரி: சிறுகதைத் தொகுப்பு.** த.ஆனந்தமயில். வல்வெட்டித்துறை: வர்ணா வெளியீடு, ஊர்மனை (கொத்தன்தறை), பொலிகண்டி கிழக்கு, 1வது பதிப்பு, மார்ச் 2008. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).
xiv, 61 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

இந்நூலில் 1976 முதல் 1998 வரையான காலப்பகுதிகளில் வெளிவந்த ஆசிரியரின் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. மல்லிகை, அலை, வீரகேசரி, சமர், தினக்குரல், தமிழோசை முதலிய இதழ்களில் இவை வெளிவந்தவை. ஒற்றைக்கால் கோழி, முருகைக் கற் பூக்கள், காக்காச்சி கரிமகளே, திருவிழா, ஓர் எழுதுவினைஞனின் டைரி, வாழும் வெளி, ஒரு கட்டுமரம் காத்திருக்கிறது, கொலுமீட்பு, நண்பனும் ஒரு புளியமரமும், விதி, கலை வந்த போது (இது தினக்குரல் பத்திரிகையில்

*ஒளிப்பிரவாகம் என்ற தலைப்பில் பிரசுரமாயிற்று), விளக்கீடு முதலிய பன்னிரண்டு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. த.ஆனந்தமயில் எழுபதுகளில் முல்லைத்தீவு மாவட்ட கல்வித்திணைக்கள அலுவலகத்தில் பணியாற்றியவர். சமதர்மம் நோக்கிய சமூக விடுதலையே அவரது கதைகளின் ஆத்மாவாக அமைந்துள்ளன. எண்பதுகளில் பிரசுரத்திற்காக நூலாசிரியர் தயாரித்திருந்த ஆறு கதைகளும், ஐந்து கவிதைகளும் பிரசுரம்காணாமல்போன நிலையில், அவரது மைந்தன் ஆனந்தமயில் நித்திலவர்ணன் தன் தந்தையின் கையெழுத்துப்பிரதியினை பின்னாளில் வெளிவந்த சிறுகதைகளுடன் சேர்த்து சிறுகதைத் தொகுதியாக வெளியிட்டிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45161).*

### 7606

**கண்களில் ஏன் கங்கை.** *விக்கி நவரட்ணம். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2011. (உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே).*

xvi, *192 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21*x*15 சமீ.,* ISBN: *978-955-1779-59-7.*

*சுவிட்சர்லாந்தில் புலம்பெயர்ந்து வாழ்பவர் விக்கி நவரட்ணம். எழுத்தாளராக, கவிஞராக, வானொலிக் கலைஞராக, மேடைப்பேச்சாளராக புகலிடத்தில் அறியப்பட்டவர். இவர் அவ்வப்போது எழுதிய சிறுகதைகளின் தேர்ந்த தொகுப்பாக 18 சிறுகதைகளுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. நிலவே என்னிடம் நெருங்காதே, அவனுக்கென்றோர் மனம், ரகஸ்ய ரணங்கள், எனக்குள் தீயாக நீ, அந்நியப் பறவையின் மெல்லிசை, பொட்டுவைத்த முகம், கண்களில் ஏன் கங்கை, இன்னும் சாகாத நெருப்புகள், பாடிப்பறந்த பறவை, சூரியக் கனியின் விதைகள், ஒரு நதியின் விதி, அந்த மெழுகுவர்த்தி அணைந்தது, பாசப்பிறவிகளின் கண்ணீர்த்துளிகள், மண்ணின் மைந்தன், உன் நினைவுகளைச் சுமந்த நெடுந்தூரப் பயணம், அவளுக்குள் என்னைத் தேடினேன், உதிர்ந்த சருகின் கண்ணீர்த் தேம்பல்கள், விழுதொன்றின் விசாரணையால் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.*

### 7607

**கலவை: சிறுகதைத் தொகுப்பு.** *சபா இராஜேந்திரன். சென்னை 600040: தங்கமீன் பதிப்பகம்,* C-54, *முதலாவது தளம், அண்ணா நகர் பிளாசா, 1வது பதிப்பு, மே 2008. (சென்னை 600005: மணி ஓப்செட்).*

*144 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *978-981-08-0659-0.*

*இன்னா செய்தாரை, மீண்டும் வேதாளம், நெஞ்சினிலே, நெஞ்சினிலே நெருப்பு, பாடங்கள் பலவிதம், ஒரு தீர்ப்பு முழுமையானது, ஒரு மாணவன்-ஒரு ஆசிரியை-ஒரு நாள், ஒப்பந்தம், தடுமாற்றம், தண்டனையைத் தேடி, கலவை, கவிதைக்கதை ஆகிய தலைப்புகளில் ஆசிரியர் எழுதிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சபா இராஜேந்திரன் 1943இல் வல்வெட்டித்துறையில் பிறந்தவர். 1967இல் இலங்கை பல்கலைக்கழகத்தில் பொறியியல்துறையில் பட்டம் பெற்றவர். 1972இல் லண்டன், கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம்பெற்றவர். 2002முதல் அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன் நகரில் வசித்து வருகிறார்.*

### 7608

**காகங்களும் மைனாக்களும்.** *புயல். யாழ்ப்பாணம்: தமிழ்ச் செய்தித் தகவல் மையம், 1வது பதிப்பு, ஆடி 2006. (யாழ்ப்பாணம்: பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பதிப்பகம்).*

xii, *50 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 20.5*x*14.5 சமீ.*

*புயல் எழுதிய 10 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பயணங்கள் முடிவதில்லை, பாதிச் சமணர், சமுதாயம் ஏற்குமா?, கவிதா பைத்தியக்காரியாகின்றாள், நீ எனது காதலி மட்டும்தான், வாழத் துடிக்கும் இளங்கிளி, இயற்கை தந்த பாடம், காகங்களும் மைனாக்களும், பகிடியால் வந்த வினை, துரோகம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.*

### 7609

**குந்தி இருக்க ஒரு குடிநிலம்: சிறுகதைகள்.** செங்கை ஆழியான் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: திருமதி கமலா குணராசா, கமலம் பதிப்பகம், 75/10 A, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
117 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-1624-00-9.

இது செங்கை ஆழியான் க.குணராசாவின் ஐந்தாவது சிறுகதைத் தொகுதி. இதிலுள்ள 15 கதைகளில் 5 சிறுகதைகள் கலைக்கதிர் இதழ்களிலும், 4 கதைகள் வெளிச்சம் இதழ்களிலும், 2 கதைகள் ஈழநாடு பத்திரிகையிலும் ஏனைய மூன்று கதைகள் தீராநதி, கலைமகள், நுண்ணறிவியல் ஆகிய வெளியீடுகளிலும் இடம்பெற்றவை. எமது பிராந்திய பண்பாட்டுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாத்து அவற்றைப் பற்றிய குறிப்புகளையும் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச்செல்லவேண்டும் என்பதை ஆசிரியரின் ஆடுகால் துலா, ஆவுரோஞ்சிக்கல், குட்டுக்காய், வேலிப்பொட்டு ஆகிய கதைகள் குறித்து நிற்கின்றன. கிராமத்துள் புகுந்த மாயமனிதன், ஊர் பார்க்க வந்த யானைகள் ஆகியவை நகைச்சுவைக் கதைகளாயினும் மக்களின் அறியாமை இருளைப்போக்கும் நோக்கம் கொண்டதாக அமைகின்றன. குந்தி இருக்க ஒரு குடிநிலம், மனிதம் ஆகியவை இனத்துவ முரண்பாட்டின் பின்னணியில் புனையப்பெற்றவை. எஞ்சியவை அறிவியல் சிறுகதைகளாகும்.

### 7610

**குற்றமும் தண்டனையும்.** எம்.பி.எம்.நிஸ்வான். பாணந்துறை: றஹ்மத் பதிப்பகம், 6A, யோனக மாவத்தை, வத்தல்பொல, கெசல்வத்தை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2010. (பாணந்துறை: V4U அச்சகம், 6, வட்ட வீதி, ஹேனமுல்ல).
108 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15சமீ.

ராதா இதழில் 1965இல் தன் முதலாவது சிறுகதையை எழுதிய பாணந்துறையைச் சேர்ந்த நூலாசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு நூல் இது. 2007இல் இவரது முன்னைய சிறுகதைத் தொகுப்பான மூன்றாவத தலாக் வெளிவந்திருந்தது. தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர் அகில இலங்கை ஆசிரிய சங்க உபசெயலாளராகவும் இருந்துள்ளார். இவர் சிங்கள-தமிழ் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். நிஸ்வான் தன் ஆசிரியர் தொழிலில் பெற்ற அனுபவங்களும், காதி-நீதவானாகப் பணியாற்றிய அனுபவங்களும் இச்சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகளுக்குக் கருப்பொருளாகியுள்ளன. நிஸ்வானின் கதைகயில் தூக்கலாகத் தெரிவது இஸ்லாமிய மதக் கருத்துக்களும் திருமண பந்தத்தில் ஏற்படும் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளுமாகும். ஒரு போதனாசிரியரின் நிலையில் நின்று, தான் கூற நினைக்கும் அறநெறிக் கருத்துக்களையும் சமூக நீதிகளையும் கூறிச் செல்கின்றார்.

### 7611

**கொட்டியாரக் கதைகள்: சிறுகதைத் தொகுதி.** வ.அ.இராசரத்தினம். மூதூர்: கலை இலக்கிய ஒன்றியம், 1வது பதிப்பு, வைகாசி 1999. (மட்டக்களப்பு: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).
vii, 143 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 18.5x13 சமீ.

இதிலுள்ள கதைகள் 1952-1997 காலப்பகுதியில் எழுதப்பட்டவை. அந்த விருந்து (ஈழகேசரி 1952), நம்பிக்கை (வீரகேசரி 1961), நியதி (வீரகேசரி 1964), தாய் (வீரகேசரி 1966), காட்டுப்பூ (மலர் 1968), அடக்கம் (வீரகேசரி 1968), அபிஷேகம் (சிந்தாமணி 1968), சீதேவிக்காக (வீரகேசரி 1978), ஓர் ஆமைக்கதை (வீரகேசரி 1982), கௌரவப் பிச்சை (வீரகேசரி 1982), இந்தனம் இறக்கி (வீரகேசரி 1988), இரசிகன் (வீரகேசரி 1988), எங்கள் கடன் காரருக்கு (வீரகேசரி 1989), சங்கிலி (களம் 1996), துணிச்சல் (சரிநிகர் 1997), தியாகி (தினக்குரல் 1997) ஆகிய 16 கதைகள் இத்தொகுதியில் இடம்பெறுகின்றன. வ.அ.இராசரத்தினத்தின் கதைகள் அவர் வாழ்ந்த மண்ணின் மக்களைப்பற்றிப் பேசுகின்றன. மக்களின் மானிட நேயத்தையும், அடக்கியொடுக்கப்பட்ட நிலையையும், இடர்ப்பாடுகளையும் அவை சித்திரிக்கின்றன. பாசாங்கற்ற சரளமான மொழியில் சமூக முரண்பாடுகளையும் சமூக அவலங்களையும் அவர் தம் கதைகளில் தந்துள்ளார். மகாவலி கங்கையின் இரு கிளைகளான குரக்கள் கங்கைக்கும்வெருகல் கங்கைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தைக் கொட்டியாரப்பற்று என்றுவரலாற்ற நூல்கள் குறிப்பிடுகின்றன. இப்பிரதேசத்தின் பேரூர்

*கொட்டியாரம் என்றெ வழங்கப்பட்டுவந்துள்ளது. 17ம் நூற்றாண்டிற்குப் பின்னர் இப்பிரதேசம் மூதூர் எனப் பெயர்மாற்றம்பெற்றது.*

### 7612

***சாந்தாராஜின் சிறுகதைகள்.*** *சாந்தாராஜ் (இயற்பெயர்: திருமதி சாந்தா ராஜகோபால்). கண்டி: மலையக வெளியீட்டகம், த.பெ.இல 32, 1வது பதிப்பு, மார்ச் 2001. (கண்டி:* Green Leaf Print House*).*
*104 பக்கம், விலை: ரூபா 115., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN*: 955-9084-10-0.*

*ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்றிய மலையகப் பெண் படைப்பாளியான சாந்தாராஜின் சிறுகதைகளின் தொகுப்பு இது. இவரது முதலாவது கதை மலையக வார இதழான செய்தியில் எழுபதுகளில் பிரசுரமானது. இச்சிறுகதைத் தொகுப்பு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 8.3.2001 அன்று வெளியாகின்றது. இதில் தோட்டத்து மண், ஊருக்குப் போகுமுன், சபலம், சட்டி சுட்டதடா, பிரதிபலிப்புகள், சொல்லத்தான் நினைக்கிறேன், தாக்கங்கள், நினைத்துப் பார்க்கிறேன், நம்மவர்கள், கௌரவம் ஆகிய பத்துக் கதைகள் இடம்பெற்றுள்ளன.*

### 7613

***செந்நீரும் கண்ணீரும்: சிறுகதைத் தொகுதி.*** *சமரபாகு சீனா உதயகுமார். வல்வெட்டித்துறை: ஐங்கரன் பதிப்பகம், மலையந்தோட்டம், கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை, 1வது பதிப்பு, நவம்பர் 2010. (வல்வெட்டித்துறை: ஐங்கரன் கிராப்பிக்ஸ்).*
xx*, 212 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5*x*14 சமீ.*

*பதவிச் சுகம் தேடி, ஓர் அன்னையின் இறுதி ஆத்மா, ஊர் மரியாதை, சலனங்கள், மனித மனங்கள், மோகனா தப்பிவிட்டாள், கதை கட்டுதல், சன்னங்கள் துரத்துகின்றன, மாற்றங்கள், முன்மாதிரியாய், செந்நீரும் கண்ணீரும், மலர்விழியாள், புத்தம்புது மனிதன் வேண்டும், சுயநலம், புதியதல்லவே, மனிதன் நாய் முட்கம்பிக்கூடு, நாலும் இரண்டும், கடைசி பஸ் ஆகிய தலைப்புகளில் 18 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவரது கதைக்களங்கள் பாடசாலை, அலுவலகம், குடும்பம், சமூகம், போர்க்கால நிலை ஆகியவற்றை உள்ளடக்கியது.*

### 7614

***சொல்லாமல் சொல்லிவிட்டாள்: சிறுகதைகள்.*** *இந்திரா கணேஷ் (இயற்பெயர்: கே.கணேசமூர்த்தி). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2010. (சென்னை 600094: பி.வி.ஆர். ஆப்செட்).*
iv*, 196 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21*x*14 சமீ.*

*தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து பிரான்சில்- பாரிஸ் நகரில் வாழ்பவர் கே. கணேசமூர்த்தி. இந்திரா கணேஷ் என்ற புனைபெயரில் இவர் எழுதிய 17 சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. மொய், தற்காலிகமாக, நினைத்தது ஒண்ணு நடந்தது ஒண்ணு, ஜனநாயகபுரம், சபாஷ், அன்புள்ள நண்பனே, சரியா தப்பா, நெஞ்சம் மாறியது, நான் ஒரு கதாநாயகி, இதோ, இரவல் சுமை, சட்டத்தின் காவலன், மன்னிக்க வேண்டுகிறேன், இன்று முதல் வசந்தம், சமரா சமாதானமா, இதுதான் தருணம், சொல்லாமல் சொல்லிவிட்டாள் ஆகிய தலைப்புகளில் 17 கதைகளும் எழுதப்பட்டுள்ளன.*

### 7615

***தத்துவக் கதைகள்.*** *நா.முத்தையா. நாவலப்பிட்டி: நா.முத்தையா, ஆத்மஜோதி அலுவலகம், 1வது பதிப்பு, நவம்பர் 1975. (நாவலப்பிட்டி: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்).*
v*, 64 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 20.5*x*13.5 சமீ.*

*இந்நூலில் 18 கதைகள் உள்ளன. ஆசிரியரின் பரந்த கல்வி ஞானமும், சிறந்த அறிவும், பல்வேறு அனுபவங்களும் கதைகள் மூலம் நம்மை எட்டுகின்றன. கம்பர், பட்டினத்தார், திருமூலர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் ஆகியோரின் கருத்துக்கள் புதிய உருவில் தரப்பட்டுள்ளன. கதைசொல்லம் முறை தமக்கு ஈசாப் நீதிக்கதைகளையும், பஞ்சதந்திரக் கதைகளையும், ராஜாஜியின் குட்டிக்கதைகளையும் நினைவூட்டுவதாக இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய செ.சிவஞானசுந்தரம்*

(நந்தி) குறிப்பிடுகின்றார். இக்கதைகள் தியாகிகள், ஓ திராட்சைப்பழங்களே, கல்லைக் கண்டால், கிணற்றுத் தவளை, பூஜை, நரியனார் பட்டபாடு, நம்பிக்கை, அக்கரைப்பச்சை, அழகியின் ஆசைகள், குரங்குத் தாயன்பு, பிரபு, லோபி, மூன்று மண்டை ஓடுகள், பக்தன், மனிதரில் மனிதன், மரணத்தின் நினைவு, விசுவாசத்திற்குக் கட்டுப்பட்டான் கண்ணன், புத்தகம் வாசிக்க ஆசை கொண்டவர் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2139).

**7616**

**தாய் மடி தேடி.** கார்த்திகாயினி சுபேஸ். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 291/6-5/3 A, எட்வேர்ட் அவென்யு, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (கொழும்பு 6: R.S.T.Enterprises Pvt Ltd.)
xx, 114 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-53158-0-7.

இந்நூலில் கார்த்திகாயினியின் பத்து சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. நான் சீதையல்ல, துள்ளமுடியாத புள்ளிமான், தனிமரம், ஊனம், அறுவடையாகாத விதைப்புகள், கருமுகில் தாண்டும் நிலவு, உதயம், இப்படியும், தாய்மடி தேடி, எச்சில் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. துள்ளமுடியாத புள்ளிமான் என்ற கதை புதிய அலை கலைவட்டத்தின் முதற்பரிசை 2002இல் பெற்றது. தனிமரம், ஊனம் ஆகிய கதைகள் விபவி சிறப்புப்பரிசை 2005இல் பெற்றன. கருமுகில் தாண்டும் நிலவு க.சதாசிவம் சிறுகதைப் போட்டியில்முதற்பரிசைப்பெற்றது. தலைப்புச் சிறுகதையான தாய்மடி தேடி, செம்பியன் செல்வன் சிறுகதைப்போட்டியில் முதற்பரிசினை வென்றது. ஊடகவியலாளரான கார்த்திகாயினி சமூகப் பிரச்சினைகளை ஆழமாகப் புரிந்துகொண்டவராக இருப்பதால் அவரது கதாபாத்திரங்களையும் எம்மிடையே அன்றாடம் வாழ்ந்துவருவோராகவும் எமக்கு நெருக்கமானவராகவும் படைக்கமுடிந்துள்ளது. பெரும்பாலும் யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கில் இவரது பாத்திரங்களின் உரையாடல்கள் அமைகின்றன.

**7617**

**திருமறையில் சிறுகதைகள்.** முஹம்மது ஸெயின். கொழும்பு 14: ஸெயின்ஸ்தான் டிரேடிங் கம்பெனி லிமிட்டெட், 703, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, 1வது பதிப்பு, 1977. (கொழும்பு 3: த டயமண்ட் பிரிண்டர்ஸ், 41 சென் மைக்கல் வீதி).
88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x12.5 சமீ.

இஸ்லாமியரின் திருமறையான குர்ஆன் சரீபில் இஸ்லாமிய வரலாறு தொடர்பான சில கதைகள் ஆங்காங்கே பொதிந்துகிடக்கின்றன. ருசிகரமான இக்கதைகளைத் தொகுத்து இந்நூல் வெளிவந்துள்ளது. **இஸ்லாமிய தாரகை** என்ற சஞ்சிகையின் இதழ்களில் இவை ஏற்கெனவே பிரசுரிக்கப்பட்டன. ஏலத்தில் விற்கப்பட்ட ஏந்தல், நதியில் மிதந்த பாலன், கிணற்றண்டை அரும்பிய காதல், தனையனைத் தியாகம் புரியமுனைந்த தந்தை, சோலையாக மாறிய அக்கினிக் குண்டம், மச்ச வயிற்றில் சிறைஇருந்த மகோன்னதர் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஆறு கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2682).

**7618**

**திருவருட்பயன் கதைகள்: குறள், உரை, விளக்கம், கதைகள்.** கே.வி.குணசேகரம். யாழ்ப்பாணம்: கே.வி.குணசேகரம், ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய் மத்தி, கோப்பாய், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14., டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
x, 423 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21x15 சமீ., ISBN: 955-0134-62-8.

சைவசித்தாந்தத்தின் பெருமையை விளக்கும் நூலான திருவருட்பயன் என்ற நூலுக்குப் பலர் உரையெழுதியுள்ளனர். இந்நூல் திருவருட்பயனில் உள்ள நூறு குறள்களுக்கும் 100 கதைகள் எழுதப்பட்டுள்ளன. தத்துவக் கருத்துக்களை நம்மைச் சுற்றி நிகழும் சம்பவங்களினூடாகக் கதைகளாக எழுதியுள்ளமை இந்நூலின் சிறப்பாகும்.

**7619**

**தூர விலகும் சொந்தங்கள்: சிறுகதைகள்.** நீர்கொழும்பு ந.தர்மலிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
xxii, 158 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 17.5x12 சமீ.

நீர்கொழும்பூர் ந.தர்மலிங்கத்தின் சிறுகதைத் தொகுப்பு. தூர விலகும் சொந்தங்கள், சத்திய தரிசனம், ஆணின் தேடல், நோயாளிகள், புரியாத புதிர், தாய், நிறைவு, பாவத்தின் தீர்ப்புகள், தாம்பத்யம் ஒரு தவம், வாழ்த்துக்கள், வாலிபத் தீயிலே, இப்படி எத்தனை சுமைகள் ஆகிய 12 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36688).

**7620**

**தேர்ந்த தமிழ்ச் சிறுகதைகள்.** ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1997. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1.14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
vi, 52 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5x12.5 சமீ.

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களின் பாடத் தேவைக்காக அச்சிடப்பட்ட இந்நூலில் புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், கு.அழகிரிசாமி ஆகிய தமிழக எழுத்தாளர்களினதும் இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம் ஆகிய ஈழத்து எழுத்தாளர்களினதும் தேர்ந்த தமிழ்ச் சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

**7621**

**தொடரும் தலைமுறைகள்.** திருமலை வீ.என்.சந்திரகாந்தி, திருக்கோணமலை: ஜெயகாந்தி கலை கலாச்சார விளையாட்டு மேம்பாட்டுக் கழகம், 572/A, ஏகாம்பரம் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (திருக்கோணமலை: ரெயின்போ மினிலாப், 113, வித்தியாலயம் வீதி).
103 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-8925-00-4.

1998-2003 காலப்பகுதியில் தினமுரசு பத்திரிகையில் வெளியாகிய ஆசிரியரின் 19 சிறுகதைகளின் தொகுப்பு. எது உண்மை, காகித ஓடம், பிறந்தநாள், வாடகை வீடு, உறவு, மகப்பேறு, தொடரும் தலைமுறைகள், அன்புள்ள காதலனே, வெளிநாட்டு வேலை, கட்டவா கலியாணம், துடுப்பு இல்லாத ஓடங்கள், அத்தியாயங்கள், இரசிக்கத் தெரிந்தவர்கள், சாயும் காதல் கோபுரங்கள், அவள் வித்தியாசமானவள், அது வேறு சமாச்சாரம், எங்கடை சனம், அரச விடுதி, வெளிநாட்டுக் குஞ்சுகள் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் வெளியாகியிருந்தன.

**7622**

**தொலைவில் ஒரு கனவு.** கமலினி சிவநாதன் (மூலம்), புதுவை ரா.ரஜனி (தொகுப்பாசிரியர்). பாண்டிச்சேரி 605009: புதுவை ரா.ரஜனி, கசடற-புதுச்சேரி, 26 வழுதாவூர் சாலை, பேட்டையான் சத்திரம், 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (புதுவை: மாடர்ன் போட்டோ மவுண்ட்ஸ்).
102 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18.5x12.5 சமீ.

பதினெட்டு காத்திரமான சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. கமலினியின் கதைகள் ஏக்கம், பரிதாபம், ஏமாற்றம், காதல் தோல்வி, இராணுவ கெடுபிடித் தாக்குதல், பலியாகும் மானிடம், அச்சம், பச்சாத்தாபம் என்பவற்றை சித்திரிக்கின்றன. வாழ்வை அதன் அவலங்களை தான் அனுபவித்த சின்னச் சின்ன சந்தோஷங்களைக்கூட மிக அழகாகவும் அற்புதமாகவும் தனது கதைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். தொலைவில் ஒரு கனவு, ஆசை மயக்கம், சமர் எழுதும் சரிதம், முடியாத முடிவு, கலைந்த கோலம், சுமை, ஏமாற்றம், ஒரு கலைஞனின் மனைவி, உலரும் மலர்கள், திருப்பம், நித்தமும் இந்த நிழல், திசைமாறிய தென்றல், கலங்கரை விளக்கம், கறுப்பு வெளிச்சம், மௌனம் ஒரு மொழி, தழும்புகள், கண் கெட்ட பின்னே, காகிதப்பூ ஆகிய 18 தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

**7623**

**நான் நிழலானால்: சிறுகதைத் தொகுதி.** ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா. சென்னை 600 035: சித்தன் கலைக்கூடம், 39 இரண்டாவது தளம், சி.ஐ.டி.நகர் மேற்கு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2010. (நாகர்கோவில் 629 001: ஆர்.எம்.கே. பிரிண்டோகிராப்).
120 பக்கம், விலை: ரூபா 140., இந்திய ரூபா 70., அளவு: 22x14 சமீ., ISBN: 978-0-9738750-1-0

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக்கொண்ட நூலாசிரியர், பேராதனைப் பல்கலைக்கழக விவசாய விஞ்ஞானபீடப் பட்டதாரியாவார். தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் இவரது 16 சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. நான் நிழலானால், புகலிடம் தேடி, நிசி கிழித்த மென்குரல், நெருடல்கள், விடைபெறும் கானல் தடம், உறவுகள் ஊமையானால், நெற்றிவிழி மௌனம், எரிமனம் சிவந்து, சிக்குண்ட சினம், வலி, நீயே நிழலென்று, இது அதே நிலவல்ல, பனியுலவும் தெரு நீளம், முந்தி நிற்கும் சுவடுகள், ஏமாற்றங்கள், இழை ஒன்று அறுந்து போகின்றதா?ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. இவரது சிறுகதைகளில் பெண்மைசார் உணர்வுகள் தாய்மைசார்ந்த உணர்வுகளாகப் பிரதிபலிக்கின்றன. இக்கதைகளிற் பல புலம்பெயர் நிலையில் கனடாவில் வாழுகின்ற ஈழத்தமிழர் சமூகத்தின் பல்வேறு நிலைப்பட்ட பிரச்சினைகளையும் அனுபவங்களையும் இயல்பான கோலத்தில் வாசகரின் தரிசனத்துக்கு இட்டு வருவன. மேலும் இவரது கதைகளில் உளநூல் தத்துவங்களும் இடம்பெற்றுள்ளன. சில கதைகளில் இவர் போர்க்காலச் சூழல், அதன் தாக்கம், அழிவு, அகதி முகாம்களில் வாழும் மக்களின் துயரநிலை என்பனவற்றையும் விபரித்துள்ளார்.

### 7624

**நிமிர்வு.** நீர்வை பொன்னையன். கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை, 11, ராஜசிங்க வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2009. (கொழும்பு 6: Techno Print, 55, Dr. E.A.Cooray Mawathe).
xviii, 120 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1319-18-2.

மேடும் பள்ளமும், உதயம், பாதை, வேட்கை, ஜென்மம், நீர்வை பொன்னையன் சிறுகதைகள் ஆகிய பெயர்களில் ஆறு தொகுதிகளை வாசகர்களுக்கு ஏற்கெனவே அளித்தவரின் ஏழாவது சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். கடந்த இரு ஆண்டுகளுக்குள் எழுதப்பட்ட சிறுகதைகள் இவை. நிமிர்வு, மாயை, மீறல், உடைப்பு, வீழ்ச்சி, மீட்பு, வெறி, பலி ஆடு, புதிர், கர்வம் ஆகிய தலைப்புகளில் அமைந்த 10 சிறுகதைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

### 7625

**நிலவும் சுடும்: சிறுகதைத் தொகுப்பு.** ராணி சீதரன். திருக்கோணமலை: யது வெளியீடு, 136 மத்திய வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம், U.G.50, People's Park).
xiv, 140 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-97102-4-0.

ஊசல், மாற்று, விடிவு, மீண்டும் வருமா, புரியாமலே, பொட்டு, இங்கேயும் ஒரு பொன்னகரம், நிலவும் சுடும், கருகிடும் நினைவுகள், அந்த நாள், தனிமை, மின்னல் ஆகிய தலைப்புகளில் அமைந்த 12 சிறுகதைகளைக் கொண்ட தொகுதி. இவரது பாத்திரப்படைப்புகள் நம்பிக்கையூட்டுவதாக அமைவதுடன், சமூக நலநோக்கோடும் கூடியவை. தனக்கு வலியையும், வேதனையையும் தந்த சம்பவங்களை அழகான கதைகளாக்கியுள்ளார். பெண் விடுதலை, இனவொடுக்கல், சமூக இழிநிலைகளைச் சுட்டிநிற்கும் சில கதைகள் சமூகச் சீர்கேடுகளைச் சித்திரிப்பதாயும், இன முரண்பாடுகளினால் ஏற்பட்ட போர்க்கால சூழ்நிலையின் தாக்கத்தை விபரிப்பதாயும் உள்ளன. திருக்கோணமலைப் படைப்பாளியான ராணி சீதரன் கல்விப்புலத்துடன் நீண்டகால அனுபவம்கொண்டவர். முதுகலைமாணி, முதுகல்விமாணிப் பட்டங்களைப் பெற்றவர்.

### 7626

**நிறங்கள்: சிறுகதைத் தொகுப்பு.** ஈழவாணி (இயற்பெயர்: அன்ரனி வாணி ஜெயா). கொழும்பு: சூரியன் வெளியீட்டகம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2004. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315 ஜம்பட்டா வீதி).
xii, 115 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 17x12.5 சமீ.

*இத்தொகுப்பில் ஈழவாணி எழுதிய துன்பியல்சார்ந்த பத்து சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. நல்ல விலையில், பாட்டி வீட்ட போறாள். அந்த மனிதர், தலைப்பொங்கல், கண்ணீரில் அவள், பார்கவியின் கதை, காதலர் தினம், கடலை நோக்கிய கன்னி, திருமண அழைப்பு, ஒரு கதிர் கருகுகிறது ஆகிய தலைப்புகளில் இவை அமைந்துள்ளன. ஈழவாணி, வவுனியா இளைஞர் தொடர்பு சாதனக் குழுவினரின் தேடல் சஞ்சிகையினதும், செந்தணல் பத்திரிகையினதும் ஆசிரியராகப் பணியாற்றியவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 608220).*

### 7627

***நிறங்கள்: சிறுகதைத் தொகுதி-1.*** *இணுவையூர் உத்திரன். (இயற்பெயர்: சுப்பையா பரமேஸ்வரன்). யாழ்ப்பாணம்: இணுவில் பொது நூலக இலக்கிய மன்ற வெளியீடு, இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம், மானிப்பாய் வீதி, இணுவில், 1வது பதிப்பு, ஜுன் 2003. (யாழ்ப்பாணம்: ஐங்கரன் டொட் கொம், ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி, இணுவில்).*
xii, *180 பக்கம், விலை: ரூபா 149., அளவு: 20x14.5 சமீ.*

*உயிரோட்டமுள்ள வாழ்க்கைத் தரிசனமாக உத்திரனின் சிறுகதைகள் பல அமைவதைப் பார்க்கமுடிகின்றது. மனித உணர்வின் ஆழ்ந்த மீட்டலாகச் சில கதைகள் அமைகின்றன. 1995 முதல் எழுதிவரும் இவரது படைப்புக்கள் வீரகேசரி, தினக்குரல், தினமுரசு, சுடர் ஒளி, மித்திரன், சங்கநாதம், உதயன் போன்ற ஊடகங்களில் வெளிவந்திருக்கின்றன. இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். இத்தொகுப்பில் 30 சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் சுப்பையா பரமேஸ்வரன், இணுவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். தற்போது* Asbestos Cement Industries Ltd *நிறுவனத்தில் கணக்கியல் பிரிவில் பணியாற்றுகிறார்.*

### 7628

***நினைவுகள் மடிவதில்லை: சிறுகதைத் தொகுப்பு.*** *சி.சிவசரவணபவன் (புனைபெயர்: சிற்பி). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை: பி.வி.ஆர். ஆப்செட்).*
xii, *172 பக்கம், விலை: ரூபா 200., இந்திய ரூபா 50., அளவு: 18x12 சமீ.*

*வடபுலத்தில் காரைநகரில் பிறந்த சி.சிவசரவணபவன் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டமைச்சின் ஆளுநர் விருதினை 2002இல் பெற்றவர். கலைச்செல்வி என்ற சிற்றிதழை 1958 ஆடி முதல் 1966 ஆவணி வரை எட்டு ஆண்டு காலம் வெளியிட்டவர். முன்னர் நிலவும் நினைவும், சத்திய தரிசனம் ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும், உனக்காக கண்ணே என்ற நாவலையும் வெளியிட்டவர். இது இவரது நான்காவது நூல். இந்நூலில் கதையொன்று எழுத, இன்னா செய்தேனை, தொண்டர்தம் பெருமை, அப்பன் அருள், பிஞ்சின் ஏக்கம், தெய்வீகம், நினைவுகள் மடிவதில்லை, ஒரு பாத்திரம் பேசுகிறதோ, மதிப்பு, குருபக்தி, நிபந்தனை, நாணயம் ஆகிய பன்னிரண்டு கதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கதைகள் குறைந்த கதாபாத்திரங்களைக் கொண்டவை. சமூகத்தில் நடக்கும் அவலங்களைக்கண்டு குமுறும் படைப்பாளியின் மன ஆதங்கங்களைப் பிரதிபலிப்பவை.*

### 7629

***நீ தான் என் காதலி.*** *புலவர் தமிழ்மாறன். கோப்பாய்: புலவர் மன்றம், 1வது பதிப்பு, நவம்பர் 1972. (கோப்பாய்: இலங்கைநாயகி அச்சகம், கல்வியங்காடு).*
*(4), 106 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18x12 சமீ.*

*புலவர் தமிழ்மாறன் எழுதிய 10 சிறுகதைகளின் தொகுப்பு இதுவாகும். தெய்வம், வேண்டாம் இந்த உத்தியோகம், சபாஷ் மாப்பிள்ளை, சந்தைக்கூட்டம், நீ தான் என் காதலி, சேமோரக்கார உலகம், பெண்ணாலே விளைந்த பெருந்துயரம், சாகத் துடிக்கிறேன், பிள்ளையார் விட்ட பெருமூச்சு, ஒளியும் இருளும் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.*

### 7630

**பரிசுக் கதைகள்.** எஸ்.எதிர்மன்னசிங்கம் (தொகுப்பாசிரியர்). திருக்கோணமலை: வடக்கு-கிழக்கு மாகாண கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, 1வது பதிப்பு, 1994. (திருக்கோணமலை: வடக்கு-கிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்களம், அன்பு ஒழுங்கை, உப்புவெளி).
(6), 93 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 19x14 சமீ.

திருக்கோணமலை, வடக்கு-கிழக்கு மாகாண கலாசார உதவிப்பணிப்பாளராகப் பணியாற்றிய எஸ்.எதிர்மன்னசிங்கத்தினால் மேற்படி அமைச்சின் கலாச்சார நிகழ்வுகளின்போது பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கண்ணூறு, கடலோரத்துக் குடிசைகள், சுமைகள், பிஞ்சு, ஏன் அழுதார், அனாதைகள், வரப்புயர, பூட்டில்லாப் பூட்டு, தலைமைத்துவம், மீன் கறி மணத்தது ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. 1995இல் மட்டக்களப்பில் இடம்பெற்ற சாகித்திய விழாவின்போது வெளியிடப்பட்டது.

### 7631

**பாட்டுத் திறத்தாலே: சிறுகதைகள்.** த.கலாமணி. யாழ்ப்பாணம்: ஜீவநதி, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஆவணி 2009. (அல்வாய்: சதாபொன்ஸ் ஓப்செட் பிரின்டர்ஸ், மாலுசந்தி).
100 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-50428-1-9.

நம்மிடையே வாழும் மனிதர்கள் சிலரின் வாழ்வியல் கோலங்களை சிறுகதைகளாக்கியுள்ளார் தம்பிஐயா கலாமணி. இவர் ஜீவநதி சஞ்சிகை ஆசிரியர் பரணீதரனின் தந்தையாவார். ஏற்கெனவே நாட்கள், கணங்கள், நமது வாழ்க்கைகள் என்ற தலைப்பில் ஒரு சிறுகதைத்தொகுதியை 2000ம் ஆண்டில் வழங்கியவர். இது இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதி.

### 7632

**பிரிந்தவர் பேசினால்: சிறுகதைகள்.** உதயணன். (இயற்பெயர்: இராமலிங்கம் சிவலிங்கம்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2010. (சென்னை 600094: பி.வி.ஆர். ஆப்செட்).
xxii, 222 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 17.5x12 சமீ.

உதயணன் என்னும் பெயரில் அரைநூற்றாண்டுக்கும் மேலாக ஈழத்து எழுத்துலகில் பயணிப்பவர் உதயணன். பின்லாந்தில் 25 ஆண்டுகளாக வாழும் இவர் பேராசிரியர் அஸ்கோ பார்பொலாவின் ஆய்வு உதவியாளராக ஆறுவருடங்களாக ஹெல்சிங்கி பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர். அப்பல்கலைக்கழத்தில் பட்டதாரி மாணவர்களுக்குத் தமிழ்மொழியை உயர்தரம் வரை 19 ஆண்டுகள் பயிற்றுவித்து ஓய்வுபெற்றவர். பின்லாந்தின் அரச வெளியீடுகளின் பல தமிழாக்கங்கள் இவரால் மேற்கொள்ளப்பட்டன. பின்லாந்தின் தேசிய காவியமான கலெவலாவை செய்யுள் நடையில் தமிழில் எழுதி வெளியிட்டவர். உதயணனின் 70க்கும் மேற்பட்ட சிறுகதைகளும் ஆறு நாவல்களும் 1957இலிருந்து ஈழத்துத் தமிழிலக்கியப்பரப்பில் வெளியாகியுள்ளன. இவரது சிறுகதைகளில் தேர்ந்த 18 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பிரிந்தவர் பேசினால் (தினகரன் 1969), உறவின் நிழல்கள் (வீரகேசரி, 1980), ஒரு கொடியில் (சுடர், 1975), கிழக்கும் மேற்கும் (சுடர், 1975), மனிதன் பிறந்தான் (ஈழநாடு, 1973), சாது சொக்கலிங்கம் (அஞ்சலி, 1971), ராஜாவின் ரோஜா(வீரகேசரி, 1971), காகிதக் கப்பல் (தினகரன், 1970), தொட்ட குறையும் விட்ட குறையும் (தினபதி மலர், 1969), போர்க்களம் (வீரகேசரி, 1968), வாழ்க்கைப் பாதை (தினகரன், 1968), மயக்கம் (வீரகேசரி, 1967), பெண் உள்ளம் (வீரகேசரி, 1967), யாரோ ஒருவன் (தினகரன் 1967), கொம்புத்தேன் (தினகரன், 1966), அறுவடை (சிந்தாமணி 1966), போர்வை (வீரகேசரி, 1966), வாழ்க்கைப் படகு (வீரகேசரி, 1964) ஆகிய 18 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 7633

**பிரியமான சிநேகிதி.** ஜெனீரா தௌபீக் கைருல் அமான். கிண்ணியா: அல்-அக்தாப் இலக்கிய மன்றம், 1வது பதிப்பு, ஜூன் 2009. (கொழும்பு 10: U.D.H.Compuprint, 51/42, மொஹிடீன் மஸ்ஜித் வீதி).

viii, 63 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-0161-00-3.

கிண்ணியாவைச் சேர்ந்த திருமதி ஜெனீரா அமான் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். அவரது கற்பனையில் உதித்த 14 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தன்னம்பிக்கை இழந்தவன், சங்கமமாகும் சந்தோஷங்கள், மனம்மாறா மனிதர்கள், அவளெடுத்த முடிவு, எதிர்பாராத சந்திப்புகள், கண் திறந்தது, உண்மை உயிர்த்தெழும்போது, மனசுக்கேற்ற வாழ்வு, துளிர்விடும் உறவுகள், பிரியமான சினேகிதி, தொடர்கதையாகும் துயரங்கள், நன்றிக்கடன், ஒரு மழலையின் விடிவு, அவள் போட்ட சபதம் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

### 7634

**பீலிக்கரை: சிறுகதைகள்.** பிரமிளா செல்வராஜா. கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, நவம்பர் 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
x, 62 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-8354-14-8.

காலியில் ஆங்கில ஆசிரியையாகப் பணியாற்றும் திருமதி பிரமிளா பிரதீபனின் 12 கதைகளைக் கொண்ட சிறுகதைத் தொகுப்பு. சிந்திக்கத்தூண்டும் இக்கதைகளில் ஆங்காங்கே ஆணாதிக்கத்துக்கு எதிரான போக்கும், மனிதாபிமானச் சிந்தனைகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மலையக சூழலில் பிறந்து அந்த யதார்த்தத்தின் மத்தியில் வளர்ந்த ஒருவரின் படைப்புக்கள் மண்சார்ந்த யதார்த்தச் சித்திரிப்புக்கு இடம்கொடுக்கின்றன. குறிப்பாக மலையக மண்ணின் மணம் கமழ்வதாக அவை அமைந்துவிடுகின்றது. இச்சிறப்பியல்பு இந்நூலிலும் அமைந்துவிட்டுள்ளது. புரவலர் புத்தகப் பூங்காவின் மாதம் ஒரு நூல் திட்டத்தின் கீழ் ஓகஸ்ட் 2007இல் வெளிவந்த முதலாவது நூல். இதில் பீலிக்கரை, இதோ எந்தன் நெஞ்சோடு, தனிமை தாகம், பக்கி, யாரைத்தான் நம்புவதோ, அப்பம்மாவின் மூக்குத்தி, கண்ணாடி பிம்பம், மனதிற்குள் ஒரு மௌனவலி, பௌர்ணமி நிலவு, ரவை உருண்டை, இன்னாம்பி, கோடிப்பக்கத்தில் ஒரு பலாமரம் ஆகிய 12 கதைகள் இடம்பெற்றுள்ளன.

### 7635

**புதிய வீட்டில்: சிறுகதைத் தொகுப்பு.** சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: செல்வி ராமேஸ்வரன், 41/2 சித்திரா ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (மஹரகம: தரஞ்ஜீ பிரிண்டர்ஸ், 506, ஹைலெவல் வீதி, நாவின்ன).
vii, 88 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 955-96037-5-2.

சமகாலப் பிரச்சினைகளை-குறிப்பாக கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கையில் நிலவிவரும் இனப்பிரச்சினையை கருவாகக்கொண்டு பெரும்பாலான கதைகள் அமைந்துள்ளன. சேனாதீரவும் அந்தப் பெண்களும், பழைய உறவின் புதிய ஆரம்பம், நியாயம்-தர்மம், புதிய வீட்டில், பவளக்கொடி, மலர்வளையத்திற்கும் வாசமுண்டு, வாழ்வதற்காக சாவதா ஆகிய தலைப்புகளில் ஆசிரியரால் எழுதப்பெற்ற ஏழு கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 7636

**புதியவர்கள்: சிறுகதைகள்.** க.சட்டநாதன். சென்னை 600091: பொன்னி, 2/1758, சாரதி நகர், என்பீல்ட் அவென்யூ, மடிப்பாக்கம், 1வது பதிப்பு, நவம்பர் 2006. (சென்னை 600 015: இராசகுணா கணினியகம்).
128 பக்கம், விலை: இந்திய ரூபா 55.00, அளவு: 21x14 சமீ.

1970களின் ஆரம்பத்தில் சிறுகதை இலக்கியம் மூலம் ஈழத்து இலக்கிய உலகில் அறிமுகமான கனகரத்தினம் சட்டநாதன் இன்று ஈழத்து நவீன தமிழ் இலக்கியப் பரப்பில் தனித்துவ அடையாளங்களுடன் எழுதி வருபவர். இத்தொகுப்பு மல்லிகை, வெளிச்சம், தாயகம், கலைமுகம் ஆகிய இதழ்களில் எழுதப்பட்ட இவரது 13 சிறுகதைகளை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. சாதியம், பல்நிலை வர்க்கம், பிரதேசம், நகரம், கிராமம் எனப் பல தளங்களில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் இவை மனித உறவுகளில் ஏற்படுத்தும் சிக்கல்கள், வலிகள், துன்பங்கள் என்பன

படைப்புகளின் உள்ளீட்டுப் பொறிகளாக இயங்குகின்றன. இதில் விருந்து, தளிர்கள், ஒருவகை உறவு, முடிவு, பழக்கம், துணை, காலங்கள், சபலம், புதியவர்கள், அனுமதி, ஒரு அவிழ்கூட, சின்னத் தேவதைகள், பொழுது ஆகிய தலைப்புகளில் சட்டநாதன் எழுதிய கதைகள் இடம்பெற்றுள்ளன.

### 7637

**பூபாள ராகங்கள்: சிறுகதைத் தொகுதி, 2005.** மகாலிங்கம் சுதாகரன் (பதிப்பாசிரியர்). இலண்டன் UB4 0PF: கம்பர்மலை வித்தியாலயம், கொம்மந்தறை பழைய மாணவர் சங்கம், ஐக்கிய இராச்சியம், Selva Sikaram, 72 Minterne Waye, Hayes, Middlesex, 1வது பதிப்பு, ஜுன் 2006. (மஹரகம: தரஞ்ஜி பிரிண்டர்ஸ், நாவின்ன).
xvi, 120 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x13.5 சமீ.

இலண்டனில் கடந்த 2000ம் ஆண்டு முதல் வருடாந்தம் நிகழும் முத்தமிழ் கலை நிகழ்ச்சி பூபாள ராகங்கள். யாழ்ப்பாணத்தின் கொம்மந்தறை என்ற சிற்றூரின் பாடசாலையின் வளர்ச்சிக்கான தொடர் நிதிஉதவியைப் பெறும் நோக்கோடும், அப்பாடசாலையின் பெயரை உலக அரங்கில் உச்சரிக்க வைக்கும் வனப்போடும் இயங்கும் பழையமாணவர் சங்கத்தினர் கடந்த 2005ம் ஆண்டு கொழும்பு தினக்குரல் பத்திரிகையுடன் இணைந்து உலகளாவியரீதியில் நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் பரிசுபெற்ற 13 சிறுகதைகளும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. தாட்சாயணி, மு.சிவலிங்கம், சாந்தினி வரதராஜன் ஆகியோர் முதல் மூன்று பரிசில்களையும் வென்றனர். ஆறுதல் பரிசுகள் சாரங்கா தயாநந்தன், ஜுனைதா ஷெரீப், சோ.ராமேஸ்வரன், முல்லைமணி, உமாதரணி, மணிவாசகன், இரா.பரமேஸ்வரன், அ.நிஷாந்தன், என்.சொக்கன், ம.திலகபாமா ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

### 7638

**பெண் பார்க்கப் போகலாமா?** கா.வேலாயுதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
160 பக்கம், விலை: இந்திய ரூபா 180., அளவு: 18x12.5 சமீ.

தனது **செவத்த கமலம்** சிறுகதைத் தொகுதியின் வாயிலாக பரவலாக அறியப்பெற்ற ஈழத்துப் படைப்பாளி கா.வேலாயுதனின் மற்றுமொரு சிறுகதைத் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது. இதில் பெண் பார்க்கப் போகலாமா, வெள்ளை நாகம், எங்கே போவது, ஆயிரம் ரூபா, பொலிஸ்காரன் பெண்டாட்டி, தாய்மை, வாக்குமூலம், புரிந்துணர்வு, பஞ்சாமிர்தம், சிட்டுக் குருவிகள், அன்பான தாத்தாவின் கடைசி ஆசை ஆகிய 11 கதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 630620).

### 7639

**பொய்த் தூக்கங்கள்: சிறுகதைத் தொகுப்பு.** காத்தான்குடி பாத்திமா. காத்தான்குடி: நவ இலக்கிய மன்றம், 1வது பதிப்பு, மே 2004. (மட்டக்களப்பு: எவகிரீன் அச்சகம், 93, திருக்கோணமலை வீதி).
111 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 19x13 சமீ.

காத்தான்குடி காசிம் முகம்மது-கதீஜா உம்மா தம்பதியினரின் மகளான பாத்திமா, காத்தான்குடி ஸாவியா வித்தியாலய அதிபர் A.M.முஹம்மத் அவர்களின் துணைவியாராவார். அரச எழுதுவினைஞராக காத்தான்குடி பிரதேச செயலகத்தில் பணியாற்றுகின்றார். 1992இல் மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் இவரது இலக்கியப் பணிக்காக கௌரவித்திருந்தது. 2003இல் **அத்தனையும் முத்துக்கள்** என்ற இவரது முதலாவது நூல் வெளியிடப்பட்டது. **பொய்த்தூக்கங்கள்-** தொகுப்பில் இவரது 19 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

### 7640

**மண்ணுக்கேற்ற பொண்ணு: சிறுகதைகள்.** இராகவி (இயற்பெயர்: ராஜேஸ்வரி கந்தசாமி). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
viii, 264 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 70., அளவு: 17.5x12 சமீ.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் இராஜேஸ்வரி கந்தசாமி எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு இது. மண்ணுக்கேற்ற பொண்ணு, கோபுரத்து மலர் குப்பையிலே, பார்வை ஒன்றே போதுமே, தை பிறந்தால் வழிபிறக்கும், பிள்ளைப் பாசம், நிழல் தேடும் நிஜங்கள், சந்தேகம் செய்த சதி, வேதனையின் விளிம்பில், காவேரியின் கனவு, பூகம்பத்துள் மலர்ந்த பூ ஒன்று, துணிச்சலின் தூவானம், கரையைத் தேடிய ஓடம் ஆகிய பன்னிரு கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

### 7641

**மனக் கேணி: சிறுகதைத் தொகுப்பு.** எஸ்.ஐ.எம்.ஆஸ்தீன். கற்பிட்டி: எஸ்.ஐ.எம்.ஆஸ்தீன், பிரதான வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2006. (Gothatuwa New Town: P & P Associate, No. 699/1, Elhena Road).
76 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-8377-51-1.

கற்பிட்டியைச் சேர்ந்த படைப்பாளி எஸ்.ஐ.எம்.ஆஸ்தீன் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு. இந்நூல் 2006இல் அனுராதபுரத்தில் இடம்பெற்ற தேசிய சாகித்திய விழாவில் விருதை வென்றெடுத்தது. இந்நூலாசிரியர் கற்பிட்டி அல் அக்ஷா தேசிய பாடசாலையில் கற்று கண்டல்குடா முஸ்லிம் வித்தியாலயத்தில் பணியாற்றுகின்றார். வாழ்வியலில் கிட்டிய சிறப்பான அனுபவங்கள், முற்போக்குச் சிந்தனைகளின்பால் கொண்ட ஈடுபாடு, நவீன இலக்கியங்களின்பால் ஏற்பட்ட கவர்ச்சி என்பன இவரது கதைகள் செழுமையடைய உதவியுள்ளன. சுரண்டலுக்கும் சூறையாடலுக்கும் எதிராகவும் குரல் எழுப்பி உத்வேகம் மூட்டவேண்டும் எனக்கூறும் இவரது எழுத்துக்கள், ஒடுக்கப்பட்ட தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், அடக்கப்பட்ட பெண்கள், இனரீதியாக ஒடுக்கப்படும் மக்கள் ஆகியோரின் பிரச்சினைகளையும் போராட்டங்களையும் பற்றிப் பேசுகின்றன. இந்நூலில் உயிரின் விலை என்ன?மனித நேயம், நேயத் துளிகள், நட்பைத் தேடி, சிறுவிரல் சீர்மியம் ஆகிய ஐந்து கதைகளை உள்ளடக்கியது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42015).

### 7642

**மனதில் உறுதி வேண்டும்: சிறுகதைகள்.** அ.விஷ்ணுவர்த்தினி. யாழ்ப்பாணம்: ஜீவநதி, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஏப்ரல் 2010. (யாழ்ப்பாணம்: Caxton Printers, கல்வியங்காடு).
xii, 60 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x15 சமீ.

இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவியான அரியரத்தினம் விஷ்ணுவர்த்தினியின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு. பார்வதி, ருக்மணி ஆகிய வேறு புனைபெயர்களிலும் இவர் ஊடகங்களில் எழுதியுள்ளார். இதில் இவரது பத்து சிறுகதைகள் இடம்பெறுகின்றன. ஆர்கொலோ, மனதில் உறுதி வேண்டும், மாறும் மானுடங்கள், மிடிமையில் அழிந்திடேல், யாரொடு நோகேன், போன்ற கதைகள் வறுமையின் பல்வேறு முகங்களைக் காட்டுகின்றன. மனத்தாங்கல்கள், நெஞ்சு பொறுக்குதில்லையே ஆகிய கதைகள் சாதியத்தைப்பற்றியவை, மறுவாழ்வில் என்ற கதை புலம்பெயர்வாழ்வியல் பற்றிப் பேசுகின்றது. உன்னை நம்பித்தானே என்ற கதை பொருளாதாரப் புலப்பெயர்விற்கு எதிரானதாகச் சித்திரிக்கப்படுகின்றது. புரிந்துணர்வு இலங்கையின் இன ஐக்கியம் பற்றிப் பேசுகின்றது. இவ்வாறு இவரது கதைகள் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்றன. இச்சிறுகதை நூலில் சமூகப் பிரச்ச்னைகளை மையமாகக் கொண்டமைந்த ஆர்கொலோ, யாரொடு நோகேன், மனத்தாங்கல்கள், மனதில் உறுதி வேண்டும், நெஞ்சு பொறுக்குதில்லையே, மாறும் மானுடங்கள், மிடிமையில் அழிந்திடேல், மறுவாழ்வு, உன்னை நம்பித்தானே, புரிந்துணர்வு முதலிய பத்துக் கதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கதைகள் செங்கதிர், யாழ்-தினக்குரல், மல்லிகை, ஞானம், ஜீவநதி, படிகள், கதிரவன் ஆகிய ஊடகங்களில் பிரசுரமானவை.

7643
**மாயத் தோற்றம்.** ஏ.இக்பால். தர்காநகர் 12090: படிப்பு வட்டம், 9, எஸ்.எப். மாவத்தை, 1வது பதிப்பு, மார்ச் 1998. (அச்சிட்ட இடம் தரப்படவில்லை: குயிக் கிரப்பிக்ஸ்).
(10), 87 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 18x13 சமீ., ISBN: 955-8087-00-9.

மாயமோ நானறியேன், என்னை வீழ்த்தும் என் பாடல், அகந்தை, மாயத்தோற்றம், மனச்சாட்சி, பெஜ்ரோ வந்தது - சென்றது, வளர்த்த பிள்ளை, இது விதிதான், விலைப் பொருள் ஆகிய ஒன்பது சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 146250).

7644
**மாறுபட்ட சூழலில் வேறுபட்ட மனிதர்கள்: சிறுகதைகள்.** வவுனியூர் இரா.உதயணன். கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், A15 1/1, மனிங் டவுன் வீடமைப்புத் தொகுதி, மங்கள வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
xvi, 128 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-1347-08-6.

தனது **விதி வரைந்த பாதையிலே** என்ற நாவலுக்காக சாஹித்திய விருதினைப் பெற்ற உதயணனின் 12 சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. கணநேரச் சிலிர்ப்புகள், அன்புத் தங்கைக்கு, சின்ன வள்ளி, மோதிரம், கடவுளின் பிள்ளைகள், இவர்களும் அடிமைகளாக, அப்பா எப்ப வருவார் அம்மா, இதுவும் ஒரு அகதிமுகாம், மாறாத மனிதர்கள், பாலைவனத்துப் பேதையவள், புதிய மாற்றங்கள், ஏமாற்றுபவர்களும் ஏமாற்றப்படுபவர்களும் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. ஆசிரியரின் மூன்றாவது நூல் இது. இந்நூலில் உள்ள அனைத்துக் கதைகளும் மாறுபட்ட சூழலில் வாழும் மனிதனின் நடவடிக்கைகளும் சிந்தனைகளும் அந்தச் சூழலுக்கு இசைவாகின்றது என்பதை அடியொற்றி எழுதப்பட்டுள்ளன. கணநேரச் சிலிர்ப்புகள்- பார்வை இழந்த ஒரு பெண்ணின் உடலைத் தழுவத்துடிக்கும் வக்கிரங்களின் அக்கிரமங்களை விபரிக்கின்றது. அன்புத் தங்கைக்கு- சிறுகதை புலம்பெயர்ந்தநாட்டின் மாறுபட்ட சூழலையும் அதன் பிரதிகூலங்களையும் தெரிவிக்கின்றது. சின்ன வள்ளி, மோதிரம் ஆகிய கதைகள் சிறுவர்கள் மீது நடத்தப்படும் துன்புறுத்தல் பற்றிய விவரணமாகின்றன. கடவுளின் பிள்ளைகள்- போரினால் பெற்றோரை இழந்த பிஞ்சு உள்ளங்களின் சோகக் கதையை உருக்கமாகச் சொல்கின்றது. அப்பா எப்ப வருவார்- நர்மதாவின் வஞ்சிக்கப்பட்ட வாழ்வைக் கூறுகின்றது. சிறுகதைகள் எளிமையாகவும், சமூகப் பிரக்ஞையுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

7645
**மீண்டும் துளிர்ப்போம்.** கலாமணி பரணீதரன். யாழ்ப்பாணம்: ஜீவநதி, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, பெப்ரவரி 2011. (யாழ்ப்பாணம்: Sathapons Printers).
(12), 76 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-52496-1-4.

இதில் க.பரணீதரனின் 13 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. உயிரிலும் மேலானது, மெய்ப்படவேண்டும், புதிய காலடி, நகுதற் பொருட்டன்று, கற்பக தருக்கள், பொய்முகங்கள், ரோபோ, மீண்டும் துளிர்ப்போம், விட்டு விடுதலையாகி நிற்பாய், உறவுகள், மாறுதல், பகிடிவதை, யதார்த்தம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. நூலாசிரியர் ஜீவநதி என்ற கலை இலக்கியச் சிற்றிதழின் ஆசிரியராவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உளவியலைச் சிறப்புப்பாடமாகக் கற்றவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 179911).

7646
**முக்கூடல்: சிறுகதைகள்.** க.சட்டநாதன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 291/6-5/3 A, எட்வர்ட் அவென்யூ, 1வது பதிப்பு, பெப்ரவரி 2010. (கொழும்பு: Page and Image Press).
(8), 164 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ.

*வேலணையில் பிறந்த சட்டநாதன் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றி இளைப்பாறியவர். ஆண்-பெண் உறவுகளின் மர்ம முடிச்சுக்களின் சிக்கலே இவரது கதைகளுக்கான களமாக அமைகின்றன. நெருக்கடி மிகுந்த உலகில் ஆண்களால் கட்டமைக்கப்பட்ட சமூகத்தின் அடக்குமுறைகளுக்குள்ளாகி வாழ்வின் திசை தெரியாது அவதிக்கும் துன்பத்திற்கும் உள நெருக்கீடுகளுக்கும் உள்ளாகும் பெண்கள்மீது இவர் கொள்ளும் அக்கறையும் பரிவும் சட்டநாதனின் கதைகளுக்கு ஒரு தனித்துவமான பரிமாணத்தைக் கொடுக்கின்றன. இத்தொகுப்பில் சட்டநாதனின் நினைவுகளில், தண்டனை, அந்த இருவர், அம்மா செய்த கொலை, அந்த மரணமும் அவர்களும், கனவுகள் கரைந்துபோனபோது, பேரிளமை, நிழல், முக்கூடல், நூலிழை உறவுகள், மனமடிப்புகளில், விடலை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 12 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

### *7647*

**முகங்கள்.** வி.ஜீவகுமாரன் *(தொகுப்பாசிரியர்). டென்மார்க்: வி.ஜீவகுமாரன், விஸ்வசேது இலக்கியப் பாலம்,* Hojvangsparken 7, 4300 Holbaek, *1வது பதிப்பு, ஜனவரி 2011. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை).*

*551 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.*

*சர்வதேச தமிழ் எழுத்தாளர்களின் புலம்பெயர் வாழ்வு பற்றி 2011இல் வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுதி. மனித உணர்ச்சிகளின் விம்பங்களைக் காட்டும் கண்ணாடியாக இக்கதைகள் அமைகின்றன. சொந்த தேசத்தின் எல்லைகளைத் தாண்டும்போது இதே முகங்கள் தம் முகத்தை இழக்கின்றன. அல்லது முகமூடி போட்டுக்கொள்கின்றன. புலம்பெயர் வாழ்வில் சந்தித்த வேதனைகளும் சாதனைகளும்தான் இந்தத் தொகுப்பில் உள்ள சிறுகதைகள். ஐம்பது கதாசிரியர்களின் வாழ்வியல் அனுபவங்கள் சிறுகதைகளாக இங்கே இறக்கிவைக்கப்படுகின்றன.*

### *7648*

**முன்னோர் சொன்ன கதைகள்.** யோகேஸ்வரி சிவப்பிரகாசம். *யாழ்ப்பாணம்: ஜீவநதி, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஆடி 2011. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டர்ஸ், நல்லூர்).*

viii, *72 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 20.5x14.5 சமீ.*

*ஜீவநதி சஞ்சிகை வெளியீட்டாளர்களின் ஒன்பதாவது நூல் வெளியீடு இது. நம்முன்னோர் சொன்ன சங்க இலக்கிய, வாய்மொழி வழிவந்த, சமய இலக்கியங்கள் சொன்ன இன்னோரன்ன பல்வேறு கர்ணபரம்பரைக் கதைகளைத் தனது எளிமையான எழுத்துநடையில் இன்றைய காலச் சம்பவங்களுடன் பிணைத்து மீளச்சொல்லியிருக்கும் இந்நூலாசிரியர் வங்கிமுகாமையாளராகப் ணியாற்றி ஓய்வுபெற்றவர். இத்தொகுப்பில் முன்னோர் சொன்ன கதைகள், திருமகள் தேடுமிடம், புழுவாய்ப் பிறந்தும், பேராசை, வாழ்க்கைச் சக்கரம், பகைவரிடத்தும் நல்லது காண், உன்னைவிட உயர்ந்தவன், கற்றது கைமண்ணளவு, தெய்வம் ஒன்றென்றிரு, கும்பிடும் நோக்குடன் கோவிலுக்குச் செல், ஏழையும் இறைவனும், விக்கினன், பார்வைகள் வேறு, சித்திரகுப்தன் கதை, சிவராத்திரி தரிசனம், சிறந்த பக்தன், தானம் செய்யும் போது, பாவமும் சாபமும், மனப்பக்குவம், நற்செயலின் பயன், பக்தியுள்ளம் தேடும் இறைவன், காற்றுள்ளபோதே, நன்றும் தீதும், முற்பகல் செய்யின் ஆகிய 24 தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.*

### *7649*

***முஸ்லீம் கதைமலர்: ஈழத்து முஸ்லீம் எழுத்தாளர்களின் சிறுகதைகள்.*** யு.எல்.தாவுத் *(தொகுப்பாசிரியர்). கொழும்பு 12: ஸபீனா பதிப்பகம், 20, பிரைஸ் பிளேஸ், 1வது பதிப்பு, நவம்பர் 1964. (கொழும்பு 12: ஸபீனா அச்சகம்).*

*154 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 18x12.5 சமீ.*

*ஏறாவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட யூ.எல்.தாவூத் கவிதை, இலக்கியம், இஸ்லாம் ஆகிய துறைகளில் ஈடுபாடுடையவர். இஸ்லாம்-இஸ்லாமிய இலக்கியம் பற்றிய இவரது கட்டுரைகள் பல இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டுள்ளன. கொழும்பில் ஆசிரியராகப் பணியாற்றும் இவர் ஈழத்து முஸ்லிம் படைப்பாளர்களின் தேர்ந்த சிறுகதைகளைத் தொகுத்து இந்நூலை ஆக்கியுள்ளார். பாதிக் குழந்தை (பித்தன்), அந்தக் கிழவன் (அ.ஸ.அப்துஸ்ஸமது), இன்னுமா சீதனம்?*

(ம.மு.உவைஸ்), மனிதன் (அண்ணல்), தங்கச் சவடி (யுவன்), ஒளி (மருதூர்க் கொத்தன்), வெளிச்சமல்ல ஒளி (ஏ.இக்பால்), வானவில் (எம்.ஏ.நு.்.மான்), ரஹ்மத் உம்மா (எம்.எம்.மக்கீன்), வாழ்வு தந்த பரிசு (செய்னுல் ஹூசைன்), தலாக் (எம்.ஏ.எம்.சுக்ரி), உரிமை (மருதமுனை மஜீத்), அல்லாஹூ அக்பர் (அபூஷானாஸ்), இருளிலிருந்து (யூ.எல்.தாவூத்) ஆகிய 14 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 7650

**வரலாற்றுச் சுவடுகள்: சிறுகதைகள்.** அன்புமணி (இயற்பெயர்: இரா.நாகலிங்கம்). மட்டக்களப்பு: அன்பு வெளியீடு, தவபதி, ஆரையம்பதி-1, 1வது பதிப்பு, 1993. (மட்டக்களப்பு: புனித வளனார் அச்சகம்).
viii, 130 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5x12.5 சமீ.

இல்லத்தரசி என்ற தனது முதலாவது சிறுகதைத் தொகுதியை வெளியிட்ட அன்புமணி அவர்களின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி இது. அவர் ஏற்கெனவே எழுதிப் பிரசுரமான வழிப்பிள்ளையார், தேரோட்டம், தோணித்துறை, சுவர், மௌனக் குரல்கள், சின்னச் சின்ன கணவர்கள், ஏக்கங்கள், சிந்தித்தால் தெளிவுவரும், பிச்சைச் சம்பளம், வல்லவனுக்கும் ஒரு வல்லவன், இதயக் குரல், வரலாற்றுச் சுவடுகள் ஆகிய பன்னிரு சிறுகதைகளைக்கொண்ட தொகுதி இதுவாகும். இவை மானிடம் பற்றியும் மனித விழுமியங்கள் பற்றியும் பேசுகின்றன.

### 7651

**வரால் மீன்கள்.** எம்.எஸ்.அமானுல்லா. மூதூர் 05: எம்.எஸ்.அமானுல்லா, வானவில் வெளியீட்டகம், அரபுக் கல்லூரி வீதி, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2007. (திருக்கோணமலை: றெயின்போ மினிலாப், 43 திருஞானசம்பந்தர் வீதி).
152 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1098-09-4.

இது நூலாசிரியரின் முதலாவது நூலாக வெளிவரும் சிறுகதைத் தொகுதி. இதில் கொய்யா மரத்தில் குருவிச்சைப் பூக்கள், வரால் மீன்கள், சுங்கான் மீன், மனித இனம், கல்யாண முருங்கை, கருவேலங்காடுகள் தாண்டி, செவ்வால் அறணை, தலைமுறைகள் ஆகிய இவரது எட்டுச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றிலுள்ள கதைமாந்தரின் இயல்பு வாழ்க்கை கலைநயம்மிக்கதாகச் சொல்லப்படுகின்றன. கொய்யா மரத்தில் குருவிச்சைப் பூக்கள்- கண்டல் காட்டில் மட்டி பொறுக்கி வாழ்க்கை நடத்தும் ஒரு பெண்ணின் கதை. வரால் மீன்கள் என்ற தலைப்புக்கதை ஒரு நேர்மைமிக்க ஆசிரியரின் கதையாகும். நேர்மையை சந்தர்ப்பவசத்தால் இழக்க நேரும்போது, சத்தியத்தைக் காக்கத் தவறிய உணர்வின் உந்துதலில் எற்பட்ட மனவலியால் தன் உயிரை இழக்கிறார். சுங்கான் மீன் - பாசத்தைப் பண்புடன் விளக்கிச் சொல்வது. இவரது சிறுகதைகள் யாவும் பெரும்பாலும் கிழக்கு மண்ணின் வனப்பையும் வளத்தையும் உள்வாங்கிக்கொண்டு பிராந்திய மனிதர்களுடைய குணாதிசயங்களின் ஒட்டுமொத்த வடிவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. எம்.எஸ்.அமானுல்லா மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மூதூரின் முதலாவது பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் இவர் என்ற பெருமை இவருக்குண்டு. 35 வருடகால கல்விச்சேவையைப் பூர்த்திசெய்து ஓய்வுபெற்றுள்ளார்.

### 7652

**வழி: தமிழீழப் பெண்களின் சிறுகதைகள்.** ஆ.உலக மங்கை (தொகுப்பாசிரியை). கிளிநொச்சி: கப்டன் வானதி வெளியீட்டகம், இல. 61, கனகபுரம், 1வது பதிப்பு, ஆவணி 2005. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம், 73D, 2ம் குறுக்குத் தெரு).
141 பக்கம், விலை: ரூபா 165., அளவு: 20.5x14 சமீ.

விடுதலைப் புலிகளின் பெண் போராளியும் போர் இலக்கியவாதியுமான அமரர் திருமதி சந்திரா அற்புதலிங்கம் (12.7.1961- 29.11.2004) அவர்களின் நினைவாக அவரது வழி என்ற சிறுகதையைத் தலைப்புக்கதையாகக் கொண்டு, மேலும் ஒன்பது போராளிகளான வன்னிமகள் (கௌரவம்), சிவாஜினி சிவசங்கர் (மனிதத்துள்), கிருஷ்ணவேணி (பூ ஒன்று புயலானது), குமுதினி (பயணம்), அலைவரிசை (மௌனத்திரை விலக),ஆதித்தநிலா (எங்கே கண்ணைத்திறவுங்கோ), காந்தா (நெஞ்சுக்குள்ளே), மலைமகள் (புலிவாலைத் தேடி), அம்புலி (உள்ளே எரியும் தீ) உள்ளிட்ட

*தமிழீழப் போராளிப் பெண்களின் மெட்டி, எல்லைக்கோடு, வதையின் கதை ஆகியவை உள்ளிட்ட 13 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. பெண்களின் இயல்பு நிலையை வெளிப்படுத்துவனவாகவும், போர்க்காலச் சூழலில் வாழ்ந்தவர்கள் புலம் சார்ந்த வாழ்க்கையின் அவலங்களையும் போராளிகளின் உணர்வுகளையும், விலைமதிப்பற்ற தியாகங்களையும் கருப்பொருளாக உள்வாங்கித் தம் படைப்புக்களை ஆக்கியுள்ளனர்.*

### 7653

**வற்றா நதி.** *செங்கை ஆழியான். (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10ஏ, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).*

iv, *108 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 18x12.5 சமீ.*

*ஆசிரியரின் நினைவுப்பெட்டகத்திலிருந்து கருக்கொண்ட 11 கதைகளைக் கொண்ட தொகுப்பு. ஒருவகையில் செங்கை ஆழியானின் சுய வரலாறு கூறும் ஒரு பதிவாகவும் அமைந்துள்ளது. விரகேசரி, தினகரன். தினக்குரல் பத்திரிகைகளிலும் மல்லிகை, ஞானம் சஞ்சிகைகளிலும் வெளிவந்த 9 கதைகளும், முதற்பதிப்புக்காணும் இரு கதைகளுமாக இவை அமைகின்றன. ஆசிரியரின் மொழி நடையும், காட்சிப்படுத்தும் திறனும் வாசகரை கதைகளுடன் ஐக்கியமாக வைக்கின்றது.அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமது எழுத்துக்களால் ஈழத்துப் படைப்பிலக்கியத்துறையை வளம்படுத்தியவர் செங்கை ஆழியான். இவர் தனது அந்தக்கால நினைவுகளை- அந்த அனுபவங்களைப் பெறும் வாய்ப்பற்றதொரு போர்க்காலச் சூழலில் வாழும் இளந் தலைமுறையினருக்காக சிறு அனுபவப்பிழிவுகளாக சுவையாக வழங்கியிருக்கிறார். புனைகதைத் தன்மைகொண்டதும் பயன்தரு தகவல்களைச் சுவைபடத்தரும்வகையிலானதுமான ஆக்கங்கள் இவை. அடிவளவுப் புளியமரம், சைவக்கார ஆச்சி, குஞ்சிஅம்மா, பலாமரத்துக் கூகை, அளவெட்டி மாமி, பெரியய்யாவின் றங்குப்பெட்டி, பால்குடிச் சிறுவன், எங்கவீட்டு அழகி, ஐந்து வயதுச் சினேகிதி, ஜெயில் கார்ட் அத்தான், ஒரு தேவதை ஆகிய 11 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

### 7654

**வாழ்க்கை வளைவுகள்.** *நயீமா சித்தீக். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*

xvi, *168 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 17.5x12 சமீ.*

*வாழ்க்கை வளைவுகள் தொகுப்பிலுள்ள 20 சிறுகதைகளும், சீதனப்பிரச்சினையை மட்டும் கருவாகக் கொள்ளாது, கல்வி, உளவியல், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், பல்லின மக்களின் மத்தியில் நல்லிணக்கம் முதலான பல்வேறு கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ளன. முஸ்லீம் சமூகத்தில் நிலவும் பல்வேறு நிகழ்வுகளிலிருந்து இவரது ஒவ்வொரு கதையும் கருக்கொண்டுள்ளது. மலையக மக்களின் அன்றாட உரையாடல்களில் வரும் சிங்கள மொழியின் கலப்பு, இவரது கதைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஓர் உதயத்தின் அஸ்தமனம், வாப்பாவைப் போல, கரைந்துபோகும் கறைகள், அவன் அழப் பிறந்தவன், கலைந்த கனவு, இதோ ஒரு மாப்பிள்ளை, ஒரு அர்சாடின் கதை, தன்மானம், காலங்கள் மாறவே செய்யும், அழுகையில் கரையும் துயரங்கள், வேலியே பயிரை மேய்கிறது, வீடு வந்து சேரும் சிறுபிள்ளை வேளாண்மைகள், ஆதமின் அழுகை, காலம் பல கடந்தாலும், நல்ல காரியம், ஒரு முளை கிள்ளி எறியப்படுகின்றது, எண்ணச் சிறகுகள், ஒரு கல் கரைகிறது, முற்பகல் செய்யின், ஒரு மீலாத் விழா அரங்கேறுகிறது ஆகிய தலைப்புகளில் இச்சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன.*

### 7655

**வீரகேசரி பவளவிழா சிறுகதைக் களஞ்சியம்.** *வி.தேவராஜ் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 14: வீரகேசரி வெளியீடு, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி, 1வது பதிப்பு, 2006. (சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர்).*

viii, *280 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x15 சமீ.*

யாழ்ப்பாணத்தில் ஈழகேசரி 22 ஜுன் 1930இல் ஆரம்பிக்கப்பட்ட இரண்டே மாதங்களில் 1930 ஆகஸ்ட் 6இல் கொழும்பில் தொடக்கப்பட்டது வீரகேசரி. வீரகேசரியின் உருவாக்கத்தின் பின்னதான இரண்டாண்டுகளில் 1932 மார்ச் 15இல் தினகரன் வெளிவர ஆரம்பித்தது. தனது பவளவிழாவையொட்டி வீரகேசரி நடத்திய சிறுகதைப்போட்டியில் வெற்றிபெற்ற முதல் மூன்று கதைகளுடன் போட்டிக்கென வந்த மேலும் நல்ல பல சிறுகதைகளைத் தொகுத்து மொத்தம் 25 கதைகளுடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஈழத்து இலக்கியப் பரப்பில் ஆழத்தடம் பதித்த வீரகேசரியின் இலக்கியப் பயணம் பற்றிய அறிமுகக் குறிப்பான முன்னுரையுடன் இத்தொகுப்பு விரிகின்றது. நிலத்தாய் (M.A.L.அசூமத்), இரண்டாவது அலை (அ.ச.பாய்வா), வேரில் வைத்த தீ (லறீனா அப்துல் ஹக்), அஸ்மியா (M.N.M.அனஸ்), யானைக்குளம் (C.S.M.M.ஹனீபா), பதினைந்தாயிரம் (செ.குணரத்தினம்), உறவைத்தேடும் தீவுகள் (பவானி சிவகுமாரன்), சைனியச் சாவடி (ஆறுமுகம் தங்கத்துரை), ஊர்வலம் (உசனார் அஹமட்), ஒரு கல்லறையில் பீனிக்ஸ் பறவை (அ.ம.அருள்ராஜ்), ஒரு தூணும் ஆறெழு பலூன்களும் (சோ.பரமேஸ்வரன்), பொட்டக்கழுத (சிவனு மனோகரன்), காணி நிலம் வேண்டும் (பொ.கிருஷ்ணவேணி), சிவப்பு நாட்களின் சுவடு (அ.நிஷாந்தன்), மின்னுவதெல்லாம் (மு.சிவநேசன்), தாலிக்கொடி (எம்.மகாதேவன்), சொந்தம் (ம.நிரேஸ்குமார்), தொப்பி (A.H.M.மஜீத்), தாயின் மடியில் (வே.சுப்பிரமணியம்), குளம் வற்றுமென்று (வி.ஜெகநாதன்), இரு பக்கங்கள் (H.M.M.இப்ராஹிம் நத்வி), வீடும் அது சார்ந்த அறைகளும் (மாரி மகேந்திரன்), வயிற்றுப்பா(ட்)டு (ப.கேதீஸ்வரன்), நான் மனம் அவள் (M.U.முஹம்மத் ஸபீர்), இருட்டு இரவுகள் (நாகராசா ரகு) ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

மேலும் பார்க்க: 7069, 7795, 7796, 7805, 7810, 7901, 7948,

## 894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள்

### 7656

**அது ஒரு கனாக்காலம்: திரைக்கதை.** பாலு மகேந்திரா (மூலம்), மீரா கதிரவன் (திரைக்கதை பிரதியாக்கம்). சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2006. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை).
216 பக்கம், புகைப்படம், விலை: இந்திய ரூபா 95., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 81-89748-20-3.

2005ம் ஆண்டு பாலு மகேந்திராவின் இயக்கத்தில் வெளிவந்த தமிழ்த் திரைப்படத்தின் திரைக்கதை நூலுருவில் வெளிவந்துள்ளது. மலையாள மொழிப்படமாக இது யாத்ரா என்ற பெயரிலும் வெளியிடப்பட்டது. விதிவசத்தால் கொலைகாரனாகிப் பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவிக்க நேர்ந்த ஒரு இளைஞனின் காதல் இக்கதையில் சொல்லப்படுகின்றது. தண்டனையை முழுவதும் அனுபவிக்காது சிறையிலிருந்து தப்பும் அவ்விளைஞன் தன் காதலிக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவெற்றுகிறானா என்பதே கதை. 1944 மே 19இல் மட்டக்களப்பு அமிர்தகழியில் பிறந்தவர் பாலநாதன் பெஞ்சமின் மகேந்திரன் (பாலு மகேந்திரா).லண்டனில் இளநிலைக் கல்விப்படிப்பை முடித்த இவர் இந்தியாவின் பூனே திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவுத்துறையில் பயின்று 1971இல் தங்கப்பதக்கம் பெற்றவர். செம்மீன் பட இயக்கநரான ராமு காரியத் இவரைத் தனது நெல்லு-திரைப்படத்துக்கு ஒளிப்பதிவாளராக நியமித்தார். கேரள மாநில விருதை சிறந்த ஒளிப்பதிவுக்காக நெல்லு திரைப்படம் 1972இல் வென்றது. இயற்கை ஒளியில் திரைப்படம் எடுப்பதில் தனித்திறமை மிக்கவர் இவர்.

### 7657

**அலையின் கீதம்: நாவல்.** செங்கை ஆழியான் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: திருமதி கமலா குணராசா, கமலம் பதிப்பகம், 75/10 A, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
iv, 112 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 17x12 சமீ., ISBN: 978-955-1624-02-6.

செங்கை ஆழியானின் வாடைக்காற்று நாவல் எழுதப்பட்ட 1973 காலகட்டத்தில் எழுதப்பட்ட நாவல் இது. மீனவர்களின் வாழ்வியல் பின்புலத்தில் இதுவும் எழுதப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் சத்தியவேத பாதுகாவலன் பத்திரிகையில் 2000ஆம் ஆண்டில் ஆறு இயல்கள் தொடராக வெளிவந்து பின்னர் இடைநிறுத்தப்பட்டது. இந்நாவல் இப்பொழுது முழுமையாக நூலுருவில் வழங்கப்பட்டுள்ளது.

### 7658

**அறுவடைக் கனவுகள்- நாவல்.** அல்.அஸுமத். வத்தளை: அல் அஸுமத், 48/13 B, Dankanattha Siddartha Mawathe, மாபோல, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (கொழும்பு 15: டலன்ட் பிரின்டெக், 20/4, மாதம்பிட்டி வீதி).
xviii, 348 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 600., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-52134-1-7.

1984இல் தினகரன் நாளிதழ்களில் தொடராக வெளிவந்த மலையக நாவல் இது. கே.பி. என்றால் கணக்கப்பிள்ளை, எஸ்.கே.பி. என்றால் சின்னக் கணக்கப்பிள்ளை. காலில் சப்பாத்துப் போடக்கூட உரிமையற்றவர்களாகக் கணக்கப்பிள்ளை மார்களின் கைகளுக்குள் திண்டாடியவர்கள்தான் இந்த எஸ்.கே.பி சுப்பவைசர்மார். இந்நாவல் இவர்களைப்பற்றியது. மலையக சமூக வரலாற்றில் நாட்டார் இலக்கியங்களுக்குள் இவர்கள் பற்றிய குறிப்புக்கள் இராது. காரணம் இவர்கள் தோட்ட நிர்வாகத்தின் மிக அண்மைக்கால அறிமுகங்கள்.எஸ்டேட் ஸ்டாப் (Estate Staff) என்னும் தோட்ட நிர்வாகிகள் வகைக்குள்ளும் உள்வாங்கப்படாது, தங்களில் ஒருவன் என்று தொழிலாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படாத இரண்டும்கெட்டான்கள் இவர்கள். இந்நாவல் இத்தகைய ஒரு பிரகிருதியைச் சுற்றி வருகின்றது.

### 7659

**அன்புடை நெஞ்சம்: குறுநாவல்.** ஆனந்தராணி நாகேந்திரன் (புனைபெயர்: நெல்லை லதாங்கி). யாழ்ப்பாணம்: ஆனந்தா வெளியீடு, 1வது பதிப்பு, யூலை 2009. (அல்வாய்: மதுரன் கிராப்பிக்ஸ் ஓப்செட் பிரின்டர்ஸ்).
viii, 126 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 17x12.5 சமீ.

நெல்லை லதாங்கி என்ற பெயரில் எழுதிவரும் ஆனந்தராணி ஈழத்தின் கணிப்பிற்குரிய பெண் எழுத்தாளர்களுள் ஒருவர். தும்பளையில் பிறந்த இவர் நெல்லியடியை வசிப்பிடமாகக் கொண்டவர். யாழ்/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தின் இசை ஆசிரியராகப் பணியாற்றுகிறார். உறங்கும் உண்மைகள் என்ற குறுநாவல் தொகுதியையும், எதிர்பார்க்கைகள் என்ற வானொலி நாடகத் தொகுப்பையும் வழங்கிய இவரது மூன்றாவது நூல் இது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 175648).

### 7660

**இது ஒரு ராட்சஷியின் கதை.** ஏ.சீ.ஜரீனா முஸ்தபா. மாவனல்லை: எக்மி வெளியீடு, 19, கமந்தெனிய வீதி, கிரிங்கதெனிய, 1வது பதிப்பு, ஜுன் 2010. (மாவனல்லை: எம்.ஜே.எம்.பிரின்டர்ஸ், 119, பிரதான வீதி).
xv, 132 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1825-05-8.

அபலையின் டயரி என்ற நாவலுடன் அறிமுகமாகிய நாவலாசிரியரின் இரண்டாவது நாவலான இது 2009ம் ஆண்டு இந்தியாவில் இடம்பெற்ற சர்வதேச நாடகப் போட்டியில் ஆறுதல் பரிசுபெற்றது. பாதாளம்வரை பாயும் பணத்தைக் கருவாகக்கொண்டு இக்கதை 19 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. இந்நாவலில் ராட்சஷியாக உருவகப்படுத்தப்பட்ட ஸினீரா, அவரது கணவர் அஹ்னாப், ஸமீனா, ஆங்காங்கே வந்துபோகும் ஒருசில உறவுகள் எனச் சில பாத்திரங்களுக்கூடாகவே நாவலை நகர்த்திச்செல்கின்றார். இந்தக் கதை வசிர் என்ற சகோதரருக்கும் அவரது தங்கையான ஸினீராவின் கணவனுக்கும் இடையில் நடைபெறும் போராட்டமாகவே ஆரம்பத்தில் குறிப்பிடப்படுகின்றது. பின்பு வெறுப்பின் உச்சத்தில் சகோதரர் ஸினீராவின் மீதே பாரபட்சம் காட்டுவதோடு அவர்களது பொருளாதார முன்னேற்றத்தில் தடையாய் இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறார். துன்பத்தின் மேல் துன்பத்தைத் தாங்கும் ஸினீரா இறுதியில் எவ்வாறு அவற்றிலிருந்து மீள்கிறாள் என்பதே விறுவிறுப்பான கதையாக இந்நாவலை வளர்த்துச் செல்கின்றது.

நாவலாசிரியை ஏ.சீ.ஜரீனா முஸ்தபா மேல்மாகாணத்தின் கொழும்பு கடுவெலவைச் சேர்ந்தவர். சிங்களமொழியைக் கல்விமொழியாகக் கொண்டபோதிலும், தமிழில் தன் திறமையை தன் படைப்புக்களின்மூலம் வளர்த்துக்கொண்டவர்.

### 7661

**உதிர பாசம் அல்லது இரத்தினபவானி.** சி.வை.சின்னப்பபிள்ளை. யாழ்ப்பாணம் சி.வை.சின்னப்பபிள்ளை, 1வது பதிப்பு, 1915. (வண்ணார்பண்ணை: ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திரசாலை).
(4), 168 பக்கம், விலை: 62 சதம், அளவு: 20.5x13.5 சமீ.

இரத்தினம் என்ற வீரன் பல சாகசங்களின் பின் பவானியைக் கைப்பிடிக்கிறான். 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் தென்னிந்திய ஜெமீந்தார், முதலியார், அரச ஊழியர் போன்ற நடுத்தரவர்க்கத்தினர் கதைமாந்தர்கள். அத்தியாயங்களின் தொடக்கமும் முடிவும் தமிழ்ச் செய்யுள்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. நற்கல்வி, சான்றாண்மை, வாய்மை, பொறை, இரக்கம், முதலியவற்றால் ஒருவர் அடையும் மேன்மையையும், நாளாந்தம் தேகப்பயிற்சி செய்வதினால் உண்டாகும் வலிமையைப்பற்றியும், ஆபத்துக்காலத்தில் மனம் சோராத தைரியம், வீரம், சமயோசித புத்தி, ஆகியவற்றால் எய்தும் நன்மை பற்றியும் இந்நாவல் எடுத்தியம்புகின்றது. அத்தியாயத் தொடக்கத்தில் அவ்வத்தியாயத்துக்குப் பொருத்தமானதாக, தமிழின் பிரபல பாடல்களில் உள்ள ஒரு செய்யுள் தேர்ந்து தரப்பட்டுள்ளது. அவ்வத்தியாயத்தின் இறுதியில் ஆசிரியர் இயற்றிய மற்றொரு செய்யுளும் அவ்வத்தியாயத்தை பூரணப்படுத்தும் வகையில் அதன் போதனையை உள்ளடக்கியதாக எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் யாழ்ப்பாணம், சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் இளைய சகோதரரும் அவரது மாணாக்கர்களுள் ஒருவருமாவார். முன்னர் வீரசிங்கன் கதை, விஜயசீலம் ஆகிய நாவல்களை இயற்றியவராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54377).

### 7662

**உயிர்க் காற்று.** வவுனியூர் இரா.உதயணன். கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், A15 1/1, மனிங் டவுன் வீடமைப்புத் தொகுதி, மங்கள வீதி, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).
viii, 136 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-1347-07-9.

இரா. உதயணனின் ஆறாவது நூலாகவும் ஐந்தாவது நாவலாகவும் இது வெளிவருகின்றது. தனது பல்கலைக்கழக வாழ்வில் காதலித்த சக மாணவியான நித்யா என்ற இளம்விதவையைத் திருமணம் செய்ய பெற்றோர் எதிர்த்ததால் தவிக்கும் திலக் இக்கதையின் நாயகன். சுனாமிப் பேரழிவின்போது நித்யாவை இழந்து நடைப்பிணமாக வாழும் அவனுக்கு ஒருநாள் நித்யா கையில் குழந்தையுடன் வந்து அதிர்ச்சியளிக்கிறாள். பாலியல்தொழிலில் பலவந்தமாக ஈடுபடுத்தப்பட்டு நலிந்த தன் காதலிக்கு மறுவாழ்வளிக்கத் துணிகிறான் திலக். சமகால ஈழத்தமிழரின் வாழ்வியல் போக்கினூடாக கதை நகர்த்தப்படுகின்றது.

### 7663

**உள்ளத்திலே குடியிருக்கலாமா?** எஸ்.உதயசெல்வன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
348 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 18x12 சமீ.

எஸ்.உதயசெல்வன் யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக்கொண்டவர். நீர்கொழும்பின் குடாப்பாடு பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறார். இவரது முதலாவது நாவல் நினைவெல்லாம் நீயே 2004இல் மணிமேகலைப் பிரசுரமாக வெளிவந்தது. தொடர்ந்து அப்பாவைத்தேடி என்ற சிறுகதைத் தொகுதியும், மொட்டுக்களை மலரவிடுங்கள், காதல் பூட்டு ஆகிய நாவல்களும் வெளிவந்தன. வாய்ப்பூட்டு நாவல் திருப்பூர் தமிழ்ச்சங்கம் நடத்திய 2005ம் ஆண்டுக்கான இலக்கிய விருது பரிசுப்போட்டியில் பரிசுபெற்றது. உள்ளத்திலே குடியிருக்கலாமா- இவரது ஐந்தாவது நூல். வழமைபோல ஆசிரியரின் நாவலில் காதல் ரசமும்,

காதலர்களுக்கிடையேயான ஊடல்களும், கூடல்களும் பரவிக்கிடக்கின்றன. மனைவியை இழந்து தவிக்கும் கதாநாயகன் தாய்ப் பாசத்திற்கும், காதலுக்குமிடையே சிக்கித் தவிக்கிறான். எயிட்ஸ், புற்றுநோய் ஆகியவற்றின் பாதிப்புகள் பற்றி நாவல் இடைக்கிடையே பேசுகின்றது. எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வை சமூகச் செய்தியாக இந்நாவல் வழங்க முயல்கின்றது.

### 7664

**உறங்கும் உண்மைகள்: ஒருயிர்.** நெல்லை லதாங்கி (இயற்பெயர்: ஆனந்தராணி நாகேந்திரன்). கரவெட்டி: கலாசார கூட்டுறவுப் பெருமன்றம், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (நெல்லியடி: லெட்சுமி அச்சகம், நாவலர் மடம்).
xii, (4), 80 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 17.5x12 சமீ.

உறங்கும் உண்மைகள், ஒருயிர் ஆகிய இரு குறுநாவல்களின் தொகுப்பு இது. ஆனந்தராணி ஈழத்தின் கணிப்பிற்குரிய பெண் எழுத்தாளர்களுள் ஒருவர். தும்பளையில் பிறந்த இவர் நெல்லியடியை வசிப்பிடமாகக் கொண்டவர். யாழ்/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தின் இசை ஆசிரியராகப் பணியாற்றுகிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 172401).

### 7665

**உறைக்கும் உண்மைகள்.** நிலா (இயற்பெயர்: உதயகுமாரி பரமலிங்கம்). London HAO 2HW: உதயகுமாரி பரமலிங்கம், சிவம் தரம் பதிப்பகம், Flat 1, Ithell Court, 18, Crawford Avenue, Wembley, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (திருச்சி 620 001: தி பிரிண்டர்ஸ் இந்தியா).
94 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 5., இந்திய ரூபா 60., அளவு: 21x14 சமீ.

வித்தியா என்ற இளம்பெண்ணின் வாழ்வின் ஒரு சிறு அத்தியாயமாக இந்நாவல் அமைகின்றது. போர்ச்சூழலால் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து மாணவியாக லண்டன் வரும் வித்தியாவின் அந்நியதேச வாழ்வியல் சூழலில் நிகழும் பல நிகழ்வுகள் இங்கு கதையை வளர்த்துச் செல்கின்றன. ஆசிரியரின் நான்காவது படைப்பு இதுவாகும்.

### 7666

**ஒரு குடும்பத்தின் கதை.** செ.கணேசலிங்கம். சென்னை 600 026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12) மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7வது தெரு, வடபழநி, 2வது பதிப்பு, டிசம்பர் 1998, 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (சென்னை 600 026: குமரன் பதிப்பகம், 3(12) மெய்கை விநாயகர் தெரு, வடபழநி).
192 பக்கம், விலை: இந்திய ரூபா 42., அளவு: 18x12 சமீ.

இந் நாவலின் வழியாக, இயல்பாகக் குடும்பங்களில் நடைபெறும் பிரச்சினைகள், வெளித்தோற்றத்தில் பரிசுத்த அமைப்பாகக் குடும்பம் பூசி மெழுகப்பட்ட போதிலும், உள்ளே பயங்கர நிலையாக, பகைமை உறவுகொண்ட சிறையாக ஆகிவிடுவதை அழகாகச் சித்திரிக்கின்றார். அனைத்துக் குடும்ப அமைப்புக்களினதும் அவலங்களைப் பொதுமைப்படுத்தி பாத்திரங்களின் குணவியல்புகளின் படியாகவும் கதைப்பின்னலினூடாகவும் சமுதாயத்தின் பிரதிபலிப்பைக் காட்டும் வகையில் இலக்கியநயம் பொருந்தியதாக கதை நகர்த்தப்பட்டுள்ளது.கல்லூரிப் படிப்பை முடித்த கற்பகம் தபால் நிலையத்தில் பணிபுரியும் சங்கரனை மணம்முடித்து கூட்டுக்குடும்ப அமைப்புக்குள் நுழைகிறாள். குடும்ப ஆணைப்படி ஆசிரியர் பணியை துறக்கிறாள். இரண்டு ஆண்டு கூட்டுக்குடும்ப அடிமை வாழ்வின்பின்னர் ஒரு குழந்தையுடன், சங்கரன் இடமாற்றம் பெற, சென்னையில் குடியேறி தனிக்குடித்தனம் நடத்துகின்றாள். நகரவாழ்வின் செலவைச் சமாளிக்க மீண்டும் தொழில்பார்க்கத் தொடங்குகிறாள். குடும்பச்சுமை கூட கணவனுடன் முரண்பாடு வலுக்கின்றது. தோழி மாலதி வாயிலாக ஆசிரியர் கற்பகத்தின் துன்பங்களுக்குரிய அடிப்படைக் காரணங்களை நாவலாசிரியர் விளக்குகிறார். இது ஒரு குடும்பத்தின் கதையல்ல. அனைத்துக் குடும்ப அமைப்புகளினதும் அவலங்களையும் பொதுமைப்படுத்தி அலசும் நாவலாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 144433).

### 7667

**ஒரு தாயின் மடியில்: குறுநாவல்.** ரூபராணி ஜோசப். கண்டி: மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், 18/13, பூரணவத்தை, 1வது பதிப்பு, டிசெம்பர் 2000. (கண்டி: Green Leaf Printers).
80 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19.5x14 சமீ.

ரூபராணி ஜோசப் மலையகத்தில் பல தசாப்தங்களாக வாழ்ந்து அப்பிரதேச மக்களுடன் இரண்டறக் கலந்து கல்வி, இலக்கியம், நாடகம் என்று பல்துறைகளில் தம்மை இணைத்துப் பெயர் பெற்றவர். தன் தாய்நாடு இன்று பெரும் அவலத்தில் ஆழ்ந்துள்ளதையும் இனங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள துருவமயமாக்கத்தையும் கண்டு அனுபவித்த இவரது குறுநாவல் இனரீதியான வெறுப்புணர்வையும், மறுதலையாக இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, நீதி, நியாயம், என்பவை பற்றிச் சுதந்திரமாச் சிந்திக்கும் பல கதாபாத்திரங்களைக் கொண்டது. தாய்நாட்டுப் பற்றையும், இன ஒற்றுமையையும் வலியுறுத்தும் கதையம்சம் கொண்ட குறுநாவல் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29155).

### 7668

**ஒரு வெள்ளைப் பூ சிரிக்கிறது.** எம்.பி.முஹம்மது ஜலீல். சம்மாந்துறை: மலர் வெளியீடு, 5, வன்னியா வளவு, 1வது பதிப்பு, நவம்பர் 1979. (கொழும்பு 2: வீ.ஏ.தங்கவேலு, Vat Print, 96, Justice Akbar Mawathe).
v, 214 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18x12.5 சமீ.

சமுதாயத்தில் உள்ள பலதரப்பட்ட மனிதர்களுள் தனித்துவமான சிலரை மையமாகக்கொண்டு இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. மனிதனை நல்லவன்-கெட்டவன் என்ற வகுப்பது அவனது உள்ளம்தான். அதன் எண்ணங்களும் உணர்வுகளுமே மனிதனின் குணத்தை வடிவமைக்கின்றன. அந்தக் குணத்தின்படியே அவனது செயல்களும் அமைந்துவிடுகின்றன. உள்ளமும் அதன் வெளிப்பாடான செயலும் நல்லதாயிருந்தால் அவனது வாழ்க்கையை அவை நெறிப்படுத்தி வளமூட்டுகின்றன. இந்த அடிப்படைக் கருத்தே நாவலின் அடித்தளமாகின்றது. ஆசிரியரின் முதலாவது படைப்பு இது. சுபைர் இளங்கீரனின் முன்னுரையுடன் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13480).

### 7669

**கசகறணம்: நாவல்.** விமல் குழந்தைவேல். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2011. (சென்னை 600005: மணி ஓப்செட்).
246 பக்கம், விலை: இந்திய ரூபா 175., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80240-52-7.

மண்ணை இழந்த மனிதர்களையும் மனிதர்கள் இழந்த மண்ணையும் பற்றிய கதை. போராட்டத்தின் பெயரால் தமது வாழ்வைத் தொலைத்த எளிய மக்களின் பெரும் துயரத்தின் ஆவணம் இந்த நாவல். வாழ்வனுபவங்களிலிருந்து அவர்கள் பெறும் பாடங்கள் அவர்களை அசாதாரணமான பாத்திரங்களாக மாற்றுகின்றன. பார்த்து அறியக்கூடிய கிராமக் காட்சியின் அறியப்பெறாத உள்ளோட்டங்களை வெள்ளாவி- என்ற பெயரில் வெளியான ஆசிரியரின் முன்னைய நாவலுக்குப் பிந்தைய இந்த நாவலில் வெற்றிகரமாக முன்வைக்கிறார் விமல் குழந்தைவேல். கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த நாவலாசிரியர் 1988 இலிருந்து லண்டனில் புலம்பெயர்ந்து வாழ்கிறார்.

### 7670

**கண்ணின் மணி நீயெனக்கு: நாவல்.** அகில் (இயற்பெயர்: அகிலேஸ்வரன் சாம்பசிவம்). கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2010. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xi, 144 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12 சமீ., ISBN: 978-955-8354-40-7.

எமது சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் வெளிநாட்டு மோகம், ஏற்படுத்துகின்ற சமூகப் பெறுமானங்களின் தகர்வுகள், இடர்பாடுகள் எவ்வாறெல்லாம் சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை எடுத்துக்காட்டி வாசகனைச் சிந்திக்க வைப்பதில் அகில் வெற்றிபெற்றுள்ளார். உலகமயமாக்கலின்

*தாக்கத்தால் மாறிவரும் சமூக விழுமியங்களுக்கும் அவலங்களுக்கும் மத்தியில் தமது இருப்பை நிலைநாட்ட முயலும் சராசரி மனிதர்களின் அபிலாசைகள் இங்கே பதிவாகியிருக்கின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 191981).*

### 7671

**காதல் பூட்டு (நாவல்).** *எஸ்.உதயசெல்வன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*
viii, *312 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 18x12 சமீ.*

*திருப்பூர் தமிழ்ச்சங்கம் நடத்திய 2005ம் ஆண்டுக்கான இலக்கிய விருது பரிசுப்போட்டியில் பரிசுபெற்றது. இது முன்னர் வீரகேசரி வாரவெளியீட்டில் 29 வாரங்கள் தொடர்கதையாக பிரசுரமாகியிருந்தது. ஜேர்மனியின் அகதி முகாமொன்றில் நடப்பதான ஒரு முக்கோணக் காதல் கதையை காதல், சோகம், பிரிவு, விரக்தி ஆகிய கலவையுடன் படைத்துள்ளார். இலங்கை இனப்பிரச்சினையால் அகதிகளாக வெளிநாடுகளுக்குச் செல்லும் தமிழர்கள் அங்கும் தம் வாழ்வுக்காகப் போராடவேண்டியிருப்பதை கதாசிரியர் சுவையாக வெளிப்படுத்தியிருக்கிறார். உதயசெல்வன் யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக்கொண்டவர். நீர்கொழும்பின் குடாப்பாடு பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறார்.*

### 7672

**காலப் பறவைகள்.** *சித்தி சண்முகநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*
*144 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 17.5x12 சமீ.*

*நூலாசிரியர் பலாங்கொடை தமிழ் மகாவித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றியவர். இதய ஊனம் என்ற நாவலையடுத்து இரண்டாவதாக வெளிவந்துள்ள இந்நாவல் மத்திய மாகாண சாகித்திய விழாவில் 2007ம் ஆண்டுக்குரிய சிறந்த நாவலுக்கான விருதினைப் பெற்றது.*

### 7673

**கானல்வரி.** *தமிழ்நதி (இயற்பெயர்: கலைவாணி). சென்னை 600018: உயிர்மை பதிப்பகம், 11/29, சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 600005: மணி ஆப்செட்).*
*79 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-93-80072-52-4.*

*திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தமிழ்நதி. ஈழத்துப் போரினால் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர். கனடாவில் வாழ்ந்த காலத்தில் கலைவாணி இராஜகுமாரன் என்ற பெயரில் சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை எனப் பல்வேறு ஆக்க இலக்கிய வடிவங்களையும் பயன்படுத்தித் தனது படைப்புகளை வெளியிட்டவர். தற்காலிகமாக சென்னையில் வாழ்ந்து வரும் வேளையில் தமிழ்நதியின் சூரியன் தனித்தலையும் பகல் (கவிதைகள்), நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதுவது (சிறுகதைகள்), ஆகிய இரு நூல்கள் வெளிவந்துள்ளன. கானல்வரி - ஆசிரியரின் முதலாவது நாவல். "தன் வாழ்வனுபவத்தின் ஊடாகக் காதல் என்கின்ற பிணைப்பு பற்றிய பல புரிதல்களோடும், கருத்துகளோடும் தன் நண்பர்களின் அனுபவப் பகிர்தல்கள் ஏற்படுத்திய சிந்தனைகளோடும்-ஊடகங்கள், இலக்கியப் பதிவுகள் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்களோடும்- இவை அனைத்தின் கூட்டுணர்வுகள் ஏற்படுத்திய தளத்தில் நின்று நிகழ்காலம், நிகழ் உலகக் காதல், காதல் கொண்ட மனிதர்கள், காதலின் பகைப்புலன்கள், பற்றிய தன் சிந்தனைகளைக் கதையாகப் படைத்திருக்கிறார்". (முன்னுரையில் பிரபஞ்சன்).*

### 7674

**குடை நிழல்: நாவல்.** *தெளிவத்தை ஜோசப். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை, 1வது பதிப்பு, 2010. (வெல்லம்பிட்டி: சத்துர அச்சகம், 69 குமாரதாச பிளேஸ்).*

*112 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14 சமீ.,* ISBN: *978-955-30-2817-4.*

*"குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நன்னினும் நன்னுவர்" என்னும் பழந்தமிழ்ப்பாடல் குறிக்கும் குடையின் நிழல்தான் இந்நாவலின் மையம். ஆழும் வர்க்கத்தின் குறியீடாகவரும் குடைநிழலையும் அவர்கள் ஏறிப்பவனிவரும் குஞ்சரத்தையும் அவர்களிடமிருந்து பிடுங்கியெறிந்துவிடவேண்டும் என்ற ஆக்ரோஷத்துடன் நாவல் நிறைவடைகின்றது. அரசியல் பலம் என்ற கராணத்தை முன்வைத்து வடக்கு-கிழக்கில் தீவிரவாதச் செயல்களைக் கட்டுப்படுத்துகின்றோம் என்கின்ற போர்வையில் சிறுபான்மை இனங்களின்மீது கட்டவிழ்த்து விடப்படுகின்ற அராஜகங்களை சமூக நேர்மையுடன் பதிவுசெய்யும் ஒரு முயற்சியே இந்நாவலாகும். சுபமங்களா மற்றும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் பரிசுபெற்ற இக்கதை, வீரகேசரி ஞாயிறு பதிப்பில் தொடராக வெளிவந்தது.*

### *7675*

***கோபால நேசரத்தினம்.*** ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை. *யாழ்ப்பாணம்: ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை, பத்திராதிபர், இந்து சாதனம், 2வது பதிப்பு, 1948, 1வது பதிப்பு, 1927. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை).*
*128 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 21x14 சமீ.*

*இந்நாவல் முன்னர் 1921இல் இந்துசாதனத்தில் தொடராக வெளிவந்தது. சிறுவயதில் தந்தையை இழந்த கோபாலன் கிறீஸ்தவ சமயப் பாடசாலையில் கல்வி பயில நேர்கிறது. அங்கு ஆசிரியராகவிருக்கும் குட்டித்தம்பிப் போதகர் தமது விதவை மகளான நேசரத்தினத்துடன் கோபாலனைப் பழகவிடுவதன்மூலம், கிறிஸ்தவனாக அவனை மதம்மாற்ற முனைகிறார். கோபாலனின் தாய் வள்ளியம்மை சைவசமயப் பற்றுள்ளவர். கோபாலன் மதம் மாறமறுக்க நேசரத்தினம் மதம்மாறி இந்துசமயத்துக்குத் திரும்புகிறாள். குட்டித்தம்பிப் போதகரும் இறுதியில் பாதிரியார் தம்மைப் போதகர் பதவியிலிருந்து விலக்கிய வேளை சைவராக மாறிவிடுகின்றார். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிலவிய மிசனரிமாரின் மதமாற்ற முயற்சிக்கு எதிர்ப்புக்குரல் கொடுக்கும் வகையில் அமைந்த நாவல்களில் இதுவும் ஒன்று. உலகம் பலவிதக் கதை தொடரில் முதலாவது நூலாக வெளிவந்தது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119079).*

### *7676*

***சந்திரிகை: சரித்திர நாவல்.*** இணுவையூர் கே.எஸ்.ஆனந்தன். *யாழ்ப்பாணம்: இணுவையூர் ரசிகப்பிரியா சபா, கலை வளர்ச்சி மையம், இணுவில், இணைந்து வெளியிடுவோர்: ˙. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 600094: பிவிஆர். ஆப்செட்).*
viii, *176 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 60.00, அளவு: 18x12 சமீ.*

*கி.பி.3ம் நூற்றாண்டின் முடிவில் தமிழ்நாட்டை களப்பிரர் என்னும் இனத்தவர் மூன்று நூற்றாண்டுகள் ஆண்டதாக வரலாறு கூறுகின்றது. இது ஒரு நீண்ட வரலாற்று இரவு என்று வரலாற்றாசிரியர் நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுகின்றார். இக்காலப்பகுதியில் இலங்கையில் அனுராதபுரப்பகுதியில் ஆட்சிபுரிந்தவர்களின் பலவீனத்தால் களப்பிரர் இங்கும் தமது ஆட்சியை நீட்டியதாகவும் பாண்டு என்பவனிலிருந்து பீடியதேவன் என்பவன் வரை கால்நூற்றாண்டுகள் ஆட்சியில் களப்பிரர் இருந்தனர் என்றும் வரலாறு கூறுகின்றது. இவர்களது காலத்திலேயே பௌத்தம், சமணம் ஆகிய மதங்கள் மேலோங்கியிருந்தன. மோரிய வம்ச இளைஞனும் அனுராதபுர மகாவிகாரையைச்சேர்ந்த தீகசந்த பிரிவெனாவைச் சார்ந்த புத்தபிக்குவின் மருமகனுமான ஒருவன் மூலம் மீண்டும் மோரிய வம்சத்தின் ஆட்சியைக் கைப்பற்ற அப்பிக்கு திட்டமிடுகிறார். தலைநகரிலிருந்தால் அவனுக்கு ஆபத்து ஏற்படலாமென அஞ்சிஅவனை உருகுணைக்கு அனுப்பி மோரிய வம்ச பிரதானிகளிடம் சேர்ப்பித்து விடுகிறார். அங்கு அவன் வளர்ந்து இறுதியில் புரட்சிசெய்து ஆட்சிபீடம் ஏறுகிறான். புரட்சிக்காலத்தில் இவனுக்கு உற்றதுணையாயிருந்தவளுக்குப் பிறந்தவனே காசியப்பன். தந்தை நாட்டை வளம்படுத்தியவேளை காசியப்பன் சீகிரியாவை ஒரு கலைக்கோயிலாக- கலைப்பொக்கிஷமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். சதிகாரர்களின் சூழ்ச்சியால் தந்தையே அவனது எதிரியாகிறான். காசியப்பனை மகாவம்சம் சூளவம்சம் என்பன கோழையாகவும், தந்தையைக் கொன்ற பாவியாகவும் உருவகப்படுத்திய வேளை,*

தொல்லியலாய்வாளர் பரணவிதான போன்றவர்களோ, அவனை நல்லவனாகவும், கலையார்வம் மிக்க ஒருவனாகவும் கற்பித்தனர். சந்திரிகை என்ற இவ்வரலாற்று நவீனம் இவ்வரலாற்றுப் பின்னணியில் உருவானது. வீரகேசரி வார வெளியீட்டில் தொடராக வெளிவந்தது.

### 7677

**சரித்திரம் தொடர்கிறது.** எம்.பி.முஹம்மது ஜலீல். சம்மாந்துறை: மலர் வெளியீடு, 5. வன்னியா வளவு, 1வது பதிப்பு, ஜனவரி 1981. (கொழும்பு 2: வீ.ஏ.தங்கவேலு, Vat Print, 96, Justice Akbar Mawathe).
(6), 186 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18x12.5 சமீ.

1979இல் எழுதிய ஒரு வெள்ளைப்பூ சிரிக்கிறது என்ற நாவலைத்தொடர்ந்து ஆசிரியரின் கைவண்ணத்தில் வெளிவந்துள்ள இரண்டாவது சமூக நாவல் இது. தனது வாழ்க்கை அனுபவங்களின் அடிப்படையில் எழுந்த சிந்தனை அலைகளே இந்நாவலாகப் பரிணமித்திருப்பதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 137167).

### 7678

**சாம்பல் பறவைகள்: குறுநாவல்.** எஸ்.அரசரெத்தினம். கல்முனை: சத்தியா பப்ளிக்கேஷன்ஸ், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2010. (கொழும்பு 13: கௌரி அச்சகம்).
xiv, 82 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ.

இக்குறுநாவல் வன்னிச் சமரின்போது சாதாரண மக்கள் அனுபவித்த அவலங்களை வெளிக்கொண்டுவரும் நோக்கில் எழுதப்பெற்றுள்ளது. ஆனந்தன்-பவானி காதல் பற்றிய கதையாகத் தொடங்கினாலும், கதை முழுவதும் யுத்தத்தின் கொடுமை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மணியத்தாரின் கண்டிப்பான வளர்ப்பில் வளர்ந்த ஆனந்தன் மாஸ்டர் உருத்திரபுரம் முருகேசுவின் மகளான பவானி ஆசிரியையிடம் காதல் கொள்கிறார். ஆந்தனின் தந்தை எதிர்த்துக் கிளம்ப ஆனந்தன் பொறுமையைக் கையாள்கிறான். விரக்தியுற்ற பவானி கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறாள். போரின் கெடுபிடி சூடுபிடிக்கிறது. பெட்டி படுக்கையுடன் மக்கள் இடம்பெயர, பவானி, தந்தை முருகேசு, அண்ணன் குமாரின் குடும்பம் என்போர் புளியம்பொக்கணைக்கு இடம்பெயர்கிறார்கள். வழியில் முருகேசர் நெஞ்சுவலியால் இறக்கிறார். இருட்டுமரு கிராமம், சுதந்திரபுரம், இரணைப்பாலை, புதுமாத்தலன் என்று எஞ்சியோரின் இடப்பெயர்வு தொடர்கிறது. குமாரின் மனைவி சாரதா பங்கருக்குள்ளேயே ஆண்குழந்தையைப் பெற்றுவிட்டு உயிர்துறக்கிறாள். பால் வாங்கவும் வழியின்றி குமார், பவானி, உமா ஆகியோர் இராணுவத்திடம் சரணடைகின்றனர். இடையில் குழந்தையும் இறக்கின்றது. இராணுவத்தின் உதவியுடன் வவுனியா முகாமுக்கு வந்துசேர்கின்றனர். முகாமில் ஆனந்தன் பவானியை சந்திக்க முயல்கிறான் என்றவாறாகக் கதை தொடர்கின்றது.

### 7679

**சிரிக்கும் செவ்வந்திப்பூ: நாவல்.** தி.இரா. கோபாலன். (இயற்பெயர்: திருமலை இராஜகோபால்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
x, 358 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 17.5x12 சமீ.

மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் திருமலை இராஜகோபால். நுவரெலியா மாவட்டத்தின் விந்துல- துலாங்கந்தை தோட்டத்தில் பிறந்தவர். நாவலப்பிட்டி சென். அன்ட்ரூஸ் கல்லூரியில் 1950-1959களில் கல்வி கற்ற இவர், கண்ணாடி என்ற தனது முதலாவது சிறுகதை 1962இல் கலைச்செல்வியில் பிரசுரமாகக் கண்டு மகிழ்ந்தவர். 1992இல் இலங்கை இந்து கலாச்சார அமைச்சினால் தமிழ்மணி பட்டம் பெற்றவர். நூற்றாண்டுப் பழமையான மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பும், அவர்களை நிர்வகித்த துரைமார்கள், கங்காணிமார் போன்றோரும் இன்று நம் மனக்கண்முன் தோன்றி உறவாடும் நாவல் இது.

### 7680

**செல்லக்கிளி.** முகில்வண்ணன் (இயற்பெயர்: வே.சண்முகநாதன்). சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2011. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).
344 பக்கம், விலை: இந்திய ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-81-89708-44-3.

1999இல் இலங்கையில் தினகரன் பத்திரிகையில் 15 அத்தியாயங்களில் வெளிவந்த தொடர்நாவல் நூலுருவாகியுள்ளது. இக்கதையில் எழில்மிகு மட்டக்களப்பு நகரை, அமைதியான அம்மண்ணின் இளைஞர்களை, அறிவான மாணவ மாணவிகளை இயற்கையான காதலை ஆசிரியர் விபரமாக எடுத்துக்காட்டியிருக்கிறார். பாடசாலைக் காதல் ஒன்று பரிதவித்துப்போகும் காட்சியை இந்நாவல் விபரிக்கிறது. தாய்மையை அடையப் பெண்ணொருத்தி எடுக்கும் தவறான முடிவுகளை நாவலாசிரியர் சுவையாகச் சுட்டிக்காட்டுகின்றார். கதாநாயகியான செல்லக்கிளி சமூகத் துரோகங்களால் ஓரம் கட்டப்பட்டு இறுதியில் தன் உயிரை மாய்த்துக்கொள்வதாகக் கதை முடிகின்றது. வே.சண்முகநாதன், கல்முனை, பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்முனை பற்றிமாக் கல்லூரியில் கல்வி பயின்றவர். லேடன் நிறுவனத்தில் கட்டிடப் பொறியியலாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

### 7681

**தத்தை விடுதூது (குறுநாவல்).** ந.பாலேஸ்வரி. திருக்கோணமலை: மகளிர் நலன்புரி மன்றம், 257 டொக்யார்ட் (உள் துறைமுக) வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1992. (மட்டக்களப்பு: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).
(20), 102 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 18x12.5 சமீ.

திருக்கோணமலை எழுத்தாளர், தமிழ்மணி ந.பாலேஸ்வரியின் குறுநாவல். திருக்கோணமலை த.கனகசுந்தரம்பிள்ளையின் இளைய சகோதரரும், மோகனாங்கி (1895) என்ற ஈழத்தின் வரலாற்று முக்கியமான நாவலை எழுதியவருமாகிய தி.த.சரவணமுத்துப் பிள்ளை அவர்கள் 1892இல் எழுதிய செய்யுள் நூல் தத்தைவிடுதூது என்பதாகும். அதிலுள்ள செய்யுள்களை ஆங்காங்கே பயன்படுத்தி இக்குறுநாவல் எழுதப்பட்டுள்ளது. காதலிலே தோல்வியுற்ற தலைவன் ஒருவனின் மன வெளிப்பாடே தத்தைவிடுதூது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 114307).

### 7682

**தரிசனங்கள், நிலவின் நிழலில்.** வை.அஹமட். வாழைச்சேனை: உயிர்ப்பைத் தேடும் வேர்கள், மஹ்மூத் ஆலிம் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2000. (கொழும்பு 6: புதிய கார்த்திகேயன் அச்சகம்).
iv, 40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 955-8351-01-6.

இலங்கையின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான வை.அஹ்மட் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். அவரால் எழுதப்பட்ட இரண்டு குறுநாவல்களான தரிசனங்கள், நிலவின் நிழலில் ஆகிய தலைப்புகளில் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன. எமது சமூகத்தில் புரையோடிப் போயுள்ள மூடநம்பிக்கைகளைக் களையும் நோக்கத்தை இரண்டு குறுநாவல்களும் கொண்டுள்ளன.

### 7683

**தவறிப் போனவன் கதை.** தெணியான். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675, பி.டி.எஸ். குலரத்தின் மாவத்தை, 1வது பதிப்பு, 2010. (வெல்லம்பிட்டிய: சதுர பிரின்டர்ஸ், 69, குமாரதாச பிளேஸ்).
160 பக்கம், விலை: ரூபா 375., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-30-2958-4.

ஈழத்துப் படைப்பாளி தெணியானின் இந்த நாவல், அவரது வாழ்வின் 1996இல் சம்பவித்த ஒரு நெருக்கடியான சம்பவம் ஒன்றை மையமாகக்கொண்டது. தினகரன் ஞாயிறு இதழில் 24.4.2005 முதல் 2.10. 2005 வரை ஆறுமாதங்கள் தொடராக வெளிவந்தது. தெணியான் கடுமையான நோய்க்கு ஆளாகி, மரணித்துப்போய்விட்டதான தவறான பரபரப்பான செய்தி பரவிய காலத்திலும், இராணுவ அக்கிரமிப்புக்கு மத்தியில் நோய்வாய்ப்பட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த தன்னை இராணுவத்துடன் கதைத்து ஊரடங்குச்சட்ட வேளையிலும் உயிரைத் துச்சமென மதித்து வைத்தியசாலையில் சேர்ப்பித்த அநீதி என்ற தான் அறியாத ஒரு மனிதன் பின்னர் ஆயுததாரிகளால் சமூகவிரோதியாகக் காணப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட சமயத்திலும், பின்னர் ஒன்பதாண்டுகள்

*கழிந்த நிலையில் இந்நாவல் வெளிவந்த சமயத்திலும், சாதாரண பொதுமக்கள் போர்க்கால-ஊரடங்கு வாழ்வில் அனுபவித்த அவலங்கள், துன்பங்கள், துயரங்கள் நிறைந்த கண்ணீர்க்கதைகளை இந்நாவல் நிதானத்துடனும் எச்சரிக்கையுடனும் பதிவுசெய்கின்றது.*

### 7684

**துரைரத்தினம்-நேசமணி (உலகம் பலவிதம் தொடர் 3).** ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை. *யாழ்ப்பாணம்: ச.சபாரத்தினம், ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, பிரசோற்பத்தி ஆண்டு, ஆகஸ்ட் 1931. யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை, (4), 80 பக்கம், விலை: சதம் 60, அளவு: 21x13.5 சமீ.*

*துரைரத்தினம்-நேசமணி தம்பதியரின் வாழ்வில் சீதனப்பிரச்சினை தலைதூக்கியதால் பிரிவு ஏற்படுகின்றது. மனைவியைப் பிரிந்த துரைரத்தினம் லீலா என்ற பெண்ணுடன் தொடர்புகொண்டு தீயபழக்கங்களுக்கு அடிமையாகிறான். நேசமணி அவனைத் திருத்தி மீண்டும் ஏற்றுக்கொள்கிறாள். தீயவர் சகவாசத்தால் நேரும் அநர்த்தம், சீதனத்தால் வரக்கூடிய பிணக்கு, மதுபானத்தால் வரும் கேடு, பரத்தையர் சேர்தலால் வரும் பழி என்பவற்றை எடுத்துரைப்பதாக இந்நாவல் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப்போதகாசிரியரும், இந்துசாதனம் பத்திரிகையின் ஆசிரியருமான இந்நூலாசிரியர் எழுதிய இந்நாவல் இந்துசாதனம் பத்திரிகையில் 1927-28 ஆண்டுக்காலத்தில் தொடராக வெளிவந்தது. மதமாற்றம் மலிந்திருந்த ஒரு காலகட்டத்தில் ஆறுமுக நாவலருக்கு ஆதரவாகத் தன் இலக்கியப்பணியை மெற்கொண்டவர் இவர். இவரது வேறு நாவல்களிலும் இக்கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. கோபால-நேசரத்தினம் என்ற நாவலும் இவரால் எழுதப்பெற்றது.* **உலகம் பலவிதம்** *என்ற பெயரில் இவர் எழுதிய இரு பாகங்களில் அடங்கிய நூலின் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டதைக் குறிக்குமுகமாக, நூலின் தலைப்பில் உலகம் பலவிதம் 3 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37484).*

### 7685

**துறைக்காரன்.** வ.அ.இராசரத்தினம். *சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/8-10 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/8-10 ஆற்காடு சாலை). 120 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 81-89748-12-2.*

*மகாவலிகங்கை கடலோடு கலக்கும் தனது வட்டாரமான மூதூரின் கொட்டியாபுரப்பற்றின் அழகை அப்பிரதேசத்து மண் வாசனையை துறைக்காரனின் வாயிலாக ஆசிரியர் பதிவுசெய்திருக்கிறார். நெய்தலும், மருதமும் முல்லையும் கொஞ்சிடும் கொட்டியாபுரத்தின் அத்தனை இயற்கை அழகுகளும், இங்கு வாழும் மக்களின் மனிதநேய மாண்புகளும் சேதாரமின்றி இழைக்கப்பட்ட கலை முழுமையே துறைக்காரன் என்கிறார் பதிப்பாளர் எஸ்.பொ. இக்கிராமத்தின் அழகையும், மகாவலிகங்கையைத் தினமும் கடந்துசெல்கின்ற தனது ஊர் மக்களுடைய வாழ்க்கைக் கோலங்களையும் இணைத்து இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. ஒரு சாமான்யனான துறைக்காரன் வேலாயுதம் தன் தோணியிலே மகாவலிக் கங்கையை மேலும் கீழுமாக கடக்கும்பொழுது, கொட்டியாபுரத்தில் வாழும் அனைத்துவகையான மனிதர்களையும் அவர்களின் மனக்கோலங்களையும் காண்கிறான். இந்தத் தரிசனத்துக்கு அவன் மனிதனாய் வாழல் உதவுகின்றது. ஈழநாடு பத்திரிகையில் தொடராகப் பிரசுரமான இந்நாவல் ஆசிரியரின் மறைவுக்குப் பின்னரே நூலுருவாகும் வாய்ப்புப்பெற்றது. செங்கைஆழியானின் உதவியுடன் மூலத் தொடர் பத்திரிகையிலிருந்து பிரதியாக்கப்பட்டு நூலாசிரியரின் வாழ்நாள் ஆசை எஸ்.பொவின் மூலம் நூலுருவில் ஈடேறியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46207).*

### 7686

**தெளிவு.** *திக்குவல்லை கமால் (இயற்பெயர்: முகம்மது ஜெலால்தீன் முகம்மது கமால்). பத்தரமுல்ல: கலாசார அலுவல்கள் திணைக்களம், 8வது மாடி, செத்சிரிபாய, 1வது பதிப்பு, 2009. (ராஜகிரிய: கே.எஸ்.யூ. கிரப்பிக்ஸ் லிமிட்டெட், 510, ராஜகிரிய வீதி). x, 114 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1777-78-4.*

தென்னிலங்கைத் தமிழ்ப் படைப்பிலக்கியத்துறையில் முக்கிய படைப்பாளியான திக்குவல்லை கமால் 3.3.1950இல் மாத்தறை மாவட்டத்தின் திக்குவல்லை கிராமத்தில் பிறந்தவர். 2009 சாகித்தியப் பெருவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட திறந்த நாவல் பிரதியாக்கப்போட்டியில் முதற்பரிசு பெற்ற படைப்பு இதுவாகும். தன் கிராமத்துப் பேச்சுவழக்கில் இந்நாவலை எழுதியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 163267).

### 7687

**தென்றலும் புயலும்.** சுபைர் இளங்கீரன். சென்னை 6: நவபாரத் பிரசுராலயம், 9, கம்மாளர் தெரு, 1வது பதிப்பு, 1956. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம், காங்கேசன்துறை வீதி).
vii, 183 பக்கம், விலை: இந்திய ரூபா 2-4-0., அளவு: 18.5x12 சமீ.

"ஆனந்தன்" இதழில் தொடராக வெளிவந்த இந்நாவல், கொழும்புப் பிரதேசத் தமிழர் சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைப் பின்னணியாகக் கொண்டு நகர்கின்றது. யாழ்ப்பாணத்தில் உயர்குலத்து பாலு, சொந்தவீட்டை ஏலத்தில் இழந்து அல்லலுற்று, வேலைதேடிக் கொழும்பு செல்கிறான். அங்கு செல்வந்தப் பெண் மனோன்மணியை காதலிக்கிறான். அந்தஸ்து வேறுபாட்டால் காதல் கைகூடவில்லை. மனோன்மணி வேறொருவனுக்கு மனைவியாகிறாள். பாலுவின் தங்கை, தாழ்த்தப்பட்ட குலத்தினனான பூபதியைக் காதல்மணம் புரிந்து குடும்பத்தின் எதிர்ப்புக்குள்ளாகிறாள். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35177).

### 7688

**தொப்புள்கொடி: நாவல்.** தெ.நித்தியகீர்த்தி. ஜேர்மனி: மன ஓசை பதிப்பகம், 1வது பதிப்பு, சித்திரை 2009. (சென்னை 600005: சுவடி, Sudharsan Book Processors and Distributors, New No. 257, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை).
166 பக்கம், விலை: இந்திய ரூபா 175., அளவு: 22x14 சமீ., ISBN: 978-3-9813002-2-2.

பருத்தித்துறையின் புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அமரர் தெ.நித்தியகீர்த்தி (4.3.1947-15.10.2009). 1975இல் மேற்படிப்புக்காக லண்டன் வந்த இவர், கணக்கியல்துறையில் உயர்கல்வியை முடித்தபின்னர் சம்பியா, சிம்பாப்வே, நியுசிலாந்து போன்ற நாடுகளில் கணக்காளராகப் பணியாற்றியபின் அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ண் நகரில் வாழ்ந்து மறைந்தவர். கடவுள் கதைப்பார் என்ற சிறுகதையை தினகரனில் வெளியிட்டு இலக்கிய உலகில் அறிமுகமான இவரது மீட்டாதவீணை என்ற முதல் நாவல் 1974இல் பருத்தித்துறையில் பிரசுரமானது. உண்மைச் சம்பவங்கள் பல -ஊமையாக இருந்தவனை மீண்டும் ஒரு நாவலில் பேசவைக்கின்றன. மௌனமாகக் கண்ணீர் வடிக்கும் சிலரின் மன ஓலங்கள் வலியைத்தரும் வரிகளாகின்றன. அந்த வரிகளுக்குள்ளே வாசகனின் வாழ்வின் சில கீறல்களும் அடங்கிவிடுகின்றன. கீறல்கள் வாசகனின் சிந்தனையைத் தூண்டி உலகின் மனச்சாட்சியை உலுக்கிவிடுகின்றன. நித்தியகீர்த்தியின் இந்த நாவல் நூலுருவாகி, மெல்பேர்ணில் அதன் வெளியீட்டுவிழாவுக்கு இரு நாட்களுக்கு முன்னதாக மாரடைப்பினால் அவர் மரணமானார் என்பது கவலையுடன் பதிவுக்குரிய செய்தியாகும்.

### 7689

**நாணயம்-நாவல்.** புலோலியூர் க.சதாசிவம். புலோலி: க.சதாசிவம், கலை அகம், புத்தளை, 1வது பதிப்பு, நவம்பர் 1980.(பதுளை: பதுல்ல பிரின்டர்ஸ்).
(10), 182 பக்கம், விலை: ரூபா 11.50, அளவு: 18x12.5 சமீ.

ஏழாண்டுகளுக்கு முன் எழுதிய யுகப்பிரவேசம் சிறுகதைத்தொகுதியைத் தொடர்ந்து வெளிவரும் ஆசிரியரின் இரண்டாவது நூல் இது. ஆசிரியரின் பிறந்த மண்ணான யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்தின் நாடித்துடிப்பு, மனித உறவுகளைப் பிணைக்கும் பந்தமாகிய சடங்குகள், நம்பிக்கைகள், பண்பாட்டம்சங்கள், எண்ணக் கருத்துக்களின் உயிர்த்துடிப்பான வெளிப்பாட்டின் ஊடகமான பேச்சு வழக்கு ஆகியவற்றை இந்நாவல் உயிர்ப்புடன் பதிவுசெய்கின்றது. இலங்கை அரசின் சாகித்திய விருதுபெற்ற நாவல். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119679).

### 7690

**நிலக்கிளி, வட்டம்பூ.** அ.பாலமனோகரன். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2008. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை).

240 பக்கம், விலை: இந்திய ரூபா 140., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 978-8189748609.

நாகரீகம் பரவாத ஒரு விவசாயக் கிராமப்புறத்தில் வளர்ந்த பெண்ணான பதஞ்சலி அநாதையாகும் நிலையில் கதிராமனின் மனைவியாகின்றாள். பிற ஆணுடன் தொட்டுப் பழகுவது என்று கூடப் புரிந்து கொள்ளாத கள்ளம் கபடமற்ற அவள் புயல் தந்த சோதனையால் கணவன் அருகில் இல்லாத போது ஆசிரியர் சுந்தரலிங்கத்தால் சந்தர்ப்ப சூழ்நிலையால் தழுவப்படுகிறாள். அந்த நிகழ்ச்சியின் பின் அவள் யதார்த்த உலகைப் புரிந்து கொள்ளத் தொடங்குகின்றாள். நிலக்கிளிகள் நிலத்தில் வாழ்பவை. உயரே பறக்க விரும்பாதவை. பிறரிடம் இலகுவில் அகப்பட்டுக் கொள்பவை. ஆனால் அவை எளிமையானவை. அழகானவை. தம் சின்னச் சொந்த வாழ்க்கை வட்டத்துக்குள் உல்லாசமாகச் சிறகடிக்கும் அவற்றின் வாழ்க்கை இனிமையானது. 20ம் நூற்றாண்டு நடுப்பகுதியில் வவுனியா மாவட்ட தண்ணிமுறிப்பு கிராம விவசாயக் குடும்பப் பின்னணியில் அமைந்தது இக்கதையின் களம். பதஞ்சலியின் பாத்திரம் நிலக்கிளியாக இக்கதையில் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியரின் முதலாவது நாவல் இது. முன்னர் வீரகேசரி பிரசுரமாகவும், பின்னர் மல்லிகைப்பந்தல் வெளியீடாகவும் பிரசுரமானது. வட்டம்பூ அப்பால் தமிழ் இணையத்தளத்தில் பிரசுரமானது. வட்டம்பூ- பெரும்பாலும் வன்னியின் ஆண்டாங்குளம் பிரதேசத்தை கதைக்களமாகக் கொண்டது. வட்டம்பூ- குருதியின் நிறத்தில் பூக்கும் சிறு தாவரம். இது வன்னிப் பெருநிலப்பரப்பில் அதிகம் காணப்படும். ஆண்மையும், அடங்காமையும்கொண்ட சிங்கராயர் கதாபாத்திரம் வட்டம்பூவைப் பிரதிபலிக்கின்றது. இந்நாவல் தமிழ் சிங்கள காதல் பற்றிக் கூறுகின்றது. தனிநூலாக மீள்பிரசுரமாகும் இவ்விரு நாவல்களும் வன்னிப்பிரதேசத்தைக் களமாகக் கொண்டவை. விடுதலைப்போராட்டத்தின் முக்கிய களமாக மாறிவிட்ட இன்றைய வன்னி வேறு. இக்கதைகளின் மாந்தர்கள் வாழ்ந்த அன்றைய வன்னி வேறு. யுத்தத்திற்கு முற்பட்ட அந்த வன்னிமண்ணின் வாழ்வும் அழகும் எத்தகையது என்பதை அறியவிரும்புவோருக்கு ஏற்ற நூல் இது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 176738).

### 7691

**நீர்மூழ்கி நீரில் மூழ்கி.** குரு அரவிந்தன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600014: பி.வி.ஆர். ஆப்செட்).

viii, 104 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12 சமீ.

நீர்மூழ்கி நீரில் மூழ்கி (பக்கம் 1-29), உறைபனியில் உயிர் துடித்தபோது (பக்கம் 31-102) ஆகிய இரண்டு குறுநாவல்களின் தொகுப்பு. இதில் நீர்மூழ்கி நீரில் மூழ்கி என்ற குறுநாவல் ஆனந்த விகடன் இதழில் தொடராகப் பிரசுரிக்கப்பட்டது.

### 7692

**நூல் அறுந்த பட்டங்கள்: நாவல்.** வவுனியூர் இரா. உதயணன். கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், A15, 1/1, மனிங் ரவுன் வீடமைப்புத் தொகுதி, மங்கள வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xvi, 176 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-1347-08-9.

இந்நாவலின் மூலம், மனித உணர்வுகளைத் தீண்டி உணர்ச்சிவசப்படுத்தி, சிந்திக்கவைக்கிறார். குறுகிய காலம் வாழும் மானிடர்கள் மனிதத்தை மதிக்கவேண்டும் என்பதை அழுத்திச் சொல்கிறார். சுட்டுக்கொல்லப்பட்ட தனது தமிழ் ஆசிரிய நண்பனின் காவியா என்ற மகளைத் தத்தெடுத்துத் தன் மகளாக வளர்க்கும் ஒரு சிங்கள ஆசிரியர் சிறிசேன, அவரது தம்பி நலிந்த ஆகியோரைச் சுற்றிக் கதை நகர்த்தப்படுகின்றது. தேசிய நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் பகைப்புலமாகக் கொண்ட கதை. புதினம் (லண்டன்) இருவார இதழில் தொடராக வெளிவந்த நாவலின் திருத்திய பதிப்பு இதுவாகும். ஆசிரியரின் நான்காவது நூல் இது.

### 7693

**நெருப்பாறு: குறுநாவல்கள்.** ச.முருகானந்தன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600014: பி.வி.ஆர். பிரிண்டர்ஸ்).

xii, 244 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 17.5x12 சமீ.

மித்திரனில் தொடராக வெளிவந்த நெருப்பாறு, விரகேசரியில் தொடராக வெளிவந்த மீண்டும் பாமிலா, சுடர் ஒளியில் தொடராக வெளிவந்த சந்தேகக்கோடு ஆகிய மூன்று குறுநாவல்கள் உள்ளடங்கிய தொகுதி. அப்பாவித் தமிழர்கள் இராணுவ வதைக்குள்ளாகி சமூகத்தில் வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்படுவதை நெருப்பாறு விளக்குகின்றது. சந்தேகக் கோடு குடும்ப உறவகளில் ஏற்படும் பிணக்குகளை மையமாகக் கொண்ட கதை. மீண்டும் பாமிலா ஒரு காதல் கதை.

### 7694

**பனி நிலவு.** வவுனியூர் இரா.உதயணன். கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், A15 1/1, மனிங் டவுன் வீடமைப்புத் தொகுதி, மங்கள வீதி, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

viii, 180 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-1347-11-6.

வவுனியா கித்துள் வீதியைச் சேர்ந்த ஆசிரியரின் ஐந்தாவது நூல் இது. மாறுபட்ட சூழலில் வேறுபட்ட மனிதர்கள் என்ற ஒரு சிறுகதைத்தொகுதியும், சுருதி பேதமடைகிறது, விதி வரைந்த பாதையிலே, நூல் அறுந்த பட்டங்கள் ஆகிய மூன்று நாவல்களும் ஏற்கெனவே நூலுருவாகியுள்ளன. கணக்கியல்-நிதித்துறையில் பணியாற்றும் இவர், தற்போது லண்டனில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார். போரினால் ஷெல் தாக்குதலில் தன் கணவன் பாலேந்திரனையும், தன் இடதுகாலையும் இழந்த வைதேகியையும், அவளது சிறிய பெண்பிள்ளைகளான சின்மயி, அவளது தங்கை நிவேதாவையும் வளர்த்து ஆளாக்க முனையும் ஆதங்கம் நாவலைக் கொண்டு நகர்த்துகின்றது. சித்ரா, மாலினி ஆகிய சிங்களத் தாதிகளும், மாமன் கதிரவேலுவும் நாவலின் சுவாரஸ்யத்துக்கு துணையாகின்றனர்.

### 7695

**பாதை மாறிய பயணங்கள்: நாவல்.** மண்டூர் அசோகா. (இயற்பெயர்: திருமதி அ.யோகராசா). மட்டக்களப்பு: உதயம் வெளியீடு, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1992. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 65, லேடி மனிங் டிறைவ்).

(4), 154 பக்கம், விலை: ரூபா 35., அளவு: 18.5x12 சமீ.

உதயம் வெளியீட்டு வரிசையில் ஒன்பதாவது வெளியீடாக இந்நாவல் பிரசுரமாகின்றது. மண்டூர் அசோகா, மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்தவர். ஆசிரியையாகப் பணியாற்றுபவர். சிறுகதை, நாடகம், கவிதை ஆகிய புனைவுகளுடன் மெல்லிசைப்பாடலிலும் ஈடுபாடு கொண்டவர். இவரது கொன்றைப் பூக்கள் என்ற சிறுகதைத் தொகுப்பு முன்னர் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 115494).

### 7696

**பூஜைக்கு வந்த மலர்.** ந.பாலேஸ்வரி. கொழும்பு: வீரகேசரி பிரசுரம், த.பெட்டி எண் 160, 1வது பதிப்பு, மாசி 1972. (கொழும்பு 14: Express Newspapers Ltd., 185, Grand Pass Road)

(6), 159 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 17.5x12.5 சமீ.

இக்கதையில் நாட்குறிப்புமூலம் கதைகூறும் உத்தி கையாளப்பட்டுள்ளது. பருவத்தவறினால் தாய்மையடையும் தங்கை, அதைப்பழியாகக் கருதி விலகி ஓடியவேளை, அக்குழந்தைக்குத்தானே தாயாகிப் பழிபூணும் தமக்கை மாலதியின் கதை. வளர்ப்புமகள் ஜனார்த்தனிக்கு மாலதி இறக்கும்போது விட்டுச்சென்ற நாட்குறிப்பின் மூலம் விபரம் தெரிகின்றது. மாலதியின் காதலன் இறுதியில் தன் காதலியின் உண்மைநிலையை அறிகின்றான். திருக்கோணமலையைச் சேர்ந்த பாலேஸ்வரியின் முதலாவது நாவல் சுடர்விளக்கு என்ற பெயரில் வீரகேசரியில் தொடராக வெளிவந்தது. அதைத் தொடர்ந்து நினைவு நீங்காதது, உள்ளக் கோயில், எங்கே நீயோ நானும் அங்கே

உன்னோடு, தத்தை விடு தூது, என்ற வரிசையில் பூஜைக்கு வந்த மலர் நாவல் வெளிவருகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 122800).

### 7697

**பெரியாஸ்பத்திரியில் இந்திரன்.** தமிழ்மாறன். கோப்பாய்: புலவர் மன்றம், கோப்பாய் வடக்கு, 1வது பதிப்பு, 1973. (யாழ்ப்பாணம்: சண்முகநாதன் புத்தகசாலை, 257,காங்கேசன்துறை வீதி).
viii, 72 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18.5x12.5 சமீ.

புலவர் தமிழ்மாறன் நகைச்சுவையுடன் யாழ்ப்பாணச் சமுதாயத்தின் நிலையை காட்சிப்படுத்த முனைந்துள்ளார். இந்திரன் தேவலோகத்திலிருந்து பூலோகம் வந்து மருத்துவசாலை (டிஸ்பென்சரி) ஒன்றுக்குப் பிரவேசம்செய்து, எமது பிரதேசத்து மருத்துவச் சீர்கேடுகளைக் காண்பதாக கதை நகர்த்தப்படுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 120159).

### 7698

**மங்கை சீதா.** சுகணா. அல்வாய்: அழகன் பிரசுரம், பாரதிதாசன் நூலகம், 1வது பதிப்பு, வைகாசி 2005. (அல்வாய்: சதாபொன்ஸ் ஓப்செட் பிரின்டர்ஸ், மாலுசந்தி).
ix, 143 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

சுதந்திரமான பாலுறவின் விளைவுகளை தமக்கேயுரிய பாணியில் இந்நாவலில் சொல்லியிருக்கிறார். நம்மோடு வாழும் மனிதர்களின் பாலியல் பலவீனங்களை, தரமற்ற சமூக வாழ்க்கைப் போக்கினை, சந்தேக புத்தியினை அடிபக்கோடிட்டுக் காட்டி ஒவ்வாத புறநடைகளிலிருந்து உயிரூட்டமுள்ள வாழ்க்கை முறைக்கு நம்மை நகர்த்திச்செல்லவேண்டுமென்ற வேணவாவின் வெளிப்பாடாக மங்கை சீதா என்ற நாவல் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம், கொழும்பு, இந்தியா என்று களங்களை மாற்றி அவ்வக் களங்களுக்குரிய பிரதேச மொழிவழக்கில் மங்கையற்கரசி, சுந்தரம், சீதா, மணியன், தங்கராசன், கோகிலம், கற்பகம், சிங்காரம், தெய்வானை, டொக்டர் சகுந்தலா ஆகிய பாத்திரங்களின் வழியாக இந்நாவல் விரிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 160691).

### 7699

**மணமும் விதியும் - நாவல்.** செ.கணேசலிங்கம். சென்னை 600 026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12) மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு 2010. (சென்னை 600 026: குமரன் பதிப்பகம், 3(12) மெய்கை விநாயகர் தெரு, வடபழநி).
176 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12.5 சமீ.

ஆசிரியையாகப் பணிபுரியும் அமுதா அரவிந்தனை மணக்க விரும்புகிறாள். ஆனால், தந்தையார் சீர், சீதனம், பேரம்பேசி மேலதிக வருமானம் பெறும் சந்தானத்தை திருமணம் முடித்து வைக்கிறார். சீர், சீதனத்திருமணம் தலைவிதியல்ல-சமூக சட்டவிதிகளை மீறும் இலஞ்ச ஊழலின் அடிப்படை என்றும், குடும்ப உறவுகளுடன் குடும்பங்கள் மூலமும் இலஞ்சமும் ஊழலும் பரந்து சமூக வாழ்வில் ஊடுருவி உள்ளது என்றும் கூறுகிறான் அரவிந்தன். மூன்று ஆண்டுகள் மணவாழ்க்கையை முடித்து, இரண்டு வயது அமுதனுடன் தந்தை வீட்டுக்கு வாழாவெட்டியாக அமுதா திரும்புகிறாள். விவாகரத்தில் தந்தை லஞ்சமாகக் கொடுத்த சீதனப்பணத்தை மீளப்பெறும்படி அமுதா தந்தைக்கு நினைவூட்டுகிறாள். தமிழர் வாழ்வில் சீதனக்கொடுமை பற்றிய பல்வேறு விரிவான கருத்தோட்டங்களை இந்நாவல் கொண்டுள்ளது.

### 7700

**மணிமகுடம்.** இ.நாகராஜன், கனக செந்திநாதன், எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை).
120 பக்கம், புகைப்படத் தகடு, விலை: இந்திய ரூபா 90., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-81-89748-33-5.

இந்நாவல் கண்டி அரசின் அஸ்தமன கால வரலாற்று நிகழ்வுகளையும் பதிவுசெய்கின்றது. இலங்கையின் கரையோரப்பகுதிகள் அந்நியர் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்ட பின்னரும் கண்டி இராச்சியம் இரு நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தனது இறைமையைக் காப்பாற்றி வந்துள்ளது. இதற்குக் காரணம் கண்டி நாட்டிலே தமிழ்-சிங்கள இனங்களிடையே நிலவிய புரிந்துணர்வும் சௌஜன்யமுமாகும். கண்டியை ஆண்ட தமிழ் மன்னர்கள் பௌத்த மதத்தினையும் மேன்மைப்படுத்திவந்தனர். கண்டி மன்னனின் அரண்மனையிலே தமிழ்-சிங்களம் ஆகிய இருமொழிகளும் கோலோச்சின. பதவி ஆசைகளுக்காக சிங்களப் பிரதானிகள் தமிழ்த் துவேஷத்தை முன்னிலைப்படுத்தியதாலேயே கண்டி அந்நியர்வசமாயிற்று என்ற வரலாறு இந்நாவலினூடாக வலியுறுத்தப்படுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 175882).

### 7701

**மனசு Fury of Love.** சோமரட்ணம் ஜெயச்சந்திரன். வவுனியா: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, மே 2005. (வவுனியா: மல்ரி விஷன், 73 D, 2ம் குறுக்குத் தெரு).
xiv, 40 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18x12 சமீ.

இருட்டு ஒளி என்ற சிறுகதைத் தொகுதியின்மூலம் அறிமுகமான ஜெயச்சந்திரன் எழுதிய குறுநாவல் இது. இசையமைப்பாளரும், எழுத்தாளருமான இவர் Train, வன்னியூற்று, சிறகுகள், முதலிய ஒலிப்பேழைகளையும் இசையமைத்துப் புகழ்பெற்றவர். ஒரு நாட்குறிப்பேட்டை வைத்துக்கொண்டு கதையை நகர்த்துவதுடன் அதீதமான காதல் உணர்வை வாசகர் நெஞ்சில் பதிவாக்க முயல்கிறார். குறுநாவலில் இரண்டு காதல்கதைகள் சொல்லப்படுகின்றன. முதற் கதை இலக்கியாவின்மேல் கஜன் கொண்ட ஒருதலைக் காதல். கஜன் தன்மீது கொண்ட காதலை அவன் இறந்து 2 ஆண்டுகளின்பின் அவனது நாட்குறிப்பின் வாயிலாக இலக்கியா அறிந்துகொள்கிறாள். இரண்டாவது கதையில் சமூக யதார்த்தமாக ஒரு பெண் கார்த்திக்கை நாவளவில் அண்ணா என்றழைப்பதும், மனதளவில் அவனைக் காதலிப்பதும் பின் வேறொருவனை மணந்து சிரமப்படுவதும் வெளிக்காட்டப்படுகின்றது.

### 7702

**மீனாட்சி: நவீனம்.** த.சண்முகசுந்தரம். தெல்லிப்பழை: கலைப்பெருமன்றம், அம்பனை, 1வது பதிப்பு, ஜுன் 1974. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).
x, 71 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18x12.5 சமீ.

சுதந்திரனில் தொடராக 1953இல் வெளிவந்த நாவல். 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஈழத்துத் தொழிலாளர் சமூகத்தின் ஒரு பகுதியினரான மலையகத் தொழிலாளர்களின் சமூகப் பண்பினை விளக்கி, காதல்-தியாகம் ஆகியவற்றோடு பின்னி அமைக்கப்பட்ட கதை. மீனாட்சி என்ற மலையகப் பெண்ணை விரும்பும் நாகராசன், அவளை விடுத்து கமலநாயகி என்ற பெண்ணை மணந்துகொள்கிறான். மீனாட்சியின் வாழ்க்கைக் குறிப்புகளிலிருந்து பின்னர் அவளது துயரவாழ்வையும் நல்லுளப்பாங்கையும் அறிந்துகொள்கிறான். மீனாட்சி என்ற தோட்டத் தொழிலாளிப் பெண்ணின் சோதனை நிறைந்த வாழ்க்கை மென்மையாக வடிக்கப்பட்டுள்ளது. அபலைப் பெண்களின் வாழ்க்கையில் துன்பமும், ஏக்கமும், நம்பிக்கை வரட்சியும் நிறைந்துள்ளன என்ற உண்மை அழுத்தி உரைக்கப்படுகின்றது. வாழ்க்கைப் போராட்டத்தில் அவள் தறிகெட்டு இதயக் கனவுகளைத் தன்னுள்ளே புதைத்துச் சமுதாய ஏக்கங்களின் நுண்ணிய வெட்டுமுகத் தோற்றத்தை இலேசாகப் பிரதிபலிக்கிறாள். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40143).

### 7703

**முகுந்தனின் கதை.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12), மெய்கை விநாயகர் வீதி, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).
192 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12.5 சமீ.

இந்நாவலின் நாயகன் முகுந்தன், முனைவர் பட்டத்திற்காக அழகுணர்ச்சிக் கோட்பாடு என்ற பொருளில் ஆய்வுசெய்கிறான். அவனை நெறிப்படுத்தும் பேராசிரியருடன் கருத்து முரண்பாடு எற்படுகின்றது. இயற்கை அழகை மட்டுமே அறிந்திருந்த மனிதர் மக்கள் உழைப்பால் பல்வேறு கலைகளைப் படைத்து அகநிலையில் மேம்படுகின்றனர். புறநிலையில் விஞ்ஞானம், தொழில்நுட்ப வளர்ச்சியுடன் புறநிலை வாழ்வில் சிறப்படைகின்றனர். கல்வி அறிவில் மேம்படாத மக்கள் திரளினர், சினிமா கலையில் காட்டும் ஆர்வம் முகுந்தனைச் சிந்திக்க வைக்கின்றது. நாடகம், நடிப்பு, ஆடல், பாடல், ஓவியம், ஒப்பனை, படப்பிடிப்பு போன்ற கலைகள் தரும் அழகுணர்ச்சியால் கவரப்படுகின்றனர் என முகுந்தன் அவற்றைப் பற்றி நடைமுறையில் கற்க விரும்புகின்றான். செ.கணேசலிங்கத்தின் அண்மைக்கால சமூக நாவல்.

### 7704

**முடிவில்லாத ஆரம்பங்கள்.** சு.சிவராசா. யாழ்ப்பாணம்: ம.சந்திரபோஸ், 1வது பதிப்பு, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: பொஸ்கோ ஆர்ட்டோன பிரின்டர்ஸ்).
(6), 84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

வட மாகாணத்தில் 1995இல் இடம்பெற்ற வலிகாமம் இடப்பெயர்வினை பின்னணியாகக்கொண்டு இந்நாவல் விரிகின்றது. வலிகாமம் இடப்பெயர்வின் சோகங்கள், அனுபவங்கள் அனைத்தையும் முடிந்தவரையில் ஒன்றுதிரட்டி இந்நாவல்வழியாகப் பதிவுசெய்திருக்கிறார். இராமநாதன்-யசோதா-ரமா குடும்பம் 1995இல் வலிகாமம் இடப்பெயர்வின்போது தென்மராட்சி, கிளிநொச்சிப் பகுதிகளிலே பல இன்னல்களுக்கிடையே வாழ்ந்து வருகிறார்கள். கிளாலிக்கூடாகச் சென்ற வள்ளங்களை கடற்படை மூழ்கடித்ததில் ரமா பெற்றோரை இழந்து அநாதையாகிறாள். ஒப்பிரேஷன் லிபரேஷன் இராணுவ முன்னெடுப்பில் தன் சொத்துக்களை இழந்த மகாலிங்கத்தார், மற்றும் கந்தசாமி, சாந்தி என்று பல பாத்திரங்கள் இந்நாவலில் இடப்பெயர்வின் அவலங்களின் சான்றாக வலம்வருகின்றனர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 143855).

### 7705

**முள்முடி மன்னர்கள்.** இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன். யாழ்ப்பாணம்: டேவிட் லிகோரி, மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1991. (மல்லாகம்: A.S.J.Printing Works).
(6), 104 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 17.5x12.5 சமீ.

கொக்குவில் வளர்மதி சனசமூக நிலைய வெளியீடான உள்ளம் சஞ்சிகையில் சிலகாலம் தொடராக சில அத்தியாயங்களே வெளிவந்து சஞ்சிகையின் நிறுத்தத்துடன் நின்றுபோன நாவல் இது. நூலுருவில் முழுமையாக வெளியிடப்படுகின்றது. சுமப்பதோ முள்முடி- நினைப்போ மன்னர்கள் என்ற வகையில் சொந்த மண்ணில் இன்று அந்நியப்பட்டுப்போய் நிற்கும் எம்மினத்தவர் சிலரின் கதை இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 109251).

### 7706

**மூன்றாம் சிலுவை.** உமா வரதராஜன். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 60005: மணி ஓப்செட்).
126 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89359-85-0.

ஏற்கெனவெ இரண்டு முறை திருமண பந்தத்தில் இணைந்து திருப்தியுறாது தோல்வி கண்டவரான விஜயராகவன் பின்னர் தனது நிறுவனத்தில் பணிபுரியும் தன்னை விட இருபது வயத குறைந்த ஜுலி என்ற பெண்ணை விரும்புவதும், அவளுடன் உல்லாச வாழ்வை அனுபவிப்பதும் இறுதியில் ஜுலி அவரைவிட்டுப்பிரிந்து மற்றொருவனைத் திருமணம் செய்தகொள்ளப்போவதும் நாவலின் கதை. பரிவில் தொடங்கி, உடல் கலப்பில் முன்னேறிய மூன்றாவது பிணைப்பு இறுதியில் மனதைப் பொசுக்குகிறது. ஜுலியின் பிரிவு விஜயராகவனை சிலுவை சுமக்க வைக்கிறது. உமா வரதராஜனின் இந்த நாவல் ஆண்களை ரகசியமாக மகிழ்ச்சிகொள்ளச் செய்யும். பெண்களை ஆவேசமாக எதிர்வினையாற்றத்தூண்டும். கிழக்கிலங்கையின் கரையோரக் கிராமமான பாண்டிருப்பில் 1956இல் பிறந்தவர் உமா வரதராஜன். சிங்கர் (ஸ்ரீலங்கா) நிறுவனத்தின் உயர் அதிகாரியாகப் பணியாற்றும் இவரது முதலாவது நாவல் இது. ஆசிரியரின் முதல் நாவல்.

7707

**மெல்ல இருள் இனி விலகும்.** செங்கை ஆழியான். (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: திருமதி கமலா குணராசா, கமலம் பதிப்பகம், 75/10 A, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).
iv, 64 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ.

*இலங்கையின் பெருநிலத்தையும் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் இணைக்கின்ற ஆனையிரவுப் பாதை மக்களின் போக்குவரத்திற்கு அடைபட்டுப்போனதன்பின்னர் இடர் நிறைந்த வழிகள் மக்களைத் தெற்கேயும் வடக்கேயும்இடம்மாற்றி வந்துள்ளது. முதலில் கேரதீவு-சங்குப்பிட்டிப் படகுப்பாதை. அதன்பின்னர் இயக்கச்சி-ஊரியான் அல்லது இயக்கச்சி-கொம்படி களப்புப் பாதை. அதன் பின்னர் கிளாலி-பூநகரிக் குடாக்கடல் பாதை என்பவற்றினூடாக மக்கள் இரவு நேரங்களில் சஞ்சரித்தனர். அவ்வேளை, யாழ்ப்பாணக் குடாநாட்டில் நுகர்வுப்பொருட்கள் இல்லை. எரிபொருட்கள்அரிது. மின்சாரம், தொலைபேசி வசதிகள் எதுவுமேயில்லை. வானத்தில் ஹெலிகளும் பொம்பர்களும் அட்டகாசம் செய்தன. இவற்றிடையே அவசியம் நேர்ந்தவர்கள் அப்பாதைகளில் பயணப்பட்டனர். அவ்வாறான காலகட்டத்தைப் பின்னணியாகக் கொண்ட நாவல் இதுவாகும். இரண்டு களங்களில் நிகழும் இந்நாவலினூடாக யாழ்ப்பாணத்து மக்களின் மனவுணர்வுக் கோலங்களைப் பாவத்தோடும் பலவீனத்தோடும் சித்திரித்துள்ளார்.*

7708

**மௌனப் பார்வை: நாவல்.** துறையூரான் (இயற்பெயர்: எம்.சிவானந்தன்). மன்னார்: கலைஞர் பேரவை, பேசாலை, 1வது பதிப்பு, 2010. (மன்னார்: ஸ்கை அச்சகம்).
xx, 114 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12 சமீ.

*யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகங்களிலும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும் பயின்ற இந்நூலாசிரியர் மன்னார் மாவட்டத்தின் துறைமுகக் கிராமமான தலைமன்னார் துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்வித்துறையில் இணைந்து படாசாலை அதிபராகப் பணியாற்றுகிறார். இந்நூல் சிறுகதை எழுத்தாளராக பிரபல்யம்பெற்ற துறையூரானின் முதல் நாவலாகும். தலைமன்னாரை அண்மித்த பல குறிச்சிகளுள் ஒன்றைப் பனையூர் என்ற கற்பனைக் கிராமமாக்கி அதனைத் தனது கதையின் நிகழ்களமாக்கியிருக்கிறார். மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் வாழ்ந்த கிராமமக்களின் வித்தியாசமான வாழ்வியல் கோலங்களை யதார்த்தமாகப் படம்பிடித்துக்காட்டியுள்ளார். 18ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்து தென்னிந்தியக் கரைகளில் வாழ்ந்த வறிய மக்களைத் தலைமன்னார் துறைமுகத்தின் லழியாக மலையகத்துக்கு நகர்த்திச்சென்றனர் பிரித்தானியர். இவர்களது உழைப்பை உறிஞ்சிக் குடித்தனர் தோட்டத்துரைமார். வெறுப்படைந்த பலர் மீளவும் இத்துறைமுகத்தின் வழியாகவே தாயகம் மீண்டனர். அவர்களுட் சிலர் தாயகம் திரும்பாமல் தலைமன்னார் குறிச்சிகளில் நிரந்தரமாகத் தங்கியும்விட்டனர். அவர்களின் மூன்றாவது தலைமுறையினரே இக்கதையின் பாத்திரங்கள். அவர்களின் நடத்தைக் கோலங்கள், உணர்வுகள், நம்பிக்கைகள், புதிய வாழ்வியல் சூழலுக்குள்ளே பொருண்மிய மேம்பாட்டைக்காண முனைந்து அவர்கள் கண்ட வெற்றிகள் தோல்விகள் ஏமாற்றங்கள் என்பனவற்றினூடாக கதாநாயகி வதனியின் ஒரு சோகக் காதல் கதை சொல்லப்பட்டிருக்கிறது.*

7709

**வடக்கும் தெற்கும் (நாவல்).** சோ.ராமேஸ்வரன். மாத்தறை: மக்கள் சமாதான இலக்கிய மன்றம், 52 B, தர்மரத்ன மாவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 1996. (மஹரகம: தரஞ்ஜீ பிரிண்டர்ஸ், ஹைலெவல் வீதி, நாவின்ன).
vi, 134 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9430-03-3.

*மக்கள் சமாதான இலக்கிய மன்றத்தினால் 1996இல் நடத்தப்பட்ட நாவல் போட்டியில் முதற் பரிசு பெற்றது. அரசகரும மொழிகள் திணைக்களம் இன ஐக்கியத்தையும் மொழிவளர்ச்சியையும் கருத்திற்கொண்டு அகில இலங்கை ரீதியில் ஏற்பாடு செய்திருந்த போட்டியில் 3வது பரிசு பெற்றது. சிங்களத்தில் **உத்துர சஹ தக்குண** என்ற தலைப்பில் 1998இல் மொழிமாற்றம் செய்யப்பட்டது. பொதுவாக தேசிய ஐக்கியத்தைக் கருப்பொருளாகக்கொண்ட நாவல்களில் குறிப்பிடுவதுபோன்றே யதார்த்தத்திற்கு ஒவ்வாத இனக்கலப்புத் திருமண அமிசங்கள் இந்நாவலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.*

இருப்பினும் அரசியல் தீர்வே பிரதானமான இன ஒற்றுமைக்கான வழியாக முன்வைக்கப்படுகின்றது. இந்நாவலின் சிங்கள கதாபாத்திரமான காமினி , தமிழ்க் கதாபாத்திரமான ரூபன் ஆகிய இருவரினூடாகவும் நாவல் நகர்த்தப்படுகின்றது. தமிழ் இனத்தின் உரிமைகளை அவர்களுக்கு வழங்கும்போதே இன ஐக்கியம் இந்நாட்டில் ஏற்படமுடியும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கையுடையவனாக சிங்கள பாத்திரமான காமினி விளங்குகின்றான். அரசியல்வாதிகளின் போலித்தன்மைகளை பகிரங்கமாக விமர்சனம் செய்யும் அவனது வாழ்வில் அரசயல்ரீதியான இடர்பாடுகளும் துன்பங்களும் கெடுபிடிகளும் வந்துசேர்கின்றன. இருப்பினும் தனது நிலைப்பாட்டில் பிடிவாதமாக இருக்கிறான். இது நாவலின் சிறப்பாக அமைகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 125269).

### 7710

**வதையின் கதை.** செ.கணேசலிங்கன். சென்னை 600001: பரதன் பதிப்பகம், 63, தையப்பன் தெரு, 1வத பதிப்பு, மே 1982. (சென்னை 600014: மூவேந்தர் அச்சகம்).
104 பக்கம், விலை: இந்திய ரூபா 5.25, அளவு: 18x12.5 சமீ.

மனித வதை இருவகைப்படும். ஒன்று உடல் வதை. மற்றொன்று மன (Mental) வதை. முதலாளித்துவத்தின் மனித உறவுகளுக்கிடையே பண்டம் என்ற மூன்றாவது பொருள் தோன்றியது. பண்டப் பெருக்கம் சமூக வாழ்க்கையையும் சிக்கலாக்கியது. பண்ட வளர்ச்சியோடு மூன்றாவது அமைப்பாகிய அரசும் வலுவடைந்தது. இது வர்க்கப்போராட்டத்தை அடக்கியொடுக்கத் தோன்றிய பலாத்கார அமைப்பாகும். பண்ட உற்பத்திப் பெருக்கத்தோடு அண்மைக்காலத்தில் தோன்றி வளர்ச்சிபெற்ற அமைப்புகளே பொலிசும் இராணுவமுமாகும். இவை அரசின் பாதுகாப்புக்காகத் தன்னை வடிவமைத்துக்கொண்டன. முதலாளி வர்க்கம் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய சட்டங்களை அமைத்துத் தமது சமூக அமைப்பை எதிர்ப்போரை வதைக்கும் பொறுப்பை பொலிஸ் இராணுவத்திடம் ஒப்படைத்தது. அதற்காக வேண்டிய நீதிமன்றம், சிறைச்சாலைகளையும் ஆக்கிக்கொடுத்தது. வதை என்பது பொலிஸ் ராணுவத்தின் கடமை போல வழக்கிலுள்ளது. முதலாளித்துவ சமூகத்திற்கு எதிரான உண்மைகளைப் பெறவும், புரட்சிகர இயக்கங்களை அழிக்கவுமே வதை பெரிதும் பயன்படுகின்றது. வதையின் கோர உருவங்களின் முழுமையல்ல இந்நாவல். அவற்றின் கோரப் பற்களை ஆங்காங்கே தொட்டுக்காட்டியுள்ளார் ஆசிரியர். இலங்கையின் பத்து ஆண்டு சமகால வரலாறு இந்நாவலில் அடங்கியுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 97157).

### 7711

**வயலான் குருவி-நாவல்.** அஸீஸ் எம். பாயிஸ். பத்தரமுல்ல: கலாசார அலுவல்கள் திணைக்களம், 8ஆவது மாடி, செத்சிறிபாய, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2008. (அதுருகிரிய: அமில அச்சகம், 447/4, கொட்டாவ வீதி).
(4), 100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-1777-43-2.

2008- மாணவர் திறந்த கையெழுத்துப்பிரதிப் போட்டியில் தெரிவாகி வெற்றிபெற்ற நாவல் இது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 163265).

### 7712

**வாழ்க்கையின் வினோதங்கள்.** க.கணபதிப்பிள்ளை. கொழும்பு: க.கணபதிப்பிள்ளை, தமிழ்ப் பேராசிரியர், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1954. (கும்பகோணம்: சாரதாவிலாஸ பிரஸ்).
(6), 114 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18.5x12.5 சமீ.

பிரெஞ்சு நாவலாசிரியர் அபூ எழுதிய "இரட்டையர்" என்ற நாவலின் தழுவலான இந்நாவலில் நிறைமனத்தின் உயர்வு இலக்கியச்சுவையுடன் காட்டப்படுகிறது. முருகப்பனும் சோமசுந்தரமும் உடன்பிறந்தவர்கள். உளப்பாங்கினால் வேறுபட்டவர்கள். இருவேறு துருவங்களாக வளரும் இவர்களில் முருகப்பன் வள்ளியம்மையை மணந்து அமைதிவாழ்வில் ஈடுபட, சோமசுந்தரம் ஆடம்பர அவாவில் அல்லலுற்று இறுதியில் முருகப்பனின் ஆதரவில் வளம்பெறுகின்றான். பிறமொழித் தழுவலாக இந்நாவல் அமைந்தபோதும், ஈழத்துமண்ணின் கதாமாந்தரை

பாத்திரங்களாகக் கொண்டதாக கதை புனையப்பட்டுள்ளது. நாட்டு வாழ்க்கையும் நகர வாழ்க்கையும், காதல் மணத்தை விரும்பின், கண்டதும் காதல், வாழ்க்கையின் வினோதங்கள் ஆகிய நான்கு அத்தியாயங்களில் இந்நாவல் விரிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 77272).

### 7713

**வாழ்க நீ சங்கிலி மன்ன.** வரதர். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1957.(யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், காங்கேசன்துறை வீதி).
48 பக்கம், விலை: சதம் 60., அளவு: 17.5x12 சமீ.

யாழ்ப்பாணத்தின் கடைசித் தமிழ் மன்னனான சங்கிலியனின் வரலாறு வித்தியாசமான கோணத்தில் இவ்வரலாற்று நாவலில் காட்டப்பட்டுள்ளது. முன்னைய வரலாற்று நூல்களில் சங்கிலியனைக் கெட்டவனாகச் சிருஷ்டித்து வழக்கிலுள்ள கதைகளைத் தேடி அவற்றினூடாகவே அவனை நல்லவனாகக் காட்டும் முயற்சியில் ஆசிரியர் இறங்கியுள்ளார். பரராச சேகர மன்னனின் காமக்கிழத்தியின் மகன், துட்டன், தமையனாகிய பரநிருபசிங்கனுக்குரிய அரசுரிமையைச் சூழ்ச்சியாலே கவர்ந்துகொண்டவன், தனது மகன் உள்ளிட்ட மதமாற்றத்துக்குட்பட்ட அறுநூறு பேர்களை ஈவிரக்கமின்றிக் கொன்றொழித்தவன் என்றவாறாக சங்கிலியனின் வரலாறு திரிபுபடுத்தப்பட்டு வழக்கிலுள்ளது. இந்நிலையில் சங்கிலியனின் வரலாற்றை புதிய கோணத்தில் பார்க்கும் முயற்சி இது. இக்கதை முன்னர் தமிழரசு இதழ்களில் தொடராக வெளிவந்தது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 43479).

### 7714

**விதி வரைந்த பாதையிலே: நாவல்.** வவுனியூர் இரா.உதயணன். கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், A15 1/1, மனிங் டவுன் வீடமைப்புத் தொகுதி, மங்கள வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).
xii, 170 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 17x12 சமீ.

இரா. உதயணனின் இரண்டாவது நாவல். வவுனியாவின் குடியிருப்புக் கிராமத்தையும், நெளுக்குளம், பம்பைமடு கிராமங்களையும் கதைக்களமாகக் கொண்டது. நவீன் என்ற பிரயாண முகவரால் வெளிநாட்டுப் பயணத்தில் ஏமாற்றப்பட்டு அதனால் பாதிக்கப்பட்டு கருத்தரிக்கும் சைந்தவி என்ற இளம்பெண் குழந்தையுடன் பின்னாளில் ஊர் திரும்புவதும், அவளுக்குச் சமூகத்தில் கிட்டும் அனுபவங்களும், அவமானங்களும் இந்நாவலை நகர்த்துகின்றன.

### 7715

**விழிச் சுடர்: இரு குறுநாவல்.** யாழ் நங்கை (இயற்பெயர்: அன்னலட்சுமி இராசதுரை). சுன்னாகம்: தமிழருவிப் பதிப்பகம், 1வது பதிப்பு, ஜனவரி 1970. (சுன்னாகம்: கலாதேவி அச்சகம்).
xii, 122 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்தவர் அன்னலட்சுமி இராசதுரை. யாழ்நங்கை என்ற புனைபெயரில் பரவலாக அறியப்பட்ட நூலாசிரியரின் விழிச்சுடர், வேப்பமரம் ஆகிய இரு குறுநாவல்களைக் கொண்ட நூல் இது. எமது சமூகத்தில் மறுமணம் பற்றியும் அடுத்தவருக்கு வாழ்வளிக்கும் சிந்தை பற்றியும் அழுத்தமாகக்கூறும் கதைக்கருக்கள். 1957இல் கலைச்செல்வி இதழிகளில் கவிதை எழுதியதன்மூலம் இலக்கிய உலகில் நுழைந்தவர் அன்னலட்சுமி. முதல் சிறுகதை 1958இல் தினகரனில் வெளியாகியது. விழிச்சுடர்- நூலுருவில் வெளிவந்த இவரது முதலாவது படைப்பு. 1962 முதல் வீரகேசரி பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர். ஜோதி, மித்திரன் வாரமலர் ஆகியவற்றின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றியவர். 1992இல் இலங்கை இந்து கலாசார அமைச்சின் தமிழ்மணி விருதினைப்பெற்ற இவர் 1993இல் சிறந்த பத்திரிகையாளருக்கான விருதினையும் பெற்றுக்கொண்டவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35169).

### 7716

**விஜய சீலம்.** *சி.வை.சின்னப்பபிள்ளை. யாழ்ப்பாணம்: சி.வை.சின்னப்ப பிள்ளை, 1வது பதிப்பு, 1916. (யாழ்ப்பாணம்: சண்முகநாத யந்திரசாலை, வண்ணார்பண்ணை).*
*(8), 240 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20x14 சமீ.*

*ஈழத்து முதல் மன்னன் விஜயனின் வரலாற்றைக் கூறும் நாவல். கி.மு.5ம் நூற்றாண்டு ஈழவரலாற்றுப் பின்னணியில் அமைந்தது. வடமொழியும் செந்தமிழும் கலந்த உரைநடையில் அமைந்தது. இந்நூலாசிரியர் யாழ்ப்பாணம்,சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் இளைய சகோதரரும் அவரத மாணாக்கர்களுள் ஒருவருமாகிய சி.வை.சின்னப்பபிள்ளை. இவர் ஏற்கெனவெ வீரசிங்கன் கதை, உதிரபாசம் ஆகிய நாவல்களை எழுதியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 43325).*

**7717**
**வேருலகு: கனவுகளின் தொகுப்பு.** *மெலிஞ்சி முத்தன். (இயற்பெயர்: விஜயநாதன் இயுஜின் மசனெட்). சென்னை 600018: உயிர்மை பதிப்பகம், 11/29, சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 600005: மணி ஆப்செட்).*
*64 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-93-80072-73-9.*

*யாழ்ப்பாண மாவட்டம் மெலிஞ்சிமுனையில் 20.10.1975இல் பிறந்தவர் மெலிஞ்சிமுத்தன். கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் அவரது நான்காவது நூலாக இக்குறுநாவல் வெளியிடப்பட்டுள்ளது. முதலாவது கவிதைத்தொகுதி சிதையும் என்னுள் என்ற பெயரில் 2000ம் ஆண்டு வெளிவந்தது. தொடர்ந்து 2003இல் என் தேசக் கரையோரம் என்ற தொகுதியும், 2005இல் முட்களின் இடுக்கில் என்ற கவிதைத் தொகுதியும் வெளியாகியிருந்தன. மெலிஞ்சிமுத்தனின் கனவுகள் வாழ்வாதாரங்களைப் பறிகொடுத்த வலியிலிருந்து உருவான புகலிடக் கலைஞனின் குரல். அவன் அலைக்கழிந்து திரிந்த வாழ்க்கையை, அதன் ரணங்களை, தன்னிடமிருந்து பறிபோன அடையாளத்தை அவர் கனவுகளின் வழியே எதிர்கொள்கின்றார். கவிதையைப்போன்ற படிமங்களும் உருவகங்களும் நிரம்பிய அற்புதமான உரைநடை அவருடையது. கனவுகளின் வழியே அவர் சொல்லும் கதை, யுத்தம் உருவாக்கிய மனிதனைப்பற்றிய உண்மையான வெளிப்பாடாகப் பதிவுசெய்யப்படுகின்றது.*

மேலும் பார்க்க: **7796, 7805,**

## *894.8(6) இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுகள்*

**7718**
**அண்ணை நான் தற்கொலை செய்யப்போகிறேன்.** *இளைய அப்துல்லாஹ் (இயற்பெயர்:* M.N.M.*அனஸ்). சென்னை 600018: உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்ரமணியம் தெரு, அபிராமபுரம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (சென்னை: மணி ஆ/ப்செட்).*
*192 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-93-80072-97-5.*

*2000ஆம் ஆண்டு முதல் லண்டன் தீபம் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் அறிவிப்பாளராகவும் பணியாற்றுபவர் அனஸ். இளைய அப்துல்லாஹ் என்ற பெயரில் அவ்வப்போது தனது படைப்பிலக்கியங்களை சிறுகதைகளாகவும், கவிதைகளாகவும், பத்தி எழுத்துக்களாகவும் வடித்துவருபவர். புலம்பெயர் தேசத்தின் சாதாரண வாழ்வியல் கண்களினூடாக வர்ணஜாலங்களற்ற வாழ்வுநிலையினை சுவாரஸ்யமாகத் தன் எழுத்துக்களில் வரையும் இவரது 35 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ஐரோப்பிய நாடுகளில் தமிழர்களின் வாழ்வு, அகதிகள் பிரச்சினை, சாதி, சமயம், பணக்காரர், ஏழைகள், பெண்கள் என்று பல்வேறு ஏற்றத்தாழ்வுகளை எம்மிடையே நடைமுறையில் கண்டு விமர்சிக்கும் இவர் ஐரோப்பிய நாடுகளில் விபச்சாரம், போதைவஸ்து பாவனை, தமிழரின் திருமணச் சம்பிரதாயங்கள், இளையதலைமுறையினரின் வேகம் என்று எதையுமே விட்டுவைக்கவில்லை. வாசகருடன் நேரடியாகப் பேசி உறவாடும் எழுத்துநடை இவரது படைப்புகளின் சிறப்பம்சமாகும். துப்பாக்கிகளின் காலம் (சிறுகதைத் தொகுப்பு), பிணம் செய்யும்*

*தேசம் (கவிதைத் தொகுப்பு), கடவுளின் தேசம் (கட்டுரைத் தொகுப்பு) ஆகியவை இவரது முன்னைய நூல்களாகும். பிணம் செய்யும் தேசம் இலங்கை அரசின் சாகித்திய விருதினைப் பெற்றது.*

### 7719

**அன்னை தயை: ஆராய்ச்சிக் கட்டுரைகள்.** *மு.கணபதிப்பிள்ளை. சென்னை 1: பாரி நிலையம், 59 பிராட்வே, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1966. (சென்னை 17: சௌந்தரா பிரிண்டர்ஸ்).*
*(4), 112 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.*

*தென் புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய 17 இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள் இவை. அன்னை தயை, வத்தையும் ஈழநாடும், அம்மூவனார் ஈழநாட்டவரே, பிராகிருதத்தின் தாயும் தமிழே, சமக்கிருதத்தின் களவு, கோலெழுத்தும் கண்ணெழுத்தும், கச்சியப்பர் காட்டும் பக்திநெறி, திருவள்ளுவரின் மரபு, தொல்காவியன், கம்பர் கவிக்கு வந்த வினை, பூவும் மணமும், அலக்கழிதல், விளையுள் கமம் ஆகுமோ, கொழுகொம்பு, பூவை விடு தூது, அவனும் இவனும், புதிய இலக்கணம் ஆகிய தலைப்புகளில் இவை அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்தன. இக்கட்டுரைகளுள் சில நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், கலாநிதி டானியல் ஜோன், போன்றோரின் கருத்துகளுக்குக் கண்டனமாக அமைந்தவை. அலக்கழிதல், கொழுகொம்பு ஆகிய இரண்டும் நவாலியூர் பண்டிதர் சோ. இளமுருகனார் வீரகேசரி இதழ்களில் எழுதிய சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளுக்கெதிரான கண்டனங்கள். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 256537).*

### 7720

**ஆக்க இலக்கியமும் அறிவியலும்.** *அ.சண்முகதாஸ் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ்ப்பாண வளாகத் தமிழ்த்துறை வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1977. (யாழ்ப்பாணம்: யாழ்.மாநகர ப.நோக்கக் கூட்டுறவுப் பதிப்பகம், பிரதான வீதி).*
xiii + xxi, *195 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.*

*சமூகவியல், மானிடவியல், மொழியியல், மெய்யியல், அரசறிவியல், போன்ற துறைகள் எவ்வாறு ஆக்க இலக்கியங்களுடன் தொடர்புறுகின்றன என்பது பற்றிய பல கருத்தரங்கக் கட்டுரைகளை உள்ளடக்கியது. இவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிறப்புக் கருத்தரங்குகளில் வாசிக்கப்பெற்றவை. ஆக்க இலக்கியமும் மானிடவியலும் (க.சண்முகலிங்கம்), ஆக்க இலக்கியமும் உளவியலும் (சோ.கிருஷ்ணராஜா), ஆக்க இலக்கியமும் சமூகவியலும் (க.கைலாசபதி), ஆக்க இலக்கியமும் மொழியியலும் (அ.சண்முகதாஸ்), ஆக்க இலக்கியமும் நடையியலும் (எம்.ஏ.நு்.மான்), ஆக்க இலக்கியமும் வரலாறும் (மௌ.சித்திரலேகா), ஆக்க இலக்கியமும் அழகியலும் (என்.சண்முகரத்தினம்), ஆக்க இலக்கியமும் அரசியலும் (மு.நித்தியானந்தன்), ஆக்க இலக்கியமும் நாட்டுப் பண்பாட்டியலும் (சி.மௌனகுரு), ஆக்க இலக்கியமும் பாலியலும் (என்.கே.ரகுநாதன்) ஆகிய 10 கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 323185).*

### 7721

**இருப்பும் விருப்பும்.** *கி.பி.அரவிந்தன். சென்னை 600 091: சாளரம், 2/1758, சாரதி நகர், என்பீல்ட் அவென்யு, மடிப்பாக்கம், 1வது பதிப்பு, ஜுன் 2009. (சென்னை: பொன்னி அச்சகம்).*
*143 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21x14 சமீ.*

*1990களில் புலம்பெயர்ந்த ஈழத்துக்கவிஞராக அதிகம் அறியப்பட்டவர் கி.பி.அரவிந்தன் என்னும் கிறிஸ்தோப்பர் பிரான்சிஸ். தோழர் சுந்தர் என்றும் விடுதலைப் போராளியாக அறியப்பட்டவர். தற்போது புலம்பெயர்ந்து பிரான்சில் வாழ்பவர். இவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். தமிழகம் இந்நூலை கைகளில் ஏந்தட்டும் என்ற வைகறையின் முன்னுரையான அறிமுகக் கட்டுரையுடன் இது அணிந்துரை அல்ல தோழர்களே என்ற தலைப்பில் பாமரன் எழுதிய உணர்வுபூர்வமான கட்டுரையும், அப்படித்தானா அரவிந்தன்? என்ற கே.எம்.வேணுகோபாலின் கட்டுரையும் இத்தொகுதிக்கும் அதன் படைப்பாளி கி.பி.அரவிந்தனுக்குமான விரிவான அறிமுகத்தை வழங்குகின்றன. உள்ளே உள்ள கி.பி.அரவிந்தனின் பத்துக் கட்டுரைகளும் முறையே இருப்பும் விருப்பும், ஒற்றுமையை ஓதுவோருக்கு, காலம் அரித்திடாது எம் இணைப்பை, எங்கள் நினைவுகளை*

*உங்களிடம் கையளித்துள்ளோம், இலங்கையில் இன்னொரு போரை நாங்கள் விரும்பவில்லை, சாத்வீகப் பாதையில் சந்தி பிரித்தவன்: பொன்.சிவகுமாரன், யாசர் அரபாத்: ஒரு முடிவுறாத வரலாறு, ஓர் அகதியின் தாயும் தாயகமும், ஒரு பயணமும் சில நினைவுகளும், அகதியாகவே வாழ்ந்துவிட்டுப் போகிறேன் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.*

**7722**

**இருபதாம் நூற்றாண்டுக் கவிதை.** *பெரிய ஐங்கரன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 291/6-5/3A, எட்வேர்ட் அவென்யூ, 1வது பதிப்பு, ஏப்ரல் 2010. (மஹரகம: தரஞ்ஜி பிரின்ட்ஸ், நாவின்ன).*
*x, 86 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x12.5 சமீ.*

*இந்நூலில் புதுக்கவிதையில் படிமவியம், பெண்மொழிக் கவிதை, கவிதையில் முரண்கோட்பாடு, சோலைக்கிளியின் நாயோடு சம்பாசித்தல், நவீன கவிதைகளில்அ/றிணைப் பெயர்கள், மாணிக்கவாசகரின் நாய், பாரசீக கவிஞானி, தலையணை, புறநானூறு ஓர் எளிய அறிமுகம், உமர் கய்யாமின் ஒரு கவிதை, இருபதாம் நூற்றாண்டுக் கவிதை என்ற தலைப்புகளில் 11 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவை ஞானம், ஜீவநதி, நீங்களும் எழுதலாம். தினக்குரல் ஆகிய ஈழத்துச் சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் இடம்பெற்றவை. மீரா பதிப்பகம், தனது 87ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.*

**7723**

**இலக்கிய மகளிர் இதய வேட்கை.** *க.நவசோதி. சேலம் 636003: அரிமாப் பதிப்பகம், அம்மாப்பேட்டை, 1வது பதிப்பு, ஜுன் 1978. (சேலம் 636003: பொன்முடி அச்சகம்).*
*(16), 88 பக்கம், விலை: இந்திய ரூபா 4.00, அளவு: 19.5x13 சமீ.*

*2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழிலக்கிய ஆழியில் தேர்ந்த முத்துக்கோவையே இதிலுள்ள 11 கட்டுரைகளும் என்று கூறும் ஆசிரியர், பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் வீரகேசரி பத்திரிகையில் தான் எழுதி, பரத்தை, மோகம், மாதவி, மணிமேகலை, காதல் வெறி, ஊடல், பிறப்பு, துடிப்பு, வசியம், ஒப்பாரி, சபதம் ஆகிய தலைப்புகளில் பிரசுரமான சங்க இலக்கியங்களில் வாழும் மகளிர் பற்றிய இலக்கியக் கட்டுரைகளை நூலுருவில் வழங்கியிருக்கிறார். ஓடிப்போனவன்- சிறுவர் நாவலின் ஆசிரியரான நவசோதி இலங்கையின் தேசிய சுவடிகள் காப்பகத்தில் பணியாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 71772).*

**7724**

**இலக்கிய வளம்.** *ஆ.கந்தையா. யாழ்ப்பாணம்: காந்தளகம், 213 கே.கே.எஸ். வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1981. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ காந்தா அச்சகம், 213 கே.கே.எஸ். வீதி).*
*(16), 114 பக்கம், விலை: ரூபா 12.50., நூலகப் பதிப்பு: ரூபா 15.00, அளவு: 18x12.5 சமீ.*

*இலக்கிய வளம் என்ற பொதுத் தலைப்பிலே ஆசிரியர் தமது செம்மைசான்ற தமிழ்ப் புலமையினால், தமிழர் தம் பழந்தமிழ் இலக்கியங்கள், பன்னிரு திருமுறைகள் என்பவற்றில் ஆழ்ந்து ஈடுபட்டு, தர்க்கரீதியான பல தத்துவச் சிந்தனைகளை, தமிழர் பண்பாட்டினை படித்தவர் உவக்கவும், சிந்தித்துப் பயனடையவும் ஏற்ற வகையில் எட்டுக் கட்டுரைகளாக வடித்துள்ளார். இவை அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள், மூன்று சொல்லோவியங்கள், மரத்தை மறைத்தது மாமத யானை, சிலம்பில் ஒரு நுட்பம், வள்ளுவன் கண்ட காதலர், பரிபாடற் செவ்வேள், கணியன் பூங்குன்றனார், பத்தும் பாடுக ஆகிய தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16700).*

**7725**

**இலக்கியக் கட்டுரைகள்: (தெரிவு செய்யப்பட்டவை).** *விபுலாநந்த அடிகள். கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1973. (களனி: வித்தியாலங்கார வளாகம், இலங்கைப் பல்கலைக்கழகம்).*
*x, (2), 190 பக்கம், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.*

*சுவாமி விபுலாநந்தர் எழுதிய கலை இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு. இலக்கியச்சுவை, ஐயமும் அழகும், வண்ணமும் வடிவும், நிலவும் பொழிலும், கவியும் சால்பும், யாழ் நூல், இயலிசை நாடகம், ஆங்கிலவாணி, மேற்றிசைச் செல்வம், சோழ மண்டலத்துத் தமிழும் ஈழ மண்டலத்துத் தமிழும், கலைச்சொல்லாக்கம், தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப் பெருக்கு வடநாட்டிற் பரவிய வரன்முறை ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இலக்கிய அறிவு, வரலாற்றறிவு என்பவற்றை உணர்த்தி ஆராய்ச்சி மனப்பான்மையைத் தூண்டக்கூடியவாறு தேர்ந்தெடுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 92587).*

### 7726

**இலக்கியமும் எதிர்காலமும்: கட்டுரைத் தொகுப்பு.** *கலாமணி பரணீதரன். யாழ்ப்பாணம்: ஜீவநதி, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, பெப்ரவரி 2011. (அல்வாய்: சதாபொன்ஸ் ஓப்செட் பிரின்டர்ஸ், மாலுசந்தி)*
*(8), 52 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-52496-2-1.*

*இந்நூலில் இலக்கியமும் எதிர்காலமும், இலக்கியம் படும்பாடு, ஈழத்து ஆக்க இலக்கியப் பெண் படைப்பாளிகள், பெண்கள் மீதான வன்முறையும் பெண்களின் மீட்சியும், இலக்கியமும் உளவியலும், நல்லதொரு சமுதாய உருவாக்கத்தில் வாசிப்பின் பங்களிப்பு, பிரசாரம் ஒரு கலையாக, மொழிபெயர்ப்பின் வளர்ச்சி பற்றிய ஒரு கண்ணோட்டம், ஈழத்துக் கலை இலக்கியச் சிற்றிதழ்களின் நிலை, தமிழில் ஒப்பியல் இலக்கிய வளர்ச்சி-சில அறிமுகக் குறிப்புகள் ஆகிய 10 இலக்கியக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஆக்கங்கள் அனைத்தும் வெற்றுச் சிந்தனைகளாக இல்லாமல் சுய அவதானிப்புகள், மேலதிக தேடல்கள், ஆக்கபூர்வமான பரிந்துரைகள் என்பவற்றை உள்ளடக்கியிருப்பதுடன் படைப்பாளிகளை புதிய திசைநோக்கி நகர அழைப்பு விடுப்பதாயுமுள்ளன. நூலாசிரியர் ஜீவநதி என்ற கலை இலக்கியச் சிற்றிதழின் ஆசிரியராவார்.*

### 7727

**இலக்கியவிலக்கண ஆய்வுரைகள்.** *த.இராமநாதபிள்ளை. யாழ்ப்பாணம்: த.இராமநாதபிள்ளை, முன்னாள் அதிபர், புலோலி இந்துக்கல்லூரி, பருத்தித்துறை, 1வது பதிப்பு, 1965. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).*
*120 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 21x14 சமீ.*

*1952-1964ம் ஆண்டு காலகட்டத்தில் தமிழ்ப் பொழில், தமிழ்ச் செல்வி, முக்கனி ஆகிய சஞ்சிகைகளில் வெளிவந்த முப்பது தமிழ் இலக்கிய, இலக்கண ஆய்வுக்கட்டுரைகளைக் கொண்ட நூல். நூலாசிரியர் யவன மஞ்சரி, உலக வரலாறு (3 பாகங்களில்), உளநூலும் கல்வியும், அளவை விளக்கம் ஆகிய நூல்களினதும் ஆசிரியராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2649).*

### 7728

**இலங்கையில் இன்பத் தமிழ்.** *கா.பொ.இரத்தினம். யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், 10 பிரதான வீதி, 2வது பதிப்பு, டிசம்பர் 1959, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1956. (கண்டி: கலைவாணி அச்சகம், 130 திருக்கோணமலை வீதி).*
*110 பக்கம், படங்கள், விலை: ரூபா 1.50, அளவு: 18.5x12 சமீ.*

*இலங்கைத் தீவில் வாழும் தமிழரையும், அவர்கள் வசிக்கும் நிலப்பரப்பையும், பேசும் மொழியையும் அவர்களிடையே தோன்றிய பெரியார்களையும் இலக்கியச்செறிவுள்ள இந்நூலின் வாயிலாக அறிமுகப்படுத்துகின்றார். தொல்குடிகள், தமிழர் ஆட்சி, புலவர்களும் புரவலர்களும், ஆதிகாலம், யாழ்ப்பாண அரசர் காலம், ஐரோப்பியராட்சிக் காலம், பல்வகைத் தமிழ்ப்பணிகள், நாவலரும் பிறரும், சங்கப் பாட்டுக்கள், பெருங்காப்பியம், புராணங்கள், பிற பிரபந்தங்கள், தனிப்பாடல்கள், நாடகங்கள், இசைப்பாடல்கள், உரைகள், இலக்கண நூல்கள், உரைநடைநூல்கள், கட்டுரைகள், கண்டனங்கள், சொற்பொழிவுகள், புராணபடனம், நூற்பதிப்பு, அகராதிகள், கலைக்களஞ்சியம், பத்திரிகைகள், வரலாற்று நூல்கள், ஆராய்ச்சி நூல்களும் பல்கலை நூல்களும், மொழிபெயர்ப்பு*

*நூல்கள், ஆங்கிலத்திலே தமிழ்ப்பணி, தமிழ்க் கல்வெட்டுக்கள், நாட்டுப்பாடல்கள், பழமொழிகள், பேச்சுத் தமிழ் ஆகிய பிரிவுகளின்கீழ் இந்நூல் விரிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 169301).*

### 7729

**இஸ்லாம் வளர்த்த தமிழ்.** ம.முஹம்மது உவைஸ். சென்னை 600113: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், T.T.T.I Post, தரமணி, 1வது பதிப்பு, ஜனவரி 1984. (சென்னை 600014: Novel Art Printers). vi, 280 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

*சீதக்காதி அறக்கட்டளைச் சொற்பொழிவாக அமைந்த நூல் இது. இந்நூலில் 17ஆம் நூற்றாண்டுடன் முடிவடைந்த காலகட்டத்தில் தோன்றிய முஸ்லிம் தமிழ் நூல்களைப் பற்றியும்அக்கால எல்லையிலும் அதன் பின்னரும் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களைப் பற்றியும் சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் பல்சந்த மாலை (12ம் நூற்றாண்டு), யாக்கூபு சித்தர் பாடல்கள் (15ம் நூற்றாண்டு), ஆயிர மசலா (1572), மிகுறாசு மாலை (1590), திருநெறிநீதம் (1693), சக்கூன் படைப்போர் (1686), முதுமொழிமாலை (17ம் நூற்றாண்டு), திருமக்காப் பள்ளு (17ம் நூற்றாண்டு), கனகாபிஷேகமாலை (1648), சீறாப்புராணம் (1703), திருமணக்காட்சி (1710), சின்னசீறா (1732), இராஜநாயகம் (1807), குத்புநாயகம் (சே) (1810), திருக்காரணப் புராணம் (1812), குத்பு நாயகம் (வ) (1814), முஹியித்தீன் புராணம் (1816), திருமணிமாலை (1816), இறவுசுல்கூல் படைப்போர் (1818), புதூகுஷ்ஷாம் (1821), தீன் விளக்கம் (1821), நவமணிமாலை (1855), நாகூர்ப் புராணம் (1882), ஆரிபுநாயகம் (1894) ஆகிய இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் பற்றி இந்நூல் தனித்தனியாக விளக்குகின்றது. ஈழத்தவரான நூலாசிரியர், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றியவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 477981).*

### 7730

**ஈழத்து இலக்கியம் நூல்களின் அறிமுகம்: பத்தி எழுத்துக்களும் பல்திரட்டுக்களும் 2.** கே.எஸ்.சிவகுமாரன். கொழும்பு 11: பிரைட் புக் சென்டர், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1996. (கொழும்பு 11: Bright Book Centre, S-27, First Floor, P.O.Box 162, Colombo Central Super Market Complex). (6), 42 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14 சமீ.

*இந்நூலில் திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் எழுதிய கலாநிதி க.செ.நடராசாவின் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி: 14-18ஆம் நூற்றாண்டுகள், பேராசிரியர் சு.வித்தியானந்தனின் தமிழியற் சிந்தனை, கனக செந்திநாதனின் ஈழத்து இலக்கிய வளர்ச்சி, கலாநிதிகள் எம். ஏ.நு·.மான், சி.மௌனகுரு, சித்திரலேகா மௌனகுரு ஆகியோரின் 20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம், சில்லையூர் செல்வராசனின் ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி, கலாநிதி நா.சுப்பிரமணியனின் ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், சுவாமி விபுலாநந்தர் தொடர்பான நூல்கள், விபுலாநந்தரின் திறனாய்வு நோக்கு, சு.வித்தியானந்தனின் மணிவிழா மலர் ஆகிய ஒன்பது திறனாய்வுக் கட்டுரைகள் உள்ளடங்குகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 492988).*

### 7731

**ஈழத்து எழுத்தாளர்கள்: ஒரு விரிவான பார்வை.** கே.எஸ்.சிவகுமாரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
160 பக்கம், விலை: ரூபா 200., இந்திய ரூபா 65., அளவு: 18x12.5 சமீ.

*தினக்குரல் நாளிதழில் **நமக்கிடையே** என்ற தலைப்பில் எழுதப்பட்ட 27 பத்தி எழுத்துக்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இப்பத்தி எழுத்துக்களில் இலக்கியத் திறனாய்வு, மார்க்சியம், அழகியல், நாட்டிய நாடகம், பட்டறிவுப் படிப்பு, பொருள்முதல்வாத அடிப்படை, கவிதை ஆகிய விடயங்கள் தொடர்பான பத்தி எழுத்துகளும், தங்கம்மா அப்பாக் குட்டி, அ.ந.கந்தசாமி, ஏ.ஜே.கனகரத்தினா, க.நாகேஸ்வரன், துரை மனோகரன், எஸ்.முத்துமீரான், மாவை வரோதயன்,*

க.சண்முகலிங்கம், மு.பொன்னம்பலம், நா.சுப்பிரமணிய ஐயர், நாச்சியாதீவு பார்வின், ஆகிய இலக்கிய அறிவியல் ஆளுமைகள் பற்றிய எழுத்தாக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

### 7732

**ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றுக் கருத்தரங்கு.** கலாநிதி கைலாசபதி நினைவுக்குழு. யாழ்ப்பாணம்: தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (கல்லச்சுப் பிரதி).
(118) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 32x20 சமீ.

இக்கருத்தரங்கு ஒரு நாள் நிகழ்வாக இரு அமர்வுகளில் 6.12.1997இல் நடைபெற்றது. முற்பகல் அமர்வினை பேராசிரியர் அ.சண்முகதாசும், பிற்பகல் அமர்வை பேராசிரியர் நா.சுப்பிரமணியமும் தலைமையேற்று வழிநடத்தினர். இவ்வமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் அச்சுவடிவமாக இத்தொகுப்பு உருவாக்கப்பட்டது. இதில் ஈழத்துத் தமிழிலக்கியத்தின் தோற்றமும் தொடர்ச்சியும் (நா.சுப்பிரமணியம்), ஈழத்துத் தமிழ்க் காவிய புராண மரபும் அவற்றின் போக்குகளும் (சி.விசாகரூபன்), ஈழத்துத் தமிழ்ச் சிற்றிலக்கிய மரபு (செல்வி சி.செல்வரஞ்சிதம்), இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் ( எஸ்.சிவலிங்கராஜா), ஈழத்துத் தமிழ்ப் புனைகதைகளின் முக்கிய போக்குகள் (ம.இரகுநாதன்), ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி (அ.சண்முகதாஸ்), ஈழத்துத் தமிழிலக்கியங்களில் மொழி-ஒரு வரலாற்று நோக்கு (பொ.செங்கதிர்ச்செல்வன்), ஈழத்துத் தமிழிலக்கியங்களில் சமூக நோக்கு (மனோன்மணி சண்முகதாஸ்) ஆகிய கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 127323).

### 7733

**உள்ளக் கமலம்: கட்டுரைகள்.** கனகரத்தினம் செபரத்தினம். கனடா: க.செபரத்தினம், 31, Muskox Drive, Scarborough, Ontario M1B-6E7, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (மட்டக்களப்பு: சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).
viii, 171 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இந்நூல் வாழையடி வாழை, ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்கள், தமிழ்நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்களும் போன்ற அரிய நூல்களை வழங்கிய தமிழ் ஒளி, வித்துவான் கனகரத்தினம் செபரத்தினம் அவர்களின் எண்பதாவது அகவை நிறைவைக் குறிக்கும் முகமாக வெளிவந்துள்ள இந்நூல் அவரது 20 கட்டுரைகளை உள்ளடக்கியது. தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உழைத்த சான்றோர்கள் பற்றியும், அவர்களது இலக்கியப்படைப்புகள் பற்றியும், தமிழர் வாழ்வும் பண்பாடும் பற்றியும் அவ்வப்போது ஊடகங்களுக்கு வழங்கிய கட்டுரைகள் இவை.

### 7734

**உள்ளும் புறமும்: சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு-2011 தொடர்பான பதிவுகள்.** லெ.முருகபூபதி. அவுஸ்திரேலியா: சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், த.பெ.எண் 350, Craigiburn, Victoria, 1வது பதிப்பு, ஜுன் 2011. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).
xiv, 216 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-0727-00-1.

கொழும்பில் 2011இல் பல்வேறு சர்ச்சைகளுக்கிடையில் நடைபெற்று முடிந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் அனுபவப்பகிர்வாக இந்நூல் வெளிவந்துள்ளது. தோற்றம், வளர்ச்சி, அடுத்த நகர்வு ஆகிய மூன்று பிரிவுகளில் இதிலுள்ள கட்டுரைகளும் ஆவணங்களும் தொகுக்கப்பட்டுள்ளன. அவுஸ்திரேலியா தமிழ் எழுத்தாளர் விழா இயக்கம்: தோற்றமும் வளர்ச்சியும், மல்லிகை ஆசிரியத் தலையங்கம், தமிழ் எழுத்தாளர்கள் ஒன்றுகூடும் சர்வதேச விழா, முதலாவது ஆலோசனைக் கூட்டம், வடக்கு-கிழக்கில் ஆலோசனைக் கூட்டங்கள், தமிழகத்திலிருந்து முதலாவது கடிதம், அவதூறுகளுக்கான ரிஷிமூலம்- நதிமூலம், தமிழக ஊடகங்களின் தொடர்பு, தமிழக தொலைக்காட்சியில், சில சுவாரஸ்யங்கள், ஊடகம், படைப்பிலக்கியத்துறைகளில் செவ்விதாக்கம், வக்கிரம் கக்கிய விஷம், கலைக்கேசரி, மகாகவி நேர்காணல்கள், அவதூறுகளுக்குப் பதில், குமுதம் தீராநதியில், தி.ஞானசேகரனுடன் உரையாடல், ஷோபாசக்தியின் கேள்விகள், லண்டன் BBCயில் நேர்காணல், தமிழ்நாடு இனிய நந்தவனம் நேர்காணல், எதிர்த்தும் ஆதரித்தும்அறிக்கைகள்,

கொழும்பில் தீவிரமான பணிகள், ஞானசேகரன் குடும்பத்தினரின் அர்ப்பணிப்பு, மாநாடு தொடக்கவிழா, பேராசிரியர் சபா-ஜெயராசாவின் தலைமையுரை, பேராசிரியர் கா.சிவத்தம்பியின் வாழ்த்துரை, பேராசிரியர் கா.சிவத்தம்பியின் வாழ்த்துச் செய்தி, ஒன்றுகூடலின் மனநிறைவு ஆகிய 27 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7735

**உற்றறி கோட்பாடு (Critical Theory) இலக்கியங்களை விளங்கிக் கொள்வதற்குரிய வழிமுறையாதல்.** சபா.ஜெயராசா. கொழும்பு 6: பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுக்குழு, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம், U.G.50, People's Park).
24 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21.5x14.5 சமீ.

2011ம் ஆண்டுக்குரிய பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுச் சொற்பொழிவாக அமைந்த உரையின் எழுத்துரு. நினைவுக்குழுவின் தலைவராக பேராசிரியர் சோ.சந்திரசேகரன் பணியாற்றியிருந்தார். இக்குழு பேராசிரியரின் பிறந்ததினமான மே மாதம் எட்டம் திகதியை நினைவுகூறும் வகையில் அவரது நூல்களையும், தொகுக்கப்படாதிருந்த அவரது கட்டுரைகளையும் நூலுருவில் வெளியிட்டு வருகின்றது. இக்குழுவுடன் இணைந்து சேமமடு பதிப்பகம் இவ்வெளியீடுகளை மேற்கொண்டுவருகின்றது. பேராசிரியர் வித்தி, இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழியல் ஆய்வில் ஒரு நிறுவனமாகச் செயற்பட்டவர். இவரது பணிகள் பன்முகப் பரிமாணம் கொண்டவை. குறிப்பாகப் பல்கலைக்கழகத்துடன் இணைத்துப் பல்வேறு புத்தாக்கக் கட்டங்கள் உருவாகக் காரணமாக இருந்தவர். நினைவுச் சொற்பொழிவை ஆற்றிய பேராசிரியர் சபா. ஜெயராசா அவரது மாணாக்கர்களுள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 7736

**எண்ணிலாக் குணமுடையோர்.** யோகேஸ்வரி சிவப்பிரகாசம். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).
x, 44 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-52786-0-7.

உரைநடைச்சித்திரமாக, சிறுகதைப்போக்கில் எழுதப்பெற்ற இந்நூலின் கட்டுரைகள் க.பரணீதரனை ஆசிரியராகக் கொண்ட **ஜீவநதி** சஞ்சிகையில் அவ்வப்போது வெளிவந்தவை. பல்வேறு முகங்களைக்கொண்ட மனிதர்களை இவ்வுரைநடைச் சித்திரங்களில் பதிவுசெய்திருக்கிறார். இப்பாத்திரங்கள் இன்றும் நம்மிடையே உலாவி உறவாடும் நிஜ மனிதர்களே. சிலர் முகமூடி அணிந்தவர்கள். கூர்ந்து பார்த்தால் அவர்களை இனம்காண முடியும். சமூகத்திலும் குடும்பத்திலும் பிளவுகளையும் பிணக்குகளையும் உண்டாக்கி வேடிக்கைபார்க்கும் ஆசாட பூதிகள். இவர்களை வரவேற்பதும் உறவுகொள்வதும் தீமையையே வழங்கும் என்பதை நூல் இலக்கியச் சுவையுடன் கூறுகின்றது.

### 7737

**எஸ்.பொ. அறிக்கை.** எம்.ஏ.ரஹ்மான். கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1970. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ்).
(4), 124 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 18x12.5 சமீ.

இலங்கையிலுள்ள பல்வேறு இலக்கிய நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை அவர்கள் தயாரித்த இந்த அறிக்கை இளம்பிறை இலக்கிய வட்டத்தின் சார்பில் ஹோட்டல் சமுத்ராவில் 31.101970 அன்று கலாசார அமைச்சர் மாண்புமிகு S.S.குலத்திலக்கா அவர்களால் தொடக்கி வைக்கப்பட்ட அரங்கேற்ற விழாவிலே தபால்-தந்தித் தொடர்புகள் அமைச்சர் மாண்புமிகு செ.குமாரசூரியர் அவர்கள் தலைமையில் வெளியிடப்பட்டது. மூதூர் இலக்கிய வட்டத் தலைவர் வ.அ.இராசரத்தினம் அவர்களாலும், கிண்ணியா இலக்கிய வட்டத் தலைவர் "அண்ணல்" எம்.எஸ்.எம். சாலிஹ் அவர்களாலும் சம்பிரதாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்பட்டது. இது 28ஆவது அரசு வெளியீடு. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 297495).

*7738*

**ஒரு திறனாய்வாளரின் இலக்கியப்பார்வை.** கே.எஸ்.சிவகுமாரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 14: பி.வி.ஆர். ஆப்செட் பிரின்டர்ஸ்).
x, 272 பக்கம், விலை: ரூபா 300., இந்திய ரூபா 85., அளவு: 18x12 சமீ.

இத்தொகுதியில் சிவகுமாரனின் பத்தியெழுத்துகள் இடம்பெற்றுள்ளன. தமிழ் இலக்கியங்கள், இலக்கிய ஆசிரியர்கள், அவர்களது குறிப்பிட்ட படைப்புக்கள், பற்றிய பதிவுகளாக இவை அமைந்துள்ளன. இவை அறிமுகமுறைமையிலும், தொகுத்துக்கூறும் முறைமையிலும் அமைகின்றன. விபுலானந்தர்-ஈழத்துத் தமிழ்த் திறனாய்வு முன்னோடி, சி.சுப்பிரமணிய பாரதி: புனைகதையாளர், மௌனி-அழியாச்சுடர், சுந்தரராமசாமி-புளியமரத்தின் கதை, இலங்கையர்கோன்-வெள்ளிப்பாதசரம், சுபைர் இளங்கீரன்-தென்றலும் புயலும், செ.கணேசலிங்கன்-முதல் நான்கு நாவல்கள், எஸ்.பொன்னுத்துரை- தீ, அ.ஸ.அப்துஸ்ஸமது- எனக்கு வயது பதின்மூன்று, தெணியான்-மரக்கொக்கு, காவலூர் இராசதுரை-குழந்தை ஒரு தெய்வம், நீர்வை பொன்னையன்-மேடும் பள்ளமும், பேராதனை எழுத்தாளர்கள்-கதைப்பூங்கா, செ.கணேசலிங்கனின் சங்கமம், வ.ஆ.இராசரத்தினம்:தோணி, டொமினிக் ஜீவா:பாதுகை, வரதர்: கயமை மயக்கம், கச்சியப்பர்: மாதர் மதுவெறி, தொல்காப்பியர்:த்வனி (தொனி) கோட்பாடு, பண்டைத்தமிழர் வாழ்வும் வளமும்-அமரர் பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி, இலக்கிய விமர்சனம்: அமரர் தி.மு.சிதம்பர ரகுநாதன், மதிப்பீட்டியல்-இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களப் பாடப்புத்தகம் தமிழ் 09, ஆக்க இலக்கியமும் அறிவியலும்-கைலாசபதியின் நோக்கு, 20ம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்-பேராசிரியர்கள் மௌனகுரு, சித்திரலேகா, எம்.ஏ.நு..மான், திறனாய்வு: சில அடிப்படை அம்சங்கள், மதிப்புரையும் திறனாய்வும், உளவியலும் இலக்கியத் திறனாய்வும், இரண்டு திறனாய்வு நூல்கள்: சிறு குறிப்புகள், EZRA POUND: மறு மதிப்பீடு மேர்வின் த சில்வா, ரெஜி சிறிவர்த்தன ஆகிய தலைப்புகளில் 29 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

*7739*

**ஒரு வாசகனின் பிரதிகள்.** மேமன்கவி. கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (வெல்லம்பிட்டி: சத்துர அச்சகம், 69 குமாரதாச பிளேஸ்).
148 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-30-2803-7.

ஒரு தீவிர வாசகனாக நின்று தேடித்தேடி வாசிக்கப்பட்ட நூலாசிரியரின் பன்முக வாசிப்பின் வளமும் சமகால எழுபொருள்கள் பற்றிய தரிசனங்களும் இந்நூலில் நீண்டும் ஆழ்ந்தும் நிமிர்ந்தும் நிற்கின்றன. இக்கட்டுரைகளை நூலாக்கியதன் நோக்கம் இக்கட்டுரைகளில் தான் பேசியிருக்கும் விடயங்களை வாசகர் தாமும் தேடி வாசித்து மகிழ உந்தவதே என மேமன்கவி குறிப்பிடுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 178848).

*7740*

**ஒரு வேரின் சுவாசம்: ஐ.தி.சம்பந்தனின் மனப்பதிவுகள்.** ஐ.தி.சம்பந்தன். லண்டன்: சுடரொளி வெளியீட்டுக் கழகம், 15 ருத்லண்ட் வீதி, 1வது பதிப்பு, மே 2011. (சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி).
vi, 115 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-0-9555359-5-6.

ஈழத்தமிழர்களின் சமூக, அரசியல், தொழிற்சங்க வரலாற்றுச் சுவடுகளைத் தேடிச் செல்லும் ஒரு ஆய்வாளனின் பார்வையில் ஐ.தி.சம்பந்தன் என்ற பெயர் இடைக்கிடையே சிக்கிக்கொள்ளும். தமிழரசுக்கட்சியின் அரசியல்களமாகட்டும், சன்சோனி உள்ளிட்ட இனப்பிரச்சினை தொடர்பான பல்வேறு ஆணைக்குழுக்களின் அறிக்கைகளாகட்டும், எரிந்துபோன யாழ்ப்பாணப் பொது நூலகத்தை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் தொடக்கப்பட்ட கொடித்தினப் பணிகளாகட்டும், ஆங்காங்கே இந்தப் பெயர் முக்கிய இடங்களில் எட்டிப்பார்க்கவே செய்யும். தன்னை முன்னிலைப்படுத்தியே சமூகவாழ்வைச் சிந்திக்கும் எமது தலைமைத்துவக் கலாச்சாரத்தில் இருந்து வழுவி, தமிழ் மக்களின் மத்தியில் வேராக மறைந்துநின்று பெருவிருட்சங்களையெல்லாம்

*வாழவைத்த பெருமைமிக்கவர் ஐ.தி.சம்பந்தன் அவர்கள். எம்மிடையே வேராகவே மறைந்திருந்து வாழ்ந்துவிட விரும்பிய இவரது வாழ்வின் முக்கிய சில பக்கங்களை இத்தொகுப்பிலுள்ள கட்டுரைகளில் காணப்படும் இவரது கருத்துக்களில் இருந்து மட்டுமல்ல - அங்கு சொல்லப்படாத இவரது வார்த்தைகளின் மூலமும் (*between the lines*) எம்மால்அறிந்துகொள்ளமுடிகின்றது. திரு ஐ.தி.சம்பந்தன் அவர்கள் கடந்த பத்தாண்டுக் காலப்பரப்பில் எழுதிவைத்த பதினேழு கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

### 7741

**கடவுளின் நிலம்.** *இளைய அப்துல்லாஹ் (இயற்பெயர்:* M.N.M.*அனஸ்). டென்மார்க்: வி.ஜீவகுமாரன், விஸ்வசேது இலக்கியப் பாலம்,* Hojvangsparken 7, 4300 Holbaek, *1வது பதிப்பு, டிசம்பர் 2010. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை).*
*174 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14 சமீ.*

*2000ஆம் ஆண்டு முதல் லண்டன் தீபம் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் அறிவிப்பாளராகவும் பணியாற்றுபவர் அனஸ். இளைய அப்துல்லாஹ் என்ற பெயரில் அவ்வப்போது தனது படைப்பிலக்கியங்களை சிறுகதைகளாகவும், கவிதைகளாகவும், பத்தி எழுத்துக்களாகவும் வடித்துவருபவர். புலம்பெயர் தேசத்தின் சாதாரண வாழ்வியல் கண்களினூடாக வர்ணஜாலங்களற்ற வாழ்வுநிலையினை சுவாரஸ்யமாகத் தன் எழுத்துக்களில் வரையும் இவரது 42 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ஐரோப்பிய நாடுகளில் தமிழர்களின் வாழ்வு, அகதிகள் பிரச்சினை, சாதி, சமயம், பணக்காரர், ஏழைகள், பெண்கள் என்று பல்வேறு ஏறறத்தாழ்வுகளை எம்மிடையே நடைமுறையில் கண்டு விமர்சிக்கும் இவர் ஐரோப்பிய நாடுகளில் விபச்சாரம், போதைவஸ்து பாவனை, தமிழரின் திருமணச் சம்பிரதாயங்கள், இளையதலைமுறையினரின் வேகம் என்று எதையுமே விட்டுவைக்கவில்லை. வாசகருடன் நேரடியாகப் பேசி உறவாடும் எழுத்துநடை இவரது படைப்புகளின் சிறப்பம்சமாகும். துப்பாக்கிகளின் காலம் (சிறுகதைத் தொகுப்பு), பிணம் செய்யும் தேசம் (கவிதைத் தொகுப்பு), அண்ணை நான் தற்கொலை செய்யப் போகிறேன் (கட்டுரைத் தொகுப்பு) ஆகியவை இவரது முன்னைய நூல்களாகும். பிணம் செய்யும் தேசம் இலங்கை அரசின் சாகித்திய விருதினைப் பெற்றது.*

### 7742

**கந்தரசம்.** *அண்ணா இராசேந்திரம். யாழ்ப்பாணம்: பகுத்தறிவியக்கம், திருநெல்வேலி மேற்கு, 1வது பதிப்பு, ஜுலை 1974. (கொழும்பு 12: சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்).*
*(4), 92 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18*x*12.5 சமீ.*

*புத்தூர் ஆவரங்காலைச் சேர்ந்த இந்நூலாசிரியர் புத்தூர் சிறி சோமாஸ்கந்த கல்லூரியின் பழைய மாணவர். இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தின் பகுத்தறிவு இயக்கத்தால் ஈர்க்கப்பட்டவர். கந்தரசம் பகுத்தறிவு இயக்கத்தின் முதல் வெளியீடு. கந்தபுராணத்தில் காணப்படும் பகுத்தறிவுக்கொவ்வாத கருத்துக்களையும் ஆபாசமான கருத்துப் பிரயோகங்களையும் எடுத்துக்கூறி அதனைச் சாடும் வகையில் இந்நூலில் உள்ள 18 அத்தியாயங்களும் எழுதப்பட்டுள்ளன.*

### 7743

**கற்பனை வளம்.** *ஆ.கந்தையா. கொழும்பு 6: கலாநிதி ஆ.கந்தையா, நடனாலயம், 4, 40ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1984. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*
xiv, *(2), 116 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18*x*12.5 சமீ.*

*இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், கல்வி அமைச்சின் கல்விச் சேவைக் குழுவின் உறுப்பினருமான கலாநிதி ஆ.கந்தையா அவர்களின் சிந்தையிலே காலத்திற்குக் காலம் எழுந்து நிலைபெற்றிருந்த சில கற்பனைகளை 13 கட்டுரைகளாக்கி இந்நூலில் பதிவுசெய்துள்ளார். அவை சுடர் விளக்கு, வளனும் வலியும், வானினும் உயர்ந்தது, கூவின கோழி, ஆடின கொடிகள், ஈருடலும் ஓரயிரும், குணதிசைக் கதிரவன், வானிடைக் கதிரவன், அந்திப் பொழுது, குடதிசைக் கதிரவன், வானிடை வெண்ணிலா, கவிஞனின் கண்ணீர், கிளிகள் கிளர்ந்த மொழிகள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 376193).*

**7744**

**கார்ள் மார்க்ஸின் இலக்கிய ஆளுமை.** டி.லட்சுமணன். கொழும்பு 6: இலங்கை முற்போக்குக் கலை இலக்கியப் பேரவை, 5B, முதலாவது சப்பல் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2009. (கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க்).
52 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 19x12.5 சமீ.

கார்ள் மார்க்ஸ் ஒரு தீர்க்கதரிசி, பொருளாதார நிபுணன், வரலாற்று வல்லுநன், புடம்போட்ட புரட்சியாளன், ஆற்றல் மிக்க பேச்சாளன். அவர் ஒரு சிறந்த பத்திரிகையாளராகவும், சட்டத்துறை விற்பன்னராகவும், பன்மொழி வித்தகராகவும் கூட அறியப்பட்டவர். அவர் பல்வேறு துறைகளிலும் அழியாத ஆழமான தடம் பதித்துச் சென்றவர். இவை அனைத்துக்கும் மேலாக, மார்க்ஸ் இலக்கிய ஆளுமையுடையவர். கார்ள் மார்க்சின் இலக்கிய ஆளுமையை வெளிக்கொணரும் முயற்சியே இதுவாகும்.

**7745**

**காலக் கண்ணாடியில் ஒரு கலை இலக்கியப் பார்வை.** கே.எஸ்.சிவகுமாரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2010. (சென்னை 600094: பிவிஆர் ஆப்செட்).
xii, 276 பக்கம், விலை: ரூபா 300., இந்திய ரூபா 100., அளவு: 17.5x12 சமீ.

அண்மைக்காலத்தில் கே.எஸ்.சிவகுமாரன் எழுதிய 46 பத்தி எழுத்துக்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. மட்டக்களப்பில் 1.10.1936இல் பிறந்த நூலாசிரியர் 1953முதல் கொழும்பில் வசித்து வருகிறார். தமிழ் - ஆங்கில இலக்கியங்களில் பரிச்சயமான இவரது பல ஆங்கில எழுத்துக்கள் ஈழத்துத் தமிழ்ப்படைப்பாளிகளை தமிழர் அல்லாத இலக்கியவாதிகளுக்கு அறிமுகப்படுத்துவதாயுள்ளன. வடகிழக்கு ஆளுநர் விருது, கனடா தமிழர் தகவல் விருது உள்ளிட்ட பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றவர். சர்வதேச பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

**7746**

**குருசு முத்தண்ணையின் கிசுகிசு 100.** யோசப் பாலா. யாழ்ப்பாணம்: கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம், 60, கோயில் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2000. (யாழ்ப்பாணம்: மணி ஓசை அச்சகம், 12 சென் பற்றிக்ஸ் வீதி).
(6), 100 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18x12.5 சமீ.

சமய, சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி எழுத்துலகில் பல படைப்புகளால் கிறிஸ்தவ விழுமியங்களை வெளிப்படுத்தும் எழுத்தாளர் யோசப் பாலாவினால் யாழ்ப்பாணத்தில், பாதுகாவலன் பத்திரிகையில் 1987 முதல் 1999வரை பன்னிரு வருடங்களாக வெளிவந்த குருசு முத்தண்ணையின் கிசுகிசு 100 என்ற நகைச்சுவைப் பத்திச் செய்திகள் நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது.

**7747**

**குறள் கூறும் பாலியல் கோட்பாடு.** செ.கணேசலிங்கன். சென்னை 600 026: குமரன் பப்ளிஷர்ஸ், 3(12) மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, நவம்பர் 2010. (சென்னை 600 026: குமரன் பதிப்பகம், 3(12) மெய்கை விநாயகர் தெரு, வடபழநி).
176 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12 சமீ.

சங்க இலக்கியம்-அகநானூறு, கலித்தொகை கூறும் காதல், காமம், காமசூத்திரம் காட்டும் காதல் பயிற்சி முறைகள், தொல்காப்பியம் சொல்லும் களவியல், கற்பியல், மெய்ப்பாட்டியலின் தொடர்ச்சியாக காமத்துப்பால் வழிவந்த குறள் கூறும் பாலியல் கோட்பாடு பற்றி இந்நூல் சுருக்கமாகக் கூறுகின்றது. நாணமும் பால்நிலையும், சங்க இலக்கியத்தில் பால்நிலை, காமசூத்திரம் சில குறிப்புகள், தொல்காப்பியத்தில் பால் நிலை (பொருளியல், மெய்ப்பாட்டியல்), குறள் கூறும்

கோட்பாடு (குறள்கூறும் நாணம், சிவலிங்க வழிபாடு, ஊடலும் கூடலும், பாலியல் வாழ்வு, சிற்றின்பம், ஐம்புலன் இன்பமும் விரிவும், பிறமனையும் பிற புருஷனும், ஊடுதல் காமத்து இன்பம், புணர்ச்சியும் கூடலும், காதலும் காமமும், நடுநிலைமை, காமத்தின் வலிமைகள்) ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7748

**கூடார வாழ்க்கை: பல்சுவை பல்துறைக் கட்டுரைத் தொகுப்பு.** செங்கை ஆழியான் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10 A, பிறவுன் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
iv, 108 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 17.5x12 சமீ., ISBN: 978-955-1624-01-9.

இந்நூலில், நாடறிந்த ஈழத்துப் புனைகதைப் படைப்பாளி க.குணராசா தனது அனுபவங்களைப் படைப்பாக்கக் கட்டுரைகளாகத் தந்துள்ளார். தனது கனடிய, இந்தியப் பயணங்களில் தாம் கண்டனவற்றையும், அறிந்துகொண்டவற்றையும் வாசகர்களுடன் பகிர்ந்துகொண்டுள்ளார். எட்டயபுரம், (இலண்டனில் தான் சந்தித்த) சோ.சிவபாதசுந்தரம் ஆகிய இரு கட்டுரைகளும் புதிய பல இலக்கியத் தகவல்களைத் தருகின்றன. கனடிய செவ்விந்தியக் கிராமம், காதல் நினைவுச் சின்னம், பிக்பென் கடிகாரம், கூவர்கிராப்ட் பயணம், உயர் கோபுரம், சீ.என்.டவர், நயாகரா நீர்வீழ்ச்சி, ஆகியன பயணக்காட்சி விளக்கக் கட்டுரைகளாகும். சங்கானைச் சந்தை, புலம்பெயர்ந்த நாட்டில் எமது தனித்துவத்தைப்பேணி வாழ விழையும் ஈழத் தமிழர்களையும், விலங்கும் மனிதனும், ஆசிரியரின் யானை என்ற நாவலுக்கான உள்ளடக்கத்தை வழங்கிய மனிதனின் கதையாகவும், கூடார வாழ்க்கை- ஈழத்தமிழர்களின் இடர்சூழ்ந்த ஒரு காலகட்ட வாழ்வியல் சூழலையும் விபரிக்கின்றன. ஜிம் கரியானிஸ், ஆறுமுகசுவாமி ஆகியவை தனி இயல்புகள் கொண்ட இரு மாமனிதர்களின் வாழ்வுப்பணிகள் தொடர்பான கட்டுரைகளாக அமைந்துள்ளன.

### 7749

**கேட்கட்டும் குறளின் குரல் தொகுதி 3.** அ.பொ.செல்லையா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
xviii, 410 பக்கம், விலை: இந்திய ரூபா 95., அளவு: 18x12 சமீ.

கனேடிய தமிழ் வானொலி மூலமாக ஆசிரியரால் வழங்கப்பட்ட உரைகளின் நூலுரு. இது குறளின் குரல் 91 (அதிகாரம் 89, கூடா நட்பு) இலிருந்து குறளின் குரல் 135 (அதிகாரம் 133, ஊடல் உவகை) வரையிலான கட்டுரைகளை உள்ளடக்கியது. உயர்தர மாணவர்களின் இலக்கியப் பாடநெறியின் துணைநூலாகப் பயன்படுத்தத்தக்கது. குறள்நெறி போற்றி, அதன்வழி வாழ சமகால உதாரணங்களுடன் நன்நெறி புகட்டும் படைப்புக்களைக் கொண்டது. விஞ்ஞானப்பட்டதாரியான அ.பொ.செல்லையா வடக்கின் கிளிநொச்சி மாவட்டத்தில் பளை மகா வித்தியாலயத்தில் நீண்டகாலம் பணியாற்றியவர்.

### 7750

**கைலாசபதி முன்னுரைகள்.** க.கைலாசபதி. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
(4), 201 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9429-64-7.

கலாநிதி க.கைலாசபதி 25 நூல்களில் எழுதிய முன்னுரைகளின் தொகுப்பாக இந்நூல் விளங்குகின்றது. இவை 1967ஆம் ஆண்டு முதல் 1981ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் எழுதப்பட்டவை. நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், நாட்டுப்பாடல், ஆய்வுநூல்கள் ஆகிய வகையினவாக பல்துறை ஆக்கங்களுக்கும் வழங்கிய முன்னுரைகள் இவை. இலக்கிய ஆர்வலர்களால் நீண்டகாலம் நினைவிற்கொண்டு போற்றப்படும் சிறந்த முன்னுரைகளை அவ்வப்போது கைலாசபதி எழுதி வழங்கினார். நாவல் என்ற இலக்கிய வகையின் இயல்புகள் பற்றியும் யதார்த்தவாதம் பற்றியும் கோட்பாடு முறையிலான ஆய்வுகள் வெளிவராத ஒரு காலகட்டத்தில் **செவ்வானம்** (1967) போன்ற நாவல்களுக்கு அவர் வழங்கிய நீண்ட முன்னுரைகள் அவருக்குத் தமிழ் இலக்கிய உலகில் நிலையான

ஓர் இடத்தைத் தேடிக்கொடுத்தன. இந்நூலில் இடம்பெறும் தேர்ந்த முன்னுரைகளிற் சில அவரது நெருங்கிய நண்பர்களதும், மாணாக்கர்களதும் நூல்களுக்கு அவர் எழுதி வழங்கியவை. பெரும்பாலானவை இலக்கியப்பிரியர்கள் மற்றும் நண்பர்கள் என்ற பெருவட்டத்தைச் சேர்ந்த பலரின் ஆக்கங்களுக்கு அந்நூல்களை ஆக்கியோரது வேண்டுகோளின்பேரில் எழுதி வழங்கப்பட்டவை. குறித்த இலக்கிய வகையின் இலக்கிய வரலாற்றுப் பின்புலத்தை விளக்கும் முறையிலும் சமூக வரலாற்றுப் பின்னணியில் குறித்த ஆக்கத்தை மதிப்பிடும் வகையிலும் இம்முன்னுரைகள் அமைந்துள்ளன. க.கைலாசபதி (1933-1982) யாழ்.இந்துக் கல்லூரியிலும் கொழும்பு றோயல் கல்லூரியிலும் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றவர். இளமாணிப் பட்டத்தினையும் முதுமாணிப்பட்டத்தினையும் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் (பேராதனை), கலாநிதிப் பட்டத்தை பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர்.

### 7751

**சங்ககாலத் தமிழர் வாழ்வும் கலைகளும்: சங்க இலக்கியங்களைப் படிப்பதற்கான உதவிநூல்.** நீற்றா பற்றிமாகரன். பிரித்தானியா:Oxford Centre for Tamil Education and Fine Arts, 39 Napier Road, Oxford OX4 3HZ, 1வது பதிப்பு, பெப்ரவரி 2011. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை). 192 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x14 சமீ., ISBN: 978-1-897-0841-2.

ஒக்ஸ்போர்ட் தமிழ்க் கல்வி கலைகளுக்கான மையத்திற்காக எழுதி வெளியிடப்பட்ட நூல். நூலாசிரியை சங்கத் தமிழை இன்றைய காலத்திற்கேற்ப இலகுபடுத்திப் புலம்பெயர் தமிழ்ச்சிறார்களுக்குக் கற்பித்தல் என்பதில் இருபது வருடகால அனுபவம் மிக்கவர். சங்கத்தமிழ் நூல்களை விளங்கிக்கொள்ள எம்மவருக்கு போதிய இலக்கண அறிவில்லாதிருப்பது மட்டுமல்லாது சங்ககாலத்தைக் குறித்த அறிவின்மையும் ஓரளவு காரணமாக இருக்கின்றது. இந்நிலையில் சங்ககாலம் குறித்துத் தான் புரிந்துகொண்டவையும் அறிந்துகொண்டவையும் தொகுக்கப்பட்டு இந்நூலில் ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளது. ஆசிரியர் பண்டைய தமிழரின் அன்றாட வாழ்வின் தன்மைகளை அழகுற எளிமைப்படுத்தித் தந்துள்ளார். சங்கத்தமிழை புதிதாகக் கற்க நுழைபவர்களுக்கு இந்நூல் ஒரு கருவிநூலாகப் பயன்படும் வாய்ப்புள்ளது.

### 7752

**சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 இலங்கை: கட்டுரைக் கோவை.** லெ.முருகபூபதி, தி.ஞானசேகரன், ஜின்னாஹ் ஷரிபுத்தீன், அஷ்ரப் சிஹாப்தீன், ஜீ.இராஜகுலேந்திரா (மலர்க்குழு). இலங்கை: சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
viii, 311 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ.

2011 ஜனவரி 6,7,8,9 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்றிருந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் விழாவின் பல்வேறு கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட 32 ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு. இதில் 3ஆவது கட்டுரையாக என்.செல்வராஜா எழுதிய "ஈழத்தமிழரின் நூல்களை ஆவணப்படுத்துவதில் நூல்தேட்டத்தின் பங்களிப்பும் அது எதிர்கொள்ளும் சவால்களும்" என்ற தலைப்பிலான விரிவான ஆய்வும்இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 7753

**சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 இலங்கை: சிறப்பு மலர்.** லெ.முருகபூபதி, தி.ஞானசேகரன், ஜின்னாஹ் ஷரிபுத்தீன், அஷ்ரப் சிஹாப்தீன் (மலர்க்குழு). இலங்கை: சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
viii, 332 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17 சமீ.

2011 ஜனவரி 6,7,8,9 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்றிருந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் விழாவின் பல்வேறு கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட 54 கட்டுரைகளின் தொகுப்பு.

***7754***

***சிசுபால சரிதம்.*** *அ.குமாரசுவாமிப் பிள்ளை. சுன்னாகம்: கு.அம்பலவாண பிள்ளை, 2வது பதிப்பு, 1924. (சென்னை: ஸ்ரீ ராதாகிருஷ்ணா பிரஸ்).*
*(4), 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.*

*மகாபாரதத்தில் சபாபருவத்தில் ஒரு காட்சி. தர்மர் சகலநாட்டு மன்னர்களையும் அழைத்து ராஜசூய யாகம் நடத்துகிறார். அவ்வேளை கிருஷ்ணருக்கு முதல்மரியாதை செய்ய தர்மர் தீர்மானித்தபோது, பீஷ்மர் அதை ஆமோதிக்கிறார். இதனால் சேதிநாட்டு மன்னன் சிசுபாலன் கோபம்கொண்டு கிருஷ்ணரையும் பீஷ்மரையும் தூஷிக்கிறான். உயர்வுநவிற்சியாக 100 தூஷணைவார்த்தைகளால் கிருஷ்ணனை நிந்திக்கிறான். இதன் காரணமாக இடம்பெற்ற பின்னைய போரில் கிருஷ்ணர் சிசுபாலனை சக்கராயுதத்தால் சாகடிக்கிறார். இதன் பின்னணியில் எழுந்ததே சிசுபால வதம் என்ற அத்தியாயமாகும். சிசுபாலனின் வரலாற்றைக் கூறும் இந்நூல் உபநியாசம், நாரதர் வருகை, கண்ணபிரான் வார்த்தை, நாரதர் வார்த்தை, தெரிந்து செய்தல், கண்ணபிரான் கருத்து, பலராமர் கருத்து, உத்தவர் கருத்து, யாகத்துக்கெழுகை, இரைவதகமலைக்காட்சி, சேனைகளின் செய்கை, பருவக்காட்சி, பொழில்களிலும் புனல்களிலும் விளையாடுகை, மாலையுங் காலையும் வருகை, வழியிற் செல்லுகை, எதிர்கொள்ளுகை, இந்திரப்பிரத்தமெய்துகை, அரசிருக்கை மண்டபம் புகுகை, உபசாரங்கூறுகை, உத்தரங்கூறுகை, யாகஞ்செய்கை, யாசகர்க்கீகை, அக்கிரபூசை, கண்ணபரத்துவம், சிசுபாலன் நிந்திக்கை, சாத்தகி வார்த்தை, தூதுவன் வார்த்தை, கோபம் மூளுகை, போர் புரிகை ஆகிய தலைப்புகளின் வழியாக சிசுபாலன் சரித்திரத்தை இலக்கியவடிவில் தருகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 56016).*

***சிசுபால சரிதம்.*** *அ.குமாரசுவாமிப் பிள்ளை. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, 4வது பதிப்பு, 1950, 1வது பதிப்பு,1921, 2வது பதிப்பு,1924, 3வது பதிப்பு, 1938. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், வண்ணார்பண்ணை).*
xii, *84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.*

*அ.குமாரசுவாமிப் பிள்ளை (1854-1922)அவர்களால் 1921இல் இயற்றப்பட்ட இந்நூல், அவரது மகன் கு.முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை அவர்களால் சுன்னாகத்து மயிலணியில் அமைந்த புலவரக வெளியீடாக 1921இல் பிரசுரமானது. இம் மூலநூலின் 4ஆவது பதிப்பு இதுவாகும். குமாரசுவாமிப் பிள்ளை அவர்களின் வரலாற்றையும் உள்ளடக்கியது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48152).*

***7755***

***சிந்தனை வளம்.*** *ஆ.கந்தையா. கொழும்பு 6: கலாநிதி ஆ.கந்தையா, நடனாலயம், 4, 40ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 1985. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*
xiv, *(2), 116 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x12 சமீ.*

*இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், கல்வி அமைச்சின் கல்விச் சேவைக் குழுவின் உறுப்பினருமான கலாநிதி ஆ.கந்தையா அவர்களின் சிந்தையிலே காலத்திற்குக் காலம் எழுந்து நிலைபெற்றிருந்த சில கருத்துக்களை கட்டுரைகளாக்கி இந்நூலில் பதிவுசெய்துள்ளார். நவராத்திரி மகிமை பற்றிய கட்டுரையாக ஒன்பது இரவுகள் அமைகின்றன. தொலைக்கல்வி முறைமை பற்றிப் பல்வேறு நாடுகளிலும் தான் பயின்ற கருத்துக்களை உள்வாங்கி பயனுள்ள திருப்பம் என்ற கட்டுரையில் வழங்குகின்றார். தமிழ் நலன் திங்கள் இதழில் காதற் காட்சிகள் என்ற தலைப்பில் தொடராக எழுதிய மூன்று சிறிய கட்டுரைகளை இணைத்து காதலர் வாழ்வு என்ற தலைப்பில் தந்துள்ளார். தமிழ் நலன் இதழில் எழுதிய சிந்திக்க வேண்டுகின்றோம் என்ற தலைப்பில் எழுதிய ஆசிரியர் தலையங்கங்களின் தொகுப்பாக வாழ்வும் வளமும் என்ற தலைப்பிலமைந்த கட்டுரையைத் தந்துள்ளார். 1981இல் கல்வி வெள்ளை அறிக்கை தமிழாக்கம் செய்யப்படுகையில் உருவான கொத்தணி என்ற சொல்லாக்கம் பற்றிய கருத்தை விளக்குவதாக கொத்தணி முறைமை என்ற கட்டுரை அமைகின்றது. மாணவர் பொது அறிவு பற்றிய கருத்தக்களை வளரும் பயிர் என்ற கட்டுரையில் தருகிறார். இவ்வாறே முடியாட்சியும் குடியாட்சியும், கூப்பிய கரங்கள், கலைவளர்ச்சியிலே ஒரு திருப்புமுனை ஆகிய கட்டுரைகள் அமைகின்றன. டாக்டர் உ.வே.சாமிநாதையர் பற்றிய கட்டுரையாக என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே என்ற*

கட்டுரையும், சைவம் வளர்த்த பெரியார்கள் பற்றி கட்டுரையாக சைவம் வளர்த்த ஈழத்து அறிஞர்கள் என்ற கட்டுரையும் அமைந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 444196).

### 7756

**சிந்தனைச் சரம்: பொதுக் கவிதையும் விமர்சனக் கலையும்.** ஈழத்துப்பூராடனார் (மூலம்), பி.ப.செல்வராசகோபால் (பதிப்பாசிரியை).களுவாஞ்சிக்குடி: ஜீவா பதிப்பகம், பிரதான பாதை, தேற்றாத்தீவு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1981. (களுவாஞ்சிக்குடி: செ.எட்வேர்ட் இதயச்சந்திரா, மனோகரா அச்சகம், தேற்றாத்தீவு).
xxiv, 85 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 21.5x14 சமீ.

ஈழத்துப் பூராடனார் என்று இலக்கியத்துறையில் அறியப்பட்டவர் க.தா.செல்வராசகோபால் அவர்கள். பின்னாளில் கனடாவில் புலம்பெயர்ந்த பின்பும், பதிப்பிலக்கியத்துறையில் இறுதிவரை உழைத்தவர். இவர் எழுதிய கவிதைகளும் சில விமர்சனக் கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நானே என்னை விமர்சிக்கிறேன், திரு. கே.எஸ்.சிவகுமாரனின் மதிப்பீடு, புரட்சிப் பாவலரின் கனற்பொறிகள், குறை என்று எதைக் கூறலாம், நாமும் சிந்தனைச் சரத்தில் ஒரு மலராகின்றோம், இலக்கிய இலக்கணப் புலமை கண்டு மனம் குளிர்ந்தேன், சிந்தனைச் சரம் ஒரு மதிப்பீடு, அறிமுகம் ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள் இடம்பெறுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 78269).

### 7757

**சிலப்பதிகார யாத்திரை.** பொ.பூலோகசிங்கம். சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை, 1வது பதிப்பு, கார்த்திகை 2002. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).
142 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 18x12 சமீ.

இத்தொகுப்பிலே ஐந்து கட்டுரைகள் இடம்பெறுகின்றன. தொடர்ச்சியாக சிலம்பு செய்த யாத்திரையை நோக்குவதை அவை இலக்காகக் கொண்டன. முதலாவது கட்டுரை சிலப்பதிகார யாத்திரை என்பதாகும். இது சிலப்பதிகாரக் கதையின் தோற்றம், இளங்கோவடிகள் நோக்கம், சிலப்பதிகாரக் கதையின் சமய சம்பந்தம், சிலப்பதிகாரத்தின் மறுமலர்ச்சி, சிலப்பதிகார இயக்கம் ஆகிய ஐந்து விடயங்களை ஆய்வுசெய்கின்றது. இக்கட்டுரையைத் தொடர்ந்து, இளங்கோ காட்டும் வைதீகமதம், ஈழத்துச் சிலப்பதிகாரக் கதைகள், சிலப்பதிகாரத்திலே கிராமிய இலக்கியப் படிமங்கள், தமிழ் இசை வரலாற்றில் யாழ் நூலின் முக்கியத்துவம் ஆகிய நான்கு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32457).

### 7758

**சிலம்பின் செய்தி.** பொன் தெய்வேந்திரன். வவுனியா: திருமதி ஜெயமணி தெய்வேந்திரன், ஆதிமுனீஸ்வரர் ஆலய வெளியீடு, 167, 4வது ஒழுங்கை, பண்டாரிக் குளம், 1வது பதிப்பு, ஜுன் 2002. (வவுனியா: சண்முகா கொம்பியூட்டர்ஸ் அன்ட் பிரின்டர்ஸ்).
xii, 102 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 19.5x14 சமீ.

15 சிலப்பதிகாரக் கட்டுரைகளைக் கொண்ட நூல். கடவுள் சிந்தனை, புகழ்பூத்த பூம்புகாரும் மக்களும், ஆடலரசி மாதவி, தென்பாண்டி நாடும் மக்களும், ஊழிற்பெருவலி யாவுள மனித நேயத்தின் காவலன் கோவலன், துறவில் சிறந்த கவுந்தி அடிகள், பெண்ணினம் போற்றும் கற்புக் கணிகலன் கண்ணகி, நாடாளும் மன்னரும் போற்றும் மாடல மறையவன் மொழியும் மதுராபதித் தெய்வத்தின் வாக்கும், உடலுளம் சோராச் சேரன் செங்குட்டுவன், சேரன் தம்பி இசைத்த சிலம்பு, இளங்கோ செய்த இலக்கிய ஓவியம், ஊழ், சிலம்பின் பின் நடந்ததுதான் என்ன, இளங்கோவடிகள் உலகோர்க்குக் கூறிய சொல்லழகு கூடிய நல்லுரைகள், ஈழமணித் திருநாட்டில் கண்ணகிக்கு விழாவும் வழிபாடும், சிலம்புக்கு ஒரு கலங்கரை விளக்கு ஆகிய தலைப்புகளில் இதிலுள்ள 15 கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. நூலாசிரியர் தெல்லிப்பழை, பன்னாலையைச் சேர்ந்தவர். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபராகவிருந்து ஓய்வுபெற்றவர். சைவப்புலவர்,

*கலைமாமணி, இசைமாணி ஆகிய பட்டங்களைப் பெற்றவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 576124).*

### *7759*

***சுழலும் தமிழ் உலகம்.*** *சந்திரலேகா வாமதேவா. நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 2வது பதிப்பு, மே 2009, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (சென்னை 600029: சென்னை மைக்ரோ பிரின்ட்).*

*311 பக்கம், விலை: இந்திய ரூபா 250., அளவு: 22x14 சமீ.,* ISBN: *978-81-89945-48-0.*

*புலம்பெயர் இளம் சமுதாயத்துக்கு, அதன் வேர்களை-நல்லன, அல்லாதன உட்பட- மண்ணுருவி வெளிக்காட்ட, மரபின் அறிவும் புதிதின் பரிச்சயமும், சொல்வன தெளிந்து சொல்வகை சிறக்கச் சொல்பவர்களின் தேவை மிகவும் முக்கியமானது. இவ்வகையில் சந்திரலேகாவின் இந்நூல் ஒரு பங்களிப்பாகிச் சிறப்படைகிறது. மொழி, சமயம், குறித்த கல்வியறிவும், கற்பிப்புப் பட்டறிவும் ஒருங்கே வாய்த்திருக்கும் இவர் பொருத்தமாக, இளையோர் மட்டுமின்றி அறிந்த பெரியவர்களும் தம்மறிவினை விரித்துக்கொள்ளும் முகமாகத் தேர்ந்தெடுத்த தலைப்புகளின் கீழ் அவுஸ்திரேலியத் தமிழ் வானொலியிலே சுழலும் தமிழ் உலகம் என்ற நிகழ்ச்சியிலே வழங்கிய உரைகளின் தொகுப்பே இந்நூலாகும். மொழி, வாழ்க்கை, பெண்கள், குடும்பம், பண்டிகை, பொதுவான கருத்துக்கள் ஆகியவற்றை மையங்களாக்கி முப்பது கட்டுரைகளை பொருட்செறிவோடும் சொற்சிக்கனத்தோடும் பதிவுசெய்திருக்கிறார். யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் சந்திரலேகா வாமதேவா. உடுவில் மகளிர் கல்லூரியில் தன் உயர்கல்வியைப் பெற்றபின் பேராதனை பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். கடந்த 15 ஆண்டுகளாக பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகப் பணியாற்றிய பின்னர் நியுசீலாந்துக்கு புலம்பெயர்ந்து சென்று அங்கிருந்து பின்னர் அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்து சிட்னி நகரில் வாழ்கின்றார். இவரது தந்தையார்- ஈழத்துப் புகழ்பூத்த எழுத்தாளர் இலங்கையர்கோனாவார்.*

### *7760*

***சூடாமணி உள்ளமுடையான்: மூலமும் உரையும்.*** *மண்டல புருடன் (மூலம்), குருலிங்க தேசிகர் (பார்வையிட்டவர்). விற்பனையாளர்: கொழும்பு: கலாநிலையம், 175 செட்டியார் தெரு, பதிப்பக, பதிப்பு விபரங்கள் அறியமுடியவில்லை. (கொழும்பு: மெய்கண்டான் அச்சகம்).*

*150 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 20.5x13.5 சமீ.*

*மண்டல புருடன் அருளிச்செய்த சூடாமணி உள்ளமுடையான் நூலின் மூலமும் உரையும், திரிசிபுரம் குருலிங்க தேசிகரவர்களால் பார்வையிடப்பெற்ற பிரதிக்கிணங்க பதிப்பிக்கப்பெற்றது. பழமைமிக்க இச் சோதிட நூல், 5 பக்கங்கள் வரை தொடரும் விரிவான விஷய சூசிகையுடன் (*Index*) உருவாக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 113498).*

### *7761*

***செந்தமிழ் வளம்பெற வழிகள்.*** *த.கனகரத்தினம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 24: பி.வி.ஆர். ஆப்செட்).*

xiv, *394 பக்கம், விலை: இந்திய ரூபா 130., அளவு: 17.5x12 சமீ.*

*நூலாசிரியர், கீரிமலை மயிலங்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சொல்வளம் பெருக்குவோம் என்ற தலைப்பில்இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஆற்றிய நூற்றுக்கணக்கான உரைகளே இந்நூலாக வெளிவந்துள்ளது. தமிழில் நேர்வழக்கு, சொல்லாராய்ச்சி, இலக்கண வழியே கட்டமைப்பு செய்யப்பட்ட இலக்கிய வடிவங்கள் என்பனவற்றை சான்றுகளாகக் கொள்வதுடன், ஒலியியல், சொற்பிறப்பியல், சொல்லமைப்பியல் முதலிய பரிமாணங்களையும் விளக்கி, எழுத்து, சொல், சொல் மரபுவழி, அணுகுமுறைகளையும் கையாண்டு மொழியை விளக்கியுள்ளார். இந்நூலுக்கு திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகம் சிறந்த நூலுக்கான விருதினையும் பொற்கிழியையும் 23-24.8.2010 இல்*

வழங்கிக் கௌரவித்துள்ளது. திருச்சி கே.ஆர்.ஜி.நாகப்பன் இராஜம்மாள் அறக்கட்டளை இலக்கியக்குழுவின் பாராட்டிதழ் 5.9.2010இல் வழங்கப்பட்டது. தமிழக அரசிடமிருந்து சிறந்த நூலுக்கான பரிசை இந்த நூல் மணிமேகலைப்பிரசுரத்தினருக்கு 16.11.2011அன்று பெற்றுக்கொடுத்தது. பன்மொழிப்புலவர், தமிழறிஞர் த.கனகரத்தினம் அவர்களுக்கு 2010ம் ஆண்டுக்கான தமிழியல் விருது இலங்கை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் 27.3.2011இல் வழங்கப்பட்டது.

**7762**

**செந்தமிழ்ப் பூம்பொழில்.** ஆ.சி.நாகலிங்கம்பிள்ளை. யாழ்ப்பாணம்: ஆ.சி.நாகலிங்கம்பிள்ளை, சுதுமலை, 1வது பதிப்பு, 1937. (தெல்லிப்பழை: அமெரிக்கன் சிலோன் மிஷன் பிரஸ்).
(6), 124 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20.5x13.5 சமீ.

செய்யுட்பாகம் - வசனபாகம் என இரண்டு பிரிவுகளில் எழுதப்பட்டுள்ள இந்நூலில் ஆன்றோர் இலக்கியங்களினதும், தற்போதுள்ள அறிஞர்கள் மூவரினதும் தேர்ந்தெடுத்த செய்யுட்களைத் தொகுத்து செய்யுட் பாகத்தினையும், மகாபாரதம், நற்றிணை, புறநானூறு, சில பிரபந்தங்கள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்த விடயங்களைத் தொகுத்து வசனபாகத்தையும் இயற்றியுள்ளார். செய்யுட்பாகத்தில் குருவணக்கம், இலங்கை மாதாவின் திருப்பள்ளியெழுச்சி, கந்தபுராணம், வில்லிபாரதம், சீவகசிந்தாமணி, கம்பர் இராமாயணம், சகுந்தலை வெண்பா, நாமகள் தசாங்கம், பிள்ளைத் தமிழ், சிலப்பதிகாரம், புறநானூறு, அறநெறிச்சாரம் ஆகிய தலைப்புகளிலும், வசனபாகத்தில் இராசசூய யாகம், அருச்சுனன் தவம், தருமர் அறவுரையும் சூழ்வினையும், நப்பசலையார், ஆறுமுகநாவலர், பனையின் பயன் ஆகிய தலைப்புகளிலும் தேர்ந்த இலக்கியப் படைப்புக்கள் சில தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 88628).

**7763**

**செந்தமிழ்ப் பூம்பொழில்.** வ.மு.இரத்தினேசுவர ஐயர். யாழ்ப்பாணம்: வ.மு.இரத்தினேசுவர ஐயர், 20, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1956. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
(8), 116 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

உடுவில் தமிழ்ப்புலவர் வ.மு.இரத்தினேசுவர ஐயர் எழுதிய கட்டுரைத் தொகுப்பு இது. புகழேந்தியார் புலமை, ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் கவித்துவம், தமிழின் சிறப்பு, புலமையிற் சிறந்து விளங்கிய புராதன மன்னர்கள், ஐம்பெரும் நிலங்களுள் அழகொளிர் மருதம், நானிலத் தமிழகத்தின் குறிஞ்சிநிலக் காட்சி, ஐந்திணை வகுத்த செந்தமிழ் வாணர், கதிரைமலைப் பள்ளு, அரசு கட்டிலில் துயின்ற புலவருக்கு விசிறி கொண்டு வீசிய வேந்தன், இல்லற நெறிநின்று வீடுபேறு பெற்ற வன்தொண்டர், தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை, சகோதர வாஞ்சையின் தனிச்சிறப்பு ஆகிய 12 தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 142335).

**7764**

**செவ்வியல் தமிழ்: வரலாறும் பண்புகளும்.** அ.சண்முகதாஸ். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
viii , 163 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-659-282-5.

செவ்வியல் தமிழ் என்றால் என்ன என்பது பற்றி இந்நூல் விளக்கிக் கூறுகின்றது. உலகத்திலேயுள்ள செவ்வியல் மொழிகள் அல்லது செம்மொழிகள் யாவை என்பது பற்றிய விளக்கமும் தமிழ் தவிர்ந்த ஏனைய செவ்வியல் மொழிகள் ஒவ்வொன்றினைப்பற்றிய விரிவான தகவல்களும் தரப்படுகின்றன. தமிழ் வரலாற்றிலே செவ்வியல் காலம் என்பது எது என்பது பற்றிய உசாவல் இந்நூலில் இடம்பெறுகின்றது. செவ்வியல் தமிழ் இலக்கியத்தின் சிறப்பான பண்புகள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. அவற்றுள் எவை உலகச் செவ்வியல் மொழி இலக்கியப் பண்புகளுடன் ஒற்றுமைப்படுகின்றன என்பதை நோக்கி, அப்பண்புகள் விளக்கப்படுகின்றன. செவ்வியல் தமிழ்மொழி மையம் சென்னையில் அமைந்துள்ளது. அது பற்றித் தமிழ் ஆய்வாளர்களும் சாதாரண

வாசகர்களும் அறிந்துகொள்ளும் வகையில் அம்மையத்தின் அமைப்பு, ஆற்றியுள்ள, ஆற்றுகின்ற, ஆற்றவுள்ள பணிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. 2010ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27ம் திகதி தொடக்கம் கோவையில் நடந்தேறிய செம்மொழி மாநாடு பற்றியும் இந்நூல் பதிவுசெய்கின்றது. அருணாசலம் சண்முகதாஸ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகைசார் வாழ்நாட் பேராசிரியராவார்.

### 7765

**சௌந்தர்யம்: தேவதாசன் ஜெயசிங் பார்வையில் அம்மா.** ரூபராஜ் தேவதாசன் (பதிப்பாசிரியர்). கெங்கல்ல: தாசன் வெளியீட்டகம், 90 கண்டி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (கண்டி: K Double I Press, இல.156, D.S.சேனநாயக்க வீதி).
xii, 93 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 20.5x15 சமீ.

ஈழத்துப் படைப்பாளி தேவதாசன் ஜெயசிங் அவர்களின் 75ஆவது இலக்கியப் படைப்பாக வெளிவந்துள்ள நூல். தன் தாயாரின் பெயரை உள்ளீடாகக் கொண்ட இந்நூல் அன்னை பற்றிய பல்வேறு கருத்துருக்களைக் கொண்டது. அம்மா ஓர்அறிமுகம், அம்மா ஓர் அழகிய சொல், அம்மா ஓர் அழகுச் சுடர், அம்மா ஓர் ஊதுவர்த்தி, அம்மா ஒரு மெழுகுவர்த்தி, அம்மா ஒரு சந்தனக்கட்டை, அம்மா ஓர் ஏணி, அம்மா ஒரு தோணி, அம்மா ஒரு ஆசிரியர், அம்மா ஒரு வழிகாட்டி, அம்மா ஒரு ஆலோசகர், அம்மா ஒரு நல்ல நண்பர், அம்மா ஒரு சமூக சேவையாளர், அம்மா ஒரு கலங்கரை விளக்கம், அம்மா ஒரு நிழல்தரு விருட்சம், அம்மா ஒரு ஔஷதம், அம்மா ஒரு தெய்வம், கண்ணதாசன் கவிதையில் அம்மா, பாசமுள்ள இதயங்கள் பல பேசுகின்றன, ஆசிரியரைப்பற்றி அமரர் எஸ்.டி.சிவநாயகம், கற்றோர் தரும் கருத்துக்கள் சில ஆகிய 21 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 1958 தொடக்கம் 2000 வரை ஆசிரியராகவும், அதிபராகவும், ஆசிரிய பயிற்சிப் பிரதம போதனாசிரியராகவும், கல்வி வளவாளராகவும் பல்வேறு கல்வித்துறைப் பணிகளில் ஈடுபட்டுழைத்து ஓய்வுபெற்றவர் தேவதாசன் ஜெயசிங். தொடர்பு, அருள்மணி, சாகித்தியா ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். தனது தந்தையின் பெயரில் தாசன் வெளியீட்டகத்தினூடாக பல சிறுவர் நூல்களை வெளியிட்டவர்.

### 7766

**தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம்.** இ.பாலசுந்தரம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 2வது பதிப்பு, 2006, முதற் பதிப்பு விபரமில்லை. (சென்னை 600014: பிவிஆர் ஆப்செட்).
(4), 168 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21.5x14 சமீ.

தமிழரிடையே விஞ்ஞானமும் மருத்துவ அறிவும் தமிழ் இலக்கியத்தைப் போன்று மிகவும் தொன்மை வாய்ந்தவை என்பதை விளக்கும் 10 கட்டுரைகளின் தொகுப்பு. சங்க இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள் (இரு பாகங்களில்), திருக்குறளில் மருத்துவக் கருத்துக்கள், ஆசாரக் கோவையில் ஆரோக்கிய வாழ்வுப் போதனைகள், இலக்கியத்தில் மருத்துவம்: ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், திருமந்திரத்திற் கரு உற்பத்தி பற்றிய கருத்துக்கள், திருமந்திரம் கூறும் யோகநெறியும் ஆரோக்கிய வாழ்வும், திருமந்திரத்தில் உடல் பற்றிய கருத்துக்கள், சித்தர் பாடல்களில் மருத்துவக் கருத்துக்கள், சோழர் சாசனத்தில் மருத்துவச் செய்திகள் ஆகிய தலைப்புகளில் ஆசிரியர் எழுதிய பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615070).

### 7767

**தமிழ்க் கவிதைப் பாரம்பரியம்: கவிதை நூல்களுக்கான பேராசிரியர் கா.சிவத்தம்பியின் முன்னுரைகளினூடாக.** கா.சிவத்தம்பி (மூலம்), அம்மன்கிளி முருகதாஸ் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).
x, 268 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-305-1.

தமிழ்க் கவிதையியல் பற்றி அண்மைக்காலமாக அதிகம் பேசியும் எழுதியும் வந்தவர் பேராசிரியர் சிவத்தம்பி. தமிழில் உள்ள வாய்மொழிக் கவிதைகள் தொடங்கி சங்க இலக்கியங்கள், அற இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காவியங்கள், நவீன கவிதைகள், புதுக் கவிதைகள்,

*மொழிபெயர்ப்புக் கவிதைகள் என அவரின் கவிதை பற்றிய ஆய்வுகள் நீண்டுசெல்லும். பேராசிரியர் சிவத்தம்பியின் அறிவு முதிர்ச்சியும் ஆளுமையும் அவரது புலமைத்திறனும் காரணமாக தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் அதிகமான எழுத்தாளர்கள் அவரிடம் தமது நூல்களுக்கு முன்னுரை பெற்றுள்ளனர். அம்முன்னுரைகளைத் தளமாகக்கொண்டு, அவ்வக் கவிதைத் தொகுப்புகளின் முக்கியத்துவத்திற்கும் சிறப்பிற்குமேற்ப முன்னுரைகளை அவர் வழங்கியுள்ளார். அவரது முன்னுரைகள் அவர் எந்த வகையான நூலுக்கு முன்னுரை எழுதுகின்றாரோ அந்தவகை நூல் பற்றிய அல்லது அவ்விடயம் பற்றிய வரலாற்றை அல்லது விமர்சனத்தைத் தருவதாக அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இத்தொகுதியில் அவர் கவிதை நூல்களுக்கும் கவிதை தொடர்பான நூல்களுக்கும் எழுதிய 25 முன்னுரைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இம்முன்னுரைகள் தமிழ்நாட்டில் எழுந்த சங்க இலக்கியம் தொடங்கி இன்றுவரையான தமிழ்க் கவிதைகளின் தன்மைகளையும் மாற்றங்களையும் விரித்து ஆராய்ந்திருப்பதைக் காணலாம்.*

### 7768

**தமிழ்ச் செல்வம்: இலக்கியக் கட்டுரைகள்.** *ம.பார்வதிநாதசிவம். இளவாலை: பரமேஸ்வரி பதிப்பகம், மயிலங்கூடல், 1வது பதிப்பு, மார்ச் 2008. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், காங்கேசன்துறை வீதி).*
xii, *172 பக்கம், விலை: ரூபா 475., அளவு: 17*x*12.5 சமீ.*

*புலவர் பார்வதிநாதசிவம் ஈழத்தின் மரபுவழித் தமிழ்ப் புலமையின் அடையாளமாக எம்மிடையே வாழ்ந்துவரும் முதுபெரும் தமிழ்ப் பேரறிஞர். பிரபல உரையாசிரியரும் ஆறுமுக நாவலரின் தலைமாணாக்கர்களுள் ஒருவரும், அவரது சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராகப் பணியாற்றியவருமான மட்டுவில் க.வேற்பிள்ளை அவர்களின் வாரிசாக வந்தவர். இவரது தந்தையார் குருகவி மகாலிங்கசிவம் ஆவார். புலவரவர்கள் அவ்வப்போது எழுதிய 22 இலக்கியச் செழுமைமிக்க கட்டுரைகள் இவை.*

### 7769

**தமிழில் அகத்திணைக் கவிதை மரபு.** *கிருஷ்ணபிள்ளை விசாகரூபன், கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
xii, *128 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 19.5*x*12.5 சமீ.,* ISBN: *978-955-659-199-6.*

*இந்நூல் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், நம்பி அகப்பொருள் ஆகிய மூன்று நூல்களில் காணப்படும் அகத்திணை குறித்த கருத்துக்களை முறைப்படுத்தி ஆராய்வதாக அமைகின்றது. இக்கவிதை மரபில் காலந்தோறும் ஏற்பட்டுவந்த மாற்றங்கள் குறித்த செய்திகளும் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. அவசியமான இடங்களில் சங்க இலக்கியங்களிலிருந்து பொருத்தமான எடுத்துக்காட்டுகளும் தரப்பட்டுள்ளன. தமிழில் அகத்திணைக் கவிதை மரபுபற்றி அறியவிரும்புவோர்க்கு இந்நூல் உதவும். கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் (1967) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முதுநிலை விரிவுரையாளர். இலக்கியம், பண்பாடு, நாட்டார் வழக்காற்றியல், இதழியல் மற்றும் மக்கட் தொடர்பியல் முதலான துறைகளில் தனது புலமைச் சிரத்தையினைச் செலுத்திவருகிறார்.*

### 7770

**தமிழும் முஸ்லிம்களும்.** H.M.P. *முஹிதீன். கொழும்பு: ஸ்டார் பிரசுரம், 30 சோண்டர்ஸ் பிளேஸ், 1வது பதிப்பு, 1964. (கொழும்பு 2: தொழிலாளி அச்சகம், நிர்.9, டி மெல் வீதி).*
*(12), 44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18*x*13 சமீ.*

*ஆசிரியரின் இலக்கியச் சொற்பொழிவுகளைத் தாங்கிவரும் இரண்டாவது நூல் இது. (தமிழும் முஸ்லிம் புலவர்களும் என்ற தலைப்பில் இவர் எழுதிய நூல் முன்னதாக வெளிவந்திருக்கிறது). நூலின் முதற்பகுதியில் 60களில் முஸ்லிம்கள் மத்தியில் பிரச்சினையாக உருவெடுத்த போதனாமொழி விவகாரத்தினைத் தனது கண்ணோட்டத்தில் அணுகியுள்ளார். தொடர்ந்து வரும் இயல்களில் ஈழத்து முஸ்லிம்களின் தாய்மொழி எது என்ற கேள்விக்கு வரலாற்றுரீதியான ஆதாரங்களைக்காட்டிப் பதில்*

தருகின்றார். முஸ்லிம்கள் இலங்கைக்கு வருகைதரும் வரலாற்றையும் விளக்கி அன்று தொடங்கி அவர்களது தாய்மொழி பற்றிய கேள்வியை எழுப்புகின்றார். தமிழ் மொழிக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்பு பற்றியும் இந்நூல் விரிவாக விபரிக்கின்றது.

**7771**

**தர்மவதிகள்.** க.தி.சம்பந்தன் (இயற்பெயர்: க.திருஞானசம்பந்தன்). தெகிவளை: எஸ்.இராஜநாயகம், 42 B, பரக்கும் மாவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 1997. (கொழும்பு 12: Sharp Graphics, DG2 Central Road).
xvi, (12), 88 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

ஈழத்துச் சிறுகதை மூலவர்களுள் ஒருவரான க.தி.சம்பந்தன் எழுதிய காவிய மகளிர் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். அவரது வாழ்நாளின் இறுதிக்காலத்தில் லண்டனில் வைத்து எழுதிய இந்நூலே அவரது இறுதி நூலாகக் கருதப்படுகின்றது. இதிகாசங்களில் காணப்படும் தெய்வீக மகளிர் எழுவர் பற்றிய கட்டுரைகளே இவையாகும். இந்நூலில் காவியமகளிரூடாக மெய்ப்பொருளை மிக நுட்பமாகத் தெளிவுபடுத்துகின்றார். ஊர்மிளை, மண்டோதரி, அகல்யை, மாதவி, யசோதரா, கைகேயி, திரௌபதி ஆகிய எழுவர் பற்றிய இலக்கியநயம்செறிந்த கட்டுரைகள் இவை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 517830).

**7772**

**தனித் தமிழியக்கத்தின் அரசியற் பின்னணி.** கா.சிவத்தம்பி. சென்னை 600021: சென்னை புக் ஹவுஸ், 42, நாராயணப்ப நாயக்கன் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1979. (சென்னை 600014: மூவேந்தர் அச்சகம்).
vii, 76 பக்கம், விலை: இந்திய ரூபா 4., அளவு: 18x12.5 சமீ.

தமிழிலக்கியத்தின் 20ம் நூற்றாண்டுக்கால வளர்ச்சியில் தனித் தமிழ் இயக்கம் எனப்படும் இயக்கம் மிகமுக்கியமான இடத்தினை வகிக்கின்றது. தமிழ் உரைநடைப் பிரயோகத்தில் இவ்வியக்கம் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ்வியக்கம் பற்றி இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அவ்வியக்கத்தின் தந்தையாகிய மறைமலை அடிகள் எனப்படும் நாகப்பட்டினம் சொக்கநாதபிள்ளை வேதாசலம்பிள்ளையின் (1876-1950) வாழ்க்கை வரலாற்றை அடியொற்றிச் செய்யப்பட்டனவேயன்றி அவ்வியக்கத்தின் சமூக-பொருளாதார-அரசியல்-பண்பாடுகளை ஆதாரசுருதியாகக்கொண்டு செய்யப்படவில்லை என்பது தமிழறிஞரிடையே இருந்த கருத்தாகும். இந்நிலையில் ஈழத்தமிழறிஞர் கா.சிவத்தம்பியின் இந்நூல் அக்குறைபாட்டை நிவர்த்திசெய்கின்றது. நுழைவாயில், இயக்கத்தின் தோற்றம், தமிழகத்தின் சமூக அமைப்பும் சென்னை மாகாணத்துப் பிரதேச அரசியலும், பிராமண எதிர்ப்பியக்கத்தின் பண்பாட்டுத்துறை முகிழ்ப்புகள், மறைமலை அடிகளும் பிராமண எதிர்ப்பியக்கமும், தேசிய விடுதலை இயக்க வழிவந்த தனித்தமிழியக்கம், இரு இயக்கங்கள் பற்றிய ஒப்பியல் நோக்கு, பிராமணரல்லாதாரியக்கத்தின் அரசியல் உத்வேகமும் தனித் தமிழியக்கத்தின் தனிமைப்பாடும், முடிவுரை ஆகிய ஒன்பது இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57510).

**7773**

**தனித்துத் தெரியும் திசை: திசையின் சிறுகதைப் பங்களிப்பு ஒரு மதிப்பீடு.** த.அஜந்தகுமார். கரவெட்டி: புதிய தரிசனம், 1வது பதிப்பு, நவம்பர் 2009. (கரவெட்டி: தமிழ்ப் பூங்கா அச்சகம், நெல்லியடி).
xii, 96 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-52094-0-3.

நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர். தனது கலைமாணிச் சிறப்புப் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்வு இது. யாழ்ப்பாணத்தில் வெளிவந்த **திசை** என்ற சிறுபத்திரிகையின் வரவையும் அதன் செயற்பாடுகளையும் இலக்கிய உலகிற்கும் சமூகத்திற்கும் அப்பத்திரிகை ஆற்றிய பணிகளையும் விரிவாக ஆராய்ந்துள்ளார். குறிப்பாக திசை இதழில் வெளிவந்த சிறுகதைகளை, அதை எழுதிய எழுத்தாளர்களை, அச்சிறுகதைகள் வெளிவந்த சூழலை, அச்சிறுகதைகளின் பேசுபொருளான உள்ளடக்கங்களை அந்த உள்ளடக்கங்கள் எவ்வளவு உக்கிரமாகவும் கலாபூர்வமாகவும் வெளிப்பட்டுள்ளன என்பதையும் மிக விரிவாகவும், ஆழமாகவும் ஆய்வுசெய்துள்ளார். தனத ஆய்வினை ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் பத்திரிகைகள், திசை இதழின்

*கலை இலக்கியப் பங்களிப்பு, திசை சிறுகதைகளின் உள்ளடக்கமும் வெளிப்பாடும் ஆகிய மூன்று பிரதான இயல்களாக வகுத்து ஆய்வுசெய்துள்ளார்.* Saturday Review *என்ற ஆங்கிலப் பத்திரிகையின் சகோதர இதழாக 14.1.1989இல் இருந்து வாராந்தம் வெளிவந்த இப்பத்திரிகை முதல் வருடம் 51 இதழ்களையும் இரண்டாம் வருடம் 18 இதழ்களையுமாக மொத்தம் 69 இதழ்களை வெளியிட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47619).*

### 7774

***தாமோதரம்.*** *சி.வை.தாமோதரம்பிள்ளை (மூலம்), இ.செல்லத்துரை (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழிநூற் பதிப்பு விற்பனைக் கழகம், 411/1 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1971. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை).*
xviii, *144 பக்கம், விலை: ரூபா 4.80, அளவு: 18*x*12.5 சமீ.*

*யாழ்ப்பாணத்துச் சிற்றூரான சிறுப்பிட்டியில் பிறந்த தமிழறிஞர் இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் தாம் பதிப்பித்த நூல்களுக்கு எழுதிய பதிப்புரைகளின் தொகுப்பு இதுவாகும். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் வேண்டுகோளின்பேரில் வெளியிடப்பட்டது. ச.பஞ்சாட்சரசர்மா, ச.சுப்பிரமணியம், க.சி.குலரத்தினம், கு.அம்பலவாணபிள்ளை, பொ.இராசரத்தினம் (நூலகர்), சி.சிவகுருநாதன் ஆகியோரின் ஒத்துழைப்பில் இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 78732).*

### 7775

***திறனாய்வின் புதிய திசைகள்.*** *மு.பொன்னம்பலம். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை, 1வது பதிப்பு, 2011. (வெல்லம்பிட்டி: சத்துர அச்சகம், 69 குமாரதாச பிளேஸ்).*
*414 பக்கம், விலை: ரூபா 850., அளவு: 22*x*14.5 சமீ.,* ISBN: *978-955-30-3009-2.*

*80களின் ஆரம்பத்திலிருந்து 2011வரை எழுதப்பட்ட மு.பொ.வின் திறனாய்வு சார்ந்த எழுத்துக்களின் தொகுப்பு இதுவாகும். அறிமுக விமர்சனம் என்ற முதலாவது பிரிவில் 19 கட்டுரைகளும், விமர்சனம் என்ற இரண்டாவது பிரிவில் 14 கட்டுரைகளும், ஆய்வுநிலை சார்ந்த விமர்சனம் என்ற மூன்றாவது பிரிவில் 11 கட்டுரைகளும், எதிர்வினை விமர்சனம் என்ற இறுதிப் பிரிவில் 12 கட்டுரைகளுமாக மொத்தம் 56 விமர்சனக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சிறந்ததொரு திறனாய்வாளரான மு.பொவின் முன்னைய திறனாய்வுக் கட்டுரைகள்* ***யதார்த்தமும் ஆத்மார்த்தமும்*** *என்ற தலைப்பில் 70களிலிருந்து 80கள் வரை எழுதிய விமர்சனக் கட்டுரைகளைத் தாங்கிய தொகுப்பாக 1992இலும், 90களிலிருந்து 98 வரையிலும் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தாங்கிய* ***திறனாய்வு சார்ந்த பார்வைகள்*** *என்ற தலைப்பிலான நூல் 2001இலும் தொகுக்கப்பட்டிருந்தது. இது மு.பொ.வின் திறனாய்வுசார்ந்த மூன்றாவது கட்டுரைத் தொகுப்பாகும். இக்கட்டுரைகள் முன்னர் சரிநிகர், காலம், காலச்சுவடு, களம், அலை, திருப்பம், தினக்குரல் ஆகிய இதழ்களில் வெளிவந்தவை.*

### 7776

***தீதும் நன்றும்.*** *எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை).*
*176 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *89-89748-34-3.*

*ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் வைத்திய கலாநிதி தி.ஞானசேகரன் அவர்கள், எஸ்பொவின் நூலான வரலாற்றில் வாழ்தல் என்ற நூலை முன்வைத்து மார்ச் 2004இல் நடத்திய இலக்கிய உரையாடலின் நூல்வடிவம் இதுவாகும். இதன் பகுதி ஞானம் சஞ்சிகையில் தொடராக வெளிவந்தன. வரலாற்றில் வாழ்தல் என்ற பெருநூலில் இரண்டு பாகங்களில் தனது சுயசரிதையின் ஊடாக எஸ்.பொ இலங்கை இந்தியத் தமிழர்களின் இலக்கியம், பண்பாடு, அரசியல் ஆகியவை குறித்த வெளிப்படையான ஒரு நூற்றாண்டுக் காலப்பதிவை மேற்கொண்டிருந்தார். இந்நூல் வெறும் நிகழ்வுப் பதிவாக மட்டுமல்லாது படைப்பாற்றல் கொண்ட ஒரு கலைஞனின் மதிப்பீட்டுப் பார்வையாயும் தனிப்பட்ட வாழ்க்கை அனுபவங்களைச் சுவைபடச் சொல்லிச் செல்லும் சுயவரலாற்று நூலாயும் அமைந்திருந்தது. அதே*

வேளை பல முரண்பாடுகளையும் சக எழுத்தாளர்களடையே தோற்றுவித்திருந்தது. இவற்றுக்கு விளக்கமளிக்கும் வகையிலேயே எஸ்.பொவின் ஞானம் நேர்காணல் இடம்பெற்றிருந்தது. *(வரலாற்றில் வாழ்தல் பாகம் 1- நூல்தேட்டம் பதிவிலக்கம் 3952, பாகம் 2- நூல்தேட்டம் பதிவிலக்கம் 4925).*

### 7777

**தேடலே வாழ்க்கையாய்: ஒரு ஈழத்து நூலகரின் மனப்பதிவுகள்.** என்.செல்வராஜா. டென்மார்க்: வி.ஜீவகுமாரன், விஸ்வசேது இலக்கியப் பாலம், Hojvangsparken 7, 4300 Holbaek, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை).
88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

நூலகவியலாளர் என்.செல்வராஜா எழுதி அவ்வப்போது ஊடகங்களில் பிரசுரமான 17 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பேராசிரியர் நந்தி, கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன், எஸ்.எம்.கோபாலரத்தினம், கிருஷ்ணா வைகுந்தவாசன், கோபன் மகாதேவா, நயீமா சித்தீக், ச.வே.பஞ்சாட்சரம், அரங்க முருகையன், அமுதுப் புலவர், அகஸ்தியர் ஆகியோர் பற்றிய மனப்பதிவுகளும், காலைக்கலசத்தினூடாக ஒரு நூலியல் பயணம், புலத்திலும் புகலிடத்திலும் மலரும் வெளியீடுகளை சர்வதேச நூலகங்களில் பாதுகாத்தல், மலேசியத் தமிழர்களின் நீள்துயில் கலைகின்றதா, புலம்பெயர்ந்தோரிடையே கலாநிதிகளும் கல்லாநிதிகளும், தமிழ்மண்ணில் ஒரு சிரமதான அமைப்பு (சர்வோதயம்), நா.சுப்பிரமணியனின் ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் ஒரு பார்வை, ஈழநாடு சிறுகதைகள்: ஒரு பிராந்திய இலக்கிய வரலாற்று மூலநூல் ஆகிய சமூக, இலக்கிய கட்டுரைகளும் இதில் அடங்குகின்றன.

### 7778

**நறுமலர் மாலை.** டி.ரி.செல்வநாயகம். கொழும்பு: கலாநிலையம், 175 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, 1957. (மதுரை: விவேகானந்தா அச்சகம்).
208 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18.5x12.5 சமீ.

இலங்கை கல்விப் பாடநூற் பிரசுர சபையால் 27.4.1955 அன்று அங்கீகரிக்கப்பட்ட இந்நூலில் சமந்தகூடம், இராசகாரியம், கண்ணகி வழிபாடு, நெடுந்தீவு, விபுலானந்த அடிகள், கிராமிய இலக்கியம், செய்வினை, சீர்பாத வரலாறு, மட்டக்களப்பு வாவி, காமன்கூத்து, சிங்காரக் கண்டி, பழங்கோயில்கள் ஆகிய பன்னிரு தலைப்புகளில் எழுதப்பட்ட தமிழ் இலக்கியக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2597).

### 7779

**நினைக்க நினைக்க.** ஆழ்கடலான் (இயற்பெயர்: முருக.வே. பரமநாதன்). கனடா: நெய்தலங் கானல் வெளியீடு, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, 2000. (அச்சக விபரம் தரப்படவில்லை).
xi, 77 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

பூட்டைத் திறப்பது கையாலே மனப் பூட்டைத் திறப்பது மெய்யாலே, ஹரி ஓம் நமோ நாராயணாய, கருவில் உருவான கதை, உழவும் மறையும், அடிப்பதும் அணைப்பதும், பத்துச் சதப் படிப்பினைகள், நினைக்க நினைக்க, வளமார்ந்த புகுந்த மண், அருளாளர்களின் சந்திப்பு, வல்லிபுரத்தின் பொற்காலம், மருதமும் நெய்தலும், மீண்டும் செங்கடலில், தென் குமரியில் இருந்து வடவேங்கடம் வரை, வெண்மணற் பரப்பும், வெண்பனிப் பறம்பும், விடியாத பொழுதுகள் முடியாத கதைகள், சேர்த்து வைத்த திருவருள், வரலாறு சொல்லும் வல்லிபுரம் ஆகிய 17 தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகள் இவை. நூலாசிரியரின் பிறந்தமண்பற்றும், ஆன்மஞானிகளின் தொடர்பால் அவர்பெற்ற ஆன்ம அறிவும் இக்கட்டுரைகளில் செழுமையுடன் பதிவுபெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 533417).

### 7780

**நீங்களும் எழுத்தாளராகலாம்.** ந.சந்திரமோகன். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1978. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்தறை வீதி).
54 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 18x12.5 சமீ.

இந்நூலின் முற்பகுதியில் எழுத்துக்கலையின் வளர்ச்சி, வடிவங்கள், இன்றியமையாமை என்பவற்றைக் கூறி, பிற்பகுதியில் எழுத்தாளராக மாறும் வழிமுறைகள் என்னவென்று கூறப்பட்டுள்ளது. நூலாசிரியர் ஈரான் நாட்டில் Shiraz நகரில் Novid Company என்ற நிறுவனத்தில் பணியாற்றியவர்.

### 7781

**நூற்றாண்டுகளில் தமிழ்.** கா.பொ.இரத்தினம். சென்னை 600004: இன்ப நிலையம், மயிலாப்பூர், 1வது பதிப்பு, டிசம்பர் 1961. (சென்னை 600005: ஜீவன் பிரஸ்).
354 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 18x12.5 சமீ.

இந்நூல் ஒவ்வொரு நூற்றாண்டிலும் தமிழின் வாழ்வும் வளர்ச்சியும் எவ்வாறு இருந்ததென்பதை தனித்தனி அத்தியாயங்களில் கூறுகின்றது. முன்னைப்பழமை, கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன், கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன், கி.பி. இரண்டாம் நூற்றாண்டு, ஆகிய அத்தியாயங்களைத் தொடர்ந்து மூன்றாம் நூற்றாண்டு முதல் 20ம் நூற்றாண்டுவரை தனித்தனி அத்தியாயங்களில் தமிழின் வளர்ச்சியும் இருப்பும் பற்றி அரிய பல தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து மறைந்த தமிழ் நூல்கள், சங்ககாலப் புலவர்கள், புலவர் அகரவரிசை, நூலகரவரிசை, ஏட்டகரவரிசை ஆகியன இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 166070).

### 7782

**பண்டைத் தமிழரும் சமுதாயச் சீர்கேடும்.** கா.விசயரத்தினம். ஐக்கிய இராச்சியம்: Century House, 35 Brandreth Court, Harrow, Middlesex HA1 2JU, 1வது பதிப்பு, 2010. (சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர்).
xviii, 202 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-1-873265-72-7.

நுணாவிலூர் கா.விசயரத்தினம் அவர்களின் இருபது கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். பிராமணன் புகழ்பாடும் மனுநீதி நூலார் சூத்திரனுக்குக் கொடுத்த கொடுந்தண்டணைகள், மங்கையர் மாண்பினை மங்கவைக்கும் உடன்கட்டையேறல், மதங்களும் புராணங்களும் எழுப்பிய உயிர்ப்பலிகள், தொல்காப்பியர் காட்டும் பண்டைத்தமிழர் வாழ்க்கைநெறி, முச்சங்கங்களை அடுத்த நாலாம் சங்கம் அமைந்த வரலாறு, பரிணாம வளர்ச்சியும் மனித வரலாறும், திருமணமும் அதன் முன் பின் விளைவுகளும், பார்போற்றும் உலகச் சாதனையாளர் மகாத்மா காந்தி, பூவுலகின் நிலப்பரபபில் தோன்றும் உயிரினப் பிறப்பும் இறப்பும், சங்கத் தமிழ் இலக்கியமும் அதன் வளர்ச்சியும், செய்ந்நன்றி மறப்பது அறம் அன்று, நான் விரும்பும் இலக்கிய நாயகன் சிலம்பில் இளங்கோ, மண்ணின் மகிமையும் அதன் வாசனையும், செந்நாப்போதார் திருவள்ளவரும் தெய்வீக நூல் திருக்குறளும், மக்கள் கவிஞன் கவியரசு கண்ணதாசன், இன்றைய உலகும் தமிழர் கலாச்சாரமும், தொல்காப்பியப் பெருநூல் யாத்த தொல்காப்பியனார், உயரத்திலும் பல்லடுக்கு மாடிகளிலும் உலக சாதனை பெற்று நிற்கும் கட்டிடம் (துபாய்- The Burj Khalifa), மேல்நாட்டுக்கேற்ற சைவமுறைகள், பன்னிரு திருமுறைகளும் அதிலடங்கிய பெரியபுராணமும் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றுள் சில கட்டுரைகளின் கருப்பொருளை நூலின் தலைப்பு பிரதிபலிக்கின்றது.

### 7783

**பண்பாட்டுப் பொற்கனிகள்: பின் காலனியப் பார்வைகள்.** சச்சிதானந்தன் சுகிர்தராஜா. நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (சென்னை 60005: மணி ஒப்செட்).
224 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80240-32-9.

இதிலுள்ள கட்டுரைகள், அன்றாட வாழ்வை ஊடுருவும் பல்வேறு சாதனங்கள் நமக்குள் ஏற்படுத்தும் சலனங்களைப் பதிவுசெய்யும் அதே நேரத்தில் அவற்றைப் பற்றிய விமர்சனங்களையும் முன்வைக்கின்றன. அரசியல், பொருளாதாரம், இலக்கியம், திரைப்படம், இணையம், விளையாட்டு ஆகியவை குறித்துப் பொதுக் களத்தில் புழங்கும் செய்திகளைக் கடந்து அவற்றுள் மறைந்திருக்கும் எதிர்க் கருத்தியலை இவை வெளிப்படுத்துகின்றன. இந்த வெளிப்படுத்தல் "எனக்கு ஏன் இது முன்பே தெரியாமல் போயிற்று?" என்று வாசகனை வியப்படையச் செய்யும். ஆசிரியரின் விரிவான அறிவுப் பின்புலம், உணர்வுபூர்வமான அணுகுமுறை இவையே இந்த வியப்புக்குக் காரணம். நகைச்சுவை மிளிரும் இயல்பான மொழிநடை வாசிப்பைச் சுவாரசியமானதாக்குகின்றது. இலங்கையில் பிறந்து வளர்ந்த இந்நூலாசிரியர் கடந்த 30 ஆண்டுகளாக இங்கிலாந்தின் கல்விசார் சூழலில் வாழ்கின்றார். அசாதாரண மனிதன் என்ற இவரது சிறுகதைத்தொகுதி காலச்சுவடு பிரசுரமாக 2008இல் வெளிவந்தது.

### 7784

**பத்தி எழுத்துக்களும் பல்திரட்டுக்களும் 1: திறனாய்வுப் பார்வைகள்.** கே.எஸ்.சிவகுமாரன். கொழும்பு 6: கே.எஸ்.சிவகுமாரன், 21 முருகன் பிளேஸ், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1996. (கொழும்பு 13: செவ்வந்தி பிரைவேட் லிமிட்டெட், 28 குணானந்த மாவத்தை).
x, 130 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ.

இந்நூலில் திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் எழுதிய முப்பது கட்டுரைகள் உள்ளன. திறனாய்வுகள் என்ற பிரிவில் 18 கட்டுரைகளும், திறனாய்வுத் தெளிவு என்ற பிரிவில் 12 கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. விபுலாநந்தர், சுப்பிரமணிய பாரதி, மௌனி, சுந்தரராமசாமி, இலங்கையர்கோன், இளங்கீரன், செ.கணேசலிங்கன், எஸ்.பொன்னுத்துரை, அ.ஸ.அப்துஸ் ஸமது, தெணியான், காவலூர் இராசதுரை, நீர்வை பொன்னையன், செ.கணேசலிங்கன், வ.அ.இராசரெத்தினம், டொமினிக் ஜீவா, வரதர், கச்சியப்பர், தொல்காப்பியர், சு.வித்தியாநந்தன், க.கைலாசபதி, சிதம்பர ரகுநாதன், சி.மௌனகுரு, மௌ.சித்திரலேகா, எம்.ஏ.நுஃமான் ஆகியோரின் படைப்புக்கள் பற்றி இப்பத்தி எழுத்துக்கள் பேசுகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 492983).

### 7785

**பனிக்குள் நெருப்பு: புலம்பெயர்ந்தோர் இலக்கியம் ஒரு வரலாற்றுப் பார்வை.** எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஜுன் 2006. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை).
112 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 18.5x13.5 சமீ., ISBN: 81-89748-17-3.

ஈழத்தமிழர்களின் புதியதான புலப்பெயர்வுகளின் விளைவாக முகிழ்த்துவரும் தமிழ் இலக்கிய வகையான புலம்பெயர்ந்தோர் இலக்கியம் தொடர்பாக எஸ்.பொ. தமிழ்நாட்டில் புதுவைப் பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற் புலத்திலே 22.3.2006 அன்று நிகழ்த்திய பேருரையே பனிக்குள் நெருப்பு என்ற இந்த நூலின் உள்ளடக்கமாகும். The Tamil Diaspora என்ற கருத்துருவம் குறித்து விளக்கமளிக்கும் நூல் இது.

### 7786

**பாரதி பாடிய பராசக்தி.** சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). யாழ்ப்பாணம்: சொக்கன் எழுத்துப் பணியின் வெள்ளிவிழாக் குழு வெளியீடு, நாயன்மார்கட்டு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1974. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம், 336-340, காங்கேசன்துறை வீதி).
xii, 74 பக்கம், விலை: ரூபா 3., அளவு: 18x12.5 சமீ.

இந்நூலில் சொக்கன் எழுதிய 5 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. **பாரதி பாடிய பராசக்தி** (1971இல் வெளியான நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரியம்பாள் ஆலய மகா கும்பாபிஷேக மலரில் ஆராவமுதன் என்ற புனைபெயரில் எழுதியது), **தமிழிசையின் வரலாற்றிலே சில கட்டங்கள்** (1968 செப்டெம்பர் 6-11 இல் யாழ்ப்பாணத்தில் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம் நடத்திய 9ஆம் இசைவிழா நினைவுமலரில் பிரசுரமானது), **ஈழத்துத் தமிழ் நாடகங்கள்** (1974 ஜுலை 4இல்

இலங்கைத் தமிழியற் கழகம் கண்டி, சித்தி லெப்பை மகாவித்தியாலயத்தில் நடத்திய தமிழிலக்கியக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்டது), **பாவலர் துரையப்பாபிள்ளையின் பொருளாதார நோக்கு** (பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலரில் -1972இல் பிரசுரமானது), **சேர். பொன். இராமநாதனின் கல்விப்பணிகள்** (சேர் பொன். இராமநாதனின் 123 ஆவது பிறந்ததின நினைவுக் கட்டுரையாக ஈழநாடு தினசரியில் 16.4.1974 பிரசுரமானது) ஆகிய 5 ஆய்வுக்கட்டுரைகளும் இந்நூலில் அடங்குகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 310430).

### 7787

**பாரதிதாசன் உள்ளம்.** சுந்தர் ஈஸ்வரன். சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஜுன் 2010. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).
88 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 22x14 சமீ.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு சிறப்பு வெளியீடாக வெளிவந்துள்ள நூல் இது. நூலாசிரியர் சுப்பிரமணியம் சுந்தர் ஈஸ்வரன் அளவெட்டி அருணோதயா கல்லூரியின் பழைய மாணவராவார். தாம்பரம்-சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தொடர்கல்வியை மேற்கொண்டு 1962இல் சென்னைப் பல்கலைக்கழக அறிவியல் இளவல் பட்டதாரியாகியவர். இலங்கை மத்திய வங்கி, கொழும்பு பிரித்தானிய தூதரகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகியவற்றில் பணியாற்றியபின்னர் 1983 இனக்கலவரத்தின் பின்னர் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து சென்று வாழ்பவர். யாழ்ப்பாணத்தில் 1974இல் இடம்பெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பாரதிதாசன் உள்ளம் என்ற தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்தவர். அக்கட்டுரை உள்ளிட்ட ஏழு கட்டுரைகளின் தொகுப்புவடிவம் இந்நூலாகும். பாரதிதாசன் உள்ளம், தமிழனும் அவன் தாய்மொழியும், வீரம், தமிழ்ச்சமூகத்தில் பெண்கள், காதல் வாழ்வு, இயற்கை எழில், சமுதாயம் ஆகிய தலைப்புகளில் இவை இடம்பெற்றுள்ளன.

### 7788

**மனதில் மலர்ந்தவை-1: இலக்கிய இலக்கணக் கட்டுரைகள் தொகுப்பு.** ஆ.தா.ஆறுமுகம். நியூசிலாந்து: ஆ.தா.ஆறுமுகம், வெலிங்டன், 1வது பதிப்பு, 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை).
118 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

நூலாசிரியர் யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனில் பிறந்தவர். தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர் 1985இல் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் அதிபராகவிருந்து ஓய்வுபெற்றவர். தற்போது நியுசிலந்தில் புலம்பெயர்ந்து வாழும் இவர் சக்தி, நம்மக்களின் மனக்கணக்கு, நியூசிலாந்தில் தமிழன் பதித்த சுவடுகள் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். இந்நூல் இவர் அவ்வப்போது எழுதிய தமிழியல் கட்டுரைகளின் தொகுப்பாகும். தன்னேரில்லாத் தமிழ், முத்தமிழ், தமிழ்ச்சங்கம், இனி மன்னர் பெண் கொளல் ஒண்ணுமோ, மதிநலம் மிக்க தமயந்தி, தூய நங்கை, கவிஞர்களின் கற்பனை, உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே, உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள். சார்பெழுத்துக்கள், குற்றியலிகர உகரங்கள், மொழி முதற் குற்றியலிகர உகரங்கள், வினையாலணையும் பெயர், தமிழ் எழுத்தொலிகளும் வரிவடிவங்களும், வளரும் அறிவியல் உலகில் தமிழ் எழுத்து, வரிவடிவங்கள் ஆகிய தலைப்புகளிலான 17 கட்டுரைகளுடன் ஆனைக்கோட்டை அகழ்வாராய்வு பற்றிய பின்னிணைப்பும் இடம்பெற்றுள்ளன.

### 7789

**முப்பால்: திருக்குறள் மாநாட்டுச் சிறப்பு மலர்.** ஜின்னாஹ் ஷரிபுத்தீன், சற்சொரூபவதி நாதன், ப.க.மகாதேவா (தொகுப்பாசிரியர்கள்), சுகந்தி இராஜகுலேந்திரா, வசந்தி தயாபரன், தி.ஞானசேகரன், சி.பாஸ்க்கரா (மலர்க்குழு). கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச்சங்கம், இல.7, 57ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜுலை 2011. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xx, 212 பக்கம், வண்ணத்தகடுகள், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 25x17.5 சமீ., ISBN: 978-955-8564-17-2.

*ஜுலை 2011இல் 22,23,24 ம் திகதிகளில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டின்போது வெளியிடப்பட்ட சிறப்புமலர் இதுவாகும். வள்ளுவர் பற்றியும் திருக்குறள் பற்றியும் எழுதப்பட்ட 41 கட்டுரைகளும், பாடசாலை மாணவர்களுக்காக நடத்திய திருக்குறள் போட்டியின் முடிவுகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.*

### 7790

**முற்போக்கு இலக்கிய எழுச்சி: நான்கு முன்னோடி முற்போக்கு எழுத்தாளர்கள்.** ந.இரவீந்திரன். *கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202 செட்டியார் தெரு, இணைந்து வெளியிடுவோர், கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 6:* R.S.T.Enterprises, 114, W.A.Silva Mawathe).
*188 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x15 சமீ.,* ISBN*: 978-955-1810-13-9.*

*முற்போக்கு இயக்கத்தில் முகிழ்ந்த முன்னோடி எழுத்தாளர்களாகிய என்.கே.ரகுநாதன், கே.டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன் ஆகியோரது எழுத்தாக்கங்களிலே காணப்படும் தனித்துவமும் ஒடுக்கப்பட்டோர் தொடர்பான புலக்காட்சியும் மார்க்சிய அழகியலுக்கு வளம் சேர்க்கின்றன. கருத்தியல் வளமும், அழகியலும், கலந்த செழுங்கலவை நிலையில் அவர்களது எழுத்தாக்கங்கள் மேலெழுகின்றன. அவை தொடர்பான மீள நோக்கல் வரலாற்றுத் தேவையாக மேலெழுகின்றன. கோளமயமாதலும், நவீன முதலாளித்துவத்தின் வளர்ச்சியும், என்றுமில்லாதவாறு சுரண்டலின் தளங்களும் கோணங்களும் விரிவடைதலும் மீண்டும் மார்க்சியத்தை நோக்கிய கூர்ந்த பார்வையை உலக அரங்கில் விசைப்படுத்தத் தொடங்கியுள்ளது. அவ்வாறான கூர்ந்த நோக்கை எமது சூழலில் இந்நூல் தேசியமும் முற்போக்கு இயக்கமும், முற்போக்கு இலக்கியம்: காலமும் கருத்தியலும், முன்னோடிகள் நால்வர், களமும் வெளிப்பாடும், முற்போக்கு இயக்கத்தின் அடிப்படைச் சக்திகள், மதிப்பீடு: மரபுப் போராட்டத்திலிருந்து மக்கள் இலக்கியக் கோட்பாட்டுக்கு ஆகிய ஆறு இயல்களில் திசைமுகப்படுத்துகின்றது.*

### 7791

**வள்ளுவமும் விவிலியமும்: ஓர் ஒப்பாய்வு.** வே.அந்தனிஜான் அழகரசன். *சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை, 1வது பதிப்பு, 2010. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).*
*374 பக்கம், விலை: இந்திய ரூபா 250., அளவு: 22.5x15 சமீ.*

*அருட்பணியாளர் வே.அந்தனிஜான் அழகரசன் (1939) மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியில் தன் கல்வியைத் தொடங்கி கண்டி குருத்துவக் கல்லூரி, சென்னை பச்சையப்பன் கல்லூரி, சென்னைப்பல்கலைக்கழகம், அமெரிக்க ஹார்வர்ட் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கற்றுப் பட்டமும் பெற்றவர். பத்திரிகை ஆசிரியராகவும் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகவும் அருட்பணியாளராகவும் பணியாற்றியவர். அமெரிக்காவில் ஓர் கிறிஸ்தவ தேவாலயத்தில் அருட்பணித் தலைவராக (*Pastor*) பணியாற்றுகிறார். அறிவு இயக்கத்தின் நிலைக்களன்கள், சாலமோனும் தென் இந்தியாவும், சாலமோனும் வள்ளவரும், விவிலிய நீதிமொழிகளும் வள்ளுவரின் திருக்குறளும், இலட்சிய இல்லாள் அல்லது வாழ்க்கைத் துணைநலம், பிறனில் விழையாமை பற்றிய நீதிமொழிகளும் வள்ளுவமும், வரைவின் மகளிர், நீதி மொழிகளும்-திருக்குறளும் காட்டும் லட்சிய மனிதன், நீதிமொழிகளும் வள்ளுவமும் காட்டும் இலட்சிய அரசன், நீதிமொழிகள்-குறள் பார்வையில் செல்வர்களும் ஏழைகளும், இலட்சிய நட்புப் பற்றி நீதிமொழிகளும் திருக்குறளும், விவிலிய உன்னத சங்கீதமும் வள்ளுவரின் காமத்துப்பாலும், உன்னத சங்கீதத்தின் இலக்கிய நயமும் காமத்துப்பாலின் இலக்கிய இரசனையும் ஆகிய 13 இயல்களில் விவிலியத்தையும் திருக்குறளையும் ஒப்பாய்வு செய்திருக்கிறார். 14ஆவது இயலாக முடிவுரை அமைகின்றது.*

### 7792

**விபுலாநந்த இன்பம்.** விபுலாநந்தர் (மூலம்), அருள். செல்வநாயகம் (தொகுப்பாசிரியர்). *மட்டக்களப்பு: அருள் செல்வநாயகம், குருமண்வெளி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 4: தனு பிரின்டர்ஸ், 84, லோரிஸ் வீதி).*
*(6), 182 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13 சமீ.*

*விபுலாநந்த இலக்கிய வரிசையில் அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய பின்னர், விபுலாநந்த இலக்கிய வரிசையிலே அடிகளாரின் பல்வேறு கட்டுரைகளையும் தேடித் தொகுத்து ஒன்பது நூல்களை வெளியிட்டிருந்த ஆசிரியர் அதன் தொடர்ச்சியாக விபுலாநந்த வெள்ளம், விபுலாநந்தத் தேன், விபுலாநந்த ஆராய்வு ஆகிய முன்னைய நூல்களில் வெளிவந்த சுவாமி விபுலாநந்தரின் 11 கட்டுரைகளைத் தேர்ந்து இந்நூலை வெளியிட்டுள்ளார். விபுலாநந்தரின் வாழ்க்கை வரலாற்றை அறிமுகக் கட்டுரையாகக் கொண்டு இலக்கியச் சுவை, ஐயமும் அழகும், வண்ணமும் வடிவும், நிலவும் பொழிலும், கல்வியும் சால்பும், இயலிசை நாடகம், ஆங்கிலவாணி, மேற்றிசைச் செல்வம், சோழ மண்டலத்துத் தமிழும் ஈழமண்டலத்துத் தமிழும், கலைச்சொல்லாக்கம், தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப் பெருக்கு வடநாட்டிற் பரவிய வரன்முறை ஆகிய 11 கட்டுரைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 316869).*

மேலும் பார்க்க: *7810*

## *894.8(7) பலவினத் தொகுப்பு*

***7793***

**ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை நூல்கள் 3ம் தொகுதி: வானசாஸ்திரம், நன்நெறிக் கதா சங்கிரகம் அடங்கிய இரு நூல்களின் தொகுப்பு.** ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை. வட்டுக்கோட்டை: ஜே.ஆர்.ஆர்னோல்ட் புத்தக நிதியம், தென்னிந்திய திருச்சபை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகம்).
*(14), 328+ 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.*

*அருணாசலம் சதாசிவம்பிள்ளை 1820ம் ஆண்டு மானிப்பாய், நவாலியில் ஒரு வைதிக-சைவக் குடும்பத்தில் பிறந்தவர். சிறந்த தமிழறிஞரான இருபாலை சேனாதிராய முதலியாரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றவர். உயர்கல்விபெறும் நோக்குடன் 1823இல் அமெரிக்க மிஷனரிமாரால் நிறுவப்பட்ட வட்டுக்கோட்டைச் செமினரியில் சேர்ந்து கல்விகற்றவர். அவ்வேளையில் மதமாற்றத்துக்குள்ளாகித் தனது பெயரை யோவேல் ரசல் ஆர்ணல்ட் என்று மாற்றித் திருமுழுக்குப் பெற்றவர். செமினரிப் பட்டதாரியாகியபின் மானிப்பாய், உடுவில், சாவகச்சேரி ஆகிய இடங்களில் அமெரிக்க மிஷன் பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றி 1881இல் யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். உதயதாரகை பத்திரிகையின் ஆசிரியராக 1857முதல் 1895இல் தான் மரணிக்கும்வரை, 38 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரது இரண்டு நூல்கள் இத்தொகுதியில் மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. 1861இல் இரண்டாம் பதிப்புக் கண்ட நன்னெறிக் கதா சங்கிரகம் சன்மார்க்க சாதனைக்கும் போதனைக்குமுரிய விந்தைக் கதைகளை உள்ளடக்கியது. 1861இல் எழுதப்பட்ட வானசாஸ்திரம் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்ப எழுதப்பட்டது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 587403).*

***7794***

**காத்தலும் அழித்தலும்: பேனா என் ஆயுதம் - இரண்டாம் பாகம்.** வி.சி.குகநாதன். சென்னை 600 034: ராஜேஸ்வரி பதிப்பகம், எண் 29, குளக்கரை சாலை, நுங்கம்பாக்கம், 1வது பதிப்பு, மார்ச் 2007. (சென்னை 5: யோகிராம் சுரத்குமார் பிரிண்டர்ஸ்).
*80 பக்கம், 16 வண்ணப் புகைப்படத் தகடுகள், விலை: இந்திய ரூபா 75., அளவு: 18x12 சமீ.*

*தமிழகத் திரைப்படத்துறையில் இயக்குநராகப் பணியாற்றும் ஈழத்தவரான வி.சி.குகநாதனின் கட்டுரைகள், கடிதங்கள், உரைகள், கவிதைகள் கொண்ட பலவினத் தொகுப்பு இது. அவரது பணிகளுடன் தொடர்புபட்ட பிரமுகர்களுடன் இணைந்து எடுத்த புகைப்படங்களும் இணைக்கப்பட்டுள்ளன. தமிழ் வாழ வேண்டுமானால், தண்ணீரினால் இவ்வளவு கொடுமையா, கர்மவீரர்-பச்சைத் தமிழர், அண்ணா கேட்டது, உதடும் உள்ளமும், சூட்சுமம் என்ன, அகதியா அநாகரீகம், தெய்வப் பிறவி, தூண்டுதல் என் பணி, சிந்தித்துப் பொங்கலிடுவோம், காத்தலும்*

அழித்தலும், சிந்தனைச் சிதறல்கள் ஆகிய 12 கட்டுரைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மருத்துவர் ச.இராமதாஸ், தொல். திருமாவளவன், ந.சேதுராமன் ஆகியோரின் அணிந்துரைகளுடன் கூடியது.

### 7795

**கோபன் மகாதேவா சிறுகதைகளும் நாடகங்களும்.** கோபன் மகாதேவா. லண்டன்: Century House, 35 Brandreth Court, Harrow, Middlesex, HA1 2JU, 1வது பதிப்பு, 2011. (லண்டன்: அச்சக விபரம் தரப்படவில்லை).
200 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-1-873265-77-2.

முதலடி முதுகடி, ஆயுள் தண்டனை, கார் ஓட்டம், முயற்சியால் உயர்ந்த மாமனிதர், மாப்பிள்ளையும் மரக்கத்தியும், ஈழத்தில் ஒரு தாய், திருமதி கொஞ்சம், என் சுண்டெலி செத்தே விட்டதோ, செல்லாச்சிப் பாட்டி, திருக்குறள் தாத்தா, இலங்கை ஆட்சியாளரின் அலரிச் சம்மேளனம், பிறப்பும் பொறுப்பும், தாடகையும் தண்டனையும், பீரங்கிப் பூலோகம் ஆகிய 14 தமிழ் படைப்புகளும், Pillai Master, Spaghetti Junction, Journey in a Nightmare train, A Matter of Language, The Displaced Undergraduate, Her Compassion, Duty and Justice-Narrative Poem ஆகிய 7 ஆங்கிலப் படைப்புகளுமாக மொத்தம் 21 ஆக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. திரு கோபாலபிள்ளை மகாதேவா யாழ் மத்திய கல்லூரியின் மாணவராக இருந்த காலத்தில் 1948இல் எழுத்துத் துறையில் கால் பதித்தவர். 1980முதல் 2010 வரை இவர் எழுதிய படைப்புக்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

### 7796

**சாந்தனின் எழுத்துலகம்.** ஐயாத்துரை சாந்தன். சென்னை 600011: அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாணசுந்தரம் தெரு, பெரம்பூர், 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (சென்னை 600033: காருண்யம் கிராப்பிக்ஸ்).
312 பக்கம், விலை: இந்திய ரூபா 130., அளவு: 21.5x14 சமீ.

1947இல் பிறந்த ஐ.சாந்தன் இலங்கையிலும், தமிழகத்திலும் தனது வீரியம் மிக்க படைப்புகளால் பெயர்பெற்றவர். இவரது படைப்புக்கள் சில சிங்கள, ரஷ்ய, இந்தி மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 1975இலும், 2000இலும் பிரதேச இலக்கிய விருதுகளைப் பெற்றவர். இந்நூலில் சாந்தனின் மூன்று குறுநாவல்களான கிருஷ்ணன் தூது, தேடல், வேலிகளின் கதை ஆகியனவும், பயணக்கட்டுரைகளான ஒளிசிறந்த நாட்டிலே, காட்டு வெளியிடை ஆகிய படைப்புகளும், 42 சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன. பெரியமனிதன், சிறிய பயணங்கள், ஒரு 26ம் தேதி காலை, பிரிப்பு, வண்டிகளும் மாடுகளும், நீக்கல்கள், நம்பிக்கைகள் அழியவேண்டியதில்லை, மனிதர்கள், மனங்கள், மானங்கள், இரண்டு நிமிட மௌனம், பலவீனம், பெயர், பொடியன், அந்நியமான உண்மைகள், முளைகள், வேகம், ஆறுதல், புரிதல், எட்டியது, இழப்பு, அனுமார், நிரூபணம், 76இல் ஒரு விடுமுறை நாளில், ஸீ அனிமோன், குமிழிகள், தமிழன், ஏன், தொடர்ச்சி, இடையில் ஒரு இருபது வருஷம், பூகோளம், ஒருபிடி மண், மீறல், ஒரு விருந்தின் முடிவு, புதிய தரிசனங்கள், கவலை, நிழல், இன்னும் உள்ள வண்ணங்கள், அடையாளம், இடைவெளி, கோலங்கள், இரண்டு கதைகள், பாத்திரம், நிலா ஆகிய தலைப்புகளில் இவரது தேர்ந்த சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 173006).

### 7797

**சிந்தனைச் சோலை.** தெ.அ.துரையப்பாபிள்ளை. யாழ்ப்பாணம்: மஹாஜனாக் கல்லூரி பொன்விழா நினைவுச் சிறப்பு மலர், மஹாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை, 1வது பதிப்பு, ஜூன் 1960. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், பிரதான வீதி).
xvii+xii, 300 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

தெல்லிப்பழை மஹாஜனக் கல்லூரியின் தாபகர் தெ.அ.துரையப்பாபிள்ளை அவர்கள் 60 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய ஆக்கங்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

இத்தொகுப்பின் பின்னணியில் புலவர் நா.சிவபாதசுந்தரம், பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை, பண்டிதர் திரு.அ.ஆறுமுகம், திரு வை.பொன்னையா, திரு.சி.நாகலிங்கம், திரு.செ. கதிரேசர்பிள்ளை ஆகியோர் இயங்கியுள்ளனர். பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை அவரகளின் படைப்புக்கள் இங்கு ஏழு பிரிவுகளில் பத்திமலர், தேசியமலர், சமூகமலர், சீலமலர், உணர்வுமலர், நாடகமலர், இணைப்புமலர் ஆகிய தலைப்புகளின்கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 297562).

### 7798

**தீர்க்க வர்ணம்: பல்சுவைப் பத்திகளின் தொகுப்பு.** அஷ்ரப் சிஹாப்தீன். வத்தளை: யாத்ரா வெளியீடு, இல. 37 ஸ்ரீ சித்தார்த்த மாவத்தை, மாபோளை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (கொழும்பு 14: Talent Graphics, 83 B, Babapulle Place).
xx, 217 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 19x13.5 சமீ., ISBN: 978-955-8448-04-5.

இந்நூலில் ஆசிரியரின் 69 பத்தி எழுத்துக்கள் அவற்றின் எதிர்வினைகளோடு இடம்பெற்றுள்ளன. பல்வகைக் குணக் கலவைகளை வெளிக்காட்டும் இப்பத்திகள் வாசகரை லயிக்கவைப்பதுடன் சில இடங்களில் அதிர்ச்சியையும் தருபவையாகும். சில மனதில் துயர்கவ்வ வைப்பவை. வாழ்க்கையின் இன்பம்-துன்பம் என்கின்ற இருநிலைப்பட்ட பொருதலுக்கிடையே இவற்றின் கலவையான வாழ்க்கையின் தொடரோட்டம் தீர்க்கவர்ணம் மூலம் தரிசனமாகின்றது. பல்வேறு கலை இலக்கியச் செய்திகளின்மூலம் கலாபூர்வமாக இவற்றைப் பதிவுசெய்துள்ளார்.

### 7799

**தூறல்கள்.** P.நடா. லண்டன்: ஆசிரியர், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் இல்லை. (லண்டன்: ஜே.ஆர்.பிரின்ட்).
60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் இந்நூலாசிரியர் எழுதிய சாதியம் பற்றிய கட்டுரை ஒன்றும், கவிதைகளும், ஒத்தையடி நிழல்கள், அகதி, உறவு, தூரத்து வெளிச்சம் ஆகிய கதைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

### 7800

**தேடலும் விமர்சனங்களும்: கவிதை, சிறுகதை, கட்டுரை, கடிதங்கள்.** இ.ஜீவகாருண்யன். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, இணைந்து வெளியிடுவோர், லண்டன்: தமிழியல், 1வது பதிப்பு, ஜுன் 2009. (சென்னை 600029: மைக்ரோ பிரின்ட்ஸ் லிமிட்டெட்).
xv, 190 பக்கம், விலை: இந்திய ரூபா 175., அளவு: 22x14 சமீ., ISBN: 978-81-89945-43-5.

ஈழத்தின் சிற்றிலக்கிய ஏடுகளான பூரணி, அலை ஆகியவற்றின் ஆசிரியபீடத்தில் பணியாற்றியவர் ஜீவகாருண்யன். குறித்ததொரு பரப்பினைக் கொண்டிராது, கவிதை, சிறுகதை, சமகால வாழ்வியல் பதிவுகள், இரசனைக் குறிப்புகள், விமர்சனப் பாங்குகள், மாற்றுக் கருத்துக்கள்,ஆளுமை மதிப்பீடுகள், கடிதங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய 47 பதிவுகளின் திரட்டாக இத்தொகுப்பு அமைந்துள்ளது. மு.தளையசிங்கத்தின் சிந்தனைகளாலும் செயல்களாலும் மிகவும் ஈர்க்கப்பட்டவர் ஜீவகாருண்யன். தனிமனிதன், சமூகம், இயற்கை, பிரபஞ்சம், பற்றிய விசாரத்திலும், இலக்கியச் சூழல்-ஆளுமைகள் பற்றிய பதிவுகளிலும் தனக்கேயுரிய தனிப்பார்வையினைக்கொண்டவராக இவரை இதிலுள்ள கட்டுரைகள் இனம்காட்டுகின்றன. இ.ஜீவகாருண்யன் யாழ்ப்பாண மாவட்டத்தின் வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்தவர்.

### 7801

**தேடிக் குவித்த திரவியங்கள்: சிந்தனைத் தொகுப்பு.** யாழ். ஜெயம் (இயற்பெயர்: ம.விக்ரர்). யாழ்ப்பாணம்: நாடகப் பயிலகம், திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, மாசி 2002. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).

*(8), 38 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15.5 சமீ.*

*25 ஆண்டுகளுக்கும் மேலாகத் திருமறைக் கலாமன்றத்துடன் இணைந்து செயறபட்டவர் கவிஞர் யாழ்.ஜெயம். அவரது மறைவின் பின்னர் வெளிவந்துள்ள இந்நூல் அவரது பல்வேறு படைப்புகளையும் தொகுத்துப் பதிவுசெய்துள்ளது.*

***7802***

***பஞ்சாமிர்தப் பாகு: இலக்கிய இதிகாசக் கலவை.*** *வெற்றிமகன் (இயற்பெயர்: கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி). மட்டக்களப்பு: பசிமுகம், வன்னியனார் தெரு, 1வது பதிப்பு, ஜுன் 2001. (மட்டக்களப்பு: கணா டிஜிட்டல் பப்ளிஷர்ஸ்).*
*xii, 186 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 20x14.5*

*கவிதைக் குவியல், பேச்சுப் பிரதிகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாடகம், கூத்து என பல்வேறு இலக்கிய வடிவங்களிலும் எழுதப்பெற்ற படைப்புகளின் தொகுப்பு இது. ஓய்வுபெற்ற பாடசாலை அதிபரான இந்நூலாசிரியர் தான் ஊடகங்களில் பல்வேறு புனைபெயர்களிலும் எழுதிப் பிரசுரமான பிரசுரமாகாத படைப்புகளையும் இங்கு தொகுத்திருக்கிறார். பசிமுக வெளியீட்டுத் தொடரில் இரண்டாவது வெளியீடு. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 576175).*

***7803***

***பாராமுகங்கள்: சில பார்வைகள்.*** *பத்மா சோமகாந்தன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
*ix, 141 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ.*

*வாசகர்களின் கேள்விகளுக்கு பத்மா சோமகாந்தன் வழங்கிய பதில்கள், கேள்வி-பதில் பாணியில் நூலுருவில் வெளியாகியுள்ளது. பல்வேறு வாழ்வியல் பிரச்சினைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆத்மார்த்தமாக ஆய்வுக் கண்ணோட்டத்தில் பதிலளித்திருக்கிறார். அரச மரத்தைச் சுற்றி வழிபட்டால் பெண்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டுமா எனக்கேட்கும் அப்பாவித்தாய், பிள்ளையைத் தனியே இரண்டு மைல்கள் தொலைவில் இருக்கும் பாடசாலைக்கு அனுப்பத் தயங்கும் தாய், காதலில் சிக்கித் தீர்வுதேடி அலையும் இளைஞன், பெண் கல்வி தேவையா எனக் கேட்கும் நவீன யுகத்தில் வாழும் பெண் எனப் பல்வேறு கேள்விகளுக்கும் விரிவாக ஆராய்ந்து நறுக்குத் தெறித்தாற்போல இது தான் தீர்வு என பதிலளித்துள்ளார். பதில்களில் மனித நேயம், சமூக ஆய்வு, என்பன இவருக்குக் கைகொடுத்துள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 164250).*

***7804***

***பிரகாசம்: அரச ஊழியர்களது இலக்கிய ஆக்கங்கள் 2010.*** *சுபாசினி கிருபாகரன், சுபாசினி கேசவன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, எட்டாம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 7: மத்திய கலாச்சார நிதியம், 212/1 பௌத்தலோக மாவத்தை).*
*xi, 214 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 955-9117-08-4.*

*கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்களான, சுபாசினி கேசவன், சுபாசினி கிருபாகரன் ஆகியோரை அவர்களை பதிப்பாசிரியர்களாகவும், ஜெனித்ரா தேவச்சந்திரன் (கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்கள்) அவர்களை உதவிப் பதிப்பாசிரியராகவும் கொண்டு இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் வெளிப்பாட்டை வளர்த்தெடுக்கும் வகையில் ஆண்டுதோறும் நடைமுறைப்படுத்திவரும் போட்டித் தொடரில் 2008ம் ஆண்டுக்கான போட்டியில் பரிசுபெற்ற கவிதைகள், சிறுகதைகள், பாடல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக முன்னர் ஒரு நூல் தமிழில் வெளிவந்திருந்தது. அதன் தொடர்ச்சியாக 2010இல் இந்நூல் வெளிவந்துள்ளது. இதே திட்டத்தின்கீழ் சிங்கள மொழியிலும் **பிரபாஸ்வர** என்ற பெயரிலும்*

*கடந்த சில ஆண்டுகளாக நூல்தொடர் ஒன்று வெளியாகியுள்ளது. 8 பாடல்களும், 8 சிறுகதைகளும், 8 கவிதைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

### 7805

**பிரமிள் படைப்புகள்: சிறுகதைகள், குறுநாவல்கள், நாடகங்கள்.** *பிரமிள் (மூலம்), கால.சுப்பிரமணியம் (பதிப்பாசிரியர்). புத்தானதம் (*Puthanatham *) 621319: அடையாளம், 1208, 2வது தளம், கருப்பூர் சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை: மணி ஒப்செட்).*
*472 பக்கம், விலை: இந்திய ரூபா 210., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN*: 81-7720-018-6.*

*தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் புதுமைப்பித்தனுக்குப் பின்னர் ஈழத்தமிழரான பிரமிளின் படைப்புக்கள் சமூக விமர்சனமும், அங்கதக் கூர்மையும் கொண்டவையாகச் சிறந்து விளங்குவதாகத் தமிழகப் படைப்பாளிகளே சிலாகித்திருக்கின்றனர். இந்நூலில் பிரமிளின் சிறுகதைகளும் குறுநாவல்களும் என்ற பிரிவில் சந்திப்பு, கோடரி, சதுரச்சிறகு, பிக்ஷாடனன், பாறை, காடன் கண்டது, ஆயி, லங்காபுரி, லங்காபுரி ரகஸ்யம், லங்காபுரிராஜா, தந்தம், கருடனூர் ரிப்போர்ட், நீலம், பிரஸன்னம், குதிரைமலை நிகழ்ச்சி, கிசுகிசு, கருடயோகி, அசரீரி, ஆலா, அங்குலிமாலா, சாமுண்டி ஆகிய கதைகள் இடம்பெற்றுள்ளன. ஜனரஞ்சகக் கதைகள் என்ற பிரிவில் கதவைத் தொட்ட நிழல், தீப்பந்தம், மெஹரா, பாண்டிபஜாரைக் கலக்கியவன், நடிகை மகள், டைமண்ட் கிங், ஒரு கூழாங்கல்லின் கதை, கல் எறிந்த கை, வாலிமலை வெளிச்சம், கார்த்தியும் கம்ப்யூட்டரும் ஆகிய கதைகள் இடம்பெற்றுள்ளன. நாடகங்கள் என்ற பிரிவில் நட்சத்ரவாசி, யுனிட், கூட்டியக்கம், நரமஹாநரன், ஆகிய நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. தொலைக்காட்சி நாடகம் என்ற பிரிவில் கருடனூர் ரிப்போர்ட் என்ற நாடகமும், தொடர்கதை என்ற பிரிவில் ராஜாளி மலை என்ற கதையும், பிற என்ற பலவினப்பிரிவில் ஒற்றைத்தென்னை, ஏழு கதைகள்ஆகிய படைப்புகளுமாக மொத்தம் ஆறு பிரிவுகளுக்குள் அவரது படைப்புகள் பகுத்துத் தரப்பட்டுள்ளன. இறுதியாக அமையும் பின்னிணைப்பில் கல்மண்டபம், மைவலயம், ஒரு புகைப்படம் - ஒரு கடிதம், லங்காபுரி ராஜாவுக்கான பதிப்புரை, நட்சத்ரவாசி, கூட்டியக்கம் ஆகியவற்றக்கான முன்னுரை ஆகிய படைப்புக்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 153610).*

### 7806

**பூந்துணர்: தொகுப்பு மலர் 2010.** *பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம். லண்டன்:* Eelavar Literature Academy of Britain (ELAB), Century House, 35 Brandreth Court, Harrow, Middlesex, HA1 2JU, *1வது பதிப்பு, 2011. (லண்டன்: அச்சக விபரம் தரப்படவில்லை).*
*312 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.,* ISBN*: 978-1-873265-67-3.*

*நல்ல கலை இலக்கியங்களை வளம்படுத்தவெண்ணி கலையார்வம் கொண்டவர்களால் 2006இல் லண்டன் கொலிண்டேல் பகுதியில் உருவாக்கப்பட்டது தான் பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம். எழுத்தாளர்களின் ஒருங்கிணைப்பினால் மாதாமாதம் இலக்கிய நிகழ்வுகளை நடாத்தி அதன்மூலம் பெறப்பட்ட இலக்கிய வடிவங்களை புடம்போட்டு கனகச்சிதமாக பூந்துணர் என்னும் நூலாக வெளியிட்டுள்ளனர். முன்னர் 2007இல் ஒரு தொகுதியும் வெளிவந்துள்ளது (நூல்தேட்டம் பதிவிலக்கம் 5800). இவ்விரண்டாவது தொகுப்பில் மகாத்மா காந்தி, கவியரசு கண்ணதாசன், வேறுசில நாயக சாதனையாளர்கள், உலக மனித உற்பத்தியும் போக்கும், இயற்கையும் மனிதனும், அன்றும் இன்றும், லண்டன் வாழ்க்கை, இன்றைய தமிழ் கலாச்சாரம், மேல்நாடுகளும் சைவமும், தனி அனுபவங்களும் கனவுகளும், சுதந்திர தாகம், தியாகம், வெற்றித் திருமணங்கள், செய்நன்றி, வாழ்க்கையும் விளையாட்டுப் போட்டிகளும், நூல் வெளியீடு, அணிந்துரை, விமர்சனம், இலக்கியமும் அதன் வருங்காலமும், பல் கருப்பொருட் பெட்டகம், பூந்துணர் 2007 விமர்சனங்கள், பூந்துணர் 2010 நூலின் ஆசிரியர்கள் ஆகிய 20 பிரிவுகளின்கீழ் இந்நூலிலுள்ள கட்டுரைகளும், கவிதைகளும், குறுந்தகவல்களும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்தும் பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம் அவ்வப்போது ஒழுங்குசெய்த சந்திப்புகளில் படிக்கப்பெற்றவை.*

### 7807

**போர்ப்பறை.** மு.தளையசிங்கம். யாழ்ப்பாணம்: சர்வமத சங்கம், சர்வோதய இயக்கம், வடமாகாணக் கிளை, புங்குடுதீவு, 1வது பதிப்பு, 1970. (யாழ்ப்பாணம்: ஜோதி அச்சகம்).
xxxii, 270 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 18.5x13 சமீ.

மு.தளையசிங்கத்தின் பலவினப் படைப்புகளின் தொகுப்பு நூல். மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இதில் புதுக்குரல்கள் என்ற முதலாம் பிரிவில் உள்ளும் புறமும், வெள்ளை யானை, புதுக்குரல்கள் ஆகிய மூன்று கதைகளும், புதிய வார்ப்புகள் என்ற இரண்டாம் பிரிவில் படைப்பாளிகள் இயக்கம், புதிய வார்ப்புகள், சர்வோதயம்- புதுயுகப் பெருந்தத்துவம், சமயமும் சத்தியமும் ஆகிய நான்கு கட்டுரைகளும், புதுத்திசைகள் என்ற மூன்றாவது பிரிவில் சுயாட்சி, விஞ்ஞானமும் சமயஞானமும், இரவுகள், போர்ப்பறை, கலை-ஒரு விஞ்ஞானக் கணக்கெடுப்பு, நான்-அதன் பரிமாணங்கள் ஆகிய ஆறு கட்டுரை, கவிதைப்படைப்புகளுமாக மொத்தம் 13 படைப்புகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275655).

### 7808

**வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்.** ஓ.கே.குணநாதன். வவுனியா: முத்தமிழ்க் கலாமன்றம், 1வது பதிப்பு, ஜனவரி 1998. (வவுனியா: ஆதவன் அச்சகம்).
100 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21.5x14 சமீ.

வவுனியா மாவட்டத்தின் இலக்கிய ஆரம்பம், கல்வி வளர்ச்சி, இலக்கியப் படைப்பு, இலக்கியப் படைப்பாளர் போன்ற அம்சங்களையும் இம்மண்ணில் இலக்கிய வளர்ச்சியுடன் தொடர்புடைய நூல்கள், வெளியீடுகள் போன்றவற்றையும் பற்றிய விபரங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129702).

### 7809

**விட்டில்: சமகால அரசியல் பகுப்பாய்வு.** ச.இராகவன். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, மே 2011. (சென்னை 60005: மணி ஒப்செட்).
144 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80240-45-9.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சமுர்த்தி வங்கி முகாமையாளராகக் கடமையாற்றும் இராகவனின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். முதலாவது சிறுகதைத் தொகுதி **கலாவல்லி** என்ற பெயரில் 2010இல் வெளியாகியிருந்தது. 1998இலிருந்து எழுதிவரும் இவரது அண்மைக்காலப் படைப்பான விட்டில்- சாதாரண வாசகரை அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் மரபு ரீதியான கதையாடல்களைப் புறக்கணித்துள்ளார். இக்கதைகளின் உள்ளடக்கத்தினாலும் மரபு மீறுபவை. புனைவு-யதார்த்தம் என்ற வகைப்படுத்தல்களை கடந்து உருவாகியிருக்கும் பிரதிகள் இவை. இவற்றில் வினாத்தாள்களும், விளம்பரங்களும், நாடகமும் சுவரொட்டிகளும், கடிதங்களும் இன்ன பிறவும் பயன்படுத்தும் இலக்கியமற்ற மொழி இலக்கியமாக புதிய வடிவில் உருமாற்றம் கொள்வதை இந்நூலில் அவதானிக்கலாம்.

### 7810

**ஜெயராஜ்ஜியம்.** ஸ்ரீ பிரசாந்தன். கொழும்பு 6: கம்பவாருதி பொன்விழாச் சபை, 1வது பதிப்பு, நவம்பர் 2007. (கொழும்பு 13: கௌரி அச்சகம், இல. 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).
xiv, 562 + 56 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 1200., அளவு: 21.5x14.5 சமீ.

08.11.2007 அன்ற கொழும்பில் இடம்பெற்ற கம்பவாரிதி ஜெயராஜின் பொன்விழாவில் வெளியிடப்பட்ட இப்பாரிய தொகுப்பு, கம்பன் கழகத்தின் தாபகரும், பிரபல எழுத்தாளரும் பேச்சாளருமான இ.ஜெயராஜ் அவர்களது 28 முக்கிய படைப்புகளை உள்ளடக்குகின்றது. கைவண்ணம் என்ற முதலாவது பிரிவில் திருக்குறள், இராமாயணம், திருவாசகம், தேவாரம், பெரியபுராணம், கந்தரநுபூதி, பாரதம், திருவிளையாடற் புராணம், பாரதியார் ஆகியவை தொடர்பான ஒன்பது ஆன்மீக-இலக்கியக் கட்டுரைகளும், கருத்து வண்ணம் என்ற இரண்டாம் பிரிவில், சிங்களப் பெருமக்களுக்கு, இன்றைய புதுமைப் பெண்களுக்கு, யாழ்ப்பாண இஸ்லாமிய நண்பனுக்கு,

பல்கலைக்கழகத் தமிழ்த் துறையினருக்கு ஆகிய தலைப்புகளில் எழுதிய கண்டனக் கட்டுரைகளும், கிளார்க்கர்ப் புத்தி, வாராதே வரவல்லாய், வாழ்க்கைக் கிரிக்கெட் ஆகிய தலைப்புகளிலான கணிப்புக் கட்டுரைகளும், ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை, நுண்மான் நுழைபுலத் தரிசனம், நல்லதோர்வீணை ஆகிய கௌரவிப்புக் கட்டுரைகளுமாக அமைந்த 10 கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. கதைவண்ணம் என்ற மூன்றாம் பிரிவில் அன்றே எனின் அன்றேயாம், நீள நினைந்து, வேறு வேறுருவம் ஆகிய 3 சிறுகதைகளும், கவிவண்ணம் என்ற பிரிவில் ஆறு கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. காட்சி வண்ணம் என்ற இறுதிப்பிரிவில் கருத்துக் காட்சி, கண்காட்சி ஆகிய தலைப்புகளில் சுமார் 56 பக்கம் கொண்ட பாரிய புகைப்படங்களின் தொகுப்பு அமைகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 625490).

## 899 பிறமொழி இலக்கியங்கள்

### 7811

**மேகதூதக் காரிகை.** காளிதாசர் (மூலம்), அ.குமாரசுவாமிப்பிள்ளை (மொழிபெயர்ப்பாளர்). சுன்னாகம்: அ.குமாரசுவாமிப் பிள்ளை, 3வது பதிப்பு, குரோதன வருடம், தை 1925. 1வது பதிப்பு, 1896. (யாழ்ப்பாணம்: சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில்).
36 பக்கம், விலை: சதம் 60., அளவு: 21x14 சமீ.

வடமொழியில் இருந்த மூலநூலான காளிதாசரின் மேகதூதக் காரிகையை தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். கௌட தேசத்தின் தாராநகரை ஆண்ட அரசன் சிந்துளசஞ்சனின் முதமையின் பின்னர் அவனது அரசாட்சியை தன் தம்பியான முஞ்சன்வசம் ஒப்படைத்து, அறியாப் பருவத்திலிருந்த தன் மகனான போசகுமாரனை அவனது பொறுப்பில் விட்டு இறக்கிறான். குமாரசுவாமிப் புலவர், 1854இல் சுன்னாகத்தில் பிறந்து 1922இல் மரணமெய்தியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் P 2063).

### 7812

**வட மொழி இலக்கிய சோலை.** சிறிகலா ஜெகநாதன். யாழ்ப்பாணம்: சிறிகலா ஜெகநாதன், தலைவர், சமஸ்கிருதத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வெலி, 1வது பதிப்பு, 2010. (கோண்டாவில்: ஸ்ரீசாயி பிரிண்டர்ஸ், கே.கே.எஸ்.வீதி).
(2), 96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

மத்தவிலாசப் பிரஹசனம், காளிதாசரது இலக்கியங்களில் உவமை-ஒரு குறிப்புரை, சம்ஸ்கிருதத்தில் பக்தி இலக்கியம், பரதநாட்டிய சாஸ்திர நோக்கில் காவியவியல் கோட்பாடுகள்-ஓர் ஆய்வு, ரிக்வேதத்தில் பெண்கள், பர்த்திருஹரியின் சதகத்திரயங்கள், சூரிய சதகம் ஆகிய ஏழு கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 191660).

### 7813

**வத்ஸ்யாயநரின் காமசூத்திரம்.** எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600094: அர்ச்சுனா பதிப்பகம், #212A / 156C-2 ஸ்ரீராம் அப்பார்ட்மென்ட்ஸ், சூளைமேடு ஹை ரோடு, 1வது பதிப்பு, ஜுன் 2011. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 சக்ரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு).
100 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 17.5x12 சமீ., ISBN: 978-93-81322-01-7.

வடமொழி இலக்கியங்களுள் காமசாத்திரத்தை விபரிக்கும் நூலான காமசூத்திரம் மிகவும் பெயர்பெற்றது. கி.பி.முதலாம் நூற்றாண்டுக்கும் கி.பி.ஆறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்நூல் வாத்ஸ்யாயநரால் எழுதப்பட்டது. வத்ஸ்யாயநரின் காமசூத்திரம் எஸ்பொவின் கையெழுத்தில் தமிழாக்கம் பெற்றுள்ளது. காமசூத்திரத்தின் பெருமையைப் பரப்புவதல்ல தனது நோக்கம் என்றுகூறும் எஸ்பொ, அதனை மறைத்து வைத்தல் அறிவு மோசடியின்பாற்படும் செயல் என்ற கருத்தை வலியுறுத்துகின்றார்.

## 899.(1) பிறமொழிக் கவிதைகள்

**7814**

**நீண்ட ஒடுங்கிய சாலைகள்: ஒரு கவியோவியப் படைப்பு.** தனுஜா தர்மபால (சிங்கள மூலம்), சுநந்த மகேந்திரா (ஆங்கில மொழிபெயர்ப்பு), சாமிநாதன் விமல் (தமிழாக்கம்). ராஜகிரிய: Inter act Art, 46/3A, Esala Playground Road, Obeysekarapura, 1வது பதிப்பு, ஜுலை 2008. (Rajagiriya: K.S.U.Graphics, 510, Rajagiriya Road).
(12), 120 பக்கம், கோட்டுச் சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 14x16.5 சமீ., ISBN: 978-955-1958-00-8.

தனுஜா தர்மபாலவின் திகு படு மன்பெத் (Digu Patu Manpeth) என்ற சிங்களக்கவிதை மூலநூலின் ஆங்கில தமிழ் மொழிபெயர்ப்புக்கள் கொண்ட பதிப்பு இதுவாகும். By ways short and long என்ற ஆங்கிலத் தலைப்பும் இந்நூலுக்கு வழங்கப்பட்டுள்ளது. புலமை மிக்க தமிழ்-சிங்கள மொழிபெயர்ப்பாளரான விமல் சாமிநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையின் சிங்கள மொழி விரிவுரையாளராவார். இலங்கையின் பிரபல்யமான தேசிய தினசரியான சிலுமினவின் நூல்விமர்சனம், கவிதைப்பிரிவின் பொறுப்பாளரான தனுஜா தர்மபால ரஷ்யாவில் ஐந்தாண்டுகள் இலக்கியத்துறையில் பயின்றவர். ஊடக தொடர்பாடலில் பட்டப்பின்படிப்பை மேற்கொண்டவர். 70 வயதைத்தாண்டிய பேராசிரியர் சுநந்த மகேந்திரா இலங்கையின் ஊடக தொடர்பாடலில் (Mass Communications) முதலாவது பட்டதாரியாவார். இம்மூவரதும் கூட்டுப்படைப்பு இந்நூலாகும்.

**7815**

**மகாகவி தாகூரின் தீங்கனிச் சோலை.** பரமஹம்ஸதாசன். நாவலப்பிட்டி: ஆத்மஜோதி நிலையம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1963. (நாவலப்பிட்டி: ஆத்மஜோதி அச்சகம்).
(2), 160 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.

மகாகவி ரவீந்திரநாத் தாகூரின்பால் அதீத பற்றுதலும், அவரது படைப்புகளின் மீது ஆழமான ரசனையும் கொண்டவர் பரமஹம்ஸதாசன். தாகூரின் Fruit Gathering என்ற நூலை 86 கவிதைகள் கொண்ட மொழிபெயர்ப்பாக தீங்கனிச்சோலை என்ற தலைப்பிட்டு வழங்கியிருக்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 299811).

## 899.(2) பிறமொழி நாடகங்கள்

**7816**

**பொம்மை வண்டி.** சூத்திர மகாகவி (வடமொழி மூலம்), நவாலியூர் சோ.நடராசன் (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: கலைவாணி வெளியீடு, 10 பிரதான வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1964. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், 10 பிரதான வீதி).
xxxiv, 232 பக்கம், விலை: ரூபா 4.50, அளவு: 18.5x12.5 சமீ.

பத்து அங்கங்களைக் கொண்ட வடமொழி நாடகம். சூத்திரகரின் மிருச்சகடிகம் என்ற நூலின் தமிழாக்கம். வடமொழி மூல நூல் 382 சுலோகங்களைக் கொண்டதாகும். உச்சைனியிலுள்ள அந்தண வணிகனான சாருதத்தன் இக்காப்பியத்தின் தலைவனாகவும் வசந்தசேனை என்ற அவ்வூர்க் கணிகை மாது காப்பியத் தலைவியாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர். இவர்களைச்சுற்றி நிகழும் சுவை மிகு சம்பவங்கள் நாடகத்தை நடத்திச் செல்கின்றன. நவாலியூர் சோ.நடராசன் இந்நாடகத்தை எளிய தமிழில் ஈழத்து வாசகர்களுக்காக இலகு நடையில் எழுதியுள்ளார். மிருச்சகடிகம் தமிழகத்தின் நாகபட்டினத்தில் எஸ்.ஏ.பாலகிருஷ்ண ஐயராலும் 1909இல் அதே தலைப்பில் தமிழில் பதிப்பிக்கப்பெற்றது. இது பின்னர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் 2002இல் இரண்டாம் பதிப்பாகவும் வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 77194).

## *899.(3) பிறமொழிக் கவிதை நாடகங்கள், காவியங்கள்*

***7817***

***ஈனக் ஆடன்.*** *லோட் ரென்னிசன் (ஆங்கில மூலம்), ச.சிவஞானசுந்தரம் (மொழிபெயர்ப்பு). யாழ்ப்பாணம்: எஸ்.ஏ.வைத்தியலிங்கம், 1வது பதிப்பு, 1939. (யாழ்ப்பாணம்: சென்.ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).*
xii, *64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18*x*12 சமீ.*

*ஆங்கிலத்தில் செய்யுள் வடிவில் அமைந்த நூலின் தமிழாக்கம் இது. ஈனக் ஆடன் என்ற மீனவனின் கதை இது. அவனது சோக வரலாறு இங்கு காவியமாகப் படைக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28178).*

## *899.(5) பிறமொழி நாவல்கள், குறுநாவல்கள்*

***7818***

***கூனற்பிறை: சீனக்குறுநாவல்.*** *லாவ் ஷ (மூலம்), கே.கணேஷ் (தமிழாக்கம்). கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம், 44, 3வது மாடி, மத்திய சந்தைக் கூட்டுத் தொகுதி, இணை வெளியீட்டாளர், சென்னை 600021: சென்னை புக்ஸ், 6 தாயார் சாஹிபு 2வது சந்து, 1வது பதிப்பு, மார்ச் 1990. (சென்னை 600021: டீ.எம்.ஈ பிரின்டர்ஸ்).*
*75 பக்கம், விலை: இந்திய ரூபா 10., அளவு: 17.5*x*12 சமீ.*

*முப்பதுகளில் சீனத்து வறுமையினை உணர்த்துவதாகவும், விபச்சாரத்தை காமக் கவர்ச்சிகளிலிருந்து பிரித்து வறுமையின் வேர்களில் பீடித்திருப்பதாகவும் இந்நூல் காட்டுவதால் முக்கியத்துவம் பெறுகின்றது. தற்காலச் சீன இலக்கிய வரிசையில் பெய்ஜீங் பிறமொழிப் பதிப்பகம் வெளியிட்ட "தற்காலச் சீனத்துப் புனைகதைகளில் தலைசிறந்த படைப்புக்கள் 1919-1949" என்ற ஆங்கிலத் தொகுப்பிலும் இது இடம்பெற்றுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 460745).*

***7819***

***தாயகம் நோக்கிய பயணம்: இரண்டாம் பாகம்.*** *குழல்-அருளாளன். (இயற்பெயர்: வி.பி.யோசப்). யாழ்ப்பாணம்: ஈழநாதம் வெளியீடு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1992. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
vii, *(4), 446 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 23.5*x*17 சமீ.*

*இஸ்ரேலிய எழுத்தாளர் லியோன் யூறிஸ் (*Leon Uris*) அவர்களின் எக்ஸோடஸ் (*Exodus*) நாவலின் தமிழாக்கம். 2000 ஆண்டுகளுக்கு முன்னர் யூதர்கள் தாம் தொலைத்துவிட்ட தாயகப் பூமியை மீட்டெடுப்பதற்காக நடத்திய போராட்ட வரலாற்றினைப் பகைப்புலமாகக்கொண்ட* Exodus *என்ற இந்த நான்கு பாகங்களிலான நாவலின் முதலிரு பாகங்களும் முதலாவது பாகத்தில் 468 பக்கங்களில் முன்னர் வெளியிடப்பட்டிருந்தது. இந்நூல் அந்த மூலநூலின் பின்னிரு பாகங்களையும் உள்ளடக்கியதாக வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்ப்பகுதிகளில் விதிக்கப்பட்ட அரசின் பொருளாதாரத் தடையினால் பத்திரிகைத்தாள் தட்டுப்பாடான காலகட்டத்தில்* Foolscap *கோட்டுத் தாளில் அச்சிடப்பட்ட நூல்.*

***7820***

***நான் சாகமாட்டேன்.*** *கிருஷன் சந்தர் (உருது மூலம்), செ.கதிர்காமநாதன் (தமிழாக்கம்). கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, நவம்பர் 1972. (கொழும்பு 14:* Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

*(8), 113 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 18x12.5 சமீ.*

*வீரகேசரியில் 1970இல் தொடராக வெளிவந்த இந்த மொழிபெயர்ப்புக் குறுநாவலுடன் அமரர் செ.கதிர்காமநாதனின் சிறந்த பிற சிறுகதைகளான ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான், வெறும் சோற்றுக்கே வந்தது, வியட்னாம் உனது தேவதைகளின் தேவவாக்கு ஆகிய மூன்று கதைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. நூல் அச்சிடப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் ஆசிரியர் மரணமடைந்துவிட்டார். இந்நூல் அவரது நினைவஞ்சலியாக வீரகேசரி பிரசுரத்தினரால் சமர்ப்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம்- கரவெட்டி மேற்கில் 8.3.1942இல் பிறந்தவர் செல்லையா கதிர்காமநாதன். வேதாரணியேஸ்வர வித்தியாலயத்திலும் விக்னேஸ்வராக் கல்லூரியிலும் பயின்றபின் 1961இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1963இல் பட்டதாரியானார். சிலகாலம் ஆசிரியப்பணி புரிந்தபின், 1966 முதல் வீரகேசரி, மித்திரன் ஆகிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். கொட்டும் பணி என்ற இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி 1968இல் வெளிவந்தது. 1969இல் இது சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. 1969இல் திருமணம் முடித்த கதிர்காமநாதன் 1971இல் பத்திரிகைத்துறையிலிருந்து விலகி நிர்வாகசேவையில் இணைந்துகொண்டார். 1.9.1972இல் தனது 30ஆவது வயதில் இவர் இறக்கும்போது கமச்செய்கைத் திணைக்களத்தில் உதவி ஆணையாளராகப் பதவிவகித்தார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35153).*

### 7821

**ஹாத்திம் தாய். பாகம் 2.** C.M.A.அமீன். *கலகெடிஹேன: ரேஷ்மா பதிப்பகம், 348/1, வரபலான வீதி, திஹாரிய, 2வது திருத்திய பதிப்பு, மே 2007, 1வது பதிப்பு, ஜுன் 1999. (கொழும்பு 11: நிசான் பிரின்டர்ஸ், 64*N*, பீர் சாஹிபு வீதி).*
*(6), 122 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20x14 சமீ.,* ISBN: *978-955-1691-01-1.*

*ஹிந்தி மொழியில் வெளிவந்த ஹத்திம் தாயீ என்ற நாவலின் தழுவலாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஹுஸ்ன்பானு என்ற அழகிய இளநங்கை தனது ஏழு கேள்விகளுக்கும் பதில் அளிப்பவரையே மணம் முடிப்பதாகக்கூறி அக்கேள்விகளை ஒரு கற்றூணில் பொறித்து வைக்கிறாள். அவளை நாடி வந்த பலரும் அக்கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாது ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர். குவாரிஸ்ம் நாட்டு இளவரசனான முனீர்சானியும் அவர்களுள் ஒருவன். பதில் தெரியாத சோகத்தில் விரக்தியுடன் காடுகளில் அலைந்து புலம்பித் திரிந்த அவனை அங்கு வேட்டையாட வந்த யெமன் நாட்டு இளவரசன் ஹாத்திம் சந்தித்து அவனுக்கு உதவ முன்வருகிறான். அதன் படி முதலிரு கேள்விகளுக்கும் பதிலளிப்பது வரையில் இந்நூலின் முதலாம் பாகம் வளர்ந்தது. இவ்விரண்டாம் பாகத்தில் இந்நாவல் மூன்றாவது கேள்வியுடன் தொடர்கின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 618754).*

*மேலும் பார்க்க: 7438, 7439, 7445*

## *900 புவியியல், வரலாறுகள்*

## *901 பொது வரலாறுகள்*

### 7822

**ஆசிய ஆப்பிரிக்க ஐரோப்பிய இனங்களின் தனித்துவமான வரலாறுகள்: தொகுதி 1.** *தனபாக்கியம் குணபாலசிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 600094: பி.வி.ஆர். ஆப்செட்).*
xii, *332 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 17.5x12 சமீ.*

*வரலாற்றில் மிதந்துவந்த யூதர் வரலாறுகள், உலக நாடுகளின் வரலாற்றில் பாசியெனப் படர்ந்த யூதர் வரலாறுகள், யூத இனப்படுகொலைகளும் தப்பி வெளியேறியவர்களும், புலம்பெயர் வாழ்வில் வெறுப்படைந்த யூதர்கள் மீண்டும் தாயகம் நோக்கிப் பயணித்தல், இரண்டாம் உலக யுத்தத்தின்பின்*

*யூதர்கள் இஸ்ரேலிய அரசை நோக்கிய பயணம், பிரித்தானியாவின் பூர்வீக வரலாறுகள், சீனாவின் பூர்வீகமும் பழம்பெருமைகளும், ரஷ்யநாடு உருவாகிய வரலாறுகள், பிரான்ஸ் நாட்டின் பூர்வீக வரலாறுகள், யப்பானிய பூர்வீகமும், பிற்கால வரலாறுகளும்,* Open letter to Israel *ஆகிய 11 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

***7823***

***ஆசிய ஆப்பிரிக்க ஐரோப்பிய இனங்களின் தனித்துவமான வரலாறுகள்: பாகம் 2.*** *தனபாக்கியம் குணபாலசிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 600094: பி.வி.ஆர். ஆப்செட்).*
viii, *440 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 18*x*12 சமீ.*

*இரண்டாவது தொகுதியாக வெளிவரும் இவ் வரலாற்று நூலில், இத்தாலி நாட்டின் பூர்வீக வரலாறுகள், கிரேக்கத்தின் பூர்வீக வரலாறுகள், ஜேர்மனியின் பூர்வீக வரலாறுகள், பால்கன் நாடுகளின் வரலாறுகள், இனவிடுதலைப் போராட்டங்கள், சுதந்திர அரசுகள் பற்றி, ஆபிரிக்கக் கண்ட நாடுகளின் பூர்வீக வரலாறுகள், முதலாம் உலக மகாயுத்தம், உலக நாடுகளின் கூட்டமைப்பு, இரண்டாம் உலகப் போர், இரண்டாம் உலகப் போரின் முடிவிற் புதிய உலகத்தை நோக்கிய பயணத்தில் உலகத் தலைவர்கள், ஐக்கிய நாடுகள் சபை, உலக சமாதான நடவடிக்கைகள் ஆகிய பதினொரு கட்டுரைகள் இடம்பெறுகின்றன.*

***7824***

***கருத்தியலும் வரலாறும்.*** *கந்தையா சண்முகலிங்கம், தெ.மதுசூதனன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 7: விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம், 3 டொரிங்டன் அவென்யூ, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2006. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55, ஈ.ஏ.குரே மாவத்தை).*
*120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14 சமீ.*

*வரலாறு பற்றிய கற்கையின் அடிப்படைகளை ஆழப்படுத்தும் வகையில் அமைந்த பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. வரலாறு என்றால் என்ன, இலங்கை வரலாற்றின் பிரச்சினைகளும் வரலாறு பற்றிய பயமும், வரலாற்றியலும் இனத்துவமும், கால்டுவெல்லின் கற்பனைக் குழந்தை, தமிழர் வாழும் பிரதேசங்களும் வரலாற்று மூலங்களும், மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம் வரலாற்று அறிமுகக் குறிப்பு, சித்திரவேலாயுதர் காதல்: சில வரலாற்றுக் குறிப்புகள், தமிழ்ச் சாசனங்களும் வரலாற்று ஆராய்ச்சியும், தமிழ்க் கல்வெட்டுகளும் வரலாறும், எடுத்துரைக்கப்பட்ட நாட்டார் வழக்காறுகளை வகைப்படுத்தல், மாற்று வரலாற்றைத் தேடி, இந்தியாவைப் பற்றி- மார்க்ஸ், இந்தியாவில் வரலாற்று ஆய்வுகள், வரலாறுகளை எழுதுவது என்பது ஆகிய 14 தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40440).*

***7825***

***கலைச்சொற்றொகுதி: வரலாறும் தொல்பொருளியலும்.*** *கா.இந்திரபாலா, ரி.இராசலிங்கம், கி.லக்ஷ்மண ஐயர், சோ.நடராசா, இ.இரத்தினம். கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறிமதிபாயா, ஏணஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, மே 1969. (கொழும்பு: இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களம்).*
iv, *54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24*x*15.5 சமீ.*

*தமிழில் உயர்கல்வி கற்பிப்பதனை ஊக்குவிக்குமுகமாக இத்திணைக்களம் உருவாக்கிய பல்வேறு கலைச்சொற்றொகுதிகளில் இந்நூலும் ஒன்றாகும். கா.இந்திரபாலா- பேராதனை, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்று விரிவுரையாளராகவும், ரி.இராசலிங்கம் - கொழும்பு, சென் ஜோசப் கல்லூரியின் ஆசிரியராகவும், லக்ஷ்மண ஐயர், சோ.நடராசா, இ.இரத்தினம் ஆகியோர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கண்காணிப்பாளர்களாகவும் பணியாற்றுகின்றனர்.*

***7826***

**வரலாறு தரம் 8.** நா.மயில்வாகனம். கொழும்பு: நா.மயில்வாகனம், ஆசிரியர், சென்.தோமஸ் பாடசாலை, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).
82 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 75., அளவு: 21.5x14 சமீ.

2006ம் ஆண்டு அரசாங்கத்தினால் புதிதாக வெளியிடப்பட்ட தரம் 8 வரலாற்று நூலுக்கான குறிப்புகள், பயிற்சிகள், வினாவிடைகள், விளக்கப்படங்களுடன் கூடியதாக எழுதப்பட்டுள்ளது. பாடசாலை மட்டக் கணிப்பீடு (SBA) நிகழ்ச்சித் திட்டத்துக்கமைவானது.

## 910 பொதுப் புவியியல்

### 7827

**ஐரோப்பியப் புவியியல்.** சீன் கொற்மான் (ஆங்கில மூலம்), V.பொன்னுத்துரை, P.பாப்பையா, C.J.இளையதம்பி, V.சுப்பிரமணியம் (மொழிபெயர்ப்பாளர்கள்). கொழும்பு 7: அரசகரும மொழித் திணைக்களம், வெளியீட்டுப் பிரிவு, 421 புல்லர்ஸ் வீதி, 1வது பதிப்பு, 1965. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).
xvi, 872 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x15.5 சமீ.

Jean Gottmann எழுதிய A Geography of Europe என்ற நூலின் 1954ம் ஆண்டுக்கான புதுக்கிய பதிப்பின் தமிழாக்கம் இதுவாகும். ஐரோப்பாவின் பொது உறுப்புக்கள் (பௌதிக அமைப்பு மாதிரி, மனிதன் நிலத்தை ஆட்சிகொண்டமை, மூலவளப் பயன்பாடு), மேற்கு ஐரோப்பா(மேற்கு ஐரோப்பாவின் தனிப்பண்பு, கந்தினேவிய நாடுகள், பிரித்தானியத் தீவுகள், பெநெலட்சு நாடுகள், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து), மத்திய ஐரோப்பா(ஐரோப்பாவின் உறுதியில்லாத நாடுகள், பின்னிலாந்து, சேர்மனி, போலந்தும் செக்கொஸ்லவாக்கியாவும், தானியூப்பு நாடுகள்-ஒஸ்ரியா, ஹங்கேரி, உருமேனியா), மத்தியதரை ஐரோப்பா (மூன்று தீபகற்பங்களும் பல தீவுகளும், ஸ்பெயினும் போர்த்துக்கல்லும், இத்தாலி, போல்கன் தீபகற்பம்), கிழக்கு ஐரோப்பாவும் சோவியத்துக் கூட்டரசும் (ஐரோப்பிய ரஷ்யா, கரையோர சோவியத் குடியரசுகள், பேரிரஷ்ய நிலப்பரப்பு), முடிவுரை (ஐரோப்பாவின் இருமையும் ஒருமையும்) ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7828

**குடியியற் கல்வி தரம் 8: வினா-விடைகள்.** K.M.M.இக்பால். கிண்ணியா: K.M.M.இக்பால், ஆசிரிய ஆலோசகர் (சமூகக் கல்வி), 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2006. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
104 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x15 சமீ., ISBN: 955-1013-82-4.

2006ஆம் ஆண்டில்அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தைத் தழுவி எழுதப்பட்ட நூல். கணிப்பீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. எங்கள் பகுதியில் பொதுச்சேவைகள், சனநாயகக் கோட்பாடுள்ள சமுதாயம், பன்முக கலாச்சாரம் கொண்ட சமுதாயம், தற்காலப் பிரச்சினைகள் ஆகிய நான்கு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7829

**தரம் 7: குடியுரிமைக் கல்வி, புவியியல்.** நா.மயில்வாகனம். கொழும்பு: நா.மயில்வாகனம், ஆசிரியர், சென்.தோமஸ் பாடசாலை, 1வது பதிப்பு, ஜுலை 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).
96 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 21.5x14 சமீ.

2005இல் புதிதாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட குடியுரிமைக்கல்வி/புவியியல் நூல்களுக்கான குறிப்புகள்/பயிற்சிகள், வினா/விடைகள், கணிப்பீட்டுப் பயிற்சிகள் என்பவற்றை உள்ளடக்கிய நூல். பாடசாலை மட்டக் கணிப்பீடு (SBA) நிகழ்ச்சித் திட்டத்துக்கமைவானது.

மேலும் பார்க்க: 7360

## *911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள்*

***7830***

***அவுஸ்திரேலியப் பயணக் கதை.*** *தி.ஞானசேகரன். கண்டி: ஞானம் பதிப்பகம், 19/7, பேராதனை வீதி, 1வது பதிப்பு, மார்கழி 1999. (பிலிமத்தலாவை: Green Leaf Print House, 416, கொழும்பு வீதி).*
*118 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-8354-01-5.*

*சுமார் 50000 இலங்கைத் தமிழர்கள் அவுஸ்திரேலியாவில் குடியேறியிருந்ததாகக் கருதப்பட்ட வேளையில் அவர்களைப்பற்றி அறிவதில் ஞானசேகரன் ஆர்வம் காட்டியுள்ளார். புதிய சூழலில் அவர்களின் வாழ்க்கை அமைந்துள்ள வாற்றையும், தமது ஆன்மீக, உலகியல் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டும் கோவில்களையும் கல்வி நிலையங்களையும் கலை-இலக்கிய மன்றங்களையும் அவர்கள் அமைத்துள்ளவாற்றையும் வைத்திய கலாநிதி தி.ஞானசேகரன் இந்நூலில் எடுத்துக்காட்டியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30513).*

***7831***

***குமரி முதல் சென்னை வரை: 1963-1964: பயணக்கதை.*** *நவம். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2006. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை).*
*136 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 21.5x14 சமீ., ISBN: 81-89748-21-1.*

*ஆரையம்பதி நவம் என்று இலக்கிய உலகில் அறியப்பட்டவர் நவம். சுதந்திரன், வீரகேசரி, தினகரன், தினபதி, சிந்தாமணி, கல்கி, குண்டூசி முதலிய பத்திரிகைகளில் சுவையான பல படைப்புகளை வழங்கியவர். 1963இல் நிகழ்ந்த தனது இந்தியப் பயண அனுபவங்களைச் சுவையான தொடராக்கி சுதந்திரன் பத்திரிகையில் எழுதியிருந்தார். அத்தொடரின் நூலுரு இதுவாகும்.*

***7832***

***சம்மாந்துறை முதல் அஸர்பைஜான் வரை.*** *அபுநஜாத். தெகிவளை: பாதை பப்ளிக்கேஷன்ஸ், 39 அல்பேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, மே 1990. (சென்னை 600030: சௌந்தரி ஓப்செட் பிரஸ்).*
*(4), 168 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 18x12 சமீ.*

*நூலாசிரியர் 1984இல் தான் மேற்கொண்டிருந்த ஈரான் நாட்டுக்கான பயணம் தொடர்பான அனுபவங்களை இந்நூலில் ஒரு பயணக்கதையாக கவிநயத்துடன் எழுதியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21539).*

***7833***

***தாய்லாந்தின் தலைநகரிலே: பிரயாண அனுபவங்கள்.*** *எஸ்.எம்.கமாலுத்தீன். சென்னை: பாரி நிலையம், 59 புரோட்வே, 1வது பதிப்பு, டிசம்பர் 1968. (சென்னை 14: மாருதி அச்சகம், 83 பீட்டர்ஸ் சாலை).*
*83 பக்கம், வரைபடம், விலை: ரூபா 1.75, அளவு: 18x12.5 சமீ.*

*சைக்கோனில் நடைபெற்ற இளைஞர் மகாநாடொன்றிற்குச் செல்லும் வழியில் தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் தங்கிச் செல்லும் வாய்ப்புப் பெற்றிருந்த கொழும்பு பொது நூலகத்தின் நூலகர் திரு. எஸ்.எம்.கமால்தீன் அவர்கள் தனது பிரயாண அனுபவ நினைவுகளை சில கட்டுரைகளின் வாயிலாக வீரகேசரி வாரமலரில் வெளியிட்டு வந்தார். அக்கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும். சியாம் என்ற புராதனப் பெயரைக்கொண்ட தாய்லாந்தின் நிலப்பரப்பு 198500 சதுர மைல்களாகும். பௌத்தத்தை பிரதான மதமாகக் கொண்ட இந்நாட்டில் சியாம் மற்றும் சீன மொழிகள் பேசப்படுகின்றன.*

***7834***

**தென்னகத்தில் என்னகத்தார்.** வி.கந்தவனம். சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).
160 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 75., அளவு: 22x14 சமீ., ISBN: 978-0-9559585-0-2.

கவிநாயகர் வி.கந்தவனம் அவர்கள் கனடாவிலிருந்து தென் இந்தியாவுக்குத் தான் மேற்கொண்ட பயணத்தின்பொது சந்தித்தவர்கள் பற்றி இப்பயணக்கட்டுரை நூலில் விரிவாகப் பதிவுசெய்திருக்கிறார். திரு சங்கர் - மீரா தம்பதிகள், வைத்தியர்கள் ஆதிசேசையா-உஷா தம்பதிகள், கலாநிதி பிரபாகர் தம்பதிகள், வண.சாந்தலிங்க இராமசாமி அடிகளார், மறவன்புலவு திரு க.சச்சிதானந்தன், கலைஞர் மு.கருணாநிதி, பரிசளிப்பு விழாவிற் பழகிய முகங்கள், கவிவேந்தர் கா.வேழவேந்தன், கலைமாமணி டி.கே.எஸ்.கலைவாணன், கலைமாமணி பழநி இளங்கம்பன், முனைவர் ஔவை து.நடராசன், உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன், சைவத்திரு. முருகு இராமலிங்கம், வண.பங்காரு அடிகளார், முனைவர் அரங்க. இராமலிங்கம், திரு வா.மு.சே.திருவள்ளுவர், பாராட்டு விழாவிற் பரிசளித்த பண்பாளர், திரு சா.கணேசன், கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன், திரு செல்ல.வசந்தராசன் ஆகிய தலைப்புகளில் 20 பேர் பற்றிய இனிய நினைவுப்பதிவுகளை மேற்கொண்டுள்ள கவிஞர் இந்நூலில் தான் தரிசித்த  காசிநாதர், பருபதப் பெருமான், பேரூர்ப் பெருமான், தியானலிங்கர், மருந்தீசுவரர் ஆகியோர் பேரில் இயற்றிய பாவாரங்களையும் பின்னிணைப்பாக்கியுள்ளார். கனடாவில் அவரது பவளவிழாவை முன்னிட்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் பார்க்க: 7796

## 915 பிரதேசப் புவியியல்

### 7835

**பள்ளி மாணவர்களுக்கான நிலவரை: உலகம்.** க.சச்சிதானந்தன் (பதிப்பாசிரியர்). சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை, 3வது பதிப்பு, தை 2009, 1வது பதிப்பு, தை 2004, 2வது பதிப்பு, ஆவணி 2005. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).
80 பக்கம், வரைபடங்கள், விலை: இந்திய ரூபா 75., அளவு: 28x22 சமீ., ISBN: 978-81-89708-23-8.

இந்தியா (தரைத்தோற்றம், வெப்பநிலை, மழைவீழ்ச்சி, அரசியல், மக்கள் தொகை), தமிழ்நாடு (தரைத்தோற்றம், வெப்பநிலை, மழைவீழ்ச்சி, ஆட்சிப் பிரிவும் போக்குவரத்தும், மக்கள் தொகை) ஆகிய தகவல்களை முற்பகுதியிலும், உலகம் பற்றிய புவியியல் நிலவரை தகவல்கள் பல்வேறு தலைப்புகளில் பிரதான பகுதியிலும் தரப்பட்டுள்ளது. தெற்காசிய கூட்டமைப்பு, இந்துப் பெருங்கடல், ஆசியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பசிபிக் கடல் தீவுகள், துருவப் பகுதிகள், ஆபிரிக்கா, ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய பிரிவுகளுக்கான அடிப்படைத் தகவலை முதலில் வழங்கி, தொடர்ந்து முழு உலகரீதியில் தரைத்தோற்றம், வானிலை கடல் நீரோட்டம், இயற்கைத் தாவரம், கனிமவளம், தரைக்கட்டமைப்பு, நில நடுக்கம், எரிமலை, அரசியல், ஐக்கிய நாடுகள்- அமைப்பு, நாடுகள், மக்கள் தொகை, பரப்பளவு, மக்கள் தொகை அடர்த்தி, மக்கள் தொகை வளர்ச்சிவீதம், எதிர்பார்ப்பு வாழ்வு வயது, மொழிக் குழுக்கள், சமயக் குழுக்கள், தமிழரின் வரலாற்றுப் பயணங்கள், பொருளாதாரம், பொருண்மிய வளர்ச்சி நிலை, வறுமைக்கோட்டின் கீழ், எழுத்தறிவு, எய்ட்ஸ் நோய் பரம்பல், தனி ஒருவருக்குக் கிடைக்கும் நன்னீர், தனி ஒருவருக்குச் சக்திப் பயன்பாடு, முல்லை நில வளம், நன்செய் நிலவளம், வேளாண் உணவு உற்பத்தி, கடற்றொழில், மீன்பிடித்தல், ஆகிய தலைப்புகளின்கீழ் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 7836

**பள்ளி மாணவர்களுக்கான நிலவரை: திருநெல்வேலி மாவட்டம்.** ப.கோமதிநாயகம் (பதிப்பாசிரியர்), க.சச்சிதானந்தன் (தயாரிப்பு). சென்னை 600002: காந்தளகம், 834 அண்ணா சாலை, 1வது பதிப்பு, சித்திரை 2002. (சென்னை 600002: காந்தளகம், 834 அண்ணா சாலை).
32 பக்கம், வரைபடங்கள், விலை: இந்திய ரூபா 35., அளவு: 28x22 சமீ.

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தின் திருநெல்வேலி மாவட்டத்தின் நிலவரைபடங்கள் பாடசாலை மாணவர்களின் உசாத்துணைப் பயன்பாட்டுக்காக இந்நூலில் பதிவுபெற்றுள்ளன. தரைத் தோற்றம்,

வெப்பநிலை, மழைவீழ்ச்சி, மண்வளம், கனிமவளம், இயற்கைத் தாவரம், நிலப்பயன்பாடு, நீர்ப்பாசனம், விளைநிலம், கால்நடை, மக்கள் தொகை, மருத்துவம், எழுத்தறிவு, கல்வி, சுற்றுலா, ஆட்சிப் பிரிவு, போக்குவரத்து, வரலாறு ஆகிய பிரிவுகளின்கீழ் இவ்வரைபடங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களாக இந்தியா (தரைத்தோற்றம், வெப்பநிலை, மழைவீழ்ச்சி, அரசியல், மக்கள் தொகை), தமிழ்நாடு (தரைத்தோற்றம், வெப்பநிலை, மழைவீழ்ச்சி, ஆட்சிப் பிரிவு, போக்குவரத்து, மக்கள் தொகை), உலகம் (அரசியல், ஐக்கிய நாடுகள்- அமைப்பு, உலக நாடுகள்- மக்கள்தொகை, பரப்பளவு) ஆகிய வரைபடங்களும் தரப்பட்டுள்ளன. மாணவர்களின் உசாத்துணைத் தேவைக்காக பொருத்தமான சுட்டியொன்றும் நூலின் இறுதியில் காணப்படுகின்றது.

## 920 வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள்

### 7837

**ஆழப் பதிந்த வேர்கள்.** ஆ.சி.நடராஜா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: தினக்குரல் பொய்கை, 336 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: சுரபி அச்சகம்).
viii, 90 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் தினசரியான தினக்குரலில் கல்விச் சாளரம் என்ற பத்தியில் வெளிவந்த **மறக்க முடியுமா?** என்ற கட்டுரைத் தொடரின் நூல் வடிவம் இதுவாகும். பல்துறைசார்ந்த ஈழத்தமிழ் சமூக சிந்தனையாளர்களது வாழ்வில் நிகழ்ந்த மறக்கமுடியாத அனுபவங்களாகவும் பயனுடைய படிப்பினையாகவும் இதிலுள்ள 49 கட்டுரைகளும் அமைந்துள்ளன.

### 7838

**நிதங்களின் தரிசனம்: பகுதி 1.** பேரின்பபுஷ்பராணி ஜோர்ஜ் (புஷ்பராணி ஜோர்ஜ்). ஜேர்மனி: அமரர் திருமதி லூர்த்தம்மா யோசேப் அவர்களின் ஞாபகார்த்த மலர், 1வது பதிப்பு, 2010 (ஜேர்மனி: அச்சக விபரம் தரப்படவில்லை).
(68) பக்கம், புகைப்படங்கள், விலை: அன்பளிப்பு, அளவு: 21x15 சமீ.

வடமராட்சி பருத்தித்துறையைச் சேர்ந்த அமரர் திருமதி லூர்த்தம்மா யோசேப் (27.12.1919-13.6.2009) அவர்களினதும் சீந்திப்பந்தல், மாரீசன்பதி, இளவாலையில் பிறந்த தாவீதுப்பிள்ளை ஜோசப் (05.08.1905- 10.03.1970) தம்பதியினரின் ஞாபகார்த்த மலர். கிறிஸ்தவ ஆராதனைப்பாடல்களுடன் மேற்படி தம்பதியரினது வாழ்க்கை வரலாறு, பரம்பரைப் பெருமைகளைப் பதிவதுடன் இந்நூல் மாரீசன்கூடல் பற்றிய பிரதேச வரலாற்றினையும் ஓரளவு பதிவுசெய்கின்றது.

### 7839

**நிதங்களின் தரிசனம்: பகுதி 2.** புஷ்பராணி ஜோர்ஜ். ஜேர்மனி: P.George, Goethe Str 18 a, 59065 Hamm, 1வது பதிப்பு, 2010 (ஜேர்மனி: அச்சக விபரம் தரப்படவில்லை).
72 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 21x15 சமீ.

இவ்விரண்டாம் பாகத்தில் முழுமையாக ஒரு குடும்பத்தின் ஏழு தலைமுறைக்கான சந்ததி வரலாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

### 7840

**வாழ்வோரை வாழ்த்துவோம் 1991: முதல் முஸ்லிம் கலாசார விருது விழா 1991.** மானா மக்கீன் (பதிப்பாசிரியர்). கொழும்பு: முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, 1வது பதிப்பு, 1991. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).
xviii, 100 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சராக அல்ஹாஜ் A.H.M.அஸ்வர் பணியாற்றிய வேளையில் அறிமுகப்படுத்திய நிகழ்வு இது. பொற்கிழியும், பத்திரமும், விருதும் ஒருங்கே வழங்கி கௌரவிக்கப்படும் இந்நிகழ்வில் இஸ்லாமியர்களான பாவலர்கள், நாவலர்கள்,

நாவலாசிரியர்கள், நாடகாசிரியர்கள், தயாரிப்பாளர்கள், வானொலிப் பாடகர்கள், மேடைக் கலைஞர்கள், இசையமைப்பாளர்கள், நிழற்படப்பிடிப்பாளர்கள், ஓவியமணிகள் என இருபத்தெண்மர் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். அவ்வகையில் நடந்தேறிய முதலாவது முஸ்லிம் கலாசார விருதுவிழாவில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும்.

**7841**

**வாழ்வோரை வாழ்த்துவோம் 1992: முஸ்லிம் கலாசார விருது விழா 1992.** கலைவாதி கலீல், F.M.பைரூஸ் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, 1வது பதிப்பு, 1992. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).
140 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சராக அல்ஹாஜ் A.H.M.அஸ்வர் பணியாற்றிய வேளையில் அறிமுகப்படுத்திய நிகழ்வு இது. இரண்டாவது ஆண்டாக பொற்கிழியும், பத்திரமும், விருதும் ஒருங்கே வழங்கி கௌரவிக்கப்படும் இந்நிகழ்வில் இஸ்லாமியர்களான பாவலர்கள், நாவலர்கள், நாவலாசிரியர்கள், நாடகாசிரியர்கள், தயாரிப்பாளர்கள், வானொலிப் பாடகர்கள், மேடைக் கலைஞர்கள், இசையமைப்பாளர்கள், நிழற்படப்பிடிப்பாளர்கள், ஓவியமணிகள் என இருபத்தொன்பது பிரமுகர்கள் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். அவ்வகையில் நடந்தேறிய இரண்டாவது முஸ்லிம் கலாசார விருதுவிழாவில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும்.

**7842**

**வாழ்வோரை வாழ்த்துவோம் 1993: முஸ்லிம் கலாசார விருது விழா 1993.** விருது விழாக் குழு (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, 1வது பதிப்பு, 1993. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).
210 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சராக அல்ஹாஜ் A.H.M.அஸ்வர் பணியாற்றிய வேளையில் 1991இல் அறிமுகப்படுத்திய நிகழ்வு இது. மூன்றாவது ஆண்டாக பொற்கிழியும், பத்திரமும், விருதும் ஒருங்கே வழங்கி கௌரவிக்கப்படும் இந்நிகழ்வில் இஸ்லாமியர்களான பாவலர்கள், நாவலர்கள், நாவலாசிரியர்கள், நாடகாசிரியர்கள், தயாரிப்பாளர்கள், வானொலிப் பாடகர்கள், மேடைக் கலைஞர்கள், இசையமைப்பாளர்கள், நிழற்படப்பிடிப்பாளர்கள், ஓவியமணிகள் என முப்பத்தைந்து பிரமுகர்கள் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். அவ்வகையில் நடந்தேறிய மூன்றாவது முஸ்லிம் கலாசார விருதுவிழாவில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும்.

## 920.01 துறைசாரா வாழ்க்கைவரலாறுகள்

**7843**

**நம்ம ஊரவங்க: கலை இலக்கியத் துறையில் கால் பதித்தவர்களின் விபரத் திரட்டு: பாகம் 1.** உடப்பூர் வீரசொக்கன். உடப்பு: உடப்பூர் இளம் தாரகை வட்டம், 1வது பதிப்பு, ஜுலை 2010. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).
ix, 100 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ.

பிரதேச வரலாற்றை அறிய உதவும் நூல். இந்நூலில் உடப்பூர் பிரதேசத்து நாடகக் கலைஞர்கள், வில்லிசை மன்னர்கள், மரபுவழி இசைக் கலைஞர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், சிற்பக் கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள், ஆன்மீகவாதிகள், தொண்டர்கள் எனப் பலதரப்பட்டோரின் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. முப்பது கலைஞர்கள், விளையாட்டு அரசியல் துறையைச்சேர்ந்த பத்து பிரமுகர்கள் ஆகியோரின் விபரங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49535).

**7844**

**முக்கியஸ்தர்களின் முகவரிகள்.** மொழிவாணன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: நவரசம் வீடியோ வெளியீடு, 104/36 சங்கமித்த மாவத்தை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1994. (கொழும்பு 2: Crescent Publications Ltd.)
x, 124 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 17x12 சமீ.

இலங்கையில் பிரபல்யமானவர்களின் பெயர், முகவரி, புகைப்படம், ஆகியவற்றுடன் அவர்கள் சார்ந்துள்ள துறைகள், மற்றும் பெற்ற விருதுகள் பற்றிய குறிப்புகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் திருத்திய பதிப்பாக மேலும்பல விபரங்களுடன் 268 பக்கங்களுடன் 2003இல் வெளியான இவரது மற்றுமொரு நூலுக்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4824.

### 7845

**மேன்மக்கள் சரித்திரம்.** சு.இரத்தினசாமி ஐயர். கொழும்பு: சு.இரத்தினசாமி ஐயர், புதிய அரசினர் பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர், கொம்பனித் தெரு, 1வது பதிப்பு, தை 1930. (கொழும்பு: மீனாம்பாள் அச்சியந்திரசாலை).
(12), 6, 112 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

**மேன்மக்கள் சரித்திரம்.** சு.இரத்தினசாமி ஐயர் (மூலம்), க.சண்முகலிங்கம் (பதிப்பாசிரியர்), கொழும்பு 4: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248 1/1 காலி வீதி, 2வது பதிப்பு, 2008, 1வது பதிப்பு, 1930. (கொழும்பு 13: கௌரி அச்சகம்).
I-xliii, 334 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ.

நூலாசிரியர் சு.இரத்தினசாமி ஐயர் தம் சமகாலத்தில் மேல்நிலையில் வாழ்ந்த பெருமக்கள் சரித்திரத்தை இந்நூலில் கூறியுள்ளார். இப்பெருமக்களில் சிலர் நூலாசிரியருக்கு ஓரிரு தலைமுறைகள் முற்பட்டவர்களெனினும் ஐயரவர்களின் சமகாலத்தில் மேல்நிலை பெற்றிருந்த குடும்பங்களைச் சேர்ந்தோராவர். கொழும்பு சென். தோமஸ் கல்லூரியில் கல்விகற்ற ஐயரவர்கள் பின்னர் சென் பிரிட்ஜட் கல்லூரியின் ஆசிரியராகவும், கொழும்பு கொம்பனித்தெரு புதிய அரசினர் பாடசாலையின் தமிழ்ப்பண்டிதராகவும் பணியாற்றியவர். Biographies of Great Tamil men in Ceylon என்ற ஆங்கிலத் தலைப்பும் இந்நூலில் காணப்படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46332).

### 7846

**விலைமதித்தற்கரிய ஒரு கோப்பை தேநீர்.** கே.ரீ.பெரியதம்பி. வல்வெட்டித்துறை: சிவசக்தி, சிவன் கோவில் தெரு, 1வது பதிப்பு, ஜனவரி 2011. (கனடா: Apex Creations, 50 Nashdene Road, Unit 103, Scarborough, Ontario, ON M1V 5J2).
114 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.

நூலாசிரியர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அச்சுவேலிப் பிரதேசத்திலுள்ள கதிரிப்பாய் கிராமத்தைச் சேர்ந்தவர். 1988ம் ஆண்டு முதல் குடும்பத்தினருடன் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்துவருகின்றார். தனது வாழ்வின் சில பக்கங்களை இரைமீட்டுத் தன் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளும் வகையில் இந்நூலை எழுதியுள்ளார். கனடாவிலிருந்து கதிரிப்பாய் வரை என்ற தலைப்பில் இவர் எழுதி முற்றுப்பெறாதுள்ள ஒரு நூலின் ஒரு இயலாக இவர் **அரசியல் நண்பர்கள்** எனக் குறித்து எழுதிய பகுதியைத் தனி நூலாக இங்கு வெளியிட்டிருக்கிறார். தான் சந்தித்து உறவாடிய அரசியல்வாதிகளான தந்தை செல்வா, சீ.வன்னியசிங்கம், இளைப்பாறிய நீதவான் சீ.எக்ஸ். மார்ட்டின் மற்றும் தன் மாமனார் ஏ.கே.இராமலிங்கம் ஆகியோர் பற்றிய மலரும் நினைவுகளைச் சுவையாகப் பதிவுசெய்திருக்கிறார். பின்னிணைப்பாக, **நேயர் விருப்பம்** என்ற பிரிவில் தான் ரசித்த திரைப்பட, தனிப்பாடல்களையும், **தமிழ் மக்களுக்கு** என்ற தலைப்பில் தமிழர் வருடப்பிறப்பு, தமிழர் பண்பாடு காத்தல், புலால் உண்ணாமை போன்ற தனது கருத்துக்களையும் வழங்கியிருக்கிறார்.

## 921 மெய்யியலாளர்

**7847**

**தத்துவ உலகில் தடம்பதித்த பண்டிதர் மு.கந்தையா.** க.கணேசலிங்கம். லண்டன் E17 6HZ: மெய்கண்டார் ஆதீனம், உலக சைவப் பேரவை, தலைமையகம், 72, King Edward Road, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2002. (சென்னை 5: மாசறு DTP, 45, பார்த்தசாரதி நாயுடு தெரு, திருவல்லிக்கேணி).
52 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 22x14 சமீ.

இந்நூல் 10.6.1917இல் பிறந்து, 10.07.2002இல் சிவபதமடைந்த ஏழாலையூரைச் சேர்ந்த சைவசித்தாந்த பேரறிஞர் பண்டிதர் கலாநிதி மு.கந்தையா அவர்களுக்கு நினைவாஞ்சலி செலத்தும் வகையில் வெளியிடப்பட்டது. பண்டிதர் ஓர் அறிமுகம், பண்டிதர் வந்த பாரம்பரியம், ஞானப்பிரகாசரும் சிவசமவாதமும், பேரின்பத்துக்கு ஆணவம், தத்துவ விசாரணை, ஹவாய் ஆதீனத்தின் கருத்து வேறுபாடு, மலேசியாப் பணி, சைவத்தின் மறுமலர்ச்சி, அடிக்குறிப்பு ஆகிய ஒன்பது பிரிவுகளாக இந்நூல் வகுக்கப்பட்டு இப்பெரியாரது வாழ்வும் பணியும் விபரிக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் சித்தாந்தரத்தினம் கலாநிதி க.கணேசலிங்கம் அவர்கள், லண்டன் மெய்கண்டார் ஆதீனப் புலவராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 149500).

## 922 சமயத் தலைவர், சிந்தனையாளர்

**7848**

**ஆறுமுக நாவலர்: நாவலர் நூற்றாண்டு நினைவு மஞ்சரி.** சி.கணபதிப்பிள்ளை. சாவகச்சேரி: இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் தென்மராட்சி பாராட்டுவிழாச் சபை, 1வது பதிப்பு, ஜுலை 1979. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம்).
xx, (6), 174 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18x12.5 சமீ.

பண்டிதமணி அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலக்கியக் கலாநிதிப் பட்டம் முதலாவதாக வழங்கியமையை சிறப்பித்து அவரைப் பாராட்டும் நோக்கில் பண்டிதமணி அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஆறுமுக நாவலர் பற்றி எழுதிய இருபத்தியேழு கட்டுரைகளைத் தேடித் தொகுத்து அவற்றை தென்மராட்சி பாராட்டுவிழாச் சபை நூலுருவாக்கியுள்ளது. இவற்றைத் தேடிச்சேகரித்து வழங்கியவர்கள் வேலணையூர்ப் பண்டிதர் ச.சிதம்பரப்பிள்ளை, நீர்வேலியூர்ப் பண்டிதர் இ.சிதம்பரப்பிள்ளை என்போராவர். இக்கட்டுரைகளில் ஆறுமுக நாவலர் பெருமானின் உண்மைப் பண்புகளை, கலாநிதி அவர்கள் சிந்தனை உலகத்தில் நின்று தமக்கே இயல்பாயமைந்த சீரிய உரைநடையில் எழுதியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 337251).

**7849**

**ஆறுமுக நாவலரவர்கள் சரித்திரம்.** சிவகாசி-அருணாசலக் கவிராயர் (இயற்றியவர்), சி.கணபதிப்பிள்ளை (பதிப்பாசிரியர்). சாவகச்சேரி: சி.கணபதிப்பிள்ளை, மட்டுவில், 2வது பதிப்பு, 1934, 1வது பதிப்பு, 1898. (பருத்தித்துறை: கலாநிதி யந்திரசாலை).
98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

"யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சரிதம்" என்ற இந்நூலின் மூலப்பதிப்பு சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான் இராமசாமிக் கவிராயரின் குமாரரான சிவகாசி-அருணாசலக் கவிராயரால் இயற்றப்பட்டு திருநெல்வேலி மகாவித்துவான் வெ.ப.சுப்பிரமணிய முதலியாரவர்களால் பரிசோதிக்கப்பட்டு சேற்றூர்ச் சமஸ்தானம் மனேஜரவர்களான ஸ்ரீ இராக்கப்ப பிள்ளையவர்களின் நிதியுதவியால் சென்னை அல்பீனியன் அச்சுக்கூடத்தில் 1898இல் பதிப்பிக்கப்பட்டது. பிரதிகள் கிடையாத நிலையில் இவ்வரிய செய்யுள்வடிவிலான நூல் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் மட்டுவில் சி.கணபதிப்பிள்ளையவர்களால் மீள்பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37536).

**7850**

**ஆன்மீகத்தில் அகவை நூறு.** *மலர்க் குழு. தெகிவளை: திரு., திருமதி அருமைத்துரை, 19, கம்பல் இடம், 1வது பதிப்பு, ஜுலை 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*(4), 138 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.*

*கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை ஸ்தாபகர் திரு. இ.தம்பித்துரை அவர்களின் 100ஆவது ஆண்டு நிறைவு நன்னாளில் இந்நூல் 42 கட்டுரைகளுடன் அவரது சேவைநலன் பாராட்டும் வகையில் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44428).*

### 7851

**சாயி வந்தனன் வாழ்வு தந்தனன்.** *வே.வரதசுந்தரம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*
xxviii, *128 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12 சமீ.*

*திருக்கோணமலை எழுத்தாளரான வே.வரதசுந்தரம் 1959 முதல் திருக்கோணமலை, கொழும்பு, யாழ்ப்பாணம் (உடுவில்) ஆகிய பகுதிகளில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். தினபதி-சிந்தாமணி பத்திரிகைகள் மூலம் எழுத்தாளராக அறிமுகமான இவர், 2000 ம் ஆண்டு வரை சண், ஐலண்ட் ஆங்கில நாளேடுகளின் திருக்கோணமலை மாவட்ட செய்தியாளராகவும் பணியாற்றியவர். பகவான் சத்திய சாயி பாபாவின் தீவிர பக்தரான இவர் பிரசாந்தி நிலையத்தில் ஆனைமுகத்தன், நடமாடி வருவார் சுவாமி, பாபாவைப் பார்த்தால் போதும் துயரங்கள் பறந்தே போகும், விபூதி சுந்தரர், பாபாவின் முதல் மடல், நின்தாள் சதம், அவர் அன்புக்குப் பாத்திரர் ஆவோம், விட்டுப்பிரிய மனம் வராது, அனைத்தும் அறிபவர், ஜப்பானிய சாயி பக்தரை ஈர்த்த விநாயகர், விமானச்சீட்டு அனுப்பினார், வேண்ட முழுதுந் தருவார், புற்றுநோய் அற்றுப் போயிற்று, பிரிந்த உயிர் மீண்டது, பாபாவே தஞ்சம், உயிர்களிடத்து அன்பு வேணும், நோவில் இருந்து-நோயில் இருந்து-சாவில் இருந்தும் காக்கும் சுவாமி, கைகொடுப்பார் சுவாமி, விளையாட்டு மூலம் ஆன்மீகம், சுவாமி வரும் அருள் தரும், மரண பயம் மாய்கிறது, புதுமையான அறுவை சிகிச்சை, ஆற்றுமண் பகவத் கீதை நூலான அதிசயம், கருணாமூர்த்தி சுவாமி, எதைக் கைவிடுவது, எதைக் கைக்கொள்வது, வாயில்லா ஜீவனை வதையாதீர், பாபா கூறும் கிரகஸ்தம், பாபா வாய்மொழிகள், ஸ்ரீசாயி கொடிப்பாட்டு, பாபா அஷ்டோத்திரம், நன்றி-நன்றி-நன்றி ஆகிய தலைப்புகளில் அமைந்த 31 ஆன்மீகப் படைப்புகளின் தொகுப்பு.*

### 7852

**சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்வியற் பணிகள்.** *ஐ.தி.சம்பந்தன் (தொகுப்பாசிரியர்). லண்டன்: சைவ முன்னேற்றச் சங்கம்,* 2, Salisbury Road, Manor Park, London E12 6AB , *1வது பதிப்பு, மார்ச் 2011. (சென்னை 600094: உலகத் தமிழர் பதிப்பகம், 4, சௌராஷ்டிரா நகர், 7ஆம் தெரு, சூளைமேடு).*
*224 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22.5x15 சமீ.*

*சிவத்தமிழ்ச் செல்வியின் வாழ்வியல் பணிகளை பல்வேறு தளங்களிலும் பார்வைக்கோணங்களிலும் நின்று வாழ்த்தியும், மதிப்பீடு செய்தும் வெளிவந்துள்ள 19 கட்டுரைகளையும் அம்மையாரின் பேருரைகளினதும் ஆக்கங்களினதும் தேர்ந்த ஒன்பது கட்டுரைகளையும் உள்ளடக்கியுள்ள நூல் இது. ஒரு ஆன்மீகவாதியாகவும், சமூக சேவையாளராகவும், கல்வியியலாளராகவும், தலைசிறந்ததொரு நிர்வாகியாகவும் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வாழ்ந்து மறைந்திருக்கிறார். சிவத்தமிழ்ச் செல்வியின் வாழ்வும் பணிகளும் அவரின் வாழ்நாட்காலத்திலேயே மிகக் கச்சிதமாக தமிழில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவரது மறைவின் பின்னரும் தொடரும் அந்த நீண்ட வெளியீட்டுக் கலாச்சாரத்தில் - பிரித்தானிய சைவமுன்னேற்றச் சங்கத்தினரின் பங்களிப்புடன் வெளியிடப்பட்டுள்ள இந்த நூலும் இணைந்து கொண்டுள்ளது.*

### 7853

**சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரம்.** தொல்புரக்கிழார். (இயற்பெயர்: நா.சிவபாதசுந்தரம்). யாழ்ப்பாணம்: சைவப்பெரியார் நூற்றாண்டு விழாச்சபை, வெள்ளியம்பதி, அளவெட்டி, 1வது பதிப்பு, ஜுன் 1978. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 432 காங்கேசன்துறை வீதி).
vi, 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

புலோலியூர் சைவப்பெரியார் சிவத்திரு சு.சிவபாதசுந்தரனாரின் (17.1.1877-14.8.1953) வாழ்க்கை வரலாற்று நூல் இது. புலோலியூர் வல்லிபுரநாதர் என்ற வர்த்தகரின் மூத்த மகனான சுப்பிரமணியபிள்ளையின் மகனாக அவதரித்தவர் சிவபாதசுந்தரனார். சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியின் முன்னாள் முதல்வரான இவர், திருக்கேதீஸ்வர ஆலய புனரமைப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9378).

### 7854

**ஞானச்சுடர்.** சுவாமி கெங்காதரானந்தஜியின் பக்தை (இயற்பெயர் : தா.சியாமளாதேவி). திருக்கோணமலை: ராஜ் நாராயணபிள்ளை, தலைவர், சிவயோக சமாஜ பஜனைச் சங்கம், 1வது பதிப்பு, ஜுன் 1990. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).
iv, 55 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

இலங்கை சிவயோக சமாஜத்தின் தாபகராகிய ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தஜி அவர்களுடன் தனது இளம்பிராயம் முதல் பழகும் பாக்கியம்பெற்ற ஒரு தீவிர பக்தையின் பார்வையில் எழுதப்பட்ட நூல் இதுவாகும். சுவாமிகளின் சிறப்பியல்புகள், நற்பண்புகள், ஆன்மீக ஆற்றல், சுவாமிகளை நாடிவரும்அடியாரின் சரீர, மனக் கிலேசங்களைத் தன்னுடைய அருளாசியால் எவ்வாறு தீர்த்தார், தூரதேசத்து அடியார்கள் எவ்வாறு சுவாமிகளின் அருளால் பாதுகாக்கப்பட்டு வருகின்றார்கள், சுவாமியின் தீர்க்கதரிசனச் சிந்தை, அன்றாட வாழ்க்கை முறைகள் என்பவற்றையெல்லாம் இந்நூலின் வாயிலாக இப்பக்தை பதிவுசெய்திருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22865).

### 7855

**திருக்கேதீஸ்வரம் திருவாசகம் ஸ்ரீ மத் சபாரத்தினம் சுவாமிகள் தொன்னூறாவது ஜயந்தி தினத்தை முன்னிட்டு எழுதிய நூல்.** முருக வே.பரமநாதன் (புனைபெயர்: ஆழ்கடலான்). தெகிவளை: திருவாசகம் சுவாமிகள் தொண்டர் சபை, 11/6, ரூபன் பீரிஸ் மாவத்தை, கழுபோவில, 1வது பதிப்பு, ஜுன் 1994. (கொழும்பு 13: லட்சுமி அச்சகம், வீமாஸ் அச்சகம்).
(6), 62 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21.5x14 சமீ.

ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் 90ஆவது ஜயந்தி தினம் 28.03.1994 அன்று இடம்பெற்ற வேளையில் அதன் நினைவாக அவரது பெருமைபேசுவதாக எழுதப்பட்ட நூல். தனது இறுதிக்காலத்தில் திருக்கேதீச்சரத் திருத்தலத்திலேயே வாழ்ந்து மறைந்த இவ்வடிகளார் 28.3.1904இல் பிறந்து 25.1.1988இல் இறைவனடி சேர்ந்தவர். திருவாசக சுவாமிகள் என்றும் அறியப்பெற்றவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 485087).

### 7856

**தெய்வத் திருமகளின் வாழ்வும் பணிகளும்.** ஆறு.திருமுருகன், கந்தையா நீலகண்டன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 2: அகில இலங்கை இந்து மாமன்றம், 91/5 சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 1வது பதிப்பு, ஜுலை 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).
x, 271 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18 சமீ.

அமரர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முதலாவது குருபூசைதின வெளியீடாக 03.07.2009 அன்று வெளியிடப்பட்ட நூல். ஒன்பது பிரிவுகளில் அடங்கும் இம்மலரில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்வும் பணிகளும், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பற்றி அவரது பணிகளைப்போற்றி முக்கிய பிரமுகர்களால் எழுதப்பட்ட 14 கட்டுரைகள், அவருக்கு வழங்கப்பட்ட பொதுவான வாழ்த்துமடல்கள், மணிவிழாவிற்கான வாழ்த்து

மலர்களும் பாராட்டு மணிகளும், கவிமலர்கள், நினைவஞ்சலி நிகழ்வின் தொகுப்பு, சிவத்தமிழ்ச் செல்வியின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆக்கங்கள், அவரது வாழ்க்கை வரலாற்றுப்பகுதியில் முக்கிய திருப்பு முனைகள் பற்றிய தகவல்கள், அவரது வாழ்வில் இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சிகளைக் காட்டும் 28 புகைப்படத் தகடுகள் என்பன இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

### 7857

**நல்லை நகர் தந்த நாவலர்.** சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). யாழ்ப்பாணம்: சண்முகநாதன் புத்தகசாலை, 1வது பதிப்பு, ஜுன் 1969. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம்).
xvi, (2), 84 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18x12.5 சமீ.

நல்லைநகர் தந்த நாவலர் என்ற தலைப்பில் ஆறுமுக நாவலர் பற்றி சொக்கன் அவர்கள் தினகரனில் தொடராக எழுதிய கட்டுரைகளின் நூல் வடிவம் இது. நாவலர் பாடியருளிய புலோலிநகர் ஸ்ரீ பசுபதீசுரப் பெருமானார் திருவூஞ்சலும், அவர் எழுதி வெளியிட்ட சைவமத சாரம் என்ற துண்டுப் பிரசுரமும் இந்நூலின் அநுபந்தங்களாக இணைக்கப்பட்டுள்ளன.

### 7858

**நாவலர் உரைத் திறன்: சைவசமய நெறியுரையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.**
இரா.வை.கனகரத்தினம். யாழ்ப்பாணம்: பூரணம் வெளியீடு, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு: கார்த்திகேயன் பிறைவேற் லிமிட்டெட்).
xviii, (4), 216 பக்கம், விலை: ரூபா 275., அளவு: 21.5x14 சமீ.

ஆறுமுக நாவலர் வரலாற்றுச் சுருக்கம், தமிழ் உரையின் தோற்றமும் வளர்ச்சியும்: ஓர் அறிமுகம், நாவலரின் பல்துறைப் புலமை: பொது நோக்கு, நாவலரின் பல்துறைப் புலமை: சிறப்பு நோக்கு, நாவலர் உரைநெறி, பரிமேலழகரும் நாவலரும்: ஓர் ஒப்புநோக்கு, நாவலர் உரை: ஒரு மதிப்பீடு ஆகிய ஏழு இயல்களில் இவ்வாய்வு விரிகின்றது. பின்னிணைப்புகளாக, நாவலர் எடுத்தாண்ட நூல்கள், மேற்கோள் விளங்காப் பாடல்கள், நாவலரின் அருஞ்சொல் விளக்கம், நாவலர் தொகை விரித்தல், நாவலர் உரை அகராதி என்பன இணைக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் இரா.வை.கனகரத்தினம், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்துப்பண்பாட்டுத் துறையின் முதுநிலை விரிவுரையாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 515219).

### 7859

**நாவலர் பணிகள்.** ச.தனஞ்சயராசசிங்கம். பேராதனை: இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக் கழகம், 1வது பதிப்பு, 1969. (கண்டி: நெஷனல் பிரின்டர்ஸ், 241, கொழும்பு வீதி).
xvi, (14), 90 பக்கம், விலை: ரூபா 4.00, அளவு: 21x14.5 சமீ.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தின் சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளரான நூலாசிரியரின் ஒன்பது கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு இது. நாவலருக்கும் விசுவநாதபிள்ளைக்கும் எழுந்த கருத்துப்பரிமாறல், நாவலரின் சைவசமயச் சொற்பொழிவுகளும் உதயதாரகையும், நாவலரின் கல்விப்பணி, நாவலர் நிறுவிய கஞ்சித் தொட்டித் தருமம், நாவலரும் வேளாண்மையும், நாவலரும் கிலமடைந்த கீரிமலைச் சிவன்கோவிலும், நாவலரின் கண்டனமொன்றின் வரலாற்றுப் பின்னணி, Navalar chooses a Tamil Representative, நாவலர் கலந்துகொள்ள முடியாத விநாயகர் கோவிற் கூட்டம் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 261710).

### 7860

**நாவலர் வழியில் தமிழ் அறிஞர்.** யோகேஸ்வரி கணேசலிங்கம். சென்னை 600090: க.கணேசலிங்கம், 21(9/2), பீச் ஹோம் அவென்யூ, பெசன்ட் நகர், 1வது பதிப்பு, ஜுலை 2000. (சென்னை 600005: மாசறு DTP, 75, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, திருவல்லிக்கேணி).
144 பக்கம், விலை: ரூபா 125., இந்திய ரூபா 45., அளவு: 21.5x14 சமீ.

நாவலர் வாழ்க்கையும் சமுதாயப் பின்னணியும், கல்விப் பாரம்பரியம், சமயப் பாரம்பரியம், இலக்கியப் பாரம்பரியம் ஆகிய நான்கு பெரும் பிரிவுகளில் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களின் பன்முகத் தொண்டுகளை இனம்கண்டு தெளிவாக எடுத்து விளக்குவதோடு, அவரது மரபுவழித் தொண்டுகள் அவருக்குப் பின்னர் யார் யாரால் எவ்வாறு பின்பற்றப்பட்டன என்பதை எளிய இனிய அழகிய கருத்தாழம் மிக்க தமிழ் நடையில் ஆக்கித்தந்துள்ளனர். அவ்வகையில் கதிரைவேற்பிள்ளை, சங்கர பண்டிதர், செந்திநாதையர், சி.வை.தாமோதரம்பிள்ளை, தி.த.கனகசுந்தரம்பிள்ளை, குமாரசாமிப் புலவர், கணேசையர் ஆகியோர் பற்றியும் அவ்வாறு நாவலர்தம் வழியில் வந்தவர் கண்டனம் அமைக்கும் சூழலுக்குத் தள்ளப்பெற்றிருக்கும் வரலாற்றையும் காழ்ப்பணர்ச்சி அற்று நடுநிலைநின்று எழுதியிருக்கின்றார்.

### 7861

**மகாகுரு சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் (கைலாச தேசிகர்) அவர்களின் 75ஆம் ஆண்டு பூர்த்தி வைர விழா மலர்.** வ.குமாரசுவாமி (தொகுப்பாசிரியர்). கொழும்பு 12: ச.த.சின்னத்துரை, தலைவர், வைரவிழாச் சபை, லீலா இல்லம், 62/1 பண்டாரநாயக்க வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1977. (கொழும்பு 12: நியூ லீலா அச்சகம்).
(112) பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

ஈழத்தின் வீரசைவ குருமகா சந்நிதானம், கீரிமலை ஸ்ரீ இரேணுகாச்சிரமம் மகாகுரு சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்களின் வைரவிழாவை முன்னிட்டு 10.4.1977இல் வெளியிடப்பட்ட இம்மலர் காங்கேசன்துறை வ.குமாரசாமியினால் தொகுக்கப்பட்டது. ஈழத்தின் வீரசைவத்தின் வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை நல்கியவர் கைலாச தேசிகர் என்று வழங்கப்பட்ட ஐயம்பிள்ளைக் குருக்களாவார். இம்மலருக்கு இந்தியாவிலும் இலங்கையிலும் வாழும் பேரறிஞர்கள் வாழ்த்துரைகள், கட்டுரைகள் என்பவற்றை வழங்கியுள்ளனர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 107694).

### 7862

**யாழ்ப்பாண நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் சரித்திரச் சுருக்கமும் அவர்களியற்றியருளிய தனிப்பா மாலையும்.** சி.செல்லையாபிள்ளை. கொழும்பு: மீனாம்பாள் அச்சியந்திரசாலை, கொம்பனித்தெரு, 1வது பதிப்பு, ஆனந்த வருடம், வைகாசி 1914. (கொழும்பு: மீனாம்பாள் அச்சியந்திரசாலை).
x,(4), 32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21.5 சமீ.

தனது 20ஆவது வயதில் தனது உத்தியோகத்தையும், உறவினரையும் துறந்து 32 வருடகாலமாக பிரித்தானியராட்சியில் நலிந்துசென்ற சைவத்தையும் தமிழையும் தனியொருவராக நின்று வளர்க்க முனைந்தவர் ஆறுமுக நாவலர். தமிழகம் வரை பிரபல்யம்பெற்ற இவரது வாழ்க்கை வரலாற்றை எழுதியும், நாவலரவர்கள் அவ்வப்போது இயற்றிப் பிரசுரித்த பாக்களைத் தொகுத்தும் இந்நூல் ஆக்கப்பெற்றுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34129).

மேலும் பார்க்க: 7993

## 923 சமூகவியல்துறை சார்ந்தோர்

### 7863

**காந்தி தரிசனம்.** எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, மே 2008. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை).
104 பக்கம், புகைப்படம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18x12.5 சமீ., ISBN: 81-89748-55-6.

காந்தி நூற்றாண்டு நினைவாக வெளியிடப்பட்ட ஐந்து நூல்களில் இதுவும் ஒன்று. 29 உலகத் தலைவர்கள் எவ்வாறு காந்திஜியின் வாழ்க்கையையும் ஊழியத்தையும் தரிசித்தார்கள் என்பதைப்

படித்தறியும் வகையில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இதில் விநோபாஜி, ரவீந்திரநாத் தாகூர், ஈன்ஸ்டீன், பேர்ல் பக், ஸ்ரீ அரவிந்தர், எல்.பி.பியர்சன், டபிள்யூ. ஸெய்ஸன்பேர்க், எம்.சொலொக்கொவ், சீ.வீ.ராமன், சங்.பிதா.டொமினிக் பியர், மார்ட்டின் லூதர் கிங், ஊதாண்ட், கேஸி பிரபு, கிளமென்ட் அட்லி, லூயி பிர், ஹெய்லி ஸெலஸ்ஸி, ஜே.ஸி.ஸ்மட்ஸ், ஹரோல்ட் வில்சன், தேவதாஸ் காந்தி, அபுல் கலாம் ஆஸாத், ஜவஹர்லால் நேரு, சரோஜினி நாயுடு, சேர். எம்.ஸ.்.ருல்லா கான், டாக்டர் பிரதாப் சந்திர சந்தர், சி.ராஜகோபாலாச்சாரியார், ராஜேந்திர பிரசாத், டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன், ஸாக்கிர் ஹுசேன், வி.வி.கிரி, சேர். இவான் மக்கே, இந்திரா காந்தி, ஜெயப்பிரகாஷ் நாராயண், கிருபளானி, முல்க்ராஜ் ஆனந்த் ஆகிய பிரமுகர்களின் பார்வையில் இப்பதிவுகள் அமைந்துள்ளன.

### 7864

**சமூகச் சிற்பிகள்.** சி.எஸ்.எஸ்.சோமசுந்தரம். சென்னை 20: உலகத் தமிழ் பண்பாட்டுக் கழகம், 1வது பதிப்பு, மார்ச் 1991. (சென்னை 14: வெற்றி அச்சகம், 91, டாக்டர் பெசன்ட் சாலை, இராயப்பேட்டை). 120 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18x12.5 சமீ.

சமூக நலனுக்காகப் பாடுபட்டுழைத்துத் தாம் சார்ந்த சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டுவந்த சிந்தனைச் சிற்பிகள் 14 பேரின் வாழ்வும் பணியும் தனித்தனிக் கட்டுரைகளாக இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சமூகம் என்பது என்ன? சமூகச் சிற்பிகள் யார்? என்ற இரு விடயங்களையும் முதலிரு இயல்களும் ஆராய்கின்றன. தொடர்ந்துவரும் 14 இயல்களிலும் மகாத்மா காந்தி, டாக்டர் பீமராவ் அம்பேத்கார், வைக்கம் வீரர் பெரியார், பாரதியார், அன்னை தெரேசா, காஞ்சிப் பெரியவர், அரவிந்தர், சுவாமி விவேகானந்தர், உலகின் முதன்மையான மனிதர் நபிகள் நாயகம், பேரறிஞர் அண்ணா, இரவீந்திரநாத் தாகூர், டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், பாரதிதாசன், ஜவஹர்லால் நேரு ஆகியோர் பற்றிய தனித்தனிக் கட்டுரைகளாக அமைகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18800).

### 7865

**தோழர் மகாஜனன் நாகலிங்கம் சிறிகெங்காதரன் மணிவிழா மலர் 2011.** மணிவிழாக் குழு. லண்டன்: நாகசிறிகெங்காதரன் மணிவிழாக்குழு, 7 Blackfen Road, Sidcup, Kent DA15 8QD, 1வது பதிப்பு, 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை).
60 பக்கம், வண்ணத் தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: அளவு: 26x19 சமீ.

நாகலிங்கம் சிறிகெங்காதரன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர். அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தை 1987இல் லண்டனில் உருவாக்கியவர். பல்வேறு விளையாட்டுத்துறை மற்றும் Eelam Solidarity Campaign போன்ற சமூக இயக்கங்களில் முன்னணியில் நின்று செயற்பட்டவர். இளவயதிலேயே கம்யூனிச சித்தாந்தத்தில் ஈடுபாடுகொண்டவர். 1975இல் காங்கேசன்துறை இடைத்தேர்தலின்போது அரசு சார்பில் போட்டியிட்ட வி.பொன்னம்பலம் அவர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரப் பணியாற்றியவர். TELO இயக்கத்துடன் நெருங்கிய ஈடுபாடு கொண்டு பணியாற்றிய இவர், 1972இல் இலங்கையின் குடியரசு தின விழாவை தமிழ்மக்களின் எதிர்ப்பலைகளுக்கு மத்தியிலும் கொண்டாடியதுடன் குடியரசு மலர் ஒன்றினையும் வெளியிட்டவர் என்பதும், இலங்கைமண்ணில் தமிழில் வெளிவந்த ஒரேயொரு குடியரசு தின மலர் இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரது 60 ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடுசெய்யப்பட்ட மணிவிழாவை லண்டனில் அவரது நண்பர்கள் கொண்டாடிய வேளையில் வெளியிடப்பட்ட மலர் இதுவாகும்.

### 7866

**மறுமலர்ச்சித் தந்தை: சித்தி லெவ்வை வாழ்க்கை வரலாறு.** ஏ.இக்பால். நாவலப்பிட்டி: விண்மதி வெளியீடு, 19/4, கம்பளை வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1971. (கொழும்பு 13: ஆனந்தா அச்சகம், 82/5, ஆட்டுப்பட்டித் தெரு).
xvi, 68 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 17.5x12.5 சமீ.

*அறிஞர் சித்தி லெவ்வை காலப் பின்னணியில் ஈழத்து முஸ்லிம்கள், அறிஞர் சித்தி லெவ்வை அவர்களின் பூர்வீகப் பாரம்பரியம், கல்வியும் அதனால் பெற்ற தகைமையும், தேசியத்தினூடே சமுதாய நலன் காணும் எழுச்சி, முஸ்லிம் பாடசாலைகளை அமைத்த முன்னவர், அரசியல் பொருளாதார, கலாசாரத்துறையில் உரிமைபெற முன்நின்றவர், ஈழத்து முஸ்லிம்களின் எழுத்துத்துறை முன்னோடி, ஈழநாட்டின் தேசிய வீரர்கள், அநாகரிக தர்மபாலா, ஆறுமுக நாவலர், சித்திலெவ்வை, தியாகமும் தனித்துவமும் ஆகிய ஒன்பது இயல்களில் அறிஞர் சித்திலெவ்வையின் (11.6.1838 - 5.2.1898) வாழ்வும் பணியும்பற்றி இந்நூல் பேசுகின்றது. அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகக்கொண்ட நூலாசிரியர் ஏ.இக்பாலின் தந்தை ஆதம் லெவ்வை, தாயார் றைகானத்தம்மா. தர்க்காநகரை இருப்பிடமாகக்கொண்ட இக்கவிஞர் சிறந்த வானொலிக் கலைஞருமாவார். இவரது முஸ்லிம் கலைச்சுடர் மணிகள் என்ற கட்டுரை நூலையும், மௌலானா ரூமியின் சிந்தனைகள் என்னும் கவிதை நூலையும்தொடர்ந்து இந்த நூல் மூன்றாவதாக வெளிவந்துள்ளது. இது அவ்வாண்டின் சாகித்ய மண்டலப் பரிசுபெற்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119117).*

## *923.2 அரசியல் துறையினர்*

### *7867*

**என்னைக் கவர்ந்த உலகத் தலைவர்கள்.** *மிலிந்த மொறகொட (ஆங்கில மூலம்), தே.செந்தில்வேலவர் (தமிழாக்கம்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
xvi, *304 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 700., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-659-189-7.*

*2009இல் இலங்கை அரசின் சுற்றுலாத்துறை அமைச்சராகப் பணியாற்றியபோது மிலிந்த மொறகொட எழுதிய நூல் இது. இவரது பொது வாழ்க்கையானது வர்த்தகம், அரசியல், ராஜதந்திரம், ஊடகம், கல்வி எனப் பல பரிமாணங்களைக் கொண்டது. சுவிட்சர்லாந்திலுள்ள முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் (*IMB*), வர்த்தக முதுகலைமானிப் பட்டத்தைப் பெற்ற இவர் 1994-95 காலப்பகுதியில;* Haward *பல்கலைக்கழகத்தில் சர்வதேச விவகார நிலையத்தில் சம உரிமைபெற்ற உறுப்பினராகவும் விளங்கியவர். இலங்கையின் கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் ஆலோசகராகவும் அரசியலுக்குள் புகுவதற்கு முன்பாக அமெரிக்க-இலங்கை கூட்டு நிறுவனமான மேர்க்கன்டைல் வங்கியின் தலைவராகவும் பணியாற்றியவர். பெஞ்சமின் பிராங்க்ளின் முதல் வில்லியம் ஹேக் வரையிலான தான் அறிந்த 56 சர்வதேசப் பிரமுகர்கள் பற்றி இந்நூலில் விபரித்துள்ளார். தனது பார்வையில் ஒவ்வொரவரிடமும் தான் கண்ட சிறப்பியல்புகளை தெளிவாக விபரித்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47075).*

### *7868*

**சுவடுகள்.** *செல்லையா இராசதுரை. மட்டக்களப்பு: பூமகள் பதிப்பகம், 1வது பதிப்பு, 2008. (மட்டக்களப்பு: ஸ்ரீ ஜெயம் கிராப்பிக்ஸ்).*
*200 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x13.5 சமீ.*

*இலங்கை அரசியலில் செல்லையா இராசதுரை பற்றியும் அவரது சாதனைகள் பற்றியும் விபரிக்கும் வரலாற்று நூல். மட்டக்களப்பில் பிறந்த இவர் பின்னாளில் மட்டக்களப்பு மாநகர சபையின் அப்பிரதேச பாராளுமன்ற உறுப்பினராகச் சேவையாற்றியவர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் தான் சார்ந்த தமிழ் அரசியலிலிருந்து விலகி ஸ்ரீமாவோ அரசில் இணைந்து கொண்டவர். வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து, பிரதேச அபிவிருத்தி அமைச்சினை உருவாக்கியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44781).*

### *7869*

**சேர் பொன்னம்பலம் அருணாசலம்.** *ஜேம்ஸ் ரி. இரத்தினம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*

*56 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ.*, ISBN: *955-659-047-1.*

*இந்நூல் 1953இல் கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட சேர் பொன்னம்பலம் அருணாசலம்* (Sir Ponnambalam Arunachalam: 1853-1924. Colombo: Sir Ponnambalam Arunachalam Centenary Committee, 1953) *நூலின் தமிழாக்கத்தின் சுருக்கிய வடிவமாகும். இந்நூல் கல்வியில் சாதனை, அரச பணி, அரசியல் பணி, சமூகப் பணியும் தொழிற்சங்கப் பணியும், கல்விப்பணி, கலை இலக்கியப் பணி, நிறைவுரை ஆகிய ஏழு இயல்களில் எழுதப்பட்டுள்ளது. மானிப்பாயைச் சேர்ந்த சேர் பொன்னம்பலம் அருணாசலம் 14.9.1853 இல் பிறந்து 9.1.1924இல் மறைந்தவர். இலங்கையின் சட்டசபையில் சேவையாற்றிய மூன்று சகோதரர்களுள் இளையவர் இவர். மற்றைய இருவரும் பொன். குமாரசுவாமி, சேர். பொன். இராமநாதன் ஆகியோராவர். மானிப்பாயைச் சேர்ந்த கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் இலங்கையின் பிரபல்யமான வம்சாவளி ஆய்வாளரும், தொல்லியல்துறை அறிஞருமாவார். சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆகியோரின் மூதாதையர் தமிழர்கள் என்று நிறுவி கட்டுரைகளை ஆங்கிலமொழியில் எழுதியவர். ஆனைக்கோட்டை தொல்லியல் அகழ்வாராய்ச்சியில் தீவிர ஈடுபாடு காட்டியவர். தனது துணைவியாரான ஈவ்லின் அம்மையாரின் ஞாபகார்த்தமாக 1981இல் யாழ்ப்பாண நூலக எரிப்பின் பின்னர், திருநெல்வேலியில் ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தை தாபித்தவர்.*

### 7870

***தமிழ்த் தேசியத்தின் பாதையில் ஈழவேந்தனின் பதிவுகள்.*** நாகலிங்கம் ஞானசேகரம் *(பதிப்பாசிரியர்). கனடா: முகம் வெளியீடு, 1வது பதிப்பு, மார்கழி 2007. (கனடா: விவேகா அச்சகம்).*
*332 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் பிறந்த ஈழவேந்தன், சென் ஜோன்ஸ் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தவர். இலங்கை மத்திய வங்கியில் தொழில்புரிந்து வந்த வேளையில் மத்தியவங்கி தமிழ் ஊழியர்சங்கத்தைத் தொடங்கி அதன் தலைவராக விளங்கினார். பின்னர் தந்தை செல்வாவின் தமிழரசுக்கட்சியில் இணைந்துகொண்ட இவர், காவலூர் நவரத்தினம் தமிழரசுக் கட்சியுடன் கொண்ட கருத்து முரண்பாடு காரணமாகத் தமிழர் சுயாட்சிக் கட்சியை உருவாக்கியபோது அதில் தன்னையும் இணைத்துக்கொண்டவர். பின்னர் ஆயுதப் போராட்டக் குழுவான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் சேர்ந்து திம்புப் பேச்சுவார்த்தைக் காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்துகொண்டார். இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறியபோது காசி ஆனந்தன் போன்றோருடன் இந்தியாவுக்குச் சென்று தமிழகத்தில் தங்கியிருந்து அரசியல்பணிகளில் ஈடுபட்டவர். அங்கிருந்து பின்னர் இந்திய அரசினால் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டவர். பின்னர் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டபோது நியமனப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டு பாராளுமன்ற உறுப்பினரரானவர். இத்தகைய அரசியல் பின்புலத்தில் உருவாகிய ஈழவேந்தனின் கடிதங்கள், உரைகள், கட்டுரைகள் என்பனவற்றின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. அவரது 50 ஆண்டுக்கால அரசியல் வாழ்க்கையின் பதிவாகவும், ஈழத்து அரசியல் போக்கின் ஒரு காலகட்ட வரலாற்றை உள்ளிருந்து பார்க்கும் ஒரு பார்வையாகவும் இந்த நூல் அமைகின்றது. கடந்த காலத்தில் ஈழவேந்தன் எழுதி வெளியிட்ட வரலாற்றுப் பதிவுகளின் மறு பதிப்பாகவும், வேறும் புதிய பதிவுகள் சேர்க்கப்பட்டும் இந்நூல் வெளிவந்துள்ளது. தமிழன் கண்ட முருகன் தொடங்கி, அண்மையில் ஐ.நா.தலைமைச் செயலாளர் பான் கி -மூனுக்கு எழுதிய கடிதம் வரை இந்த நூலில் பதிவாகியிருக்கிறது. இவற்றுள் ஈழவேந்தனின் நாடாளுமன்ற உரைகளும், விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் என்பனவும் அடங்குகின்றன.*

### 7871

***மக்கள் பிரதமர் ஸ்ரீமாவோ.*** *பாமா ராஜகோபால் (இயற்பெயர்: ஈ.கே.ராஜகோபால்). வல்வெட்டித்துறை: ஈ.கே.ஆர். பப்ளிஷர்ஸ், வல்வெட்டி, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 1970. (யாழ்ப்பாணம்: ஈழநாடு அச்சகம்).*
xii, *36 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 50., அளவு: 16x12 சமீ.*

நூலாசிரியர் ஈழநாடு தினசரியின் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இலங்கையின் பிரதமராகவிருந்தவரும், உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெயர் பெற்றவருமான சிறிமாவோ பண்டாரநாயக்கவின் வாழ்வையும் அரசியல் பணிகளையும் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாக இந்நூல் வெளிவந்துள்ளது. சிறிமாவோவின் ஆட்சியின்போது தபால் தந்தி போக்குவரத்து அமைச்சராகவிருந்த செல்லையா குமாரசூரியர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சீ.சுப்பிரமணியம், மயிற் தாபனத்தின் தலைவர் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா ஆகியோர் இந்நூலுக்கான அணிந்துரைகளை வழங்கியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19779).

### 7872

**ஜே.ஆர். சிந்தனை.** ஹக்மன பி.எம்.பியசேன (சிங்கள மூலம்), எம்.கே.ராகுலன் (தமிழாக்கம்). கொழும்பு 7: ஜே.ஆர்.ஜயவர்த்தன கலாசார நிலையம், 191, தர்மபால மாவத்தை, 1வது பதிப்பு, ஜுலை 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(2), 94 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ., ISBN: 955-9269-02-X.

இலங்கையின் பிரதமராகவும், ஜனாதிபதியாகவும் நீண்டகாலம் பணியாற்றிய ஜே.ஆர்.ஜயவர்த்தன அவர்கள் அவ்வப்போது ஆற்றிய அரசியல் முக்கியத்துவமான கருத்துகளின் தொகுப்பு. ஜே.ஆர்.ஜயவர்த்தன கலாசார நிலையம் வெளியிட்ட இந்நூலின் வெளியீட்டு ஒருங்காக்கத்தை பிரேமதிலக மாபிற்றிகம மேற்கொண்டுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 474046).

## 923.4 சட்ட அறிஞர்கள்

### 7873

**ஸ்ரீ ராமநாத மான்மியம்.** ச.பொன்னம்பலபிள்ளை. சாவகச்சேரி: ச.பொன்னம்பலபிள்ளை, 1வது பதிப்பு, 1930. (பருத்தித்துறை: கலாநிதியந்திரசாலை).
179 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

சேர் பொன்.இராமநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக்கூறும் முதலாவது தமிழ் நூல். ஸ்ரீமான் பொன்னம்பல முதலியார் வரலாறு, ஸ்ரீராமநாதோற்பவம், கல்வி பயிலல், நியாயதுரந்தரராதல், மணச்சிறப்பு, புதல்வர்பேறும் அவர்தம் விவாகச்சிறப்பும், முதன்முறை இங்கிலாந்துக்கேகல், யாழ்ப்பாணம் வருகை, ஸ்ரீமான் பொன்னம்பல முதலியார் தலயாத்திரையும் பதமுத்திப்பேறும், முதன்முறை ராசாங்க சட்டநிரூபணசபையைச் சேருதல், சகோதரமாட்சி, யாழ்ப்பாணத்தினர் மதிப்பும் மகிழ்வும், சொலிசிட்டர் ஜெனரலுத்தியோகப்பேறு (ராசாங்க மந்திரியாதல்), அட்டோணி ஜெனரலுத்தியோகப்பேறு (பிரதிநிதித் தலைவனாதல்), இரண்டாமுறை இங்கிலாந்துக்கேகல், சைவசித்தாந்தப் பயிற்சி, யோகசாதனை, பத்தினியார் செல்லாச்சி அம்மையார் பதமுத்தி, கிறிஸ்தவர் பைபிள் வியாக்கியானம், தமையனார் குமாரசாமி முதலியார் பதமுத்தி, ராசாங்க உத்தியோகத்தில் வெறுப்புறுதல், அமெரிக்கர்காட்சிபெறுதல், இரண்டாம் தர்மபத்தினி லீலாவதி அம்மாள், ராசாங்க சட்டநிரூபண சபையில் மீளவுமமைதல், பொன்னம்பலவாணேசராலய தர்மகர்த்தாப் பேறு, மூன்றாம் முறை இங்கிலாந்துக்கேகல், ஸ்ரீ ராமநாத வித்தியாலய ஸ்தாபனம், பெண்ணாசிரியர் தமிழ்க்கல்லூரி ஸ்தாபிதம், தமிழில் பகவத்கீதை மொழிபெயர்ப்பும் உரையும், ஊர்க்கலகமும் சேனாபத்தியமும் நான்காமுறை இங்கிலாந்துக்கேகலும் சிறைவிடுதலும், தேசாதிபன் நீக்கமும், பரமேஸ்வர வித்தியாலய ஸ்தாபனம், பட்டஞ்சூடுதல், ஆகிய இன்னோரன்ன தலைப்புகளில் இவ்வாழ்க்கை வரலாறு விரிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14847).

## 923.5 பொது நிர்வாகத்துறையினர்

### 7874

**எதிர்மன்னசிங்கனின் வாழ்வும் இலக்கியமும்.** ஓ.கே.குணநாதன் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).
120 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ., ISBN: 955-8715-08-5.

மட்டக்களப்பு, அமிர்தகழியில் பிறந்த எதிர்மன்னசிங்கன் கலாச்சார உத்தியோகத்தராகப் பணியில் இணைந்து, வடக்கு கிழக்கு மாகாண கலாசார உதவிப் பணிப்பாளராக வளர்ந்து, சமூகப்பணியாற்றி இளைப்பாறியவர். தன் பதவிக்காலத்தில் வடகிழக்கில் வாழும் எழுத்தாளர்களின் நூல்களைக் கொள்வனவுசெய்து நூலகங்களுக்கு வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்தவரென்ற வகையில் எழுத்தாளர்களினால் பெரிதும் மதிக்கப்படுபவர். எழுத்தாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியவர். இவரது மணிவிழாவையொட்டி பல்வேறு பிரமுகர்களாலும் எழுத்தாளர்களாலும் இவர்பற்றி எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32297).

## 923.61 விடுதலைப் போராளிகள்

### 7875
**கப்பலோட்டி-செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.** ஈழவேந்தன். கொழும்பு 6: மா.க.கனகேந்திரன், 15 சுவிசுத்தராம வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 1962. (யாழ்ப்பாணம்: மெய்கண்டான் அச்சகம்).
(4), 14 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13 சமீ.

தாய்நாட்டின் (தமிழகத்தின்) விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்து, சிறைசென்று அல்லல் பல ஏற்று வீரத் தியாகியான வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு சுவைபடக்கூறப்பட்டுள்ளது. 18.11.1936இல் மறைந்த வ.உ.சியின் நினைவுநாட் கட்டுரையாக 18.11.1961இல் வீரகேசரி, தினகரன், செய்தி ஆகிய இதழ்களில் பிரசுரமான ஈழவேந்தனின் கட்டுரையின் நூல்வடிவம் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19693).

### 7876
**சமர்க்கள நாயகன் (பிரிகேடியர் பால்ராஜ் நினைவுமலர்).** மலர்க் குழு. தமிழீழம்: வெளியீட்டுப் பிரிவு, அனைத்துலகத் தொடர்பகம், தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).
80 பக்கம், வண்ணப் படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத் தொடுவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா பாலசேகரம் என்னும் இயற்பெயரைக் கொண்டவர் விடுதலைப்புலிகள் அமைப்பின் தளபதிகளுள் ஒருவரான பிரிகேடியர் பால்ராஜ். 20.5.2008 அன்று மாரடைப்பால் இவர் மரணமடைந்தபோது, அவரது நினைவாக வெளியிடப்பட்ட மலர் இது. 1991 ஏப்ரல் 10ஆம் நாள் உருவாக்கப்பட்ட புலிகளின் முதலாவது மரபுவழிப் படையணியான சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவுக்கு தளபதியாக நியமிக்கப்பட்டவர் பால்ராஜ். அவரது களப்பணிகளை நினைவுகூரும் வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் போராளிகளும், தமிழக அரசியல்வாதிகளும், ஈழத்துக் கவிஞர்களும் வழங்கிய 24 படைப்புக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

### 7877
**தம்பி ஜெயத்திற்கு.** காசி. ஆனந்தன். சென்னை 600017: காசி ஆனந்தன் குடில், A-6-1, வெள்ளிப் பூங்கா அடுக்ககம், 24 தணிகாசலம் தெரு, தியாகராய நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 600005: மாசறு 28/8 முத்துக் காளத்தி தெரு, திருவல்லிக்கேணி).
187 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 18x12 சமீ.

இந்திய அமைதிகாக்கும் படையின் சுற்றிவளைப்பின்போது அதில் அகப்பட்டு விடுதலைப் புலிகள் அமைப்பின் இயக்க விதிகளுக்கமைய சயனைற் நஞ்சருந்தி 10.9.1988 இல் மடிந்தவர் சிவஜெயம் என்ற

*இயற்பெயர் கொண்ட மேஜர் சந்திரன். இந்நூல் வீரமரணமடைந்த போராளியான மேஜர் சந்திரனுக்கு அவரது தமையனார் காசி அனந்தன் எழுதிய கண்ணீர்க் கடிதமாக அமைகின்றது. இது வெறும் கடிதமாக அல்லாமல் ஒரு ஈழ விடுதலைப் போராளியின் குடும்ப வரலாறு, அவன் சார்ந்த ஒரு விடுதலைப் போராட்டத்தின் வரலாறு, என விரிகின்றது. ஈழத்தின் அறவழிப் போராட்டத்தின் முடிவில் வெடித்த புலிகளின் மறவழிப் போராட்டத்தின் தொடக்க வரலாறு இது.*

## *923.7 கல்வியியலாளர்கள்*

### *7878*

***அருணம்: பேராசிரியர் க.அருணாசலம் பாராட்டுவிழா மலர்.*** *துரை மனோகரன் (மலராசிரியர்). பேராதனை: தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை. வடிவமைப்பும் விநியோகமும்- ஈஸ்வரன் புத்தகாலயம், 126/1 கொழும்பு வீதி, கண்டி).*

*(6), 338 பக்கம், வண்ணத்தகடுகள், புகைப்படங்கள், விலை: ரூபா 800., அளவு: 26x18 சமீ.*

*பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கிய க.அருணாசலத்தின் பாராட்டுவிழா மலர் இது. மலர்க்குழுவில் வ.மகேஸ்வரன், சோதிமலர் ரவீந்திரன், இராசையா மகேஸ்வரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். வாழ்த்தியல், அருணாசலவியல், ஆய்வியல் ஆகிய மூன்று பிரிவுகளின்கீழ் ஆக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. வாழ்த்தியலில் துரை மனோகரன், எஸ்.தில்லைநாதன், மா.செல்வராஜா, சு.தேவகுமாரி, கு.சோமசுந்தரம், எஸ்.முத்தையா, சாரல்நாடன், அ.கைலாயப்பிள்ளை, அகளங்கன், கே.சிவகுமார் ஆகியோர் தமது வாழ்த்துக்களைப் பதிவுசெய்துள்ளனர். அருணாசலவியலில் வாழ்வும் தளமும் என்ற தலைப்பில் பேராசிரியரின் பேட்டியும், அவர் எழுதிய தேர்ந்த கட்டுரைகளாக, மதுரைக் காஞ்சியில் அக்கால மக்களின் வாழ்வியல் அம்சங்கள், காரைக்காலம்மையாரும் பக்தி இலக்கியமும், பட்டினத்தடிகள் அருளிய திருப்பாடல்கள்-சில குறிப்புகள், 20ம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சிப் போக்குகள், சுதந்திர இலங்கையின் இலக்கிய வளர்ச்சிப் போக்குகள், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், மலையகத் தொழிலாளர்கள் பற்றிய சிறுகதைகள், மலையகச் சிறுகதைகளிற் பெண் தொழிலாளர்கள், மூட்டத்தினுள்ளே நாவல் ஒரு நோக்கு, புகலிடக் கவிதைகள் ஆகிய 10 ஆய்வுக்கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. ஆய்வியல் என்ற பிரிவுக்குள் துரை மனோகரன், செ.யோகராஜா, வ.மகேஸ்வரன், க.நாகேஸ்வரன், இரா.மகேஸ்வரன், சோதிமலர் ரவீந்திரன், எம்.வை.ஸ்ரீதர், இரா.சர்மிளாதேவி, ஸ்ரீ பிரசாந்தன், உமா காயத்ரி, கு.ஆ.கு.பஸ்மிலா, பெ.சரவணகுமார், தே.ஜெகன். ஏ.சி.பெறோசியா, செ.கௌஜல்யா, யோகராஜா கலைவாணி, எஸ்.லுதுபியா, பூ.சோதிநாதன், த.இராஜேஸ்வரன், குந்தவி மனோகரன் ஆகியோரின் தமிழியல், சமூகவியல் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.*

### *7879*

***எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்களின் அறிவாக்கங்கள்.*** *எஸ்.எல்.சியாத் அஹமட். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).*

xii, *208 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *978-955-659-258-0.*

*கிழக்கிலங்கையின் சாய்ந்தமருது கிராமத்தில் பிறந்து ஈழத்து முஸ்லிம் எழுத்துலகில் பிரபல்யமானவரான எஸ்.எம்.ஜெமீல் அவர்களின் முழுமையான ஆக்கங்களை வெளிப்படுத்தும் நூல். இவரது ஆக்கங்கள் தத்துவம், சமயம், சமூகவியல், மொழி, இலக்கியம், தூய விஞ்ஞானம், வரலாறு போன்ற விரிவான தளங்களில் வெளிவந்துள்ளன. இந்நூலில் S.H.M.ஜெமீலின் வரலாறு, எழுதிய நூல்கள், மொழிபெயர்ப்புக்கள், பதிப்புக்கள், பதிப்புரைகள், கட்டுரைகள், இரங்கல் கட்டுரைகள், சொற்பொழிவுகள், தொலைக்காட்சி, இலங்கை வானொலி உரைகள், கலந்துரையாடல்கள், இவர் தொகுத்த நாட்டார் பாடல்களின் விபரங்கள், பெற்ற கௌரவங்கள் என்பன இடம்பெற்றுள்ளன. எஸ்.எல்.சியாத் அஹமட். சாய்ந்த மருதூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலங்கைப் பாராளுமன்றத்தில் உதவி நூலகராகப் பணியாற்றுகின்றார்.*

**7880**

**ஒரு பேராசிரியரின் வாழ்க்கையும் கல்விச் சிந்தனைகளும்.** V.K.கணேசலிங்கம். கண்டி: தென்கிழக்கு ஆய்வு மையம், 1வது பதிப்பு, 2003. (அக்கரைப்பற்று: மல்ட்டி ஓப்செட் அச்சகம்).
260 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-627-009-4.

ஆரம்பக்கல்வி, கல்லூரிக் கல்வி, இடைநிலைக் கல்வி, விஞ்ஞான ஆசிரியர், பல்கலைக்கழகக் கல்வி, பல்கலைக்கழகச் செய்முறை காட்டுநர், எம்.எஸ்.சி. பட்டப்படிப்பு, பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவி, திருமணம், பி.எச்.டி. பட்டம், இலங்கைக்குப் புறப்படல், மறுபடியும் பேராதனைப் பல்கலைக்கழகம், கம்பளை வாழ்க்கை, கண்டி வாழ்க்கை, இரண்டாவது மகன், கார் ஒன்று வாங்கப்பட்டது, பல்கலைக்கழக வீடு, யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் பதவிக்கான விண்ணப்பம், யாழ்ப்பாண வளாகம்- இலங்கைப் பல்கலைக்கழகம், விலங்கியல் துறை, பேராசிரியர் சு.வித்தியானந்தன்-துணை வேந்தர், மறுபடியும் இங்கிலாந்துக்குப் புலமைப்பரிசிலில், சுவான்சி பல்கலைக் கல்லூரி- வேல்ஸ், பருத்தித்துறை வாழ்க்கையும் பல்கலைக்கழக வாழ்க்கையும், பொதுச் சேவை, லயன்ஸ் கழகம், குடும்பத்திட்ட நலச்சேவை, பரோடா (Baroda) பயணம், மறுபடியும் இங்கிலாந்து செல்லல், விஞ்ஞான தொழில்நுட்ப மருத்துவ இம்பீரியல் கல்லூரி, யாழ்ப்பாணம் திரும்புதல், யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தாயிற்று, விஞ்ஞான பீடாதிபதியானார், பதில் உபவேந்தர், பல்கலைக்கழக உபவேந்தர், IPKF மாணவர் பிரச்சினை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கச் சேவை, மறுபடியும் விஞ்ஞான பீடாதிபதியானார், மறுபடியும் விலங்கியல் துறையில் தொடர்ந்து பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெறுகிறார், ஓய்வு, தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில், முடிவுரை, இணைப்பு, பொருளடைவு ஆகிய 45 தலைப்புகளில் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கத்தின் வாழ்வும் பணியும் விரிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44431).

**7881**

**கரவை விக்னேஸ்வரா வழிவந்த ஒரு தமிழ் அறுவடை: கார்த்திகேசு சிவத்தம்பியின் ஆக்கங்கள் செயற்பாடுகள் பற்றிய ஒரு பதிகை.** வீ.ஏ.திருஞானசுந்தரம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: கரவை விக்னேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கம், OASIS, 16 Inner Fairline Road, Dehiwela, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).
viii, 197பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

வீ.ஏ.திருஞானசுந்தரம் அவர்களைச் செயலாளராகக் கொண்டியங்கும் கரவை (கரவெட்டி) விக்னேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் அதன் பழைய மாணவரான பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பற்றி வெளியிடப்பட்ட கரவையூற்று என்ற நூலைத்தொடர்ந்து இரண்டாவதாக வெளிவந்துள்ள நூல். பேராசிரியரின் ஆக்கங்களாக வெளிவந்த முதலாவது பகுதியில் எங்கள் காலத்து விக்னேஸ்வரா: எனது மாணவ காலத்து நினைவுகள், தோல்விகளே சித்திகளாக: பல்கலைக்கழக புகுமுக பரீட்சை முதல் கலாநிதிப்பட்டப் பெறுபேறு வரை, உழைப்பூதியத் தொழிலுடன்.. அதற்கு மேல்/அதனுடன்..., யாழ். பல்கலைக்கழக பதவிக்காலப் பணிகள், வடமராட்சி தெற்கு- மேற்கு: வரலாற்றுக் குறிப்புகள் சில, கரவெட்டி வரலாற்றுக் குறிப்புகள் சில, Karthigesu Sivathamby: A Profile ஆகிய ஏழு பதிவுகள் இடம்பெற்றுள்ளன. பேராசிரியர் பற்றி வெளிவந்த இரண்டாவது பகுதியில் பேராசிரியர் சிவத்தம்பியும் நானும் (வே.விமலராஜா), ஈழத்து இலக்கிய உலகின் வசிட்டர் (தெணியான்), பேராசிரியர் சிவத்தம்பியின் சிறப்பியல்புகள்: பார்வையில் புதுமை-புலமையில் நுண்மை (பேரா.வா.செ.குழந்தைசாமி), Professor Karthigesu Sivathamby: His work on Tamil Culture- Some Personal Perspectives (Prof. Sucharitha Gamlath), தமிழ்ஞானப் பேராசான் கா.சிவத்தம்பி (கலாநிதி ஏ.சி.எல்.அமீர் அலி), இந்தியாவின் வரலாறு-தமிழக வரலாறு: பேரா.சிவத்தம்பியின் ஆய்வுப் பயணம் (பேரா.வீ.அரசு), Siva and Myself-Random Memories (S.Selvaratnam), பேராசிரியரின் இளமைக்கால நினைவுகள் (சி.அம்பிகாவரன்), Continuing Memories of Vigneswara College, Karaveddi (Dr. K.Sivasubramaniam), எளிமையும் தன்னடக்கமும் கொண்ட கல்விமான் (வீ.தனபாலசிங்கம்), அண்ணனுக்கு அண்ணனாக பேரா.சிவத்தம்பி (வீ.ஏ.திருஞானசுந்தரம்), பேராசிரியர் செய்துள்ள மொழிபெயர்ப்புப் பதங்கள் சில, உய்த்துணர்ந்து எழுதிய குறிப்பு (ச.இராகவன்), மாணவர்களின் மணம்வீசும் பேராசான் (எஸ்.எச்.எம்.ஜெமீல்), பேரா.சிவத்தம்பியின் நாடகப் பணிகள் (பேரா. அம்மன்கிளி முருகதாஸ்), எங்கள் சிவத்தம்பி சேர்

(சூ.யோ.பற்றிமாகரன்), பேராசிரியர் சிவத்தம்பி எழுதியுள்ள நூல்களும் தனிப்பொருள் விரிவாய்வுகளும் (திருமதி உமா வைத்தியலிங்கம்) ஆகிய 17 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 7882

**கரவையூற்று: பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி பற்றிய பல்முக நோக்கு.** வீ.ஏ.திருஞானசுந்தரம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: கரவை விக்னேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொழும்புக் கிளை, 1வது பதிப்பு, மாசி 2001. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201 டாம் வீதி).
(20), 110 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14.5 சமீ.

வீ.ஏ.திருஞானசுந்தரம் அவர்களைச் செயலாளராகக் கொண்டியங்கும் கரவை (கரவெட்டி) விக்னேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் அதன் பழைய மாணவரான பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பற்றி வெளியிடப்பட்டநூல். தமிழக அரசின் திரு.வி.க. விருதைப் பெற்ற பேராசிரியர் சிவத்தம்பியை கௌரவிக்கும் வகையில் இந்நூல் அவரது பன்முகத் திறமைகளை வெளிப்படுத்தும்வகையில் அமையும் பல்வேறு அறிஞர்களின் பார்வைகள் கொண்ட கட்டுரைகளின் தொகுப்பாக வெளியிடப்பட்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 177950).

### 7883

**தம்பையா சிதம்பரப்பிள்ளை சமதர்மக் கூட்டுறவுச் சிற்பி.** செ.சதானந்தன், பு.இராதாகிருஷ்ணன். கரவெட்டி: கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம், கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 1வது பதிப்பு, ஜனவரி 2010. (அல்வாய்: சதாபொன்ஸ் ஓப்செட் பிரின்டர்ஸ், மாலுசந்தி).
(6), 120 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12.5 சமீ.

தமிழறிஞர் அமரர் தம்பையா சிதம்பரப்பிள்ளை சிறந்த கணித ஆசானாகவும், மார்க்சிய சிந்தனையாளராகவும் பொதுவுடைமைத் தத்துவத்தில் தளம்பலில்லாத வாழ்வியலாளராகவும் கருதப்பட்டவர். இறக்கும்வரை கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பெருந்தலைவராக இருந்து சங்கச் செயற்பாடுகளை சமதர்மக்கட்டமைப்பில் சமூக மேம்பாட்டுக்கான கொள்கையாக வழிவகுத்துச் செயற்பட்டவர். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் கல்விகற்று தமிழ், கணிதம் ஆகிய துறைகளில் பயிற்சி பெற்று ஆசிரியராகப் பணியாற்றியவர். அவரது வாழ்க்கை வரலாறு இங்கு நூலுருவாகியுள்ளது.

### 7884

**நடராஜ தரிசனம்: திரு கி. நடராசா அவர்களின் மணிவிழா மலர்.** செல்லத்துரை சுதர்சன் (மலராசிரியர்). உடுப்பிட்டி: மணிவிழாக் குழு, யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
xv, 290 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபரும், புகழ்பூத்த தமிழாசிரியருமான திரு கிருஷ்ணபிள்ளை நடராஜா அவர்களின் மணிவிழா மலர். ஆசியியல் என்ற பிரிவில் 3 ஆசியுரைகளும், வாழ்த்தியலும் வாழ்வியலும் என்ற பிரிவில் அவரது வாழ்வும் பணிகளும் பற்றிய வாழ்த்துக்களும், நினைவுரைகளுமாக 33 பதிவுகளும், ஆய்வியல் என்ற பிரிவில் பல்வேறு துறைசார்ந்த 20ஆய்வுக்கட்டுரைகளும், பதிவியல் என்ற இறுதிப்பிரிவில் திரு.கி.நடராசா அவர்கள் தொடர்புபட்ட பல்வேறு புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன.

### 7885

**நினைவுரு: அமரர் பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா.** நினைவு மலர்க் குழு. யாழ்ப்பாணம்: மு.சிறீபதி, நினைவு மலர்க் குழு சார்பாக, 1வது பதிப்பு, ஜுன் 2009. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பதிப்பகம்).
76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.

இந்த நினைவுரு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மெய்யியல்துறைப் பேராசிரியரும், கலைப்பீடாதிபதியுமான பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா அமரத்துவம் அடைந்தபின்னர் அவர்

நினைவாக வெளிவந்தது. இது அவரது நண்பர்கள், உறவினர்களின் நினைவுப் பதிவுகளையும் மற்றும் பேராசிரியர்களின் புலமைத்துவ சிந்தனைகளையும் தாங்கியுள்ளது. பேராசிரியர் கிருஷ்ணராஜா தத்துவத்துறையில் புலமையுடன் இயங்கியவர். அத்துடன் தத்துவம் கலை ஆகிய இரு புலங்களுக்கும் இடையிலான அறிவுத் தொகுதிகளின் முழுப் பரிமாணத்தையும் உள்வாங்கி புதிய நோக்கில் புதிய கண்ணோட்டங்களை உருவாக்கும் முறைமையில் தனது ஆளுமையை வெளிப்படுத்தியவர்.

### 7886

**பேராசிரியர் க. கைலாசபதி- சமூக மாற்றத்துக்கான இயங்காற்றல்.** லெனின் மதிவானம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).
xiv, 103 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-659-297-9.

கைலாசபதி கலை இலக்கியத் திறனாய்வுப் பரப்பில் தன்னிகரில்லாத் திறன் பெற்றிருந்தார். தமிழ்த்துறையில் மட்டுமல்லாது ஆங்கில, இந்திய மொழித்துறைகளிலும் தனிவழி காத்தவராக விளங்கியவர். இந்நூல் கைலாசபதியின் பல்பரிமாணத் திறனையும் பணியினையும் வாழ்க்கைப் பின்னணி, எழுத்துக்கள், பத்திரிகைத்துறை, பல்கலைக்கழகம், அரசியல், இலக்கிய அமைப்புகள், விமர்சனங்கள், நிறைவுரை ஆகிய எட்டுப் பகுதிகளில் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது. பின்னிணைப்பாக கைலாசபதி பற்றிய முக்கிய தகவல், கைலாசபதியின் எழுத்துக்கள் வெளிவந்த பிரசுரங்கள் என்பனவும், அவர் எழுதிய உலகத் தமிழாராய்ச்சி மாநாடு: பின்னணியும் பின்நோக்கும், ஈழத்துத் தமிழ் இலக்கியம் ஆகிய படைப்புகள் பற்றிய சுருக்கங்களும், சோஷலிசத்துக்கான பாதை பற்றி பேராசிரியர் கைலாசபதியின் கருத்துகளும் இடம்பெற்றுள்ளன.

### 7887

**பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி ஒரு புலமை சகாப்தம்.** கணேசலிங்கன் குமரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை).
151 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ., ISBN: 978-955-659-306-8.

பேராசிரியர் கா.சிவத்தம்பி (1932-2011) அவர்களின் மறைவையொட்டி வெளியிடப்பட்ட நினைவுக் கட்டுரைகளின் பதிவு. இதில் அம்மன்கிளி முருகதாஸ், அமுது யோசவ் சந்திரகாந்தன், சி.பத்மநாதன், ஆர்.செண்பகலட்சுமி, இ.பாலசுந்தரம், நா.சுப்பிரமணியன், த.ஸ்டாலின் குணசேகரன், நா.ஞானகுமாரன், வசந்தி அரசரத்தினம், கி.விசாகரூபன், எஸ்.சிவலிங்கராஜா, குழந்தை ம.சண்முகலிங்கம், மனோன்மணி சண்முகதாஸ், செ.யோகராசா, எஸ்.ஜெபநேசன், ஐராவதம் மகாதேவா, செல்வா கனகநாயகம், கி.நாச்சிமுத்து, ஜோர்ஜ் ஹார்ட், பா.மதிவாணன், வீ.அரசு, கா.இந்திரபாலா, வி.நித்தியானந்தம், அ.சண்முகதாஸ், சி.மௌனகுரு, கி.அரங்கன், அ.மங்கை, பொ.வேல்சாமி, பெ.மாதையன், கு.வெ.பாலசுப்பிரமணியன், ம.நதிரா, சி.தில்லைநாதன், சு.சுசீந்திரராஜா, தொ.பரமசிவன், க.இரகுபரன், றமீஸ் அப்துல்லா, மு.இராமசுவாமி, இரா.சிவச்சந்திரன், சித்திரலேகா மௌனகுரு, ந.முத்துமோகன், சி.மகேந்திரன், சாந்தசீலன் கதிர்காமர். எம்.ஏ.நுஃமான், க.சண்முகலிங்கம், S.H.M.ஜெமீல், சே.இராமானுஜம், வா.செ.குழந்தைசாமி, பொன்னீலன், செல்வி திருச்சந்திரன், ச.சு.இராமர் இளங்கோ, இ.சுந்தரமூர்த்தி, இரா.சுந்தரம், சோ.பத்மநாதன், கார்த்திகேசு சோமாஸ்கந்தராஜா, விதுரன் புவன், தி.கார்த்திகேயன், பொன்.சிவகுமாரன் ஆகியோரின் நினைவஞ்சலிக் கட்டுரைகளினூடாகவும் பல்வகைப் பதிவுகளினூடாகவும் அமரர் கா.சிவத்தம்பியின் அகன்ற பெரும் புலமையின் பதிவுகள் நினைவுகூரப்பட்டுள்ளன.

### 7888

**பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களின் மணிவிழா மலர்.** இரா.வை.கனகரத்தினம் (மலராசிரியர்). கண்டி: பேராசிரியர் சி.தில்லைநாதன் மணிவிழாச் சபை, பேராதனை, 1வது பதிப்பு, நவம்பர் 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).
xxxxiv, 427+ 42 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

*23.11.1997இல் இடம்பெற்ற மணிவிழாவினையொட்டி வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். மலராசிரியர் கனகரத்தினம், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை (இந்துப் பண்பாடு)யைச் சேர்ந்தவர். ஆசியுரையும் வாழ்த்துரையும், பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்களின் ஆக்கங்கள் பற்றிய திறனாய்வு, மானிடவியல், சமூகவியல், ஆங்கிலக் கட்டுரைகள், பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்களின் ஆக்கங்கள் பற்றிய ஆய்வடங்கல் ஆகிய பிரிவுகளில் இந்நூல் பல்வேறு கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்துள்ளது.*

**7889**

**பேராசிரியர் முனைவர் சபா ஜெயராசா விழா வாழ்த்து மலர்.** பேராசிரியர் முனைவர் சபா ஜெயராசா விழாக்குழு. கொழும்பு: பேராசிரியர் முனைவர் சபா ஜெயராசா விழாக்குழு, 1வது பதிப்பு, 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).
xi, 85 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

*பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள், தமிழர் கல்விக்கும், சமூகத்துக்கும் ஆற்றியுள்ள பெரும்பணிகளுக்காக அவரையும் அவர் அப்பணிகளைப்புரிய அவருக்கு உற்ற துணையாய் விளங்கிய அவரது துணைவியாரையும் கௌரவித்து அவரது மாணவர்களும், அன்பர்களும், உறவினர்களும் இணைந்து நடாத்திய மணிவிழாவையொட்டி வெளியிடப்பட்ட வாழ்த்து மலர் இது. இணுவில் சண்முகம் சபாரத்தினம்-அபிராமி அம்மா ஆகியோரின் மகனாகப்பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை இணுவில் மத்திய கல்லூரியிலும், இடைநிலை, உயர் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றிலும், பல்கலைக்கழகக் கல்வியை பேராதனை, கொழும்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களிலும் பெற்றவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளராகவும், திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியராகவும், இராமநாதன் நுண்கலைத்துறைத் தலைவராகவும், நடனத்துறைத் தலைவராகவும் பணியாற்றியவர்.*

**7890**

**மட்டக்களப்பு வாழ்வியல் தடங்களில் ஆசிரியர் சிரோமணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம்.** சரவணமுத்து நவேந்திரன் (புனைபெயர்: கன்னிமுத்து வெல்லபதியான்), சரவணமுத்து கணேசமூர்த்தி (புனைபெயர்: சரவணன்). மட்டக்களப்பு: சரவணமுத்து நவேந்திரன், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).
xxv, 401 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 20x14 சமீ.

*மட்டக்களப்புத் தமிழ்க்கல்விப் பின்புலத்தில் நின்று ஆசிரியர் த.செல்வநாயகம் (37,ஆறாவது ஒழுங்கை, திசவீரசிங்கம் சதுக்கம், எல்லை வீதி, மட்டக்களப்பு) அவர்களின் வாழ்வும் பணிகளும் இந்நூலில் வரலாறாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் கல்வி, பிள்ளை நலத்துறைத் தலைவரான பேராசிரியர் மா.செல்வராஜா அவர்களின் வேண்டுகோளின்பேரில் அவரது மாணவர்களால் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 191649).*

**7891**

**வித்துவான் வேந்தனார்.** வேந்தனார் இளஞ்சேய் (தொகுப்பாசிரியர்). லண்டன்: வேந்தனார் இளஞ்சேய், 1வது பதிப்பு, 2010. (லண்டன்: ஜே.ஆர்.பிரின்ட், 61 Hoe Street, Walthamstow, London E17 4SA).
vi, 235 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

*ஈழத்துத் தமிழறிஞர் வித்துவான் வேந்தனார் பற்றிய தகவல்களாக, அவரது மறைவின்போது வெளியிடப்பட்ட நினைவுமலர், பத்திரிகைச் செய்திகள் கட்டுரையுடன் சொக்கன் (க.சொக்கலிங்கம்) எழுதி, வேந்தனார் குடும்பத்தினரால் 1984ம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ்ப் பேரன்பர் வித்துவான் க.வேந்தனார் என்ற நூலையும் உள்ளடக்கி, அவற்றுடன் பின்னாளில் தமிழ் அறிஞர்கள், மாணாக்கர்கள் போன்றோர் காலத்திற்குக் காலம் அவர்பற்றி எழுதிப் பிரசுரித்த கட்டுரைகளையும் தொகுத்து இந்நூல் உருவாக்கப்பட்டது.*

## *923.8 வர்த்தகர்கள்*

***7892***

***அர்த்தமுள்ள அனுபவங்கள்.*** *தெ. ஈஸ்வரன் (மூலம்), அண்ணா கண்ணன் (பதிப்பாசிரியர்). சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை, 1வது பதிப்பு, மார்ச் 2011. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).*
*264 பக்கம், புகைப்படம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 22x15 சமீ., ISBN: 978-81-89708-40-5.*

*தெய்வநாயகம்பிள்ளை ஈஸ்வரன் 1942இல் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் வல்லநாடு என்ற கிராமத்தில் பிறந்தவர். 7 வயது வரை தமிழ்நாட்டில் வளர்ந்த இவர் 1949இல் கொழும்புக்குச் சென்று புனித பெனடிக்ற் பள்ளியில் படித்து, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1959-1963 காலப்பகுதியில் கற்றுத்தேர்ந்து இளங்கலை வணிகவியல் பட்டம் பெற்றவர். தந்தை நவம்பர் 1963இல் தொடக்கிவைத்த தேயிலை ஏற்றுமதி நிறுவனமான ஈஸ்வரன் பிரதர்ஸ் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்று வளர்த்தவர். இன்று 49 நாடுகளுடன் ஏற்றுமதி உறவினைக் கொண்டுள்ள வர்த்தக நிறுவனம் இதுவாகும். தெ. ஈஸ்வரன் அவர்களின் வாழ்வும் பணிகளுமாக விரியும் இந்நூல் நல்லதொரு வாழ்க்கை அனுபவ நூலாகும்.*

***7893***

***இதோ ஒரு வெளிச்சம்.*** *தி.க.சந்திரசேகரன். கொழும்பு 11: வி.ரி.வி.பவுண்டேஷன் லிமிட்டெட், 267, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1996. (சென்னை 600002: காந்தளகம், 4 முதல் மாடி, 834 அண்ணாசாலை).*
*(12), 435 பக்கம், சித்திரம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.*

*இலங்கையில் வர்த்தகப் பிரமுகர்களிடையே பிரபல்யமானவர் வி.ரி.வி.தெய்வநாயகம்பிள்ளை. உள்நாட்டு வெளிநாட்டு வர்த்த்தக உலகில் நன்கு அறியப்பட்ட நிறுவனம் இவருடையது. இலங்கை அரசிடமிருந்து தேசபந்து விருதினைப் பெற்றவர் இவர். தமிழகத்தின் திருச்செந்தூர் மாவட்டத்தில், சாத்தான்குளம் அருகில் உள்ள சிற்றூரான பன்னம்பாறை இவரது பிறப்பிடமாகும். 1911 ஒக்டொபர் 7இல் பிறந்த வி.ரி.வி.தெய்வநாயகம்பிள்ளையின் வாழ்வும் அவரது வர்த்தகத்துறை வளர்ச்சியும் இந்நூலில் விரிவாக பதியப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16193).*

## *924 மொழியியலாளர்கள்*

***7894***

***தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்.*** *எம்.ஏ.இரத்தினராஜா. யாழ்ப்பாணம்: எம்.ஏ.இரத்தினராஜா, 2வது பதிப்பு, 1999, 1வது பதிப்பு, 1997. (சென்னை 600 021: சக்தி பிரின்டர்ஸ் & என்டர்பிரைசஸ்).*
*102 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x12 சமீ.*

*இந்நூலில் **தமிழ் வளர்த்த ஐரோப்பிய அறிஞர்** (ரொபர்ட் டி.நொபிலி பெஸ்கி - வீரமாமுனிவர், ஸீகன் பால்க், எல்லிஸ், ரேனியஸ், ஜி.யு.போப், கால்ட்வெல், பெர்சிவல், டெய்லர், பெப்ரிஷியஸ், ரொட்லர் வின்ஸ்லோ), **ஏனைய ஐரோப்பிய அறிஞர்** ( கிளார்க், ட்ரூ, ஷுல்ஸ், வால்த் இவார்ட்ஸ், பிறிற்றோ, சார்ஜன்ட் வின்சன்ட், வாக்கர் கிராஸ் பொப்லி சஞ்சிகைகள், அகராதி), **தமிழ்நாட்டுக் கிறிஸ்தவ தமிழறிஞர்** (வேதநாயகம்பிள்ளை, வேதநாயக சாஸ்திரிகள், வித்துவான் கிருஷ்ணபிள்ளை), **பின்னைய தமிழ்நாட்டுக் கிறிஸ்தவ அறிஞர்** (அந்தோனிக்குட்டி, சற்குணம், நயனப்ப முதலியார், சாமிநாதபிள்ளை, சாமுவேல்பிள்ளை, பரமானந்தம் ஐயர், பேராசிரியர் ஜோதிமுத்து, வித்துவான் வி.பி.நடராஜன், வி.பா.கா.சுந்தரம், பேராசிரியர் சத்தியசாட்சி, அறிஞர் தயானந்தன் பிரான்சிஸ்), இலங்கை நாட்டுக் கிறிஸ்தவ தமிழறிஞர் (சி.வை.தாமோதரம்பிள்ளை, விஸ்வநாதபிள்ளை, சதாசிவம்பிள்ளை, நெவின்ஸ் சிதம்பரபிள்ளை, கதிரைவேற்பிள்ளை, கனகசபைப்பிள்ளை, சதாசிவம்பிள்ளை, அமெரிக்க மிஷன் வெளியீடுகள், சுவாமி ஞானப்பிரகாசர்,*

*ஜே.ரி.சுப்பையாபிள்ளை, குமாரகுலசிங்கம், சொலமன் செல்லத்துரை, கனன் சோமசந்தரம், உபதேசியார் சோமசுந்தரம், பிரான்சிஸ் கிங்ஸ்பெரி, புலவர் ஜே.எஸ்.ஆழ்வார்பிள்ளை, கே.பி.முத்தையா, சுவாமி தனிநாயகம் அடிகள்) ஆகிய தலைப்புகளில் தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்களின் வாழ்வும் பணியும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 162457).*

## *926 பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள்*

### *7895*

***பேராசிரியர் மருத்துவ கலாநிதி அ.சின்னத்தம்பி அவர்கள் நினைவுப் பேருரை.*** *சு.வித்தியானந்தன். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச்சங்க நிலையம், உருத்திரா மாவத்தை, 1வது பதிப்பு, செப்டம்பர் 1987. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231,* Wolfendhal Street *).*
*(12), 28 பக்கம், விலை: ரூபா 12.00, அளவு: 19x13 சமீ.*

*இலங்கையில் பிரபல்யமான மருத்துவத்துறைப் பேராசிரியர் அ.சின்னத்தம்பி அவர்களின் நினைவுப்பேருரை 2.11.1986இல் கொழும்புத் தமிழச்சங்கத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர் சி.வித்தியானந்தன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. பேராசிரியரின் வரலாற்றையும், பணிகளையும் விரிவாக விளக்கும் வகையில் ஆற்றப்பட்ட உரை இது. 11ஆவது கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடாக வெளிவந்த நூல். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 439339).*

## *927 கலைஞர்கள்*

### *7896*

***கலைஞர்கள் கையேடு 2003: இலங்கைத் தொழில்சார் கலைஞர்களின் கையேடு.*** *நளினி சிவகுமாரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 5: அரஸ்கோ பப்ளிக்கேஷன்ஸ், 31/8, சுலைமான் ரெரஸ், ஜாவத்த வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளுமெண்டால் வீதி).*
xxxii, *96 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ.*

*இலங்கை தொழில்சார் கலைஞர்களின் விபரங்களை உள்ளடக்கிய வண்ணப் படங்களுடனான கைந்நூல். இலக்கிய, சமயச் சொற்பொழிவாளர்கள், இசை வாத்தியக் கருவி வல்லுநர்கள், நடன வித்தகர்கள், ஆன்மீகப் பெரியார்கள், ஆலயங்கள், சிவாச்சாரியார்கள், ஒப்பனைக் கலைஞர்கள், மலர் அலங்கார நிபுணர்கள், என இந்நூலிலுள்ள கலைஞர்களின் பட்டியல் நீள்கின்றது.*

## *927.5 ஓவியக்கலைஞர்கள்*

### *7897*

***மனோலயம்: வீ.ஏ.மனோரஞ்சிதன் பற்றிய நினைவுகள்.*** *வீ.ஏ.திருஞானசுந்தரம் (தொகுப்பாசிரியர்). தெகிவளை: ஈசி வேய்ஸ், இல.4 1/1 வண்டவர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (தெகிவளை: ஈசி வேய்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், இல.4 1/1 வண்டவர்ட் பிளேஸ்).*
xvi, *139 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *978-955-1640-01-9.*

*1946 ஒக்டோபர் 9ம் திகதி பிறந்து இருபத்து நான்கு ஆண்டுகளே வாழ்ந்து 1970 ஜுன் 1ம்திகதி மறைந்த ஒரு இளம் ஓவியரான வீ.ஏ.மனோரஞ்சிதன் பற்றிய வாழ்வியல் பணிகளை பதிவுசெய்யும் இந்நூல் அவரது மறைவின் பின்னதான 37 ஆண்டுகள் கழிந்தநிலையில் அவரது சகோதரனால் தொகுக்கப்பட்டு நினைவிதழாக வெளிவந்துள்ளது. நூலாசிரியர் வீ.ஏ.திருஞானசுந்தரம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பல்வேறு உயர்நிலைப் பதவிகளை வகித்தவர். எழுத்தாளர், நெறியாளர், பணிப்பாளர், ஆலோசகர் ஆகிய பன்முக முகவரிகளில் வாழ்ந்து ஓய்வு பெற்றவர்.*

இந்நூல் - தனது தம்பியாரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தகசேவையில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு அலுவலராகப் பணியாற்றியவருமான அமரர் வீ.ஏ.மனோரஞ்சிதன் மேல் கொண்ட ஒப்பற்ற பாசத்தினையும் நேசத்தினையும் விரிவாகப் பேசுகின்றது. தான் வளர்த்த தன் தம்பியின் பிரிவின் துயர் காலம் கடந்தும் இவரது எழுத்துக்களில் ஊடுபரவிநிற்கின்றன. தன் நினைவுப் பதிவுகளை 37 வருடங்களின் பின்னர் எழுத்தாக்கம் செய்திருக்கிறார். மனோரஞ்சிதனின் அகமன ஆழ் உணர்வுகளையும், ஆக்க இலக்கியத்திற்கான நினைவுகளையும் உள்ளடக்கிய இந்நூலில் மனோரஞ்சிதனை அறிந்தவர்கள், பழகியவர்கள், நட்புரிமை பாராட்டியவர்களின் பன்னிரு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. மனோரஞ்சிதன் பற்றிய மனப்பதிவுகளை திருமதி ஞானம் இரத்தினம், எஸ்.ஜே.ஜெயக்குமார், அம்பிகா தாமோதரம், புலவர் த.கனகரத்தினம், சக்தி பால-ஐயா, ராஜேஸ்வரி சண்முகம், எம்.ஜே.எம்.அஷ்ரப், எம்.எஸ்.ஜே.டீன், அந்தனி ஜீவா, ஜின்னாஹ் ஷரிபுத்தீன், இ.ஜெயராஜ், சி.அழகுப்பிள்ளை ஆகியோர் காலம்கடந்தும் மனதில் தேக்கிவைத்து வரைந்துள்ளனர். மனோரஞ்சனின் ஆற்றலை அறியச் செய்வதற்காக பத்திரிகைகளில் வெளிவந்த அவரது கருத்தோவியங்களையும், உள்ளூர் வெளியூர் அரசியல்தலைவர்களின் ஓவியங்களையும் பள்ளிக்காலப் புகைப்படங்களையும் மனோரஞ்சிதனின் பிற படைப்புகளையும் இணைத்துள்ளார். மனோ வரைந்த ஓவியங்கள், கேலிச்சித்திரங்கள் என்பவற்றுடன் காதலிக்கத் தெரிந்தவள் என்ற அவரது சிறுகதையும் இந்நூலில் மீள்பதிவுக்குள்ளாகியுள்ளன. பின்னிணைப்பாக **காற்றைக் கருவிகொண்டு கலைபடைத்த வித்தகர்கள்** என்ற தலைப்பில் திரு வீ.ஏ.திருஞானசுந்தரம் அவர்கள் எழுதிவந்த 48 கலைஞர்கள் வாழ்வும் பணிகளும் பற்றிய குறிப்பும் கலைஞர் புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன.

## 927.8 இசைக்கலைஞர்கள்

மேலும் பார்க்க: **7399**

## 927.92 நாடகக் கலைஞர்கள்

### 7898

**கலைப் பேரரசு ஏ.ரி.பி: அரங்கக் கலையில் ஐம்பதாண்டு.** கோகிலா மகேந்திரன். தெல்லிப்பழை: கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, மே 2003. (யாழ்ப்பாணம்: அம்மா அச்சகம், இணுவில்). xvi, 30 பக்கம், தகடு, விலை: ரூபா 75., அளவு: 20.5x14.5 சமீ.

கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களின் பவளவிழா தழுவிய தெல்லிப்பழைக் கலை இலக்கியக் கள வெளியீடாக 15.5.2003 அன்று வெளியிடப்பட்ட சிறு நூல் இது. இவர் தனது கலையுலக வாழ்வில் குரும்பசிட்டி சன்மார்க்க சபை, யாழ். இலக்கிய வட்டம், மாவை முத்தமிழ் மன்றம், யாழ். நாடக அரங்கக் கல்லூரி, தெல்லிப்பழை கலை இலக்கியக் களம் என்பவற்றின் கலைப் பணிகளினூடே இணைந்து வரலாறு படைத்தவர். அவர் தொடர்பான வாழ்வும் பணியும் பற்றிய பதிவாக இந்நூல் அமைகின்றது. ஏ.ரி.பொ.கலையாற்றைப் பன்னீராக்கும் மலையூற்றுப் பூ, நாடகமே வாழ்க்கையென நின்றீர் வாழி, கலை, கலைகளின் அரசன்-நாடகம், கல்வி, கலைஞர் ஆகிய தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31015).

### 7899

**கலையுலகில் கால் நூற்றாண்டு.** ஏ.ரி.பொன்னுத்துரை. தெல்லிப்பழை: சன்மார்க்க சபை, குரும்பசிட்டி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1974. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்). iv, 52 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் நீண்டகால உறுப்பினரும் செயலாளரும், நாடகப் பிரிவுத் தலைவருமான ஏ.ரி.பொன்னுத்துரைக்கு யாழ். பரமேஸ்வரா கல்லூரி முன்னாள் அதிபர் சி.சிவபாதசுந்தரம் தலைமையில் கலையரசு கே.சொர்ணலிங்கம் அவர்கள் மூலம் கலைப்பேரரசு பட்டத்தை வழங்கிக் கௌரவித்த ஒரு காலகட்டத்தில், அதனை நினைவுகூரும் வகையில்

வெளியிடப்பட்ட நூல் இதுவாகும். தனது கால் நூற்றாண்டு கலைச் சேவைபற்றி ஏ.ரி.பொன்னுத்துரை எழுதிய அனுபவப் பகிர்வான இந்நூல் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் 39ஆவது வெளியீடாக வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18921).

### 7900

**சுட்ட பழமும் சுடாத மண்ணும்: கலைஞர் ஏ.ரகுநாதன் பவளவிழா மலர் 1935-2010.** எஸ்.கே.ராஜென், கி.பி.அரவிந்தன் (தொகுப்பாசிரியர்கள்). பிரான்ஸ்: உலகத் தமிழ் கலையகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (லண்டன்: வாசன் அச்சகம்).
128 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x17.5 சமீ.

ஈழத்துக் கலைஞர் ஏ.ரகுநாதன் தற்போது புலம்பெயர்ந்து பிரான்சில் வாழ்ந்து வருகிறார். அவரது 75ஆவது அகவையைக் குறித்து 25.9.2010 அன்று அவரது கலைப்பயணத்தை கௌரவிக்கும் வகையில் ஒழுங்குசெய்யப்பட்ட பவளவிழாவின் நினைவாக வெளியிடப்பட்ட மலர் இது. கறுப்பு வெள்ளை, வண்ணப்படங்களுடன், அவரது கலை வாழ்வில் சந்தித்த நண்பர்களின் கருத்துக்களைக் கட்டுரைகளாகத் தாங்கி இம்மலர் வெளிவந்துள்ளது. ரகுநாதனின் கலைப்பயணத்தின் ஒரு ஆவணமாக இம்மலர் அமைகின்றது. தனது வாழ்க்கைப்பயணம் பற்றி விழா நாயகன் ரகுநாதன் எழுதிய கட்டுரையொன்றும் இடம்பெற்றுள்ளது.

### 7901

**நவாலியூரான்: கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை அவர்களின் பவளவிழா மலர்.** க.கமலசேகரம் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: வாழும் கலைஞர்களைக் கௌரவிக்கும் அமைப்பு, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (யாழ்ப்பாணம்: ஸ்ரீராம் ஒப்செற் பிறின்டர்ஸ்).
60 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

வாழும் கலைஞர்களை கௌரவிக்கும் அமைப்பு, கடந்த 52 ஆண்டுகளாக நாடகக் கலைக்கே தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றிய கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை அவர்களின் 75வது பிறந்ததினத்தன்று (6.1.2004) அவரைக் கௌரவிக்கும் வகையில் வெளியிட்டுள்ள மலர் இது. நவாலியூரானின் வாழ்க்கைக் குறிப்புகள், அவரது சிறுகதைகள், கவிதைகள் ஆகியவற்றில் சில இம்மலரில் பிரசுரமாகியுள்ளன. நாடகம் தந்த நண்பர் நவாலியூரான்/ அனுபவப் பொக்கிஷம்/ நாடக மேடையுடன் நானும்/ பட்டங்கள், கௌரவங்கள்/ நாடகங்கள், காலங்கள், இடங்கள்/ காத்திருப்பேன் உனக்காக/ பூதத் தம்பி/ வெளியீடுகள்: முகை வெடித்த மொட்டு, உலகம் எங்கள் கைகளிலே, சின்னவனா பெரியவனா?/ வானொலி நாடகங்கள்/ 75 வயதும் 52 வருட நாடகப் பணியும்/ நவாலியூரானின் ஆக்கங்களில் ஒரு சில துளிகள் ஆகிய பிரிவுகளின்கீழ் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32931).

### 7902

**நவாலியூரானின் கலை இலக்கியப் பணிகள்.** வி.பி.தனேந்திரா. யாழ்ப்பாணம்: யாழ். ராதவல்லி வெளியீடு, 1வது பதிப்பு, ஆனி 2008. (யாழ்ப்பாணம்: சுரபி பதிப்பகம், நாவலர் வீதி).
vi, 122 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

நவாலியூரான் என்ற புனைபெயரில் கலை இலக்கிய உலகில் அறியப்பட்ட நவாலியூர் நா. செல்லத்துரை (06.01.1929)அவர்களின் வாழ்வும் பணியும் பற்றிய ஆய்வு. வாழ்வும் பணியும், சமூக நாடகங்கள், வரலாற்று-இலக்கிய நாடகங்கள், சிந்து நடைக் கூத்து, நாடக உத்திமுறைகள், பட்டங்களும் விருதுகளும், திரைப்படம், நாவல், சிறுகதை, கீதங்கள், திருப்பாடல் கவிதைகள், கல்வெட்டுக் கவிதைகள், பிறதுறைகள் ஆகிய 13 பிரிவுகளில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் வி.பி.தனேந்திரா, யாழ்ப்பாணம் அரியாலைப் பிரதேசத்தில் பிறந்தவர். எழுத்துத்துறையில் தீவிர ஈடுபாடு கொண்டவர். சிந்தனைச் சுடர் (2006), மனம் வெளுக்க (2006),

நம்பிக்கை வரிகள் (2008) ஆகிய நூல்களை எற்கெனவே எழுதி வெளியிட்டிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 173693).

## 927.93 திரைப்படக்கலைஞர்கள்

**7903**

**ஒரு சினிமாப் பைத்தியத்தின் உளறல்.** கி.செ.துரை (இயற்பெயர்: கிருஷ்ணன் செல்லத்துரை). டென்மார்க்: அலைகள் மூவீஸ் இன்டர்நெஷனல், Ny Mollevej 30, 7400 Herning, 1வது பதிப்பு, ஜனவரி 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).
258 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழும் கி.செ.துரை தாயகத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றிய இவர் சிறந்த படைப்பாளியும் நாடகத்துறையில் மிகுந்த ஈடுபாடுகொண்டவருமாவார். பூக்கள், இளம்புயல் ஆகிய திரைப்படங்களின் கதை, திரைக்கதை, தயாரிப்பு, இயக்கம் ஆகிய முதன்மைப்பொறுப்புக்களை ஏற்றுச் செயற்பட்ட இவரது சினிமாத்துறை அனுபவங்களை இந்நூலில் பகிர்ந்துகொள்கின்றார். தான் சந்தித்த நெருக்கடிகள், துரோகங்கள், இனிய பொழுதுகள் என்பவற்றுக்கூடாக தான் தேடிய பெரும் அனுபவங்கள் வாசகர்களுக்குப் படிப்பினையாக அமையும்வகையில் இந்நூலை சுவையாக எழுதியுள்ளார். இந்நூலின் ஒலித்தகடும் நூலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## 928 இலக்கிய அறிஞர்கள், புலவர்கள்

**7904**

**இது கதையல்ல நிஜம்: ரூபராணி ஜோசப்பின் சமூக வரலாற்று பதிவுகள்.** இரா.அ.இராமன். கண்டி: குறிஞ்சித் தேனி பதிப்பகம், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், 18/3, பூரணவத்தை, 1வது பதிப்பு, மே 2006. (கண்டி: சண் பிரின்ஸ் அச்சகம், 67 மாபனாவதுர).
44 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 60., அளவு: 20.5x14 சமீ.

இந்நூல் ஈழத்துப் படைப்பாளி ரூபராணி ஜோசப் அவர்கள் பற்றிய வரலாற்றுப் பதிவை மேற்கொள்கின்றது. இவரைப் பற்றிய குறிப்புகளோடு இவரை அடையாளப்படுத்தும் புகைப்படங்களும், பதிவுசெய்யப்பட்டுள்ளன. பல்வேறு சமூகவியலாளர்கள் இவரைப்பற்றிக் கூறிய மனப்பதிவுகளும் இந்நூலில் இடம்பெறுகின்றன. தான் பிறந்த மட்டக்களப்பு மண்ணிலும், பின்னாளில் வாழ்ந்துவரும் மலையக மண்ணிலும் ஆற்றிய சமூக சேவைகள் பற்றிய ஒரு ஆவணமாகவும் இந்நூல் அமைகின்றது.

**7905**

**இலக்கிய உலகில் இவர்கள்.** இரா.அ.இராமன். கண்டி: குறிஞ்சித் தேனி பதிப்பகம், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், 18/3, பூரணவத்தை, 2வது பதிப்பு, ஜனவரி 2003, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (கண்டி: கிரீன்லீப் அச்சக இல்லம், 85, கட்டுகஸ்தொட்ட வீதி).
32 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13.5 சமீ.

மலையகத்தில் பல்வேறு விதமான சமூக, சமய, இலக்கிய, கல்விப் பணிகளுக்குக் கைகொடுத்து உதவிவரும் ஸ்ரீலங்கா சிகாமணி நாகலிங்கம் இரத்தினசபாபதி, இலக்கியக் காவலர் எஸ். முத்தையா, இரத்தினசபாபதி மோகன் ஆகிய மூவரினதும் பெருமைகளைப் பேசும் நூலாக இது அமைகின்றது. இரா.அ.இராமன், கண்டியை மையமாகக் கொண்டு இலக்கிய, அறிவியல் சமூகப்பணிகள் என விரிவான செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவராவார். இவர் 2004இல் தனது மணிவிழாவைக் கொண்டாடியவர். அறுபதுகளின் பிற்பகுதியில் அம்மா என்ற ஒரு இலக்கிய இதழையும் நடத்தியவர்.

**7906**

**என் சரிதை.** அப்துல் காதிர் லெப்பை. கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்னை, 1வது பதிப்பு, ஜனவரி 1983. (சென்னை 600001: மில்லத் பிரின்டர்ஸ், 16 அப்பு மேஸ்திரி சாலை).
96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

கிழக்கிலங்கையின் காத்தான்குடி தந்த, ஈழத்தின் இஸ்லாமியப் பெரும்புலவர் அப்துல் காதிர் லெப்பை அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் இதுவாகும். இலங்கையின் ஆங்கிலேய ஆட்சி மறையத்தொடங்கிய காலகட்டத்தில் ஆசிரியராகப் பயிற்சிபெற்று பின்வந்த நாற்பது ஆண்டுகள் வரையில் தனது கல்விப்பணிமூலம் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குத் தமிழறிவைப் புகட்டியவர் அப்துல் காதிர் லெப்பை. அவரது வரலாறு ஈழத்து இலக்கிய வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தது.

### 7907

**குமாரசுவாமிப் புலவர் சரித்திரம்.** சி.கணேசையர். யாழ்ப்பாணம்: பிரமஸ்ரீ சி.கணேசையர், புன்னாலைக் கட்டுவன், 1வது பதிப்பு 1925. (யாழ்ப்பாணம்: சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில்).
(16), 108 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12 சமீ.

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமையுபாத்தியாயராய் இருந்தவர் குமாரசுவாமிப் புலவரவர்கள். எதையும் சுருங்கக்கூறி விளங்கவைப்பதில் வல்லவர். போலிப் புலவர்களின் பிழைகளை அந்நாளில் கண்டு கண்டிப்பதிலும் பெயர்பெற்ற அவரது வாழ்க்கை வரலாற்றினை சுவைபட இந்நூலில் எழுதியிருக்கிறார் புலவரவர்களின் நெடுநாளைய மாணாக்கரான பிரமஸ்ரீ சி.கணேசையர் அவர்கள். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33613).

### 7908

**சிவசம்புப் புலவர் சரித்திரம்.** கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை. சுன்னாகம்: புலவரகம், மயிலணி, 1வது பதிப்பு, 1965. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
12 பக்கம், விலை: சதம் 30., அளவு: 18.5x12 சமீ.

சுன்னாகம் கு.முத்துக் குமாரசுவாமிப் பிள்ளை இலங்கை வானொலியில் 30.9.1964 அன்று நிகழ்த்திய வானொலிச் சொற்பொழிவு இதுவாகும். பிரித்தானிய ஆதிக்கத்தில் தமிழ்ப்பிரதேசம் உள்வாங்கப்பட்டுத் தமிழ் நலிவடைந்துவந்த வேளையில், ஒரு இளஞ்சூரியனாகத் தோன்றி, இலக்கிய ஒளி வீசி, செவ்விய மதுரம் கலந்த தீந்தமிழில் சொல்நயமும், பொருள் நயமும் அமைந்த மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பாக்களால் அறுபதுக்கும் மேற்பட்ட சிறந்த பிரபந்தங்கள் இயற்றித் தமிழன்னையின் நலிவையும் மெலிவையும் தீர்த்து வளம்படுத்திய பெருமை சிவசம்புப் புலவருக்குரியது. அவரது வாழ்க்கை வரலாறு இந்நூலில் சுருங்கக் கூறப்பட்டுள்ளது.

### 7909

**தமிழுக்கும் அமுதென்று பேர்.** டயானா மரியதாசன். யாழ்ப்பாணம்: அருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம், 1வது பதிப்பு, சித்திரை 2010. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).
xiii, 99 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

தமிழறிஞர் செவாலியர் இளவாலை அமுது அவர்களின் வாழ்வும் பணியும் பற்றிய ஆய்வுநூல். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2006இன் தமிழ்ச் சிறப்புக் கலைமாணித் தேர்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு இதுவாகும். இயல் ஒன்றில் அமுதுப் புலவரின் வாழ்க்கை வரலாறும், இயல் இரண்டில் அவரது தேர்ந்த கவிதைகள் பற்றியும், இயல் மூன்றில் அவரது ஆய்வு நூல்கள் பற்றியும், இயல் நான்கில் அவரது வாழ்க்கை வரலாற்று நூல்கள் பற்றியும், இயல் ஐந்தில் அவரது பிற பணிகள் பற்றியும் பேசும் இவ்வாய்வின் ஆறாம் இயல் அமுதுப் புலவரின் வாழ்வும் பணிகளும் பற்றிதொரு மதிப்பீடாக அமைந்துள்ளது. அமுதுப் புலவரின் இலக்கிய உலா, விருது வழங்கல், பிறந்த தினம், மேடைப் பேச்சுக்கள் என்பன பற்றிய புகைப்படக்காட்சிப் பதிவுகளும் இந்நூலில் இடையிடையே இடம்பெற்றுள்ளன.

***7910***

***நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்.*** *க.இரகுபரன். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல.7, 57ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).*
*(4), 42 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14.5 சமீ.*

*நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் இலங்கை இலக்கிய கர்த்தாக்களுள் முதன்மைநிலையில் வைத்து எண்ணப்படுபவர். தேன்சொட்டும் பாக்களால் அமைந்த பல நூல்களைத் தந்தவர். கொழும்புத் தமிழ்ச்சங்கம், இலங்கைத் தமிழர் சம்பந்தமான அடிப்படை விடயங்களை நூல்களாக வெளிக்கொணர்வதற்கான செயற்றிட்டமான, இலங்கைத் தமிழர் வாழ்வும் வகிபாகமும் என்ற தொடரில் வெளிவந்த நூல் இதுவாகும். இந்நூலாசிரியர் ஒலுவில் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறையில் பணியாற்றுபவர்.*

***7911***

***நினைவுச் சரங்கள்.*** *முல்லைமணி வே.சுப்பிரமணியம். மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, ஆனி 2007. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).*
*190 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-8715-39-0.*

*எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 38ஆவது பிரசுரமாக வெளிவரும் நூல். ஈழத்து இலக்கியவாதி முல்லைமணி வே.சுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இச்சுயசரிதை கூறுகின்றது. நுழைவாயில், ஊரும் பேரும், அன்னையும் பிதாவும், சித்திரை மாதம் புத்திரன் பிறந்தால், இளமைக்கல்வி, 1930-1948, பண்டித கலாசாலை, ஆங்கிலக் கதவு, உத்தியோக வேட்டை, தனிச்சிங்களச் சட்டம், ஆசிரியர் பதவி, கலையுலக நினைவுகள், எழுத்துலக அனுபவங்கள், எழுத்தாளர் சந்திப்பு, விரிவுரையாளராக, நிர்வாகப் பணியில், சுகமும் துக்கமும், வனத்தின் மத்தியில், பரிசில்களும் பாராட்டுக்களும், அறிஞர் தொடர்பு, கோயிலும் குளமும், சமூக சேவை, முடிவுரை, வரலாற்றுக் குறிப்பு, கலாநிதிப் பட்டம் ஆகிய 25 தலைப்புகளில் இச்சுயசரிதை விரிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 173812).*

***7912***

***புத்தளம் பிரதேச புலவர்கள்.*** M.S.M.*அனஸ். கொழும்பு: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு-2002, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44 புகையிரத நிலைய வீதி).*
xii, *78 பக்கம், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 955-8806-06-04.*

*புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த ஷெய்கு இஸ்மாயில் புலவர், வரகவி செய்கு அலாவுத்தீன், கவி.எம்.எம்.லெப்பை (அலி உதுமான்), கவி சேக்கமரைக்கார், நா.முஹம்மது அசனார் மரைக்கார், மீ.ஹபீபு முஹம்மது புலவர், அப்துல் மஜீதுப் புலவர், உசனார் லெப்பை, கவி.சித்தீக், அ.முஹம்மது இப்றாஹிம் ஆகிய பத்து புலவர்களின் வாழ்வும் பணிகளும் பற்றிய குறிப்புகளையும், அவர்களது பாடல்களிற் சிலவற்றையும் கொண்டது. இப்பாடல்கள் அனைத்துமே மக்களின் அன்றாட உணர்வுகளையும் கலாச்சார வாழ்வையும் பிரதிபலிப்பவை. மக்களிடம் எளிதில் சென்றடைவதற்காகவே இயற்றப்பட்டவை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 621982).*

***7913***

***மஹாகவி துட உருத்திரமூர்த்தி நினைவுமலர்.*** *தெல்லிப்பழை: அம்பனைக் கலைப் பெருமன்றம், தெல்லிப்பழை, 1வது பதிப்பு, ஜூலை 1971. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.*

*30.7.1971 வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் இடம்பெற்ற மஹாகவியின் அஞ்சலி விழாவில் வெளியிடப்பட்ட மலர். பேராசிரியர் சு.வித்தியானந்தன், அ.செ.முருகானந்தன்,*

*அரியாலையூர் வே.ஐயாத்துரை, ஆ.சிவநேசச் செல்வன் ஆகியோர் மலர்வெளியீட்டுப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் P.3058).*

**7914**

***மானுடம் பாடும் வானம்பாடி: கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 40 ஆண்டு கால கவிதைப் பயணம்.*** *மலர் வெளியீட்டுக் குழு. லண்டன்: கவிஞர் புதுவை இரத்தினதுரை மலர் வெளியீட்டுக் குழு, 1வது பதிப்பு, மார்ச் 2006. (பதிப்பக விபரம் தரப்படவில்லை).*
*60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.*

*லண்டனில் 26.3.2006 அன்று, தாயகக் கவி புதுவை இரத்தினதுரையின் 40 ஆண்டுகால கவிதைப் பணியினை வாழ்த்தும் நிகழ்வில் வெளியிடப்பட்ட மலர் இது. வெவ்வேறு தளங்களிலே கவிஞரின் செயற்பாட்டுத் திறன்களை உள்வாங்கிய பல நிகழ்வுகளைப் பதிவுசெய்யும் ஒரு முயற்சியாக இம்மலர் தொகுக்கப்பட்டுள்ளது. சூ.யோ.பற்றிமாகரன், தா.நவநீதன், லெமுருகபூபதி, கி.பி.அரவிந்தன், கவிஞர் சோதியா, கா.சிவத்தம்பி, நவரட்ணம் இரகுராம், இன்குலாப், ஜேர்மனி சிவநாதன், மட்டுவில் ஞானக்குமாரன், கோவிலூர் செல்வராஜன், பொ.ஐங்கரநேசன், இளவாலை அமுதுப்புலவர் ஆகியோரின் நினைவுப் பதிகைகளும் கவிஞரின் சில கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

**7915**

***மூன்றாவது கண்: பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களது வாழ்க்கைச் சுருக்கம்.*** *கனக செந்திநாதன். யாழ்ப்பாணம்: தி.ச.வரதராஜன், வரதர் வெளியீடு, 1வது பதிப்பு, ஆவணி 1959. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).*
*(4), 52 பக்கம், விலை: சதம் 65., அளவு: 20x13.5 சமீ.*

*ஈழத்து இலக்கிய உலகில் சோமசுந்தரப் புலவர், மகாவித்துவான் கணேசையர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆகியோரை மூன்று கண்கள் என்று விதந்து குறிப்பிடுவர். அவ்வகையில் இவ்வாழ்க்கை வரலாற்றின் நாயகர் பண்டிதமணியைக் குறிப்பிடும் வகையில் மூன்றாவது கண் என்று தலைப்பிடப்பட்டுள்ளது. பண்டிதமணியின் வாழ்க்கை நல்லதை ஆக்கி, தீயதைச் சுட்டெரித்து ஈழத்தின் பழைய பண்பாட்டை ஓரளவு நிலைநிறுத்தியிருக்கிறது. அந்தப் பெரியாரின் வாழ்க்கை வரலாறு இந்நூலில் விரிந்துள்ளது. இதன் முதற் பகுதி பண்டிதமணியவர்கள் ஆசிரிய கலாசாலையைவிட்டுப் பிரிந்த அன்று அவரைப்பற்றி வீரகேசரியில் எழுதிய கட்டுரையாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 140105).*

**7916**

***வித்துவான் தமிழ் ஒளி க.செபரத்தினம் அவர்களுக்கான பாராட்டுவிழா சிறப்பு மலர் 2010.*** *மலர்க் குழு. மட்டக்களப்பு: வித்துவான் தமிழ் ஒளி க.செபரத்தினம் அவர்களுக்கான பாராட்டுவிழா ஏற்பாட்டுக் குழு, திருப்பழுகாமம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).*
*32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.*

*கிழக்கு மாகாணத்தின் முன்னணிப் பாடசாலைகள் பலவற்றிலும் ஆசிரியராகவும் ஆற்றல் மிக்க அதிபராகவும் பணியாற்றியவர் வித்துவான் க.செபரத்தினம் அவர்கள். பின்னாளில் கனடாவில் புலம்பெயர்ந்துவாழ்ந்த இப்பெரியார் அண்மையில் தனது தாயக மண்ணான திருப்பழுகாமத்திற்கு வந்தபோது அவ்வூர் மக்களால் 3.10.2010 அன்று ஒழுங்குசெய்யப்பட்ட பாராட்டு விழாவின்போது வெளியிடப்பட்ட மலர் இது. வித்துவான் க.செபரத்தினம் அவர்களது வாழ்வும் பணிகளும் பற்றிப் பல்வேறு பிரமுகர்களினதும் வாழ்த்துச் செய்திகளும், கட்டுரைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.*

***மேலும் பார்க்க: 7731***

## *940 ஐரோப்பிய வரலாறு*

### *7917*

***19ம் 20ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா - 1815-1939.*** *இ.இலிப்சன் (ஆங்கில மூலம்), அரசகரும மொழித் திணைக்களம் (தமிழாக்கம்). கொழும்பு: அரசகரும மொழித் திணைக்களம், 1வது பதிப்பு, 1962. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).*
viii*, 636 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், விலை:குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14 சமீ.*

E.Lipson *எழுதிய* Europe in the 19th & 20th Centuries 1815-1939 *என்ற ஆங்கில நூலின் ஆறாவது பதிப்பின் தமிழாக்கம் இது.* London, Adam and Charles Black *என்ற வெளியீட்டாளர்களின் அனுமதியுடன் இலங்கை அரசகரும மொழித்திணைக்கள மொழிபெயர்ப்பாளர்களினால் தமிழாக்கம் செய்யப்பட்டது. உயர்வகுப்பு மாணவர்களின் வரலாற்றுப் பாடத் தேவையைப் பூர்த்திசெய்யும்வகையில் உருவாக்கப்பட்ட இந்நூலில், ஐரோப்பாவின் பிற்கால வளர்ச்சியோடு சம்பந்தப்பட்டிருந்த அரசியல் பொருளாதார சக்திகள் எவ்வாறு ஒன்றிலொன்று தங்கியிருந்தனவென்பதை ஆசிரியர் விளக்கமுயன்றிருக்கிறார். நெப்போலியனது வீழ்ச்சிக்குப் பின்னர் பிரதான ஐரோப்பிய நாடுகளடைந்த உள்நாட்டு வளர்ச்சி பற்றித் தொடர்பாகவும் சுருக்கமாகவும்- விவரமான கதையைப் போலன்றிப் பகுப்பாராய்வுடன் கூறும் முறையைக் கையாண்டிருக்கிறார். பிரான்சின் பிற்போக்கும் புரட்சியும் (1815-1870), ஜேர்மனியப் பேரரசின் வளர்ச்சி (1815-1870), ரஷ்யாவில் சீர்திருத்த இயக்கம் (1815-1914), ஒஸ்ட்ரிய-ஹங்கேரியின் இனப்பிரச்சினையும் யாப்புப் பிரச்சினையும் (1815-1867), இத்தாலியின் ஐக்கியம் (1815-1870), போல்கன் அரசுகள், ஐரோப்பாவின் ஐக்கியம், புதிய ஊழி (1877-1914) ஆகிய ஒன்பது இயல்கள் தனித்தனியாக எழுதப்பட்டுள்ளன. கடந்த கால்நூற்றாண்டு (1914-1939) என்ற இறுதி இயலில் 1914-1918 போர், சமாதானப் பொருத்தனைகள் 1919-1923, நாட்டுக்கூட்டவை, சோவியத் ரஷ்யா, தேசிய சமவுடைமை ஜேர்மனி, பாசிச இத்தாலி, ஏனைய ஐரோப்பிய அரசுகள், பொருளாதார நாட்டினவாதம், மூன்றாம் நெப்போலியன், இளவரசன் வொன் பிசுமாக்கு, இரண்டாம் அலெக்சாந்தர், இளவரசன் மெற்றெனிக்கு, மசினி, பெருமகன் கவூர், கரிபோல்டி, முதலாம் அலெக்சாந்தர், குடிப்பதி உவில்சன், இலெனின், பிறயன், கமால் அத்தேக்கு ஆகிய தலைப்புகளில் வரலாற்றுக் குறிப்புகள் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.*

### *7918*

***ஐரோப்பிய வரலாறு: சீர்திருத்தக் காலம் முதல் தற்காலம் வரை.*** *பேடினன்ட் ஷெவில் (ஆங்கில மூலம்), சி.பர்டினந்து, ச.நடராசா (மொழிபெயர்ப்பாளர்கள்). கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 58, சேர் ஏர்ணஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1972. (இலங்கை: அரசாங்க அச்சகம்).*
xviii*, 950 பக்கம், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5*x*15.5 சமீ.*

*சிக்காகோப் பல்கலைக்கழகத்தின் நவீன வரலாற்றுப் பேராசிரியர்* Ferdinand Schevill *அவர்களால் 1951இல் எழுதப்பட்ட* A History of Europe *என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். திருமதி சி.பர்டினந்து, செல்வி ச.நடராசா ஆகியோர் இந்நூலைத் தமிழாக்கம் செய்துள்ளனர். 1500 ஆம் ஆண்டு முதல் 1950ஆம் ஆண்டு வரையுள்ள ஐரோப்பிய வரலாற்றை இந்நூல் மிகத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்குகின்றது. இந்நூல் 5 பாகங்களைக் கொண்டது. அவை ஆரம்ப நோக்கு, 1500 முதல் 1648 வரையான சீர்திருத்தமும் சமயச் சண்டைகளும், 1648 முதல் 1789 வரையான முடியாட்சி, பிரெஞ்சுப் புரட்சி முதல் முதலாம் உலகப் போர் வரையான காலம், இரண்டு உலகப் போர்கள் என்பனவாகும்.*

### *7919*

***நெப்போலியன் காலத்திலிருந்து ஐரோப்பா.*** *டேவிட் தொம்சன் (ஆங்கில மூலம்), அ.சிவசாமி, செ.வி.இராசசுந்தரம், சி.பத்மநாதன், க.சிற்றம்பலம் (தமிழ் மொழிபெயர்ப்பு). கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறிமதிபாயா, 58, சேர் ஏர்ணஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1972. (இலங்கை: அரசாங்க அச்சுத் திணைக்களம்).*
xxiv*, 1244 பக்கம், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22*x*14 சமீ.*

கேம்பிரிட்ஜ் சிட்னி சசெக்ஸ் கல்லூரிப் பேராசிரியர் David Thomson அவர்களால் எழுதப்பட்ட Europe since Napoleon என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். 1789இலிருந்து தற்காலம் வரையிலான ஐரோப்பிய வரலாற்றை அடக்கியுள்ள நூல் இது. குழப்பமான நிலையில் ஐரோப்பா (1789-1814), 1815ஆம் ஆண்டில் ஐரோப்பா, புரட்சிகளின் காலம் 1815-1850, புதிய வல்லரசுகள் வெளிப்படல் 1851-1871, சனநாயகமும் சமதர்மமும் 1871-1914, ஏகாதிபத்தியப் போட்டிகளும் சர்வதேசக் கூட்டணிகளும் 1871-1914, யுத்தமும் சமாதானமும் 1914-1923, தகர்வுக் காலம் 1924-1939, போரும் சமாதானமும் 1939-1955, இக்கால ஐரோப்பா ஆகிய பத்து பாகங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 941 பிரித்தானிய வரலாறு

### 7920

**இங்கிலாந்தின் வளர்ச்சி: வரலாற்று விளக்கநூல்.** J.A.வில்லியம்சன். கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறீமதிபாயா, 1வது பதிப்பு, 1967. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).
xvi, (2), 574 பக்கம், இட வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

J.A.Williamson அவர்கள் ஆங்கிலத்தில் The Evolution of England என்ற தலைப்பில் எழுதி ஒக்ஸ்போர்ட் யூனிவர்சிட்டி பிரஸ் அச்சிட்டு வெளியிட்ட நூலின் தமிழாக்கம் இதுவாகும். இந்நூல் புவியியல் சம்பந்தமான விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்க முனைந்துள்ளது. தொடக்ககால வரலாற்றில், இங்கிலாந்தின் அக்கால இயற்கைத் தோற்றம் பற்றிய புவியியலும், பிற்றைக்கால வரலாற்றில், வெளியுலகை ஐரோப்பியர் கண்டறிந்தமையால் இங்கிலாந்தில் விளைந்த விளைவுகள் சம்பந்தமான புவியியலும் இந்நூலிற் சிறப்பிடம் பெற்றுள்ளன. உரோமன் பிரித்தானியா, சக்சன் குடியேற்றம், மானியமுறைக் காலம், மானியமுறையின் வீழ்ச்சி, ஆங்கில முடியாட்சியின் உயர்ச்சியும் இழிவும், புரட்சியும் பேரரசும், பதினெட்டாம் நூற்றாண்டு, பெரும் பிளவு, சீர்திருத்தமும் செல்வமும், இறுதி அறுபதாண்டு ஆகிய பத்து தலைப்புகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

### 7921

**பிரித்தானியத் தீவுகளின் பொருளாதார வரலாறு.** ஆர்தர் பெர்னி. கொழும்பு 5: வெளியீட்டுப் பகுதி, அரசகரும மொழித் திணைக்களம், 5 டி பொன்சேக்கா வீதி, 1வது பதிப்பு, ஜூன் 1965. (இலங்கை: அரசாங்க அச்சகம்).
xxii, 434 பக்கம், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

Arthur Birnie அவர்களால் 1935இல் எழுதப்பட்ட An Economic History of the British Isles என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து, அயர்லாந்து ஆகிய நான்கு தேசங்களினதும் பொருளாதாரம் ஆதியிலிருந்து வளர்ந்துவந்த முறையும், அத்தேசங்களின் இயற்கைத் தன்மைகள் ஒன்றையொன்று பாதித்த முறையும், அரசியல் வகையிலும் பொருளாதார வகையிலும் அவை ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கமுடியாத விதத்தில் அமைந்திருக்கும் முறையும் தனிப்பட்ட ஒரு வரலாறாக மிக விளக்கமாக இந்நூலில் கூறப்பட்டுள்ளது. ஆதிகாலம் முதல் 11ஆம் நூற்றாண்டு வரை, 11ஆம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டு வரை, 16ம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரை, 18ஆம் நூற்றாண்டு முதல் இக்காலம் வரை என்றவாறு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூல் அந்நான்கு பகுதிகளுக்குள்ளும் 33 உபதலைப்புகளில் பிரித்தானிய தீவுகளின் பொருளாதார வரலாற்றை விளக்கமாகவும் தெளிவாகவும் வழங்குகின்றது.

மேலும் பார்க்க: 7191

## 944 பிரான்ஸ் தேச வரலாறு

### 7922

**பெலிக்கன் உலக வரலாறு: தற்காலப் பிரான்ஸின் வரலாறு தொகுதி 1.** அல்பிறெற் கொபன். கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 58, சேர் ஏணெஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1967. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

x, *262 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

A History of Modern France *என்ற தலைப்பில்,* Alfred Cobban *எழுதி பென்குவின் பதிப்பகத்தால் பெலிக்கன் உலக வரலாற்றுத் தொடருள் ஒரு நூலாக வெளியிடப்பட்ட நூலின் முதலாம் பகுதியின் தமிழாக்கம் இதுவாகும். இது பண்டைய ஆட்சி, சீர்திருத்தக் காலம், புரட்சி நிகழ்ந்த பத்தாண்டு என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. இம்மூன்று பிரிவுகளிலும், புரட்சிக்கு முந்திய கால நிலைமைகள் பற்றிய குறிப்புகளும், புரட்சி பற்றி வேறு நூல்களில் காண்பதற்கரிய பல விபரங்களும் சிறப்பிடம் பெற்றுள்ளன.*

## 953 அராபிய வரலாறு

### 7923

**இஸ்லாத்துக்கு முற்பட்டகால அரேபியா :இஸ்லாமிய நாகரீகம் முதற்கலைத் தேர்வு.** A.R.M.ஹாரிஸ். *உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, பெப்ரவரி 2009. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).*
*44 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 20.5x14 சமீ.,* ISBN: *978-955-1779-32-0.*

*சிந்தனை வட்டத்தின் 301ஆவது வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல் பல்கலைக்கழக முதற்கலைத்தேர்வு இஸ்லாமிய நாகரிக மாணவர்களின் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்டுள்ளது. நூலாசிரியர்* A.R.M.*ஹாரிஸ் கண்டி மாவட்டத்தில் உடத்தலவின்ன மடிகே-கலதெனிய என்னும் இடத்தைப்பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது முதலாவது நூல் இதுவாகும்.*

## 954 இந்திய வரலாறு

### 7924

**கம்பெனியாட்சியிலும் முடியாட்சியிலும் பிரித்தானிய இந்தியாவின் வரலாறு.** *பீ.ஈ.உறொபேட்சு (ஆங்கில மூலம்),* T.G.P. *இசுப்பியர் (முற்றுப்படுத்தியோன்), வே.பேரம்பலம் (தமிழாக்கம்). கொழும்பு : வெளியீட்டுக்கிளை, அரசகருமமொழித் திணைக்களம், 1வது பதிப்பு, 1964. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).*
vi, *(4), 354 பக்கம், நாட்டு வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

P.E.Roberts *எழுதிய* History of British India: under the Company and the Crown *என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். இயற்கைத் தோற்றமும் புவியியல் அமைப்பும், பிரித்தானியர் வரும்வரை இந்திய அரசியல் வரலாற்றின் சுருக்கம், இந்தியாவும் ஐரோப்பிய வணிகமும், இலண்டன் கிழக்கிந்தியக் கம்பெனியின் பிறப்பு வரலாறு, குணபுலத்தில் ஆங்கிலரும் ஒல்லாந்தரும் போத்துக்கேயரும், இந்தியாவிலே தொடக்கக் குடியிருப்புகள், சுதுவாட்டு மன்னர், பொதுநலவரசு, புரப்பாட்சி ஆகியவற்றின் காலத்திற் கம்பெனியின் வரலாறு, புதிய கிழக்கிந்தியக் கம்பெனி, குடியிருப்புகளின் வளர்ச்சி, 1708-1746 ஒசுற்றண்டுக் கம்பெனி, குணபுலத்திலே ஆங்கிலர் வாழ்க்கை, எயிற்சுலா சப்பெற் பொருத்தனைவரை இந்தியாவில் ஆங்கிலரும் பிரான்சியரும், வங்கத்திற் புரட்சி, பிளாசிப் போரும் வங்கத்திற் கிளைவின் முதலாம் ஆள்பதிப் பதவியும், வங்கத்திற் கொடுங்கோலாட்சி, உரோகிலாப் போர்வரை உவாறன் எத்திஞ்சின் ஆட்சி, சயிது சிங்கும் அயோத்திப் பேகங்களும், உள்நாட்டுச் சீர்திருத்தங்கள், நாடு கைப்பற்றும் பூட்கையும் அதன் விளைவும், மராத்தியக் கூட்டிணைப்பின் இறுதித் தோல்வி, முதலாம் பர்மியப் போர், முதலாம் அபுகானியப் போர், எலன்பரோப் பிரபுவும் சிந்தைக் கைப்பற்றியமையும், சிப்பாய்க் கலகத்துக்குக் காரணங்கள், கிழக்கிந்தியக் கம்பெனிகளின் முடிவு போன்ற இன்னோரன்ன 31 தலைப்புகளில் அமைந்த வரலாற்று நூல்.*

### 7925

**தென் இந்திய வரலாறு: வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் விசயநகரின் வீழ்ச்சிவரை.**
K.A.*நீலகண்ட சாஸ்திரி (ஆங்கில மூலம்), வ.பொன்னம்பலம், சி.சரவணபவன் (தமிழ்*

மொழிபெயர்ப்பு). கொழும்பு 5: அரசாங்க பாஷைப் பகுதி, வெளியீட்டுப் பிரிவு, 5 பொன்சேக்கா வீதி, 1வது பதிப்பு, 1966. (இலங்கை: அரசாங்க அச்சகம்).
xvi, 602 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

இது A History of South India என்ற நூலின் இரண்டாம் பதிப்பின் தமிழாக்கமாகும். வரலாற்றுச் சான்றுகள் பற்றிய கணிப்பு, வரலாற்றுடன் நிலத்தின் தொடர்பு, பூர்வீக மக்களும் கலாச்சாரங்களும், வரலாற்றின் உதயம்:ஆரியமயமாகுதல், மௌரியப் பேரரசின் காலம், சாதவாகனர்களும் அவர்களை அடுத்து அரசுபுரிந்தோரும், சங்ககாலமும் அதற்குப் பிந்திய காலமும், முப்பேரரசுகளின் மோதல், சமபலம் படைத்த இரு பேரரசுகள், நான்கு முடியரசுகளின் காலம், பாமனி அரசர்களும் விசயநகரின் எழுச்சியும், விசயநகரப் பேரரசு, சமூக பொருளாதார நிலைகள், இலக்கியம், சமயமும் தத்துவஞானமும், ஓவியமும் கட்டிடக்கலையும், ஆகிய 16 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 954.93(1) இலங்கையின் பொது வரலாறு

### 7926

**அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: பாகம் 5: அடங்காப்பற்று முதலிமார் (கி.பி.1795-1948).** அருணா செல்லத்துரை. கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், ஏ 15, 1/1, மனிங் ரவுண் வீடமைப்புத் திட்டம், மங்கள வீதி, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).
xiv, 144 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1347-01-7.

அடங்காப்பற்று வரலாறு, முதலிமார் ஒரு முன்னோட்டம், பரராஜசேகரன் மதமாற்றம், அடங்காப்பற்று ஆட்சிமுறை, ஆங்கிலேயர் காலம், வன்னி (அடங்காப்பற்று) நிர்வாகம், வன்னியில் முதலிமார் கடமைகள், வவுனியா நிர்வாகம், முல்லைத்தீவு நிர்வாகம், கரைதுறைப்பற்று முதலிமார், மன்னார் முதலிமார், மட்டக்களப்பு முதலிமார் ஆகிய 12 இயல்களில் இந்நூலின் 5ம் பாகம் எழுதப்பட்டுள்ளது. மாதவி சிவலீலன், வி.பி.லிங்கஜோதி, எஸ்.மயூரன் ஆகியோரின் வெளியீட்டுரைகளும், கோவிலூர் செல்வராஜனின் கவிதையும், கே.எஸ்.சிவகுமாரனின் விமர்சனங்களும் 13-14ஆம் இயல்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

### 7927

**ஆதிக் குடித் தமிழரும் மகாவம்சமும்: சிங்கபாகு முதல் இன்றுவரை பொய்யுரையும் மெய்யுரையும்.** வல்வைத் தேவன். (இயற்பெயர்: கிருஷ்ணானந்ததேவன்). United Kingdom: Jamuna Krishnananthathever, 52, De Arn Gardens, Mitcham, Surrey CR4 3AY, 1வது பதிப்பு, மே 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை).
96 பக்கம், வண்ணப்படங்கள், வரைபடம், விலை:குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x 15 சமீ.

மகாவம்சம் கூறும் வரலாற்றுத் தகவல்களை மறுதலித்து, இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழரே என்றும் சிங்களவர்கள் வந்தேறுகுடிகள் என்றும் இந்நூலில் கவிஞர் வல்வைத்தேவன் தன் கருத்துக்களை முன்வைக்கிறார். இதற்கு ஆதாரமாக பல்வேறு நூல்களிலிருந்தும் தகவல்களைப்பெற்றுத் தொகுத்து வழங்குவதாகக் குறிப்பிடுகின்றார். துர்அதிர்ஷ்டவசமாக, ஒரு ஆய்வுநூலின் முக்கியமான அம்சமாகக் கருதப்படும் தகவல்களைப்பெற்ற மூலநூல்கள், ஆவணங்களின் விபரங்களை நூலில் காணமுடியவில்லை.

### 7928

**இலங்கை வரலாற்று வினாவிடை (புராதன-மத்திய காலம்).** பீ.ஜே.அமிர்தநாயகம். யாழ்ப்பாணம்: பீ.ஜே.அமிர்தநாயகம், 1வது பதிப்பு, 1966. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்).
208 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 21x14 சமீ.

G.A.Q., G.C.E. சாதாரண தரம், உயர்தரம் ஆகிய வகுப்புகளுக்குரிய வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. புராதன-மத்தியகால இலங்கை வரலாற்று வினாக்கள் 47 கேட்கப்பட்டு

அவற்றுக்கான விடைகளும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14053).

### 7929

**இலங்கைத் தமிழரும் நாகநாட்டு அரசமரபும்.** பரமு புஷ்பரட்ணம். சென்னை 600098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 41-B, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2006. (சென்னை 600014: பாவை அச்சகம், 142 ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை).
iv, 54 பக்கம், விலை: இந்திய ரூபா 30.00, அளவு: 21x14 சமீ., ISBN: 81-234-1034-4.

தொல்லியல் அகழ்வாய்வுகள் நோக்கில் சுட்டப்படும் இலங்கைத் தமிழர் நாகநாட்டு அரச மரபில் வாழ்ந்து வந்ததன் அடையாளத்தை இந்நூல் ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கிறது. தமிழர் படையெடுப்புகளுக்கு மையமாக மாதோட்டம் இருந்ததாகவும், பின்பு தமிழர்களும் அப்படையெடுப்பாளர்களுடன் இணைந்து கொண்டதற்கான சான்றுகளும் பாளி இலக்கியங்கள் வாயிலாக அறிய வாய்ப்புண்டு. நாயன்மார் பாடல்கூட இதன் வர்த்தக முக்கியத்துவத்தையும், நகரங்களின் சிறப்புகளையும் பற்றிப் புகழ்ந்துரைப்பதை இந்நூல் தெளிவுபடுத்துகின்றது. கி.பி.13ம் நூற்றாண்டில் ஆதிகால இலங்கையில் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த இனக்குழுக்கள் வாழ்ந்து வந்தன என்றும் அவர்களிடையே தமிழர்கள் செல்வாக்குப் பெற்றுத் தேசத்தின் பல பகுதிகளிலும் குடியேறி. ஆங்காங்கே அதிகாரம் செலுத்தினர் என்பதும் ஆய்வாளர் கூற்றாகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 608873).

### 7930

**இலங்கையில் பிரித்தானிய ஆட்சி.** ஜீ.சீ.மென்டிஸ் (ஆங்கில மூலம்), நவாலியூர் சோ.நடராசன் (தமிழாக்கம்). கொழும்பு: அப்போத்திக்கரிஸ் கம்பெனி, குமார வீதி, கோட்டை, 1வது பதிப்பு, 1960. (கொழும்பு: அப்போத்திக்கரிஸ் கம்பெனி).
vi, 245 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 3.75, அளவு: 22x14 சமீ.

இலங்கையை பிரித்தானியர் கைப்பற்றுதல், நிர்வாக அபிவிருத்தி, சமூகப் பொருளாதார மாற்றங்கள் (1796-1832), கோல்புரூக் விசாரணைக் குழுவும் 1832-1833இல் நடைபெற்ற அரசியல் சீர்திருத்தங்களும், விவசாயப் பொருளாதாரத்திலிருந்து வர்த்தகப் பொருளாதாரத்துக்கு மாறுதல், தோட்டங்களைத் திறத்தல், நாட்டின் அபிவிருத்தியும் குடிகளின் முன்னேற்ற ஆரம்பமும் (1851-1872), நாட்டின் அபிவிருத்தியும் குடிகளின் முன்னேற்றமும் (1873-1890), குடியேற்ற நாட்டாட்சியிலிருந்து பொறுப்பாட்சிக்கு மாறுதல், அரசாங்க நிர்வாகம் திருத்தியமைக்கப்படுதலும் சட்டசபைச் சீர்திருத்தமும் (1891-1913), அரசியல் முறையில் அபிவிருத்தி ஆகிய தலைப்புகளின் கீழ் பத்து அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35772).

### 7931

**இலங்கையில் மனிதக் குடியமைவு: மரபணுவியல் அடிப்படையிலான ஆய்வு உருவுரை.**
சுப்பிரமணியம் விசாகன். லண்டன்: தமிழர் தகவல் மையம், Thulasi, Bridge End Close, Kingston Upon Thames, KT2 6PZ, 1வது பதிப்பு, 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).
xv, 129 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 1-85201-022-3.

பாமர மக்களை நம்பவைக்கக்கூடிய புனைவுகளை அடிப்படையாகக் கொண்டே இலங்கை வரலாறானது இதுவரைகாலமும் உருவாக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வகையில் எழுதப்பட்ட வரலாறானது அரசியல் லாபத்தைத் தேடும் பலதரப்பட்டோராலும் தவறாகப் பயன்படுத்தப் படுகின்றது. புனைவுகளைத் தவிர்த்து 21ஆம் நூற்றாண்டில் வளர்ந்துவரும் மரபணுவியல் (DNA – Deoxyribo Nucleic Acid ) ஆய்வுகளின் பின்னணியில் வரலாறு விளங்கிக் கொள்ளப்படவேண்டும் என்பதே இந்நூலின் நோக்கமாகவுள்ளது. இலங்கையின் தேசியம் குறித்த முரண்பாடுகள் சமகால அரசியலின் யதார்த்தங்கள், அவற்றுக்கப்பால், இத்தீவில் மனிதப் பண்பாட்டின் மூலங்களைப் புரிந்துகொள்ள மானிடவியலாளர் விசாகனின் இச்சிறுநூல் பெரிதும் உதவுகின்றது. நவீன மனிதனின்

தோற்றமும் பூமியின் பல்வேறு பாகங்களில் அவன் பரம்பலும், இலங்கையில் மனிதக் குடியமைவு பற்றி நிலவுங் கருத்துக்கள், இலங்கையில் மனிதக் குடியமைவு பற்றிய மரபுயிரியல் ஆதாரங்கள், இலங்கையில் நவீன மனிதனின் குடியமைவுகள், கற்பனையான வரலாறுகளினால் மனித சமூகத்தில் ஏற்படும் பயங்கரப் பாதிப்புகள், மனிதனும் இனக்குழு அடையாளங்களும் ஆகிய ஆறு இயல்களில் தமிழ் ஆங்கில மொழிகளில் இந்நூல் எட்டு பின்னிணைப்புகளுடனும் புகைப்பட விளக்கங்களுடனும் எழுதப்பட்டுள்ளது. பாரிய ஆய்வுக்கானதொரு முன்னீடாக இந்நூல் அமைந்துள்ளது.

***7932***

***ஈழத்தில் ஆட்சிபுரிந்த சில தமிழ் மன்னர்கள்.*** நா.கணேசன் (இயற்பெயர்: நா.கணேசபிள்ளை). கனடா: ஜெயபாரதி அறக்கட்டளை, *33-42,* Pinery Trail, Scarborough, Ontario, M1B 6H9, *1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10: குமரன் அச்சகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ்).*
x, *40 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14.5 சமீ.*

*சிறுவர்களுக்கேற்ற விதத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்நூலில் இலங்கைத் தமிழ் மன்னர்களான எல்லாளன், குளக்கோட்டன், பண்டாரவன்னியன், சங்கிலி-1, சங்கிலி-2, உக்கிரசிங்கன், யாழ்ப்பாணன், ஸ்ரீவிக்கிரமராசசிங்கன் ஆகிய எட்டு மன்னர்களின் வாழ்வும் பணியும் சுவையாக விளக்கப்பட்டுள்ளன.*

***7933***

***ஐரோப்பியர் பார்வையில் இலங்கை.*** *நா.மயில்வாகனம். யாழ்ப்பாணம்: நா.மயில்வாகனம், ஆசிரியர், பரி.யோவான் கல்லூரி, 1வது பதிப்பு, டிசம்பர் 1974. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).*
viii, *52 பக்கம், விலை: ரூபா 1.75, அளவு: 21*x*14 சமீ.*

*இலங்கையைப் பற்றி பதினெழாம் நூற்றாண்டில் எழுதிய நான்கு ஐரோப்பியர்களான குறிப்பாக, ஆங்கிலேயரான றொபர்ட் நொக்ஸ், ஒல்லாந்தரான வண. பிலிப்பு பால்தேயு, போர்த்துக்கேய படைத்தலைவனான யோ.றிபெறியோ, மற்றொரு போர்த்துக்கேயாரான பெனான்டி குவைறோஸ் சுவாமிகள் ஆகியோர் பற்றியும், அவர்கள் இலங்கை பற்றி என்ன எழுதியிருந்தார்கள் என்பது பற்றியும் இந்நூல் மாணவர்களுக்கு அறிமுகம் செய்கின்றது. இந்நூல்கள் அக்காலத்தைய இலங்கையின் சமூக சமய பொருளாதார வரலாற்றைப் பற்றிய தகவல்களை எமக்கு வழங்குகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21554).*

***7934***

***வட இலங்கையில் சிங்கை நகர்: இடம்-காலம்-பெயர்க் காரணம்: மீள்பரிசீலனை.*** *பரமு புஷ்பரத்தினம். யாழ்ப்பாணம்: அருட்திரு ஜீ.ஏ.பிரான்ஸிஸ் யோசெப் அடிகளார் மணிவிழா மலர்க்குழு, 1வது பதிப்பு, ஜுன் 1993. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*
vi, *46 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 50., அளவு: 21*x*14 சமீ.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான நூலாசிரியர் வடக்கு கிழக்கில் மேற்கொண்ட பல வரலாற்று ஆய்வுகளால் பிரபல்யமானவர். இந்நூல் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் முப்பது ஆண்டுகளுக்குமேல் பணிபுரிந்து- அதில் 13 ஆண்டுகள் கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றிய* G.A.*பிரான்சிஸ் ஜோசெப் அடிகளாரின் மணிவிழாவையொட்டி 30.6.1993இல் வெளியிடப்பட்டுள்ளது. நல்லூர்- தமிழரசர்களின் இராஜதானியாக விளங்குவதற்கு முன்னர் சிறந்துவிளங்கிய தமிழரசரின் இராஜதானி சிங்கைநகராகும். இன்று வல்லிபுரக் கோவில் அதற்குச்சான்றாக விளங்குவதாக முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோர் குறிப்பிட்டுள்ளனர். நல்லூர் ராஜதானியே சிங்கை நகர் என்று பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கருதுகின்றார். இந்நிலையில் பரமு புஷ்பரத்தினத்தின் ஆய்வு சிங்கை நகர் ஈழத்தின் வன்னிப்பிரதேசத்திலுள்ள பூநகரிப்பகுதியில் அமைந்திருந்ததாக வலியுறுத்துகின்றது.*

## 954.93(2) இலங்கை இனப்பிரச்சினை வரலாறு

**7935**

**இலங்கை தேசிய இன முரண்பாடுகளும் சமாதான முன்னெடுப்புகளும் ஒரு வரலாற்றுப்பார்வை 1948-2007.** ஆ.க.மனோகரன். சென்னை 600 014: தி பார்க்கர், 293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (சென்னை 600 014: AGS Inc., 293, Ahamed Complex, 2nd Floor, Royapettah High Road).
xxx, 850 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

வரலாற்றுரீதியான அரசியல் பகுப்பாய்வுமுறை மூலம், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கோட்பாடுகளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை தேசிய இன முரண்பாட்டின் தொடக்கத்திலிருந்து 2007 வரையான அதன் வளர்ச்சிக் கட்டங்களையும், ஒவ்வொரு கட்டத்திலும் முரண்பாடுகளின் பல்வேறு பரிமாணங்களையும் ஒரே நூலில் தர முனைந்துள்ளார். இலங்கைத் தமிழர் இன முரண்பாட்டின் மூலம், அதன் வளர்ச்சிக் கட்டங்கள், அவற்றிற்கான காரணங்கள், தீர்விற்கான அணுகுமுறைகள், தோல்விகளுக்கான காரணங்களும் அதன் காரணகர்த்தாக்களும், சர்வதேச அடிப்படை, இலங்கை இனப்பிரச்சினையில் அவர்களின் அணுகுமுறைகள், அதன் குறைபாடுகள், சாத்தியப்பாடான அணுகுமுறைகள் என அனைத்தையும் உள்ளடக்கியது என்ற வகையில் இந்நூல் இலங்கையின் இனப்பிரச்சினையை விளங்கிக்கொள்ள விரும்பும் ஆர்வமுள்ளவர்களுக்கு பயனுள்ளது. Sri Lanka: Ethnic Conflict and Peace Initiation: A Historical Perspective 1948-2007 என்ற இவரது ஆங்கில மூல நூலின் தமிழாக்கம். இலங்கைப்பாராளுமன்றத்தின் பிரதம மொழிபெயர்ப்பாளர் வேதநாயகம் அவர்களின் உதவியுடன் மொழிபெயர்க்கப்பட்டது. கலாநிதி ஆறுமுகம் கந்தையா மனோகரன் யாழ்ப்பாணம் கட்டப்பிராயில் பிறந்தவர். குண்டசாலை விவசாயக்கல்லூரி மாணவரான இவர், 1971-73 காலகட்டத்தில் விவசாயத் திணைக்களத்தில் போதனாசிரியராகப் பணியாற்றியவர். 1975முதல் இலங்கையிலும், ஐரோப்பிய நாடுகளிலும் தமிழ்பேசும் மக்களின் நியாயமான உரிமைகளுக்காகக் குரல்கொடுத்து வருபவர். University of North London பல்கலைக்கழகத்தில் இளமானிப் பட்டப்படிப்பையும், London South Bank Universityயில் முதுமானிப்பட்டப்படிப்பை நிறைவுசெய்து அரசியல் விஞ்ஞானத்தில் கலாநிதிப்பட்டத்தை அப்பல்கலைக்கழகத்திலேயே பெற்றுக்கொண்டவர்.

**7936**

**இலங்கையில் உதவி, முரண்பாடு, மற்றும் சமாதானத்தை கட்டி எழுப்புதல் 2000-2005: நிறைவேற்று அறிக்கை காண்டங்கள் 1-6.** ஆசியா பவுண்டேஷன் மற்றும் பலர். கொழும்பு 7: ஆசியா பவுண்டேஷன், 3/1A, ராஜகீய மாவத்தை, 1வது பதிப்பு, 2005. (இலங்கை: அச்சக விபரம் தரப்படவில்லை).
vi, 71 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

டக்ளஸ் பெருடர் (தலைவர்,ஆசியா பவுண்டேஷன்), சுமா சக்ரபர்த்தி (நிரந்தரச் செயலாளர், சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம், பெரிய பிரித்தானியா மற்றும் வட அயர்லாந்தின் ஐக்கிய இராச்சியத்தின் சார்பில்), மரியா நோபொக் (பணிப்பாளர் நாயகம், SIDA, சுவீடன் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவர்), ரூட் டிரெப்பெர்ஸ் (பணிப்பாளர் நாயகம், அபிவிருத்தி ஒத்துழைப்பு, நெதர்லாந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சு), செங்மேன் ஜாங் (முகாமைத்துவப் பணிப்பாளர், உலக வங்கி) ஆகியோரின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட அறிக்கை இதுவாகும். இவ்வறிக்கை இலங்கையில் உதவி, முரண்பாடு, மற்றும் சமாதானத்தைக் கட்டி எழுப்புதல் 2000-2005, இலங்கையில் நிதி வழங்குவோரும் சமாதானத்தை கட்டியெழுப்புதலும் 2000-2005, தெற்கின் அரசியல், வட-கிழக்கின் அரசியல், பொருளாதார நிகழ்ச்சி நிரலும் சமாதானச் செயன்முறையும், இலங்கையின் சுதேசமொழிப் பத்திரிகைகளும் சமாதானச் செயன்முறையும் ஆகிய ஆறு பிரிவுகளில் இவ்வறிக்கை எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 611085).

**7937**

**ஈழம் தேவதைகளும் கைவிட்ட தேசம்.** தமிழ்நதி (இயற்பெயர்: கலைவாணி). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (சென்னை 60005: மணி ஓப்செட்).
126 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80240-27-5.

ஈழத்தின் நிகழ்வுகள், தமிழகத்தின் எதிர்வினைகள் ஆகியவற்றை ஊடும் பாவுமாகக் கொண்ட தமிழ்நதியின் அரசியல் கட்டுரைகள் இந்த நூலின் முதல் பகுதி. வேரிழந்து சென்றவர்கள் விழுதுகளுடன் தாயகத்தைநோக்கித் திரும்பிவரும் அனுபவங்களையும் சொந்த மண்ணில் அந்நியனாகப் பயணிக்க நேர்ந்தபோது பெற்ற மனவலியையும், அவமானத்தையும் பதிவுசெய்வது இரண்டாவது பகுதி. ஈழத்து அரசியல் நிகழ்வுகள் தொடர்பான இலக்கியப் பிரதிகளை அன்றைய அரசியல் சூழலில் பரந்து வாசிக்கும் இலக்கிய/அரசியல் விமர்சனங்கள் இந்நூலின் இறுதிப்பகுதி. தமிழ்த் தேசியப் பார்வையுடன் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளைக்கொண்ட இத்தொகுப்பு ஈழப்பிரச்சினை தொடர்பான விவாதத்தையும் மறுபரிசீலனையையும் தூண்டுவதாக அமைகின்றது. திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ்நதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைத்துறைப் பட்டதாரி. ஈழத்துப் போரினால் 1992இல் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர். கனடாவில் வாழ்ந்த காலத்தில் கலைவாணி இராஜகுமாரன் என்ற பெயரில் சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை எனப் பல்வேறு ஆக்க இலக்கிய வடிவங்களையும் பயன்படுத்தித் தனது படைப்புகளை வெளியிட்டவர்.

### 7938

**சிங்களப் படையை வெளியேற்றுக.** மறவன்புலவு க.சச்சிதானந்தம் (பதிப்பாசிரியர்). சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஜுன் 1998. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).
32 பக்கம், விலை: இந்திய ரூபா 10., அளவு: 21.5x14 சமீ.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் ஜெ.ஜெயலலிதா உள்ளிட்ட 44 தமிழகப் பிரமுகர்கள் கையொப்பமிட்டு இந்தியப் பிரதமருக்கு 10.6.1998இல் எழுதிய கடிதத்தின் பிரதி இச்சிறு நூலின் பிரதான பங்கினை வகிக்கின்றது. "தமிழகத்தோரின் உரத்த குரலால் தமிழீழத்தவர் உள்ளம் குளிர்ந்தது" என்ற தலைப்பில் மறவன்புலவு க.சச்சிதானந்தம் எழுதிய கட்டுரையும் இதில் இடம்பெற்றுள்ளது. 26.6.1998 முதல் 27.7.1998 ஈறாக நான்கு வாரங்கள் பாரிஸ் ஈழநாடு வாரமலரில் தொடராக வெளிவந்த குறிப்புகளின் மீள்பதிப்பு இதுவாகும்.

### 7939

**தமிழினப் படுகொலைகள் 1956-2008.** வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் NESOHR. சென்னை 600 014: மனிதம் வெளியீடு, Manitham-Human Rights Organisation, 274-GC, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, 1வது பதிப்பு, 2009. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).
xxiv, 360 பக்கம், புகைப்படங்கள், அட்டவணைகள், விலை: (நூலகப் பதிப்பு) இந்திய ரூபா 399., (சாதாரண பதிப்பு) இந்திய ரூபா 299., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-81-909737-1-7.

1956 முதல் 2008 வரையிலான அரைநூற்றாண்டுக் காலகட்டத்தில் ஈழத்தமிழர்களின்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப்படுகொலைகள் இப்பாரிய ஆவணத்தில் விரிவாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. 160க்கும் மேற்பட்ட படுகொலைகளின் சம்பவ விபரிப்பு, பாதிக்கப்பட்டோரின் புகைப்படங்கள், படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்ற பிரதேசங்களின் வரைபடங்கள், வீடுவீடாய் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்கள், படுகொலைக்கு உட்பட்டோரின் பெயர், வயது, தொழில் போன்றவை மிக விரிவாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. 2009 இல் அயர்லாந்து- டப்ளின் நகரில் நடைபெற்ற படுகொலைகள் குறித்த மகாநாட்டில் நீதிபதிகளால்- நம்பிக்கைக்குரிய ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில நூலின் தமிழ்வடிவம் இது.

### 7940

**போரின் மறுபக்கம்: ஈழ அகதியின் துயர வரலாறு.** தொ. பத்தினாதன். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 2வது பதிப்பு, டிசம்பர் 2010, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (சென்னை 600014: ராஜம்ஸ் டிஜிட்டல் ஆப்செட் பிரிண்டர்ஸ்).
240 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89945-18-3.

இலங்கையில் மன்னார் மாவட்டம், அடம்பன் தாழ்வு என்னும் சிற்றூரில் பிறந்தவர் பத்தினாதன். 1990இல் தனது 16ஆவது வயதில் தமிழகத்துக்கு அகதியாக வந்துசேர்ந்தவர். 8 ஆண்டுகள் மதுரை மாவட்டம் உச்சப்பட்டி அகதி முகாமில் இருந்தவர். பின்னர் சென்னைக்கு வந்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் பொதுநிர்வாகத்துறையில் இளங்கலைமானியாகக் கல்விகற்றவர். தனது அகதிவாழ்வின் அனுபவங்களை இந்நூலில் பதிவுசெய்திருக்கிறார்.

### 7941

**போருக்கப்பால் மனிதநேயம் தேடல்: அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் சிற்றுரைகள்.** மருதூர் ஏ.மஜீத் (தொகுப்பாசிரியர்). கல்முனை: மருதூர் வெளியீட்டுப் பணிமனை, 436 பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது 03, 1வது பதிப்பு, மே 2011. (கொழும்பு 10: யூ.டீ.எச். கம்பியூபிறின்ட், இல. 51/42, மொஹிதீன் மஸ்ஜித் வீதி).
96 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 285., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-1058-07-4.

மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத் அவர்கள் தொகுத்தளித்துள்ள இந்நூல், அரசியல் வாதியாகிய அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப் அவ்வப்போது நிகழ்த்திய உரைகளின் தொகுப்பாகும். இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக முஸ்லிம் அரசியல்வாதிகளின் சிந்தனையோட்டத்தை இவ்வுரைகள் பதிவுசெய்துள்ளன.

### 7942

**போரும் வாழ்வும்: ஈழம்-காலச்சுவடு பதிவுகள் 2008-2009.** கண்ணன் (தொகுப்பாசிரியர்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 60005: மணி ஓப்செட்).
326 பக்கம், விலை: இந்திய ரூபா 240., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89359-88-1.

ஈழப்போரின் பேரழிவிலும் அவலத்திலும் உலகத் தமிழர்களின் மனங்கள் பூசலிட்ட காலகட்டத்தில் காலச்சுவடில் வெளியான கட்டுரைகள் இவை. சுயதணிக்கையும், சார்புகளும் கையூட்டும் நம் ஊடகங்களை நிலைதடுமாறவைத்த சூழலில் ஊடக நெறிமுறைகளை மனங்கொண்டு பல குரல்களுக்கும் பார்வைகளுக்கும் காலச்சுவடு களமாக இருந்தமைக்கு இத்தொகுதி சான்றாகின்றது. ஈழப் போரையும் போருக்குப் பிந்தைய வாழ்வையும் கருத்தியல் தவிர்த்து, யதார்த்தத் தளத்தில் நின்று வேதனையுடனும் கண்ணீருடனும் நம் முன்வைக்கிறது இத்தொகுதி.

### 7943

**வடிவங்கள் மாறலாம் போராட்டம் தொடரும்: ஒரு சமூகவியல் ஆய்வு.** கைமண். லண்டன்: மறுநிர்மாணம், சமூகவியல் ஆய்வு மையம், 1வது பதிப்பு, ஜுலை 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(14), 333 பக்கம், வரைபடம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

"இயக்கம் என்பது வெறுமனே ஒரு அல்லது சில தனிநபர்களோ நிறுவனங்களோ அல்ல. இயக்கத்தினதும், இயக்கத்தின் தலைமையில் அணிதிரண்டு போராடிய மக்களினதும் தியாகங்கள் என்றுமே வீண்போகாது, ஒடுக்கப்பட்ட மக்கள் அதை வீண்போக விடமாட்டார்கள். ஆழ்மனப்படிமங்கள் பௌதிக வடிவம்பெறும். புதிய தலைமை உருவாகும். போராட்டம் தொடரும்"- என்ற கருத்தை மையப்படுத்தி இந்நூல் ஈழவிடுதலைப் போராட்டத்தின் முள்ளிவாய்க்கால் வரையிலான ஆயுதப் போராட்டத்தின் முடிவின் பின்னையதான புதிய சிந்தனைக் கருத்துக்களை தர்க்கரீதியில் பதிவுசெய்கின்றது. அரசியல் காரணங்களுக்காக நூலாசிரியரின் இயற்பெயரும் வெளியீட்டு நிறுவனத்தின் முகவரியும் நூலில் பதிவுசெய்யப்படவில்லை. இந்நூல் யுத்தத்தின் உடனடிக் குறிக்கோள்கள், யுத்தகாலப் பேரழிவுகள், மகிந்த சிந்தனையும் பொருளாதாரக்

கட்டுமானமும், இராணுவக் கட்டுமானமும் மகிந்த சிந்தனையும், மகிந்த சிந்தனையும் இராஜதந்திரமும் ஆகிய பிரிவுகளின்கீழ் ஆய்வுசெய்யப்பட்டுள்ளது.

### 7944

**வரலாறு சொல்லும் பாடம்: தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு.** ஆசிரியர் குழு. கிளிநொச்சி: ஈழத்தமிழர் இன எழுச்சிப் பாசறை, ஆசிரியர் விடுதி, கந்தபுரம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2001. (கல்லச்சுப் பிரதி)
78 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 32x20 சமீ.

வரலாறு சொல்லும் பாடம் என்ற இந்த நூல், பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள், முறிவுகள், ஏமாற்றங்கள் எனத் தமிழ் மக்கள் கடந்த காலத்தில் படித்த பாடங்களை முழுமையாக விபரிக்கின்றது. ஈழத் தமிழர்கள் சிங்களப் பேரினவாதத் தலைமையிடம் ஏமாந்துபோனதும் பேரினவாதிகளால் திட்டமிட்டவகையில் படிப்படியாக ஏமாற்றப்பட்டதுமான உண்மைக்கதையைச் சொல்வதோடு, இனிமேலும் அவர்களின் வலையில் விழுந்து ஏமாந்து போய்விடாமலிருக்குமாறு எச்சரிக்கையும் விடுகின்றது.

**வரலாறு சொல்லும் பாடம்** ஆசிரியர் குழு. கிளிநொச்சி: வெ.இளங்குமரன், பொறுப்பாளர், தமிழீழக் கல்விக் கழகம், 2வது பதிப்பு, நவம்பர் 2006, 1வது பதிப்பு, ஏப்ரல் 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).
103 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x17 சமீ.

வரலாறு சொல்லும் பாடம்: தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு என்ற தலைப்பில் 2001இல் கல்லச்சுப் பிரதியாக வெளிவந்த நூலின் திருத்திய இரண்டாம் பதிப்பு அச்சுப்பதிப்பாக மேலதிக தகவல்களுடனும் புகைப்பட ஆதாரங்களுடனும் வெளிவந்துள்ளது.

## 954.93(3) இனங்கள் இன உறவுகள்

### 7945

**இலங்கைச் சோனகர் பற்றிய கடந்தகால நினைவுகள்.** ஏ.ஐ.எல். மரிக்கார், ஏ.எல்.எம்.ளாபீர், ஏ.எச்.மாக்கன் மாக்கர் (ஆங்கில மூலத் தொகுப்பாசிரியர்கள்), எம்.சி.எம்.ஸாஹிர் (தமிழாக்கம்). கொழும்பு 1: சோனக இஸ்லாமிய கலாசார நிலையம், 27 பிரிஸ்டல் வீதி, 1வது பதிப்பு, மே 1981. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).
(8), 270 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

இலங்கையின் கடந்தகால சோனக மக்கள் தொடர்பாக அவர்களது வரலாறு பற்றிய பல்வேறு சுவாரஸ்யமான தகவல்களைத் தரும் கட்டுரைகள் இவை. பத்திரிகைகளில் அவ்வப்போது வெளிவந்த நாற்பத்தியேழு பல்வேறு கட்டுரைகளைத் தொகுத்து ஒரு தனி நூலாக 1976இல் ஆங்கில மொழியில் வெளியிட்டிருந்தார்கள். இந்நூல் அதன் தமிழாக்கமாகும். ஸ்ரீபாதமலையின் வசிகரம்: ஆதமின் பெயர் ஏன் இடப்பட்டது?, ஸ்ரீபாத மலை பற்றி (சிவனொளிபாதமலை) முஸ்லிம்கள் கருதுவதென்ன?இப்னு பதூதா, வத்ஹிமி மன்னன்- குருநாகல் கலே பண்டார, நரபலி ஒரு பூத இரை, சூர சரதியலின் இறுதி நாட்கள், சரதியலின் முதல் திருட்டு, சரதியலின் கைது, மலாயரின் எதிர்காலம் என்ன, பதியப்பட்ட வரலாற்றுக்கு முன்பிருந்தே மலாயர் இலங்கையில் இருந்துள்ளனர், ஒராபி பாஷா, இலங்கை-எகிப்திய உறவு, கொழும்பில் சோனக மக்கள், சமுதாயமொன்று மங்கையொருத்திக்காகத் தமது மதத்தையும் தனித்துவத்தையும் மாற்றிக்கொண்டது, இனங்களுக்கிடையே ஒரு மங்கை காரணமாக ஏற்பட்ட போர் இனக்கலப்பில் முடிவுற்றது: சோனகர் தமிழர் பரம்பரையா? என்பனபோன்ற இன்னோரன்ன தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

### 7946

**இலங்கையின் மலையக தமிழ் மக்களின் (இந்திய வம்சாவளித் தமிழர்) சமூகவியலும் சமூக அசைவியக்கமும்.** ரா.நித்தியானந்தன். கண்டி: சிறகு இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.*

*01.01.2007 அன்று திருச்சி அயலகத்தமிழர் பண்பாட்டு மகாநாடு நினைவாக வெளியிடப்பட்ட சிறுநூல். நூலாசிரியர் சிறகு.கொம் இணைய இதழின் ஆசிரியராவார்.*

### 7947

***ஈழத் தமிழர் வரலாறு: கி.பி.1000 வரை: தொகுதி 1.*** *சி.க.சிற்றம்பலம். சாவகச்சேரி: இந்துக்கல்லூரி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1994. (கைதடி: சிவா பிரின்டர்ஸ்).*
*(6), 60 பக்கம், வரைபடம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.*

*யாழ்ப்பாண மாவட்டம், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தாபகர் அமரர் வி.தாமோதரம் அவர்களின் ஞாபகார்த்த உரை இதுவாகும். கலாநிதி சி.க.சிற்றம்பலம் அவர்கள் எழுதிய "ஈழத்தமிழர் வரலாறு-1000 வரை" என்ற நூலின் முற்பகுதியை நினைவுப்பேருரையாக மீள்பிரசுரம் செய்துள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13689).*

### 7948

***குமரிக் கண்டம் முதல் சுமேரியா வரை தமிழர்கள் வரலாறு.*** *தனபாக்கியம் குணபாலசிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2011. (சென்னை 600094: பி.வி.ஆர். ஆப்செட்).*
xiv, *374 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 17.5x12.5 சமீ.*

*இந்நூலில் நான்கு பிரிவுகளில் 21 ஆக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சைவத்தின் மாண்புகள் என்ற முதலாவது பிரிவில், கடவுள் எங்கே?அவர் ஏன் மறைபொருளாக இருக்கின்றார்?நாம் ஏன் தெய்வத் திருமேனிகளைக் கடவுளாகப் பாவனைபண்ணி வழிபடுகின்றோம்? என் மனம் எனும் பரந்த வெளியின் ஆழ அகலங்களை அளக்க முயன்றேன்-முடியவில்லையே ஏன்? கோயில் திருவிழாக்களில் அலைவீசிடும் மனிதக்கடல், இறைவன் படைப்பில் பெண்மை ஆகிய விடயங்களையிட்ட நான்கு கட்டுரைகள் இடம்பெறுகின்றன. புதிய யுகத்தை நோக்கிய எம் பயணத்தில் என்ற இரண்டாவது பிரிவில், இடையறாது சுழலும் பூமியின் உள்ளும் புறமும் மறைந்து கிடக்கும் மின்காந்த அலைகளும் இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிகளின் இரகசியங்களும், 3011ஆம் ஆண்டில் நம் தலைமுறையினர் எம்மைப்பற்றி முழுமையாக அறிந்துகொள்ள நாம் செய்யவேண்டியவை என்ன?ஆகிய இரு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. வரலாறு தரும் சுவையான செய்திகள் என்ற மூன்றாவது பிரிவில் குமரிக்கண்டம் முதல் சுமேரியாவரை ஆய்வுக்குப் புலப்படாதிருந்த தமிழர் வரலாறுகள், சுமேரிய நாகரீகங்களுக்கிடையே ஒற்றுமையை வலியுறுத்தும் பெயரியல் ஆய்வுகள், தமிழர் வரலாற்றை விவிலியத்தில் தேடல், விவிலியத்தில் ஆப்ரஹாம் பற்றிக் குறிப்பிடும் வரலாற்றுப் பின்னணிகள், தெலுங்கு நாட்டினர் தமிழர் என்று இனம்காணும் அரவரின் பூர்வீகம் என்ன?, தமிழ் இலக்கியங்களும் தொல்லியலும் தமிழர் பூர்வீகம்பற்றித் தெரிவிப்பதென்ன?, தமிழர் திராவிடர் ஆகிய வரலாறு, மூவேந்தரின் ஆட்சி அவர்களிடமிருந்து நழுவியதேன்? ஈழத்தமிழரின் எதிர்காலம், தமிழின் மாண்பு ஆகிய விடயங்களைக்கொண்ட பத்துக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இறுதியாகவுள்ள ஈழத்தில் வரலாறு புடம்போட்ட கதைகள் என்ற பிரிவின்கீழ் ஐந்து வரலாற்றுச் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன.*

### 7949

***திரு. இராமநாதனது இலங்கைச் சோனகர் இன வரலாறு எனும் ஆராய்ச்சிக் கட்டுரைக்கான ஒரு திறனாய்வு.*** *ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் (ஆங்கில மூலம்), எம்.சி.எம்.ஸாஹிர் (தமிழாக்கம்). கொழும்பு 1: சோனக இஸ்லாமிய கலாசார நிலையம், 27 பிரிஸ்டல் வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 3: த டயமண்ட் பிரிண்டர்ஸ், 41 சென் மைக்கல் வீதி).*
*96+18 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*முஸ்லிம் கார்டியன் பத்திரிகையின் பதிப்பாசிரியராகப் பணியாற்றிய ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்கள் சேர. பொன் இராமநாதனின் "இலங்கைச் சோனகர் இன வரலாறு" என்ற கட்டுரையில் காணப்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் திருத்துவதாக அமைந்த ஆங்கில நூல் 1907இல்*

*கொழும்பு சோனகர் சங்கத்தின் ஆதரவில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்நூலின் தமிழாக்கமே இதுவாகும். எம்.சி.எம்.ஸாஹிர் இலங்கைத் தேசிய அரசுப் பேரவையின் அறிக்கையாளராகப் பணியாற்றியவர். தமிழாக்கம் வெளிவந்த ஆண்டு விபரமில்லை. சேர்.பொன். இராமநாதன் இலங்கைவாழ் சோனகர், இனத்தால் தமிழர் எனவும் மதத்தால் முஹம்மதியர் எனவும் 1885இல் இலங்கைச் சட்டவாக்க சபையிலும், 1888இல் அரச ஆசிய கழகத்தினரின் (இலங்கைக் கிளை) முன்னிலையிலும் கூறிய கருத்துக்களை உறுதிப்படுத்தவதாக அந்த வரலாற்று நூல் அமைந்திருந்தது. அதனை மறுத்து, இலங்கைச் சோனகர் இனத்தால் அறபிகளின் சந்ததியினர் என வரலாற்றின் அடிப்படையில் சான்றாதாரங்களுடன் ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் இந்நூலில் பதிவுசெய்திருக்கிறார்.*

### *7950*

***தென் கிழக்கு முஸ்லிங்களின் பூர்வீக வரலாறு: ஆய்வியல்.*** *மருதூர் ஏ.மஜீத். கல்முனை: மருதூர் வெளியீட்டுப் பணிமனை, 436 பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது 3, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (கல்முனை: கோல்டன் ஓப்செட் பிரஸ்).*
*108 பக்கம், வரைபடம், அட்டவணை, விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ.*

*இந்நூல் மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பூர்வீக வரலாறு என்ற முதலாம் இயலில் தென்கிழக்கு முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு பற்றிய ஒரு முன்னோட்டம், கிறிஸ்துவுக்கு முன் இன்றைய தென்கிழக்கு முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு, கி.பி.8ஆம் நூற்றாண்டு வரையில் தென்கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்களின் வரலாறு, கி.பி.8ஆம் நூற்றாண்டு தொடக்கம் 20ஆம் நூற்றாண்டு வரை இன்றைய முஸ்லிம்களின் வரலாறு ஆகிய நான்கு பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கல்வி வரலாறு என்ற இரண்டாம் இயலில், கி.பி.7ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி.14ம் நூற்றாண்டு வரையிலான போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னுள்ள சுமார் 8 நூற்றாண்டுகள் கொண்ட காலப்பகுதியில் தென் கிழக்கு முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி, அந்நியராட்சியின்போது தென் கிழக்கின் கல்வி வளர்ச்சி, சுதந்திரத்துக்குப் பின் தென் கிழக்கின் கல்வி வளர்ச்சி ஆகிய மூன்று பிரிவுகள் அடங்குகின்றன. தொழில், கலை, கலாசார, பண்பாட்டு வரலாறு என்ற மூன்றாவது இயலில் நாட்டாரியல், கல்யாணச் சம்பிரதாயங்கள், பொல்லடி, தற்காப்புக்கலை, றபான், வைத்தியம், தொழில்கள், ஆடை அணிகள், குடிமரபு, குரவை, ஆராத்தி, மருதோன்றி ஆகிய தலைப்புகளில் விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32583).*

### *7951*

***புலம் பெயரும் மண்வாசம்: தாயக-புலம்பெயர் மக்களிடையே ஒரு நோக்கு.*** *க.அருந்தவராஜா. சுவிட்சர்லாந்து: கலை இலக்கியப் பேரவை, ஜெனீவா, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 6: றண்யாஸ் கிறப்பிக்ஸ்).*
xiv, *109 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.*

*வரலாற்றுரீதியாக தமிழர்களுடைய இடப்பெயர்வுகள் எவ்வாறு இடம்பெற்றிருக்கின்றது, தாயகத்தில் உள்ள மக்களுடைய வாழ்க்கை முறைகள் எப்படி அமைந்திருக்கின்றது, இலங்கையிலிருந்து தமிழர்கள் அகதிகளாக மேலைத்தேய நாடுகளுக்குப் பயணித்தபோது அவர்களால் எதிர்கொள்ளப்பட்ட இடர்கள், புலம்பெயர் நாடுகளிலுள்ள மக்களின் சமகால வாழ்க்கை நிலைமைகள், கலாசார வாழ்வியல் போன்ற விடயங்களை சாதாரண மொழிவழக்கில் இந்நூலில் விளக்கியுள்ளார். தமிழர் கண்ட நகர்வு, தாயக வாழ்வு, கண்ணீர்ப் பயணம், புலம்பெயர் தமிழர் வாழ்வு, வீதி, பெரியபிள்ளை, கலாசார வாழ்வு, புலம்பெயர் வாழ்வில் புதிய தேவைகள் ஆகிய எட்டு தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது.*

### *7952*

***மத்திய கிழக்கில் இருந்து மட்டக்களப்பு வரை.*** *மருதூர் ஏ.மஜீத். கல்முனை: மருதூர் வெளியீட்டுப் பணிமனை, 436 பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது 3, 1வது பதிப்பு, ஜுலை 1995. (கல்முனை: குட்வின் ஓட்டோ அச்சகம்).*
*180 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14 சமீ.*

*உலகின் தோற்றமும் அதில் மனிதஉற்பத்தியும் வளர்ச்சியும், பாவா ஆதம் மலையும் உலகளாவிய அதன் முக்கியத்துவமும், ஊரும் உறவும், வழியும் மொழியும், சரந்தீவில் நாங்கள், மத்திய கிழக்கிலிருந்து மட்டக்களப்பு வரையுள்ள முஸ்லீம்களின் கலை, கலாசாரப் பண்பாட்டுக் கோலங்கள், தரவுகளும் தகவல்களும், மனவருத்தமானதும் மறக்கவேண்டியதுமான ஒரு அத்தியாயம், புதியதோர் அத்தியாயம் படைப்போம் ஆகிய பத்து இயல்களில் இவ்வாய்வு எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46368).*

### 7953

**முஸ்லிம் பூர்வீகம்.** M.M.M.*நூறுல் ஹக். சாய்ந்த மருது: மருதம் கலை இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2006. (கல்முனை: அல்-நூர் பிரின்டர்ஸ்).*
xvi, *128 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5*x*14.5 சமீ.*, ISBN: *955-1542-00-2.*

*இத்தொகுப்பிலுள்ள 13 கட்டுரைகளின் பின்னாலும் முஸ்லிம் மக்களின் பூர்வீக வரலாறு பற்றிய தேடல் தொக்கிநிற்கின்றது. சமயம் என்ற பிரிவில் 3 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சமூகம் என்ற பிரிவுக்குள் முஸ்லிம் பெரும் தேசங்களின் அடக்குமறைகளுக்கு உட்பட்டிருப்பதற்கான எதிர்க் குரல்களாகவும், முஸ்லிம் சமூகத்தின் சுயம், தனித்துவம், என்பனவற்றின் வெளிப்பாகவும் எழதப்பட்டுள்ளன. முஸ்லிம் சமூகத்தை பல்வேறு தளங்களில் இந்நூல் பார்க்கமுனைகின்றது. மனித தோற்றமும் பெருக்கமும் லெமூரியா கண்டத்தில் அல்ல, ஏக இறைக் கொள்கையே ஆதியில் தொடங்கிய வழிபாடு, வரலாறு தொல்பொருள் ஆய்வுகளை இஸ்லாம் மறுக்கின்றதா, இலங்கை முஸ்லிம்கள் தமிழர்கள் அல்ல, பேரினவாத சகதிக்குள் முஸ்லிம் உரிமைகள், முஸ்லிம்கள் தமிழர்களின் விரோதிகள், வடக்கிலிருந்து கிழக்குப் பிரிவதும் அதன் சர்ச்சைகளும், ஹபீப் முஹம்மது முதல் பழீல் வரை ஓர் இரத்த நாட்குறிப்பேடு, கப்றுக் குழிகள் ஓர் மீளாய்வு, தெரிந்த விடைகளுக்கான கேள்விகள், முஸ்லிம் அரசியலில் பல கட்சிகள் பலமும் பலவீனமும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் அரசியலில் வேரூன்றியுள்ளது. இலங்கை அரசியல் வரலாற்றில் முஸ்லிம் பிரதிநிதித்துவங்கள் ஆகிய 13 தலைப்புகளின்கீழ் முஸ்லிம்களின் பூர்வீகம் பற்றி இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது.*

மேலும் பார்க்க: ***7159, 7964***

## *954.93(4) பிரதேச வரலாறு*

### 7954

**ஆன்மீகத்தில் குருநகர் மக்கள்.** *கலையார்வன். (இயற்பெயர்: கு.இராயப்பு). யாழ்ப்பாணம்:* Neo Cultural Council, *28/1, சென் ஜேம்ஸ் மேற்கு வீதி, 1வது பதிப்பு, மே 2008. (யாழ்ப்பாணம்: ஏ.சீ.எம். அச்சகம்).*
xii, *204 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5*x*14.5 சமீ.*

*ஆசிரியரின் 10ஆவது நூல். குருநகர் மக்கள், கத்தோலிக்கம், பங்கின் உருவாக்கம், குருநகர்ப் பங்கின் மூலதனம், குருநகர் ஆலயங்களும் திருவிழாக்களும், ஆன்மீகத்தை வளர்க்கும் சபைகள், திருவருட் சாதனங்கள் வைபவங்கள், புனித யாத்திரைகள், தவக்கால வழிபாடுகள், ஆன்மீகச் செயலூக்கங்கள், கலைவடிவங்களில் ஆன்மீகம், ஆன்மீக வலுவூட்டல் ஆகிய 12 இயல்களின் வழியாக குருநகர் மக்களின் ஆன்மீக ஈடுபாட்டை கலையார்வன் ஆவணப்படுத்துகின்றார். குருநகரின் அமைவிடம், அதன் பண்புகள், மதத்தின் தோற்றம் அதன் வழித்தோன்றல்கள் வாழ்விடம், குழுமங்கள் என்பன பற்றிய அறிமுகத்துடன் தொடரும் இந்நூலில் கத்தோலிக்க மத வழிபாடுகள், மேற்றிராசனக் கோவில், குருநகர்ப்பங்கு, அதில் பணியாற்றிய பங்குக் குருக்கள் என்பனவும், குருநகர் புனித யாகப்பர் ஆலயமும் அங்கெழுந்த முரண்பாடுகளும், ஆலய மணி ஒலித்தல் தொடர்பான அறிவித்தல்கள், குறிப்பிடத்தக்க சில பங்குத்தந்தையர்களின் பணிகள், வியாகுலமாதா கெபி, புனித யாகப்பர் ஆலய திருவிழா, மற்றும் அப்பிரதேச ஆலயங்களின் திருவிழாச் சிறப்பு பற்றியும் தவக்கால வழிபாடுகள் பற்றியும், குடும்பங்களில் சமய வழிபாடுகள் மற்றும் ஆன்மீகம் சார்ந்த ஒழுக்கநெறிகள் பற்றியும் இந்நூல் விரிவாகப் பதிவுசெய்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47007).*

**7955**

**இளவாலை ஆனைவிழுந்தான் மாட்சிமை.** சிவயோகமதி கந்தவனம். நியுசிலாந்து: இளங்கோ ஆறுமுகம், 101, Epuni Street, Lower Hutt, Wellington, 1வது பதிப்பு, நவம்பர் 2010. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).
xxx, 142 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 700., அளவு: 22x14.5 சமீ.

இந்நூல் இரண்டு பிரிவுகளாக எழுதப்பட்டுள்ளது. முதல் 82ம் பக்கங்களில், இளவாலைப் பகுதியில் அமைந்த ஆனைவிழுந்தான் ஸ்ரீ விக்கின விநாயகர் ஆலய வரலாறு கூறப்படுகின்றது. நாடும் ஊரும், ஆலயம் அமைந்திருக்கும் கிராமச் சூழல், ஆலயச் சுற்றாடல், ஆனைவிழுந்தான் என்ற அடைமொழிக் காரணம், ஆலயமும் மாருதப் புரவீகவல்லியும், ஆனைவிழுந்தான் ஆலயத்தின் பழம்பெருமை, பழமையின் ஆதாரங்கள், 19ம் நூற்றாண்டிலிருந்து ஆலய வளர்ச்சி, 19ம் நூற்றாண்டிலிருந்து பூசகர்கள், அர்ச்சகர்கள், திருக்கோயிற் காணிகளும் உபகரித்தோரும் ஆகிய பத்து இயல்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. இணைப்பாக 83ம் பக்கம் தொடங்கி 142ம் பக்கம் வரை விநாயகர் வழிபாட்டு வரலாறு என்ற பகுதி அமைகின்றது. இதில் விநாயகர் தத்துவம், ஈழநாட்டில் விசேடம் பெற்ற விநாயக திருத்தலங்கள், விநாயகப் பெருமான் அருளாற்றலும் பெருமையும், விநாயக விரதங்கள், விநாயகரை வழிபாடுசெய்யும் முறைமை, விநாயக வழிபாட்டிற் சில சிறப்பம்சங்கள், அடிக்குறிப்பு ஆகிய தலைப்புகளில் விநாயகர் வழிபாட்டு வரலாறு விளக்கப்பட்டுள்ளது.

**7956**

**எனது கிராமத்தைத் தேடுகிறேன்.** மருதமுனை மஜீத் (இயற்பெயர்: ஏ.எச்.எம்.மஜீத்). மருதமுனை: மருதமுனை வாசகர் வட்டம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (மருதமுனை 1: ABNA Offset Printing).
xxxii, 221 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ., ISBN: 955-99227-0-X.

ஆசிரியர், அதிபர், கல்விப் பணிப்பாளர் என்று கல்வியுலகில் பல பரிமாணங்களைக் கண்டவர் மருதமுனை மஜீத். மருதமுனையுடன் பண்பாட்டு இலக்கிய விழுமியங்களை இவர் சுவையாகப் படைத்திருக்கிறார். மருதமுனைக் கிராமத்தின் வரலாற்றுத் தேடலின்மூலம் இவர் இயற்கை வனப்புமிக்க அந்தப் பழைய கிராமத்தை மீண்டும் அமைக்க ஆசைப்படவில்லை. மாறாக அவற்றை அனுசரித்து இன்றைய வாழ்க்கையை வனப்புமிக்கதாக ஆக்கவேண்டுமென விழைகின்றார். எனது கிராமத்தைத் தேடுகிறேன், கேணி அழகு, ஊர்மனை, பயிர்களும் வளர்த்த பிராணிகளும், சமய வாழ்க்கையும் சமூக வாழ்க்கையும், காலைப் பொழுது, வீதிகள், மந்தை வளர்ப்பு, பண்பாட்டுக் கோலங்கள், மருதமுனையின் வரலாற்றுச் சுருக்கம், குடும்ப வாழ்க்கை, இராக்காலம், விளையாட்டுக்களும் பொழுதுபோக்கும் எனப் பல்வேறு தலைப்புகளில் அவர்களது நினைவுப் பதிவுகள் விரிகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 602913).

**7957**

**ஏழாலை.** நா.முத்தையா. நாவலப்பிட்டி: ஆத்மஜோதி நிலையம், 1வது பதிப்பு, 1977. (நாவலப்பிட்டி: அத்மஜோதி அச்சகம்).
xii, 238 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 21.5x14 சமீ.

ஏழு ஆலயங்கள் ஒரே சூழலில் இருந்தமையால் ஏழாலயம் என்று வழங்கிவந்து, காலகதியில் "அம்" கெட்டு, ஏழாலை என்று மருவி வழங்கலாயிற்றென ஏழாலை என்ற ஊர்ப்பெயரின் காரணத்தைக் கூறும் ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள், சமூகவியல் , மானிடவியல் மாணவருக்குப் பயன்தரும் வயில் பல விபரங்களை இப்பிரதேச வரலாற்று நூலில் தருகின்றார். ஏழாலை ஊரின் சமய வரலாறு, நிர்வாகப் பிரிவுகள், மக்கட் பண்பாடு, தொழில், சமய நிலை, புகழ்பூத்த பெருமக்கள் பற்றிய வரலாறு என்பன இந்நூலிலே விபரிக்கப்படுகின்றன. வரலாற்றுப் பண்பும், இலக்கியச் சுவையும் இந்நூல் முழுவதிலும் மிளிருகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17400).

**7958**

**கிழக்கில் ஒரு கிராமம்.** வாகரைவாணன் (இயற்பெயர்: சந்தியாப்பிள்ளை அரியரெத்தினம்). மட்டக்களப்பு: ஆரணியகம், 479/3, புதிய கல்முனை வீதி, நாவற்குடா, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (மட்டக்களப்பு: ஜெஸ்கொம் அச்சகம், இல. 1, யேசுசபை வீதி).
vi, 42 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 20.5x14.5 சமீ.

மட்டக்களப்பின் நெய்தல் கிராமமான வாகரை கிராமத்தின் வரலாற்றைக் கூறும் நூல். எண்பதுகளில் இலங்கையில் உருவெடுத்த உள்நாட்டு யுத்தத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட கிராமம் இது. காலத்தால் அழிந்த மறக்கப்படாமலிருக்க அதன் பூர்வீக வரலாறு, அம்மண்ணின் மக்கள் பற்றிய பெருமை என்பன இந்நூலில் விரவிக்காணப்படுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28501).

### 7959

**கிழக்கிலங்கைத் தமிழகம்: வரலாற்றில் சில பக்கங்கள்: பாகம் 1.** வாகரைவாணன். (இயற்பெயர்: சந்தியாப்பிள்ளை அரியரெத்தினம்). மட்டக்களப்பு: எகெட் கரித்தாஸ் நிறுவகம், ஆயர் இல்லம், 1வது பதிப்பு, மே 2011. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).
xv, 136 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 14.5x20 சமீ.

வாகரைவாணனின் 35ஆவது வெளியீடு இது. ஈழத்தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை, குறிப்பாக கிழக்கிலங்கையில் அவர்களது நீண்டகால வரலாற்றை இந்நூல் பல்வேறு ஆதாரங்களுடன் நிறுவமுனைகின்றது. இலங்கை என்னும் பெயர்ச்சொல், இலங்கை-தமிழர்களின் பூர்வீக இருக்கை, கிழக்கிலங்கைத் தமிழகம், கிழக்கிலங்கைத் தமிழகம்-ஊரும் வேரும், கிழக்கிலங்கைத் தமிழகத்தில் தமிழர் பண்பாடு, தமிழர் தொன்மையை உறுதிப்படுத்தும் பெருங்கற்காலப் பண்பாடு, தமிழ்ப் பௌத்தம்-சில குறிப்புகள், தமிழர் நாட்டுப்பாடல்கள், நாட்டுக்கூத்து ஒரு நோக்கு, காயான்கேணி முதல் கதிரவெளிவரை, வரலாற்றில் இருந்து சில வாசகங்கள் ஆகிய பதினொரு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்கள், தொல்லியல் சான்றுகள், மிக அண்மைக்கால ஆய்வு முடிபுகள் என பல்வேறு மூலங்களிலிருந்து தனது நூலுக்கான தகவல்களைத் திரட்டியுள்ளார். 1970இல் வெளிவந்த சுட்டபொன் என்ற கவிதைத் தொகுப்பே வாகரைவாணனின் முதலாவது நூலாகும். சுதந்திரன், சத்தியவேத பாதுகாவலன் பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதிவந்த இவர், பின்னர் சுதந்திரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார். சுதந்திரன் பத்திரிகை நின்றுபோனதன்பின் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் தமிழ் ஆசிரியராக 1982முதல் பணியாற்றினார். 1996க்குப்பின்னர் மட்டக்களப்புக்குத் திரும்பி பல்வேறு இலக்கியப்பணிகளிலும் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திவருகிறார்.

### 7960

**கொட்டியாரம்: இலக்கிய மரபு.** பாலசுகுமார் (தொகுப்பாசிரியர்). லண்டன்: அனாமிகா வெளியீடு, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
xxx, 304 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5x14.5 சமீ.

ஈழத்தின் புராதனமான வரலாற்றுச் சான்றுகள் நிறைந்த இடங்களுள் கொட்டியாரப் பரதேசமும் முக்கியம்பெறுகின்றது. இளக்கந்தை, இலந்தத்துறை, வெருகல் ஆகியவை இப்பிரதேசத்தின் புராதன துறைமுகங்களாக விளங்கியவை. கெவுளியாவில் அமைந்துள்ள வெளிச்சவீடு, சூடைக்குடாவின் சூடை மீன்வளம், கூனித்தீவு, சம்பூரின் நாட்டுக்கூத்துகள், கடற்கரைச் சேனை மணற்திட்டுகள், பள்ளிக்குடியிருப்பின் கொம்பு விளையாட்டு என்பவற்றுடன் சாலையூர், சேனையூர், கட்டைப்பறிச்சான், தோப்பூர், மூதூர், பச்சனூர், மணற்சேனை, மல்லிகைத்தீவு, பட்டித்திடல், பாலத்தடிச்சேனை, கங்குவேலி, கிளிவெட்டி, அரிப்பு என்று பல கிராமங்களை உள்ளடக்கிய இம்மண்ணில் விளைந்த இலக்கியங்களின் தொகுப்பாகவும், இம்மண் பற்றிப் பேசும் படைப்புகளின் தொகுப்பாகவும் இந்நூல் அமைந்துள்ளது. கொட்டியாரம் வரலாற்று அறிமுகம், கொட்டியாரப்பற்று பிரதேசத்தின் பொருளாதார வளவாய்ப்புக்கள் ஆகிய அறிமுகங்களுடன் மண்மொழி இலக்கியங்கள், மரபுசார் சிற்றிலக்கியங்கள், தொல்சீர் இலக்கியங்கள், நாவல்களில் கொட்டியாரம், சிறுகதைகள், கவிதைகள், நாடகம் என ஏழு பிரிவுகளில் இவ்விலக்கியத்தொகுப்பு அமைந்துள்ளது. அரியதொரு பிரதேச வரலாற்று நூலாகவும் அனாமிகா பதிப்பகத்தின் 15ஆவது வெளியீடாகவும் இந்நூல் அமைகின்றது.

**7961**

**கோப்பாய் வரலாறு: பாகம் 1, பாகம் 2.** க.இ.குமாரசாமி. கோப்பாய்: க.இ.குமாரசாமி, அரவிந்த வாசம், கோப்பாய் தெற்கு, 1வது பதிப்பு, 1998. (யாழ்ப்பாணம்: முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர்).
xviii, 216+94 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் தெற்கு வேளாதோப்பு முதல் வளலாய் இறுதியாக சுமார் 42 சதுர மைல் விஸ்தீரணமுடையதாய் கோப்பாய், நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி என்ற நான்கு கிராமச்சங்க இடப்பரப்புகளையும் உரும்பராய், ஊரெழு பட்டின சபைகளையும் கொண்டதாயுள்ளது. இன்றைய அரசியலமைப்பின்படி கோப்பாய் பாராளுமன்றத் தொகுதியாயுள்ளது. கோப்பாய் வரலாறு, புவியியல், அரசியல், அங்கு அமைந்துள்ள ஏழு பிரதான கோயில்கள், அந்த மண்ணில் பிறந்து பெருமைசேர்த்த பெரியார்கள், அந்த மண்ணில் அமைந்து அறிவைப்பரப்பும் வாசிகசாலைகள், சனசமூக நிலையங்கள், முதியோர் இல்லம் போன்ற சமூக சேவை அமைப்புகள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள் என கோப்பாய்ப் பிரதேசத்தின் பல்வேறு அம்சங்களையும் இந்நூலில் தனித்தனித் தலைப்புகளில் நூலாசிரியர் பதிவுசெய்திருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24346).

**7962**

**கோவைப்பதியில் சைவமும் தமிழும்.** மங்கையர்க்கரசி லோகேஸ்வரன். கோப்பாய்: ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம், பழந்தெரு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1990. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சகம்).
viii, (2), 107 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

கோப்பாய் கொத்தணிக் கல்விப் பிரிவும், கோப்பாய் கிராமோதய சபைக்கள் அடங்கும் பிரதேசமும் ஏறக்குறைய ஒரே அளவினதாய் அமைகின்றது. அப்பிரதேசத்தை வகுத்து அதன் பெயர்ச் சிறப்பு, பூர்வீக வரலாறு, பௌதிக பண்பாட்டுச் செழிப்பு பற்றிச் சுருங்கக் கூறப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் சைவமும் தமிழும் வகிக்கும் இடம்பற்றி ஆராயப்பட்டுள்ளது. முதலில் ஆய்வுப் பிரதேசத்தில் சைவத்துக்குள்ள தொடர்பும் அதனால் இங்கு ஏற்பட்டுள்ள பண்பாட்டு உயர்வும் கூறப்படுகின்றது. இவ்வாய்வில் 23 கோயில்கள் பற்றிக் கூறி, இவற்றின் அமைவிடமும் விளக்கப்படம் மூலம் தரப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் சைவம் வளர்த்த பெரியார் நால்வர் பற்றியும் விபரம் காணப்படுகின்றது. கோப்பாய் பிரதேசத்தில் தமிழ் வகித்த பங்கும் ஆராயப்பட்டுள்ளது. ஆறுமுகநாவலருக்கு தமிழ் பயிற்றிய சேனாதிராய முதலியார் தொட்டு திரு அ.வி.மயில்வாகனம் வரை பலரின் பங்களிப்புகள் பற்றியும் தமிழ் வளர்த்த கல்விச்சாலைகள் பற்றியும், கல்வி-சமய விருத்திக்கு பங்களிப்புச் செய்யும் பொது தாபனங்கள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20642).

**7963**

**தமிழகத் தனிப்பெருந் தலைநகர்: காந்தக் கோட்டையார் காந்தீக சக்தி.** ஆர் எஸ்.கந்தையா ஆச்சாரி. தெல்லிப்பழை: ஆராய்ச்சி நிலையம், வறுத்தலைவிழான், 1வது பதிப்பு, 1954. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).
32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

மாந்தை மாநகர் அன்றும் இன்றும் என்ற நூலை எழுதிய ஆர்.எஸ்.கந்தையா ஆச்சாரியின் மற்றுமொரு நூல் இதுவாகும். 1940இல் எழுதப்பட்ட இவ்வாய்வு 14 ஆண்டுகளின் பின்னர் நூலுருவாகியுள்ளது. திருக்கேதீச்சரத் திருத்தலத்தையண்டிய மாந்தை முன்னர் ஒரு பெரிய கேந்திர வர்த்தக பிரதேசமாக விளங்கியதை வரலாற்றுரீதியாக இந்நூலில் வெளிப்படுத்துகின்றார். பண்டைய கிரேக்கர் மாந்தையை பொலிஸ்மண்டி (Polis-Mundi – City of the World) என்று அழைத்ததாகவும் குறிப்புண்டு. தொன்மைமிக்க அரிய தலைநகரமான மாந்தை நகரையும், அங்கு பரம்பரையாக வசித்துவந்த மக்கள் குழுவினரையும் அவர்களது பழைய பண்பாட்டொழுக்கங்களையும் பிறவற்றையும் ஓரளவு காலக்கணிப்பில் ஒழுங்குபடுத்தி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30746).

***7964***

***மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும்.*** F.X.C.*நடராசா (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: இந்து வாலிபர் முன்னணி, 1வது பதிப்பு, 1980. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).*
viii, *171 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 21*x*14 சமீ.*

*மட்டக்களப்பின் வாழ்வியல் வரலாறுகூறும் இந்நூல் 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, பல்வேறு ஈழத்துத் தமிழறிஞர்களின் 19 கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது. முதலாவது அத்தியாயத்தில் மட்டக்களப்பு வரலாற்றுச் சுருக்கம் (*F.X.C.*நடராசா), மட்டக்களப்பு மாநிலத்தின் பழைய புவியியல் வரலாறும் இடப்பெயர்களும் (*K.*கணபதிப்பிள்ளை), மட்டக்களப்புத் தமிழ் மக்கள் (*F.X.C.*நடராசா) ஆகிய கட்டுரைகளும், இரண்டாம் அத்தியாயத்தில் சமூகம், குழுக்கள், சாதிகள், குடிகள் (ம.சற்குணம்) என்ற கட்டுரையும், சமயம் பற்றிய மூன்றாம் அத்தியாயத்தில் சிவசக்தியின் தனிப்பெரும் கருணை (பூரண தியாகராஜக் குருக்கள்), இந்து சமயப் பண்பாட்டு முறைகள் (செ.எதிர்மன்ன சிங்கம்), மட்டக்களப்பு மக்களது சமய சமரசப் பண்பாடு (ந.நடராசா) ஆகிய கட்டுரைகளும், கலையும் கலாசாரமும் என்ற மூன்றாம் அத்தியாயத்தில் மட்டக்களப்பின் பாரம்பரியக் கலைகளும் அவற்றின் சிறப்பியல்புகளும் (செ.எதிர்மன்ன சிங்கம்), மட்டக்களப்பின் மந்திர வழக்கம் (வீ.சீ.கந்தையா), மட்டக்களப்பு மக்கள் வாழ்க்கையில் சாத்திரங்கேட்டல், சகுனம் பார்த்தல், உபசரித்தல் (திருமதி ப.பாக்கியராஜா), மட்டக்களப்பு மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள் (கண்மணி அருணாசலம்) ஆகிய கட்டுரைகளும், சைவாலய வரலாறு என்ற ஐந்தாவது அத்தியாயத்தில் திருப்பெருந்துறை ஸ்ரீ முத்துக்குமார வேலாயுத சுவாமி கோவில், ஸ்ரீ மாமாங்கேஸ்வரப் பெருமான் கோவில், கொத்துக்குளத்து மாரியம்மன் கோயில் (செ.எதிர்மன்ன சிங்கம்), திருக்கோயில் திருமுருகன் ஆலயம் (ம.சற்குணம்), கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் (க.மகேஸ்வரலிங்கம்), சித்தாண்டிச் சித்திரவேலாயுத சுவாமி கோயில் (ம.சற்குணம்) ஆகிய கட்டுரைகளும் மட்டக்களப்புத் தமிழ் என்ற ஆறாவது அத்தியாயத்தில் சோழமண்டலத் தமிழும் ஈழமண்டலத் தமிழும் (சுவாமி விபுலானந்தர்), மட்டக்களப்பில் சிதைந்து வழங்கும் தமிழ்ச் சொற்கள் (ஏ.பெரியதம்பிப் பிள்ளை) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34579).*

***7965***

***மட்டக்களப்பு மகாநாடு நினைவுமலர்.*** *சா.இ.கமலநாதன் (நினைவு மலர்க்குழுத் தலைவர்). மட்டக்களப்பு: அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம், இலங்கைக் கிளை, 1வது பதிப்பு, பங்குனி 1976. (மட்டக்களப்பு: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).*
*(22), 110 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24*x*18.5 சமீ.*

*1976ம் ஆண்டு பங்குனி 19,20,21ம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்வையொட்டி வெளியிடப்பட்ட மலர். மாவட்ட அடிப்படையில் மட்டக்களப்பின் கலை, கலாசாரம், வரலாறு, சமூகவியல் ஆகிய பல்வேறு துறைகளை மையமாக வைத்து ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ள ஆய்வாளர்களுக்கு மட்டக்களப்பு பற்றிய வரலாற்று மூலங்களையும், தகவல்களையும் இயன்றளவு தருவதற்கு இவ்வெளியீடு முயன்றிருக்கின்றது. நினைவுமலர்க்குழுவில் வித்துவான் சா.இ.கமலநாதன், வித்துவான்* F.X.C.*நடராஜா, பண்டிதர் வீ.சீ.கந்தையா, ம.சற்குணம், இராஜேஸ் கந்தையா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 106220).*

***7966***

***மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள் பாகம் 2.*** *க.தா.செல்வராசகோபால் (புனை பெயர்: ஈழத்துப் பூராடனார்),* S.P.*கனகசபாபதி (புனை பெயர்: கல்கிதாசன்). கனடா: எட்வேர்ட் இதயச்சந்திரா, ஜீவா பதிப்பகம், டொரன்டோ, 1வது பதிப்பு, மார்கழி 2005. (கனடா: ஜீவா பதிப்பகம்).*
56+409 *பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*14 சமீ.*

*குளங்களும் கோயில்களும் பற்றிய அடிச்சுவடு, மட்டக்களப்பு மான்மியத்தைப் பின்னோக்கி ஓர் சுவடு, சீர்பாதகுல வரலாற்று அடிச்சுவடு, மாகோன் வரலாற்று அடிச்சுவடு, மட்டக்களப்பு பூர்வீக*

சரித்திர அடிச்சுவடு, கல்வெட்டுகளின் அடிச்சுவடு, மட்டக்களப்பு, திருக்கோணமலை மாநிலத்தில் சைவக்கோயில்கள் வரலாற்று அடிச்சுவடு, முக்குவர் வரலாற்று நூல்களின் முக்கிய அடிச்சுவடு, குளக்கோட்டன் தரிசன அடிச்சுவடு, ஈழத்து இலக்கியமும் வரலாறும் நூலின் அடிச்சுவடு, உண்மை காணும் அடிச்சுவடு ஆகிய பதினொரு அத்தியாயங்களில் இவ்விரண்டாம் பாகம் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் அமரர் நா.சா.கதிர்காமத்தம்பி நினைவு நிதியப் பதிப்பாகும். இந்நூலின் முதலாம் பாகத்திற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3987. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40018).

### 7967

**மத்திய பிரதேச இஸ்லாமியக் குடியிருப்புகள்: பாகம் 1.** இஸட். ஏ. முஹம்மது ஹனிபா. முறுத்தகஹமுல: Z.A.M. ஹனிபா, 42 C, எலமள்தெனிய, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2008. (கெலிஓயா: நிஷின் ஓப்செட் பிரின்டர்ஸ்).
xvi, 370 பக்கம், புகைப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

நூலாசிரியர் முறுத்தகஹமுல்லவைச் சேர்ந்தவர். இவர் ஒரு இஸ்லாமிய மத போதகர். 1949 மார்ச் 18இல் பிறந்த இவர் ஊடகங்களில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இந்நூலில் மத்திய மாகாண முஸ்லிம் கிராமங்களை ஆராய்ந்து மத்தியப் பிரதேச இஸ்லாமியக் குடியிருப்பகள் பற்றி விளக்க முற்படுகின்றார். இது முதலாம் பாகம் என்பதால் தனது ஆய்வுக்கு ஒரு சில குறிப்பிட்ட பிரதேசங்களையே இந்நூலில் அடிப்படையாகக் கொண்டுள்ளார். ஆதாரத் தரவுகள் சிங்கள, ஆங்கில, தமிழ் மொழிகளில் உள்ளது உள்ளவாறு இணைக்கப்பட்டுள்ளன. உடுநுவரை முஸ்லிம்கள் வாழ்வில் ஸுபித் தரிக்காக்கள் என்பது இவரது முதலாவது நூல்.

### 7968

**மலையாள நாடும் மட்டக்களப்பும்.** வெல்லவூர்க் கோபால் (இயற்பெயர்: எஸ்.கோபாலசிங்கம்). மட்டக்களப்பு: மனுவேதா பப்ளிக்கேஷன்ஸ், 143/23 எல்லை வீதி, 1வது பதிப்பு, 2007. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).
125 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ.

ஆய்வு அடிப்படையிலானதொரு ஒப்பீட்டு நூல். கேரளத்தின் மருமக்க தாய மரபுவழி வழக்காறுகள் மட்டக்களப்பின் தாய்வழி முதிச வழக்காறுகளுடன் இந்நூலில் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன. பண்டைய போடி முறைமைகள் மற்றும் நாடுடையார், நாடு வழி, வன்னிமை, உடையார் போன்ற நிர்வாகக் கட்டமைப்புகள் தொடர்பான ஒப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை அனைத்தும் நுழைவாயில், மலையாள நாடும் மட்டக்களப்பும், விவசாயத் தலைமைத்துவமும் நிருவாகக் கட்டமைப்பும், போடி முறைமை, மருமக்க தாயமும் தாய்வழி முதிசமும், கண்ணகி வழிபாடு, நிகழ்த்து கலைகள், மந்திரக் கலை ஆகிய எட்டு இயல்களில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. பேராசிரியர் சி.மௌனகுரு (தலைவர், நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்), பேராசிரியர் எஸ்.ராதாகிருஷ்ணப் பணிக்கர் (கேரளா பல்கலைக்கழகம்) ஆகியோரின் விரிவான அணிந்துரைகளும் நூலுக்குச் சிறப்பை அளிக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47372).

### 7969

**மாத்தளை மாவட்ட முஸ்லிம்கள்: வரலாறும் பாரம்பரியமும்.** ஏ.ஏ.எம். புவாஜி. கொழும்பு 2: முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அலுவலகம், 34, மலே வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1993. (சென்னை 600 001: திறீயெம் பிரின்டர்ஸ்).
288 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

1993 ஒக்டோபர் 2இல் தேசிய மீலாத் விழா மாத்தளையில் கொண்டாடப்பட்டபோது வெளியிடப்பட்ட நூல். மாத்தளை மாவட்டம்: ஓர்அறிமுகம், அறாபியரின் இலங்கை வருகை, முஸ்லிம்களும் மலைநாடும், மாத்தளை மாவட்டத்தில் முஸ்லிம்கள், முஸ்லிம்களும் கல்வியும், ஒரு பொருளியல் நோக்கு, தொழிற் திறமைகள், பொது வாழ்வு, பள்ளிவாசல்கள், ஸியாரங்கள்,

*இலக்கிய முயற்சிகள், விளையாட்டுத்துறை, வாழ்வியலும் பண்பாடும், முஸ்லிம் கிராமங்கள் ஆகிய 14 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

### 7970

**யாதும்: கேளிர் ஒன்றியம், குளிர்கால ஒன்றுகூடல் சிறப்பிதழ் 2010.** T.ரமேஷ் (பதிப்பாசிரியர்), க.நவம் (ஒன்றியத்தலைவர்). கனடா: கேளிர் ஒன்றியம், 29, Schmirler Terrace, Scarborough, Ontario, M1E 5K6, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (கனடா: அச்சக விபரம் தரப்படவில்லை)
60 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

*ஈழத்தின் வடபுலத்தில் அமைந்துள்ள அல்வாய், வதிரி, கொற்றாவத்தை ஆகிய மூன்று கிராமங்களையும் அவற்றை அண்டியுள்ள ஏனைய கிராமங்களையும்சேர்ந்த ஈழத்துத் தமிழர் கனடாவில் இணைந்து நிறுவிய அமைப்பே கேளிர் ஒன்றியமாகும். கணியன் பூங்குன்றனாரின் யாவரும் கேளிர் என்ற கவிவரியைத் தாரகமந்திரமாகக் கொண்டியங்கும் இவ்வமைப்பின் 2010ம் ஆண்டுக்குரிய குளிர்கால ஒன்றுகூடலின்போது வெளியிடப்பட்ட மலர் இது. குறிப்பிட்ட பிரதேச மக்களின் பல்வேறு படைப்புகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. கல்வி வாய்ப்புகளும் சமூக நகர்வும்- வடமராட்சியிலுள்ள ஒடுக்கப்பட்டோர் பற்றிய நோக்கு (மா.கருணாநிதி), என்ற ஆய்வுக் கட்டுரையுடன் கொற்றை பி.கிருஷ்ணானந்தன், முருகேசு பாக்கியநாதன், வெற்றிவேல் துஷ்யந்தன், க.பரணீதரன், மங்கை சிவபாலசிங்கம், கே.பி.லிங்கம், திரவியம் சர்வேசன், வதிரி சி.ரவீந்திரன், த.கலாமணி, சின்னராஜா விமலன், தெணியான், துவாரகன், வன்கூவர் சிவா, க.நவம், சூரன் ஏ.ரவிவர்மா, கருண் சபேசன் ஆகியோரின் படைப்பிலக்கியங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. இவ்வமைப்பின் தலைவராக க.நவமும், செயலாளராக முருகேசு பாக்கியநாதனும் இயங்குகின்றனர்.*

### 7971

**யாழ்ப்பாண இராச்சியம்: ஒரு சுருக்க வரலாறு.** சி.பத்மநாதன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).
viii, 202 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 490., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-308-2.

*அறிமுகம், தொல்லியலும் பூர்வீக வரலாறும், நாகநாடும் அதன் சமய நெறிகளும், யாழ்ப்பாணத்தில் அரச பாரம்பரியம், யாழ்ப்பாண இராச்சியம், இலங்கையில் சைவசமயம்: ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் 1250-1620 ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள்: குலவிருதுகளும் சின்னங்களும் என்ற கட்டுரை இடம்பெற்றுள்ளது. அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் உருவாக்கம் பற்றிய முன்னைய கருத்துக்களை மறுபரிசீலனை செய்யும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. பொலந்நறுவை இராசதானியின் வீழ்ச்சியோடுஒரு மத்தியமயமான ஆட்சிமுறையின் அழிவில் யாழ்ப்பாண இராச்சியமும் வன்னி இராச்சியங்களும் எழுச்சிபெற்றன என்னும் கருத்தை இப்பொழுது முற்றாக நிராகரிக்கும் பேராசிரியர் பத்மநாதன், பூர்வீகக் காலம் முதலாக ஏற்பட்ட தமிழர் குடியேற்றங்களும் அவை தொடர்பான அரசியல், சமூக பொருளாதார முறைகளுமே அவற்றின் எழுச்சிக்கு அடிப்படையானவை என்ற சிந்தனைக்கு இந்நூலில் வலுச் சேர்க்கின்றார். வெவ்வேறு காலகட்டங்களில் அவர் எழுதிய ஆறு கட்டுரைகளும் ஆறு இயல்களாகப் பதிவுசெய்யப்படுகின்றது*

### 7972

**யாழ்ப்பாணச் சரித்திரம்** .எஸ்.ஜோன் (மூலம்), டானியல் ஜோன் (பதிப்பாசிரியர்). தெல்லிப்பழை: டானியல் ஜோன், 3வது பதிப்பு, 1929, 1வது பதிப்பு, 1878, 2வது பதிப்பு, 1882. (தெல்லிப்பழை: அமெரிக்கன் சிலோன் மிஷன் பிரஸ்).
xxviii, 41 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

தெல்லிப்பழையில் வசித்த சுவாமிநாதபிள்ளையின் குமாரர் நொத்தாரிசு மண்டலநாயகம்பிள்ளை அவர்களின் வேண்டுகோளின்பேரில் வைபவமாலை முதலாம் நூல்களின் உதவியுடன் இந்த யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூல் இயற்றப்பட்டது. தெல்லிப்பளை போதனாசக்தி வித்தியாசாலை (Tellippalai Training School) தலைமை ஆசிரியராகவிருந்த எஸ். ஜோன் அவர்களால் 1878இல் ஆக்கப்பட்டு அவரது புதல்வர் டானியல் ஜோன் M.B.அவர்களால் பரிசீலிக்கப்பட்டுப் பிரசுரமான நூலின் மூன்றாவது பதிப்பு. இந்நூல் பற்றிய மீள்வாசிப்பு பின்னாளில் க.குணராசா (செங்கைஆழியான்) அவர்களால் 2002இல் மேற்கொள்ளப்பட்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 81253).

### 7973

**வரலாற்றில் வல்வெட்டித்துறை.** பா.மீனாட்சிசுந்தரம், என்.சிவரட்ணம். வல்வெட்டித்துறை: அரும்பொருள் காப்பக வெளியீடு, 1வது பதிப்பு, மே 2006. (யாழ்ப்பாணம்: ஸ்மார்ட் பிரின்டர்ஸ், 717 காங்கேசன்துறை வீதி).
xiii, 236 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 25x18 சமீ.

வல்வெட்டித்துறை, வல்வெட்டித்துறையின் பெயர் எவ்வாறு ஏற்பட்டது, அருள்பரப்பும் ஆலயங்கள், கல்வியறிவூட்டிய கல்விக்கூடங்கள், வைத்திய வசதிகளும் வைத்தியசாலையும், உள்ளூராட்சிசபை, வல்வைமண் பெற்றெடுத்து மறைந்துவிட்ட ஒருசில அறிஞர்கள், சாதனையாளர்கள், கல்விமான்கள், பிரமுகர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கியதில் வல்வையரின் பங்களிப்பு, போராட்ட வரலாற்றில் வல்வையின் மைந்தர்கள், கப்பல் கட்டும் கலை, கடல் ஓடிகள் (மாலுமிகள்), வல்வைத் துறைமுகம், கடல் வணிகம், வரலாற்றில் பதியப்படவேண்டிய முக்கிய சம்பவங்கள், அறிஞர்கள் மகான்களின் வல்வை விஜயம், அரசியல்வாதிகள், இதர பிரமுகர்களின் விஜயம், வல்வையில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம், சனசமூக சேவா நிலையங்கள், பேச்சுவழக்கில் கையாண்ட சொற்கள், கட்டிட முறைமையும் வீடுகளின் அமைப்பும், ஆகிய தலைப்புகளில் அமைந்த 20 கட்டுரைகள் வல்வெட்டித்தறையின் பிரதேச வரலாற்றை இந்நூலில் விரிவாகப் பதிவுசெய்கின்றன. என்.சிவரட்ணம் அவர்கள் தொகுத்து வழங்கியுள்ள பின்னிணைப்புகளில் ஆழ்கடல் வென்றவர்கள், ஆன்மீகப் பணியில் வல்வைச் சிவன் ஆலய திருக்கல்யாண மண்டபம், கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் எம்மவரால் 1859இல் ஸ்தாபிக்கப்பட்ட வரலாறு, 30 வருடங்களாக ஓடிக்கொண்டிருக்கின்றேன், அமெரிக்காவுக்கு மைலாய், இந்தியாவுக்கு வல்வை, வல்வை மண் மீண்டும் எழும், தாய்நாட்டிற்குப் பெருமைதேடித்தந்த நீச்சல் வீரன் நவரத்தினசாமி, ஆகிய தலைப்புகளில் இப்பிரதேசம்சார்ந்த கட்டுரைகளும் உசாத்துணை நூல்களின் விபரங்களும் அடங்குகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 160575).

### 7974

**வாகரை ஒரு வரலாற்றுப் பார்வை.** வாகரைவாணன் (இயற்பெயர்: சந்தியாப்பிள்ளை அரியரெத்தினம்). மட்டக்களப்பு: ஆரணியகம், 479/5, புதிய கல்முனை வீதி, நாவற்குடா, 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (மட்டக்களப்பு: வனசிங்கா அச்சகம்).
(4), 60 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 20x14.5 சமீ.

இந்நூலில் 24 சிறிய தலைப்புகளில் விடயங்கள் தரப்பட்டுள்ளன. சிறிய தலைப்புகள் என்று கூறப்பட்டாலும், அவற்றின் உள்ளடக்கங்கள் நீண்டு பரந்த உறுதியான வரலாற்று விபரங்கள் நிறைந்தவையாக அமைகின்றன. வாகரை கிராமத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றிய புள்ளிவிபர அடிப்படையிலான வரலாற்றோடு, அதன் வீழ்ச்சி பற்றியும், அந்த வீழ்ச்சிக்கான காரணங்கள் பற்றியும் தெளிவான விபரங்களை இந்நூல் தருகின்றது. இயற்கை அழிவின் தாக்கம், யுத்தத்தின் பாதிப்பு என்பன வாகரை மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய சொல்லொணாத் துயரங்களையும், அதற்கு முன்னர் தனது ஊரின் வளத்தையும் செழிப்பையும் இந்நூலில் ஆசிரியர் பதிவுசெய்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40841).

மேலும் பார்க்க: 7137, 7159, 7213, 7252, 7399, 7408, 7483, 7808, 7843,

## *954.93(5) இலங்கையின் தொல்லியலாய்வு*

**மேலும் பார்க்க: 7929, 7934**

## *956.94 இஸ்ரேல்-பலஸ்தீனம்*

***7975***

***பலஸ்தீனம்: ஒரு சமகால நோக்கு.*** கே.ரீ.கணேசலிங்கம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
x, 98 பக்கம், விலை: ரூபா 260., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-86-8.

*பலஸ்தீனப் பிரச்சினையின் பிராந்திய-சர்வதேச தாக்கங்கள் காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அரசறிவியலில் சிறப்பு/பொது கலைமாணிப்பட்டம் பெறுகின்ற மாணவர்களின் மூன்றாம் வருட பாடவிதானத்தில் பலஸ்தீனம்-இஸ்ரேல் என்ற பெயரில் ஒரு அலகு சேர்க்கப்பட்டுள்ளது. அதன் போதனாசிரியராக விளங்குபவர் கே.ரீ.கணேசலிங்கம் அவர்களாவார். இவரது நான்கு கட்டுரைகளும், உதவி விரிவுரையாளர்களான இவரது மாணவர்களின் மூன்று கட்டுரைகளுமாக மொத்தம் ஏழு கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. பலஸ்தீன மக்களின் அரசியல் அதிகாரமும் இருநாட்டுத் தீர்வுத்திட்டமும், அரபு - இஸ்ரேலியப் பிரச்சினையின் சுருக்கமான வரலாற்றுப் பின்னணி, அரபு-இஸ்ரேல் பிரச்சினையில் காஸா-ஜெரிக்கோ உடன்படிக்கை, யசீர் அரபாத் (1929-2004) எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றிய தேடல், ஆகிய கட்டுரைகளை கே.ரீ கணேசலிங்கமும், பலஸ்தீனப் பிரச்சினையும் இலங்கைத் தமிழர் பிரச்சினையும் ஓர் ஒப்பீடு என்ற தலைப்பில் எஸ்.திருச்செந்தூரன் எழுதிய கட்டுரையும், பலஸ்தீன அகதிகள் என்ற தலைப்பில் ரி.விக்னேஸ்வரன் எழுதிய கட்டுரையும், மேற்படி இருவரும் இணைந்து எழுதிய ஹமாசின் எழுச்சியும் பலஸ்தீன அரசியல் போக்கும் என்ற கட்டுரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

## *960 ஆபிரிக்க வரலாறு*

***7976***

***ஆபிரிக்கா: பெரும் பிரதேசங்களின் சமூக, பொருளாதார, அரசியற் புவியியல்.*** உவால்ற்றர் விற்செறாழ்து (மூலம்), W.C. பிரைசு (திருத்திய பதிப்பாசிரியர்), எஸ்.பொன்னுத்துரை (தமிழ் மொழிபெயர்ப்பு). கொழும்பு 3: கல்வி நூல் வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1971. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).
xiv, 546 பக்கம், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

Walter Fitzgerald *அவர்கள் 1934ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் எழுதிய* Africa *என்ற நூலின் 9ஆவது பதிப்பின் தமிழாக்கம் இதுவாகும். இப்பதிப்பை மான்செஸ்டர் பல்கலைக்கழகப் புவியியல் விரிவுரையாளரான* W.C. Price *என்பவர் திருத்தி வெளியிட்டிருந்தார். இந்நூல் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாம் பாகம் இக்கண்டத்தின் அமைப்பு, காலநிலை, தாவரம் என்பனவற்றை விளக்குகின்றது. இரண்டாம் பாகம் இக்கண்டத்தின் பிரிவினை பற்றிய வரலாற்றையும் இங்குவாழ் சுதேசிக்குடிகள், குடியேறிகள் என்போர் பற்றிய வரலாற்றையும் சுருக்கமாகத் தருகின்றது. இந்நூலில் முக்காற் பங்காயமையும் மூன்றாம் பாகம் ஆபிரிக்காவின் பல்வேறு பிரதேசங்கள் பற்றியும் விரிவாக விபரிக்கின்றது.*

# *999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்*

## *999 பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்*

**7977**

**ஆய்வு நோக்கில் அயல்நாட்டுத் தமிழ்ச் சிறுகதைகள்.** ஆ.கார்த்திகேயன், சா.உதயசூரியன். சென்னை 98: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிட்டெட், 41 பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அப்பத்தூர், 1வது பதிப்பு, மார்ச் 2003. (சென்னை 11: சொந்தம் பிரிண்டர்ஸ், 64, மதுரைசாமி மடம் தெரு, பெரம்பூர்).

x, 276 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21x13.5 சமீ., ISBN: 81-234-0779-3.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அயல்நாட்டுக் கல்வித் துறையினர் அயலகத் தமிழ்ச் சிறுகதைகள் பற்றி நடத்திய கருத்தரங்குகளில் வாசிக்கப்பட்ட 23 கட்டுரைகள் இவை. தமிழகத்துக்கு அப்பால் அயலகத்தில் தமிழர் எதிர்கொள்கின்ற நடைமுறைச் சிக்கல்கள், மொழி இன-அடையாளமிழப்பும், தாய்மண்ணைப் பிரிந்த ஏக்கமும், பிள்ளைகளின் எதிர்காலமும் எனச் சிறுகதைகளின் உள்ளடக்கம் கிளைத்துச் செல்கின்றது. அயல்நாட்டுத் தமிழ்ச் சிறுகதைகள் (மாத்தளை சோமு), இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் சிறுகதைகள் (து.சீனிச்சாமி), டொமினிக் ஜீவா சிறுகதைகளும் யாழ்ப்பாணச் சமூக வரலாற்றுப் பின்புலமும் (வ.மகேஸ்வரன்), பெண்ணிய நோக்கில் மீறல்கள் (ப.பத்மநாபபிள்ளை, வ.இராசரத்தினம்), நீர்வை பொன்னையனின் இரு சிறுகதைத் தொகுதிகள்- ஒரு உறழ்நோக்கு (பா.மதிவாணன்), செ.கணேசலிங்கன் சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனைகள் (தா.ஈஸ்வரபிள்ளை), கருணாகரமூர்த்தி சிறுகதைகளில் ஜேர்மனிய வாழ்வியல் (சா.உதயசூரியன்), நாகேசு தர்மலிங்கத்தின் சிறுகதைகள் ஒரு பார்வை (இரா.விவேகானந்த கோபால்), நந்தியின் சிறுகதைகளில் மானுடத்தின் குரல் (சி.கலைமகள்), உணர்வின் நிழல்களில் பெண்கள் (சி.சித்ரா), கெக்கிறாவ ஸஹானாவின் சிறுகதைகளில் தென்னிலங்கை வாழ்க்கை (சாமி. திருமாவளவன்), மாத்தளை சோமுவின் கதைகளில் கதைமாந்தர்கள் (மை.செல்வமணி), சுதாராஜ் சிறுகதைகளில் கருணையும் பாசமும் (மு.கலைச்செல்வி) ஆகிய கட்டுரைகள் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களது படைப்புக்கள் சார்ந்தவை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 566729).

**7978**

**ஆயிஷா: குறுநாவல்.** இரா.நடராசன். கிளிநொச்சி: அறிவு அமுது பதிப்பகம், யாழ்.நெடுஞ்சாலை, 2வது பதிப்பு, ஓகஸ்ட் 2004, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997, மீள்பதிப்பு, ஜுலை 1997. (கிளிநொச்சி: அறிவு அமுது பதிப்பகம்).

32 பக்கம், விலை: ரூபா 29.00, அளவு: 21.5x14 சமீ.

தமிழகப் படைப்பாளியான இரா.நடராசனின் சிந்தனையைத்தூண்டும் நாவல். பெண்கல்வி பற்றிய விழிப்புணர்வை 21ம் நூற்றாண்டிலும் எமது சமூகத்துக்கு ஊட்டவேண்டிய தேவையை ஆயிஷா என்ற சிறுமியின் வாழ்வினூடாக வலியுறுத்துகின்றது. எதற்கும் ஏன் எப்படி என்று துருவித்துருவி ஆசிரியரைக் கெட்ட அறியும் ஆயிஷாவின் குணாம்சம்- ஆசிரியர்களை எரிச்சலுக்குள்ளாக்குகின்றது. விதிவிலக்காக ஒருவர் அமைகிறார். குழந்தைகளின் இயற்கையான படைப்புத்திறன், விமர்சன மனப்பான்மை, இயல்பான அறிவியல் கண்ணோட்டம் என்பன நம் பாடசாலைகளில் எவ்வாறு மழுங்கடிக்கப்படுகின்றன என்பதை இந்நாவல் தோலுரித்துக் காட்டுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 166329).

**7979**

**ஆறாவது அறிவு?.** வை.ஜவஹர் ஆறுமுகம். திருச்சி 620 021: கோட்டை பதிப்பகம், 2/97, கிருஷ்ணமூர்த்தி நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (திருச்சி 620008: கமர்ஷியல் ஆப்செட் பிரிண்டர்ஸ்).

140 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21x13.5 சமீ.

வியப்பும் அதிர்ச்சியும் கலந்த சில விவாதங்களை இந்நூலிலுள்ள கட்டுரைகள் வாசகர்முன் வைக்கின்றன. சுய ஒழுங்குள்ள ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பவதற்கான அத்திவாரத்தை உருவாக்கும் முயற்சியாக இக்கட்டுரைகளைப் பார்க்கலாம். இதிலுள்ள 23 கட்டுரைகளில் இலங்கை தொடர்பான இரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மகாவம்சம் எது? சிங்களவர் யார் என்ற தலைப்பில் முதலாவது கட்டுரையும், ஈழத்தமிழ் உணர்வும் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையும் என்ற தலைப்பில் 22ஆவது கட்டுரையும் இலங்கை தொடர்பானதாகும். ஆசிரியரின் மூன்றாவது நூல் இது.

**7980**

**இந்தியா-இலங்கை போரும் குற்றமும்: ஒரு பன்னாட்டுப் பார்வை.** பவா சமத்துவன். சென்னை 600005: இந்திய சமூக நீதி ஊடக மையம், புது யுகம், 72/40 ஓ.வீ.எம்.தெரு, சேப்பாக்கம், 1வது பதிப்பு, நவம்பர் 2010. (சென்னை 14: சக்சஸ் எண்டர்பிரைசஸ்).
141 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21x13.5 சமீ.

இந்திய சமூகநீதி ஊடகமைய வெளியீட்டுத்தொடரில் இரண்டாவது வெளியீடாக வெளிவந்த நூல். இலங்கையில் நடந்த விடுதலைப் போரினை முடிவுக்குக் கொண்டுவரும்வகையில் இந்திய அரசுடன் இணைந்து இலங்கை அரசு எடுத்த இறுதிக்கட்ட நடவடிக்கை வடபுலத்தை கொலைக்களமாக்கியது. இந்நிலைமையை சர்வதேச ஊடகங்கள் எவ்வாறு காட்சிப்படுத்தின என்பதை இந்நூல் புகைப்பட ஆதாரங்களுடன் பதிவுசெய்கின்றது. பல்வேறு நேர்காணல்களிலும் செய்திகளிலும் இருந்து தேர்ந்தெடுத்த பகுதிகள் புகைப்படங்கள் என்பவற்றினூடாக ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலையின் கொடூரத்தை நூலாசிரியர் இந்நூலின் வாயிலாகப் பதிவுசெய்யமுனைந்துள்ளார். சென்னை, இந்திய சமூக நீதி ஊடக மையத்தின் நிறுவனரான பவா சமத்துவன் அவ்வமைப்பின் தலைவருமாவார்.

**7981**

**இந்து சமயத் தத்துவம்.** ரி.எம்.பி.மகாதேவன் (ஆங்கில மூலம்), ஞா.இராஜாபகதூர் (தமிழாக்கம்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, திருத்திய 2வது பதிப்பு 2006, 1வது பதிப்பு, 2003, ஆங்கில மூலப் பதிப்பு, 1967. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xiv, 266 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-9429-07-8.

இந்திய மெய்யியல் அறிஞர் பேராசிரியர் ரி.எம்.பி.மகாதேவன் 1911இல் பிறந்தவர். இவர் எழுதிய Outlines of Hinduism என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். இதில் சமயம் என்பதன் பொருள், இந்து சமயம் என்பது என்ன? சமயத் திருநூல்கள், சமயச் சடங்குகள், அறிவியல், ஆன்மீக வழிகள், தத்துவங்கள், அத்வைதக் கோட்பாடுகளும் சித்தாந்தங்களும், சமய நெறிகள், வாழும் இந்துமதம் ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் அனுபந்தமாக இந்து சமயக் கோட்பாடுகள், இன்றைய இந்துமதம், ஆகிய விடயங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இந்து சமயம், அதன் தத்துவம், அறிவியல் முதலான நிலைகளில் அதன் பயன்பாடு எவ்வகையில் அமைந்துள்ளது என்பதை அறிந்துகொள்வதற்கு இதுவொரு பயனுள்ள நூலாகும்.

**7982**

**இலங்கைப் புலவர்கள்.** டி.பி.மீனாட்சிசுந்தரம்பிள்ளை, ஆர்.பி.சேதுப்பிள்ளை, எ.எம்.பரமசிவானந்தம். மதராஸ்: ஒற்றுமை நிலையம், 8, வியாசராவ் தெரு, தியாகராய நகர், 1வது பதிப்பு, 1952. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை).
34 பக்கம், விலை: அணா 8., அளவு: 18x12.5 சமீ.

சென்னை ஏயார் இந்தியா வானொலியில் (Air India Radio) இடம்பெற்ற மூன்று உரைகளின் நூல்வடிவம் இதுவாகும். இதில் ஆறுமுக நாவலர் பற்றி டி.பி.மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் ஆற்றிய உரையும், சி.வை.தாமோதரம்பிள்ளை பற்றி ஆர்.பி.சேதுப்பிள்ளை அவர்கள் ஆற்றிய உரையும், கனகசபைப்பிள்ளை பற்றி ஏ.எம்.பரமசிவானந்தம் அவர்கள் ஆற்றிய உரையும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 98065).

**7983**

**இன்னிசை யாழ்: விபுலாநந்தரின் யாழ் நூல் ஒரு பார்வை.** மார்க்ரெட் பாஸ்டின். திருநெல்வேலி 627 002: கலைக்காவிரி, யாதுமாகிப் பதிப்பகம், 37/17 இராமசாமி கோயில் சன்னிதி தெரு, பாளையங்கோட்டை, 1வது பதிப்பு. 2006. (திருச்சி 1: கம்பானியன் அட்வர்டைசிங் சர்வீசஸ்).
344 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 150, அளவு: 21x14 சமீ.

தமிழ்நாடு திருச்சிராப்பள்ளி, கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரி முனைவர் மார்கரெட் மாஸ்டின் FSJ அவர்கள் எழுதிய இந்நூல், அவரது முனைவர் பட்டத்திற்கான ஆய்வேடாகும். இவ்வாய்வு ஈழம் தந்த விபுலானந்த அடிகளாரின் வாழ்வையும் அவரது பணிகளையும் இசைத்தமிழ் ஆய்வு நூல் குறித்த விரிவான விளக்கத்தையும் தருகின்றது. இந்நூல் முன்னுரை, யாழ் நூலார் தம் வாழ்க்கைக் குறிப்பு, விபுலாநந்தரின் கட்டுரைகள், மதங்க சூளாமணி, யாழ்நூலின் அமைப்பு, யாழ்நூலின் பாயிரவியல், யாழ்வகைப்பாடுகள், யாழ் உறுப்புகள், இசை நரம்பியல், யாழ் நூலின் பாலைத் திரிபியல், யாழ் நூலின் பண்ணியல், யாழ்நூலின் தேவாரவியல், யாழ்நூலின் ஒழிபியல், முடிவுரை ஆகிய 14 இயல்களில் உருவாக்கப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 602370)

### 7984

**ஈழ இலக்கியம்: ஒரு விமர்சனப் பார்வை.** ஜெயமோகன். சென்னை 600017: எனி இந்தியன் பதிப்பகம், இல. 102, எண் 57, பி.எம்.ஜி. காம்ப்ளெக்ஸ், தெற்கு உஸ்மான் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2008. (சென்னை 600005: சேகர் ஆப்செட்).
168 பக்கம், விலை: இந்திய ரூபா 95., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-906563-4-4.

தமிழக எழுத்தாளரின் பார்வையில் ஈழத்து இலக்கியம் இங்கு விமர்சிக்கப்படுகின்றது. மு.தளையசிங்கம், கா.சிவத்தம்பி, எஸ்.பொன்னுத்துரை, அ.முத்துலிங்கம், சு.வில்வரத்தினம், உ.சேரன் ஆகிய ஐவரது இலக்கியப் படைப்புகளை எடுத்து ஆராய்ந்து விமர்சித்திருக்கிறார். மார்க்சியர் ஒருவர், மார்க்சியர்களால் விமர்சிக்கப்பட்ட ஒருவர், கவிதைகளின் நவீனத்துக்கு வெளியே நிற்கும் ஒருவர், தத்துவத்தை சுயசிந்தனை வாயிலாகக் கட்டமைக்கும் ஒருவர், உலக இலக்கியத்தின் சாயலில் தன்னை வலுவாக இருத்திக்கொண்ட ஒருவர், போராட்டங்களின் தழும்பேறிய அனுபவங்களிலிருந்து தன் கவிதை உணர்வைப் பெற்ற ஒருவர் என்று பல்வேறு புலங்களிலிருந்தும் படைப்பாளிகளைத் தேர்வுசெய்திருக்கிறார் ஜெயமோகன். 1980களின் பிற்பகுதியில் தமிழில் எழுத ஆரம்பித்த ஜெயமோகன் 22.4.1962இல் பிறந்தவர்.

### 7985

**எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்.** சிராக் நிறுவனம். தமிழ்நாடு: சிராக், 19/6B, ஏழாவது தெரு, ஆனந்தகிரி, கொடைக்கானல்- 624102, மதுரை மாவட்டம், 1வது பதிப்பு, ஜூன் 1984. (Thiruthangal 626130: Holy Divinity Enterprises ).
(10), iv, 162 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு குடிபெயர்ந்த மக்கள் மத்தியில் 1982இல் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு. இவ்வாய்வுக்குழுவில் எஸ்.பன்னீர்செல்வம், பி.எஸ்.நாதன், ஏ.சிவானந்தன், டி.எஸ்.ராஜு, சிவா சாந்தகுமார், உருசுலாநாதன், குணசீலி, அந்தோனியம்மாள் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். ஆலோசகர்களாக ஸ்டான் லூர்துசாமி, எஸ்.செபஸ்டியன் ஆகியோர் பணியாற்றினர். தமிழ்நாட்டிலும் வெளி மாநிலங்களிலும் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் மத்தியில் 1981-82ம் ஆண்டுகளில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நேரடி அனுபவங்கள், ஆவணங்களைப் பார்வையிடுதல், பேட்டி காணுதல், படிவங்கள் பூர்த்திசெய்தல் போன்றவை தகவல் சேகரிப்பில் பயன்படுத்தப்பட்டன. வரலாற்றுப் பின்னணி, புதிய இலங்கையின் உருவாக்கமும் இந்திய தமிழ்த் தொழிலாளர்களின் பங்கும், மலையக மக்களும் கலாச்சாரங்களும் இனப்பரிமாணமும், சர்வஜன வாக்குரிமையும் மலையக மக்களும், அரசியலும் மலையக மக்களும், இலங்கை-இந்திய பேச்சுவார்த்தைகளும் உடன்படிக்கைகளும், இறங்குதுறையிலும் வரவேற்பு முகாமிலும், இந்திய அரசின் புனர்வாழ்வுத்திட்டங்களும் புதிய மண்ணில் இந்தியா திரும்பியோர் பெற்ற புதிய வாழ்க்கையும், இந்தியா திரும்பிய மக்களின் மனோநிலை வார்ப்பு, முடிவுரை ஆகிய பத்து இயல்களில் இவ்வாய்வு முடிவுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 7986

**என்ன செய்யலாம் இதற்காக?** ஜெ.பிரபாகரன். மதுரை 625020: பென்னிகுயிக் பதிப்பகம், 4/1411, செந்தில்நாதன் தெரு, தாசில்தார் நகர், 1வது பதிப்பு, அக்டோபர் 2010. (சிவகாசி 626 189: சபையர் ஆப்செட் பிரிண்டர்ஸ்).

*216 பக்கம், வண்ணப்படங்கள், அட்டவணைகள், விலை: இந்திய ரூபா 500., அளவு: 30.5x22 சமீ.*

*இலங்கையில் அரை நூற்றாண்டிற்கும் மேலாக சிங்கள இனவெறிக்கு ஆளாகிவரும் ஈழத்தமிழின மக்களின் துயரக்காட்சிகள் என்ற தலைப்புடன் புகைப்பட ஆவணமாக இந்நூல் தமிழ் ஆங்கில பிரெஞ்சு விளக்கக்குறிப்புகளுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் 57 தலைப்பகளில்371 புகைப்படங்கள், 4 அட்டவணைகள் மற்றும் 80 மனிதநேயக் கூற்றுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. புகைப்படங்களை வகைப்படுத்தும் தலைப்புக்கள் தமிழ் ஆங்கிலம் பிரெஞ்சு மொழிகளிலும் தலைப்பின் தொடர்ச்சி அடுத்தடுத்த பக்கங்களில் தமிழில் மட்டும் வெளியிடப்பட்டுள்ளது. பிற அனைத்தும் தமிழ் ஆங்கில மொழிகளில் முழுமையாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் முதற்பதிப்பில் 2000 பிரதிகள் தமிழகத்தில் அச்சிடப்பட்டு சர்வதேச விநியோகத்திற்காக கப்பல்வழியாக அனுப்பிவைக்கப்பட்டபோது, இலங்கைத் துறைமுகத்தில் தடுக்கப்பட்டு இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

### 7987

**கச்சத்தீவும் இந்திய மீனவரும்.** *வி.சூரிய நாராயண், கே.முரளீதரன். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, இணை வெளியீட்டாளர், சென்னை 600018:* Centre for Asian Studies, Appartment 2, *அபூர்வா அபார்ட்மென்ட்ஸ், 7 மகாராணி சின்னம்மா சாலை, அவன்யு காலனி, 2வது பதிப்பு, டிசம்பர் 2010, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 60005: மணி ஒப்செட்).*
*147 பக்கம், வரைபடம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-81-89359-93-5.*

*சென்னையிலிருந்து செயற்படும்* The Centre forAsia Studies *என்ற நிறுவனத்தின் முதலாவது தமிழ் நூல் இது. பாக் நீரிணை மன்னார் வளைகுடா, வங்காள விரிகுடா பகுதிகளில் எல்லைகளை வகுப்பதற்காக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 1974இலும் 1976இலும் கையெழுத்தான ஒப்பந்தத்தால் நீரிணைப்பகுதியில் வாழும் ஆயிரக்கணக்கான இந்திய மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. எல்லை வகுத்தபின் மீன்வளம் அதிகமிருக்கும் பகுதிகள் இலங்கையின் கடல் எல்லைக்குள் இருந்தன. இதை முன்னிட்டு தமிழக மீனவர்களுக்கும் இலங்கைக் கடற்படைக்கும் இன்றுவரை தொடர்ந்து மோதல்கள் நடந்தவண்ணம் இருக்கின்றன. இந்தச் சர்ச்சையின் பின்னணி என்ன? கட்டாந்தரையானதொரு சிறிய தீவு ஏன் தமிழகத்தில் ஒருஉணர்ச்சிகரமான பிரச்சினையாக இருக்கிறது? இந்திய-இலங்கை உறவுகளில் சிக்கல் ஏற்படாமல் இந்தியாவின் நலன்களை குறிப்பாக தமிழக மீனவர்களின் நலன்களை உறுதிசெய்யவும் பாதுகாக்கவும் முடியுமா? பாக் நீரிணைப்பகுதியை சர்ச்சைக்குரிய பிரதேசமாகப் பார்க்காமல் அந்நீரிணையின் இருபுறமும் வசிக்கும் மீனவர்களின்பொதுச் சொத்தாகப் பார்க்க முடியாதா? இந்தப் பகுதியில் மீன்வளம் குறைந்துவரும் நிலையில் கூட்டு முயற்சியின்மூலம் அதை மேம்படுத்த முடியாதா? இந்தக் கேள்விகளுக்கு விடைதேட முயல்கின்றது இந்நூல். பல்வேறு வாதப்பிரதிவாதங்களுக்கு இடமளிக்கும் இந்நூலை இந்திய ஆளும் தரப்பினரின் கருத்துப்போக்கு எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியும் ஆவணமாகப் பல்வேறு நிலைகளில் நின்று வாசிக்கமுடியும். பாக்.நீரிணை பாலமா போர்க்களமா?/பாக். வளைகுடாவில் மீன்பிடித் தொழில்/இந்தியா-இலங்கை உறவும் கச்சதீவு சர்ச்சையும்/ 1974,1976ம் வருட ஒப்பந்தங்கள்/ போர்க்களமான பாக்.நீரிணை/தீர்வு என்ன ஆகிய ஆறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. பின்னிணைப்புகளாக 1974ம் வருட இந்திய-இலங்கை கடல் எல்லை ஒப்பந்தப் பிரதி/ 1976ம் வருட இந்திய-இலங்கை கடல் எல்லை ஒப்பந்தப் பிரதி/ மன்னார் வளைகுடாவிலும் பாக். நீரிணையிலும் கடல் எல்லையை வரையறுப்பது பற்றிய* C.W.E.*காட்டன் 1921இல் எழுதிய கடிதப் பிரதி/இந்திய வெளியுறவுச் செயலர் கேவல்சிங் இலங்கையின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புத்துறைச் செயலர்* W.D.*ஜெயசிங்கவுக்கு 1976 மார்ச் 23இல் எழுதிய கடிதம் ஆகியவை இடம்பெற்றுள்ளன.*

### 7988

**கலாநிதி கைலாசபதி.** *இராம.சுந்தரம். புது தில்லி 110 001: சாகித்திய அகாதெமி, தலைமை அலுவலகம், இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, 1வது பதிப்பு, 2007. (சென்னை: ரோயல் கலர் பிரிண்டர்ஸ்).*
*(2), 132 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21.5x13.5 சமீ.,* ISBN: *81-260-2362-7.*

*இந்திய இலக்கியச் சிற்பிகள் என்ற தொடர் வெளியீட்டின் ஒரு நூலாக வெளிவந்துள்ளது. ஈழத்துத் தமிழறிஞர் கைலாசபதியின் படைப்புக்களையும் எழுத்துக்களையும் இந்திய வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் அவரது பல்வேறு ஆக்கங்களைத் தேர்ந்து இராம சுந்தரம் இந்நூலை ஆக்கியுள்ளார். நினைவும் நிகழ்வும், நுண்பொருள் காண்பது அறிவு, களிறெறிந்துபெயர்தல் காளைக்குக் கடனே, நந்தியும் புலியும், யானும் வந்தேன் ஒரு சித்தன், பழையன கழிதலும் புதியன புகுதலும், சொலல் வல்லன், உரைகல் ஆகிய எட்டு தலைப்புகளில் கைலாசபதியின் தேர்ந்த கட்டுரைகள் சில இதில் இடம்பெற்றுள்ளன.*

### *7989*

***சிங்கத்தின் நகங்களும் அசோகச்சக்கரமும்: ஈழம்-காலச்சுவடு பதிவுகள் 1988-2008.*** *கண்ணன் (தொகுப்பாசிரியர்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 60005: மணி ஓப்செட்).*
*286 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-81-89359-87-4.*

*சுந்தர ராமசாமியின் காலச்சுவடு தோன்றிய காலகட்டம் முதல் நான்காம் ஈழப்போருக்கு முந்தைய காலகட்டம் வரை காலச்சுவடில் வெளிவந்த அரசியல் பதிவுகளின் தொகுதி இந்நூல். இந்திய அமைதிப் படையின் கோர முகத்தை உரித்துக்காட்டிய சிங்கத்தின் நகங்களும் அசோகச் சக்கரமும் கட்டுரை காலச்சுவடு இதழ் இரண்டில் வெளிவந்து சூழலில் பல அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது. உலகத் தமிழ் மாநாட்டில் தமிழ் ஈழஅறிஞர்கள் வெளியேற்றப்பட்டமைக்கான எதிர்வினை, சூரியக்கதிர் -2 தாக்குதலின் அனுபவப்பதிவு, ஈழம் தமிழ்த் திரைப்படங்களில் சித்திரிக்கப்பட்ட விதம், ஈழப் போராட்டம் பற்றிய சேரனின் விமர்சனப் பார்வை, ஜுலை 83 கலவரத்தின் இருபத்தைந்தாம் நினைவாண்டு சிறப்பிதழ், தமிழக முகாம்களில் ஈழத்தமிழர் நிலை என சுமார் இருபதாண்டு கால ஈழம் பற்றிய பன்முகப்பட்ட பதிவுகளின் தொகுதி இந்நூல். ஈழப்பிரச்சினை பற்றிய முழுமையான புரிதலுக்கு அவசியமான வாசிப்பாக இத்தொகுதி அமைகின்றது.*

### *7990*

***சிறீலங்காவின் கொலைக்களம்: பல்லாயிரக்கணக்கில் தமிழர்கள் படுகொலையும் இன அழிப்பும்.*** *கா.ஆறுமுகம் (ஆசிரியர்), மு.முகிலன், பூங்குழலி வீரன், சாமி.மூர்த்தி, வெ.முத்து, சி.ம.இளந்தமிழ், தி.பிரசன்னா (தொகுப்பாளர்கள்). கோலாலம்பூர்: செம்பருத்தி பதிப்பகம்,* No.3, Jalan Yap Ah Shak, 50300 Kuala Lumpur, *1வது பதிப்பு, பெப்ரவரி 2012. (கோலாலம்பூர்:* Visal Print Service, No.32-A, Jalan Padang Belia, Brickfields, 50470 Kuala Lumpur).
viii, *(4), 76 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: மலேசிய ரிங்கிட் 10.00, அளவு: 20.5x14 சமீ.,* ISBN: *978-983-43118-3-4.*

Sri Lanka Killing Fields *என்ற தலைப்பில் பிரித்தானிய தொலைக்காட்சி சேவைகளில் ஒன்றான* Channel 4, *14.6.2011இல் 49 நிமிட ஆவணப்படமொன்றை ஒளிபரப்பியிருந்தது. இலங்கையில் 2009 மே 17இல் முள்ளிவாய்க்காலில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட ஈழவிடுதலைப்போராட்டத்தின் ஆயுதப் போரின் போது நிகழ்ந்த பொதுமக்களின் கொடுமையான அழிவு பற்றிய செய்தியை உலக அரங்கில் எடுத்துச்செல்ல இவ்வாவணப்படம் உதவியது. அவ்வாவணப்படத்தைத் தழுவி இந்நூல் மலேசிய மண்ணிலிருந்து செம்பருத்தி அமைப்பினரால் வெளியிடப்பட்டுள்ளது. சிறிலங்காவுக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிறீலங்கா அரசுக்கு ஆதரவாகக் குரல்கொடுக்கும் நாடுகளின் பட்டியலில் மலேசியாவும் இடம்பெற்ற நிலையில், மலேசிய அரசைத் தனது தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யும்படி வலியுறுத்தும் வகையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. கொலைகாரனுக்கு உடந்தையாக/ஏன் இந்தக் கொலைவெறி?/இனவாத சிங்கள அரசும், தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையும்/ சிறீலங்காவின் கொலைக்களம்/ போர்க்குற்ற அறிக்கை: சுருக்கக் குறிப்புகள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் ஏராளமான கறுப்பு-வெள்ளை புகைப்படங்களுடனான தரவுகளைக் கொண்டுள்ளது.*

### *7991*

**தமிழகம்-இலங்கை ஊர்ப்பெயர்கள்: ஓர் ஒப்பாய்வு.** கு.பகவதி. சென்னை 600113 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ.அஞ்சல், தரமணி, 1வது பதிப்பு, மே 1991. ( சென்னை 5: ஸ்ரீ கோமதி அச்சகம், திருநெல்வேலி).
x, 274 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21x13.5 சமீ.

ஊர்ப் பெயராய்வு தொடர்பாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நான்கு நூல்களை வெளியிட்டுள்ளது. இந்நூல் அதன் 5ஆவது வெளியீடாக அமைகின்றது. தமிழகம் - இலங்கை, தமிழகம்-இலங்கை பெயராய்வு, ஊர்ப்பெயர் அமைப்பு முறைகள், பொதுக்கூறு, சிறப்புக் கூறு, தனிப்பெயர்களும் மரூஉப் பெயர்களும், ஒத்த பெயர்கள் ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 476830).

### 7992

**தமிழீழப் பணியில் பெருங்கவிக்கோ.** வா.மு.சேதுராமன். சென்னை 600 092: கவியரசன் பதிப்பகம், 12, சாயி நகர் இணைப்பு, சின்மயா நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 600 092: சேதுமதி அச்சகம்).
304 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21.5x14 சமீ.

தமிழகக் கவிஞர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களது 69ம் அகவை ஆண்டு நிறைவாக வெளியிடப்பட்ட பயணக்கட்டுரைகள் அடங்கிய நூல். 1982ஆம் ஆண்டில் தமிழீழப் பகதிகளில் சென்று உரையாற்றிய பயணங்களும், அமெரிக்கா வாழ் மருத்துவர் வின்ஸ்டன் பஞ்சாட்சரம் ஒழுங்குசெய்திருந்த மாநாட்டுச் சிறப்புகளும், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா,இரியூனியன், குவைத் நாடுகளுக்குப் பயணம் செய்து பெற்ற இலக்கிய அனுபவங்களும்தமிழீழப் பணிக்காக தமிழகத்தில் மேற்கொண்ட போராட்டங்களும் இந்நூலில் 18 கட்டுரைகளின்வழியாக பதிவசெய்யப்படுகின்றன. நுழைவாயில், சந்திப்பின் விந்தை, ஈழப் பயணம், முதல் தமிழீழ மாநாடு, துன்பத்தின் துணை, ஒத்தது அறியும் உணர்வுகள், கௌதமரின் கண்ணீர், விரும்பி ஏற்ற விழுப்புண், இழந்தும் ஆற்றுவம் ஈழப்பணி, எதிரும் புதிரும், ஆயுதத் தீர்வைக் கைவிடுக, உள்ளத்தால் ஒருவர், விடுதலைப்புலிகள் வெல்வது உறுதி, ஈழத்தின் எழுகதிர், காலம் மாற்றும் ஞால எல்லை, தாரணி முற்றும் தமிழீழ ஒலி ஒளி, கடலுள் மாய்ந்த ஈழத்துப் பெருவழுதி, நிறைவின் நிறைவு-தமிழீழம் ஆகிய தலைப்பகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 7993

**நாவலர் பெருமான்.** கா.மாயாண்டி பாரதி. சென்னை 5: பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம், 1வது பதிப்பு, ஜுலை 1955. (சென்னை 5: ஏஷியன் பிரின்டர்ஸ்).
viii, 154 பக்கம், விலை: இந்திய ரூபா 2.00, அளவு: 18x12.5 சமீ.

தமிழ்நாடு, பாளையங்கோட்டை, தூய யோவான் கல்லூரி, தமிழ் விரிவுரையாளரான வித்துவான் கா.மாயாண்டி பாரதி அவர்கள், ஈழத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பற்றி எழுதிய நூல் இது. தோற்றுவாய், குலச் சிறப்பும் பெருமான் பிறப்பும், கல்வி வேட்கையும் இளமை வாழ்க்கையும், இரு பெரும் பணிகள், உரையாசிரியரும் பதிப்பாசிரியரும், சொல்லின் செல்வர், குணக்கலைக் குன்று, பிறவாப் பெருநிலை ஆகிய எட்டு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 109880).

### 7994

**புத்தனின் பெயரால்: திரைப்பட சாட்சியம்.** யமுனா ராஜேந்திரன். சென்னை 600018: உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 600005: மணி ஆப்செட்).
239 பக்கம், விலை: இந்திய ரூபா 140., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80072-80-7.

முப்பது ஆண்டுக்கால ஈழப்போராட்டத்தின் விளைவாக ஈழமக்கள் வந்தடைந்திருக்கும் உளவியல் சிக்கல் உக்கிரமான படைப்பு மனநிலைக்கு அவர்களைக் கொண்டுவந்திருக்கிறது. திரைப்படங்களின் வழி ஈழ விடுதலைப் போராட்டத்தையும் அதன்வழி ஈழச் சமூகத்தையும், அதன் வழி ஈழ

மக்களையும், சிங்கள மக்களையும் அவர்களுக்கிடையிலான முரண்பாடுகளையும் நேசத்தையும், வெறுப்பையும் துயர்களையும் புரிந்துகொள்ள முனைந்ததாக ஜமுனா ராஜேந்திரனின் திரைப்பயணம் அமைந்துள்ளது. வரலாற்று நூல்களின் வழியாக வந்தடைந்த புரிதல்களை விடவும் ஆழமான புரிதலை இத்திரைப்படங்கள் இவருக்கு அளித்துள்ளன. கடந்த 20 ஆண்டுகளாகத் தான் தேடித் தேடிப் பார்த்து வந்திருக்கின்ற அந்த ஈழ வரலாற்றின் திரைப்படமூலமான சாட்சியங்களை இந்நூலில் புனைவுப்படங்கள், குறும்படங்கள், விவரணப்படங்கள், ஆகியனவற்றின் ஆழமான திரை விமர்சனங்களாகத் தந்திருக்கிறார். தமிழகத்தின் கோவை சௌரிபாளையத்தில் பிறந்த யமுனா ராஜேந்திரன் கணிதத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர். லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் இவர் ஈழத்தமிழர்களுடன் நெருங்கிய இலக்கியத்தொடர்பினைப் பேணுபவர்.

**7995**

**புத்தாயிரத்தில் தமிழ்க்களம்: தேர்ந்தெடுக்கப்பட்ட காலச்சுவடு நேர்காணல்கள் 2004-2009.** கண்ணன் (தொகுப்பாசிரியர்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (சென்னை 60005: மணி ஒப்செட்).
152 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80240-26-8.

காலச்சுவடு இதழில் கடந்த ஐந்தாண்டுகளாக வெளிவந்த களப்பணியாளர்களின் நேர்காணல் தொகுப்பு இது. களங்கள் பன்முகப்பட்டவை. மாவோயிசம், ஈழத்தமிழர் பிரச்சினை, தமிழகத் தலித் இயக்கம், பெண்ணியம், பழங்குடியினர் இயக்கம், குடிநோயாளிகளின் பிரச்சினைகள் என இந்நூற்றாண்டின் தமிழக அறிவுலகில் விவாதிக்கப்பட்ட பல பொருட்கள் இந்நேர்காணல்களில் துலக்கம் பெறுகின்றன. ராஜ் கௌதமன், ரவிக்குமார், அருந்ததி ராய், ஜீ.எஸ்.லட்சுமண ஐயர், ப.சிவகாமி, பிரான்சிஸ் ஜெயபதி, பேராசிரியர் கல்யாணி ஆகிய தமிழகத்தவருடன் சுநந்த தேசப்பிரிய, ரமேஷ் குலநாயகம் ஆகிய ஈழத்தவர்களது நேர்காணல்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**7996**

**புதுவை-ஈழம் இலக்கிய உறவுகள்.** நாக.செங்கமலத்தாயார். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/8-10 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/8-10, ஆற்காடு சாலை).
120 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x14 சமீ., ISBN: 1-876626-41-0.

புதுவை-ஈழம் இலக்கிய உறவுகள், ஈழநாடும் தமிழும், தமிழ் அன்பர் மாநாடு, தமிழ் நெடுங்கணக்குத் திருத்தத் தீர்மானம், தமிழ் நெடுங்கணக்கு, சங்கச் சான்றோர் நூல்கள், எமது பத்திரிகை, ஸர் ஜெகதீச சந்திரவஸு செய்த பிரசங்கம் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர், தமிழகத்தின் புதுவையில் வாழும் தமிழ் வித்துவப் பரம்பரையின் வழித்தோன்றலாவார். பாரதியாருடைய தமிழிலே மிகுந்த ஈடுபாடுள்ளவர். தமது தந்தையார் காலத்திலே நிலவிய புதுவைக்கும் ஈழத்திற்குமான தமிழ் இலக்கிய உறவுகளின் வாழும் சாட்சியாக வளர்ந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 171862).

**7997**

**போர்க் குற்றவாளி: இலங்கையில் போர்க் குற்றங்கள் ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கை.** அக்னி சுப்பிரமணியம் (தமிழாக்கம்). சென்னை 600 006: மனிதம் வெளியீடு, Manitham-Human Rights Organisation, B 4-2/599அண்ணா சாலை, 1வது பதிப்பு, 2011. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).
xxiv, 328 பக்கம், புகைப்படங்கள், அட்டவணைகள், விலை: இந்திய ரூபா 300., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-81-909737-2-4.

மார்சுக்கி தாருஸ்மான் (இந்தோனேசியா) அவர்களைக் குழுவின் தலைவராகவும், ஸ்டீவன் ரத்னர் (ஐக்கிய அமெரிக்கக் குடியரசு), யஸ்மின் சூக்கா (தென் ஆபிரிக்கா) ஆகியோரை அங்கத்தவர்களாகவும் கொண்டு 22.6.2010 அன்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கிமூன் அவர்களால் நியமிக்கப்பட்ட ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை 31.3.2011இல் நியுயோர்க்கில் வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையின் தமிழாக்கம் இந்நூலின் பிரதான பகுதியாக

*பக்கம் 88-328இல் இடம்பெற்றுள்ளது. இவ்வறிக்கை ஆணை,தொகுப்பு மற்றும் வேலைத்திட்டம்/ மோதலுக்கான வரலாற்று ரீதியிலான அரசியல் பின்னணி/குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களின் சுபாவம் மற்றும் நோக்கு எல்லை/ குற்றச்சாட்டுக்களை சட்டரீதியாகச் சீர்தூக்கிப் பார்த்தல்/ பொறுப்புக்கூறல் பற்றிய இலங்கையின் அணுகுமுறை/ பொறுப்புக்கூறலுக்கான மேலும் தடைகள்/ முடிவுரைகள்/ பரிந்துரைகள் ஆகிய எட்டு பிரிவுகளின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலின் முதல் 87 பக்கங்களும் நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் விஸ்வநாதன் ருத்ரகுமாரன், லண்டன் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இறைபணியாளர் எஸ்.ஜே.இம்மானுவேல், லண்டன் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் ரெஜி, நிமல்கா பெர்ணாண்டோ(கொழும்பு), பீட்டர் ஷால்க் (உப்சலா, சுவீடன்), இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் இரா.துரைரத்தினம், பிரைன் செனவிரத்தின (அவுஸ்திரேலியா) ஆகியோரின்அணிந்துரைகளையும், தமிழீழம் மலருவதற்கான வாய்ப்பும் இராசபக்சே குழு, பன்னாட்டுகுற்றவியல் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படும் நேரமும் (அக்னி சுப்பிரமணியம்), ஐ.நா.இலங்கை இடையிலானஅறிக்கை குறித்த மோதல் (டி.பி.எஸ்.ஜெயராஜ்), இலங்கையின் கொலைக்களம் சாட்சிகளற்ற யுத்தம் குறித்த மூன்று ஆவணப்பட சாட்சியங்கள் (யமுனா இராஜேந்திரன்), எமது மக்களது விடுதலையை வென்றெடுக்க ஐநா வல்லுநர்குழு அறிக்கையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும் (தங்கவேலு வேலுப்பிள்ளை) ஆகிய விரிவான கட்டுரைகளையும் கொண்டுள்ளன.*

### 7998

**முகில்களின் மீது நெருப்பு: சந்தானம் ஓவியங்கள்.** *வீ.சந்தானம். சென்னை 600020: பொன்னி நூல்கள், 12, 1வது பிரதான சாலை, நேரு நகர், அடையார், 1வது பதிப்பு, டிசம்பர் 1987. (சென்னை: ராசகிளி பதிப்பகம்).*
*(48) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17.5 சமீ.*

*தமிழக ஓவியர் வீ.சந்தானம் அவர்கள் ஈழத்தமிழர் பிரச்சினைகளை - மனிதத்தின் அவலமாகச் சித்திரித்து வரைந்த கறுப்பு வெள்ளை ஓவியங்களின் தொகுப்பு. தன்னைச்சுற்றி என்ன நடக்கின்றது என்பதில் உணர்வுபூர்வமாக விழிப்புடன் இருப்பதன் ஒரு அறிகுறியாக இலங்கைத்தமிழர் படுகொலை தொடர்பான இவரது ஓவியங்கள் காட்சியளிக்கின்றன. ஒவ்வொரு ஓவியத்தின் தலைப்பும் ஈழத்துக் கவிதைவரிகளிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது. கும்பகோணம் சென்னை ஓவியக் கல்லூரிகளில் பயின்று வெளிவந்தவர் சந்தானம்.*

### 7999

**ராஜீவ் காந்தி கொலை: விடை கிடைக்காத வினாக்களும் கேட்கப்படாத கேள்விகளும்.** *சுப்ரமண்யன் சுவாமி (ஆங்கில மூலம்), சுதாங்கன் (தமிழாக்கம்). சென்னை 600004: அல்லயன்ஸ் கம்பெனி, 244 ராமகிருஷ்ணா மடம் சாலை, த.பெ.எண் 617, மயிலாப்பூர், 1வது பதிப்பு, ஏப்ரல் 2001. (சென்னை 600004: ஜெய் கணேஷ் ஓப்செட் பிரின்டர்ஸ்).*
*256 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 21x13.5 சமீ.*

*ராஜீவ் காந்தியின் கொலை வழக்குடன் தொடர்பான இந்நூலில் இந்திய அரசியல்வாதியான சுப்ரமண்யன் சுவாமி, தமிழ்நாட்டுக்கு ராஜீவ் செல்லவேண்டும் என்று வலியுறுத்திய ராஜீவின் மனைவி சோனியா காந்தியையும் அவருடைய தாயார் திருமதி பௌலாமைனோ, அர்ஜுன் சிங், மணிசங்கர ஐயர், மார்க்கரெட் ஆல்வா ஆகியோரையும் குற்றஞ்சாட்டுகின்றார். இக்கொலையின் பின்னணியில் அவர்களது பங்களிப்பு பற்றி தான் ஆராய்ந்தறிந்தவற்றை விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். 1991இல் தேர்தல் பிரச்சாரம் தொடக்கப்பட்டவேளையில் ராஜீவின் கூட்டணிக் கட்சித் தலைவர் ஜெயலலிதா, அன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி ஆகியோர் தேர்தல் பிரச்சாரத்திற்கு ராஜீவ் தமிழ்நாட்டுக்கு வரவேண்டியதில்லை என்று முடிவுசெய்திருந்த நிலையில் அவரை வலிந்து ஸ்ரீபெரும்புதூருக்கு அழைத்தவர்கள் யார்? அவரது கடைசி நிமிட மாற்றங்களுடன்கூடிய சுற்றுப்பயண விபரங்களை கொலையைத் திட்டமிட்ட விடுதலைப்புலிகளின் வலையமைப்புக்கு அச்சொட்டாக வழங்கிய உள்வீட்டுக்காரர் யார்? பலத்த பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டும், உடல் பரிசோதனைகள் தீவிரமாக இடம்பெற்றிருந்தும் கூட்ட மைதானத்தில் மனித வெடிகுண்டுதாரி எவ்வித பரிசோதனைகளுக்கும் உட்படுத்தப்படாமல் ராஜீவ் காந்திக்கு மாலைபோடும் அளவிற்கு முன்னேற வழிவகுத்துக்கொடுத்தவர் யார் என்பன போன்ற விடைகாணப்படாத பல நியாயமான கேள்விகளுக்குத் தனது பட்டறிவின் ஊடாக விடைகாண*

முயன்றிருக்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 559337).

### 8000

**விடிந்தது ஈழம்: வரலாற்றுப் பதிவு.** அ.ரெங்கசாமி. மலேசியா: செம்பருத்தி பதிப்பகம், கோலாலம்பூர், 1வது பதிப்பு, ஜுன் 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை).
64 பக்கம், விலை: இலவசம், அளவு: 21x15 சமீ., ISBN: 978-983-44618-2-9.

இந்நூல் ஈழத்தமிழரின் போராட்ட வரலாறு குறித்து மிக எளிய அறிமுகத்தைக் கொடுக்கின்றது. வரலாற்றுடன் மலேசியப் படைப்பிலக்கியவாதி அ.ரெங்கசாமி அவர்கள் விடுதலைப் புலிகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் கைக்கொண்ட நிலைப்பாடுகள்மீது தனது கருத்தினையும் பதிவுசெய்கிறார். தனது கருத்துக்களைக் கட்டமைப்பதற்கு (அன்டன் பாலசிங்கத்தின்) போரும் சமாதானமும், உண்மையின் தரிசனம் இணையத்தளம், (ஐ.தி.சம்பந்தனின்) கறுப்பு ஜுலை 1983 குற்றச்சாட்டு ஆகிய நூல்களையும் பத்திரிகைச் செய்திகளையும் ஆதாரமாகப் பயன்படுத்தியுள்ளார்.

## முன்னைய பதிவுகள் பின்னிணைப்பு

### 8A01

**ஆட்சி இயல்.** ச.ஹண்டி பேரின்பநாயகம். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 2வது பதிப்பு, 2010, 1வது பதிப்பு, 1962. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
xvi, 364 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-254-2.

இலங்கைப் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவர்களின் தேவை கருதி எழுதப்பட்ட நூல். குடியாட்சி வரலாறும் அடிப்படையும், ஆட்சிமுறை, அரசமைப்பு, புதிய ஆட்சிக் கொள்கைகள் என்பன முதலாம் பாகத்திலும், இலங்கை ஆட்சி இயல் வரலாறு, இலங்கை ஆட்சி முறை, சட்டமியற்றல், நிருவாகம், நீதி பரிபாலனம், மத்திய ஆட்சியும் உள்ளூராட்சியும், ஆட்சியியற் கட்சிகள், கட்சிமுறை ஆட்சி இலங்கைக்கு வேண்டுமோ? ஆகிய பகுதிகள் இரண்டாம் பாகத்திலும், பிரித்தானிய அரசமைப்பு, அரசமைப்பின் அம்சங்கள், சட்டத்துறை, மன்னர், அமைச்சும் அமைச்சரவையும், மரபுகள், சட்ட ஆட்சி, என்பன மூன்றாம் பாகத்திலும், பேரரசுகளின் தோற்றமும் வளர்ச்சியும், ஆணிலப்பதம், பொதுநலவாய தேயங்களின் தொடர்புமுறை, ஒரே உலகம் ஆகிய தலைப்புகள் நான்காம் (இறுதிப்) பாகத்திலும் விபரிக்கப்பட்டுள்ளன. சுன்னாகம், வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தின் வெளியீடாக இந்நூலின் முதலாம் பதிப்பு 1962இல் வெளிவந்தது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3187)

### 8A02

**இலக்கணமும் சமூக உறவுகளும்.** கார்த்திகேசு சிவத்தம்பி. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல.39, 36ஆவது ஒழுங்கை, 3வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, ஜுலை 1982, 2வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல.39, 36ஆவது ஒழுங்கை).
62 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14.5 சமீ. (ISBN: 955-9429-19-1)

தமிழ்ச் சொல்லிலக்கணக் கூறுகள் சில பற்றிய ஒரு மார்க்சிய நோக்கு. தமிழ் இலக்கணத்தில் கி.மு. 3ம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியமும், கி.பி.13ம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூலும் இன்றளவும் போற்றுதற்குரியனவாகப் பயன்பெறுகின்றன. தொல்காப்பிய இலக்கண மரபுகள், நன்னூல் இலக்கண மரபில் காணப்படும் விதி மாற்றங்களோடு ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளன. மனித உறவில் புலப்படுத்துகின்ற மொழி வடிவங்களைத் தேர்ந்தெடுத்து இரு வேறுபட்ட காலங்களில் அவற்றில் ஏற்பட்ட மாறுதல்களுக்கான காரணங்களை இந்நூல் ஆராய்கின்றது. (1வது பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவு இலக்கம் 245, பின்னைய பதிப்பிற்கான பதிவு 3A02)

### 8A03

**இலங்கையில் அரசியல் கட்சிமுறைமை.** சி.அ.யோதிலிங்கம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, திருத்திய 2வது பதிப்பு சித்திரை 2009, 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xiv, 168 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-180-4.

அரசியல் கட்சி முறைமையைக் கற்றல் என்பது அரசியற் கட்சிகளின் வரலாறு, கொள்கை, செயற்பாடு என்பவற்றைக் கற்பதுடன் அவை நடைமுறையில் செயற்படும்போது மொத்தமாக ஏற்படும் போக்குகளைக் கற்பதையும் குறிக்கின்றது. இந்த வகையில் இந்நூல், அரசறிவியலைக் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது அரசியற் கட்சிகளை கற்கவிரும்பும் ஏனைய ஆர்வலர்களுக்கும் பெரிதும் பயன்படக்கூடிய ஒன்றாகும். முன்னைய பதிப்பில் அரசியல் கட்சிகள் பற்றிய அறிமுகத்தின்போது அரசியற் கட்சிகளின் பண்புகள், அரசியற் கட்சிகளின் பணிகள் என்ற விடயங்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இத்திருத்திய பதிப்பில் அவை சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கைக் கட்சி முறை பற்றிய அறிமுகத்தின்போது கட்சிமுறையின் இயல்புகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. காலத்திற்கேற்ற வளர்ச்சிநிலை என்பதைப் பொறுத்தவரை 2009 ஜனவரி வரையிலான பிரதான கட்சிகள் ஒவ்வொன்றினதும் வளர்ச்சிநிலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இனரீதியான கட்சிகள் பற்றி முதலாவது பதிப்பில் சுருக்கமான விடயங்களே தரப்பட்டுள்ளன. திருத்திய பதிப்பில் அவை விரிவாக விளக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தின் குப்பிழானைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல்துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றவர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2195)

### 8A04

**இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்.** வெகுஜனன் (இயற்பெயர்: சி.கா.செந்திவேல்), இராவணா (இயற்பெயர்: ந.இரவீந்திரன்). சென்னை 600086: சவுத் விஷன், புதிய இல. 251 (132), ஔவை சண்முகம் சாலை, கோபாலபுரம், 2வது பதிப்பு, டிசம்பர் 2007, 1வது பதிப்பு, பங்குனி 1989. (சென்னை 600086: சவுத் விஷன், புதிய இல. 251 (132), ஔவை சண்முகம் சாலை).
(6), 242 பக்கம், விலை: ரூபா 375., இந்திய ரூபா 100, அளவு: 21.5x14 சமீ.

இந்நூலின் முதற் பதிப்பு "சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்" என்ற தலைப்பில் யாழ்ப்பாணம், புதியபூமி வெளியீடாக 152 பக்கங்களில் வெளிவந்திருந்தது. மேலதிக தகவல்களுடன் இரண்டாம் பதிப்பு வெளிவந்திருக்கிறது. 1966 அக்டோபர் 21 எழுச்சியைப்பற்றி விரிவாக விளக்கமளிக்கும் இந்நூல் அதன் பின் 1970களில் தொடர்ந்த போராட்டங்களையும் பதிவுசெய்திருக்கின்றது. அறிமுகம், சாதியமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும் அதன் இருப்பும், வர்க்கப் பிரிவினைகளின் தோற்றமும் வளர்ச்சியும், இலங்கையில் சாதி அமைப்பின் இறுக்கம், இலங்கைத் தமிழர்கள் மத்தியிலே சாதியும் தீண்டாமையும், கொலனிய காலத்திலிருந்து சுதந்திரம் வரை, 50களில் இருந்து 66 ஒக்டோபர் வரை, 1966 ஒக்டோபர் 21 எழுச்சியும் போராட்டங்களும், 1970களில் தொடர்ந்த போராட்டங்கள், தமிழ்த் தேசியப் போராட்டத்தில் சாதியத்தின் நிலைப்பாடு ஆகிய 10 இயல்களில் இவ்விடயம் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 135)

### 8A05

**கல்வி ஆய்வியல்.** கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 2வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, மாசி 2007. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
xii, 132 பக்கம், விலை: ரூபா 360., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-88-2.

திருத்திய பதிப்பாக வெளிவந்துள்ள இந்நூல் எட்டு இயல்களில் கல்வித்துறை ஆய்வுச் செயற்பாடுகளை விபரிக்கின்றது. முதலாவது இயல் ஆய்வியல் பற்றிய முன்னுரையாக அமைய, இரண்டாவது இயலில் ஆய்வின் பல்வேறு பரிமாணங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. ஆய்வுச் செயற்பாட்டில் இலக்கிய மீளாய்வு கொண்டுள்ள முக்கியத்துவம் காரணமாக, அது பற்றிய முக்கியமான கருத்துக்கள் மூன்றாவது இயலாக அமைகின்றது. நான்காம் இயலின் ஐந்து வகையான ஆய்வுமுறைகள் விபரிக்கப்பட்டுள்ளன. ஐந்தாவது இயலில் பல்வேறு வகையான மாதிரியெடுப்பு உபாயங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. தரவு சேகரிப்பு உத்திகள் பற்றிய விபரங்கள் ஆறாவது இயலில்

இடம் பெற்றுள்ளன. ஏழாவது இயலில் தரவுப் பகுப்பாய்வு பற்றி விளக்கப்பட்டுள்ளது. எட்டாவது இயலில் ஆய்வறிக்கை எழுதும் முறை தொடர்பான முக்கிய அம்சங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக ஆய்வு முன்மொழிவின் மாதிரி அமைப்பு, ஆய்வறிக்கை மதிப்பீட்டுப் பிரமாணங்கள், t -சோதனை, கை வர்க்கச் சோதனை, எழுமாற்று மாதிரியின் பருமன் அட்டவணை ஆகியன தரப்பட்டுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4203)

## 8A06

**கிறிஸ்து காவியம்.** வாகரைவாணன். கொழும்பு 12: திருமதி மகேஸ்வரி அரியரத்தினம், ஆசிரியை, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, வைகாசி 1995. (யாழ்ப்பாணம்: அன்னை அச்சகம், 89 மவுண்ட்காமல் வீதி, குருநகர்).
xix, 276 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ.

"யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரான கவிஞர் வாகரைவாணன் அவர்கள் தனது தமிழாற்றல், ஆங்கிலத் தேர்ச்சி, சமய ஞானம், உலகியலறிவு, தொடர்ந்து கற்றுத் தனதாக்கிக் கொள்ளும் பண்பு ஆகியவற்றைக் கடைந்தெடுக்க, அது திரண்டு மேலெழுந்த வெண்ணெய்ப் பந்தே இந்த கிறிஸ்து காவியம்" என்று இந்நூலுக்கான அணிந்துரையொன்று விதந்து கூறுகின்றது. கி.மு.7க்கும் - கி.பி.30க்கும் இடைப்பட்ட குறுகிய கால எல்லைக்குள் பாலஸ்தீன நாட்டிலுள்ள ஓர் யூதக் குடும்பத்தில் பிறந்து வாழ்ந்த யேசு கிறிஸ்து அந்நாட்டின் ஆளுநர் போஞ்சியு பிலாத்து என்பவரின் அதிகாரத்தின் கீழ் சிலுவை மரணத்துக்கு உள்ளானார். இவர் கடவுளின் வல்லமையின் வெளியீடாக உயிர்ப்பிக்கப்பட்டார் என்பதனை இவரது சீடர்கள் போதித்து வந்தனர். இத்தகைய தேவதூதரான இயேசு கிறிஸ்துவின் வரலாறு இங்கே காவியமாகியுள்ளது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3070)

## 8A07

**சப்ததீவு.** தீவகன் (இயற்பெயர்: ச.சதாசிவம் சேவியர்). கொழும்பு: ச.சதாசிவம், 160, புதிய சோனகத் தெரு, 1வது பதிப்பு, 1979. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).
(23), 97 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்கில் உள்ள ஏழு தீவுகளான நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, லைடன்தீவு, காரைதீவு(காரைநகர்) ஆகியவற்றை ஒன்றுகூட்டி சப்ததீவுகள் என்னும் பெயரில் வழங்குவர். பல மேன்மைகள் கொண்ட இத்தீவுகள் பற்றிய வரலாற்றுண்மைகள் பொதிந்த கட்டுரைகளின், கவிதைகளின், வாழ்த்துரைகளின் தொகுப்பு இது. தீவகம் பற்றிய பல்வேறு கருத்துக்களைத் திரட்டித் தந்துள்ளவர், தீவகன், சேவியர் ஆகிய பெயர்களிலும் அறிமுகமானவர். (பின்னைய 2வது பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1971). (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18463).

## 8A08

**சிறீ அளித்த சிறை** நாவேந்தன் (இயற்பெயர்: V.T.திருநாவுக்கரசு). யாழ்ப்பாணம்: நிலா பதிப்பகம், 70/1 வைமன் வீதி, 2வது பதிப்பு, ஜுலை 2002, 1வது பதிப்பு, மே 1959. (கொழும்பு 12: Perfect Printers, 130 டயஸ் பிளேஸ்).
xii, 44 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 18.5x13 சமீ.

சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்து நடந்த கிளர்ச்சி பற்றிய நூல். இந்நூலாசிரியரின் சிறை அனுபவங்களையும், சிறைவாசத்தின்போது எழுந்த உணர்ச்சியலையினையும் இந்நூல் பதிவுசெய்கின்றது. தமிழரசுக்கட்சித் தலைவரும், கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான கு.வன்னியசிங்கம் அவர்களின் வாழ்த்துரையும், நான் கண்ட நாவேந்தன் என்ற தலைப்பில் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் அவர்கள் 15.5.1959இல் வழங்கிய அறிமுக உரையும் இடம்பெற்றுள்ளன. நூலின் இறுதியில் செந்தமிழ் காக்கச் சிறைசென்ற செல்வர்கள் என்ற தலைப்பில் பெயர்ப்பட்டியல் ஒன்றும், இந்நூல் பற்றியும் நாவேந்தன் பற்றியும் கனடா எஸ்.கே.மகேந்திரன், வட்டுக்கோட்டை எஸ்.ஜெபநேசன் (பேராயர்), கொழும்பு,

பேராசிரியர் சோ.சந்திரசேகரன் ஆகியோரால் எழுதப்பட்ட குறிப்பகளும் இணைக்கப்பட்டுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5924)

### 8A09

**சைவ சித்தாந்த சங்கிரகம்.** வ.கார்த்திகேயபிள்ளை (மூலம்), நா.கதிரைவேற்பிள்ளை (பரிசோதித்தவர்). சென்னை: நா.கதிரைவேற்பிள்ளை, 1வது பதிப்பு, 1903. (சென்னை: கணேச அச்சியந்திரசாலை).
96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய சாத்திரங்களின் கருத்துக்களை விளக்கமாகவும் மிக விரிவின்றியும் எடுத்துரைக்கும் இவ்வசனநூல், சிறப்புப் பாயிரம், உபோற்காதம், கடவுள் வணக்கம், அவையடக்கம் அகிய முற்பகுதிகளுடன், பதார்த்த நிச்சயம், பதி இலக்கணம், ஆன்ம இலக்கணம், மல இலக்கணம், கன்ம இலக்கணம், மாமாயை இலக்கணம், அசுத்தமாயா இலக்கணம், சிவஞானசாதன இலக்கணம், முத்தி இலக்கணம் ஆகிய அத்தியாயத் தலைப்புக்களில் விரிகின்றது. இதனை இயற்றியவர் யாழ்ப்பாணத்து மேலைப் புலோலியூர் சுத்தாத்துவித சைவசித்தாந்த போதகாசிரியராகிய வ.கார்த்திகேயபிள்ளை அவர்களாவார். யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி சதாவதானம் நா.கதிரைவேற்பிள்ளை அவர்களினால் பரிசோதித்து வெளியிடப்பட்டுள்ளது. (பின்னைய 1933ம் ஆண்டில் வெளியிடப்பட்ட 2வது பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5062. அப் பதிவில் மூல நூலாசிரியரின் பெயர் தவறவிடப்பட்டுள்ளது). (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 110110)

### 8A10

**சொந்தங்கள்: சிறுகதைகள்.** த.சிவசுப்பிரமணியம் (புனைபெயர்: தம்பு சிவா). சென்னை 600098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 41-B, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 2வது பதிப்பு, டிசம்பர் 2010, 1வது பதிப்பு, ஜுன் 2007. (சென்னை 600098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ்).
xvi, 150 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-234-1868-x.

இந்நூலில் தம்பு சிவாவின் 12 கதைகள் இடம்பெற்றுள்ளன. உறவு, சதுரங்கம், பிரளயம், மனிதம் மரணிக்கிறது, தீயாய் கனன்ற வாழ்வு, மனமே வாழ்க்கை, பயணம், கலையும் கோலங்கள், விடியுமா, எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும், சுரங்களும் சுருதிகளும், சொந்தங்கள் ஆகிய தலைப்புகளில் இவை இடம்பெற்றுள்ளன. தன் நெஞ்சை நெருடிய சம்பவங்கள், தன் மனதில் நீண்டகாலமாகத் தேக்கிவைத்திருந்த உள்ளக் கிடக்கைகள், அநீதிக்கும் அக்கிரமத்திற்கும் எதிரான போக்குகள் போன்றவற்றை உள்வாங்கி யதார்த்தமாகத் தன் சிறுகதைளை எழுதியதால் அவை முற்போக்குக் கருத்துகளைக் கொண்டமைந்தவையாக உருப்பெற்றுள்ளன. ஈழத்து இலக்கியத்தில் தனக்கென ஒரு இடத்தினைத் தக்கவைத்துள்ள தம்பு சிவா, யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக் கல்வியை இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் பெற்றவர். 1967இல் அரசாங்க எழுதுவினைஞராக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இணைந்தவர். தொழிற்சங்கவாதியாகத் தன்னை அடையாளம் காட்டியவர். 197071இல் வெளிவந்த கற்பகம் கலை இலக்கியச் சஞ்சிகையில் சிறப்பாசிரியராகப் பணியாற்றியவர். இந்நூலின் முதற்பதிப்பு இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை வெளியீடாக 2007இல் வெளிவந்தது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4601)

### 8A11

**நட்டுமை.** ஆர்.எம்.நௌஸாத். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (சென்னை 60005: மணி ஓப்செட்).
160 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89945-02-2.

1930களில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமமொன்றில் விவசாய நிலங்களுக்கு நீர்பாய்ச்சுவதில் எற்பட்டதொரு பிரச்சினையை பின்புலமாகக் கொண்டு முஸ்லிம் மக்களின் பண்பாடு, வாழ்க்கைமுறை, சமய நம்பிக்கை, பள்ளிவாசல் கொடியேற்றுவிழா, திருமணச்சடங்கு, போன்றவற்றை அம்மண்ணின் வாசனையுடன் இந்நாவல் சித்திரிக்கின்றது. வயல்களில் சேர்த்துவைத்திருக்கும் நீரைத் திருட்டுத்தனமாக வரப்புகளில் பிளவுகளை ஏற்படுத்தி வடித்தெடுத்து விடுவதைக் குறிக்கும் **நட்டுமை** என்ற பிரதேச வழக்குச் சொல்,

*கிராமங்களில் மக்களிடையே ஏற்படும் களவொழுக்கத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. இதுவே நாவலின் கருத்தைப் புலப்படுத்தும் வகையில் தலைப்பாகவும் வைக்கப்பட்டுள்ளது. காலச்சுவடு அறக்கட்டளையின் சுந்தரராமசாமி 75 கவிதை இலக்கியப் போட்டியில் முதற்பரிசுபெற்ற நாவல் இது. 1980களில் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் தோன்றிய புதுக்கவிஞர்களில் தீரன் என்ற நௌஸாத் குறிப்பிடத்தக்கவர். (முன்னைய கொழும்புப் பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 6767)*

### 8A12

**நாவேந்தன் நினைவலைகள்.** *நாவேந்தன் (இயற்பெயர்: V.T.திருநாவுக்கரசு). யாழ்ப்பாணம்: நிலா பதிப்பகம், 70/1 வைமன் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*(2), 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13 சமீ.*

*ஈழத்து இலக்கியத்துக்கு ஐந்து தசாப்தங்களாகப் பங்களித்த திரு நாவேந்தன் அவர்களது மறைவையொட்டி (10.7.2000) வெளியான தமிழறிஞர்களின் அஞ்சலிகள், அவர் பற்றிய பிற அறிஞர்களின் நூல்களில் குறிப்பிடப்பட்ட செய்திகள் போன்றவை தொகுக்கப்பட்டுள்ளன. நாவேந்தனின் பேச்சுத் திறம், இலக்கியப் பங்களிப்பு, சிறப்புப் பண்புகள் என்பன இக்குறிப்புக்களில் நினைவு கூரப்பட்டுள்ளன. (இந்நூலின் பிரான்ஸ் பதிப்புக்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1905)*

### 8A13

**பாப்பாப்பா.** *கல்வயல் வே. குமாரசாமி. சாவகச்சேரி: அறிவழகுப் பதிப்பகம், பெரிய அரசடி, 1வது பதிப்பு, ஆவணி 2004. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).*
*20 பக்கம், வண்ணச் சித்திரங்கள், விலை: ரூபா 97.50, அளவு: 24.5x17.5 சமீ., ISBN: 955-98827-0-8.*

*ஓவியர் ரமணியின் வண்ண ஓவியங்களுடன் வெளிவந்துள்ள இச்சிறுவர் பாடல் நூலில் யானைத்தாத்தா, பாலர் நாங்கள், நோக்கு, பாப்பாப்பா, அழகுபார், ஊஞ்சல் ஆட்டம், குரங்காரின் கூத்து, தவளை அண்ணா, ஆட்டுக்குட்டி, பூனைக்குட்டியார், சிரிப்பு, அணிலார், கோழியார், எங்கள் வீட்டு நாயார், பம்பரம் சுற்றுது, சிங்கத்தார் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 16 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதே தலைப்பில் ஆசிரியரின் குழந்தைப்பாடல்களின் தொகுப்பொன்று 1984இல் சாவகச்சேரி திருக்கணித நிலையத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருந்தது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 321)*

### 8A14

**பின்பற்றப்பட வேண்டிய சைவ சமய தத்துவங்கள்.** *தனபாக்கியம் குணபாலசிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், , 1வது பதிப்பு, 2007. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*
*320 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 90., அளவு: 18x12 சமீ.*

*சைவத்தின் மாண்புகள், நான் அனுபவித்த மாணிக்கவாசகப் பெருமான், வேதாந்த சித்தாந்த தத்துவங்கள், உலக மதங்களின் மாண்புமிக்க கோட்பாடுகள், இறைவழிபாட்டில் தமிழரின் மொழியுரிமை ஆகிய ஐந்து இயல்களில் சைவசமயத் தத்துவங்களை ஆராய்ந்துள்ளார். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமராட்சியில் கப்புதூர் என்ற கிராமத்தில் பிறந்த இந்நூலாசிரியரின் ஐந்தாவது நூல் இது. தன் இளம்கலைமாணிப் படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1962-1966களில் பெற்றவர். முதுகலைமாணிப் பட்டத்தை சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1973-1976 காலகட்டத்தில் பெற்றவர். விரிவுரையாளராக இலங்கையில் பணியாற்றிய இவர் பின்னாளில் லண்டனுக்குப் புலம்பெயர்ந்து வந்து குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகிறார். 2000ம் ஆண்டு முதல் லண்டனில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றுகிறார். (முன்னைய நூல்தேட்டப் பதிவில் வெளியீட்டாளர் விபரம் தவறாகப் பதியப்பட்டுள்ளது. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4079)*

### 8A15

**புது யுகம் பிறக்கிறது.** *மு.தளையசிங்கம். கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1965. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231, Wolfendhal Street ).*

*(4), 140 பக்கம், விலை: ரூபா 2.75, அளவு: 18.5x12 சமீ.*

*வீழ்ச்சி, புது யுகம் பிறக்கிறது, தேடல், சோட்டை, இரத்தம், கோயில்கள், பிறத்தியாள், தொழுகை, சாமியாரும் பணக்காரரும், சபதம், வெளி ஆகிய பதினொரு சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. இத்தொகுதியிலுள்ள சபதம், வீழ்ச்சி ஆகிய கதைகள் சங்கப் பாடல்களின் அமைப்பை இக்காலச் சிறுகதைகளின் உருவ அமைப்புக்கு ஒரு பின்னணியாக எடுத்து இரண்டையும் இணைக்க முயலும் ஒரு முயற்சியாகும். தேடல் என்ற கதை யதார்த்தத்துக்குள்ளும் கனவுக்குள்ளும் பிடிபடாமல் நிற்கும் ஒருவிதக கா.்.ப்கா ரகக் கதையாகும். எமிங்வே சில கதைகளில் உருவாக்கிய உத்தியைப் பயன்படுத்தி இக்காலத்திற்குரிய வகையில் வெளி என்ற கதை எழுதப்பட்டுள்ளது. மொத்தத்தில் மு.தளையசிங்கத்தின் பல்வேறு புதுமைகளின் புகுத்தலாக இப்பரிசோதனைக் கதைகளைக் காணமுடிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275653). (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 582)*

### *8A16*

**முற்போக்கு இலக்கியச் செம்மல்கள்.** *த.சிவசுப்பிரமணியம் (புனைபெயர்: தம்பு-சிவா). சென்னை 600098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 41-*B*, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 2வது பதிப்பு, நவம்பர் 2010, 1வது பதிப்பு, பெப்ரவரி 2007. (சென்னை 600098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ்).*
xxii, *86 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21x14 சமீ.,* ISBN: *978-81-234-1835-3.*

*இலக்கிய ஆர்வம் கொண்ட இளம் தலைமுறையினர் முதுபெரும் எழுத்தாளர்கள் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற உந்துதலில் ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர்கள் பற்றி இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஒடுக்குமுறைக்கு எதிரான கருத்தியல் தளத்திலே நின்று புதிய சாத்தியங்களைத் தரும் ஒவ்வொருவரது ஆளுமைப் பன்முகப் பாங்குகளையும் காட்டும் வகையில் நூலாசிரியரின் புனைவு வேலைப்பாடு அமைந்துள்ளது. முதற் பிரிவில் சரத்சந்திரர், தகழி சிவசங்கரப்பிள்ளை, கிஷன் சந்தர், கவிஞர் மக்தூம், வல்லிக்கண்ணன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோரது பணிகள் பற்றியும், இரண்டாம் பிரிவில் பேராசிரியர் கைலாசபதி, கவிஞர் பசுபதி, செ.கணேசலிங்கன், நீர்வை பொன்னையன், முகம்மது சமீம், கவிஞர் சுபத்திரன் ஆகிய ஈழத்தவர்கள் பற்றியும் கட்டுரைகள் காணப்படுகின்றன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4923)*

### *8A17*

**யாரிந்த வேடர்?** *க.தா.செல்வராசகோபால். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*
xxviii, *112 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 17.5x12 சமீ.*

*ஈழத்து வரலாற்று அடிப்படையிலமைந்ததான வரலாற்று நாவல். குவேனி என்ற இயக்க ராணிக்கும் விஜயனுக்கும் ஏற்பட்ட உறவு வேடர்குலத்தை எவ்வாறு தோற்றுவித்ததென்பதைக் கதைவடிவில் கூறுகின்றது. 1963ம் ஆண்டு கலைஞர் ஜயசேனவினால் தயாரிக்கப்பட்டு இலங்கைக் கலைக்கழகத்தினது பரிசுபெற்ற குவெனீ என்னும் சிங்கள மேடை நாடகத்தின் சிறப்பு விபரம் 1964ம் ஆண்டு* Times of Ceylon-Annual *வெளியீட்டில் இடம்பெற்றிருந்தது. அந்தக் கட்டுரையின் பாதிப்பில் நூலாசிரியர் மகாவம்சத்தை ஆராய்ந்து கதைக்கருவை பெற்றதாகக் கூறுகின்றார். இந்நூல் கல்லச்சுப் பதிப்பாக 1960இல் முதன்முதலில் வெளிவந்தது. பாரம்பரிய அச்சுப்பதிப்பில் முதற்பதிப்பாக களுவாஞ்சிக்குடியிலிருந்து 1965இல் வெளிவந்தது. 2வது பதிப்பை இலங்கை மலையக வாலிபர் முன்னணி 1968இல் வெளியிட்டிருந்தது. ஆசிரியர் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் 1992இல் மீண்டும் கனேடியப் பதிப்பொன்றும் வெளியிடப்பட்டது. அத்துடன் அவரது நிழல் என்ற பத்திரிகையிலும் தொடராக வெளிவந்திருந்தது. இந்நிலையில் மணிமேகலைப் பிரசுரத்தின் முதற் பதிப்பாக 2005இல் தமிழகத்திலிருந்து வெளிவந்துள்ளது. (முன்னைய 1965ம் ஆண்டுப் பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5733)*

### *8A18*

**வட மொழி இலக்கிய வரலாறு.** கா.கைலாசநாதக் குருக்கள். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, இணைந்து வெளியிடுவோர்: லண்டன்: தமிழியல், 3வது பதிப்பு, ஜுலை 2010, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1962, 2வது பதிப்பு, டிசம்பர் 1981. (சென்னை 60005: மணி ஓப்செட்).
200 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-81-89359-99-7.

முதலாவது பதிப்பு கொழும்பு கலாநிலையத்தாலும், 2வது பதிப்பு சென்னை நர்மதா பதிப்பகத்தாலும் வெளியிடப்பட்ட இந்நூலின் மூன்றாவது பதிப்பு இது. வேதங்களையும் அவற்றின் வழிவந்த பிராமணங்களையும் ஆரணியகங்களையும் வேதங்களின் முடியாக அமைந்த உபநிடதங்களையும் வேதங்களைச் சார்ந்த அறங்களையும் குறிப்பிடும் வைதீக இலக்கியம் பற்றிய அறிவைப்பெற உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் ஈழத்து சம்ஸ்கிருதச் சிந்தனை மரபின் முக்கிய ஆளுமையாகத் திகழ்ந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், சம்ஸ்கிருதப் பேராசிரியராகப் பணியாற்றியவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வாழ்நாட் பேராசிரியராக கௌரவிக்கப்பட்டவர். வடமொழி இலக்கிய வரலாறு, சைவத்திருக்கோவிற் கிரியை நெறி ஆகிய நூல்கள் இவரது சம்ஸ்கிருத, இந்துப் பண்பாடு குறித்த ஆழ்ந்த ஞானத்திற்குச் சான்றுகளாக அமைவன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 340).

### 8A19

**விலங்குப் பண்ணை.** ஜோர்ஜ் ஓர்வல் (ஆங்கில மூலம்), கந்தையா குமாரசாமி (தமிழாக்கம்).அவுஸ்திரேலியா: உதயம் வெளியீடு, Tamil News Ltd, P.O.Box 3170, Wheelers Hill, Victoria – 3150, 2வது பதிப்பு, ஜனவரி 2011, 1வது பதிப்பு, நவம்பர் 2005. (கொழும்பு: சிகரம் ஊடக இல்லம்).
103 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x14.5 சமீ.

George Orval (இயற்பெயர்: எறிக் ஆர்தர் பிளெயர்) அவர்கள் 1945இல் எழுதிய Animal Farm என்ற நூலின் தமிழாக்கம். மேலை நாடுகளில் உயர்வகுப்புகளின் பாடநூலாகவும், பின்னர் ஆங்கிலத் திரைப்படமாகவும் வெளிவந்தது. இரண்டாம் உலக யுத்த காலகட்டத்தில் உலக அரசியல் பற்றி அங்கதச் சுவையுடன் பிரிட்டனில் எழுதப்பட்ட நாவல் இதுவாகும். இக்கதையின் மூலக்கரு 1937இல் ஸ்பானிய உள்நாட்டு யுத்தத்தின்போது மூலநூலாசிரியர் இணைந்து போரிட்டவேளை ஸ்பானிய இடதுசாரிகளான கம்யுனிஸ்டுகள் பூண்டோடு சுத்திகரிக்கப்பட்டதைக் கண்கண்ட காட்சிகளால் மனதில் உருவானதாகும். ஹீரோஷிமா அணுக்குண்டு வீச்சையடுத்து ஜப்பான் சரணடைந்த மாதத்தில் வெளியாகிய நாவல் இது. ஓர்வேல் இந்நூலில் அரச பயங்கரவாதம், பிரச்சாரம், புரட்சிப் பாதையில் சந்திக்கும் துரோகத்தனங்கள் ஆகியவற்றின் அராஜகங்கள் பற்றி அனுபவரீதியாகக் குறிப்பிடுகின்றார். பேசுவதற்கும், சிந்திப்பதற்குமான பூரண சுதந்திரம், மேற்குலகின் வளர்ச்சிக்கு மூலாதாரமாக இருப்பதை இந்நூலில் ஆங்காங்கே கோடிட்டுக் காட்டுகின்றார். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3838)

### 8A20

**வெண்சங்கு.** கனக.செந்திநாதன். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 375/8-10 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, நவம்பர் 2002. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 375/8-10, ஆற்காடு சாலை).
144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ., ISBN: 1-876626-68-2.

அன்பு, முயற்சி, கலை, போலித்தன்மையில் வெறுப்பு, விதியின் பிடி, பணத்தாசை என்று நிலைத்து நிற்கும் கருப்பொருள்களை வைத்து ஓரளவு பழைமையுடனும் சமயச் சூழலுடனும் சித்திரிக்கப்பட்ட 10 தேர்ந்த சிறுகதைகள் இவை. புராணப்படிப்பு, தாளக்காவடி, அன்னதானம், நாட்டுக் கூத்து, சரமகவிப்பாடல், காணிப்பற்று என்பனவற்றிலே துடிக்கும் யாழ்ப்பாணக் கலாச்சாரத்தைக் கதைகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. பிட்டு, சமர்ப்பணம், தொந்தம், தரிசனம், அலை ஓய்ந்தது, கூத்து, செம்மண், கண் திறந்தது, வெண் சங்கு, ஒரு பிடி சோறு ஆகிய தலைப்புகளில் இக்கதைகள்

# தலைப்பு வழிகாட்டி


*அக்கினிப் பூக்கள். 7456*
*அகத்திய மகாமுனிவர் திரட்டியருளிய தேவாரத்திரட்டு. 7106*
*அகதி வாழ்க்கை. 7185*
*அகவாசனை. 7055*
*அ/சாதாரண மனிதன். 7589*
*அஞ்சுவது அஞ்சாமை பேதமை. 7457*
*அட்சரகணிதக் கோவைகள். 7292*
*அட்சரகணிதக் கோவைகளும் காரணிகளும். 7293*
*அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: பாகம் 5: அடங்காப்பற்று முதலிமார். 7926*
*அடர்த்தியும் அமுக்கமும். 7342*
*அடிப்படை இலத்திரனியல் முதலாம் பகுதி. 7343*
*அண்ணை நான் தற்கொலை செய்யப்போகிறேன். 7718*
*அது ஒரு கனாக்காலம்: திரைக்கதை. 7656*
*அந்நிய முகங்கள். 7458*
*அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை. 7187*
*அபர்ணிக்காவின் நாய்க்குட்டி. 7435*
*அமராபுரி இளவரசனின் அற்புத சாகசங்கள். 7436*
*அர்த்தமுள்ள அனுபவங்கள். 7892*
*அரங்கியல் எண்ணக்கருக்கள். 7402*
*அரங்கியற் கட்டுரைகள். 7403*
*அரச சார்பற்ற அமையங்கள். 7211*
*அரசியல் தளம். 7178*
*அரசியலும் சிவில் சமூகமும். 7179*
*அருணகிரிநாதர் அருளிச்செய்த கந்தரலங்காரம் மூலமும் புத்துரையும். 7107*
*அருணம்: பேராசிரியர் க.அருணாசலம் பாராட்டுவிழா மலர். 7878*
*அருள் நிதி: மாவிட்டபுரம் விசுவர் சிதம்பரி சின்னத்தம்பி நினைவிதழ். 7108*
*அருளின் சிறுகதைகள். 7590*
*அல் இபாதத். 7143*
*அல் ஈமான். 7144*
*அலுவலக முகாமைக்கு ஓர் வழிகாட்டி. 7386*
*அலையின் கீதம். 7657*
*அவளும் ஒரு பாற்கடல். 7591*
*அவன் பெரியவன். 7437*
*அவாவுறும் நிலம். 7459*
*அவுஸ்திரேலியப் பயணக் கதை. 7830*
*அழகு சுந்தரி ஒப்பாரி. 7238*
*அளவீடு. 7294*
*அளவையியலில் அளவாக்கம்சார் அனுமானம். 7072*
*அறவழி நினைவுகள். 7032*
*அறிவூற்றகம். 7021*
*அறுவகைச் சமயங்கள். 7109*
*அறுவடைக் கனவுகள். 7658*
*அன்பு மலர்: பாராயணத்திரட்டுடன். 7039*
*அன்புக் கரங்கள். 7069*
*அன்புடை நெஞ்சம். 7659*
*அன்புள்ள அம்மா. 7378*

*அன்றாட வாழ்வில் ஆன்மீகநெறி. 7145*
*அன்னை தயை. 7719*
*ஆக்க இலக்கியமும் அறிவியலும். 7720*
*ஆங்கிலம் பிரெஞ்சு ஓர் ஒப்பீட்டுக் கற்கை. 7260*
*ஆசிய ஆப்பிரிக்க ஐரோப்பிய இனங்களின் தனித்துவமான வரலாறுகள்: தொகுதி 1-2. 7822-23*
*ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம். 7460*
*ஆட்சி இயல். 8A01*
*ஆணாதிக்கமும் பெண்ணியமும். 7173*
*ஆத்மீக வாழ்வு. 7056*
*ஆதாரம் இல்லை ஆறுதல் சொல்ல. 7592*
*ஆதிக் குடித் தமிழரும் மகாவம்சமும். 7927*
*ஆதித் துயர். 7461*
*ஆபிரிக்கா: பெரும் பிரதேசங்களின் சமூக, பொருளாதார, அரசியற் புவியியல். 7976*
*ஆய்வு நோக்கில் அயல்நாட்டுத் தமிழ்ச் சிறுகதைகள். 7977*
*1999ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்திற்கு அமைவான கணிதப் பயிற்சி தரம் 9. 7295*
*ஆயிஷா. 7978*
*ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை நூல்கள் 3ம் தொகுதி. 7793*
*ஆரம்பக் கல்வியில் செயற்திறன். 7219*
*ஆரோக்கியத்தில் உணவின் பங்கு. 7370*
*ஆவர்த்தன அட்டவணை. 7353*
*ஆழப் பதிந்த வேர்கள். 7837*
*ஆறாவது அறிவு? 7979*
*ஆறுமுக நாவலர்: நாவலர் நூற்றாண்டு நினைவு மஞ்சரி. 7848*
*ஆறுமுக நாவலரவர்கள் சரித்திரம். 7849*
*ஆறுமுகம். 7583*
*ஆன்ம விசாரம். 7057*
*ஆன்மீகக் கவிதைகள். 7462*
*ஆன்மீகத்தில் அகவை நூறு. 7850*
*ஆன்மீகத்தில் குருநகர் மக்கள். 7954*
*ஆன்மீகப் பகை தார்மீகமானதா? 7146*
*இங்கிலாந்தின் வளர்ச்சி. 7920*
*இசை நாடகப் பாடல் மெட்டுக்கள். 7395*
*இசையிலக்கணம். 7396*
*இடைத்தாக்கங்களும் இரசாயனக் கணிப்புகளும். 7354*
*இடைவெளி: குறுநாடகங்களின் சேகரம். 7548*
*இணுவை முருகன் பிள்ளைத் தமிழ். 7110*
*இணைபிரியாத தோழர். 7438*
*இது ஒரு ராட்சஷியின் கதை. 7660*
*இது கதையல்ல நிஜம். 7904*
*இது தான் முடிவு. 7549*
*இதோ ஒரு வெளிச்சம். 7893*
*இந்தத் தீபாவளி தேவைதானா? 7593*
*இந்திய மெய்யியற் சிந்தனையில் வேதாந்தம்-சித்தாந்தம் கூறும் கடவுட்கொள்கை. 7040*
*இந்தியச் சிந்தனை மரபு. 7076*
*இந்தியா-இலங்கை போரும் குற்றமும். 7980*
*இந்திரர்கள் நாடும் அகலிகைகள். 7594*

*இந்து சமயத் தத்துவம். 7981*
*இந்து சமயத்தின் சீர்திருத்த இயக்கங்கள். 7131*
*இந்து நாகரீகம். 7077*
*இந்து மதம்: விரதங்கள் விழாக்கள். 7111*
*இப்படிக்கு அன்புள்ள அம்மா. 7584*
*இயக்கம். 7344*
*இயல்பொப்பு. 7296*
*இயேசுவே இஸ்ரவேலரின் ஆசரிப்புக் கூடாரம். 7102*
*இரட்டையர். 7550*
*2000 பயிற்சி வினாக்கள்-விடைகளுடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கானது. 7001*
*2001ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்திற்கமைவான கணிதப் பயிற்சி தரம் 8. 7297*
*2010 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள் - வழிகாட்டி: தொகுதி 1-4. 7002-05*
*2010 புலமைப்பரிசில் செயல்நூல்: தொகுதி 1-2. 7006-07*
*இரவுகளில் பொழியும் துயரப்பனி. 7463*
*இரு விழிப் பார்வை ஒரு துளி விஷம். 7464*
*இருப்பும் விருப்பும். 7721*
*இருபடிச் சமன்பாடுகள். 7298*
*இருபத்து மூன்று நூற்றாண்டுகால சிங்கள-பௌத்த கலாசாரம். 7175*
*இருபதாம் நூற்றாண்டுக் கவிதை. 7722*
*இருள்-யாழி. 7465*
*இலக்கணமும் சமூக உறவுகளும். 8A02*
*இலக்கிய உலகில் இவர்கள். 7905*
*இலக்கிய மகளிர் இதய வேட்கை. 7723*
*இலக்கிய வளம். 7724*
*இலக்கியக் கட்டுரைகள். 7725*
*இலக்கியமும் எதிர்காலமும். 7726*
*இலக்கியவிலக்கண ஆய்வுரைகள். 7727*
*இலங்கை இடை வலயத்தின் மண்கள்: உருவவியல் உருவ வர்ணணை, பாகுபாடு. 7359*
*இலங்கை -இந்திய மானிடவியல்: சமயம், சமூகம் பற்றிய ஆய்வுகள். 7160*
*இலங்கை தேசிய இன முரண்பாடுகளும் சமாதான முன்னெடுப்புகளும். 7935*
*இலங்கை வரலாற்று வினாவிடை (புராதன-மத்திய காலம்). 7928*
*இலங்கைச் சோனகர் பற்றிய கடந்தகால நினைவுகள். 7945*
*இலங்கைத் தமிழரும் நாகநாட்டு அரசமரபும். 7929*
*இலங்கைப் புலவர்கள். 7982*
*இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்திப் பிரச்சினைகள். 7188*
*இலங்கைப் பொருளாதாரம்: கோட்பாடுகளும் நடைமுறைகளும். 7189*
*இலங்கையில் அரசியல் கட்சிமுறைமை. 8A03*
*இலங்கையில் ஆசிரியத் தொழில். 7220*
*இலங்கையில் இந்து வெண்கலப் படிமக்கலை மரபுகள். 7391*
*இலங்கையில் இன்பத் தமிழ். 7728*
*இலங்கையில் உதவி, முரண்பாடு, மற்றும் சமாதானத்தை கட்டி எழுப்புதல். 7936*
*இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும். 8A04*
*இலங்கையில் பிரித்தானிய ஆட்சி. 7930*
*இலங்கையில் மனிதக் குடியமைவு: மரபணுவியல் அடிப்படையிலான ஆய்வு உருவுரை. 7931*
*இலங்கையில் முஸ்லிம் நுண்கலை. 7389*
*இலங்கையிற் கலை வளர்ச்சி. 7390*
*இலங்கையின் இரசாயனக் கைத்தொழில்கள். 7202*

*இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும். 7161*
*இலங்கையின் மலையக தமிழ் மக்களின் சமூகவியலும் சமூக அசைவியக்கமும். 7946*
*இலண்டன் சிவன் கோயில்: வரலாறும் அனுபவங்களும். 7132*
*இலண்டன் சைவ மாநாடு (பதின்மூன்றாவது) சிறப்புமலர். 7133*
*இலத்திரனியல். 7345*
*இவர்களும் யதார்த்தவாதிகள் தாம். 7595*
*இளநரை. 7596*
*இளம் பெண்கள் அறியவேண்டிய சமையல்கள். 7381*
*இளவாலை ஆனைவிழுந்தான் மாட்சிமை. 7955*
*இளைஞர்கள் ஏற்கவேண்டிய சபதம். 7466*
*இறையருட் செல்வர்கள். 7112*
*இன்பக் கனிகள். 7413*
*இன்பத் தமிழும் இனிய நிலமும். 7467*
*இன்றைக்கு உயிரோடிருக்கிறேன். 7468*
*இன்னிசை யாழ்: விபுலாநந்தரின் யாழ் நூல் ஒரு பார்வை. 7983*
*இனப்பெருக்கம். 7362*
*இனியும் நான் இராமன்தான். 7597*
*இஸ்ரயேலின் மாமன்னன். 7551*
*இஸ்லாத்தின் அரசியல் திட்டம். 7204*
*இஸ்லாத்தின் மூலாதாரங்கள். 7147*
*இஸ்லாத்துக்கு முற்பட்டகால அரேபியா. 7923*
*இஸ்லாம் ஓர் அறிமுகம். 7148*
*இஸ்லாம் - சமூக ஒழுக்கங்கள். 7149*
*இஸ்லாம் வரலாறு. 7150*
*இஸ்லாம் வளர்த்த தமிழ். 7729*
*இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகள்: பாகம் 1. 7205*
*ஈதேனின் பாம்புகள். 7469*
*ஈழ இலக்கியம்: ஒரு விமர்சனப் பார்வை. 7984*
*ஈழத் தமிழர் கிராமிய நடனங்கள். 7237*
*ஈழத் தமிழர் வரலாறு: கி.பி.1000 வரை: தொகுதி 1. 7947*
*ஈழத்தில் ஆட்சிபுரிந்த சில தமிழ் மன்னர்கள். 7932*
*ஈழத்து இலக்கியம் நூல்களின் அறிமுகம்: பத்தி எழுத்துக்களும் பல்திரட்டுக்களும் 2. 7730*
*ஈழத்து எழுத்தாளர்கள்: ஒரு விரிவான பார்வை. 7731*
*ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் ஓர் ஆய்வு. 7036*
*ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றுக் கருத்தரங்கு. 7732*
*ஈழத்துத் திருக்கோயில்கள் வரலாறும் மரபும் பகுதி 2. 7134*
*ஈழம் தேவதைகளும் கைவிட்ட தேசம். 7937*
*ஈனக் ஆடன். 7817*
*உடல் பச்சை வானம். 7470*
*உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி. 7598*
*உதிர பாசம் அல்லது இரத்தினபவானி. 7661*
*உயர்வு உங்களதே. 7058*
*உயிர் வலி: சிறுகதைத் தொகுதி. 7599*
*உயிர்க் காற்று. 7662*
*உயிரினங்களின் இடைத் தொடர்புகள். 7363*
*உயிரினங்களுக்குத் தேவையான உணவு. 7364*
*உலக மதங்கள் 40ஐப் பற்றிய அரிய தகவல்கள். 7100*
*உலகம் பலவிதம் தொடர் 3. 7684*

உள்ளக் கமலம். 7733
உள்ளத்திலே குடியிருக்கலாமா? 7663
உள்ளும் புறமும்: சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு-2011 தொடர்பான பதிவுகள். 7734
உளநலக் கோளாறுகளின் சிகிச்சையில் மருந்துகளின் பிரயோகம். 7371
உளநலவியல். 7046
உளவளத் துணை. 7070
உளவியல் மூலக் கோட்பாடு பகுதிகள் 1-2. 7047-48
உளவியற் சிந்தனைகள். 7049
உற்றறி கோட்பாடு (Critical Theory) இலக்கியங்களை விளங்கிக் கொள்வதற்குரிய வழிமுறையாதல். 7735
உறங்கும் உண்மைகள்: ஒருயிர். 7664
உறைக்கும் உண்மைகள். 7665
ஊருக்கு நல்லது சொல்வேன். 7180
ஊருக்குத் தான். 7600
எங்கட கதைதான். 7601
எங்கும் நிறைந்த இறைவா. 7471
எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள். 7985
எண்களை வகைப்படுத்தல். 7299
எண்ணிலாக் குணமுடையோர். 7736
எண்ணை நம்புங்கள். 7094
எதிர் கொள்ளக் காத்திருத்தல். 7239
எதிர்மன்னசிங்கனின் வாழ்வும் இலக்கியமும். 7874
எதுவுமல்ல எதுவும். 7472
எப்படி வரைவது? 7392
76 கவிதைகள்: திருமலை மாணவர்களது கவிதைகள். 7473
எளிய திண்மங்கள். 7300
எளிய பொறிகள். 7346
என் ஏதேன் தோட்டம். 7474
என் சரிதை. 7906
என்ன செப்பங்கா நீ. 7475
என்ன செய்யலாம் இதற்காக? 7986
என்னைக் கவர்ந்த உலகத் தலைவர்கள். 7867
எனக்குக் கவிதை முகம். 7476
எனது கிராமத்தைத் தேடுகிறேன். 7956
எனது நிலத்தின் பயங்கரம். 7477
எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்களின் அறிவாக்கங்கள். 7879
எஸ்.பொ. அறிக்கை. 7737
ஏழாலை. 7957
ஐரோப்பிய வரலாறு: சீர்திருத்தக் காலம் முதல் தற்காலம் வரை. 7918
ஐரோப்பியப் புவியியல். 7827
ஐரோப்பியர் பார்வையில் இலங்கை. 7933
ஒப்பாரிக் கோச்சி. 7602
ஒரு குடம் கண்ணீர். 7603
ஒரு குடும்பத்தின் கதை. 7666
ஒரு சினிமாப் பைத்தியத்தின் உளறல். 7903
ஒரு தாயின் மடியில். 7667
ஒரு திறனாய்வாளரின் இலக்கியப்பார்வை. 7738
ஒரு பேராசிரியரின் வாழ்க்கையும் கல்விச் சிந்தனைகளும். 7880

*ஒரு வாசகனின் பிரதிகள். 7739*
*ஒரு வெள்ளைப் பூ சிரிக்கிறது. 7668*
*ஒரு வேரின் சுவாசம். 7740*
*ஒரே மையப் புதுமைச் சதுரங்கள் ஆக்கும் எளிய வழிமுறைகள். 7301*
*ஒழுக்குகளும் அமைப்புக்களும். 7302*
*ஒளி. 7347*
*ஒற்றை மைய உலக அரசியலில் போரும் சமாதானமும். 7186*
*ஒன்றே இனம் என்று வாழுவோம். 7427*
*ஓட்ட மின்னியல். 7348*
*ஓர் அடிமையின் விலங்கு அறுகிறது. 7604*
*ஓர் எழுதுவினைஞனின் டயரி. 7605*
*ஃ (ஆய்த எழுத்து). 7478*
*க.பொ.த (சா.தரப்) பரீட்சை 2008ம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கான வினாத்தாள் கட்டமைப்பும் மாதிரி வினாக்களும். 7221*
*கங்கையின் மைந்தன். 7552*
*கச்சத்தீவும் இந்திய மீனவரும். 7987*
*கசகறணம். 7669*
*கடவுள் படைக்காத மனிதர்கள். 7479*
*கடவுளின் நிலம். 7741*
*கடவுளைக் கொன்றுவிடு. 7480*
*கண்களில் ஏன் கங்கை. 7606*
*கண்ணின் மணி நீயெனக்கு. 7670*
*கண்ணீர் வரைந்த கோடுகள். 7481*
*கணிதப் பயிற்சி தரம் 6. 7303*
*கணிதப் பயிற்சி தரம் 8. 7304*
*கணிதப் பயிற்சி தரம் 10. 7305-06*
*கணிதப் பயிற்சி தரம் 11. 7307*
*கணிதம்: தரம் 7. பரீட்சைக்குரிய வினாவிடை முன்னோடி. 7308*
*கணிதம்: தரம் 8. புதிய பாடத்திட்டம் 2006. 7309*
*கணிதம்: பயிற்சியும் செயல்நூலும். 7310*
*கணிதம் புதிய பாடத்திட்டம் 2001ம் ஆண்டு தரம் 8. 7311*
*கணேசதீபம்: யாழ். புங்குடுதீவு, ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் நூற்றாண்டு மலர் 1910-2010. 7227*
*கதிரைமலைப் பள்ளு. 7482*
*கதைக் கனிகள். 7428*
*கந்தசஷ்டி சிந்தனைகள். 7113*
*கந்தபுராணம் தக்ஷ காண்டம்: ஆறாவது தக்ஷகாண்டம் மூலமும் உரையும். 7114*
*கந்தரசம். 7742*
*கந்தன் கருணை. 7553*
*கப்பலோட்டி-செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. 7875*
*கம்பெனியாட்சியிலும் முடியாட்சியிலும் பிரித்தானிய இந்தியாவின் வரலாறு. 7924*
*கரவை விக்னேஸ்வரா வழிவந்த ஒரு தமிழ் அறுவடை. 7881*
*கரவைக் கோவை. 7483*
*கரவையூற்று. 7882*
*கருத்தியலும் வரலாறும். 7824*
*கருத்துக் கலசம். 7484*
*கருவறையிலிருந்து கல்லறைக்கு. 7485*
*கரையோர கடல் வேட்டை. 7361*

*கல்லூரி வளர்ந்த கதை. 7228*
*கல்வாரிக் கலம்பகம். 7451*
*கல்வாரிப் பரணி. 7452*
*கல்வி ஆய்வியல். 8A05*
*கல்வியில் எழுவினாக்கள். 7222*
*கல்வியில் புதிய தடங்கள். 7223*
*கலகம். 7554*
*கலம். 7365*
*கலவை: சிறுகதைத் தொகுப்பு. 7607*
*கலாச்சார தொடர்பியலில் தலைமைத்துவம் முகாமைத்துவம் நிபுணத்துவம். 7387*
*கலாசார மறுமலர்ச்சியும் பேராண்மையும். 7176*
*கலாநிதி கைலாசபதி. 7988*
*கலியாணச் சாப்பாடு. 7439*
*கலை இலக்கியக் களஞ்சியம். 7453*
*கலை மரபில் நாடகமும் கூத்தும். 7404*
*கலை முகம்: 50ஆவது சிறப்பிதழ். 7027*
*கலைச் சுவடுகள் 1965-2005: திருமறைக் கலாமன்ற 40ஆவது ஆண்டு நிறைவு மலர். 7033*
*கலைச்சொற்றொகுதி: வரலாறும் தொல்பொருளியலும். 7825*
*கலைஞர்கள் கையேடு 2003. 7896*
*கலைப் பேரரசு ஏ.ரி.பி: அரங்கக் கலையில் ஐம்பதாண்டு. 7898*
*கலையுலகில் கால் நூற்றாண்டு. 7899*
*கவிதைப் பூம்பொழில். 7486*
*கவிமணிகள். 7487*
*களங்கம். 7555*
*களிமண் பதிவுகள் முதல் கணனிப் பதிவுகள் வரை. 7022*
*கற்பனை வளம். 7743*
*கற்பித்தல். 7224*
*கறுப்பு மழை. 7488*
*கனவு பலித்தது. 7556*
*காகங்களும் மைனாக்களும். 7608*
*காகிதப் பூவில் தேன் துளிகள். 7489*
*காட்டிலிருந்து நாட்டுக்கு வந்த கரடி. 7440*
*காத்தலும் அழித்தலும். 7794*
*காதல் பூட்டு. 7671*
*காந்தி தரிசனம். 7863*
*காயத்திரியின் பாஷைப் பயிற்சி: தரம் 4. 7270*
*கார்ள் மார்க்ஸின் இலக்கிய ஆளுமை. 7744*
*காரணமாலை. 7490*
*காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவில் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம் சிற்பத்தேர் வெள்ளோட்ட மலர் 2006. 7135*
*காலக் கண்ணாடியில் ஒரு கலை இலக்கியப் பார்வை. 7745*
*காலத்தின் காலடி: நாட்டுக் கூத்துகளின் தொகுப்பு. 7240*
*காலநிலையியலுக்கு ஓர் அறிமுகம். 7337*
*காலப் பறவைகள். 7672*
*காலமில்லாக் காலம். 7491*
*காலையும் மாலையும். 7557*
*காவிய நாயகன். 7558*
*கானல்வரி. 7673*

*கிரகித்தல். 7008*
*கிரியா யோகப் பாதை. 7375*
*கிழக்கில் ஒரு கிராமம். 7958*
*கிழக்கிலங்கைத் தமிழகம். பாகம் 1. 7959*
*கிறிஸ்து காவியம். 8A06*
*கீர்த்தனை மாலை முதலாம் பாகம். 7397*
*கு.வி. இன் 1999ம் ஆண்டின் புதிய பாடத்திட்டத்திற்கான கணிதம் செயல்நூல்: தரம் 9. 7312*
*குடியியற் கல்வி தரம் 8: வினா-விடைகள். 7828*
*குடும்பத்துள் வாழ்தல். 7233*
*குடை நடை கடை. 7441*
*குடை நிழல். 7674*
*குந்தி இருக்க ஒரு குடிநிலம். 7609*
*குமரி முதல் சென்னை வரை: 1963-1964: பயணக்கதை. 7831*
*குமரிக் கண்டம் முதல் சுமேரியா வரை தமிழர்கள் வரலாறு. 7948*
*குமாரசுவாமிப் புலவர் சரித்திரம். 7907*
*குமாரபுர வெண்பாவும் திருவூஞ்சற் பதிகமும். 7115*
*குரல் வழிக் கவிதைகள். 7492*
*குரு: சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்திட்டத்திற்குரிய படங்களும் தகவல்களும். 7214*
*குருசு முத்தண்ணையின் கிசுகிசு 100. 7746*
*குருமணி யோசவ் வாஸ்: நாட்டுக்கூத்து. 7241*
*குழந்தை உளவியல். 7050*
*குழந்தை மொழி: சிறுவர் பாடல்கள். 7414*
*குற்றமும் தண்டனையும். 7610*
*குறள் கூறும் பாலியல் கோட்பாடு. 7747*
*கூடார வாழ்க்கை. 7748*
*கூனற்பிறை. 7818*
*கேசரி தகவல் களஞ்சியம் 2011. 7009*
*கேட்கட்டும் குறளின் குரல்: தொகுதி 3. 7749*
*கேது பகவான் வழிபட்ட திருக்கேதீஸ்வரம். 7136*
*கைலாசபதி முன்னுரைகள். 7750*
*கொட்டியாரக் கதைகள். 7611*
*கொட்டியாரம்: இலக்கிய மரபு. 7960*
*கொந்தளிப்பு: குறுங்காவியம். 7585*
*கொலஸ்ட்ரோல் கட்டுப்படுத்துவது எப்படி? 7372*
*கோப்பாய் வரலாறு: பாகம் 1-2. 7961*
*கோபன் மகாதேவா சிறுகதைகளும் நாடகங்களும். 7795*
*கோபால நேசரத்தினம். 7675*
*கோபுரத்தில் குழப்பம். 7559*
*கோயில் அரங்க மரபு: பல்லவ-சோழர்கால நாடக அரங்கு. 7405*
*கோவைப்பதியில் சைவமும் தமிழும். 7962*
*சக்தியும் பிணைப்புகளும். 7349*
*சங்ககாலத் தமிழர் வாழ்வும் கலைகளும். 7751*
*சட்டங்கள். 7560*
*சட்டியும் குட்டியும் 7424*
*சடப்பொருளின் இயல்புகள். 7355*
*சடப்பொருளின் துணிக்கை இயல்பும் அணு அமைப்பும். 7350*
*சத்திய தரிசனம்: ஓர் தமிழ் நாடகம். 7561*
*சந்திரிகை. 7676*

*சப்ததீவு. 8A07*
*சம்பளம். 7197*
*சம்மாந்துறை முதல் அஸர்பைஜான் வரை. 7832*
*சமர்க்கள நாயகன் (பிரிகேடியர் பால்ராஜ் நினைவுமலர்). 7876*
*சமன்பாடுகள். 7313*
*சமனிலிகள். 7314*
*சமாதானத்திற்கான எனது எண்ணம். 7449*
*சமாதானமும் சுதந்திரக் காற்றும். 7162*
*சமாந்தரவியல்பு. 7315*
*சமுதாய வளர்ச்சி. 7163*
*சமூகக் கல்வியும் வரலாறும் புதிய பாடத்திட்டம் 2001 தரம் 8. 7164*
*சமூகச் சிற்பிகள். 7864*
*சமூகவியல் மூலக் கோட்பாடு: முதற் பகுதி. 7165*
*சமூகவியல் மூலக் கோட்பாடு: இரண்டாம் பகுதி. 7166*
*சர்வகலாசாலைத் தமிழ்ப் பத்திரிகை: தொகுதி க (1). 7229*
*சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 இலங்கை: கட்டுரைக் கோவை. 7752*
*சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 இலங்கை: சிறப்பு மலர். 7753*
*சரஸ்வதி பாமாலை. 7116*
*சரித்திரம் தொடர்கிறது. 7677*
*சருகுகள். 7493*
*சனநாயகச் சிந்தனைகள். 7194*
*சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பான சட்டம். 7207*
*சாதனையாளர். 7429*
*சாதாரண பின்னம். 7316*
*சாந்தனின் எழுத்துலகம். 7796*
*சாந்தாராஜின் சிறுகதைகள். 7612*
*சாம்பல் பறவைகள்: குறுநாவல். 7678*
*சாம்பல் மேடு. 7562*
*சாயி வந்தனன் வாழ்வு தந்தனன். 7851*
*சாரத்தியம்: சவால்களும் சாமர்த்தியமும். 7231*
*சிங்கத்தின் நகங்களும் அசோகச்சக்கரமும்: ஈழம்-காலச்சுவடு பதிவுகள் 1988-2008. 7989*
*சிங்களப் படையை வெளியேற்றுக. 7938*
*சிசுபால சரிதம். 7754*
*சித்த மருந்தியலும் மருந்தாக்கவியலும். 7380*
*சித்தாந்த சைவ சங்கிரகம். 7078*
*சித்தாந்த சைவ நெறித் திறவுகோல். 7079*
*சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள். 7080*
*சித்தாந்தச் செழும் புதையல்கள். 7081*
*சிதறிய முத்துக்கள்: பொன்மொழிகளின் திரட்டு. 7256*
*சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும். 7494*
*சிந்தனை செய். 7059*
*சிந்தனை வளம். 7755*
*சிந்தனைச் சரம்: பொதுக் கவிதையும் விமர்சனக் கலையும். 7756*
*சிந்தனைச் சோலை. 7797*
*சிந்தை இனிக்கும் செல்வம். 7060*
*சிம்சோன் முதல் லேவியர் வரை: நீதித் தலைவர்கள் 2. 7563*
*சிரிக்கும் செவ்வந்திப்பூ: நாவல். 7679*
*சிலப்பதிகார யாத்திரை. 7757*

*சிலம்பின் செய்தி. 7758*
*சிலுவை உலா: பக்தி, இசை, உரை நாடகம். 7564*
*சிவஅமுதம்: சமயக் கட்டுரைத் தொகுப்பு. 7117*
*சிவசம்புப் புலவர் சரித்திரம். 7908*
*சிவசம்புப் புலவர் பிரபந்தத் திரட்டு: முதற் பாகம். 7454*
*சிவஞானபோதச் சிந்தனை. 7082*
*சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்வியற் பணிகள். 7852*
*சிறகு முளைத்த தீயாக... 7495*
*சிறீ அளித்த சிறை. 8A08*
*சிறீலங்காவின் கொலைக்களம். 7990*
*சிறுவர் அரங்கு. 7406*
*சிறுவர் இலக்கியம்: இசைக் கவிதைகள். 7415*
*சிறுவரும் அவர்தம் அறிவுசார் சாதனங்களும். 7448*
*சின்னச் சின்ன நாடகங்கள். 7425*
*சின்னச் சின்னக் கதைகள். 7430*
*சின்னஞ்சிறு கிளியே. 7416*
*சின்னதாய் ஓர் ஊடல். 7496*
*சீமந்தனி புராண மூலமும் உரைநடையும். 7455*
*சுகராகம்: சிறப்பு மலர் 2002. 7379*
*சுட்ட பழமும் சுடாத மண்ணும். 7900*
*சுட்டிகளும் மடக்கைகளும். 7317*
*சுடுகின்ற மலர்கள். 7497*
*சுவடு: தினக்குரல் 15ஆவது அகவை விஷேட மலர். 7037*
*சுவடுகள். 7868*
*சுவாசித்தலும் கழிவகற்றலும். 7366*
*சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்: தொகுதி 2. 7061*
*சுழலும் தமிழ் உலகம். 7759*
*சுற்றாடற் கல்வி: தரம் 6. 7215*
*சுற்றாடற் கல்வி: பயிற்சியும் செயல்நூலும்: தரம் 6. 7216*
*சூடாமணி உள்ளமுடையான்: மூலமும் உரையும். 7760*
*சூழல் உயிர்க்கோளம் மாசடைதல். 7217*
*செந்தமிழ் வளம்பெற வழிகள். 7761*
*செந்தமிழ்க் கருவூலம். 7498*
*செந்தமிழ்ச் செல்வம்: மூலமும் உரையும். 7499*
*செந்தமிழ்ப் பூம்பொழில். 7762*
*செந்தமிழ்ப் பூம்பொழில். 7763*
*செந்நீரும் கண்ணீரும். 7613*
*செம்மாதுளம் பூ. 7500*
*செல்லக்கிளி. 7680*
*செவ்வியல் தமிழ்: வரலாறும் பண்புகளும். 7764*
*சேதன இரசாயனம். 7356*
*சேர் பொன்னம்பலம் அருணாசலம். 7869*
*சேவை சந்தைப்படுத்தல்: ஓர் அறிமுகம். 7232*
*சைவ சமயம் ஓர் அறிமுகம். 7118*
*சைவ சமயம்: கல்விப்பொதுத் தராதர (சாதாரண)த் தேர்வுக்குரியது. 7119*
*சைவ சித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படைகள். 7083*
*சைவ சித்தாந்த சங்கிரகம். 8A09*
*சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி. 7084*

சைவ சித்தாந்த மெய்ப்பொருளியல். 7085
சைவ சித்தாந்த விளக்க விருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள். 7086
சைவ சித்தாந்தத் தெளிவு. 7087
சைவ சித்தாந்தம். 7088
சைவ ஞான விளக்கம். 7089
சைவ நீதியும் சமய வாழ்வும். 7120
சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரம். 7853
சொந்தங்கள். 8A10
சொல்லாமல் சொல்லிவிட்டாள். 7614
சோதிட வாசகம்: முதலாம் புத்தகம். 7095
சோதிட விளக்க வினாவிடை என்னும் பெரியசுந்தர சேகரம். 7096
சௌந்தர்யம். 7765
ஞாயிற்றுத் தொகுதியும் உடுக்களும். 7338
ஞான ஒளிமாலை: ஞானப் பாக்கள். 7151
ஞானச்சுடர். 7854
ஞானசவுந்தரி: தென்மோடி நாடகம். 7242
ஞானப்பள்ளு. 7103
ஞானம்: சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 இலங்கை சிறப்பிதழ். 7028
ஞானவிளக்கு. 7121
Tamillain Barre Syndromeமும் தமிழ் சமூகத்திற்கான புதிய அரசியல் கலாசாரத்தின் அவசியமும். 7167
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் : தொகுதி 2-3. 7015-16
தகவல் தொழில்நுட்ப கலைச்சொல் அகரமுதலி. 7017
தகவல் வள முகாமைத்துவம். 7023
தசம பின்னம். 7318
தத்துவ உலகில் தடம்பதித்த பண்டிதர் மு.கந்தையா. 7847
தத்துவ ஞான சிந்தனையும் வினைப்பயன் பதிவுகளும் ஆன்மா பிறவாமை அடைதலும். 7041
தத்துவக் கதைகள். 7615
தத்தை விடுதூது . 7681
தம்பி ஜெயத்திற்கு. 7877
தம்பையா சிதம்பரப்பிள்ளை சமதர்மக் கூட்டுறவுச் சிற்பி. 7883
தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும். 7407
தமிழ் ஆங்கிலம் பிரெஞ்சு சொல் வங்கி. 7261
தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம். 7766
தமிழ் உறுப்பெழுத்து வழிகாட்டி 1-4. 7271-74
தமிழ் நெடுங்கணக்கு. 7263
தமிழ் பேச்சுப் பயிற்சி. 7264
தமிழ் மணிக் கீதம். 7501
தமிழ் மொழி விளக்கக் கைந்நூல். 7265
தமிழ் மொழியும் இலக்கியமும்: செயல்நூல் தரம் 6. 7275
தமிழ் மொழியும் இலக்கியமும்: செயல்நூல் தரம் 7. 7276-77
தமிழ் மொழியும் இலக்கியமும்: செயல்நூல் தரம் 8. 7278
தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 6: பயிற்சியும் செயல்நெறிகளும். 7279
தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 8. 7280
தமிழ் மொழியும் இலக்கியமும்: தேர்ச்சிசார் மதிப்பீட்டுப் பயிற்சி தரம் 8. 7281
தமிழ் வளர்த்த கிறிஸ்தவர். 7894
தமிழ்க் கவிதைப் பாரம்பரியம் 7767
தமிழ்ச் செல்வம்: இலக்கியக் கட்டுரைகள். 7768

*தமிழ்ச் சொற் பிறப்பாராய்ச்சி. 7266*
*தமிழ்த் தேசியத்தின் பாதையில் ஈழவேந்தனின் பதிவுகள். 7870*
*தமிழ்ப் பண்பாட்டில் சினிமா. 7411*
*தமிழகத் தனிப்பெருந் தலைநகர்: காந்தக் கோட்டையார் காந்தீக சக்தி. 7963*
*தமிழகம்-இலங்கை ஊர்ப்பெயர்கள்: ஓர் ஒப்பாய்வு. 7991*
*தமிழர் தகவல்: 20ஆவது ஆண்டு மலர். 7029*
*தமிழர் தகவல்: 21ஆவது ஆண்டு மலர்: இளந்தை மலர். 7030*
*தமிழில் அகத்திணைக் கவிதை மரபு. 7769*
*தமிழினப் படுகொலைகள் 1956-2008. 7939*
*தமிழீழப் பணியில் பெருங்கவிக்கோ. 7992*
*தமிழுக்கும் அமுதென்று பேர். 7909*
*தமிழும் முஸ்லிம்களும். 7770*
*தர்மவதிகள். 7771*
*தரம் 5: புலமைப் பரிசில் பரீட்சைக்கு 1825 பயிற்சி வினாக்கள். 7010*
*தரம் 7: குடியுரிமைக் கல்வி, புவியியல். 7829*
*தரம் 10: தமிழ்மொழியும் இலக்கியமும். 7282*
*தரிசனங்கள், நிலவின் நிழலில். 7682*
*தருக்க சங்கிரகம், நியாய போதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம். 7073*
*தவறிப் போனவன் கதை. 7683*
*தள உருவங்களும் பரப்புகளுடன் தொடர்பான தேற்றங்களும். 7319*
*தளவுருக்களின் அளவைகள். 7320*
*தனக்குள் தானே. 7062*
*தனித் தமிழியக்கத்தின் அரசியற் பின்னணி. 7772*
*தனித்துத் தெரியும் திசை: திசையின் சிறுகதைப் பங்களிப்பு ஒரு மதிப்பீடு. 7773*
*தாக்க வீதமும் சமநிலையும். 7357*
*தாமோதரம். 7774*
*தாய் மடி தேடி. 7616*
*தாய்லாந்தின் தலைநகரிலே. 7833*
*தாயகம் நோக்கிய பயணம்: இரண்டாம் பாகம். 7819*
*தாவரத்தின் கட்டமைப்பும் தொழிற்பாடும். 7369*
*திசை கொண்ட எண்கள். 7321*
*திண்மங்களின் அளவையியல். 7322*
*திராவிடப் பிரகாசிகை. 7267*
*திரிகோண கணிதம். 7323*
*திரு. இராமநாதனது இலங்கைச் சோனகர் இன வரலாறு எனும் ஆராய்ச்சிக் கட்டுரைக்கான ஒரு திறனாய்வு. 7949*
*திருக்குறள் அதிகாரச் சாரமாகிய திருத்தாலாட்டு. 7502*
*திருக்கேதீச்சர மான்மியம் 5: நித்திய நைமித்திய காண்டம். 7137*
*திருக்கேதீஸ்வரம் திருவாசகம் ஸ்ரீ மத் சபாரத்தினம் சுவாமிகள் தொன்னூறாவது ஜயந்தி தினத்தை முன்னிட்டு எழுதிய நூல். 7855*
*திருகோணமலைப் பிரதேச நாடக அரங்கப் பாரம்பரியம். 7408*
*திருச்செல்வர் காவியம். 7586*
*திருமணம். 7235*
*திருமறைக் காவலன். 7565*
*திருமறையில் சிறுகதைகள். 7617*
*திருமுறைப் பண்ணிசைத் திறனாய்வு. 7122*
*திருவருட்பயன் கதைகள்: குறள், உரை, விளக்கம், கதைகள். 7618*
*திறனாய்வின் புதிய திசைகள். 7775*

தீதும் நன்றும். 7776
தீர்க்க வர்ணம்: பல்சுவைப் பத்திகளின் தொகுப்பு. 7798
துணிச்சலான தோழர்கள். 7442
துரத்தும் நிழல்களின் யுகம். 7503
துரைரத்தினம்-நேசமணி (உலகம் பலவிதம் தொடர் 3). 7684
துறைக்காரன். 7685
தூர விலகும் சொந்தங்கள். 7619
தூறல்கள். 7799
தெய்வ சந்நிதி: அச்செழு கந்தையா வெற்றிவேலு நினைவிதழ். 7123
தெய்வத் திருமகளின் வாழ்வும் பணிகளும். 7856
தெளிவான பிரெஞ்சு இலக்கணம்: வினைச்சொல். 7262
தெளிவு. 7686
தென் இந்திய வரலாறு: வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் விசயநகரின் வீழ்ச்சிவரை. 7925
தென் கிழக்காசியாவில் இந்துப் பண்பாடு. 7172
தென் கிழக்கு முஸ்லிங்களின் பூர்வீக வரலாறு. 7950
தென்றலின் வேகம். 7504
தென்றலும் புயலும். 7687
தென்னகத்தில் என்னகத்தார். 7834
தேசியம் அடையாளம் கம்யூனிசம். 7196
தேடலும் விமர்சனங்களும். 7800
தேடலே வாழ்க்கையாய்: ஒரு ஈழத்து நூலகரின் மனப்பதிவுகள். 7777
தேடிக் குவித்த திரவியங்கள்: சிந்தனைத் தொகுப்பு. 7801
தேர்ந்த தமிழ்ச் சிறுகதைகள். 7620
தொட்டிப் பூ. 7505
தொடர்பாடலுக்கான தகவல் தொழில்நுட்பம். 7018
தொடரும் தலைமுறைகள். 7621
தொடைகள். 7324
தொப்புள்கொடி: நாவல். 7688
தொலைவில் ஒரு கனவு. 7622
தோழர் மகாஜனன் நாகலிங்கம் சிறிகெங்காதரன் மணிவிழா மலர் 2011. 7865
தொழுவது எவ்வாறு. 7152
தோற்றுப் போனவர்களின் பாடல். 7506
நட்டுமை. 8A11
நட்புக்கு இலக்கணம். 7153
நடராஜ தரிசனம்: திரு கி. நடராசா அவர்களின் மணிவிழா மலர். 7884
நடைமுறைக்கேற்ற இஸ்லாம் பாகம் 2. 7154
நபியமுதம்: (பாவண்ணத் தொகுதி). 7507
நம் மக்களின் மனக்கணக்கும் மூளைக்கு விருந்தும். 7257
நம்பியகவல்: பாட்டுங் குறிப்புரையும். 7124
நம்ம ஊரவங்க: பாகம் 1. 7843
நம்மைப் பற்றிய கவிதை. 7508
நமசிவாயம் அல்லது நான் யார் என்னும் ஓர் நவீன நாடகம். 7566
நமது செல்வம். 7417
நல்லவனாவேன். 7418
நல்லூர் சின்னத்தம்பிப் புலவர். 7910
நல்லூரான் அருமருந்து. 7125
நல்லை நகர் தந்த நாவலர். 7857

*நல்வாழ்வு தரும் யோகக்கலை. 7376*
*நவாலியூரான்: பவளவிழா மலர். 7901*
*நவாலியூரானின் கலை இலக்கியப் பணிகள். 7902*
*நவீன அரசியல் சிந்தனை. 7181*
*நறுமலர் மாலை. 7778*
*நாடக அனுபவங்கள். 7409*
*நாடகமும் அரங்கியலும். 7410*
*நாணயம்-நாவல். 7689*
*நாய்க்குட்டி ஊர்வலம். 7426*
*நாவலர் உரைத் திறன். 7858*
*நாவலர் பணிகள். 7859*
*நாவலர் பெருமான். 7993*
*நாவலர் வழியில் தமிழ் அறிஞர். 7860*
*நாவேந்தன் நினைவலைகள். 8A12*
*நாளெந்த நாளோ?. 7509*
*நான் சாகமாட்டேன். 7820*
*நான் நிழலானால். 7623*
*நான் மூன்று சக்கரக்காரன் 7419*
*நிசங்களின் சத்தம். 7510*
*நிதங்களின் தரிசனம்: பகுதி 1-2. 7838-39*
*நிமிர்வு. 7624*
*நிலஅளவையியல்: ஓர்அறிமுகம். 7341*
*நிலக்கிளி, வட்டம்பூ. 7690*
*நிலவின் நிழலில். 7682*
*நிலவும் சுடும்: சிறுகதைத் தொகுப்பு. 7625*
*நிழல் ஒதுங்கிய நிஜங்கள். 7511*
*நிழலோடு நினைவுகள். 7512*
*நிறங்கள்: சிறுகதைத் தொகுப்பு. 7626*
*நிறங்கள்: சிறுகதைத் தொகுதி-1. 7627*
*நினைக்க நினைக்க. 7779*
*நினைவுகள் மடிவதில்லை: சிறுகதைத் தொகுப்பு. 7628*
*நினைவுச் சரங்கள். 7911*
*நினைவுரு: அமரர் பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா. 7885*
*நீ தான் என் காதலி. 7629*
*நீங்களும் எழுத்தாளராகலாம். 7780*
*நீண்ட ஒடுங்கிய சாலைகள்: ஒரு கவியோவியப் படைப்பு. 7814*
*நீர்மூழ்கி நீரில் மூழ்கி. 7691*
*நீலாவணன் காவியங்கள். 7587*
*நூல் அறுந்த பட்டங்கள்: நாவல். 7692*
*நூல்தேட்டம்: தொகுதி 6. 7019*
*நூல்தேட்டம் தொகுதி 7. 7020*
*நூலக அபிவிருத்தி: ஒரு பயில் நோக்கு. 7024*
*நூலக முகாமைத்துவ நுட்பங்கள். 7025*
*நூலகப் பகுப்பாக்கம்: நூலகர் கைநூல். 7026*
*நூற்றாண்டுகளில் தமிழ். 7781*
*நூற்று வீதத்தைப் பயன்படுத்துதல். 7325*
*நூற்று வீதம். 7326*
*நெஞ்சோடு கொஞ்சும் நாட்டார் பாடல்கள். 7243*

*நெப்போலியன் காலத்திலிருந்து ஐரோப்பா. 7919*
*நெருப்பாறு: குறுநாவல்கள். 7693*
*நெருப்புக்கு இடையே நீந்தும் நிலாக்கள்: காவியக் கவிதைகள். 7588*
*நெறியும் நிலமும். 7567*
*நேர்கோட்டு உருக்கள். 7327*
*பங்காண்மைச் சட்டம். 7203*
*பஞ்சாமிர்தப் பாகு. 7802*
*பட்டணத்துப் பிள்ளையார் அருளிச்செய்த திருப்பாடற்றிரட்டு: மூலம். 7126*
*பண் உடைந்துபோன கடலாள். 7513*
*பண்டைத் தமிழரும் சமுதாயச் சீர்கேடும். 7782*
*பண்பாட்டுப் பொற்கனிகள்: பின் காலனியப் பார்வைகள். 7783*
*பத்தி எழுத்துக்களும் பல்திரட்டுக்களும் 1: திறனாய்வுப் பார்வைகள். 7784*
*பத்தி எழுத்துக்களும் பல்திரட்டுக்களும் 2. 7730*
*19ம் 20ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா. 7917*
*பதுங்குகுழியில் பிறந்த குழந்தை. 7514*
*பயனிலைத் தருக்கம்: ஓர் அறிமுகம். 7074*
*பரகிதம். 7097*
*பரத நாட்டியம் கற்றுக்கொள்ளுங்கள். 7401*
*பரம்பரையும் சூழலும். 7367*
*பரமநாதம்: அறிவை அறிவோம். 7011*
*பரிசுக் கதைகள். 7630*
*பரீட்சைகளுக்கு தயாராவது எப்படி?. 7225*
*பருநிலை மற்றும் நுண்பாகப் பொருளியல் கோட்பாடுகள். 7190*
*பல்கோணிகளும் முக்கோணிகளும். 7328*
*பலஸ்தீனம்: ஒரு சமகால நோக்கு. 7975*
*பழமொழிகளும் பொன்மொழிகளும். 7258*
*பள்ளி மாணவர்களுக்கான நிலவரை: உலகம். 7835*
*பள்ளி மாணவர்களுக்கான நிலவரை: திருநெல்வேலி மாவட்டம். 7836*
*பன்னிரு திருமுறை அமுதம். 7127*
*பனி நிலவு. 7694*
*பனிக்குள் நெருப்பு. 7785*
*பனிப்படலத் தாமரை. 7515*
*பஷாரத். 7034*
*பா. 7516*
*பாட்டுத் திறத்தாலே: சிறுகதைகள். 7631*
*பாடலும் ஆடலும். 7420*
*பாதை மாறிய பயணங்கள்: நாவல். 7695*
*பாப்பாக் கதைகள் பாகம் 1. 7431*
*பாப்பாப்பா. 8A13*
*பாரதி பாடிய பராசக்தி. 7786*
*பாரதிதாசன் உள்ளம். 7787*
*பாராமுகங்கள்: சில பார்வைகள். 7803*
*பாராயணத் தோத்திரத் திரட்டு. 7128*
*பாலர் செயல் மலர். 7283*
*பாலர் பராமரிப்பு. 7382*
*பாலைவனப் புதல்வர்கள். 7568*
*பாழ் நகரத்தின் பொழுது. 7517*
*பியாஜேயும் அறிகை உளவியலும். 7051*

*பிரகாசம்: அரச ஊழியர்களது இலக்கிய ஆக்கங்கள் 2010. 7804*
*பிரசங்கரத்தின தீபம் முதற் பாகம். 7090*
*பிரதேச சபையும் மலையக மக்களும். 7209*
*பிரமிள் படைப்புகள்: சிறுகதைகள், குறுநாவல்கள், நாடகங்கள். 7805*
*பிரயோக உளவியல் 2. 7052*
*பிராணிகள் கூறும் அறிவியல் கதைகள். 7432*
*பிரித்தானிய வரவுசெலவுத்திட்ட முறை. 7198*
*பிரித்தானியத் தீவுகளின் பொருளாதார வரலாறு. 7921*
*பிரிந்தவர் பேசினால்: சிறுகதைகள். 7632*
*பிரியமான சினேகிதி. 7633*
*பிள்ளைக் குணம். 7383*
*பிள்ளைகளின் அன்பு நலன் கருதி. 7384*
*பிள்ளைப் பாட்டு. 7421*
*பிற்கால இலக்கண மாற்றங்கள் (எழுத்து). 7268*
*பிறந்த மண்: சிறுவர் கதைகள் (பகுதி 2). 7433*
*பின்பற்றப்பட வேண்டிய சைவ சமய தத்துவங்கள். 8A14*
*பீலிக்கரை: சிறுகதைகள். 7634*
*புத்தளம் பிரதேச புலவர்கள். 7912*
*புத்தனின் பெயரால்: திரைப்பட சாட்சியம். 7994*
*புத்தாயிரத்தில் தமிழ்க்களம்: தேர்ந்தெடுக்கப்பட்ட காலச்சுவடு நேர்காணல்கள் 2004-2009. 7995*
*புதய்யல் கவிதய்கள். 7518*
*புதிய சித்திரக்கலை. 7393*
*புதிய தொனி. 7519*
*புதிய பாதை (கவிதைகள்): இளைஞர் இலக்கியம். 7520*
*புதிய பூமி. 7569*
*புதிய மேய்ப்பன். 7570*
*புதிய வீட்டில்: சிறுகதைத் தொகுப்பு. 7635*
*புதியவர்கள்: சிறுகதைகள். 7636*
*புதுமாத்தளன் சோகங்களுக்கு புதுமருந்து. 7063*
*புதுயுகம் பிறக்கிறது. 8A15*
*புதுவை-ஈழம் இலக்கிய உறவுகள். 7996*
*புலம் பெயரும் மண்வாசம். 7951*
*புலமைப் பரிசில் புதிய வெளிச்சம் 2009: கருத்தரங்கு வழிகாட்டிக் குறிப்பேடுகளும் பயிற்சிகளும். 7012*
*புவியியல் மூல தத்துவங்கள்: பௌதிகவியலும் பண்பாட்டியலும். 7360*
*புள்ளிவிபரவியலும் நிகழ்தகவும். 7329*
*புறப்பாடு. 7571*
*புன்னகை. 7035*
*பூகோளம் வெப்பமடைதல். 7218*
*பூசலும் புகழும். 7572*
*பூந்துணர்: தொகுப்பு மலர் 2010. 7806*
*பூபாள ராகங்கள்: சிறுகதைத் தொகுதி, 2005. 7637*
*பூமிக்கடியில் வானம். 7521*
*பூனைக்கு மணி கட்டிய எலி. 7434*
*பூஜைக்கு வந்த மலர். 7696*
*பெண் பார்க்கப் போகலாமா? 7638*
*பெண்களின் சுகமான வாழ்வுக்கு வழிகாட்டும் யோகாசனங்கள். 7377*

*பெண்களுக்கான ஐக்கிய நாடுகள் தசாப்தம்: இலங்கையிலுள்ள பெண்களின் முன்னேற்றமும் சாதனைகளும். 7174*
*பெயரிடாத நட்சத்திரங்கள். 7522*
*பெரிய பிரித்தானியாவில் ஒரு நூற்றாண்டுக்காலப் பொருளாதார அபிவிருத்தி 1840-1940. 7191*
*பெரியபுராணம் காட்டும் வாழ்வியல். 7091*
*பெரியாஸ்பத்திரியில் இந்திரன். 7697*
*பெருநிலம்: கவிதைகள். 7523*
*பெலிக்கன் உலக வரலாறு: தற்காலப் பிரான்ஸின் வரலாறு தொகுதி 1. 7922*
*பெற்றோர்களுக்கு. 7385*
*பெற்றோரும் கல்வியும். 7226*
*பெறுமதிக் கொள்கை. 7192*
*பேசும் பொம்மைகள். 7443*
*பேராசிரியர் க. கைலாசபதி- சமூக மாற்றத்துக்கான இயங்காற்றல். 7886*
*பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி ஒரு புலமை சகாப்தம். 7887*
*பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களின் மணிவிழா மலர். 7888*
*பேராசிரியர் மருத்துவ கலாநிதி அ.சின்னத்தம்பி அவர்கள் நினைவுப் பேருரை. 7895*
*பேராசிரியர் முனைவர் சபா ஜெயராசா விழா வாழ்த்து மலர். 7889*
*பேராதனை: அரங்க அளிக்கைகள். 7573*
*பைதகரசுத் தேற்றம். 7330*
*பொது அறிவு:* G.K.for all *2009. 7013*
*பொது அறிவு பொக்கிஷம். 7014*
*பொது உளவியல்: ஓர் அறிமுகம். 7053*
*பொதுக் காரணிகளில் பெரியது. 7524*
*பொதுசன சேவையில் பால்நிலையைப் பிரதானப்படுத்தல். 7210*
*பொம்மை வண்டி. 7816*
*பொய்த் தூக்கங்கள். 7639*
*பொருளாதாரப் புள்ளிவிவரவியல். 7177*
*பொருளாதாரம் ஆரம்ப ஆராய்ச்சி. 7193*
*போர்க் குற்றவாளி: இலங்கையில் போர்க் குற்றங்கள் ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கை. 7997*
*போர்ப்பறை. 7807*
*போரின் மறுபக்கம்: ஈழ அகதியின் துயர வரலாறு. 7940*
*போருக்கப்பால் மனிதநேயம் தேடல். 7941*
*போரும் வாழ்வும்: ஈழம்-காலச்சுவடு பதிவுகள் 2008-2009. 7942*
*மக்கத்து மலரே மதீனத்து மணமே. 7525*
*மக்கள் பிரதமர் ஸ்ரீமாவோ. 7871*
*மகாகவி தாகூரின் தீங்கனிச் சோலை. 7815*
*மகாகுரு சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் (கைலாச தேசிகர்) அவர்களின் 75ஆம் ஆண்டு பூர்த்தி வைர விழா மலர். 7861*
*மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழி. 7064*
*மகிழ்ச்சியின் இரகசியம். 7065*
*மகிழ்வுடன். 7071*
*மங்கை சீதா. 7698*
*மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள். 7244*
*மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும். 7964*
*மட்டக்களப்பு மகாநாடு நினைவுமலர். 7965*
*மட்டக்களப்பு மாநில உபகதைகள். 7245*
*மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள் பாகம் 2. 7966*

*மட்டக்களப்பு வாழ்வியல் தடங்களில் ஆசிரியர் சிரோமணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம். 7890*
*மண் போற்றும் விண்மீன்கள். 7526*
*மண் வாசனைக் கவிதைகள். 7527*
*மண்ணின் மைந்தர்கள்: சிறீ விக்கிரம இராசசிங்கன் நாட்டுக்கூத்து. 7246*
*மண்ணுக்கேற்ற பொண்ணு: சிறுகதைகள். 7640*
*மண்ணே சாட்சி. 7574*
*மணப்பெண். 7575*
*மணமும் விதியும் - நாவல். 7699*
*மணிமகுடம். 7700*
*மத்திய கிழக்கில் இருந்து மட்டக்களப்பு வரை. 7952*
*மத்திய பிரதேச இஸ்லாமியக் குடியிருப்புகள்: பாகம் 1. 7967*
*மதப் பண்பாட்டின் கோலங்களையும் கருத்தியலையும் கட்டவிழ்க்கும் ஒரு பால்நிலை நோக்கு. 7168*
*மதமாற்றம்: ஓர் ஒப்பியல் சமய ஆய்வு. 7101*
*மயில்: இரு நாடகங்கள். 7576*
*மரணம் என் தேசத்தின் உயிர். 7528*
*மரணித்த மனிதம். 7529*
*மருத்துவக் களஞ்சியம். 7373*
*மலர்ந்த வாழ்வு. 7530*
*மலரும் மொட்டுக்கள். 7422*
*மலைநாட்டு தொழிலாளர் பாட்டு. 7247*
*மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும். 7236*
*மலையாள நாடும் மட்டக்களப்பும். 7968*
*மழையை மொழிதல். 7531*
*மறுமலர்ச்சித் தந்தை: சித்தி லெவ்வை வாழ்க்கை வரலாறு. 7866*
*மறை அருவித் துளிகள். 7104*
*மன்னார் நாட்டுப் பாடல்கள். 7248*
*மன உளைச்சல். 7054*
*மனக்கேணி: சிறுகதைத் தொகுப்பு. 7641*
*மனசு* Fury of Love. *7701*
*மனத்திரை மேகங்கள். 7532*
*மனதில் உறுதி வேண்டும்: சிறுகதைகள். 7642*
*மனதில் மலர்ந்தவை-1: இலக்கிய இலக்கணக் கட்டுரைகள் தொகுப்பு. 7788*
*மனித உடலின் ஆதாரம் அசைவு இடப்பெயர்ச்சி. 7368*
*மனித நடத்தையைப் புரிந்துகொள்ளல். 7066*
*மனோலயம்: வீ.ஏ.மனோரஞ்சிதன் பற்றிய நினைவுகள். 7897*
*மஸ்ஜிதுகள். 7155*
*மஹாகவி து. உருத்திரமூர்த்தி நினைவுமலர். 7913*
*மாங்கனி: சிறுவர் பாடல்கள். 7423*
*மாத்தளை மாவட்ட முஸ்லிம்கள்: வரலாறும் பாரம்பரியமும். 7969*
*மாயக்கிழவி. 7444*
*மாயத் தோற்றம். 7643*
*மார்க்க, மருத்துவ ஒளியில் புகையும் புகைத்தலும்: ஒரு தீர்ப்பு. 7156*
*மாரியம்மன் மான்மியம். 7129*
*மாவீரன் சங்கிலியன்: நாட்டுக்கூத்து. 7249*
*மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்: ஓர் விவரணக் கருத்துரை. 7212*
*மாறுபட்ட சூழலில் வேறுபட்ட மனிதர்கள்: சிறுகதைகள். 7644*

*மானத் தமிழ் மறவன்: சங்கிலியன் கூத்து. 7250*
*மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மான்மியம். 7138*
*மானுட வாழ்வின் மகத்துவம். 7067*
*மானுடம் பாடும் வானம்பாடி: கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 40 ஆண்டு கால கவிதைப் பயணம். 7914*
*மின்னிரசாயனம். 7358*
*மீண்டு வந்த நாட்கள். 7533*
*மீண்டும் துளிர்ப்போம். 7645*
*மீனாட்சி: நவீனம். 7702*
*முக்கியஸ்தர்களின் முகவரிகள்.  7844*
*முக்கூடல்: சிறுகதைகள். 7646*
*முகங்கள். 7647*
*முகமூடி செய்பவள்: கவிதைகள். 7534*
*முகாமைத்துவத் தத்துவங்கள். 7388*
*முகில்களின் மீது நெருப்பு: சந்தானம் ஓவியங்கள். 7998*
*முகுந்தனின் கதை. 7703*
*முடிவில்லாத ஆரம்பங்கள். 7704*
*முத்துக்குமார கவிராசர் பிரபந்தத் திரட்டு. 7535*
*முதுமையில் ஆரோக்கியம்.  7374*
*முப்பால்: திருக்குறள் மாநாட்டுச் சிறப்பு மலர்.  7789*
*முயலாரின் சாகசங்கள்: சிறுவர் நவீனம். 7445*
*முரண்பாடும் சமாதானமும்: ஓர் அறிமுகம். 7182*
*முருகேச பண்டிதர் பிரபந்தத் திரட்டு 1829-1900.  7130*
*முழுக் காதல். 7536*
*முள்முடி மன்னர்கள்.  7705*
*முற்போக்கு இலக்கிய எழுச்சி: நான்கு முன்னோடி முற்போக்கு எழுத்தாளர்கள். 7790*
*முற்போக்கு இலக்கியச் செம்மல்கள். 8A16*
*முறைசார் நிறுவல். 7331*
*முன்னோர் சொன்ன கதைகள். 7648*
*முஸ்லிம் பூர்வீகம். 7953*
*முஸ்லிம் பெண்களும் அரசியல் தலைமைத்துவமும். 7183*
*முஸ்லிம்கள் ஐக்கியப்படுவார்களா? 7157*
*முஸ்லிமாக வாழ்வது எவ்வாறு?  7158*
*முஸ்லீம் கதைமலர்: ஈழத்து முஸ்லீம் எழுத்தாளர்களின் சிறுகதைகள். 7649*
*மூவிராசாக்கள் நாடகம். 7251*
*மூன்றாம் சிலுவை. 7706*
*மூன்றாவது கண்: பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களது வாழ்க்கைச் சுருக்கம். 7915*
*மெய்யியல்: ஓர் அறிமுகம். 7042*
*மெய்யியலும் சமயமும். 7043*
*மெய்வல்லுநர் விளையாட்டுக்கள். 7412*
*மெல்ல இருள் இனி விலகும். 7707*
*மேகதூதக் காரிகை. 7811*
*மேலைத்தேய கீழைத்தேய மெய்யியல் பகுதி 1. வினாவிடை 350. 7044*
*மேன்மக்கள் சரித்திரம். 7845*
*மொழி என்பது என்ன? 7259*
*மௌன தவமுனிவர் பொ.கைலாசபதி அவர்களின் தேர்ந்தெடுத்த சிந்தனைகள். 7092*
*மௌனப் பார்வை: நாவல். 7708*
*மௌனமாய் இருக்க முடியாமல்: கவிதைத் தொகுப்பு. 7537*

*யாதும்: கேளிர் ஒன்றியம், குளிர்கால ஒன்றுகூடல் சிறப்பிதழ் 2010. 7970*
*யாப்பினை ஆய்ந்த சிறப்பாணைக் குழுவின் அறிக்கை: தொனமூர் அறிக்கை. 7208*
*யார் உயர்ந்தவர்கள்: ஆண்களா பெண்களா? 7234*
*யாரிந்த வேடர்? 8A17*
*யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர்: 1911-2011. 7230*
*யாழ்ப்பாண இராச்சியம்: ஒரு சுருக்க வரலாறு. 7971*
*யாழ்ப்பாண உத்தியோகர்லக்ஷணக் கும்மி & யாழ்ப்பாண தேசவழமை (தமிழ் வடிவம்). 7252*
*யாழ்ப்பாண தென்மோடி கூத்து மரபு: இசை மெட்டுக்கள். 7398*
*யாழ்ப்பாண நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் சரித்திரச் சுருக்கமும் அவர்களியற்றியருளிய தனிப்பா மாலையும். 7862*
*யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற வெள்ளிவிழா மலர். 7213*
*யாழ்ப்பாணச் சரித்திரம். 7972*
*யாழ்ப்பாணத்துப் பிற்காலச் சுவரோவியங்கள். 7394*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக ஏட்டுச் சுவடிகள் பட்டியல். 7031*
*யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயச் சித்திரத் தேர்த் திருமலர். 7139*
*யூதா முதல் அப்தோன் வரை: நீதித் தலைவர்கள் 1. 7577*
*ரசவாதம். 7538*
*ராமுவின் காணாமல்போன மூக்கு. 7446*
*ராஜீவ் காந்தி கொலை: விடை கிடைக்காத வினாக்களும் கேட்கப்படாத கேள்விகளும். 7999*
*லப்பாம் டப்பாம்: சிறுவர் நாவல். 7447*
*வட்டத் தேற்றங்கள். 7332*
*வட இலங்கையில் சிங்கை நகர்: இடம்-காலம்-பெயர்க் காரணம்: மீள்பரிசீலனை. 7934*
*வட மராட்சியின் இசைப் பாரம்பரியம்: நினைவுகளும் பதிவுகளும். 7399*
*வட மொழி இலக்கிய வரலாறு: செம்மொழிக் காலம். 7450*
*வட மொழி இலக்கிய சோலை. 7812*
*வட மொழி இலக்கிய வரலாறு. 8A18*
*வடக்கும் தெற்கும் (நாவல்). 7709*
*வடிவங்கள் மாறலாம் போராட்டம் தொடரும். 7943*
*வண்ணத்துப் பூச்சிகள் மீது நத்தைக் கூடுகள். 7539*
*வத்ஸ்யாயநரின் காமசூத்திரம். 7813*
*வதையின் கதை. 7710*
*வயலான் குருவி-நாவல். 7711*
*வர்த்தக எண்கணிதம். 7333*
*வரலாற்றில் வல்வெட்டித்துறை. 7973*
*வரலாற்று மனிதன் (உபாகமம்). 7578*
*வரலாற்றுச் சுவடுகள்: சிறுகதைகள். 7650*
*வரலாற்றுப் பார்வையில் இலங்கை முஸ்லிம்களும், மஸ்ஜிதுகளும். 7159*
*வரலாற்றுப் பெருமைமிக்க மாவைக் கந்தன் ஆலயம் திருத்தல வரலாறு. 7140*
*வரலாறு சொல்லும் பாடம் 7944*
*வரலாறு சொல்லும் பாடம்: தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு. 7944*
*வரலாறு தரம் 8. 7826*
*வரவு செலவுத் திட்ட உரை. 7199*
*வரால் மீன்கள். 7651*
*வரி விதிப்பு. 7200*
*வரைபுகள். 7334*
*வலை: நாடகம். 7579*

*வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும். 7808*
*வழி: தமிழீழப் பெண்களின் சிறுகதைகள். 7652*
*வழிகளைத் தொலைத்த விழிகள். 7540*
*வள்ளுவமும் விவிலியமும்: ஓர் ஒப்பாய்வு. 7791*
*வளிமண்டலம். 7339*
*வற்றா நதி. 7653*
*வன்னி நாய்ச்சிமார் மான்மியம். 7253*
*வாக்கிய அமைப்பு. 7269*
*வாகரை ஒரு வரலாற்றுப் பார்வை. 7974*
*வாடகை இல்லாத அழகிய வீடு: கவிதைகள். 7541*
*வாழ்க்கை வளைவுகள். 7654*
*வாழ்க்கையின் வினோதங்கள். 7712*
*வாழ்க நீ சங்கிலி மன்ன. 7713*
*வாழ்வோரை வாழ்த்துவோம் 1991-93. 7840-42*
*வாழும் வழி: திருக்குறள் நாடகத் தொகுப்பு. 7580*
*வான்துளிகள். 7169*
*வானசேகர சோடச பாவனா சோதிடம் என்னும் இலகுசாதகம். 7098*
*விகிதமும் விகிதசமமும். 7335*
*விசய மனோகரன்: நாட்டுக்கூத்து. 7254*
*விசையும் விசைகளின் சமநிலையும். 7351*
*விஞ்ஞான முறைகள். 7284*
*விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானங்களும்: ஒரு முறையியல் நோக்கு. 7170*
*விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் தரம் 7. 7285*
*விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் தரம் 8. 7286*
*விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் தரம் 9. 7288*
*விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் தரம் 9. 7289*
*விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் தரம் 10. 7290*
*விஞ்ஞானமும் தொழினுட்பவியலும் தரம் 9. 7287*
*விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்: தரம் 11 மாணவர்களுக்கான வழிகாட்டி. 7291*
*விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும். 7075*
*விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும்: ஓர் அறிமுகம். 7075*
*விட்டில்: சமகால அரசியல் பகுப்பாய்வு. 7809*
*விடிந்தது ஈழம்: வரலாற்றுப் பதிவு. 8000*
*விடுதலை நோக்கிய நாடுகடந்த தமிழீழ அரசு: விளக்கக்கோவை. 7184*
*விண்ணைத் தொடுவோம்: கவியரங்கக் கவிதைகள். 7542*
*வித்துவான் தமிழ் ஒளி க.செபரத்தினம் அவர்களுக்கான பாராட்டுவிழா சிறப்பு மலர் 2010. 7916*
*வித்துவான் வேந்தனார். 7891*
*விதானமாலை: மூலமும் உரையும். 7099*
*விதி வரைந்த பாதையிலே: நாவல். 7714*
*விநாயகப் பா (பன்னூல் தொகுப்பு). 7543*
*விபுலாநந்த இன்பம். 7792*
*வியத்தகு விண்மீன்கள். 7340*
*வியாதியிலிருந்து விடுதலை பெறுவது எப்படி? 7105*
*விருத்திகள். 7336*
*வில் பிறந்த கதை. 7400*
*விலங்குப் பண்ணை. 8A19*
*விலைமதித்தற்கரிய ஒரு கோப்பை தேநீர். 7846*

விவாதம் தொடர்கிறது: கருத்துக் கண்ணோட்டம் பாகம் 3. 7171
விழிச் சுடர்: இரு குறுநாவல். 7715
விஜய சீலம். 7716
வீடு: தொலைக்காட்சி நாடகமும் வானொலி நாடகங்களும். 7581
வீரகேசரி பவளவிழா சிறுகதைக் களஞ்சியம். 7655
வீரத் தளபதி: நாட்டுக்கூத்து. 7255
வீழ்தலின் நிழல்: கவிதைகள். 7544
வெப்பமும் தகனமும். 7352
வெற்றி வாழ்க்கைக்கு சான்றோரின் வழிகாட்டல். 7068
வெண்சங்கு. 8A20
வேதனுக்கு வேள்வி. 7582
வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம். 7093
வேர் அறுந்த மரங்கள். 7545
வேருலகு: கனவுகளின் தொகுப்பு. 7717
வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் (முடிப் பிள்ளையார்) ஆலயம் புனராவர்த்தனப் பிரதிஷ்டா நூதன இராஜகோபுர மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர். 7141
வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார் ஆலயம்) மகாகும்பாபிஷேக சிறப்புமலர். 7142
வேலிகளைத் தாண்டும் வேர்கள். 7546
வேலை, வட்டி, பணம் என்பவற்றின் பொதுக்கொள்கை. 7201
வேள்வித் தீ: கவிதைகள். 7547
ஜனநாயகத்திற்கான ஒரு வழிகாட்டி. 7195
ஜனநாயகத்தின் நான்காவது தூண். 7038
ஜெயராஜ்ஜியம். 7810
ஜே.ஆர். சிந்தனை. 7872
ஸ்ரீ ராமநாத மான்மியம். 7873
ஹஜ் உம்ரா சட்ட விளக்கம். 7206
ஹாத்திம் தாய். பாகம் 2. 7821
ஹிரியண்ணாவின் இந்திய மெய்யியல். 7045

# ஆசிரியர் வழிகாட்டி

*அக்ரம், எல்.வஸீம் 7546*
*அக்ரம், முஹம்மத் 7154*
*அகத்தியர் 7106*
*அகளங்கன் 7552*
*அகில் 7670*
*அகிலேஸ்வரன்* **பார்க்க** *அகில்*
*அசோக்யோகன் 7196*
*அண்ணா கண்ணன் 7892*
*அதீக், உதுமாலெவ்வை முகம்மது* **பார்க்க** சோலைக்கிளி
*அந்தனி, நோபர்ட் 7195*
*அப்துர்ரஸ்ஸாக், எம்.ஐ. 7152*
*அப்புத்துரை, சி. 7108, 7123*
*அப்புத்துரைப்பிள்ளை, சி. 7073*
*அபயக்கோன்,* A.M.S. *7259*
*அபுநஜாத் 7832*
*அம்பலத்தாடிகள் 7553*
*அம்பலவாணபிள்ளை, ச. 7098*
*அம்பிகைபாகன்,* P. *7001, 7010*
*அமரகுணசேகர,* H.U.*லயனல் 7364*
*அமரகுணசேகர,* S.T. *லயனல் 7367*
*அமரகுணசேகர,* S.D.*லயனல் 7294*
*அமான், ஜெனீரா தௌபீக் கைருல் 7633*
*அமானுல்லா, எம்.எஸ். 7651*
*அமிர்தநாயகம், பீ.ஜே. 7928*
*அமீன்,* C.M.A. *7068, 7205, 7434, 7445, 7821*
*அமுதன் 7580*
*அரசரத்தினம், ஐயாத்துரை, 7387*
*அரசரெத்தினம், எஸ். 7678*
*அரபாத், ஓட்டமாவடி* **பார்க்க** *ஓட்டமாவடி அரபாத்*
*அரவிந்தன், கி.பி. 7721, 7900*
*அரவிந்தன், குரு* **பார்க்க** *குரு அரவிந்தன்*
*அரியநாயகம், வி. 7428*
*அரியரத்தினம், சந்தியாப் பிள்ளை* **பார்க்க** வாகரைவாணன்
*அருணந்தி, கே.எஸ். 7421*
*அருணாசலம்* **பார்க்க** *மூளாய் அருணாசலம்*
*அருணாசலம், சரோஜினிதேவி 7438-39*
*அருந்தவராஜா, அன்பரசி 7233*
*அருந்தவராஜா, க. 7233, 7951*
*அருள்பிரகாசம், முடியப்பு 7246, 7249*
*அருள்மொழிராசா, மிக்கேல்* **பார்க்க** *நிலா தமிழின்தாசன்.*
*அருள்வாசகம், ஜோசப் 7195*
*அருளானந்தம், ச.* **பார்க்க** கேணிப்பித்தன்

அருளையா, பவானி **பார்க்க** ஆகர்ஷியா
அல் அஸுமத். *7492, 7658*
அல் கர்ளாவி, யூசு.்.ப் *7157, 7205*
அல் முன்தஸர், கமால் அலி *7152, 7206*
அலறி *7521, 7531*
அலன், R.C.D. *7177*
அலி, இக்பால் *7419*
அலுத்பட்டபெந்திகே, துசித்த *7207*
அலெக்சாந்தர், ம.செ. *7259, 7263, 7269*
அழகரசன், வே.அந்தனிஜான் *7791*
அழகராஜா, செ.அ. *7557, 7574, 7582*
அன்புமணி **பார்க்க** நாகலிங்கம், இரா.
அனஸ், M.S.M. *7170, 7389, 7912*
அனஸ், M.N.M. *7718, 7741*
அனார் *7470, 7476*
அஜந்தகுமார், த. *7773*
அஸீம், இஸ்ஸத் ரீஹானா முஹம்மட் **பார்க்க** அனார்
அஸீஸ், ஐ.எல்.எம்.அப்துல் *7949*
அஹமட், எஸ்.எல்.சியாத் *7879*
அஹமட், வை. *7682*
ஆகர்ஷியா *7508*
ஆசி **பார்க்க** இராதாக்கிருஷ்ணன், ஏ.எஸ்.
ஆசீர்வாதம், மு.வி. *7254*
ஆட்டிகல, K.U. *7345, 7351-53, 7355, 7362-63, 7366, 7368*
ஆரியதாச, எச். *7263*
ஆரியதாச, எட்வின் *7166*
ஆரியதாச, N.P.S.D. *7356*
ஆழ்கடலான் **பார்க்க** பரமநாதன், முருக.வே.
ஆறு. திருமுருகன் **பார்க்க** திருமுருகன், ஆறு.
ஆறுமுக நாவலர் *7106, 7126*
ஆறுமுகம், ஆ.தா. *7257, 7301, 7788*
ஆறுமுகம், கா. *7990*
ஆறுமுகம், பா. *7056*
ஆறுமுகம், வை.ஜவஹர் *7979*
ஆனந்தமயில், த. *7605*
ஆனந்தராஜா, P.A.C. *7069*
ஆனந்தன், இணுவையூர் கே.எஸ். **பார்க்க** இணுவையூர் கே.எஸ்.ஆனந்தன்
ஆனந்தன், கா.சி. **பார்க்க** காசி ஆனந்தன்
ஆனந்தன், கே.எஸ். *7436*
ஆஸ்தீன், எஸ்.ஐ.எம். *7641*
இக்பால், ஏ. *7643, 7866*
இக்பால், K.M.M. *7828*
இசுப்பியர், T.G.P. *7924*
இடைக்காடர் *7098*
இணுவையூர் உத்திரன் *7627*
இணுவையூர் கே.எஸ்.ஆனந்தன் *7676*
இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் *7705*

இத்ரீஸ், எஸ்.எம். 7379
இந்திரபாலா, கா. 7825
இந்திரா கணேஷ் 7614
இரகுநாதையர், இ.சி. 7097
இரகுபரன், க. 7135, 7910
இரத்தினசாமி ஐயர், சு. 7845
இரத்தினசிங்கம், சி.வ. 7100
இரத்தினம், இ. 7825
இரத்தினம், கா.பொ. 7728, 7781
இரத்தினம், முருகு 7259, 7263
இரத்தினம், ஜேம்ஸ் ரி. 7869
இரத்தினராஜா, எம்.ஏ. 7894
இரத்தினேசுவர ஐயர், வ.மு. 7090, 7763
இரத்நாயக்க, W. 7322
இரயாகரன், பி. 7173
இரவீந்திரன், ந. 7790, 8A04
இராகவன், ச. 7809
இராகவி 7640
இராசசுந்தரம், செ.வி. 7919
இராசதுரை, அன்னலட்சுமி 7715
இராசதுரை, செல்லையா 7868
இராசரத்தினம், நா. 7549
இராசரத்தினம், வ.அ. 7611, 7685
இராசரத்தினம், வடகோவை பூ.க. 7433
இராசலிங்கம், ரி. 7825
இராசுதாஸ் 7375
இராசேந்திரம், அண்ணா 7742
இராசையா, வீ. 7163
இராதாக்கிருஷ்ணன், ஏ.எஸ். 7117
இராதாகிருஷ்ணன், பு. 7883
இராமசுந்தரம் 7988
இராமநாதபிள்ளை, த. 7727
இராமநாதன், கலைவாணி 7040, 7083, 7085
இராமலிங்கம், க. 7566
இராமலிங்கம், T. 7342, 7346, 7353
இராமன், இரா.அ. 7904-05
இராயப்பு, கு. 7954
இராவணா **பார்க்க** இரவீந்திரன், ந.
இராஜகுலேந்திரா, சுகந்தி 7789
இராஜகுலேந்திரா, ஜீ. 7752
இராஜகோபால், ஈ.கே. 7871
இராஜரத்தினம், P. 7412
இராஜாபகதூர் , ஞா. 7981
இராஜேந்திரன், அருள்.மா. 7590
இராஜேந்திரன், சபா 7607
இருளப்பா, சோமு பெரீ. 7247
இலங்கரத்ன, டி.பி. 7438
இலங்கை அரசகரும மொழிகள் ஆணைக்குழு. 7017

*இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் 7221*
*இலிப்சன், இ. 7917*
*இளங்கீரன், சுபைர் 7687*
*இளஞ்சேய், வேந்தனார் 7891*
*இளந்தமிழ், சி.ம. 7990*
*இளம் நாவலர் 7542*
*இளமுருகனார், சோ. 7499*
*இளைய அப்துல்லாஹ்* **பார்க்க** அனஸ், M.N.M.
*இளையதம்பி, சே.ஜோ. 7193, 7827*
*இன்பராஜன் 7551, 7554, 7559-60, 7562-63, 7567-72, 7577-78*
*இனியன் 7528*
*இஸ்மாயில்,* A.M.M. *7144, 7147-48*
*ஈழத்தமிழர் இன எழுச்சிப் பாசறை 7944*
*ஈழத்துப் பூராடனார்* **பார்க்க** செல்வராஜகோபால், க.தா.
*ஈழபாரதி 7493*
*ஈழவாணன் 7456*
*ஈழவாணி 7243, 7626*
*ஈழவேந்தன் 7875*
*ஈஸ்வரன், சுந்தர் 7787*
*ஈஸ்வரன், தெ. 7892*
*உடப்பூர் வீரசொக்கன் 7843*
*உதயகுமார், சமரபாகு சீனா 7613*
*உதயசூரியன், சா. 7977*
*உதயசெல்வன், எஸ். 7663, 7671*
*உதயணன் 7632*
*உதயணன், சபாபதி* **பார்க்க** சித்தாந்தன்
*உதயணன், வவுனியூர் இரா.* **பார்க்க** வவுனியூர் இரா.உதயணன்
*உமாசங்கர்,* P. *7013*
*உலக இஸ்லாமிய அழைப்பு இயக்கம் 7158*
*உலகமங்கை, ஆ. 7652*
*உவைஸ், ம.முஹம்மது 7729*
*உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 7200*
*உறொபேட்சு, பீ.ஈ. 7924*
*எட்வேட், சூசை 7484*
*எதிர்மன்னசிங்கம், எஸ். 7630*
*எமில், கி.செல்மர் 7027*
*எரிக்கென்றிசன் (நிலான்), ச. 7014*
*எழில்வேந்தன், சி. 7587*
*ஏக்கநாயக்க,* E.A.T. *7293, 7302, 7313, 7314, 7320-21, 7324, 7334*
*ஏக்கநாயக்க,* E.M.G. *7324, 7328*
*ஏக்கநாயக்க,* M.P. *7292-93, 7296, 7298-300, 7302, 7313-14, 7316-17, 7319, 7321, 7323-32, 7334, 7336*
*ஐயாத்துரை, எஸ். 7360*
*ஒட்டமாவடி அறபாத். 7598*
*ஓர்வல், ஜோர்ஜ் 8*A*19*
*கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் 7114*
*கண்ணன் 7942, 7989, 7995*

கண்ணன், கே. 7310
கணநாதபிள்ளை, P. 7302
கணபதி, தே. **பார்க்க** புசல்லாவை கணபதி
கணபதிப்பிள்ளை, க. 7712
கணபதிப்பிள்ளை, சி. 7114, 7848-49
கணபதிப்பிள்ளை, த. 7095
கணபதிப்பிள்ளை, நாகலிங்கம் **பார்க்க** நுணாவில் நா.கணபதி
கணபதிப்பிள்ளை, மு. 7719
கணேச பண்டிதர், வ.ஞா. 7502
கணேசபிள்ளை, நா. **பார்க்க** கணேசன், நா
கணேசமூர்த்தி, கே. **பார்க்க** இந்திரா கணேஷ்
கணேசமூர்த்தி, சரவணமுத்து 7890
கணேசராஜா, க. 7044
கணேசலிங்கம், க. 7082, 7847
கணேசலிங்கம், கே.ரீ. 7975
கணேசலிங்கம், செ. 7666, 7699, 7703, 7710, 7747
கணேசலிங்கம், ப. 7172
கணேசலிங்கம், யோகேஸ்வரி 7860
கணேசலிங்கம், V.K. 7880
கணேசன், நா. 7932
கணேசையர், சி. 7907
கணேஷ், கே. 7818
கதிர்காமநாதன், செ. 7820
கதிர்காமர் 7252
கதிரவன், மீரா 7656
கதிரைவேற்பிள்ளை, நா. 8A09
கந்தசாமி, பார்வதி 7054
கந்தசாமி, ராஜேஸ்வரி **பார்க்க** இராகவி
கந்தவனம், சிவயோகமதி 7955
கந்தவனம், வி. 7220, 7409, 7462, 7543, 7583 ,7834
கந்தையா, ஆ. 7119, 7724, 7755
கந்தையா ஆச்சாரி, ஆர் எஸ். 7963
கந்தையா, மு. 7080-81, 7084, 7086, 7089, 7137
கந்தையா, மு.சி. 7510
கந்தையா, வே. 7561
கபிரியேல், P. 7292-93, 7300, 7318, 7321, 7326, 7334
கபூர், A.S.M. 7046
கமலசேகரம், க. 7901
கமலநாதன், சா.இ. 7061, 7965
கமலநாதன், திருநாவுக்கரசு 7228
கமால், முகம்மது ஜெலால்தீன் முகம்மது **பார்க்க** திக்குவல்லை கமால்
கமாலுத்தீன், எஸ்.எம். 7833
கருணாகரன் 7472
கருணாகரன், கனகசிங்கம் **பார்க்க** திருமாவளவன்
கருணாதாச, சீ. 7163
கருணாதாச, P. 7294, 7364
கருணாரத்ன, S. 7350, 7365

கருணாரத்ன, சுனேத்ரா 7342, 7344-45, 7346, 7351-54, 7357, 7363, 7366, 7368-69
கருணேஸ்வரன், கு. 7308
கல்கிதாசன் **பார்க்க** கனகசபாபதி, S.P.
கல்தேரா, லீலா 7046
கலாநிதி கைலாசபதி நினைவுக்குழு 7732
கலாமணி, த. 7631
கலையரசன் 7185
கலையார்வன் **பார்க்க** இராயப்பு, கு.
கலைவாணி **பார்க்க** தமிழ்நதி
கலைவாதி கலீல் 7485, 7841
கவிதா 7474, 7505, 7515
கன்னிமுத்து வெல்லபதியான் **பார்க்க** நவேந்திரன், சரவணமுத்து
கனக. செந்திநாதன் **பார்க்க** செந்திநாதன், கனக.
கனகசபாபதி, S.P. 7966
கனகரத்தினம், இரா.வை. 7858, 7888
கனகரத்தினம், த. 7761
கனகரத்தினம், தி. 7163
கனகரத்தினம், பேரம்பலம் **பார்க்க** ஷெல்லிதாசன்
கஜமுகன், S. 7357
காசி ஆனந்தன் 7877
காத்தான்குடி பாத்திமா 7639
கார்த்திகேயபிள்ளை, வ. 8A09
கார்த்திகேயன், ஆ. 7977
காவலூர் இ.விஜேந்திரன் **பார்க்க** விஜேந்திரன், காவலூர் இ.
காளிதாசர் 7811
காஸிம், எம்.ஷஹீல் 7214
கிருபாகரன், சுபாசினி 7804
கிருபாகரன், பா. 7303, 7306
கிருஷ்ணகுமார், இ. 7022
கிருஷ்ணசந்தர் 7445
கிருஷ்ணபிள்ளை, S. 7163
கிருஷ்ணமூர்த்தி, லோகேஸ்வரி 7361
கிருஷ்ணராஜா, செ. 7172, 7391
கிருஷ்ணராஜா, சோ. 7042, 7045
கிருஷ்ணானந்ததேவன் **பார்க்க** வல்வைத் தேவன்
கிருஷன் சந்தர் 7820
குகநாதன், வி.சி. 7794
குடலிகம, P. 7385
குணசிங்க, T. 7338, 7344, 7346
குணசேகர, G.H.P.R. 7363
குணசேகர, P.A.H.P.R. 7366, 7368
குணசேகரம், கே.வி. 7618
குணத்திலக்க, K.A.C.D. 7147-48
குணதாச, A.D. 7344, 7347
குணநாதன், ஓ.கே. 7444, 7808, 7874
குணபாலசிங்கம், தனபாக்கியம் 7432, 7822-23, 7948, 8A14
குணரத்தினம், வேலுப்பிள்ளை 7182

குணரத்ன, M.T.S. *7342, 7346, 7353*
குணராசா,க. *7008, 7609, 7653, 7657, 7707, 7748*
குணவர்த்தன, A.J. *7292-93, 7298-300, 7302, 7313-15, 7317-25, 7327-32, 7334-36*
குமரன், கணேசலிங்கன் *7887*
குமாரசாமி, க.இ. *7961*
குமாரசாமி, கந்தையா *8A19*
குமாரசாமி, கல்வயல் வே. *8A13*
குமாரசாமி, சி. *7269*
குமாரசாமி, செல்லையா *7423*
குமாரசுவாமி, வ. *7482, 7861*
குமாரசுவாமிப் பிள்ளை, அ. *7754, 7811*
குமாரதாசன், ஆனந்தகௌரி *7427*
குரு அரவிந்தன் *7691*
குருகே, ஆனந்த டபிள்யு. பீ. *7175*
குருபாவா, ஷேக் முகையுதீன் *7151*
குருலிங்க தேசிகர் *7760*
குலசிங்கம், நாகலிங்கம் *7376*
குலரத்தினம், க.சி. *7109, 7131*
குழந்தைவேல், விமல் *7669*
குழல்-அருளாளன் *7819*
கேசவன், சுபாசினி *7804*
கேணிப்பித்தன் *7413, 7429*
கேய்ன்ஸ், யோண் மேனாட் *7201*
கைமண் *7943*
கைலாசநாதக் குருக்கள், கா. *8A18*
கைலாசபதி, க. *7750*
கொடித்துவக்கு, P.W. *7048*
கொபன், அல்பிறெற் *7922*
கோகுலதாஸ், க. *7464*
கோபால், எம். *7284, 7294, 7320, 7338-39, 7342, 7346, 7351-54, 7357, 7362-65, 7369*
கோபாலசிங்கம், எஸ். **பார்க்க** வெல்லவூர்க் கோபால்
கோபாலன், தி.இரா. *7062, 7679*
கோமதிநாயகம், ப. *7836*
கோவிந்தசாமி தேவர், வீ.எஸ். *7238*
கௌரிகாந்தன், மு. *7268*
சக்திவேல், வெற்றிவேல் *7049*
சங்கரப்பிள்ளை, பொ. *7088, 7192, 7201*
சச்சிதானந்தம், சதாசிவம் *7260-62*
சச்சிதானந்தன், க. *7835-36*
சச்சிதானந்தன் சுகிர்தராஜா *7783*
சச்சிதானந்தன், நடராசா *7132*
சச்சிதானந்தம், மறவன்புலவு க. *7938*
சச்சிதானந்தன், வினோதினி *7534*
சட்டநாதன், க. *7636, 7646*
சண்முகசுந்தரம், த. *7253, 7702*
சண்முகதாஸ், அ. *7720, 7764*
சண்முகதாஸ், மனோன்மணி *7091*
சண்முகநாதன், சித்தி *7672*

சண்முகநாதன், ம. 7407
சண்முகநாதன், வே. **பார்க்க** முகில்வண்ணன்
சண்முகலிங்கம், க. 7161, 7181, 7187, 7824, 7845
சண்முகலிங்கம், குழந்தை ம. 7239
சண்முகலிங்கன், என். 7160
சண்முகானந்தா, நா. 7346-48, 7353-54
சத்தியசீலன், பா. 7516
சதாசிவம், ஆ. 7103
சதாசிவம், கந்தையா **பார்க்க** புலோலியூர் க. சதாசிவம்
சதாசிவம்பிள்ளை, ஆர்ணல்ட் 7793
சதானந்தன், செ. 7883
சந்தானம், வீ. 7998
சந்திரகாந்தன், ஏ.ஜே.வி. 7586
சந்திரகாந்தி, வீ.என். **பார்க்க** திருமலை வீ.என்.சந்திரகாந்தி
சந்திரகுமார், ந. 7287
சந்திரசிறி, Y.A.D.நிமால் 7348
சந்திரசேகரம், பி. 7396
சந்திரசேகரம், பொ. 7125
சந்திரசேகரன், சோ. 7223-24, 7226
சந்திரசேகரன், தி.க. 7893
சந்திரசேகரன், நந்தவனம் **பார்க்க** நந்தவனம் சந்திரசேகரன்
சந்திரதிலக, கே.எல். 7165
சந்திரமோகன், ந. 7780
சபாபதி, ஆ. 7129
சபாபதி நாவலர் 7267
சபாரத்தினம், ப. 7202, 7217, 7345, 7347-49, 7352, 7355-56, 7358, 7365
சம்பந்தன், ஐ.தி. 7740, 7852
சம்பந்தன், க.தி. 7771
சமத்துவன், பவா 7980
சமரசிங்ஹ, சீதா சந்தசீலி 7169
சமூக அபிவிருத்தி நிறுவகம் 7209
சரத்சந்திர, K.A.D.S. 7347-48, 7355
சரவணன் **பார்க்க** கணேசமூர்த்தி, சரவணமுத்து
சற்குணராஜா, ஏ.எஸ். 7393
சாந்தன், ஐயாத்துரை 7796
சாந்தாராஜ் 7612
சாம்பசிவம், ரஞ்சினி 7230
சாமுவல்சன், போல் ஏ. 7193
சித்தன்கேணி விவேகானந்தா **பார்க்க** விவேகானந்தா
சித்தாந்தன் 7503
சித்திவிநாயகம், எம். 7457
சிதம்பரநாதன், ராணி 7169
சியாமளாதேவி, தா. 7854
சிராக் நிறுவனம் 7985
சில்லையூர் செல்வராசன் 7242
சில்வா, J.A.N. 7335
சிவகாசி-அருணாசலக் கவிராயர் 7849
சிவகுமார், குழந்தைவேல் 7406

சிவகுமாரன், கே.எஸ். 7730-31, 7738, 7745, 7784
சிவகுமாரன், நளினி 7896
சிவகுமாரன், புஷ்பா 7224, 7226, 7384
சிவங். கருணாலய பாண்டியப் புலவர் 7124
சிவசண்முகராஜா, சே. 7380
சிவசரவணபவன், சி. 7628
சிவசாமி, அ. 7919
சிவசுப்பிரமணியம், த. 8A10, 8A16
சிவசுப்பிரமணியம், தேவராணி 7299, 7313, 7315, 7322, 7327
சிவசுப்பிரமணியம், வ. 7061
சிவஞானசுந்தரம், இ.க. 7281
சிவஞானசுந்தரம்,ச. 7817
சிவஞானம், சரோஜினிதேவி 7383
சிவத்தம்பி, கார்த்திகேசு 7411, 7767, 7772, 8A02
சிவதாஸ், எஸ். 7071
சிவநாதன், கமலினி 7622
சிவநேசச்செல்வன், ஆ. 7036
சிவநேசன், விமலாதேவி 7540
சிவப்பிரகாசம், எஸ். 7292-93, 7300, 7313-15, 7318, 7321, 7326, 7334
சிவப்பிரகாசம், த. 7055
சிவப்பிரகாசம், யோகேஸ்வரி 7648, 7736
சிவபாதசுந்தரம், நா. 7853
சிவபாலன் 7408
சிவபாலன், கா. 7140
சிவரட்ணம், என். 7973
சிவராசா, சு. 7704
சிவராஜா, ஏ. 7259, 7163-64, 7269, 7284, 7294, 7313, 7320, 7338-39
சிவலிங்கம், இராமலிங்கம் **பார்க்க** உதயணன்
சிவலிங்கம், சண்முகம் 7494
சிவலிங்கம், மு. 7602
சிவலிங்கம், மூ. 7112
சிவலோகநாதன், எஸ். 7296
சிவலோகநாதன், K. 7315, 7319, 7322, 7328, 7330-31, 7335
சிவாதரன், கே. 7374
சிவாநந்தையர் 7073
சிவானந்தமூர்த்தி, கனகசபை 7074
சிவானந்தன், எம். **பார்க்க** துறையூரான்
சிவேசன், சிவானந்தமூர்த்தி 7232
சிற்பி **பார்க்க** சிவசரவணபவன், சி.
சிற்றம்பலம், க. 7919
சிற்றம்பலம், சி.க. 7947
சிறீக்கந்தராசா, செல்லத்தம்பி 7118, 7203
சின்னத்தம்பி, கணபதிப்பிள்ளை 8A05
சின்னத்தம்பி, மா. 7189, 7225
சின்னத்துரை, கேசகப்பிள்ளை **பார்க்க** நீலாவணன்
சின்னப்பபிள்ளை, சி.வை. 7661, 7716
சின்னப்பு, மு. 7095
சிஹாப்தீன், அஷ்ர.்.ப் 7603, 7752-53, 7798

சீதரன், ராணி **பார்க்க** ராணி சீதரன்
சீன் கொற்மான் 7827
சுகணா 7698
சுகிர்தராஜா, சச்சிதானந்தன் 7589
சுகுமார், இராசையா **பார்க்க** சுகுமார், கே.ஆர்.
சுகுமார், கே.ஆர். 7015-16, 7018
சுதர்சன், செல்லத்துரை 7884
சுதாங்கன் 7999
சுதாகரன், மகாலிங்கம் 7637
சுதாராஜ் 7440
சுதாராஜ், அனந்தன் 7435
சுதாராஜ், தேனுகா 7443
சுதாஸ், இராசக்கோன் **பார்க்க** இரா சுதாஸ்
சுந்தரராசன், அருணா 7458, 7468, 7480
சுந்தரலிங்கம், இரா. 7259
சுப்பிரமணிய ஐயர், ஹே. 7057
சுப்பிரமணியம், அக்னி 7997
சுப்பிரமணியம், இளையதம்பி 7093
சுப்பிரமணியம், கால. 7805
சுப்பிரமணியம், சபா. அருள் 7420
சுப்பிரமணியம், பி. 7169
சுப்பிரமணியம், வி. 7441, 7827
சுப்பிரமணியம், வி.ச. 7295, 7297
சுப்பிரமணியம், வே. 7259, 7263, 7269, 7911
சுப்பிரமணியன், கௌசல்யா 7076
சுப்பிரமணியன், நா. 7076
சுப்ரமண்யன் சுவாமி 7999
சுபசிங்க, மியுரியல் 7364
சுபேஸ், கார்த்திகாயினி 7616
சுபைர், M.M.M. 7169
சுபைர், **மேலும் பார்க்க** ஸுபைர்,
சுமன், மு.ஆ. 7529
சூத்திர மகாகவி 7816
சூரியநாராயண், வி. 7987
சூரியபாலன், T. 7054
செங்கமலத்தாயார், நாக. 7996
செந்திநாதன், கனக. 7700, 7915, 8A20
செந்தில்நாதன், W.S. 7397
செந்தில்வேலவர், தே. 7867
செந்திவேல், சி.கா. 8A04
செங்கை ஆழியான் **பார்க்க** குணராசா,க.
செந்தில்நாதன், W.S. 7397
செபரத்தினம், கனகரத்தினம் 7733
செபஸ்தியாம்பிள்ளை, எஸ். 7242
செல்லத்துரை, அருணா 7581, 7926
செல்லத்துரை, இ. 7774
செல்லத்துரை, கிருஷ்ணன் **பார்க்க** துரை, கி.செ.
செல்லையா, அ.பொ. 7749

செல்லையாபிள்ளை, சி. 7862
செல்வச்சந்திரன், ரூபா 7102, 7105, 7234
செல்வநாயகம், அருள் 7792
செல்வநாயகம், டி.ரி. 7778
செல்வம், கமலா நந்தகுமார் 7381
செல்வராசகோபால் , பி.ப. 7756
செல்வராசா, ஞா.ம. 7242
செல்வராஜகோபால், க.தா. 7245, 7455, 7756, 7966, 8A17
செல்வராஜா, என். 7019-20, 7777
செல்வராஜா, பிரமிளா 7634
செவ்வந்திநாத தேசிகர் 7454
செனெவிரத்ன, மொறீன் 7384
சேகுத் தம்பிப் புலவர் 7490
சேதுப்பிள்ளை, ஆர்.பி. 7982
சேதுராமன், வா.மு. 7992
சேவியர், ச.சதாசிவம் 8A07
சேனாநாயக்க, செனேஹலதா P. 7412
சொக்கலிங்கம், க. 7077, 7250, 7259, 7786, 7857
சொக்கன் **பார்க்க** சொக்கலிங்கம், க.
சோதிப்பெருமாள், செ. 7259, 7263
சோமகாந்தன், பத்மா 7803
சோமசுந்தரம், கே. 7360
சோமசுந்தரம், சி.எஸ்.எஸ். 7864
சோலைக்கிளி 7475
சௌபி, எம்.நவாஸ் 7477
ஞானகுமாரன், நா. 7087
ஞானசேகரம், நாகலிங்கம் 7870
ஞானசேகரன், தி. 7028, 7752-53, 7789, 7830
ஞானப்பிரகாசர் 7266
ஞானராசா, செ. 7520 பரணீதரன், கலாமணி 7645
டயஸ், கந்தசாமி அன்ரன் 7072, 7074
டயஸ், மல்சிறி 7165
டேமியன், எஸ். 7070
டேவிட், P.A. 7367
டொப், மொரிஸ் 7197
த சில்வா, பத்மசிறி 7047
த சில்வா, பூர்ணா 7046, 7412
த மெல், K.G. 7367
த மெல், ரொனி 7199
தங்கராசா, சங்கரன். 7032
தசநாயக்க, A.R. 7359
தசநாயக்க, மாலனி 7358
தசநாயக்கா, W.M.H. 7202, 7217, 7349, 7362, 7365
தம்பித்துரை, ஆ. 7394
தம்பித்துரை, தங்கமுத்து 7541
தம்பிமுத்து, ஐ. 7047-48, 7165-66
தம்பு சிவா **பார்க்க** சிவசுப்பிரமணியம், த.

தமிழ்நதி 7463, 7673, 7937
தமிழ்மாறன் 7629, 7697
தயாபரன், வசந்தி 7441, 7789
தர்மசீலன், சுவாமிநாதன் 7138
தர்மபால, தனுஜா 7814
தர்மராஜா, எம். **பார்க்க** ஈழவாணன்
தர்மராஜா, நா. **பார்க்க** அகளங்கன்
தர்மலிங்கம், நீர்கொழும்பு ந. 7619
தவநாயகம், பொன். 7467
தவமணிதாசன், வை.க. 7291
தளையசிங்கம், மு. 7807, 8A15
தனஞ்சயராசசிங்கம், ச. 7859
தனபாலசிங்கம், வி. 7037
தனபாலசிங்கம், வீ. 7180
தனபாலன், பாலசுப்பிரமணியம் 7052
தனராஜ், தை. 7194
தனேந்திரா, வி.பி. 7902
தாமோதரம்பிள்ளை, சி.வை. 7774
தாவுத், யு.எல். 7649
திக்குவல்லை கமால் 7686
திசாநாயக்கா, வில்சன் 7202, 7217, 7347-48, 7349, 7354, 7356-58, 7365
தியாகராசா, ச. 7079
தியாகராஜா, சிவ. 7373
திரவாதா, ஜீ.டீ. 7360
திருச்சந்திரன், செல்வி 7168
திருச்செல்வம், அ. 7104
திருச்செல்வம், எஸ். 7029-30
திருஞானசம்பந்தபிள்ளை, ம.வே. 7675, 7684
திருஞானசம்பந்தபிள்ளை, மு. 7141
திருஞானசம்பந்தன், க. **பார்க்க** சம்பந்தன், க.தி.
திருஞானசுந்தரம், வீ.ஏ. 7881-82, 7897
திருநாவுக்கரசு,இ. 7115
திருநாவுக்கரசு, பொ. 7193
திருநாவுக்கரசு, மு. 7186
திருநாவுக்கரசு, V.T. **பார்க்க** நாவேந்தன்
திருநீலகண்டன், இந்திரா 7127
திருமலை இராஜகோபால் **பார்க்க** கோபாலன், தி.இரா.
திருமலை நவம் 7408
திருமலை வீ.என்.சந்திரகாந்தி 7594, 7621
திருமாவளவன் 7465
திருமுருகன், ஆறு. 7856
திலகநாதன், க. 7405, 7410
திலகரட்ண, R.M. 7316
திலகரட்ணம், தி. 7094
திலகரத்ன, P.A. 7294, 7348, 7351
திலீபன், எஸ். 7311
தீபச்செல்வன் 7460, 7514, 7517, 7523
தீபநாதன், ப. **பார்க்க** விக்ரம்

தீவகன் **பார்க்க** சேவியர், ச.சதாசிவம்
துரை, எம்.எஸ். 7252
துரை, கி.செ. 7063, 7903
துரைசாமி, மு. 7509
துரைசிங்கம், த. 7275-26,7431
துரையப்பாபிள்ளை, தெ.அ. 7797
துரைராசா, தம்பு 7067
துரைராஜா, உதயகரன் **பார்க்க** இளம் நாவலர்
துறையூரான் 7708
தெணியான் 7683
தெய்வநாயகம், எஸ். 7407
தெய்வேந்திரன், பொன் 7758
தெருத்தூசியோன் 7059
தெல்லியூர், செ. **பார்க்க** நடராசா, செ.
தெளிவத்தை ஜோசப் 7674
தேவசகாயம்பிள்ளை, ஆ. 7241
தேவராசன், சி.ந. 7333
தேவராஜ், வி. 7655
தேவானந்தா, யோகான் 7211
தைரியநாதன், ம. 7395
தொம்சன், டேவிட் 7919
தொல்புரக்கிழார் **பார்க்க** சிவபாதசுந்தரம், நா.
தொனமூர் ஆணைக்குழு 7208
தோரதெனிய, S.P. 7284, 7355-56
நசீர், எஸ். 7309
நடராசன், இரா. 7978
நடராசன், நவாலியூர் சோ. 7450, 7816, 7930
நடராசன், வசந்தா 7134
நடராசா, F.X.C. 7964
நடராசா, ச. 7918
நடராசா, செ. 7235
நடராசா, சோ. 7825
நடராஜா, ஆ.சி. 7837
நடராஜா, எஸ். 7392
நடா, P. 7799
நடேசன், கே. 7259, 7263, 7269
நந்தவனம் சந்திரசேகரன் 7489, 7539
நபீல் 7491
நபீல், றிஸ்வியூ முஹம்மத் **பார்க்க** நபீல்
நயீமா சித்தீக் 7654
நல்லையா, நிர்மலாதேவி 7219
நவசோதி, க. 7723
நவநீதன், சி. 7378
நவம் 7831
நவம், க. 7970
நவமோகன், வே. 7270-74
நவரட்ணம், விக்கி 7606
நவரட்ணம், வை. 7194

நவரத்தினம், க. 7390
நவரத்தினம், செ. 7177
நவரத்தினராசா, வே. 7341
நவேந்திரன், சரவணமுத்து 7890
நளினசேனா, K.D. 7367
நாகராஜன், அநு.வை. 7437, 7448
நாகராஜன், இ. 7700
நாகலிங்கம், இரா. 7455, 7650
நாகலிங்கம்பிள்ளை, ஆ.சி. 7762
நாகேந்திரன், ஆனந்தராணி 7659, 7664
நாகேந்திரன், நாராயணபிள்ளை 7404
நாச்சியாதீவு பர்வீன் 7546
நாடுகடந்த தமிழீழ அரசு 7184
நாதர், எஸ்.ஏ. 7565
நாதன், சற்சொரூபவதி 7789
நாயக்ககோராள, H.P. 7359
நாராயண சாஸ்திரி, ந. 7097
நாராயண சுவாமிகள் 7099
நாவேந்தன் 8A08, 8A12
நாளிர், M.H.M. 7144, 7147-49, 7155, 7204
நிக்சன், எ. **பார்க்க** ஈழபாரதி
நிசார், உ. 7422, 7599
நிசார், கஹட்டோவிட்ட நிஹாஸா 7481
நித்தியகீர்த்தி, தெ. 7688
நித்தியானந்தன், மாவை **பார்க்க** மாவை நித்தியானந்தன்.
நித்தியானந்தன், ரா. 7946
நிரேஸ்குமார், ம. 7595
நிலா 7665
நிலா தமிழின்தாசன் 7466, 7588
நிஸ்வான், எம்.பி.எம். 7610
நிஸார் **பார்க்க** நிசார்
நீர்வை பொன்னையன் 7624
நீலகண்ட சாஸ்திரி, K.A. 7925
நீலகண்டன், கந்தையா 7856
நீலாவணன் 7587
நு.்.மான், எம்.ஏ. 7183
நுணாவில் நா.கணபதி 7545
நெடுந்தீவு முகிலன் 7478, 7532
நெல்லை லதாங்கி **பார்க்க** நாகேந்திரன், ஆனந்தராணி
நேசராஜ், ம. 7377
நோர்பேட், எஸ்.அன்ரனி 7194, 7218, 7337
நௌஸாத், ஆர்.எம். 8A11
ப்ரோ.்.பி, ஜெரே 7224, 7226
பக்தவத்சல பாரதி 7160
பகவதி, கு. 7991
பசுபதி, வில்வம் 7447
பஞ்சாட்சரம், ச.வே. 7110, 7593

பண்டார, P.M.L.R. 7367
பத்தினாதன், தொ. 7940
பத்மநாதன், சி. 7919, 7971
பத்மநாதன், தர்மினி **பார்க்க** யாழ் தர்மினி பத்மநாதன்
பதந்தன், சோ. 7592
பதியதளாவ பாறூக் 7507
பர்டினந்து, சி. 7918
பரஞ்சோதி, M. 7316
பரணீதரன், கலாமணி 7645, 7726
பரமநாதன், முருக.வே. 7779, 7855
பரமலிங்கம், உதயகுமாரி **பார்க்க** நிலா
பரமஹம்ஸதாசன் 7815
பரமேஸ்வரன், ஆர்த்தி 7446
பரமேஸ்வரன், சுப்பையா **பார்க்க** இணுவையூர் உத்திரன்
பரீத், செய்னுதீன் எஸ். 7156
பவித்ரன், தில்லைநாதன் 7473, 7538
பளீல், அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். 7157
பளையூர் ஏ.பீ.ஜோர்ஜ். 7162
பற்றிக்ஸ், டேவிற் வி. 7058
பற்றிமாகரன், றீற்றா 7751
பாப்பையா, P. 7827
பாமா ராஜகோபால் **பார்க்க** இராஜகோபால், ஈ.கே.
பாயிஸ், அஸீஸ் எம். 7711
பார்வதிநாதசிவம், ம. 7768
பாலகணேசன், தா. 7513
பாலகிருஷ்ணன், என். 7188
பாலச்சந்திரன், செ. 7142
பாலசுகுமார் 7408, 7960
பாலசுந்தரம், இ. 7766
பாலசுந்தரம், மு. 7229
பாலதாஸ், ஏ. 7255
பாலபிரகாஷ், இரா. 7512
பாலமனோகரன், அ. 7690
பாலமுனை பாறூக் 7585
பாலரவி 7526
பாலு மகேந்திரா 7656
பாலேஸ்வரி, ந. 7681, 7696
பாவா, நாகூர் ஏ. 7417
பாஸ்க்கரா, சி. 7789
பாஸ்டின், மார்க்ரெட் 7983
பியசேன, ஹக்மன பி.எம். 7872
பியதாச, W.M. 7299, 7314-15, 7318, 7320, 7322, 7326, 7329-31, 7335
பிரசன்னா, தி. 7990
பிரதீபன், பாலேந்திரம் **பார்க்க** தீபச்செல்வன்
பிரபாகரன், ஜெ. 7986
பிரமிள் 7805
பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம் 7806
பிரேமசந்திரா, P.V. 7046, 7412

பிரேமசிறி, O.W. ரஞ்சித் 7342, 7344, 7345-46, 7351-53, 7357
பிரேமரத்ன, V.A. 7342
பிரேமவர்த்தன, M.A. 7319
பிரைசு, W.C. 7976
பிலப்பிட்டிய, P. 7357, 7362
பிறிற்றெயின், சேர் ஹேர்பர்ட் 7198
பின்ச், வீ.சீ. 7360
பீரிஸ், M.K. 7292, 7299, 7317-18, 7325, 7329, 7335
பீரிஸ், M.S. 7323
பீரிஸ், ஜே.ஜி.எட்வேர்ட் 7066
புசல்லாவை கணபதி 7479
புண்ணியமூர்த்தி, பெ. 7537
புயல் 7608
புரட்சிக் கமால் 7519
புலேந்திரன், சி. 7163, 7269
லியனகே, N.J. 7348
புலோலியூர் க. சதாசிவம் 7604, 7689
புவாஜி, ஏ.ஏ.எம். 7969
புன்னியாமீன், பீ.எம். 7002-7, 7012
புன்னியாமீன், மஸீதா 7002-7, 7012, 7418
புஷ்பரட்ணம், பரமு 7929, 7934
புஷ்பவனம், இராஜம் 7400
பூங்கோதை, அருணாசலம் 7113
பூபாலபிள்ளை, ச. 7455
பூல், ஏ.ஜி. 7191
பூலோகசிங்க அருளப்பநாவலர் 7586
பூலோகசிங்கம், பொ. 7757
பெண்களுக்கான ஆராய்ச்சி நிலையம் 7174
பெர்ணான்டோ, ஆர்தர் ஜோன்ஸ் 7169
பெர்ணாண்டோ, A.R.R. 7302, 7317
பெர்னாந்து, A.R. 7324
பெர்னி, ஆர்தர் 7921
பெரிய ஐங்கரன் 7488, 7722
பெரியசாமி, சீரங்கன் 7359
பெரேரா, A.G.N.H. 7217, 7349-50, 7354, 7356, 7358, 7362
பெரேரா, L. ஆர்தர் 7298, 7332
பெரேரா, நிர்மலி 7202, 7347
பெரேரா, பீ.ஏ.ரெனிசன் 7166
பெரேரா, P.A.C.S. 7322, 7331
பெரேரா, மியூரியல் 7217, 7362-63, 7365, 7369
பேர்சிவல், K.D.D. 7292, 7296, 7299, 7313-15, 7318-19, 7321, 7324, 7327-30, 7332
பேரம்பலம், வே. 7924
பேராதனைத் தமிழ்ச் சங்கம் 7240, 7573
பேரின்பநாயகம், ச.ஹண்டி 8A01
பேரின்பநாயகம், த. 7231
பைரூஸ், F.M. 7841

பொன்னம்பலபிள்ளை, ச. 7873
பொன்னம்பலம், மு. 7775
பொன்னம்பலம், வ. 7925
பொன்னுத்துரை, எஸ். 7579, 7700, 7776, 7785, 7813, 7863, 7976
பொன்னுத்துரை, ஏ.ரி. 7576, 7899
பொன்னுத்துரை, V. 7827
பொன்னையா, நீர்வை **பார்க்க** நீர்வை பொன்னையன்.
மகாதேவன், ரி.எம்.பி. 7981
மகாதேவா, கோபன் 7795
மகாதேவா, ப.க. 7789
மகாலிங்கம், சிவ. 7121
மகேசன், கணபதி 7101
மகேந்திரன், கோகிலா 7898
மகேந்திரா, சுநந்த 7814
மசனெட், விஜயநாதன் இயுஜின் **பார்க்க** மெலிஞ்சி முத்தன்.
மட்டுவில் ஞானக்குமாரன் 7495
மண்டல புருடன் 7760
மண்டூர் அசோகா 7695
மதிவானம், லெனின் 7886
மதுசூதனன், தெ. 7824
மயில்வாகனம், நா. 7215, 7826, 7829, 7933
மரிக்கார், ஏ.ஐ.எல். 7945
மரியசேவியர், நீ. 7027, 7451-52, 7555, 7558, 7564
மரியதாசன், டயானா 7909
மரியதாஸ், கௌரி 7288
மரியாம்பிள்ளை, S.N.J. 7550, 7556, 7575
மரியாம்பிள்ளை, வெ. 7254
மருதமுனை மஜீத் 7956
மருதமைந்தன் **பார்க்க** M.S.S. ஹமீட்
மன்சூர், எம்.எம். 7269
மனோகரன், ஆ.க. 7935
மனோகரன், த. 7471
மனோகரன், துரை 7878
மஸீதா, M.H.S. **பார்க்க** புன்னியாமீன், மஸீதா
மஜீத், மசூறா ஏ. 7035
மஜீத், ஏ.எச்.எம். **பார்க்க**
மஜீத், மருதூர் ஏ. 7941, 7950, 7952
மஹ்ரூப், A.R.M. 7143-44, 7147, 7152, 7155, 7158, 7206
மஹாதேவன், எஸ். 7195
மஹிந்தரத்தினா, G.H. 7284, 7339,
மாக்கர், ஏ.எச்.மாக்கன் 7945
மாதவன், மாதவகலா 7195
மாப்பா, R.P. 7359
மாயாண்டி பாரதி, கா. 7993
மாலிக், யு.சிபா 7283
மாவை நித்தியானந்தன் 7424-26, 7430
மாறன், ரேணுகா 7536

மானா மக்கீன் 7840
மிஹ்றாஜ், M.N. 7148
மீனாட்சிசுந்தரம், பா. 7973
மீனாட்சிசுந்தரம்பிள்ளை, டி.பி. 7982
முகில்வண்ணன் 7597, 7680
முகிலன், மு. 7990
முகிலன், வி. **பார்க்க** நெடுந்தீவு முகிலன்.
முத்து, வெ. 7990
முத்துக்கருப்பன், ஆர். **பார்க்க** ராமச்சந்ரன், எம்.
முத்துக்குமார கவிராசர் 7535
முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, கு. 7130, 7535, 7908
முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ. 7107
முத்தையன், சி.மு. 7039
முத்தையா, நா. 7615, 7957
முதியான்சே, M.A. 7336
முரளி, சோமசுந்தரம் 7265
முரளிதரன், செல்லத்துரை 7258
முரளீதரன், கே. 7987
முருகதாஸ், அம்மன்கிளி 7767
முருகபூபதி, லெ. 7734, 7752-53
முருகவேள், சி. 7031
முருகானந்தன், எம்.கே. 7372
முருகானந்தன், ச. 7693
முருகானந்தன், சந்திரகாந்தா 7547
முருகுப்பிள்ளை, ஆ.சி. 7041
முருகேச பண்டிதர் 7130
முல்லைமணி **பார்க்க** சுப்பிரமணியம், வே.
முல்லை முஸ்ரிபா 7459
முனிதாச, குமாரதுங்க 7439
முஸ்தபா, ஏ.சீ.ஜரீனா 7660
முஹம்மத், வெலிகம ரிம்ஸா **பார்க்க** வெலிகம ரிம்ஸா முஹம்மத்
முஹிதீன், H.M.P. 7770
மூர்த்தி, சாமி. 7990
மூளாய் அருணாசலம் 7113
மெர்னிஸ்ஸி, பாத்திமா 7183
மெலிஞ்சி முத்தன் 7717
மென்டிஸ், ஜீ.சீ. 7930
மேமன்கவி 7739
மேயர், தோமஸ் 7195
மொழிவாணன் 7094, 7844
மொறகொட, மிலிந்த 7867
மொஹிடீன் ரஜா, S.F.L. 7280
மௌலானா, எஸ்.ஹுசைன் 7146, 7171
யாகூத், M.H.M. 7046, 7343, 7362, 7365, 7412
யாழ் தர்மினி பத்மநாதன் 7601
யாழ் நங்கை **பார்க்க** இராசதுரை, அன்னலட்சுமி
யாழ் ஜெயம் 7060, 7801
யுகபாலசிங்கம், வேலுப்பிள்ளை. 7021, 7075

யோகராசா, அ. **பார்க்க** மண்டூர் அசோகா
யோகராசா, எஸ்.ஜே. 7064, 7264
யோகராஜா, ஆ. 7285-86, 7289-90
யோகேந்திரராஜா, ரதிராணி 7388
யோசப் பாலா **பார்க்க** ஜோசப் பாலா
யோதிலிங்கம், சி.அ. 8A03
ரகுநாதன், என்.கே. 7553
ரத்னாயக்கா, W. 7307
ரமீஸ், ஜா. 7496
ரமேஷ், T. 7970
ரவீந்திரநாத், சுகந்தி 7401
ரவீந்திரன், வதிரி சி. 7533
ரஜனி, புதுவை ரா. 7622
ரஹ்மான், எம்.ஏ. 7737
ரஹ்மான், ஹாபிஸ் ஏ.எம்.பஸ்லுல் 7145
ராகுலன், எம்.கே. 7872
ராணி சீதரன் 7625
ராமச்சந்ரன், எம். 7415, 7518, 7527, 7548
ராமன், எஸ். 7256
ராமேஸ்வரன், சோ. 7635, 7709
ராஜ்குமார், R.C. **பார்க்க** தெருத்தூசியோன்
ராஜ்குமார், யோ. யோண்சன் 7398
ராஜகோபால், சாந்தா **பார்க்க** சாந்தாராஜ்
ராஜபக்ஷ, மஹிந்த 7338
ராஜென், எஸ்.கே. 7900
ராஜேந்திரன், யமுனா 7994
ரெங்கசாமி, அ. 8000
ரென்னிசன், லோட் 7817
ரூபராணி ஜோசப் **பார்க்க** ஜோசப், ரூபராணி
ரூபராஜ் தேவதாசன் 7765
ரூபா செல்வா **பார்க்க** செல்வச்சந்திரன், ரூபா
ரெங்கநாதன், கா.சி. 7501
லக்ஷ்மண ஐயர், கி. 7825
லட்சுமணன், டி. 7744
லலீசன், சந்திரமௌலீசன் 7091
லியனகே, N.J. 7348
லெப்பை, அப்துல் காதிர் 7906
லோகநாதன், கேதீஸ் 7212
லோகேஸ்வரன், மங்கையர்க்கரசி 7962
வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் NESOHR. 7939
வடிவேல், இ. 7122
வரதசுந்தரம், வே. 7136, 7851
வரதர் 7713
வரதராஜன் 7399
வரதராஜன், உமா 7706
வரதராஜா, ஐயாத்துரை 7116
வல்வைத் தேவன் 7927
வவுனியூர் இரா.உதயணன். 7644, 7662, 7692, 7694, 7714

வனசிங்க, D. ஜயசிறி 7293, 7298, 7300, 7313, 7321-24, 7327-28, 7330, 7332, 7336
வஹாப், Y.L.A. 7163
வாகரைவாணன் 7416, 7958-59, 7974, 8A06
வாகரைவாணன், கலைநிலா 7600
வாகீசமூர்த்தி, என். 7202, 7217, 7284, 7294, 7338-39, 7342, 7345-49, 7351-56, 7358, 7363-66, 7368-69
வாணி ஜெயா, அன்ரனி **பார்க்க** ஈழவாணி
வாமதேவா, சந்திரலேகா 7759
வாஹிது , M. அப்துல் 7143-44, 7147-50, 7155, 7204, 7300, 7324, 7329, 7332
விக்டர், எம். 7214
விக்டர், ம. **பார்க்க** யாழ் ஜெயம்
விக்ரம் 7511
விக்னேஸ்வரன், திருநாவுக்கரசு 7179
விசயரத்தினம், கா. 7782
விசாகரூபன், கிருஷ்ணபிள்ளை 7769
விசாகரூபன், மைதிலி 7025
விசாகன், சுப்பிரமணியம் 7931
வித்தியானந்தன், சு. 7244, 7248, 7251, 7895
விதானகமாச்சி , P.J.K. 7345
விதானச்சி, D.S. 7352
விநாயகமூர்த்தி, வெற்றிவேல் 7120, 7802
விபுலாநந்தர், சுவாமி 7061, 7725, 7792
விமல், சாமிநாதன் 7814
விமலநாதன், கனி 7340
வில்லியம்சன், J.A. 7920
விவேகானந்தா 7176
விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம். 7449
விற்செறாழ்து, உவால்ற்றர் 7976
விஜயகுமார், சி. 7190
விஜயசேன, G.G. 7334
விஜயசேன, G.J. 7292-93, 7298-300, 7314-15, 7317-25, 7327-28, 7330-32, 7335-36
விஜயதுங்க, G.J. 7329
விஜேந்திரன், காவலூர் இ. 7038
விஜேந்திரா, ஸ்ரீரஞ்சனி 7623
விஜேசேகர, G.J. 7313
விஜேபால, K.D. 7325
விஷ்ணுவர்த்தினி, அ. 7642
வீரக்கொடி, F.R.L.M. 7368-69
வீரக்கொடி, W.R.L.M. 7202, 7349-50, 7357-58, 7366
வீரகத்தி, க. 7268
வீரசேகர, பியசீல 7166
வீரன், பூங்குழலி 7990
வெகுஜனன் **பார்க்க** செந்திவேல், சி.கா.
வெல்லவூர்க் கோபால் 7968
வெலிகம ரிம்ஸா முஹம்மத் 7504
வெற்றிமகன் **பார்க்க** விநாயகமூர்த்தி, வெற்றிவேல்
வேதநாதன், மா. 7092

வேதநாயகம், செல்வராணி *7169*
வேந்தனார், க. *7414, 7486*
வேல்அமுதன் **பார்க்க** அமுதன்
வேல்முருகு, ந. *7236*
வேலாயுதம், சி. *7483*
வேலாயுதன், கா. *7638*
வேலுப்பிள்ளை, வி. *7078*
வைத்தியநாதன், வசந்தா *7135*
வைத்தியரத்தின, C.K. *7350, 7353*
வைத்தீஸ்வரன், கா. *7370, 7382*
ளாபீர், ஏ.எல்.எம். *7945*
றணசிங்க, லயனல் *7330*
றனுன்கே, சுகததாச *7166*
றஷ்மி *7469*
றிபாஸ், அப்துல் லத்தீப் முஹம்மட் **பார்க்க** அலறி
றியாழ், M.J.M. *7144, 7147-48, 7150, 7155, 7204*
றியாஸ், எஸ்.எல். *7178*
றிஸ்வி, எம்.டி.எம். *7159*
றொபின்சன், ஏ.எச். *7360*
ஜமால்தீன், ஒலுவில் எஸ். *7497*
ஜமாஹிர், பி.எம். *7043, 7053*
ஜயக்கொடி, A.T.A.H.L. *7317*
ஜயசேகர, H.R.நிமல் *7292-93, 7302, 7300, 7318 -20, 7322, 7328, 7332, 7334-36*
ஜயசேகரா, R.P.A. *7202, 7217, 7339, 7342, 7345-52, 7354-58, 7362-63, 7365-66, 7368-69*
ஜயத்திலக்க, ரமணி *7165-66*
ஜயலத், J.A.S. *7292, 7300, 7316, 7318, 7321, 7326, 7334*
ஜயவர்த்தன, R.R. *7163*
ஜயவர்த்தன, குமாரி *7187*
ஜலீல், எம்.பி.முஹம்மது *7668, 7677*
ஜஹான், பஹீமா *7461*
ஜீவகாருண்யன், இ. *7800*
ஜீவகுமாரன், கலாநிதி *7584*
ஜீவகுமாரன், வி. *7584, 7647*
ஜீவா, அந்தனி *7009*
ஜீவா, S.M. *7277-78*
ஜுனைதா ஷெரீப் *7596*
ஜெகநாதன், சிறிகலா *7812*
ஜெகானந்தகுரு, இராஜேஸ்வரி *7111*
ஜெயக்குமார், பா.யூடி ரமேஸ் *7371*
ஜெயச்சந்திரன், சோமரட்ணம் *7701*
ஜெயசிங்கர், சிவஞானம் *7210*
ஜெயசேகர, H.R. நிமால் *7298, 7313-14, 7321, 7325*
ஜெயசேகரா, H.G.C.A.T *7163, 7259, 7284, 7338-39, 7367*
ஜெயபாலன், த. *7167*
ஜெயபாலன், வ.ஐ.ச. *7506*
ஜெயமோகன் *7984*
ஜெயராசா, சபா. *7050-51, 7222, 7237, 7453, 7735*

ஜெயராமன், தேவராஜன் 7386
ஜெயராஜா, அ.பேக்மன் 7398
ஜெலூட், தை.யஸ்ரின் 7395
ஜோசப், தெளிவத்தை **பார்க்க** தெளிவத்தை ஜோசப்
ஜோசப் பாலா 7065, 7746
ஜோசப், ரூபராணி 7667
ஜோசப், வி.பி. **பார்க்க** குழல்-அருளாளன்
ஜோர்ஜ், ஏ.பீ. **பார்க்க** பளையூர் ஏ.பீ.ஜோர்ஜ்.
ஜோர்ஜ், புஷ்பராணி 7838-39
ஜோன், எஸ். 7972
ஜோன், டானியல் 7972
ஜோன்சன், பஸ்தியாம்பிள்ளை 7009
ஜோன்ஸ், ஜி.பி. 7191
ஸ்ரீகந்தவேள், கந்தையா 7402-03
ஸ்ரீகாந்தலட்சுமி, அருளானந்தம் 7024, 7026,
ஸ்ரீ பிரசாந்தன் 7810
ஸ்ரீஸ்கந்தராஜா, வசந்தி தேவராஜா 7066
ஸலபி, எம்.ஏ.ஹாபிழ் 7153
ஸாஹிர், எம்.சி.எம். 7945, 7949
ஸீனோ, அஷ்-ஷெய்க் ஜெமீல் 7156
ஸுதசிங்ஹ, ஜீ.டீ. 7343
ஸுபைர், மு.கா.மு. 7530
ஸெயின், முஹம்மது 7617
ஸைன்-நளீமி, அஷ்ஷெய்க் ரஊப் 7158, 7206
ஷ, லாவ் 7818
ஷரிபுத்தீன், ஜின்னாஹ் 7752-53, 7789
ஷாஜஹான், ஏ.என்.எம். 7525
ஷிப்லி, M.P.M.M. 7298, 7316-17, 7320, 7323, 7325, 7326, 7334, 7336
ஷியாம், ஏ.ஆர்.எம். 7034
ஷெரீப், எம்.றிஷான் 7544
ஷெரீப், K.M.M. **பார்க்க** ஜுனைதா ஷெரீப்
ஷெல்லிதாசன் 7500
ஷெவில், பேடினன்ட் 7918
ஹக், A.R.M. றூஹுல் 7143-44, 7147-50, 7155, 7204
ஹக், M.M.M. நூறுல் 7953
ஹமன்ட், ஈ.எச். 7360
ஹமீட், M.S.S. 7442
ஹரீஸ், ஷல்மானுல் 7524
ஹனிபா, இஸட். ஏ. முஹம்மது 7967
ஹனீபா, எஸ்.எல்.எம். 7591
ஹஸன் , M.H.M. 7169
ஹாரிஸ், A.R.M. 7923
ஹெம்மாத்தகம, சந்திரா 7412
ஹெரிக்கே, சிறிபால 7166
ஹேவக, A.K. 7367
----------

# சமகாலத்தின் அறிவுத் தேவையோடு சங்கமித்தல்

**பேராசிரியர் சபா.ஜெயராசா**

சமகாலத்தைய சமூகத்தைத் தொடர்பாடல் நோக்கிலே **தகவற் சமூகம்** என்று குறிப்பிடுவர். தகவல் தொடர்பான பல அணுகுமுறைகள் புலமைப் பயன்பாட்டிலுள்ளன. தகவலியல், தகவற் கோட்பாடு, தகவல் விஞ்ஞானம், தகவல் முகாமை, தகவல் முதலாளியம், தகவல் மேலாதிக்கம் என்றவாறு ஆய்வு நோக்கிலே பல தொடர்கள் இத்துறையிலே பயன்படுத்தப்படுகின்றன.

பொருண்மிய நிலையில் தகவல் ஒரு விற்பனைப் பண்டமாக மாறி விட்டது. விற்பனைப் பண்டமென்ற நிலையில் அது உற்பத்தியாளருக்குரிய இலாப நோக்குடன் இயக்கப்படுகின்றது. தகவல் என்பது ஒரு **கட்டுமை** (Construct) வடிவம். தொடர்பாடல் வடிவில் அது கட்டுமை செய்யப்படுகின்றது. தகவலை கட்டுமை செய்வதற்கு அறிவு வேண்டும். அறிவு என்னும்பொழுது அது கல்வியுடன் இணைந்த செயற்பாடாகின்றது. தகவல் மட்டுமன்றி எந்த நாட்டினதும் அனைத்து உற்பத்திச் செயற்பாடுகளும் அறிவுடன் தொடர்புபட்டிருக்கும்.

தகவலைப் பொருண்மிய நிலையில் ஆராய்ந்தவர்களுள் **போறாட்** என்பவர் முக்கியமானவர். பொருண்மியக் கண்ணோட்டத்தில் அவர் தகவலை ஐந்து பிரிவாகப் பிரித்து ஆராய்ந்தார். தகவல் உற்பத்தி, விநியோகம், தகவலைக் கையாளல், தகவல் வன்கலனும் மென்கலனும், தகவலுக்குரிய அனுசரணைச் செயற்பாடுகள் என வகுத்தார். அவற்றை அடியொற்றி முதலாம் நிலைத் தொழிற்பாடுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தொழிற்பாடுகள் என்ற பாகுபாட்டையும் அவர் ஏற்படுத்தினார். தகவலின் பொருண்மியத் தொடர்புகளை ஆராய்ந்த அவர் அதனுடன் ஆழ்ந்து நிற்கும் உள்ளார்ந்த பொருண்மியப் பறிப்பை அணுகத் தவறிவிட்டார்.

சமூக வரலாறும் தகவல் வரலாறும் ஒன்றிணைந்தவை. சமூக வரலாற்றின் இயல்போடு தகவலின் இயல்பும் அதன் பண்பும் மாறுபாடு அடைந்துவந்துள்ளது. எடுத்துக்காட்டாக நிலப்பிரபுத்துவ அமைப்பில் சமூக நியதிகளை மறுப்பின்றி ஏற்று ஒழுகுவதற்குரிய தகவல் கையளிப்பே மேலோங்கியிருந்தது.

சமூகத்தோடு ஒட்டாத தனி வரலாறு தகவலுக்கு உண்டென்று மேலைப்புல ஆய்வாளருள் ஒருசாரார் முன்வைக்கும் கருத்து ஒருதலைப்பட்சமான நோக்கு. மேலும் தகவல் தொழில்நுட்பத்தில் நிகழ்ந்துவரும் மாற்றங்கள் சமூக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. தகவல் தொழில்நுட்பத்தில் பெரும்புரட்சி நிகழ்ந்துகொண்டிருக்கும் சமகாலச் சூழலில் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்வோரின் எண்ணிக்கையும் உலகில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அதேவேளை **எடுத்துரைக்க முடியாத வறுமை** என்ற பிறிதொரு தோற்றப்பாடும் தோன்றியுள்ளது. எதையும் மறுப்பின்றியும் திறனாய்வின்றியும் ஏற்றுக்கொள்ளும் **மௌனப் பண்பாடு** என்பதும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றது. அத்தகைய சூழலில் தகவற் புரட்சியானது சமூகப் புரட்சியையும் சமூக நீதியையும் ஏற்படுத்தவில்லை என்பது தெளிவாகின்றது.

தொழில்களிலும் வாழ்க்கையிலும் கணனிகளின் பயன்பாடு வியத்தகு அதிகரிப்பை ஏற்படுத்திவரும் நிலையில் உலக வறுமையின் பெருக்கம் சமாந்தரமாக நிகழ்ந்துவரும் நிலை கூடிய கவனஈர்ப்பைப் பெறத்தொடங்கியுள்ளது. அதே வேளை உலகளாவிய நிலையில் உணவுப்பொருட்களினதும் மருந்துப் பொருட்களினதும் விலையேற்றம் தொடர்ந்து உயர்ந்தவண்ணமுள்ளது.

எந்த நாடு அதிக அளவு தகவல்களைக் களஞ்சியப்படுத்தியும் விநியோகித்தும் வருகின்றதோ அதுவே செல்வம் மிக்க நாடு என்று அடையாளப்படுத்தலில் ஓர் இடைவெளி உண்டு. அதாவது எவரது கட்டுப்பாட்டில் அவை குவிந்துள்ளன என்பதைக் கண்டறிய முடியாத இடைவெளி அங்கே உண்டு.

மானிடப் பின்னணியில் நோக்கும் பொழுது தகவல் சமூகத்தில் கீழ்வாழ்வோர் மேலுயரும் மாற்றங்கள் நிகழவில்லை. ஏற்கனவே இருக்கும் சமூக அமைப்பும், அடுக்கமைப்பு நிலைகளும் மேலும் வலிமையாக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை தகவலின் மீப்பெருக்கம் சந்தை வசதிகளின் பிரவாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னர் ஒஸ்கார் வைல்டு அவர்கள் கூறிய ஒரு கருத்தை நவீன ஆய்வாளர் மீளச்சொல்லி வருகின்றனர். "எல்லாவிதமான தகவல்களும் எங்களிடம் உண்டு. ஆனால் பொருளற்ற கருத்தையே நாம் தெரிந்துவைத்திருக்கின்றோம்". தகவல் சமூகத்தை தீவிர பரிசீலனைக்கு உட்படுத்தவேண்டிய தேவையை மேற்குறித்த கூற்று அருட்டிவருகின்றது.

தகவற் சமூகத்தோடு இணைந்த ஓர் எண்ணக்கருவாக இணைப்பியம் (connectivity) அமைகின்றது. தகவல் நீர்ம்மைப் பண்புடன் பரந்து விரிந்து பரவிச் செல்லும் செயற்பாட்டை முன்னெடுக்கும் **இணைப்பை** முதன்மைப்படுத்தி அந்த எண்ணக்கரு உருவாக்கப்பட்டுள்ளது. மனித நடத்தைகள் தகவல் இணைப்புடன் இணைந்த நடத்தைகளாக மாறும்பொழுது நடத்தை உளவியலை மீள்வாசிப்புக்கு உட்படுத்தவேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

அத்தகைய சமூகத்தை அடியொற்றி **தகவல் எழுத்தறிவு** என்ற பிறிதோர் எண்ணக் கருவும் முன்வைக்கப்படுகின்றது. கோட்பாட்டு நிலை மற்றும் செயல்வடிவ நிலைகளில் சமூகத்தின் இயல்புக்கேற்றவாறு துலங்குதல் தகவல் எழுத்தறிவாகின்றது. அச்சமூகத்தின் வினைத்திறனுடன் இயங்குவதற்கு அந்த எழுத்தறிவு அடிப்படையாகக் கருதப்படுகின்றது. தகவல் எழுத்தறிவிலே பின்வருவன உள்ளடக்கப்படுகின்றன.

(அ) நூலக எழுத்தறிவு
(ஆ) ஊடக எழுத்தறிவு
(இ) எண்ம (Digital)த் தகவல் எழுத்தறிவு
(ஈ) கணனி எழுத்தறிவு
(உ) இணையத்தள எழுத்தறிவு
(ஊ) கல்வி மற்றும் தொழில்கள் தொடர்பான எழுத்தறிவு
(எ) சமூக இயல்பு தொடர்பான எழுத்தறிவு
(ஏ) திறனாய்வு எழுத்தறிவு

மேற் குறித்தவாறு விரிந்த, அகல்விரி நோக்கிலே தகவல் எழுத்தறிவை நோக்குதலே கல்வியியல் நோக்கிற் பயனுடையது. அது கணனித் தொழில்நுட்பத்துடன் மட்டும் தொடர்புடையது என்பது தவறான விளக்கத்துக்கு இட்டுச் செல்லும்.

தகவல் எழுத்தறிவினால் தனித்து ஒருவருக்குரிய திறன்கள் (Skills) மட்டும் வலியுறுத்தப்படவில்லை. திறன்களுக்கு மேலான தேர்ச்சியும், அறிவும், தேடலும், ஞானச் சுவையும் வலியுறுத்தப்படுகின்றன. மேலான அறிவு நடைமுறைகளுக்குக் கொண்டுவரப்படுதலும், சுரண்டலற்ற சமூக நீதி முன்னெடுக்கப்படுதலும் முக்கியமானவை.

தகவல் என்பது பண்பு நிலையில் மேலோங்கியதாகவும், சமூக நீதியைப் பராமரிப்பதாகவும் இருக்கவேண்டுமேயன்றி அவற்றுக்கு ஊறு விளைவிப்பதாகவோ, அடாத்துச் செய்வதாகவோ இருத்தலாகாது. மேலும் எழுத்தறிவு என்பது அரிச்சுவடி பற்றிய அறிவு அன்று. அறியாமையை அகற்றுவதற்குரிய அறிவே எழுத்தறிவாகும். அந்நிலையில் தகவல் எழுத்தறிவு என்பது இன்னமும் சரியாக விளங்கப்படாத நிலையிலே தான் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது என்று அத்துறையில் ஆழ்ந்து ஆய்வுகளை மேற்கொண்டுவரும் **ஸ்டீபன் டவுன்** குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய சமூகத்திலே நூலகங்கள் மேலும் முக்கியமானதும் சிறப்பானதுமான இடத்தைப் பெறத்தொடங்கியுள்ளன. அறிவின் திரட்டல்களான நூல்களின் களஞ்சியமாக நூலகங்கள் விளங்குகின்றன என்று மரபுவழியாகக் கூறுதல் மட்டும் போதுமானதன்று. தேவைக்குரிய தகவலையும் அறிவையும் திறனாய்வுடன் பெற்றுக்கொள்ளும் நூலகப் பயன்பாடு என்பது அதிக முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது. இடைவெளிகள் அற்ற நிலையில் தகவலைப் பெற்றுக்கொள்ளும் சரியான மூலகங்களை நோக்கி நகர்தல் வேண்டும். அந்நிலையிலே தகவலின் இடைவெளிகளைக் கண்டறிதல் ஒருமுக்கியமான செயற்பாடு எழுகோலம் பெறுகின்றது.

தகவல்களை ஒப்புநோக்குதலும் மெய்ம்மை நிலைகளைத் தேடுதலும் பயன்பாட்டுக்குரிய தேடலை முன்னெடுக்க உதவும். தகவலை ஒப்பீடு செய்தல், ஒழுங்கமைத்தல், தொகுத்தல் என்ற செயற்பாடுகளினூடே அடிப்படைத் தளப்பரப்பிலிருந்து அறிவுப்பரப்பை நோக்கி மேலெழ முடியும். தகவல் என்பது அறிவைப் பெறுவதற்கு அடிப்படையானதேயன்றி, தகவல் அறிவாகாது. மேலும் அறிவு என்பது முடிந்த முடிபு அன்று. அதற்கு மேலும் நகருதல் வேண்டும். அத்தகைய நகர்ச்சியே மேலான விளைவுகளை ஏற்படுத்தும். அந்த நிலையை **ஞானம்** என்று குறித்தல் எமது பாரம்பரியத்தில் இடம்பெற்றது.

பின்னவீனத்துவச் சிந்தனைகள் நூலியத்தின் (Text) கட்டுமானக் குலைப்பை வலியுறுத்துகின்றன. தகவலே நூலியத்தின் அடிப்படையாகின்றது. நூலியத்தை வாசிப்பவர் ஒவ்வொருவரும் தத்தமது நிலைகளில் நின்று நூலியத்துக்குப் பொருள்காண்கின்றனர் என்ற தனிமனித வாதம் அங்கே வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் அதற்கு மாறுபாடான கருத்துக்கள் இன்று முன்வைக்கப்படுகின்றன. அதாவது ஒரே சமூக அனுபவங்களைக் கொண்டவர்களும், ஒரே வர்க்க உணர்வுகொண்டவர்களும் ஒரேவகையான புலக்காட்சி கொள்வர் என்பது முக்கியமான ஒரு கருத்து. அந்நிலையில் **தகவல் சமூகமும் நூலியங்களின் வாசிப்பும்** என்ற விடயம் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது. மேலும் வர்க்கநிலை வாசிப்பு என்ற விடயம் மேலெழுகின்றது.

வாசிப்பும் தகவல் சமூகமும் தொடர்பான ஆய்வுகளில் மீநூலியம் (Hypertext), மீஊடகம் முதலான எழுபொருட்கள் முன்வைக்கப்படுகின்றன. அதாவது நூலியங்களுக்கிடையே இணைப்பை ஏற்படுத்தலும், படிமங்களுக்கும் நூலியங்களுக்குமிடையே தொடர்புகளை ஏற்படுத்துதலும் என்ற வகைகளில் எல்லைகளைத் தகர்த்துப் பொதுநிலையில் இணைவு கொண்டுவரும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

எழுந்தமானத் தொடர்புகளுக்கும் இணைப்புக்களுக்கும் இடமளிக்கப்படும் முயற்சி திறந்துவிடப்பட்டுள்ளது. தகவலின் அளவும் அசைவும் பெருக்கெடுத்தலுடனும், கட்டற்ற பிரதியாக்கலுடனும், வலைத்தள ஆக்கலுடனும் மரபுவழி எல்லைகளைக் கடத்தலுடனும் மனிதச் செயற்பாடுகள் இணைந்துகொள்கின்றன.

சமகாலத்தில் தகவலுடன் இணைந்த கொள்கையாக்கங்களும் இடம்பெற்றுவருகின்றன. அவற்றுள் மரபுரிமை, பதிப்புரிமை, நுண்மதி உரிமைக் கொள்கைகள் மற்றும் நூலகமும் ஆவணக் காப்பகமும் சார்ந்த கொள்கைகள் என்பன அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. தகவல்களைத் திரட்டுதல், பராமரித்தல், பரப்புதல், பெறுவதற்குரிய வழிகளை மேற்கொள்ளல் என்ற செயற்பாடுகளில் தனிநபர் நலன்களும், சமூக நலன்களும் மோதுதலும், இணக்கப்பாடு காணுதலும் ஆகிய செயற்பாடுகள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

மேற்கூறியவற்றின் பின்புலத்தில் நூலகர் **என்.செல்வராஜா** அவர்களின் பணிகள் தமிழியலின் நவீன தேவைகளை உற்றுணர்ந்து மேற்கொள்ளப்படும் பதிவகளாக அமைந்துவருகின்றன. சமகாலத்தின் அறிவு வேட்கையுடன் தேடுவோரைச் சங்கமிக்கவைக்கும் நடவடிக்கையாக **நூல்தேட்டம்** தொகுதிகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. பாடப் புலங்களை அடியொற்றியும், அகரவரிசையிலும் இலகுவில் அணுகக்கூடிய வகையிலே நூலக விஞ்ஞான அடிப்படையிலே நிரலாக்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒரு பெரும் தகவல் ஆய்வு நிறுவனம் மேற்கொள்ளவேண்டிய பணியினைத் தனித்த ஆளுமையுடன் முன்னெடுக்கும் என்.செல்வராஜா அவர்களது பணிகள் வளர்நிலைத் தமிழின் இங்கிதத்துக்கு வலுவூட்டுகின்றன.

# நூல்தேட்டம் என்.செல்வராஜாவுடனான நேர்காணல்

**தமிழகத்திலிருந்து**

**கே.ஜி.மகாதேவா**

***(நன்றியுடன் மீள்பிரசுரம்: தினக்குரல் 20.11.2011, பக்கம் 21)***

*"நூல்தேட்டத்தின் நோக்கத்தை தமிழகத்தில் அறிமுகம் செய்துவைக்கவும், தமிழகப் பிரசுராலயங்களின் வழியாக ஈழத்து எழுத்தாளர்கள் வெளியிட்ட நூல்களைப்பற்றிய தகவல்களை நூல்தேட்டப் பதிவுக்காகத் திரட்டிக்கொள்ளவும் தமிழகம் வந்த எனக்கு, இங்கு பல்கலைக்கழக மட்டத்தில் ஏற்கெனவே நூல்தேட்டம் சேகரிப்பில் இடம்பெற்றுவிட்டதென்பதையும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் நூல்தேட்டம் தமிழ் முதுகலைமாணிப் பட்டப்படிப்பின் ஒரு முக்கிய உசாத்துணை நூலாக இடம்பெற்று, மாணவர்களுக்கும் இளம் ஆய்வாளர்களுக்குமான உசாத்துணை நூல்களில் முக்கியமானதாக அது பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றதென்பதையும் அறிந்துகொள்ள முடிந்தபோது பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. எனது நூல்தேட்டத்தின் தமிழகத் தேடல் பிரயாணத்தின் முக்கிய நோக்கம் ஓரளவு நிறைவேறிவிட்டதென்பதை அவ்வேளையில் உணர்ந்துகொண்டேன்" என்று நூல்தேட்டம் என்.செல்வராஜா தினக்குரலுக்கு அளித்த நேர்காணலில் உள்ளம் பூரித்தார்.*

*திரைகடல் ஓடி, ஈழத்தமிழர்தம் நூல்களைத் தேடிப் பதிவுசெய்யும் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவர் திரு. என்.செல்வராஜா. அரசு சார்பாகவோ, அமைப்பு மற்றும் நிறுவனரீதியாகவோ அல்லாமல் பெருமுயற்சியுடன் முழுமையான பங்களிப்பில், தொடங்கியே ஆகவேண்டிய தமிழினப் பணியை தனித்து நின்று அமைதியாகச் சாதித்துவரும் மூத்த நூலகவியலாளரும், பன்னூலாசிரியரும், எழுத்தியல் வித்தகருமான என்.செல்வராஜா ஈழத்தவரின் தமிழ்நூல்களைத் தமது நூல்தேட்டம் தொகுதிகளின் வழியாக ஆவணப்படுத்தும் பொறுப்பை 1990களின் இறுதிப்பகுதியில் தொடங்கி இதுவரை எட்டுத் தொகுதிகளில் மொத்தம் எண்ணாயிரம் நூல்களைப் பதிவுசெய்துள்ளார்.*

*என்.செல்வராஜா தமிழ்நாட்டுக்கு வருவது இதுவே முதல்தடவை. நூல்தேட்டப் பயணத்தை எப்பொழுதுமே முன்னேற்பாட்டுடன் நன்கு திட்டமிட்டுத் தொடங்கும் அவர் சில மாதங்களுக்கு முன்பாகவே லண்டனிலிருந்து என்னுடன் திருச்சிக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு தமிழகப் பிரயாணத்திட்டத்தை வரைந்துவிட்டார். பிரித்தானிய நொட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்ற கட்டிடக்கலைஞரான (*Architect*) தனது மகன் கௌதமனுடன் பதின்மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு தமிழகம் வந்திருந்த அவருடன் ஒரு நேர்காணல்:*

**கேள்வி: உலகின் பல நாடுகளுக்கும் சென்று, ஈழத்தமிழர்களின் நூல்களைத் தேடி நூல்தேட்டத்தில் ஆவணப்படுத்திவரும் உங்களின் அபார முயற்சிக்கு அடித்தளமிட்ட நிகழ்வுகள் எதுவும் உண்டா?**

*பதில்: நூல்கள் எமது இனத்தின் பண்பாட்டை, கலாச்சார விழுமியங்களை, அறிவியல் தேடலை அளவிட உதவும் சாதனங்களாகும் என்று எனது நூல்தேட்டம் முதலாவது தொகுதியின் முன்னுரையில் குறிப்பிட்டதையே இப்பொழுது மீண்டும் உங்களுக்குச் சொல்கிறேன். சர்வதேச ரீதியில் தமிழ்மொழிக்கும், தமிழ் இலக்கியத்துக்கும் தமிழின உரிமைப்போருக்கும் பெரும்பங்காற்றும் ஒரு வரலாற்று முக்கியத்துவமான காலகட்டத்தில் நாம் இன்று பயணித்துக்கொண்டிருக்கிறோம். சமகாலத்தில் போரிலக்கியம் படைக்கும் ஒரு இனமாக கடந்த முப்பது ஆண்டுகளாக ஈழத்தமிழர்களான நாம் இனம்காணப்பட்டுள்ளோம். இந்நிலையில் அந்த வரலாற்றை ஆணித்தரமாகப் பதிவாக்கும் முன்னெடுப்பில் எனது பணி அமைகின்றது. எமது வரலாற்றைப் பதிவுசெய்வதில் நாம் அறிந்தோ அறியாமலோ கடந்தகாலத்தில் விட்டுச்சென்ற தவறுகளை இனம்கண்டு முடிந்தவரையில் திருத்திக்கொள்ளவேண்டும். தமிழ் இனத்துக்கு, தமிழ்மொழிக்கு மீண்டும் வரலாற்றுத் தவறொன்று இழைக்கப்பட்டுவிடக்கூடாது என்று கருதுபவன் நான். அன்று எம்மை ஆண்ட காலனியாதிக்க அந்நியர்களிடமே எமது வரலாற்றை எழுதித்தரும் வாய்ப்பை வழங்கிய வரலாற்றுத் தவறைப்போன்று, இன்றைய ஆட்சியாளர்களுக்கும் அந்த வாய்ப்பை-ஏகபோக உரிமையாக வழங்கிவிடக்கூடாது. அவை எப்போதும் ஒருபக்கச் சார்பானவை. வேண்டுமென்றே பிழைகள் திணிக்கப்பட்டவை. அவர்களது பார்வை தங்களது வெற்றி நடவடிக்கைகள் மீது மட்டுமே*

*விழுந்திருக்கும். அவர்கள் விட்ட தவறுகள், அவர்களது அடிமைத்தனம், தந்திரோபாயம் என்பன மறைக்கப்பட்டிருக்கும்.*

*சின்ன வயதில் எனக்கு ஏற்பட்ட நூல்கள் வாசிக்கும் ஆர்வத்தில் எழுந்த எழுச்சிகள் நாளடைவில் இனம், மொழி என்று பற்றிக்கொண்டபோது சிந்தனைகளும் புதிய வடிவம்பெறத் தொடங்கின. அதன் தாக்கம்தான் ஈழத்தமிழர் உண்மை வரலாற்றை ஈழத்தமிழர்கள்தான் பதிவுசெய்யவேண்டும் என்ற வைராக்கியம். இதன் வெளிப்பாடே நூல்தேட்டம். அரசியல் வேறுபாடுகள், கருத்து மாற்றங்கள், சாதி, சமய, வர்க்க, பேதங்கள், முற்போக்கு, பிற்போக்கு, புதுமை, பழைமை என்று எந்தக் கண்ணாடியும் அணிந்துகொண்டு பார்க்காமல், ஈழத்து மண்ணைத் தமது தாய்மண்ணாகக் கொள்ளும் எந்த ஒருவரது எழுத்தையும் முழுமையான கௌரவத்துடன் நூல்தேட்டத்தில் பதிவுசெய்து வருகின்றேன். ஒரு ஆய்வாளனுக்கு உலகளாவிய ஈழத்துத் தமிழ் அறிவியல்தளத்தில் என்னென்ன ஆவணங்கள் எழுத்தில் உள்ளன என்பதை தேடித்தொகுத்துப் படையலிடும் பணியே என்னுடையது என்றால் மிகையாகாது.*

***கேள்வி: நூலகவியலில் உங்களுக்குள் புதைந்துகிடந்த அந்த அனுபவங்கள் பற்றி?***

*பதில்: இளம் வயதில் மிகவும் ஆர்வத்துடன் பத்திரிகைகள் படிப்பேன். இந்த ஆர்வம் நாளடைவில் நூலகம் சம்பந்தமாக அதன் அவசியத் தேவை குறித்து பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதத் தூண்டியது. இது நீடிக்கவே, நூலகவியல் என்னும் காலாண்டு சஞ்சிகையைப் பிரசவிக்கும் அடுத்தகட்ட நிலைக்குத் தள்ளப்பட்டேன். அக்காலகட்டத்தில் புதிதாக எம்மவர்மத்தியில் அறிமுகமாகியிருந்த நூலகவியல்துறைசார்ந்த கட்டுரைகள் தமிழில் வெகு குறைவாகவே நூலகவியலாளர்களால் எழுதப்பட்டிருந்தன. எழுதப்பட்ட கொஞ்சநஞ்சமும் ஆங்கில, சிங்கள மொழிகளிலேயே அமைந்திருந்தன. இந்நிலையில் இலங்கையில் தமிழில் வெளிவந்த முதலாவது நூலகத்துறைசார்ந்த பிரசுரமாக நூலகவியல் காலாண்டிதழ் அமைந்தது. ஏழு ஆண்டுகள் வரை வெளிவந்த இந்தச் சஞ்சிகை, நூலகத்துறையைத் தேர்ந்தெடுத்த மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் இத்துறையில் மாணவர்களை ஆர்வம் கொள்ளச்செய்யும் ஊக்கியாகவும் செயற்பட்டது. நூலகவியல் தொடர்பான கல்விப்புலமை, ஆய்வு நூலகராகப் பணியாற்றிய அனுபவம் எல்லாமே எனக்குத் துணைநின்றன. 1978க்குப் பின்னரே நான் ஒரு தனித்துவமான நூலகராக இலங்கையில் இனம்காணப்பட்டேன்.*

***கேள்வி: ஒரு தனிமனிதனாக நூல்தேட்டம் என்ற இப்பாரிய பொறுப்பை சுகமாகச் சுமக்கின்றீர்கள். ஈழத்தில் மட்டுமின்றி புலம்பெயர்ந்துவாழும் ஈழத்தமிழ் மக்களிடமிருந்து உங்கள் எதிர்பார்ப்பு என்ன?***

*நூல்தேட்டம் எந்தவிதமான வர்த்தகநோக்கங்களுமற்ற தனிமனித முயற்சியாகும். இதனை ஆய்வாளர்களிடையே அறிமுகப்படுத்தி விநியோகித்து, விற்பனை செய்வதன்மூலம் கிடைக்கப்பெறும் நிதியுதவி, நூல்தேட்டத்தின் அடுத்த தொகுதிக்குத் துணையாக இருக்கும். இந்த ஆவணப்பதிவின் அவசியத்தை, தேவையைப் புரிந்துகொள்ளும் தமிழ் உறவுகள் என்மீது சுமத்தப்பட்டுள்ள நிதிச் சுமையைக் குறைக்கவும், எனது பணியை எளிமையாக்கவும் உதவலாம். ஈழத்தில் உள்ளவர்கள் மாத்திரமன்றி, தமிழகத்திலும், உலக அரங்கிலும் புலம்பெயர்ந்தும் வாழும் தமிழர்களும், நூல்தேட்டத்தின் அனைத்துத் தொகுதிகளையும் தாம் வாழும் பிரதேசங்களில் உள்ள நூலகங்களில் இடம்பெறச்செய்யும் நோக்கில் அவ்வப்பிரதேச நூலகர்களிடம் பரிந்துரைக்கலாம். அதுமட்டுமின்றி ஆர்வமுடையவர்களும், அறிவுவேட்கை கொண்டவர்களும், வீட்டுக்கொரு நூலகம் அமைத்து அங்கெல்லாம் நூல்தேட்டப் பிரதிகளை இடம்பெறச் செய்வதுடன் முடிந்தவரை நூல்தேட்டத்தின் இருப்பை தமிழியல் ஆய்வாளர்களிடையே பிரச்சாரப்படுத்துவதும் அவர்களது தார்மீகக் கடமையாகும். இதுவே எனது எதிர்பார்ப்பாகும்.*

***கேள்வி: முதல் தமிழக விஜயம். உங்கள் நூல்தேடல் பயணம் பயனுள்ளதாக இருந்ததா?***

*பதில்: நிச்சயமாக. நான் திட்டமிட்டது பதின்மூன்றுநாள் பிரயாணத்திட்டம். முதல் பத்து நாள் சென்னை. அடுத்த மூன்று நாட்கள் திருச்சி மதுரை தஞ்சாவூர். தமிழ்நாட்டில் இறங்கியதும் முதலில் ஒருவிதமான பதற்றம் இருந்தது. அதாவது முதல்நாள்வரை தொலைபேசி வழியாகவும், கடிதங்கள் மூலமும் மட்டுமே பழக்கப்பட்டவர்களின் நிஜ முகங்களைப் பார்ப்பதிலும், நான்*

எதிர்பார்த்துவந்திருந்த தமிழகத்தில் வாழும் ஈழத்துப் படைப்பாளிகளின் நூல்கள்- தகவல்கள் கிடைப்பதிலும் ஏமாற்றம் தவிர்க்கப்படுமா என்பதுதான். திட்டமிட்டபடி சென்னையில் எதிர்பார்த்த வரவேற்புக் கிடைத்தது. நாளொன்றுக்கு ஒரு பதிப்பகம் என்ற வகையில் நேரத்தைச் செலவிடுவதாக எனது திட்டம் இருந்தது. முன்கூட்டியே பதிப்பகங்களுடன் தொடர்புகொண்டு நாட்களை தீர்மானித்திருந்தேன். அவ்வகையில் முதல்நாள் மணிமேகலைப் பிரசுரத்தில் 160 ஈழத்தமிழர்களின் புதிய நூல்கள் கிடைத்தமை மகிழ்ச்சியை அளித்தது. அடுத்து மித்ர பதிப்பகத்தில் 60 புதிய நூல்களைப் பதிவுசெய்யும் வாய்ப்பு. காந்தளகத்தில் 10 நூல்கள் கிடைத்த நிலையில் காலச்சுவடு பதிப்பகத்திலிருந்து 42 ஈழத்தமிழர்களின் புதிய நூல்கள் கிட்டின. இவற்றில் பல நூல்கள் நான் எதிர்பாராதவை. வேறு சில தமிழக வெளியீட்டாளர்களுடன் நான் தொடர்புகொண்டபோது, எதிர்பார்த்த நூல்கள் உடனடியாகக் கைவசம் வரவில்லை. சசிபாரதி, குரும்பசிட்டி கனகரத்தினம் போன்ற முக்கியமான பிரமுகர்களையும், இலக்கியகர்த்தாக்களையும் சந்தித்து அளவளாவ வாய்ப்புக்கிட்டியது.

திருச்சியைச் சென்றடைந்ததும் முதல்நாள் பயணம் மதுரையாக இருந்தது. இந்தப் பயணத்திட்டத்தை ஈழத்திலிருந்து தமிழகம் திரும்பிய பிரபல கவிஞர் சி.பன்னீர்ச்செல்வம் ஏற்பாடு செய்திருந்தார். தமது தொழிலகங்களிலிருந்து விடுப்புப் பெற்று அன்றைய தினத்தை என்னுடன் கழித்த அவர்களின் விருந்தோம்பல் நெஞ்சில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டது. தங்கள் செலவிலேயே மதுரையில் ஒரு ஹோட்டல் ஒழுங்குசெய்து, உணவு வழங்கி, உபசரித்து உரையாடியதுடன் நில்லாது, மதுரை மீனாட்சி அம்மன், திருப்பரங்குன்றம் போன்ற முக்கிய கோயில்கள் தரிசனத்துக்கும் அழைத்துச்சென்றமை, ஈழத்தமிழர் தம் விருந்தோம்பல் பண்பைத் தொட்டுக்காட்டியது. கவிஞர் சி.பன்னீர்ச்செல்வம் பின்னர் ஒரு கலந்துரையாடலையும், ஏற்பாடு செய்திருந்தார். கவிஞர்கள் அருணா சுந்தரராசன், பேனா மனோகரன், ஆகியோர் நூல்தேட்டம் பற்றிய தங்களது கருத்துகளை மகிழ்ச்சியுடன் பரிமாறி, இப்பாரிய பொறுப்பின் அவசியத் தேவையை வரவேற்று தாம் எனக்காகச் சேகரித்த நூல்களையும் அவ்வேளையில் கையளித்தனர்.

அடுத்தநாள் தஞ்சாவூர், வேளாங்கன்னி பயணம். தஞ்சையில் ராஜராஜசோழன் கோவில் (தஞ்சைப் பெரிய கோவில்), அங்குள்ள லிங்கம், நந்தி, சுற்றியுள்ள கோட்டை, மற்றும் சுவரோவியங்கள் எல்லாமே கட்டட, ஓவியக் கலை நுட்பங்களுடன் கூடிய பிரம்மாண்டங்கள். அசந்துபோனேன். கட்டிடக்கலைஞனான (Architect) மகன் கௌதமனும் கூடவே வந்திருந்தார். அவரது புகைப்படக்கருவிக்கு தாராளமான தீனியாக அவை அமைந்துவிட்டதில் அதிசயமொன்றுமில்லை. சரஸ்வதி மஹாலயத்தின் சிறப்பை அறிந்து கட்டணம் செலுத்தி உள்ளே போனால், அது நூலகமா இல்லை அருங்காட்சியகமா அல்லது அரசாங்க அலுவலகமொன்றா என்ற குழப்பமாக இருந்தது. சரஸ்வதி மஹாலயத்தின் வரலாற்றுப் பெருமையை தமிழகத்தின் சுற்றுலாத்துறையினர் அறிந்துகொள்ளவில்லையோ என்ற எண்ணமே மேலிட்டது. கட்டண வசூலில் மாத்திரம் கவனம்கொள்ளாமல், அறிவுஜீவுகளின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்திசெய்யும் வண்ணம் பெரிய மாற்றங்கள் செய்யப்படவேண்டும். அங்கு போதிய வழிகாட்டிகளும் இல்லை. பணியாளர்களுக்கும் போதிய கரிசனை இல்லை. எனது மனக்கொதிப்பை அங்குள்ள பார்வையாளர் பதிவேட்டில் பதிவுசெய்துவிட்டு துயரத்துடன் வெளியேறினேன்.

அடுத்த மூன்றாவது நாள் திருச்சி. திருச்சி, ஸ்ரீரங்கம், ஸ்ரீமத். ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் எனக்கு வரவேற்பு என்று தெரிவிக்கப்பட்டதும் பாடசாலைப் பிள்ளைகள், கூடப்போகும் இடத்தில் எனது நூல்தேட்டத்துக்கு என்ன வேலை இருக்கப்போகின்றது என்று கேள்வி தொக்கி நின்றது. ஆனால் அங்கு நுழைந்ததும் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் முதலில் எனக்கும் என்னுடன் வந்த அன்பர்களுக்கும் தேனீர் விருந்துபசாரம் செய்து வரவேற்று ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரியின் கலை அரங்கிற்கு அழைத்துச் சென்று மரியாதையளித்தமையை பெரும் கௌரவமாகக் கருதுகின்றேன். கல்லூரியின் தமிழ் இலக்கியப் பேரவையின் சார்பாக கலைஅரங்கில் நடைபெற்ற வரவேற்பு விழாவை தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், ஏற்பாடு செய்திருந்ததுடன், கல்லூரி முதல்வர் முனைவர் த.சிவசுப்ரமணியனின் தலைமையில் பலர் சிறப்புரையாற்றி எனது நூல்தேட்டம் தேடல் பணியை வாயாரப் பாராட்டினார்கள். பாடசாலைப் பிள்ளைகள் என்ற சந்தேகத்தைத் துடைத்து பல்கலைக்கழக மட்டத்தில் சுமார் 300 மாணவ மாணவியர் கலை அரங்கத்தில் குழுமியிருந்து என்னைப்பற்றி உரையாற்றியவர்களின் கருத்துக்களை மிகவும் அவதானத்துடன் கேட்டுக்கொண்டிருந்தனர். பின்னர் எனதுரையில் நூல்தேட்டத்தின் நோக்கம், அதன் செயற்பாடுகள் குறித்து சுருக்கமாக விளக்கி அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள் அல்லது

கருத்துக்களை மனம்விட்டு என்னிடம் கேட்கலாம் என்று கோரிக்கை விடுத்தேன். அடேயப்பா — அவர்கள் உரிமையுடன் எழுப்பிய கேள்விகள், சந்தேகங்கள் என்னை வியப்புக்குள்ளாக்கின. "உங்கள் தமிழ் முயற்சிக்கு யாருமே, எந்த அமைப்புமே அக்கறையுடன் கைகொடுக்காத நிலையில் சொந்தப் பணத்தை லட்சம் லட்சமாகக் கொட்டி நீங்கள் மேற்கொள்ளும் தேடல் அவசியத்தேவை தானா? என்ற கேள்வி முதல், உங்கள் தமிழினப் பங்களிப்பை, எதிர்காலத் தமிழர் வரலாற்றை எழுதப்போகும் அனைவரும் நிச்சயம் பெருமையுடன் நினைவுகூர்வார்கள் என்ற அங்கீகாரம் வரையில் மாணவ-மாணவியர் மிகவும் தெளிவாக வினா-விளக்கம் தொடுத்திருந்தனர். எனது உரையைக் கூர்மையுடன் அவதானித்து உள்வாங்கி அவர்கள் என்னைப்பற்றி வெளிப்படுத்திய துல்லியமான விபரங்கள் என்னை மிகவும் அதிசயிக்கவைத்தன. இடையில் யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்புப்பற்றியும் விரிவாக அவர்கள் அறிந்துகொண்டார்கள். இறுதியில் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசும் எனக்கு வழங்கியிருந்தார்கள்.

**கேள்வி: சென்னைப் பல்கலைக்கழக மட்டத்தில் நீங்கள் எதிர்பார்த்த தேடல் கிடைத்ததா?**

பதில்: சென்னையில் நான் தங்கியிருந்த நாட்களில் மிகவும் எதிர்பார்த்தவர்களில் ஒருவர் சென்னைப் பல்கலைக்கழக தமிழறிஞர் முனைவர் அரசு வீராசாமிஅவர்கள். காரணம் அவர் ஈழத்தமிழர்களுடன் எப்பொழுதும் நெருங்கிய தொடர்பினை வைத்திருப்பவர் என்பதுடன், நூல்தேட்டம் தொகுப்புகள் குறித்து மிகுந்த அக்கறையும் கொண்டிருப்பவர். நூல்தேட்டம் நான்காவது தொகுதியின் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றபோது அவர் அதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியதும் குறிப்பிடத்தக்கது. தமிழக விஜயத்தை முடித்துக்கொண்டு லண்டன் திரும்பும் முதல்நாள் மாலை. சற்றும் எதிர்பார்க்காத நிலையில் முனைவர் அரசு நான் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்கு வந்தது அதிர்ச்சியுடன் பெருமகிழ்ச்சியை அளித்தது. நூல்தேட்டத்தை தமிழகப் பல்கலைக்கழகங்களில் மற்றும் முக்கிய நூலகங்களில் அறிமுகம் செய்யவேண்டும் என்ற எனது பெரும் எதிர்பார்ப்புடன் முனைவர் அரசிடம் நூல்தேட்டம் ஆறாவது தொகுதியின் பிரதியொன்றைக் கையளித்தேன். அதனைப் பெற்றுக்கொண்ட அவர் தெரிவித்த விபரங்கள் என்னை இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் நூல்தேட்டம் தொகுதிகள் அனைத்தும் உசாத்துணைப் பிரிவில் சேகரிப்பில் இருக்கின்றன. இப்பல்கலைக்கழகத்தின் தமிழ் முதுகலைமாணிப் பட்டப் படிப்பின் ஒரு மொடியூலாக ஈழத்தமிழர் இலக்கியம் என்னும் பாடம் சில காலத்திற்கு முன்னர் சேர்க்கப்பட்டிருந்தது. மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்குமான உசாத்துணை நூல்களில் முக்கியமாக நூல்தேட்டம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று முனைவர் அரசு சொன்னதும், எனது தமிழகத் தேடல் விஜயம் பூரணத்துவம் பெற்ற மன நிறைவு ஏற்பட்டது. நான் சுதாரா ஹோட்டலில் தங்கியிருக்கும் விபரத்தை காந்தளகம் அதிபர் மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்களின் வாயிலாக அறிந்ததாகக் குறிப்பிட்ட அவர் **புதிய புத்தகம் பேசுகிறது** சஞ்சிகையின் வெளியீட்டாளர் கே.நாகராஜனையும் கூடவே அழைத்துவந்திருந்தார். நாகராஜன் தமிழ் புக்ஸ் டொட் கொம் இணையத்தின் பதிப்பாளருமாவார். தமிழக நூல்பதிப்புத்துறையில் முக்கியமானவர். எனது பணியினை அவருக்கு விபரித்ததுடன் பல அரிய தமிழ்நூல்களையும் எனக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

இவ்வாறாகத் தனது தமிழகத் தேடல் பயணத்தை நிறைவுசெய்துகொண்டார் நூல்தேட்டம் என்.செல்வராஜா. தமிழகம் வந்து செல்லும் ஈழத்துப் படைப்பாளிகளுக்கு இங்குள்ள ஊடகக் கதவுகள் சற்றுத் தாமதித்தே திறந்துகொள்ளும் நிலையில், அந்தச் சில நாட்களிலேயே இவரது விபரமான நேர்காணலை வைகோவின் பதினாறு வருட கால ஏடான **சங்கொலியும்,** மாத இதழான **இனிய நந்தவனமும்** பரபரப்பாக வெளியிட, கலைஞர் தொலைக்காட்சியில் **சந்தித்த வேளை** காலை நேர்காணல் நிகழ்ச்சியில் ரமேஷ் பிரபாவின் ஒருமணிநேர பேட்டியும் கடந்த மாதம் பதினொராம் திகதி ஒளிபரப்பானதும் குறிப்பிடத்தக்கது.

------------------

## நூல்தேட்டம் எட்டாவது தொகுதி முற்றிற்று

# நூல்தேட்டம் தொடர்புகளுக்கு:

***நூல்களை பதிவுக்காக அனுப்ப விரும்புவோர் நேரடியாக லண்டன் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்:***


**N.Selvarajah**
**48 Hallwicks Road,**
**Luton, Bedfordshire**
**United Kingdom**
**LU2 9BH**

***தொலைபேசி இலக்கம்: (0044) 01582 703786***
***கையடக்கத் தொலைபேசி: (0044) 07817402704***
***மின்னஞ்சல்:*** **nooltheттam.ns@gmail.com**
***இணையத்தளம்:*** **www.noolthettam.com**


***இலங்கையில் தமது நூல்களை ஒப்படைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்புகொள்ளலாம்:***


**Mr.V.T.Rajaram**
**C/1/6 Veluvanarama Govt. Flats,**
**Off Hampden Lane,**
**Wellawathe**
**Colombo 6**
**Sri Lanka**

***தொலைபேசி இலக்கம்: (0094) 112 365 929***


## நூல்தேட்டம் முன்னைய பிரதிகளைக் கொள்வனவுசெய்ய விரும்புவோர்:


***குமரன் புத்தக இல்லம்***
**Kumaran Book House,**
**39, 36th Lane,**
**Colombo 6**
**Sri Lanka**
**(*தொலைபேசி:* 0094 112 364550. *மின்னஞ்சல்:* kumbhlk@gmail.com)**

***பீ.எம்.புன்னியாமீன்***
**Sinthanai Vattam Publishers**
**No. 14, Udatalawinna Madige,**
**Udatalavinna 20802**
**Sri Lanka**
**(*தொலைபேசி:* 0094 812 493 746. *மின்னஞ்சல்:* pmpuniyameen@yahoo.com)**


***ஆகியோருடன் தொடர்புகொள்ளவும்.***